ஸ்ரீகலா SRIKALA

# காணும் யாவிலும் நீயே

KAANUM YAAVILUM NEEYEE




ஸ்ரீகலா SRIKALA
காணும் யாவிலும் நீயே
KAANUM YAAVILUM NEEYEE



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER




தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS




Download

# ஸ்ரீகலாவின் “காணும் யாவிலும் நீயே...!!! – 1”

## பொருளடக்கம் :

**Contents**


அத்தியாயம் - 1
அத்தியாயம் - 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் - 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9
அத்தியாயம் : 10
அத்தியாயம் - 11
அத்தியாயம் : 12
அத்தியாயம் : 13
அத்தியாயம் : 14
அத்தியாயம் : 15
அத்தியாயம் - 16
அத்தியாயம் - 17
அத்தியாயம் - 18
அத்தியாயம் : 19
அத்தியாயம் : 20
ஸ்ரீகலாவின் “காணும் யாவிலும் நீயே...!!! – 2”

அத்தியாயம் : 21
அத்தியாயம் : 22
அத்தியாயம் : 23
அத்தியாயம் : 24
அத்தியாயம் - 25
அத்தியாயம் : 26
அத்தியாயம் : 27
அத்தியாயம் : 28
அத்தியாயம் : 29
அத்தியாயம் : 30
அத்தியாயம் - 31
அத்தியாயம் - 32
அத்தியாயம் : 33
அத்தியாயம் : 34
அத்தியாயம் : 35
அத்தியாயம் : 36
அத்தியாயம் - 37
அத்தியாயம் : 38
அத்தியாயம் : 39
அத்தியாயம் : 40

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!"

மார்கழி மாத குளிரை பொருட்படுத்தாது வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியின் உதடுகள் எப்போதும் போல் திருப்பாவையை முணுமுணுத்தது... இந்த ஐம்பத்து மூன்று வயதிலும் அவள் இளம்பெண் போல் அத்தனை சுறுசுறுப்பாக இருந்தாள்... அவளுக்குத் துணையாகச் சம்யுக்தாவும் அவளுடன் இணைந்து கோலம் போட்டு கொண்டிருந்தாள்...

"ரதிம்மா..." என்றழைத்தபடி சித்தார்த் அங்கு வந்து சேர்ந்தான்...

"அத்தகாரு, மாமாகாருவால் உங்களை விட்டுட்டு இருக்க முடியலை..." என்று நமட்டு சிரிப்புடன் கூறிய சம்யுக்தாவை கண்டு அந்த வயதிலும் அழகாய் வெட்கப்பட்டாள் பிரகதீஸ்வரி...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது...? மப்ளர் போடாம கோலம் போட வர கூடாதுன்னு..." என்று செல்லமாக மனைவியைக் கடிந்தபடி அவன் அவளது தலையில் மப்ளரை மாட்டிவிட வந்தான்...

"கொடுங்க... நானே போட்டுக்கிறேன்..." சம்யுக்தா இருப்பதால் சங்கடப்பட்டுக் கொண்டு பிரகதீஸ்வரி அப்படிக் கூற...

"அத்தகாரு, நான் வேணும்ன்னா திரும்பிக்கவா...?" என்று கேட்ட சம்யுக்தாவின் விழிகளில் குறும்பு நிரம்பி இருந்தது...

"மருமகளே... நீ இருந்தாலும் எனக்குக் கவலையில்லை..." என்று புன்னகைத்தபடி கூறிய சித்தார்த் கையிலிருந்த மப்ளரை மனைவியின் தலையில் மாட்டிவிட்ட பின்னரே ஓய்ந்தான்...

கணவனது செயலில் பிரகதீஸ்வரி நேசம் கசியும் விழிகளுடன் அவனைப் பார்க்க, சித்தார்த்தும் சளைக்காது பதில் காதல் பார்வை பார்த்தான்... இருவரின் காதலையும் பார்த்து எப்போதும் போல் பிரமித்துப் போனாள் சம்யுக்தா...

அந்தக் கணம் அவளது மனக்கண்ணில் அவளது மனங்கவர் கள்வனின் அழகு முகம் மின்னியது... அதில் அவளது இரு கன்னங்களிலும் சிவப்பு ரோஜாக்கள் பூத்தது...

"மாமாகாரு... காலையிலேயே ஆரம்பிச்சுட்டீங்களா...?" சம்யுக்தாவின் கேலியில் சித்தார்த்தும், பிரகதீஸ்வரியும் தங்களது பார்வையை விலக்கி கொண்டு அவளைப் பார்த்துப் போலியாக முறைத்து பார்த்தனர்...

"முதலில் இவளுக்கு ஒரு மூக்கணாங்கயிறு போடணுங்க..." என்று பிரகதீஸ்வரி கணவனிடம் கூற... அதைக் கேட்டு சித்தார்த்தின் முகம் கனிந்தது...

"அதுக்குச் சம்யு சம்மதிக்கணுமே.. என்ன மருமகளே... நாளைக்கே மாப்பிள்ளைகளை வரிசையாகக் கொண்டு வந்து நிறுத்தவா..." என்றவனின் முகம் புன்னகையைத் தத்தெடுத்துக் கொண்டது...

அதைக் கேட்டு சம்யுக்தாவின் மனதில் கலவரம் மூண்டது... அந்தக் கலவரத்தை முகத்தில் காட்டாதவாறு மறைத்தவள் முயன்று புன்னகைத்தபடி,

"இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் மாமாகாரு..." அவள் சொல்லி கொண்டிருக்கும் போதே அங்குப் பிரசன்னமானான் பிரசன்னா...

"குட்மார்னிங் சார், குட்மார்னிங் மேம்" என்று சித்தார்த், பிரகதீஸ்வரிக்கு காலை வணக்கம் தெரிவித்தவன்

PDF தமிழ் .com

சம்யுக்தாவிடம்,

"குட்மார்னிங் சம்யு..." என்று அவளுக்குத் தனியாகக் காலை வணக்கம் சொல்லியபடி அவளைக் கண்டு வசீகரமாகப் புன்னகைத்தான்...

"பிரசன்னா... ரண்டி, ரண்டி..(பிரசன்னா... வாங்க...வாங்க...)" என்றாள் அவள் முகம் மலர... அவளது முகம் மலர்வதைக் கண்டு பிரசன்னாவின் முகமும் மலர்ந்தது...

சித்தார்த் மற்றும் பிரகதீஸ்வரி இருவருக்கும் 'ஆல் இன் ஆல்' இந்தப் பிரசன்னா... வறுமையை உணர்ந்து நன்கு படித்துச் சித்தார்த்திடம் வேலைக்கு வந்தவன் அப்படியே அவனின் செல்ல பிள்ளையாகவும் மாறிவிட்டான்... அந்தளவிற்குச் சித்தார்த்திற்கு அவன் மீது நம்பிக்கை உண்டு... அவனது இன்னொரு மகன் என்று கூடப் பிரசன்னாவை சொல்லலாம்...

"வந்தேன்... வந்தேன்..." என்று கூறியபடி அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன் அவளது கரத்தில் இருந்த பாத்திரத்தில் இருந்து கோல பொடியை எடுத்துத் தரையில் அழகாய் கம்பி இழுத்தான்...

"பிரசன்னாவுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கே...?" மோவாயில் கை வைத்து சம்யுக்தா அதிசயித்தாள்...

"ஐயாவுக்கு இன்னும் நிறையத் தெரியும்... அது எல்லாம் என்னன்னு நீ போகப் போகத் தெரிஞ்சுக்குவ..." என்று பெருமையுடன் சட்டை காலரை தூக்கி விட்டுக் கொண்ட பிரசன்னாவின் பேச்சின் அர்த்தத்தைச் சம்யுக்தா புரிந்து கொள்ளவில்லை என்றாலும் சித்தார்த், பிரகதீஸ்வரி இருவருக்கும் அதன் அர்த்தம் புரிந்து தங்களுக்குள் மர்மமான புன்னகையைப் பரிமாறி கொண்டனர்...

கோலம் போட்டு முடித்து விட்டு கணவனுக்குப் பிடித்த மாதிரி காபி கலந்த பிரகதீஸ்வரி சம்யுக்தாவிடம், "பிரசன்னாவுக்குக் காபி கலந்து கொடுத்துரும்மா..."

"அத்தகாரு... காபி சித்தங்கா உந்தி...(அத்தை... காபி தயாராயிருக்கு)" என்று தயாராக இருந்த காபி தம்பளரை எடுத்து காட்டியவள் அதை எடுத்துக் கொண்டு பிரசன்னாவிற்குக் கொடுக்கச் சென்றாள்...

"பிரசன்னா, காபி தீசுகோண்டி...(பிரசன்னா, காபி வாங்கிக்கோங்க...)" என்றபடி அவள் நீட்டிய காபியை வாயெல்லாம் பல்லாக வாங்கிக் குடித்த பிரசன்னா அவளிடம்,

"இன்னைக்கு இந்தர் சார் கனடாவிலிருந்து வர்றார் இல்லையா...? இன்னைக்கு என்ன ஸ்பெசல் செய்யப் போற சம்யு...?"

"அவங்களுக்குப் பிடிச்சதை நேத்தே அத்தகாரு லிஸ்ட் போட்டு கொடுத்துட்டாங்க... அதைத் தான் சமைக்கணும்..."

"ஓ... அப்ப சரி... நான் தப்பிச்சேன்..." என்று அவன் நிம்மதி பெருமூச்சு விட...

"எந்த்துக்கு...?" என்று அவள் சந்தேகமாகப் பார்க்க...

"சம்யும்மா... ஜெமினி டிவியில் இருந்து கொஞ்சம் சன் டிவிக்கு மாறும்மா... உன் பாவா நான் பாவமல..." என்று பரிதாபமாகக் கூறிய பிரசன்னாவை கண்டு போலியாக முறைத்தவள்,

"பாவாவா...? அண்ணா கிட்ட சொல்லவா...?" என்று போலியாக அவள் மிரட்ட...

"ஐயோ வேண்டாம்..." என்று உண்மையாகவே அலறினான் பிரசன்னா...

சம்யுக்தாவின் அண்ணனும், ஜெகதீஸ்வரியின் கணவனுமான சூர்யா சென்னை மாவட்ட ஆட்சியர் அல்லவா... அதை விட அவன் இந்த வீட்டின் மருமகன் வேறு... அதனால் விளைந்த பயம்...

"அது அந்தப் பயம் இருக்கணும்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி அவனை எச்சரித்தவள்,

PDF தமிழ் .com

"எதுக்குன்னு சொல்லுங்க...?"

"உன் ஆந்திரா காரத்தை நீ சமையலில் காட்டினால் இந்தர் சார் உடம்பு தாங்குமா...? அதனால் தான் அப்படிச் சொன்னேன்..." அதைக் கேட்டு அவளது முகத்தில் ரகசிய புன்னகை பூத்தது...

"யாருக்கு எப்படிச் சமைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று அவனிடம் நொடித்து விட்டு அவள் உள்ளே சென்றாள்...

அவள் செல்வதைப் பெருமூச்சு விட்டபடி பார்த்துக் கொண்டிருந்தான் பிரசன்னா... தன்னுடைய மனம் அவளுக்குப் புரிகிறதா...? இல்லை புரியாதது போல் நடிக்கிறாளா என்று அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை... ஆனாலும் அவனது மனம் அவளைச் சுற்றுவதை அவனால் நிறுத்த முடியவில்லை...

"மாமூ... இன்னும் குளிக்காம என்ன பண்றீங்க...? இந்தர் வரும் நேரமாகிருச்சு..."

மகன் வரும் சந்தோசம் பிரகதீஸ்வரியை தொற்றிக் கொண்டது... கடந்த ஒரு மாதமாக மகனது வருகைக்காக அவர்களது வீடு தயாராகிக் கொண்டிருப்பதால் கடைசி நேர பரபரப்பு அங்கு இல்லாது நிதானமாக எல்லாம் சீராகச் சென்று கொண்டிருந்தது...

ஏதோ ஒரு யோசனையில் மூழ்கியிருந்த சித்தார்த் மனைவியின் வார்த்தைகளில் அவளைப் பார்த்தவன் அவளது கையிலிருந்த காபியை வாங்கிப் பருகியபடி,

"இந்தர் வருவதற்குள் நான் ரெடியா இருப்பேன் பேபி... டோன்ட் வொர்ரி..."

"ப்ச்... பேபின்னு கூப்பிட கூடாதுன்னு உங்க கிட்ட சொல்லியிருக்கேனா இல்லையா...? அர்வியும் என்னைப் பார்த்து பேபின்னு கூப்பிடுகிறான்... அதுவும் மாப்பிள்ளை முன்னாடி... எனக்கு ஒரே வெட்கமா போச்சு... அவனைக்

கேட்டால், 'தாத்தா மட்டும் உங்களை அப்படிக் கூப்பிடுறாங்கன்னு' சொல்கிறான்..."

அதை நினைத்து அவளுக்கு இப்போதும் வெட்கமாய் இருந்தது போலும்... அப்படியே செவ்வானமாய் அவளது முகம் சிவந்து போனது... அந்த வயதிலும் மனைவியின் முகச் சிவப்பை காதலாய் ரசித்துப் பார்த்த சித்தார்த் அடுத்த நொடி வாய் விட்டுச் சிரித்தான்...

"அவன் என் பேரன் பேபி... இப்பவே ட்ரெயினிங் எடுக்கிறானா இருக்கும்..." என்று மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு அவன் பெருமைப்பட்டுக் கொள்ள...

"அய்யே போதுமே உங்க பெருமை... முதலில் குளிக்கப் போங்க..." என்று கணவனைக் குளிக்க அனுப்பி விட்டு அவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்... அதற்குப் பின் அவளைப் பரபரப்புத் தொற்றிக் கொண்டது...

"சூர்யா... அர்விக்கு இந்த ட்ரெசை போட்டு விடுங்களேன்..." என்று ஜெகதீஸ்வரி கணவனைப் பார்த்து கத்தினாள்...

குளித்து முடித்து விட்டு வந்த அர்விந்த் அன்னையின் கைகளுக்குள் அடங்காது துள்ளி குதித்து நடனம் ஆடி கொண்டு இருந்தான்...

"என் தம்பி வர்ற நேரம் பார்த்து தான் நீ இப்படிப் படுத்தணுமாடா...?" என்று மகனை எரிச்சலுடன் முறைத்த மனைவியின் கைகளில் இருந்து துண்டை வாங்கிய சூர்யா,

"நீ போய்த் தயாராகு... நான் அர்வியைப் பார்த்துக்கிறேன்..." என்றபடி மகனது ஈர உடலை துடைக்க ஆரம்பித்தான்...

மாவட்ட ஆட்சியர் என்கிற பந்தா எல்லாம் அவனிடம் கிடையாது... வீட்டில் அவன் நல்ல காதல் கணவன், அன்பான தந்தை மட்டுமே...

PDF தமிழ் .com

"தேங்க்ஸ் சூர்யா..." மின்னல் வேகத்தில் கணவனது கன்னத்தில் முத்தமிட்டு விலகினாள் அவள்...

மனைவியின் செயலில் சட்டென்று மகனது விழிகளை மூடி கொண்ட சூர்யா, "உன்னை...?" என்று முறைத்த முறைப்பில் கொஞ்சமும் கோபம் இல்லை... மாறாகத் தாபமே இருந்தது... அதைக் கண்டு கண்சிமிட்டியபடி ஜெகதீஸ்வரி அங்கிருந்து நகர்ந்தாள்...

சித்தார்த் குளித்து முடித்துத் தயாராகி வரவேற்பறைக்கு வந்த போது சஞ்சய் அங்கு வந்து சேர்ந்தான்...

"மாமா..." என்று அட்டகாசமாக, ஆர்ப்பாட்டமாக அவன் தனது தாய்மாமனை அணைத்துக் கொண்டான்...

"வாடா கல்யாண மாப்ள... இன்னும் பத்து நாளில் கல்யாணத்தை வச்சிட்டு உனக்கு இங்கே என்ன வேலை...?" என்று கேட்ட சித்தார்த்தின் விழிகள் விசமமாய் அவனைப் பார்த்துச் சிரித்தது...

"என்ன மாமா இப்படிச் சொல்லிட்டீங்க...? என்னுடைய ஆருயிர் தோழன் இந்தர் வருகிறான்... அவனை வரவேற்க நான் இல்லாமலா...?" என்று போலி கண்ணீர் வடித்தவனைக் கண்டு சித்தார்த் நமட்டு சிரிப்புடன்,

"கவி... இங்கே வாம்மா..." என்க...

"காவியா...? எங்கே, எங்கே...?" என்று பரபரப்பாய் கேட்டபடி அவன் சுற்றும் முற்றும் பார்த்தான்...

"இப்ப சொல்லு... நீ இந்தரை பார்க்க வந்தியா? இல்லை உன் வருங்கால மனைவியைப் பார்க்க வந்தியா...?"

"ஹி ஹி... அது வந்து மாமா... இரண்டும் தான்..." என்று அவன் தலையைச் சொரிந்து கொண்டு அசடு வழிய...

"ஹா ஹா... மாப்ளே, காதல் கல்யாணத்தில் இது எல்லாம் சகஜம்டா..." என்று மருமகனது தோளை தட்டியபடி அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

ஹரிப்ரசாத் - சந்தியா இவர்களின் மகள் காவ்யாவிற்கும், சரவணன் - ஸ்வேதா மகன் சஞ்சய்க்கும் தான் இன்னும் பத்து நாட்களில் திருமணம்... அத்தோடு அவனது தங்கை சாத்விகாவிற்கும், அர்ஜூன் - சங்கமித்ரா மகன் சந்தோஷிற்கும் சேர்ந்து திருமணம் நடைபெறவிருக்கிறது... ஒரே மேடையில் இரு திருமணங்கள்...

சஞ்சய்க்கு இப்போது திருமணம் செய்து கொள்ளும் ஆசையில்லை தான்... ஆனால் காவ்யாவிற்கு வயது ஏறுவதால் அவளது பெற்றோர் கொண்ட கவலையால் இந்தத் திருமணம் நடைப்பெறுகிறது... ஏனெனில் சஞ்சய், காவ்யா இருவருக்கும் இடையில் வயது வித்தியாசம் மாத கணக்கில் தான்... இப்போது இருவருக்குமே இருபத்தைந்து தானாகிறது...

திருமணத்திற்காக ஹரிப்ரசாத், சந்தியா குடும்பத்தினர் சென்னை வந்திருந்தனர்... கூடவே அவர்களது மகன் கண்ணனும்... அவன் ஐபிஎஸ் தேர்ச்சி பெற்று ஆந்திர மாநிலம் குண்டூரில் உதவி ஆணையராகப் பணி புரிகிறான்...

"மாமா... நீங்க வர்றீங்களா...? இல்லை இந்தரை நான் போய்க் கூட்டிட்டு வரவா...?" சஞ்சய் கேட்டதும் சித்தார்த்தின் முகம் ஒரு நொடி மாறியது... பின்பு சமாளித்துக் கொண்டவனாய்,

"நீ போயிட்டு வா மாப்ள... பிரெண்ட்ஸ் நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நாள் கழிச்சு பார்க்கிறீங்க... உங்களுக்குள் பேச நிறைய இருக்கும்... நான் எதற்கு இடையில் நந்தி மாதிரி..." என்று அவன் மறுத்து விட்டான்...

அதனால் சஞ்சய் மட்டும் கிளம்பினான்... அவன் வந்த நேரத்தில் இருந்து காவ்யா அவனது கண்ணில் தென்படவில்லை... அந்தக் கடுப்பில் அவன் கிளம்பி சென்று விட்டான்...

**********************

PDF தமிழ் .com

விமானநிலையத்தில் தனது பயணப் பொதிகளைத் தள்ளி கொண்டு வந்த இந்திரஜித்தை கண்டு சஞ்சய் உற்சாகமாய் கையசைத்தான்...

"மச்சி..."

"மாப்ள..." அவனுக்கும் குறையாத உற்சாகத்தோடு இந்தர் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்...

பின்பு இந்திரஜித்தை தள்ளி நிறுத்தி தலை முதல் கால் வரை ஆராய்ச்சி பார்வை பார்த்த சஞ்சய்,

"சும்மாவே நீ மல்கோவா மாம்பழம் மாதிரி இருப்ப... இப்போ கனடா போய் ஆப்பிள் மாதிரி ஆகிட்டேடா... எனக்கே உன்னை சைட் அடிக்கணும்ன்னு தோணுதே..." என்று மையல் போல் கூறியவன்,

"மச்சி... உனக்கு எத்தனை காதலிகள் டா...? உன் அழகுக்கு லிஸ்ட் ரொம்பப் பெருசா இருக்குமே..." என்று கண்சிமிட்டி கேட்டவனைக் கண்டு இந்திரஜித்தின் முகம் கோபத்தில் ஜிவுஜிவென சிவந்து போய்விட்டது...

"ஷட் அப் சஞ்சய்..." என்று அவனது குரல் கோபமாய் ஒலித்தது... ஆனால் சஞ்சய் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டான்...

"அப்போ ஒண்ணு கூட உனக்கு மாட்டலையாடா...? சரி விடு, விடு... இப்போ உள்ள பொண்ணுங்க எல்லாம் ரொம்ப உஷார்டா மச்சி... நானே பொண்ணு கிடைக்காம, வேறுவழி இல்லாம தான் நம்ம காவியைக் கரெக்ட் பண்ணி கல்யாணம் வரை கொண்டு வந்திருக்கிறேன்..."

"என்னது...?"

"ஐயோ, உளறிட்டேனோ... டேய் நண்பா, நான் உன் உயிர் நண்பன் இல்லையா... இதைக் காவி கிட்ட போட்டு கொடுத்துடாதேடா..."

"அவளும் என் உயிர் தோழி தான்..."

"ஐயா ராசா... உன் காலில் விழுந்து கெஞ்சி கேட்கிறேன்டா..." என்று அழுபவன் போல் கூறியவனைக் கண்டு புன்னகைத்தபடி,

"சரி பொழைச்சு போன்னு விடுறேன்..." என்று கூறி சஞ்சயின் தோளில் கை போட்டுக் கொண்டு அவன் அணைத்துக் கொண்டான்...

"நண்பேன்டா..." என்று பதிலுக்குக் கட்டி தழுவி கொண்ட சஞ்சய் அதன் பிறகு ஒன்றும் பேசவில்லை...

காரில் பயணப் பொதிகளை எடுத்து வைத்து விட்டு இந்திரஜித் காரிலேறியதும் அதைக் கிளப்பினான் சஞ்சய்... இந்திரஜித் மேற்கொண்டு எதுவும் பேச பிடிக்காதவனாய் கண்மூடி இருக்கையில் சாய்ந்து கொள்ள, நண்பனது மனம் அறிந்தவனாய் சஞ்சயும் அமைதியாக வந்தான்... வீடு வரும் வரை இந்த மௌனம் தொடர்ந்தது...

"இந்தர், வீடு வந்திருச்சு..." சஞ்சய் கூறியதும் விழிகளைத் திறந்த இந்திரஜித்தின் முகம் புன்னகையைத் தொலைத்தது...

அதே நேரம் வீட்டினுள் சம்யுக்தா தனது அண்ணனின் இரண்டாவது மகன் ஆதித்யாவை குளிப்பாட்டி கொண்டிருந்தாள்... அந்தச் சின்னக் கண்ணன் கண்களை உருட்டி கொண்டு தண்ணீரில் கையை விட்டு ஆட்டியபடி அவளைப் பார்த்து குறும்பாய் சிரித்து மனதினை மயக்கினான்...

"ஆதி பங்காரம்... நேடு மி மேனமாமா வஸ்துந்நாரு... இப்புடு சூசி நுவ்வு இட்ட சேஸ்துந்நாவு..."(ஆதி தங்கம்... இன்னைக்கு உங்க மாமா வர்றாங்க... இப்ப பார்த்து நீ இப்படிப் பண்றியே...") என்று அவனைச் செல்லமாய்க் கடிந்தபடி அவனைச் சுற்றி துண்டை போர்த்தித் தூக்கி கொண்டு குளியலறையில் இருந்து வெளியில் வந்தாள்...

அப்போது வாசலில் கேட்ட கார் சத்தத்தைக் கண்டு அவள் அப்படியே உறைந்து நின்றாள்... அவளது மனதிற்குள்

PDF தமிழ் .com

ஆயிரம் பட்டாம்பூச்சிகள் படபடக்க ஆரம்பித்தது... அவளது முகத்தில் வெட்க பூக்கள் பூத்தது... கைகள் நடுங்க ஆதித்யாவிற்கு உடைகள் மாற்ற ஆரம்பித்தாள்... அதே நேரம் அவளது காதுகள் வெளிப்புற ஓசையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது...

காரில் இருந்து இறங்கிய இந்திரஜித்தின் விழிகள் கூடியிருந்தவர்கள் அத்தனை பேரையும் புறம் தள்ளிவிட்டு தனது சகோதரியை மட்டும் பரவசத்துடன் பார்த்தது... எத்தனை வருடங்கள் ஆயிற்று அவளை நேரில் சந்தித்து... தொழில்நுட்பம் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில் பிரிவு என்கிற சொல்லுக்கு அர்த்தம் இல்லை என்றாலும், நேரில் பார்ப்பது போல் வராது இல்லையா...?

கணவன் சூர்யாவுடன் இணைந்து நின்றிருந்த அக்காவின் முன் நேரே வந்து நின்றவன் கண்கள் கலங்க, "ஜிக்கி... எப்படியிருக்கிற...?" என்று கேட்டவன் அடுத்தக் கணம் அவளை ஆரத்தழுவி கொண்டான்...

"இந்தர்..." என்று அவளும் தம்பியை பாசத்துடன் அணைத்து கொண்டாள்... பாசமலர்கள் இருவரின் விழிகளும் பாசத்தில் கசிந்தது...

அக்கா, தம்பி பாசம் கண்டு அங்கு நின்றிருந்த அனைவரது விழிகளும் கலங்கியது... சித்தார்த்தின் விழிகள் மட்டும் மகனை யோசனையுடன் பார்த்தது... மகனது அன்பில் அவனுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை... ஆனால் அவன் யோசிக்கும் விசயமே வேறு...

"இந்தர்... இப்போ தான் நான் உன்னோட கண்ணுக்கு தெரிகிறேனா...? என் கல்யாணத்துக்குக் கூட நீ வரலை... எனக்குப் பிள்ளைகள் பிறந்தப்பவும் அவங்களைப் பார்க்க நீ வரலை... அப்படி என்னடா என் மேல் உனக்குக் கோபம்...?"

சகோதரியின் சராமாரியான கேள்வி கணைகளில் இந்திரஜித்தின் கண்கள் அவனையும் அறியாது தனது தந்தையைப் பார்த்தது... தந்தையின் ஆராய்ச்சி பார்வையில் அவனது மனதில் அப்படியொரு கோபம்

பொங்கியது... மறுகணம் அவனது விழிகள் தந்தையை நோக்கி கனலை கக்கியது... அதற்கு எல்லாம் அசரும் ஆள் சித்தார்த் இல்லையே... அவனோ மகனது கனல் பார்வையில் பொசுங்கி விடாது தைரியமாக அதைத் தாங்கி நின்றான்...

"இந்தர்..." அன்னையின் அழைப்பில் இந்திரஜித்தின் முகத்தில் கனிவு வந்தது...

"ம்மா..." தாய் பசுவை தேடும் கன்று குட்டியாய் அவன் தனது அன்னையின் அணைப்பில் அடங்கினான்...

"ரொம்ப இளைச்சு போயிட்டியே இந்தர்..."

"ம்மா... அப்படி எல்லாம் இல்லை... நான் எப்போதும் போல் தான் இருக்கிறேன்..." என்று அவன் சிரித்தபடி கூறினான்...

"டேய் இந்தர்... நான் இங்கே தான்டா இருக்கேன்..." என்று கூறியபடி காவ்யா அவன் அருகில் வர...

"மை டியர் காவி..." இரு கரங்களை விரித்தபடி அவள் அருகில் வந்தவன் பாசமாய் அவளை அணைத்துக் கொண்டான்... அவள் அவனுக்குத் தங்கையுமான தோழி...

"காவி... உன் அருமை மாமன் நான் இங்கே தான்டி இருக்கேன்... நெல்லுக்குப் பாய்வது கொஞ்சம் புல்லுக்கும் பாய்ந்தால் அடியேன் கொஞ்சம் சுகப்படுவேன்..." என்று கிசுகிசுப்பாய் காவ்யா காதில் முணுமுணுத்த சஞ்சயை முறைத்து பார்த்த காவ்யா,

"மாமனாக இருந்தாலும் நண்பர்களுக்கு இடையில் வர கூடாது... என்ன புரிந்ததா...?"

"நானும் உங்க பிரெண்ட் தான்டி..."

"அப்போ பிரெண்ட்டா வந்து எங்க கூடச் சேர்ந்துக்கோ..."

அவள் சொன்னதும் சஞ்சய் அவர்களோடு இணைந்து அணைத்து கொண்டவன், "பிரெண்ட்டோ, காதலியோ நீ என் கூட இருந்தால் போதும் செல்லம்..." என்று அவளைக்

PDF தமிழ் .com

கண்டு அவன் ஜொள்ளு வடிக்க... அவளோ அவனை முறைத்தபடி தலையில் அடித்துக் கொண்டாள்...

இந்திரஜித்திற்குத் தனது கணவனை அறிமுகப்படுத்தி வைத்தாள் ஜெகதீஸ்வரி...

"எப்படி இருக்குறீங்க அத்தான்...?" என்று சிநேகமாய்ப் புன்னகைத்த மச்சினனை சூர்யாவிற்கு மிகவும் பிடித்துப் போனது... இதுவரை அவன் அவ்வளவாக இந்திரஜித்திடம் பேசியது இல்லை...

அடுத்து அங்குக் கூடியிருந்த அனைத்து பெரியவர்களிடமும் நலம் விசாரித்துச் சிரித்துப் பேசிய இந்திரஜித் மறந்தும் தனது தந்தையின் புறம் திரும்பி பார்க்கவில்லை... அது போல் தந்தையின் நலம் பற்றியும் விசாரிக்கவில்லை... அவனும் அதைக் கண்டு கொள்ளாது புன்னகையுடன் நின்றிருந்தான்...

வீட்டினுள் வந்து வரவேற்பறையில் வந்தமர்ந்த இந்திரஜித் அக்காவிடம், "எங்கே என் மருமகன்கள்...?" என்று புன்சிரிப்புடன் கேட்க... அவள் தனக்குப் பின்னால் வெட்கப்பட்டுக் கொண்டு ஒளிந்திருந்த தனது மூத்த மகனை காட்டி,

"இவன் தான் மூத்தவன் அர்விந்த்... யூகேஜி படிக்கிறான்..." என்று புன்னகையுடன் அறிமுகப்படுத்தி வைத்தாள் ஜெகதீஸ்வரி...

புகைப்படத்தில் பார்த்த மருமகனை நேரில் பார்த்ததும் பாசம் மிக அவனை அருகில் அழைத்து அன்போடு அணைத்துக் கொண்டான் இந்திரஜித்...

"குட்டி பையன் எங்கே...?" என்று அவன் கேட்க...

"சம்யு..." என்று உள்நோக்கி குரல் கொடுத்தாள் ஜெகதீஸ்வரி...

அறையில் இருந்த சம்யுக்தாவின் காதுகளில் அந்த அழைப்பு தேனாகப் பாய்ந்தது... அடுத்த நொடி

ஆதித்யாவை தூக்கி கொண்டு வெளியில் வந்தவள்,

"நேனு வஸ்துந்நானு வதின..."(நான் வந்துட்டே இருக்கேன் அண்ணி...") தெலுங்கில் கூறியபடி பரபரப்பாய் அங்கு வந்தாள் சம்யுக்தா...

சாதாரணப் பருத்தி புடவை அணிந்து, நீண்ட தலைமுடியை இழுத்துச் சீவி நீளமாய்ச் சடை போட்டு, எந்தவித அலங்காரமும் இல்லாது எளிமையாக அவள் இருந்த போதும், மாநிறத்தில் பார்ப்பதற்கு நன்றாக, லட்சணமாகத் தான் அவள் இருந்தாள்... அவளது இடுப்பில் ஆறு மாத குழந்தை ஆதித்யா சமத்தாக அமர்ந்திருந்தான்...

"உன் தெலுங்குக்கு அர்த்தம் கண்டுபிடிப்பதற்குள் எனக்கு ஆயுசு முடிந்து விடும்... ஒழுங்கா தமிழில் பேசு சம்யு..." என்று அவளிடம் செல்லமாய்க் கடிந்தபடி ஜெகதீஸ்வரி தனது மகனை தூக்கி தம்பியின் கைகளில் கொடுத்தாள்...

"இவன் ஆதித்யா..."

"ஹேய்... ஆதி குட்டி பையா..." என்று மருமகனை வாங்கிக் கொஞ்சினான் இந்திரஜித்...

அங்கு வந்து நின்றதில் இருந்து சம்யுக்தாவின் விழிகள் இந்திரஜித்தை மட்டுமே இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தது... அவளது விழிகளில் காதலை தாண்டிய ஒரு பரவசநிலை காணப்பட்டது... விழிகள் கலங்க அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் முகத்தில் தொலைந்து போன கைப்பொருளை மீண்டும் கண்டு கொண்டது போல் எல்லையில்லா மகிழ்ச்சி நிறைந்திருந்தது... எல்லோரும் இந்திரஜித்தை பார்த்து கொண்டிருந்ததால் யாரும் அவளைக் கவனிக்கவில்லை... சித்தார்த் உட்பட...

ஆனால் இந்திரஜித்தோ அப்படி ஒருத்தி அங்கிருப்பதாய் கண்டு கொள்ளவே இல்லை...

****************

PDF தமிழ் .com

அன்றிரவு சஞ்சய் நண்பர்கள் எல்லோருக்கும் 'பேச்சிலர்ஸ் பார்ட்டி' ஏற்பாடு செய்திருந்தான்... அதற்கு இந்திரஜித் வந்திருந்தான்... பழைய நண்பர்கள் இந்திரஜித்தை கண்டதும் உற்சாகமாய் வரவேற்றதில் கேளிக்கை விருந்து களை கட்ட ஆரம்பித்தது...

"வாடா மச்சி... எங்கே நீ வராம இருந்துருவியோன்னு கவலையா இருந்தேன்... அப்போ தானே உனக்கும் சேர்த்து நான் குடிக்கலாம்..." என்று ஈயென்று இளித்த சஞ்சயை கண்டு கொள்ளாது அங்கிருந்த மது பாட்டிலை எடுத்து தனது வாயில் சரித்தான் இந்திரஜித்...

"இந்தர்..." சஞ்சய் திகைப்பாய் அவனைப் பார்த்தான்...

அவன் அறிந்த இந்திரஜித் இப்படிக் கிடையாது... அத்தனை நல்ல பழக்கங்களுக்கும் அவன் சொந்தக்காரன்... நண்பர்கள் வற்புறுத்தினால் கூட மறுத்து விடுவான்... பிரகதீஸ்வரி வளர்ப்பில் புடம் போட்ட தங்கமாக மிளிர்ந்தவன் இன்று இப்படிக் குடிப்பது கண்டு அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது...

"வெளிநாட்டுக்குப் படிக்கப் போனியா? இல்லை இந்தப் பழக்கத்தைப் பழகிக்கப் போனியா...?" சற்று கடுமையுடன் கேட்டான் சஞ்சய்...

"நீ குடிக்கிற மாதிரி தான்டா நானும் குடிக்கிறேன்..." என்று நண்பனை அலட்சியப்படுத்திய இந்திரஜித் மேலும் மேலும் மதுவை உள்ளே தள்ளினான்...

அவனைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாது சஞ்சய் தான் குடிக்காது, அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

போதை அதிகமாகியதும் இந்திரஜித் மனதில் பழைய நினைவுகள் அலைகடல் போல் ஆர்ப்பரித்தது... அந்த நினைவுகளை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை... இன்னும் போதை அதிகமானால் அந்த நினைவுகள் அவனது மனதினை முழுதாய் ஆக்கிரமித்து விடும் அபாயம்

இருப்பதால் அத்தோடு நிறுத்தி கொண்டு அவன் எழுந்தான்...

"நான் கொண்டு வந்து விடறேன்டா..." என்றபடி உடன் எழுந்த சஞ்சயை மறுத்துவிட்டு,

"நீ இவங்களைப் பார்... நான் போயிக்கிறேன்..." என்றவன் வெளியில் வந்து காரை கிளப்பிக் கொண்டு வீட்டை நோக்கி சென்றான்...

அடிக்கடி வாயிலை கவலையுடன் எட்டிப்பார்த்த மனைவியிடம் சித்தார்த், "இந்தர் வந்து விடுவான்... அவன் என்ன சின்னப் பையனா...? சஞ்சய் கூடத் தானே போயிருக்கிறான்... பிரெண்ட்சை பார்த்து பேசிவிட்டு வர நேரமாகும்..." என்று அவளை ஆறுதல்படுத்தி அறைக்கு அழைத்துச் சென்றுவிட்டான்...

சில காலமாய் மகனிடம் தொற்றி இருக்கும் மது பழக்கம் சித்தார்த்திற்கு நன்கு தெரியும்... அது மனைவிக்குத் தெரிய வந்தால் வருத்தப்படுவாளே என்று எண்ணி தான் அவன் அவளை அங்கிருந்து அப்புறப்படுத்தியது... நாளை காலையில் இது பற்றி மகனிடம் பேச வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான்...

அவர்கள் இருவரும் சென்ற பின்னர்ச் சம்யுக்தா அவளது அறையில் இருந்து வெளியில் வந்தாள்... அவளுக்கு இந்திரஜித்திடம் தனிமையில் பேச வேண்டிய விசயங்கள் நிறைய இருந்தது... அதற்கு ஏற்றார் போல் காரின் ஒலி அவன் வந்துவிட்டதை உணர்த்த அவள் வேகமாக வாயிலை நோக்கி சென்றாள்...

வீட்டிற்குள் நுழைந்த இந்திரஜித் சம்யுக்தாவை கண்டு கொள்ளாது அவளைக் கடந்து செல்ல முற்பட்டான்... அவள் அவன் முன்னே வந்து வழிமறித்தார் போன்று நின்று கொண்டு,

"பாவா... மீரு எலா உந்நாரு...?"(“பாவா... நீங்க எப்படி இருக்கீங்க...?”) என்று காதலோடு கேட்டவளை போதையில்

PDF தமிழ் .com

மிதந்த இந்திரஜித்தின் விழிகள் அலட்சியத்துடன் பார்த்தது...

"யார் நீ...?"

"நன்னு மீருக்கு தெளிலேதா...?"(“என்னை உங்களுக்கு தெரியலையா...?”) என்று கேட்டவளின் வார்த்தையை விட அதிக வேதனையை அவளது விழிகள் பிரதிபலித்தது...

"ம்ஹூம்..." என்று அதே அலட்சிய பாவனையுடன் அவன் உதட்டை பிதுக்கினான்...

அவனது பாவனையில் சம்யுக்தா மனதளவில் பெருத்த அடி வாங்கினாள்... மனம் பாரமாய்க் கனக்க அவள் அவனை விட்டு விலகி சென்ற போது இந்திரஜித் சொடக்கு போட்டு அவளை அழைத்தான்... அதில் முகம் மலர திரும்பி பார்த்தவள் கண்கள் மின்ன அவனை நோக்கி விரைந்து வந்தாள்...

அவன் தனது காலணியைக் கழட்டி வீசியவன், "இதை எடுத்து வை..." என்று அவளைப் பார்த்து அதிகாரமாக உத்தரவிட்டான்...

அவன் காலால் இட்ட பணியை அவள் சிரம் மேற்கொண்டு செய்து முடித்து விட்டு வந்து அவனை ஆர்வமாகப் பார்த்தாள்... ஏதாவது பதில் கூறுவானா என்கிற பிரயாசையுடன் அவளது விழிகள் அவனை எதிர்பார்ப்புடன் நோக்கியது... அவனும் பதில் கூறினான், அவளது இதயத்தைப் பல துண்டுகளாகக் கூறு போடுவது போல் ரணமாய்...

"உன்னை எனக்கு நல்லாவே தெரியுது... நீ இந்த வீட்டின் வேலைக்காரி என்று..." என்று அகந்தையுடன் கூறிவிட்டு அவன் சென்று விட்டான்...

ஆனால் அவளோ உதிரம் வடியும் இதயத்துடன், விழிநீர் வடியும் விழிகளுடன் தன்னவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தாள்...!!!

தொடரும்...!!!

PDF தமிழ் .com

அதிகாலையில் விழிப்பு வந்து எழுந்த இந்திரஜித்திற்குத் தலையெல்லாம் பாரமாகி போனது போல் கனத்தது... நேற்று குடித்த மதுவினால் வந்த வினை இது... தலையை உலுக்கி பாரத்தைக் குறைக்க முயற்சித்தான்... எங்கே, குறைந்தால் தானே...? கடந்த சில வருடங்களாக அவன் மது பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தான்... இத்தனை நாளில் ஒரு நாள் கூட அதை விட வேண்டும் என்று அவன் ஒரு போதும் எண்ணியதில்லை... மாறாக இன்னும் இன்னும் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தான்... இதோ இப்போதும் பழைய நினைவுகள் பாரமாய் எழுந்து அவனது மனதினை அழுத்தியது...

இப்படியே அமர்ந்திருந்தால் வேலைக்காகாது என்று எண்ணியவனாய் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்... குளித்து விட்டு புத்துணர்வோடு அன்னையைத் தேடி சென்றான்... அவன் வரவேற்பறையில் வந்தமர்ந்த போது பிரகதீஸ்வரியும், சம்யுக்தாவும் கோலம் போட்டு விட்டு உள்ளே வந்து கொண்டிருந்தனர்...

வீட்டினுள் நுழையும் போதே சம்யுக்தா இந்திரஜித்தை பார்த்து விட்டாள்... திடுமென அவனைக் கண்டதும் அவள் சங்கடமாய்த் தான் அணிந்திருந்த ஆண்கள் அணியும் சட்டையை இழுத்து விட்டபடி மெதுவே நடந்து வந்தாள்... குனிந்து கோலம் போடுவதற்கு ஏதுவாக அவள் இந்தச் சட்டையை அணிந்திருந்தாள்... அவள் சட்டையை இழுத்து விடுவதைக் கண்டு அவனது விழிகளில் கடுமை ஏறியது...

"இந்தர்... அதுக்குள்ள எழுந்திருச்சிட்டியா...? நைட் ரொம்ப லேட்டா வந்தியாப்பா...?" என்று கேட்டபடி மகனின் அருகில் வந்தமர்ந்தாள் பிரகதீஸ்வரி...

"கண்ணெல்லாம் சிவந்திருக்கு... சரியா தூங்கலையா...?" கவலையுடன் கேட்ட அன்னையைக் கண்டதும் நேற்று மது அருந்தியது அவனது நினைவில் நின்று அவனைக் குற்றவுணர்வோடு தலை குனிய செய்தது...

அந்தக் கணம் இனி குடிக்கக் கூடாது என்று அவன் உறுதியான முடிவு எடுத்தான்... அன்னையை மனம் வருந்த செய்ய அவனுக்கு விருப்பம் இல்லை... அன்னையைக் கண்ணில் காணாத வரை செய்த தவறை இப்போது அன்னையின் கண் முன் செய்ய அவனுக்குத் துணிவில்லை... இதில் எல்லாம் அவன் நல்லவன் தான்...

"இருப்பா... உனக்குக் குடிக்கப் பால் எடுத்துட்டு வர்றேன்..." என்று எழ போன அன்னையைத் தடுத்து நிறுத்தியவன்,

"நீங்க ஏன் கஷ்டப்பட்டுக்கிட்டு...?" என்று அன்னையிடம் அன்பாய் கூறியவன் சம்யுக்தாவை பார்த்து,

"ஏய்... நீ போய் எடுத்துட்டு வா..." என்று அதிகாரமாக உத்தரவிட...

அவளோ அவனது அதிகாரத்தைக் கவனியாது, அவன் தன்னை அழைத்துப் பேசியதை நினைத்துச் சந்தோசம் அடைந்தவளாய்,

"அத்தைகாரு... மீரு கூச்சண்டி... நேனு காபி இஸ்ட்டானு..." (அத்தை, நீங்க உட்காருங்க... நான் காபி கொண்டு வருகிறேன்) என்று கூறியபடி அங்கிருந்து நகர முற்பட்டாள்...

"சம்யுவை நீ யாருன்னு நினைச்ச இந்தர்...?" மகனின் அதிகாரம் கண்டு யோசனையாய் பார்த்தாள் பிரகதீஸ்வரி...

"அதான் நேற்றிலிருந்து பார்க்கிறேனே... நீங்க எல்லோரும் அவளது பெயரை ஏலம் போடுவதை... அதிலிருந்து தெரியவில்லையா, அவள் யாரென்று...?" என்று அலட்சியமாய் ஒலித்த அவனது குரலில் சம்யுக்தாவினுள் சிறு வலி தோன்றியது... அவன் அவளை 'வேலைக்காரி' என்று சொல்லாமல் சொல்வதைக் கண்டு அவளுக்கு அழுகை வந்தது...

"அப்போ இவள் யாரென்று உனக்குத் தெரியுமா...?" ஆர்வமாய்க் கேட்டாள் பிரகதீஸ்வரி...

PDF தமிழ் .com

"ம், தெரியும்மா... நம் ஜிக்கியின் நாத்தனார்... அத்தானின் தங்கை..."

அதைக் கேட்டு சம்யுக்தாவின் மனதில் நிம்மதி எழ, அவள் உற்சாகமாய்ச் சமையலறையை நோக்கி நடந்தாள்... அவள் செல்வதைக் கண்களில் கனிவுடன் பார்த்து கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி...

"ரொம்ப நல்ல பொண்ணு இந்தர்..."

அதற்கு மகன் ஒன்றும் பேசாது அமர்ந்திருந்தான்...

"ஆதி பிறந்தப்போ நம்ம ஜிக்கிக்குப் பிரசவம் கொஞ்சம் சிக்கலா போச்சு..." இத்தனைக்கும் ஜெகதீஸ்வரி குழந்தை பேறுகால மருத்துவர் வேறு... அப்படியிருந்தும் அவளது பிரசவம் சிக்கலாகி போனது...

"அத்தோடு ஆதிக்கும் வீசிங் ப்ராப்ளம் வேற... அப்படியே உங்கப்பாவை போல்..." இதைச் சொல்லும் போது பிரகதீஸ்வரி விழிகளில் காதல் வழிந்தது... அதைக் கண்டு மகனுக்குக் கடுப்பாக இருந்தது... ஆனாலும் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தான்...

"ரெண்டு பேரையும் பார்த்துக்கத் தான் நான் வேலைக்கு வாலண்ட்டியர் ரிட்டையர்மென்ட் வாங்கி விட்டேன்..."

தங்கள் மேல் அம்மாவிற்கு இருக்கும் அன்பு புரிந்ததால் அவன் நெகிழ்வோடு அன்னையைப் பார்த்தான்... மகளுக்காக அத்தனை பெரிய பதவியைத் தூக்கி போட வேண்டும் என்றால் அதற்குப் பெரிய மனசு வேண்டும்... அது அவனது அன்னைக்கு இருந்தது...

"அப்படியிருந்தும் என்னால் சமாளிக்க முடியாம போனது... அப்போ நம்ம சம்யு தான் உதவிக்கு வந்தாள்... இதுக்கு முன்னாடி அவள் கிராமத்தை விட்டு எங்கேயும் போனது இல்லையாம்... மாப்பிள்ளை கூட எத்தனையோ தடவை அவளைத் தன்னோடு கூப்பிட்டுப் பார்த்துட்டாராம்... வரவே மாட்டேன்னு கிராமத்தில் தான் இருந்தாளாம்... ஆனா ஜிக்கி படுற கஷ்டம் பார்த்துட்டு இங்கே வந்துட்டாள்..."

அதைக் கேட்டு அவனது முகத்தில் இகழ்ச்சியான புன்னகை தோன்றியது...

"இதோ அவள் இங்கு வந்து ஆறு மாசமாகுது... எல்லா வேலைகளையும் பொறுப்பா பார்த்துக்கிறாள்..."

"அப்போ சம்பளம் இல்லாத வேலைக்காரின்னு சொல்லுங்க..." என்று சிரித்த மகனை கண்டிப்புடன் பார்த்தாள் பிரகதீஸ்வரி...

"தப்பு இந்தர்... யோசிக்காம வார்த்தைகளை விடாதே... மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் மரியாதையை அவரோட தங்கைக்கும் நாம் கொடுக்கணும்... ஒருத்தரோட தோற்றத்தையோ, படிப்பையோ வச்சு அவங்களை எடை போடாதே..." கண்டிக்கும் குரலில் கூறியவளை கண்டு,

"அப்படியாம்மா...? இந்த மேடத்து கிட்ட அப்படி என்ன ஸ்பெசல் குணம் இருக்கு...?"

"வெகுளியான, கலகலப்பான பெண்... அன்பானவள்... இதை விட வேறு என்ன வேணும் இந்தர்? என்ன ஒண்ணு, மாப்பிள்ளை எவ்வளவோ இவளை படிக்க வைக்க முயற்சி பண்ணியிருக்கிறார்... அது மட்டும் முடியலை... மேலே படிக்க மாட்டேன்னு சொல்லிட்டாளாம்... நானும் எவ்வளவோ சொல்லி பார்த்துட்டேன்... ம்ஹூம், பலனில்லை... வீட்டை சுத்தி வர தான் அவளுக்குப் பிடிச்சியிருக்கு..."

"மேடம் அப்படி என்ன படிச்சியிருக்கங்களாம்...? நீங்க இவ்வளவு கவலைப்படும் அளவுக்கு...?"

"பத்தாவது தான்... அதுவும் ஃபெயில்... அதிலிருந்து படிக்க மாட்டேன்னு சொல்லிட்டாளாம்... அவளுக்குப் படிப்புன்னா வேப்பங்காயாம்..."

"ஹா ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"படிக்கப் பிடிக்காம பானை, சட்டி செய்யப் போயிட்டாளாக்கும்...?"

PDF தமிழ் .com

"அட, ஆமாம் இந்தர்... அவங்களோட குல தொழில் மண்பாண்டங்கள் செய்றது தான்... உண்மையைச் சொல்லு உனக்கு எப்படி இது எல்லாம் தெரியும்...?"

"இதுக்குன்னு தனியா ஜோசியம் பார்க்கணுமா...? கழுதை கெட்டால் குட்டிச்சுவர்..." என்று கேலியாய் அவன் கூற, பிரகதீஸ்வரி அவனை முறைத்தாள்...

அதற்குள் சம்யுக்தா அங்கு வந்து சேர்ந்தாள்... தன்னவனின் புன்னகை முகத்தை அவள் மனதில் ஆழ பதிய வைத்து கொண்டாள்... அது தன்னைக் குறித்தான கேலி புன்னகை என்று அவள் அறியவில்லை...

"பாவா... தீசுகோண்டி..." (பாவா, எடுத்துக்கோங்க...) என்று கூறியவளை நிமிர்ந்து பார்த்து தீயாய் உறுத்து விழித்தவன்,

"ஹேய் இங்கே பார்..." என்று கூறியவனை அவள் காதலுடன் பார்த்து வைத்தாள்...

"இப்படிப் பாவா, கோவான்னு கூப்பிடுகிற வேலை எல்லாம் இங்கே வச்சுக்காதே..." என்று சற்று கடுமையுடன் கூற...

அதில் அவளது முகம் சுருங்கி போனது... பேசாது கையிலிருந்த தட்டை அவன் முன் நீட்டினாள்... அவன் பால் அடங்கிய கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான்... பிறகு அவள் அருகல்புல் சாறை பிரகதீஸ்வரியிடம் கொடுத்தாள்... அவள் புன்னகையுடன் அதை வாங்கிக் கொண்டாள்... பின்பு மகனிடம்,

"இந்தர்... அவள் உறவுமுறை வச்சு தானே கூப்பிட்டாள்... அதுக்கு நீ ஏன் இவ்வளவு கோபப்படுற...?"

"அதுக்கு இல்லைம்மா... என்னோட பிரெண்ட் ஒருத்தன் தெலுங்கு தான்... அவனோட வொய்ப் அவனைப் பாவான்னு தான் கூப்பிடுவாங்க... அது கணவனுக்கு மட்டுமான அழைப்பு... அதை வைத்து இவள் என்னைக் கூப்பிட்டது எனக்குப் பிடிக்கலை..." என்று முகத்தில்

அடித்தார் போன்று கூறியவனைக் கண்டு சம்யுக்தா சோகமாய் மாறி போனாள்...

"ஓ... அது தானா விசயம்...?" என்ற பிரகதீஸ்வரி சம்யுக்தாவிடம்,

"அப்படியா சம்யு...?"

"லேது அத்தைகாரு..." (இல்லை அத்தை) என்று ஆரம்பித்தவளை கண்டு அவன் மீண்டும் முறைக்க...

"அவ்வுனு..." (ஆமாம்) என்று அவள் முடித்துக் கொண்டாள்...

"ரதிம்மா... அது அப்படி இல்லை... முறைப்பையன்களையும் அப்படிக் கூப்பிடலாம்... சம்யு கூப்பிட்டது சரி... உன் மகன் தான் தவறு... உன் மகன் உன்னை நல்லா ஏமாத்துகிறான்..." என்றபடி அங்கு வந்தான் சித்தார்த்...

தகப்பனை முறைக்க மட்டுமே அவனால் முடிந்தது... தாயின் முன்னால் தந்தையைக் கடிய அவனால் முடியவில்லை... அதனால் அன்னை மனம் வருந்தினால் அதைத் தாங்கி கொள்ள அவனால் முடியாது...

"இந்தர் அப்படியா...?"

"எனக்குத் தெரியாதும்மா... எனக்குத் தெரிஞ்சு அந்தப் பொண்ணு அப்படித் தான் கூப்பிட்டாள்..."

"அத்தைகாரு... இங்கே தமிழ்நாட்டில் மாமான்னு மாமாவையும், கணவனையும் கூப்பிடறது இல்லையா... அது மாதிரி தான் இதுவும்... மாமாகாரு சொல்றதும் சரி... பாவா சொல்றதும் சரி..." என்று கூறியவள் தவறு செய்துவிட்டது போல் நாக்கை கடித்துக் கொண்டாள்... மீண்டும் பாவா என்றழைத்ததற்கு அவன் கோபம் கொள்வானோ என்று...

தந்தை முன்னால் ஒன்றும் சொல்ல முடியாதபடி வாயை இறுக மூடி கொண்டான் இந்தர்... பிரகதீஸ்வரி எழுந்து சென்று கணவருக்குக் காபி கலந்து கொண்டு வந்து கொடுத்தாள்... அதை வாங்கிக் கொண்டு சித்தார்த்

அலுவலக அறையை நோக்கி நகர்ந்தான்... தாய்க்கும், மகனுக்கும் தனிமை கொடுக்க எண்ணி... சம்யுக்தாவும் அங்கிருந்து சென்று விட்டாள்...

சிறிது நேரம் அன்னையுடன் பேசி கொண்டிருந்த இந்தர் எழுந்து அலுவலக அறையை நோக்கி போனான்... அங்கு அமர்ந்திருந்த சித்தார்த் மகனை வரவேற்கும் விதமாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்... பதிலுக்குப் புன்னகைக்காது இறுக்கமான முகத்துடன் வந்தமர்ந்த இந்திரஜித்,

"நான் உங்க கிட்ட பேசணும்..."

"நானும் உன் கிட்ட பேசணும்ன்னு நினைச்சேன்..." என்ற சித்தார்த் அவனைப் பார்த்து,

"முதலில் நீ சொல்ல வந்ததைச் சொல்..."

"இல்லை, நீங்களே சொல்லுங்க..." என்று அவன் தந்தைக்கு விட்டுக் கொடுத்தான்... அதைக் கண்டு சித்தார்த்தின் விழிகளில் கனிவு வந்தது...

"பெருசா ஒண்ணுமில்லை... நீ குடிக்கிறது எனக்குத் தெரியும்... ஆனால் உன் அம்மாவுக்கு இது தெரியாது... அவளுக்குத் தெரிஞ்சா ரொம்ப ஃபீல் பண்ணுவாள்... அவள் கவலைப்பட்டால் என்னால் மனம் தாங்க முடியாது... அதனால் நீ இங்கே இருக்கும் வரைக்கும் குடிக்காமல் இருப்பது நல்லது..."

"அவங்க எனக்கு அம்மா... எங்கம்மா மேல் எனக்குப் பாசம் இருக்கிறது... இதை நீங்க ஒண்ணும் சொல்ல தேவையில்லை..."

"உன் அம்மா தான் யார் இல்லைன்னு சொன்னது... ஆனால் அந்த அம்மா என்கிற உறவு நானில்லாமல் இல்லை.. அதாவது நானில்லாமல் அவள் இல்லை... அது போல் அவளில்லாமல் நானில்லை... என்ன புரிந்ததா...? நீ பேச்சில் கூட எங்க ரெண்டு பேரையும் பிரிப்பதை நான் விரும்பவில்லை..."

சித்தார்த்தின் குரலில் இருந்த காதல், கடுமை எல்லாம் இந்திரஜித்திற்குப் புரிந்தது... பெற்றோரின் காதல் கதை அவனுக்குமே தெரியும்... வாழ்ந்தால் அவர்களைப் போன்று வாழ வேண்டும் என்று நினைப்பவன்... இதோ இந்தக் கணம் கூட அப்படித் தான் நினைக்கிறான்... அதை நினைத்த கணம் அவனது மனம் உலைக்களமாய்க் கொதிப்பதை அவனால் தடுக்க முடியவில்லை...

"நீ புரிந்து நடந்து கொள்வேன்னு நினைக்கிறேன்..." என்று அமர்த்தலான குரலில் கூறிய சித்தார்த்,

"நீ எதற்காக வந்தாய்ன்னு சொல்லவே இல்லையே...?"

"நீங்க சொத்துக்களை எல்லாம் என் பெயரில் மாற்றி எழுதி தரணும்..." முகம் இறுக கூறிய மகனை கண்டு வாய் விட்டுச் சிரித்தான் சித்தார்த்...

"இப்ப தான் எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு இந்தர்... எப்போடா நீ வந்து இந்தப் பொறுப்புக்களை எல்லாம் ஏற்றுக் கொள்வேன்னு காத்திருந்தேன்... ஹப்பாடா, இப்போ தான் நிம்மதி... இனி ஜாலியா என் பொண்டாட்டி கூட நான் ஹனிமூன் போகப் போறேன்..."

சித்தார்த்தின் விழிகளில் அவனது தேனிலவு காலம் இனிமையாய் தோன்றியது... எத்தனை வயதானால் என்ன...? காதல் இருந்தால் தேனிலவும் சாத்தியமே...

அதைக் கேட்டு இந்திரஜித் கடுப்புடன் தந்தையைப் பார்த்தான்... தந்தையைக் கடுப்படிக்க வந்தவன் இப்போது தான் கடுப்புற்று அமர்ந்திருந்தான்...

"இன்னைக்கே உன் பெயரில் எல்லாவற்றையும் எழுதி கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்... ஆனால் ஒண்ணே ஒண்ணு தவிர... அது உன் அம்மாவுடைய சொத்துக்கள்... அதை மட்டும் உனக்கு நான் தர முடியாது..." என்ற சித்தார்த்தின் முகம் அன்றைய கால நினைவுகளில் இறுகியது...

"அது எதுக்கு உங்களுக்கு...? அதுவும் எனக்கு வேணும்...?" சண்டைக்குக் காரணம் தேடியவன் இது தான் சாக்கு என்று தந்தையிடம் எகிறினான்...

அப்போது சித்தார்த் மகனை ஏறிட்ட பார்வையில் அத்தனை கனல் இருந்தது... அதைக் கண்டு இந்திரஜித்திற்கு உள்ளம் நடுங்கியது... ஆனாலும் அவன் தைரியமாய் எதிர்பார்வை பார்த்தான்...

"அதைப் பற்றி மட்டும் பேசாதே இந்தர்... அது உன் அம்மாவுக்குப் பிறகு ஜிக்கிக்குப் போய்ச் சேர வேண்டியது... வேறு எதை வேண்டுமானாலும் எடுத்து கொள்... அது மட்டும் உனக்கு வேண்டாம்..."

அக்காவிற்கு என்றதும் இந்திரஜித் சற்று அமைதியாகி போனான்...

"அதே போல் கம்பெனியில் இருந்து வரும் வருமானத்தில் குறிப்பிட்ட பங்கு ஜிக்கிக்கு போகணும்..."

"என் அக்காவுக்கு நான் கொடுப்பேன்... அதை நீங்க ஒண்ணும் சொல்ல தேவையில்லை..."

'இது தான் இந்தர் நீ... என் மகன்... உன்னால் யாரையும் கஷ்டப்படுத்திப் பார்க்க முடியாது...' மனதில் சந்தோசமாய் நினைத்த சித்தார்த் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அமர்ந்திருந்தான்...

"என்னோட இலக்கு நீங்க மட்டும் தான்... அம்மா, அக்கா இல்லை..." என்றான் மகன் வெறுப்புடன்...

"ஓஹோ... அப்போ சொத்து கைக்கு வந்ததும் என்னை இந்த வீட்டில் இருந்து விரட்டி விடுவாயோ...?"

"அதைச் செய்ய முடிந்தால் முதலில் அதைத் தான் நான் செய்து முடிப்பேன்..."

"உன் அம்மா உயிருடன் இருக்கும் வரை அது நடக்காது இந்தர்... என்னைப் பிரிந்தால் உன் அம்மா உயிரோடு இருக்க மாட்டாள்... அது போல் தான் நானும்... என் சீதை

இருக்கும் இடம் தான் இந்த ராமனுக்கு அயோத்தி..." மனைவி தன் மீது வைத்திருக்கும் காதலில் எழுந்த இறுமாப்பில் சித்தார்த் அப்படிக் கூறினான்...

அதைக் கண்டு இந்திரஜித் தந்தையை வெறுமையுடன் பார்த்தான்... மகனது வெறுமையைச் சித்தார்த் உணர்ந்தாலும் அதைக் கண்டு பெரிதாய் அலட்டி கொள்ளவில்லை... மருந்து குடிக்க அடம்பிடிக்கும் சிறுவனாகத் தான் அவன் கண்களுக்கு இந்திரஜித் தெரிந்தான்...

அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிந்ததும் இந்திரஜித் நாற்காலியில் இருந்து எழுந்தான்...

"ஒரு நிமிசம் இந்தர்..." தந்தையின் குரலில் அவன் நின்றான்...

"இந்த விசயம் நமக்குள் இருக்கட்டும்... யாருக்கும் தெரிய வேண்டாம்..." என்ற தந்தையைக் கூர்ந்து பார்த்த இந்திரஜித்,

"நான் சொல்வதாக இருந்தால் முன்பே எல்லாவற்றையும் சொல்லியிருப்பேன்... இனியும் எதையும் சொல்ல போவதில்லை..."

"சொல்லித்தான் பாரேன்..." என்று நமட்டு சிரிப்புடன் கூறிய சித்தார்த்தை கொலைவெறியுடன் முறைத்து பார்த்த இந்திரஜித்,

"வயசானாலும் உங்க திமிர் கொஞ்சமும் குறையலை..."

"என்ன செய்றது இந்தர்...? அது என் கூடப் பிறந்தது..." என்று சிரித்த தந்தையைக் கண்டு ஆத்திரம் மிக அவன் வேகமாய் அங்கிருந்து வெளியேறினான்...

மகன் சென்றதும் சித்தார்த்தின் முகம் புன்னகையைத் தொலைத்தது... மாறாக அதில் எல்லையில்லா வேதனை வந்து ஆட்கொண்டது...

வெளியில் வந்த இந்திரஜித் அங்கு வரவேற்பறையில் குழுமியிருந்த தாத்தா, பாட்டி, ஹரிப்ரசாத், சந்தியா, கண்ணன், காவ்யா எல்லோரையும் கண்டதும் அவன் அவர்களோடு மகிழ்ச்சியாக உரையாட ஆரம்பித்தான்... தந்தை மீதிருந்த அவனது கோபம் சற்று மட்டுப்பட்டது...

********************

"இந்தப் பொறப்புத்தான் நல்லா ருசிச்சு சாப்பிட கிடைச்சது
இந்தப் பொறப்புத்தான் நல்லா ருசிச்சு சாப்பிட கிடைச்சது
அதை நினைச்சு தான் மனம் உலகம் முழுசும் பறக்குது"

பாடலை சத்தமாகப் பாடியபடி சமையலறையில் பாத்திரங்களை உருட்டி கொண்டிருந்தான் சஞ்சய்... உடன் அவனது தந்தை சரவணன் காய்கறி வெட்டி கொண்டிருந்தான், மகனுக்கு உதவியாக...

"சஞ்சய்... கடைசியில் உன் நிலைமையும் இப்படியாக வேண்டுமா...? நான் தான் உங்கம்மா கிட்ட மாட்டிக்கிட்டு அவஸ்தைப்படுறேன்னா... நீயும் இப்படிப் போய் வலிய மாட்டிக்கிட்டியேடா என் ராசா..." இல்லாத கண்ணீரை துடைத்துக் கொண்டான் சரவணன்...

"எல்லாம் உன் தங்கச்சி மகள் பண்ணும் அட்டகாசம் தான்... தினமும் ஒரு மெனு கொடுத்து சமைச்சிட்டு வர சொல்கிறாள்... இதில் நான் ஃபெயிலானால்...?" என்று நிறுத்தியவனைக் கண்டு,

"ஃபெயிலானால் என்னடா...?" சரவணன் ஆர்வமாய்க் கேட்க... மகன் தலையில் அடித்துக் கொண்டான்...

"அடுத்தவனோட பெட்ரூமை எட்டி பார்க்கிறதில் தான் உங்களுக்கு எத்தனை ஆர்வம்...? ஆனா நான் இந்தச் சீக்ரெட்டை சொல்ல மாட்டேனே..." என்று அவன் ஆள்காட்டி விரலை தந்தை முன் ஆட்டியபடி கெக்கலிக்க... அதைக் கண்டு சரவணன் நக்கலாய் சிரித்தான்...

"அதான் 'பெட்ரூம் சீக்ரெட்'ன்னு இவ்வளவு பெரிய க்ளூ கொடுத்து இருக்கியே மகனே... இதை வச்சு உன் அப்பன்

பீல்டிங் கட்டிட மாட்டேன்..." என்று கெத்தாக அவன் கூற...

"கர்மம், கர்மம்... அப்பா, மகன் பேசும் பேச்சா இது..." என்று தலையில் அடித்தபடி அங்கு வந்து நின்றாள் ஸ்வேதா...

"ஏண்டா... உங்கப்பனுக்குத் தான் அறிவு இல்லைன்னா... நீயும் அதே மாதிரி தான் இருப்பியா...?"

"நான் அவரோட மகன்ம்மா... அப்படித் தான் இருப்பேன்..."

மகன் சொன்னதும் பெருமையுடன் மனைவியைப் பார்த்தான் சரவணன்... அவள் கணவனை முறைக்க, அவனோ அதைக் காதல் பார்வையாக எண்ணி உள்ளம் குளிர்ந்து போனான்...

"சஞ்சய்... தினமும் நீ பண்ணுகிற அட்டகாசம் தாங்கலை... மருமகளைக் கரெக்ட் பண்ணுகிறேன்னு உன்னோட ஒரே தொல்லையா போச்சு... இப்போ யார் இதை எல்லாம் க்ளீன் பண்றது...?"

"அதெல்லாம் ஆள் இருக்கு... நீங்க பேசாம போய் ரெஸ்ட் எடுங்க... இல்லை கிழிஞ்ச போன துணிகளை ஒட்டு போடும் வேலையைப் பாருங்க..."

"அடப்பாவி... இந்தியாவே புகழ்கிற ஃபேசன் டிசைனர் என்னைப் பார்த்து என்ன பேச்சு பேசுற...?"

தான் பேச முடியாததை மகன் பேசுவது கண்டு நமட்டு சிரிப்புடன் பார்த்திருந்தான் சரவணன்...

"பின்னே என்னம்மா...? எல்லா வேலைகளுக்கும் ஆள் இருக்காங்க... இதுக்கு நீங்க ஏன் இப்படி அலட்டிக்கிறீங்க...?"

மகன் கேட்டதும் ஒன்றும் பேசாது சென்று விட்டாள் ஸ்வேதா... கணவனிடம் எதிர்வாதம் செய்பவள் மகனிடம் அப்படிப் பேச மாட்டாள்... சஞ்சய் பார்ப்பதற்கும், பேசுவதற்கும் தான் விளையாட்டு பையனாக இருப்பான்... ஆனால் அவன் செயலில் அத்தனை கெட்டிக்காரன்... கணினி படிப்பு முடித்துத் தங்களது நிறுவனத்தின்

கிளையைச் சென்னையில் ஆரம்பித்தவன் இன்று அதைத் தலைமையிடமாகக் கொண்டு வருமளவிற்கு அதை முன்னேற்றிக் காட்டியிருக்கிறான்...

காவ்யாவும் கணினி படிப்பு முடித்து விட்டு அவனுடன் தான் வேலை செய்கிறாள்... அவளை வேறு எங்கும் வேலை செய்ய அவன் அனுமதிக்கவில்லை... தன்னுடனே அவள் இருக்க வேண்டும் என்கிற எண்ணம் தான் அதற்குக் காரணம்...

"அம்மா..." என்றபடி அங்கு வந்து நின்றாள் சாத்விகா...

பணக்கார வீட்டுப் பெண் என்று சொல்ல முடியாதளவிற்கு அவளது தோற்றம் அத்தனை எளிமையாக இருந்தது... இன்னும் பத்து நாளில் அவளுக்குத் திருமணம்... அதுவும் காதல் திருமணம்...

"என்ன அம்மு...?"

"நான் காலேஜ்க்கு கிளம்பறேன்ம்மா..."

"கல்யாண நாள் நெருங்கிங்கிட்டு இருக்கு... இப்போவாவது நீ வீட்டில் இருக்கக் கூடாதா...?"

"அம்மு வீட்டில் இருந்து என்ன செய்யப் போகிறாள்...? நீ காலேஜ்க்கு போம்மா..." மகளுக்குப் பரிந்து பேசியபடி சரவணன் அங்கு வந்தான்...

"தேங்க்ஸ்ப்பா..." என்று புரிதலுடன் நன்றி கூறியவள் வெளியில் வந்தாள்...

அவள் அங்கே வரவும் சந்தோஷின் கார் அவள் அருகே வந்து நிற்கவும் சரியாக இருந்தது... தன்னவளை கண்டதும் புன்னகையுடன் கார் கதவை திறந்து விட்ட சந்தோஷ்,

"கமான் அம்மு..." என்று புன்சிரிப்புடன் கூற... அவனது சிரிப்பு அவளுக்கு அமிலத்தை ஊற்றியது போல் அத்தனை எரிச்சலாக இருந்தது...

அங்கு வந்த சரவணன், ஸ்வேதா வருங்கால மருமகனை கண்டதும் முகம் மலர, "வீட்டுக்குள் வாங்க மாப்பிள்ளை..." என்க...

"மாப்ள... உள்ளே வாடா..." என்று சஞ்சயும் அழைத்தான்...

"அம்முவுக்குக் காலேஜ்க்கு லேட்டாகிருச்சு... இன்னொரு நாள் வர்றேன்..." என்று அவர்களிடம் புன்னகை முகமாய்ப் பதிலளித்தவன் அவளிடம் திரும்பி,

"அம்மு போகலாமா...?" என்று கேட்க...

பெற்றோர், சகோதரன் முன் எதையும் காட்டி கொள்ளாது அவள் அமைதியாகக் காரினுள் ஏறி அமர்ந்தாள்... வீட்டில் இருந்து வெளியில் வந்து கார் சாலையில் பயணிக்கத் துவங்கியதும் அவள் கோபமாய் அவனைப் பார்த்தாள்...

"உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது...? நீங்க என்னைக் காலேஜ் கூட்டிட்டுப் போகத் தேவையில்லைன்னு..."

"நான் கூட்டிட்டு போகாம வேறு யார் உன்னைக் கூட்டிட்டு போவாங்க...?"

"எனக்குக் கால்கள் இருக்கு... நானே போய்க்குவேன்..."

"உனக்குக் கால்கள் இல்லைன்னு நான் சொல்லலையே... என் தேவதையை நான் கொண்டு போய் விடுறதுக்கு நான் கொடுத்து வச்சியிருக்கணும்..." என்றவனது விழிகள் தன்னவளின் அழகினை ரசித்துப் பார்த்தது...

உலக அழகி என்று சொல்ல முடியவில்லை என்றாலும் சுமார் அழகி என்று அவளை ஒதுக்கி விடவும் முடியாது... அவள் அத்தனை தனித்துவமான பெண்... அதில் எந்தவித சந்தேகமும் இல்லை... அதனால் தான் அவள் அவனைக் காந்தமாய்க் கவர்ந்து இழுக்கிறாள்...

"எதுக்கு இப்படி என்னைப் போட்டு படுத்துறீங்க...?"

விழிகளில் நீர் திரள பார்த்தவளை கண்டு அவனது மனம் துடிக்கத் தான் செய்தது... ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"நீ என்ன ஸ்கூல் பாப்பாவா...? எதுக்கு எடுத்தாலும் அழுதுக்கிட்டு... நீ காலேஜ் கேர்ள்..." என்றவனை இடைமறித்து,

"நான் காலேஜ் கேர்ள் இல்லை... காலேஜ் லெக்செரர்..." என்று கோபமாய்க் கூறியவளை ஏற இறங்க பார்த்தவன்,

"பார்த்தால் அப்படித் தெரியலை... ரொம்ப யங்கா இருக்க அம்மு..." என்று ரசனையுடன் மொய்த்த அவனது விழிகளைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டவள்,

"நீங்க எல்லாம் எப்படி டாக்டருக்கு படிச்சீங்க...? அதுவும் ஹார்ட் ஸ்பெசலிஸ்ட் வேற... ஒரு பெண்ணோட மனசை புரிஞ்சிக்காத நீங்க எல்லாம் என்ன டாக்டர்...?" என்றவளது வார்த்தைகளில் அவனது முகம் மாறியது...

சாலையின் ஓரமாய்க் காரை நிறுத்தியவன் அவளது முழங்கையைப் பிடித்துத் தன்புறம் திருப்பினான்...

"டக்டர்ன்னா காதலிக்கக் கூடாதுன்னு இருக்கா...? இல்லை அதையும் மீறி காதலிச்சால் தப்பா...? காதலிக்கும் மனசை சொல்லாம மூடி வச்சிட்டு 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு உன்னை வாழ்த்தி பாடணுமா...? இதை எல்லாம் என்னால் செய்ய முடியாது... நான் உன்னைக் காதலிக்கிறேன்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்... அவ்வளவு தான்..."

"ஓ... உங்களுக்கு உங்க மனசு தான் முக்கியமா...? என் மனசு முக்கியம் இல்லையா...?" இதைச் சொல்லும் போதே அவளுக்குக் கண்களில் கண்ணீர் மல்கியது...

"ஆமாம், எனக்கு என் மனசு தான் முக்கியம்... உன் மனசு பத்தி எனக்குக் கவலை இல்லை... எனக்கு நான் மட்டுமே முக்கியம்..." என்று கோபமாய்க் கூறியபடி காரை

கிளப்பியவன் அவளைக் கல்லூரியில் வந்து விடும் வரை ஒன்றும் பேசவில்லை...

அவள் இறங்கும் போது மட்டும், "எது எப்படியோ அம்மு... நம் கல்யாணம் உண்மை... நான் உன் கணவனாகப் போவதும் உண்மை... அதை ஏத்துக்க இப்போது இருந்து தயாராகிக்கோ..." என்றுரைத்து விட்டு அவன் காரை விருட்டென்று கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்...

கல்லூரிக்குள் காலடி எடுத்து வைத்தவளுக்கு மனம் முழுவதும் பாரமாய்... பெற்றோரிடம் கூடச் சொல்ல முடியாத பாரம் அவளுடையது... அவர்களது சந்தோசத்தினைக் கலைக்க அவளுக்கு விருப்பம் இல்லை... சந்தோஷ் கூறுவது போல் இந்தத் திருமணத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறுவழி இருக்கவில்லை...

******************

வரவேற்பறையில் அமர்ந்து கொண்டு இந்திரஜித் கண்ணனுடன் பேசி கொண்டிருந்தான்... வெகு வருடங்கள் கழித்து அண்ணனை சந்தித்தால் சந்தோசமாய் அவனுடன் பேசியபடி அமர்ந்திருந்தான்... அப்போது அங்கு வந்த சம்யுக்தா கண்ணனிடம்,

"பாவாகாரு... உங்களுக்குக் குடிக்க என்ன வேணும்ன்னு அத்தைகாரு கேட்டுட்டு வர சொன்னாங்க...?"

"காபி கொண்டு வாம்மா..." என்று புன்னகையுடன் கூறிய கண்ணனை கண்டு பதிலுக்குப் புன்னகைத்தபடி அவள் சென்றாள்...

மறந்தும் அவள் இந்திரஜித்திடம் என்ன வேண்டும் என்று கேட்கவில்லை... அதை அவன் கண்டு கொள்ளாது கண்ணனுடன் பேசி கொண்டிருந்தான்...

சில நிமிடங்கள் கழித்துச் சம்யுக்தா கண்ணனுக்குக் காபி எடுத்து வந்தாள்... இந்திரஜித் தனது அலைப்பேசியில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான்...

"பாவா..." அவள் அழைத்தும் இந்திரஜித் நிமிரவில்லை...

"இந்தர் உன்னைத் தான் கூப்பிடுகிறாள்..." என்று கண்ணன் சொன்னதும்,

"என்னையவா...?" என்று கேட்டபடி நிமிர்ந்த இந்திரஜித்தின் பாவனையில் அவளது காதல் மனம் மயங்கி தான் போனது...

"என்ன...?" இரு புருவங்களை உயர்த்தியபடி அவன் கேட்டதும் அவள் இன்னமும் மயங்கி போனவளாய்,

"பால்..." என்று கண்ணாடி கோப்பையை அவனிடம் நீட்ட... அதை வாங்கியவன் அவளைக் கண்டு கொள்ளாது ஒரு கையில் பாலை பிடித்தபடி மறுகையால் அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"சம்யு... நீ குண்டூர் மாவட்டம்ன்னு கேள்விப்பட்டேனே... அங்கே எந்த ஊர்...?"

"பெனுமுலி..."

"ஓ..." என்ற கண்ணன் அவளிடம் ஆந்திராவை பற்றிச் சுவாரஸ்யமாகப் பேசி கொண்டிருந்தான்... தாய் மண்ணைப் பற்றிக் கண்ணன் கேட்டதும் அவளும் சுற்றுப்புறம் மறந்து அவனுடன் சந்தோசமாய் உரையாடி கொண்டிருந்தாள்...

அப்போது அலைப்பேசியைப் பார்த்தபடி கையில் பால் கோப்பையுடன் எழுந்தான் இந்திரஜித்... எதிர்பாராத விதமாக அவன் சம்யுக்தா மேல் இடித்து விட, அவனது கையில் இருந்த கோப்பை நழுவி அவளது கால்கள் மேல் விழுந்து சூடான பாலை அபிசேகம் செய்து விட்டு பின்பு தரையில் பட்டு உடைந்தது...

"ஆ..." என்று அவள் வலியில் துடித்தாள்...

"சாரி... சாரி..." என்று பதட்டத்துடன் மன்னிப்பு கேட்ட இந்திரஜித்தின் வார்த்தையில் இருந்த மன்னிப்பு அவனது

விழிகளில் இல்லை... அவனது விழிகள் வன்மத்துடன் அவளைப் பார்த்தது...

சம்யுக்தாவோ கொதிக்கும் பால் பட்டதில் உண்டான எரிச்சலை மறந்து தன்னவன் கேட்ட மன்னிப்பு வார்த்தையில் மனம் குளிர்ந்து போய் அத்தனை பரவசமாய் நின்றிருந்தாள்...

தொடரும்...!!!

தன்னவன் கேட்ட மன்னிப்பில் மனம் குளிர்ந்த சம்யுக்தா மகிழ்ச்சியுடன் இந்திரஜித்தை ஏறிட்டு பார்த்தாள்... ஆனால் அவனது விழிகளில் வழிந்த குரோதத்தில் அவள் சப்த நாடிகளும் ஒடுங்கி போய்ப் பயத்துடன் அவனைப் பார்த்தாள்... அந்தப் பயத்தினை மீறி அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... தான் என்ன தவறு செய்தோம் என்று... ஏன் தன்னவனுக்குத் தன் மீது இத்தனை வெறுப்பு என்று தெரியாது அவள் சிறு மழலை போல் மலங்க மலங்க விழித்தாள்... தாயாய் ஆறுதல் கூற வேண்டியவனோ விரோதியாய் முறைத்துக் கொண்டிருந்தான்...

அவள் மனதிற்குள் மருகி கொண்டிருந்த சமயத்தில் கண்ணன் அவளைச் சோபாவில் அமர வைக்க, ஜெகதீஸ்வரி அவளது காலுக்கு முதலுதவி செய்து முடித்திருந்தாள்... குடும்பத்தினர் அனைவரும் அங்குக் கூடி விட்டனர்...

எத்தனை பேர் வந்தால் எனக்கென்ன என்பது போல் இந்திரஜித் அவளை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது விழிகள் வெறுப்பைக் கக்கிய போதும் அவனது மனம் மகிழ்ச்சியில் குதியாட்டம் போட்டது... அவளது துன்பத்தில் அவன் இன்பம் கண்டான்... என்றோ செய்த தவறை இன்று நேர் செய்துவிட்ட நிம்மதி அவனது முகத்தில் வந்தமர்ந்தது... ஆனால் இது போதாது, இது ஆரம்பம் தான்... இன்னும் அவளைப் படுத்தி

எடுப்பதற்கு நிறைய இருக்கிறது... அவள் காயப்பட, காயப்பட அந்தக் காயத்தின் வலியில் அவனது ரணமடைந்த மனம் குணமாகும், சுகமாகும்...

சம்யுக்தாவும் தனது பார்வையை விலக்கவில்லை... இந்திரஜித்தும் தனது பார்வையை விலக்கி கொள்ளவில்லை... அவளது மனமோ ஊமையாய் அழுதது... அவனது மனமோ ஆர்ப்பரிக்கும் கடல் அலையாய் மகிழ்ந்தது...

அதற்குள் பிரசன்னா வேறு வந்துவிட்டான்... வந்ததும் விசயம் கேள்விப்பட்டவன் நேரே இந்திரஜித்திடம்,

"என்ன சார் நீங்க...? கொஞ்சம் பார்த்து, கவனமா இருந்துக்கக் கூடாதா...? சம்யு கால் எப்படி வெந்து போயிருக்கு பாருங்க...?" என்று ஆதங்கத்துடன் கேள்வி கேட்டு விட்டான்...

தன் மனம் கவர்ந்தவளின் வலி அவனுக்கே வலித்தது போல் அவன் கோபம் கொண்டு கேட்டான்...

"நீ யார்டா இதை எல்லாம் கேட்க...? என்னைக் கேள்வி கேட்கும் ரைட்ஸ் உனக்கு யார் கொடுத்தது...?"

பிரசன்னா சம்யுக்தாவிற்குப் பரிந்து கொண்டு வந்ததைக் கண்டு இந்திரஜித் பொங்கி விட்டான்... 'யார் இந்தப் புது வரவு...?' என்று இந்திரஜித்தின் மனதில் கேள்வி குடைந்தது...

"அது வந்து சார்... நான்..." அவனின் கேள்வியில் பிரசன்னா சற்று தடுமாறிவிட்டான்...

"அதைத் தான் நானும் கேட்கிறேன்..." என்று அமர்த்தலாகக் கேட்டான் இந்திரஜித்...

"பிரசன்னா என்னோட பிஏ... ஆனால் எங்களோட இன்னொரு மகன்..." மகனின் அட்டகாசம் தாங்காது சித்தார்த் பதில் கொடுத்தான்...

"ஓ..." என்று நக்கலாய் இழுத்த இந்திரஜித் பிரசன்னா புறம் திரும்பி,

"பிரஸன்னா அங்கே இருக்கணும்..." என்று வரண்டாவை சுட்டிக்காட்டியவன் பின்பு வரவேற்பறையைச் சுட்டிக்காட்டி,

"இங்கே வரை வர உனக்கு அனுமதி இல்லை... என்ன புரிஞ்சதா...? போ, அங்கே போய் இரு..." என்றான் கறாராய் கட்டளையிடும் குரலில்...

"இந்தர்... என்ன பேச்சு பேசுற...? உன்னை மாதிரி அவனும் எங்களுக்கு மகன் தான்..." பிரகதீஸ்வரி இடையிட்டாள்...

"அப்போ நான் உங்களுக்கு மகன் இல்லையா...? ஓகே, உங்களுக்குத் தான் இந்த மகன் இருக்கிறானே... பிறகு நான் எதுக்கு இங்கே வீணே... நான் மறுபடியும் கனடாவுக்குக் கிளம்பறேன்..." என்றவன் தனது அறைக்குச் செல்ல முயன்ற போது,

"இந்தர்..." என்று சித்தார்த் கடின குரலில் அவனைத் தடுத்தான்...

பிரகதீஸ்வரியோ என்ன பேசுவது என்று தெரியாது நின்றிருந்தாள்... இத்தனை வருடம் கழித்து வந்திருக்கும் மகனிடம் கடிந்து பேச அவளுக்கு மனமில்லை... அதே சமயம் பிரசன்னாவை மகன் எடுத்தெறிந்து பேசுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை... அவளது தர்மசங்கடமான சூழ்நிலையை அந்த நல்லவன் பிரசன்னா புரிந்து கொண்டான்...

"மேம்... நான் வெளியில் இருக்கேன்..." என்று அவளிடம் கூறிய பிரசன்னா யாரின் பதிலையும் எதிர்பார்க்காது வெளியில் சென்றுவிட்டான்...

"தெரியாமல், கை தவறி பால் கொட்டியதுக்கு அவன் என்னை என்னமோ குற்றவாளி போல் அத்தனை கேள்விகள் கேட்கிறான்... அதைத் தட்டி கேட்க உங்களுக்குத் துப்பில்லை... ஆனால் என்னை அடக்க மட்டும் உங்களுக்கு

வாய் வருகிறது... நான் உங்க மகன் தானான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு..."

இந்திரஜித் தகப்பனிடம் கோபத்தில் எகிறினான்... பிரகதீஸ்வரி மகனின் கோபம் கண்டு வாய் திறக்கவில்லை... தான் எதையாவது கூற போய் அவன் மீண்டும் ஊருக்குக் கிளம்புகிறேன் என்று கூறிவிட்டால்...? அவள் பாவம் போல் கணவனைப் பார்த்தாள்... அவளது பரிதாப பார்வையைக் காண சகிக்காத சித்தார்த் தனது கோபத்தினை அடக்கியபடி,

‘நான் பார்த்துக் கொள்கிறேன்’ என்று கண்களால் மனைவியிடம் சாடை செய்தான்... அதைக் கண்டு பிரகதீஸ்வரி நிம்மதியானாள்...

"உன்னை யாரும் குற்றம் சொல்லவில்லை இந்தர்... நீ தவறா புரிஞ்சிக்கிட்ட..." என்று மகனிடம் எடுத்துக் கூறினான் அவன்...

"ஓகோ... அப்போ நீங்க செய்றது எல்லாம் நல்லது... நான் செய்வது மட்டும் தவறு... அப்படித் தானே...?"

பொடி வைத்து பேசிய மகனை கண்டு சித்தார்த்தின் உள்ளம் துணுக்குற்றது... அது அவனுக்குப் புரியவும் செய்தது... இனி மேலும் மேலும் விவாதித்துக் கொண்டு போனால் பிரச்சினை பெரிதாகும் என்று எண்ணியவன்,

"நிச்சயம் அப்படியில்லை இந்தர்... உன்னுடைய வேகம், அவசரம் தான் தவறுன்னு சொல்கிறேன்..." என்று தன்மையுடன் கூறிய தந்தையை அவன் முறைத்துப் பார்த்தான்...

"உன்னுடைய வேகத்தால், அவசரத்தால் என்ன நடந்ததுன்னு நீயே பார்... சம்யுவின் கால் எப்படி வெந்து போயிருக்குன்னு..."

தந்தை கூறியதும் இந்திரஜித்தின் விழிகள் சம்யுக்தாவின் காலினை நோக்கியது... அவளது கால்கள் சூடு பால் பட்டதில் பளபளவெனச் சிவந்து போயிருந்தது... அதைக்

கண்ட கணம் அவனது மனக்கண்ணில் வேறொரு காட்சி தோன்றி அவனை உயிருடன் வதைத்தது... அதன் வலி முன் இந்த வலி என்ன எம்மாத்திரம்... வேதனையிலும், கோபத்திலும் கண்கள் சிவக்க தந்தையைப் பார்த்தவன் பின்பு மனதினை கட்டுப்படுத்திக் கொண்டு,

"நான் தெரியாமல் செய்த தவறு இது... அவளிடம் மன்னிப்பும் கேட்டு விட்டேன்... இதற்கு மேல் நான் என்ன செய்யணும்ன்னு எதிர்பார்க்கறீங்க... வேணும்ன்னா நான் அவளது கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்கவா..." என்று அவன் தனது குரலில் சிறிது நக்கல் கலந்து கேட்டான்...

"ஐயோ... ஏழுகுண்டலவாடா..." (ஐயோ... ஏழுமலையானே...) என்று பதறி போய்க் குரல் கொடுத்த சம்யுக்தா சிவந்திருந்த தனது பாதங்களைப் புடவைக்குள் இழுத்து மறைத்து கொண்டாள்...

"மாமாகாரு, அத்தைகாரு... தப்பு எல்லாம் என் பேரில் தான்... நான் தான் கண்ணன் பாவாகாரு கூடப் பேசுகிற சுவாரசியத்தில் கவனிக்காம இருந்துட்டேன்..."

சம்யுக்தா கூறியதை கண்ணனும் ஆமோதித்தான்... அதன் பிறகே சித்தார்த்திற்கு நிம்மதி வந்தது... பிரகதீஸ்வரிக்கும்...

"உன்னை யாரும் குறை சொல்லலை இந்தர்..." என்று அவள் மகனை சமாதானப்படுத்தினாள்... சித்தார்த் ஏதோ கூற வந்த போது அதைக் கண்டு கொள்ளாது இந்திரஜித்,

"அத்தான்... மன்னிச்சுக்கோங்க..." என்று நல்ல பிள்ளையாய் அக்காள் கணவனிடம் மன்னிப்பு கேட்க,

"தெரியாம நடந்ததுக்கு நீ என்ன பண்ணுவ இந்தர்..." என்று அவன் பெருந்தன்மையுடன் அந்த நிகழ்வை பெரிதுபடுத்த விரும்பாது விட்டு விட்டான்...

எல்லோருக்கும் கல்யாண வேலைகள் தலைக்கு மேல் இருந்ததில் அவரவர் வேலைகளைக் கவனிக்கச் சென்று விட்டனர்... சம்யுக்தா ஓய்வு எடுப்பதற்காக அவளது

அறைக்குச் சென்று விட்டாள்... இந்திரஜித்தும் தனது அறைக்குச் செல்ல முயன்ற போது சித்தார்த் அவனைத் தடுத்து நிறுத்தினான்... மகன் நின்ற போதும் தந்தையைத் திரும்பி பார்க்கவில்லை...

"கம்பெனிக்கு கிளம்பி வா..."

"நீங்க முதலில் போய் எல்லாவற்றையும் அரேன்ஜ் பண்ணி வைங்க... நான் பிறகு வர்றேன்..." என்றவன் தகப்பனின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டான்...

சித்தார்த் அலுவலகம் கிளம்பினான்... அவனுடன் பிரசன்னாவும் கிளம்பினான்...

"பிரசன்னா... இந்தர் ஏதோ கோபத்தில் பேசி விட்டான்... நீ எதையும் மனசில் வச்சிக்காதே... நீயும் எனக்கு மகன் போல் தான்..."

"ஐயோ சார்... நான் எதையும் மனசில் வச்சிக்கலை... நான் தான் அவசரப்பட்டு உண்மை என்னன்னு தெரியாம உரிமை எடுத்து பேசிட்டேன்..." என்றவனைக் கண்டு ஒரு அர்த்தம் பொதிந்த புன்னகையைச் சிந்திய சித்தார்த்,

"உனக்கு எப்போதும் உரிமை உண்டு... கவலைப்படாதே..." என்க... அதைக் கேட்டு பிரசன்னாவின் முகமோ ஆயிரம் வாட்ஸ் பல்ப் போல் ஒளிர்ந்தது...

அறைக்குச் சென்று வெகுநேரம் முடங்கியிருந்த இந்திரஜித் பிறகு மனதினை சமன்படுத்திக் கொண்டு அலுவலகத்திற்குக் கிளம்பினான்... அவன் வீட்டின் வாயிலுக்கு வந்த போது அங்குத் தோட்டத்தில் சம்யுக்தா ஆதித்யாவிற்கு உணவு ஊட்டி கொண்டிருந்தாள்... வெந்த காலுடன் அவள் அவனைத் தூக்கி வைத்துக் கொண்டு கதை கூறியபடி உணவு ஊட்டினாள்... வலியில் அவள் சிறிது அமர்ந்தாலும் அவன் அழுகையில் சிணுங்கினான்... அதனால் அவள் நின்றபடி இருந்தாள்...

வெளிவாசலின் கதவு நிலை மீது சாய்ந்து நின்றபடி இந்திரஜித் இந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தான்...

பின்பு எதையோ நினைத்தவனாய் முகம் கடுகடுத்தபடி அங்கிருந்து சென்று விட்டான்...

இந்திரஜித் அலுவலகம் வந்த போது சித்தார்த் எல்லா ஏற்பாடுகளையும் பக்காவாகச் செய்து வைத்து மகனுக்காகக் காத்திருந்தான்... இந்திரஜித் வந்ததும் சட்டரீதியாக அவனை நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்க வைத்த சித்தார்த்தின் முகத்தில் அத்தனை சந்தோசம்... அதைக் கண்டு இந்திரஜித்தின் முகம் யோசனையில் ஆழ்ந்தது... எல்லாச் சம்பிரதாயங்களும் முடிந்து வழக்கறிஞர், கணக்காளர் எல்லோரும் சென்றதும் தந்தையும் மகனும் மட்டுமே தனித்து இருந்தனர்...

"அதிசயமா இருக்கு... தி கிரேட் சித்தார்த் வழி ஒதுங்கி மகனுக்கு இடம் கொடுப்பது கண்டு..." நக்கலாய் கேட்ட மகனை ஒரு நொடி கூர்ந்து பார்த்த சித்தார்த் பின் புன்சிரிப்புடன்,

"என் அப்பா எனக்குத் தொழிலை விட்டு கொடுக்காது இருந்தால் 'தி கிரேட் சித்தார்த்' என்கிற கர்வத்தை நான் அடையாது போயிருந்திருப்பேன்... அது போல் நானும் என் மகனுக்கு வழி விட்டு ஒதுங்கி நிற்கிறேன்... என் மகனும் 'தி கிரேட் இந்திரஜித்' என்று பெயர் வாங்கணும் இல்லையா...? அதுக்குத் தான்..."

தந்தையின் பேச்சில் மகனது முகம் முற்றிலும் கறுத்து விட்டது... அதை உணர்ந்தவனாய் சித்தார்த்,

"தவறான புரிதல் மேலும் மேலும் தவறு செய்யத் தான் தூண்டும் இந்தர்... நீ நிதர்சனத்தைப் புரிந்து ஏற்றுக் கொள்..."

"அதைத் தான் நானும் உங்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறேன்..." என்று வெறுப்புடன் கூறிய மகனை கண்டு ஒரு கணம் வருந்திய சித்தார்த் மறுகணம் சமாளித்துக் கொண்டு,

"இந்த நிதர்சனம் நமக்குள்ளேயே இருந்தால் நல்லது... உன் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்... தெரிய வந்தால் அவளால் தாங்கி கொள்ள முடியாது..."

"ப்ச்... நமக்கு இடையில் சும்மா சும்மா அவங்களை ஏன் இழுக்கறீங்க...?"

"இது ஏதுடா வம்பா போச்சு... என் பொண்டாட்டியை நான் இழுக்காம வேறு யார் இழுப்பா...?"

"இந்த வயசிலும் உங்களுக்கு ரொமான்ஸ் கேட்குதா...?"

"இந்த வயசில் நீ சாமியாரா இருந்தால் அதுக்கு நான் என்ன செய்ய...? வேணும்ன்னா நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னை மாதிரி லைஃப்பை என்ஜாய் பண்ணு... அதுக்காக ஒரு யூத்தை பார்த்துப் பொறாமை படாதே மை சன்..."

சந்தடிசாக்கில் தன்னை 'யூத்' என்று சொல்லி கொண்ட தந்தையைக் கண்டு இந்திரஜித் ஆத்திரத்தின் உச்சிற்கே சென்றுவிட்டான்...

"இப்போ நீங்க கிளம்பலை நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது... முதல்ல இங்கிருந்து வெளியில் போங்க .." என்று கத்தியவனைக் கண்டு கோபம் கொள்ளாது வருத்தத்துடன் சித்தார்த்,

"இதை நான் கிண்டலுக்குச் சொல்லலை இந்தர்... என்னோட ஆழ் மனசில் இருந்து தான் சொல்றேன்... உன் வயசு தான் நம் சஞ்சய்க்கு... ஆனா அவனுக்குக் கல்யாணமாகப் போகுது... அது போல் உனக்கும் கல்யாணம் பண்ணி பார்க்க எனக்கும் ஆசையிருக்காதா...?"

"ஆசை...? அதுவும் உங்களுக்கு... என் ஆசை நிறைவேறும் போது உங்க ஆசை தானே நிறைவேறும்..." என்றான் அலட்சியமான குரலில்...

இரண்டும் நிறைவேறும் சாத்தியம் இல்லாததை உணர்ந்த சித்தார்த் வேதனையுடன் எழுந்தான்...

"ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீ என்னைப் புரிஞ்சிக்குவ இந்தர்..."

"பார்க்கலாம்... பார்க்கலாம்..." அதே அலட்சிய பாவனையில் கூறிய மகனிடம் எதுவும் பேசாது வெளியில் வந்தான் சித்தார்த்...

நேரே வீட்டிற்குச் சென்றால் மனைவி சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்பாளோ என்று எண்ணிய சித்தார்த் தங்களுடைய ஆசிரமத்திற்குச் சென்றான்...

******************************

நோயாளிகளின் வரவு சிறிது குறைந்ததும் கொஞ்சம் ஓய்வாக அமர்ந்தான் சந்தோஷ்... அவனது மனம் சாத்விகாவிடமே நிலைத்து நின்றது.. அவளை நினைத்த நொடி மனதில் பெரும் உளைச்சல் எழுந்தது... ஏனோ அவனுக்குத் தந்தையிடம் மனம் விட்டு பேச வேண்டும் போலிருந்தது... அடுத்த நொடி அவன் அர்ஜூனுக்கு அழைத்தான்...

"டாட்... ஃப்ரியா...?"

"ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணு சந்தோஷ்..." என்று தந்தை பதிலளிக்கவும் அவன் சரியென்று அலைப்பேசியை அணைத்து விட்டு அவர்களுக்கு என்று இருக்கும் ஓய்வறை நோக்கி சென்றான்...

சரியாகப் பத்து நிமிடத்தில் அங்கு வந்த தந்தையை எண்ணி அவன் மனதிற்குள் மெச்சி கொண்டான்... அவன் வளர, வளர சரியான அப்பா பிள்ளையாகி போனான்... அதுவும் தந்தையின் காதல் கதை கேட்டதில் இருந்து அவனது மனதில் அர்ஜூன் ஒரு 'ஹீரோ' போல் உயர்ந்து விட்டான்...

"என்ன சந்தோஷ் முகம் டல்லா இருக்கிற மாதிரி இருக்கு...? என்ன ப்ராப்ளம்...?"

அகத்தின் அழகு முகத்தில் தெரிவதை கண்டு கொண்ட தந்தையைக் கண்டு அவன் உள்ளம் நெகிழ்ந்து போனது...

"எஸ் டாட்..."

"மருமகள் எதுவும் சண்டை போட்டாளா...?"

"அது எப்படி டாட் உங்களுக்குத் தெரியும்...?" மகன் ஆச்சிரியமாகத் தந்தையைப் பார்த்தான்...

"என் மகனை பத்தி எனக்குத் தெரியாதா...? யார் என்ன சொன்னாலும் அசராதவன்... ஆனால் அம்மு பேசினால் மட்டும் கொஞ்சம் இல்லை நிறையவே அசந்து போகிறவன்..."

அதைக் கேட்டு அவன் அமைதியாக இருந்தான்...

"அப்பா தவறான முடிவு எடுத்துட்டேன்னு வருத்தப்படுறியா...?"

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இல்லை டாட்... நீங்க எது பண்ணினாலும் என்னோட நன்மைக்குத் தான்னு எனக்குத் தெரியும்... ஆனா அம்மு விசயத்தில் மட்டும் நீங்க ஏன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறீங்கன்னு தான் எனக்குத் தெரியலை...?" என்றவன்,

"எனக்கு என்ன குறைச்சல் டாட்...? நான் அழகாயில்லையா...? நல்லா படிக்கலையா...? எல்லாம் இருந்தும் இப்படி என்னைப் பிடிக்காத ஒருத்தியை வலுக்கட்டாயமா கல்யாணம் பண்ணுவதால் எனக்கு என்ன கிடைக்கப் போகுது...? என்னிடம் காதல் சொல்லிய எத்தனையோ பேரை தவிர்த்துட்டு விருப்பம் இல்லாத இவளை நான் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதன் அவசியம் தான் என்ன...? எனக்கு ஒண்ணும் புரியமாட்டேங்குது டாட்... ஆனா ஒண்ணு, இந்தக் கல்யாணத்தால் என் வாழ்க்கை வீணாகப் போகுது... அது

மட்டும் நிச்சயம்..." என்று படபடவெனப் பொரிந்தவனை அமைதியாகப் பார்த்தான் அர்ஜூன்...

"அம்முவை உனக்குப் பிடிக்கலையா...?" என்று கேள்வி கேட்ட தந்தைக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது விழித்தான் சந்தோஷ்...

"அப்படி எல்லாம் எதுவும் இல்லை டாட்... இது நீங்க பேசி முடித்த திருமணம் தான்... ஆனாலும் அவளை எனக்குப் பிடித்துத் தான் இருக்கிறது... நிச்சயத்திற்குப் பிறகு என்னையும் அறியாது அவளிடம் ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டு இருக்கிறது... உண்மை தான்... ஆனால் அதற்காக அவள் இந்தக் கல்யாணம் வேண்டாம், வேண்டாம்ன்னு சொல்லும் போது எல்லாம் என்னோட அமைதியான இயல்பு போய் எனக்குக் கோபம் தான் வருகிறது... அதனால் இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்ன்னு அவளிடம் சொல்லிட்டு வந்துட்டேன்... ஆனா எனக்குச் சில சமயம் இது எதுவும் தேவையில்லைன்னு மனசு வெறுத்து போகுது டாட்... பேசாம கல்யாணத்தை நிறுத்திருங்களேன்... நானும் உங்களை மாதிரி காதலிச்சு என் மனசுக்குப் பிடிச்சவளா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிறேனே..."

அர்ஜூன் பதில் பேசாது மகனை பார்த்தபடி அமர்ந்திருந்தான்... தனது மனதில் இருப்பதை எப்படி அவனிடம் சொல்வது என்று தெரியாது அமைதியாக இருந்தான்... அதைச் சொன்னாலும் மகன் புரிந்து கொள்வானா என்று அவனுக்குத் தெரியவில்லை...

"இதுக்கு எல்லாம் என்ன காரணம் டாட்...? நீங்க சொன்னீங்கங்கிற ஒரு காரணத்துக்காக நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சேன்... இப்போ வரைக்கும் இதுக்கான காரணத்தை நான் உங்க கிட்ட கேட்கலை... எதுவாக இருந்தாலும் நீங்க என் கிட்ட சொல்லுங்க... இல்லை அம்மு மேல் வெறுப்பு கூடி ஒரு நாள் என் மனவுணர்கள் வெடிக்கப் போகிறது... அப்போது பாதிக்கப்படப் போறது அம்மு தான்..."

"நான் உனக்குக் கெடுதல் நினைப்பேனா சந்தோஷ்..."

அதுவரை உரத்து ஒலித்த சந்தோஷின் குரல் இப்போது அடங்கிப் போனது...

"இல்லை டாட்..."

"இதுவும் அப்படியே... அம்மு இந்தக் கல்யாணத்தை மதிப்பாள்... உன்னை ஏற்றுக் கொள்வாள்... உன்னுடைய சந்தோசமான மணவாழ்க்கைக்கு நான் க்யாரண்ட்டி... என்னை நம்பு சந்தோஷ்..."

இந்தளவிற்குத் தந்தை ஆணித்தரமாகக் கூறுகிறார் என்றால் நிச்சயம் அதில் ஏதோ அர்த்தம் பொதிந்து இருப்பதாய் அவனது மனதிற்குத் தோன்றியது...

"ஒரே மர்மமாய் இருக்கு டாட்... ஆனா இதுவும் எனக்குப் பிடிச்சு தான் இருக்கு..." என்று புன்னகைத்த மகனை கண்டு நிம்மதியாய் இருந்தது அர்ஜூனுக்கு...

"எல்லாம் சரியா வரும் சந்தோஷ்... நீ எப்போதும் போல் சந்தோசமாயிரு... உன் பிரச்சினையை உன் அம்மா வரைக்கும் கொண்டு போயிடாதே... இதைக் கேள்விப்பட்டால் அவள் ரொம்ப மனசு கஷ்டப்படுவாள்..."

தந்தையின் கூற்றை ஆமோதித்து ஏற்றுக் கொண்டான் சந்தோஷ்...

"இது அம்முவுக்கு லன்ச் டைம்... நீ ஃபோன் பண்ணலையா...?"

"ப்ச்... ஃபோன் பண்ணினா அப்படியே சிரிச்சு பேசிட்டு தான் மறுவேலை பார்ப்பாள்... அட போங்க டாட்..." என்று மகன் சலித்துக் கொண்டான்...

"நீ கடமைக்குப் பேசாமல் காதலோடு பேசு... ஒருநாள் இல்லைன்னாலும் ஒருநாள் அவளுடைய மனசு மாறும்..." என்ற அர்ஜூன் மகனுக்குத் தனிமை கொடுத்து விட்டு வெளியில் வந்தான்...

அந்நேரம் அங்கு வந்த சங்கமித்ராவிடம், "சந்தோஷ், அம்மு கூட ஃபோன் பேசிக்கிட்டு இருக்கான்... நீ வா, என்னோட

ரூமுக்கு போகலாம்..."

"அவன் அப்படியே உங்களை மாதிரி... அம்மு கிட்ட அவ்வளவு கேரிங்..." என்று சந்தோசமாய்க் கூறிய மனைவியைக் கண்டு புன்னகைத்தான் அர்ஜூன், தனது மனதினை மறைத்துக் கொண்டு...

அதே நேரம் சந்தோஷ் உற்சாகமாய்ச் சாத்விகாவிற்கு அழைப்பை விடுவித்தான்... மறுமுனையில் எரிச்சலுடன் எடுத்தாள் சாத்விகா...

"இப்போ எதுக்கு ஃபோன் பண்றீங்க...?" வழக்கம் போல் அவளது உதாசீனம், கோபம் அவனுள் கோபத்தினை ஏற்படுத்தியது... ஆனாலும் முயன்று அடக்கி கொண்டான்...

"சாப்பிட்டியா அம்மு...?" அவனது குரலில் தான் எத்தனை கனிவு, குழைவு...

அதைக் கேட்டு அவள் ஒரு நொடி திகைத்து போய் விட்டாள்... அவளையும் அறியாது அவளது வாய்,

"ம்... ம்..." என்று பதிலளித்தது...

"நான் சாப்பிட்டேன்னான்னு நீ கேட்க மாட்டியா...?"

பெண் மனம் இரக்கம் கொண்ட போதும் அதைச் சொல்லாது மறைத்தது... ஏனோ அவளுக்கு அப்படிக் கேட்க பிடிக்கவில்லை... அதை அவன் கண்டு கொள்ளாது,

"நான் இன்னும் சாப்பிடலை..."

"என் கூடக் கடலை போடாம முதல்ல போய்ச் சாப்பிடுங்க..." என்று வெடுக்கென்று கூறியவள் அலைப்பேசியை அணைத்து விட்டாள்...

அவளது வெடுவெடு பேச்சில் சந்தோஷின் முகம் கூம்பி போனது... திரும்பத் திரும்ப அவளது வார்த்தைகள் அவனை வதைத்த போதும் அதன் அர்த்தம் வெகுதாமதமாய் அவனது மூளையில் ஏறியது...

'டேய், நீ டாக்டருக்கு படிச்சு வேலையே இல்லை... அம்மு சொன்னது சரி தான்... உனக்கு அறிவு வேலை செய்ய மாட்டேங்குது...' என்று தனது பின்னந்தலையில் தட்டி கொண்டவன்,

'என் மீதான உனது அக்கறைக்கு நன்றி அம்மு...ஐ லவ் யூ...' என்று தன்னவளுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பி வைத்தான்...

அதைப் பிரித்துப் பார்த்த சாத்விகா எதுவும் தோன்றாது உணர்வில்லாது அமர்ந்திருந்தாள்...

*******************

கணினி திரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த காவ்யாவிற்கு எரிச்சல், எரிச்சலாக வந்தது... தனது விழிகளைத் தன்னவன் மீது ஆதிக்கத்துடனும், உரிமையுடனும் செலுத்தினாள்... சஞ்சயோ அவளைக் கண்டு கொள்ளாது கணினியை உற்று நோக்கி கொண்டு அதனுடன் குடும்பம் நடத்தி கொண்டிருந்தான்... அதில் கோபமுற்றவளாய் நேரே அவன் அருகில் வந்து நின்றவள்,

"சஞ்சூ..." அதற்கு அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை...

"சஞ்சய்..." அதற்கும் அவன் அசையவில்லை...

"டேய் அத்தான்..."

அவன் காதுக்கருகில் குனிந்து அவள் உரக்க கத்தியதில் அவன் அவளைத் திரும்பி பார்த்து முறைத்தான்...

"என்னடி...?"

முக்கியமான வேலையின் நடுவே அவள் தொந்திரவு செய்தது அவனுக்குக் கோபத்தினை வரவழைத்தது... அவளோ அவன் கோபமாய் முறைத்ததில் கோபம் கொண்டு,

"இன்னும் ஒன்பது நாளில் கல்யாணம்... ஒரு சின்ன ரொமான்ஸ் கிடையாது... ஒரு சின்ன ஹக், ஒரு சின்னக்

கிஸ் இப்படி எதுவும் கிடையாது... எப்பப்பாரு வேலை மட்டும் தான்... நீ எனக்கு வேண்டாம் போடா..." என்று முணுமுணுத்தவள் அவன் கொண்டு வந்திருந்த சாப்பாட்டை எடுத்து பிரிக்க ஆரம்பித்தாள்...

பீஸ் புலாவ், சப்பாத்தி, பன்னீர் பட்டர் மசாலா, கோபி மஞ்சூரியன், கூடவே கொசுறாகத் தயிர்சாதம் வடுமாங்காய்... எல்லாவற்றையும் மேசை மீது பரத்தி வைத்தவள் அதை விழி விரிய ஆச்சிரியத்துடன் பார்த்து கொண்டிருந்தாள்... பின்பு ஒரு தட்டில் உணவை எடுத்து வைத்து உண்ண ஆரம்பித்த போது அவளையும் அறியாது அவளது பார்வை அவனை நோக்கி சென்றது... மும்முரமாய் வேலை செய்து கொண்டிருந்தவனைக் கண்டு மனம் கேட்காது தட்டினை எடுத்துக் கொண்டு அவனை நோக்கி சென்றாள்...

"சஞ்சு கண்ணா... சாப்பிட்டுட்டு வேலையைப் பாருடா..." என்று அவள் உணவினை அவனுக்கு ஊட்ட முயல...

அவளது அக்கறையில் முகம் மலர அதை வாங்கிக் கொண்டவன், "இதுக்குத் தான்டி உன்னை என் கூடவே வச்சியிருக்கேன்..."

"அடப்பாவி... நான் கூட என்னைப் பிரிஞ்சியிருக்க முடியாம கூடவே வச்சியிருக்கன்னு நினைச்சு உன்னை நம்பிட்டேனே..."

"அதுக்கும் தான்..." என்றவனது கரங்கள் உரிமையோடு அவளது இடையை அணைத்து அவளைத் தன் மடி மீது அமர வைத்துக் கொண்டது...

"இப்போ மட்டும் உனக்கு வேலை இல்லையாக்கும்..."

"இருக்கு தான்... ஆனா நீ இப்படிக் கிட்ட வந்தால் எப்படி வேலை ஓடும்..." என்றவன் அடுத்த வாய்க்காக வாய்த் திறந்தான்... அவனது வாயில் உணவினை வைத்தபடி,

"டேய் உண்மையைச் சொல்லு... நீ எனக்குச் சமைச்சு எடுத்துட்டு வர்றியா...? இல்லை நீ சாப்பிட எடுத்துட்டு

வர்றியா...?"

"ரெண்டுக்கும் தான்..." என்றவனின் கரம் அவளுக்கு ஊட்டி விட்டது...

"டேஸ்ட் எப்படியிருக்கு...?" என்று ஆர்வமாய்க் கேட்டவனின் கைகளில் முத்தமிட்டவள்,

"சூப்பரா இருக்கு..."

"எதுக்குன்னு கேட்டியே... இதுக்குத் தான்டி சமைச்சுக் கொண்டு வர்றது..." என்று மயக்கத்துடன் கூறியவனை மையலுடன் பார்த்தாள்...

"அப்படியே இங்கே கொடுத்தாலும் நல்லாயிருக்கும்..." என்று இதழ்களைச் சுட்டிக்காட்டியவனைக் கண்டு அவள் மாரியாத்தாவாக மாறி முறைக்கத் துவங்கினாள்...

"சஞ்சூ... அடி வேணுமா...?"

"இது நல்ல கதையா இருக்கே...? என் மடியில் உட்காருவியாம்... என் கையில் கிஸ் கொடுப்பியாம்... ஆனா இதுக்கு மட்டும் தடாவா...? காவி, நல்லாயிருக்கும்மா உன் நியாயம்...?"

"இனி நான் உன் பக்கத்தில் வந்தால் என்னை என்னன்னு கேளு..."

"போ... எனக்கு என்ன...? நம்ம ரோசியைக் கூப்பிடறேன்... நான் சொன்னா அவள் என்ன வேணும்ன்னாலும் கேட்பாள்..." என்றவன் வாய் மீது கை வைத்து மூடியவள்,

"அது வரைக்கும் நீ உயிருடன் இருக்கணும்ல..." என்று வலதுகை ஆள்காட்டி விரல் நீட்டி அவள் அவனை மிரட்ட...

அவளது கை மீது முத்தமிட்டவன், "இப்போதைக்கு இது போதும்... கல்யாணத்துக்குப் பிறகு வட்டியும், முதலுமாய் கவனிச்சிக்கிறேன்..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு அவளது முகத்தில் வெட்கம் கவிழ்ந்தது... அதை ஆசையுடன் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சஞ்சய்...

********************

இரவு நேரத்தில் அந்த வீடு அப்படியொரு அமைதியாக இருந்தது... சம்யுக்தா மட்டும் தோட்டத்துக் கல்மேடையில் அமர்ந்து கொண்டு வானத்து நிலவினை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அதை ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை... மனதில் பலவித யோசனைகள் ஓடி கொண்டிருந்தது... குழப்பமான மனநிலையில் அவள் இருந்தாள்... மனதில் இருந்த பல கேள்விகளுக்கு விடை அறியாது திக்குத் தெரியாத காட்டில் தனித்து விடப்பட்ட சிறுமி போல் அவள் விழித்துக் கொண்டிருந்தாள்...

அந்நேரம் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டு அவள் திரும்பி பார்த்தாள்... நிலவு ஒளியில் தன்னவனைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டவள் அவனை நோக்கி விரைந்தாள்...

"பாவா..." அவள் அழைத்ததும் இந்திரஜித் நின்றாலும் அவனது உதடுகள்,

"ம்ப்ச்..." என்று வெறுப்பாய் சலித்துக் கொண்டது...

"மீரு நன்ட்டோ கோபங்கா உன்னாரா...?" (நீங்க என் மேல் கோபமா இருக்கீங்களா...?) என்றவளை அவன் உறுத்து விழித்தான்...

"அவ்வுன்னு... நேனு நின்ட்டோ கோபங்கா உன்னானு..." (ஆமாம்... நான் உன் மேல் கோபமா இருக்கேன்) என்று அவன் பதிலுக்குத் தெலுங்கில் கோபமாய்க் கத்தினான்...

"ஆ கோபம்லோ நேனு மி பாதலுக்கு மீத பாலை போஸ்டானு..." (அந்தக் கோபத்தில் தான் நான் உன் பாதத்தில் பாலை கொட்டினேன்) என்று கத்தியவனைக் கண்டு அவள் அரண்டு போய்ப் பார்த்தாள்...

அவள் மீது அவனுக்கு ஏன் இத்தனை வஞ்சம்...? அவனை உயிருக்கு உயிராய் காதலித்ததைத் தவிர அவள் என்ன பாவம் செய்தாள்...?

அவனைக் காதலித்ததே அவள் செய்த பாவம் என்பதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை...!!!

தொடரும்...!!!

"எந்துகு நா மீதா கோபங்கா உண்டேரு பாவா...?" (எதுக்கு என் மீது கோபமா இருக்கீங்க...?)

இந்திரஜித்தின் கோபத்திற்கான காரணம் அறியாது சம்யுக்தா அறியா பிள்ளை போல் விழித்தாள்... அவள் அறிந்த இந்திரஜித் வேறு... ஆனால் இந்த இரு நாட்களாக அவள் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த இந்திரஜித் வேறு... அவனின் புன்னகை முகம் எங்கே? இவனின் கோப முகம் எங்கே? ஏன் இந்தக் கோபம், பாராமுகம் என்று தெரியாது தவித்தாள் அந்தப் பேதை பெண்...

ஊனையும், உயிரையும் உருக்கும் காதல் இத்தனை காலங்களில் அவளைக் கொஞ்சமாய் உருக்கி சாகடித்துக் கொண்டிருந்தது... அது அவளது உடல் மெலிவிலும், கண்களில் வழிந்த ஏக்கத்திலும் நன்கு தெரிந்தது... எத்தனை கவலை, சோகம், வருத்தம் இருந்த போதும் அவளது மனதில் இருந்த நம்பிக்கையை மட்டும் அவள் கைவிடவில்லை... ஆனால் இந்த இரு நாட்களாக அவளது நம்பிக்கை பயங்கரமாய் ஆட்டம் கண்டு விட்டது... கஷ்டப்பட்டுக் கண்டெடுத்த புதையலை மீண்டும் இழந்து விடுவோமோ என்கிற பயம் அவளது மனதினை ஆக்கிரமித்து அவளை உயிருடன் கொன்றது...

"எதுக்கா...? என்னையவே எதிர்த்துக் கேள்வி கேட்பியா...?" என்று கோபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"ஐயோ... அதி லேது பாவா..." (அப்படி இல்லை பாவா)

"முதலில் இப்படிப் பாவான்னு கூப்பிடுறதை நிறுத்து... அந்த வார்த்தையைக் கேட்கும் போது எல்லாம் எனக்குக் கோபம் கோபமா வருது... அப்படியே உன்னைக் கொல்லணும்ன்னு வெறி வருது..."

"உங்களுக்கு அது தான் விருப்பம்ன்னா முதலில் அதைச் செய்ங்க..." என்று தீவிரமான குரலில் கூறியவளை அவன் உறுத்து விழித்தான்...

"விளையாட்டுக்கு சொல்லலை... நேனு நிஜம் செப்தம்..." (நான் சத்தியமா சொல்றேன்)

"நானும் சத்தியமா தான் சொல்றேன்... என் மனசிலுள்ள கோபம் போகணும்ன்னா நீ உன் உயிரை கொடுக்கணும்... அப்போ தான் என் கோபம் குறையும்..." என்றான் அவன் வெறுப்பான குரலில்...

"உங்களுக்காக நான் உயிரையும் கொடுப்பேன் பாவா... நீங்க என்னைப் புரிஞ்சிக்கிட்டது அவ்வளவு தானா...?" கண்ணீர் மல்க கேட்டவளை கண்டு அவனது உடல் ஒரு நொடி விறைத்தது...

மறுநொடி தன்னிலை உணர்ந்தவன் அவளைப் பார்த்து வஞ்சினத்துடன் சிரித்தான்... ஒரு சிரிப்பின் பின்னால் இத்தனை வன்மம் இருக்கக் கூடுமோ... அவனது சிரிப்பின் பின்னால் அத்தனை வன்மம் இருந்தது...

"அது எப்படி அவ்வளவு எளிதா உன் உயிரை போக விட்டுருவேனா...? அணு, அணுவா உன்னைச் சித்திரவதை செஞ்சு தானே சாகடிக்கணும்... ஏன்டா உயிர் வாழ்கிறோம்ன்னு நீ கதறி துடிக்கணும்... அது தான் எனக்கு வேண்டும்..."

"சித்திரவதை செய்றது நீங்களா இருந்தால் அதை நான் சந்தோசமா ஏத்துக்கிறேன்... என் மீது உங்களுக்கு இல்லாத உரிமையா...?"

அவன் அத்தனை பேசியும் அவளது காதல் மனம் அவனிடத்தில் மீண்டும் மீண்டும் மண்டியிட்டது...

"நீ யாருடி எனக்கு...? உன் மீது நான் உரிமை கொள்ள...? நீ யாரோ...? எவரோ...?" என்றவனை உணர்ச்சி வேகத்தில் உதடுகள் துடிக்கப் பார்த்தவள்,

"என்னை உங்களுக்கு ஞாபகம் இல்லையா பாவா...?"

"நான் உன்னைப் பார்த்ததே இல்லைன்னு சொல்றேன்..."

அவனது பேச்சில் அவள் மிகவும் குழம்பி போனாள்... தன்னுடைய காதலனோடு இவனைப் பொருத்தி பார்த்தவளுக்குப் பத்து இல்லை நூறு வித்தியாசங்கள் தெரிந்த போதும், அவளது உள்ளுணர்வு 'இவன் என்னவன்' என்று உணர்த்திக் கொண்டிருக்கிறதே... அது எப்படிப் பொய்த்து போகும்...? குழப்பத்துடன் அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"உங்களுக்கு எதுவும் விபத்து நடந்து பழசு எல்லாம் மறந்து போச்சா...?" என்றவளை எரிச்சலுடன் பார்த்தவன்,

"இந்த இருபத்தைஞ்சு வருசத்தில் ஒரு தடவை கூட எனக்கு விபத்து நடந்தது இல்லை..."

"அப்போ நீங்க இரட்டை பிறவியா...? உங்க கூடப் பிறந்தவர் வேறு யாரும் இருக்காங்களா...?" என்று அறியாமையுடன் கேட்டவளை கண்டு அவன் நக்கல் குரலில்,

"நீ தெலுங்கு அம்மாயி இல்லையா... அதான் சிரஞ்சீவிகாரு படம் மாதிரி மசாலா தூக்கலா யோசிக்கிற... எங்கப்பா, அம்மாவுக்கு நான் ஒரே பையன் தான்... போதுமா..." என்று கூறியவன் அடுத்த நொடி அவளைக் கோபத்துடன் ஏறிட்டு,

"இதுக்குத் தான் உன்னைக் கொல்லணும்னு வெறி வருது... நேத்து நான் வந்தவுடனேயே என் கிட்ட வழிஞ்சிக்கிட்டு நின்ன... இன்னைக்குக் கண்ணா அண்ணா கிட்ட... அதுக்கு அப்புறம் அவன் பேரு என்ன...?" நெற்றியை தட்டி கொண்டு யோசித்தவன்,

"ஆங், பிரசன்னா... அவன் உனக்கு அத்தனை சப்போர்ட் பண்றான்... அவனுக்கும் உனக்கும் அப்படி என்ன நெருக்கமான தொடர்பு...? ஊரில் ஒரு ஆம்பிளை விடறது இல்லை... அப்படித் தானே... ச்சீ, நீயெல்லாம் ஒரு பொண்ணா... அந்தக் கோபத்தில் தான் நான் உன் காலில் பாலை ஊத்தியது... எனக்கு வந்த ஆத்திரத்துக்கு ஆசிட் ஊத்தியிருக்கணும்... அங்கே அது இல்லாததால் நீ தப்பிச்ச..."

அவனது குரலில் இருந்த ஆத்திரத்தில், குற்றச்சாட்டில் அவள் மேனி அதிர்ந்து நடுங்க, "ஏழுகுண்டலவாடா..." என்று அலறியபடி கண்களையும், காதுகளையும் இறுக மூடி கொண்டாள்...

அவளது விழிகளில் கண்ணீர் கரகரவென வழிந்தது... யாரை பார்த்து என்ன வார்த்தைகளைக் கூறிவிட்டான்... அதுவும் மனம் கவர்ந்தவன் வாயால் இந்த வார்த்தைகளைக் கேட்கும் போது அவள் உயிருடன் மரித்துத் தான் போனாள்...

"இந்தர்..." அந்தக் கணம் இடி போல் ஒலித்தது சித்தார்த்தின் குரல்...

சித்தார்த்தின் குரலில் இருவரும் திரும்பி பார்த்தனர்... அவள் பயந்து போய் நின்றிருந்தாள்... அவனோ தைரியமாகத் தந்தையை எதிர்கொண்டான்...

இந்திரஜித் கடைசியாகப் பேசியது எல்லாவற்றையும் சித்தார்த் கேட்டு விட்டான்... அவனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை... தனது மகனா இப்படிப் பேசியது என்று... தன்னை விடத் தன் மனைவியின் வளர்ப்பு எந்த இடத்தில் இப்படிப் பொய்த்துப் போனது என்று அவனுக்குத் தெரியவில்லை... அன்பு உள்ளம் கொண்ட தாய் வளர்த்த மகன் இப்படிப் பெண்களைக் கேவலப்படுத்திப் பேசுவானா...? அதுவும் ஆசிட் அது இது என்று...

அடுத்த நொடி கொஞ்சமும் யோசிக்காது சித்தார்த்தின் வலதுகரம் மகனது கன்னத்தைப் பதம் பார்த்தது... அடியை வாங்கிக் கொண்ட இந்திரஜித் தந்தையை எதிர்த்து நடந்து கொள்ளாது கோபத்தில் இறுகி போய்க் கல் போல் நின்றிருந்தான்... சம்யுக்தா முன் தந்தை தன்னை அடித்தது அவனுக்குப் பிடிக்கவில்லை தான்... ஆனாலும் ஒன்று செய்ய இயலாது அவன் நின்றிருந்தான்... அவள் தான் பதறி போனாள்...

"மாமாகாரு... எதுக்குப் பாவாவை அடிச்சீங்க...? அவங்க பாவம்..." என்று கூறியவளை இரக்கத்துடன் பார்த்தான்

சித்தார்த்...

"பாருடா... உனக்காக எப்படிப் பரிஞ்சு பேசுகிறாள்ன்னு... இது தான் பெண் மனம் என்பது... மிகவும் பூஞ்சையானது... இந்தப் பூ மனசை காயப்படுத்த உன்னால் எப்படி முடிஞ்சது...? நாட்டில் பெண்களுக்கு எதிராக எத்தனையோ வன்கொடுமைகள் நடக்கிறது போதாதா... என் மகனான நீ இப்படிப் பேசியது எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு இந்தர்... உன் கிட்ட இருந்து இதை நான் எதிர்பார்க்கலை..."

சித்தார்த்தின் மனதில் அவனது 'ஜிக்கி'யின் நினைவுகள்... காலத்தால் கூட அழியாத நினைவுகள் அல்லவா அது...

"இப்போ என்னைக் கண்டிக்கும் நீங்க முன்பு பேசியது, செஞ்சது எல்லாம் இதை விட அதிகம்... வன்கொடுமையை விட மிகவும் கேவலமானது... அப்படியொரு காரியத்தைப் பண்ணின நீங்க இப்படிப் பேசுறது தான் அதிசயமா இருக்கு...?"

தந்தைக்கு மட்டும் புரியும்படி ஆங்கிலத்தில் கூறிய இந்திரஜித்தின் முகம் அன்றைய நாளின் நினைவில் கனல் போல் ஜொலித்தது... தோட்டத்து மின்விளக்கில் இருந்து கசிந்த மெல்லிய விளக்கொளியில் அவனது கோப முகம் யாருக்கும் அவ்வளவாகத் தெரியவில்லை... சம்யுக்தாவோ அவன் என்ன பேசினான் என்று அர்த்தம் புரியாது முழித்துக் கொண்டிருந்தாள்...

மகன் கூறியதை கேட்டு சித்தார்த்தின் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போனது... அது அவனது தவறு தான்... அது இல்லையென்று அவன் மறுக்க முடியாது... ஆனால் மகனின் தவறை திருத்துவதற்கு முயன்ற ஒரு முயற்சி தவறுதலாக முடிந்து விட்டதை மகன் அறிவானா...? மனம் வேதனையில் உழன்றபடி கையாலாகாதவனாய் சித்தார்த் மகனை பார்த்தான்... அவனோ சம்யுக்தாவை முறைத்துக் கொண்டு நின்றிருந்தான்...

"பேச்சு உனக்கும் எனக்கும் தான் இந்தர்... நீ எதுக்கு அவளை முறைச்சு பார்க்கிற...?"

"எல்லாப் பிரச்சினைக்கும் இவள் தானே காரணம்... ஏய், நான் உன்னைத் தவறா பேசினேனா...?"

இந்திரஜித் கேட்டதும் அவள் மலங்க மலங்க விழித்தாள்...

"பயப்படாம உண்மையைச் சொல்லும்மா... இவன் தவறான வார்த்தைகள் பேசினான் தானே... நானே என் காதால் கேட்டேன்..."

சித்தார்த் கூறியதும் அவனை இயலாதவளாய் பார்த்தவள், "இல்லை மாமாகாரு... பாவா, அப்படி எல்லாம் தப்பா பேசலை... தூங்காம இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கன்னு கேட்டார்..."

தன்னவனை விட்டு கொடுக்காது அவள் பதில் கூறினாள்... அவளது பேச்சில் இந்திரஜித்தின் விழிகளில் கர்வம் வந்து குடியேறியது... சித்தார்த்திற்கோ மிகவும் குழப்பமாக இருந்தது...

"நல்லா காது கொடுத்து கேட்டுக்கிட்டீங்களா...? வயசானாலே இது தான் ப்ராப்ளம்... கேட்காதது எல்லாம் கேட்கிற மாதிரியே இருக்கும்... கேட்க வேண்டிய விசயம் எதுவும் கேட்காது... நாளைக்குக் காலையில் முதல் வேலையாய் ஈஎன்டி டாக்டரை போய்ப் பார்த்து காது இரண்டையும் நல்லா செக் பண்ணுங்க..." என்று நக்கலாய் கூறியவன்,

"இப்போ வழியை விட்டு நிக்கிறீங்களா...?" என்று திமிர் குரலில் கூறியவன் சித்தார்த்தின் தோள் மீது கை வைத்து தள்ள... அதை உணர்ந்தவனாய் சித்தார்த் தன்னிச்சையாக வழி விட்டு விலகி நின்றான்...

"உண்மையைச் சொல்லு சம்யு... இந்தர் வேறு ஏதோ பேசியதாகத் தான் நான் கேட்டேன்... ஆனா நீ அது இல்லைன்னு சொல்ற... பயப்படாம உண்மையைச் சொல்லு சம்யு..."

சித்தார்த்திடம் உண்மையைக் கூற இயலாது அவள் தடுமாறினாள்... அவளது உயிர் போனாலும் அவள்

தன்னவனைக் காட்டி கொடுக்க மாட்டாள்... அதே சமயம் தன்னை மகள் போல் பார்த்துக் கொள்ளும் சித்தார்த்திடம் உண்மையைச் சொல்லாது மறைப்பது கண்டு அவளுள் குற்றவுணர்வு தலை தூக்கியது... அடுத்த நொடி அவள் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்... இப்போது சித்தார்த் பதறிப் போனான்...

"சரிம்மா, நான் உன்னை ஒண்ணும் கேட்கலை... நீ அழாதே..." என்றுரைத்தவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

இதை எல்லாம் பார்த்தபடி மரத்தின் பின்னே நின்றிருந்த இந்திரஜித்தின் விழிகள் பளபளத்தது... சம்யுக்தாவை அடித்தால் தந்தைக்கு வலிப்பதை கண்டு கொண்டவனின் முகம் சூர்யகாந்தி பூவாய் மலர்ந்தது... இனி அவன் எல்லாவற்றையும் பார்த்து கொள்வான்... மனதிற்குள் ஒரு முடிவு எடுத்தவனாய் மரத்தின் பின்னால் இருந்து வெளியில் வந்தவன் வீட்டினை நோக்கி சென்றான்...

இந்திரஜித் செல்வதைக் கண்டு சம்யுக்தா அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தாள்...

"பாவா..."

அவளது அழைப்பில் நின்றவன், "என்ன...?" என்றான் எரிச்சலுடன்...

"நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை... என் மனசில் நீங்க மட்டும் தான்... நான் உங்களைத் தவிர வேறு யாரையும் காதலிக்கலை..." என்றவளை கண்டு இகழ்ச்சியாய் வளைந்தது அவனது உதடுகள்...

"நான் உன்னை இப்போ தான் முதல் முறையாகப் பார்க்கிறேன்... அப்படி இருக்கும் போது நீ எப்படி என்னைக் காதலிக்க முடியும்...?" என்றவனின் பார்வை அவளை ஆழ்ந்து பார்த்தது...

"ஒருவேளை பணக்கார வீட்டுப் பையனா பார்த்து இப்படிப் பேசி வளைச்சு போட்டு லைஃபில் செட்டிலாகலாம்ன்னு நினைக்கிறியா..."

சம்யுக்தா அவனது பேச்சில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"உனக்கு ஒண்ணு சொல்லவா...? என்னைக் காதலிக்க, கல்யாணம் பண்ண ஒரு தகுதி வேணும்... இவ்வளவு ஏன் நான் ஒருத்தியை வச்சிக்கிறதா இருந்தாலும் அதற்கும் ஒரு தகுதி வேணும்... ஆனா இது எதுக்குமான தகுதி உன் கிட்ட இல்லை... என்னைப் பொருத்தவரையில் நீ ஒரு வேலைக்காரி தான்... என் பக்கத்தில் நின்னு சரிக்குச் சமமா பேச கூட அருகதை இல்லாதவள்... மண்பானை செய்யும் உனக்குக் கம்ப்யூட்டர் படிச்ச நான் கேட்குதா...? உனக்கு ஏத்த மாதிரி செங்கல் சூளையில் வேலை செய்யும் யாராவது ஒருத்தன் வந்து மாட்டுவான்... அவனை நல்லா வளைச்சு போட்டுக்கோ... ஒரே ஃபீல்டில் இருக்கிற ரெண்டு பேர் தொழிலும் சேர்ந்து ஓகோன்னு ஓடும்..."

அவளை எந்தளவிற்கு மட்டம் தட்ட வேண்டுமோ அந்தளவிற்கு மட்டம் தட்டிவிட்டு அவன் செல்ல, அவளோ திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தாள்... திடுமென வானில் இருந்து விழுந்த மழைத்துளிகளில் தன்னுணர்வு பெற்று அவள் அண்ணாந்து வானத்தைப் பார்த்தாள்... அவளது மனதினை போன்று வானமும் இருளாய் இருந்தது... அதே சமயம் அவளது விழிகளின் கண்ணீர் மழை போன்று வானம் மழையைப் பொழிந்தது...

அவள் மனம் மரத்து போய் எத்தனை நேரம் அங்கே நின்றிருந்தாளோ தெரியாது... மழை நீர் ஊசி போன்று அவளது உடலினை துளைத்து எடுத்தது... அப்படியாவது தனக்குச் சுரணை வராதா என்று நினைத்தாளோ... காதலில் சுரணையாவது ஒன்றாவது... அவளைப் பொருத்தவரையில் காதலில் சரணாகதி மட்டுமே... அவள் மனம் அவனிடத்தில் ஒட்டுமொத்தமாய்ச் சரணடைந்து இருந்ததை அவன் அறிவானோ...

எம்பெருமான் மீது காதல் கொண்ட ஆண்டாளும், மீராவும் ஊரார் தூற்றுதலுக்கு ஆளாகி பெருந்துன்பம் அடைந்து தான் அவனது காலடியில் சரணடைந்தனர்... அது போல் அவள் தன்னவனைச் சரணடைவதற்குள் என்னென்ன துன்பம் அடைய போகிறாளோ, என்னென்ன அவமானம் படப் போகிறாளோ... அது அவன் மட்டுமே அறிவான்...

திடுமென ஒரு கரம் அவளைப் பிடித்து இழுத்தது... பயத்தில் கூச்சலிட போனவள் அது தன்னவனின் வலிய கரம் என்றுணர்ந்து அமைதியாகி போனாள்... மனம் சந்தோசத்தில் அலைபாய அவன் இழுத்த இழுப்பிற்கு அவள் உடன் சென்றாள்...

வீட்டின் வராந்தாவில் கொண்டு வந்து சம்யுக்தாவை நிறுத்திய இந்திரஜித் ஆங்காரம் கொண்டு அவளை உறுத்து விழித்தான்... அப்போது அவனது விழிகளில் ஈர உடையுடன் நின்றிருந்த அவளது தோற்றம் விழுந்து அவனை விதிர்க்க செய்தது... அதிலும் புடவை நனைந்ததில் அது கண்ணாடி போல் அவளது உடலை அப்பட்டமாய் வெளிச்சம் போட்டுக் காட்டியது... இரவிக்கைக்கும், புடவை கொசுவத்திற்கும் இடைப்பட்ட வயிற்றுப் பகுதியில் பதிந்த அவனது விழிகள் வேறு எங்கும் நகர மறுத்தது... அவனது உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் அவன் அதிர்ந்து போய் நின்றிருந்தான்...

அவனது பார்வையில் பாவையவள் வெட்கம் கொண்டு அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்... அதில் தன்னுணர்வு அடைந்தவன்,

"ஹலோ, இவ்வளவு சீன் போடுமளவுக்கு நீ ஒண்ணும் வொர்த் இல்லை... போய்த் தூங்கும் வேலையைப் பார்..." என்று சொடக்கு போட்டபடி அவளிடம் எடுத்தெறிந்து கூறியவன் அவளை முன்னே வீட்டிற்குள் போக விட்டு பின்னே தான் நடந்தான்...

சம்யுக்தா தனது அறைக்கு வந்து ஈர உடைகளை மாற்றி விட்டுக் கட்டிலில் அமர்ந்தாள்... மனம் எங்கும் மன்னவன் வாசமே... அவன் பேசிய அத்தனை சுடு சொற்களும்

பின்னுக்குப் போய்விட்டது, அவனது ஒற்றைப் பார்வையில்... அதை நினைத்து நினைத்து வெட்கம் கொண்டது பாவையவளின் பேதை மனம்... நாணம் கொண்டு முகத்தை மூடி கொண்டவள் அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்...

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளின் கால்களை யாரோ மென்மையாய் தடவி விடுவது போல் ஒரு உணர்வு... 'யுகிம்மா' என்றழைப்பு அவளது காதை தென்றல் தீண்டுவது போல் தீண்டி சென்றது... அடுத்த நொடி,

"பாவா..." என்று கூவியபடி எழுந்து அமர்ந்தவளின் விழிகள் சுற்றும் முற்றும் தன்னவனைத் தேடி அலைபாய்ந்தது...

அறையில் கசிந்து கொண்டிருந்த இரவு விளக்கொளியில் நன்கு துளாவி பார்த்தும் யாரும் தென்படவில்லை... மனம் சோர்வுற படுக்கையில் சாய்ந்தவளின் விழிகள் அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீரை மழை போல் பொழிந்தது... வரமாய்த் தனது வாழ்க்கையில் வந்தவன் இப்போது தன்னைப் பாவமாய் எண்ணி வெறுத்து ஒதுக்குவது கண்டு அவளது மனம் தவியாய்த் தவித்தது... தான் செய்த பாவம் தான் என்ன என்று அறியாது... ஆனாலும் அவளது மனம் நாய்க்குட்டியாய் அவனைத் தான் சுற்றி வந்தது... எஜமான் விசுவாசம் என்பது இது தானோ...?

காலையில் எழுந்த சம்யுக்தா எப்போதும் போல் வேலைகள் பார்த்து கொண்டிருந்தாள்... கைகள் அது பாட்டிற்கு வேலைகள் செய்து கொண்டிருந்தது... ஆனால் அவளது மனமோ தன்னவனிடம் நிலைத்து நின்றது... அந்நேரம் ஆதித்யா எழுந்துவிட அவளது கவனம் சின்னவனிடம் சென்றது... அவனுக்குப் பாலை ஆற்றி பாட்டிலில் ஊற்றி புகட்ட துவங்கினாள்...

சமையலறையின் கீழே அமர்ந்து தனது மடியில் சின்னவனைப் படுக்க வைத்துக் கொண்டு அவள் பால் புகட்ட... அவனோ ‘அத்தை மடி மெத்தையடி’ என்பது போல் சொகுசாய் படுத்துக் கொண்டு கால்கள் இரண்டால் பாட்டிலை பிடித்தபடி, கைகள் இரண்டால் அத்தையின்

கழுத்தில் இருந்த கருகமணி மாலையுடன் விளையாடி கொண்டிருந்தான்... சம்யுக்தாவும் அவன் மாலையைப் பிடிப்பதற்கு ஏற்றார் போல் குனிந்து கொண்டு அவனைக் கொஞ்சி கொண்டிருந்தாள்...

"நா பங்காரம்... நா பப்பு... நா செல்லம்..." என்று அவள் விதமாய்க் கொஞ்ச சின்னவன் பாலை குடித்துக் கொண்டே அத்தையைக் கண்டு சிரித்துக் கொண்டிருந்தான்...

ஏதோ மனதினை உறுத்த சம்யுக்தா நிமிர்ந்து பார்த்தாள்... அங்கு வாசலில் நின்றபடி இந்திரஜித் அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்... அவனைக் கண்டதும் உடனடியாக எழ முடியாதபடி ஆதித்யா அவளது மடியில் பால் குடித்துக் கொண்டிருந்தான்... அவளது காயமடைந்திருந்த காலும் அதற்கும் ஒத்துழைக்கவில்லை... அவள் பயத்துடன் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... அவனும் தன் பார்வையை மாற்றிக் கொள்ளாது அவளையே பார்த்திருந்தான்...

"ஆதி பங்காரம் பாதியில் எழுந்தால் அழுவான்..." என்று பயத்தில் எச்சிலை விழுங்கி கொண்டு கூறியவளை கண்டு ஒன்றும் பேசாது அருகில் வந்தவன் நேரே தனது மருமகனிடம்,

"ஆதி... மாமா கிட்ட வர்றியா...?"

புது உறவாய் வந்த மாமனை கண்டதும் ஆதித்யா கால்களால் பிடித்திருந்த பாட்டிலை கீழே போட்டு விட்டு மாமனிடம் செல்வதற்காக உற்சாகமாய்க் கால்களைப் போட்டு உதைத்துத் துள்ளினான்... மாமன் மருமகனை தூக்கி கொண்டு மிதப்பாய் அவளைப் பார்த்தவன்,

"உன்னைப் போல் இவனையும் வேலைக்காரன்னு நினைச்சியா...? இவன் எங்க வீட்டு இளவரசன்... இனிமேல் இப்படிச் சமையலறையில் உட்கார வச்சு பழக்காதே..."

அவனது பேச்சை கேட்டு மறுத்து பேசாது சரியென்று தலையாட்டியவளை உணர்வில்லாது வெறுமையாய்

பார்த்தவன்,

"அந்தப் பாட்டிலை கொடு..." அதிகாரமாய்க் கேட்டு பால் பாட்டிலை வாங்கிக் கொண்டு அவன் செல்ல... அவளோ அயர்ந்து போய் அமர்ந்திருந்தாள்...

"த்தை..." என்று சின்னவன் அவளை நோக்கி கை காட்டி சிரிக்க... அவனைக் கண்டு அவளது புன்னகை மீண்டது...

"உன் அத்தை கிட்ட பிறகு போகலாம்... இப்போ உன் மாமனை நீ பார்..." என்று கூறியபடி இந்திரஜித் சின்னவனைத் தூக்கி கொண்டு சென்றான்...

காலையில் அனைவரும் அவரவர் வேலைக்குச் சென்று விட்டிருந்தனர்... பிரகதீஸ்வரி, சந்தியா, ஹரி மூவரும் திருமண வேலையாய் வெளியில் சென்றிருக்க, கண்ணன் அவர்களுக்குக் கார் ஓட்டி கொண்டு சென்றிருந்தான்...

வீட்டில் இருந்தது இந்திரஜித், சித்தார்த் மற்றும் சம்யுக்தா மட்டுமே... வரவேற்பறையில் அமர்ந்திருந்த சித்தார்த் செய்தித்தாளில் மூழ்கியிருந்தான்... இன்னும் சிறிது நேரத்தில் அவனும் வெளியில் கிளம்பி விடுவான்... தந்தையைத் தனியே கண்டதும் இந்திரஜித் மனம் உற்சாகமாய்க் கும்மாளமிட்டது... அவனுக்கு நேரெதிரே வந்தமர்ந்து கொண்ட இந்திரஜித் உணவு மேசையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த சம்யுக்தாவை அழைத்தான்...

"ஏய், இங்கே வா..."

மகனது அதிகார குரலில் செய்தித்தாளை கீழே இறக்கினான் சித்தார்த்... மகன் அழைப்பது சம்யுக்தாவை என்று தெரிந்ததும்,

"அவளது பெயர் ஏய் இல்லை... அவளுக்கு என்று தனியே பெயர் இருக்கிறது இந்தர்... சம்யுக்தா..."

"வேலைக்காரிக்கு இது போதும்..." என்றான் மகன் அலட்சியமாய்...

"இந்தர்..." சத்தம் போட்டுக் கத்தினான் சித்தார்த்...

"நான் உன்னை வேலைக்காரின்னு சொன்னேனா...?" இந்திரஜித் சம்யுக்தாவை பார்த்து கேட்க... அவளோ இல்லை என்பது போல் தலையாட்டினாள்... இப்போது மிதப்பாய் தந்தையைப் பார்த்த இந்திரஜித்,

"கேட்டுக்கோங்க... சம்பந்தபட்டவங்களே இல்லைன்னு சொல்றாங்க... உங்களுக்கு என்ன வந்தது...?"

மகனது கேலி குரலில் சித்தார்த்தின் கோபம் அதிகரிக்கத் துவங்கியது...

"ஏய்... என்னோட ஷூவில் தூசி இருக்கிற மாதிரியிருக்கு... அதைத் துடை..."

இந்திரஜித்தின் வார்த்தையில் சித்தார்த்தின் பொறுமை காற்றில் பறந்தது... செய்தித்தாளை தூக்கி எறிந்து விட்டு,

"திஸ் டூ மச் இந்தர்..." என்று குரலை உயர்த்தி மகனை கண்டித்தவன் சம்யுக்தாவிடம் திரும்பி,

"நீ வேறு வேலை இருந்தால் போய்ப் பாரும்மா..." என்றான் அன்பாக...

"வேலை எதுவும் இல்லை மாமாகாரு..." என்றுரைத்த சம்யுக்தா 'ஷூ' துடைப்பதற்காகத் துணி எடுக்கச் சென்றாள்...

"உன் புடவை முந்தானை எதுக்கு இருக்குது... அதை வைத்துத் துடைக்கக் கூடாதா...?" இளக்கார குரலில் கேட்டவனைக் கண்டு புன்னகை முகமாய்,

"மறந்திட்டேன் பாவா..." என்றவள் தனது புடவை முந்தானை கொண்டு அவனது தூசியில்லாத 'ஷூ'வினை மீண்டும் துடைத்து பளபளவென்று ஆக்கினாள்... அதற்காக அவள் ஒன்றும் சங்கடப்படவில்லை... முகத்தைச் சுளிக்கவில்லை... மாறாகப் பக்தியுடன் அதை விரும்பியே செய்தாள்...

"போதும் போ..." என்று அவன் சொன்னதும் அவள் சரியென்று சென்றுவிட... சித்தார்த் செல்லும் அவளை

இரக்கமாய்ப் பார்த்தான்...

"அவளைச் சொன்னால் உங்களுக்கு ஏன் வலிக்குது...?"

"அவள் என்றில்லை... வேறு யாரை இப்படிச் சொன்னாலும் எனக்கு வலிக்கத் தான் செய்யும்... யாரும் யாருக்கும் அடிமை கிடையாது இந்தர்... அன்புக்கு தான் எல்லோரும் அடிமை... அதிகாரத்திற்கு இல்லை..."

"அப்போ வலிக்கிறது... அப்படித் தானே..." என்று கேலியாய் கேட்ட மகனை வெறித்துப் பார்த்தான் சித்தார்த்...

"இனி என்னோட இலக்கு அவள் தான்... நீங்க இல்லை... அவளை அடிக்க, அடிக்க உங்களுக்கு வலிக்கணும்... அது தான் எனக்கு வேணும்..."

"தப்பு பண்ற இந்தர்... சம்யு நம்ம மாப்பிள்ளையோட தங்கை..."

"அதுக்கு...?" என்று கேட்டான் மகன் அலட்சியமாய்...

"அவள் தன் அண்ணனிடம் சொன்னால் நம் ஜிக்கியின் வாழ்க்கை என்னாகும் என்று கொஞ்சம் யோசித்துப் பார்..."

"அப்படி அவள் சொல்லி கொள்ளும் போது பார்த்துக் கொள்ளலாம்... ஆனால் அப்படியொரு நாள் வரவே போவதில்லை... அது போல் நீங்களும் இதை அம்மா கிட்ட சொல்ல தேவையில்லை... சொன்னால் எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை... உங்களுக்குத் தான் பிரச்சினை... ‘தி கிரேட் சித்தார்த்’ பைத்தியக்காரன் என்கிற பட்டம் வாங்க வேண்டி வரும்... வீணே என் கிட்ட மோதாதீங்க..." என்று திமிராய் எச்சரிக்கை விடுத்த இந்திரஜித் அடுத்த நொடி கோபமாய் வெளியேறி விட்டான்...

மகனின் திமிர் பேச்சும், சம்யுக்தாவின் பணிவும் சித்தார்த்திற்குப் பெரும் குழப்பமாய்... இரண்டையும் தொடர்புப்படுத்திப் பார்க்க முடியாதபடி இந்திரஜித்தின் வெளிநாட்டு வனவாசம் தடுத்தது... ஆனானப்பட்ட

சித்தார்த்தையே தலையால் தண்ணி குடிக்க வைத்தான் இந்தர்...

சித்தார்த் என்ன அந்த ஆண்டவனே வந்தால் கூடச் சம்யுக்தா இந்திரஜித்திற்கு எதிராகத் தனது சுண்டு விரலை கூட அசைக்க மாட்டாள் என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை...

*****************

சாத்விகா மிதமான ஒப்பனையில் தயாராகிக் கைகளைப் பிசைந்து கொண்டு அமர்ந்திருந்தாள்... மாலையில் சந்தோஷ் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் செல்வதாய்ச் சொல்லியிருந்தான்...

"இந்தப் பூவை வைச்சுக்கோ அம்மு..." நெருக்கமாய்த் தொடுத்த மல்லிகை சரத்தை மகளின் தலையில் வைத்து விட்டாள் ஸ்வேதா...

'இப்போ இது ஒண்ணு தான் குறைச்சல்...' என்று கத்த வேண்டும் போலிருந்தது அவளுக்கு... ஆனால் அடக்கி கொண்டு அமைதியாக இருந்தாள்...

அவளை அதிக நேரம் காக்க வைக்காது சந்தோஷ் அங்கு வந்து சேர்ந்தான்... மாமா, அத்தையிடம் இன்முகமாய்ப் பேசியவன் அவர்களிடம் விடைப்பெற்று சாத்விகாவை அழைத்துக் கொண்டு காரில் ஏறினான்...

"உங்க பிரெண்ட்ஸ்க்கு எல்லாம் கல்யாண பத்திரிக்கை வச்சாச்சு... இப்போ எதுக்கு அதே பொய் சொல்லி என்னை வெளியில் கூட்டிட்டு வந்திருக்கீங்க..."

"பொய்ன்னு உனக்கு எப்படித் தெரியும்...?"

அவனது எதிர்கேள்வியில் அவள் திகைத்து விழித்தாள்...

"அது வந்து..."

"எல்லாமே தப்பா புரிஞ்சிக்கிறது..." அவன் கூறியதும் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"என் ப்ரெண்ட் ஒருத்தன் நேத்து தான் லண்டனில் இருந்து வந்திருக்கான்... அவனுக்குப் பத்திரிக்கை வைக்கத் தான் உன்னைக் கூட்டிட்டு போறேன்... உன்னைக் கடத்திட்டு போகலை..."

அவன் கூறியது கேட்டு அவள் பதில் கூறாது அமைதியாகி போனாள்...

"இந்தப் புடவையில் ரொம்ப அழகாயிருக்க அம்மு..."

ரசனையுடன் ஒலித்த அவனது குரல் அவளது மனதினை தென்றலாய் வருடி சென்றது... அவன் பக்கம் சாயாது தடுக்க நினைத்தாலும் அவளது மனம் அவன் பக்கமே விரும்பி சாய்ந்து அவளுக்குத் துரோகம் புரிந்தது... தனக்குத் தானே துரோகம் செய்வது போல் ஒரு தோற்றம் அவளுள்...

சந்தோஷ் கூறியது போல் அவனது நண்பனுக்கு அழைப்பிதழ் வைக்கத் தான் அவளை அழைத்துச் சென்றான்... அங்கிருந்த அவர்களது மூன்று மாத கைக்குழந்தை இவர்கள் இருவரின் மனதினை கொள்ளை கொண்டான்... குட்டி கிருஷ்ணர் போல் விழிகளை உருட்டி கொண்டிருந்தவனைச் சந்தோஷ் தனது கைகளில் இருந்து கீழே இறக்கவில்லை... அத்தனை ஆசையுடன் அவன் சின்னவனைக் கொஞ்சினான்... சின்னவனும் பாந்தமாய் அவனது தோளில் சாய்ந்து கொண்டான்... அதை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள் சாத்விகா... சந்தோஷின் இன்னொரு பக்கம் அவளுக்கே புதிதாய் இருந்தது...

திரும்ப அவளை அழைத்துக் கொண்டு அவளது வீட்டில் விடும் போது காரிலிருந்து இறங்க போனவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"இப்படியே டின்னருக்கு உன்னை ஹோட்டலுக்குக் கூட்டிட்டு போகணும்ன்னு தான் நினைச்சேன்... ஆனா உனக்கு அது பிடிக்காதுன்னு தெரிஞ்சு தான் நான் கூட்டிட்டு போகலை..." என்றவனை அவள் அமைதியாய் வெறித்துப் பார்த்தாள்...

"எனக்கு ஒரு ஆசை..." என்றவனைக் கண்டு அப்போதும் அவள் தனது பார்வையை மாற்றிக் கொள்ளவில்லை...

"அந்தப் பேபி மாதிரி ஒரு பேபியை நாம உடனே பெத்துக்கணும்... எந்தவொரு ப்ளானிங்கும் இல்லாமல்..."

மருத்துவனான அவன் அதை வெகுசாதாரணமாகக் கூற... அவளோ அருவருப்புடன் முகத்தைச் சுளித்தாள்...

"இப்போ எதுக்கு இப்படி எல்லாம் பேசறீங்க...? எனக்கு இந்தப் பேச்சு பிடிக்கலை..."

குழந்தையைப் பற்றிப் பேசுவது பிடிக்கவில்லை என்று கூறிய அவளைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"இந்தப் பேச்சு பிடிக்கலையா...? இல்லை என்னைப் பிடிக்கலையா...?"

"இரண்டும் தான்..." என்றாள் அவள் வெடுக்கென்று...

"ஓ... நானும், என் குழந்தையும் உனக்கு அத்தனை அருவருப்பா இருக்கா...? இப்போ கேட்டுக்கோடி... நீயே என்னிடம் வந்து கெஞ்சும் வரைக்கும் நான் உன்னைத் தொட மாட்டேன்... அந்தளவுக்கு இந்தச் சந்தோஷ் உனக்குக் கேவலமா போயிட்டானா...? முதலில் காரில் இருந்து இறங்குடி... இனி என் முகத்தில் முழிக்காதே..." என்று அவன் கோபம் கொண்டு கத்தினான்... அவனது மனக்கட்டுப்பாடு எல்லாம் அவளது அருவருப்பில் தவிடு பொடியானது...

அதற்கு எல்லாம் அசராது முகமலர்ச்சியுடன் அவள் காரில் இருந்து இறங்கினாள்... அவளது முகமலர்ச்சியைக் கண்டு அவன் உள்ளம் நொந்து போனான்... அடுத்தக் கணம் அவன் தனது கோபத்தினைக் காரில் காட்டினான்...

விருட்டென்று கிளம்பி சென்ற காரை பார்த்துக் கொண்டிருந்த சாத்விகாவின் புன்னகை முகம் மாறவே இல்லை... அவளுக்கு அவனது குழைவு தேவையில்லை... அவனது கோபம் தான் தேவை... அவனது கோபம் தான்

அவளைக் காக்க போகிறது... அதனால் அவள் அதைத் தன் கையில் எடுத்து கொண்டாள்...

*******************

சித்தார்த்தின் வீடு இன்றும் பரபரப்பாய்க் காட்சியளித்தது... இன்று அவனது சகோதரி ஸ்வர்ணாவின் இரண்டாவது மகள் அமெரிக்காவில் இருந்து வருகிறாள்... ஸ்வர்ணாவால் திருமணத்திற்கு வர முடியவில்லை என்று மகள் பூஜாவை அனுப்பி வைத்திருக்கிறாள்... இந்திரஜித், சஞ்சய் இருவரும் விமானநிலையத்திற்குச் சேர்ந்து சென்று பூஜாவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தனர்...

காரில் இருந்து இறங்கிய பூஜாவின் அழகினை கண்டு சம்யுக்தா ஆவென வாயை பிளந்தாள்... பளபளவென வெண்ணிற சருமத்துடன் பளிங்கு சிலையாய் பூஜா காட்சியளித்தாள்... வெகு வருடங்கள் கழித்து இந்தியா வந்தவளை குடும்பத்தினர் அனைவரும் அன்போடு வரவேற்றனர்...

அப்போது இந்திரஜித் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தா காதருகில் குனிந்து, "லக்கேஜ் எல்லாம் யார் எடுத்துட்டு வருவாங்க... வேலைக்காரி நீ தான் அதை எல்லாம் எடுத்துட்டு வரணும்..." என்க...

அவனது பேச்சிற்கு எதிர்பேச்சு பேசாது அவன் சொன்னதைக் கேட்டவள் காரின் அருகில் சென்று குனிந்து பயணப் பொதிகளைத் தூக்கி கொண்டு நிமிரும் போது அவளது விழிகளில் அந்தக் காட்சி விழுந்தது... இந்திரஜித் மற்றும் பூஜா இருவரும் நெருக்கமாய் நின்றிருக்க அவர்களது கைகள் இரண்டும் பின்னி பிணைந்திருந்தது... பிரபாவதி சிரித்த முகமாய் இருவருக்கும் சேர்த்து ஆரத்தி சுற்றிக் கொண்டிருந்தார்...

சம்யுக்தாவின் கையிலிருந்த பொதியின் பாரத்தை விட அவளது அனிச்சை மலர் மனம் பாரமாய்க் கனத்துப் போனது, தன்னவனின் செய்கையில்...!!!

தொடரும்...!!!

எந்தப் பெண்ணிற்கும் தன் நிலை வர கூடாது என்று நினைத்த சம்யுக்தாவின் காதல் மனம் மிகவும் துயரம் அடைந்தது... மணமக்களாகத் தன்னவனுடன் தான் ஜோடியாக நின்றிருக்க வீட்டினர் இன்முகத்துடன் ஆரத்தி சுற்றி வரவேற்கும் நிகழ்வினை கனவில் கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பவளால் இந்த நிகழ்வை அப்படிச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை... மாறாக மனம் வெதும்பி போய் அவள் நின்றிருந்தாள்...

"அம்மா... நீங்க போய் இதை எல்லாம் எடுத்துக்கிட்டு... முதல்ல அதைக் கீழே வையிங்க... நான் எதுக்கு இங்கே இருக்கேன்...? நான் எடுத்துட்டு வர்றேன்..." அங்கு வேலை செய்யும் பணியாள் அவளிடம் இருந்து பயணப் பொதிகளை வாங்கிக் கொண்டான்...

"இல்லை பரவாயில்லை இருக்கட்டும்..."

"நீங்க இதைச் செஞ்சீங்கன்னா ஐயா என்னைத் திட்டுவாங்க..." என்று கூறியவன் தனது வேலையைப் பார்க்கலானான்...

சம்யுக்தா வீட்டின் வாயிலை பார்த்த போது சித்தார்த் அங்கே நின்றிருந்தான்... அவளைக் கண்டதும் கையசைத்து கூப்பிட்டான்... அவள் விரைந்து அவன் அருகில் வந்தவள்,

"ஏமி மாமாகாரு...?" (என்ன மாமா...?)

"நீ இந்த வீட்டுப்பெண் சம்யு... இனி இந்த மாதிரியான வேலைகள் எல்லாம் நீ செய்யக் கூடாது..." என்று கண்டிப்புடன் ஒலித்தது அவனது குரல்...

"மன இன்ட்டி பணினி மனதானே சூடால மாமாகாரு...?" (நம்ம வீட்டு வேலைகளை நாம் தானே பார்க்கணும்..?)

தன் மனைவி பிரகதீஸ்வரி போல் கூறிய சம்யுக்தாவை கண்டு சித்தார்த்தின் மனம் நெகிழ்ந்தது...

"நிச்சயம் இது உன் வீடு தான்... அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம்... ஆனால் கல்யாண வீட்டுக்கு வர்றவங்க எல்லாம் ஒரே மாதிரியான மனநிலையில் வருவாங்கன்னு சொல்ல முடியாதே... அதனால் நீ இந்த வீட்டுப் பெண்ணா கெத்தா இருக்கணும்... இப்படி எல்லாருக்கும் வேலை செஞ்சிக்கிட்டு இருக்கக் கூடாது..."

"மாமாகாரு, ஈ கெத்து சால்னா, சூடண்டி...?" ( மாமா, இந்தக் கெத்து போதுமா, பாருங்க...?) ஒட்டுமொத்த கெத்தையும் குத்தகைக்கு எடுத்திருக்கும் சித்தார்த்தை பார்த்து கழுத்தை ஒரு பக்கமாய் வெட்டி கொண்டு மிதப்பாய் பார்வை பார்த்தபடி கேட்ட சம்யுக்தாவின் பாவனையில் அவன் வாய்விட்டு சிரித்து விட்டான்...

"போதும், போதும்... இது போதும்..." அவளது தலைமேல் கை வைத்து பாசத்தோடு கூறியவனை அன்போடு பார்த்து கொண்டிருந்தாள் சம்யுக்தா...

இந்த அன்பான மாமன் பெற்ற மகன் மட்டும் எப்படித் தவறாகப் போக முடியும்...? அந்தக் கணம் அவளது மனக்கண்ணில் காதல் வழியும் விழிகளுடன் தன்னை நோக்கிய இந்திரஜித்தின் அழகு முகம் வலம் வந்தது...

அவன் அவளிடத்தில் காதலை சொல்லிய போது அவள் ஒரு நொடி கூட யோசிக்கவில்லை... உடனே அவனது காதலுக்குச் சம்மதம் கூறினாள்... கதாநாயகன் போன்று அழகாய் இருக்கும் அவனுக்கும், சுமாரான அழகுடன் இருக்கும் தனக்கும் எந்தவிதமான பொருத்தம் இருக்கக் கூடும் என்று அவள் சிறிதும் யோசித்தது கிடையாது... அந்தளவிற்குக் காதல் அவளது கண்களை மறைத்தது... அதை விட அவன் அவளை மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் ஆட்டுவித்தான் என்பதே மிகச் சரி... இதோ இந்தக் கணம் கூட அவன் ஆட்டுவிக்கிறான்... இவளும் விளைவுகளைப் பற்றி யோசியாது தலையாட்டுகிறாள்...

ஏன், எதனால் அவள் இப்படி இருக்கிறாள் என்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் மீதிருந்த நம்பிக்கையா...? இல்லை அவன் காதல் மீதிருந்த

நம்பிக்கையா...? இரண்டுமே என்றது அவளது காதல் மனம் நம்பிக்கையுடன்... அவன் பழகியதில் பொய்யில்லை... அவன் பேசிய வார்த்தையில் பொய்யில்லை... அத்தனையும் மெய் என்றது அவளது வெள்ளந்தி மனம்...

"உள்ள போம்மா..." என்று அவளை வீட்டினுள் போகச் சொன்ன சித்தார்த்,

"வேலை எதுவும் பார்க்க கூடாது... வீட்டாளாய் கெத்தா இருக்கணும்... என்ன ஓகேவா...?"

"சரி மாமாகாரு..." என்று பதிலுரைத்தபடி முகம் மலர வீட்டினுள் நுழைந்தவளை இந்திரஜித்தின் கோப விழிகள் எதிர் கொண்டது...

தந்தையையும், அவளையும் முறைத்து பார்த்துக் கொண்டு அவன் சோபாவில் அமர்ந்திருந்தான்...

'தேவுடா... பாவா இப்புடு எந்துக்குக் கோபங்கா சூஸ்த்துந்நாரு...?' (கடவுளே, பாவா இப்போ எதுக்குக் கோபமா பார்த்துக்கிட்டு இருக்காரு...?) மனதிற்குள் பயந்து கொண்டு அவள் பம்மி பம்மி சென்றாள்...

வரவேற்பறையைத் தாண்டி அவள் உள்ளே செல்லும் வரை இந்திரஜித்தின் பார்வை அவளது முதுகை துளைத்து எடுப்பது போல் அவளுள் ஒரு தோற்றம்... அதில் அவளது பயம் இன்னமும் அதிகரித்தது...

சம்யுக்தா சமையலறையைத் தாண்டி சென்ற போது அங்குப் பிரகதீஸ்வரி எதையோ மும்முரமாகச் செய்து கொண்டிருப்பது கண்டு இரக்கம் கொண்டு அவள் அங்கே சென்றாள்...

"அத்தைகாரு... இக்கட ஏமி சேஸ்த்துனு உண்டேரு...?" (அத்தை, இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?)

"சம்யும்மா... மாமா மாதிரி அத்தை கிடையாது... உன் தெலுங்கு எனக்குச் சுத்தமாய்ப் புரியலை..." என்று சிரித்தாள் பிரகதீஸ்வரி...

"என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க அத்தை...?"

"உனக்கு விசயம் தெரியுமா...?"

"என்ன விசயம் அத்தை...?"

"இன்னைக்கு இந்தர் பெரிய ப்ராஜெக்ட்டில் சைன் பண்ணிட்டு வந்திருக்கான்... அதான் அவனுக்குப் பிடிச்ச அவல் பாயாசத்தைச் செய்கிறேன்..."

"ஓ... அட்டனா அத்தைகாரு..." (அப்படியா அத்தை) என்றவள் பின் தன் கன்னத்தில் இரு கை வைத்து,

"ஷேமிச்சண்டி அத்தைகாரு... மன்னிக்கணும்..." தமிழிலும், தெலுங்கிலும் மன்னிப்பு கேட்டவள்,

"அதனால் தான் ஆரத்தி சுத்தி வரவேற்பு கொடுத்தீங்களா...?" அவள் படபடக்கும் தனது மனதினை கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள்...

"அது நம்ம பூஜாவுக்காகக் கரைச்சது... கூடவே இந்தருக்கும் சேர்த்து சுத்தியாச்சு..."

இதைக் கேட்ட பிறகே அவளது மனம் சிறிது சமாதானமாகியது... ஒருவித நிம்மதி அவளுள் எழ உற்சாகமாய்,

"நீங்க உட்காருங்க அத்தைகாரு... நான் செய்யறேன்..."

வலுக்கட்டாயமாகப் பிரகதீஸ்வரியை அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தவள், அத்தை பக்குவம் சொல்ல சொல்ல அவள் பாயாசம் செய்ய ஆரம்பித்தாள்... மனதிற்கினியவனுக்குப் பாயாசம் செய்வது அவளுக்கு அத்தனை தித்திப்பாய் இருந்தது... பாயாசம் தயாரானதும் அதை அழகாய் சின்ன, சின்னக் கிண்ணங்களில் ஊற்றியவள் புன்னகையுடன் பிரகதீஸ்வரியிடம் திரும்பி,

"பாயாசம் ரெடி..." என்க...

"வா சம்யு... கொண்டு போய்க் கொடுக்கலாம்..." என்று பெரியவள் முன்னால் நடக்கச் சின்னவள் பின்னால் நடந்தாள்...

சம்யுக்தா எல்லோருக்கும் பாயாசம் கொடுத்தது போல் இந்திரஜித்திற்கும் கொடுத்தாள்... அவனோ வேண்டா வெறுப்புடன் முகத்தைச் சுளித்தபடி கிண்ணத்தைக் கையில் எடுத்தான்... அடுத்துச் சித்தார்த்திடம் அவள் நீட்ட,

"உன்னை நான் என்ன சொன்னேன்...? நீ என்ன செய்கிறாய்...?" பாயாச கிண்ணத்தை எடுக்காது அவன் போலியாக அவளை முறைத்தான்...

"நேனு மீ கோடலு காதா...?" (நான் உங்க மருமகள் தானே...?)

"அவ்வுனு..." (ஆமாம்) என்று சிரித்தான் சித்தார்த்...

இரண்டு பேரும் தெலுங்கில் பேசுவதைக் கண்டு எரிச்சலுற பார்த்திருந்தான் இந்திரஜித்...

"அப்புடு ஈ பணி நேனு சேஸ்ந்திகி தப்புடு லேது மாமாகாரு..." (அப்படின்னா இந்த வேலையை நான் செய்வதில் தப்பில்லை)

"சரண்டர்..." இருகரம் தூக்கி அவளது அன்புக்கு அடிபணிந்தான் அந்த நல்ல மாமன்காரன்...

"அதி..." (அது) ஒற்றை விரல் நீட்டி போலியாக மாமனை எச்சரித்தவள் அவன் கையில் பாயாச கிண்ணத்தைத் திணித்தாள்...

"இவள் யார்...?" பூஜா சம்யுக்தாவை கண்டு யோசனையாய் பார்த்தபடி கேட்டாள்...

ஏனெனில் அவர்களது அந்தஸ்தோடு பொருந்தாத ஒரு பெண் தனது தாய்மாமனிடம் சரிக்குச் சரிமமாய்ப் பேசுவது கண்டு அவளுக்கு வியப்பாக இருந்தது... அதே சமயம் அவளுக்கு அது பிடிக்கவும் இல்லை... அதற்காக அவள் கெட்டவளும் இல்லை... பிறந்ததில் இருந்து வசதியாக வளர்ந்த பெண்... இதுவரை தன்னைப் போல் வசதி

உடையவர்களுடன் தான் பழகி இருந்தாள்... அதனால் இயல்பிலேயே பணக்கார திமிர் அதிகம் இருந்தது...

"என்னுடைய நாத்தனார்..." என்று கூறிய ஜெகதீஸ்வரி சம்யுக்தாவை அன்போடு தன்னருகில் அமர வைத்து கொண்டாள்...

"ஓ... அதான் இப்படி இருக்கிறாளோ...?" என்று இகழ்ச்சியாய் உதட்டை சுளித்தாள் பூஜா...

"எப்படி இருக்கிறாள்...?" கூர்மையாய் அத்தை மகளைப் பார்த்தாள் ஜெகதீஸ்வரி...

அனைவரும் குழப்பத்துடன் பூஜாவை பார்த்தனர்...

"நீங்க கல்யாணம் பண்ணியது வசதியில்லாத இடத்தில் தானே... அங்கே இருந்து வந்த பெண் பின்னே எப்படி இருப்பாள்...? இப்படித் தான் இருப்பாள்... நம்ம ஸ்டேட்டஸ்க்கு ஏத்த மாதிரியா இருப்பாள்..." அலட்சியமாய்க் கேட்ட பூஜாவை கண்டு எல்லோருக்கும் கோபம் வந்தது... நல்லவேளையாகச் சூர்யா அங்கு இல்லை...

ஆனால் சம்யுக்தா அதை இயல்பாக ஏற்றுக் கொண்டாள்... ஏனெனில் அது தான் உண்மை... சூர்யா மீதான ஜெகதீஸ்வரியின் காதல், அவனது படிப்பு எல்லாம் தான் அவனை இந்த வீட்டின் மருமகனாக்கி இருந்தது... ஆனால் அவளுக்கு அந்தத் தகுதி கூட இல்லை என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள்... அதனால் தான் இந்திரஜித் அவளைக் காயப்படுத்திய போதும் தாங்கி கொண்டாள்...

அத்தகைய தகுதி இல்லாதவளையும் அவன் மதித்துக் காதலித்தான் என்றால் அவன் அவளை அவளுக்காகத் தானே காதலித்தான்... அந்த ஒன்று தான் அவளை அவனில் நிலையாய் நிலைக்கச் செய்கிறது... மேலும் மேலும் அவனைக் காதலிக்க வைக்கிறது... அவளையும் அறியாது அவளது பார்வை தன்னவன் மீது நிலைத்து

நின்றது... கள்ளங்கபடமற்ற அவளது பார்வையை அவன் உணர்வில்லாது எதிர் கொண்டான்...

மார்த்தாண்டம், பிரபாவதி இருவரும் பேத்தியை கடிய மனமில்லாமல் தவிப்புடன் அமர்ந்திருந்தனர்... சித்தார்த், பிரகதீஸ்வரி பேச வாய் திறந்த போது ஜெகதீஸ்வரி அவர்களைத் தடுத்து விட்டு தான் பேச முன்வந்தாள்... அதற்கு முன் இந்திரஜித்தின் வார்த்தைகள் வேகமாய்க் கண்டிப்புடன் வந்து விழுந்தது...

"பூஜா, எங்க வீட்டு மாப்பிள்ளையைப் பத்தி நீ இப்படிப் பேசுறது ரொம்பத் தப்பு... அவர் எங்கே, எப்படிப் பிறந்து வளர்ந்து இருந்தாலும் இப்போது அவர் எங்க வீட்டு மாப்பிள்ளை... எங்களுக்கு நீ எந்தளவுக்கு மரியாதை கொடுக்கிறியோ அதே மரியாதையை நீ அவருக்கும் கொடுக்கணும்... இனி இது போல் அபத்தமாகப் பேசாதே..."

அவன் பேசியது கேட்டு சம்யுக்தாவின் முகத்தில் அப்பட்டமாய்ச் சந்தோசம் தெரிந்தது... புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்... அந்நேரம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது முகத்திலிருந்து அவன் மனதில் என்ன நினைக்கிறான் என்பது பற்றி அவளால் அறிய முடியவில்லை...

"பூஜாம்மா... நம்ம வீட்டு மாப்பிள்ளையை நீ இப்படிப் பேச கூடாதும்மா... அவர் உனக்கு அண்ணன் முறை வேணும்... நீ சூர்யாவை நேரில் பார்த்தால் இப்படிப் பேச மாட்ட..." பிரபாவதி பேத்திக்கு எடுத்துக் கூறினார்...

"இவள் என்ன ரொம்பச் சீன் போடுறா...?" சஞ்சய் காவ்யாவின் காதை கடித்தான்...

"உன் தங்கச்சியில்ல... அதான் அப்படி இருக்கிறாள்..." காவ்யாவிற்குமே பூஜாவின் பேச்சு எரிச்சலை கொடுத்தது...

"தங்கச்சி தான்... ஆனால் இத்தனை அகம்பாவம் உள்ள தங்கச்சி எனக்குத் தேவையில்லை..." என்று விட்டேற்றியாய்க் கூறினான் சஞ்சய்...

"நல்ல முடிவு..." என்று அவனது கருத்தை ஆமோதித்தாள் காவ்யா...

"அத்தான், நீங்க சொல்கிறதால் இதை நான் ஏத்துக்கிறேன்... மத்தபடி நான் அந்தஸ்து, கௌரவம் மிகவும் பார்ப்பேன்..."

இந்திரஜித்தை பகைத்துக் கொள்ள விரும்பாது பூஜா சமாதான கொடியை பறக்க விட்டாள்... கனடாவில் அவன் இருந்த போதிருந்தே இருவருக்கும் நல்ல பழக்கம்... அவள் அங்குத் தான் கல்லூரி படிப்பு படித்தாள்... அதனால் அவள் இந்திரஜித்தின் வார்த்தையை மறுத்து பேசவில்லை...

ஏதோ அறியாத பிள்ளை தெரியாது பேசிவிட்டாள் என்று எல்லோரும் அவளது பேச்சினை பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... ஆனால் ஜெகதீஸ்வரியின் முகத்தில் தெளிவில்லை... அதை அவளது தம்பி கவனித்துக் கொண்டிருந்தான்... அக்கா மனம் வாடினால் அவன் தான் மனம் பொறுக்க மாட்டானே...

"ஜிக்கி, உன்கிட்ட தனியா பேசணும்..." என்று இந்திரஜித் அவளை அழைக்க...

அவள் தனது மனக்கவலையைத் தள்ளி வைத்து விட்டு தம்பியின் பின் எழுந்து சென்றாள்... கூடவே ஞாபகமாய்ச் சம்யுக்தாவை அவளது அறைக்கு அனுப்பி வைத்து விட்டு சென்றாள்... இதை எல்லாம் இந்திரஜித்தின் விழிகள் கவனித்துக் கொண்டிருந்தது...

தனியே சகோதரியை அழைத்து வந்தவன், "பூஜா பேசியதுக்கு நீ ஃபீல் பண்றியா ஜிக்கி...?" என்று கேட்க...

"இல்லைன்னு சொல்ல முடியாது இந்தர்..." என்று கூறியவள் அவனது முகத்தினைப் பார்க்காது வேறு எங்கோ பார்த்தாள்...

"நீ அத்தானை அத்தானுக்காகக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவள்... இப்போ ஏன் இவ்வளவு வருத்தப்படுற

ஜிக்கி...?" என்ற தம்பியை புரியாது பார்த்தாள் ஜெகதீஸ்வரி...

"நாம காதலிக்கிறவங்க எப்படி இருந்தாலும் நாம் மனதார ஏத்துக்கிட்டு தான் கல்யாணம் பண்றோம்... பிறகும் அதே ஸ்டாண்ட்டில் ஸ்டெடியா இருக்கணும்... அவர் அப்படித்தான்... அவரை எனக்குப் பிடிச்சியிருக்குன்னு நீ மத்தவங்க கிட்ட சொல்லி பார்... அதுக்குப் பிறகு இப்படிப் பேசற கூட்டம் பேச முடியாது ஓடி போயிரும்..."

"ம்ப்ச், இப்போ அது பிரச்சினை இல்லை... பூஜா பேசியது சூர்யாவுக்குத் தெரிஞ்சால் ரொம்ப வருத்தப்படுவார்... அது தான் எனக்கு யோசனையா இருக்கு... அவர் எதையும் மனசில் வச்சிக்க மாட்டார் என்றாலும், பூஜா பேசியது கொஞ்சம் அளவுக்கு அதிகமான வார்த்தைகள் தான்..."

ஜெகதீஸ்வரியின் காதல் என்றும் போல் இன்றும் அவனைப் பிரமிக்க வைத்தது... சூர்யாவின் நிலை தெரிந்தும் அவன் தான் வேண்டும் என்று நிலையாய் நின்று அவனைத் திருமணம் செய்த சகோதரியின் தைரியத்தை அவன் மனதிற்குள் மெச்சி கொண்டான்...

"பூஜா கிட்ட நான் பேசறேன் ஜிக்கி... நீ கவலைப்படாதே..."

"அவள் உன் பேச்சை கேட்பாளா...?"

"அதெல்லாம் நான் சொன்னால் கேட்பாள்..." என்ற தம்பியை கூர்ந்து பார்த்த ஜெகதீஸ்வரி,

"என்னடா தம்பி நடக்குது இங்கே...?"

"ஐயோ ஜிக்கி... அப்படி எல்லாம் பார்க்காதே... உன் தம்பி ரொம்ப, ரொம்ப நல்லவன்ம்மா..."

"என் தம்பி நல்லவன்னு தெரியும்... நல்லவன்னா காதலிக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா...? நீ தாராளமா காதலிக்கலாம் தம்பி..."

அதைக் கேட்டு அவனது முகம் கறுத்துப் போனது...

"காதல் என்கிற வார்த்தையைக் கேட்டாலே எனக்கு வெறுப்பா இருக்கு ஜிக்கி..." அவனையும் அறியாது வார்த்தைகள் வெளிவந்தது...

"இந்தர்..." அவள் திகைத்துப் போய்ச் சகோதரனை பார்த்தாள்...

காதலித்து மணம் முடித்த பெற்றோருக்கு பிறந்தவன் இப்படி மனம் வெறுத்து பேசுவது என்றால் என்ன காரணம் இருக்கக் கூடும்...?

"ஏன் இந்தர்...?" கவலையுடன் கேட்ட அக்காவை கண்டு அவன் தன் மனதினை மறைத்துக் கொண்டு,

"காதலித்துக் கல்யாணம் முடித்த என் பிரெண்ட்சோட சோக கதைகளைக் கேட்ட பின்பும் நான் காதலிக்க ஆசைப்படுவேனா...?" என்று கண்சிமிட்டி சிரித்த தம்பியை கண்டதும் தான் அவளது மனம் இலகுவானது...

"காதலித்துப் பார் இந்தர்... அப்போது தான் அதிலுள்ள இனிமை தெரியும்..."

காதல் இனிமையானதா? இல்லை கொடுமையானதா? என்று தெரியாது தானே அவனும் மனதிற்குள் இருதலை கொள்ளி எறும்பாய் தத்தளித்துக் கொண்டிருக்கிறான்...

"அந்த இனிமையை நீ அனுபவிச்சிட்டு சந்தோசமாயிரு ஜிக்கி... நான் பூஜாவை பார்த்து கொள்கிறேன்..."

"அப்படியே அவள் பேசினாலும் நான் பதிலடி கொடுத்து விடுவேன்..." என்று கூறியவள்,

"சரி இந்தர்... நான் ஹாஸ்பிட்டல் கிளம்பறேன்... பூஜா வருகிறாள்ன்னு தான் நான் வீட்டில் இருந்தேன்..."

அக்காவை வழியனுப்பி வைத்து விட்டு வீட்டினுள் செல்ல முயன்ற இந்திரஜித்தின் விழிகளில் தோட்டத்தில் நிலைத்து நின்றது... அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்திருந்த பிரசன்னாவும், அவன் முன் நின்று கொண்டு அவனது முகத்தினை ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த

சம்யுக்தாவும் அவனது விழிகளில் விழுந்து ஆத்திரமடையச் செய்தார்கள்...

'இவளுக்கு ஒரு தடவை சொன்னால் புத்தி வராதா...?' என்று கோபமாய் நினைத்தவன் விறுவிறுவென அங்குச் சென்றான்... அவனது வருகை உணர்ந்த பிரசன்னா,

"சார்..." என்றபடி அவசரமாக எழுந்து நின்றான்...

"இங்கே என்ன பண்ற...?"

"பார்த்தா தெரியலையா சார்...? பாயாசம் சாப்பிட்டுட்டு இருக்கேன்..." என்று புன்சிரிப்புடன் தனது கையிலிருந்த சிறு கிண்ணத்தை இந்திரஜித் முன் நீட்டினான் பிரசன்னா...

"ஓ... நீ ரிலாக்சா உட்கார்ந்து சாப்பிடு..." என்று அவனைப் பார்த்து கூறிய இந்திரஜித் சம்யுக்தா புறம் திரும்பி,

"நீ என் கூட வா..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

அவன் அழைத்ததும் அவள் நாய்க்குட்டி போன்று மகிழ்ச்சியுடன் அவன் பின்னே சென்றாள்... பிரசன்னா இருவரையும் புரியாது பார்த்துக் கொண்டிருந்தான்... சிறிது தூரம் சென்றதும் நின்ற இந்திரஜித் அவளிடம்,

"பாயாசம் எனக்குச் செஞ்சியா...? இல்லை அவனுக்கா...?" என்று கடுமையுடன் கேட்டான்...

"மீருகோசம் காதன்டி பாவா..." (உங்களுக்காகத் தான் பாவா) அப்போதும் அவளது புன்னகை முகம் வாடவில்லை...

"அப்போ அவனுக்கு ஏன் கொண்டு வந்து கொடுத்த...?"

“அதி...” (அது...) பதில் சொல்ல தெரியாது அவள் திணறினாள்... வீட்டிற்கு வந்தவனுக்கு இனிப்பு உண்ண கொடுத்து உபசரித்தது தவறா...?

"அந்தளவுக்கு அவன் உனக்கு முக்கியமானவனா...?"

"ம்ஹூம், அட்ட லேதண்டி பாவா..." (ம்ஹூம், அப்படியில்லை) என்று அவசரமாய் மறுத்தவளை கண்டு அமைதியாக நின்றவன் பின்பு அவளைப் பார்த்து,

"அத்தான் எங்க வீட்டு மாப்பிள்ளை என்பதால் தான் அப்படிச் சொன்னேன்... ஆனால் நீ வேறு... உனக்கான நிலை அப்படியே தான் இருக்கு... அதைத் தாண்ட நீ முயற்சிக்காதே..." என்றான் அறிவுறுத்தும் குரலில்...

"நாகு தெலுசுனு பாவா..." (எனக்குத் தெரியும் பாவா) என்றவளின் குரல் இறங்கி போய் ஒலித்தது...

"புரிந்தால் சரி..." என்று அமர்த்தலாகக் கூறியவன் வீட்டினுள் சென்றுவிட...

அவளோ பெருத்த யோசனையுடன் நின்றிருந்தாள்... அவன் எதற்காகத் தன்னிடம் இப்படிப் பேசி விட்டுச் செல்கிறான் என்று அவள் புரியாது வழக்கம் போல் குழம்பி போய் நின்றிருந்தாள்...

அன்று மாலை பூஜாவிற்குப் பிடித்த மாதிரி திருமணத்திற்குத் தேவையான உடைகள் எடுக்க வேண்டி கடைக்கு அழைத்துச் சென்றனர் வீட்டினர்... பிரபாவதி, பிரகதீஸ்வரி, ஜெகதீஸ்வரி இவர்களோடு சம்யுக்தாவும் திருமணத்திற்கான உடைகள் எடுக்காமல் இருந்தனர்... அதனால் அவர்களும் பூஜாவுடன் வந்திருந்தனர்... பூஜாவிற்காக இந்திரஜித் உடன் வந்திருந்தான்...

அவன் பூஜாவிற்காக ஒவ்வொரு பட்டுப்புடவையாகத் தேர்வு செய்து கொடுக்க அதைச் சம்யுக்தா ஆவெனப் பார்த்து கொண்டிருந்தாள்... நிச்சயம் அவள் பூஜாவை கண்டு பொறாமை எல்லாம் படவில்லை... மாறாகத் தன்னவனின் தேர்வு செய்யும் திறமையை ஆச்சிரியமாகப் பார்த்து கொண்டிருந்தாள்... அந்தோ பரிதாபம் அவன் தேர்வு செய்தது ஒன்று கூடப் பூஜாவுக்குப் பிடிக்கவில்லை... அதை எல்லாம் ஓரமாக வைத்து விட்டு அவள் வேறு பார்த்து கொண்டிருந்தாள்...

சம்யுக்தா மெல்ல இந்திரஜித் கடைசியாய் தேர்வு செய்த புடவையைக் கையில் எடுத்து வைத்து கொண்டாள்... அடர் பச்சை நிறத்தில் கொடி போன்று சரிகை இழைத்திருந்த அந்தப் பட்டுப்புடவை அவளது கண்களைப் பறித்தது... யாரும் பார்க்காத போது அவள் அந்தப் புடவையைத் தன் மீது வைத்து அங்கிருந்த கண்ணாடியில் தன்னை அழகு பார்த்தாள்... அவளது நிறத்திற்குப் பச்சை நிற புடவை அத்தனை பாந்தமாகப் பொருந்தியது... அது தன்னவனின் தேர்வு என்பது வேறு நினைவில் எழுந்து அவளை நாணம் கொள்ளச் செய்தது...

நாணம் கொண்டு விழி தாழ்த்தியவள் பின் மீண்டும் மெல்ல விழியுயர்த்திக் கண்ணாடியை ஏறிட்டு பார்த்த போது அப்படியே திகைத்து போனாள்... கண்ணாடியில் இந்திரஜித்தின் பிம்பம் தெரிந்தது... அதிலும் அவன் அதிசயமாய்ப் புன்னகையுடன் அவளை ரசித்துப் பார்த்தபடி நின்றிருந்தான்... இரு கைகளைக் கட்டி கொண்டு கம்பீரமாக அவன் நின்றிருந்த தோற்றம் அவளது மலர் மனதினை கொய்வதாய்... விழி மூடி அவனது பிம்பத்தினை மனதினுள் ஆழ பதிய வைத்து கொண்டவள் மீண்டும் விழி திறந்து பார்த்த போது அவனை அங்குக் காணவில்லை...

அவள் விழிகளில் நீர் திரள பதைபதைப்போடு சுற்றும் முற்றும் அவனைத் தேடினாள்... அவளது தேடலை அறியாத அவனோ பூஜாவிற்குப் புடவையைத் தேர்ந்தெடுத்து கொடுத்துக் கொண்டிருந்தான்... அத்தனையும் கனவு என்பது அவளது மனதிலேற சில நொடிகள் பிடித்தது...

'காணும் யாவிலும் நீயே' என்பதற்கிணங்க அவள் காணும் யாவிலும் அவனின் பிம்பமே... ஆனால் எல்லாமே மாயப் பிம்பமாய், காட்சிப்பிழையாய், கானல் நீராய், கனவாய் மாறி போனதை எண்ணி அவளது மனம் துக்கம் கொண்டது...

"சம்யு... இந்தப் புடவை நல்லாயிருக்கான்னு பார்..." ஜெகதீஸ்வரி அவளை அழைக்கவும் அவளது கவனம் அங்குச் சென்றது...

"நெஸ்சா உந்தி வதின..." (நல்லாயிருக்கு அண்ணி)

தனது கையிலிருந்த புடவையைத் தள்ளி வைத்து விட்டு, அண்ணி எடுத்து கொடுத்த புடவையைக் கைகளில் எடுத்து கொண்டாள்... அதன் பிறகு நடந்தது எதுவும் அவளது மூளையில் உறைக்கவில்லை... மின்தூக்கியில் அவள் அருகில் நின்று கொண்டு பயணம் செய்த இந்திரஜித்தின் அருகாமையைக் கூட அவள் உணரவில்லை... அவனின் விசித்திர பார்வையையும் அவள் உணரவில்லை...

வீட்டிற்கு வந்ததும் ஜெகதீஸ்வரி அவளது கைகளில் புடவை அடங்கிய பெட்டியை அவளிடம் கொடுத்து, "பிளவுஸ் நான் தைக்கக் கொடுத்திர்றேன்..." என்று கூற...

அவள் மௌனமாய்த் தலையாட்டினாள்... பற்றில்லாத ஒருவித மோன நிலையில் அறைக்குள் நுழைந்தவள் அந்தப் பெட்டியை அலமாரியினுள் வைத்த போது அது கை தவறி கீழே விழுந்தது... அப்போது பெட்டியில் இருந்த புடவை நழுவி கீழே விழுந்தது... புடவையைக் கண்ட அவளது விழிகள் ஆச்சிரியத்தில் விரிந்தது... மனதிலோ சந்தோசம் பொங்கியது...

ஆம், அதே அடர் பச்சை நிறத்தில் கொடி போன்று சரிகை இழைத்திருந்த அதே பட்டுப்புடவை அவளது கண்களைப் பறித்தது... இது எப்படிச் சாத்தியம்...? கீழே அமர்ந்து புடவையை அணைத்து கொண்டவளின் விழிகள் இரண்டும் கலங்கி போனது...

**************

அடுத்து வந்த நாட்களில் சித்தார்த், பிரகதீஸ்வரி, ஹரிப்ரசாத், சந்தியா, சரவணன், ஸ்வேதா இவர்கள் அறுவரும் திருநெல்வேலி புறப்பட்டுச் சென்றனர்... பொங்கல் மற்றும் பிரகதீஸ்வரியின் அன்னை இறந்த தினத்திற்காக அங்குச் சென்றனர்... வருடா வருடம் பிள்ளைகளும் உடன் செல்வர்... ஆனால் இந்த வருடம் அவர்கள் யாரும் உடன் செல்லவில்லை... ஏனெனில் இன்னும் நான்கு நாட்களில் திருமணம் என்பதால்...

"நான் இல்லைன்னு சம்யுவை போட்டு படுத்தி எடுத்தேன்னு எனக்குத் தெரிஞ்சது, நீ அவ்வளவு தான்..." என்று சித்தார்த் மகனிடம் எச்சரிக்கை விடுக்க...

"அட... மறந்தே போயிட்டேன்... ஞாபகப்படுத்தியதுக்கு ரொம்ப நன்றி தந்தையே..." என்றான் மகன் நக்கல் குரலில்...

"சம்யு மட்டும் உன் மேல் ஏதாவது கம்ப்ளையிண்ட் பண்ணட்டும்... அப்போ இருக்கு உனக்கு..."

"அப்படிக் கம்ப்ளையிண்ட் பண்ணும் தைரியம் அவளுக்கு இருக்கா...?"

"அந்தத் தைரியத்தில் தான் நீ இப்படி ஆடுற... தன்னால் அண்ணன் குடும்பத்தில் பிரச்சினை வந்திர கூடாதுன்னு அந்தச் சின்னப் பொண்ணு உன் டார்ச்சரை சகிச்சிட்டு போகுது... அவள் மட்டும் வாய் திறந்தால் நீ அவ்வளவு தான்... அன்னைக்கு அவளை லக்கேஜ் தூக்க வச்சியே, அதை மட்டும் நம் மாப்பிள்ளை பார்த்திருக்கணும்... அப்புறம் தெரிஞ்சிருக்கும் சங்கதி..."

"ஹா ஹா... நீங்க இன்னும் சின்னப் புள்ளைத்தனமாவே யோசிக்கிறீங்களே... என்னோட டார்கெட் நீங்க மட்டும் தான்... அத்தான் இல்லை... அதனால் அவர் முன்னாடி எல்லாம் அப்படி நடந்துக்க மாட்டேன்..." என்று கூறிய மகனை உறுத்து விழித்தபடி ஒன்று செய்ய இயலாதவனாய் கிளம்பி சென்றான் சித்தார்த்...

அப்படி இருந்தும் மனைவியிடம், "சம்யுவை நம்முடன் கூட்டிட்டு போவோமா ரதிம்மா...? உனக்குத் துணையா இருக்கும் இல்லையா...?" என்று கேட்க வேறு செய்தான்...

"ஜிக்கிக்கு தான் அவளோட துணை வேணும்... ஆதியை பார்க்க அவள் இங்கே இருந்தாகணும்... சம்யு இல்லைன்னா ஜிக்கிக்கு ரொம்பக் கஷ்டமா போயிரும்..."

மனைவியின் வார்த்தையில் இருந்த உண்மை உணர்ந்து சித்தார்த் வேறுவழியின்றிக் கிளம்பி சென்றுவிட்டான்...

இந்த இரு நாட்களில் சம்யுக்தா குரங்கு கைகளில் கிடைத்த பூமாலையாகச் சிக்கி சின்னாப்பின்னமாகப் போகிறாளா...? இல்லை சூடி கொடுத்த சுடர்கொடி போன்று மேம்படப் போகிறாளா...?

தொடரும்...!!!

அதிகாலையில் எழுந்த இந்திரஜித் படுக்கையில் அமர்ந்து கொண்டு சோம்பல் முறித்தான்... இன்று பொங்கல் திருநாள்... அவனது வீட்டில் மட்டும் பெரிதாகக் கொண்டாட்டம் இருக்காது... அவனது அன்னைக்காக அதைக் கொண்டாடாது விட்டு விட்டனர்... அதனால் அவனுக்கு மற்ற நாள் போன்றே அதுவும் சாதாரண நாளாகத் தெரிந்தது... ஊரில் இருந்தாலாவது மற்றவர்களுக்காகக் கொண்டாடுவார்கள்... இங்கு நகரத்தில் அதுவும் கிடையாது...

படுக்கையை விட்டு எழுந்தவன் ஏசியை அணைத்து விட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டான்... சில்லென்ற பனிக்காற்று அவனது முகத்தினை வருடி சென்றது... அதில் அவனது மனம் லேசாகியது... முகத்தில் புன்னகை அரும்பத் தனது பார்வையைச் சுழற்றியவன் விழிகளில் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த சம்யுக்தாவும், அவளது அருகில் அமர்ந்து கொண்டு அதற்கு உதவி செய்து கொண்டிருந்த பிரசன்னாவும் காட்சி அளித்தனர்...

'இவனுக்கு வேறு வேலையே இல்லையா...? இவனுடைய வேலை கம்பெனியிலா...? இல்லை வீட்டிலா...? அதுவும் அப்பா, அம்மா கூட வீட்டில் இல்லை... இப்போது எதுக்கு இவன் இங்கே வரணும்...? இன்று பொங்கல் அதுவுமா லீவ் நாளில்...?'

அடுக்கடுக்காய் அவனது மனதில் எழுந்த கேள்விகளுக்கு விடையாகச் சம்யுக்தா கிடைத்தாள்... அந்நேரம் அவள் பிரசன்னா ஏதோ கூறியதற்குப் புன்னகையுடன் பதில் கூற, அதைக் கண்டு இவனுக்கு இங்கே கோபம் அதிகரித்தது...

விருட்டென்று நேரே உடற்பயிற்சி கூடத்திற்குச் சென்றவன் தனது கோபத்தினை அங்கு இருந்த இயந்திரத்தின் மீது காட்டினான்... ட்ரெட் மில் மீது மூச்சிரைக்க அதிவேகத்தில் அவன் ஓடிய போதும் அவனது கோபம் சற்றும்

குறையவில்லை... அவனுக்கே அவனது மனம் புதிராக இருந்தது...

சம்யுக்தாவை கண்டாலே அவனுக்குப் பிடிக்கவில்லை... அவனுக்கு அவள் மீது அப்படியொரு கோபம் இருக்கிறது... கோபம் என்று சாதாரணமாகக் கூறிவிட முடியாது... கொலைவெறியே அவனுக்கு இருக்கிறது... ஏனென்றால் அவளால் அவன் அடைந்த துன்பம் அப்படிப்பட்டது... அதை நினைத்து பார்த்தவனின் மனம் தடுமாறியது போல் அவனது கால்களும் தடுமாறியது... ட்ரெட் மில்லை அணைத்து விட்டு கீழிறங்கியவன் அங்கிருந்த நாற்காலியில் வந்தமர்ந்தான்... அன்றைய நாளின் நினைவில் தலையில் கை வைத்தபடி அப்படியே ஓய்ந்து போய் அமர்ந்து விட்டான்...

இது அனைத்தையும் விட அவனது கோபத்தை, உதாசீனத்தைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது தன் பின்னால் நாய்க்குட்டி போன்று சுற்றி வரும் சம்யுக்தாவை நினைத்தவனுக்குப் பெருத்தச் சந்தோசமாக இருந்தது... அவனது துன்பத்திற்கு அது அரும்பெரும் மருந்தாக இருந்தது... அதை வைத்து தனது தந்தையைக் கலங்க செய்வது அவனுக்கு அத்தனை பிடித்தமாய் இருந்தது...

அன்று எதுவும் செய்ய முடியாதபடி புறமுதுகிட்டு ஓடியவன் இன்று தந்தையின் கண்களில் விரலை விட்டு ஆட்டுகின்றான்... இதைத் தான் சரித்திரம் திரும்புகிறது என்கின்றனரோ... இன்னமும் தந்தையை வருந்த செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றியது... அதற்காக அவனுக்குக் கிடைத்திருக்கும் ஒரே துருப்பு சீட்டு இந்தச் சம்யுக்தா தான்...

தந்தையை மட்டுமா அவன் கலங்க செய்கிறான்...? அவளையும் கலங்க செய்வது அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... மொத்தத்தில் அவளைப் பைத்தியக்காரி ஆக்காது அவன் ஓய போவதில்லை... அதற்கு இடைஞ்சலாக இந்தப் பிரசன்னா இடையில் வருவது அவனுக்கு அப்படியொரு எரிச்சலை கொடுத்தது...

பெண்ணவளின் நுண்ணிய உணர்வுகளுடன் தான் விளையாடி கொண்டிருக்கிறோம் என்பதை அந்நேரம் அவன் உணரவில்லை... அது பெண்ணவள் மனதினை எந்தளவிற்குக் காயப்படுத்தப் போகிறது என்பதையும் அவன் உணரவில்லை... ஆணாய் தன் பக்க நியாயத்தை மட்டுமே யோசித்தவன் தவறே செய்யாது தண்டனை அனுபவிக்கும் அந்த அப்பாவி பெண்ணைப் பற்றி யோசிக்க மறந்து போனான்...

வெகுநேரம் அப்படியே யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தவன் பின்பு வெளியில் வந்தான்... வரவேற்பறையில் வந்தமர்ந்தவன் செய்தித்தாளை கையில் எடுக்கும் போது சரியாகச் சம்யுக்தா அவன் முன் பால் அடங்கிய கோப்பையை நீட்டினாள்... அவன் மௌனமாய் அவளை ஏறிட்டுப் பார்த்தான்...

அவள் குளித்து முடித்துப் புத்துணர்வுடன் புது மலராய் புன்னகையுடன் நின்றிருந்தாள்... ஈரமாய் இருந்த நீண்ட கூந்தலின் நுனியில் முடிச்சிட்டு அதில் சிவப்பு வண்ண ரோஜாவை சொருகி இருந்தாள்... அவள் கூந்தலை முன்பக்கமாய்த் தோள் வழியே வழிய விட்டிருந்தது அவ்வளவு அழகாக இருந்தது... சிவப்பு நிற வட்ட பொட்டு வைத்து அதன் மீது நாமம் போல் மெல்லிய சிவப்புக் கோட்டினை மேல் நோக்கி இழுத்திருந்தாள்... அது அவளுக்கு மேலும் தனியழகினை கொடுத்தது...

அப்போது தான் அவன் அவளது நாசியில் ஒளிர்ந்த அந்த மூக்குத்தியை கவனித்தான்... அதைக் கண்டதும் அவனது மனம் அதிர்ந்து போனது... அவனது பார்வையை உணர்ந்த சம்யுக்தா முகம் மலர அவனைப் பார்த்து,

"மூக்குத்தி நல்லாயிருக்கா பாவா...?" என்று ஆர்வமாகக் கேட்க... அவளது ஆர்வத்தில் அவன் தனது மனதினை கட்டுப்படுத்திக் கொண்டு,

"இதை எதுக்கு என் கிட்ட கேட்கிற...? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒருத்தன் கூடக் கடலை போட்டல்ல அவன் கிட்ட

போய்க் கேளு..." அவனது குரல் சற்று கோபத்துடன் ஒலித்தது...

"யாரை சொல்றீங்க...?" புரியாது கேட்டவளை உறுத்து விழித்தவன்,

"உனக்கு ஒண்ணுமே தெரியாது... ஆனா பிரசன்னா கிட்ட மட்டும் பல்லை இளிச்சிக்கிட்டு பேசிக்கிட்டு இருக்கத் தெரியும்..."

"அவர் ரொம்ப நல்லவர் பாவா..."

"அப்போ நான் கெட்டவன்னு சொல்றியா...?" எதிர்வாதம் செய்தவனைக் கண்டு மனம் பதறியவளாய்,

"ஐயோ... அப்படி எல்லாம் நான் சொல்வேனா...?" என்றவளை அவன் வெறுமையாய் பார்த்து வைத்தான்...

"உங்களை விட அவர் ஒண்ணும் எனக்கு முக்கியம் இல்லைன்னு சொன்னேன்..." என்றவள்,

"நான் எதுக்கு இதைப் பத்தி அவர் கிட்ட கேட்கணும்...? நான் மூக்குத்தி போட்டு கிட்டது உங்களுக்காகத் தான்... நீங்க சொன்னதுக்காகத் தான்..."

"நான் சொன்னதுக்காகவா...? குட் ஜோக்... நான் உன்னைப் பார்த்ததே இல்லைன்னு சொல்றேன்... நீ என்னடான்னா நான் உன் கிட்ட மூக்குத்தி குத்த சொன்னேன்னு சொல்ற... உனக்கு என்ன பைத்தியம் பிடிச்சியிருக்கா...? இல்லை கனவு எதுவும் கண்டாயா...?" நக்கல் சிரிப்புடன் ஒலித்த அவனது வார்த்தைகளில் அவளது விழிகளில் நீர் திரண்டது...

"ஆமாம், நான் உங்க மேல் பைத்தியமா தான் இருக்கேன்... ஆனா நான் கனவு காணலை... எல்லாமே நனவு தான்... நான் பார்க்கிற ஒவ்வொரு பொருளிலும் உங்களைத் தான் பார்க்கிறேன்... எல்லாமே என் கண்ணுக்கு நீங்களா தான் தெரியறீங்க... மொத்தத்தில் நான் சுவாசிக்கும் காற்று நீங்க தான்... ஏனோ இப்போ உங்களுக்கு என்னைப் பிடிக்கலை...

அது எனக்கு நல்லா தெரியுது... ஆனா அதுக்காக எல்லாம் நான் உங்களை வெறுத்துட மாட்டேன்... எனக்கு நீங்க மட்டும் தான்... நான் சாகும் போது கூட உங்களை நினைச்சிட்டு தான் சாவேன்... அதைத் தடுக்க உங்களால் முடியாது... நான் உங்களைக் காதலிப்பதையும் உங்களால் தடுக்க முடியாது..." என்று நீளமாகப் பேசியவள்,

"நேனு தப்புகா மாட்லதே உந்த்தே மீரு நன்னு ஷேமின்ச்சாலன்டி..." (நான் தவறாகப் பேசியிருந்தால் நீங்க என்னை மன்னிக்க வேண்டும்)

அவளது ஒவ்வொரு வார்த்தையும் அவனது மனசாட்சியைச் சாட்டையாய் அடித்துக் கேள்வி கேட்டது... எத்தனை சாட்டைக் கொண்டு அடித்தாலும் அவனுக்கு வலிக்கப் போவதில்லை... ஏனெனில் அவன் ஏற்கெனவே ரணத்தின் வலியை சுமந்து கொண்டிருக்கிறான்... அதனால் அலட்சியமாய் அவளைப் பார்த்தவன்,

"நீ பேசுறது மட்டுமல்ல... நீ செய்றது, நினைக்கிறது எல்லாமே தப்பு தான்..."

"நேனு தப்புகாது... நா பிரேமா தப்புகாது..." (நான் தவறானவள் இல்லை... என்னுடைய காதலும் தவறானது இல்லை) என்று தெலுங்கில் கூறியவள் பின்பு தமிழில்,

"என்னுடைய சத்தியமும் தவறாகாது..." என்று உறுதியான குரலில் கூறியவளை கண்டு அவன் சிறிதும் அசரவில்லை...

'நீ என்ன வேண்டும் என்றாலும் கூறி கொள்... எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை...' என்பது போல் அவன் பாலை அருந்தியபடி செய்தித்தாளில் கண்களைப் பதித்தான்...

அவளால் தான் அவனைப் போல் கல்லாக இருக்க முடியவில்லை... மனதிற்குள் பெரும் துயரம் பாரமாய் அழுத்தியது... மெல்ல அங்கிருந்து விலகி சென்றாள்... மனதின் பாரம் அவளது நடையைத் தளர செய்தது

போலும்... அதைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்தின் முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போயிருந்தது...

சம்யுக்தா ஆதித்யா எழுந்து விட்டானா என்று பார்த்தாள்... இன்னமும் அவன் எழுந்திருக்கவில்லை... அதனால் தன்னுடைய அறையில் சென்று அமர்ந்து கொண்டாள்...

தன்னவனின் பாராமுகம், உதாசீனம் எல்லாம் அவளுக்குப் புரியாமல் இல்லை... அதை உணராமல் இருப்பதற்கு அவள் ஒன்றும் சிறு குழந்தை அல்லவே... காரணம் ஏதுமின்றித் தன்னைக் காதலிப்பதாய் கூறியவனின் காதலை எப்படி ஏற்றுக் கொண்டாளோ... அது போல் அவனது வெறுப்பையும் காரணம் ஏதுமின்றி மனமார ஏற்றுக் கொண்டாள்... அன்று அவனுக்குத் தான் செய்து கொடுத்த சத்தியத்தை இப்போது அவள் நினைவு கூர்ந்து பார்த்தாள்...

"உங்களுக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன்... அது எத்தனை வருசமானாலும் சரி... இந்த ஜென்மம் இல்லாது போனாலும் அடுத்த ஜென்மத்திலும் உங்களுக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன்..."

அன்று அவன் கை மீது தன் கை வைத்துச் சத்தியம் செய்து கொடுத்தவள் இப்போது அதை எப்படி மறந்து போவாள்... அப்போது அவன் முகத்தில் தெரிந்த எல்லையில்லா நிம்மதியில், சந்தோசத்தில் அவள் அல்லவா நிம்மதி, சந்தோசம் அடைந்தாள்... இப்போது அதை நினைத்துப் பார்த்தாலும் அவளுள் மகிழ்ச்சி தான் பெருகுகிறது...

காத்திருப்பதில் இருக்கும் சுகமே தனித் தான் அல்லவா... அதுவும் தன்னவனுக்காகக் காத்திருப்பது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது... இதோ இப்போது கூடப் பாராமுகம் காட்டும் அவனிடத்தில் கோபம் கொள்ளவோ, பாராமுகம் காட்டவோ அவளால் முடியவில்லை... மாறாக அவனை மட்டுமே அவளது மனம் மிகவும் விரும்பி நேசிக்கிறது...

கண்ணனுக்கேற்ற ராதையாய் அவள் காத்திருப்பாள்... ஆட்கொள்வதும், ஆட்கொள்ளாதிருப்பதும் அவனது

விருப்பம்... காதலிப்பவரின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் வளைந்து கொடுப்பதும் காதல் தான்... அதனால் தான் அவளும் அவனது விருப்பத்திற்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கிறாள்... அவனது விருப்பு அவள் மீதான வெறுப்பு என்று தெரிந்திருந்தும்...

"சம்யு..." என்றழைத்தபடி அங்கு வந்தாள் ஜெகதீஸ்வரி... அவளது கையில் ஆதித்யா இருந்தான்...

அத்தையைக் கண்டதும் அவன், "த்தை..." என்று அவளிடம் தாவினான்...

"நா பங்காரம்..." என்று அவள் மகிழ்வோடு அவனைத் தூக்கி அணைத்து கொண்டாள்... அவளது காயமடைந்த மனதிற்குச் சின்னவன் இதத்தை அளித்தான்...

"சம்யு, ஆதியை பார்க்கிறது இருக்கட்டும்... முதலில் நீ உன்னைப் பார்..."

"எனக்கு என்ன வதின...?"

"இந்தக் கல்யாணம் முடியும் வரை நீ இப்படி இருக்கக் கூடாது..."

"இப்போ இருக்கிறதுக்கு என்ன...?" என்று புரியாது பார்த்த நாத்தனாரை கண்டு புன்னகையுடன்,

"இதற்கான பதிலை இன்னும் கொஞ்ச நேரத்தில் நீ தெரிந்து கொள்வாய்..." என்ற ஜெகதீஸ்வரி,

"ஆதியை கொடு... சூர்யாவிடம் கொடுத்துட்டு வர்றேன்..."

"ஆதி என்னோடு இருக்கட்டுமே..."

"நாம் செய்கிற வேலைக்கு ஆதி இங்கிருந்தால் சரிவராது..."

மகனை தூக்கி கொண்டு சென்ற ஜெகதீஸ்வரி அவனை விட்டு விட்டு அடுத்தச் சில நொடிகளில் மீண்டும் அங்கு வந்து சேர்ந்தாள்... வந்தவள் நேரே சென்று சம்யுக்தாவின்

அலமாரியை திறந்தாள்... அதில் வரிசையாக அடுக்கி வைத்திருந்த விலையுயர்ந்த புடவைகளைக் கண்டவள் திரும்பி பார்த்து,

"இதில் ஒண்ணைக் கூட நீ கட்டுறது இல்லை..."

"வீட்டுக்கு கட்டுறதுக்கு இது தான் வசதி, வதின..." தான் கட்டியிருந்த எளிமையான பருத்தி புடவையைப் பார்த்து அவள் கூற...

"அது நாம மட்டும் இருக்கிறப்போ... இனி விருந்தாளிகள் வரும் போது நீ இப்படி இருக்கக் கூடாது..." நேற்று பூஜா பேசியதை மனதில் வைத்துக் கொண்டு ஜெகதீஸ்வரி அப்படிக் கூறினாள்...

"சரி வதின... நீங்க சொல்றபடி கேட்கிறேன்..." என்று மறுபேச்சு பேசாது உடனே ஒத்துக் கொண்ட நாத்தனாரை அன்புடன் பார்த்தவள் அதிலிருந்து ஒரு புடவையை எடுத்து அவளைக் கட்டி கொண்டு வர சொன்னாள்...

உடை மாற்றும் அறைக்குச் சம்யுக்தா சென்றதும் அவள் அணிய வேண்டிய நகைகளை எடுத்து வைத்தவள் அப்படியே ஒப்பனை பொருட்களையும் எடுத்து வைத்தாள்... ஒப்பனை பொருட்கள் எதுவும் பிரித்துக் கூடப் பார்க்காது அப்படியே இருந்தது கண்டு அவளுக்கு வருத்தமாக இருந்தது... வயது பெண்களுக்கே உரிய ஆசைகள் இல்லாது இருக்கும் சம்யுக்தாவை கண்டு சற்றுப் பெருமையாக இருந்த போதும் அதை விட அதிக வருத்தமே அவளை ஆட்டுவித்தது...

"வதின..." (அண்ணி)

சம்யுக்தாவின் குரலில் அவளைத் திரும்பி பார்த்தாள் ஜெகதீஸ்வரி... பட்டு போன்று மென்மையாய் இருந்த உயர்ரகப் புடவை அவளது மேனியை அத்தனை பாந்தமாகத் தழுவியிருந்தது... அவளை அழைத்து வந்து நாற்காலியில் அமர்த்தியவள் அவளது தலைமுடியை வாரி அழகாய் இந்தக் காலத்திற்கு ஏற்ப சடை அலங்காரம்

செய்து விட்டாள்... பின் ஒப்பனை செய்ய அலங்கார பொருட்களை எடுத்த போது,

"ஒந்த்தோ வதின..." (வேண்டாம் அண்ணி) என்று தடுத்தவளை கண்டு போலியாக முறைத்தவள்,

"அளவுக்கு அதிகமா அலங்காரம் பண்ண தேவையில்லை... லைட் மேக்கப் போட்டுக்கலாம்..." என்று கூறியபடி மிதமான ஒப்பனை செய்துவிட்டாள்...

"இப்போ எப்படியிருக்கேன்னு நீயே உன்னைக் கண்ணாடியில் பார் சம்யு..."

அண்ணி கூறியதும் கண்ணாடியில் பார்த்த சம்யுக்தா இன்பமாய் அதிர்ந்தாள்... பேரழகி இல்லை என்றாலும் அவளும் அழகாகத் தான் இருந்தாள்... கற்கள் பதித்த இளஞ்சிவப்பு புடவையும், எளிமையான நகைகளும், மிதமான ஒப்பனையும் அவளை அத்தனை அழகாகக் காட்டியது...

"நெஸ்ஸா உந்தி வதின..." (நல்லாயிருக்கு அண்ணி) அவளின் முகமலர்ச்சி வைத்து அவள் கூறியதன் அர்த்தம் புரிந்து சிரித்தாள் ஜெகதீஸ்வரி...

"உன் அண்ணா கிட்ட காட்ட வேண்டாமா...?"

சம்யுக்தாவை அழைத்துக் கொண்டு ஜெகதீஸ்வரி தனது அறைக்குச் சென்றாள்... அங்குச் சூர்யா தனது மகன்களோடு விளையாடி கொண்டிருந்தான்...

"இப்போது உங்க தங்கை எப்படி இருக்கிறாள்...?"

மனைவியின் குரலில் திரும்பி பார்த்த சூர்யா அங்குத் தேவதை போன்று அழகாய் நின்றிருந்த தங்கையைக் கண்டு பிரமித்துப் போனான்...

"அடடே, இது நம்ம சம்யுவா...?" என்று ஆச்சிரியத்துடன் கேட்ட சகோதரனை கண்டு சம்யுக்தா வெட்கம் கொண்டு அண்ணியின் பின்னால் மறைந்து கொண்டாள்...

சூர்யா தங்கையின் அருகில் வந்து பாசத்தோடு அவளது தலையை வருடியபடி, "செல்லி, நுவ்வு இப்புடு சூடாதானிக்கி சால அந்தங்கா உண்டேவு" (தங்கச்சி, நீ இப்போ பார்ப்பதற்கு அவ்வளவு அழகாயிருக்கிறாய்)

"அண்ணய்யா..." என்றவளது விழிகள் கலங்கியது...

இருவரின் நெகிழ்வை கண்டு மனம் நெகிழ்ந்த ஜெகதீஸ்வரி அவர்களின் மனதினை மாற்றும் பொருட்டு,

"ஜெமினி டிவியை ஆஃப் பண்ணுங்க..." என்று கேலி செய்ய...

"நாங்க தெலுங்கில் பேசுறது உனக்குக் கிண்டலா இருக்கா...? உன்னால் எனக்குத் தெலுங்கு மறந்து போயிரும் போலிருக்கு... அப்பப்போ என் தங்கை கூடப் பேசி ஞாபகப்படுத்திக்கிறேன்... அதைக் கூட நீ விட மாட்டியா...?" என்று போலியாக மனைவியின் காதை திருகியபடி அவன் கூற...

"ஆ..." போலியாக அலறிய ஜெகதீஸ்வரியை கண்டு அர்விந்த்தும், ஆதித்யாவும் கத்த துவங்க... இறுதியில் சூர்யா மகன்கள் இருவரிடமும் மன்னிப்பு வேண்டினான்... தந்தை மன்னிப்பு கேட்டதும் தான் இருவரும் கத்துவதை விட்டனர்...

"பாரேன்... இந்த வாண்டுக்கு கூட எல்லாம் புரியுது..." என்று ஆதித்யாவை சுட்டிக்காட்டி சிரித்த சூர்யாவை கண்டு ஜெகதீஸ்வரியும் சிரித்தாள்...

இருவரையும் மகிழ்ச்சி பொங்க பார்த்து கொண்டிருந்தாள் சம்யுக்தா... அவர்களது காதலான மணவாழ்வு கண்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"ஆதி, அதனு தன மேனத்த லாகா உன்ட்டாடு..." (ஆதி, அவன் அத்தை மாதிரி இருக்கான்) என்று பெருமையாகக் கூறியபடி சம்யுக்தா சின்னவனைத் தூக்கி கொண்டாள்...

"உண்மையே..." என்று கூறி புன்னகைத்தான் சூர்யா...

ஆதித்யாவை கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்த தங்கையைக் கண்டு அவனுள் வேறு ஒரு கனவு விரிந்தது... அதை அவளிடத்தில் அப்படியே கேட்கவும் செய்தான்...

"அண்ணன் மகன் உன்னைப் போல் இருப்பது இருக்கட்டும்... உன்னைப் போல் உனக்கு ஒரு மகன் வேண்டாமா...?"

'நீ எப்போது திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கப் போகிறாய்...?' என்கிற மறைமுகக் கேள்வி அதில் ஒளிந்திருந்ததை உணர்ந்த சம்யுக்தா தனது புன்னகையைத் தொலைத்து அமைதியாகி போனாள்...

"உன் வயசுள்ள பொண்ணுங்க எல்லாருக்கும் திருமணம் நடக்கும் போது நீ மட்டும் இப்படி இருப்பது எனக்குச் சரியாகத் தோணலை சம்யு... இப்பவே உனக்கு இருபத்திமூன்று வயசாகி விட்டது..."

"ஆமாம் சம்யு... சாத்விகாவுக்கு உன் வயசு தான்... இப்போ அவளுக்குக் கல்யாணமாகப் போகிறது... உன் அண்ணாவோட வருத்தத்தை நீயும் கொஞ்சம் புரிஞ்சிக்கணும்மா..."

ஜெகதீஸ்வரி அவளுக்கு எடுத்து கூற... கண்களில் கண்ணீர் கரை கட்ட, உதடுகள் துடிக்க அண்ணியை ஏறிட்டவள்,

"எனக்குக் கல்யாணம் வேண்டாம்..." என்றாள்...

"இது என்ன சின்னப் பிள்ளை மாதிரி பேசுற...? பெண்ணாய் பிறந்தால் கல்யாணம் பண்ணி தானே ஆகணும் சம்யு..." ஜெகதீஸ்வரி அவளுக்கு எடுத்து கூற...

"ஒந்த்தோ நாகு பெல்லி ஒந்த்தோ..." (எனக்குக் கல்யாணம் வேண்டாம்) என்று கண்ணீரை அடக்கி கொண்டு அவள் அறையை விட்டு வெளியேறி விட்டாள்...

"நான் இதுக்குத் தான் சொன்னேன் ஜெகா..." என்று வேதனையுடன் கூறியவனைக் கண்டு ஜெகதீஸ்வரிக்கும்

வேதனையாக இருந்தது போலும்...

"ஐயம் சாரி சூர்யா... எனக்கு இப்படியாகும்ன்னு தெரியாது..."

மனைவியின் வேதனை குரலில் தனது வருத்தத்தைத் தள்ளி வைத்தவன், "அவள் இப்படிப் பிடிவாதம் பிடிச்சா நீ என்ன பண்ணுவ...? அர்வி நம்மைப் பார்த்துக்கிட்டு இருக்கான்... நீ அவனைக் கவனி..." என்று பேச்சை மாற்றிவிட்டான்...

ஜெகதீஸ்வரி பாரமான மனதுடன் மகனை கவனிக்கச் சென்றாள்...

ஆதித்யாவை தூக்கி கொண்டு வெளியில் வந்த சம்யுக்தாவின் மன வேதனையை ஆற்றுவது போல் அவள் எதிரில் இந்திரஜித் வந்து கொண்டிருந்தான்... வெளியில் செல்வதற்கு ஏற்றவாறு உடை உடுத்தியிருந்தவன் தனது முழுக்கை சட்டையை மேலேற்றி விட்டவாறு அவளை இமைக்காது பார்த்தபடி அவளை நோக்கி கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தான்... அவனது பார்வையில், அவனது வருகையில் அவள் தனது வருத்தம் மறைந்து உறைந்து போய் அப்படியே நின்றாள்...

அவள் அருகில் வந்தவன், "ரொம்ப அழகாயிருக்க..." என்று கூற...

அவனது வார்த்தையில் ஏதோ விருது கிடைத்தது போல் முகம் மலர அவனை ஏறிட்டவள் அப்படியே திகைத்தாள்... ஏனெனில் அவனது பார்வை அவளைத் தாண்டி பின்னால் நிலைத்திருந்தது... அதைத் தொடர்ந்து அவளும் தனது பார்வையைப் பின்னால் செலுத்திய போது அங்குத் தேவதை போல் பூஜா நின்றிருந்தாள்... அதைக் கண்டதும் அவளது மனம் சுணங்கியது... முணுக்கென்று விழிகளில் விழிநீர் திரண்டது...

"உண்மையாவா அத்தான்...?" பூஜா முகம் மலர கேட்க...

"நான் உண்மையைத் தவிரப் பொய் சொல்வதில்லை..." என்று புன்னகையுடன் கூறியவனைக் காண இயலாது தலை குனிந்த சம்யுக்தா அதற்கு மேல் அங்கு நிற்க முடியாது நகர்ந்தாள்...

பெரியவர்களுக்கு இடையில் நடக்கும் மௌன யுத்தத்தை அறியாத சின்னவன் அருகில் நின்றிருந்த மாமன்காரனின் சட்டையைப் பிடித்து இழுத்தான்...

"அட, ஆதி நீ இங்கே தான் இருக்கிறியா...?" என்று உற்சாகமாய்க் கூறியபடி அவன் மருமகனை தூக்கி கொள்ள... அப்போது அவனது கரங்கள் சம்யுக்தாவின் மேனியோடு உரசி சென்றது... அதில் அவள் விதிர்த்து போய் அவனைப் பார்க்க... அவனோ எதுவுமறியாதவனாய் முகத்தை வைத்துக் கொண்டு சின்னவனைக் கொஞ்சி கொண்டே அவளைத் தாண்டி சென்றான்...

அவனை உயிருக்கு உயிராய் நேசிக்கும் அவளது பூ மனது அவனது சிறு தொடுகையில் புயலில் சிக்கியது போல் தடுமாறி அலைபாய்ந்தது... தடுமாறும் மனதினை தடுக்க இயலாது அவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்...

"ஏய்..." என்கிற குரலில் அவள் தன்னிச்சையாகத் திரும்பி பார்த்தாள்... பூஜா தான் அவளை அழைத்தது...

"நாங்க ரெண்டு பேரும் தனியா பேசணும்... நீ இவனைத் தூக்கிட்டு போ..." என்று அவள் அதிகாரமாய்க் குரல் கொடுக்க...

ஏனோ எதிர்த்து பேச தோன்றாது சம்யுக்தா அவள் அருகில் சென்றாள்... இந்திரஜித்தை ஏறிட்டு பார்க்காது அவள் மருமகனை நோக்கி தனது இரு கரங்களைத் தூக்குவது போல் நீட்டினாள்... அவனோ அவளிடம் சின்னவனைக் கொடுக்காது இறுக பிடித்துக் கொள்ள... அவளோ புரியாது அவனை ஏறிட்டு பார்த்தாள்... சம்யுக்தா பார்வையோடு தனது பார்வையைக் கலக்கவிட்டவன் பூஜாவிடம்,

"நாளைக்கு உனக்கு ஒரு குழந்தை பிறந்தால் இப்படித் தான் சொல்வியா பூஜா...?"

மாமன் மகனது கேள்விக்குப் பதில் சொல்ல தெரியாது விழித்தாள் பூஜா... பிறகு அலட்சிய குரலில்,

"இது போல் வேலைக்கு ஆள் வைத்து பார்த்து கொள்வேன்..." என்றாள் திமிராய்...

"அவள் வேலைக்காரி இல்லைன்னு திரும்பத் திரும்பச் சொல்கிறேன்... உனக்கு ஏன் புரிய மாட்டேங்குது...? இல்லை புரியாத மாதிரி நடிக்கிறியா...?"

அவனது வார்த்தையில் சம்யுக்தாவின் காதல் நெஞ்சம் உயிர்த்தெழுந்தது...

"அவள் மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு கரிசனம்...?"

"அவள் என் அக்கா கணவரின் தங்கை... அந்தக் கரிசனம் மட்டுமே..." என்றவனது பதிலில் பூஜா திருப்தி அடைந்தாள் என்றால், சம்யுக்தா வருத்தம் அடைந்தாள்...

"நீ போ... ஆதி என்னுடன் இருக்கட்டும்..." என்றவனைக் கண்டு தயங்கி நின்றாள் சம்யுக்தா... அவளின் தயக்கத்தை உணர்ந்தவனாய்,

"என்ன...?"

"ஆதியை குளிக்க வைக்கணும்..."

அவளை மேலும் கீழும் பார்த்தவன், "இன்று ஒரு நாள் வேலைக்காரங்க குளிக்க வைக்கட்டும்... நீ போ..." என்க...

"ம்... சரி..." என்றவள் அங்கிருந்து சென்றாள்... அவள் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவனின் கவனத்தை,

"அத்தான்..." என்றழைத்துப் பூஜா தன் பக்கம் திருப்பினாள்...

"நீ போய்ப் பாட்டி, தாத்தா கூடப் பேசிக்கிட்டு இரு..." என்றவன் மருமகனை தூக்கி கொண்டு தனது அறைக்குச்

சென்றுவிட்டான்...

பூஜா எரிச்சலுடன் தனது தாத்தா, பாட்டியை காண சென்றாள்...

மதியம் யாருமில்லாத நேரத்தில் அத்தையும், மருமகனும் வராந்தாவில் அமர்ந்து விளையாடி கொண்டிருந்தனர்... வீட்டில் யாருமில்லாததால் சம்யுக்தா சுதந்திரமாக இருந்தாள்... எல்லோரும் வெளியில் சென்றிருக்க... பூஜா தனது தாத்தா, பாட்டியுடன் கோவிலுக்குச் சென்றிருந்தாள்...

"ஆதி பங்காரம்... இக்கட ரா..." (ஆதி தங்கம், இங்கே வா...) என்றபடி அவள் முன்னால் செல்ல ஆதித்யா தவழ்ந்தபடி அத்தையைத் துரத்தி கொண்டிருந்தான்... அவள் செல்லும் இடமெல்லாம் வேகமாய்த் தவழ்ந்து வந்தவனைக் கண்டு அவள் புன்னகையுடன் இங்கும் அங்குமாய்ச் சென்று போக்கு காட்ட, சின்னவனோ செப்பு வாய் அகல திறந்து சிரித்தபடி அவளைப் பிடிக்க முயன்றான்...

ஆதித்யாவை திரும்பி பார்த்துக் கொண்டே முன்னால் சென்றவள் அங்கு வந்து கொண்டிருந்த இந்திரஜித்தை கவனிக்கவில்லை... தன் மீது மலர் பந்தாய் மோதியவளை நுனிவிரலால் விலக்கி நிறுத்தியவன்,

"கண் மண் தெரியாம என்ன விளையாட்டு...?" என்று அவளிடம் கோபமாய் இரைந்தான்...

"அது வந்து பாவா..." அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்...

மாமன்காரன் அத்தையைத் திட்டுவதைக் கண்டு சின்னவன் அழ ஆரம்பித்தான்... அவனது அழுகையில் இருவரும் ஒரு சேர திரும்பி பார்த்தவர்கள் ஒன்று போல் அவனைத் தூக்குவதற்காகக் குனிய... இருவரின் நெற்றியும் ஒன்றுடன் ஒன்று முட்டி கொண்டது...

"ஷேமிச்சண்டி பாவா..." (மன்னிக்கணும் பாவா) பதறி போய் மன்னிப்பு கேட்டவளை கண்டு ஒன்றும் பேசாது

அவன் நிமிர... அவள் குழந்தையைத் தூக்கி கொண்டு நிமிர்ந்தாள்...

அத்தையின் இடுப்பில் சுகமாய் அமர்ந்து கொண்டு அவளது நெஞ்சில் பாதுகாப்பாய் சாய்ந்தபடி தன்னைப் பார்த்து புன்னகைத்த மருமகனை கண்டு அவனது உதடுகளில் சிரிப்பு உதிர்ந்தது...

"எல்லோரையும் முந்தானையில் முடிஞ்சு வச்சிருக்க..." என்றவன் அதே புன்னகையுடன் சின்னவனின் கன்னத்தைத் தட்டியபடி வீட்டினுள் சென்றுவிட்டான்... அவன் சின்னவனைச் சொன்னானா...? இல்லை பெரியவளை சொன்னானா...?

அவனது புன்னகை முகம் அவளுள் பலவித வர்ணஜாலத்தைத் தோற்றுவித்தது... அந்தச் சந்தோசத்தில் அவள் மருமகனை இறுக்கமாய் அணைத்து கொண்டாள்... சின்னவனோ அவளது இறுகிய அணைப்பில் இருந்து திமிற துவங்கினான்...

"ஆதி பங்காரம், நுவ்வு மீ மாமாகாரு லாகா உன்ட்டாடு..." (ஆதி தங்கம், நீ உன் மாமா மாதிரியிருக்க)

இந்திரஜித்தை இறுக்கி பிடித்து வைத்துக் கொள்ளத் தான் அவள் நினைக்கிறாள்... ஆனால் முடியவில்லையே... இது போல் அவனும் அவளிடத்தில் இருந்து திமிறிக் கொண்டு செல்கிறான்... தன்னவனின் நினைவில் அவளது முகம் வாடி போனது...

வீட்டினுள் இருந்து இது அனைத்தையும் வெறுமையான மனநிலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்...

*************************

மறுநாள் இரவு காவ்யா மற்றும் சாத்விகாவிற்கு மருதாணி வைப்பதற்காக அழகு நிலையத்தில் இருந்து பெண்கள் வந்திருந்தனர்... திருமணத்திற்குப் பெண் அழைப்பு எல்லாம் பாட்டி வீட்டில் இருந்து என்பதால் சாத்விகா

இங்குத் தான் இருந்தாள்... இது தான் சாக்கு என்று சஞ்சயும் இங்கு வந்து விட்டான்...

பெரியவர்கள் இருவரும் வேடிக்கை பார்க்க சிறியவர்கள் நால்வரும் கைகளில் மருதாணி வைத்து கொண்டிருந்தனர்... அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்த சம்யுக்தாவை ஜெகதீஸ்வரி அழைத்தாள்...

"நீயும் மருதாணி வச்சுக்கோ சம்யு..."

அதைக் கேட்டு பூஜா முகத்தைச் சுளித்தாலும் ஒன்றும் பேசாதிருந்தாள்... இங்கு அவளது வார்த்தைகளுக்கு மதிப்பு இல்லை என்பதை வெகுசீக்கிரத்தில் அவள் புரிந்து கொண்டாள்...

அண்ணி அழைத்ததும் தட்ட முடியாது அங்கு வந்தமர்ந்த சம்யுக்தா தனது கைகளை அழகு நிலையத்தில் இருந்து வந்திருந்த பெண்ணின் முன் நீட்டினாள்...

"உங்களுக்குப் பிடித்த டிசைனை செலக்ட் பண்ணி கொடுங்க மேம்..." அந்தப் பெண் அவளிடம் சில மாதிரிகளைக் காட்டினாள்...

ஒரு கரத்தில் வேங்குழலூதும் கண்ணனும், மறுகரத்தில் அதைக் கண் மூடி மயக்கத்துடன் கேட்டுக் கொண்டிருக்கும் ராதையும் இருந்த மருதாணி மாதிரி அவளது மனதினை மிகவும் கவர்ந்தது... முகம் மலர அதை எடுத்து அவள் நீட்ட...

"குட் செலக்சன் மேம்..." என்று கூறிய அந்தப் பெண் சம்யுக்தாவின் கைகளில் மருதாணி கொண்டு கண்ணனையும், ராதையையும் வரைய ஆரம்பித்தாள்...

அவளது வலதுகரத்தில் கண்ணனும், இடதுகரத்தில் ராதையும் அழகாக உருப்பெற்றுக் கொண்டிருந்தார்கள்... அதைக் கண்டு சம்யுக்தாவின் விழிகளில் கனவு விரிந்தது... முகம் புன்னகையில் விகசிக்க மலர்ச்சியுடன் அவள் அமர்ந்திருந்தாள்...

இரவு நேரம் கடந்ததும் எல்லோரும் உறங்க சென்றுவிடச் சம்யுக்தா மட்டும் இந்திரஜித்திற்காகக் கனவுகளுடன் காத்திருந்தாள்... அவனோ வேலை முடிந்து வெகு சோர்வுடன் வீட்டினுள் நுழைந்தான்... விடுமுறை நாளிலும் அவனுக்கு வேலை இருந்தது... ஆர்வத்துடன் அவன் அருகில் செல்ல முயன்றவள் அவனது சோர்வினை கண்டு அருகில் செல்லாது விலகி சென்றாள்...

அவள் அருகில் வந்ததையும், விலகி சென்றதையும் ஓரக்கண்ணால் பார்த்தபடி சோபாவில் சாய்ந்த இந்திரஜித் தனது கழுத்தில் இருந்த டையைக் கழற்றி பக்கத்துச் சோபாவில் போட்டுவிட்டுக் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டான்... களைப்பு அவனது முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"பாவா..." அவளது மென்மையான அழைப்பில் அவன் கண்களைத் திறந்தான்...

"சாப்பிட வாங்க..." என்றவளை ஒரு நொடி அமைதியாகப் பார்த்தவன், பின்பு என்ன நினைத்தானோ மௌனமாய் எழுந்து உணவு மேசையை நோக்கி சென்றான்...

கையைக் கழுவி கொண்டு அவன் அமர்ந்ததும் அவளும் ஒன்றும் பேசாது அமைதியாக உணவு பரிமாறினாள்... அப்போது தான் அவன் அவளது கரத்திலிருந்த மருதாணியில் வரைந்திருந்த ஓவியத்தைக் கவனித்துப் பார்த்தான்...

செக்கச்செவேலென்று சிவந்திருந்த அந்த அழகு ஓவியம் ரசிக்கத்தக்கதாய் அழகாய் இருந்தது... ஆனால் அவனோ அதைக் கண்டு விழிகள் இரண்டும் கோபத்தில் கோவைப்பழமாய்ச் சிவக்க ஆக்ரோசம் கொண்டவனாய் அமர்ந்திருந்தான்...

அடுத்தக் கணம் சிறிதும் யோசிக்காது இந்திரஜித்தின் வலதுகரம் சம்யுக்தாவின் இடதுகரத்தை இறுக பற்றியிருந்தது... அதாவது அவளது கரத்தில் இருந்த ராதை ஓவியத்தின் கழுத்தை நெரிப்பது போலிருந்தது...

கண்ணன் மீதான ராதையின் மயக்கம் அவனுள் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தி இருந்தது... அந்தக் கண்ணனை போல் அவன் ஒன்றும் இந்த ராதையை ஆட்கொள்ளப் போவதில்லை... மாறாக அவளை ஆட்கொல்ல போகிறான்...!!!

தொடரும்...!!!

பரபரப்பாய் இருந்த திருமண மண்டபத்தில் 'அதற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை' என்பது போல் இந்திரஜித் எதையும் கண்டு கொள்ளாது உட்கார்ந்து இருந்தான்... முன்னால் இருந்த இருக்கையில் தாத்தா, பாட்டி, பூஜாவுடன் சேர்ந்து அவனும் அமர்ந்திருந்தான்... தன்னருகில் அமர முயன்ற பூஜாவை நாசுக்காய் தவிர்த்தவன் தனது தாத்தாவின் அருகில் வந்தமர்ந்து கொண்டான்...

சித்தார்த் அதற்கும் மகனை முறைத்துக் கொண்டிருந்தான்... கொஞ்சமும் பொறுப்பு இல்லாது இவன் இப்படி அமர்ந்திருக்கிறானே என்று அவனுக்கு எரிச்சலாக இருந்தது... அதை விடச் சம்யுக்தாவிடம் மகன் ஏதோ வம்பிழுத்து இருக்கிறான் என்று தெரிந்ததில் இருந்து அவனது கோபம் எல்லையைக் கடந்து கொண்டிருந்தது...

சித்தார்த்தை போன்று மற்றவர்கள் யாரும் அவனை அப்படித் தவறாக எண்ணவில்லை... இந்த மட்டும் அவன் திருமணத்திற்கு வந்ததே சந்தோசம் என்றே நினைத்திருந்தனர்... பிரகதீஸ்வரியும் அப்படியே தான் நினைத்தாள்... அத்தனை பாசம் வைத்திருக்கும் சகோதரி திருமணத்திற்குக் கூட வராத இந்திரஜித் இந்தத் திருமணத்திற்கு வந்திருப்பது அவளுள் பெரும் யோசனையை உண்டு பண்ணிய போதும்... மகன் வந்ததே அவளுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது... அதைத் தாண்டி அவள் வேறு எதைப் பற்றியும் யோசிக்கவில்லை...

"பூஜா... சஞ்சய் உனக்கு அண்ணா... காவ்யாவை நீ பெண்ணழைத்து வந்திருக்க வேண்டியது... ஆனால் நீ இதைச் செய்ய விரும்பவில்லை..." மனத்தாங்கலுடன் பிரபாவதி பேத்தியிடம் குறைப்பட்டுக் கொண்டார்...

"போங்க பாட்டி... நான் பட்டு சேலை கட்டுறதே பெரிசு... இதைக் கட்டிட்டு என்னால் வேகமா நடக்க முடியாது...

புடவை கால் தட்டி எல்லோர் முன்னும் நான் கீழே விழுந்து விட்டால் ரொம்ப அவமானமா போயிரும்..." என்று அவள் முகத்தைச் சுளித்தாள்...

"நல்லவேளை சம்யு இருந்ததால் பிழைத்தோம்..." பிரபாவதி நிம்மதியுடன் கூற...

பாட்டியின் குரலில் தனது சிந்தனை கலைந்த இந்திரஜித் வேகமாய் மேடையை நோக்கி தனது பார்வையைச் செலுத்தினான்... மணப்பெண் காவ்யாவின் கையைப் பிடித்துக் கொண்டு மென்னகையுடன், அன்னம் போல் நடந்து வந்து கொண்டிருந்த சம்யுக்தாவை கண்டதும் அவனது விழிகள் இரண்டும் அவளிடம் நிலைக்குத்தி நின்றது...

மணப்பெண் காவ்யாவா? இல்லை சம்யுக்தாவா? என்று பிரித்தறிய முடியாதபடி சம்யுக்தா அதீத அழகுடன் தேவதையாய் ஒளிர்ந்தாள்... அடர் பச்சை நிற பட்டு உடுத்தி, வைர நகைகள் அணிந்து, அழகு நிலைய பெண்களின் கை வண்ணத்தில் அவள் அழகுற மிளிர்ந்தாள்... வேலைக்காரி என்று அவனால் வசைபாடப்பட்டவள் இப்போது உரிமையுள்ள வீட்டுக்காரியாய் அவனது விழிகளுக்குத் தெரிந்தாள் போலும்... அவனது இமைக்காத பார்வை அதை உறுதி செய்தது...

அன்று அவன் அவளது கையைப் பிடித்து வலிக்க வலிக்க முறுக்கியதற்குப் பிறகு இன்று தான் அவளைப் பார்க்கிறான்... இடைப்பட்ட இந்த இரு நாட்களில் அவன் அவளை நேரில் காணவில்லை...

அன்று அவளது கையிலிருந்த ராதை ஓவியம் அவனுக்கு உணர்த்திய செய்தியை சகித்துக் கொள்ள முடியாது அவன் கோபமாய் அவளது கையைப் பிடித்து முறுக்கி விட்டான்...

"பாவா... நா செய் நொப்பி எத்தினி..." (பாவா, என்னுடைய கை வலிக்கிறது) என்று கண்ணீர் மல்க சற்றும் குரலை உயர்த்தாது கெஞ்சிய அவளது குரலில் நிதானத்துக்கு

வந்தவன் அவளது கையை விட்டு விட்டு உண்ணாது எழுந்து விட்டான்...

"பாவா... தயசேசி போஜனம் சேஸுகோன்டி..." (பாவா, தயவுசெய்து சாப்பிடுங்க) அந்த வலியிலும் அவன் உணவு உண்ணாது எழுந்தது அவளுக்குக் கவலையாக இருந்தது போலும்... அது அவளது குரலில் அப்படியே பிரதிபலித்தது...

அவன் ஒன்றும் சொல்லாது தனது அறைக்கு வேகமாய்ச் சென்றுவிட்டான்... எப்போதும் போல் அவனது கோபத்தின் காரணம் புரியாது நின்றவளின் கை வலித்து அவளுக்கு நிகழ்காலத்தை உணர்த்தியது... எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு அறைக்கு வந்தவளுக்குக் கை வலி உயிர் போகும் போலிருந்தது... இந்த நேரத்தில் யாரை எழுப்புவது என்று தெரியாது அமைதியாகக் கண்ணீர் வடித்தபடி வலியை தாங்கி கொண்டு படுத்திருந்தாள்...

சிறிது நேரத்தில் அவளது அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்தவள் கதவை போய்த் திறந்தாள்... அங்கு இந்திரஜித்தை கண்டதும் அந்த வலியிலும் அவளது முகம் மலர தான் செய்தது...

"எதுவும் வேணுமா பாவா...?" என்று கேட்டவளை கண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பின் அந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கி கொண்டு ஒன்றும் பேசாது அவளது இடது கையைப் பிடித்து இழுத்தான்...

"ஷ்... ஆ..." என்று அவள் வலியில் முனங்க... அவளது கையை ஆராய்ந்தவன் அதன் வீக்கத்தைக் கண்டு ஒரு நொடி அமைதியாக நின்றான்... பின்பு,

"வா..." என்றபடி அவன் முன்னால் நடக்க...

என்ன, ஏது என்று கூடக் கேட்க தோன்றாது அவள் அவன் பின்னே நாய்க்குட்டி போல் ஓடினாள்... அவனின் வேகநடைக்கு ஈடு கொடுக்க அவளால் முடியவில்லை...

வாயிலுக்கு வந்தவன் தனது கார் கதவை திறந்து, "ஏறு..." என்க... அதற்கும் எதிர்கேள்வி கேட்காது அவள் காரில்

ஏறியமர்ந்தாள்...

அடுத்த அரைமணி நேரத்தில் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவளது கையைக் காட்டி வீக்கத்திற்கு மருந்து போட்டு, வலி தெரியாதிருக்க ஊசி போட செய்த பின்னரே அவன் அவளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தான்... வீட்டிலேயே ஒரு மருத்துவர் இருந்தும் அவளுக்குத் தெரியாது இதைச் செய்தான் அந்தக் கள்வன்...

காரில் இருந்து இறங்கிய சம்யுக்தா அவனது வரவினை எதிர்பார்த்து வரந்தாவில் நின்றிருந்தாள்... காரை நிறுத்தி விட்டு அங்கு வந்தவன் அவளிடம்,

"இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் என் கண் முன்னாடி வந்து விடாதே..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பிவிட்டு அவன் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

மறுநாள் ஊரில் இருந்து வந்திருங்கிய தந்தை சம்யுக்தாவின் கை வீக்கத்தைக் கண்டு தன்னை முறைத்து பார்த்ததை அவன் இன்னும் மறக்கவில்லை...

"ஊரில் என்ன நடந்தாலும் எல்லாத்துக்கும் நான் தான் காரணம்ன்னு சொல்வீங்க போலிருக்கு..." அவன் நக்கல் குரலில் உரைத்தபடி தந்தையைக் கடந்து சென்றான்...

தாங்க மாட்டாது சித்தார்த் சம்யுக்தாவிடம் நேரடியாகக் கேட்டு விட்டான்...

"கீழே விழுந்துட்டேன் மாமாகாரு... அதில் கை எசகுபிசகா சுளுக்கிருச்சு..." என்று மட்டுமே அவள் கூறினாள்...

வீட்டில் இருந்தவர்கள் அனைவரிடமும் அவள் அதையே கூறினாள்... அவள் கூறியதை எல்லோரும் நம்பினாலும் சித்தார்த்தால் அதை முழுவதுமாய் நம்ப முடியவில்லை... அவனது சந்தேகப் பார்வை மகனை துளைத்தெடுத்தது... வழக்கம் போல் மகன் அதைத் தூசு போல் தட்டி விட்டுச்

சென்றான்... சம்யுக்தா அவன் பக்கம் இருக்கும் தைரியம் அவனை அப்படி நடந்து கொள்ளச் செய்தது...

"அது யாரு, கண்ணன் பக்கத்தில் நிற்பது...? அவன் பொஞ்சாதியா...?" என்ற குரலில் தன்னுணர்வு பெற்ற இந்திரஜித் திரும்பி பார்த்தான்... பிரபாவதி பின்னே இருந்த வயதான பெண்மணி ஒருத்தி பிரபாவதியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்...

"கண்ணனுக்கு இன்னும் கல்யாணமாகலைக்கா... அவள் என் பேத்தியோட நாத்தனார்... பேரு சம்யுக்தா..."

"பொண்ணு ரொம்ப அழகாயிருக்கா... கண்ணனுக்கு ஏத்த ராதை மாதிரி இரண்டு பேருக்கும் அத்தனை பொருத்தம்... பேசாம இந்தப் பெண்ணையே அவனுக்குப் பேசி முடிச்சிருங்க..."

"ஆண்டவன் ப்ராப்தம் அது தான் என்றால் நாம் என்ன தடையா சொல்ல முடியும்..." புன்னகையுடன் பிரபாவதி கூற...

அதைக் கேட்டு இந்திரஜித் மனம் உலைக்களமாய்க் கொதிக்க ஆரம்பித்தது... அவன் உர்ரென்று கோபமாய் மணமேடையை முறைத்துப் பார்த்தான்... சஞ்சய்க்கு முறை செய்வதற்காகப் பெண்ணின் அண்ணனாய் கண்ணன் நின்றிருக்க, அவனது அருகில் காவ்யாவிற்கு முறை செய்வதற்காக அவளின் நாத்தனார் முறையில் சம்யுக்தா நின்றிருந்தாள்... உண்மையில் அந்தப் பெண்மணி கூறியது போல் இருவருக்கும் ஜோடி பொருத்தம் அபாரமாய் இருந்தது... கண்ணனின் காவல்துறைக்கேற்ற முறுக்கேறிய உடலும், சம்யுக்தாவின் மெல்லிய கொடி போன்ற மேனியும் பார்ப்பதற்குக் கொழுக்கொம்பும் அதன் மீது படரும் கொடியினையும் ஞாபகப்படுத்தியது...

அப்போது கண்ணன் சம்யுக்தாவிடம் ஏதோ கூற... அவள் புரியாது விழித்தாள்... மீண்டும் அவன் ஏதோ கூறவும் அவள் தனது நெற்றி சுட்டியை சரி செய்து கொண்டு 'சரியா?' என்பது போல் கண்ணனை பார்த்து கேட்க...

கண்ணனோ இல்லை என்பது போல் தலையசைத்தவன் பிறகு வேறுவழியின்றி அவனே அதைச் சரியாக வைத்து விட்டான்... கண்ணிமைக்கும் நேரத்தில் அதைச் சரி செய்துவிட்டு அவன் தனது கையை உடனே விலக்கி கொண்டான்... நிறையப் பேர் அதைக் கவனித்துப் பார்த்திருக்க மாட்டார்கள்...

ஆனால் கவனிக்க வேண்டியவனோ அதை முழுவதும் கவனித்து விட்டான் என்பது அவனது சிவந்த விழிகளில் இருந்து தெரிந்தது...

அந்த நேரம் பிரசன்னா தனது பெற்றோரை அழைத்து வந்து முன் வரிசையில் அமர வைத்தான்... பிரசன்னா மட்டும் அங்கு வந்து அமர்ந்திருந்தால் இந்திரஜித் ஏகத்திற்கும் எகிறியிருப்பான்...

"வேலைக்காரன் பின்னே போய் உட்கார்..." என்று...

ஆனால் பிரசன்னாவின் பெற்றோரிடம் கோபத்தினைக் காட்ட முடியாதபடி அவன் பல்லை கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்... பிரசன்னா மேடையில் இருந்த சம்யுக்தாவை சுட்டிக்காட்டி தனது பெற்றோரிடம் ஏதோ கூற அதைக் கண்டு இந்திரஜித்தின் உள்ளம் இன்னமும் அதிகமாய் எரிந்தது...

'இந்த மண்டபத்தில் அவள் ஒருத்தி தான் பொண்ணாடா... உங்க ரெண்டு பேர் கண்களுக்கும் வேறு எவளுமே தெரியலையா...?' என்று கத்த வேண்டும் போலிருந்த உணர்வை சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அடக்கி கொண்டான்...

பிரசன்னாவின் பெற்றோர் சந்தோசமாய் அவனிடம் பதிலுக்கு ஏதோ கூற இங்கு இந்திரஜித்தின் மனம் திக்திகென்று அடித்துக் கொண்டது...

"இந்தர் வாப்பா... தாலி கட்ட போறாங்க..." பிரகதீஸ்வரி மகனை அழைத்தாள்...

இது தான் சாக்கு என்று அவன் மணமேடையை நோக்கி விரைந்து சென்றான்... அவனுக்கே தெரியவில்லை அவனது இந்த வேகம், கோபம் எல்லாம் எதனால் என்று... நேரே சம்யுக்தா இருந்த மணமேடையை நோக்கி அவன் சென்றான்... அந்நேரம் சந்தோஷ், சாத்விகா அவனது கண்களுக்குத் தெரியவில்லை... சஞ்சய், காவ்யா இருவரும் அமர்ந்திருந்த மேடைக்குப் பின்புறமாய்ச் சென்றவன் இயல்பு போல் சம்யுக்தா அருகில் போய் நின்றான்... அங்கு அவனை எதிர்பாராத விதமாய்க் கண்டதும் அவள் விழியகல அவனைப் பார்த்தாள்...

"பாவா..." அவள் சத்தம் வராது முணுமுணுத்த வார்த்தை அவனது காதுகளை மட்டும் சரியாகச் சென்றடைந்தது...

பட்டு வேட்டி, சட்டையில் மணமகன் போன்று கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளது உள்ளத்தினை மயக்கியது... அவன் ஆணழகன் தான்... அதை மறுப்பதற்கில்லை... அவள் என்றுமே அவனது அழகினை கண்டு மயங்கியது கிடையாது... அவனது அன்பிற்குத் தான் அவள் மயங்கினாள்... ஆனால் இன்று அவன் மீதிருந்த தனது விழிகளை இங்கும் அங்கும் திருப்ப முடியாது அவள் அவனை இமைக்காது பார்த்திருந்தாள்... அந்தளவிற்கு அவனது அழகு அவளை வசீகரித்தது...

விழியகல தன்னை இமைக்காது பார்த்து கொண்டிருந்தவளின் பார்வையில், அதில் தெரிந்த ரசிப்புத் தன்மையில் அவனது மன வெம்மை சற்றுத் தணிந்தது... அவளது காதலில் அவனுள் பழைய கர்வம் துளிர்விட அவளை அலட்சியம் போல் பார்த்து வைத்தான்... அவனது அலட்சியத்தை வழக்கம் போல் காதலாய் புறம் தள்ளினாள் சம்யுக்தா...

"கெட்டிமேளம்... கெட்டிமேளம்..."

அய்யரின் உரத்த குரலில் இருவரும் திருமண நிகழ்வை கவனித்தனர்... சஞ்சய் தனது காதலி காவ்யா கழுத்தில் காதலோடு மங்கல நாணை பூட்டினான்... காவ்யாவும் விழிகளில் காதல் வழிய, முகம் மலர காதலன் கையால்

தாலியை ஏற்றுக் கொண்டாள்... அவர்களது திருமணம் எந்தவித தடங்கலும் இல்லாது இனிதே நடந்து முடிந்தது...

மஞ்சள் கயிற்றின் மூன்றாவது முடிச்சினை போட குனிந்த சம்யுக்தாவின் விழிகள் தன்னவனைத் திரும்பி பார்த்தது... அவனும் கைகளைக் கட்டி கொண்டு அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் விழி பேசிய மொழி அவனுக்குப் புரியவில்லை... அதே போல் அவன் விழி பேசிய மொழி அவளுக்குப் புரியவில்லை... ஆனால் இரண்டின் அர்த்தமும் ஒன்று தான் என்பது அந்த அறிவாளிகளுக்கு அப்போது தெரியவில்லை...

சஞ்சய், காவ்யா திருமணம் முடிந்ததும் சந்தோஷ், சாத்விகா திருமணம் நடந்தது... எல்லோரின் கவனமும் அங்குச் சென்றது...

சந்தோஷ் உணர்ச்சி துடைத்த முகத்துடன் சாத்விகாவின் முகத்தினைக் கூட ஏறிட்டு பார்க்காது தாலியை கையில் ஏந்தி கொண்டு அவளது கழுத்தருகே கொண்டு சென்றான்... இந்த நொடி கூடத் திருமணத்தை நிறுத்தி விட்டு எங்கேயாவது ஓடி சென்றுவிட்டால் என்ன? என்று அவனுக்குத் தோன்றியது...

மனமும், முகமும் வேதனையில் கசங்க அவனையும் அறியாது அவனது விழிகள் அவளை ஏறிட்டுப் பார்த்தது... அடுத்த நொடி அவன் திகைத்துப் போனான்... தன்னை விட அதிகக் கலக்கத்தைச் சுமந்து கொண்டிருந்த அவளது முகத்தினைக் கண்டு அவன் தனது கலக்கத்தை நொடியில் விட்டொழித்தான்...

"ஹேய் அம்மு... வில்லனை பார்ப்பது போல் இது என்ன பார்வை...? நானும் கொஞ்சம் நல்லவன் தான்ம்மா..." என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படி அவன் கேலியாய் உரைக்க...

அவனது வார்த்தைகளில் அவளது இதழ்களில் புன்னகை அரும்பியது... இத்தனை நாள் அவனது கோப முகம் அவளை அலைக்கழித்தது என்னவோ உண்மை... அதனால் அவளுள் கலக்கம் எழுந்ததும் உண்மை... இதோ இந்த

நொடி அவனது புன்னகையில் அவளது மனம் அமைதி அடைந்தது... இதுவும் உண்மையே...

"இப்பவாவது தாலி கட்டலாமா...? இல்லை...?" என்று அவன் கூர்மையாய் அவளைப் பார்த்தான்...

"எங்கு வந்து என்ன கேட்கிறீங்க...?" என்று கோப குரலில் கூறியவளின் பதில் அவனுக்கான சம்மதத்தை அளித்தது போல் அவனுள் ஒரு தோற்றம்... அடுத்த நொடி தயங்காது அவளது கழுத்தில் மங்கலநாணை பூட்டினான்...

மூன்றாவது முடிச்சு போட வந்த பெரியப்பா மகளை ஒதுக்கி விட்டு அவனே மூன்று முடிச்சும் போட்டு விட்டான்... 'இந்தப் பந்தம் உறுதியானது, இறுதியானது' என்று அதன் மூலம் அவளுக்கு அவன் உணர்த்தினான்... அதை அவளும் உணர்ந்தாளோ என்னமோ அமைதியாக ஏற்றுக் கொண்டாள்... அதைக் கண்டு சந்தோஷின் புருவங்கள் ஆச்சிரியத்தில் உயர்ந்தது...

தனது தொடுகை, தனது குழந்தை என்று தான் சம்பந்தப்பட்டது அனைத்தையும் அருவருப்பு என்று கூறியவள் இப்போது அமைதியாக இருப்பதன் அர்த்தம் புரியாது வியப்பாய் மனைவியைப் பார்த்திருந்தான்... அந்நேரம் அர்ஜூன் தனது மகனை பார்த்திருந்தான்... இனி மகன் எல்லாவற்றையும் சரி செய்து விடுவான் என்கிற நம்பிக்கை அவனுள் எழுந்தது... ஒரே மகனின் திருமணத்தைப் பார்த்த சந்தோசம் சங்கமித்ரா முகத்தில் வழிந்தது...

மணமக்கள் நால்வரும் புகைப்படத்திற்காக ஒன்று சேர்ந்து நின்றனர்... அடுத்து உறவினர்கள் ஒவ்வொருவராக வருகை புரிந்தனர்... அதனால் சம்யுக்தா மேடையை விட்டு கீழிறங்கி சென்றாள்... அவளது வரவை உணர்ந்தவனாய் பிரசன்னா எங்கிருந்தோ அவளை நோக்கி ஓடி வந்தான்... அதைக் கண்டதும் இந்திரஜித்தின் கோபம் மீண்டும் அதிகரிக்கத் துவங்கியது...

"சம்யு... உனக்கு இந்தப் புடவை ரொம்ப அழகாயிருக்கு... அப்படியே தேவதை மாதிரியிருக்க..." பிரசன்னா கூறியதற்கு விகல்பம் இல்லாது புன்னகைத்த சம்யுக்தா,

"பிரசன்னா, இதுநாள் வரை நீங்க அப்படி எத்தனை தேவதையைப் பார்த்து இருக்கிறீங்களாம்...?"

வேறு எந்த ஆண்மகனாக இருந்தாலும் அவள் இப்படிப் பேசியிருக்க மாட்டாள்... ஆனால் பிரசன்னா சித்தார்த்தின் நம்பிக்கையைப் பெற்றவன், நல்லவன்... அந்த ஒரு காரணத்திற்காகவே அவள் அவனிடம் பேசினாள்... அது போல் தான் கண்ணன், சந்தோஷ் இருவரும்... அவர்களது வீட்டார்கள்... மிகவும் கண்ணியமானவர்கள்... ஆனால் அதற்கே இந்திரஜித் ஆத்திரம் கொண்டு கொதித்தான்...

"நான் தேவதையைப் பார்த்தது இல்லை... ஆனால் உன்னைப் பார்த்த பிறகு தேவதை இப்படித் தான் இருக்கும்ன்னு நினைக்கிறேன்..."

"பொய் சொல்லாதீங்க பிரசன்னா..." என்றவள் தனது விழிகளை இடமும் வலமுமாய் உருட்டி கொண்டு திருமண மண்டபத்தை ஒரு முறை வலம் வந்தவள்,

"அங்கே பாருங்க... எத்தனை பொண்ணுங்க என்னை விட அழகா இருக்காங்க... சும்மா பொய் சொல்ல கூடாது..."

"அது வந்து சம்யு..."

"வந்து போயி எல்லாம் இல்லை... நல்லா பார்த்துட்டு சொல்லுங்க..." என்று அவள் அவனைப் போலியாக மிரட்டி விட்டு செல்ல... அவளிடம் தனது மனதினை வெளிப்படுத்தும் வகையறியாது அவன் நின்றிருந்தான்...

அந்நேரம் தன்னை முறைத்தபடி அங்கு வந்து நின்ற இந்திரஜத்தை கண்டு பிரசன்னா திகைத்தவனாய் அடுத்த நொடி அங்கிருந்து அவசரமாய் வேலையிருப்பது போல் அகன்றுவிட்டான்...

'என்னைக்காவது என் கையில் மாட்டுவ இல்லை... அன்னைக்கு இருக்குடா உனக்கு...' மனதில் கறுவி கொண்ட இந்திரஜித் தனது தாத்தாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்...

உறவினர் கூட்டம் குறைந்ததும் வீட்டினர் அனைவரும் புகைப்படம் எடுக்கச் சென்றனர்... அப்போது சித்தார்த் அங்கு வேலை செய்து கொண்டிருந்த பிரசன்னாவை அழைத்து,

"நீயும் வா பிரசன்னா..." என்க...

அவன் புன்னகை முகத்துடன் அங்கு வந்து சேர்ந்தான்... வந்தவன் ஜெகதீஸ்வரி அருகில் நின்றிருந்த சம்யுக்தா அருகில் சென்று நிற்க... அவளும் இயல்பாய் அவனைத் திரும்பி பார்த்து புன்னகைத்தாள்... மறுபக்கம் பெற்றோருடன் நின்றிருந்த இந்திரஜித் இந்தக் காட்சியைக் கண்டு இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிற ஆத்திரத்துடன் பார்த்திருந்தான்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... இது தான் சாக்கென்று அலைப்பேசியைக் காதில் வைத்தபடி பின்னால் நகர்ந்தவன் மறுபக்கம் வந்து சம்யுக்தா அருகில் சென்று அவளது கையைப் பிடித்து இழுத்து தனது பக்கமாய் நிறுத்தி கொண்டு அவன் பிரசன்னா அருகில் நின்றான்... இப்போது பிரசன்னா அருகில் இந்திரஜித் நின்றிருக்க அவன் பக்கத்தில் சம்யுக்தா நின்றிருந்தாள்... பிரசன்னா திகைத்து போய் இந்திரஜித்தை பார்க்க, சம்யுக்தாவோ தன்னவனைக் காதலுடன் பார்த்தாள்...

அன்று அவனது கைப்பிடியில் வலித்த அவளது கரம் இன்று அவனது பிடியில் சுகமாய் இணைந்திருந்தது... இனிய அதிர்ச்சியுடன் முகம் மலர அவள் தன்னவனைப் பார்க்க, அவளது பார்வையை உணர்ந்து அவனும் அவளைத் திரும்பி பார்த்தான்... விழிகள் நான்கும் ஈர்ப்பு என்னும் ஆழ்கடலில் சங்கமித்த காட்சியைப் புகைப்படக் கருவி அழகாய் தன்னுள் சேமித்து வைத்துக் கொண்டது...

இதைக் கண்ட பிரசன்னா விழிகள் சுருங்க யோசனையாய்ப் பார்த்திருந்தான்... ஏதோ ஒன்று சரியில்லை என்று அவனது மனம் எச்சரித்தது... திருமணப் பரபரப்பில் சித்தார்த் இதைக் கவனிக்கத் தவறியிருந்தான்...

சந்தோஷ், சாத்விகா அவர்களது வீட்டிற்குச் செல்ல... சஞ்சய், காவ்யா சித்தார்த் வீட்டிற்கு வந்தார்கள்... வரவேற்பறையில் உறவினர்கள் கூடியிருக்கச் சம்யுக்தா மட்டும் ஆதித்யாவை உறங்க வைப்பதற்காகத் தனது அறைக்கு அவனைத் தூக்கி கொண்டு வந்திருந்தாள்... அவனை உறங்க வைத்து விட்டு புடவையை மாற்ற எண்ணி கதவை தாளிட போனவளை தள்ளி கொண்டு இந்திரஜித் உள்ளே நுழைந்தான்...

"பாவா..." அவள் முகம் மலர அவனைப் பார்க்க... அவனோ முகம் இறுக அவளைப் பார்த்தான்...

"இந்தப் புடவையைச் செலக்ட் பண்ணியவன் நான்... இதை உனக்கு வாங்கிக் கொடுத்தவன் நான்... ஆனால் இதைக் கட்டியவளை புகழ்வது மட்டும் அவனா...?"

அவன் கூறிய கடைசி வார்த்தைகள் அவளது காதில் விழவில்லை... முதலில் கூறிய அவனது வார்த்தைகளில் அவளது மனம் உழன்று மகிழ்ச்சி அடைந்தது...

"அவனுக்கும் உனக்கும் என்னடி சம்பந்தம்...? அவன் உன் காதலனா...? இல்லை உன் புருசனா...?"

உற்சாகமாய்க் காதல் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த அந்தப் பேதை பெண் அவனது அடுத்தடுத்த கேள்விகளில் தொப்பென்று கீழே விழுந்தாள்... அடி மிகவும் பலமாய் விழுந்தது அவளது மனதில்...

"பாவா... ஏமி மாட்லாடன்டி...?" (பாவா, என்ன பேசுறீங்க...?)

"நேனு நிஜம் மாட்லாடதம்..." (நான் உண்மை பேசுகிறேன்)

"இட்ட மாட்டேதி பாபம் காதா பாவா...?" (இப்படிப் பேசுவது பாவம் இல்லையா பாவா)

"எது பாவம்...? அவன் கூட நீ பல்லை காட்டி பேசிக்கிட்டு இருந்ததை நான் தப்புன்னு சொன்னது பாவமா...? அப்போ நானும் அவனைப் போல் பேசவா...? அது பாவம் இல்லை தானே... ஆனா எனக்கு அவனைப் போல் பேச வராது... செயல் தான் வரும்..." என்றவன் அடுத்த நொடி அவளைச் சிந்திக்க விடாது அருகில் இழுத்து ஆவேசமாய் அணைத்திருந்தான்...

சம்யுக்தாவோ மூளை மரத்து போனவளாய் அவனது அணைப்பில் அடங்கினாள்... அவனது இந்தத் தீடீர் செய்கையை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...

அவனோ அவளது மனநிலையைக் கருத்தில் கொள்ளாது ஒற்றைக் கையால் அவளது இடையை அணைத்து பிடித்தவன், மறுகையால் அவளது முகத்தை இறுக பற்றி அவளது முகம் முழுவதும் முத்தமிட்டான்... அவனது ஒவ்வொரு முத்தத்திலும் அப்படியொரு வெறி இருந்தது... அது அவளை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது என்கிற வெறியின் வெளிப்பாடா...? இல்லை அவளைக் காயப்படுத்தியே தீருவேன் என்கிற வெறியின் வெளிப்பாடா...? எது என்று தெரியாது...? ஆனால் அவனது செய்கையில் அத்தனை ஆவேசம் இருந்தது உண்மை...

முதலில் தன்னவன் இதழொற்றலில் உடல் விறைத்து நின்றவள் பின் மெல்ல மெல்ல அவனது கைகளில் பாகாய் உருகி குழைந்தாள்... அவளது மனதில் இருந்த காதலில் அவளது கரங்கள் தன்னையும் அறியாது மேலே உயர்ந்து அவனது கழுத்தில் பூமாலையாய் கோர்த்து அவனை இழுத்து தன்னுடன் புதைக்கச் சொல்லி தூண்டியது... சற்று முன் கண்ட திருமண நிகழ்வு, அதை ஒட்டி நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் அவளது மனதினை மிகவும் இளக்கி இருந்தது... அது அவன் பால் சாயச் சொல்லி துடித்தது...

அவளது இணக்க நிலையில் அவன் தனது கோபத்தினை மறந்தான்... அவளது தகுதியினை மறந்தான்... இவ்வளவு ஏன் அவன் தன்னையே மறந்தான்... எல்லாவற்றையும் மறந்தவன் நினைவில் நின்றது எல்லாம் அவள் மட்டுமே... ஆணாய் உணர்வுகளின் கொந்தளிப்பில் இருந்தவன் சற்றும் தாமதிக்காது அவளது இதழோடு இதழ் பொருத்தினான்... அவளது இதழ் கொடுத்த குளுமையில் அவனது மனதின் வெம்மை மெல்ல குறையலானது...

பூவுக்குள் பூகம்பம் ஏற்பட்டால் எப்படி அதிருமோ... அப்படியொரு அதிர்வினை அவனது இதழ் யுத்தத்தில் அவள் தனக்குள் உணர்ந்தாள்... ஆனால் அது இனிமையான அதிர்வாய் இருந்தது தான் அதிசயம்... அவனது செய்கைக்கு ஒத்துழைத்தபடி நின்றிருந்தவளின் நிலையே சொல்லியது அவள் அவனிடத்தில் மொத்தமாய்ச் சரணாகதி அடைந்த ரகசியத்தை...

அந்த நேரம் அவன் அவளைத் தன்வசப்படுத்தி இருந்தால் கூட அவள் கண்ணை மூடி கொண்டு அதற்கும் சம்மதித்து இருந்திருப்பாள்... அந்தளவிற்குப் பாவையவள் அவனது கைப்பாவையாக மாறி போயிருந்தாள்... அவளது காத்திருந்த காதல் அவனுடன் ஓருயிராய் கலந்துவிடவே துடித்தது...

"த்தை..." என்று ஆதித்யா தூக்கத்தில் சிணுங்கியதில் பெண்ணவளின் தாய்மை விழித்துக் கொண்டது...

அவனிடம் இருந்து வலுக்கட்டாயமாய்த் தனது இதழை பிரித்தெடுத்தவள், "பாவா... ஆதி..." என்று முனங்க...

மேலே அவளைப் பேச செய்யாது அவன் மீண்டும் அவளது இதழ்களை முரட்டுத்தனமாய்ச் சிறை செய்தான்... அவனது செயலில் திகைத்து விழித்தவள் அடுத்த நொடி வாஞ்சையுடன் அவனது கன்னத்தை வருடி, விழிகளால் அவனிடத்தில் இறைஞ்சினாள்... அவளது இதழில் புதைந்திருந்த அந்த மோக நிலையிலும் அவன் அவளது இறைஞ்சுதலுக்கு மதிப்பு கொடுத்து அவளிடம் இருந்து விலகினான்...

மறுநொடி அவள் சிட்டாக ஆதித்யாவிடம் ஓடினாள்...

"நேனு இக்கட உண்டேனு ஆதி பங்காரம்..." (நான் இங்கே இருக்கேன், ஆதி பங்காரம்) என்று மெல்லிய குரலில் கூறியபடி அவள் சின்னவனைத் தூக்கி தனது மடியில் போட்டு தட்டி கொடுக்க அதில் அத்தையை உணர்ந்த சின்னவன் சுகமாய் உறங்கி போனான்...

தான் கொடுத்த முத்தத்தில் முகம் எல்லாம் சிவக்க, முகத்தில் மலர்ந்து ரகசிய புன்னகையுடன் அழகுற அமர்ந்திருந்த சம்யுக்தாவை கண்ட இந்திரஜித் செய்வதறியாது தனது தலையைக் கோதி கொண்டான்... அவனா அவளிடத்தில் அப்படி நடந்து கொண்டது...? அவனுக்கே சற்று அதிர்ச்சியாக இருந்தது...

'பிடிக்காது, பிடிக்காது என்று கூறிக் கொண்டே அவளிடம் இப்படி நடக்க உனக்கு வெட்கமாக இல்லை...' அவனது மனசாட்சி அவனைக் காறி துப்பியது...

'இல்லை... இல்லை... இப்போதும் அவளை எனக்குப் பிடிக்காது தான்...' என்று அவன் மனதிற்குள் அலறினான்...

'நீ கொடுத்த முத்தத்தைப் பார்த்தால் பிடிக்காதவன் கொடுத்த முத்தம் போல் தெரியவில்லையே...' மீண்டும் அவனது மனசாட்சி அவனைக் கேலி செய்தது...

'அவளைக் காயப்படுத்தவே அப்படிச் செய்தேன்...' மனசாட்சியிடம் கூறுவது போல் தனக்குத் தானே கூறி சமாதானப்படுத்திக் கொண்டானோ...

பின்பு மனதில் முடிவெடுத்தவனாய் விறுவிறுவென அவள் முன் வந்து நின்றான்... அவனது வருகையை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தவளின் முகத்தில் நாணத்தின் சாயல் அப்பட்டமாய்த் தெரிந்தது... அதைக் கண்டு அவனுள் திகுதிகுவென ஏதோ ஒன்று பற்றியெரிந்தது... அவளது வெட்கம் அவனுள் வெறுப்பை விதைத்தது...

"ஏய்..." என்று அவன் சொடக்கு போட்டு அவளை அழைத்தான்...

அவனது 'யுகிம்மா' என்கிற அழைப்பிற்கு அவள் ஆசையாகக் காத்திருக்க... அவனது இந்த அலட்சிய அழைப்பு கண்டு அவளது உள்ளம் போல் முகமும் சுருங்கி போனது... அதைக் கண்டு அவனது மனதில் ஒருவித திருப்தி ஏற்பட்டது...

"இது மாதிரி அவனும் உன்னைக் கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுப்பான்... அதுக்கும் நீ இது போல் பல்லை காட்டிட்டு இழைஞ்சிக்கிட்டு இரு... உனக்கே இது வெட்கமா இல்லை..." ஆதித்யா எழாதவாறு மெல்லிய குரலில் கடுமையாய் கூறியவனை அவள் வெறித்துப் பார்த்தாள்...

மனங்கவர்ந்தவனுக்கும், மாற்றானுக்கும் வித்தியாசம் அறியாதவளா அவள்...? அவள் மனதிற்குள் துக்கம் பொங்க அவனைப் பார்த்தாள்... அவளின் மனதின் துயரத்தை அவளது கரை கட்டிய விழிகள் அப்படியே பிரதிபலித்தது...

அவளைக் காயப்படுத்தி வருந்த செய்து தனது காயத்திற்கு மருந்திட்டு கொண்டவன் பின்பு திருப்தியுற்றவனாய் புயல் போல் அங்கிருந்து வெளியேறி விட்டான்... வழக்கம் போல் அவனது கோபத்திற்கான காரணம் தெரியாது அவள் விழித்தாள்...

******************

அன்று மாலை திருமண வரவேற்பு நிகழ்ச்சி பிரமாண்டமாய் நடைப்பெற்றது... சித்தார்த்தின் குடும்பம் போல் அர்ஜூனின் குடும்பமும் தொழிலில் பிரசித்தி பெற்ற குடும்பம்... ஆதலால் அங்கு ஆடம்பரத்திற்குக் குறைவே இல்லை... மணமகன்களை விட அழகாய் அமர்ந்திருந்த இந்திரஜித்தின் மனம் ஒரு நிலையில் இல்லாது எங்கெங்கோ அலைபாய்ந்து கொண்டிருந்தது... மதியம் சம்யுக்தாவை முத்தமிட்டதில் இருந்து அலைபாய்ந்த அவனது மனது இந்தக் கணம் வரை தனது அலைப்புறுதலை சற்றும் நிறுத்தவில்லை...

வரவேற்பு நிகழ்ச்சியில் மணமக்கள் முதல் நண்பர்கள் வரை ஆளாளுக்கு மேடையேறி பாட்டுப் பாடினார்கள்...

ஜெகதீஸ்வரி தனது காதல் கணவனைப் பார்த்து காதலோடு,

"எதுவோ என்னை உன்னிடம் ஈர்த்தது
அது தான் உன்னை என்னிடம் சேர்த்தது
தொலைந்தது நானா கிடைத்திடுவேனா
கிடைத்திடும் போது தொலைந்திடுவேனா"

என்று பாட... எப்போதும் போல் அவளது காதல் சூர்யாவை பிரமிக்க வைத்தது... அவனும் பதிலுக்கு அவளை நேசத்தோடு பார்த்திருந்தான்... இளவரசி சாமானியன் மீது காதல் கொண்ட கதை தான் அவர்களது காதல் கதை... திருமணமாகி இத்தனை வருடங்களில் அவர்களது காதல் சிறிதும் குறையவில்லை... மாறாக அது இன்னமும் பெருகி கொண்டே தான் போனது...

கணவனது பார்வையில் பாவையவள் நாணினாள்... அதைச் சித்தார்த், பிரகதீஸ்வரி மனம் நிறைந்து பார்த்திருந்தனர்... அதே நேரம் அவர்கள் தங்களது மகனை கவனிக்க மறந்து போயினர்... அடுத்து ஜெகதீஸ்வரி தம்பியை பாட அழைத்தாள்... முடியாது என்று மறுத்த இந்திரஜித்தை நண்பர்கள் குழாம் வற்புறுத்தி மேடையேற்றி விட்டது... ஏனெனில் எல்லோரும் ஒன்று போல் பாட்டு கற்றுக் கொண்டவர்கள் அல்லவா...

இந்திரஜித் சந்தோசமாய்ப் பாட்டுப் பாடுவான் என்று எல்லோரும் எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்க... அவனோ தனது மனதின் ஒட்டுமொத்த சோகத்தினையும் தனது பாடலில் வெளிப்படுத்தினான்...

"தீர்த்த கரையினிலே தெற்கு மூலையில் செண்பக தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் வெண்ணிலாவிலே
பாங்கியோடென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய் அடி கண்ணம்மா மார்பு துடிக்குதடி
பார்த்த இடத்தில் எல்லாம் உன்னைப் போலவே பாவை தெரியுதடி ஆஆ
பாவை தெரியுதடி

மேனி கொதிக்குதடி தலை சுற்றியே வேதனை செய்குதடி
வானில் இடத்தையெல்லாம் இந்த வெண்ணிலா வந்து தழுவுது பார்
மோனத்திருக்குதடி இந்த வையகம் மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர் நரகத் துழலுவதோ
நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர் நரகத் துழலுவதோ"

இந்திரஜித் பாடிய பாடலின் அர்த்தம் சம்யுக்தாவிற்குப் புரியவில்லை... ஏனெனில் அவளுக்குப் பேச்சு வழக்குத் தமிழ் மட்டுமே தெரியும்... ஆனால் தன்னவனின் முகத்திலிருந்த வேதனையை அவளால் உணர முடிந்தது... அவனது வேதனையைத் தனது வேதனையாய் எண்ணியவளின் விழிகளில் விழிநீர் பெருகி வழிந்தோடியது...

இந்திரஜித்தின் துயரத்திற்கான காரணம் சம்யுக்தாவிற்குத் தெரிய வரும் போது அவளது காதல் இது போல் முற்றும் துறந்து அவன் பாதம் சரணடையுமோ...??? இல்லை அவனைத் துறந்து விலகி செல்லுமோ...???

தொடரும்...!!!

இந்திரஜித் பாடிய பாடலின் அர்த்தம் புரிந்த சித்தார்த் கோபத்தில் பல்லை கடித்தான்... மகன் இந்தளவிற்குத் துயரம் கொள்ளும்படி ஒன்றுமே நடக்கவில்லை... அதற்கு ஏன் இவன் இப்படித் துக்கம் அனுஷ்டிக்கிறான்...? என்று அவனுக்கு எரிச்சலாக இருந்தது... எதையும் ஆராய்ந்து பார்க்காது சிறு பிள்ளை போன்று அடம்பிடிக்கும் மகனை கண்டு அவனுக்குக் கோபமும் வந்தது... அதே சமயம் பாவமாகவும் இருந்தது... அதற்காக மகனது முட்டாள் தனத்தை ஆதரிக்கவும் அவனால் முடியவில்லை...

'முட்டாள், எந்த இடத்தில் என்ன பாட்டுப் பாடுகிறோம் என்று அறிவில்லை...? இனி எல்லோரும் கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்லி மீள முடியாது...' என்று மனதில் மகனை வைதபடி நின்று கொண்டிருந்த சித்தார்த்தின் கைகளைப் பிரகதீஸ்வரி இறுக பற்றிக் கொண்டாள்...

அப்போது தான் அவன் திரும்பி மனைவியின் முகத்தைப் பார்த்தான்... அவளது கலக்கம் சுமந்த முகம் அவனிடம் ஓராயிரம் கதைகள் பேசியது... வாழ்க்கையில் அவளை அதிகம் கலங்க செய்தவன் அவன் தான்... அந்த வாழ்க்கையை நேராக்கி அவளை அதிகமாய்ச் சந்தோசப்படுத்தியவனும் அவன் தான்... இதோ போன நொடி வரை அவன் அவளை மகிழ்ச்சியாகத் தான் வைத்திருந்தான்... அதை எல்லாம் அவர்களது அருமை மகன் ஒரு பாடலில் குலைத்து விட்டானே...

"மாமூ..."

தான் இருக்கும் சூழ்நிலையை மறந்து, தன்னை மறந்து மனைவி அழைத்த அழைப்பில் அவனது மனம் என்றும் போல் இன்றும் மயங்கியது... ஆனால் அவளது கலக்கம் அந்த மயக்கத்தினைத் தடுத்தது...

"ப்ச் ரதிம்மா... அவன் நம் மகன்... உன்னுடைய இந்தக் கலக்கத்திற்கு அவசியமே இல்லை... உன் மாமூ நான் இருக்கும் போது நீ இப்படிக் கலங்கலாமா...? எதுவாக

இருந்தாலும் நாம் வீட்டில் போய்ப் பேசி கொள்ளலாம்... இங்கு வேண்டாம்... என்ன சரியா...?" என்று சிறு பிள்ளைக்கு எடுத்து கூறுவது போல் அவன் கூறினான்...

அதில் முகம் தெளிந்தவள் அவனைப் பார்த்து, "அதானே... என் மாமூ இருக்கும் போது எனக்கென்ன பயம்..." என்று புன்னகைத்தவளை கண்டு அவன் நிம்மதியடைந்தான்...

தனது மனதின் துயரத்தை பாடலில் கரைத்த இந்திரஜித் பாடி முடித்து விட்டு எல்லோரையும் பார்த்தான்... மணமக்கள் முதற்கொண்டு எல்லோரும் தன்னைத் திகைத்துப் போய்ப் பார்த்திருப்பதைக் கண்டு அவன் துணுக்குற்றான்... அந்தக் கணம் அவனது விழிகள் அவனையும் அறியாது சம்யுக்தாவை நோக்கியது...

விழிகளில் பெருகிய விழிநீருடன் அவள் நின்றிருந்த தோற்றம் அவனது மனதினை போட்டுப் பிசைந்தது... இது மாதிரியான ஒரு தோற்றத்தினை அவன் இதற்கு முன் அவளிடத்தில் கண்டிருக்கிறான்... அன்றும் அவளது கண்ணீர் அவனது மனதினை தொட்டது... இன்றும் அவளது கண்ணீர் அவனது கல் மனதினை கரைத்தது...

கண்மூடி மனதினை சமன்படுத்திக் கொண்டவன் பின் விழி திறந்து தொண்டையைச் செருமி கொண்டு, "ஏன் எல்லோரும் இப்படித் திகைச்சுப் போய்ப் பார்க்கிறீங்க...? எனக்குப் பாரதியார் பாடலில் மிகவும் பிடித்த பாடல் இது... அதனால் தான் பாடினேன்... உங்க எல்லோரையும் இந்தளவுக்குச் சோகப்படுத்தும் என்று தெரிந்திருந்தால் இந்தப் பாடலை நான் பாடியிருக்கவே மாட்டேன்... உங்கள் எல்லோருக்காகவும் இப்போது ஒரு அழகான காதல் பாடல் பாடுகின்றேன்... இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று நம்புகிறேன்..." என்று கூறிய மகனை கண்டு சித்தார்த் நிம்மதி அடைந்தான்... பிரகதீஸ்வரி முகத்தில் அப்போது தான் நிம்மதி புன்னகை மீண்டது...

சம்யுக்தாவோ விழிநீரை துடைக்கக் கூடத் தோன்றாது தன்னவனைப் பார்த்து கொண்டிருந்தாள்... அவன் தன் துயரில் இருந்து எளிதில் வெளிவந்து விட்டான்... ஆனால்

அவளால் அது போல் எளிதில் வெளிவர முடியவில்லை... அவனது வேதனை அவளை ஏதோ செய்தது...

விழி வழியே வலி கசிய தன்னைப் பார்த்தவளை இமைக்காது நோக்கியபடி இந்திரஜித் மீண்டும் பாட ஆரம்பித்தான்...

"ஆழியிலே முக்குளிக்கும் அழகே
ஆவியிலே தத்தளிக்கும் அழகே
உன் குழலோடு விளையாடும் காற்றாக உருமாறி
முந்தானை படியேறவா மூச்சோடு குடியேறவா
உன் இடையோடு நடமாடும் உடையாக
நான் மாறி எந்நாளும் சூடேறவா
என் ஜென்மம் ஈடேறவா..."

மதியம் சம்யுக்தாவிற்குப் பதித்த இதழொற்றலின் குளுமையையும், அதனால் விளைந்த வெம்மையின் விளைவையும் இதோ இப்போது கூட அவனால் உணர முடிந்தது... அவளிடம் எல்லையில்லா கோபம் கொள்ளும் அவன் தான் அவள் மீது எல்லையில்லா தாபம் கொண்டும் தவிக்கின்றான்... ஏன் இந்த முரண்பாடு அவனுக்கே அது தெரியவில்லை...

அவன் மனதில் இருந்த ரணம் அவள் மீது கோபம் கொள்ளச் செய்கிறது... அது முற்றிலும் உண்மையே... ஆனால் இந்தத் தாபம்...? இதற்கான காரணம் தான் என்ன...? மிகவும் குழப்பமான மனநிலையில் அவன் இருந்தான்... உரிமையுள்ள இடத்தில் தான் கோபமும் வரும், தாபமும் வரும்... அந்த உரிமையை அவன் அறிவு உணர்ந்த போதும், மனம் உணர மறுக்கிறது, ஏற்றுக் கொள்ள மறுக்கிறது...

ஆணாய் அவனது உணர்வுகளை உயிர்ப்பிக்க அவளால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்த போதாவது அவன் அறிந்திருக்க வேண்டும்... அவள் தனக்கு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவள் என்று...

இப்போதும் இந்திரஜித் பாடிய பாடலுக்கான அர்த்தம் சம்யுக்தாவிற்கு விளங்கவில்லை தான்... ஆனால் அவன் கண்களில் இருந்து வழிந்த ஏதோ ஒரு உணர்வு அவளை ஆறுதல்படுத்தி அவளது கண்ணீரை வற்ற செய்தது... விழிகளைத் துடைத்து கொண்டவளின் முகத்தில் புன்னகை மீண்டது... அவனது குரலில் இருந்த குழைவு, மென்மை அவளை ஏதோ ஒரு புதிய உணர்வில் சிக்கி தவிக்க வைத்தது... அவன் தனது காதருகில் ரகசிய குரலில் பாடுவது போல் ஒரு பிரம்மை அவளுள்... கண்மூடி அவனது குரலை ரசித்து உள்வாங்கினாள்...

இங்கு வந்ததில் இருந்து அவளது புன்னகையைக் கண்டு மனம் குமுறிய இந்திரஜத்திற்கு இப்போது அவளது ஒற்றைப் புன்னகையில் அவனது மனம் ஆழ்கடல் போல் அமைதியடைந்தது... அவனுக்கே அதிசயமாய்... மதியம் அவனுள் நிகழ்ந்த ரசாயான மாற்றம் அவனுள் சிறு மாற்றத்தை விதைத்திருந்ததோ...!

"காவி... எப்போடா ரிசப்சன் முடியும்ன்னு இருக்கு..." சஞ்சய் தனது மனைவியின் காதை கடிக்க...

"ஏன்...?" புரியாது அவனைப் பார்த்தாள் அவனது மனையாள்...

"இந்தர் பாடின பாட்டு..." அதற்கு மேல் அவனைப் பேச விடாது அவனது வாயை தனது கரம் கொண்டு மூடியவள்,

"ஏதாவது பேசின... மேடைன்னு கூடப் பார்க்க மாட்டேன்..." என்று அவள் அவனை எச்சரிக்க...

"சரி பேசலை... பார்க்கிறேன்..." என்றவன் தனது தாபத்தைப் பார்வையில் வெளிப்படுத்த... அதைக் கண்டு பாவையவள் முகம் சிவந்து தலை குனிந்தாள்... அவனோ உல்லாசமாய், சன்னமாய் விசிலடித்தான்...

சந்தோஷ், சாத்விகா சங்கடமாய் ஒருவரை ஒருவர் பார்ப்பதை தவிர்த்தனர்... மனம் ஒன்றிணைந்தால் மட்டுமே களவியல் காதலாய் தெரியும்...

இந்திரஜித் பாடி முடித்ததும் கரவொலி மண்டபத்தை நிறைத்தது... மேடையேறும் போது இருந்த அலைப்புறுதல் குறைந்து இப்போது அவன் உற்சாகமாய்க் கீழே இறங்கினான்... அப்போது முதல் வரிசையில் அமர்ந்திருந்த தனது தந்தையைக் கண்டதும் அவனது மனம் உற்சாகத்தை இழந்து கடுமையுற்றது... முகம் கடுகடுக்கச் சிறிது நேரம் அங்கிருந்தவன் அதற்கு மேல் அங்கிருக்க முடியாது கிளம்பிவிட்டான்...

அவனின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருந்த சம்யுக்தா கவலையுற்றாள்... அவனது வருத்தம் அவளையும் வருத்தமுற செய்தது...

மணமக்களை அவரவர் வீட்டில் விட்டு விட்டு தங்களது வீடு வந்து சேர்ந்தனர் அனைவரும்... இன்னும் இந்திரஜித் வீடு வந்து சேரவில்லை... அதைக் கண்டு பிரகதீஸ்வரிக்கு மீண்டும் கலக்கம் எழுந்தது...

"மாமூ... இந்தருக்கு ஏதாவது காதல் தோல்வியா...?" என்று கேட்ட மனைவியை விழிகள் சுருங்க ஏறிட்ட சித்தார்த் அவளை அருகில் அமர்த்தி,

"ஏன் இப்படிக் கேட்கிற பேபி...?"

கணவனது 'பேபி' என்றழைப்பு கேட்டு பிரகதீஸ்வரி கோபம் கொள்ளாது அவனது மடியில் தலை வைத்து படுத்தாள்... அவளது மன வருத்தத்தை அவளது மௌனம் மற்றும் செயலில் அவன் கண்டு கொண்டான்...

"நாம ரெண்டு பேரும் காதலித்துக் கல்யாணம் பண்ணினவங்க... இவ்வளவு ஏன் நம்ம ஜிக்கியும் காதலித்துத் தான் கல்யாணம் பண்ணியிருக்கிறாள்... அப்படி இருக்கும் போது நம் இந்தரோட காதல் மட்டும் எப்படித் தோல்வி அடையும்...? அப்படித் தோல்வியடையத் தான் நான் விட்டு விடுவேனா...?" என்று மீசையை முறுக்கிய கணவனைக் கண்டு இதமாகப் புன்னகைத்தவள்,

"பின்னே ஏன் அவன் பாதியில் மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டான்...?"

"இன்னைக்குப் பேக்டரியில் நைட் வொர்க் நடக்குது... நான் தான் அவனை அங்குப் போகச் சொன்னேன்..."

"ஓ... அப்போ சரி..." என்றவள் கணவனின் வருடலில் நிம்மதியாய் உறங்கி போனாள்...

சித்தார்த் தான் தூக்கம் வராது தவித்துப் போனான்... எத்தனை நாளைக்கு இந்தப் பொய் எடுபடும் என்று அவனுக்குத் தெரியவில்லை... என்றாவது ஒரு நாள் அவனோ அல்லது மகனோ வெடித்துச் சிதறும் போது எல்லா உண்மையும் வெளிவந்து விடுமோ என்று அவன் அஞ்சினான்... அதை விட அது மனைவியைப் பாதித்து விடுமோ என்று பெரும் கவலை கொண்டான்...

***********************

சஞ்சய் காதல் மனைவி காவ்யாவின் வருகைக்காக எதிர்பார்ப்புடன் தனது அறையில் காத்திருந்தான்... அவனை அதிக நேரம் காக்க வைக்காது குறித்த நேரத்தில் அறைக்குள் நுழைந்த காவ்யாவை அடுத்த நொடி அவன் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

"டேய் விடுடா..." என்று திமிறியவளை கண்டு,

"விடுவதற்கா தாலி கட்டியிருக்கேன்..." என்றவன் அவளைப் படுக்கையில் கிடத்தி தானும் அவளுள் புதைந்தான்...

"சஞ்சய்... கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கலாம்..."

"அதான் வாழ்க்கை முழுவதும் இருக்கே..." என்றவன் தனது காரியத்தில் கண்ணாய் இருக்க...

அதில் மனம் மயங்கியவள், "டேய் அத்தான், நம்ம குழந்தைகள் பத்தி கூடப் பேச கூடாதா...?"

"ம்ஹூம்... இரண்டு வருசத்துக்குக் குழந்தைகள் பத்தி நீ வாயை திறக்க கூடாது... இரண்டு வருசம் லைஃப்பை

நல்லா என்ஜாய் பண்ணிய பிறகு தான் குழந்தைகள் எல்லாம்..." என்றவன் அவளை மேலே பேச விடவில்லை...

காதல் கணவனாய் அவன் அவளிடத்தில் தனது உரிமையை நிலைநாட்டிய போது அவளும் அவனது விருப்பத்தை உணர்ந்து இசைந்து கொடுத்தாள்... விவரம் தெரிந்த வயதில் இருந்து மனதில் மொட்டு விட்ட அவர்களது காதல் பூ இப்போது இனிமையாய் மலர்ந்து மணம் பரப்பியது... மனமொத்த காதல் தம்பதிகளின் வாழ்வு எந்த நிலையிலும் பிறழாது...

அதே நேரம் சந்தோஷ் தனது மனைவிக்காகக் காத்திருந்தான்... பூக்களால் அலங்கரிக்கப்பட்ட படுக்கை அலங்காரம் அவனுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது... அத்தோடு அன்று சாத்விகா பேசிய வார்த்தைகளும்... அப்போது அறைக்கதவு திறக்கப்படும் ஓசையில் அவன் திரும்பி பார்த்தான்...

அலங்கரிக்கப்பட்ட தங்க பதுமையாய் வந்த மனைவியைக் கண்டு ஆணாய் அவனுள் பல வேதியல் மாற்றங்கள் எழுந்தது... இத்தனை காலம் கண்ட கனவுகளின் ஏக்கம் அவனது மனதினை சூறாவளியாய்த் தாக்கியது... ஆனால் அவசரப்பட்டு வாழ்க்கையை அலங்கோலப்படுத்த விரும்பாது அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"வா அம்மு..."

அவனது இணக்கமான அழைப்பை கண்டு ஆச்சிரியத்தில் விழி விரிய பார்த்தவள் அவன் சொன்னதைத் தட்டாது செய்தாள்... எப்படி ஆரம்பிப்பது, என்ன பேசுவது என்று தெரியாது இருவரிடையே கனத்த அமைதி நிலவியது...

"அம்மு..." சந்தோஷ் அந்த அமைதியை கலைத்தான்...

'என்ன?' என்பது போல் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அந்தக் கணம் மை விழியாளின் அகன்ற விழிகளில் அவன் அப்படியே வீழ்ந்து தான் போனான்... காதல் கொள்ளாத

அவனின் மனதினையும் பாவையவளின் விழிகள் அடியோடு வீழ்த்தி சாய்த்தது...

'என்ன கண்ணுடா சாமி...!' தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன் நிதானமாய்ப் பேச ஆரம்பித்தான்...

"அம்மு... உனக்கு என்னைப் பிடிச்சியிருக்கோ இல்லையோ... ஆனா நீ இந்தக் கல்யாணத்தை மதிச்சு தான் ஆகணும்... பொதுவா நான் கொஞ்சம் ஜாலி டைப்..."

இதை அவன் சொல்லும் போதே அவளது முகம் இருண்டது... அவன் பேச்சுச் சுவாரசியத்தில் அதைக் கவனிக்கவில்லை...

"நான் மட்டும் ஜாலியா இருந்தா போதாது... என்னைச் சுற்றி இருக்கிறவங்களும் ஜாலியா, சந்தோசமா இருக்கணும்ன்னு நினைக்கிறவன்... அது மாதிரி தான் என் வேலையும்... உயிரை காப்பாத்துற டென்சனான வேலை... கடவுள் மாதிரி என்னை நம்பி வர்றவங்களோட நம்பிக்கையை நான் காப்பாத்தணும்... அதுக்கு என் பர்சனல் விசயம் என் மனசை பாதிக்காம இருக்கணும்... இதை எல்லாம் நான் ஏன் உன் கிட்ட சொல்றேன்னு உனக்குப் புரியலை அப்படித் தானே...?"

உண்மையில் அவள் அப்படித் தான் புரியாது அவனைப் பார்த்திருந்தாள்...

"இப்ப கொஞ்ச நாளா உன் கிட்ட கோபப்பட்டுட்டு வந்து என்னால் ஹாஸ்பிட்டலில் முழு மனசோட வேலை செய்ய முடியலை... நீ என்னைப் பாதிக்கிறப்போ எல்லாம் அப்பா கிட்ட பொறுப்பைக் கொடுத்துட்டு நான் விலகி ஓடுறேன்... பொறுப்பைத் தட்டி கழிப்பது போல் மனசுக்குள் ஒரு குற்றவுணர்வு எழுவதைத் தடுக்க முடியலை... அந்தளவுக்கு உன்னோட உதாசீனம் என்னைப் பாதிக்குது... அது ஏன்னும் எனக்குத் தெரியலை... இப்போ நீ என் மனைவி... நீ என்னைப் புரிஞ்சிக்கலைன்னாலும் பரவாயில்லை... அது பத்தி எனக்குக் கவலையில்லை... ஆனா தயவுசெய்து

என்னை உதாசீனப்படுத்தியோ இல்லை கோபப்படுத்தியோ பேசிறாதே... தினமும் என்னால் ஹாஸ்பிட்டலுக்கு டென்சனோட போக முடியாது... நீ என்னைக் கணவனா நினைக்க வேண்டாம்... ஒரு நல்ல நண்பனா நினைக்கலாம் இல்லையா...?" அவன் தன்மையாய் தனது மனதில் இருப்பதை அவளிடம் சொல்லி முடித்தான்...

"என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படித் தெரியுது...? சண்டைக்காரி மாதிரியா...?" என்று கோபமாய்க் கேட்டவளை கண்டு அவனது முகம் சுருங்கி போனது...

அவன் ஒன்றும் பேசாது கட்டிலில் ஒரு பக்கம் படுத்தவன், "லைட்டை ஆஃப் பண்ணிட்டு படு..." என்று மட்டும் உரைத்து விட்டு கைகளால் கண்களை மறைத்தபடி உறங்க முற்பட்டான்...

அவன் சொன்னதை அப்படியே கேட்டவள் அமைதியாய் மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள்... இருவரின் மனதும் குழம்பி தவித்தது... இனி வரும் காலங்களில் எப்படித் தங்களது வாழ்க்கை செல்ல போகிறது என்று...

**************************

திருமண அலைச்சலில் எல்லோரும் உறங்கி விட்டனர்... ஆனால் சம்யுக்தா மட்டும் இந்திரஜித்திற்காகக் காத்து கொண்டிருந்தாள்... ஏனோ தெரியவில்லை அவனது வேதனை அவளது மனதினை வாள் கொண்டு அறுத்தது... அதற்குப் பிறகு அவன் பாடிய பாடல் சந்தோசத்தைக் கொடுத்தாலும் முதலில் பாடிய பாடலின் துயரம் அவனது மனத்துயரை பறைச்சாற்றுவதாய்... ஏதோ ஒன்று அவனது மனதினை அரிக்கிறது என்று உணர்ந்தவள் அது என்னவென்று அறியாது தவித்தாள்...

அதே நேரம் நட்சத்திர விடுதியின் மதுபான விடுதியில் அமர்ந்திருந்த இந்திரஜித்தின் முன் வகை, வகையாய் மதுபான புட்டிகள் அணிவகுத்து அவனுக்காகக் காத்திருந்தது... கடந்த ஐந்து வருடங்களாக இவைகள் தான்

அவனுக்குத் துணையாக இருந்து பெருத்த ஆறுதலை அளித்துக் கொண்டிருந்தது...

மனதில் எழும் துயரம், குற்றவுணர்வு இவை இரண்டையும் மறப்பதற்குத் தான் அவன் குடிப்பது... ஆனால் அதுவோ அவனை மேலும் மேலும் குற்றவுணர்விற்குள் தள்ளி விட்டுக் கொண்டிருந்தது... துயரம் அவனை ஒரு பக்கம் இழுத்துச் சென்றது என்றால், குற்றவுணர்வோ அவனை மறுபக்கம் இழுத்துச் சென்றது... இரண்டிற்கும் இடையில் கிடந்து அவன் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறான்...

வெகுநேரம் அதை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவன் பின்பு அதைக் குடிக்காது எழுந்து விட்டான்... அதுவே அவனைப் பொருத்தவரையில் பெரிய வெற்றி தான்... அவனது முகத்தில் வெற்றி பெருமிதம் தோன்றியது... இனி எதுவும் அவனைப் பாதிக்காது என்பதினால் வந்த களிப்போ அது...

நேரே வீட்டிற்கு வந்தவனின் வருகையை உணர்ந்தார் போன்று வீட்டின் கதவுகள் இரண்டும் அகல திறந்தது... அவன் யோசனையுடன் நிமிர்ந்த போது அங்குக் கதவினை பிடித்தபடி அவனைக் காதலுடன் பார்த்தபடி நின்றிருந்த சம்யுக்தாவை கண்டதும் அவனது களிப்பு அவனை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போனது...

கேரள பாணியில் இருந்த வெண்பட்டை உடுத்தியிருந்தவளின் அழகு அந்த இராத்திரி வேளையிலும் தேவதையை ஒத்திருந்தது... அவளது உடைக்கு ஏற்றார் போன்று இளம் பழுப்பு வண்ண கோட், பேண்ட் மற்றும் பாலாடை வண்ணத்தில் முழுக்கை சட்டை அணிந்திருந்த தனது உடையை அவன் குனிந்து பார்த்துக் கொண்டான்...

அவளது உடைக்கு ஏற்றார் போன்று அவன் ஏன் தனது உடையைத் தேர்ந்தெடுத்தான்? என்று இந்தக் கணம் வரை அவனுள் பெரும் கேள்வி எழுந்து கொண்டே இருக்கிறது... மனப்பொருத்தம் இல்லாததால் உடையில் பொருத்தத்தை அவன் தேர்ந்தெடுத்தானோ...? எது அவளை நோக்கி

தன்னைச் செலுத்துகிறது என்று அவனுக்கே புரியாத புதிராக இருந்தது... மனதிற்குள் விசமாய் எண்ணி வெறுத்து ஒதுக்கும் ஒருத்தியை தான் ஏன் இப்படிக் கவனித்து நோக்க வேண்டும் என்று அவனுக்குத் தன்னைக் குறித்தே புதினமாக இருந்தது...

"பாவா..."

அவனது சிந்தனையை அவளது குரல் கலைத்தது... அதில் தன்னுணர்வு பெற்றவன் ஒன்றும் பேசாது அவளைத் தாண்டி வீட்டினுள் சென்றான்... அவள் கதவை அடைத்து தாள் போட்டுவிட்டு அவனை நோக்கி ஓடி வந்தாள்...

அவனோ வேகமாய் மாடிப்படியேறி தனது அறையை நோக்கி சென்று கொண்டிருந்தான்... அவளும் அவன் பின்னேயே சென்றாள்... தனது அறை வந்ததும் நின்றவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு அவளைத் திரும்பி பார்த்தான்... அவளோ மூச்சிரைக்க அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... 'சொல்லு' என்பது போல் அவன் கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக நிற்க...

"உங்களுக்கு அப்படி என்ன வேதனை பாவா...?" அவளது கேள்வியில் அவனது விழிகள் இரண்டும் இடுங்கியது...

"சொன்னால் என்ன செய்வதாக உத்தேசம்...?"

அவன் கிண்டலாய் கேட்ட கேள்விக்குப் பதில் தெரியாது அவள் விழித்தாள்... பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"நீங்க கஷ்டப்பட்டா அது என்னையும் பாதிக்குது... எனக்கும் ரொம்பக் கஷ்டமாயிருக்கு... மனசில் உள்ளதை யாரிடமாவது சொன்னால் தானே பாரம் குறையும்..."

"அதுக்கு...?"

"என் கிட்ட சொன்னால் உங்க மனவேதனை குறையும்ன்னா தாராளமா என் கிட்ட சொல்லுங்க..."

அடுத்த நொடி ஒற்றைக் கையால் அறைக்கதவை திறந்தவன், மறு கையால் அவளை இழுத்துக் கொண்டு

தனது அறைக்குள் நுழைந்தான்... வேகமாய் அறைக்கதவை தாளிட்டு விட்டு அவளைக் கதவின் மீது சாய்த்து நிற்க வைத்தவன் அவளது விழிகளுக்குள் ஊடுருவி பார்த்தவாறு,

"நான் ஏற்கெனவே சொல்லியிருகேன்... எனக்குப் பேச தெரியாது... செயல் தான் தெரியும்ன்னு..." அவன் சொன்னதைக் கேட்டு அவளது விழிகள் பயத்தில் விரிந்தது...

"என்னுடைய வேதனையை என்னால் சொல்ல முடியாது... ஆனால் செயலில் காட்ட முடியும்... காட்டவா...?"

அவனது உறுமலில், அவனது இறுகிய பிடியில் அவளது விழிகள் இரண்டும் அச்சத்தில் இன்னமும் அகல விரிந்தது... அவளது விழியில் தெரிந்த அச்சத்தில் அவன் சற்று நிதானித்தான்...

"ம்ப்ச்... முதலில் இங்கிருந்து போய்த் தொலை..." என்று எரிச்சலுடன் கூறியவன் அவளை விட்டு விலக முயன்ற போது அவளது கரம் அவனைத் தடுத்து நிறுத்தியது...

"என்னால் உங்க வேதனை குறையுதுன்னா நான் அதற்கும் தயார்..." என்று உறுதியான குரலில் கூறியவளை கண்டு அவனது விழிகளில் வியப்பு தோன்றியது...

அடுத்த நொடி அவன் அவளை இறுக அணைத்து அவளது முகம் நோக்கி குனிந்தான்... தனது கோபத்தினையும், தாபத்தினையும் ஒருசேர அவளிடம் காட்டிட எண்ணியவனின் செயலில் இருந்தது எல்லாம் வேகம், வேகம் மட்டுமே...

மனம் கலங்கிய போதும், உடல் விறைத்த போதும் தன்னவனின் வேதனைக்கு மருந்தாகத் தன்னையே கொடுத்தபடி நின்றிருந்தாள் அவள்...

இந்திரஜித் உணர்வுகள் பெருக்கெடுக்க அவளைப் படுக்கையில் கிடத்தி அவளுள் தாபமாய்ப் புதைந்தவன் இன்று வரவேற்பு நிகழ்ச்சியில் தான் பாடிய 'ஆழியிலே

முக்குளிக்கும் அழகே, ஆவியிலே தத்தளிக்கும் அழகே' பாடலின் வரிகளைச் செய்முறையில் செய்து பார்த்திட துடித்தான்...

கவிஞர் கவிதையில் வடித்த வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு புதிய உலகத்தைப் பெண்ணவள் அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள்... பொய்யான அலங்கார வார்த்தைகளை விடப் பெண்ணவளின் விழி மொழி மெய்யான மயக்கத்தினை அவனுள் விதைத்தது...

பெண்ணவளும் அவனது நோக்கம் புரிந்து அவனை விலக்காது அரவணைத்து தன்னுள் அடக்கி கொண்டாள்... அதில் சற்று நிலைத்தடுமாறியவன் அடுத்த நொடி அவளை உதறி தள்ளிவிட்டு எழுந்தான்...

"ச்சீ... நீ எல்லாம் ஒரு பெண்ணாடி..." என்று சீற்றத்துடன் அவன் கேட்டது இலக்கு தவறாது பெண்ணவளின் மனதினை சரியாகத் தாக்கி அவளை நிலைக்குலைய செய்தது...

ஆண்டாண்டு காலமாய்க் காதலுடன் தன்னவனிடம் அடைக்கலமாகும் பெண்ணவளுக்கு ஆண் அளிக்கும் மரியாதை இது தான்... சுயமரியாதையைக் காலடியில் போட்டு நசுக்கும் இந்தக் காதல் உனக்கு அவசியம் தானா பெண்ணே...!

"பாவா..." அதிர்ந்து போய் விழித்தவளை கண்டு அவன் சிறிதும் இரங்கவில்லை... அவளைக் கோபமாய் முறைத்துப் பார்த்தான்...

"உனக்குக் கொஞ்சம் கூட வெட்கமாய் இல்லை... ஒரு ஆம்பிளை கூப்பிட்டால் இது தான் சாக்குன்னு ஈன்னு இளிச்சிட்டு வந்திருவியா...? நீ என்ன அந்த மாதிரி பெண்ணா...?"

"லேது பாவா..." (இல்லை பாவா) அவளது விழிகளில் கண்ணீர் உடைப்பெடுத்து ஓடியது...

"பேசாதடி..." அவள் முன் ஒற்றை விரல் நீட்டி அவன் எச்சரிக்க...

"அது வந்து பாவா..."

அவள் மேலே பேசும் முன் அவளது கையைப் பிடித்துத் தரதரவென இழுத்து வந்தவன் அறைக்கதவை திறந்து அவளை வெளியில் தள்ளி விட்டான்... அவள் நிலைக்குலைந்து போய்த் தரையில் விழுந்தாள்...

"இனி என் கண் முன்னால் வந்த, தொலைச்சிருவேன் தொலைச்சு..." என்று எரிந்து விழுந்தவன் விழிகளில் வெறுப்பை உமிழ்ந்தபடி அறைக்கதவை படாரென்று அறைந்து சாத்தினான்...

முகத்தில் அடித்தார் போன்று சாத்தப்பட்ட அறைக்கதவை வெறித்தபடி அவள் அப்படியே கீழே விழுந்து கிடந்தாள்... அவன் தள்ளி விட்ட அதிர்ச்சி, அவனது வார்த்தைகள் அனைத்துமே அவளால் ஜீரணிக்க முடியவில்லை... எவ்வளவு நேரம் அப்படியே உறைந்து போய் அமர்ந்திருந்தாளோ...

எங்கோ ஒலித்த கடிகாரத்தின் ஓசையில் நிகழ்காலம் உறைக்க அவள் அவசரமாய்த் தனது உடைகளைச் சரி செய்து கொண்டு எழுந்தாள்... பிறகு வேகமாய்த் தனது அறைக்கு வந்து கதவை மூடி கொண்டு படுக்கையில் விழுந்தவளின் விழிகளில் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை...

மறுநாள் காலையில் எழும் போதே சம்யுக்தாவிற்குக் காய்ச்சல் அடிப்பது போலிருந்தது... ஆனாலும் அவள் சிரமப்பட்டு எழுந்து வெளியில் வந்தாள்... அன்றாட வேலைகள் அது பாட்டிற்குத் துவங்கியது... அவளது விழிகளோ தன்னவனைத் தேடி அலைபாய்ந்தது... அவளது எதிர்பார்ப்பை பொய்யாக்காது இந்திரஜித் உணவு மேசையில் வந்தமர்ந்தான்... பிரகதீஸ்வரி அவனுக்கு உணவு பரிமாற அவன் எதுவும் பேசாது உண்டான்...

'அவள் எங்கே...?' என்று அவனது மனம் கேள்வி கேட்டு அலைபாய்ந்தது...

எப்போதும் சம்யுக்தா மற்றும் ஆதித்யாவின் சிரிப்பொலிகள் அந்த வீட்டை நிறைத்துக் கொண்டு ஒலிக்கும்... ஆனால் இன்று அது கேட்காது வீடு அமைதியாக இருப்பது கண்டு அவனுள் பெரும் யோசனை... ஏதோ ஒரு உள்ளுணர்வு உந்த அவன் தனது தலையைத் திருப்பிப் பக்கவாட்டில் பார்த்தான்... சம்யுக்தா அங்கே தான் இருப்பாள் என்று அவன் எந்த நம்பிக்கையில் சமையலறை வாயிலை பார்த்தான் என்று அவனுக்குத் தெரியவில்லை... அவனை ஏமாற்றாது அவள் அங்குத் தான் நின்றிருந்தாள்...

'நான் அந்த மாதிரி பெண் இல்லை' என்பது போல் அவள் கண்களில் கண்ணீர் மல்க, இரு கரம் கூப்பி அவனிடம் மன்னிப்பு வேண்டியபடி அவனை இறைஞ்சுதலாய் பார்த்தாள்... மோகத்தில் இருந்த போது அவளது இறைஞ்சுதலுக்கு மதிப்பு கொடுத்தவன் இப்போது கோபத்தில் முகம் இறுக சாப்பிடாது நாற்காலியில் இருந்து எழுந்து சென்று விட்டான்...

அதைக் கண்டு அவள் தன்னைத் தானே கடிந்தபடி மனம் நொந்து போய் நின்றிருந்தாள்... தன்னை எப்படி அவனிடத்தில் புரிய வைப்பது? என்று அவளுக்குத் தெரியவில்லை...

கடைசிவரை இந்த ராதை தனது கண்ணனுக்காகக் காத்திருக்கத் தான் வேண்டுமோ...!!!

தொடரும்...!!!

"இந்தர்..."

வேகமாய் வாயிலை நோக்கி சென்று கொண்டிருந்த இந்திரஜித் அன்னையின் அழைப்பில் அப்படியே தேங்கி நின்று திரும்பி பார்த்தான்...

"மதியம் சாப்பாட்டுக்கு மாமா வீட்டுக்கு வந்திருப்பா..." என்ற அன்னையைக் கண்டு அவன் கேள்வியாய் புருவம் சுருக்கினான்...

"அம்மு மறுவீட்டுக்கு அங்கே வருகிறாள்... நாங்க எல்லோரும் அங்கே போகிறோம்... நீயும் வந்திரு..."

"எனக்கு வேலை இருக்கும்மா..."

உண்மையில் அவனுக்கு வேலை அதிகம் இருந்தது... புதிதாய் பொறுப்பேற்றதால் என்னமோ அவனுக்காக நிறைய வேலைகள் காத்திருந்தது... தந்தையை உதவிக்குக் கூப்பிடலாம் தான்... ஆனால் அவனின் பிடிவாதம் தந்தையிடம் உதவி கேட்க மறுத்தது...

மகனின் இந்தப் பதில் பிரகதீஸ்வரி மனதில் கவலையை அதிகரித்தது... அவன் அருகில் வந்து அவன் கன்னத்தில் கை வைத்து வாஞ்சையுடன் பார்த்தவள்,

"கொஞ்ச நாளாகவே நீ சரியில்லையே இந்தர்..."

அன்னையின் பேச்சில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தான் இந்திரஜித்...

"உனக்கு என்ன குறை இந்தர்...? உன் மனசில் என்ன கவலை இருந்தாலும் அம்மா என் கிட்ட சொல்ல கூடாதா...?"

அந்தக் கணம் மழலையாய் மாறி அன்னையின் மடியில் அடைக்கலம் புக துடித்தது அவனது சேய் நெஞ்சம்... ஆனால் அதற்குப் பின் விளையும் விளைவுகள்...??? தன்னால் பெற்றோர் இடையே மனஸ்தாபம் வருவதை அவன் விரும்பவில்லை... அந்த நொடி அவன் தன்

மனக்கதவுகளைத் தாயிடம் திறந்திருந்தால் அத்தனை பிரச்சினைகளும் பனி போல் விலகி போயிருந்திருக்குமோ...? தனது துக்கத்தை உள்ளுக்குள் போட்டு புதைத்து கொண்டவன் வெளியில் அன்னையைக் கண்டு புன்னகைத்தான்...

"உங்களை மாதிரி நல்ல அம்மாவுக்கு மகனா பிறந்த எனக்கு என்ன கவலை இருக்கப் போகிறதும்மா...?"

மகனது புன்னகையில் ஜீவனில்லை என்று அந்தத் தாயால் உணர்ந்து கொள்ள முடியாதா என்ன...? ஆனால் மேலும் மேலும் கேள்விகளைக் கேட்டு அவனைத் தர்மசங்கடத்தில் நிற்க வைக்க விரும்பாது,

"நீ சொல்வது உண்மை என்றால், ரொம்பச் சந்தோசம் இந்தர்..." என்று கூறி அவள் புன்னகைக்க...

"மதியம் மாமா வீட்டுக்கு வருகிறேன்... பைம்மா..." என்று விடைப்பெற்றவன் தனது காரை நோக்கி சென்றான்...

காரிலேறி அமர்ந்து அதைக் கிளப்பிக் கொண்டு செல்லும் போது வீட்டின் வாயிலில் சோக சித்திரமாய் நின்றிருந்த சம்யுக்தா அவனது விழிகளில் விழுந்தாள்... அவளது சோகம் அவனது மனதினை உலுக்கத் தான் செய்தது... ஆனால் அதற்காக எல்லாம் அவளிடம் மண்டியிட அவன் தயாராக இல்லை... இயலாதவனாய் தனது கோபத்தினைக் காரின் மீது காட்டினான்... அது வேகமெடுத்துச் சாலையில் பறந்தது...

சம்யுக்தா சோர்வுடன் தனது அறைக்கு வந்தாள்... இன்று ஜெகதீஸ்வரி மருத்துவமனைக்கு விடுப்பு எடுத்திருப்பதால் ஆதித்யா அவளிடம் இருந்தான்... சின்னவனும் உடன் இல்லாததால் சம்யுக்தா மனதில் வெறுமை படர்ந்தது... மன்னவனின் நினைவுகள் மனதில் எழுந்து அவளைப் போட்டு அலைக்கழித்தது...

முழங்காலில் முகம் புதைத்து அமர்ந்தவளின் விழிகளில் விழிநீர் அருவி போல் கொட்டியது... அவன் அவளை

அவ்வளவு அவமானப்படுத்திய போதும், அவளால் அவனை வெறுத்து ஒதுக்க முடியவில்லை... அப்படி எந்த ஒன்று அவளை அவனிடத்தில் கட்டி வைத்திருக்கிறது என்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் ஏன் தன்னிடத்தில் இப்படிக் கோபமாய் நடந்து கொள்கிறான் என்பதற்கு விடை தெரியாது, அன்று அவன் கூறிய வார்த்தைகளுக்காக இன்றுவரை அவள் மௌனம் காத்து வருகிறாள்... இனியும் அப்படியே தான் இருப்பாள்...

எதுவாக இருந்தாலும் அவன் தான் முடிவு செய்ய வேண்டும்... ஒருவேளை அவளை வேண்டாம் என்று அவன் தூக்கி எறிந்து விட்டால்...? அதை நினைத்ததும் அவளது மலர் தேகம் நடுங்கியது... அவன் அல்லாது ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை...

"நீங்க என்னை மறுத்தால் நான் செத்து விடுவேன் பாவா..." என்று அவள் கதறி அழுதாள்...

சம்யுக்தாவின் வேதனையை அலுவலகத்தில் இருந்த இந்திரஜித்தும் உணர்ந்தானோ என்னமோ... கையிலிருந்த கோப்பில் கவனத்தைச் செலுத்த முடியாது அதைத் தூக்கி மேசை மீது எறிந்தவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்... கண்ணீர் மல்க கை கூப்பிய அவளின் பரிதாப தோற்றம் அவன் மனதில் மீண்டும் மீண்டும் எழுந்து அவனைச் சுனாமியாய்த் தாக்கியது...

அதற்கு மேல் அவனால் அங்கிருக்க முடியவில்லை... அறையை விட்டு வெளியில் வந்தவன் காரை கிளப்பிக் கொண்டு நேரே வேலை நடக்கும் இடத்திற்குச் சென்றான்... அவனது நிறுவனங்களில் கட்டுமான தொழிலும் ஒன்று... பெரிய அளவில் நட்சத்திர விடுதி ஒன்று கட்டும் வேலை நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்திறங்கியவன் தானும் வேலையாட்களோடு ஒரு வேலையாளாய் சேர்ந்து வேலையைப் பார்க்கலானான்... பனிக்காலம் முடிந்து வெயில் அதிகரித்துக் காணப்பட்டது...

வியர்வை துளிகள் நிலத்தில் சிந்த அவன் உழைத்த போதும் அவனது அடிமனதில் அரித்துக் கொண்டிருந்த அவளது நினைவுகளை விரட்ட அவனால் முடியவில்லை... அவளைத் தன் நினைவில் இருந்து அவன் அழித்தால் ஒழிய அவளது நினைவுகள் அவ்வளவு சுலபத்தில் அவனை விட்டு அகலாது...!

**********************

சந்தோஷ் எழும் போது சாத்விகா அறையில் இல்லை... அது கூட ஒரு வகையில் அவனுக்கு நிம்மதியை அளித்தது... குளியறைக்குள் புகுந்து ஷவருக்கு அடியில் நிற்கும் போது அதிலிருந்து வழிந்த குளிர்ந்த நீர் அவனது மனதின் வெம்மையைச் சற்றுத் தணித்தது...

'எந்த நிலையிலும் உன் குணத்தை மாத்திக்காதே சந்தோஷ்... முடிந்தளவு உன் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கோ... உன்னை அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமா புரிய வை...' என்று அவன் தனக்குள் திரும்பத் திரும்பச் சொல்லி கொண்டான்...

சிறு வயதில் இருந்து அவன் பார்த்து வளர்ந்த பெண் சாத்விகா... அதனால் அவனுக்குச் சற்று நம்பிக்கை எழுந்தது...

குளித்து முடித்து உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவன் நேரே வரவேற்பறையில் வந்தமர்ந்தான்... அவனது வரவை உணர்ந்தார் போன்று அவனுக்குத் தேவையான தேநீரை எடுத்துக் கொண்டு வந்து அவனிடத்தில் நீட்டினாள் அவனது மனையாள்... புத்தம் புது மலர் போன்று நின்றிருந்த இவளா நேற்று அப்படிக் கடுமையாகப் பேசினாள் என்று நம்ப முடியாது அவன் அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தான்...

கணவனது கூர்மையான பார்வையில் சாத்விகாவின் முகம் அவளையும் அறியாது வெட்கத்தில் சிவந்து போனது... அவளது வெட்கம் கண்டு அவன் யோசனையானான்... எது எப்படி இருந்த போதும் அவளது

இந்த வெட்கம் அவனது மன அமைதிக்கு மிகவும் தேவையாக இருந்தது... அவளைப் பார்த்துக் கொண்டே அவளது கையிலிருந்த கோப்பையை வாங்கியவன் வேண்டுமென்றே அவளது கை விரல்களோடு தனது கை விரல்களை ஒட்டி உறவாட விட... அவளோ முகம் சிவக்க தனது கையை விலக்கி கொண்டு உள்ளே ஓடி விட்டாள்...

மனம் முழுவதும் தித்திப்பாய் இனித்ததில் அவன் அருந்திய தேநீர் வழக்கத்திற்கு மாறாக அதீதமாய்த் தித்தித்தது... அப்போது அவனது தந்தை அர்ஜூன் அவன் அருகில் வந்தமர்ந்தான்...

"சந்தோஷ்... சந்தோசமா இருக்கியா...?"

சற்று நேரத்திற்கு முன் தந்தை இப்படிக் கேட்டு இருந்தால் அவன் என்ன கூறியிருப்பானோ... ஆனால் இப்போது அவன் நிறைந்த மனதுடன், முகத்தில் புன்னகை அரும்ப,

"எஸ் டாட்... உங்க செலக்சன் எப்பவுமே தப்பாகாது..." என்க... அர்ஜூன் மகனை பார்த்து அர்த்தத்துடன் சிரித்தான்...

"சாத்விகா மாதிரியான ஒரு பொண்ணு மனைவியா கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்..." என்க...

அதை ஆமோதித்துச் சிரித்த சந்தோஷ் மேலே ஒன்றும் பேசவில்லை... அர்ஜூன் சிரித்தபடி மகனின் தோளில் தட்டி கொடுத்துவிட்டு எழுந்து சென்றுவிட்டான்... அந்நேரம் சந்தோஷ் எதேச்சையாக வீட்டினுள் திரும்பி பார்த்தான்... தான் பார்த்ததும் பார்வையைத் திருப்பிக் கொண்ட மனைவியைக் கண்டு அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

'அப்படி என்றால் இவ்வளவு நேரம் அம்மு என்னைத் தான் பார்த்து கொண்டிருந்தாளா...?' அவனது மனதில் சந்தேகம் முளைத்த அதே நேரம் ஒருவித சந்தோசமும் விரவி பரவியது... உற்சாகமான மனநிலையுடன் அவன் மனைவியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

***************

காலையில் எழுந்ததில் இருந்து பரபரப்புடன் வேலைகள் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதாவை சோபாவில் அமர வைத்த சரவணன்,

"இப்போ எதுக்கு இவ்வளவு டென்சனாகிற...?"

"இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லோரும் வந்திருவாங்க..."

"வரட்டுமே..." என்ற கணவனை முறைத்து பார்த்தாள் ஸ்வேதா...

"எல்லாம் சரியாக நடக்கும்... அங்கே பார், காவ்யா டென்சனாகாம எவ்வளவு அழகா, நிதானமா எல்லா வேலைகளையும் செய்கிறாள்..."

நேற்று திருமணம் முடிந்திருந்த போதும் காவ்யா முகம் கோணாது தனது நாத்தனார் வீட்டினர் வரவிற்காக எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுச் செய்து கொண்டிருந்தாள்... மருமகளைக் கண்டு ஸ்வேதாவின் முகம் மென்மையானது...

"ரொம்ப நல்ல பொண்ணு..." என்றவள் மருமகளை அழைத்துத் தன் பக்கத்தில் அமர வைத்துக் கொண்டு,

"சஞ்சய் எங்கே...?" என்று கேட்க...

"இன்னும் எழுந்திருக்கலைன்னு நினைக்கிறேன் அத்தை..."

"அவனைப் போய் எழுப்பி விடும்மா..."

"ம்க்கும்... அவள் வந்து எழுப்பி விட்டு நான் எழுந்திருக்கணும்ன்னா மதியம் தான் எழணும்..." என்று அலுத்துக் கொண்டே அங்கு வந்தான் சஞ்சய்...

நேற்றைய நினைவில் கணவனது முகம் காண நாணிய காவ்யா எழ முயற்சிக்க, அவனோ அவள் தோள் மீது கை

போட்டு அழுத்தி தன் அருகில் அமர வைத்துக் கொண்டான்...

"சஞ்சய்... எப்போ ஹனிமூன் போகப் போகிற...?" சரவணன் மகனிடம் கேட்க...

"போகணும்ப்பா... இங்கே கொஞ்சம் வேலையிருக்கு... அது எல்லாம் முடிச்சிட்டு ஃப்ரீயானதுக்கு அப்புறம் போகலாம்ன்னு இருக்கேன்..." என்றவன் திடுமென,

"நீங்க எப்போ மும்பை கிளம்பறீங்க...?"

"அதுக்குள்ள எங்களை வீட்டை விட்டுத் துரத்துவதில் குறியா இருக்கியே... இது நியாயமா மை சன்...?" என்று சரவணன் போலியாக மூக்கால் அழ...

"அச்சோ... நான் கேட்கலை... இவள் தான்ப்பா கேட்க சொன்னாள்..." அவன் தன் மனைவியை நோக்கி கையைக் காண்பிக்க...

கணவன் பேசியதை கேட்ட காவ்யாவின் முகம் அழுகையைத் தத்தெடுத்தது...

"நான் அப்படி எல்லாம் சொல்லவே இல்லை மாமா..." கண்களில் கண்ணீர் துருத்தியபடி அவள் பயத்துடன் கூற...

"உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியாதாம்மா..." என்று ஸ்வேதா அவளை ஆதரவுடன் அணைத்து கொண்டாள்...

"இவனுக்கு நாங்க இல்லாம தனியா என்ஜாய் பண்ணணும்... அதுக்கு உன் மேல் பழி போடுகிறான்ம்மா..." என்று சரவணன் கூற...

"எக்ஸாக்ட்லிப்பா... அது எப்படி என் மனசில் உள்ளதை அப்படியே சொல்றீங்க..." என்று கூறிய கணவனை முறைத்து பார்த்தாள் காவ்யா...

"சஞ்சய், உனக்குக் கட்டம் சரியில்லைன்னு நினைக்கிறேன்... விடு ஜூட்..." என்று அலறியபடி அவன் அங்கிருந்து நழுவ...

"டேய் அத்தான்... என் கையில் மட்டும் நீ கிடைச்ச செத்தடா..." என்று கத்தியபடி அவள் அவனைத் துரத்தினாள்...

சரவணன், ஸ்வேதா இருவரும் சிறியவர்களின் விளையாட்டை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தனர்...

"அம்மு வீட்டில் எல்லோரும் வரும் நேரமாச்சு... அப்படியே அண்ணாவுக்கும் ஃபோன் பண்ணி கிளம்பிட்டாங்களான்னு கேளுங்க..."

ஹரிப்ரசாத், சந்தியா இருவரும் தங்களது பெண்ணிற்கான மறுவீட்டை தனியாக வைப்பதாகச் சொன்னதற்குச் சரவணன் மறுத்துவிட்டான்...

"நாம என்ன அடுத்தவங்களா அத்தான்... நமக்குள் இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் தேவையில்லை..." என்று கூறி அவர்களை இங்கே வர சொல்லிவிட்டான்...

சித்தார்த்திற்கு அழைத்துப் பேசிய சரவணன் பின் மனைவியிடம், "எல்லோரும் வந்துக்கிட்டு இருக்காங்களாம்..." என்க... ஸ்வேதா நிம்மதியுடன் வேலையைப் பார்க்க போனாள்...

****************

மதியமானதும் இந்திரஜித் வீட்டிற்குக் கிளம்பினான்... வியர்த்துப் போய்க் கசகசவென்று இருந்த அவனது தேகம் ஒரு குளியலை போட சொல்லி வற்புறுத்தியது... அதனால் அவன் வீட்டை நோக்கி காரை செலுத்தினான்... அப்படிச் செல்லும் போது அவனது அலைப்பேசி அழைத்தது... அவனது அன்னை தான் அழைத்திருந்தது... உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

"வீட்டுக்கு போயிட்டு ரெப்ரெஷ் பண்ணிட்டு வர்றேன்ம்மா..." என்றவன் அழைப்பை துண்டித்து விட்டு வீட்டிற்குச் சென்றான்...

வீட்டிற்கு வந்தவன் குளித்து முடித்து உடையை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வரும் போது மீண்டும் அவனது அலைப்பேசி அழைத்தது... அவனது அன்னை தான்...

"வந்துக்கிட்டு இருக்கேன்ம்மா..."

"இந்தர்... நீ வரும் போது சம்யுவையும் கூட்டிட்டு வா... ஆதி தூங்கிட்டு இருந்ததால் அவளைத் துணைக்கு வச்சிட்டு வந்துட்டோம்..."

அதைக் கேட்டு பல்லை கடித்தவன், "கூட்டிட்டு வர்றேன்..." என்று கூறிவிட்டு அழைப்பை துண்டித்து விட்டு சம்யுக்தாவின் அறையை நோக்கி நடந்தான்...

அவன் தட்டுவதற்கு அவசியமே இல்லாது அவளது அறைக்கதவு திறந்து தான் இருந்தது... சம்யுக்தா கண்ணாடி பார்த்தபடி தனது காதில் ஜிமிக்கியை மாட்டி கொண்டிருக்க, ஆதித்யா அவளது புடவை முந்தானையைப் பிடித்துக் கொண்டு எழ முயற்சித்துக் கொண்டிருந்தான்...

"ஆதி பங்காரம்... கொஞ்ச நேரம் கண்ணா..." என்று அவள் கூற... அவள் கூறியது புரிந்தார் போன்று சின்னவன் அவளது முந்தானை சேலையில் இருந்த முடிச்சுகளில் தொங்கிய பாசிமணிகளை உருட்டி விளையாட ஆரம்பித்தான்...

இரு கைகளைக் கட்டி கொண்டு வாசலில் சாய்ந்து நின்றபடி அந்தக் காட்சியை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்... இருவரின் தனிமையைக் கலைக்க அவனுக்கு மனம் வரவில்லை... தாயும், சேயுமாய்க் கவிதை போலிருந்த அவர்களது பிணைப்பை கண்டு அவன் மனம் கனிய நின்றிருந்தான்...

"போகலாமா ஆதி பங்காரம்..." என்று திரும்பியவள் அங்கு வாசலில் எதிர்பாராத விதமாக இந்திரஜித்தை கண்டு திகைத்து போய் அசையாது நின்றாள்... அவனோ அவளைக் கண்டு கொள்ளாது,

"ஆதி..." என்று சின்னவனை அழைக்க... அதில் திரும்பி பார்த்த சின்னவன் மாமனை கண்டதும் உற்சாகமாய் அவனை நோக்கி வேகமாய்த் தவழ்ந்து வந்தான்...

மருமகனை கஷ்டப்படுத்த விரும்பாது இந்திரஜித் அறையினுள் நுழைந்து அவனைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்... அறை வாயிலை நோக்கி சென்றவன் பின் நின்று அவளைத் திரும்பி பார்த்து,

"உனக்கு வேறு தனியா சொல்லணுமா...?" என்று கேட்க... அதில் உயிர் வர பெற்ற பெண் சிலையானவள் அவன் பின்னே ஓடி வந்தாள்...

இந்திரஜித் கார் அருகே வந்து அவளைப் பார்த்து, "ஏறு..." என்க... அவளோ புரியாது அவனைப் பார்த்து விழித்தாள்...

"மாமா வீட்டுக்கு தான் போகிறேன்..." என்று அவன் சொன்னதும் மறுவார்த்தை பேசாது அவள் ஏறியமர்ந்து கொள்ள... அவன் ஆதித்யாவை அவளிடம் கொடுத்து விட்டு மறுபக்கம் வந்தமர்ந்து கொண்டு காரை கிளப்பினான்...

சாலையைப் பார்த்துக் கவனமாகக் காரை ஓட்டி கொண்டு வந்தவனைத் திரும்பி திரும்பி பார்த்தவள் பின் மனம் தாங்காது, "பாவா... நான் அந்த மாதிரி பெண்ணில்லை..." என்று மன்னிப்பு மன்றாடும் குரலில் கூற... அதைக் கேட்டு அவனது தேகம் விறைப்புற்றது...

"அம்மா உன்னைக் கூட்டிட்டு மட்டும் வர சொன்னாங்க..." என்று மொட்டையாகக் கூறியவன் 'இனி இது பற்றி என்னிடம் பேசாதே' என்று மறைமுகமாகக் கூற... அவளோ கண்களில் கண்ணீர் திரள ஜன்னல் பக்கமாய்த் திரும்பி கொண்டாள்... சின்னவனும் பெரியவர்களின் மனநிலையை உணர்ந்தவன் போல் அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான்...

மாமன் வீடு வந்ததும் காரை நிறுத்திவிட்டு இறங்கிய இந்திரஜித் அவளிடமிருந்து அக்கா மகனை தனது கைகளில் வாங்கிக் கொண்டான்... கையில் குழந்தையுடன்

அவன் கம்பீரமாக நடந்து வர, அவன் பக்கத்தில் பெண் மயில் போன்று நளினமாய் அவள் நடந்து வந்தாள்... மூவரையும் சேர்ந்து பார்க்கும் போது ஒரே குடும்பம் போல் அத்தனை அழகாய், பாந்தமாய் இருந்தது...

வீட்டினுள் நுழைந்ததும் சம்யுக்தா உள்ளே செல்ல முயல, இந்திரஜித் அவளைப் பார்த்து ஏதோ நினைவில், "யுகிம்மா..." என்றழைக்க...

அதில் கண்கள் மின்ன, முகம் மலர அவள் திரும்பி பார்த்த போது தான் அவனுக்குத் தான் அழைத்த அழைப்பு நினைவில் வந்தது... அடுத்த நொடி அவனது முகம் இறுகி போனது...

"ஆதியை தூக்கிட்டு போ..." என்று அதிகாரமாய் உரைத்தவன் அவள் முகம் பாராது அவளிடம் ஆதித்யாவை கொடுத்து விட்டு வரவேற்பறையை நோக்கி சென்றான்...

நேற்றில் இருந்து மனதினை போட்டு அரித்த வேதனை முற்றிலும் அகல அவள் சந்தோசத்துடன் ஆதித்யாவை தூக்கி கொண்டு புள்ளி மான் போல் உற்சாகத்துடன் உள்ளே சென்றாள்... அவளது உற்சாகத்தைக் கண்டு அவன் உணர்வில்லாத பார்வை பார்த்தபடி தனது தோழமைகளுடன் சென்று அமர்ந்தான்...

இருவரும் சேர்ந்து வந்ததைக் கண்டு சித்தார்த் யோசனையாய் பார்த்த போதும் சம்யுக்தாவின் முகமலர்ச்சி கண்டு அமைதியானான்...

மறுவீடு உபசாரம் தடபுடலாய் நடைப்பெற்றது... மதிய உணவு முடிந்து எல்லோரும் பேசி கொண்டிருக்கும் போது சந்தோஷின் அலைப்பேசி அழைத்தது...
மருத்துவமனையில் இருந்து வந்த அழைப்பு அது... எடுத்து பேசியவன் உடனடியாகக் கிளம்பினான்...

"சந்தோஷ் எதாவது எமர்ஜன்சியா...?"

"எஸ் டாட்... நீங்க இருங்க... நான் பார்த்துக்கிறேன்..." என்க...

எல்லோரும் அவனது அவசர நிலைமையைப் புரிந்து கொண்டு அவனைச் செல்ல அனுமதித்தனர்... ஆனால் அவனோ அந்த நேரத்திலும் தனது மனையாளை தேடி சென்றான்... அதைக் கண்டு அர்ஜூனின் முகத்தில் புன்னகை வந்தமர்ந்தது...

பெண்கள் கூட்டத்தினருக்கு நடுவில் அமர்ந்து பேசி கொண்டிருந்த சாத்விகாவை கண்டு அவன் விழிகளால் தன் அருகில் வருமாறு பணித்தான்... அவனது செய்கையை யோசனையாய் பார்த்தபடி அவள் எழுந்து அவன் அருகில் வந்தாள்...

"ஒரு எமர்ஜன்சி கேஸ்... நான் ஹாஸ்பிட்டல் போகணும்..." அவனது குரல் சற்று தயக்கத்துடன் ஒலித்தது... ஏற்கெனவே கோபத்தில் அவனிடத்தில் அப்படி எகிறுபவள்... இப்போது என்ன சொல்வாளோ என்று அவன் அவளது முகத்தை யோசனையாய்ப் பார்த்திருந்தான்...

"முதல்ல நீங்க கிளம்புங்க..." அவனது அவசரம் புரிந்து அவளும் வேகமாய்ப் பதிலளிக்க... அதில் அவன் நிம்மதி அடைந்தவனாய் முகம் மலர கிளம்பி சென்றான்...

அந்தக் கணம் நிச்சயம் இனிவரும் காலங்களில் மனைவி தன்னைப் புரிந்து நடந்து கொள்வாள் என்கிற நம்பிக்கை அவனுள் எழுந்தது...

******************

திருமணச் சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து ஹரிப்ரசாத், சந்தியா, கண்ணன் மூவரும் ஊருக்கு கிளம்பி கொண்டிருந்தனர்... பெரியவர்கள் தனித்து இருக்கும் போது பிரபாவதி அந்தப் பேச்சை ஆரம்பித்து வைத்தார்...

"நம்ம கண்ணனுக்குச் சம்யுவை பேசி முடிச்சால் என்ன...? அன்னைக்குக் கல்யாண வீட்டில் அவங்க ரெண்டு பேர் ஜோடி பொருத்தம் பார்த்து எல்லோர் மனசிலும் அந்த எண்ணம் தான் ஓடியது..."

சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்... பிரசன்னாவை நினைத்து அவர்களுக்குக் கவலையாக இருந்தது...

ஆனால் கண்ணன் இதற்கு உறுதியாய் மறுப்பு தெரிவித்து விட்டான்...

"பதினெட்டு வயசில் இருந்து சம்யுவை நான் பார்த்து வருகிறேன்... அவள் எனக்குக் காவ்யாவை போல் ஒரு சின்னத் தங்கை தான்..." என்று கூறிவிட்டான்...

அதைக் கேட்ட பின்பே சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரும் நிம்மதியடைந்தனர்... இதற்கு மேல் தாமதித்தால் சரி வராது என்றெண்ணிய சித்தார்த் உடனே தனது மருமகனிடம் பிரசன்னாவை பற்றிப் பேசினான்...

"பிரசன்னா எனக்கு இன்னொரு மகன் மாதிரி... அவன் பெயரில் கம்பெனி, சொத்துக்கள் எழுதி வைக்கிறேன்... அவனது எதிர்காலத்தைப் பத்தி நீங்க கவலைப்படத் தேவையில்லை... அது போல் குணமும்... என் பையன் மாதிரி என்று நான் சொல்லும் போதே அவனது குணத்தைப் பற்றி நீங்க புரிஞ்சிக்கணும்..."

"நீங்க இவ்வளவு சொல்ல தேவையே இல்லை மாமா... பிரசன்னாவை பத்தி எனக்குத் தெரியாதா...? ஆனால் எனக்குச் சம்யுவை நினைத்து தான் கவலையா இருக்கு... எப்போ கேட்டாலும் கல்யாணம் வேண்டாம்ன்னு மறுக்கிறாள்..." என்றவனது குரலில் கவலை இருந்தது...

"நான் சம்யு கிட்ட பேசி பார்க்கிறேன் மாப்பிள்ளை... நீங்க கவலைப்பட வேண்டாம்..." என்று சூர்யாவை தேற்றிய சித்தார்த் அன்றே சம்யுக்தாவிடம் பேசினான்...

அதைக் கேட்டு அவள் அதிர்ச்சி அடைந்தாள்... பிறகு அவசரமாக, "வேண்டாம் மாமாகாரு..." என்க...

"என்ன வேண்டாம் சம்யு...? பிரசன்னா வேண்டாமா...? இல்லை கல்யாணமே வேண்டாமா...?" அவனது வார்த்தையில் திகைத்து விழித்தவள்,

"இரண்டுமே..." என்று கூறியவள் பொங்கி பொங்கி அழுதாள்...

"ஏன்...?"

அவனது கேள்விக்கு அவளிடத்தில் பதில் இல்லை... மாறாக அவளது அழுகையே பதிலாகக் கிடைத்தது...

"நீ எதுக்கு அழுறேன்னு எனக்குத் தெரியலை சம்யு... ஆனா பிரசன்னா உன்னோட இந்த அழுகைக்கு ஆறுதலா இருப்பான்... அதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்... அவன் உன்னை நல்லா பார்த்துக் கொள்வான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"மாமாகாரு..." 'வேண்டாம்' என்பது போல் தவிப்புடன் பார்த்தவளை கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது...

"சம்யும்மா... உன் அண்ணாவை கொஞ்சம் நினைச்சு பார்... உனக்காகத் தன்னோட வாழ்க்கையைத் தியாகம் பண்ண நினைச்சவர்... அப்படிப்பட்டவரோட மனசு நோகும்படி நீ நடந்து கொள்ளலாமா...?" அதில் சம்யுக்தா மனமுடைந்து போனாள்...

சகோதரனின் அன்பை அவள் எப்படி மறந்தாள்... காதல் அந்தளவிற்கு அவளது மூளையையும், மனதினையும் மழுங்கடிக்கிறதோ... அதை எண்ணி எண்ணி அவள் மனம் குமைந்து குமுறி குமுறி அழுதாள்...

"யோசித்து நல்ல முடிவா எடு... வரும் ஞாயிற்றுக் கிழமை அன்னைக்குப் பிரசன்னா வீட்டிலிருந்து உன்னைப் பெண் பார்க்க வர்றாங்க..." என்று உறுதியான குரலில் கூறிவிட்டு சித்தார்த் சென்றுவிட்டான்... சம்யுக்தா செய்வதறியாது திகைத்து நின்றாள்...

அன்று இரவு இந்திரஜித் வருகைக்காகச் சம்யுக்தா வழி மேல் விழி வைத்து காத்திருந்தாள்... அன்று பார்த்து அவன் மிகவும் தாமதமாக வீடு வந்து சேர்ந்தான்... களைத்துப் போய்க் காரில் இருந்து இறங்கியவனிடத்தில் எப்படி இந்த

விசயத்தைச் சொல்வது என்று தெரியாது அவள் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள்...

அவளின் தவிப்பை அவன் உணர்ந்தானோ என்னமோ... அவனது நடை தேங்கியது... அவன் வாய் வார்த்தையாக அவளை எதுவும் கேட்கவில்லை... ஆனால் அவனது விழி அவளிடம் 'என்ன?' என்று கேள்வி கேட்டது...

"பாவா... வர்ற ஞாயிற்று கிழமை..."

"ஞாயிற்று கிழமைக்கு என்ன...?" என்று அவன் சுள்ளென்று அவளிடம் எரிந்து விழுந்தான்...

அவன் என்னமோ, ஏதோவென்று நினைத்துக் கொண்டு அவளிடம் பேச நின்றால், அவள் ஞாயிறு அது இது என்று கதை அளப்பது கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது...

"அன்னைக்குப் பிரசன்னா என்னைப் பெண் பார்க்க வர்றாராம்..."

"என்னடி சொன்ன...?"

அடுத்த நொடி அவனது வலதுகை அவளது கழுத்தை பிடித்து நெரித்திருந்தது... பிரசன்னாவிடம் அவள் சும்மா பேசினாலே அப்படிக் கோபம் கொள்பவன்... இப்போது பிரசன்னா அவளைப் பெண் பார்க்க வருகிறான் என்றால் அவன் ஆத்திரம் கொள்ளாது இருப்பானா...? விட்டால் அவளைக் கொன்று விடுவான் போலும்... அப்படி ஒரு வெறி எழுந்தது அவனுள்...

"பாவா... எனக்குப் பயமாயிருக்கு... இப்போ நான் என்ன பண்றது...?" அவள் வலியை தாங்கி கொண்டு அவனைப் பார்த்துப் பரிதாபமாகக் கேட்டாள்... அதில் அவனது கை சற்றுத் தளர்ந்தது...

"போடி... போய் அவன் கையால் தாலி வாங்கிக் கட்டிக்கோ..." என்றவன் கோபத்தில் அவளைக் கீழே தள்ளிவிட்டான்...

இந்த விசயத்தைக் கேட்டு அவனுக்கே என்ன செய்வது என்று தெரியவில்லை... அவள் வேண்டும் என்று சொந்தம் கொண்டாடும் அவனது மனம் தான் அவளை வேண்டாம் என்று ஒதுக்கி வெறுக்கிறது... விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் அவன் அல்லாடினான்...

எந்த நிலையிலும் அவள் மீது தனக்கு இருக்கும் உரிமையை அவனால் விட்டு கொடுக்க முடியாது... அதற்காக இந்த ஜென்மத்தில் அவள் மீதான தனது உரிமையை அவன் வெளிப்படையாகக் கூற போவதும் இல்லை...

"பாவா... நீங்களே இப்படிச் சொன்னால் நான் என்ன பண்ணுவேன்... நீங்களும் என்னைக் கை விட்டு விட்டால் நான் செத்து போவேன் பாவா..." என்று அவள் அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினாள்...

சம்யுக்தாவின் இந்தச் செயல் அவனது கல் மனதினை கரைத்து அவனை ஒரு நொடி வெலவெலக்க செய்து விட்டது... அவன் தேகம் இறுகி போய் உணர்வை தொலைத்து கல்லாய் மாறிப் போனான்... அந்தக் கணம் அவளது விழி வழியே வழிந்த நீரானது அவனது கால்களை நனைத்தது... அதன் குளுமை அவனது நெஞ்சின் வெம்மை சற்றுத் தணித்துக் கல்லாய் மாறியவனுக்கு உயிர் கொடுத்தது... ஆனாலும் அவளுக்காக அவன் சுண்டு விரலை கூட அசைக்க முடியாத நிலையில் அல்லவா இருக்கிறான்...

அதற்கு மேல் அங்கிருக்க மனம் இல்லாது அவன் வீட்டிற்குள் கூட வராது காரிலேறி வெளியில் சென்று விட்டான்... அவளோ செய்வதறியாது கண்ணீரோடு கார் சென்ற திசையைப் பார்த்து கொண்டிருந்தாள்...

அன்று இரவு முழுவதும் இந்திரஜித் வீடு திரும்பவில்லை... சம்யுக்தாவோ அழுது கொண்டே அவனது வரவினை எதிர்பார்த்து தவிப்புடன் காத்திருந்தாள்...

காலை பொழுது இனிமையாக விடிந்தது... வீட்டில் இருந்தவர்கள் அவரவர் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது பிரகதீஸ்வரி பரபரப்பாகக் கணவனைத் தேடி வந்தாள்...

"நேத்து வெளியில் போன இந்தர் இன்னும் வீட்டுக்கு வரலைங்க... ஃபோன் போட்டால் எடுக்க மாட்டேங்கிறான்..." என்று கவலையுடன் அவள் கூற...

"அப்படி எல்லாம் இருக்காது ரதிம்மா... நைட் வந்துட்டு ஏர்லி மார்னிங் வெளியில் கிளம்பி போயிருப்பான்..." என்று சித்தார்த் மனைவியைச் சமாதானப்படுத்தினான்...

அந்நேரம் வாசலில் நிழலாடியது... இந்திரஜித் தான் வீட்டினுள் வந்து கொண்டிருந்தான்... அவனது நெற்றியில், கையில் அடிப்பட்டு இருந்ததற்கு அறிகுறியாகக் கட்டு போடப்பட்டு இருந்தது... பிரகதீஸ்வரி மனம் பதைக்க அவன் அருகில் விரையும் முன் சம்யுக்தா,

"பாவா..." என்று அலறியபடி ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டு கதறியழுதாள்...

அவளுக்காக அவன் தனது சுண்டு விரலை கூட அசைக்கவில்லை... ஆனால் அவள் அவனுக்கும், அவளுக்குமான உறவை எல்லோரிடத்திலும் அப்பட்டமாய்ப் பறைச்சாற்றி விட்டாள்...

எப்போதும் போல் இப்போதும் சம்யுக்தாவின் காதலில் இந்திரஜித்தின் உதடுகளில் கர்வ புன்னகை வந்தமர்ந்தது...!!!

தொடரும்...!!!

இரவு முழுவதும் தன்னவனைக் காணாத தவிப்பு, அவன் அடிப்பட்டு வந்திருப்பதைக் கண்டு ஏற்பட்ட பதற்றம் எல்லாம் சேர்ந்து சம்யுக்தாவை தன்னிலை மறக்க செய்தது... இதுநாள் வரை அவளாக அவனை அணைத்தது இல்லை... தனது மனதின் அன்பினை இப்படிச் செயலில் வெளிப்படுத்தியதும் இல்லை... அவள் எப்போதுமே அவனிடத்தில் காதலை யாசிக்கத் தான் செய்தாளே தவிர... இப்படிக் காதலை வெளிப்படையாய்க் காட்டியது கிடையாது... துயரமான இந்த நேரத்தில் அவளது மனதில் புதைந்திருந்த காதல் அவளையும் அறியாது வெளிவந்து விட்டது...

இந்திரஜித்தோ அவளது அணைப்பில் கட்டுண்டு இருந்த போதும் அவன் பதிலுக்கு அவளை அணைக்கவில்லை... அதே போல் அவளது துயரத்திற்கு ஆறுதல் கூறவும் இல்லை... அவன் எதையும் செய்ய விருப்பம் இல்லாதவனாய் உணர்வற்ற மரமாய் நின்றிருந்தான்... அந்தக் கணத்திலும் தன்னவளின் காதலில் அவன் இறுமாந்திருந்தான் என்றால் மிகையில்லை...

எந்தவொரு உணர்வுக்கும் ஆட்படாத சித்தார்த்தையே திகைத்து நிற்க செய்து விட்டான் அவனது மகன்... என்ன செய்வது என்று தெரியாது அவன் நின்றிருந்தான்... பிரகதீஸ்வரி நிலையோ சொல்லவும் வேண்டாம்... 'இது எப்படிச் சாத்தியம்?' என்று அதிர்ந்து போய் விழித்தாள்...

சூர்யா, ஜெகதீஸ்வரி, மார்த்தாண்டம், பிரபாவதி எல்லோருமே திகைத்து போய் நின்றிருந்தனர்... ஒரு தடவை கூடப் பார்த்திராத இந்திரஜித் மீது இந்தப் பெண்ணிற்கு இவ்வளவு காதலா...? அதுவும் இரண்டு வாரத்தில்...? இந்த எண்ணமே அங்கிருந்த எல்லோர் மனதிலும் ஓடியது...

நல்லவேளையாகப் பூஜா அங்கில்லை... அவள் தனது சித்தி ஸ்வேதாவுடன் மும்பை சென்றிருக்கிறாள்... அக்கா

மகளைத் தன்னுடன் வைத்து சீராட்ட எண்ணிய ஸ்வேதா தான் மும்பை செல்லும் போது பூஜாவையும் உடன் அழைத்துச் சென்றுவிட்டாள்...

"சம்யு..." சூர்யா மட்டுமே சுதாரித்துக் கொண்டு கோபத்தில் தங்கையைக் கண்டு கர்ஜித்தான்...

அண்ணனின் குரலில் நிகழ்காலம் உறைக்கத் திடுக்கிட்டவளாய் வேகமாய் இந்திரஜித்தை விட்டு விலகி நின்றாள் சம்யுக்தா... தவறு செய்து விட்ட சிறுமியை போல் அவளது உள்ளமும், தேகமும் நடுங்கியது... அதைக் கண்டு இந்திரஜித்தின் முகம் அதிருப்தியை பிரதிபலித்தது...

"அண்ணய்யா..." அவளது குரல் நடுக்கத்துடன் ஒலித்தது...

அவள் அருகில் விரைந்து வந்த சூர்யா அவளை அடிப்பதற்காகக் கையை ஓங்கினான்... கணவன் சம்யுக்தாவை அடிப்பதற்கு முன் ஜெகதீஸ்வரி அவளைத் தன்னோடு அணைத்து கொண்டாள்... மழையில் நனைந்த கோழிக்குஞ்சாய் அவளின் உடல் நடுங்கியதை கண்டு ஜெகதீஸ்வரி அவளது முதுகை ஆறுதலாய் தடவி கொடுத்தாள்...

"வதின..." அண்ணியின் ஆறுதலில் சம்யுக்தா உடைந்து போய்க் கதறினாள்...

தன் மனதின் துயரத்தை யாரிடமும் சொல்லாது இருப்பது எவ்வளவு பெரிய கொடுமை... இப்போது அந்தக் கொடுமையை அவள் அனுபவித்தாள்... அதிலும் காதலை ஏற்றுக் கொள்ளாத காதலனிடத்தில் எப்படிக் காதல் யாசகம் கேட்டு பெறுவது என்று தெரியாது தவித்தாள் அந்தப் பேதை பெண்...

சம்யுக்தாவின் கண்ணீர் சித்தார்த்தின் மனதினை உருக்கியது... அவள் அருகே வந்தவன் கண்களில் கனிவு பொங்க,

"நீ இந்தரை காதலிக்கிறியா சம்யும்மா...?" என்று கேட்க...

மாமனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது அவள் தன்னவனைத் திரும்பி பார்த்தாள்... அவனோ உணர்வில்லாத பார்வையை அவள் மீது செலுத்தி கொண்டிருந்தான்...

அந்தக் கணம் சித்தார்த்திற்கு ஒன்று புரிந்தது... தெரிந்தோ, தெரியாமலோ இந்தச் சின்னப் பெண் தனது மகனை விரும்பியிருக்க வேண்டும்... அதைச் சாக்காக வைத்துக் கொண்டு மகன் அவளை நூலில் ஆடும் பொம்மை போன்று ஆட்டுவிக்கிறான் என்று... அது எதனால் என்றும் சித்தார்த்திற்குத் தெரியும்... அது தன்னைக் காயப்படுத்தவே என்று அவன் உறுதியாக நம்பினான்...

'நான் உயிரோடு இருக்கும் வரை இது நடக்க விட மாட்டேன் இந்தர்...' என்று மனதிற்குள் சூளுரைத்துக் கொண்ட சித்தார்த்திற்குத் தெரியவில்லை தனது மகனின் மறுபக்கம்... அதற்குத் தானும் ஒரு தூண்டுகோல் என்று...

தந்தையும், மகனும் பயணிக்கும் பாதை தான் வேறு, வேறு... ஆனால் முடிவடையும் இடமோ ஒன்று தான்... அது தான் சம்யுக்தா... ஆனால் இது எதையும் சிந்தித்துப் பார்க்க முடியாதபடி இந்திரஜித்தின் வெளிநாட்டு வாசம் இடையில் தடுப்பு சுவராய் எழுந்து தடுத்தது... அந்த இடத்தில் தகப்பன் முட்டாளாகி போனான்... அந்த இடைவெளியில் மகன் புத்திசாலித்தனமாய்த் தனது காய்களை நகர்த்தி இருந்தான்...

தன்னையும் மீறி வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்து விடுமோ என்று அஞ்சிய சம்யுக்தா புடவை தலைப்பை வாயில் வைத்து பொத்தியபடி பொங்கி பொங்கி அழுதாள்...

சின்னவளின் அழுகையைக் காண சகிக்காதவளாய் பிரகதீஸ்வரி மகனிடம், "இந்தர்... என்னடா இது...? சம்யுவுக்கும், உனக்கும் என்ன சம்பந்தம்...?"

மகன் அடிப்பட்டு வந்த கவலையை விட இப்போது சம்யுக்தா பற்றிய கவலை பெரும் கவலையாகி போனது அவளுக்கு...

தாய்க்கும் பதில் பேசாது இந்தர் சம்யுக்தாவை தான் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளும் அழுது கொண்டே அவனைப் பார்த்தாள்... 'நம் உறவை எல்லோருக்கும் சொல்லி விடு' என்று அவளது விழிகள் அவனிடத்தில் இறைஞ்சுதலுடன் யாசித்துக் கொண்டிருந்தது... அவனோ வாயை திறக்காது உதடுகளை இறுக்கமாய் மூடி கொண்டான்...

"இங்கே பார் சம்யு... நீ மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்கேன்னு எங்களுக்குத் தெரியாது... ஆனால் உனக்கும், இந்தருக்கும் இடையில் ஏதோ இருக்குன்னு எங்களுக்குப் புரிகிறது... அது நல்லதற்கு இல்லை... அதை மட்டும் என்னால் உறுதியா சொல்ல முடியும்... இந்தரால் உனக்கு நல்ல காதலனாவோ இல்லை கணவனோ இருக்க முடியாது..." இப்படிக் கூறிய தகப்பனை மகன் முறைத்துப் பார்த்தான்... அதைக் கண்டு கொள்ளாது சித்தார்த் மேலே தொடர்ந்தான்...

"அவன் என்றுமே உன்னைக் காதலிக்க மாட்டான்..." என்று கூறிய தந்தையை இந்திரஜித் சிறு திடுக்கிடலோடு ஏறிட்டான்... சித்தார்த்தோ இளக்காரமாய் மகனை ஒரு பார்வை பார்த்து விட்டு,

"நான் உனக்காகப் பார்த்திருக்கும் பிரசன்னா இந்தரை காட்டிலும் எந்த விதத்திலும் சளைத்தவன் இல்லை... எல்லாவற்றையும் விட அவன் உன் மேல் அளவு கடந்த காதல் வைத்திருக்கிறான்... நாம் காதலிப்பவரை விட நம்மைக் காதலிப்பவரை நாம் நேசிப்பது தான் நல்லது சம்யு..."

சித்தார்த்தின் இந்த அறிவுரையில் இந்திரஜித்தின் உடல் விறைத்தது... முகமோ ஆத்திரத்தில் சிவந்து இறுகி போனது... அடுத்தக் கணம் அவன் சிறிதும் யோசிக்கவில்லை... சம்யுக்தாவின் அருகில் வந்தவன் அவளது கையைப் பிடித்திழுத்து,

"என்னுடன் வா..." என்று உரிமையோடு அழைக்க... அதில் அவள் விழி விரித்து ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தாள்...

கணவனது பேச்சில் பிரகதீஸ்வரி யோசனையாய் நின்றாள் என்றால், மகனது செயலில் குழம்பி போய் நின்றாள்...

"இந்தர், சம்யு கையை விடு..." என்று ஆத்திரத்துடன் கர்ஜித்தான் சித்தார்த்...

"இது எனக்கும், இவளுக்கும் இடையில் இருக்கும் பிரச்சனை... இதில் நீங்க யாரும் தலையிடணும்ன்னு நினைச்சீங்க... அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று மகனும் அதே ஆத்திரத்துடன் தந்தையைப் பார்த்துக் கத்தினான்...

"இந்தர்... கல்யாணமாகாத ஒரு பெண்ணின் கையைப் பிடிப்பதற்கு உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்...?" என்றபடி பிரகதீஸ்வரி மகனை நோக்கி கோபத்துடன் வர...

இருவருக்கும் இடையில் வந்து நின்ற சம்யுக்தா அத்தையைக் கெஞ்சுதலாய் பார்த்தாள்... அதில் பிரகதீஸ்வரி அப்படியே நின்றுவிட்டாள்...

"கல்யாணமாகாத பெண் என்னைக் கட்டிப்பிடிச்சப்போ இது உங்களுக்குத் தோணலையா...?" நக்கலாய் ஒலித்த இந்திரஜித்தின் குரலில் சம்யுக்தா அவமானத்தில் தலை குனிந்தாள் என்றால், மற்றவர்கள் அவனைக் கோபத்துடன் உறுத்து விழித்தனர்...

"இந்தர்... உன் பேச்சு, செயல் எதுவும் சரியில்லை..." என்று கூறிய ஜெகதீஸ்வரியின் குரலில் அப்படியொரு ஆற்றாமை இருந்தது... அவளது அன்பு தம்பியா இப்படி என்று...

"அக்கா, அத்தான் ரெண்டு பேரும் என்னை மன்னித்து விடுங்கள்..." என்று இருவரின் முகம் பார்க்காது மன்னிப்பு வேண்டிய இந்திரஜித் அதே வேகத்தில் தலை நிமிர்ந்து நின்று,

"அக்கா, உன்னோட வாழ்க்கைக்காகத் தான் நான் இத்தனை நாளா பொறுமையா இருந்தது... இனி உன் வாழ்க்கையைப் பத்தின கவலை எனக்கு இல்லை..."

"அது எப்படி அவ்வளவு உறுதியா சொல்லுவ இந்தர்...? இன்னமும் உன் அக்காவுடைய வாழ்க்கை என் கையில் தான் இருக்கிறது..." என்ற சூர்யாவை கண்டு இந்திரஜித் சிறிதும் அசரவில்லை...

"உங்களுக்கு என் அக்கா மீது உண்மையான காதல் இருந்தால் கை விட மாட்டீங்கன்னு நம்பறேன்... இல்லை உங்க தங்கச்சிக்காக என் அக்காவை கை விட்டீங்கன்னா..." என்று நிறுத்திவிட்டு சூர்யாவை தீர்க்கமாய்ப் பார்த்தவன்,

"அது... உங்க மனைவி பாடு, உங்க பாடு... எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை..." என்று கூறியவனைக் கண்டு எல்லோரும் திகைத்துப் போய்ப் பார்த்தனர்...

ஜெகதீஸ்வரி விழிகளில் கண்ணீர் திரண்டது... அவள் தனது தம்பி கூறிய வார்த்தைகளை ஜீரணிக்க முடியாது நின்றிருந்தாள்...

'ஜிக்கி, ஜிக்கி' என்று பாசத்துடன் தன்னைச் சுற்றி வரும் தன் தம்பியா இப்படிப் பேசியது என்று அவள் உள்ளம் மறுக அவனைப் பார்த்தாள்... இந்திரஜித்தோ உணர்வற்ற பார்வையுடன் சகோதரியை பார்த்தான்...

யுத்தகளத்தில் நிற்கும் போது நியாய, அநியாயங்கள் பார்க்க முடியாது... இது அவனுக்கும், அவனது தந்தைக்குமான யுத்தகளம் இதில் அவன் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான்... அவனின் மனதில் கனன்று கொண்டிருக்கும் கனலை யாராலும் புரிந்து கொள்ள முடியாது... அணைக்கவும் முடியாது...

சூர்யாவோ திகைத்து போனவனாய் மனைவியைப் பார்த்தவன் அவள் அழுவதைக் கண்டு அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... எத்தனை இடர் வந்த போதும் அவனால் அவனது காதல் மனைவியை விட்டு கொடுக்க முடியுமோ... முடியவே முடியாது என்பது போலிருந்தது அவனது அணைப்பு... ஜெகதீஸ்வரி சகோதரனால் ஏற்பட்ட மனக்காயத்திற்குக் கணவனிடத்தில் மருந்து வேண்டி

நின்றாள்... அவளது மனதை புரிந்தவனாய் சூர்யாவின் அணைப்பு இறுகியது...

அதைக் கண்டு இந்திரஜித் முகத்தில் வெற்றி புன்னகை எழுந்தது... சம்யுக்தாவோ நிம்மதியுடன் அண்ணன், அண்ணியைப் பார்த்து கொண்டிருந்தாள்... தன்னால் அவர்களிடையே பிளவு ஏற்படுவதை அவள் விரும்பவில்லை...

"இந்தர்... மீண்டுமொரு முறை சொல்கிறேன்... சம்யு கையை விடு..." என்ற தந்தையைக் கேலியாய் நோக்கிய இந்திரஜித்,

"என்னை என்ன உங்களை மாதிரின்னு நினைச்சீங்களா...? நம்பி வந்தவளை கை விடுவதற்கு... அவள் என்னை நம்பி வந்திருக்கிறாள்... நான் அவளைக் கைவிட மாட்டேன்..." என்றவனைக் காதல் பொங்க பார்த்தாள் அவனது காதலி...

அவனது பதிலில் எல்லோரும் அசந்து போய் விட்டனர்... மனதில் காதல் இல்லாது ஒருவனால் இந்த வார்த்தைகளைக் கூற முடியாது... வேறுவழியின்றிச் சித்தார்த் மகனிடம் தழைந்து போனான்...

"சரி நீ சம்யுவை கை விட வேண்டாம்... உனக்கும், அவளுக்கும் நாங்க கல்யாணம் பண்ணி வைக்கிறோம்... அதற்கு உனக்குச் சம்மதமா...?"

"ஏன் உங்க ஆருயிர் வளர்ப்பு மகன் பிரசன்னா என்னவானான்...?" நக்கலாய் ஒலித்த மகனது குரலில் சித்தார்த் தலையைப் பிடித்துக் கொண்டான்... அதைக் கண்டு மகனது உதடுகளில் கேலி புன்னகை தோன்றியது... அது தானே அவனுக்குத் தேவை...

"இந்தர், அப்பா கிட்ட பேசும் முறையா இது...?" கண்டிப்புடன் ஒலித்தது பிரகதீஸ்வரியின் குரல்...

"இது எனக்கும், அவருக்குமான பிரச்சினை... நீங்க இதில் தலையிடாதீங்க..."

மகன் கூறியதை கேட்டு பிரகதீஸ்வரி என்னவென்று புரியாது கணவனைக் கலக்கத்துடன் பார்த்தாள்... அவனோ விழிகளால் அவளுக்கு ஆறுதல் கூறியவன்,

"உனக்கு என்ன தான்டா பிரச்சினை... அவளைப் பிரசன்னாவுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்கக் கூடாது... அவ்வளவு தானே... ஓகே, உன் விருப்பத்துக்கு மாறாக இங்கே எதுவும் நடக்காது... ஆனா நீயும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னால் என்ன அர்த்தம்...? நீ பேசுகிற வார்த்தைக்கு அர்த்தம் புரிந்து தான் பேசுகிறாயா இந்தர்...?"

"ஏன் புரியாமல்...? நன்றாக அர்த்தம் புரிகிறது... அர்த்தம் புரியாமல் இருக்க நான் ஒண்ணும் சின்னப் பையன் இல்லை..." என்று எகத்தாள குரலில் பதில் கூறிய இந்திரஜித்,

"என் வாழ்க்கையில் திருமணம் என்கிற பேச்சுக்கே இடமில்லை... அது ஏன்னும் உங்களுக்கு நல்லா தெரியும்..." என்று கூறியவனின் முகமும், குரலும் இறுகி போனது...

"இந்தர்..." என்று கத்திய தந்தையைத் தெனாவெட்டாய் பார்த்தவன்,

"எனக்கும், இவளுக்குமான உறவின் அர்த்தம் இப்போது உங்களுக்குப் புரிந்திருக்குமே..."

இந்திரஜித்தின் வார்த்தையில் எல்லோரும் கற்சிலையாய் மாறி போயினர்... பிரகதீஸ்வரியோ அவனை அடிக்கக் கையை ஓங்கி கொண்டு வந்தாள்... மீண்டும் சம்யுக்தா இடையில் வந்து நின்று கண்ணீர் மல்க அவளைத் தடுத்தாள்...

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு சம்யு...? இந்தர் பேசுகிறதை கேட்ட தானே... அதுக்கு என்ன அர்த்தம்ன்னு உனக்குப் புரியுதா...? உனக்கு அப்படி என்னம்மா அவன் மீது காதல் வேண்டி கிடக்கு..."

மனதில் காதல் நிறைந்திருந்த போதும் பிரகதீஸ்வரி தனது கணவனிடத்தில் கொள்கை மாறாது அவனைப் பிரிந்து நிமிர்ந்து நின்றவள்... சம்யுக்தாவின் இந்த நிலை கண்டு அவளுள் கோபமும், ஆதங்கமும் ஒருங்கே எழுந்தது...

சம்யுக்தா அழுகையைத் தவிர வேறு பதில் சொல்லவில்லை... சூர்யாவிற்கு இந்திரஜித்தை கொன்றுவிடும் வெறி எழுந்தது... ஆனால் மச்சினனின் செயலுக்குத் தனது தங்கை அல்லவா உடந்தையாக இருக்கிறாள்...

"ஏய்..." என்று இந்திரஜித் சம்யுக்தாவை அழைத்ததில் அங்கிருந்தவர்களுக்குக் கோபம் வந்தது... அவள் என்ன ஐந்தறிவு ஜீவனா என்று...? ஆனால் சம்பந்தப்பட்டவளோ பயபக்தியுடன் அவனைப் பார்த்திருந்தாள்...

"உன்னோட கலெக்டர் அண்ணன் கிட்டேயும், தி க்ரேட் பிசினஸ்மேனான உன் மாமாகாரு கிட்டேயும் சொல்லிட்டு வா... உன் சம்மதத்தோடு தான் நான் உன்னைக் கூட்டிட்டு போகிறேன்னு... இல்லைன்னா தேவையில்லாம போலீஸ் ஸ்டேசனுக்கும், கோர்ட்டுக்கும் என்னால் அலைய முடியாது..."

இந்திரஜித் சொன்னதைக் கேட்டுச் சம்யுக்தா தனது அண்ணனின் முன் வந்து நின்றாள்... கலங்கிய தனது விழிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சூர்யாவை நோக்கி கையெடுத்து கும்பிட்டாள்... அவள் மீது கோபமிருந்த போதும் அவளது செயல் அவனது மனதினை வேதனைப்படுத்த அவன் அவளது கரங்களைப் பிடித்துக் கீழே இறக்கினான்...

"அண்ணய்யா... நான் பாவா கூடப் போகிறேன்... வாழ்வோ, சாவோ இனி எல்லாம் அவரோடு தான்..." என்றவளின் வார்த்தைகளில் இந்திரஜித்தின் விழிகள் அவளை இமைக்காது பார்த்திருந்தது...

"சம்யு... உனக்கு இப்படி ஒரு இழிநிலை வருவதற்கா நான் இந்தளவுக்குக் கஷ்டப்பட்டேன்..." என்றவனது குரலில்

அப்படியொரு வேதனை இருந்தது... அதை உணர்ந்த சம்யுக்தாவின் விழிகள் கண்ணீரை சொரிந்தது...

"அப்படி எல்லாம் இல்லை அண்ணய்யா... பாவா என்னோட உயிர்... அவங்க என்னைக் கஷ்டப்பட விட மாட்டாங்க..." என்றவளது வார்த்தையில் இந்திரஜித்தின் முகம் ஒளிர்ந்தது...

"இதை விட ஒரு பெண்ணை அவமானப்படுத்த யாராலும் முடியாது... இப்படி அவமானப்படுவதற்கு நீ இங்கேயே இருக்கலாம்... எல்லாம் உன் கைகளில் தான் இருக்கு சம்யு..."

சூர்யாவின் வார்த்தைகளில் அவளது மனம் அதிர்ந்தது... அவளது இத்தனை நாள் காத்திருப்பிற்கு இன்று தான் பலன் கிடைத்திருக்கிறது... அதைக் கெடுத்து கொள்வதா என்று அவள் நினைக்கும் போதே அந்த நினைப்பு சரியென்பது போல் இந்திரஜித்தின் குரல் கணீரென்று ஒலித்தது...

"அப்படி என்றால் இன்றோடு நீ என்னை மறந்து விட வேண்டும்..." என்று உறுதியாய் ஒலித்த அவனது குரலில் அவள் கலக்கத்துடன் மீண்டும் அவனிடமே ஓடி வந்தாள்...

"இல்லை, இல்லை... எனக்கு நீங்க தான் முக்கியம் பாவா..." என்க...

சின்னப் பெண்ணின் காதலை வைத்து மகன் விளையாடும் ஜித்து விளையாட்டைக் காண சகிக்காதவனாய் சித்தார்த் வேறு பக்கம் திரும்பி நின்றான்...

"மாமாகாரு..." சம்யுக்தாவின் அழைப்பில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"நான் வருகிறேன்..." என்று கண்ணீர் மல்க கூறியவளை கண்டு அவனுக்குமே கண்கள் கரித்தது... அவளது தலை மேல் கை வைத்து வருடி கொடுத்தவன்,

"எங்களை விட உனக்கு அவன் முக்கியமா போயிட்டானா சம்யு...? இனி உன்னோட சந்தோசம் கேள்விக்குறியாகி விடுமோன்னு எங்களுக்கு எல்லாம் பயமாயிருக்கும்மா..."

சித்தார்த்தின் வார்த்தைகளில் அவளுக்கு உள்ளுக்குள் நடுக்கம் வந்தது... ஆனாலும் ஏதோ ஒரு நம்பிக்கை அவளைத் தைரியமாக நிமிர்ந்து நிற்க செய்தது...

"என்னோட சந்தோசமே பாவா தான்... அவங்க என்னை என்ன செய்தாலும் சம்மதமே..." என்றவளை அதற்கு மேல் பேசவிடாது இந்திரஜித் அழைத்துக் கொண்டு செல்ல... அங்கிருந்தோர் அவனைத் தடுக்க முடியாது விக்கித்து நின்றனர்...

"மாமூ... உண்மையைச் சொல்லுங்க... இந்தருக்கும், உங்களுக்கும் இடையில் என்ன பிரச்சினை...? அவன் இப்படி எல்லாம் நடந்துக்கிற பையன் கிடையாது... அவன் இந்தளவுக்கு மோசமா நடக்கும் அளவுக்கு என்ன நடந்தது...? உங்க ரெண்டு பேருக்கு இடையில் பாவம் அந்தச் சம்யு பொண்ணு மாட்டிக்கிட்டு தவிக்கிறாள்..." என்று பிரகதீஸ்வரி உண்மையைக் கூற சொல்லி கணவனிடம் மன்றாடினாள்...

சித்தார்த்தோ பதில் பேசாது இறுகி போய் நின்றிருந்தான்... அவன் என்னவென்று பதில் சொல்வான்...? அவன் கூறும் பதிலால் மனைவியின் நிம்மதி பாதிக்கப்படுவது உறுதி... அதனால் ஒன்றும் பேசாது மௌனம் காத்தான்... முதன்முறையாக மனைவியவளுக்குப் பதில் கூற முடியாது அவன் திணறிப் போனான்...

சூர்யா மன இறுக்கத்துடன் அறைக்குச் சென்று விட்டான்... ஜெகதீஸ்வரி அவன் பின்னேயே ஓடினாள்... அறைக்குள் நுழைந்ததும் அவள் கணவனைக் கண்டு,

"சூர்யா..." என்றழைக்க...

"ப்ளீஸ்... என்னைத் தனியா விடு..." என்று அவன் கத்த...

தந்தையின் உரத்த குரல் கேட்டு தூங்கி கொண்டிருந்த ஆதித்யா எழுந்து அழ ஆரம்பித்தான்... ஜெகதீஸ்வரி அவசரமாய் மகனை தூக்கி கொண்டு வெளியேறினாள்...

இந்திரஜித் என்னும் சூறாவளி காற்று சுழற்றி அடித்ததில் அந்த வீடு துக்க வீடு போல் மயான அமைதியுடன் காணப்பட்டது...

******************

இந்திரஜித் காரை ஓட்டி கொண்டு வர சம்யுக்தா அவனைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு வந்தாள்... எப்போதும் போல் அவளது பார்வையை உணர்ந்தவனாய் அவளைத் திரும்பி கூடப் பார்க்காது,

"என்ன விசயம் சொல்லு...?" என்க...

"ரொம்ப வலிக்குதா பாவா...?" என்று அவள் தவிப்புடன் அவனது நெற்றி, கை காயங்களைச் சுட்டிக்காட்டி கேட்க...

அதைக் கேட்டு அவன் அதிர்ந்து போனவனாய் காரை நடுசாலையில் நிறுத்தி விட்டான்... நல்லவேளை அது ஆள் நடமாட்டம் இல்லாத சாலை என்பதால் அவர்கள் தப்பித்தார்கள்...

அவன் அவளை மனதளவில் காயப்படுத்தி அழைத்து வந்திருக்கும் இந்த வேளையிலும் தன்னுடைய காயத்தைப் பற்றி அக்கறையுடன் கேட்கும் அவளது காதல் அவனை உறைய செய்தது என்னவோ உண்மையே... அடுத்த நொடி அவன் சுதாரித்துக் கொண்டு காரை கிளப்பினான்... அவனது இறுகிய முகத்தைப் பாவமாய்ப் பார்த்தபடி அவள் வந்தாள்... அதைக் கண்டு அவன் மனம் இரங்கினானோ என்னவோ...

"பெயின் கில்லர் கொடுத்திருக்காங்க..."

அவனது வாயில் இருந்து உதிர்ந்த முத்துக்களை அவள் ஆசையுடன் அள்ளி கோர்த்து மனதில் சேமித்து வைத்து கொண்டாள்... அவனது உதாசீனம் இல்லாத இந்தப் பதிலே

பெண்ணவளை மகிழ்ச்சியில் ஆழ்த்த போதுமானதாய் இருந்தது... அவளது ஆசை மற்றும் சந்தோசத்தின் அளவு மிகவும் குறைவு தான் போலும்...

அடுத்த அரைமணி நேரத்தில் அவர்களுக்குச் சொந்தமான மற்றுமொரு வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்றான்... இவனது காரை கண்டதும் அங்கிருந்த காவலாளி வேகமாய் வணக்கம் வைத்து வெளிக்கதவை திறந்து விட அவனது கார் சர்ரென்று உள்ளே நுழைந்து வீட்டின் வாயிலின் முன் வந்து நின்றது...

"இறங்கு..." என்று அவளிடம் கூறியவன் தானும் காரிலிருந்து இறங்கினான்...

இருவரும் ஒரு சேர வலதுகாலை எடுத்து வைத்து வீட்டினுள் நுழைந்தனர்... அவளோ அதை இயல்பாய் செய்தாள்... அவனோ அவளின் செய்கையைக் கவனித்தபடி தானும் கவனமாய் வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே வந்தான்...

அங்கிருந்த சோபாவை கண்டதும் அதில் அமர்ந்தவனுக்கு அப்போது தான் உடலின் களைப்புத் தெரிந்தது போலும்... மருந்தின் வீரியமோ என்னமோ தலை சுற்றுவது போலிருக்க அங்கேயே கால்களை நீட்டி அப்படியே படுத்து விட்டான்... அவளைப் பற்றிய சிந்தனை கூட அவனுக்குப் பின்னுக்குப் போய்விட்டது... அப்படியொரு ஆழ்ந்த மயக்கம் அவனை ஆட்கொண்டது...

சம்யுக்தாவோ அவனது நிலையைக் கண்டு பயந்து போனவளாய் அவன் அருகில் வந்து, "பாவா... பாவா..." என்று அழுது கொண்டே அவனை எழுப்பினாள்...

அவளது பதற்றமான குரல் அவனது ஆழ்மனதின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது... இதற்கு முன்னரும் இதே போன்று அவளது பதற்றமான குரலை அவன் கேட்டிருக்கிறான்... அன்று அதிலிருந்த பதற்றம், நேசம் அவனைக் கண் விழிக்கச் செய்தது போல் இப்போதும் அது அவனைக் கண் விழிக்கச் செய்தது...

சம்யுக்தாவின் வேதனையில் கசங்கிய மலர் முகம் அவனுக்குக் கலங்கலாகத் தெரிந்தது... தனக்காக அவள் துடிப்பதை கண்டு அன்று போல் இன்றும் பிரமித்தவனின் கை தானாக எழும்பி அவளது கன்னத்தை மென்மையாய் வருடியது...

"ப்ளீஸ் யுகிம்மா... அழாதே... எனக்கு ஒண்ணும் இல்லை..." என்றான் மிகுந்த சிரமத்துடன்...

நன்றாகக் கார் ஓட்டி கொண்டு வந்தவன் திடுமென வேரொடிந்தது போல் இப்படிப் படுத்திருப்பதைக் கண்டு அவள் என்னவென்று நினைப்பாள்... அவனது கையைத் தனது கன்னத்தோடு அழுத்தி வைத்து கொண்டவள்,

"எனக்குப் பயமாயிருக்கு பாவா... உங்களுக்கு என்னாச்சு...?" கேட்கும் போதே அவளது விழிகளில் கண்ணீர் வழிந்தது... அவனுக்கு ஏதேனும் ஒன்று என்றால் அவளது உயிரல்லவா துடியாய்த் துடிக்கிறது...

"ஒண்ணும் இல்லை... கொஞ்சம் மயக்கமா இருக்கு... தூங்கி எழுந்தால் சரியாகிரும்..." என்று விட்டு விட்டு பேசியவனைக் கண்டு அவளுக்கு முற்றிலும் பயம் நீங்கவில்லை...

"மருந்தோட எபெக்ட் பேபி... நீ பயப்படாதே..."

அவளது கன்னத்தைத் தட்டி சமாதானப்படுத்தியவன் அடுத்த நொடி மறுபடியும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றுவிட்டான்... அவனது பதிலில் சற்றுச் சமாதானம் அடைந்தவள் அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு அவன் அருகில் கீழே மண்டியிட்டு அமர்ந்தாள்... முன்னால் சற்று சாய்ந்து சோபாவில் கைகளால் முட்டு கொடுத்து தனது முகத்தினைத் தாங்கியபடி அவனது தலையை மென்மையாய் கோதி கொடுத்தாள்...

அவளது விழிகள் இமைக்காது தன்னவனைப் பார்த்துக் கொண்டிருந்தது... அவன் தன்னை இத்தனை பாடு படுத்திய போதும் அவளுக்கு ஏனோ அவன் மீது கோபம் வர

மறுக்கிறது... அதே போல் வெறுப்பு கொள்ளவும் முடியவில்லை... தவறு செய்யும் சேயை மன்னிக்கும் தாயின் மனோபாவத்தில் இருந்தது அவளது அன்னை மனம்...

ஒருவேளை அவள் காதலியாக மட்டும் இருந்திருந்தால் அவனிடம் கோபப்பட்டுச் சண்டை போட்டு இருந்திருப்பாளோ என்னமோ... ஆனால் அவளால் அவனைப் பார்க்கும் போது எல்லாம் தோன்றும் தாய்மை உணர்வினை தவிர்க்க முடியவில்லை... மனதிற்குள் எதையோ வைத்துக் கொண்டு அவன் மறுகுவது அவளுக்கு நன்கு புரியத்தான் செய்தது...

அது என்னவென்று அவளுக்குப் புரியவில்லை... அது கடைசிவரை அவளுக்குத் தெரியாமல் இருந்தாலும் பரவாயில்லை... அது அவளுக்குத் தேவையும் இல்லை... அவளுக்கு வேண்டியது எல்லாம் அவன் மட்டுமே... அவனின் நலத்திற்காக அவள் தன்னையே தர விருப்பம் கொண்டாள்...

காலையில் அடிப்பட்ட நிலையில் அவனைக் கண்டதும் அவளது ஆவி துடித்ததை அவள் மட்டுமே அறிவாள்... அதன் விளைவு தான் அவள் அவனைக் கட்டியணைத்தது... அதுவே அவளது காதலை எல்லோருக்கும் பறைச்சாற்றும் என்று அவள் கொஞ்சமும் எண்ணி பார்க்கவில்லை... கெட்டதிலும் நல்லது என்பது போல் தன்னவன் தன்னை ஏற்றுக் கொண்டான் என்பதே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது... அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவனுடன் இருப்பதே அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

இனி வரும் காலங்களில் அவனுடன் இருந்து அவனது மனக்காயத்தைத் தனது அன்பு என்னும் மருந்திட்டு அவள் மெல்ல மெல்ல ஆற்றுவாள்... அந்த நம்பிக்கை அவளுக்கு மலையளவு இருந்தது...

"ஐ லவ் யூ பாவா..." என்று மெல்லமாய்க் கூறியவளின் முகத்தில் வெட்கத்தின் சாயல்...

அவளுக்கு ஆங்கிலத்தில் நன்கு பரிச்சயமான வார்த்தைகள் இந்த மூன்றும் தான்... அதுவும் அவளுடைய ஆதர்ஷ ஹீரோ 'அல்லு அர்ஜூன்' திரைப்படங்களைப் பார்த்து கற்றுக் கொண்டது... மற்றபடி அவளுக்குச் சுட்டுப் போட்டாலும் ஆங்கிலம் வராது... அதனால் தான் அவள் படிப்பை வேப்பங்காயாய் நினைத்து வெறுத்து ஒதுக்கினது... இப்படியொரு ராஜகுமாரன் அவளைத் தேடி வருவான் என்று முன்பே தெரிந்து இருந்தால் அவளும் படித்திருப்பாளோ என்னமோ...

'இனி யோசிச்சு என்ன பிரயோஜனம்...? ஒண்ணும் பண்ண முடியாது... உன் பாவாவை விட நீ எல்லாவற்றிலும் கொஞ்சம் மட்டம் தான்டி சம்யு...' அவளது மனசாட்சி கேலி குரலில் அவளைக் கிண்டல் செய்தது...

'நான் எப்படி இருந்தால் என்ன...? என்னை அப்படியே என் பாவா ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா...? அது தானே வேணும்... என்னைக் கண்டு உனக்குப் பொறாமை...' அவள் மனசாட்சியுடன் மல்லுக்கு நின்றாள்...

சற்று முன் அவனின் நேசத்தைக் கண்ட அவளது மனசாட்சி வாயை மூடி கொண்டது... அதுவும் அவளைப் போன்று காத்திருக்க முடிவு செய்தது...

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ... திடுமென அவன் விழித்து உண்ண உணவு கேட்டால் என்ன கொடுப்பது என்று யோசித்தவள் எழுந்து சமையலறையை நாடி சென்றாள்... வீட்டின் பின்பக்கமாய் இருந்த நவநாகரீகமான பெரிய சமையலறை கண்டு பிரமித்தவள்,

"இது சமைக்கிறதுக்கா...? இல்லை படுத்து தூங்கிறதுக்கா...?" என்று பிரமிப்புடன் விழிகள் விரிய கன்னத்தில் இரு கைகளை வைத்தபடி சுற்றிலும் பார்த்தாள்...

சமையலறை தான் பெரியதாக இருந்ததே ஒழிய அதில் சமைப்பதற்கு ஒரு பொருள் கூட இல்லை... அதைக் கண்டு அவளுக்குக் கவலை வந்து ஒட்டி கொண்டது... அவள்

கையில் சுத்தமாய்ப் பணமில்லை... எப்படிச் சமையல் பொருட்கள் வாங்கி வந்து சமைப்பது என்று தெரியாது அவள் விழித்தாள்...

நேரே உறங்கும் இந்திரஜித்தின் முன் வந்து நின்றாள்... ஆழ்ந்த நித்திரையில் இருப்பவனை எழுப்பி எப்படிப் பணம் கேட்பது...? என்று யோசனையுடன் அவனைப் பார்த்து கொண்டிருந்தவள் பின் முடிவு செய்தவளாய் அவன் அருகில் வந்து அவனது சட்டை பையில் இருந்து பணத்தை எடுத்தாள்... அவளது தொடுகையில் அவன் திரும்பி படுக்க, அதில் அவள் நிலைத்தடுமாறி அவன் மீதே விழுந்தாள்... அப்போது அவளது இதழ் அவனது கன்னத்தில் அழுத்தமாய்ப் பதிந்தது... பதட்டத்துடன் அவன் மீதிருந்து எழுந்தவள்,

"அச்சோ பாவா... நான் வேணும்ன்னு செய்யலை... நான் தெரியாம உங்க மேல் விழுந்துட்டேன்..."

என்னமோ அவன் முழித்துக் கொண்டிருப்பது போல் அவள் பதறி போய் உரைத்தாள்... அவனோ அவளது செயலையும், வார்த்தையும் உணராது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்... அதைக் கண்டவள் வெட்கம் கொண்டு முகத்தை மூடி கொண்டு,

"உன் பாவாவை பார்த்தால் நீ உலகமே மறக்கிற சம்யு..." என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவள் அடுத்தக் கணம் சிட்டாக வெளியில் பறந்தாள்...

காவலாளியிடம் பணத்தைக் கொடுத்துப் பொருட்களை வாங்கி வர சொன்னாள்... சிறிது நேரத்தில் அவன் எல்லாப் பொருட்களையும் வாங்கி வந்து விட்டான்... தன்னவனுக்குப் பிடித்த அவல் பாயாசத்தை முதலில் செய்து முடித்தவள் அதற்குப் பின்பே சமையலை செய்ய ஆரம்பித்தாள்... முதன்முறையாக அவள் இந்த வீட்டில் சமைப்பதால் இனிப்புடன் ஆரம்பித்தாள்...

அவள் சமையல் வேலை முடிந்து உணவு பதார்த்தங்களை மேசையில் வைத்து விட்டு சமையலறையைச் சுத்தம்

செய்து விட்டு வரும் வரை இந்திரஜித் எழவில்லை... அவனைப் பார்த்தபடி அவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவள் அசதியின் காரணமாக அப்படியே அமர்ந்தவாக்கில் கண் அயர்ந்து விட்டாள்...

நேற்றிரவு முழுவதும் அவனைக் காணாது அவள் உறங்கவில்லை... இப்போது தன்னவன் அருகாமையில் அவளுக்கு நிம்மதியான உறக்கம் வந்தது...

மதிய பொழுது கடந்து மாலை மலர்ந்த போது தான் இந்திரஜித் எழுந்தான்... அவனிடம் அசைவு உணர்ந்து கண் விழித்தவள் அவசரமாக எழுந்து நின்றாள்...

"பாவா... இப்போ எப்படியிருக்கு...?" அவள் அவனது தலையைக் கோதி கொடுத்து தாயின் வாஞ்சையுடன் அவனைப் பார்த்து கேட்டாள்...

தன் முகத்திற்கு அருகாமையில் தெரிந்த அவளது முகத்தினை இமைக்காது பார்த்தான் இந்திரஜித்... மருந்தின் மயக்கம் தெளிந்து பெண்ணவள் மயக்கம் அவனை ஆட்கொண்டதோ... தலையைக் குலுக்கி அந்த மயக்கத்தை விரட்டி அடித்தவன் தன் கண் முன் ஊஞ்சலாடி கொண்டிருந்த அவளது கருகமணி மாலையைப் பிடித்து ஆட்டி கொண்டே,

"என்னமோ தாலி கட்டிய மனைவி மாதிரி ரொம்ப உரிமையா கேட்கிற...? நீ என்னோட பொண்டாட்டியா...? இல்லை நான் வச்சுக்கிட்டவளா...?" என்று கூறியபடி அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தான்...

அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூர்மையாய் அவளது இதயத்தைக் குத்தி கிழித்து ரணப்படுத்தியது... முகம் வேதனையில் கசங்க, கண்களில் கண்ணீர் துளிர்க்க அவள் அவனை வேதனையுடன் பார்த்தாள்... அவனுக்கு அது தான் தேவையாக இருந்தது போலும்...

அவளது இந்தப் பேச்சற்ற நிலையைத் தனக்குச் சாதகமாக எடுத்து கொண்டவன் அவளது கையைப் பிடித்து இழுத்து

அவளைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டான்... பின்பு அவளது இரு கைகளோடு தனது கைகளை இணைத்து அவளைப் பின்பக்கமாய் இருந்து அணைத்து கொண்டவன் அவளது கழுத்தில் முகம் புதைத்தபடி,

"அன்னைக்கு என்னைப் பார்த்து ஒண்ணு சொன்னியே... 'நான் அந்த மாதிரி பெண் இல்லைன்னு'... இப்போ சொல்லு, நீ அந்த மாதிரி பொண்ணு தானே...?"

அவனது அருகாமையில் உள்ளம் உருகிய போதும், அவனது வார்த்தைகளில் அவளது உடல் விறைத்தது... கூடை தணலை அள்ளி தலை மேல் கொட்டியது போல் அவளது உடல் எல்லாம் நெருப்பாய்க் காந்தியது...

"அப்போ அது தான் உண்மையா...?" அவளது மௌனத்தைச் சம்மதமாக அவன் எடுத்துக் கொண்டான்...

அரை மயக்க நிலையில் தன்னிடம் அன்பாகப் பேசிய இந்திரஜித் இவன் தானா...? என்று அவளுக்குத் திகைப்பாக இருந்தது... ஆனாலும் சுதாரித்துக் கொண்டு அவனது கைகளை விலக்கி கொண்டு எழுந்தாள்... அவளது விருப்பம் உணர்ந்து அவனும் தனது கைகளை விலக்கி கொண்டான்... ஆனால் அவனது உதட்டில் தேங்கிய எள்ளல் புன்னகை மாறவில்லை... அவனது புன்னகையின் பின்னே அவளைக் காயப்படுத்தி விடும் வெறி மறைந்து இருந்தது...

"வாழ்வோ, தாழ்வோ நீங்க தான் எல்லாம்ன்னு உங்க பின்னாடி நான் வந்துவிட்டேன்... என்னை ஊரார் போற்றுவதும், தூற்றுவதும் உங்க கைகளில் இருக்கிறது பாவா... ஊரார் என்னைத் தூற்ற வேண்டும் என்பது தான் உங்க ஆசையாக இருந்தால் அதை நான் மனமார சந்தோசமாய் ஏத்துக்கிறேன்..." என்றவளை அவன் மிதப்பாய் பார்த்து வைத்தான்...

"ஆனால் ஒரு விசயம் பாவா..." அவளது வார்த்தையில் அவனது கண்கள் இரண்டும் யோசனையாய் இடுங்கியது...

"என்னோடு சேர்ந்து உங்க பெயரும் கெட்டு போகுமே என்பது தான் என் கவலை... முடிந்தவரை உங்க பெயருக்குக் களங்கம் வராமல் பார்த்துக்கோங்க..."

அவளைக் காயப்படுத்த வேண்டும் என்று நினைத்து தான் அவன் அப்படிப் பேசியது... ஆனால் பாவையவள் தனது தன்னலமற்ற அன்பால் அவனின் மனதில் பெரிய காயத்தை உண்டு பண்ணி விட்டாள்...

சம்யுக்தா தனது மாசற்ற காதலால் இந்திரஜித்தின் கற்பாறை மனதில் சிறு கீறலை உண்டாக்கி விட்டாள்...!!!

தொடரும்...!!!

"காலையில் இருந்து நீங்க எதுவும் சாப்பிட்ட மாதிரி தெரியலை... சாப்பிட வாங்க பாவா..."

தான் உண்ணாதது கூட மறந்து போனவளாய் சம்யுக்தா தன்னவனின் பசியை நினைத்து கவலை கொண்டாள்... சற்று முன் அவன் பேசியதை கூட மனதில் வைத்து கொள்ளாது தாயின் மனப்பான்மையுடன் அவனைச் சேயாய் அக்கறையுடன் கவனித்தாள்...

அவளது அக்கறையில் இந்திரஜித்தின் விழிகள் இன்னமும் யோசனையாய் இடுங்கியது... ஒன்றும் பேசாது அவன் எழுந்ததும் அவள் உணவு மேசையை நோக்கி சென்றாள்... அவள் இயல்பாய் வீட்டினுள் செல்வதைக் கண்டவனது மனதில் ஒருவித திருப்தி எழுந்தது...

தான் அவளைத் தனியே அழைத்து வந்ததும் அவள் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவாள் என்று அவன் எண்ணியிருக்க, அவளோ அவனுடனான வாழ்க்கையை எளிதாக எடுத்து கொண்டதை நினைத்து அவனுக்குப் பெருத்த ஆச்சர்யமாக இருந்தது...

அவளை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது என்பதால் தான் அவன் அவளைத் தன்னுடன் அழைத்து வந்தது... அவன் மனதில் இருந்த கோபமோ அவளைக் காயப்படுத்தி வேடிக்கை பார்த்தது... ஆனால் அவள் அதையும் இவ்வளவு எளிதாகக் கடந்து செல்வாள் என்பதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... அவனும் அது போல் அவளுடனான வாழ்க்கையை இயல்பாய் எடுத்துக் கொள்ள வேண்டுமோ... அவனுக்கு மிகுந்த குழப்பமாக இருந்தது...

நெற்றியை நீவி விட்டுக் கொண்டு யோசனையுடன் நின்றிருந்தவனைக் கண்டு பயந்து போனவளாய் அவன் அருகில் வந்தவள், "வலிக்குதா பாவா...?"

தனது யோசனையைத் தள்ளி வைத்தவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்... அவளது முகத்தில் தெரிந்த பதற்றம்,

விழிகளில் தெரிந்த பயம் எல்லாம் சேர்ந்து அவனின் மனதினை பலமாய்த் தாக்கியது... அன்றொரு நாள் அவள் தனக்காகத் துடித்தது இன்னமும் அவனது நினைவில் நீங்காது இருந்தது... முயன்று கஷ்டப்பட்டு அந்த நினைவை வேண்டாத நினைவாக அவன் புறம் தள்ளினான்... காலையில் மயக்க நிலையில் அவளிடம் தான் பேசியது அவனது ஞாபகத்தில் இல்லை போலும்...

"இல்லை..." என்று மட்டும் உரைத்தவன் மேலே பேச்சை வளர்க்காது கையைக் கழுவி கொண்டு சாப்பிட அமர்ந்தான்...

அவள் உண்டாளா?, எப்படிச் சமையலுக்குத் தேவையான பொருட்கள் வாங்கினாள்? என்று எதையும் கேட்க கூடத் தோன்றாது அவன் வேக வேகமாய் உணவை அள்ளி வாயில் திணித்தான்... அந்தளவிற்கு அவனுக்கு அசூர பசி எடுத்தது... அவளும் அவன் மனமறிந்து முகம் சுளிக்காது உடனிருந்து பரிமாறினாள்... சாப்பிட்டு விட்டு எழுந்து கை கழுவியவன் முன் அவள் அவல் பாயாச கிண்ணத்தை நீட்டினாள்...

"நாம புதுசா கல்யாணமாகி தனிக்குடித்தனம் வந்திருக்கிறோம் பார்... இனிப்புச் செய்து கொண்டாடுவதற்கு... உனக்குக் கொஞ்சம் கூட வெட்கமாய், அவமானமாய் இல்லையா...? நீயெல்லாம் என்ன பெண்ணோ...?" என்று அவன் தனக்கு இருந்த மனக்குழப்பத்தில் அவளிடம் சுள்ளென்று எரிந்து விழுந்து விட்டு அங்கிருந்து அகன்று விட்டான்...

சம்யுக்தா திக்பிரம்மை பிடித்தார் போன்று அப்படியே நின்றுவிட்டாள்... தான் செய்த தவறு தான் என்ன என்று விளங்காது மழலையாய் கலங்கி தவித்தது அவளது பிஞ்சு மனம்... பிறகு தன்னைத் தானே தேற்றிக் கொண்டு எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்த ஆரம்பித்தாள்... அவளுக்கு இருந்த மனநிலையில் உணவு தொண்டைக்குள் இறங்குமா என்று தெரியவில்லை...

அப்போது மீண்டும் அங்கு வந்த இந்திரஜித் அவளது கையிலிருந்த பாயாசம் கிண்ணத்தைத் தனது கையில் எடுத்துக் கொள்ளும் போது அவனது விழிகளில் அவளது கையில் மருதாணி கொண்டு வரைந்திருந்த ராதையின் ஓவியம் விழுந்தது... அந்த அழகிய ஓவியத்தின் அர்த்தம் புரிந்தவனாய் அவன் அதை மெல்ல வருடி விட்டான்... முன்பு அவனுக்கு மூச்சு திணறலாக இருந்த ராதையின் அன்பு இப்போது அவனுக்கு உயிர் சுவாசமாகி போனதை அவன் உணர்ந்தே இருந்தான்... அந்த நிறைவில் அவளைக் கண்டு,

"சாப்பிடு..." என்று சமாதானமாகக் கூறிவிட்டு செல்ல... அதில் அவளது முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது... அவன் தன்னைக் கவனிக்கிறான் என்பதே சந்தோசமான விசயம் அல்லவா... சற்று முன் அவளுக்கு இருந்த மனச்சுணக்கம் சடுதியில் மறைந்து மனதில் குதூகலம் நிரம்பி வழிந்தது...

"பாவா, அதைக் கொஞ்சம் சிரிச்சிக்கிட்டே சொன்னால் தான் என்னவாம்...?" மெல்லிய குரலில் முணுமுணுத்தவள் அவனது முதுகுக்குப் பின்னால் நாக்கை துருத்தி பழிப்பு காட்ட... அதை அங்கிருந்த அலமாரியின் கண்ணாடி வழியே பார்த்தவனின் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது... அதே புன்னகையுடன் அவளைத் திரும்பி பார்த்தவன்,

"நான் வெளியில் போயிட்டு வர்றேன்..." என்க...

"இந்த மாதிரி நேரத்தில் எப்படிப் போவீங்க...?" அவனுக்கு அடிப்பட்டதைச் சுட்டிக்காட்டி அவள் கவலையுடன் கேட்க...

"இது எல்லாம் என்ன அடி...? இதை விடப் பெரிய அடி எல்லாம் நான் வாங்கியிருக்கேன்..." என்று நெஞ்சை நீவி விட்டு கொண்டவனின் முகத்தில் அப்படியொரு வேதனை எழுந்தது...

"பாவா..."

அவள் அவனை நோக்கி வர முயன்ற போது... கை நீட்டி தடுத்தவன்,

"நீ சாப்பிடு..." என்றதோடு விலகி சென்றுவிட்டான்...

இன்னமும் அங்கு இருந்தால் அவளைத் தான் காயப்படுத்தி விடுவோமோ என்று அவன் பயந்து போய் வெளியில் சென்றுவிட்டான்... அதை விட அவள் உண்ணாதது அவனது மூளையில் உறைத்ததில் மேலே பேச்சு வளர்க்காது விலகி வந்து விட்டான்...

சம்யுக்தா உணவு உண்டு விட்டு அவனுக்காகக் காத்திருந்தாள்... சுமார் இரண்டு மணி நேரம் கழித்து இந்திரஜித் வீட்டிற்குள் நுழைந்தான்... அவனது இரு கைகள் நிறையப் பைகள் இருந்தது... ஒரு கையில் இருந்ததை அவள் முன் நீட்டியவன்,

"இது எல்லாம் உனக்குத் தான்... ஏதோ எனக்குத் தெரிஞ்சதை வாங்கியிருக்கேன்... இப்போதைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்கோ... பிறகு உன்னை வெளியில் கூட்டிட்டு போகிறேன்..." என்க...

அதைக் கேட்டு அவள் சந்தோசமாய்த் தலையாட்டியதை கண்டு உணர்வில்லாது பார்த்தவன் அங்கிருந்த ஒரு அறைக்குள் சென்று மறைந்தான்... சிறிது நேரத்தில் குளித்து முடித்து விட்டு வெளியில் வந்தவனின் காயங்களில் எல்லாம் நீர் இறங்கி இருந்தது...

"அச்சோ... இப்போ ஏன் குளிச்சீங்க...? பாருங்க, காயத்தில் எல்லாம் தண்ணி இறங்கியிருக்கு..." அவள் பதறி போய் அவன் அருகே வர...

"காரில் மருந்து, பேண்ட் எய்ட் போடுறதுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் இருக்கு... டோன்ட் வொர்ரி..." என்றபடி அவன் வாயிலை நோக்கி நகர...

அவள் அவன் கையைப் பிடித்துத் தடுத்து, "நீங்க உட்காருங்க... நான் போய் எடுத்துட்டு வர்றேன்..." என்க...

அவளின் தொடுகையில் திகைத்து போனவன் தன்னை மறந்து அவள் இழுத்த இழுப்பிற்கு வளைந்து

கொடுத்தான்... அவனைச் சோபாவில் அமர்த்தி விட்டு அவள் மட்டும் வாயிலை நோக்கி சென்றாள்...

"ஓய்! பட்டிக்காடு... காரை திறப்பதற்குக் கார் சாவி வேண்டாமா...?" என்று அவன் விசிலடித்து அவளை அழைக்க... அவன் கூறியதை கேட்டு அவள் அசடு வழிந்தபடி பின்னந்தலையில் தட்டி கொண்டே அவனை நோக்கி வந்தாள்...

"கார் கதவை எப்படித் திறக்கணும்ன்னு தெரியுமா பட்டிக்காடு...?" அவனது கேள்வியில் அவள் பேந்த பேந்த விழித்தாள்... இந்திரஜித்தின் காரை அவள் இதுவரை புழங்கியது இல்லை... அப்படியே அவள் அதில் சென்றாலும் அவன் தான் அவளுக்காகக் கார் கதவை திறந்து விட்டதாய் ஞாபகம்...

"ஹி... ஹி... தெரியாது பாவா..."

கொஞ்சமும் லஜ்ஜை கொள்ளாது உண்மையை அப்படியே ஏற்றுக் கொண்டவளை காண காண அவனுள் ஏதோ ஒன்று தடம் புரண்டது... அவளது அறியாமை, வெகுளித்தனம் அவனது கள்ளம் புகுந்த மனதினை கலங்க செய்தது என்னவோ உண்மை... அவன் அவளை இமைக்காது பார்த்துக் கொண்டிருக்க அவளோ அவனது முகத்திற்கு நேரே கையை அசைத்து,

"பாவா..." என்றழைக்க...

அதில் தன்னினைவு கலைந்தவன், “இந்தா கார் சாவி... செக்யூரிட்டி கிட்ட சொல்லி திறந்து எடுத்துட்டு வா..." என்க...

அவள் சென்றதும் சோபாவில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டவன் இமைகளுக்குள்ளும் அவளது பிம்பமே... இத்தனை நாட்களாக அவனை ஆட்டிப்படைப்பது அவளது இந்த வெகுளித்தனம் தானே... எப்போதும் போல் அவன் மனதில் குற்றவுணர்வு எழுந்து அவனைக் குறுகுறுக்கச் செய்தது...

"பாவா..." மீண்டும் அவளது அழைப்பு கேட்டுக் கண்களைத் திறந்தவன் அவள் கையில் இருந்த பையை வாங்குவதற்காகக் கையை நீட்டினான்...

"உங்களால போட முடியாது பாவா... நானே மருந்து போட்டு விடறேன்..." என்றவள் அவன் மேலே பேசும் முன் மருந்து பொருட்களை மேசை மீது பரத்தி வைத்தாள்...

"இதில் எது போடணும்ன்னு மட்டும் சொல்லுங்க..."

"பட்டுக்காடு... பேச்சு மட்டும் தான்..." என்று அவளைச் செல்லமாய்க் கடிந்தபடி அவன் மருந்து பொருள்களை எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"ஒரே வீட்டில் இரண்டு புத்திசாலிகள் இருந்தால் வீடு தாங்காது பாவா... அதனால் நம் வீட்டில் நீங்க மட்டும் புத்திசாலியா இருந்துட்டு போங்க... அப்போ தான் வீட்டில் சண்டை, சச்சரவு குறைவா இருக்கும்..."

'யாராவது ஒருவர் விட்டு கொடுத்து வாழ்ந்தால் தான் வாழ்க்கை சிறக்கும்' என்கிற வாழ்க்கை தத்துவத்தை மிக எளிதாகக் கூறியவளை கண்டு அவன் வியப்பாய் பார்த்தான்... அவளோ அவனது பழைய கட்டுகளை அவிழ்த்து பார்த்துவிட்டு அதிலிருந்த காயத்தின் ஆழத்தை கண்டு கண் கலங்கி போனாள்...

"எல்லாம் என்னால் தான் இல்லையா...? நான் உங்களைத் தொந்திரவு பண்ணாமல் இருந்திருந்தால் அந்த நேரத்தில் நீங்க வெளியில் போயிருக்க மாட்டீங்க... இப்படி அடியும் பட்டிருக்காது..."

விபத்து நடந்தது எதனால் என்பதை இப்போதும் உணர்ந்தவனாய் அவன் தனக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தான்...

"நான் உங்களுக்கு ரொம்பத் தொந்திரவு கொடுக்கிறேனோ பாவா..."

சிறு பிள்ளை போல் தனது முகத்தினைப் பார்த்து கேட்டவளை கண்டு அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று தெரியவில்லை... அவனையும் அறியாது அவனது தலை மறுப்பாய் அசைந்தது... அதைக் கண்டு அவளது முகத்தில் மகிழ்ச்சி மீண்டது... அந்தச் சந்தோசத்துடன் அவனது காயங்களுக்கு மருந்திட்டுப் புதுக் கட்டுக்களைக் கட்டி விட்டாள்...

அவளது அருகாமையில் அவனது மனம் ஒரு நிலையில் இல்லாது தத்தளித்தது... எல்லாக் கவலைகளையும் மறந்து சேயாய் அவளது மடியில் முகம் புதைத்து படுக்க வேண்டும் என்கிற ஆவல் பேராவலாய் அவனுள் எழுந்தது... அந்தளவிற்கு அவனது மனதில் துயர் மண்டியிருந்தது... இந்தத் துயர் அவனை விட்டு என்று விலகும் என்று அவனுக்குத் தெரியாது...

சில விசயங்களுக்குக் காலம் தான் சிறந்த மருந்து என்பார்கள்... அது போல் அவனது துயருக்குக் காலம் சிறந்த மருந்தாகப் பணியாற்றுமா என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்... காலம் மாற்றுகிறதோ இல்லையோ சம்யுக்தா தனது அன்பால் மாற்றுவாள் என்கிற நம்பிக்கை அவனுள் எழுந்தது... ஆனால் அவனது மனக்காயம் ஆறுவதற்குள் அவனது சீதை எத்தனை முறை தீக்குளிக்கப் போகிறாளோ...? அது அவனுக்கே தெரியவில்லை... அவன் போகும் வழி தவறு என்று அவனது புத்திக்கு உறைத்தாலும், அவனது மனதிற்கு அது தெரியவில்லையே... காயமடைந்த மனது பழிவாங்க துடிக்கிறதே...

கட்டு போட்டு விட்டு எழுந்தவள், "என்ன சாப்பிடறீங்க பாவா...?" என்று கேட்க...

"எதுவும் வேண்டாம்... ஈவினிங் சாப்பிட்டதே ஃபுல்லா இருக்கு..."

"அப்போ பால் மட்டுமாவது குடிங்க..." என்று கூறிவிட்டு அவள் உள்ளே செல்ல அவன் அங்கிருந்த அறைக்குச் சென்றான்...

பால் அடங்கிய கோப்பையை எடுத்துக் கொண்டு வந்த சம்யுக்தா வரவேற்பறையில் அவனைக் காணாது திகைத்தவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்... வரவேற்பறையைத் தாண்டியிருந்த அறையில் இருந்து வெளிச்சம் வருவதை உணர்ந்து அவள் அங்குச் சென்றாள்...

அறைக்கதவு விரிய திறந்திருந்தது... இந்திரஜித் படுக்கையில் கால் நீட்டி அமர்ந்து கண் மூடி பின்னுக்குச் சாய்ந்திருந்தான்... அவளும் எந்த விகல்பமும் இல்லாது உள்ளே சென்றவள்,

"பாவா... இதைக் குடிச்சிட்டு படுங்க..." என்று பால் கோப்பையை அவன் முன் நீட்ட...

அவள் வரவு உணர்ந்து விழி திறந்த அவனோ அவளையும், அவள் கையிலிருந்த பால் கோப்பையும் மாறி மாறி பார்த்தான்... அவனது பார்வையைக் கண்டு முதலில் புரியாது அவனை உற்று நோக்கியவள் பின்பு அர்த்தம் புரிந்து 'ஏழுகுண்டலவாடா' என்று மானசீகமாகத் தலையில் கை வைத்தாள்... எத்தனை சினிமாக்களில் இது போன்ற காட்சிகளை அவள் பார்த்திருக்கிறாள்... வலிய வந்து அவனிடத்தில் மாட்டி கொண்டது போல் அவள் திருதிருவென விழித்தாள்...

இந்திரஜித் பால் கோப்பையைப் பக்கவாட்டு மேசை மீது வைத்தவன் எழுந்து அவள் அருகில் வந்தான்... அவனது செய்முறை விளக்கத்தை ஏற்கெனவே அவள் அறிந்தவளாயிற்றே... அதனால் அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்... அவனும் அவளை இமைக்காது பார்த்தபடி அவளை நோக்கி விடாது முன்னேறினான்...

சுவர் தடுக்க நின்றவள் அவனைப் பார்த்துப் பாவமாக, "வேண்டாம் பாவா..." என்க...

அவனோ அதைக் கண்டு கொள்ளாது மேலும் அவளை நோக்கி நெருங்கினான்... அவளது உள்ளுணர்வு எச்சரித்தாலும் அவளது காதல் மனம் அவனிடத்தில்

மொத்தமாய்ச் சரணடைய தான் செய்தது... விழி மூடி அவனது அருகாமையை விரும்பியவளின் மனம் மன்னவனின் தொடுகைக்காக ஏங்கியது... பெண்ணவள் அச்சம் துறந்து தன்னவனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாள்...

சில நொடிகள் அமைதியாகக் கழிந்தது... அவனது ஆவேசமான இதழொற்றலையும், முரட்டுத்தனமான அணைப்பையும் எதிர்பார்த்து ஏமாந்தவளாய் அவள் மெல்ல விழி மலர்த்தினாள்... அவள் கண் திறப்பதற்காகவே காத்திருந்தார் போன்று அவன் நமட்டு சிரிப்புடன் 'என்ன?' என்பது போல் புருவம் உயர்த்தினான்...

'ஒன்றும் இல்லை' என்று தலையசைத்தவளின் கன்னத்தில் நாண பூக்கள் பூத்தது... அவன் முகம் காண நாணி அவள் வெட்கத்தில் தலை குனிந்தாள்... அதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்... அதில் நாணத்தைக் கைவிட்டவளாய் அவள் அவனை நிமிர்ந்து நோக்கி அவனது சிரிப்பை ரசித்துப் பார்த்தாள்...

இந்த இரு வாரங்களில் அவன் இப்படி மனம் விட்டு சிரித்து அவள் பார்த்தது இல்லை... அவனை இப்படிச் சிரிக்க வைப்பதற்காகவே தான் எத்தனை பழி சொல்லை வேண்டுமானாலும் தாங்கி கொள்ளலாம் என்றே அவளது பேதை மனம் நினைத்தது...

சிரிப்பை நிறுத்தியவன் அவளின் கையைப் பிடித்து, "வா..." என்றபடி அந்த அறைக்கு எதிரில் இருந்த மற்றொரு அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்...

அந்த அறைக்கதவை திறந்து உள்ளே சென்று மின்விளக்கை உயிர்ப்பித்தவன், "இது தான் உனக்கான ரூம்..." என்க...

அவள் அவனது இன்னொரு பரிமாணத்தில் அவனை இமைக்க மறந்து பார்த்திருந்தாள்... வாய் வார்த்தையாய் அவளை 'அந்த மாதிரி பெண்' என்று குற்றம் கூறுபவன் அவன்... அவன் நினைத்திருந்தால் இந்தக் கணம் கூட

அவளை உண்மையில் அந்த மாதிரியான பெண்ணாய் மாற்றியிருக்க முடியும்... இவ்வளவு ஏன் அவளே அதற்குச் சம்மதம் தெரிவித்தாளே... அப்படி இருந்தும் அவன் அவளை ஆட்கொள்ளாது அரவணைக்கிறான் என்றால் அவன் மனம் எந்தளவிற்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும்...

கண்ணன் மீது காதல் கொண்ட ராதையை விடத் தான் மிகவும் பாக்கியசாலி என்றே அவளுக்குத் தோன்றியது... இப்படிப்பட்ட ஒருவனை அடைவதற்கு அவள் அதிர்ஷ்டம் பண்ணியிருக்க வேண்டும்... அவளது பெண்மைக்கு அவன் காவலனாய் மாறி இந்தக் கணம், அவனுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தது அவளது காதல் மனம்... அவனுக்காக உயிரையும் தர அவள் சித்தமாக இருந்தாள்... இந்த ஜென்மத்திற்கு அவனது அன்பு ஒன்றே போதும் என்று அவளுக்குத் தோன்றியது...

அடுத்தக் கணம் அவள் மனம் நெகிழ்ந்தவளாய் அவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தாள்... திடுமென அவள் அணைத்ததில் அவன் திகைத்து போய் நின்றிருந்தான்... இப்போதும் அவனால் அவளை அணைக்க முடியவில்லை... விலக்கவும் முடியவில்லை... கை முஷ்டி இறுக அவன் அப்படியே நின்றிருந்தான்... சிறிது நேரம் கழிந்ததும்,

"ஷ்... எத்தனை நேரம் இப்படி அழுதுக்கிட்டு இருக்கப் போகிற... நேரமாச்சு பார்... தூங்கி ரெஸ்ட் எடு... எதுவாக இருந்தாலும் காலையில் பேசி கொள்ளலாம்..." என்றவன் அவளை வலுக்கட்டாயமாய் விலக்கி விட்டு வேகமாய் அறையை விட்டு வெளியேறினான்...

இந்திரஜித் சென்றதும் அறைக்கதவை சாத்தி விட்டுப் படுத்த சம்யுக்தா அவன் கொடுத்த பாதுகாப்பு உணர்வில் நிம்மதியாய் உறங்கினாள்... அவள் தன்னை வந்தடைந்த நிம்மதியில் அவனும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்...

மறுநாள் காலையில் இந்திரஜித் எழும் போதே புன்னகை முகத்துடன் எழுந்தான்... ஏனோ தெரியவில்லை மனதில் பாரமிறங்கியது போல் ஒரு தோற்றம்... அந்த

உற்சாகத்துடன் அவன் அறையை விட்டு வெளியில் வந்தான்...

"பாவா எழுந்துட்டீங்களா...?"

வரவேற்பறையில் அமர்ந்திருந்த சம்யுக்தா அவனைக் கண்டதும் முகம் மலர எழுந்தாள்... அந்த நொடி அவளது மலர்ச்சி அவனையும் தொற்றிக் கொண்டது... அவன் புன்னகை முகத்துடன் சோபாவில் அமர்ந்தான்...

சம்யுக்தா உள்ளே சென்று பால் கோப்பையை எடுத்து வந்து அவனிடத்தில் கொடுத்தவள் தனது காபியை எடுத்துக் கொண்டு மற்றொரு சோபாவில் அமர்ந்தாள்... பாலை பருகியவனின் பார்வை அவளையும் சேர்த்துப் பருகியது... நேற்று அவன் வாங்கிக் கொடுத்த சுடிதாரில் சின்னப் பெண் போல் அவள் பேரழகுடன் இருந்தாள்...

தனக்கான காபியை ருசித்துக் குடித்துக் கொண்டிருந்தவளை கண்டு, "உனக்கு எத்தனை தடவை சொல்றது காபி குடிக்காதேன்னு..."

அவனது வார்த்தையில் அவள் முகம் மலர அவனைத் திரும்பி பார்த்தாள்... அவளுக்கு இருக்கும் வேலைப்பளுவில் அவள் பெரும்பாலும் சாப்பிட மறந்து போவாள்... அப்போது எல்லாம் அவள் காபி குடித்துத் தான் தனது பசியை ஆற்றி கொள்வாள்... அதனால் அவளது வீட்டில் கும்மிடி அடுப்பில் எப்போதும் காபி சூட சூட இருந்து கொண்டே இருக்கும்... நேரம் காலம் தெரியாது அவள் அதை வாயில் ஊற்றி கொள்வாள்...

அதை ஞாபகம் வைத்து கேட்டவனைக் கண்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... இதுநாள் வரை அவளைத் தெரியாது என்று கூறி கொண்டிருந்தவன் அவளுடன் அவன் இருந்த நாட்களை நினைவுப்படுத்தியதில் அவளுக்குப் பெருத்தச் சந்தோசமாக இருந்தது...

அதை அவனும் உணர்ந்தானோ என்னமோ... மேலே பேசாது அமைதியாகப் பாலை பருகினான்... அவன் பால் பருகி முடிக்கும் வரை அமைதியாக இருந்தவள் பின்பு அவன் முன் வந்து நின்று தனது வலக்கையை அவனின் முகத்திற்கு நேரே நீட்டினாள்... அதில் சில நூறு ரூபாய் நோட்டுகளும், சில்லறை காசுகளும் இருந்தது...

"என்னது இது...?"

"நேத்து..." என்று தயங்கியவளை உற்று பார்த்தவன்,

"நேத்து...?"

"மளிகை சாமான் வாங்கிறதுக்காக உங்க சட்டை பையில் இருந்து பணம் எடுத்தேன்... அதிகம் எல்லாம் இல்லை கொஞ்சம் தான்..." என்று முகத்தைச் சுருக்கி கொண்டு பதற்றமாய்க் கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஆனாலும் அதை அடக்கியபடி,

"என் சர்ட் பாக்கெட்டில் கை வைக்கும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்திருச்சா...?" என்று அவன் போலி கோபத்துடன் கேட்க...

"எனக்காக எடுக்கலை... உங்களுக்குப் பசிக்குமேன்னு தான்..." என்று இழுத்தவளின் உள்ளங்கையைப் பணத்துடன் மூடியவன் அவளைப் பிடித்து இழுத்து தன் மடி மீது அமர்த்தி அவளை ஆசையாக அணைத்துக் கொண்டான்... அவளும் அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கினாள்...

"ஏதோ ஒரு வேகத்தில் நான் உன்னை இங்குக் கூட்டிட்டு வந்துட்டேன்... அதனால் தான் நான் இது பத்தி எல்லாம் யோசிக்கலை... இனி உன்னோட செலவுக்குன்னு தனியா பணம் கொடுக்கிறேன்... என்ன சரியா...?"

அவனது இணக்கமான பேச்சு, அவனது இறுக்கமான அணைப்பு, அவனது அருகாமை எல்லாம் சேர்த்து பாவையவளின் மனதினை மயக்கியதில் அவள் மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் தலையை ஆட்டினாள்...

"இது என்ன அசிங்கமா இருக்கு...? முதலில் இதைக் கழட்டி போடு..."

சம்யுக்தாவின் கழுத்தில் கிடந்த கருகமணியை அவன் சுட்டிக்காட்டி கூறினான்... அதைக் கேட்டு சம்யுக்தா அதிர்வுடன் அவனைப் பார்த்தாள்...

"உன்னைத் தங்கத்திலும், வைரத்திலும் இழைக்க நான் தயாராக இருக்கும் போது இது எதற்குக் கண் திருஷ்டி மாதிரி... எனக்குப் பிடிக்கலை..." என்றவன் முகத்தில் ஒவ்வாமை அப்பட்டமாய்த் தெரிந்தது...

"உங்க தங்கம், வைரம் எதுவும் எனக்கு வேண்டாம் பாவா..." என்றவளை அவன் ஆழ்ந்து பார்க்க...

"எனக்கு இது மட்டும் போதும்..."

"அடேங்கப்பா... பொன்னை விரும்பாத பொண்ணா...? ஆச்சர்யமாயிருக்கே..." என்று அவன் போலியாக வியக்க...

"இது என்னோட அம்மவோடது... என்னுடைய உயிர் மாதிரி... என் உடம்பில் உயிர் இருக்கும் வரை நான் இதைக் கழட்ட மாட்டேன்..."

"அப்போ நான் உன் உயிர் இல்லையா...?"

"அச்சோ... நீங்களும் என்னுயிர் தான்..."

"ஓஹோ... இதுவும் உன்னுயிர்ன்னு சொல்ற...? என்னையும் உன்னுயிர்ன்னு சொல்ற... அப்போ நானும், இந்த ஜட பொருளும் ஒண்ணா...?"

"பாவா... எனக்கு இதுவும் வேணும், நீங்களும் வேணும்..." கண்ணீர் மல்க தன்னைப் பார்த்து கெஞ்சியவளை போனால் போகிறது என்று விட்டு விட்டவனுக்கு அப்போது தான் அந்த வித்தியாசம் புலப்பட்டது... மேலும் அவன் அவளது முகத்தினை உற்று பார்க்க... அதில் அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்...

"ஏமி பாவா...?" (என்ன பாவா...?)

"உன் முகத்தில் ஏதோ வித்தியாசம் தெரியுதே..."

"என்ன வித்தியாசம்...?" அவனைப் பார்த்து கேட்டவளின் கை வித்தியாசம் தேடி தனது முகத்தில் அங்கும் இங்கும் அலைபாய்ந்தது...

அப்போது தான் அது என்ன என்று அவனுக்கு உறைத்தது... அவளது கை கொண்டே அவளது நெற்றி மீது கீழிருந்து மேலாக நாமம் போல் ஒரு கோடு இழுத்தவன்,

"இது தான் மிஸ்ஸிங்..." என்றான் சன்ன சிரிப்புடன்...

அவன் ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்ப்பதில் அவளது மனம் இறக்கை கட்டி கொண்டு சந்தோச வானில் பறந்தது... தன்னவன் தன்னைக் கவனிப்பது சுகமான ஒன்று அல்லவோ...

"இது எல்லாம் எடுத்துட்டு வர நீங்க நேரம் கொடுக்கலையே..."

"பழசு எதுக்கு உனக்கு...? நான் புதுசா வாங்கித் தர்றேன்... இன்னைக்கு ஈவினிங் வெளியில் போகலாம்... ஓகேவா..."

"ம்..." என்றவள் மெதுவே,

"இப்போ எனக்கு வேலையிருக்கு..." என்க...

"போ... நானா வேண்டாம்ங்கிறேன்..." என்று குறும்பு குரலில் கூறியவனின் கைகள் அவளை இன்னமும் இறுக்கி அணைத்துக் கொண்டது...

"பாவா..." என்று கெஞ்சியவளை கண்டு அவன் சிரித்தபடி தனது கைகளை விலக்கினான்...

அவன் விட்டதும் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் ஒரே ஓட்டமாகச் சமையலறைக்கு ஓடி வந்த சம்யுக்தாவிற்கு மனது நிறைந்திருந்தது... அவள் இங்கு வரும் போது பயந்து கொண்டு தான் வந்தாள்... அது போல் அவனும் அவ்வப்போது வார்த்தைகளால் குத்தி குதறுகின்றான் தான் இல்லையென்று சொல்லிவிட முடியாது... ஆனால்

இப்போது இந்த இந்திரஜித்தின் இணக்கமான நிலை அவளுக்கு நிரம்பச் சந்தோசத்தைக் கொடுத்தது என்னவோ நிஜம்...

காலை உணவு முடித்து விட்டு வரவேற்பறையில் வந்தமர்ந்த இந்திரஜித் தனது அலைப்பேசியை எடுத்து அலுவலகத்திற்கு அழைத்தவன் தான் கையெழுத்து போட வேண்டிய கோப்புகளை வீட்டிற்கு அனுப்பி வைக்கச் சொன்னான்... யாரிடம் என்பதை அவன் சொல்லாமல் விட்டது தான் பெருந்தவறாகி போனது...

அந்தக் கோப்புகளை எடுத்துக் கொண்டு பிரசன்னா இங்கு வந்து சேர்ந்தான்... ஏனெனில் எல்லாமே இரகசியம் காக்கப்பட வேண்டியவை... அதனால் அவனே நேரில் வந்தான்... பிரசன்னா அங்கு வந்த பின்பு தான் அறிந்தான் சம்யுக்தா இந்திரஜித்துடன் இருப்பதை...

அவன் நம்ப இயலாது அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்... அவனது பார்வையை அவள் உணர்ந்தாலும் அதைக் கண்டு கொள்ளாது அவனைப் புன்னகையுடன் வரவேற்றாள்...

"வாங்க பிரசன்னா..." என்க...

"பழைய உறவை புதுப்பிக்க இங்கு வந்தாயா...?" என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பியபடி இந்திரஜித் ஆத்திரத்துடன் பிரசன்னாவை முறைத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான்...

இந்திரஜித்தின் கோபம் வழக்கம் போல் பாவையவளை கலக்கம் அடைய செய்தது...!!!

தொடரும்...!!!

"குட்மார்னிங் சார்..."

பிரசன்னா இந்திரஜித்தின் குத்தலான வார்த்தைகளைக் கண்டு கொள்ளாது ஒரு ஊழியனாய் அவனுக்கு வணக்கம் வைத்தான்... அதைக் கண்டு இந்திரஜித்தின் முகத்தில் இளக்காரமான ஒரு புன்னகை வந்தமர்ந்தது... 'இது தான் உன் நிலை' என்பது போல் அவன் மிதப்பாய் பிரசன்னாவை பார்த்தபடி அங்கிருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தான்... மறந்தும் அவன் பிரசன்னாவை உட்கார சொல்லவில்லை...

பிரசன்னா சூழ்நிலையை இலகுவாய்க் கையாண்டதும் சம்யுக்தா நிம்மதியுடன் உள்ளே சென்றாள்...

"நான் அஃபீசியலா வந்திருக்கேன் சார்..." என்று இந்திரஜித் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தவன் தன் கையிலிருந்த கோப்புகளை அவன் முன்னிருந்த மேசை மீது வைத்தான்...

"நான் உன்னை வர சொல்லலையே...?" என்று அலட்சியத்துடன் இந்திரஜித் கூற... பிரசன்னா ஒன்றும் கூறாது ஒரு கோப்பை எடுத்து அவனிடம் கொடுத்தவன்,

"எல்லாம் கான்ஃபிடன்சியல் ஃபைல்ஸ் சார்... அதனால் தான் நானே நேரில் வந்தேன்..."

"அப்படியா...?" நம்பாத பாவனையில் கேட்ட இந்திரஜித்தின் பார்வை 'சம்யுவை பார்க்காது உன்னால் ஒரு நாள் கூட இருக்க முடியவில்லை... அப்படித் தானே' என்று அவனைக் குற்றம் சாட்டியது...

அது பிரசன்னாவுக்குப் புரிந்த போதும் அவன் அமைதி காத்தான்... தன்னை மகன் போன்று பார்க்கும் சித்தார்த், பிரகதீஸ்வரிக்காக அவர்களது மகனை அவன் பொறுத்துப் போனான்...

இந்திரஜித் கோப்பில் கவனம் செலுத்திய போது சம்யுக்தா கையில் காபி கோப்பையுடன் அங்கு வந்தாள்... அவள் வரவை உணர்ந்து நிமிர்ந்து பார்த்த இந்திரஜித் அவளைத் தீயாய் உறுத்து விழித்தான்... அவளோ அவனைக் கவனிக்கவில்லை... அதனால் அவனது கோபத்தினை அவள் உணரவில்லை...

"பிரசன்னா... காபி எடுத்துக்கோங்க..." வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரிப்பது போல் அவள் அவனை உபசரித்தாள்...

"யுகி..." இந்திரஜித் கோபத்துடன் கத்தியதில் சம்யுக்தாவின் கையிலிருந்த காபி கோப்பை சிறிது ஆடி அடங்கியது...

"அதை இங்கே வச்சிட்டு போ..." என்று அவன் மேசையைச் சுட்டிக்காட்ட...

அவள் பயத்துடன் அவனைப் பார்த்தபடி காபி கோப்பையை மேசை மீது வைத்தவள் அடுத்த நொடி அங்கிருந்து ஓடி விட்டாள்...

"என்ன டைப் பண்ணியிருக்க...? ஒரு வார்த்தை மாறினால் முழு அர்த்தமும் மாறிவிடும்ன்னு உனக்குத் தெரியாதா...? இது கூடத் தெரியாமல் நீ எல்லாம் என்ன படிச்சி கிழிச்ச..."

இந்திரஜித் கோபத்துடன் கையிலிருந்த கோப்பை பிரசன்னாவின் முகத்தில் விட்டெறிந்தான்... அலுவலக வேலையைச் சுட்டிக்காட்டி அவன் மீதிருந்த தனிப்பட்ட வெறுப்பை அவனிடத்தில் காட்டினான்... அதில் இருந்த தவறு பிரசன்னாவுக்குப் புரிந்ததால் அவன் அமைதியாகக் கீழே விழுந்த கோப்பை எடுத்து வைத்து விட்டு மற்றொரு கோப்பை எடுத்து இந்திரஜித்திடம் நீட்டினான்...

இந்திரஜித் கோபமாய் அதை வாங்கியவன் எரிச்சலுடன் அதிலிருந்த காகிதங்களைப் புரட்ட துவங்கினான்... ஒருவழியாய் அவன் எல்லாக் கோப்பிலும் கையெழுத்து போட்டுக் கொடுத்ததும் பிரசன்னா அதை எல்லாம் எடுத்துக் கொண்டு கிளம்பினான்...

வீட்டை விட்டு வெளியில் வந்த பிரசன்னா தோட்டத்தில் தனியே அமர்ந்திருந்த சம்யுக்தாவை கண்டு அவளை நோக்கி சென்றான்... அவனுக்கு அவள் இந்திரஜித்துடன் வந்த விசயம் எதுவும் தெரியாது... அது போல் சித்தார்த் தன்னைச் சம்யுக்தாவை பெண் பார்க்க அழைக்க நினைத்திருந்த விசயமும் அவனுக்குத் தெரியாது... சித்தார்த் பிரசன்னாவிடம் அதைப் பற்றிக் கூறி சம்மதம் வாங்கும் முன் என்னவெல்லாமோ நடந்து முடிந்து விட்டது...

"சம்யு..." அவன் அழைத்ததும் திரும்பி பார்த்தவள் தான் அமர்ந்திருந்த கல்மேடையில் இருந்து எழுந்து நின்றாள்...

"நீ எப்படி இந்தர் சாரோட ஒரே வீட்டில்...? என்னால் நம்ப முடியவில்லை..."

அவளுக்கும் தான் இன்னமும் நம்ப முடியவில்லை...

"ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா...?" இதைக் கேட்கும் போது அவனது வார்த்தையில் சிறிது வேதனை எட்டிப்பார்த்தது...

அவள் மௌனமாய் மறுப்பாய் தலையாட்டினாள்...

"வாட்...? நீ என்ன சொல்ற...? கல்யாணம் பண்ணாமல் அவர் கூட நீ எப்படி வந்த சம்யு...?"

"எப்படி வந்தாள் என்றால்...? இரண்டு கால்களால் தான்..."

பிரசன்னாவின் பின்னால் இருந்து நக்கலாய் குரல் கொடுத்தபடி அங்கு வந்து சேர்ந்தான் இந்திரஜித்... சம்யுக்தா அருகில் வந்து அவளது தோளில் கை போட்டு அணைத்தபடி அவன் பிரசன்னாவை அலட்சியமாய்ப் பார்த்தான்...

"சார்... நீங்க பண்றது அநியாயம்... உலகம் தெரியாத அப்பாவி பெண்ணின் வாழ்க்கையை நீங்க இப்படி நாசமாக்கிறீங்களே..."

"ஷட்டப் பிரசன்னா... வார்த்தையை அளந்து பேசு... நீ யார், உன் தகுதி என்ன என்பதை மறந்துட்டு பேசுற..."

"நான் யார், என் தகுதி என்னன்னு எனக்கு நல்லா நினைவு இருக்கு சார்... ஆனா ஒரு மனிதாபிமானமுள்ள மனிதனா நான் பேசுவதைத் தடை செய்ய உங்களால் முடியாது..." என்று இந்திரஜித்திடம் நிமிர்வாய் கூறியவன் பின் சம்யுக்தாவிடம் திரும்பி,

"இப்படி ஒரு இழிநிலை உனக்குத் தேவையா...? இவனால் உன்னைக் கௌரவப்படுத்த முடியாது... நிச்சயம் இவனால் நீ அவமானப்படப் போகிற சம்யு... "

"பிரசன்னா... நீ என் கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கும் ஒரு வேலைக்காரன்னு மறந்திட்டு பேசுற..." இந்திரஜித்தின் குரல் ஆக்ரோசமாய் ஒலித்தது...

சம்யுக்தா இருவரையும் மாறி மாறி பயத்துடன் பார்த்திருந்தாள்...

"உன்னோட மரியாதை குறையும் போதே நீ அதை உணர்ந்திருக்க வேண்டாமா...? நான் என் வேலையை ராஜினாமா செஞ்சு ஒரு நிமிசமாகுதுன்னு..." என்றவன் தனது கைகளில் இருந்த கோப்புகளைக் கல்மேடை மீது தூக்கி போட்டான்... அதைக் கண்டு இந்திரஜித் அவனைக் கொலைவெறியுடன் பார்த்தான்...

"என் ஸ்டாஃபாக இருப்பதால் தான் நான் உன்னை என் வீட்டினுள் அனுமதிச்சது... இப்போ நீ கிளம்பலாம்... ஐ சே கெட்அவுட்..." கோபமாய் வாயிலை நோக்கி கையை நீட்டினான் இந்திரஜித்...

அதற்கு எல்லாம் அசராது நின்ற பிரசன்னா, "சம்யு... நான் சொல்றதை கேள்... ப்ளீஸ் என்னுடன் வந்து விடு... என்னோட காதல் மனைவிங்கிற கௌரவமான பதவியை நான் உனக்குத் தருகிறேன்... உன்னுடைய அருமை தெரியாதவனிடத்தில் நீ மாட்டி கொண்டு வீணே போகாதே..."

பிரசன்னா பேசி கொண்டிருக்கும் போதே இந்திரஜித் ஆத்திரத்துடன் அவனின் சட்டை காலரை பிடித்து

விட்டான்...

"என்ன தைரியம் இருந்தால் என் வீட்டுக்கே வந்து அவளைக் கூப்பிடுவ..."

"இதற்கு எதற்குத் தைரியம் வேணும்...? அவள் என்ன உன் மனைவியா? இல்லை காதலியா...? உன்னவளை நான் கூட்டிக்கிட்டு போகிறதுக்கு... உனக்குத் தான் அவள் இரண்டுமே இல்லையே..."

பிரசன்னாவின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது திணறினான் இந்திரஜித்... தனக்கும் அவளுக்குமான உறவை அவன் எப்படிச் சொல்வான்...? சம்யுக்தா மனதிற்குள் மறுகினாலும் வெளியில் நிமிர்வாய் நின்றாள்... இனி இது போன்ற பேச்சுக்களை அவள் கேட்டு பழகி கொள்ள வேண்டுமே...

"நீ செய்திருக்கும் காரியத்தின் விளைவு இது தான்... உன்னால் யாரிடத்திலும் அவளைத் தலை நிமிர்ந்து அறிமுகப்படுத்த முடியாது... அப்படி இருக்கும் போது உன் வாழ்க்கையோடு சேர்த்து அவளது வாழ்க்கையையும் நீ ஏன் சீரழிக்கிறாய்...? சம்யுவை பத்தி உனக்கு என்ன தெரியும்...? அவள் கிடைப்பதற்கரிய பொக்கிசம் போன்றவள்..."

பிரசன்னாவின் வார்த்தையின் வீரியத்தில் சட்டையைப் பிடித்திருந்த இந்திரஜித்தின் கைகள் இன்னமும் இறுகியது...

"பாவா... அவரோட சட்டையை விடுங்க..." சம்யுக்தா கூறியதை கேட்டு இந்திரஜித் அவளைக் கோபமாய் முறைத்தான்...

"என்னை இவ்வளவு சொல்கிற நீ... அவனைப் பேசாது இருக்கச் சொல்லு..." என்று கர்ஜித்தான்...

"நான் உங்க கிட்ட தானே உரிமையுடன் பேச முடியும்..." என்றவளை பார்த்தவனின் பார்வையில் மின்னல் தெறித்தது... அடுத்த நொடி அவன் பிரசன்னாவின் சட்டையை விட்டான்...

"அவனிடம் சொல்லு... அவன் இங்கே ஒரு நிமிசம் கூட இருக்கக் கூடாதுன்னு... மீறி இருந்தால் செக்யூரிட்டியை கூப்பிட்டு அவன் கழுத்தை பிடிச்சு வெளியில் தள்ளுவேன்னு..." என்று கூறியவன் வேறு பக்கம் திரும்பி நின்றான்...

"சம்யு... இந்தப் பேச்சுப் பேசுறான்... இன்னமும் நீ இவனை நம்புறியா...?"

"பிரசன்னா, தயவுசெஞ்சு இங்கிருந்து போயிருங்க... இப்போதைக்கு என்னால் எதுவும் சொல்ல முடியாது... ஆனா ஒண்ணே ஒண்ணு மட்டும் உறுதியா சொல்ல முடியும்... பாவாவால் என்னை அசிங்கப்படுத்தவும் முடியாது... அப்படி நான் அசிங்கப்படவும் அவர் விட மாட்டார்... இப்போ நீங்க கிளம்பி போங்க..." என்று இரு கரம் கூப்பி இறைஞ்சியவளை கண்டு பரிதாபம் கொண்ட பிரசன்னா அதற்கு மேல் அங்கு நிற்காது சென்றுவிட்டான்...

சம்யுக்தா மனம் கனக்க வீட்டை நோக்கி நடக்க... கூடவே இந்திரஜித்தும் கல்மேடையில் இருந்த கோப்புகளை ஞாபகமாய் எடுத்துக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்து வந்தான்... வீட்டினுள் நுழைந்ததும் வரவேற்பறை மேசை மீதிருந்த காபி கோப்பையைப் பார்த்த இந்திரஜித் அவளைக் கண்டு,

"என்ன உபசாரம் எல்லாம் பலமாயிருக்கு...?" அவனது வார்த்தைகளில் நக்கல் தெறித்தது...

"வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினருக்கு காபி கொடுத்து உபசரிப்பது நம் பண்பாடு... அதைத் தான் நான் செஞ்சேன்..."

"அப்போ அவன் விருந்தினன் மட்டும் தானா...?"

"ஆமாம்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவள்,

"அன்னைக்கு அவருக்குப் பாயாசம் கொடுத்தப்பவும் இப்படித் தான் கோபப்பட்டீங்க இல்லையா...?"

தன்னை அவள் கண்டு கொண்டதை கண்டு அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவனது முகம் மாறியதை கண்டு அவன் அருகில் வந்தவள் அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... அந்தக் கணம் அவனுக்குமே அவளது அணைப்புத் தேவையாக இருந்தது போலும்... அதனால் அமைதியாக நின்றான்...

"நீங்க தான் எனக்கு எல்லாம்ன்னு எல்லோரையும் விட்டுட்டு வந்திருக்கேன்... இதிலேயே உங்களுக்குப் புரியலையா...? யார் மனசில் யார் இருந்தாலும் என் மனசில் நீங்க மட்டும் தான்னு... நீங்க என்னை வெறுத்து ஒதுக்கினாலும் நான் உங்களை மட்டும் தான் காதலிச்சிட்டு இருப்பேன்..."

அவளது மாசற்ற காதல் அவனது கல் மனதினை புரட்டி போட்டது... அதன் விளைவு அவனது கைகள் தாமாக முன்வந்து அவளை அணைத்துக் கொண்டது... அவனது செயலில் அவள் சந்தோசத்துடன் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்... அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியவன்,

"என்னை உனக்கு அவ்வளவு பிடிக்குமா...?"

"ம்... ம்... அவ்வளவு பிடிக்கும்..." என்று சந்தோசத்துடன் தலையாட்டியவள்,

"ஆனால் இனிமேல் இது மாதிரி அடுத்தவங்களோட என்னை இணைச்சு வச்சு பேசாதீங்க... என்னை அவமானப்படுத்தணும்ன்னா உங்களுக்கு எத்தனையோ வழி இருக்கு... ஆனா நீங்க இப்படிப் பேசுறது கேட்டு என் மனசு ரொம்ப வலிக்குது..."

அவளது மனதின் வலியை அவளது விழிகளில் அவன் உணர்ந்தான்...

"என்னைத் தவறா பேசணும்ன்னு நினைச்சால் அது உங்க கூட இணைச்சு பேசிக்கோங்க... ஏன்னா என்னுடைய உடல்,

உள்ளம் இரண்டும் உங்களுக்கு மட்டுமே சொந்தம்... கண்டவனும் வந்து போக என் மனசு விடுதி இல்லை... அது நீங்க மட்டுமே குடியிருக்கும் கோவில்... அதோட புனிதத்தை நீங்களே கெடுத்துக்காதீங்க..." என்று கூறியவள் அவனை விட்டு விலகி சென்று விட்டாள்...

சாட்டையாய் சுழன்றடித்த அவளது வார்த்தைகளில் அவன் ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டான்... எத்தனை அழகாக அவளது காதலையும், அவள் மனதில் அவனுக்கான நிலையையும் எடுத்துரைத்து விட்டாள்... இதை விடக் காதலை வேறு எந்தப் பெண்ணாலும் கௌரவப்படுத்த முடியாது... அவளது காதலுக்காக அவன் இதுவரை எதுவும் செய்ததில்லை... ஆனால் இந்தக் கணம் அவளது காதலுக்காக எதையாவது செய்யத் துடித்தது அவனது மனம்...

அந்த நொடி அவனுக்குத் தன் தந்தை மீதிருந்த வன்மம் கூடப் பின்னுக்குப் போய்விட்டது... அவன் இயல்பிலேயே கெட்டவன் இல்லையே... இடையில் கெட்டவனாக முயன்றவன்... ஆனால் அதை முழுமையாகச் செய்ய முடியாதபடி அவளது காதல் தடையாக இருந்தது... தனது நியாயத்திற்காகப் போராடுபவன் இப்போது அவளது நியாயத்தைப் பற்றிச் சிறிது யோசிக்க ஆரம்பித்தான்...

அந்நேரம் வீட்டின் அழைப்பு மணி ஒலித்து அவனது யோசனையைக் கலைத்தது... அவன் செல்லும் முன் சம்யுக்தா சென்று கதவை திறந்தாள்... அங்கே சஞ்சய், காவ்யா இருவரும் இணைந்து நின்றிருந்தனர்...

"வாங்கண்ணா... வாங்க வதின..." என்று முகம் மலர வரவேற்றவளை கண்டு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

தர்மசங்கடமாய் அவளைப் பார்த்து புன்னகைத்தவர்கள், "எங்கே அந்த வளர்ந்து கெட்டவன்...?" என்று ஒருமித்த குரலில் கேட்டனர்...

"பாவாவா...? உள்ளே தான் இருக்காங்க..."

அவள் கூறும் போது இந்திரஜித் அங்கு வந்தவன் நண்பர்களைக் கண்டதும் முகம் மலர, "ஏய் சஞ்சய், காவ்யா... வாங்க, வாங்க..." என்று உற்சாகமாய் வரவேற்க...

அவர்கள் இருவரும் உள்ளே வராது இறுக்கத்துடன் நின்றபடி, "நாங்க உன் கிட்ட தனியா பேசணும்..." என்க...

இந்திரஜித் சம்யுக்தாவை பார்த்தான்... அதன் அர்த்தம் புரிந்தவளாய் தலையசைத்த சம்யுக்தா இருவரிடமும்,

"குடிக்க ஏதாவது கொண்டு வரவா...?" என்று கேட்க...

"இவன் கிட்ட பேசிட்டு வந்து நாங்க விருந்து சாப்பிடறோம்..." காவ்யா கூறியதும் அவள் உள்ளே சென்றுவிட...

"நாம் தோட்டத்தில் போய்ப் பேசலாமா...?"

சஞ்சய் கூறியதும் மூவரும் தோட்டத்தில் இருந்த கல்மேடையில் சென்று அமர்ந்தனர்... எப்போதும் நண்பர்கள் மூவரும் சேர்ந்தால் அந்த இடமே கலகலப்பாய் இருக்கும்... ஆனால் இன்றோ சாதாரணமாகப் பேசுவதற்குக் கூட வார்த்தைகளற்று அமைதியாக இருந்தனர்...

"இந்தர்... நீ பண்ணியிருக்கும் காரியத்தோட வீரியம் தெரிஞ்சு தான் நீ இதைப் பண்ணினியா...?" சஞ்சய் தான் முதலில் ஆரம்பித்து வைத்தான்...

அதற்குப் பதில் கூறாது இந்திரஜித் வேறு எங்கோ பார்த்து வைத்தான்... அதைக் கண்டு காவ்யா பல்லை கடித்தாள்...

"இந்தர்... முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு..."

"ம்ப்ச்... என்ன பதில் சொல்ல சொல்றீங்க...? அதான் விசயம் என்னன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கே..."

"நீயாடா இந்தர் இப்படி...? எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாது இருந்த நீ இப்படி ஒரு பாதகத்தைச் செய்யத் துணிவேன்னு நாங்க கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை...

மாமாவுக்கும், உனக்கும் பிரச்சினைன்னா நீ நேரே அவர் கூட மோதி இருக்கணும்... அதை விட்டுட்டு இடையில் இந்தச் சின்னப் பெண்ணை இழுக்கிறது கொஞ்சமும் சரியில்லை..." என்று சஞ்சய் கோபத்தில் படபடத்தான்...

"அவள் ஒண்ணும் சின்னப் பெண் இல்லை... இருபத்திமூன்று வயசாகுது... நம்மை விட இரண்டு வயது தான் சின்னவள்..." என்றவனைக் கொலைவெறியுடன் பார்த்தாள் காவ்யா...

"இப்ப இது ரொம்ப முக்கியம் பாரு... சரி உன் வழிக்கே நான் வர்றேன்... இரண்டு வயசு குழந்தை கையில் ஒரு குட்டி பாப்பாவை கொடுத்தால் அது அந்தப் பாப்பாவை கொஞ்ச தான் செய்யும்... ஆனால் மறந்தும் கூடக் கிள்ளி, அடிச்சு காயப்படுத்தி விளையாடாது... அந்த இரண்டு வயசு குழந்தைக்கு இருக்கிற அறிவு கூட உனக்கு இல்லையா இந்தர்...? உன்னை விடச் சின்னப் பெண்ணை ஏன் இந்தப் பாடு படுத்தற...?" காவ்யாவின் கோபத்தில் அவளை ஏறிட்டு பார்த்த இந்திரஜித் பதில் ஒன்றும் பேசவில்லை...

"முதலில் அவளைக் கொண்டு போய் வீட்டில் விட்டுட்டு வாடா... எந்தப் பிரச்சினைன்னாலும் பேசி தீர்த்துக்கலாம்..."

"ம்ஹூம், அது மட்டும் என்னால் முடியாது..." என்று தீர்க்கமாய் மறுத்தவனைக் கண்டு முறைத்தபடி எழுந்தவர்கள்,

"அப்படி என்றால் எங்களோட நட்பை இத்தோடு மறந்து விடு..." என்றவர்கள் அவனை முறைத்தபடி அங்கிருந்து கிளம்பி சென்று விட்டனர்...

அவர்கள் செல்வதைக் கண்ட இந்திரஜித்தின் முகம் வேதனையில் ஆழ்ந்தது... எதற்காக இந்தப் போராட்டம் என்று அவனுக்கே சற்று சலிப்பாக இருந்தது... அந்தக் கணம் அவனது மனக்கண்ணில் அந்தக் காட்சி தோன்றி அவனது மனதினை இறுக செய்தது... அதற்காகவாவது அவன் போராட வேண்டாமா...?

அதற்கு நியாயம் செய்ய வேண்டும் என்றால் அவன் தன் தந்தையைக் கொலை செய்ய வேண்டும்... அதைச் செய்ய அவனால் முடியுமோ...? என்ன இருந்தாலும் சித்தார்த் அவனது ஆருயிர் தந்தையன்றோ... விவரம் தெரிந்த வயதில் இருந்து அன்பு பாராட்டி வளர்த்த தந்தை அந்த ஒரு விசயத்தில் மட்டும் ஏன் சறுக்கி போனார்...? அது தான் அவனது வருத்தம், கோபம் எல்லாம்... ஏன், ஏன், ஏன்? என்று அவன் மனதில் பல கேள்விகள்...

எதையும் ஆராய்ந்து பாராது அவசரகதியில் தந்தை எடுத்த முடிவு இன்று அவனை இந்த நிலைக்குத் தள்ளியிருக்கிறது... ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை அவர் அவனிடம் மனம் விட்டுப் பேசியிருந்தால் அவன் எல்லாவற்றையும் விளக்கியிருப்பான்... தந்தைக்காக எதையும் தாங்கியிருப்பான்... அவருக்காக உயிரையும் கொடுத்து இருப்பானே...

"கடைசிவரை நீங்க என்னைப் புரிந்து கொள்ளவே இல்லைப்பா... எப்படி உங்களால் அந்தக் காரியத்தைச் செய்ய முடிந்தது...? அன்பும், கனிவும் கொண்ட உங்க மனசில் எப்படி அப்படி ஒரு அரக்கத்தனம் வந்தது...? என்னால் இன்னமும் நம்ப முடியவில்லையே..." மெதுவே வேதனையுடன் முனங்கியவனின் வார்த்தைகளில் அன்று அவன் பட்ட துயரம் அப்படியே வெளிப்பட்டது...

நம்ப முடியவில்லை என்று மறுகுபவன் அதை நம்பாமல் இருந்திருக்கலாம்... அதைச் செய்யாது யுத்தகளத்தில் தந்தையை எதிர்த்து வியூகம் அமைத்து நிற்கின்றான்... வீழ்வது அவனா, தந்தையா அல்லது சம்யுக்தாவா...?

அவளைப் பற்றிய நினைவு வந்ததும் அவன் இருதலை கொள்ளி எறும்பாய் தத்தளித்துப் போனான்... அவன் மீதான அவளது காதல் அவனுக்கு நன்கு புரிகிறது... அது போல் அவள் மீதான அவனது உரிமையை விட்டு கொடுக்கவும் அவனால் முடியவில்லை... அப்படியிருந்தும் அவளை மனதார ஏற்றுக் கொள்ள அவன் மனம் தயங்குகிறதே...

ஒரு சேயாய் அவள் மடியில் சரண்புக நினைப்பவன் ஒரு காதலனாய் அவளை ஆட்கொள்ளத் தயக்கம் காட்டுகிறான்... திரிசங்கு நிலையில் இருக்கும் தன் மனதினை ஒருமுகப்படுத்த முடியாது அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்...

************************

காரில் கனத்த மௌனம் நிலவியது... சஞ்சய், காவ்யா இருவருமே என்ன பேசுவது என்று தெரியாது மௌனம் காத்தனர்...

"காவி... இந்தர் முன்ன மாதிரி கிடையாது..."

"எதை வச்சு சொல்ற...?"

"அன்னைக்குப் பேச்சுலர் பார்ட்டியில் அவன் விஸ்கி ஒரு முழுப் பாட்டிலை அப்படியே ராவா அடிச்சான்... எனக்குத் தெரிஞ்சு இந்தருக்கு இந்தப் பழக்கம் எல்லாம் கிடையாது..."

"டேய்... நீயும் சேர்ந்து குடிச்சியாடா...?" அவள் கணவனை முறைக்க...

"ஐயோ இல்லை காவி... எங்கே இந்தர் குடிக்க விட்டால் தானே... எல்லாப் பாட்டிலையும் அவனே குடிச்சிட்டான்... படுபாவி..." அவன் மனம் ஆறாது அந்த நிகழ்வினை மீண்டும் நினைத்துப் பார்த்தான்...

"ஓ... ரொம்பக் கவலையா இருக்கப் போல..." என்று ஒரு மாதிரி குரலில் கேட்டவளை கண்டு,

"அம்மா தாயே... மலை ஏறிடாதே... இனி ஜென்மத்துக்கும் நான் குடிக்க மாட்டேன்..."

"குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு..." என்று முறுக்கி கொண்டவளை கண்டு,

"இப்போ நான் குடிப்பது முக்கியமா...? இல்லை இந்தர் முக்கியமா...?"

"ம்... இந்தர் தான்..." என்றவள்,

"நம்ம அப்பாக்கள் மத்த அப்பாக்கள் மாதிரி கண்டிப்புக் கிடையாது... அவங்க எல்லோருமே கண்டிப்பை கூடக் கனிவோடு காட்டுறவங்க... அதுவும் சித்துச் சித்தப்பா சொல்லவே வேண்டாம்... பிள்ளைங்கன்னா அவங்களுக்கு உயிர்... அப்படிப்பட்ட அப்பா மேல் இந்தருக்கு அப்படி என்ன கோபம்...?" காவ்யாவிற்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

"இந்தர் தன்னுடைய அப்பாவை பழிவாங்க சம்யுவை பகடை காயா யூஸ் பண்றான்... மாமாவுக்கும் இந்தருக்கும் இடையில் அப்படி என்ன பெரிய பகை இருக்கப் போகுது...? அவங்களுக்கு இடையில் இந்தச் சம்யு எப்படி வந்தாள்...? இத்தனை வருசமா அவன் அவளைப் பார்த்தது கூடக் கிடையாதே..." சஞ்சய் துப்பறியும் நிபுணர் மாதிரி நிறைய யோசித்தான்...

"சஞ்சு... இந்தர் குடிப்பான்னு சொன்னியே... ஒருவேளை அவனுக்குக் காதல் தோல்வி ஏற்பட்டு இருக்குமோ...?"

"இருக்கலாம் காவி... ஒரு பையன் தன்னை மறந்து தண்ணி அடிக்கிறான்னா அது கூடக் காரணமா இருக்கலாம்... அதுக்கும் மாமாவுக்கும் என்ன சம்பந்தம்...?"

"ஒருவேளை சித்தப்பா அவனோட காதலை எதிர்த்து இருக்கலாம்..."

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது... இந்தர் எதைக் கேட்டாலும் மாமா உடனே செஞ்சு முடிக்கிறவர்... அவரும் காதலித்துத் திருமணம் செய்தவர்... அப்படி இருக்கும் போது அவராவது காதலை எதிர்ப்பதாவது..."

சஞ்சய் கூறியதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது... அப்படி என்ன தான் நடந்திருக்கும் என்று இருவரும் யோசித்து யோசித்துத் தலைமுடியை பிய்த்துக் கொண்டது தான் மிச்சம்... உருப்படியாய் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை...

*********************

இரவு சந்தோஷ் மிகவும் தாமதமாக வீட்டிற்கு வந்தான்... எப்போதும் வாசலில் காத்திருக்கும் மனைவியை இன்று காணாது அவனது புருவங்கள் சுருங்கியது... அவனுக்கும், அவளுக்குமான இடைவெளி அப்படியே தான் இருந்தது... அன்று அவன் கேட்டு கொண்டதாலோ என்னமோ சாத்விகா அவனிடம் அதிகம் கோபம் கொள்வது கிடையாது... அது போல் அவனை டென்சன் படுத்தவும் மாட்டாள்... அதே சமயம் ஒரு மனைவியாய் அவனுக்குச் செய்ய வேண்டியதை எல்லாம் பார்த்து பார்த்து செய்வாள்... ஆனால் படுக்கையறையில் மட்டும் இருவரும் எதிர் எதிர் துருவம் தான்... அவனும் தனது கணவன் உரிமையை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை... அவளும் அதைப் பெரிதாய் கண்டு கொள்வதில்லை...

அறைக்குள் நுழையும் போது பால்கனியில் இருந்து சாத்விகா பேசும் சத்தம் கேட்டது... நிசப்தமான அந்த இரவு வேளையில் அவளது குரல் அவனுக்கு நன்கு தெளிவாகக் கேட்டது...

"விஷ் யூ அ ஹேப்பிப் பேர்த்டே கண்ணா..."

"...................."

"கண்ணா... கோபப்படக் கூடாதுடா... புரிஞ்சுக்கோடா... இப்போ என்னால் உன்னைப் பார்க்க வர முடியாது..."

"..................."

"போன பேர்த்டேக்கு உன்னைப் பார்க்க வந்தேன் தான்... அப்போ நான் சுதந்திர பறவை... இப்போ நான் சிறை பறவைடா... நினைச்ச நேரம் என்னால் கிளம்பி வர முடியாது..."

"..................."

"சரி, சரி... நாளைக்கு நான் உன்னைப் பார்க்க வர்றேன்... நாம எங்கேயாவது ஜாலியா வெளியில் போயிட்டு

வரலாம்..."

"..................."

"ஐ லவ் யூடா கண்ணா... உம்மா..." என்று அலைப்பேசியில் முத்தத்தை அனுப்பி வைத்த மனைவியை உணர்வில்லாது பார்த்தபடி நின்றிருந்தான் சந்தோஷ்...

அந்தக் கணம் இந்தத் திருமணம் வேண்டாம் என்று கண்ணீர் மல்க தன்னிடம் மன்றாடிய சாத்விகாவின் முகம் அவன் மனக்கண்ணில் வலம் வந்தது... அவன் வேதனையுடன் தான் வந்த சுவடு தெரியாது குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டான்...

அவன் குளியலறை கதவை மூடிய சத்தத்தில் அலைப்பேசியை அணைத்து விட்டு வேகமாய் அறைக்குள் வந்து எட்டிப்பார்த்தாள் சாத்விகா... கணவன் வந்ததற்கான அறிகுறியாக அவனது மருத்துவ உடமைகள் மேசை மீது வீற்றிருந்தது...

கணவன் குளித்து முடித்து வந்ததும், "சாப்பிட வாங்க..." என்று அவள் அழைக்க...

"சாப்பிட்டு விட்டேன்..."

அவள் முகம் பார்க்காது கூறியவன் கட்டிலில் படுத்துக் கண்களை மூடி கொண்டான்... ஒரு கணம் அசையாது நின்றவள் மறுகணம் அசட்டையாகத் தோளை குலுக்கியபடி மறுபக்கம் வந்து படுத்தாள்... அவளது அந்த இயல்பான செய்கையைக் கண்டு அவன் மனதில் துக்கம் பொங்கியது...

மறுநாள் காலையில் சாத்விகா எழும் முன் சந்தோஷ் கிளம்பி சென்றிருந்தான்... அதைப் பற்றிய நினைவு இல்லாதவளாய் அவள் தனது கல்லூரிக்கு பரபரப்பாய் கிளம்பி கொண்டிருந்தாள்...

"வர்றேன் அத்தை..." என்று கூறிவிட்டு அரக்கபரக்க ஓடும் மருமகளைக் கண்டு சங்கமித்ராவுக்குக் கவலையாக

இருந்தது...

"சந்தோஷ் தான் வேலை வேலைன்னு ஓடுறான்னா... இவளும் அப்படியே இருக்கிறாள்... ரெண்டு பேரும் புதுசா கல்யாணமானவங்க மாதிரியா இருக்காங்க... முதல்ல இவங்களை ஹனிமூன் அனுப்பி வைக்கணும் அர்ஜூன்..."

"அவங்க லைஃப்பை அவங்க ப்ளான் பண்ணியிருப்பாங்க ஹனி... நாம நம்ம லைஃப்பை ப்ளான் பண்ணலாமா...?"

"நாம ப்ளான் பண்ண என்ன இருக்கு...?" சங்கமித்ரா புரியாது விழித்தாள்...

"செகண்ட் ஹனிமூன் போகலாமா...?" என்று கண்சிமிட்டி கேட்ட கணவனைக் கண்டு அந்த வயதிலும் அவளுக்கு வெட்கம் வந்து தொலைத்தது...

"போக வேண்டாம்ன்னு நான் சொல்லலையே..." என்று வெட்கத்துடன் கூறியவளை கண்டு அவன் உற்சாகமாய் விசிலடிக்க...

"அமர்நாத் கோவில் பார்க்க போகணும்ன்னு எனக்கு ரொம்ப நாள் ஆசை... கூட்டிக்கிட்டு போங்களேன் அர்ஜூன்..."

"கோவிலா...?" என்று முகத்தைச் சுளித்தவன் பின் முகம் மலர்ந்தவனாய்,

"டபுள் ஓகே..." என்று மகிழ்ச்சியுடன் கூற... அவள் அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தாள்...

"அமர்நாத் கோவில் காஷ்மீரில் தான் இருக்கு... கோவிலுக்குப் போன மாதிரியும் ஆச்சு... ஹனிமூன் கொண்டாடின மாதிரியும் ஆச்சு..." என்று உற்சாகமாய்த் திட்டமிட்டவனைக் கண்டு,

"அப்போ நான் வரவே இல்லை..." என்றபடி அவள் நமட்டு சிரிப்புடன் உள்ளே சென்றுவிட...

அர்ஜூன் சிரித்த முகத்துடன் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்... மகனை பற்றிய கவலை அவனுக்குச் சிறிதும் இல்லை... ஏனெனில் மகன், மருமகள் இருவரை பற்றியும் அவனுக்கு நன்கு தெரியும்... அவர்களது திருமணத்தைத் தோற்க விட மாட்டார்கள் என்று...

**********************

இந்திரஜித்தின் கைகளில் கடற்கரை சாலையில் கார் வேகமெடுத்துப் பறந்தது... ஏசி போடாது கார் கண்ணாடியை இறக்கி விட்டிருந்ததால் காலை நேர தென்றல் காற்று முகத்தினைச் சுகமாய்த் தழுவி சென்றது... அதை அனுபவித்தபடி வந்தவன் அப்போது தான் சம்யுக்தாவின் அமைதியை கவனித்தான்...

திரும்பி பார்த்தவன் அவளது முகத்தில் தெரிந்த கவலையில் துணுக்குற்றான்... அவன் அவளைத் தன்னுடன் அழைத்து வந்து நான்கு நாட்களாகி விட்டது... ஒரு நாள் கூட அவள் இப்படிக் கவலையுற்று அவன் பார்த்தது இல்லை... இன்று என்னவானது அவளுக்கு...?

"என்ன யோசனை எல்லாம் பலமாய் இருக்கு...?" தனது மனதினை மறைத்துக் கொண்டு அவன் அவளைப் பார்த்து கேலி போல் கேட்டான்...

அவனது கேள்வியில் தனது யோசனை கலைந்தவள் அவனைக் கண்டு, "ஆதி பங்காரத்துக்குக் கடல்ன்னா ரொம்பப் பிடிக்கும்... இங்கே வரும் போது எல்லாம் உற்சாகமாய்த் துள்ளி குதிப்பான்..." அண்ணன் மகனின் நினைவில் அவளது முகம் வாடி போனது...

அதைக் கண்டு அவன் மனம் வாடி போனான்... பெரியவர்களுக்கு இடையில் நடந்த பிரச்சினையில் அவன் அக்காவின் குழந்தைகளை எண்ணி பார்க்க மறந்து விட்டான்... அதிலும் ஆதித்யா, சம்யுக்தா இருவரின் பாசமும் அவன் அறிந்த ஒன்றாச்சே... அந்தப் பாசத்தை அவனால் மீண்டும் மீட்டெடுக்க முடியுமா...? அவனுக்கே அதற்கான

விடை தெரியவில்லை... இனி ஒரு போதும் அவனது வீட்டார் அவனை மன்னிக்கப் போவதில்லை...

"ஐயம் ரியலி சாரி... ஆதியை பத்தி நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..." நெற்றியை நீவி விட்டுக் கொண்டு உண்மையான வருத்தத்துடன் அவன் அவளிடம் மன்னிப்பு வேண்டினான்...

அவனது வருத்தம் அவளையும் தாக்கியதோ... தனது கவலையை மறைத்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தவள்,

"இதுக்கு எதுக்கு நீங்க வருத்தப்படுறீங்க...? ஆதி பங்காரம் கொஞ்ச நாள் என்னைத் தேடுவான்... அதுக்கு அப்புறம் அவன் நான் இல்லாது இருக்கப் பழகி கொள்வான்..." இதைக் கூறும் போதே அவளது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... அதை அவனுக்குக் காட்டாது மறைக்க எண்ணியவள் ஜன்னல் பக்கமாய்த் திரும்பி கொண்டாள்...

இந்திரஜித்திற்கு எப்போதுமே ஒரு கர்வம் உண்டு... எத்தனை பேர் இருந்த போதும் சம்யுக்தாவிற்குத் தான் தான் முக்கியம் என்று... இப்போது தான் முதன்முறையாய் உறவின் இழப்பினால் அவள் வேதனைப்படுவதை அவன் காண்கிறான்... அப்படி என்றால் எல்லா உறவுகளையும் பிரிந்து அவள் இப்படித் தான் மனதிற்குள் துக்கப்படுகிறாளோ...? அதை நினைத்து அவனுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

அதன் பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை... அவளும் பேச முயற்சிக்கவில்லை... சில மணி நேரங்களில் இருவரும் பாண்டிச்சேரி வந்தடைந்தனர்... இங்கே ஏன் அழைத்து வந்திருக்கிறாய்? என்று அவள் அவனைப் பார்த்து ஒரு கேள்வி கூடக் கேட்கவில்லை...

அங்கு அவர்களுக்காகத் தனி வீடு தயாராக இருந்தது... கடற்கரையை நோக்கியவாறு பிரெஞ்சு கட்டிட கலையைக் கொண்டு கட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் அழகினை கண்டு அவள் வியந்தவளாய் ஆச்சிரியத்துடன் பார்த்து

கொண்டிருந்தாள்... வீட்டின் கதவில் இருந்து ஜன்னல் வரை அனைத்தும் அவளுக்குப் புதுமையாக இருந்தது... வீட்டை அண்ணாந்து பார்த்து கொண்டிருந்தவளின் காதோரமாய்,

"ஏய் பட்டிக்காடு... வீடு பிடிச்சியிருக்கா...?" என்று கேட்ட இந்திரஜித்தின் குரலில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்...

"நீங்க தானா...? நான் பயந்தே போயிட்டேன்..."

"நான் கூட இருக்கும் போது உனக்கு என்ன பயம்...?"

புருவம் உயர்த்திக் கேட்டவன் அவளை வீட்டினுள் அழைத்துச் சென்றான்... அங்கு வேலையாள் அவர்கள் வரவை உணர்ந்து உணவு சமைத்து தயாராக வைத்திருந்தார்... அவர் பிரெஞ்சு உணவு வகைகளை வகை வகையாய்ச் செய்து அசத்தி இருந்தார்...

"நீயும் உட்கார்..." என்று அவளை உடன் அமர்த்திக் கொண்டு அவன் உணவு உண்ண ஆரம்பித்தான்... அவளுக்கோ இது புது அனுபவமாக இருந்தது... அவனுடன் இருக்கும் ஒவ்வொரு மணித்துளியையும் ரசித்து அனுபவித்தாள்...

சிறிது நேரத்தில் அவளை வெளியில் கிளப்பிக் கொண்டு எங்கோ அழைத்துச் சென்றான்... அவன் எங்கு அழைத்துச் செல்கிறான் என்று தெரியாது அவளும் அவனுடன் சென்றாள்... அவர்கள் வர வேண்டிய இடம் வந்ததும் இருவரும் காரை விட்டு இறங்கினர்... காரை விட்டு இறங்கும் போது கூட அவள் எந்தவித எண்ணமும், எதிர்பார்ப்பும் இல்லாது தான் இறங்கினாள்...

ஆனால் அவன் அழைத்துச் வந்த இடத்தைக் கண்டதும் அவளது விழிகள் ஆச்சிரியத்தில் விரிந்தது... பரவசத்தில் அவளது கண்களில் நீர் திரண்டது... இத்தனை நாளாய் தனிமை துயரில் தவித்துக் கொண்டிருந்தவளுக்குத் தாயின் மடி வந்து சேர்ந்த நிம்மதி எழுந்தது... கண்ணீர்

மல்க தன்னவனைத் திரும்பி பார்த்தவளின் விழிகளில் நன்றியுணர்வும், மகிழ்ச்சியும் ஒருசேர கலந்து இருந்தது...

இந்திரஜித்தின் இத்தனை நாள் குற்றவுணர்வு சம்யுக்தாவின் மகிழ்ச்சியில் பனி போல் மறைந்து போனது... எதையோ சாதித்து விட்ட உணர்வு அவனுள் பெருமிதமாய் எழுந்தது... அந்தப் பெருமிதம் கொடுத்த கர்வத்தில் அவன் மந்தகாச புன்னகையுடன் தன்னவளை இமைக்காது பார்த்திருந்தான்...!!!

தொடரும்...!!!

பாண்டிச்சேரியில் இருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் வில்லியனூர் என்னும் சிறு ஊருக்கு சம்யுக்தாவை இந்திரஜித் அழைத்து வந்திருந்தான்... 'டெரகோட்டா' என்றழைக்கப்படும் சுடுமண் சிற்பங்கள், மண்பாண்டங்கள் மற்றும் களிமண்ணால் உருவாக்கப்படும் பலவித பொருட்களுக்கு அது புகழ் பெற்ற ஊர்... அதற்கேற்றார் போன்று அங்கு ஓடும் சங்கராபரணி (விழுப்புரம் மாவட்டத்தின் வழியே பாண்டிச்சேரி நோக்கி பாய்கிறது) ஆற்றின் மண் வகை இருந்தது... அந்த மண்ணில் சிற்பங்கள், பானைகள் செய்தால் அவ்வளவு எளிதில் விரிசல் விழாது... அது போல் அந்த மண்ணை ரப்பர் போன்று நம் விருப்பத்திற்கு வளைக்கலாம்... இது தான் இந்த மண்ணின் சிறப்பம்சம்...

அந்த ஊரில் இதற்கு என்றிருந்த சிறப்புப் பயிற்சி நிலையத்துக்குத் தான் அவன் அவளை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்... அங்கு ஆண்களும், பெண்களும் இணைந்து பயிற்சி மேற்கொண்டு இருந்தனர்... இதை எல்லாம் பார்த்து வியந்தபடி வந்தாள் சம்யுக்தா... இந்திரஜித்தும் அவளது மகிழ்ச்சிக்கு இடையூறு விளைவிக்காதபடி அவளுக்குப் பக்கவாட்டில் அமைதியாக நடந்து வந்தான்... அவளது சந்தோசம் அவனையும் தொற்றி கொண்டதோ என்னமோ அவனது முகம் புன்னகையில் உறைந்திருந்தது...

களிமண் கொண்டு உருவாக்கப்படும் வித விதமான சிலைகளைப் பார்த்தபடி அவள் மெய்மறந்து நின்றுவிட்டாள்... அவளுக்குக் களிமண்ணில் செய்யத் தெரிந்தது எல்லாம் மண்பானைகள் மற்றும் விறகு அடுப்பின் தடுப்பு மட்டுமே... வருடத்திற்கு ஒரு முறை விநாயகர் சதுர்த்தி அன்று யாராவது விரும்பி கேட்டால் பிள்ளையார் சிலைகள் செய்து கொடுப்பாள் அவ்வளவே... அதனால் அவளுக்கு இங்குச் செய்யப்படும் சிலைகள் மிகுந்த பிரமிப்பை ஏற்படுத்தியது... அதை எப்படி நுணுக்கமாகச் செய்கிறார்கள் என்று பார்த்து

கொண்டிருந்தவள் மெய்மறந்து அங்கேயே நின்று விட்டாள்... இந்திரஜித் அவளைத் தொந்திரவு செய்யாது அலுவலக அறையை நோக்கி சென்றான்...

"பாவா... இங்கே பாருங்களேன்... எவ்வளவு தத்ரூபமா இந்தச் சிலையைச் செய்றாங்கன்னு..." என்று சொல்லி கொண்டே திரும்பியவள் அவனைக் காணாது திகைத்து பயந்து போனவளாய் சுற்றும் முற்றும் பார்க்க... சற்று தள்ளி அவன் சென்று கொண்டிருப்பதைக் கண்டு அவன் பின்னே அவள் ஓடி சென்றாள்...

"பாவா... நில்லுங்க..." அருகில் வந்ததும் அவள் அவனை அழைக்க...

"எதுக்கு இப்படி ஓடி வர்ற...?" மூச்சிரைத்தபடி நின்றிருந்தவளை கண்டு அவன் அதட்டினான்...

"உங்களைக் காணோம்ன்னு பயந்துட்டேன்..." என்றவள் அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்துக் கொண்டு அவனைக் கண்டு நிம்மதியுடன் புன்னகைத்தாள்...

"நான் காணாமல் போயிருவேன்னு நினைச்சு என் கையைப் பிடிச்சியிருக்கியா...? இல்லை நீ காணாமல் போயிருவியோன்னு பயந்து போய்ப் பிடிச்சியிருக்கியா...?"

"நீங்க காணாம போயிற கூடாதுன்னு தான் பிடிச்சியிருக்கேன்..." என்றவள் தனது பிடியை மேலும் இறுக்கி கொண்டாள்...

"எல்லோரும் முந்தானையில் தான் முடிஞ்சு வச்சுக்குவாங்கன்னு கேள்விப்பட்டு இருக்கேன்... இவள் என்னடான்னா கையில் முடிஞ்சு வைக்கிறாளே..." என்று அவன் அவஸ்தையுடன் முனங்கினான்...

"ஏமி பாவா...?" (என்ன பாவா...?) அறியா பிள்ளையாய்ப் புரியாமல் தன்னைப் பார்த்தவளை கண்டு அவன் புன்னகையுடன் 'ஒன்றுமில்லை' என்பது போல் தலையசைத்தான்...

அவளை அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்று அங்கு இருந்தவரிடம் அவளை அங்குச் சேர்த்துக் கொள்வது பற்றி அவன் பேசி கொண்டிருந்தான்... ஏற்கெனவே அவன் அங்கு எல்லாம் பேசி முடித்திருந்தான்... அதனால் அவன் வந்த வேலை சுலபமாய் முடிந்தது...

மீண்டும் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தவன், "இங்கே உனக்கு அட்மிசன் போட்டாச்சு... இன்னையில் இருந்து நீயும் இவங்களோட சேர்ந்து இது எல்லாம் எப்படிச் செய்றதுன்னு கத்துக்கிற..."

கட்டளை போல் கூறியவனிடம் அவள் பயபக்தியுடன் சரியென்று தலையை ஆட்டினாள்... பின் அவனைப் பார்ப்பதும் தலை குனிவதுமாய் இருந்தவளை கண்டு,

"இந்தக் குட்டி தலைக்குள் அப்படி என்ன பெரிய விசயம் ஓடுது...?" என்று அவன் அவளது தலையைத் தொட்டுக் காண்பித்துக் கிண்டல் செய்ய...

"இங்கே சேர்றதுக்குப் பெரிய படிப்புப் படிச்சிருக்கணுமா பாவா...?" அறியாமையுடன் விழி விரித்து அவள் கேட்க...

"இல்லையா பின்னே...? ரொம்பப் பெரிய படிப்பு படிச்சிருக்கணும்... அதுவும் ஸ்பெசலா உன்னைப் போல் பத்தாவது ஃபெயில் ஆகியிருக்கணுமாம்..." என்று சிரியாமல் தன்னைக் கேலி செய்தவனைக் கண்டு அவள் கெத்தாக,

"நேனு தொம்மிதவா தரகடிகி வேல்லானு..." (நான் ஒன்பதாவது தேர்ச்சி பெற்றிருக்கேன்) என்று நகைச்சுவை நடிகர் செந்தில் பாணியில் பெருமையாகச் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"அடேங்கப்பா, ரொம்பப் பெரிய படிப்பு தான்..." என்று அவன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

"பாவா... நீங்க என்னைக் கேலி பண்றீங்க தானே..." என்று சிணுங்கியவளின் சிணுங்கல் ஓசையில் அவனது இதயம் தாளம் தப்பி ஒலித்தது...

மெத்த படித்த பட்டணத்தான் அவனுக்கும், படிக்காத பட்டிக்காடு அவளுக்கும் கடவுள் எதை அடிப்படையாகக் கொண்டு முடிச்சு போட்டு விட்டான்... குயவு தொழில் பார்ப்பவளுக்கும், கணினி தொழில் பார்ப்பவனுக்கும் என்ன சம்பந்தம்...? அது அவனுக்கே விளங்கவில்லை... ஆனால் ஒன்று மட்டும் அவனுக்குப் புரிந்தது... அது அவளின் காதல்... அவர்களுக்கு இடையில் இருக்கும் அத்தனை ஏற்றத்தாழ்வுகளையும் சம்யுக்தாவின் காதல் சமன் செய்து விட்டதோ...! அப்படித்தான் இருக்க வேண்டும் என்றே அவனுக்கும் தோன்றியது...

"பரவாயில்லையே, ரொம்பச் சீக்கிரம் கண்டுபிடிச்சிட்ட..." என்று மீண்டும் அவளைக் கேலி செய்தவன்,

"சரி நீ இவங்களோட போ... நான் வெளியில் போயிட்டு வர்றேன்..."

"பார்த்துப் பத்திரமா காரை ஓட்டுங்க..." அவனது அடிப்பட்ட நெற்றியை பார்த்தபடி அவள் அக்கறையுடன் கூற... அவளது அக்கறையில் அவன் வழக்கம் போல் கண்கள் பனிக்க நின்றிருந்தான்...

"உங்களுக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேங்கிறதை மறந்துடாதீங்க..."

அன்று அவள் கூறிய அதே வார்த்தைகள்... அவன் சரேலென்று அவளை நிமிர்ந்து பார்த்தான்... அவளது இந்த வார்த்தைகள் தானே அவனைக் குற்றவுணர்வில் குறுக செய்து குடிக்க வைத்தது... மதுவின் போதையினால் கூட இந்த மாதுவின் போதையை மறக்கடிக்க முடியவில்லையே... அவளை மறக்க வேண்டும் என்று நினைத்து தான் அவன் எப்போதும் குடிப்பது... ஆனால் யாரை மறக்க வேண்டும் என்று நினைக்கிறானோ அவள் தானே அவன் கண் முன் வலம் வந்து அவனை உயிரோடு கொல்கிறாள்...

காணும் யாவிலும் இவள் தானே...!!! அதை மறுக்க அவனால் முடியாதே... ஏன், ஏன், ஏன்? என்று கேள்விகள்

எழுந்தது அவனுள்... வழக்கம் போல் அவனிடத்தில் பதில் இல்லை...

"அப்போ தான் உங்களால் கவனமா கார் ஓட்ட முடியும்..." என்றவளை கண்டு தனது யோசனையைக் கைவிட்டவனாய்,

"என்ன ஒரு நம்பிக்கை...?" என்றான் கேலி குரலில்...

"இதோ இப்போ எனக்காக ஒவ்வொண்ணையும் பார்த்து பார்த்துச் செய்றீங்களே... அதனால் வந்த நம்பிக்கை தான்..." என்று புன்சிரிப்புடன் கூறியவளை கண்டு அவனது உதடுகளில் மர்ம சிரிப்பு வந்தமர்ந்தது...

"நிச்சயம் உனக்காக நான் ஒவ்வொண்ணும் பார்த்து பார்த்து செய்வேன்... ஆனா இதுக்கு எல்லாம் கைமாறா நீ எனக்கு ஒண்ணே ஒண்ணு செய்யணும்... செய்வாயா...?"

"ம்... செய்வேனே..." என்று பக்தி பரவசத்துடன் பணிவுடன் கூறியவளை கண்டு எப்போதும் அவளது காதலை நினைத்து எழும் கர்வம் இப்போதும் அவனுள் எழுந்தது...

"குட்..." என்று அவளை மெச்சியவன் அவளிடம் விடைப்பெற்றுச் சென்றான்...

அவன் செல்வதை மகிழ்ச்சியுடன் பார்த்து கொண்டிருந்தவளை அங்கிருந்தவர் அழைக்க அவள் அவருடன் சென்றாள்... களிமண் கொண்டு மண்பானை செய்வதில் அவள் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருந்ததால் அவளால் அவர்கள் சொல்லி கொடுத்ததைக் கற்பூர புத்தியுடன் உடனே கற்றுக் கொள்ள முடிந்தது... ஒரே நாளில் அவள் ஓரளவிற்கு அதன் செய்முறை நுட்பங்களையும் கற்றுக் கொண்டு விட்டாள்...

நேரம் செல்வது தெரியாமல் அவள் தனது கை வேலைகளில் கவனமாய் இருந்தாள்... மதிய உணவு நேரம் என்று சொன்னதும் தான் அவள் நிமிர்ந்து சுற்றுப் புறத்தை பார்த்தாள்... மனமொன்றி ஆத்மார்த்தமாய் அவளுடன்

ஒன்றி விட்டது இந்தக் கலை... இது அவளது இரத்தத்தில் ஊறிய ஒன்று அல்லவா...

சம்யுக்தா வெளியில் வந்த போது இந்திரஜித் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்... இரு கைகளைக் கட்டி கொண்டு காரில் சாய்ந்தபடி அவன் நின்றிருந்த தோற்றம் அவளது மனதினை மயக்குவதாய்... உடனே ஏதோ தோன்ற அவள் குனிந்து தன்னைப் பார்த்து கொண்டாள்... குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதற்கு ஏற்றவாறு அவள் புடவை கொசுவத்தை லேசாக ஏற்றி இடுப்பில் சொருகி இருந்தாள்... அதைக் கண்டு அவள் அவசரமாய் அதை நேராக்கி சரி செய்து எடுத்து விட்டாள்...

அவளது செய்கையைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்... அவளை முதன்முதலில் சந்தித்த நினைவு அவனது மனதில் இனிமையாய்... கால்களில் எல்லாம் சகதி போல் மண் அப்பியிருக்க, பாவாடையைத் தூக்கி சொருகி கொண்டு, ஆண்கள் அணியும் சட்டையை அணிந்து கொண்டு, முகத்திலும் ஆங்காங்கே மண்ணை அப்பிக் கொண்டு தன் முன் வியர்க்க விறுவிறுக்க நின்றிருந்த பெண்ணவள் அன்று அவனை எந்த விதத்திலும் கவரவில்லை... மாறாக அவளை வெறுப்பும், கோபமும் கலந்து தான் அவன் பார்த்தான்...

அன்று அவனது மனதில் இருந்ததே வேறு அல்லவா... அதை நினைத்ததும் அவனது முகம் மாறிப் போனது...

'கடந்த காலத்தை நினையாதே மனமே...!' என்று மனதிற்கு எத்தனை கட்டுப்பாடு விதித்த போதும் அவனது மனம் அதில் தான் நிலைத்து நின்று சுழன்றது... ஆனால் அந்தச் சுழலையும் மீறி சம்யுக்தா விஸ்வரூபம் எடுக்கிறாள் என்றால் அது அவளது மாசற்ற காதலினால் மட்டுமே சாத்தியமாகும்... சம்யுக்தாவிற்காக வேண்டி தான் எடுத்த முடிவினை செயலாற்ற எண்ணியவனாய் அவளை மட்டும் மனதில் நிறுத்தி அவளைப் பார்த்தவனின் பார்வையில் கனிவு வந்தது...

"பாவா... வந்து ரொம்ப நேரமாகுதா...?" அவளது வருந்தும் குரலில் முற்றிலும் பழைய நினைவுகளைக் கலைந்தவன்,

"இல்லை... இப்போது தான் வந்தேன்..." என்றவன் அவளுக்குக் கார் கதவை திறந்து விட... அவள் மகாராணி தோரணையுடன் அதில் ஏறியமர்ந்தாள்... கார் கதவை மூடியபடி அவள் புறம் குனிந்தவன்,

"முதலில் உனக்குக் கார் கதவை திறக்கிறதுக்குச் சொல்லி கொடுக்கணும்... நான் என்ன உன் வீட்டு வேலைக்காரனா...? அம்மையார் மகாராணி மாதிரி பந்தாவா ஏறி உட்கார்றீங்க..." என்று அவளைக் கிண்டலடித்தபடி அவன் மறுபக்கம் வந்து காரிலேறி அமர்ந்தான்...

"பாவா, ஷேமிச்சண்டி..." (பாவா, மன்னிச்சுக்கோங்க) அவள் பதறியவளாய் இரு கைகள் கொண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டு அவனைப் பயத்துடன் பார்த்தாள்... அவன் தன் மீது கோபம் கொண்டு விட்டானோ என்று அவள் தவித்துப் போனாள்... பயத்தில் அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது...

"எந்துகு ஷேமிச்சாலி...?" ( எதுக்கு மன்னிக்கணும்...?)

"இனிமேல் நான் கார் கதவை திறக்கிறதுக்குப் பழகிக்கிறேன்... அதுக்காக உங்களை நீங்க வேலைக்காரன்னு சொல்லாதீங்க... நீங்க ராஜகுமாரன்... நான் தான் வேலைக்காரி... நீங்க எனக்குக் கிடைச்சது என் பாக்கியம்..." என்று கையெடுத்து கும்பிட்டவளை திரும்பி பார்த்தவன் விழிகளில் எந்தவித சலனமும் இல்லை... மாறாக அவனது மனதில் அத்தனை சலனம்...

அந்தக் கணம் அவன் தான் எடுத்திருந்த தீர்மானத்தில் மிகவும் உறுதியாக இருந்தான்... அதே போல் அவளது காதலை சோதிப்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்...

"ப்ச்... முதலில் கையைக் கீழே போடு..." என்றவன் அவளது கைகளைப் பிடித்துக் கீழே இறக்கினான்... அவனே அவளை

வேலைக்காரி என்று திட்டியவன் தான்... ஆனால் அதை அவளே ஒத்துக் கொள்ளும் போது அவனால் தாங்க முடியவில்லை...

"கண்ணைத் துடை... எப்போ பாரு கண்ணுல டேம்மை திறந்து விட்டுக்கிட்டு..." அவளை அதட்டியவன் அப்போது தான் கவனித்தான்... அவளது நெற்றியில் இருந்த மண் தீற்றலை...

"நெத்தியில் இருக்கும் மண்ணைத் துடை..." என்று அவன் அதற்கும் அவளை அதட்டினான்...

முதலில் விழிகளைத் துடைத்த சம்யுக்தா அந்த ஈரத்தோடு நெற்றியை துடைத்ததில் கையிலிருந்த ஈரத்தில் நெற்றியில் இருந்த மண் நெற்றியின் எல்லாப் பக்கமும் ஈஷி கொண்டது...

"ப்ச்..." என்று உச் கொட்டி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியவன் தனது கைக்குட்டையை எடுத்து அவளது நெற்றியில் இருந்த மண்ணைத் துடைத்து விட்டான்...

அன்று அவனுக்கு அருவருப்பாய் இருந்தது இன்று இல்லை போலும்... அவளோ அவனது செய்கையில் பிரமித்துப் போனவளாய் விழியகல அவனைப் பார்த்திருந்தாள்... இந்த இரு வாரங்களாக அவன் காட்டிய கோபம் என்ன...? இதோ இப்போது நான்கு நாட்களாக அவன் அவளிடம் கனிவாக நடந்து கொள்வது என்ன...? தன்னவனின் உண்மையான குணம் என்ன என்று தெரியாது அவள் திகைத்தாள்...

சுடும் சூரியனாய் சுட்டெரிப்பவனின் தகிப்பையும், தண்மதியாய் குளிர்விப்பவனின் குளுமையையும் அவளது காதல் மனம் ஒரே மாதிரியாய் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டது... மனதில் காதல் இருந்தால் எல்லாமே சாத்தியம் தான் போலும்...

சம்யுக்தா முகம் நோக்கி குனிந்திருந்தவன் கண்ணில் அப்போது தான் அவளது நாசியில் இருந்த மூக்குத்தி தென்பட்டது... சுடு தணலை தொட்டது போல் அவன் அவளிடம் இருந்து சட்டென்று விலகினான்... அன்று அவனது மனம் வெலவெலத்தது போல் இன்றும் அவனது மனம் வெலவெலத்துப் போனது...

தனது அன்னையின் சாயலை அவளிடம் தேடியிருக்கிறான் என்றால்...? மனதிற்குள் எதுவோ ஒன்று புரிய ஆரம்பித்தது... அவளிடம் தான் பழகியது, இத்தனை நாளாய் அவளை மறக்காது இருந்தது எல்லாவற்றிற்கும் காரணம் இப்போது அவனுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது... ஆனால் இது எப்படிச் சாத்தியம்...? அது தான் அவனுக்குச் சத்தியமாகப் புரியவில்லை...

புரிந்து கொண்ட காரணத்தை ஏற்றுக் கொள்ளத் தான் அவனது மனதால் முடியவில்லை... ஏதோ தவறு செய்துவிட்டது போல் அவன் உள்ளுக்குள் துடிதுடித்துப் போய்விட்டான்... இரு கைகளால் தலையைத் தாங்கியபடி பிரம்மை பிடித்தவனாய் அவன் அப்படியே அமர்ந்து விட்டான்...

"பாவா..."

அவளது அழைப்பில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவனது ஓய்ந்து போன தோற்றத்தை கண்டு அவனை விட அவள் தான் அதிகம் தவித்துப் போனாள்...

"நான் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்துகிறேனோ பாவா...?" என்றவளது வார்த்தைகளில் மட்டுமல்லாது முகத்திலும் அத்தனை வருத்தம் தெரிந்தது...

இதோடு அவள் இரண்டாவது முறையாக அவனிடம் கேட்கிறாள்... அவன் அவளைப் படுத்தும் துன்பத்தைக் கூடப் பெரிதாக எண்ணாது அவனின் துன்பத்தைப் பெரிதாக எண்ணி வருந்தும் அவளது காதல் உள்ளம் அவனது மனதின் அலைப்புறுதலை சற்றுக் குறைத்தது...

"அப்படிக் கஷ்டம்ன்னு நினைச்சிருந்தால் உன்னை என்னுடன் கூட்டிட்டு வந்திருக்க மாட்டேன்... இனி இன்பம், துன்பம் எல்லாமே இருவருக்கும் சேர்த்து தான்... தனித் தனியே கிடையாது... என்ன புரிஞ்சதா...? இனிமேல் இப்படி ஒரு கேள்வி உன் வாயில் இருந்து வர கூடாது..."

இதை விடப் பெண்ணவளுக்கு வேறு என்ன வேண்டும்...? அவனது கூற்றுக்குக் கண்ணீர் மல்க சந்தோசத்துடன் சம்மதமாய்த் தலையை ஆட்டினாள்...

"திரும்பவும் டேம் திறந்திருச்சா...?" என்று போலியாக அலறியவனைக் கண்டு அவள் தனது கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"தட்ஸ் குட்..." என்றவன் சிரித்தபடி காரை கிளப்பினான்... அவளது புன்னகையில் அவன் தனது மனக்காயங்களை மறந்தான் என்றால் மிகையில்லை...

இந்திரஜித் சம்யுக்தாவை வீட்டிற்கு அழைத்து வந்து மதிய உணவு உண்ண வைத்து மீண்டும் அவளை அங்குக் கொண்டு வந்து விட்டான்... அவனது அலைச்சலை கண்டு அவள் மனமிரங்கி போனாள்...

"நாளையில் இருந்து நான் மதியம் சாப்பாடு கொண்டு வந்திர்றேன்... எனக்காக நீங்க அலைய வேண்டாம்..."

"ஏன்...?" உணர்ச்சி துடைத்த முகத்துடன் கேட்டவனைக் கண்டு அவள் பதறி போனவளாய்,

"உங்களுக்கு வேலை இருக்குமே... அதான்..." என்று இழுத்தவளை கண்டு அவன் பக்கென்று சிரித்து விட்டான்...

"இப்போதைக்கு என்னுடைய முதல் வேலை நீ மட்டும் தான்..."

"அப்படியா...?" என்று கேட்டவளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"ம்... அப்படியே தான்... உன் மூலம் எனக்கு ஒரு காரியமாக வேண்டியிருக்கு... அதற்காகத் தான்..."

"என் மூலமாவா...? காரியம் ஆகுமளவுக்கு என் கிட்ட ஒண்ணும் இல்லையே..." என்று அப்பாவியாகக் கூறியவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"அது என்னன்னு பிறகு சொல்கிறேன்... நீ எனக்காகத் தட்டாம அந்தக் காரியத்தைச் செய்யணும்... செய்வியா...?"

அவனது குரலில் இருந்த ஏதோ ஒன்றில் அவள் சம்மதமாய்த் தலையசைத்தாள்... அதைக் கண்டு அவன் மனதிற்குள் மர்மமாய்ப் புன்னகைத்துக் கொண்டான்...

************************

தன் கையிலிருந்த புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் மனதில் பலவித எண்ணங்கள் ஓடி கொண்டிருந்தது... அந்த எண்ணங்களை எல்லாம் ஒரே நூலில் கோர்க்க முடியாமல் இந்திரஜித்தின் வெளிநாட்டு வாசம் தடுத்தது... அதிலும் அவன் சந்தேகப்பட்டு மகனது கடவுச்சீட்டை தேடி பார்க்க முயன்ற போது மகன் அதை எப்போதோ தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தான்...

சித்தார்த்தின் மனதிலிருந்த கேள்வி ஒன்றே ஒன்று தான்... இந்திரஜித்திற்குச் சம்யுக்தாவை எப்படித் தெரியும்? என்பது மட்டுமே...

"சார்..." என்றபடி பிரசன்னா அவன் முன் பிரசன்னமானான்...

"வா பிரசன்னா... உட்கார்..."

தன் முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்த பிரசன்னாவின் முகத்தில் தெளிவில்லை என்பதைச் சித்தார்த் உணர்ந்தான்...

"வேலையை எதுக்கு ரிசைன் பண்ணின பிரசன்னா...?"

"உங்க மகன் என்பதால் நீங்க இந்தர் சார் செய்கிற எல்லாத் தவறுகளையும் கண்டும் காணாமல் போகலாம்... ஆனால் என்னால் அப்படிப் போக முடியாது சார்..."

"நான் அவன் தவறை கண்டிக்கலைன்னு நீ சொல்கிறாயா...?"

"ஆமாம் சார்... ஒரு பெண்ணை எந்த உறவும் இல்லாமல் தன்னோடு வச்சுக்கிறதுக்கு என்ன அர்த்தம் சார்...? இதைக் கண் கூடாகப் பார்த்தும் பேசாமல் வர என்னால் முடியாது... அதான் நாக்கை பிடுங்கிக்கிற மாதிரி கேள்விகள் கேட்டுட்டு வந்தேன்... இதற்கு அப்புறமும் அவர் கிட்ட வேலை பார்க்க என் மனசாட்சி இடம் கொடுக்கலை..."

"நீ கேள்வி கேட்டியே... ஏதாவது மாறிச்சா...?" சித்தார்த்தின் வார்த்தையில் பிரசன்னா திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தான்...

"நாம் என்ன கண்டிச்சாலும் இப்போது பிரயோஜனம் இல்லை பிரசன்னா... நம்மளோட முயற்சிக்கு சம்யு ஒத்துழைப்பு கொடுக்கணும்... அவள் ஒத்துழைப்புக் கொடுத்தால் ஒழிய அவளைக் காப்பாற்ற நம்மால் முடியாது..."

சித்தார்த்தின் வார்த்தைகளில் இருந்த சத்தியம் புரிந்ததால் பிரசன்னா அமைதியாக இருந்தான்... இந்திரஜித்தின் மீதான சம்யுக்தாவின் கண்மூடித்தனமான காதலை அவன் தான் நேரில் கண்கூடாகக் கண்டானே...

"நீ என்னை அந்தளவுக்கு மோசமானவனா நினைச்சிட்டியா பிரசன்னா...? என் மனைவி கையைப் பிடிச்சு இழுத்தவனின் கையை வெட்டியவன் நான்... சம்யு என் மகள் மாதிரி... அவளது கையை என் மகன் பிடிச்சு இழுத்துக்கிட்டு போகும் போது நான் உள்ளுக்குள் துடிச்சது எனக்கு மட்டும் தான் தெரியும்... அவன் மட்டும் அவளது விருப்பம் இல்லாது அவளைத் தொட்டு இருந்தால்...?" என்று நிறுத்தி விட்டு பிரசன்னாவை ஆழ்ந்து பார்த்த சித்தார்த்,

"என் மகன்னு கூடப் பார்க்காது அவனை நான் கொன்று இருப்பேன்..." என்று கூறிய சித்தார்த்தின் விழிகள் இரண்டும் கோபத்தில் சிவந்து போனது...

சித்தார்த்தை தான் வார்த்தைகளால் காயப்படுத்தியதை உணர்ந்த பிரசன்னா நாற்காலியில் இருந்து எழுந்து சென்று அவனது கால்களில் விழுந்து விட்டான்...

"உங்களைப் புரிஞ்சிக்காம பேசிட்டேன்... என்னை மன்னிச்சிருங்க சார்..."

"பிரசன்னா... என்ன இது...? முதலில் எழுந்திரு..." என்று அவனை எழுப்பி உட்கார வைத்த சித்தார்த்,

"சம்யுவை காப்பாத்த இரண்டு வழி தான் இருக்கு... ஒண்ணு அவங்களுடைய உறவை சட்டப்படி திருமண உறவில் இணைக்க வேண்டும்... இல்லை என்றால் சம்யுவை இந்தரிடம் இருந்து பிரிக்க வேண்டும்..." என்றவன் தன்னிடம் இருந்த புகைப்படத்தை எடுத்து பிரசன்னா முன் நீட்டினான்...

அந்தப் புகைப்படம் சஞ்சய் - காவ்யா, சந்தோஷ் - சாத்விகா திருமணத்தின் போது எடுத்தது... அதைக் கண்டதும் பிரசன்னாவின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"இந்த ஃபோட்டோ எடுக்கும் போது என்ன நடந்துச்சு பிரசன்னா...?"

அன்று நடந்ததைப் பிரசன்னா ஒன்று விடாது கூற... சித்தார்த் யோசனையில் ஆழ்ந்தான்... மகனது இந்த நடவடிக்கைக்குப் பின்னால் தன்னைப் பழிவாங்கும் படலம் இருப்பதாய் அவன் நினைத்திருக்க... ஆனால் உண்மை அதுவல்ல போலவே... மகனது மனதில் சம்யுக்தா மீது காதல் இருக்கிறதோ...? அவனது மனதில் பலத்த சந்தேகம் எழுந்தது... ஆனால் அடுத்தக் கணம் மகனது மனதினை அறிந்தவனாய் அவன் அந்த நினைவை அழித்து விட்டான்...

ஆனால் மகனது இந்த உரிமை, கோபம் எல்லாம் வேறு கதை சொல்கிறதே... எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து தீர்வு கண்டுபிடிக்கும் சித்தார்த்தனையே ஒரு முடிவுக்கு வர முடியாது தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்தான் ஜகஜ்ஜால கில்லாடியான அவனது அருமை மகன்...

"சார்..." என்ற பிரசன்னாவை பார்த்து புன்னகைத்த சித்தார்த்,

"இப்போ நீ எங்கே வேலை பார்க்கிற...?"

"எங்கேயும் இல்லை சார்..."

"அப்போ நாளைக்கே நம்ம ஹாஸ்பிட்டலை நிர்வகிக்கும் பொறுப்பை வந்து பார்..."

"சார்..." சித்தார்த்தின் அன்பில் அவன் மனம் நெகிழ்ந்து போனான்...

"ஹாஸ்பிட்டல், ஃபார்மசி, ஆசிரமம் இதில் எல்லாம் இந்தர் தலையீடு இருக்காது... இது எல்லாம் என் மனைவிக்குச் சொந்தமானது... எனது நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது..." என்று சித்தார்த் விளக்கம் அளித்தான்...

"இதை எல்லாம் நீங்க சொல்லணுமா சார்... நான் இப்பவே வேலைக்குச் சேர்ந்துட்டேன்..." என்று கூறி அவன் சிரிக்க...

"பிரசன்னா, நீ எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போகிற...?" அந்தக் கேள்வியில் அவன் பதில் சொல்லாது தலை குனிந்தான்...

"நீ சம்யுவை மறக்கிறது தான் உனக்கு நல்லது பிரசன்னா..."

"சார்..." அவன் கலங்கி போனான்...

"இந்த ஜென்மத்தில் அவள் தான் இந்தரோட மனைவி... எங்க வீட்டு மருமகள்... அதாவது அவள் உன் தம்பி மனைவி... இந்தரே இந்த உறவு முறையை மறுத்தாலும் நான் இந்த உறவை விட்டு கொடுப்பதாய் இல்லை..."

சம்யுக்தாவை 'கொழுந்தியாள்' என்று சித்தார்த் கூறியதும் பிரசன்னா மனதில் பூகம்பமே வெடித்தது... இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு சித்தார்த்தை பார்த்து புன்னகைத்தவன்,

"தங்கை போன்ற பெண்ணைத் தவறா நினைக்கும் அளவுக்குக் கேடு கெட்டவன் நானில்லை..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

இந்த வார்த்தைகளைக் கூற அவனது மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்று சித்தார்த்தால் புரிந்து கொள்ள முடிந்தது... ஆனால் அவனது மனக்காயம் ஆற இது மாதிரியான அறுவை சிகிச்சை தேவை என்றே தோன்றியது...

"குட் பிரசன்னா... இனி நல்லதே நடக்கும் என்று நம்புவோம்..."

"நிச்சயமா சார்..." என்ற பிரசன்னா அவனிடம் இருந்து விடைப்பெற்று கிளம்பி சென்றான்...

சித்தார்த் தனது கையிலிருந்த புகைப்படத்தை எடுத்துப் பார்த்தான்... சம்யுக்தா முகத்தில் சந்தோசத்தின் மலர்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது... இந்திரஜித்தின் முகத்தில் அப்படி எந்தவொரு உணர்வும் இல்லாது வெறுமையாக இருந்தது.... ஆனால் அவனது பார்வை சம்யுக்தாவை நோக்கி இருந்தது... இந்திரஜித்தின் காதலில்லா பார்வை, அவன் உரிமையாய் சம்யுக்தாவின் கையைப் பிடித்திருந்த விதம் எல்லாம் சேர்ந்து சித்தார்த்தினுள் பெருத்த யோசனையை விதைத்தது... என்ன முயன்றும் அவனால் விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை...

அந்தக் கணம் அவனது மூளையில் ஒரு யோசனை தோன்றியது... நேரே சம்யுக்தாவை சந்தித்து இது பற்றிக் கேட்டால் என்ன...? அது தான் சரியென்று அவனுக்குத் தோன்றியது...

சித்தார்த் அலுவலக அறையில் இருந்து எழுந்து வரவேற்பறைக்கு வந்தான்... அங்கு ஆதித்யாவுக்கு உணவு ஊட்டுவதற்காக மனைவி அவனுடன் போராடி கொண்டிருப்பதைக் கண்டு அங்குச் சென்றான்...

"த்தை... த்தை..." என்று சின்னவன் அழுதழுது முகம் சிவந்து தேம்பி கொண்டிருந்தான்... அதைக் கண்டு அவனுக்குக் கஷ்டமாக இருந்தது...

"ரதிம்மா... ஆதியை என்னிடம் கொடு..." என்று பேரனை வாங்கிக் கொண்டவன் அவனுக்கு விளையாட்டுக் காண்பிக்கச் சின்னவன் அத்தையை மறந்து தாத்தாவிடம் ஐக்கியமானான்... பிரகதீஸ்வரி அந்த வாய்ப்பை பயன்படுத்தி அவனுக்கு உணவு ஊட்டி முடித்தாள்...

உணவு உண்டதும் சின்னவன் உறங்கி விட்டான்... அழுததால் மிகவும் சோர்ந்து போயிருந்தான்... பேரனை விழிகளால் வருடியபடி மனைவியிடம்,

"மாப்பிள்ளை என்ன சொல்கிறார் ரதி...?"

"சம்யுக்தா வீட்டை விட்டு போய் ஐந்து நாட்களாகி விட்டது... இந்த ஐந்து நாளும் எந்தப் பேச்சும் இல்லை... இறுகி போய் இருக்கிறாராம்..."

அவளுமே மருமகனிடம் பேசவில்லை... மகன் செய்த காரியத்திற்கு எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவள் பேசுவாள்... இந்த மட்டும் தங்களது செல்ல மகளைக் கை விடாது அவர்களது வீட்டில் சூர்யா இருப்பதே அவர்கள் செய்த பெரும் பாக்கியம்...

"நான் சம்யுவை போய்ப் பார்க்கலாம்ன்னு இருக்கேன்..." சித்தார்த் சொன்னதும் பிரகதீஸ்வரி திடுக்கிட்டவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"எதுக்கு...?"

"இந்தருக்கும், அவளுக்கும் என்ன சம்பந்தம்ன்னு தெரிஞ்சுக்கத் தான்...?" என்ற கணவனைப் புரியாது

பார்த்தாள்...

"தான் காதலிப்பதை மட்டும் நம்பி ஒரு பொண்ணு ஒருவன் பின்னாடி போக முடியாது ரதிம்மா..."

உண்மை தானே... அவளும் மனம் நிறையக் காதலிருந்த போதும் கணவன் மனதினை அறியாது அவனைத் தேடி அவள் செல்லவில்லையே...

"சம்யு இந்தளவுக்கு இந்தரை நம்பி அவன் கூடப் போயிருக்கிறாள் என்றால்...? அவன் எந்த மாதிரியான நம்பிக்கையை அவளுக்கு அளித்திருக்க வேண்டும்...?"

"ஒருவேளை இந்தர் அவளைக் காதலித்து இருப்பானோ...?"

"ம்ஹூம்... அதுக்குச் சான்ஸ் இல்லை..."

"அது எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க...?"

இதற்கான விடையை அவன் மட்டுமே அறிவான்... அதை மனைவியிடத்தில் கூற அவனுக்கு விருப்பம் இல்லை...

"அது அப்படித் தான்..." என்றவனைக் கூர்ந்து பார்த்தவள்,

"நீங்க என் கிட்ட எதையோ மறைக்கிறீங்க..."

"அப்படி எல்லாம் இல்லை ரதிம்மா... அவனைப் பற்றி எனக்கு நல்லா தெரியும்... எனக்கு என்னமோ அவன் பொய்யான உறுதிமொழி எதுவும் அவளுக்குக் கொடுத்து இருப்பானோ என்று சந்தேகமாக இருக்கிறது..."

"அப்படி என்றால் நம் இந்தர் சம்யுவை ஏமாற்றி விடுவானோ...?" அவளது விழிகளில் அச்சம் படர்ந்தது...

"ச்சேச்சே... அதுக்கு நாம் தான் விட்டு விடுவோமா என்ன...?"

"இப்போது விட்டு விட்டோமே..." என்று கண் கலங்கிய மனைவியவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் அந்த நல்ல கணவன்...

'முட்டாள்... எதையும் யோசித்துச் செய்வது கிடையாது...' என்று அவன் மனதில் மகனை திட்டி கொண்டான்...

********************

"பாவா, எங்கே கூட்டிட்டு போறீங்க...?"

கண்களை மூடி தன்னை அழைத்துச் சென்ற இந்திரஜித்திடம் சிறு குழந்தை போல் ஆர்வம் தாங்காது கேட்டுக் கொண்டே வந்தாள் சம்யுக்தா...

"இன்னும் கொஞ்சம் தூரம் போனால் என்னன்னு தெரிந்து விடப் போகிறது... கொஞ்சம் ஆடாது வா..." என்று அவளை அதட்டியபடி அவன் அழைத்துச் சென்றான்...

பின்னால் இருந்து தனது விழிகளை மூடியிருந்த தன்னவனின் அருகாமை, அவனது பிரத்யேக நறுமணம் எல்லாம் சேர்ந்து பாவையவளின் மனதினை மயக்கியது... அதே போன்றதொரு மனநிலையில் தான் அவனும் இருந்தான்... சம்யுக்தாவின் தலையில் சூடியிருந்த மல்லிகைப்பூவின் நறுமணம் அவனைத் தன்வசம் இழக்க செய்தது... பூவை நோக்கி குனிந்து நன்றாக மூச்சை இழுத்து சுவாசித்து அதன் நறுமணத்தைத் தனக்குள் நிறைத்துக் கொண்டான்... அதன் சுகந்தம் அவனுள் இனிமையைச் சுகமாய்ப் பரப்பியது...

சற்றுத் தூரம் சென்றதும் அவளது கண்களில் இருந்து அவன் தனது கைகளை எடுத்தான்... அந்த இடத்தைக் கண்டதும் சம்யுக்தாவின் விழிகள் வியப்பில் விரிந்தது...

"எனக்கே எனக்காகவா பாவா...?" தன்னவனின் அன்பில் அவள் திக்குமுக்காடி போனாள்...

"பின்னே எனக்கா...?"என்று அவளைக் கிண்டலடித்தவன்,

"எனக்கு மண்பானை, சட்டி எல்லாம் செய்யத் தெரியாதும்மா..." என்று முடித்தான் கேலி குரலில்...

ஆம், சம்யுக்தாவிற்காக அவன் வீட்டின் பின்புறத்தில் களிமண்ணாலான பொருள்கள் செய்வதற்கு ஏதுவாக

எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருந்தான்... அந்தப் பெரிய கட்டிடத்தின் உள்ளே மின்சாரச் சக்கரம், களிமண்ணைப் பதப்படுத்துவதற்கு என்று தனியே இடம், மோல்டிங், பினிஷிங், ஃபயரிங் (மின்சார அடுப்பு), பேக்கிங் எல்லாம் செய்வதற்கு ஏற்றவாறு இயந்திரங்கள் இருந்தது...

"இது நீ பொருள்கள் உற்பத்தி பண்ணுவதற்காக மட்டுமே... விற்பனைக்கான இடம் சிட்டிக்குள் மெயின்னான இடத்தில் பார்த்திருக்கிறேன்..."

"பாவா..." மனம் நெகிழ பார்த்தவளை கண்டு அவன் புன்னகைத்தான்...

"இன்னும் இருக்கிறது... இங்கே வா... இந்த ஊர் சங்கராபரணி ஆற்று மண் சிலைகள் செய்வதற்கு ரொம்பப் பேமசானது..." என்றவன் அவளை வெயிலில் மண் உலர்த்தப்பட்டு இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான்...

"இது நல்லா காயணும்... அதுக்கு அப்புறம் ஒரு நாள் முழுசும் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கணும்... அதன் பிறகு நீ விரும்பும் பொருளை இதில் செய்யலாம்..."

மண்பானை செய்யும் அவளுக்கே இது புதுமையாக இருந்தது... ஆனால் அவனோ இந்தத் தொழிலை கரைத்துக் குடித்தது போல் பேசியது கண்டு அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"இது எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"எனக்கு இது பத்தி ஒண்ணும் தெரியாது... ஆனால் உனக்காக இதை எல்லாம் தெரிஞ்சிக்கிட்டேன்... பூவோடு சேர்ந்து நாரும் மணப்பது போல் உன்னோடு சேர்ந்து இந்த மண்ணும் மணக்கிறது..." என்று கண்சிமிட்டி சிரித்தவனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தவளின் மனம் ஒட்டுமொத்தமாய் அவனது காலடியில் சரணடைந்தது...

தான் நித்தமும் பூஜிக்கும் தெய்வம் தனது உயரத்தை விட்டு கீழேயிறங்கி தன்னைப் போல் சாமானியனாய் அதுவும்

தனக்காக மாறியது கண்டு அவளது விழிகள் இரண்டும் கலங்கி போனது அவளின் மனதினை போல்...

சம்யுக்தா தன்னவனின் காதலில் ஊனும், உயிரும் உருக நின்றிருந்தாள்...!!!

"வீச்சே காலுலு தாஹி செப்பெனீ குஸ குஸலீ
(Air just stopped flowing and is whispering your feelings to me)
ச்சூஸே முஸி முஸி நவ்வுலு சேஸ்ஸே பாஸலனீ
(When you look at me with a smile.. I can feel lots of promises you make)
வசமய் ஆனந்தபுலோகிட அருதிந்ச்ஸே ஆகாசம்
( Sky got hypnotized by our happiness and surrenders to us)
ஸகமய் ஈ ஸாகரமந்த்தே அகுபின்ச்ஸே ஆ சாந்தம்
(half of the silence between us is taken away by this sea)
தீரம் ( Seashore) முடிவேஸின தாரம் ( acted like a thread and tied us)
தீர்ச்சே ஏத பாராலே... (And took weights off my heavy heart)
மதுரமே ஈ க்ஷணமே ஓ செல்லி (This moment is sweet, o my dear)
மதுரமே ஈ க்ஷணமே (This moment is sweet)
மதுரமே வீக்ஷணமே (This vision is sweet) Oo Cheli (O my dear)
மதுரமே வீக்ஷணமே (This vision is sweet)
மதுரமே லாலஸயே (This love is sweet)
மதுரம் லாலனயே (This care is sweet)
மதுரம் லாஹிரிலே (This intoxication is sweet)
மதுரம் லாலிதமே ( This beautiful feel is sweet)
மது பவனம் வீச்சி ( in the breeze of this sweetness)
மது பவனம் வீச்சி பருவமே மைய்மர்ச்சிந்திலே
(In breeze of this sweetness.. My youth feels blessed)
(Song From Arjun Reddy Telugu Movie)

தொடரும்...!!!

சம்யுக்தா பயிற்சி வகுப்பில் தனது பணியில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தாள்... இது போன்ற வேலைகள் செய்வதற்கு ஏதுவாக அவள் சுடிதார் அணிந்திருந்தாள்... புடவை அணிந்து கொண்டு கிளம்பியவளை இந்திரஜித் தான் சத்தம் போட்டு சுடிதாருக்கு மாற்றி இருந்தான்... உடையை மாற்றுவதற்குப் பிடிவாதம் பிடித்தவளை கண்டு கோபமாய் முறைத்தவன்,

"வேலை கத்துக்கப் போறியா...? இல்லை எல்லோருக்கும் ஷோ காட்ட போறியா...?" என்று கடுமையுடன் கேட்டவனைக் கண்டு அவள் புரியாது விழித்தாள்...

தான் பேசுவது அவளுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை என்று புரிந்தவன் மெதுவே அவளிடம்,

"ஊரில் நீ பானை செய்யும் போது ஏன் ஜென்ட்ஸ் சர்ட் போட்டுக்கிட்டு வேலை செஞ்ச...?" அவன் கூறியதும் தான் அவளது புத்தியில் அது உறைத்தது...

"ஹி ஹி... பாவா மாதிரி நான் புத்திசாலி இல்லையே... அதான் எனக்கு இது தோணலை..."

"அப்போ நான் புத்திசாலின்னு ஒத்துக்கிறியா...?"

"இதில் சந்தேகம் வேறா...? என்னை விட நீங்க தான் அதிபுத்திசாலி... பெரிய பெரிய படிப்பு எல்லாம் படிச்சிருக்கீங்க.... வெளிநாடு எல்லாம் போயிட்டு வந்திருக்கீங்க... ஆனா நான்...? எனக்கு எதுவுமே தெரியாதே..."

உதட்டை பிதுக்கி தனது குறைகளை முழுமனதுடன் ஒத்து கொண்டவள் முகத்தில் வெகுளித்தனம் மட்டுமே இருந்தது... அதே போல் அவனைக் குறித்துக் கர்வமும் அதில் இருந்தது... அவளது வெகுளித்தனம் அவனைக் கவர்ந்ததோ என்னமோ... அவள் காதருகில் குனிந்து,

"உண்மையில் உனக்கு எதுவுமே தெரியாது தான்..." என்றான் ரகசிய குரலில்...

"பார்த்தீங்களா நீங்களே சொல்லிட்டீங்க..." என்றவள்,

"பாவா, எனக்குத் தெரியாததை எல்லாம் சொல்லி கொடுக்கிறீங்களா...?"

மீண்டும் அறியாமையுடன் கேட்டவளை கண்டு மனம் நெகிழ்ந்ததில் அவனது முகத்தில் புன்னகை பூத்தது...

"இதை விட எனக்கு வேறு என்ன வேலை இருக்கிறது...?" என்று குறும்பு கூத்தாடும் குரலில் கூறியவன் அவளை இறுக அணைத்துக் கொண்டு,

"இது தான் முதல் பாடம்..." என்று கூற... அதில் பாவையவளின் முகம் சிவந்து போனது...

"நான் இதைச் சொல்லலை..."

"நான் இதை மட்டுமே சொன்னேன்..." என்றான் அவன் விசம சிரிப்புடன்...

"போங்க பாவா..." என்றவள் அவனின் பிடியில் இருந்து ஓடி விட்டாள்... ஆனால் அவனின் நகையொலி அவளைத் துரத்தி கொண்டு வந்தது...

அதை நினைத்து இப்போதும் அவளது உதடுகளில் புன்னகை அரும்பியது... அவளது கைகள் அது பாட்டிற்கு வேலைகளைச் செய்ய அவளது மனம் தன்னவனிடம் ஆழ்ந்திருந்தது...

"சம்யுக்தா..." அங்கு வேலை பார்க்கும் ஒருவர் அவளை அழைத்தார்... நிமிர்ந்து பார்த்தவளை கண்டு,

"யாரோ உன்னைப் பார்க்க வந்திருக்காங்க...?" என்று கூறிவிட்டு செல்ல...

'யாராக இருக்கும்...?' என்று அவள் யோசித்துக் கொண்டே கைகளைக் கழுவி கொண்டு வாயிலுக்கு வந்தாள்...

அங்கு மரத்தடியில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த சித்தார்த்தை கண்டதும் அவளது விழிகள் கலங்கியது... அடுத்தக் கணம் காற்றை விட வேகமாக அவனை நோக்கி ஓடி வந்தவள் தடாலென்று அவனது கால்களில் விழுந்தாள்...

"மாமாகாரு நன்னு ஷேமிச்சண்டி..." (மாமா என்னை மன்னியுங்கள்) என்று கதறியழுதாள்...

அவளின் இந்தச் செயலை சித்தார்த் சிறிதும் எதிர்பார்க்காதவனாய் திகைத்து நின்றான்... பின் சுதாரித்துக் கொண்டு அவளைத் தூக்கி எழுப்பியவன்,

"சம்யு... என்னம்மா இது...?" என்று செல்லமாய்க் கடிய... அவளோ பதில் பேச முடியாது கதறியழுதாள்...

"எப்படிம்மா உன்னால் எங்களை எல்லாம் விட்டுட்டு வர முடிஞ்சது...? எங்களை விடு... உன் அண்ணனை கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா...? மாப்பிள்ளை ரொம்பவும் மனசு உடைஞ்சு போயிட்டார்..."

அதைக் கேட்டு அவளது அழுகை இன்னமும் அதிகரித்தது...

"அவருக்கும் உனக்குமான உறவு எப்படிப்பட்டதுன்னு நான் சொல்ல தேவையில்லை... அப்படிப்பட்ட உறவை உன் காதலுக்காகத் தூக்கி எறிஞ்சிட்டு வந்துட்டியே..."

சித்தார்த் பேச பேச குற்றவுணர்ச்சி அதிகரித்ததில் அவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்...

"ஆதி கூட உன்னை மறக்க முடியாம இன்னமும் அழுது கிட்டு இருக்கான்..."

"ஆதி பங்காரம்..." என்று சொல்லி அவள் மேலும் அழ துவங்கினாள்...

"சரி எல்லாத்தையும் விடு... நீ இந்தரை காதலிக்கிறேன்னு வச்சுக்குவோம்... ஆனால் இந்தர் உன்னைக் காதலிக்கிறானா...? அப்படியே அவன் உன்னைக் காதலிப்பதாக இருந்தால் அவன் எப்போது உன்னைச்

சந்தித்தான்...? எப்படி உங்களுக்கு இடையில் காதல் மலர்ந்தது...? ஏன்னா என் மகனை பற்றி எனக்கு நல்லா தெரியும்... அதனால் தான் இத்தனை கேள்விகள் நான் உன்னைப் பார்த்துக் கேட்கிறேன்... எந்த நம்பிக்கையில் நீ இந்தரை நம்பி அவனுடன் வந்திருக்க..."

சித்தார்த்தின் எந்தக் கேள்விக்கும் இப்போது அவளிடம் விடை இல்லை... விடை இல்லை என்பதை விட விடை பகிர அவளுக்கு உரிமை இல்லை... அதற்கான உரிமை இந்திரஜித்திடம் அல்லவா இருக்கிறது... அதனால் சம்யுக்தா மௌனத்தையே பதிலாகக் கொடுத்தாள்...

"எந்த நம்பிக்கையில் என்னுடன் வந்தாள்ன்னு உங்களுக்குக் கட்டாயம் தெரிஞ்சாகணுமா...?" என்று கேட்டபடி அங்கு வந்து சேர்ந்தான் இந்திரஜித்...

திடீரென மகனை அங்குக் கண்டதும் சித்தார்த் திகைத்துப் போனான்... சம்யுக்தா பயத்துடன் தன்னவனைப் பார்த்தாள்... தந்தைக்கும், மகனுக்கும் இடையில் தன்னால் பிரச்சினை வந்து விடக் கூடாதே என்று...

"நம்பி வந்தவளை காலம் முழுவதும் கைவிட மாட்டேன் என்கிற நம்பிக்கையில்..."

தகப்பனுக்கு மனசாட்சி குத்த வேண்டும் என்பதற்காகவே அந்த வார்த்தைகளை அழுத்தி சொன்னான் இந்திரஜித்... அவன் நினைத்தது போல் சித்தார்த்தின் முகம் கறுத்துப் போனது...

"நீங்க கேட்ட எந்தக் கேள்விகளுக்கும் என் அனுமதி இல்லாமல் யுகிம்மா பதில் சொல்ல மாட்டாள்... அது போல் நீங்க கூப்பிட்டாலும் அவள் உங்க கூட வர மாட்டாள்..." தன்னவளின் காதலில் அவனின் வார்த்தைகள் திமிராய் வந்தது...

"சம்யு... நான் சொல்றதை கேளும்மா... இவனை நம்பி வந்திருக்கிற உனக்கு இவன் கொடுக்கப் போவது அவமானம் மட்டுமே... நாளைக்கு இவன் உன்னைக்

கைவிடும் போது இந்த அவமானம் மட்டுமே உனக்கு மிஞ்சும்... இந்த இழிநிலை உனக்குத் தேவை தானா சொல்லு...? இப்போதும் ஒண்ணும் கெட்டு போகலை... நீ என்னுடன் கிளம்பி வா... இவனா உன் அருமை உணர்ந்து வந்து உன்னைக் கல்யாணம் பண்ணி கூட்டிட்டு போகட்டும்... அதுவரை நீ எங்களுடன் வந்து இரு... இவனுடன் இருந்தால் நீ உன் சுயத்தை இழந்து விடுவாய் சம்யு..."

எதற்கும் பதட்டப்படாத சித்தார்த்தையே பதட்டப்பட வைத்தான் அவனது அருமை மகன்... தகப்பனின் பேச்சில் இந்திரஜித் மனதில் கோபம் பொங்கிய போதும் கைகளைக் கட்டி கொண்டு இறுகி போய் நின்றிருந்தான்... இதற்குச் சம்யுக்தா தான் பதில் சொல்ல வேண்டும்... ஏனோ அவனுக்கு இதற்குப் பதில் கூற விருப்பம் இல்லை...

"மாமாகாரு... பாவா என்னைக் காதலிக்கலை, என்னைக் கைவிட்டுருவாங்க, இதனால் எனக்கு அவமானம் தான் மிஞ்சும்... இது தானே உங்களது கேள்விகள், கவலைகள்... உங்களோட இந்தக் கேள்விகள், கவலைகள் தேவையில்லாத ஒன்று... எனக்குப் பாவா மேல் நம்பிக்கை இருக்கு..." என்றவளை பெருமிதத்துடன் பார்த்த இந்திரஜித்,

"அதான் யுகியே சொல்லிட்டாளே... கிளம்புங்க, கிளம்புங்க... காற்று வரட்டும்..." என்று அவன் தந்தையைக் கேலி செய்தான்...

மகனது கேலியில் சித்தார்த்தின் இரத்தம் கொதித்தது... ஆனால் அழுது கரைந்து கொண்டிருந்த சம்யுக்தா அவனது கோபத்தினைக் கட்டுப்படுத்தினாள்... அவளது தலை மேல் ஆசிர்வாதம் செய்வது போல் கை வைத்தவன்,

"உன்னோட இந்த நம்பிக்கை கடைசிவரை காப்பாற்ற படணும்... அது தான் எனது ஆசை.... அது தான் எனது பிரார்த்தனையும் கூட..." என்று அவளிடம் கூறியவன் மகனிடம்,

"சம்யு மாதிரியான பெண்ணின் காதல் காண கிடைக்காது... அதில் நீ கொடுத்து வைத்தவன் இந்தர்... இப்படியொரு காதல் வரம் உனக்குக் கிடைத்து இருக்கிறது... அதை உன் முட்டாள் தனமான கொள்கைகளால் இழந்து விடாதே..."

"அதை நீங்க சொல்ல தேவையில்லை..." என்றான் மகன் முறைப்புடன் விறைப்பாக...

மகனின் முறைப்பு, விறைப்பு இது எதுவும் சித்தார்த்தை பாதிக்கவில்லை... நேரே மகன் முன் வந்தவன் அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு,

"என் மீது உனக்குக் கோபம் இருக்கலாம்... ஆனால் என் பக்கமும் சில நியாயங்கள் இருக்கும் இல்லையா... அது உனக்குப் புரியும் போது என் மீதான உன்னுடைய கோபம் போகும்ன்னு நினைக்கிறேன்..."

"பெரிய நியாயவான் மாதிரி பேசாதீங்க..." என்று மகன் வெடுக்கென்று கூறியதை கேட்டு தகப்பன் கசந்த முறுவலுடன் அவனைப் பார்த்தான்...

"நான் நியாயவான் இல்லை என்றே வைத்து கொள்வோம்..."

"அது தானே உண்மை..." என்ற மகனின் வார்த்தைகளைப் புறம் தள்ளிய சித்தார்த்,

"நீ நியாயவான் தானே... அப்படி என்றால் உன்னை நம்பி வந்திருக்கும் இந்தப் பெண்ணை அவமானப்படுத்தி விடாதே... அவளது கழுத்தில் தாலி கட்டி ஊரறிய உன் மனைவியாக்கி கொள்... சின்னப் பெண்ணிற்குத் துரோகம் செய்துவிடாதே..."

"என்னடா சென்னை புயல் பாண்டிச்சேரி நோக்கி வருகிறதேன்னு யோசிச்சேன்... இதுக்குத் தானா...? இதற்கான பதிலை அன்றே உங்களிடம் சொல்லியாச்சுன்னு நினைக்கிறேன்..." என்றான் இந்திரஜித் சிறிதும் இரக்கம் இல்லாது...

"இந்தர்... உன் கையைக் காலா பிடிச்சுக் கேட்கிறேன்... சம்யு பாவம்டா... பெண் பாவம் பொல்லாதது..." என்று தனது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிய தந்தையைக் கண்டு இரங்காது நின்ற மகன்,

"இந்தப் புத்தி அன்று ஏன் உங்களுக்கு இல்லாது போயிற்று...?" மகனது கேள்வியில் சித்தார்த் மனதளவில் மிகவும் ஓய்ந்து போய்விட்டான்...

"சம்யு, இப்போதும் ஒன்றும் கெட்டு போகவில்லை... இப்போ கூட நீ என்னுடன் வரலாம்..."

சித்தார்த்தை பார்க்காது அவள் இந்திரஜித்தை பாவமாய்ப் பார்த்தாள்... அவனோ ஒன்றும் பேசாது இறுகி போய் நின்றிருந்தான்...

"இந்தர் தான் உனது வாழ்க்கை என்று நீ தீர்மானித்து விட்டாய்... உன்னோட அன்பு அவனது மனதை மாற்ற வேண்டும்... அவன் மனம் மாறுவான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... நீ நல்லா இருக்கணும் மருமகளே..." என்று அவளை ஆசிர்வாதம் செய்தவன் மகனிடம்,

"ஒன்றை நன்றாக நினைவில் வைத்து கொள் இந்தர்... சம்யுவுக்கு யாரும் இல்லைன்னு மட்டும் நினைக்காதே... நான் இருக்கிறேன் அவளுக்கு..."

"அடேங்கப்பா... யுகி, உனக்கு இவ்வளவு பெரிய சப்போர்ட் இருக்குன்னு நீ சொல்லவே இல்லை..." என்றான் மகன் நக்கல் குரலில்...

"இந்தர்..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் கத்திய தந்தையைக் கண்டு,

"ஷ்... சத்தம் போடாது வந்த வழியே திரும்பப் போங்க... உங்க தயவு இவளுக்குத் தேவைப்படாது... அவளுக்கு நான் இருக்கிறேன்... நான் பார்த்து கொள்வேன்... இது போல் இன்னொரு முறை எனக்குத் தெரியாம அவளைப் பார்க்க வராதீங்க... அப்படியே வந்தாலும் எனக்கு விசயம் தெரிந்து விடும்... அதனால் இந்த முயற்சியைக் கைவிட்டு விட்டுக்

கோயில், குளத்துக்குப் போங்க... கடைசிக் காலத்தில் புண்ணியமாவது கிடைக்கும்... செஞ்ச பாவத்துக்குப் பரிகாரம் செய்த மாதிரியும் இருக்கும்..." என்ற மகனை முறைத்து பார்த்த சித்தார்த் சம்யுக்தாவிடம்,

"நான் வர்றேன்ம்மா..." என்று கூறிவிட்டு செல்ல...

"வராதீங்க மிஸ்டர். சித்தார்த்..." என்று கத்தியவனைக் கண்டு சித்தார்த்தின் நடை வேகமெடுத்தது...

"பாவா..." சம்யுக்தாவின் அழைப்பில் அவள் புறம் திரும்பினான் இந்திரஜித்...

"மாமாகாரு பாவம் இல்லையா...?"

"யாரு அவரா...? அப்படிப் பார்த்தால் நான் தான் பாவம்..."

"நீங்களா...? ஏன்...?"

"பக்கத்தில் இவ்வளவு அழகான பெண்ணை வைத்துக் கொண்டு விரதம் காப்பது எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா...?"

விசம குரலில் ரகசியமாய்க் கூறியவனின் பேச்சில் அவள் சித்தார்த்தை பற்றிய கவலையைக் கைவிட்டவளாய் தன்னவனின் நினைவில் முகம் சிவந்தாள்...

"த்ச்சு... பாவா, எங்கே வந்து என்ன பேசுறீங்க...?" என்றவளை கண்டு,

"அப்போ வீட்டில் பேசலாமா...?" என்று அவன் கண்சிமிட்டி கேட்க...

"ஐயோ பாவா..." என்று நாணம் கொண்டு சிணுங்கியவளை கண்டு நிறைவாய் புன்னகைத்தவன்,

"நமக்குப் பேச்சு ஒத்து வராது... ஒன்லி ஆக்சன் தான் பேபி... உனக்கும் ஆக்சன் பிடிக்கும் தானே..." என்று கேட்டவனைக் கண்டு லஜ்ஜையுற்றவளாய் அவள் தனது முகத்தினை மூடி

கொண்டாள்... அதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"ஷல் வீ கோ ஃபார் லன்ச்...?"

"ஏமி பாவா...?" (என்ன பாவா...?) என்று புரியாது தன்னைப் பார்த்து கேட்டவளை கண்டு,

"மேமு போஜனம் வெல்தாமு...?" (நாம் சாப்பிட போகலாமா...?)

"ஹான்... பாகா வெல்தாம்..." (ஹான்... பேஷா போகலாமே)

இருவரும் சிரித்தபடி காரை நோக்கி நடந்தனர்... சித்தார்த் வந்து போன சுவடே தெரியாது அவளது மனநிலையை அழகாய் மாற்றி விட்டான் அவளது ஜித்தன்... அவளும் தன்னை அறியாது அவனது விருப்பத்தை நிறைவேற்றி வைத்தாள்... அவள் தன்னவனின் நினைவில் தனது வீட்டினரை சுத்தமாய் மறந்து போனாள்... அவனுக்கும் அது தானே வேண்டும்...

இந்திரஜித் சம்யுக்தாவுடன் தனியே சென்றது குறித்துப் பூஜாவிற்கு வெகு தாமதமாகத் தான் தெரிந்தது... அதைக் கேட்டு அவள் அருவருப்பில் முகத்தைச் சுளித்தாள்...

"நல்லவேளை நான் தப்பித்தேன்... அவன் என் கூடவும் இப்படித் தான் தப்பாக எண்ணி பழகினானோ என்னவோ..."

"பூஜா வார்த்தைகளை அளந்து பேசு... இந்தர் அப்படிப்பட்ட பையன் இல்லை... அவனைச் சின்ன வயசில் இருந்து எனக்குத் தெரியும்..." என்று ஸ்வேதா அக்கா மகளை அதட்ட...

அதில் கோபம் கொண்டு பூஜா அமெரிக்கா கிளம்பி சென்றுவிட்டாள்... அதற்காக ஸ்வேதா வருந்தவெல்லாம் இல்லை... அவளது வருத்தம் எல்லாம் அண்ணன் மகனை நினைத்து தான்...

**********************

சந்தோஷ் மருத்துவமனையில் இருந்த ஒவ்வொரு அறைக்கும் சென்று அங்குச் சிகிச்சைக்காகத் தங்கியிருந்த நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது... சாத்விகா என்றதும் அவனது கை தானாக அந்த அழைப்பை துண்டித்தது... கடந்த சில நாட்களாக அவன் அவளிடத்தில் எந்தப் பேச்சு வார்த்தையும் வைத்து கொள்ளவில்லை... மீண்டும் மீண்டும் அழைக்கவும் அவன் எரிச்சலுடன் அதை எடுத்துக் காதில் வைத்தான்...

"அத்தான்..." அவளது அழைப்பு அவனது காதினை இனிமையாக வருடி சென்று மனதினை குளிர்வித்தது... அந்தக் கோபத்திலும் அவனது மனம் அவளது அழைப்பை எதிர்பார்ப்பதை கண்டு அவன் தனக்குள் திடுக்கிட்டுப் போனான்...

"என்ன சொல்லு...?" வரவழைத்துக் கொண்ட எரிச்சலுடன் அவன் கடுகடுத்தான்...

"அத்தான்... நம்ம ஹாஸ்பிட்டலில் தான் இருக்கேன்... சீக்கிரம் ஐசியூக்கு வாங்க..."

அவளது பதற்றத்தில் அவன் தான் ஒரு மருத்துவன் என்பதை மறந்தவனாய் பதட்டம் அடைந்தவனாய் அங்கிருந்த மற்றொரு மருத்துவரை தனது பணியைச் செய்யச் சொல்லிவிட்டு ஐசியூ நோக்கி விரைந்தான்... அங்கு நின்ற சாத்விகாவை கண்டதும் தான் அவனது மனம் நிம்மதியுற்றது... ஆனால் அவளது அழுத முகம் அவனுள் குழப்பத்தை விளைவித்தது...

"என்ன அம்மு...?" அந்த நிலையிலும் கணவனது பதற்றத்தை உணர்ந்தவளாய் அவள் அவனை இமைக்காது பார்த்தாள்...

"யாருக்கு என்னாச்சு...? நீ எதுக்கு அழுதுக்கிட்டு இருக்க...?"

அதில் தன்னிலை உணர்ந்தவள் அழுது கொண்டே ஐசியூவை நோக்கி கையைக் காட்டி, "கண்ணா..." என்க...

அவளது 'கண்ணா' என்றழைப்பில் அவனது உடல் விறைத்தது... சாதாரண மனிதனாய் அவனுக்குக் கோபம் வந்த போதும் கடமை தவறாத மருத்துவனாய்,

"கண்ணாவுக்கு என்ன...?"

"திடீர்ன்னு மயக்கம் போட்டு விழுந்துட்டான்..." என்று தேம்பி தேம்பி அழுதவளை அரவணைத்து ஆறுதல் கூற அவனது கணவன் மனம் விரும்பிய போதும் கடமை அழைக்க அவன் உள்ளே விரைந்தான்...

அங்குப் படுக்கையில் மயங்கி படுத்திருந்தது சந்தோஷ் நினைத்தது போல் இளைஞன் அல்ல... நான்கு வயது சிறுவன்... சிறுவனைக் கண்டதும் சந்தோஷ் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... அத்தனை நிம்மதி அவன் மனதில்... அடுத்து துரிதமாய் மருத்துவனாய் சிறுவனுக்குச் சிகிச்சை அளிக்க ஆரம்பித்தான்...

சிறுவன் மயக்கம் தெளிந்து எழுந்ததும் மனைவியைத் தேடி வந்தான்...

"கண்ணாவுக்கு ஒண்ணுமில்லை... கண் முழிச்சிட்டான்..." அதைக் கேட்டு நிம்மதி அடைந்தவள்,

"சாதாரண மயக்கம் தானே..."

"அது உறுதியா தெரியலை... ஸ்கேன் பண்ணி பார்த்தால் தான் தெரியும்..." என்றான் சற்று கவலை தோய்ந்த குரலில்...

"அவனுக்கு என்ன அத்தான்...?" பயத்துடன் கேட்டவளை கண்டு புன்னகைத்தவன்,

"ஹேய் அம்மு... உன் புருசன் டாக்டர்ம்மா... அதனால் உனது இந்தக் கவலை தேவையில்லாதது..." அவனது ஆறுதலில் சற்று மனம் தெளிந்தவள்,

"நான் கண்ணாவை பார்க்க போகலாமா...?"

"இது உன் ஹாஸ்பிட்டல் அம்மு... என்னுடன் வா..." என்றவன் அவளை ஐசியூவிற்குள் அழைத்துச் சென்றான்...

சிறுவன் சாத்விகாவை கண்டதும், "அம்மா..." என்றழைத்தபடி எழ முயன்றான்...

"கண்ணா... எழ கூடாது... படுத்து ரெஸ்ட் எடுக்கணும்..." என்று பதறி போய் அவன் அருகில் வந்தவள் அவனைப் படுக்க வைக்க அவனோ அவளை அணைத்துக் கொண்டு அவளது நெஞ்சில் சாய்ந்து கொண்டான்...

சிறுவனின் 'அம்மா' என்றழைப்பில் சந்தோஷ் அதிர்ந்து தான் போனான்... ஆனால் சிறுவயதில் இருந்து அவளைத் தெரியுமாதலால் அவளைப் பற்றித் தவறாக அவனால் எண்ண முடியவில்லை...

சின்னவன் அவளிடம் பேசி கொண்டே இருந்தவன் சிறிது நேரத்தில் உறங்கி விட்டான்... அவனைப் படுக்கையில் படுக்க வைத்து தலையைக் கோதி கொடுத்து விட்டு நிமிர்ந்த சாத்விகா அப்போது தான் கணவனைப் பார்த்தாள்...

"யாரிவன்...?"

சந்தோஷின் விழிகள் சின்னவனின் தோற்றத்தினை அலசி ஆராய்ந்தது... நல்ல அழகுடன், பணக்கார களையுடன் இருந்தான் அந்தச் சின்னக் கண்ணன்...

"என்னுடைய மகன்..." என்றாள் அவள் அவனைக் கண்டு நிமிர்வாய்... அவளது வார்த்தையில் அவனது விழிகள் இடுங்கியது...

"அந்தளவுக்கு நான் பெருந்தன்மையானவன் இல்லை அம்மு..." என்றவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"அது பற்றிய கவலை எனக்கு இல்லை..." என்று எப்போதும் போல் அலட்சியமாய்க் கூறியவள் சின்னவன் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்...

அவளது அலட்சியம் வழக்கம் போல் அவனுள் கொதிப்பை அதிகரித்தது...

********************

"பேபி... இன்னும் என்ன பண்ணிக்கிட்டு இருக்க...? சீக்கிரம் வா..." இந்திரஜித் உள்நோக்கி குரல் கொடுத்தான்...

"நேனு வஸ்துன்நானு பாவா..." (நான் வந்துக்கிட்டு இருக்கேன்) என்றபடி சம்யுக்தா அங்கு வந்து சேர்ந்தாள்...

ஆகாய வண்ண புடவையில் வானத்து தேவதை போல் இருந்தவளை கண்டு அவனது விழிகள் இமைக்க மறந்தது... அதிலும் அவள் கழுத்தில் அணிந்திருந்த அணிகலன் மிகவும் வித்தியாசமாக இருந்தது... தங்கமும் அல்லாது, வைரமும் அல்லாது இது என்ன வித்தியாசமாய்...? என்று நினைத்தவன் அதை அவளிடத்தில் அப்படியே கேட்டும் விட்டான்...

"பாவா நல்லாயிருக்கா...?"

"ம்... ரொம்ப..." என்றவனது விழிகள் அவளை ரசனையுடன் வருடி சென்றது...

"இதுக்குப் பெயர் 'டெரக்கோட்டோ ஜூவல்லரி'... நானே செஞ்சது..." என்று பெருமையுடன் கூறியவளின் பெருமை அவனையும் தொற்றிக் கொண்டது...

அவனின் பெருமைக்கு நிச்சயம் ஒரு அர்த்தம் இருந்தது... ஏனெனில் அந்த நகை அந்தளவிற்கு மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுடன் மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டு இருந்தது... அவளது கை வண்ணத்தின் மீதிருந்த நம்பிக்கையில் அவனது பெருமிதம் கர்வமாய் மாறியது... 'இவள் என்னவள்' என்கிற கர்வமே அவனை அவளிடம் மேலும் நெருங்க செய்தது...

"நீ செஞ்சதா...? எங்கே பார்ப்போம்...?" என்றவன் அவள் அருகே நெருங்கி வந்து அவளது நகை மீது கை வைத்து வருடி கொடுத்தான்...

அப்போது அவனது கை விரல்கள் அவளது கழுத்தினை மென்மையாய் வருடி சென்றது... அதில் அவளது மேனி சிலிர்த்து அடங்கியது... அதை உணர்ந்தவனாய் அவன் அவளது காதருகில் குனிந்து,

"உன்னைப் போல் ரொம்ப அழகாயிருக்கு..." என்க...

"உங்களைப் போல்ன்னு சொல்லுங்க... என்னை விட நீங்க தான் அழகு..." என்று அவள் மறுக்க...

"நீ எவ்வளவு அழகுன்னு என் கண்களைப் பார்... உனக்குத் தெரியும்..." என்றவன் அவளது நாடி தொட்டு முகத்தை நிமிர்த்தி அவளது விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தான்...

அவனது விழிகளில் தெரிந்த ஏதோ ஒரு சுழல் அவளை அப்படியே மயக்கி இழுத்துக் கொண்டு சென்றது...

"இப்போ சொல்லு...? நீ அழகு தானே..."

"என்னை மயக்கும் நீங்க தான் என்னை விட அழகு..." என்றாள் அவள் மயக்கம் தெளியாத குரலில்...

"அப்படிப் பார்த்தால் என்னை மயக்கும் நீ தான் என்னை விட அழகு..." என்றவனின் குரலில் அப்பட்டமாய் மயக்கம் தெரிந்தது...

அவனது வார்த்தைகள் கேட்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"உண்மையாவா பாவா...? உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?"

"பிடிக்காமல் தான் உன்னை என்னுடன் கூட்டிட்டு வந்தேனா...?"

ஆனால் இடைப்பட்ட நாட்களில் அவனது நேசம் கேள்விக்குறியாகத் தானே இருந்தது... அதை நினைத்து அவளது முகம் வாடி போனது... அவளது முகமாறுதலை வைத்து அவளது மனதினை கணித்திட்டவனாய்,

"நடந்து முடிந்ததை என்னால் மாற்ற முடியாது... ஆனால் இனி நடக்கப் போவது என் கைகளில் மட்டுமே..." என்று உறுதிபடக் கூறியவனின் வார்த்தைகளில் அவளது முகம் மலர்ந்தது...

"அந்த நம்பிக்கை தான் என்னை உயிர் வாழ செய்கிறது..." என்றவளை கண்டு அவனும் நம்பிக்கையுடன் புன்னகைத்தான்...

அந்த நொடி அவனது மனதில் பழைய கசடுகள் எதுவும் இல்லை... அவன், அவள் இருவருக்கும் மட்டுமேயான வாழ்க்கை மட்டுமே மனதில் நின்றது... இனி இது தான் நிதர்சனம் மற்றும் நிரந்தரம்... அந்தக் கணம் தனது வாழ்க்கையின் நிதர்சனமும் நிரந்தரமுமான அவளை அவன் மனமார ஏற்றுக் கொண்டான்... ஏனெனில் அவனது தாயின் வளர்ப்பு சம்யுக்தா விசயத்தில் தவறாகி போய்விட அவன் விரும்பவில்லை...

"போகலாம் வா..." என்றபடி வலது கையை நீட்டியவனிடத்தில் அவள் தனது கையை நீட்ட... அவனும் விடாது இறுக பற்றிக் கொண்டான்...

கார் ஓட்டுநர் இருக்கையில் அவளை அமர சொன்னவனைக் கண்டு அவள் மிரண்டு விழித்தாள்...

"எனக்குக் கார் ஓட்ட தெரியாதே பாவா..."

"கற்றுக் கொள்ளத் தான் உன்னை உட்கார சொல்கிறேன்..." என்றவன் வலுக்கட்டாயமாக அவளை அமர செய்து கதவை சாத்தி விட்டு மறுபக்கம் வந்து அமர்ந்தான்...

காரை எப்படிக் கிளப்புவது என்று அவன் சொல்லி கொடுக்க அவள் கையைத் தலைக்கு மேல் தூக்கியபடி, "ஏழுகுண்டலவாடா... என்னைக் காப்பாத்து..." என்று கர்ம சிரத்தையுடன் கடவுளை வேண்ட...

"அது ரோட்டில் போறவங்க வேண்டி கொள்ள வேண்டியது... சம்பந்தம் இல்லாமல் நீ ஏன் வேண்டிக்கிற...?" என்று கேலி சிரிப்புடன் அவன் காரை கிளப்ப சொல்ல...

அவள் காரை கிளப்பி ஸ்டீயரிங்கை திருப்பிய வேகத்தில் கார் பக்கவாட்டில் இருந்த தூணின் மீது இடித்துக் கொண்டு நின்றது... அதைக் கண்டு அவள் பயந்து போனவளாய் அவனைத் திரும்பி பார்த்தாள்... அதற்கேற்றார் போன்று அவன் அவளை முறைத்து பார்த்துக் கொண்டிருந்தான்...

"பாவா, தெரியாம பண்ணிட்டேன்... இனிமேல் இப்படிப் பண்ண மாட்டேன்... உங்க மேல் சத்தியமா... இல்லை வேண்டாம், என் மேல் சத்தியமா..." என்று சிறு குழந்தை போன்று பயத்தில் நடுங்கியவளை கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"இன்னமும் நீ சின்னக் குழந்தை தான்டி..." என்று அவளது கன்னம் தட்டி அவன் சிரிக்க...

"பாவா, என் மேல் கோபமில்லையே..." என்றாள் ஆச்சிரியம் மாறாத குரலில்...

"இல்லையே..."

"இது ரொம்ப விலை உயர்ந்த கார் மாதிரி இருக்கே..."

"ரொம்ம்ம்ம்மப அதிகமில்லை... கொஞ்சமே கொஞ்சம் தான்..." என்றவன் காரின் விலையைக் கூற...

"ஐயோ... அவ்வளவா...?" என்றவளுக்கு மயக்கம் வந்தது...

"அவ்வளவே தான்... போனால் போகிறது... உன் பெயரை சொல்லி புதுக் கார் வாங்கலாமா...?" என்றபடி அவள் பக்கமாய்க் கையைச் செலுத்தி ஸ்டீயரிங் வீலை பிடித்து இயக்கி காரை வீட்டின் முன் கொண்டு வந்து நேராக நிறுத்தியவன்,

"இன்னைக்கு நாள் சரியில்லை போலும்... நாளைக்குப் பழகி கொள்ளலாம்..." என்று கூறியபடி அவன் கீழே இறங்கினான்... அவனைத் தொடர்ந்து அவளும் தானே கார் கதவை திறந்து கொண்டு இறங்கினாள்...

"அட அதிசயம் தான்..." என்று அவன் வியக்க...

"நீங்க செய்வதைப் பார்த்திருந்து கத்துக்கிட்டேன்..." என்றவளை கண்டு அவனுக்குப் பெருமையாக இருந்தது... அவளது புத்திக்கூர்மையை அவன் மனதில் மெச்சி கொண்டான்...

வீட்டிற்குள் வந்ததும் அவன் அலைப்பேசியை எடுத்து பேசியபடி சென்றுவிட அவள் தனக்கென்று இருந்த கூடத்திற்குச் சென்றாள்... அங்கிருந்த களிமண்ணைக் கொண்டு அவள் பலவித சிலைகள், உருவங்களை வடித்துப் பழகி கொண்டிருந்தாள்... அதைப் போன்று இன்றும் செய்து கொண்டிருந்தவள் அதில் அப்படியே லயித்துப் போனாள்...

பத்து நிமிடம் கழித்து இந்திரஜித் அங்கு வந்து அவளைப் பார்த்தான்... தன்னை மறந்து கை வேலையில் மூழ்கியிருந்தவளை கண்டு அவனது மனம் கனிந்தது... அவனுக்கு அடுத்து அவளது பிடித்தம் அதிகம் இருப்பது இதன் மீது மட்டுமே... அவளது இந்தப் பிடித்தம் இன்னமும் அதிகரிக்க வேண்டும்... அவள் மேலும் மேலும் இந்தத் துறையில் முன்னேற வேண்டும் என்றே அவன் நினைத்தான்...

தான் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில், உலகம் போற்றும் இடத்தில் அவளை அவன் அமர வைப்பான்... அப்போது அந்தக் கணம் அவன் தனது மனதில் நினைத்திருப்பதை அவளிடம் கேட்பான்... அன்று தான் அவன் தன் மீதான அவளது காதலின் அளவை பார்க்க போகிறான்... அன்றும் இதே காதலை அவனுக்குப் பரிசாக அளிப்பாளா...? இல்லை வேண்டாம் என்று அவனை உதறி தள்ளி விட்டு விலகி செல்வாளா...? அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்...

*******************

அதே நேரம் இந்திரஜித், சம்யுக்தா இருவரும் சேர்ந்திருந்த புகைப்படத்தை இரு கண்கள் வெறுப்புடன் பார்த்திருந்தது...

"உன் வாழ்க்கை அஸ்தமித்துப் போகும் என்று நினைத்தேன்... ஆனால் இப்படி மீண்டும் துளிர்விடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே..." என்று முணுமுணுத்துக் கொண்ட உருவத்தின் மனதில் இருந்தது எல்லாம் வன்மம் மட்டுமே...

தொடரும்...!!!

"நீ உன் மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்க...? சொல் பேச்சு கேட்க கூடாதுங்கிற எண்ணமா...? இல்லை உனக்குத் தான் எல்லாம் தெரியும்ங்கிற எண்ணமா...?"

தன் முன் நின்று கொண்டு கோபமாய்க் கத்தி கொண்டிருந்த இந்திரஜித்தை கண்டு பயந்து போனவளாய் சம்யுக்தா கண்களை இறுக மூடி கொண்டு, அதே போல் கை விரல்களை அழுத்தமாய் மடக்கி கொண்டு மனதிற்குள் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள்... அவளது அறிவோ அவன் திட்டுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாதே என்று அறிவுறுத்தியது... ஆனால் பாழாய் போன காதல் கொண்ட மனமோ அவனது திட்டை விருது வாங்கியது போல் வாங்க துடிக்கின்றதே... ச்சே, என்ன ஒரு வெட்கம் கெட்ட மனம்...!

'அடப்போடி, பாவா திட்டினாலும் கேட்க நல்லா தானே இருக்கு...' என்று அவளது மனசாட்சி அவளிடமே தன்னவனுக்காக வக்காலத்து வாங்கியது... அதை மறுக்க இயலாது அவளும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டாள்...

"ஏய், கண்ணைத் திறந்து என்னைப் பார்..."

தான் இத்தனை திட்டியும் கண்ணை மூடி கொண்டு மரம் மாதிரி நின்று கொண்டிருந்தவளை கண்டு அவனுக்கு இன்னமும் கோபம் வந்தது... அவன் சொன்னதும் தான் தாமதம் உடனே விழிகளைத் திறந்தவள் அவனை நேசத்தோடு பார்க்க, அவளது வசிய பார்வையில் அவன் தான் வழி தடுமாறிப் போனான்...

'இப்படி ஒண்ணும் தெரியாத மாதிரி பார்த்து பார்த்து ஆளை மயக்கினால் நான் பேச வந்ததை எப்படிப் பேசுவதாம்...?' என்று அவன் மனதிற்குள் அவஸ்தையாய் முனங்கினான்...

"இப்போ எதுக்கு ஈன்னு இளிச்சிக்கிட்டு இருக்க...?" என்று அவன் கோபம் கொண்டு கேட்க...

"என்ன செய்யணும் பாவா...? அழணுமா...?" என்று அறியாது கேட்டவளை கண்டு,

"யாராவது திட்டினால் எல்லோரும் அதைத் தான் செய்வாங்க..." என்றான் அவன் அமர்த்தலாக...

"திட்டுறது நீங்களா இருந்தால் எனக்கு அழுகை கூட வர மாட்டேங்குதே... நான் என்ன பண்ண...?" என்று உதட்டை பிதுக்கி வெகுளித்தனத்தோடு கேட்டவளை கண்டு அவனது கோபம் சுத்தமாய் வடிந்து போனது...

முன்பு அவனது கோபத்தில், உதாசீனத்தில் அவள் அழுதவள் தான்... ஆனால் இப்போது அது போன்று அழுகை வருவதில்லையே... இடைப்பட்ட இத்தனை நாளாய் அவன் காண்பித்த காதலின் காரணமாக இப்போது எல்லாம் அவளை வேதனை வாட்டி வதைப்பது இல்லை... அது போல் அழுவதும் இல்லை... ஆனால் இனி வர போகும் காலங்களில் அவளுக்கு அழுகையை மட்டுமே அவன் பரிசாகக் கொடுக்கப் போகிறான் என்பதை அந்தக் கணம் அவள் அறிந்திருக்கவில்லை...

"ஓ... அப்போ நான் என்ன செய்தாலும் உனக்குக் கோபம் வராது... அப்படித் தானே..." என்றவன் அவள் அருகில் நெருங்கி வந்து நின்றான்... அவனது அருகாமையில் தன்வசம் இருந்து நழுவிய இதயத்தை மீட்கும் வகைத் தெரியாது மயங்கி நின்றிருந்தவள்,

"ம்... ம்..." என்றாள் வார்த்தைகளற்று...

"அப்போ நான் சொல்கிற மாதிரி இங்கிலீஷ் கத்துக்கிறதில் உனக்கு என்ன கஷ்டம்...?" என்று வசீகரப் பார்வையுடன் அவளைப் பார்த்தவனது வலக்கை கட்டை விரல் அவளது கன்னத்தை மிருதுவாக வருடி விட, மற்ற நான்கு விரல்கள் கழுத்தில் அழுத்தமாய்ப் பதிந்ததில் அவள் இன்னமும் தடுமாறி போனாள்... ஆனாலும் தன்னை முயன்று சமாளித்துக் கொண்டு,

"ரொம்பக் கஷ்டம் பாவா..." என்றாள் பாவமாக...

"ஏன்...?" என்றவனது குளுமையான பார்வையின் அவளது மனம் பனிக்கட்டியாய் உறைந்தது...

"எனக்கு இங்கிலீஷ் பிடிக்காது, புரியாது..." என்றாள் அவள் பரிதாபமாக...

"ஆனால் இங்கிலீஷ் தெரியாமல் இந்த உலகத்தில் வாழ முடியாதே..."

"இப்போ வாழுகிற மாதிரி வாழ்ந்துட்டு போகிறேன்..." என்றவள்,

"உங்களுக்கு என்னைத் திட்டணும்ன்னா திட்டிக்கோங்க... கோபப்படணுமா கோபப்பட்டுக்கோங்க... ஆனா இங்கிலீஷ் மட்டும் கத்துக்கச் சொல்லாதீங்க..." வேப்பங்காயை உண்டது போல் அவள் கசப்புடன் முகத்தைச் சுளித்தாள்... அவனோ அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"எனக்கு இங்கிலீஷ் பிடிச்சிருந்தா மேற்கொண்டு படிச்சியிருக்க மாட்டேனா...? எனக்கு அது பிடிக்காததால் தான் நான் மேலே படிக்கப் போகலை... அதுல நான் இருபது மார்க் வாங்குவதே பெரிசு..." என்றவளை கண்டு அவன் பக்கென்று சிரித்து விட்டான்... அவனது சிரித்த முகத்தைக் கண்டதும் அவளது முகமும் மலர்ந்து விட்டது...

"அப்போ இங்கிலீஷ் ட்யூசன் வேண்டாம் தானே..."

"நிச்சயம் வேண்டாம் தான்..." என்றான் அவனும் சன்ன சிரிப்புடன்...

"தன்யவாடாலு பாவா..." என்று அவனது கைகளைப் பற்றிக் கொண்டு உற்சாகத்தில் மகிழ்வுடன் துள்ளி குதித்தவளை கண்டு,

"ஆனா நான் வாத்தியாரா மாறிடலாம்ன்னு இருக்கேன்..." அதைக் கேட்டு அவளது முகம் சோர்ந்து போனது... அதை அறிந்தவனாய்,

"இனி நீ பார்க்க போகும் உலகம் வேறு யுகிம்மா... அங்கே நீ சகஜமாகப் பழக உனக்கு ஆங்கில அறிவு முக்கியம்..."

"எனக்கு எதுவும் வேண்டாமே... நீங்க மட்டும் போதும்..." என்றவளின் காதல் எப்போதும் போல் அவனை மயக்கியது...

"ம்ஹூம்... நான் மட்டும் உன் உலகம் இல்லை... உனக்கான உலகம் வேறு... அதில் நீ மட்டும் தான் ராணி... அப்போ ராணிக்கு எல்லாம் தெரிஞ்சு இருக்கணும் தானே..."

"அதான் கூடவே ராஜா நீங்க இருக்கீங்களே..."

"ராஜாவை விட ராணி இன்னும் இன்னும் உயரத்துக்குப் போகணுமே..." என்று அவன் தனது கைகளை உயர்த்திக் கொண்டே போக... அவனது கையைப் பற்றிக் கீழே இறக்கியவள்,

"அவ்வளவு உயரம் போனால் எப்போது கீழே விழுவேனோங்கிற பயம் இருந்துக்கிட்டே இருக்கும்... நான் எப்போதுமே உங்களுக்குக் கீழேயிருக்க ஆசைப்படுகிறேன்... அப்போ தான் உங்க பாதுகாப்பில் இருக்க முடியும்..."

கொஞ்சமும் ஈகோ இல்லாது தன்னிடம் சரணடையும் அந்தப் பெண்ணவளின் காலடியில் அவனது மனம் விரும்பியே சரணடைந்தது...

"பாவா..." என்று தயக்கத்துடன் நிறுத்தியவளை 'என்ன?' என்பது போல் அவன் ஏறிட,

"உங்க தகுதிக்கு நான் ரொம்பக் குறைவா இருக்கேன்னு நீங்க நினைக்கிறீங்களா...?"

அவளது கேள்வியில் அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது... ஒன்றும் பேசாது அவளை விட்டு விலகியவன் சோபாவில் வந்தமர்ந்தான்... அவளும் நாய்க்குட்டியாய் அவனின் பின்னே வந்தாள்... அவன் அருகே வந்தவள்,

"அது தானே உண்மை பாவா..."

"நான் அப்படிச் சொன்னேனா...?" என்றவனின் வார்த்தைகள் சீற்றத்துடன் வந்தது...

"இல்லை..." என்று மறுப்பாய் தலையை ஆட்டியவளை கண்டு,

"இங்கே பார் யுகி... உன்னை மேலே படி, நீ இப்படி ட்ரெஸ் பண்ணணும், இன்னும் நாகரீகமாக மாறணும்ன்னு நான் சொல்லலை... நீ எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்... நான் புற அழகை விட அக அழகை மதிக்கிறவன், நேசிக்கிறவன்... உன்னோட அப்பழுக்கில்லாத மனசு அழகு... அதை விட அதில் இருக்கும் என் மீதான காதல் பேரழகு... இதை விட எனக்கு வேறு என்ன வேணும்...? எனக்கு வேண்டியது எல்லாம் நீ யாரிடத்திலும் செகண்ட்டாகக் கூடாது... அவமானப்பட்டுத் தலை குனிய கூடாது... நாலு பேர் கூட நீ சகஜமா பேச இந்த மொழி அவசியம்..." அவன் பேச பேச அவளது முகம் மலர்ந்து போனது...

"நீ தான் என் வாழ்க்கைன்னு நான் உன்னை ஏத்துக்கிட்டு ரொம்ப நாளாகுது... அதில் எந்த மாற்றமும் இல்லை... நீ நீயா இரு... அது தான் எனக்கு வேண்டும்... ஆனா இந்த ஒரு விசயம் மட்டும் எனக்காக நீ செய்யணும்..."

அவன் சொன்னால் கண்ணை மூடி கொண்டு கிணத்தில் குதிப்பவள் அவள்... அவனுக்காக இதைச் செய்ய மாட்டாளா என்ன...? ஆனாலும் அவளுக்குச் சிறிது தயக்கமாக இருந்தது...

"பாவா..." என்று இழுத்தவளை கண்டு,

"என்ன...?" என்றான் அவன்...

"நான் சரியா படிக்கலைன்னா நீங்க என்னைத் திட்ட கூடாது... அடிக்கக் கூடாது..." வரும் முன் காப்பதற்கு வேண்டி இப்போதே அச்சாரத்தை அவள் போட்டு வைத்தாள்...

"ஹா ஹா..." அவளது சமயோஜித புத்தியை கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"கையால் அடிக்கலை... ஆனால்..." என்றவனது பார்வை மையலுடன் அழுத்தமாய் அவளது இதழ்களை நோக்கியது... அதில் பாவையவள் முகம் மட்டுமல்லாது மேனியும் செங்காந்தள் மலராய் மாறிப் போனது...

அவளது வெட்கத்தை மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தவனை அவனது அலைப்பேசி அழைத்து அவனை நிகழ்காலத்திற்கு வர செய்தது... புன்னகையுடன் அதை உயிர்பித்தபடி அவன் எழுந்து செல்ல, அவள் நாண புன்னகையுடன் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

*********************

சூர்யா தனது அலுவலகத்தில் இருந்த போது அவனது தனிப்பட்ட எண்ணிற்கு வந்த அழைப்புகளின் பதிவுகளை ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டிருந்தான்... பொதுமக்களின் குறைகளைக் கேட்பதற்காக அவன் தான் இந்தத் தனிப்பட்ட எண்ணை விளம்பரப்படுத்தி இருந்தான்... அப்போது அதில் ஒரு சிறுமியின் குரல் ஒலித்தது...

"சார்... என்னோட விருப்பம் இல்லாமல் எங்க வீட்டில் கல்யாணம் பண்ணி வைக்கப் பார்க்கிறாங்க... ஆனா எனக்குக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லை... நான் படிக்கணும்... நிறையப் படிக்கணும்... அதுவும் உங்களை மாதிரி... ப்ளீஸ், என்னைக் காப்பாத்துங்க சார்..." என்று கெஞ்சிய குரலை கேட்டு அவன் ஸ்தம்பித்துப் போனான்...

அந்தச் சிறுமி கூறியிருந்த அவளது வீட்டு முகவரிக்கு உடனே ஆட்களை அழைத்துக் கொண்டு அவன் அங்குச் சென்றான்... மாவட்ட ஆட்சியரை கண்டதும் அந்த வீட்டினர் பயந்தாலும் அங்குக் கல்யாண ஏற்பாடுகள் நடக்கவே இல்லை என்று சாதித்தனர்...

"நீங்க சொல்வது உண்மையாகவே இருக்கட்டும்... நான் உங்க மகளிடம் பேச வேண்டும்... அவளைக் கூப்பிடுங்க..." என்று சூர்யாவும் விடாது நின்றான்...

அவர்கள் தங்களது மகளை அழைத்து வர மிகவும் தயங்கினர்... அதைக் கண்டு கோபமுற்ற சூர்யா அவனே அவர்களது வீட்டிற்குள் நுழைந்தான்...

"சார், நீங்க கலெக்டரா இருக்கலாம்... அதுக்காக எங்க வீட்டுக்குள் போக உங்களுக்கு அனுமதி இல்லை..." என்று அங்கிருந்த இளைஞன் ஒருவன் எகிறினான்...

சூர்யா அதை எல்லாம் கண்டு கொள்ளவே இல்லை... அவனுடன் வந்த பெண் அதிகாரி ஒருவர் அவனுக்கு உதவி செய்தார்... அறையில் பயந்து நடுங்கி கொண்டிருந்த பதிமூன்று வயது சிறுமியை கண்டுபிடித்ததும் சூர்யா மனதிற்குள் நடுநடுங்கி போய்விட்டான்... இந்தச் சிறு வயதில் திருமணமா...? என்று... அந்தச் சிறுமியிடம் அவன் பேச்சுக் கொடுத்த போது அவள் கதறியழுது விட்டாள்...

"எங்க தாய்மாமாவுக்கு ஜாதகத்தில் ஏதோ தோசம்ன்னு என்னை அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் பார்க்கிறாங்க... எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்..." என்று அழுதவளை அந்தப் பெண் அதிகாரி அணைத்து ஆறுதல் அளித்தார்...

அந்தச் சிறுமியின் பெற்றோர், மாமா மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவளை ஆதரவற்றோர் இல்லத்தில் தங்க வைத்த பின்னரே சூர்யா நிம்மதி அடைந்தான்...

மீண்டும் தனது அலுவலகத்தில் வந்தமர்ந்தவனுக்குத் தனது தங்கையின் ஞாபகமே... அவனது மனக்கண்ணில் பதினைந்து வயது சம்யுக்தா வலம் வந்தாள்...

"தன்யவாடாலு அண்ணய்யா... மீரு சேசிந்தி ஈ சஹாயன்னி மரணம் வரகு நேனு மர்சிபோலேனு..." (நீங்க செஞ்ச இந்த உதவியை நான் சாகும் வரை மறக்க மாட்டேன்)

அன்று கண்ணீர் மல்க தன்னிடம் நன்றி தெரிவித்த சின்னப் பெண் சம்யுக்தா இன்று எங்குப் போனாள்...? சகோதரனின் அன்பை உடைத்து எறிந்துவிட்டு இந்திரஜித்துடன் அவளால் எப்படிச் செல்ல முடிந்தது...? அவனுக்கும் அவளுக்குமான உறவு என்ன...? அந்த உறவுக்கான பெயர் தான் என்ன...? இப்படி ஒரு இழிநிலைக்கு அவளைத் தள்ளவா அன்று அவன் அவளை அரும்பாடுபட்டு காப்பாற்றியது..?

சூர்யாவின் மனம் கனத்துப் போனது தங்கையின் நினைவில்...!

**********************

"கண்ணாவின் பெயர் கண்ணனா...? இல்லை..."

தன் முன் அமர்ந்திருந்த மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல் சந்தோஷ் கேள்வி கேட்டான்... அப்படிப் பார்க்க அவனுக்குப் பிடிக்கவும் இல்லை... ஏனோ மனம் வெறுத்துப் போயிருந்தது... அதற்காக அவனால் சாத்விகாவை பற்றித் தவறாக நினைக்கவும் முடியவில்லை... மொத்தத்தில் அவனைப் பைத்தியக்காரன் போல் தலையைப் பிடிக்க வைத்தாள் அவனது மனையாள்...

"சர்வேஷ்..." என்று அவள் கூறியதை கேட்டு அவன் சிறு வியப்புடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்... அவளோ அவனைப் படபடப்புடன் பார்த்து கொண்டிருந்தாள்...

"சரி, நீ கொஞ்ச நேரம் வெளியில் இரு..." என்றவன் சிறுவனைப் பரிசோதிப்பதற்காக அங்கிருந்த மற்றொரு அறைக்குள் சென்றான்...

சாத்விகா கண்கள் கலங்க வெளியில் வந்தமர்ந்தாள்... ஏற்கெனவே அங்கு அமர்ந்திருந்த ஆசிரம நிர்வாகப் பெண்மணி அவளுக்கு ஆறுதல் கூறினார்...

"கண்ணாவுக்கு ஒன்றும் ஆகாது... பயப்படாதேம்மா..." என்று அவளைத் தேற்றினார்... அவளோ துக்கம் தாங்க

முடியாது உடைந்து போய் அழுதாள்... அவர் ஆறுதலாய் அவளை அணைத்துக் கொண்டார்...

சர்வேஷிற்கு எல்லாப் பரிசோதனைகளும் முடித்து விட்டு அமர்ந்த சந்தோஷின் முகத்தில் கவலை படர்ந்தது... சிறுவனுக்கு ஏற்பட்டிருக்கும் நோயை எப்படி மனைவியிடத்தில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... அதற்காகச் சொல்லாது இருக்கவும் முடியாது... மனைவி, நிர்வாகியை உள்ளே அழைத்தவன் எப்படிச் சொல்வது என்று தெரியாது அமைதியாக இருந்தான்...

"அத்தான்... கண்ணாவுக்கு என்ன...?" என்று பதற்றத்துடன் கேட்ட மனைவியை ஏறிட்டவனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது...

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க டாக்டர்..." என்று நிர்வாகியும் கலக்கத்துடன் கேட்டார்...

"சர்வேஷ்க்கு ஹார்ட்ல ஹோல் இருக்கு... இதுக்கு முந்தி இதுக்கான சிம்டம்ஸை நீங்க கவனிக்கலையா...?"

"இல்லையே டாக்டர்... மத்த குழந்தைகள் மாதிரி தானே அவனும் சாதாரணமாக இருந்தான்... அதனால் எங்களால் எதையும் கண்டுபிடிக்க முடியலை..." நிர்வாகி உடனே பதிலளித்தார்...

"அத்தான்... இந்தச் சின்ன வயசில் அவனுக்குப் போய் இப்படி...?" என்று கண்கள் கலங்கியவள்,

"இதுக்கு ட்ரீட்மெண்ட் இல்லையா...?" என்று கவலையுடன் கேட்டவளை கண்டு,

"எல்லாத்துக்கும் ட்ரீட்மெண்ட் இருக்கு... அதுவும் நான் ஹார்ட் ஸ்பெசலிஸ்ட்... சோ யூ டோன்ட் வொர்ரி அம்மு..." என்று அவன் அவளை ஆறுதல் படுத்தினான்...

கவலை தோய்ந்த முகத்துடன் சர்வேஷை காண சென்ற மனைவியைப் பார்த்தபடி அமர்ந்திருந்த சந்தோஷின்

மனதில் யோசனைகள் பல எழுந்தது... ஆனால் மேலும் யோசிக்க முடியாதபடி அடுத்தடுத்து அவனது கடமைகள் அவனை அழைத்தது...

இரவு வீடு திரும்பும் போது மனைவியைத் தேடி சர்வேஷ் இருந்த அறைக்குச் சென்றான்... அங்குச் சின்னவனுடன் சிரித்துக் கதை பேசி கொண்டிருந்த மனைவியின் புன்னகையை ரசித்தபடி அவன் அப்படியே நின்றுவிட்டான்... அவள் இப்படிச் சிரித்து அவன் பார்த்தது இல்லையே...

"டாக்டர் அங்கிள்..." சர்வேஷ் இவனைக் கண்டு கூவ... அதைக் கேட்டுச் சாத்விகா திரும்பி பார்த்தாள்...

"அங்கிள் இல்லை கண்ணா... அவர் உன் அப்பா..." என்று சாத்விகா அவனைச் சின்னவனுக்கு அறிமுகப்படுத்த...

அதைக் கேட்டு சந்தோஷிற்குக் கோபம் வந்த போதும் சின்னவன் முன்னிலையில் அதை வெளிப்படுத்த விரும்பாது அமைதி காத்தவன்,

"எப்படியிருக்கக் கண்ணா...?" என்று கேட்டபடி அவனைக் கண்டு புன்னகைத்தான்...

"ஐயம் ஓகேப்பா..." என்று சிறுவன் உற்சாகமாய்த் தலையாட்டினான்... அதைக் கேட்டு சந்தோஷின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"வீட்டுக்கு போகலாமா...?" என்று மனைவியைப் பார்த்துச் சந்தோஷ் கேட்க...

"கண்ணா தூங்கியதும்..." என்று கூறியபடி அவள் தயங்க...

"நீங்க போங்கம்மா... அதான் அம்மா என்னுடன் இருக்காங்களே..." என்று சின்னவன் நிர்வாகியை கை காண்பித்துக் கூறினான்... அவனுக்கு இது பழக்கமான ஒன்று...

இருவரும் அவனிடம் விடைப்பெற்று வெளியில் வந்தனர்... வீடு வரும் வரை இருவரிடமும் எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லை... அமைதியாக வந்தனர்... தங்களது அறைக்கு வந்ததும் சந்தோஷ் குளியலறைக்குள் புகுந்து விட அவள் அமைதியாகக் கட்டிலில் அமர்ந்தாள்... அவன் குளித்து முடிந்து வெளியில் வந்ததும் அவள் சென்று குளித்து விட்டு வந்தவள் நேரே அவன் முன் வந்து நின்றாள்... அவன் 'என்ன?' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்தான்...

"கண்ணாவை நம்முடன் கூப்பிட்டு வச்சிக்கலாமா...?"

"நிரந்தரமாகவா...?" என்றவனது விழிகள் கூர்மையாய் அவளைத் துளைத்தெடுத்தது...

"அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் ரொம்பச் சந்தோசம்..."

"நான் ஏற்கெனவே சொல்லியிருக்கேன் எனக்கு அந்தளவுக்குப் பெருந்தன்மையான குணம் கிடையாதுன்னு..."

"இப்போ கண்ணா நிலைமை ரொம்ப மோசமாயிருக்கு... எனக்கு அவன் கூட இருக்கணும்... நீங்க சம்மதிச்சா இங்கே கூட்டிட்டு வர்றேன்... இல்லை நான் தனியே வீடு எடுத்து வைத்து அவனைப் பார்த்துக்கிறேன்..."

அவள் கூறியதை கேட்டு ஆத்திரத்துடன் எழுந்தவன் அவளது முழங்கையைப் பிடித்திழுத்து, "கட்டிய புருசனை விட அவன் தான் உனக்குப் பெருசா போயிட்டானா...? என்னை விட உனக்கு அவன் தான் முக்கியம் இல்லையா...?"

"ஆமாம்..." என்று கூறியவளை கண்டு அவன் உள்ளம் நொறுங்கி போனான்...

"போ... அவன் கூடவே போயிரு... இனி ஜென்மத்துக்கும் என் முகத்தில் விழிக்காதே..." என்று கோபமாய்க் கத்தியவன் பால்கனியில் சென்று அமர்ந்து கொண்டான்...

கணவன் கோபமாய்ச் சென்றதை கண்ணீர் மல்க பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்... அவளால் கணவனையும் விட முடியாது... அதே போல் சர்வேஷையும் விட முடியாது... இருவருமே அவளது இரு கண்கள்... ஒருவன் மீதான நேசம் கட்டி போட்டது என்றால், மற்றவன் மீதான பாசம் அவளைக் கட்டுப்படுத்தியது... என்ன செய்வது என்று தெரியாது உள்ளம் மறுக அவள் நின்றிருந்தாள்...

********************

இந்திரஜித் அலுவலகத்தில் மும்முரமாக வேலையில் ஈடுபட்டு இருந்தான்... ஒற்றை ஆளாய் தொழில் சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆள்வது என்பது சற்று சிரமமான காரியம் அல்லவா... அப்போது அவனைப் பார்ப்பதற்காக ஒருவர் வந்திருப்பதாய் தகவல் கிடைத்ததும் அவரது பெயர் என்ன என்று அவன் கேட்டான்... வந்தவரின் பெயரை அவனது செயலாளர் கூறியதும் அவன் அதிர்ந்து போனவனாய் நாற்காலியில் இருந்து எழுந்து விட்டான்... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தவன் அவரை உள்ளே வர சொன்னான்...

அவனது அறைக்கதவை தள்ளி கொண்டு உள்ளே வந்த பெண்மணியைக் கண்டு மரியாதை நிமித்தமாய் எழுந்து நின்றவன்,

"வாங்கம்மா... வாங்க..." என்று அவரை நாற்காலியில் அமர செய்த பின்னரே அவன் அமர்ந்தான்...

"என்ன சாப்பிடறீங்க...? ஹாட் ஆர் கூல்...?"

அதுவரை அந்த அறையை நோட்டமிட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்மணி அவனது கேள்வியில் அவனைப் பார்த்தவர்,

"பழசை எல்லாம் மறந்துட்டீங்க போலிருக்கு தம்பி..." அவரது கேள்வியில் அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"மறந்துட்டேன்னு நான் சொன்னேனா...?" என்றான் இறுக்கமான குரலில்...

"இல்லை... நீங்க இந்தியா வந்து ஒரு மாதமாகப் போகிறது... ஒரு நாள் கூட நீங்க என்னை வந்து பார்க்கலையே..."

"நான் இந்தியாவை விட்டு போகும் போது நீங்க பழைய அட்ரசில் இல்லையே... பின்னே நான் எப்படி உங்களை வந்து பார்க்க முடியும்..."

அதைக் கேட்டு அவரது முகம் கறுத்துப் போனது... ஏதோ யோசித்தபடி அவர் அமைதியாக இருந்தார்...

"சரி, என்ன விசயமா வந்தீங்க...?" என்று அவன் தான் கேட்டான்...

"இத்தனை நாளாய் தாடி வச்சிக்கிட்டுத் தேவதாஸ் மாதிரி இருந்த நீங்க இப்போ இருக்கிற தோரணையே வேறு மாதிரியாக இருக்கிறதே தம்பி... பழைய நினைவுகள் உங்க மனசில் கொஞ்சமும் பாதிப்பை ஏற்படுத்தவில்லையா...? ஆனால் என்னால் எதையும் மறக்க முடியவில்லையே..." என்று அவர் கண்ணீர் வடிக்க... அதைக் கண்டு அவன் உள்ளம் இறுகி போனான்...

"நான் தான் சொன்னேனே... இன்னமும் பழைய நினைவுகள் என் மனதில் அழியாம இருக்குன்னு..."

"கேள்விப்பட்ட விசயங்களை வச்சு பார்த்தால் அப்படித் தெரியலையே தம்பி..." அவரது வார்த்தைகளில் ஏதோ தோன்ற அவனது விழிகள் கூர்மை அடைந்தது...

"ஏதோ ஒரு பெண் கூட நீங்க சேர்ந்து வாழ்றதா கேள்விப்பட்டேனே..."

"ஆம், நீங்க கேள்விப்பட்டது உண்மை தான்..." என்றான் அவனும் ஆமோதித்தவனாய்...

"எப்படி உங்களால் இந்தக் காரியத்தைப் பண்ண முடிந்தது தம்பி...? நீங்களா இப்படின்னு என்னால் இன்னமும் நம்ப

முடியலை..."

"என்னை நம்பி வந்த பெண்ணை என்னால் கைவிட முடியாது..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"நீங்க பண்றது பச்சை துரோகம் தம்பி..."

அப்போது தான் இந்திரஜித் அந்த வார்த்தைகளை உதிர்த்தான்... அதைக் கேட்டு அவர் அதிர்ந்து போனவராய் அவனைப் பார்த்தார்...

"எனக்குன்னு தனிப்பட்ட வாழ்க்கை கிடையாது... ஆனால் என்னால் வாழ்க்கையில் நிறையத் துன்பத்தைச் சந்தித்தவள் யுகி... இனி அவளுக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது தான் என்னுடைய முதல் வேலை... இனி நான் வாழ போறது அவளுக்காக மட்டுமே... எனக்காக இல்லை..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு அவர் கேலியாய் சிரித்தார்...

"அவளுக்காக நீங்க வாழ போறீங்களா...? குட் ஜோக் தம்பி... அவளுக்கு வாழ்க்கை கொடுத்தாலும் அந்த வாழ்க்கையை அனுபவிக்கப் போறது அவள் கூடச் சேர்ந்து நீங்களும் தானே... என்னமோ தியாகி மாதிரி பேசுறீங்க...? கடைசியில் நீங்களும் உடல் சுகத்தைப் பெரிதாக எண்ணிட்டீங்க இல்லையா...? பரவாயில்லை இருக்கட்டும் தம்பி... ஆனால் நீங்க செஞ்சுக்கிட்டு இருக்கிற துரோகத்தால் ஒரு ஆன்மா வேதனையில் துடிச்சிட்டு இருக்குங்கிறதை நீங்க மறந்துறாதீங்க... நீங்க பழசை எல்லாம் மறந்துரலாம்... ஆனால் என்னால் அப்படி மறக்க முடியலையே தம்பி..." என்று கண்ணீர் விட்டபடி கூறியவர்,

"நல்லாயிருங்க தம்பி... என்ன இருந்தாலும் நீங்க அடுத்தவர் என்பதைக் காட்டிட்டீங்க... உங்களைப் போல் என்னால் இருக்க முடியலையே..." என்றவர் விம்மலை அடக்கி கொண்டு அவனது அறையை விட்டு வெளியில் சென்று விட்டார்...

அவர் சென்றதும் அவன் இறுகி போய் அமர்ந்திருந்தான்... மனதில் ஆறாது இருக்கும் ரணத்தைக் குத்தி கிளறி வேதனை படுத்தி விட்டு அவர் சென்று விட்டாரே... அதற்கு மேல் வேலை ஓடாது அவன் வீட்டிற்குக் கிளம்பி விட்டான்... அவன் சென்ற போது சம்யுக்தா வீட்டில் இல்லை... இன்னமும் பயிற்சி முடிந்து அவள் வரவில்லை போலும்... சோர்ந்து போனவனாய் வரவேற்பறையில் இருந்த சோபாவில் அமர்ந்து கண்களை மூடி சாய்ந்து கொண்டான்...

அவனது மனக்கண்ணில் கடந்த காலம் படமாய் ஓடியது... மறக்க நினைக்கும் நினைவுகளை விரட்டியடிக்க அவனால் முடியவில்லை... இறந்த காலத்தை இறந்ததாக எண்ணி ஒதுக்க முடியாது அவன் வேதனையுடன் தவித்தான்... அந்நேரம் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டது... சம்யுக்தா தான் வந்து விட்டாள் போலும் என்று அவன் நினைத்துக் கொண்டான்...

இப்போது எல்லாம் அவள் தானே காரை ஓட்டி கொண்டு பயிற்சி மையத்திற்குச் சென்று வருகிறாள்... அந்தளவிற்கு அவள் லாவகமாய்க் கார் ஓட்ட பழகியிருந்தாள்... அவளது செயலில் திருப்தியுற்றவன் அவளுக்கு என்று தனியே கார் ஒன்றை வாங்கிக் கொடுத்திருக்கிறான்... அது போல் அவள் ஆங்கிலத்திலும் சிறிது சிறிதாகத் தேர்ச்சி அடைந்து வருகிறாள்... இது எல்லாம் நிச்சயம் அவளுக்காக இல்லை... அவனுக்காக மட்டுமே... அது அவனுக்கு நன்கு தெரிந்து இருந்தது... அவளது உலகமே தான் தான் என்று அவன் நன்கு அறிந்து வைத்திருந்தான்...

"பாவா..."

சம்யுக்தா பதற்றத்துடன் கேட்டபடி அவன் அருகில் வந்தமர்ந்தவள் அவனது நெற்றியில் கை வைத்து பார்த்தாள்... அவனது ஓய்ந்து போன தோற்றம் அவளைப் பதட்ட படுத்தி இருந்தது... அவளது ஸ்பரிசத்தில் அவன் கண்விழித்துப் பார்த்தான்...

"உடம்பு சரியில்லையா பாவா...?" அவளது கவலை தோய்ந்த முகம், பதற்றம் நிறைந்த குரல் எல்லாம் சேர்த்து அவளுக்கான அவனது முடிவினை உறுதிப்படுத்தியது...

"இல்லை பேபி..."

"பின்னே ஏன் சோர்ந்து போய் இருக்கீங்க...?"

"ப்ச்... ஒண்ணும் இல்லைடா..." என்றவன் காற்றில் பறந்த அவளது காதோர முடிக்கற்றையைச் சுருட்டி அவளது காதின் பின்னால் சொருகி விட்டான்...

"இன்னைக்கு என்ன செஞ்ச...?" அவன் சாதாரணமாய்க் கேட்டதில் நிம்மதியுற்றவளாய்,

"டட்டடொய்ங்..." என்றபடி மற்றொரு கையில் மறைத்து வைத்திருந்த அந்தச் சிலையை அவன் கண் முன் காட்டினாள்...

ராதையின் கண்ணனை அழகான சிலையாய் அவள் வடித்திருந்தாள்... பார்ப்பதற்கு அது அத்தனை தத்ரூபமாக இருந்தது...

"வாவ், பென்டாஸ்டிக்..." என்று அவளைப் பாராட்டியவன் அதைச் சிலையைக் கூர்ந்து கவனித்தான்...

அதன் முக அமைப்பு ஏறக்குறைய அவனைப் போலிருந்தது... அது போல் அவனது வலது புருவத்தின் மேலிருக்கும் மச்சத்தையும் அவள் தெளிவாக வடித்திருந்தாள்... அவளது காதல் கண்டு அவன் வாயடைத்துப் போனான்... அவனுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... அன்பால் திணற திணற அடிப்பது என்பது இது தானோ...!

"என்ன பார்க்கிறீங்க பாவா...?"

"கண்ணனுக்கு எப்போது புருவத்தின் மேல் மச்சம் வந்ததுன்னு யோசிச்சிக்கிட்டு இருந்தேன்..."

அவன் கூறியதை கேட்டு அவள் சிலையைப் பார்த்து விட்டு அடுத்தக் கணம் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவன் மச்சம் இருந்த தனது புருவத்தை உயர்த்தி 'என்ன?' என்று கேட்க... அதைக் கண்டு நாணமுற்றவளாய் அவள் தலை குனிந்தாள்...

"அப்போ இது கண்ணன் இல்லை... இந்திரஜித்... அதாவது நான்... அப்படித் தானே...?" என்று குறும்பாய் அவன் வினவ...

"அச்சோ போங்க பாவா..." என்று வெட்கம் கொண்டு அவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொள்ள...

அவனது கரங்கள் ஆக்டோபஸாய் நீண்டு அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டது... அந்த நொடி அவனது மனதில் இருந்த சிறு சஞ்சலமும் காணாமல் போனது... யார் என்ன கூறினாலும் அவளைக் கைவிட முடியாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான்...

********************

"நீங்க போய் அவனைப் பார்த்தீங்களா...? அவன் என்ன சொல்கிறான்...?" அந்த உருவம் மடிகணினி மூலம் அந்தப் பெண்மணியிடம் உரையாடியது...

"என்ன சொல்வான்...? அவளுக்காக வாழ போகிறேன்னு சொல்கிறான்..."

"ராஸ்கல்... அப்படியா சொன்னான்...?" என்று பல்லை கடித்தது அந்த உருவம்...

"நீயும், நானும் நினைப்பது போல் அவன் சாதாரண ஆளில்லை..."

"இல்லை... அவன் சாதாரண ஆள் தான்... அன்புக்குக் கட்டுப்படும் கோழை அவன்... அவனைக் கண்ட்ரோல் பண்றது ரொம்ப ஈசி... ஆனால் இப்போ அவன் நம்ம அவுட் ஆஃப் கண்ட்ரோலில் இருக்கான்..."

"எப்படி அவனை நம்ம கண்ட்ரோலுக்கு எடுக்கிறது...?"

"இனி அவனை நம்ம கண்ட்ரோலில் எடுப்பது ரொம்பக் கஷ்டம்... இப்போ அவனோட கண்ட்ரோல் எல்லாம் அவள் கிட்ட தான் இருக்கு..." என்று பல்லை கடித்தது அந்த உருவம்...

அப்போது அந்தப் பெண்மணி இந்திரஜித் தன்னிடம் கூறிய விசயத்தை அப்படியே கூற... அதைக் கேட்டு அந்த உருவத்தின் ஆத்திரம் அதிகரித்தது...

"நல்லா போய்க்கிட்டு இருந்த வாழ்க்கையில் இவளை யார் நடுவில் வர சொன்னாங்க...? வந்தவள் இப்படி அவனை ஒட்டுமொத்தமாய் மாற்றி விடுவாள்ன்னு நான் கனவிலும் நினைக்கலையே..."

"ப்ச்... வளவளன்னு பேசாத... இனி என்ன பண்ணலாம்ன்னு யோசி..."

"இனி யோசிக்க ஒண்ணுமே இல்லை... அவளைப் போட்டு தள்ளிர வேண்டியது தான்... என்னைப் பொறுத்தவரை அவன் நிம்மதியா இருக்கக் கூடாது... அது தான் எனக்கு வேண்டும்..."

"நம்ம இலக்கு அவன் இல்லையே..."

"இல்லை தான்... ஆனால் இப்போ என்னுடைய இலக்கு அவன் மட்டுமே... அவளை இழந்து அவன் மறுபடியும் தேவதாஸா மாறணும்... அது தான் எனக்கு வேண்டும்..." என்று கூறிய அந்த உருவத்தின் கண்களில் பழிவாங்கும் வெறி அப்பட்டமாய்த் தெரிந்தது...

இந்தப் பழிவாங்கும் வெறி எதனால் என்பது அந்த உருவத்திற்கே தெரியவில்லையே... விடை தெரியா மனநிலையுடன் பலர் வாழ்வதால் தான் வாழ்க்கையில் பலவித குழப்பங்கள் ஏற்படுகிறது...

தொடரும்...!!!

அதிகாலையில் எழுந்த இந்திரஜித் முகத்தைக் கழுவி கொண்டு வந்து தனது அலைப்பேசியைக் கையில் எடுத்தபடி படுக்கையில் அமர்ந்தான்... அலைப்பேசியில் ஒளிர்ந்த தேதியை கண்டதும் அவன் அதிர்ந்து போனவனாய் பிரம்மை பிடித்தார் போன்று சிலையாய்ச் சமைந்தான்... இந்த நாளை அவன் எப்படி மறந்து போனான்...? அவனை உயிருடன் கொல்லும் இந்த நாளை மறக்க தான் அவனால் இயலுமோ...?

அவசரமாய் எழுந்தவன் வேகமாய்க் குளித்து விட்டு கீழே வரவேற்பறைக்கு ஓடி வந்தான்... ஆனால் எங்குத் தேடியும் சம்யுக்தாவை காணவில்லை... அவள் முகத்தைப் பார்க்காது சோர்ந்து போனவனாய் வரவேற்பறை சோபாவில் அமர்ந்தவன் வாயிலை பார்த்தபடி வழி மேல் விழி வைத்து அவளுக்காகக் காத்திருந்தான்... இன்று தான் முதன்முறையாய் புதிதாய் அவளைப் பார்க்க காத்திருப்பது போல் அவனது மனம் இனிமையாய்ப் படபடத்தது... அதே சமயம் அவனுக்கு மிகுந்த பதற்றமாகவும் இருந்தது...

அடுத்த அரை மணி நேரம் அவனைப் படபடப்புடன் காக்க வைத்த சம்யுக்தா ஒருவழியாய் வீடு வந்து சேர்ந்தாள்... வீட்டினுள் அவள் நடந்து வரும் அழகினை அவன் இமைக்க மறந்து பார்த்திருந்தான்... அவன் வாங்கித் தந்த பட்டு புடவையில் மிதமான ஒப்பனையுடன் இருந்தவளை காண காண அவனுக்குத் தெவிட்டவில்லை... அவனுடன் அவள் வந்து இரண்டு மாதங்கள் முடிந்து விட்டது... அவளது முகத்தில் முன்பிருந்த பொலிவின்மை, கருவளையம் எல்லாம் இப்போது இல்லை... மாறாக மாசு மருவற்ற பால் நிலா போன்று அவளது முகம் பிரகாசத்துடன் ஒளி வீசியது...

அவனது பார்வையில் பாவையவளின் முகம் நாணியதோ என்னமோ... முகம் சிவக்க அவன் முன் வந்து நின்றவள்,

"அதுக்குள்ள எழுந்திருச்சிட்டீங்களா பாவா...?" என்று கேட்டபடி அவள் அவன் முன் கோவில் பிரசாத கூடையை

நீட்டினாள்...

அதிலிருந்த குங்குமத்தை கண்டதும் அவன் சட்டென்று நிமிர்ந்து அவளது நெற்றியை பார்த்தான்... அவளது நெற்றியில் இருந்த குங்குமம் அவனுள் குற்றவுணர்ச்சியை அதிகரித்தது... மௌனமாய்த் தலைகுனிந்து அமர்ந்திருந்தவனைக் கண்டு அவள்,

"எடுத்துக்கோங்க பாவா..." என்றாள்...

"கோவிலுக்கு எதுக்குப் போயிட்டு வந்த...?" அவனது குரல் சுரத்தில்லாது ஒலித்தது...

அதைக் கேட்டு அவள் திடுக்கிட்டு போனவளாய் அவனைப் பார்த்தாள்... பின் முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள்,

"இன்னைக்கு வெள்ளிக்கிழமை... அதான்..." என்று இழுத்தவளை அவனது பார்வை துளைத்தெடுத்தது... அவளும் தைரியமாக அவனது பார்வையை எதிர் கொண்டாள்...

'பொய் சொல்லாதே பேபி... பொய் மேல் பொய் சொல்லி என்னை மேலும் மேலும் குற்றவுணர்ச்சியில் தவிக்க விடாதே...' என்று அவன் தனது விழிகளால் அவளிடம் மன்றாடிபடி மனதிற்குள் வேதனை கொண்டான்...

'உங்களது இந்த வேதனைக்கு அவசியமே இல்லை பாவா... எந்த நிலையிலும் நான் வாக்கு தவற மாட்டேன்... நீங்க என்ன சொல்றீங்களோ அது தான் எனக்கு வேதவாக்கு...' என்று அவள் விழிகளால் அவனைத் தேற்றினாள்... அவனது வேதனைக்குத் தான் தான் காரணம் என்று அவள் நினைத்துக் கொண்டு வேதனையுற்றாள்... அவளது விழி மொழியை உணர முடியாதவனாய் அவன் உள்ளுக்குள் தவித்தான்...

அவனது வேதனையை உணர்ந்தவளாய் அவளே குங்குமத்தை எடுத்து அவனது நெற்றியில் வைத்து

விட்டாள்... அதில் மனம் நெகிழ அவன் அவளைப் பார்த்திருந்தான்...

"பாவா, எனக்கும் வச்சு விடுங்க..." என்று உரிமையோடு கேட்டவளின் உரிமையின் அளவை உணர்ந்தவனாய் அவனது தேகம் நடுங்கியது...

"இது எல்லாம் வேண்டாமே..." என்று அவன் மெதுவே முனங்கினான்...

"பரவாயில்லை பாவா... உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா வேண்டாம்..." முகம் மாறாது கூறியவள்,

"சாப்பிட வாங்க..." என்றபடி நகர முயன்ற போது அவனது குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது...

"நில்லு பேபி..." என்றபடி அவன் எழுந்து அவள் அருகே வந்தான்...

அவள் முகம் மலர வியப்பாய் அவனைப் பார்த்தபடி இமைக்காது நின்றிருந்தாள்... அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலந்தபடி குங்குமத்தை எடுத்து அவளது உச்சிவகிட்டில் அவன் வைத்து விட்டான்... அந்தக் கணம் அவனையும் அறியாது அவனது கை நடுங்கியது... அவளுக்கோ பரவசத்தில் கண்கள் கலங்கி விட்டது...

அவனிடம் இருந்து அவளுக்கான அங்கீகாரம் கிடைக்கவே கிடைக்காது என்று நினைத்தவள் இப்போது அதற்கான அங்கீகாரம் கிடைத்ததை எண்ணி எண்ணி மனம் மகிழ்ந்து போனாள்... அவனது கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றி கொண்டவள்,

"இந்த நிமிசம் என் உயிர் போனாலும் ரொம்பச் சந்தோசமா செத்து போவேன் பாவா..." என்று கண்ணீர் மல்க கூறியவளின் வாயை தனது கை கொண்டு மூடியவனின் தலை மறுப்பாய் அசைந்தது...

"உன் கூட நான் ஆயிரம் வருசம் வாழணும்ன்னு எனக்கு ஆசையிருக்கு பேபி... அதுக்கு நீ ஆயிரம் வருசம் உயிரோடு

இருக்கணும்..." என்றவனது வார்த்தைகளில் அவள் தடாலென்று அவனது காலடியில் விழுந்து விட்டாள்...

"த்ச்சு... நீ திருந்தவே மாட்டியா...?" என்று கடிந்தபடி அவன் அவளைத் தூக்கி நிறுத்தினான்...

"உன்னை எனக்குச் சரிசமமா கொண்டு வர நான் போராடிக்கிட்டு இருக்கிறேன்... நீ என்னடான்னா இப்படிப் பொசுக்குன்னு என் காலில் விழுகிற... உன்னைத் திருத்துறது ரொம்பக் கஷ்டம் போலிருக்கே யுகி பேபி..." என்று அவன் சலித்துக் கொண்டான்...

"என்னைத் திருத்த எல்லாம் வேண்டாம்... நான் இப்படியே இருந்துட்டுப் போகிறேன்... இது தான் எனக்குப் பிடிச்சியிருக்கு..." என்றவள் மனம் நெகிழ்ந்து போய் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... அவனும் அவளை அணைத்துக் கொண்டான்...

இருவரது மனதிலும் அத்தனை நிம்மதி எழுந்தது... சிறிது நேரம் அப்படியே மௌனமாய்க் கடந்து சென்றது...

"பேபி... சாப்பிட கூப்பிட்டதாய் ஞாபகம்..." என்று அவன் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தது...

"அச்சோ... மறந்தே போயிட்டேன்... வாங்க பாவா..." என்றவள் அவனிடம் இருந்து விலகி முன்னால் நடக்க... அவன் சிரித்தபடி அவளைப் பின்தொடர்ந்தான்...

உணவு உண்ண அமர்ந்ததும் அவன் முன் அவனுக்குப் பிடித்த அவல் பாயாச கிண்ணத்தை வைத்தவளை அவன் மௌனமாக ஏறிட்டுப் பார்த்தான்... இனிப்பை கண்டதும் இன்றைய நாளின் முக்கியத்துவத்தை உணர்ந்தவனாய் அவனது உள்ளம் குற்றவுணர்ச்சியில் குமைந்தது...

அவன் அறியாது செய்த அற்புதமான தவறு... அவள் அறிந்து ஏற்றுக் கொண்ட அழகான தவறு... இந்த உலகில் அவனது தவறினை நியாயப்படுத்தவும், கௌரவிக்கவும் சம்யுக்தா ஒருத்தியால் மட்டுமே முடியும்...

அவளது காதலில் மனமுருக திளைத்திருந்தவன் திடீரென்று என்ன நினைத்தானோ தனது கை நீட்டி அவளை அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தவன் பின் பாயாசத்தை ஸ்பூனில் எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான்... அவள் கண்ணீர் மல்க அதை வாங்கிக் கொண்டாள்...

"நீங்க சாப்பிடுங்க..."

"ஏன் நீ ஊட்டி விட மாட்டாயா...?" என்று ஏக்கத்துடன் கேட்டவனைக் கண்டு பதறியவளாய்,

"அது என் கடமை பாவா..." என்றவள் அவனுக்கு ஊட்டி விட முயல... அதைத் தடுத்தவன்,

"கடமையாக என்றால் வேண்டாம்..." என்று சிறு பிள்ளை போன்று முறுக்கி கொண்டவனைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது...

"என் பாவாவுக்காக ஊட்டி விடுகிறேன்..." என்றவள் மகிழ்ச்சியாய் அவனுக்கு ஊட்டி விட... அவன் நெகிழ்ச்சியுடன் பாயாசத்தை வாங்கிக் கொண்டான்...

இருவர் மனதிலும் அன்றைய நாளின் தாக்கங்கள்... அவனுக்குத் தெரியாது என்று எண்ணி கொண்டு அவள் உண்மையை அவனிடம் சொல்லாது மறைத்தாள்... உண்மையை அறிந்து கொண்டவனோ குற்றவுணர்வில் குழம்பி போய் அமர்ந்திருந்தான்...

********************

சர்வேஷிற்கு இன்று தான் அறுவை சிகிச்சைக்கு நாள் குறித்திருந்தான் சந்தோஷ்... இடைப்பட்ட நாட்களில் அவனுக்கு வேண்டிய ஊட்டச்சத்துக்களை அளித்து அவனை ஆரோக்கியமாக மாற்றியிருந்தான்... அறுவை சிகிச்சைக்காக அவன் தயாராகிக் கொண்டிருந்த போது அவனது அறைக்குள் சாத்விகா நுழைந்தாள்... அவளைக் கண்டதும் அவன் அங்கிருந்த செவிலிப்பெண்களைக் கையசைவால் வெளியில் போகச் செய்தான்...

எல்லோரும் சென்றதும் அவன் மனைவியை அமைதியாகப் பார்த்திருந்தான்... அவளது முகம் அழுதழுது வீங்கி போய்ச் சிவந்து போயிருந்தது... அந்த நிலையில் அவளைப் பார்ப்பதற்கு அவனுக்குக் கஷ்டமாக இருந்தது... இரு கைகளை அவளை நோக்கி நீட்டி அவன் கண்ணால் அவளை வாவென்று அழைத்தான்... அடுத்த நொடி அவள் நாய்க்குட்டியாய் அவனது நெஞ்சில் வந்து தஞ்சமடைந்தாள்... அவனது கைகள் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டது...

"அத்தான்... கண்ணாவுக்கு ஒண்ணும் ஆகாது இல்லையா...?"

"நான் இருக்கேன் தானே... நீ பயப்படாதே..." என்றவன் அவளது தலையைக் கோதி கொடுத்து ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தான்...

அன்று சாத்விகா சொன்னது போல் சர்வேஷை வீட்டிற்கு அழைத்து வருவதில் மும்முரமாக இருந்தாள்... இல்லை என்றால் தனியே செல்லவும் அவள் தயங்கவில்லை... அவளது பிடிவாதம் கண்டு அவன் தான் சற்று தழைந்து போக வேண்டியிருந்தது... வேறுவழியின்றி அவன் சர்வேஷை வீட்டிற்குள் அனுமதித்தான்...

"என்னை அவாய்ட் பண்ண இவனை வீட்டுக்குள் கூட்டிட்டு வந்திருக்க... ஆனால் எத்தனை நாள் நீ என்னிடம் இருந்து தப்பிக்க முடியும்... என்னோட பொறுமைக்கும் ஒரு அளவு இருக்கு... அது எரிமலையாய் வெடிக்கும் போது அதிகம் பாதிக்கப்படப் போவது நீ தான்..." என்று குரலை உயர்த்தாது அழுத்தம் திருத்தமாய்க் கூறியவன் சர்வேஷிற்கு மறுபக்கம் வந்து படுத்துக் கொண்டான்...

சாத்விகா அடுத்தப் பக்கம் படுத்தவள் சின்னவனைத் தன்னோடு அணைத்து கொண்டாள்... அவளது விழிகளோ கணவனது முதுகினை வெறித்தது...

'அப்படியாவது என்னை எடுத்துக்கோங்க அத்தான்... என் மனதில் எரியும் காதல் தீ உங்க அணைப்பிலாவது

அணையுதான்னு பார்க்கலாம்...' என்று தவிப்புடன் நினைத்தவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது...

எத்தனை வருட காதல், எத்தனை வருட தாபம், எத்தனை வருட காத்திருப்பு... அத்தனையும் சர்வேஷ் என்கிற புள்ளியில் முடிந்து போனதே... அவளுக்கு அப்படியொரு துக்கமாக இருந்தது...

"இப்படியே இருந்தால் எப்படி அம்மு...?" சந்தோஷ் தான் இன்றைய மௌனத்தை முதலில் கலைத்தான்...

"கண்ணாவுக்கு வலிக்காம பார்த்து ஆபரேசன் பண்ணுங்க..."

மற்ற நேரமாக இருந்தால் சந்தோஷ் இதற்கு நக்கலாகப் பதில் அளித்து இருப்பான்... ஆனால் இப்போது மனைவி இருக்கும் மனநிலையில் அது போன்று பேச தோன்றாது அமைதி காத்தவன்,

"கண்ணாவை நான் பார்த்துக்கிறேன்..." என்று அவளைத் தேற்றி விட்டு அவன் அங்கிருந்து நகர்ந்தான்... அவளும் அவன் பின்னேயே வந்தாள்...

மனைவி மீது கோபம் கொள்ளும் அவனது அதே மனம் தான் அவள் மீது அன்பு கொண்டு தவிக்கிறது... இரு வேறுபட்ட மனநிலையில் அவன் இருந்தான்... அறுவை சிகிச்சை நடக்கும் அறைக்குச் செல்லும் முன் அவன் திரும்பி மனைவியைப் பார்த்தான்... பயத்துடன் தன்னைப் பார்த்தவளை கண்டு விழிகளால் தைரியமூட்டி விட்டு அவன் உள்ளே சென்றான்...

அறுவை சிகிச்சை அறைக்குள் நுழைந்ததும் அவன் ஒரு மருத்துவனாய் மாறிப் போனான்... மனைவியையும் மறந்து போனான்...

பல மணி நேரம் கழித்து அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து விட்டு வெளியில் வந்தவன் மனைவியைக் கண்டு வலக்கட்டை விரலை உயர்த்திக் காட்டி புன்னகை புரிந்தான்... அதைக் கண்டவளுக்குக்

கண்கள் இருட்டி கொண்டு வர அடுத்த நொடி அவள் மயங்கி கீழே விழுந்தாள்...

"அம்மு..." என்று பதறியபடி சந்தோஷ் அவளை நோக்கி ஓடினான்...

அதற்குள் அங்கிருந்த செவிலிப்பெண் அவளைத் தாங்கி கொண்டாள்... சாத்விகாவிற்கு என்னவானதோ என்று பயந்த சந்தோஷால் பதற்றத்தில் அவளுக்குச் சிகிச்சை கூட அளிக்க முடியவில்லை... அங்கிருந்த வேறு ஒரு மருத்துவர் தான் அவளுக்குச் சிகிச்சை அளித்தார்...

"டாக்டர், உங்க மனைவி ஸ்ட்ரெஸ் தாங்க முடியாம மயங்கி விழுந்திருக்காங்க... மத்தபடி பயப்படத் தேவையில்லை..." என்று அவனைச் சமாதானப்படுத்தி விட்டு அவர் சென்று விட்டார்...

ஆசிரம நிர்வாகி சாத்விகாவை பார்க்க அறைக்குள் நுழைந்தார்... அவரைக் கண்டதும் மனைவியின் கையைப் பிடித்தபடி அமர்ந்திருந்த சந்தோஷ் விலகி அமர்ந்தான்...

"சாத்விகா ரொம்ப நல்ல பொண்ணு... கண்ணா அங்கு வந்து ஆறு மாசமா இருக்கும் போது எங்க ஆசிரமத்துக்கு வந்தாள்... வந்ததுமே கண்ணாவை தத்தெடுத்துக்கிறேன் சொன்னாள்... அப்போ அவளுக்குப் பதினெட்டு இல்லை பத்தொன்பது வயசு தான் இருக்கும்... அந்தச் சின்ன வயசில் அவனுக்கு அம்மாவா அவள் மாறினப்போ எங்களுக்கு எல்லாம் ஆச்சர்யம் தான்... இப்போ வரை அவளோட இந்த அன்பு கொஞ்சமும் மாறலை... அவளுக்குக் கல்யாணமாகியும் அவளுடைய மனசு மாறாம இருக்கிறது அதிசயம் தான்..."

அவனுக்கு இது புதிய செய்தி... சாத்விகாவினுள் நிறைய மர்மம் மறைந்திருப்பதாய் அவனுக்குத் தோன்றியது... அதனால் நேரே தந்தையைச் சந்திக்கச் சென்றான்... அவன் சென்ற நேரம் அர்ஜூன் வேலை இல்லாது ஓய்வாக இருந்தான்...

"டாட், எனக்கு ஒரு விசயம் தெரிஞ்சாகணும்..."

"என்ன சந்தோஷ்...?"

"நீங்க ஏன் என்னை அம்முவை கல்யாணம் பண்ண சொல்லி வற்புறுத்துனீங்க...?"

அதைக் கேட்டு அர்ஜூன் அமைதியாகி விட்டான்...

"சொல்லுங்க டாட்..." என்று சந்தோஷ் அவனைப் பிடித்து உலுக்க...

"ஏன்னா... அம்மு உன்னைக் காதலிக்கிறாள் சந்தோஷ்..."

அதைக் கேட்டு அவன் இனிய அதிர்வுடன் தந்தையைப் பார்த்தான்... ஒரு மர்ம முடிச்சு அவிழ்ந்ததில் அவன் மிகவும் மகிழ்ந்து போனான்... காதலியே மனைவியானால் அதை விடச் சந்தோசம் வேறு என்ன இருக்கிறது...! தன்னை அவளுக்குப் பிடிக்காதோ என்று மனம் மறுகி கொண்டிருந்தவனுக்கு இப்போது அத்தனை சந்தோசமாக இருந்தது...

"ஒரு பெண்ணின் காதல் ஏன் எப்போதுமே தோல்வி அடைகிறது சந்தோஷ்...? ஒரு ஆண் தனக்குப் பிடிச்சவளை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா வாழ்ற மாதிரி ஒரு பெண்ணால் வாழ முடியவில்லையே... ஏன்...? ஒரு பெண் தானாய் காதல் சொன்னால் இந்தச் சமூகம் அவளை ஏன் கீழாகப் பார்க்கிறது சந்தோஷ்...?"

"டாட்..." அவன் திகைத்துப் போய்த் தந்தையைப் பார்த்தான்...

"அப்படியொரு நிலை அம்முவுக்கு வர கூடாதுன்னு தான் நான் உன்னைக் கட்டாயப்படுத்தினேன்... ஆனா இப்போ நடக்கிற நிகழ்வுகளைப் பார்த்தால் என் எண்ணம் தவறோன்னு எனக்குத் தோணுது... உன் வாழ்க்கையைப் பாழாக்கிட்டேனோன்னு எனக்குக் கவலையா இருக்கு..."

அர்ஜூன் மனதில் சர்வேஷ் பத்தின விசயம் கரையானாய் அரித்தது... இதற்கான பின்னணி என்ன என்று தெரியாது

அவன் கவலை கொண்டான்... அதை விட மகனது நிலை அவனைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியது...

"டாட்..." என்று தந்தையை அணைத்துக் கொண்ட சந்தோஷ்,

"உங்க கவலை தேவையில்லாதது... இனி உங்க மருமகளைப் பத்தின கவலையை விட்டு விடுங்க..."

"எனக்கு உன்னைப் பத்தி தான் கவலை சந்தோஷ்..."

"என்னைப் பத்தி கவலைப்பட என்ன இருக்கிறது டாட்...? என்னை நேசிக்கும் மனைவி எனக்குக் கிடைத்திருக்கிறாள்... இது தெரியாமல் இவ்வளவு நாள் நான் வாழ்க்கையை வீணடித்து இருக்கிறேனே..." என்று அவன் தனக்குத் தானே சலித்துக் கொண்டான்...

"சர்வேஷ்..." என்று தயங்கிய தந்தையைக் கண்டு,

"அம்மு நாம் பார்த்து வளர்ந்த பொண்ணு டாட்... நிச்சயம் சர்வேஷ் விசயத்தில் எந்தத் தவறும் நடந்திருக்க வாய்ப்பில்லை... அதுவும் பத்தொன்பது வயதில் அவனைத் தத்தெடுத்து இருக்கிறாள் என்றால்...? அவளது தாய்மை எந்தளவுக்கு உயர்ந்ததாக இருக்கணும்... அந்தத் தாய்மை உணர்வை நான் மதிக்கிறேன் டாட்..."

"இது போதும் சந்தோஷ்... இந்தப் புரிதல் உன் வாழ்க்கையை வெற்றிக் கொள்ள வைக்கும்..." என்று அர்ஜூன் கண்கள் கலங்க சந்தோசப்பட்டான்...

"இது நீங்க காட்டிய பாதை டாட்... அதன் வழி நடந்தால் நிச்சயம் எனக்கு வெற்றி தான்... தோல்வி என்பதே கிடையாது..." என்று கூறிய மகனை கண்டு அர்ஜூனுக்கு நிம்மதியாக இருந்தது...

சந்தோஷ் மீண்டும் மனைவியைப் பார்க்க வந்த போது அவள் மயக்கம் தெளிந்து விழித்திருந்தாள்... அவனைக் கண்டதும்,

"கண்ணா எப்படி இருக்கான்...?" என்று பதட்டத்துடன் அவள் கேட்க...

எப்போதும் அவனை எரிச்சல் படுத்தும் இந்தக் கேள்வி இன்று அவனை ஆனந்தப்படுத்தியது...

"நல்லாயிருக்கான்... அவனுக்கு மயக்கம் தெளிந்ததும் நாம் போய் அவனைப் பார்க்கலாம்..." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்த...

"எனக்கு என்னமோ பயமாயிருக்கு அத்தான்..." என்றவளை அணைத்து ஆறுதல் படுத்தியவன்,

"கண்ணாவோட அப்பா நான் இருக்கும் போது அம்மா நீ ஏன் வீணே கவலைப்படுகிற...?"

கணவனது 'அப்பா' என்ற வார்த்தையில் அவள் வியப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவனோ மந்தகாச புன்னகையுடன் அவளை ஆறுதலாய் பார்த்துக் கொண்டிருந்தான்...

*************************

"மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை;
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்;
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ;
இன்பம் இன்பம் என்றுதாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விசத்தில் மிக்கப் பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்;

அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே;
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணிய செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு;
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!"

பிரசன்னா இந்தப் பாடலை பாட அவனைத் தொடர்ந்து ஒருமித்த குரலில் அங்கிருந்த சிறுவர், சிறுமியர் சத்தமாய்ப் பாடினர்... அடுத்து அவன் அவர்களுக்கான நீதி கதைகளை அபிநயம் பிடித்து நடித்துக் காட்டி கூற... அவர்கள் அவன் கதை சொல்லும் பாங்கில் மனம் லயித்து ஆவென்று பார்த்து கொண்டிருந்தனர்...

இவை அனைத்தையும் அந்த நீண்ட அறையின் வாயிலில் இருந்து பார்த்து கொண்டிருந்தாள் யமுனா... அவள் ஒரு குழந்தைகள் நல மருத்துவர்... பெற்றோர் மற்றும் ஒரே அண்ணன் மூவரும் கட்டுமான நிறுவனத்தை நடத்தி வர இவள் மட்டும் அது பிடிக்காது சேவை மனப்பான்மையுடன் மருத்துவத் துறைக்கு வந்து விட்டாள்... அவள் இங்கு வேலைக்குச் சேர்ந்து ஆறுமாத காலமாகிறது...

இந்தச் சில நாட்களாக அவள் பிரசன்னாவை கவனித்துக் கொண்டு தான் வருகிறாள்... இந்த மருத்துவமனையை அவன் நிர்வகிக்கும் பாங்கு, எல்லோரிடமும் அன்பாய் பழகுவது என்று நாளுக்கு நாள் அவன் அவளுள் தனிப் பிரமிப்பை ஏற்படுத்துகிறான்... புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக அவன் தினமும் ஒரு மணி நேரமாவது தனது நேரத்தை செலவழித்து அவர்களைச் சந்தோசமாய் வைத்திருப்பான்... அந்தக் குழந்தைகள் அவனைச் செல்லமாய்ச் 'சாக்லேட் அங்கிள்' என்று அழைப்பார்கள்... ஏனெனில் அவன் தினமும் வரும்

போது அவர்களுக்காகச் சாக்லேட்களை வாங்கிக் கொண்டு வருவான்...

இதோ இப்போதும் அது போல் அவர்களைச் சந்தோசப்படுத்தியவனைக் கண்டு மதி மயங்கி நின்றிருந்தாள் யமுனா... அவளது வருகையை உணர்ந்தவனாய் அவன் எழுந்தான்...

"குட்நைட் பிரெண்ட்ஸ்..." என்றபடி அவன் சிறுவர்களிடம் விடைப்பெற்றான்...

யமுனாவை தாண்டி செல்லும் போது அவன் எப்போதும் போல் அவளைக் கண்டு சிறு புன்னகையுடன் தலையசைத்தவன் அவளைக் கடந்து சென்றான்... அவள் புன்னகையுடன் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... அந்த நீண்ட வராந்தாவில் நெடுநெடுவென்ற உயரத்தில் கம்பீரமாக நடந்து சென்றவனை அவள் இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

சிறிது தூரம் சென்ற பிரசன்னாவிற்கு ஏதோ ஒன்று மனதினை உறுத்த அவன் திரும்பி பார்த்தான்... தன்னைப் பார்த்தபடி நின்றிருந்த யமுனாவை கண்டு அவனது விழிகள் இடுங்கியது... யோசனையாய் அவளைப் பார்த்தவன் பின் தனது பாதையில் கவனம் வைத்து வேகமாய்ச் சென்று விட்டான்...

யமுனா பெருமூச்சு விட்டபடி தனது பணியைப் பார்க்க சென்றாள்... அவளுக்குமே அவன் மீதான தனது உணர்வை பிரித்தறிய முடியவில்லை... வயதின் கோளாறா...? அல்லது காதலா...? என்று உறுதியாக அவளால் சொல்ல முடியவில்லை...

**********************

இந்திரஜித் சம்யுக்தாவின் தொழிற் மையத்திற்குள் காரை செலுத்தினான்... சம்யுக்தா பயிற்சி முடிந்து வந்ததும் அவளுக்கு என்று தனியே தொழிற் மையத்தை அவன் நிறுவி கொடுத்து விட்டான்... பயிற்சி காலத்திலேயே அவள்

வடிக்கும் சிலைகளுக்கு ஏக கிராக்கி இருந்தது... வெற்றுக் களிமண் அவள் கைப்பட்டதும் கலைநயம் மிகு சிலைகளாக மாறுவது குறித்து அவனுக்கு அப்படியொரு பெருமை...

கைவினை பொருட்களோடு களிமண்ணால் செய்யப்படும் 'டெரக்கோட்டோ டைல்ஸ்' எனப்படும் தரையில் பதிக்கப்படும் கற்களை உருவாக்க சொல்லி அவன் அவளை ஊக்கப்படுத்தி இருந்தான்... ஏனெனில் நம் ஊர் அதிக வெப்பநிலைக்கு அது அவ்வளவு குளுமையாக இருக்கும்... அவள் அதில் புதுப் புது ஓவியங்கள் வரைந்து புதுமை புகுத்தி உருவாக்கினாள்... அதற்குச் சந்தையில் நல்ல மவுசு ஏற்பட்டதும் அதை உற்பத்தி செய்வதற்காகத் தனியே என்று தொழிற் மையத்தை அவன் உருவாக்கி கொடுத்து விட்டான்...

இப்போது சம்யுக்தா மெதுவே வளர்ந்து வரும் ஒரு இளம் தொழிலதிபராக உருவாகி கொண்டிருக்கிறாள்... அதற்கு அவனும் ஒரு காரணம் என்றால் மிகையில்லை... அவன் செல்லும் இடங்களில் எல்லாம் அவளுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு வந்து விடுவான்... அதனால் அவளது கைவண்ணம் மெல்ல மெல்ல வளரலானது... அது போல் கடல் தாண்டி செல்லவும் தொடங்கியது... இதற்குப் பின்னணியில் இந்திரஜித் தான் முழு மூச்சாய் செயல்பட்டான்... அவன் நினைத்தது போல் அவளை நல்ல நிலைமையில் அமர வைத்து விட்டான்... அது போல் அவளுக்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்து விட்டான்... இனி அதைப் பிடித்துக் கொண்டு சம்யுக்தா மேலே வந்து விடுவாள், நட்சத்திரமாக ஜொலிப்பாள் என்கிற நம்பிக்கை அவனுள் வந்து விட்டது...

இடைப்பட்ட காலத்தில் அவனது வீட்டில் நிகழ்ந்த எந்த நல்லது கெட்டதுக்கும் அவன் செல்லவில்லை... அவர்கள் எப்போதுமே பெற்றோரின் திருமணநாளுடன் சேர்ந்து சகோதரியின் பிறந்தநாளை கொண்டாடுவார்கள்... ஏனெனில் இது ஜெகதீஸ்வரியின் கோரிக்கை... பெற்றோர் சந்தோசமாக இருக்கும் நாளில் அவள் தனது பிறந்தநாளை மாற்றி வைத்து கொண்டாள்... அதற்குக் கூட அவன் அங்குச்

செல்லவில்லை... அலைப்பேசியில் ஒரு வாழ்த்து செய்தி கூட அவளுடன் பரிமாறி கொள்ளவில்லை...

அதை நினைத்து அவனுக்கு மனதிற்குப் பாரமாக இருந்தது... உடன்பிறந்த சகோதரி மீது பாசம் இருக்கிறது தான்... ஆனால் அதை விடத் தந்தையின் மீது கோபம் இருக்கிறதே... என்ன செய்ய...? அதனால் மௌனத்துடன் தனது வருத்தத்தைத் தாங்கி கொண்டான்...

இந்திரஜித் சம்யுக்தாவின் அலுவலக அறைக்குச் சென்ற போது அவள் அங்கில்லை...

"மேம் டைல்ஸ் தயாரிக்கிற இடத்தில் இருக்காங்க... நான் வேணும்ன்னா கூப்பிட்டு வரவா சார்...?" என்று கேட்ட அவளது செயலாளர் பெண்மணியிடம் அவன் மறுத்து விட்டு அவளது அறையில் வந்தமர்ந்தான்...

மிகவும் எளிமையாக அதே சமயம் நேர்த்தியுடன் அழகாக இருந்தது அந்த அறை... அங்கிருந்த ஒவ்வொரு பொருள்களிலும் அவளது ரசனை தெரிந்தது... அதைக் கண்டு உதட்டில் புன்னகை உறைய அவன் பார்த்திருந்தான்... அதே போல் சில மாதங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வை அவனது மனம் அசை போட்டது...

சில மாதங்களுக்கு முன்னால் சம்யுக்தா முன் சில காகித கற்றைகளைக் கொடுத்து அவன் அவளைக் கையெழுத்து போட சொன்னான்... அவளோ எதிர்கேள்வி கேட்காது அவன் கூறியதை அப்படியே செய்தாள்... எல்லாவற்றிலும் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு அந்தக் காகிதங்களை ஒழுங்குப்படுத்தியவள் அதை எடுத்து அவனிடம் நீட்டினாள்... அவன் சிரித்தபடி அதை வாங்கியவன்,

"ஏன் எதுக்குன்னு எல்லாம் கேள்வி கேட்க மாட்டியா...?"

"எதுக்குக் கேள்வி கேட்கணும்...?" என்று எதிர்கேள்வி கேட்டவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"எனக்குச் சாதகமா, உனக்குப் பாதகமா நான் எதையாவது எழுதி வாங்கிக்கிட்டால்...?"

"நீங்க எழுதி வாங்கும் அளவுக்கு என் கிட்ட எதுவும் இல்லையே..." என்று உதட்டை பிதுக்கியபடி கூறியவளை கண்டு அவனுக்கு அத்தனை ஆசை அதிகரித்தது... அவள் அருகில் நெருங்கி அமர்ந்தவன்,

"நீ இருக்கியே பேபி..." என்று அவன் குறும்பாய் கண்சிமிட்டி சிரிக்க... அதைக் கேட்டு அவள் செவ்வானமாய்ச் சிவந்து போனவள்,

"த்ச்சு... சும்மாயிருங்க பாவா..." என்று நாணத்துடன் கூறியபடி அங்கிருந்து சென்றுவிட்டாள்...

"இனி ஒரு நொடி கூடச் சும்மாயிருக்க முடியாது பேபி..." என்று அவன் அவஸ்தையுடன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்...

அன்று நடந்ததை நினைத்தபடி அவன் புன்னகையுடன் அமர்ந்திருந்தான்...

"பாவா, வந்து நேரமாச்சா...?" என்று கேட்டபடி பரபரப்புடன் அறைக்குள் நுழைந்தாள் சம்யுக்தா...

"இல்லை... கொஞ்ச நேரம் தான்..." என்றவன்,

"கிளம்பு, கிளம்பு..." என்று அவளை அவசரப்படுத்தினான்...

"எங்கே பாவா...?"

"போனால் தெரிந்துவிடப் போகிறது..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்...

வீட்டிற்கு வந்து உடை மாற்றித் தயாராகி வந்தவளை அழைத்துக் கொண்டு அவன் சென்னையை நோக்கி பயணமானான்... காரில் போகும் போது அவளுக்கு வீட்டினர் நினைவு எழுந்தது... அவ்வப்போது அவளுள் எழும் நினைவுகள் தான்... எப்போதும் போல் அந்த நினைவுகளை

மனதிற்குள் போட்டு புதைத்து கொண்டவள் வெளியில் அமைதியாக வந்தாள்...

ஆனால் அவளது மனதின் ஓரம் சிறு ஏக்கம் எட்டிப்பார்க்க தவறவில்லை... தன்னவன் தன் குடும்பத்துடன் இணக்கமாக இருக்கும் நாள் எந்நாளோ என்று அவளுக்கு ஏக்கமாக இருந்தது... அன்பான சொந்த பந்தங்களைப் பிரிந்திருப்பது அவளுக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது... அவனா...? சொந்தங்களா...? என்று வரும் போது தன்னவனே முழு உரிமை எடுத்துக் கொண்டு அவளை முழுதாய் ஆக்கிரமித்து இருந்தான்...

இந்திரஜித் அவளை அழைத்துக் கொண்டு சென்ற இடம் யுஎஸ் தூதரகத்திற்கு... இப்போது அவளுக்கு ஆங்கிலம் நன்கு புரியுமாதலால் அவள் திகைப்பாய் விழி விரித்தாள்...

"இங்கே எதுக்கு வந்திருக்கிறோம்...?" அவள் விழிகளில் பயத்தைத் தேக்கியபடி அவனது கையை ஆதரவு வேண்டி இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டாள்...

"அது சஸ்பென்ஸ்..." என்று கண்சிமிட்டி கூறியவனைக் கண்டு எப்போதும் போல் மனம் மயங்கியவள் அதன் பின் அவனைக் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை...

அவளைத் தனியே 'இன்டர்வியூ'விற்கு அழைத்த போது மட்டும் அவள் கொஞ்சம் பயந்தாள்... அவன் தான் அவளுக்குத் தைரியமூட்டினான்...

"உன்னால் முடியும்... தைரியமா போ... இது ஆரம்பம் தான் யுகிம்மா... நீ போக வேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது..." என்று முக மலர்ச்சியுடன் நம்பிக்கை ஊட்டியவனைக் கண்டு அவளுள் சற்று நம்பிக்கை எழுந்தது...

உள்ளே நுழைந்ததும் அங்கிருந்த அதிகாரி அவளைக் கண்டு, "மிஸஸ். சம்யுக்தா இந்திரஜித்..." என்று கூறிவிட்டு அவளை ஏற இறங்க பார்த்தார்...

அவளுக்கு இருந்த பதட்டத்தில் அவர் கூறியதை அவள் சரியாகக் கவனிக்கவில்லை... அதை விட அவரது அமெரிக்கன் ஆங்கில உச்சரிப்பு அவளுக்குப் புரியவில்லை என்பதே சரி...

விதி இந்த இடத்தில் இருந்து அவளுக்கு எதிராகச் சதி செய்ய ஆரம்பித்தது... அது இந்திரஜித்தின் தூரதிர்ஷ்டமே...!!!

தொடரும்...!!!

'ரெனோ ஆர்ட் ஃபெஸ்ட்' என்று பொறிக்கப்பட்டு இருந்த பிரமாண்ட பலகையை ஆவெனப் பார்த்தபடி நின்றிருந்தாள் சம்யுக்தா... அவளது வியப்பை பார்த்து ரசித்தபடி அவள் அருகில் நின்றிருந்தான் இந்திரஜித்... அவளது கலை திறனை ஊக்குவிப்பதற்காக அவன் அவளை நேவடா (Nevada) மாகாணத்தில் இருக்கும் ரெனோ நகரத்திற்கு அழைத்து வந்திருந்தான்... 'The Biggest Little City in the World' என்கிற பெருமைக்குரியது இந்த நகரம்...

விசா எடுக்கும் போது கூட அவன் ஏதோ ஊர் சுற்ற தான் தன்னை அழைத்துச் செல்ல போகிறான் என்று சாதாரணமாகச் சம்யுக்தா நினைத்தாள்... அதனால் தான் அந்த அதிகாரி கேட்டதற்கு எல்லாம் 'எஸ்' என்று கூறி சமாளித்து வைத்தாள்... வந்து பார்த்தால் தானே தெரிகிறது இதன் நோக்கம்...

"பாவா... ஈ விக்ரஹம் எந்தா பெந்தலுகா உந்தி..." (இந்தச் சிலை எவ்வளவு பெருசா இருக்கு...) என்று கூறியபடி வியப்பில் விரிந்த கண்களைச் சிலையின் கீழிருந்து மேலாக நோக்கினாள்... அண்ணாந்து பார்த்து அதன் பிரம்மாண்டத்தில் பிரமித்தவளின் கால்கள் சிறிது தடுமாறியது... அவன் தனது கைகளால் அவளைத் தாங்கி பிடித்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான்...

"பாவா, யாராவது பார்க்க போறாங்க..." என்று அவனது பிடியில் நெளிந்தவளை கண்டு வாய் விட்டு சிரித்தவன்,

"இது நம்ம ஊர் இல்லை பேபி..." என்க...

அப்போது தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... எல்லோரையும் பார்த்தவள் வெட்கம் விடுத்து மகிழ்வோடு அவனுடன் ஒன்றி கொண்டாள்... அதில் அவனது மனதில் ஏதோ ஒன்று உருகியது... அதன் தாக்கத்தில் அவனது கைகள் அழுத்தமாய் அவளை அணைத்துக் கொண்டது...

'ரெனோ ஆர்ட் ஃபெஸ்ட்' என்பது பலவித சிற்பங்களுக்கான போட்டி மட்டுமல்லாது பல்வேறு போட்டிகள் மற்றும் கேளிக்கைகள் அடங்கிய பிரமாண்ட திருவிழா... இந்திரஜித்திற்கு இது பற்றி எல்லாம் அவ்வளவாகத் தெரியாது... அவனது நண்பனிடம் சம்யுக்தாவின் திறமையைப் பற்றிப் பேசி கொண்டிருக்கும் போது அவன் தான் இது பற்றிச் சொல்லி இதற்கு விண்ணப்பிக்கச் சொன்னான்...

மரம், மணல், கண்ணாடி, உலோகம், களிமண் என்று ஒவ்வொன்றிலும் விதவிதமாகச் சிலைகள் செய்து அசத்தியிருந்தனர் உலகின் பல பகுதிகளில் இருந்து வந்து கலந்து கொண்ட பல கலைஞர்கள்... அதை எல்லாம் வியப்பாய் பார்த்துக் கொண்டு வந்தவளின் விழிகள் ஓரிடத்தில் நிலைக்குத்தி நின்றுவிட்டது... ஆச்சிரியம், வியப்பு, பிரமிப்பு இந்த வார்த்தைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட ஒரு உணர்வினை அவள் அனுபவித்துக் கொண்டிருந்தாள்...

ஆம், அங்கு அவள் கைகளால் செய்த களிமண் சிலை பார்வைக்காக வைக்கப்பட்டு இருந்தது... இந்தச் சிலையை இந்திரஜித் செய்யச் சொன்ன போது அவள் பயிற்சி வகுப்பில் சேர்ந்து சில மாதங்களே ஆகியிருந்தது...

"நீ செஞ்ச கிருஷ்ணர் சிலை மீது நம்பிக்கை வைத்து நான் சொல்கிறேன்... நான் சொல்கிறபடி ஒரு சிலையை வடித்துக் கொடு..." என்றவன் உலகிலுள்ள அத்தனை 'க்ளே ஸ்கல்ப்சர்' படங்களையும் இணையதள உதவியுடன் எடுத்து அவளிடம் காண்பித்தான்... அது போல் முந்தைய வருடங்களில் விருது வாங்கிய சிலைகளையும் எடுத்து அவளிடம் கண்பித்தவன்,

"அவங்க என்ன எதிர்பார்க்கிறாங்க என்று உனக்குப் புரிந்ததா...? இது போல் சமூகத்தைப் பிரதிபலிக்கும் சிலையை உருவாக்கி கொடு..." என்று அவன் கேட்ட போது கூட அவளுக்குப் புரியவில்லை... விருது வாங்கிய

சிலைகளை அவன் காண்பித்த போது கூட அவள் அதைப் பற்றி என்னவென்று கேட்கவில்லை...

"ரொம்ப யோசிக்க வைக்கிறீங்களே பாவா... என்னால் முடியுமா...?" என்று அவள் தயக்கத்துடன் இழுத்தாள்...

"உன்னால் முடியும்..." என்று நம்பிக்கையுடன் கூறியவனைக் கண்டு அவளுக்கே சிரிப்பு வந்துவிட்டது...

"பட்டிக்காடு பொண்ணு மேல் இத்தனை நம்பிக்கை வைக்கக் கூடாது பாவா... நான் அந்தளவுக்குத் திறமையான ஆள் இல்லை... ஏதோ எனக்குத் தெரிஞ்சதை செஞ்சுக்கிட்டு இருக்கேன்..." என்றவளை,

"எனக்காக இதை நீ செய்தே ஆகணும்..." என்று கட்டளை போல் அவன் கூற... வேறுவழியின்றி அவள் அதை ஏற்றுக் கொண்டாள்...

சொன்னதோடு கடமை முடிந்துவிட்டது என்று எண்ணாது அவள் கூடவே இருந்து அவளை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி அதை அவன் செய்ய வைத்தான்... சிலையைச் செய்து அவனிடம் கொடுத்தவள் அதன் பின் அது என்னவானது என்று கேட்க கூட மறந்து போனாள்... ஆனால் அவன் அதை மறக்காது இங்கு அனுப்பி வைத்திருக்கிறான்...

"பாவா..." அவள் மனம் நெகிழ்ந்தவளாய் அவனது தோளில் தலை சாய்ந்து கொண்டாள்... அவனது கை அவளது தோளை அணைத்துப் பிடித்துக் கொண்டது...

"இதுக்குத் தான் கேட்டீங்களா...?"

"ம்... பிடிச்சியிருக்கா..."

"பிடிச்சியிருக்காவா...? குப்பையைத் தூக்கி கோபுரத்தில் உட்கார வச்சியிருக்கீங்க..." என்றாள் சற்று உணர்ச்சிவசப்பட்டவளாய்...

"இது உன் திறமைக்குக் கிடைத்த அங்கீகாரம்... இதில் நான் ஒண்ணும் செய்யவில்லை..." என்றவனது கண்கள் அந்தச்

சிலையை அணு அணுவாய் ரசித்து உள்வாங்கிக் கொண்டிருந்தது...

"இங்கே வைக்கிறதுக்குன்னு தெரிஞ்சியிருந்தா இன்னும் நல்லா செஞ்சிருப்பேனே..." என்று அவள் வருத்தத்துடன் கூற...

"இதுவே நல்லா தான் இருக்கு... மிகுந்த கலைநயத்துடன் இருக்கப் போய்த் தானே இதைச் செலக்ட் பண்ணி இங்கே வச்சியிருக்காங்க..." என்றவன் அவளது தலையில் செல்லமாய் வலிக்காது கொட்டியபடி,

"அப்போ உன்னால் இதை விட இன்னும் நல்லா செய்ய முடியும்... அப்படித் தானே...?" என்று போலியாக அவன் முறைக்க...

"ஹி ஹி... சும்மா சொன்னேன் பாவா... என்னோட முழுத் திறமையையும் இதில் காட்டி இருக்கிறேன்..." என்றவள் பின் காதலாக அவனைப் பார்த்தபடி,

"உங்களுக்காக..." என்க...

அதை வேறு அர்த்தத்தில் எடுத்துக் கொண்ட இந்திரஜித், "இன்னும் உன்னுள் இருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரணும் பேபி..." என்று கண்சிமிட்டி சிரிக்க...

அவளோ பொருள் புரியாது பேந்த பேந்த விழித்தாள்... தனக்குத் தெரியாமல் தனக்குள் திறமைகளா என்று...?

"அவ்வளவு திறமைகள் எனக்குள் இருக்கா பாவா...?" என்று அறியாமையுடன் கேட்டவளை தலையில் இருந்து கால் வரை அழுத்தமாய் ரசனையுடன் பார்த்தவன்,

"தெரியலை... இனி தான் பரிசோதிச்சு பார்க்கணும்..." என்றான் ஒரு மாதிரி குரலில்...

"போங்க பாவா... நீங்க பேசுறது ஒண்ணும் புரிய மாட்டேங்குது..."

"அதற்காகத் தான் பெண்ணே செயல்முறை விளக்கம் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்..." என்றான் அவன் மர்ம புன்னகையுடன்...

"இதுவும் எனக்குப் புரியலை..." என்றவளின் கவனத்தை அவன் சாமர்த்தியமாகச் சிலையைக் காட்டி திசை திருப்பி விட்டான்...

மூன்று நாட்கள் அங்குச் சுற்றி பார்ப்பதில் கழிந்தது... அவளுக்கு ஒவ்வொன்றையும் பார்த்து வியப்பதற்கே நேரம் சரியாக இருந்தது... அருகில் இருந்த இந்திரஜித்தை கூட அவள் மறந்து போய்விட்டாள்... ஏதாவது சந்தேகம் வந்தால் மட்டுமே அவனைக் கண்டு கொள்வாள்... ஆனால் அவனது விழிகளில் தெரிந்த பிம்பம் எல்லாம் அவளுடைய பிம்பம் மட்டுமே... மற்றது எல்லாம் 'அவுட் ஆஃப் போகஸ்'இல் அவனுக்குத் தெரிந்தது... காணும் யாவிலும் சம்யுக்தாவே...!!!

அந்த விழாவில் அவளது சிலைக்கு விருதோ, பரிசோ கிடைக்காவிட்டாலும் அவளது கலைத்திறன் அதில் கலந்து கொண்டதே பெருமைக்குரிய விசயமாக இருந்தது... அதைத் தான் அவனும் அவளிடம் கூறினான்... அது போல் அவளது படைப்புக் காட்சி பொருளாக நிரந்தரமாக இங்கு வைக்கப்பட இருப்பதையும் அவன் சுட்டிக்காட்டி கூற... அதைக் கேட்டுச் சந்தோசத்தில் ஆர்ப்பரித்தவள் அவனது உயரத்திற்கு எம்பி அவனது கன்னத்தில் மென்மையாகத் தனது இதழ்களைப் பதித்துவிட்டு விலகினாள்... அப்படியொரு மகிழ்ச்சியில் அவளது மனம் ஊஞ்சலாடியது... அவனோ அவளது செயலில் மனம் மயங்கி நின்றான்...

மூன்றாவது நாள் இரவு விருந்திற்காக இந்திரஜித் சம்யுக்தாவிடம் அழகான புடவை ஒன்றை பரிசாகக் கொடுத்து அதை உடுத்தி கொண்டு வர சொன்னான்... அவன் என்ன சொன்னாலும் ஏனென்று கேள்வி கேட்காது செய்பவள் இதையும் அப்படியே செய்தாள்...

"போகலாமா பாவா..." என்றவளை அவன் வெளியே அழைத்துச் செல்லாமல் அறையின் பால்கனி கதவை திறந்து கொண்டு அழைத்துச் செல்ல... அவள் குழப்பத்துடன் அவனுடன் நடந்தாள்...

பால்கனி அடுத்து அவர்களுக்கு என்று தனியே இருந்த நீச்சல் குளத்தை ஒட்டி போடப்பட்டிருந்த மேசை மீது அவர்களுக்கான உணவுகள் வரிசையாக அடுக்கப்பட்டுக் காத்திருந்தது... மெழுகுவர்த்தியின் மெல்லிய ஒளியில் அந்தச் சூழ்நிலை மிகவும் ரம்யமாகக் காணப்பட்டது... காதல் வயப்படாதவர்களையும் காதல் வயப்படுத்தும் அழகிய சூழல் அது... ஏற்கெனவே காதலில் மதி மயங்கி இருக்கும் சம்யுக்தா இன்னமும் மதி மயங்கி போனாள்...

இந்திரஜித் அவள் அமர்வதற்காக நாற்காலியை இழுத்துப் போட்டதில் அவள் தன்னை மகாராணி போல் உணர்ந்தாள்... அவன் அமராமல் நின்றபடி அங்கிருந்த நகைப்பெட்டியை திறந்து அதிலிருந்த வைர அட்டிகையை எடுத்து அவளது கழுத்தில் அணிவித்தான்...

"இது எல்லாம் எதுக்குப் பாவா...?" என்று அவள் சங்கடமாய் நெளிந்தாள்...

அவனோ பதில் சொல்லாது தனது இதழ் கொண்டு அந்த அட்டிகையை வருடி கொடுத்தவன், "உன்னுடைய சங்கு கழுத்துக்குன்னு செஞ்சது மாதிரி ரொம்ப அழகாக இருக்கு பேபி..." என்க...

அவனது இதழ் தொடுகையில் அவளது தேகம் பனிக்கட்டியாய் குளிர்ந்து இறுகி போனது... அவளது மனமோ காதல் கொண்டு பெரும் தீச்சுவாலையாய் பற்றியெரிய ஆரம்பித்தது...

"நான் உன் கிட்ட ஒண்ணு கேட்கணும் பேபி..." என்றவனது குரல் சற்று இறுக்கத்துடன் ஒலித்ததோ...

"கேளுங்க பாவா..." என்றபடி அவள் பின்னால் தலை சாய்த்து அவனை அண்ணாந்து பார்த்தாள்... அவளது

நெற்றியில் தனது நாடியை பதித்து அவளது விழிகளுக்குள் தனது விழியால் ஊடுருவி பார்த்தவன்,

"எல்லோரும் சொல்றாங்க, நீ என்னை விடத் தகுதி குறைவாக இருப்பதால் தான் நீ என் சொல் பேச்சு கேட்பதாய்... அது மாதிரி நானும் அதை யூஸ் பண்ணி உன்னை ஆட்டி வைப்பதாய்... அது உண்மையா...?"

'இல்லை' என்று மறுப்பாய் தலையசைத்தவளை கண்டு அவனுக்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது...

"இப்போ நான் உன்னை என் அளவுக்கு எல்லா விதத்திலும் உயர்த்தி இருக்கிறேன்... இன்னும் சில வருடங்களில் நீ இன்னும் உலகப் புகழ் அடைவாய்..."

"ப்ச்... இப்போ எதுக்கு இது எல்லாம்...? நான் எப்பவும் உங்க யுகி தான்..." என்றவளின் காதலை கண்டு என்றும் போல் அவனது விழிகள் பனித்தது...

"இப்போ சொல்லு... இப்பவும் நான் உனக்கு வேணுமா...? உன்னோட அழகுக்கு, திறமைக்கு நிறையப் பேர் உன்னைக் கல்யாணம் பண்ண முன் வருவாங்க..." என்றவன் அவளது பார்வையைச் சந்திக்க இயலாது விலகி சென்று தள்ளி போய் நின்று கொண்டு அவளைத் திரும்பி பார்க்காது,

"இப்போதும் உன்னுடைய விருப்பம் என்னுடன் வாழ்வதாக இருந்தால்...? இது போல் நீ நிறைய அவமானப்படணும்... அது போல் உரிமையுள்ள உறவுக்காக நீ போராட வேண்டி வந்தால்...? ஐயம் சாரி, என்னால் எப்பவுமே உனக்கான உரிமையைக் கொடுக்க முடியாது... முன்பு நான் உன்னைப் படுத்தி எடுக்கணும்ன்னு நினைச்சவன் தான்... ஆனா இப்போ உன் காதல் முன்னால் என்னால் ஒரு அணுவையும் அசைக்க முடியலை... அதே சமயம் உனக்கான அங்கீகாரத்தையும் என்னால் கொடுக்க முடியலை... நான் இப்படித் தான் பேபி... நீ என் கூட இருக்கிறதும், பிரிந்து போகிறதும் உன் விருப்பம்... நான் சொல்றதை சொல்லிட்டேன்... உன் வாழ்க்கைக்கான முடிவை நீயே எடு..."

அவளிடம் கேட்க வேண்டும் என்று இத்தனை நாளாய் உரு போட்டு வைத்திருந்த விசயம் தான் இது என்றாலும் இதைச் சொல்லும் போது அவனது குரல் கரகரத்து ஒலித்தது... மனதில் ஏதோ ஒரு உணர்வு அவனைப் போட்டு வாட்டி வதைத்தது... அவனுக்கு ஓவென்று வாய் விட்டு அழ வேண்டும் போலிருந்தது... அதற்காகத் தன்னுடைய உணர்வுகளுக்கு வடிகாலாக அவளைத் தன்னுடன் வைத்திருப்பது என்பது சாத்தியம் இல்லாத ஒன்றாயிற்றே...

இதோ இப்போது கூட அவளுடன் வாழ வேண்டும் என்று விரும்பியவனாய் அவன் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டான்... ஆனாலும் கடைசி நொடியில் அவனது மனசாட்சி உறுத்தியதில் அவளது வாழ்க்கையை அவளது கைகளில் ஒப்படைத்து விட்டான்... அவள் வேண்டும் என்று ஏங்கும் மனதினை அடக்கும் வழியறியாது அவன் தவிப்புடன் நின்றிருந்தான்...

அவனது வார்த்தைகளைக் கேட்டு சம்யுக்தா மனம் தாங்காது சத்தமாய்த் தேம்பினாள்... அதில் திரும்பி பார்த்தவன் அவள் அழுவதைக் கண்டு அவள் அருகே விரைந்து வந்தான்...

"ப்ளீஸ் பேபி..." என்று அவளது தோள் மீது கை வைத்து அவன் ஆறுதல்படுத்த,

"ரொம்ப வலிக்குது பாவா..." என்றவளை அவன் திகைப்பாய் பார்த்தான்...

"இதுக்குத் தான் என்னை இத்தனை உயரத்தில் தூக்கி வச்சீங்களா...? இப்படி நீங்க தூக்கி வைக்கவும் வேண்டாம்... இப்படி உதறி தள்ளவும் வேண்டாம்... உயரத்தில் இருந்து கீழே விழுந்தால் எப்படி வலிக்குமோ அப்படி வலிக்குது எனக்கு..." என்று தேம்பியவளை கண்டு அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை...

மேசை மீது சாய்ந்து நின்று கொண்டு அவளை அணைத்துக் கொண்டான்... அவனது வயிற்றில் முகம்

புதைத்தவள் ஓவென்று அழுது கரைந்தாள்... அவள் அழுதாள்... அவன் அழவில்லை... அவ்வளவு தான் வித்தியாசம்...

"ப்ளீஸ் பேபி அழாதே... நீ அழறதை பார்க்க ரொம்பக் கஷ்டமாயிருக்கு..."

"நான் அழாம இருக்கணும்ன்னா நான் உங்க கூட இருக்கணும்... நான் உங்க கூடவே இருக்கவா...?" தன்னை ஏறிட்டு பார்த்து ஏக்கத்துடன் கேட்டவளை கண்டு அவன் ஸ்தம்பித்தான்... கரும்பு தின்ன கூலி வேண்டுமா என்ன...? ஆனாலும்...???

"ப்ச்... இது சரி வராது பேபி..." என்று அவளை விலக்கி விட்டு அவன் எழ முயன்றான்... அவன் எழ முடியாதபடி அவள் அவனை இறுக்கி அணைத்து கொண்டாள்...

"எல்லாம் சரி வரும்... என் உயிர் பிரியும் போது தான் நான் உங்களை விட்டு பிரிவேன்... அதுவரை நான் உங்க கூடத் தான் இருப்பேன்..." என்றவளை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தாலும்,

"உனக்கான அங்கீகாரம் என் கிட்ட இருந்து எப்போதுமே கிடைக்காது பேபி... என்னால், என்னால்..." எப்படிச் சொல்வது என்று தெரியாது அவன் நிறுத்தினான்...

"நான் யார்ன்னு ஊர், உலகத்துக்குச் சொல்ல மாட்டீங்க... அவ்வளவு தானே..." என்று வெகு சாதாரணமாகக் கூறியவளை கண்டு அவன் வியப்படைந்தான்...

"உங்க கூட வந்தப்பவே நான் இதை எல்லாம் எதிர்பார்த்து தான் வந்தேன்... எனக்கு வேண்டியது நீங்க மட்டும் தான்..."

"பேபி..." என்று உணர்ச்சிவசப் பட்டவனின் கழுத்தை தனது கரங்களால் வளைத்தவள்,

"இனி நீங்க இது போல் பேசாதீங்க பாவா... இதுக்கு நீங்க என்னைக் கொன்னு போட்டிருக்கலாம்..." என்று கண்ணீர் மல்க கூறியவளை தேற்றும் வகையறியாது அவன்

அவளது இதழில் இதழ் பதித்தான்... அவன் அவளை ஆறுதல் படுத்தினானா இல்லை அவளிடத்தில் அவன் ஆறுதல் தேடினானா என்று அவனுக்கே தெரியவில்லை...

நீண்ட இதழ் யுத்தத்தை இருவருக்குமான மூச்சு திணறல் முடிவுக்குக் கொண்டு வந்தது... அவளை விட்டு பிரிந்த அடுத்த நொடி அவன் அவளைத் தனது கைகளில் ஏந்தியிருந்தான்... அவள் சிறிது பயத்துடன் அவனை ஏறிட்டாள்...

"இனி இப்படிப் பார்க்கிறது நோ யூஸ் பேபி..." என்று அவளது கூர்மூக்கோடு தனது மூக்கை வைத்து உரசி அவளைக் கொஞ்சியபடி கூறியவன் அவளை அறைக்குள் தூக்கி சென்றான்...

அங்குப் படுக்கையில் இருந்த மலர் அலங்காரத்தைக் கண்டு அரண்டு போனவளாய் அதைப் பார்க்காது பயம் கொண்டு அவனது நெஞ்சில் அவள் முகம் புதைத்து கொண்டாள்... அவளது செய்கையில் அவன் வாய் விட்டு சிரித்தவன் அவளைப் படுக்கையில் கிடத்தி தானும் உடன் சரிந்தான்...

"உனக்குச் சம்மதமா பேபி..." என்று கேட்டவனைக் கண்டு பெண்ணுக்கே உரிய அச்சத்துடன் பார்த்தபடி அவள் மழலையாய் விழித்தாள்...

"இப்பவும் ஒண்ணும் கெட்டு போகலை... உன் வாழ்க்கை உன் கையில்..." என்றவனது வலக்கை ஆள்காட்டி விரல் அவளது முகவடிவினை அளவெடுத்தது...

என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் தான் அவளது உலகம், வாழ்க்கை என்று அவள் அவன் பின்னே வந்து விட்டாள்... ஆனாலும் இந்த உறவை ஏற்றுக் கொள்ள அவளது மனம் தயங்குகிறதே... அது ஏன்...? அவளுக்கே தனது உணர்வினை புரிந்து கொள்ள முடியவில்லை... ஏதோ தவறு செய்வது போல் அவளது மனம் சத்தமாய் மத்தளம் வாசித்தது... வயிற்றுக்குள்

தடதடவென இரயில் ஓடியது... பயத்தில் அவளது நெற்றியில் வியர்வை பூக்கள் அரும்ப ஆரம்பித்தது...

அவளது பயத்தினை அவன் அவளது விழி வழியே படித்தானோ...? அடுத்த நொடி அவன் அவளை விட்டு விலகி எழுந்தான்... அவன் விலகி செல்வதும் அவளுக்கு வலிக்கச் செய்ய... அவள் அவனது கையைப் பிடித்துத் தடுத்தாள்... அவன் திரும்பி பார்த்த போது,

"ம்... சம்மதம்..." என்றவளின் கன்னத்தைப் புன்சிரிப்புடன் தட்டியவன்,

"உன்னைக் கஷ்டப்படுத்தும் எதுவும் எனக்கு வேண்டாம்..." என்று கூறியவனின் மனதிற்குத் தெரியும் அவள் அவனுக்கு எத்தனை தேவை என்று...

"எனக்குக் கஷ்டம் எல்லாம் இல்லை பாவா..."

"உண்மையாவா...?"

"சத்தியங்கா..."

என்று தன் தலை மீது கை வைத்து கூறியவளை கண்டு சந்தோசத்தோடு அவள் புறமாய்க் குனிந்தவன் அவளது முகத்தோடு தனது முகத்தைப் பதித்தபடி 'ஆழியிலே முக்குளிக்கும் அழகே, ஆவியிலே தத்தளிக்கும் அழகே' அன்று திருமண வரவேற்பில் பாடிய பாடலின் தெலுங்கு மொழி பெயர்ப்பு பாடலான 'நீ மேமு மந்தார விரிலா' என்ற பாடலை அவன் அதே உருக்கத்துடன் மெல்லிய குரலில் பாட...

இப்போது அதன் அர்த்தம் புரிந்தவளாய் அவள் விழி விரித்து அவனைப் பார்த்தாள்... அதில் அவன் முற்றிலும் தன்னைத் தொலைத்தவனாய் அவளது விழி மீது இதழ் பதித்தான்... விழி மூடி அவனது இதழொற்றலை ஏற்றுக் கொண்டவளின் இதயம் நேசத்தில் கசிந்துருகியது...

மயக்கத்துடன் விழி மூடியிருந்தவளின் இதழ்கள் கரை ஒதுங்கிய மீனாய் துடிக்க அதைக் கண்டு இரக்கம்

கொண்டவனாய் அதற்கு உயிர் கொடுக்க எண்ணி அவன் அவளது இதழ் நோக்கி குனிந்தான்... அது மட்டுமே அவனது ஞாபகத்தில் இருந்தது... அதன் பின் அவன் அவளுள் கொஞ்சம் கொஞ்சமாய்த் தொலைந்து முற்றிலும் காணாமல் போனான்... பாடலின் விளக்கவுரையைச் செயல்முறையில் உணர்ந்து கொண்டிருந்தவனைப் பெண்ணவளின் போதை முழுதாய் ஆக்கிரமித்துக் கொண்டது...

அவளும் அவனது விருப்பத்தை உணர்ந்து அவனை முழுமனதோடு ஏற்றுக் கொண்டாள்... வலிய ஆண்மகன் மெல்லிய பெண்ணவளின் மென்மையில் தானும் மென்மையானவனாக மாறிப் போனான்... அவனது மனதின் வன்மையை மறந்தும் அவளிடம் காட்டவில்லை... ஒரு பூவை போல் மென்மையாய்க் கையாண்டான் தனது பூவையவளை... அவனது செயலிலேயே தெரிந்து போனது நிச்சயம் அவனால் ஒரு போதும் அவளைக் காயப்படுத்த முடியாது என்று... பெண்ணவள் அதை உணர்ந்தாளா...? என்பது தான் தெரியவில்லை...

கூடல் முடிந்து அயர்ந்து உறங்கி கொண்டிருந்தவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் சம்யுக்தா... அவனுடன் ஈருடல் ஓருயிராய் கலந்து விட்ட பின்பும் அவளது மனதில் இருந்த பாரம் குறையவில்லை... ஏன்...? அவளின் தவிப்பு இன்னமும் அதிகரித்தது... இதைத் தான் கவிஞர்கள் 'ஆணின் தவிப்பு அடங்கி விடும், பெண்ணின் தவிப்பு தொடங்கி விடும்' என்றார்களோ...!!!

அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... தான் அழும் சத்தத்தில் எங்கே அவன் எழுந்து விடுவானோ என்று பயந்து போனவளாய் அவள் அவசரமாய்ப் பால்கனி நோக்கி விரைந்தாள்... அங்கிருந்த நாற்காலியில் அமராமல் தரையில் அமர்ந்தவள் நீச்சல் குளித்தின் நீர்பரப்பின் மீது பால் நிலா போன்று ஜொலித்து ஒளி வீசி கொண்டிருந்த மின்விளக்குகளின் ஒளியை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அவளது விழிகளில் இருந்து விழிநீர் விடாது வழிந்து கொண்டிருந்தது...

இந்திரஜித்தை முதன்முதலில் சந்தித்ததில் இருந்து இதோ இந்த நொடி வரை நினைத்து பார்த்தபடி அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்... அத்தனை நிகழ்வையும் ஒன்றிணைத்து பார்த்தவளுக்கு ஒன்று மட்டும் நன்கு புரிந்தது... அது, அவளுடன் அவன் உண்மையாகவே பழகினான் என்று... அதனால் தான் அவன் குற்றவுணர்ச்சியில் தவித்து அவனுக்கும் தண்டனை கொடுத்துக் கொண்டு, அது போல் தன் மீதும் கோபம் கொள்கிறான்...

அவன் மீதான அவனது கோபம், அவனது தந்தை மீதான ஆத்திரம், தன் மீதான அவனது வெறுப்பு எல்லாவற்றிற்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பதாய் அவளுக்குத் தோன்றியது... ஆனால் அது என்ன என்று தான் அவளுக்குத் தெரியவில்லை...

"பேபி..."

திடுமென அவன் அழைத்ததில் கண்ணீரை கூடத் துடைக்கத் தோன்றாது அவள் வேகமாய்த் திரும்பி பார்த்தாள்... அவளது விழியில் வடியும் கண்ணீரை கண்டு அவன் மனம் துணுக்குற்றான்... அவனைக் கண்டதும் அவசரமாய் எழ போனவளை கையமர்த்தித் தடுத்தவன் தானும் அவள் அருகே அமர்ந்தான்... சிறிது நேரம் மௌனமாய் இருந்தவன் பின் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு மெல்லிய குரலில்,

"ஐயம் சாரி பேபி..." என்றான் மனதில் எழுந்த குற்றவுணர்ச்சியுடன்... தனது சுயநலத்திற்காகப் பெண்ணவளின் பெண்மையைப் பலி கொண்டு விட்டோமோ என்று மனம் மறுகினான்...

அவனது வருத்தத்தில் அவள் தனது வருத்தத்தை மறந்தவளாய் அவனைத் தன்னோடு அணைத்து கொண்டாள்...

"நமக்குள் சாரி எல்லாம் எதுக்குப் பாவா...?"

அவளது வார்த்தைகளில் அவளது கழுத்து வளைவில் இருந்து நிமிர்ந்து அவளை ஏறிட்டு பார்த்தவன்,

"பின்னே எதுக்கு நீ அழுகிற...?"

"அது வந்து..."

"நம்ம உறவை உன்னால் ஏத்துக்க முடியலை... அப்படித் தானே... என்னைக் கண்டால் அருவருப்பா இருக்கா...?"

அவன் பேச பேச அவள் பேச வார்த்தைகளற்று திகைத்து போய் அவனைப் பார்த்தாள்... அவளா அப்படி நினைப்பாள்...?

"நான் உன் வாழ்க்கையில் வராது போயிருந்தால் நீ நிம்மதியா இருந்திருப்ப இல்லையா...?" என்றவனது வாயை கை கொண்டு மூடியவள்,

"ஏன் இப்படிப் பேசுறீங்க பாவா...?"

"உண்மையைச் சொல்லு..." என்று விடாப்பிடியாய் அவன் அதிலேயே நின்றான்... அவளோ இயலாதவளாய் அவனைப் பார்த்தாள்...

"நான் வராது போயிருந்தால் உன் மாமாகாரு பிரசன்னாவை உனக்குக் கல்யாணம் பண்ணி வச்சியிருப்பாரு... நீயும் அவன் கூடச் சந்தோசமா வாழ்ந்திருப்ப... எல்லாத்தையும் நான் கெடுத்துட்டேன் இல்லையா...?" என்றவனது பேச்சை நிறுத்தும் வகையறியாது அவள் தவிப்புடன் தன் இதழ் கொண்டு அவனது இதழை மூடினாள்... அவனைப் போன்று வார்த்தைகளால் அல்லாது செயலால் அவனுக்கு ஆறுதல் அளித்தாள் அவள்...

அதில் அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்... அடுத்து அவள் கொடுத்த இதழொற்றலில் அவனது விழிகள் சுகமாய் மூடி கொண்டது... வெகுநேரம் கழித்து விலகியவள் அவனை அணைத்துக் கொண்டு,

"இனி இப்படிப் பேசாதீங்க பாவா... உங்களைச் சந்திக்கலைன்னா நான் என்னாகியிருப்பேன்னு எனக்குத் தெரியாது... ஆனா உங்களைப் பார்த்த பிறகு தான் என் வாழ்க்கைக்கான முழு அர்த்தம் கிடைச்சிருக்கு... இப்போ எனக்கு உங்க மனக்கவலையைப் போக்கணும், காலம் முழுவதும் உங்களைச் சிரிக்க வைக்கணும்... அது மட்டும் தான் எனக்குத் தோணுது... நான் வணங்கும் 'ஏழுகுண்டலவாடா' மாதிரி நீங்க எனக்கு எப்போதும் சாமி தான்..." என்றவளை அணைத்து கொண்டவனின் மனதிற்குத் தெரியும் அவள் தான் அவனது குலசாமி என்று...

துன்பத்தில் இருந்து ஒருவரை காப்பாற்றுவது தான் தெய்வத்தின் செயல் என்றால்... அதைத் தானே அவள் அவனுக்குச் செய்து கொண்டிருக்கிறாள்...

"இனிமேல் நீ அழ கூடாது..." என்று கண்டிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் மௌனமாய் ஆமோதிப்பாய் தலையசைத்தாள்...

"சாமிக்கு பூசாரி வரம் கொடுப்பது எப்போதோ..." என்று கண்சிமிட்டி சிரித்தவனை அவள் புரியாது பார்க்க...

அவன் சிரித்தபடி எழுந்தவன் அவளை எழுப்பித் தனது கைகளில் அள்ளி கொண்டான்... அவனது தேவையை உணர்ந்து அவளும் அவனுடன் ஒட்டி கொண்டாள்... சற்று முன்னிருந்த மனசஞ்சலம் இப்போது அவளிடத்தில் இல்லை...

மீண்டும் அவளுள் புதைந்தவனுக்குத் தெரியும் தனது மனதின் வெம்மையைத் தாங்காது தனது சீதையைத் தீக்குளிக்கச் செய்கிறோம் என்று... ஆனாலும் அவனால் தன்னை மாற்றிக் கொள்ள முடியவில்லை...

அவளும் தெரிந்தே விரும்பியே நெருப்பில் குளித்தாள்... ஆனால் தணல் சுடுவதற்குப் பதிலாக அவளைக் குளிர்விப்பது ஏனோ...!!!

********************

"அந்தப் பெண்ணை நாம் நெருங்க முடியவில்லையே... அந்தளவுக்கு அவன் அவளைச் சுற்றிப் பாதுகாப்பை பலப்படுத்தி இருக்கிறான்..." அந்தப் பெண்மணி மனம் குமுறினார் அந்த உருவத்திடம்...

"இப்போ அவளை ஃபாரின்க்கு கூட்டிட்டு போய் டூயட் பாடிக்கிட்டு இருக்கான்..." என்று பல்லை கடித்தது அந்த உருவம்...

"இனி என்ன செய்ய...?"

"வேறுவழியில்லை சமய சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியது தான்..." என்ற அந்த உருவம் தான் மனதில் நினைத்ததை அப்படியே அவரிடம் கூறியது...

"அவள் அதை அவனிடம் காண்பித்து விட்டால்...?"

"நிச்சயம் அப்படிச் செய்ய மாட்டாள்... ஆனால் அவன் வேண்டாம் என்று அவனை விட்டு பிரிந்து செல்வாள்..."

"அது எப்படி அவ்வளவு உறுதியா சொல்கிற...?"

"அவளுடைய காதல் அந்தளவுக்கு தெய்வீக காதலாம்..." அதன் வார்த்தையில் அத்தனை நக்கல் தெறித்தது...

"அப்படி உள்ளவள் எப்படி அவனை விட்டுப் பிரிந்து செல்வாள்...?"

"அங்குத் தான் சைக்காலஜி வேலை செய்கிறது... அவனைக் கஷ்டப்படுத்த விரும்பாமல் விலகி சென்று விடுவாள்..." என்று வில்லன் சிரிப்புச் சிரித்தது அந்த உருவம்...

"ம்... நல்ல ஐடியா தான்... அதைச் செஞ்சிட்டு வந்து சொல்கிறேன்..." என்று மடிகணினியை அணைத்த அந்தப் பெண்மணி தனது அறைக்குச் சென்று அலமாரியில் எதையோ தேடினார்... தேடியது கிடைத்ததும் அவரது முகத்தில் அத்தனை குரூரமான புன்னகை தோன்றியது...

*******************

சர்வேஷ் உடல்நலம் இப்போது நன்றாகத் தேறிக் கொண்டு வந்தது... சந்தோஷ் அவனைத் தங்களுடன் வைத்து நன்கு பார்த்துக் கொண்டான்... முதலில் ஆச்சிரியமாய்க் கணவனைப் பார்த்த சாத்விகா இப்போது அதை இயல்பாய் ஏற்றுக் கொண்டாள்... மூவரும் ஒரு குடும்பம் போல் ஒரு தோற்றம் அவர்களுள்... அவளது தாய்மைக்கு மதிப்பளித்தவன் இப்போது சர்வேஷ்க்கு தானும் தாயுமானவனாய் மாறிப் போனான்... இந்த உணர்வும் அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது...

சர்வேஷ் உறங்கி கொண்டிருக்கச் சாத்விகா கணவனுக்காகக் காத்திருந்தாள்... வழக்கம் போல் தாமதமாக வந்தவன் தன்னைச் சுத்தப்படுத்தி விட்டு உணவு உண்டு விட்டு அறைக்கு வந்தான்... இத்தனை நாளாய் மனைவியிடம் மனம் விட்டு பேசாததை உணர்ந்தவனாய் அவன் அவளை அழைத்தான்...

"அம்மு..." அவனது அழைப்பில் நின்றவள் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"இங்கே வந்து உட்கார்..." அங்கிருந்த சோபாவை காட்டியவன் தானும் அவள் எதிரில் அமர்ந்தான்...

"உன் ப்ராப்ளம் என்ன...? ஏன் என் கிட்ட சரியா பேச மாட்டேங்கிற...? பழக மாட்டேங்கிற... உனக்கு என்னைப் பிடிக்கலையா...?"

அவனது கேள்வியில் அவளது விழிகளில் முணுக்கென்று கண்ணீர் நிரம்பியது... அதை அவனுக்குக் காட்ட விருப்பம் இல்லாது அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

"நீ என் மேல் வெறுப்பா இருக்கிறேன்னா நான் இது மாதிரி உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்க மாட்டேன்... ஆனா நீ என்னைக் காதலிக்கிற... அப்படியிருந்தும் இந்த வெறுப்பு ஏன்...?" என்றவனின் பார்வை அவளைத்

துளைத்தெடுத்தது... பதில் கூறியே ஆக வேண்டும் என்பது போல் பிடிவாதம் அதில் இருந்தது...

அவன் கூறியதை கேட்டு முதலில் திகைத்தவள் பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு சளைக்காது அவனது பார்வையைத் தாங்கி நின்றவள் பின் மெதுவே அந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"வாட்... கம் அகைன்..." அவனால் தனது காதுகளை நம்ப முடியாது திரும்பக் கேட்டான்...

"சர்வேஷ்..."

"அவன் எதற்காக நம்மிடையே வர வேண்டும்...? அவனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்...?" என்றான் அவன் படபடப்புடன்...

"அவனது அப்பா நீங்க என்கிற சம்பந்தம் போதுமே..." என்று கொஞ்சமும் அலட்டி கொள்ளாது கூறியவளை கண்டு அவன் அதிர்வுடன் சோபாவில் இருந்து எழுந்து விட்டான்...

"என்ன சொன்ன...?" அடக்கப்பட்ட ஆத்திரத்துடன் கேட்டவனின் விழிகள் இரண்டும் சிவந்து போனது...

"உண்மையைச் சொன்னேன்..."

"அப்படி என்னடி உண்மையைக் கண்டுபிடிச்ச... என் கூடச் சேர்ந்து வாழ விருப்பம் இல்லைன்னா சொல்லிரு... அதை விட்டுட்டு இப்படி என் மேல் அபாண்டமா பழி சுமத்தாதே..." என்றவனின் அருகில் வந்தவள் அவனது சட்டையை ஆத்திரத்துடன் கொத்தாய் பற்றியவள்,

"யாருக்கு விருப்பம் இல்லை... எனக்காக இல்லை...? உங்க கூடக் காதலோடு வாழணும்ங்கிறது சின்ன வயசில் இருந்து எனக்குள் இருக்கும் ஆசை... ஆசையில்லை கனவுன்னு கூடச் சொல்லலாம்... விவரம் தெரிஞ்ச வயசில் இருந்து நான் உங்களைக் காதலிக்கிறேன்..."

அந்த இக்கட்டான நேரத்திலும் அவளது காதல் அவனது மனதினை சிலீரென்று இன்பமாய்த் தாக்கியது...

"என்னோட காதல், கனவு எல்லாம் சர்வேஷை கண்டதும் காணாமல் போயிருச்சு..." என்று வேதனையுடன் கூறியவளின் வேதனையைக் காண சகிக்காது,

"உளறாதே அம்மு... சர்வேஷ்க்கு அப்பா நானில்லை..."

"அவனோட அம்மா ப்ரியாவாக இருந்தால், அப்பா நீங்கள் தானே...?"

அவளின் வார்த்தையில் அவனது தேகம் இறுகி போனது... அதை உணர்ந்தவளாய் அவள்,

"உங்க ரெண்டு பேர் சுகத்துக்காக இந்த அப்பாவி ஜீவனை ஏன் பரிதவிக்க வச்சீங்க...? காதலிக்கும் காலம் வரை ஜாலியா இருந்துட்டு அதுக்கு அப்புறம் உங்க இஷ்டம் போல் நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சிட்டீங்க... ஆனா இடையில் இந்த இளம் குருத்து என்ன பாவம் பண்ணியது...? ப்ரியா வேறு ஒருத்தரை கல்யாணம் பண்ணிட்டு குழந்தை குட்டின்னு சந்தோசமா இருக்காங்க... அதே மாதிரி நீங்களும்... ஆனா சர்வேஷ்...? பால் குடி மாறாத பச்சை மண்ணாய் அவன் அநாதையாய் ஆசிரமத்தில் தூக்கி எறியப்பட்டவன்... எத்தனை நாளாய் பாலுக்கு, தாயின் அரவணைப்புக்கு ஏங்கி அழுதானோ... அவனது இந்த நிலைமைக்குக் காரணம் நீங்க ரெண்டு பேர் மட்டும் தான்... அந்தப் பாவம் உங்க ரெண்டு பேரையும் சும்மா விடாது... தெய்வம் உங்களைச் சும்மா விட்டாலும் நான் சும்மா விட மாட்டேன்..." என்று கொதித்தவளின் கையை விலக்கி விட்டு அவன் ஒன்றும் கூறாது சென்று விட்டான்...

அவளோ கழிவிரக்கத்தில் கரைந்தபடி கண்ணீருடன் சோபாவில் அமர்ந்தாள்... மனம் நிறையக் காதல் இருந்த போதும் இரு மனமும் சேர முடியாது தவித்தது...

****************

தொழிற் மையத்திற்குக் காரை ஓட்டி கொண்டு வந்த சம்யுக்தாவின் இதழ்களில் புன்னகை உறைந்திருந்தது... காலையில் எழுந்ததில் இருந்து அவளது மன்னவன் செய்த

குறும்புகளை ஒவ்வொன்றாய் நினைத்து நினைத்து அவளது உள்ளம் உற்சாகக் கும்மாளமிட்டது...

அதே உற்சாகத்துடன் தனது அலுவலக அறைக்குள் நுழைந்தவள் நாற்காலியில் அமர்ந்ததும் தனக்கு வந்திருந்த தபால்களை ஒவ்வொன்றாய் எடுத்து பார்க்க துவங்கினாள்... அதில் ஒன்று 'பெர்சனல்' என்று போடப்பட்டு மிகவும் பத்திரமாகக் கட்டப்பட்டு இருந்தது... யோசனையுடன் அதை எடுத்து பிரித்தவள் அதன் உள்ளே இருந்ததைக் கண்டதும் முகம் வெளிறி போனவளாய் அப்படியே செயலிழந்து போய் அமர்ந்திருந்தாள்...

எந்த நம்பிக்கையில் அவள் இந்திரஜித்தை நம்பி அவன் பின்னே வந்தாளோ, அவளது அந்த நம்பிக்கையே அதிலிருந்த பொருளால் ஆட்டம் கண்டது...!!!

தொடரும்...!!!

உயிரோடு இதயத்தைப் பிடுங்கி எறிந்தால் எந்தளவிற்கு வலி ஏற்படுமோ அப்படியொரு வலியை சம்யுக்தா அனுபவித்துக் கொண்டிருந்தாள்... அந்தப் பொருளை காண காண அவளது வலி மேலும் மேலும் அதிகரித்தது... அதற்கு மேல் அதைக் காண முடியாதவளாய் அவள் அதை மேசையில் இருந்த இழுப்பறையில் வைக்க முயன்றாள்... பின் என்ன நினைத்தாளோ அதை எடுத்து தன்னுடைய கைப்பையில் வைத்து மூடினாள்...

கைகளால் தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டு சொட்டாக வழிந்து மேசை மீது தேங்கியது... அந்நேரம் அலுவலகத் தொலைப்பேசி அழைத்து அவளுக்கு நிகழ்காலத்தை உணர்த்தியது... அவளுக்கு இருந்த மனநிலையில் வேலை பார்க்க முடியாது தான்... ஆனால் கடமைகள் அவளை அழைத்ததில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தொலைப்பேசியை எடுத்துக் காதில் வைத்தாள்... அதன் பின் மேலே சிந்திக்காதபடி வேலைகள் வந்து அவளை ஆக்கிரமித்துக் கொண்டது...

மதிய உணவு நேரம் வந்ததும் தன்னவனின் நினைவில் அவள் வீட்டிற்குக் கிளம்பி சென்றாள்... ஏனெனில் எந்த வேலை எப்படி இருந்த போதும் மூன்று நேர உணவு மட்டும் அவர்கள் இருவரும் சேர்ந்து அமர்ந்து தான் உண்பார்கள்... அவளை விட இந்திரஜித்திற்குத் தான் வேலைகள் அதிகம்... அப்படியிருந்தும் அவளுக்காக அவன் தனது வேலைகளைப் போட்டு விட்டு ஓடி வருவான்... அவளைப் பசியுடன் காக்க வைக்கக் கூடாது என்கிற அக்கறையே அதில் அதிகம் இருக்கும்...

இன்றும் அது போல் அவள் வீட்டிற்குச் சென்ற போது இந்திரஜித் இன்னமும் வந்திருக்கவில்லை... ஏனோ மனம் பாரமாய்க் கனக்க அறைக்குச் சென்று படுத்து விட்டாள்... படுத்தவள் எப்போது தூங்கினாள் என்று தெரியாது... அரைமணி நேரம் கழித்து இந்திரஜித் அறைக்குள்

நுழைந்தான்... இந்நேரம் அவள் படுத்திருப்பதைக் கண்டு பதற்றத்துடன் அவள் அருகில் சென்று அமர்ந்தவன் அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்...

அவள் மரணித்தாலும் அவளது உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கும் அவனது ஸ்பரிசத்தை உணர்ந்தவளாய் அவள் சட்டென்று கண் விழித்தாள்...

"இந்த நேரத்தில் ஏன் படுத்திருக்கப் பேபி...? உடம்புக்கு என்ன பண்ணுது...?" என்று அவளைப் பார்த்து கவலையுடன் கேட்டவனின் குரலில் பதட்டம் இருந்தது...

'ஒன்றுமில்லை' என்பது போல் தலையாட்டியவளை கண்டு அவன் நிம்மதியுற்றான்...

அவளது உடம்பிற்கு ஏதுமில்லையே... மனதிற்குத் தானே அத்தனை துன்பம்...! அதை அவனிடத்தில் சொல்லும் வகையறியாது அவள் அவனைத் தவிப்புடன் பார்த்தாள்... அவளது விழிகளில் இருந்த தவிப்பை உணர்ந்தவனாய்,

"என்னடா...?" என்று அவன் பரிவுடன் கேட்டபடி அவளது தலையைக் கோதி கொடுத்தான்...

கடந்த ஒரு மாத காலமாக அவளுடன் அவன் வாழ்ந்த காதல் வாழ்க்கை பொய்யில்லையே... இதோ இந்தக் கணம் அவன் விழியில் வழியும் நேசம் பொய்யில்லையே... ஏனென்று தெரியாது அவனைத் தன்னுடன் தக்க வைக்கும் வழி தெரியாது தவித்தவள் அடுத்த நொடி சிறிதும் சிந்திக்காது அந்தக் காரியத்தைச் செய்தாள்...

தனது இரு கரங்கள் கொண்டு ஆவேசமாய் அவனது சட்டையைப் பிடித்து அவனைத் தன்னருகில் இழுத்தாள்... மெல்லிய பெண்ணிடத்தில் இத்தகையை வலிமை எப்படி வந்தது என்று வியந்தவனாய் அவன் விருப்பத்துடன் அவள் புறமாய்க் குனிந்தான்... அவனது முகத்தை இரு கரங்களால் தாங்கியவள் அவனது விழிகளுக்குள் உற்று பார்த்து தனக்கான காதலை தேடினாள்... அவளது

செய்கையின் அர்த்தம் புரிந்தவனுக்கு உல்லாசமாக இருந்தது...

"எப்போதும் என் நினைப்பாக இருக்கிறதா பேபி...?"

"ம்... ம்..." என்று வேகமாகத் தலையாட்டியவளை கண்டு,

"எனக்கும் அப்படித் தான் இருக்கு... எப்போதுடா வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வருவோம்ன்னு இருக்கு..."

"வேலையா...? நானா...?" ஒற்றையா? இரட்டையா?" என்று கேள்வி கேட்டவளை கண்டு அவனுள் உற்சாகம் கொப்பளித்தது...

"இதில் சந்தேகம் எதுக்கு...? நீ தான் பேபி..." என்று அவளது முகம் நோக்கி குனிந்தவனை அவள் காதலோடு அரவணைத்து கொண்டாள்...

என்றும் இல்லாத வண்ணமாகக் காதல் கொண்டு தன்னைக் கொண்டாடிய அவளைக் கண்டு அவன் அதிசயப்பட்டு வியந்து போனான்... அந்தக் கணம் அவளது மனதில் இருக்கும் வேதனையை அவன் அறியானே... அவள் தனது காதலை அவனுக்கு உணர்த்திட நினைத்தாளா...? அல்லது அவனது மனதினை காதலாய் மாற்றிவிட எண்ணி துடித்தாளா...? எது என்று அறியாது தன்னவனைத் தன்னுள் அமிழ்த்தி கொண்டாள் காதலோடு...

கூடல் முடிந்து விலகியவனை விலக விடாது அணைத்து கொண்டவளை கண்டு ஆச்சிரியம் அடைந்தவன்,

"என்னாச்சு என் பேபிக்கு...?" என்றபடி அவன் அவளை அணைத்துக் கொண்டு படுத்தான்...

"உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?" அவளது கேள்வியில் அவனது புருவங்கள் சுருங்கியது...

"இது என்ன புதுசா கேட்டுக்கிட்டு... பிடிக்காமல் தான் இப்படி இருக்கிறேனா...?" என்று அவளது மூக்கை பிடித்துச்

செல்லமாய் ஆட்டியபடி கேட்டவனை ஏறிட்டு பார்த்தவளின் இதழ்கள் துடித்தது ஏதையோ கேட்க எண்ணி...

"என்ன யுகிம்மா...?"

"ஒண்ணுமில்லை..." என்று கண்ணீர் மல்க தலையசைத்தவளை கண்டு,

"ஒண்ணும் இல்லைன்னு சொல்லிட்டு இப்படி அழுதால் எப்படி...?" என்று அவன் செல்லமாய் அவளை அதட்ட...

"இது ஆனந்த கண்ணீர்..."

"என்னை நினைச்சா...?" என்று கேட்டவனின் குரலில் அத்தனை உல்லாசம் பொங்கியது...

"உங்களுக்காக மட்டுமே..."

"அதுதான் எனக்குத் தெரியுமே... என் யுகி பேபிக்கு என்னை மட்டும் தான் பிடிக்கும் என்று..." என்றபடி அவன் ஆசையுடன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவனது தேவை உணர்ந்து அவள் அவனை மௌனமாய் ஏற்றுக் கொண்டாள்... அவளது காயம் கொண்ட மனதிற்கு அவனது அணைப்பு, இதழொற்றல் பெருத்த ஆறுதலாக இருந்தது...

அலுவலகத்திற்குக் கிளம்பிய இந்திரஜித்தை இமைக்க மறந்து பார்த்திருந்தாள் சம்யுக்தா... அவளின் பார்வையை உணர்ந்தவனாய் அவள் அருகில் வந்தமர்ந்தவன்,

"நீ ரெஸ்ட் எடு பேபி... உன்னோட வேலைகளை நான் பார்த்துக்கிறேன்..."

மனம் ஓய்ந்து போயிருந்ததால் அவளுக்கும் ஓய்வு தேவைப்பட்டது... அதனால் சரியென்று தலையசைத்தாள்...

"குட்... அப்படியே சாப்பிட்டு விட்டு வந்து ரெஸ்ட் எடுத்துக்கோ..." என்றவன் அவளை எழுப்பிச் சாப்பிட வைத்த பின்னரே அலுவலகத்திற்குக் கிளம்பி சென்றான்...

அவன் சென்றதும் அவள் தனது கைப்பையைத் திறந்து அதை எடுத்து பார்த்தாள்... பார்க்க பார்க்க அவளுள் துக்கம் பொங்கியது... இந்திரஜித்தின் தந்தை மீதான ஆத்திரம், தன் மீதான வெறுப்பு, அவன் மீது அவன் கொண்ட கோபம் எல்லாவற்றிற்கும் விடையாய் அந்தப் பொருள் இருந்தது... ஆனால் எப்படி என்று அவளுக்குத் தெரியவில்லை...

இப்போது அவளுக்குப் புரிந்தது... தன்னை ஏற்றுக் கொள்ள அவன் மனதளவில் எப்படித் தவித்துத் துடித்து இருப்பான் என்று... மேலும் மேலும் தான் அவனுக்குப் பாரமாக இருக்கிறோமோ என்று கழிவிரக்கம் பொங்க அவள் தனக்குள் அழுது கரைந்தாள்...

அவளது காதல் ஊசலாடி கொண்டிருக்கும் போதும் கூட அவள் அவனைப் பற்றித் தான் சிந்தித்தாள்... அவனுக்காகத் தான் வருந்தினாள்... இது தான் காதல் கொண்ட பேதை மனம் என்பதோ...!!!

தன்னவனை நினைத்து மனம் மறுகியவள் சில விசயங்களைப் பற்றி யோசிக்க மறந்து போனாள்... இதில் அவள் எங்கே இடையில் வந்தாள்...? இந்திரஜித் தன்னை எதற்காகச் சந்தித்தான்...? என்பது பற்றி அவள் சிறிதும் சிந்திக்கவில்லை... அப்படிச் சிந்தித்து இருந்தால் அவனது சட்டையைப் பிடித்து நறுக்கென்று நாலு கேள்விகள் கேட்டுச் சண்டை போட்டிருப்பாளோ...? அப்படிச் சண்டை போடத்தான் அவளது காதல் மனம் விரும்புமோ...?

******************

மருத்துவமனையில் இருக்கும் மருந்து கடையில் அத்தியாவசிய மருந்துகள் இல்லை என்று திடீரென்று கூறியதை கேட்டு பிரசன்னாவிற்கு அப்படியொரு கோபம் வந்தது...

"இதைக் கூடக் கவனிக்காம நீங்க எல்லாம் என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?" என்று அவர்களைச் சத்தம் போட்டவன் தனது அலைப்பேசியை உயிர்ப்பித்துத் தங்களது மருந்து நிறுவனத்திற்குப் பேசியபடி நடந்தான்...

அங்கிருந்த கண்ணாடி கதவை அவன் திறக்க முயன்ற போது மறுபுறம் இருந்து யமுனா அதே கதவை தன் பக்கமாய்த் திறந்தாள்... பிரசன்னா அலைப்பேசியில் தனது கவனத்தை வைத்திருந்தது போல் அவள் தன் கையில் இருந்த காகிதத்தில் கவனத்தை வைத்திருந்தாள்... அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை... கதவு இரு பக்கமும் இழுபடவும் இருவரும் ஒரு சேர நிமிர்ந்து பார்த்தனர்...

பிரசன்னாவை கண்டதும் யமுனா இனிமையாக அதிர்ந்தாள் என்றால், அவனோ உணர்வில்லாது அவளைப் பார்த்தவன் அலைப்பேசியை அணைத்து விட்டு ஒரு கையால் கதவை தன் பக்கமாய்த் திறந்தபடி மறுகையால் அவளைச் செல்லும்படி பணித்தான்... அதில் அவள் மகிழ்வுடன் அவனைத் தாண்டி சென்றவள் அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி நடந்தாள்...

"ஹலோ டாக்டர் மேடம்... முன்னாடி பார்த்து போங்க... இல்லைன்னா நீங்களும் பேஷண்ட்டா ஹாஸ்பிட்டலில் படுக்க வேண்டி வரும்..." என்று அவளைப் பார்த்துச் சத்தமாகக் கூறியவன் அவளது பதிலை எதிர்பார்க்காது சென்றுவிட்டான்... அவளோ புன்சிரிப்புடன் கையிலிருந்த காகிதத்தில் கவனத்தைச் செலுத்தியபடி சென்றாள்...

இரவு நேரம் யமுனா வேலை முடிந்து மருத்துவமனையில் இருந்து வெளியில் வந்து தனது ஸ்கூட்டி இருக்கும் இடத்தை நோக்கி நடத்தாள்... ஸ்கூட்டியில் தனது மருத்துவ உபகரணங்களை வைத்தவள் அதைக் கிளப்பினாள்... ஆனால் அது கிளம்பாது அடம்பிடித்தது... மீண்டும் மீண்டும் கிளப்பிப் பார்த்தாள்... ம்ஹூம், அதே பிடிவாதத்துடன் அது அசையாது நின்றது...

அந்த வழியே சென்ற பிரசன்னா வேண்டும் என்றே அவளைக் கண்டு கொள்ளாது கடந்து சென்று விட்டான்... காரில் ஏறியமர்ந்தவன் அதிலிருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்தான்... கைகளைப் பிசைந்து கொண்டு செய்வதறியாது நின்றிருந்தவளை கண்டு

மனமிரங்கியவனாய் காரை விட்டு இறங்கி அவளை நோக்கி வந்தான்...

அவனைக் கண்டதும் அவளது முகம் மலர்ந்தது... அதிகப்படியாய் மலரும் அவளது முகமலர்ச்சி அவனுக்குக் கடுப்பை கிளப்பியது... ஆனாலும் ஒன்றும் பேசாது அவளது ஸ்கூட்டி அருகில் சென்று அதைக் கிளப்ப முயன்றான்... அதுவோ அவனுக்கும் அடங்காது சண்டித்தனம் செய்தது... 'ப்ச்' என்று சலிப்புடன் நிமிர்ந்தவன் கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்... இரவு வெகுநேரமாகி இருந்தது... இந்த நேரத்தில் அவளைத் தனியே அனுப்பவும் அவனுக்கு மனம் வரவில்லை... அதனால் மனம் கேட்காது அவளது முகம் பார்க்காது,

"என்னுடன் வாங்க..." என்று அவளை அழைத்தபடி முன்னால் நடந்தான்... அவளோ சந்தோசத்துடன் தனது உடமைகளை எடுத்துக் கொண்டு அவனின் பின்னே ஓடினாள்...

கார் சாலையில் கலக்கும் வரை அவர்களிடையே எந்தவித பேச்சும் இல்லை...

"உங்க வீடு எங்கே இருக்கு...?"

சென்னையில் முக்கியப் பணக்காரர்கள் வசிக்கும் பகுதியை சொன்னவளை கண்டு அவனது ஒற்றைப் புருவம் ஏறி இறங்கியது...

"அட்ரஸ்...?"

அவள் முகவரி கூறியதும் அவன் அமைதியாகக் காரை ஓட்டி கொண்டு வர, அவள் ஓரக்கண்ணால் தெருவிளக்கு ஒளியில் ஒளிர்ந்த அவனது உருவத்தை ரசித்தபடி வந்தாள்... அவளுக்கே அவளது மனம் செல்லும் பாதை பிடிபடவில்லை... ஆனால் அவளுக்கு இந்த உணர்வு மிகவும் பிடித்திருந்தது...

அவள் கூறிய முகவரி முன் காரை நிறுத்தியவன் அவளது பெரிய வீட்டை பார்த்தபடி, "உங்கப்பா என்ன

பண்ணுகிறார்...?"

"எஸ்பிஆர் கன்ஸ்ட்ரக்ஷ்சன் வச்சியிருக்காங்க..." என்று இயல்பு போல் கூறியபடி அவள் தனது உடமைகளைக் கையில் அள்ளி கொண்டிருந்தாள்...

அவர்களது கட்டுமான நிறுவனம் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... சித்தார்த்தின் கட்டுமான நிறுவனத்தின் திட்டங்களில் சிலவற்றைச் 'சப் கான்டராக்ட்' பெயரில் செய்யச் சொல்லி இவர்களுக்குக் கொடுப்பது வழக்கமான ஒன்றாயிற்றே...

"இவ்வளவு வசதியானவள் கார் வைத்திருக்கலாம் இல்லையா...?" என்றவனைத் திரும்பி பார்த்து புன்னகைத்தவள்,

"சென்னை ட்ராபிக்குக்கு ஸ்கூட்டி தான் சரி... வளைந்து நெளிந்து உள்ளே புகுந்து போயிரலாம்... என்னோட வேலைக்குக் கார் சரிப்பட்டு வராது... ஸ்கூட்டி தான் வசதி..." என்றவளை கண்டு அவன் கண்ணில் சிறு மெச்சுதல் வந்தது...

"வீட்டுக்கு வாங்களேன் சார்..." என்று காரிலிருந்து இறங்கியபடி கூறியவளை கண்டு,

"இல்லை.. இன்னொரு நாள் வர்றேன்..." என்றபடி அவன் காரை கிளப்ப முயன்ற போது அவளது தந்தை சீனிவாசன் மகளைத் தேடி அங்கு வந்துவிட்டார்... அவனைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டவராய்,

"மிஸ்டர். பிரசன்னா...? அடடே, நீங்களா...? வாங்க, வாங்க..." என்று அவனை வரவேற்றவர்,

"என்ன யமுனா அப்படிப் பார்க்கிற...? பிரசன்னா சார் நம்ம சித்து அங்கிளுக்கு மூத்த மகன் மாதிரி..." என்று மகளுக்கு அவனை அறிமுகப்படுத்தி வைக்க...

அவரது கூற்றைக் கேட்டு பிரசன்னாவின் கண்கள் பனித்தது... அவன் பிறந்தது என்னமோ சாதாரணக்

குடும்பத்தில் தான்... ஆனால் சித்தார்த் என்கிற ஆலமரத்தின் நிழலின் கீழ் அவன் வசிப்பதால் சமுதாயத்தில் அவனுக்கு என்று தனி மதிப்பு தானாக ஏற்பட்டு இருந்தது... அதனால் தானே சித்தார்த்தின் ஒரு வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் தனது மனதில் இருந்த காதலை நொடி நேரம் கூடத் தாமதியாது தூக்கியெறிந்து விட்டான்...

"உள்ளே வாங்க பிரசன்னா..." அவர் அழைக்கவும் அவன் தட்ட முடியாது காரை விட்டிறங்கி வீட்டினுள் சென்றான்...

வீட்டிற்குள் அவன் சென்றதும் யமுனாவின் அன்னை பத்மா, அண்ணன் ராகுல் இருவரும் அவனை இன்முகமாய் வரவேற்றனர்... அவர்களுடன் அவன் புன்னகை முகமாய்ப் பேசி கொண்டிருக்க... யமுனா தானே காபி கலந்து கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்து உபசரித்தாள்...

மகளின் இந்த அதிகப்படியான கவனிப்பு தாய் பத்மாவை உற்று கவனிக்க வைத்தது... வீட்டிற்கு யார் வந்தாலும் வேலைக்காரர்களை வேலை ஏவி கவனிக்கும் மகள் இன்று தானே வலிய சென்று ஒருவனைக் கவனிப்பது என்றால்...? அவர் யோசனையாய் மகளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்...

************************

"உன் கூடக் கொஞ்சம் பேசணும்...?" அறையை விட்டு வெளியேற போன சாத்விகாவை தடுத்து நிறுத்தினான் சந்தோஷ்...

அன்று அவள் கேள்வி கேட்டதில் இருந்து அவன் அவளிடம் சுத்தமாய்ப் பேசுவதில்லை... அவன் உண்மை தெரிந்ததும் குற்றவுணர்வில் ஒதுங்குகிறான் என்று அவள் விரக்தியாய் நினைத்து கொண்டாள்... அவளும் அவனிடம் வலிய சென்று பேச முயற்சிக்கவில்லை... தாமரை இலை தண்ணீர் போன்று அவர்களது வாழ்க்கை பட்டும் படாமல் சென்று கொண்டிருந்தது...

மௌனமாய் ஒன்றும் பேசாது அவனைப் பார்க்காது வேறு எங்கோ பார்த்தபடி நின்றிருந்தவளை ஒரு பார்வை பார்த்தவன், "கண்ணாவை ஸ்கூலில் சேர்க்கிறது பத்தி பேசணும்..." அதைக் கேட்டு அவள் வேகமாய் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"அவனுக்கு இன்னும் உடம்பு தேறலையே..."

"வாத்தியாரம்மா எப்போ டாக்டரானீங்க...?" என்று நக்கலாய் கேட்டவன்,

"எனக்கும் அவன் ஹெல்த் மேல் அக்கறை இருக்கு... இது நமக்குத் தெரிஞ்ச ஸ்கூல் தான்... அதனால் பயமில்லை... அங்கே அவனை நல்லா பார்த்துக்குவாங்க..."

சர்வேஷ் மீதான கணவனது அக்கறை அவளுக்குத் தேனாகத் தித்தித்தது... இதற்காகத் தானே அவளும் போராடுகிறாள்...

"மதியம் அவனோடு தயாராக இரு... நான் வந்து கூட்டிட்டு போகிறேன்..." என்றவன் விலகி சென்றான்...

"தேங்க்ஸ்..." என்று முணுமுணுத்தவளை கண்டு நின்றவன் அவளைக் கூர்ந்து பார்த்தபடி,

"என் மகனை நான் ஸ்கூலில் சேர்ப்பதற்கு நீ எதுக்கு நன்றி சொல்கிற...?" என்று கேட்டவன் அவளைத் திரும்பி பார்க்காது சென்று விட்டான்...

அவனது வார்த்தையில் ஒரு நொடி திகைத்து நின்றவள் பின் சுதாரித்துக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தாள்... வரவேற்பறையில் மாமனாருடன் அமர்ந்து விளையாடி கொண்டிருந்த சர்வேஷை அழைத்துக் கொண்டு அவள் உணவு மேசைக்குச் சென்றாள்... அதற்குள் சந்தோஷ் சாப்பிட அமர்ந்திருந்தான்... அதைக் கண்டவள் அவனுக்கு வேகமாய்த் தட்டு எடுத்து வைத்து பரிமாறினாள்... அங்கிருந்த சங்கமித்ரா இங்கிதம் அறிந்து ஒதுங்கி சென்றாள்...

'இவளை கல்யாணம் பண்ணியதுக்கு இது ஒன்று தான் மிச்சம்...' என்று அவன் எரிச்சலுடன் மனதிற்குள் முணுமுணுத்தபடி உணவை உண்டான்...

சாப்பிட்டு முடித்துக் கை கழுவி கொண்டு மனைவி அருகில் வந்தவன் அவள் சர்வேஷ்க்கு ஊட்டி விடுவதைக் கண்டு,

"ஊரான் பிள்ளைக்கு ஊட்டி விடுவது போல் நீ உன் பிள்ளைக்கு எப்போ ஊட்டி விடப் போகிற...?" என்று அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் மெல்லமாய்க் கேட்க... அதில் அவள் விதிர்த்து போய் அவனைப் பார்த்தாள்...

"ப்ரியா மகன் போல் சாத்விகா மகன் எப்போது வருவான்...?" என்று புருவம் உயர்த்திக் கேள்வி கேட்டவன் ஒன்று அறியாதவன் போல் அவளைக் கடந்து சென்றான்...

அவனது வார்த்தையின் அர்த்தம் புரிந்தவளுக்குக் கோபம் வந்த அதே சமயம் மனதிற்குள் சில்லென்று ஒரு உணர்வு ஊடுருவி சென்றது... சந்தோஷின் மகன் அவளது மணி வயிற்றில்... அவளையும் அறியாது அவளது மேனி சிலிர்த்தது...

"அம்மா..." சர்வேஷின் குரலில் நிகழ்காலம் சுள்ளென்று உறைத்ததில் அவள் தனது கனவை தள்ளி வைத்து விட்டு நனவை கவனிக்க ஆரம்பித்தாள்...

********************

காலையில் எழுந்ததில் இருந்து சம்யுக்தாவின் உடல் அவளுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்தது... ஏனோ சோம்பி போய்ப் படுத்திருக்க வேண்டும் போல் இருந்தது... படுக்கையில் சுருண்டு படுத்திருந்தவளை கவலையுடன் பார்த்தபடி அவள் அருகே வந்தமர்ந்தான் இந்திரஜித்...

"என்ன பண்ணுது பேபி...?"

"ஒண்ணுமில்லை பாவா..." என்றபடி அவள் எழுந்தமர முயன்றாள்...

"இல்லை வேண்டாம்... படு..." என்றவன் அவளை மீண்டும் படுக்க வைத்தான்...

"இப்போ கொஞ்ச நாளா நீ சரியில்லை பேபி... எப்போ பாரு ஏதோ யோசனையில் இருக்கிற... என்ன பிரச்சினை உனக்கு...? எதுவாக இருந்தாலும் என் கிட்ட சொல்லு..."

அவளது தலையைக் கோதி கொடுத்தபடி அவன் பரிவுடன் கேட்டது கண்டு அவளது கண்கள் கரித்தது... அதை அவனுக்குக் காட்டாது கண்களை மூடி கொண்டாள்... சிறிது நேரம் தலையைக் கோதி கொடுத்தவன் அவள் பேசாது இருப்பது கண்டு,

"எனக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு... நான் கட்டாயம் போயாகணும்... நீ ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணாம ரெஸ்ட் எடு..." என்றவன் அவளது நெற்றியில் இதழ் பதித்து விட்டு எழுந்தான்... அதில் விழி மலர்த்தித் தன்னைப் பார்த்தவளை கண்டு லேசான தலையசைப்புடன் விடைப்பெற்றவன் அறையை விட்டு வெளியில் சென்றான்...

அவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவளுக்கு அழ வேண்டும் போலிருக்கத் தலையணையில் முகம் புதைத்து சத்தமின்றி அழுதாள்... வெகுநேரம் அழுதவள் பின் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு எழுந்து சென்று முகத்தைக் கழுவி கொண்டு வந்தவளின் வயிறு பசியில் சத்தமாய்க் கதறியது... அறையை விட்டு வெளியில் வந்தவள் நேரே உணவு மேசையை நோக்கி சென்றாள்... உணவு உண்ண அமர்ந்தவளுக்கு உமட்டி கொண்டு வர வாயை மூடியபடி எழுந்தவள் வாஷ்பேசினை நோக்கி ஓடினாள்... வெறும் வயிற்றில் அவளுக்கு அப்படி ஓங்கரித்துக் கொண்டு வந்தது...

வாயை கழுவி விட்டு அமர்ந்தவளுக்கு அப்போது தான் அது ஞாபகத்தில் வந்தது... வேகமாக நாட்களைக் கணக்கிட்டு பார்த்தவளின் மனம் சந்தோசத்தில் கூச்சலிட்டது... தன்னவனைப் போன்று ஒரு சின்னக் கண்ணனை தனது மணி வயிற்றில் சுமக்கிறோம் என்கிற விசயமே அவளுக்கு

அத்தனை உற்சாகத்தை அளித்தது... அவளது அத்தனை துயரங்களும் காணாமல் போனதில் அவளது முகத்தில் சந்தோசம் மிளிர்ந்தது...

அடுத்தச் சில நிமிடங்களில் உற்சாகமாய்த் தயாராகி வந்தவள் காரை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த மருத்துவமனைக்குச் சென்றாள்... அவள் நினைத்தது போல் அது குழந்தையே தான்... அவள் மன நெகிழ்வுடன் பரிசோதனை முடிவு வந்த காகித துண்டை எடுத்து தனது நெஞ்சோடு அணைத்து கொண்டாள்... அவளது விழிகளில் ஆனந்த கண்ணீர் பெருகி வழிந்தது... அவர்களது உறவை உலகிற்குப் பறைச்சாற்ற புது உறவு ஒன்று வர போகிறது... அந்த நினைவே அவளுக்கு அத்தனை தித்திப்பாக இருந்தது...

வீட்டிற்கு வந்தவள் இந்திரஜித்தின் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்... மதிய உணவிற்காக அவன் வரும் நேரத்தை எதிர்பார்த்து அவள் சந்தோச பரபரப்புடன் காத்திருந்தாள்... அவள் நினைத்தது போல் அவனும் வந்தான்...

"பாவா, நம்ம ரூமுக்கு வாங்களேன்..." என்று சந்தோசத்துடன் அவள் அவனது கையைப் பிடித்திழுக்க...

காலையில் சோர்வுற்று இருந்தவள் இப்போது உற்சாகமாய், சந்தோசமாய் இருப்பது கண்டு அவனும் மனம் மகிழ்ந்தவனாய்,

"ஹேய் பேபி... என்ன விசயம் சொல்லு...?" என்று கேட்டாலும் அவள் இழுத்த இழுப்பிற்கு உடன் செல்ல தவறவில்லை...

அறைக்குள் நுழைந்ததும் அவனது கையை எடுத்து தனது வயிற்றின் மீது வைத்து அவள் ஆர்வத்துடன் அவனது முகத்தினைப் பார்த்தாள்... அவனோ வேறு மாதிரி புரிந்து கொண்டு,

"ஆஹான்... என்னோட பேபி இந்தளவுக்கு முன்னேறிட்டாங்கன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலையே..." என்று கூறியபடி அவன் மந்தகாச புன்னகையுடன் அவளது முகம் நோக்கி குனிந்தான்... அவளும் அவன் மனமறிந்து முழு ஒத்துழைப்பு கொடுத்தாள்...

சிறிது நேரம் கழித்துத் தன்னை விடுவித்தவனின் கையை எடுத்து மீண்டும் தனது வயிற்றின் மீது வைத்து விட்டு அவள் ஆர்வமும், பரபரப்புமாய் அவனது முகத்தினைப் பார்த்தாள்... இப்போது அவனது முகம் யோசனையாய்ச் சுருங்கியது...

"வயிறு வலிக்குதா பேபி...?" என்று கேட்டவனுக்கு அவளது மலர்ந்த முகம் யோசனையை விதைத்தது...

"ஐயோ, மக்கு பாவா..." என்று தலையில் அடித்துக் கொண்டவள்,

"குட்டி இந்திரஜித் வர போறாங்க..." என்று கூறியவள் ஆவலுடன் அவனது முகத்தைப் பார்த்தாள்...

அதைக் கேட்டு அவனது முகம் அத்தனை நேர சந்தோசத்தைத் தொலைத்து ஒரு மாதிரியாய் மாறிப் போனது... அவனது முக மாற்றத்தை கண்டு அவளது முகமும் சந்தோசத்தைத் தொலைத்தது... அவள் நினைத்தது ஒன்று, நடப்பதோ வேறு ஒன்று... விசயம் கேள்விப்பட்டு அவன் சந்தோசத்தில் துள்ளி குதித்து அவளைத் தூக்கி சுற்றுவான் என்று அவள் எதிர்பார்த்தாள்... ஆனால் அவன் இப்படி மௌனமாய் இறுகி போவான் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லையே...

"பாவா..."

அவள் பரிதவிப்புடன் அவனது முகத்தை நாய்க்குட்டி போன்று ஏக்கத்துடன் பார்த்திருந்தாள்... அவளது ஏக்கத்தைக் கூட உணர முடியாதபடி அவனது மனம்

முழுவதும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது... இருக்கும் பிரச்சினையில் இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை... பெருத்த யோசனையுடன் அவன் நின்றிருந்தான்...

"பாவா, நான் குழந்தை உண்டானது உங்களுக்குப் பிடிக்கலையா...?"

அவளது கேள்விக்கு அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை... அதனால் மௌனமாக இருந்தான்...

"எனக்கு அங்கீகாரம் கொடுக்காத மாதிரி குழந்தைக்கும் அங்கீகாரம் கொடுக்க முடியாதுன்னு யோசிக்கிறீங்களா...?"

அவள் கூறியதை கேட்டு அவன் திடுக்கிட்டு போய் அவளைப் பார்த்தான்... அவனது திடுக்கிடல் அவளது மனதில் மிகுந்த வலியை ஏற்படுத்தியது... அப்படி என்றால் அவள் நினைத்தது சரி தான் போலும்... அப்போதும் அவனுக்காக அதைப் பொறுத்து கொண்டவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"எந்தக் காரணம் கொண்டும் நானும், என்னோட குழந்தையும் உங்க கிட்ட அங்கீகாரம் கேட்டு வந்து நிற்க மாட்டோம்... நீங்க கவலைப்படாதீங்க..." என்றாள் ஆறுதலாக...

'நம்ம குழந்தை' என்று கொண்டாட வேண்டிய சிசுவை இப்படி 'என் குழந்தை' என்று சொல்ல வேண்டிய தனது தூரதிர்ஷ்டத்தை எண்ணி அவள் வேதனை கொண்டாள்... விழிகளில் பெருகிய கண்ணீரை சிரமப்பட்டு அடக்கி கொண்டு,

"இன்னும் என்ன யோசிச்சிக்கிட்டு இருக்கீங்க...? சாப்பிட வாங்க..." என்று இயல்பு போல் கூறியவள் அறையை விட்டு வெளியில் சென்று விட்டாள்...

அவனோ யோசித்தபடி அவளைப் பின்தொடர்ந்தான்... ஏதோ பேருக்கு கொறித்து விட்டு எழுந்தவன் கை கழுவி விட்டு அலுவலகம் செல்ல ஆயத்தமானான்... அப்போது

அவள் அவனது கைகளைப் பிடித்துத் தடுத்தாள்... அவன் மௌனமாய் அவளை ஏறிட்டுப் பார்த்தான்... அவள் அவன் அருகே நெருங்கி வந்து,

"எனக்கு நீங்க வேணும் பாவா..." என்றவளை கண்டு அவனது புருவங்கள் உயர்ந்தது... ஆனால் அவனது கை அவளது கையை விலக்கியது...

"ப்ளீஸ், எனக்கு மூட் இல்லை..." என்று கூறியவன் அவளை விட்டு விலகி செல்ல முயன்றான்...

அவள் அவனை விலக விடாது தடுத்தவள் அவனது உயரத்திற்கு எம்பி அவனது இதழில் அழுத்தமாய்த் தனது இதழை பதித்தாள்... அதில் அவன் தான் நிலைக்குலைந்து போனான்... சும்மாவே அவளிடம் சொக்கி போய் இருப்பவன் இப்போது சொக்கு பொடி போட்டது போல் முற்றிலும் மயங்கி போனான்... அடுத்த நொடி அவனது கரங்கள் அவளை அள்ளி கொண்டது... அவள் புன்னகையுடன் அவனது நெஞ்சில் தனது முகத்தைப் புதைத்து கொண்டாள்...

அன்றோடு உலகம் முடிந்து விடுவது போல் தன்னை அடுத்தடுத்து நாடியவளின் விருப்பத்தை அவன் விரும்பியே நிறைவேற்றி வைத்தான்... அன்று மாலை மயங்கி இரவு மலர்ந்த போதும் அவள் அவனை விட்டு ஒரு கணம் கூடப் பிரியவில்லை... அன்று மதியத்திற்கு மேல் அவன் அலுவலகத்திற்குக் கூடப் போகாது தன்னை மறந்தவனாய் அவளுடனேயே இருந்து விட்டான்...

நள்ளிரவு நேரம் இந்திரஜித் அசந்து உறங்கி கொண்டிருந்த போது சம்யுக்தா ஒரு முடிவுடன் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினாள்...

யாரும் உடன் வர முடியாத இடத்திற்கு, நினைத்தாலும் திரும்பி வர முடியாத இடத்திற்கு அந்தப் பேதை பெண் தனது காதலுக்காகத் துணிந்து பயணப்பட்டாள்...!!!

தொடரும்...!!!

சம்யுக்தா தனது மடியில் படுத்து அயர்ந்து உறங்கி கொண்டிருந்த இந்திரஜித்தின் முகத்தைக் காதலோடு பார்த்து கொண்டிருந்தாள்... இப்போது கூட அவளால் அவனை வெறுக்க முடியவில்லை... அவன் மீது கோபம் கொள்ள முடியவில்லை... அவன் ஒரு சூழ்நிலை கைதி என்றே நினைத்தாள்... ஆனால் அந்தச் சூழ்நிலையை உருவாக்கி கொண்டவன் அவன் தான் என்பதை அந்தக் கணம் அவள் அறியவில்லை...

மேலும் மேலும் அவனைக் குற்றவுணர்வில் தவிக்க விடாதிருக்க எண்ணி அவள் அந்த முடிவினை எடுத்தாள்... இதற்கு மேலும் அவனுக்குச் சுமையாக, பாரமாக அவள் இருக்க விரும்பவில்லை... காதலின் பொருட்டு அவனைக் கடமையாய் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை... இதுவரை அவளால் அவன் கஷ்டப்பட்டது போதும்... இதற்கு மேலும் அவனைக் கஷ்டப்படுத்த அவள் விரும்பவில்லை...

குனிந்து அவனது நெற்றியில் அழுத்தமாய் முத்தம் பதித்து நிமிர்ந்தவள் அவனை ஆசையுடன் பார்த்தபடி, "நான் போகிறேன் பாவா... அடுத்த ஜென்மம்ன்னு ஒண்ணு இருந்தால் நாம காதலிச்சுக் கல்யாணம் பண்ணி சந்தோசமாய் வாழணும்... அதுவும் எல்லாவித தகுதிகளும் நிறைந்த பெண்ணாய் நான் இருக்க வேண்டும்... இப்போ அதுக்கான தகுதி எனக்கு இல்லை..." என்று கூறியவளின் விழிகளில் கண்ணீர் வழிந்தது...

தனது மடியிலிருந்த அவனது தலையை மலர் போல் மென்மையாய் மெல்ல எடுத்துத் தலையணையில் வைத்தவள் படுக்கையில் இருந்து எழுந்தாள்... முதல் வேலையாகத் தனது கைப்பையில் இருந்த அந்தப் பொருளை எடுத்துக் கிழித்துக் கழிவறையில் போட்டு நீரை ஊற்றினாள்... அதன் பின்னரே அவள் நிம்மதி அடைந்தாள்... தனக்கு இந்த விசயம் தெரியும் என்பது கூட அவனுக்குத் தெரியாது பார்த்துக் கொள்ள நினைத்தாள்...

எந்த நிலையிலும், யார் முன்னும் அது தானாக இருந்த போதும் கூட அவன் தன் முன் குற்றவாளியாய் தலைக்குனிந்து நிற்க கூடாது என்றே அவள் நினைத்தாள்... இது தான் தன்னலமற்ற காதல் என்பதோ...

குளியலறையை விட்டு சத்தமின்றி வெளியில் வந்தவள் தான் அணிவித்திருந்த நகைகளை ஒவ்வொன்றாய் கழட்ட துவங்கினாள்... அது ஒவ்வொன்றும் அவன் அவளுக்காக வாங்கிக் கொடுத்தது... தன்னுரிமையை விட்டு கொடுத்து விட்டு போகிறவளுக்கு நகையை விட்டு கொடுத்து போவது பெரிதாகத் தோன்றவில்லை...

காதில், கழுத்தில், கைகளில் அணிந்திருந்த நகைகளைக் கழற்றியவளுக்கு அதை எல்லாம் அவனே தனது கைகளால் அவளுக்கு அணிவித்த நினைவு இனிமையாய்... கடைசியாய் அவளது கழுத்தில் கருகமணி மாலை மட்டுமே மிச்சமாய் இருந்தது... அதை இறுக பிடித்துக் கொண்டவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

"என் உயிர் இருக்கும் வரை இதை நான் கழட்ட மாட்டேன்..." என்று அவளது உதடுகள் முணுமுணுத்துக் கொண்டது... அவளுக்கு இருக்கும் ஒரே ஒரு சொந்தம் இது மட்டுமே...

உறங்கும் இந்திரஜித் முன் வந்து நின்றவள் அவனது முகத்தினை இமைக்காது பார்த்து அவனது பிம்பத்தைத் தன்னுள் பத்திரமாகச் சேமித்து வைத்து கொண்டாள்... இனி அவனைக் காணவே கிடைக்காது என்கிற ஏக்கம் தோன்றி அவளது மனதினை அலைக்கழித்தது...

"போகிறேன் பாவா... இனி நானும், என் குழந்தையும் உங்கள் வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டோம்... உங்களைத் தர்மசங்கடத்தில் நிற்க வைக்க மாட்டோம்... இதுவரை உங்களைத் தொந்திரவு பண்ணியதுக்கு என்னை மன்னிச்சிருங்க..."

கண்ணீர் வழிய இரு கைகள் கூப்பி மன்னிப்பு வேண்டியவள் அடுத்தக் கணம் அறையை விட்டு வெளியேறி இருந்தாள்... இனியும் இருந்தால் அவளது

காதல் கொண்ட மனம் ஆசை கொண்டு மாறலாம்... காதல் கௌரவப்படுத்த வேண்டும்... கட்டுப்படுத்தக் கூடாது, அசிங்கப்படுத்தக் கூடாது...

அவள் வீட்டை விட்டு வெளியில் வந்த போது காவலாளி கழிவறை சென்றிருந்தான்... அதனால் அவள் கேள்வி கேட்க யாரும் இல்லாது சுலபமாக வெளிக்கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தாள்... தெருவிளக்கின் ஒளியில் அந்தச் சாலை மிகவும் நிசப்தமாக இருந்தது... அதுவே அவளுக்குச் சிறிது அச்சத்தைக் கொடுத்தது...

வாழும் ஆசை இருப்பவர்கள் தான் அச்சம் கொள்ள வேண்டும்... வாழ்வை துறக்க நினைப்பவர்களுக்கு அச்சம் தேவையில்லாத ஒன்று... ஏனெனில் மரணத்தேவனை விரும்பியே தழுவுவதற்கு நிச்சயம் மன தைரியம் வேண்டும்...

மனதை தேற்றிக் கொண்டு தைரியம் வர பெற்றவளாய் சாலையில் இறங்கி சற்றுத் தள்ளியிருந்த கடலை நோக்கி நடந்தாள்... அந்நேரம் ஆள் அரவமில்லாத கடற்கரை சாலையில் அதிவேகத்தில் பறந்து வந்து கொண்டிருந்த கார் ஒன்று அவள் வருவதைக் கவனிக்கவில்லை... கண்ணிமைக்கும் நேரத்தில் அவளைத் தூக்கியெறிந்து விட்டு அது நிற்காது சென்று விட்டது...

சுயநினைவின்றிக் கீழே விழுந்த அந்தக் கணத்திலும் அவளது தாய்மை உணர்வு உந்தியதில் அவளது கால்கள் குறுக்கி கொண்டு வயிற்றில் இருந்த சிசுவை பாதுகாப்பாய் அரவணைத்துக் கொண்டது... திடுமென ஏற்பட்ட அதிர்வில் முதலில் பயந்து போன சிசு பின் அன்னையின் அரவணைப்பில் சுகமாய் உறக்கம் கொண்டது... அது நிரந்தர உறக்கமா...? இல்லையா...? என்பதை அதன் அன்னையின் ஆழ் உறக்கம் தான் முடிவு செய்ய வேண்டும்...

கொஞ்சம் நஞ்சம் மிச்சமிருந்த அவளது நினைவு ஒரேடியாகத் தப்ப முயன்ற அந்தக் கணம் கூட அவளது நினைவில் தன்னவனின் அழகிய திருமுகமே...

"சூஸ்த்துந்நாநு அன்னி த்ர்டிலோ நுவ்வே..." (காணும் யாவிலும் நீயே) என்று அவளது இதழ்கள் மெல்ல முணுமுணுத்தது... அத்தோடு அவளது நினைவும் நின்று போனது...

காவலாளி மீண்டும் தனது இடத்திற்கு வந்த போது கார் ஒன்று யாரையோ அடித்துப் போட்டு விட்டு செல்வதைக் கண்டு பதறி போய் அங்கு ஓடி வந்தார்... யாரோ என்று நினைத்துக் கொண்டு வந்தவருக்கு அது தன்னுடைய எஜமானியம்மாள் என்று தெரிந்ததும் செயலிழந்து போனார்... உடனே தனது அலைப்பேசியை எடுத்து முதலில் ஆம்புலன்சுக்கு அழைத்துச் சொல்லியவர் அதற்குப் பின்னரே இந்திரஜித்திற்கு அழைத்தார்... தனது முதலாளியம்மாவை தனியே விட்டு விட்டு செல்ல அவருக்கு மனம் வரவில்லை...

விடாது அலறிய அலைப்பேசியைத் தூக்க கலக்கத்தில் சலிப்புடன் எடுத்துக் காதில் வைத்த இந்திரஜித் மறுமுனையில் கேட்ட செய்தியை கேட்டுத் தூக்கம் கலைந்து அதிர்ந்து போனவனாய் எழுந்தவன் பக்கத்து படுக்கையைப் பார்த்தான்... அங்குச் சம்யுக்தா இல்லை என்றதும் கையில் கிடைத்த சட்டையை எடுத்து மாட்டியபடி புயலென அறையை விட்டு வெளியில் விரைந்தான்...

விபத்து நடந்த பகுதிக்கு வரும் வரை அவனது மனம் காவலாளி சொன்னதை நம்பவில்லை... அவள் வீட்டினுள் வேறு எங்காவது பாதுகாப்பாக இருப்பாள் என்றே அவனது மனம் நம்பியது... ஆனாலும் அவனது கால்கள் பயத்துடன் வெளியில் விரைந்தது... அவன் அங்குச் செல்வதற்கும் ஆம்புலன்ஸ் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது...

அங்குக் கண்ட காட்சியில் அவன் அப்படியே உறைந்து போய் நின்றிருந்தான்... இரும்பு போன்று மனவுறுதி கொண்ட ஆண்மகன் அவனையும் மனம் கலங்க செய்து விட்டது அந்தக் காட்சி... அடுத்த நொடி அவன்,

"பேபி..." என்று கதறியபடி அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்து அவளைத் தனது மடியில் தாங்கி கொண்டான்...

எதற்கும் கலங்காத அவனையும் கலங்க செய்துவிட்டாள் அவள் தனது களங்கமில்லாத காதலில்... அவளது தலையில் அடிப்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது... அவளது முகம், கை கால்களில் அத்தனை சிராய்ப்பு ஏற்பட்டு இருந்தது... அந்த நிலையிலும் அவள் தனது கால்களைக் குறுக்கி கொண்டு தனது மகவை காப்பாற்றியபடி இருந்ததைக் கண்டு அவன் உடைந்து போனான்...

"பேபி..." என்று அவளை அணைத்துக் கொண்டு அவன் கதறியழுதான்...

அவனது மௌனத்தின் பின்னால் இப்படியொரு அசம்பாவிதம் நிகழ கூடும் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லையே... இப்படித் தெரிந்திருந்தால் அவன் தனது மௌனத்தை உடைத்திருப்பானோ...!

"சார், மேடமை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போகணும்..." காவலாளி அவனிடம் நிலைமையின் தீவிரத்தை எடுத்துரைத்தான்...

அவளைக் காப்பாற்ற வேண்டும் என்கிற ஒரே நோக்கில் அவன் அவளை விட்டு விலகினான்... அவளை ஆம்புலன்சில் ஏற்றியதும் தானும் தனது அந்தஸ்தை மறந்தவனாய் உடன் ஏறியமர்ந்தான்...

மருத்துவமனையில் அவளைச் சேர்த்து சிகிச்சைக்கு அனுப்பிய பிறகும் அவன் கவலையுடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்... அவனையும் அறியாது அவனது விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டியது... அப்போது தான் அவன் அதை உணர்ந்தவனாய் திடுக்கிட்டுப் போய்த் தனது கண்ணீரை தொட்டுப் பார்த்தான்...

கற்பாறையில் கசிந்த ஈரத்தில் அவனுக்குப் பல உண்மைகள் மெல்ல புரிபடத் துவங்கியது... அவனது குழப்பத்திற்கும், யோசனைகளுக்கும் ஒரு தெளிவான விடை கிடைத்தது... புத்தர் போதி மரத்தடியில் ஞானம்

அடைந்தது போல் அவன் தன்னவளின் உயிர் போராட்டத்தில் ஞானம் பெற்றான்...

துன்பமும், இன்பமுமாய் அவளின் நலனுக்காக மனதிற்குள் பிரார்த்தித்தபடி அவன் ஐசியூவின் கதவை பார்த்தபடி அமர்ந்திருந்தான்... அன்றைய இரவு பொழுது மிகவும் வேதனையாய்க் கழிந்தது அவனுக்கு...

முதன்முறையாகக் காத்திருப்பதன் வலியை அவன் அந்தக் கணம் உணர்ந்தான்... இப்போது அவனால் அவளின் மனவலியை புரிந்து கொள்ள முடிந்தது... அவளது ஐந்து வருட காத்திருப்பின் தவிப்பையும், காதலையும் அவனால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது...

அந்நேரம் செவிலிப்பெண் அவனிடம் சம்யுக்தா அணிந்திருந்ததாகக் கூறி கருகமணி மாலையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார்... கைகள் நடுங்க அதை வாங்கியவனின் மனதினை போல் அந்தக் கருகமணி மாலையும் அவனது கையில் கனத்தது...

**********************

"சார்... நீங்க ஃப்ரீயா...?"

புதிதாகக் கட்டி கொண்டு இருக்கும் மருத்துவமனை கட்டிட வேலையை மேற்பார்வை பார்க்க வந்திருந்த பிரசன்னாவை பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்டு வைத்தாள் யமுனா... அதைக் கேட்டு அவன் அவளைத் திரும்பி பார்த்து முறைத்தான்...

"பார்த்தா எப்படித் தெரியுது...?" என்றான் அவன் நக்கலான குரலில்...

"பிசியா இருக்கீங்கன்னு தெரியுது..." அவனது நக்கலை கண்டு கொள்ளாது புன்னகையுடன் கூறியவளை கண்டு அவனுள் சம்யுக்தாவின் ஞாபகம்... அவளும் இவளை போன்று வெகுளியான பெண் தான்...

அந்தக் கணம் அவன் சற்று அதிர்வுடன் அப்படியே நின்றுவிட்டான்... சம்யுக்தாவுடன் இவளை ஏன் தன் மனம் இணைத்துப் பார்க்கிறது என்று தெரியாது அவன் திகைத்தான்... சம்யுக்தாவின் நினைவும் தவறு, அது போல் இவளின் நினைவும் தவறு என்று தனது தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டான் அவன்...

"ஏன்...? என்னாச்சு...?" என்று அவனது செயலில் அவள் புரியாது கேட்டாள்...

"ஒண்ணுமில்லை... நீங்க வந்த விசயத்தைச் சொல்லுங்க..." என்றபடி அவன் கட்டிடத்தின் நிழலில் வந்து நின்றான்... அவளும் அவன் பின்னேயே வந்தாள்...

பிரசன்னா அவளே சொல்லட்டும் என்பது போல் தனது இரு கைகளைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்தான்...

"நான்..." என்று தயங்கியவளை கண்டு,

"நீங்க...?" என்று அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்...

"நான் உங்க அப்பா, அம்மாவுக்கு மருமகளா வரணும்... உங்க தங்கைகளுக்கு அண்ணியா வரணும்..."

அவள் கூறிய வார்த்தைகள் அவனுள் கோபத்தை ஏற்படுத்திய போதும் அவள் கூறியவிதம் அவனைப் புன்னகைக்க வைத்தது...

"இதை ஏன் நீங்க என் கிட்ட சொல்றீங்க...? இதை நீங்க அவங்க கிட்டயில்ல கேட்கணும்..." என்று கூறிவிட்டு சிரித்தவனைக் கண்டு அவள் 'ஙே' என்று விழித்தாள்...

"உளறாம போய்ப் பொழைப்பை பாருங்க..." என்று கை நீட்டி அவளைப் போகச் சொல்லியவன் தன்னுடைய வேலைகளைப் பார்க்க சென்றுவிட்டான்... அவளோ அவனையே பார்த்து கொண்டிருந்தவள் பின் மனதில் எடுத்த தீர்மானத்துடன் அங்கிருந்து கிளம்பி சென்றாள்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் பிரசன்னாவின் வீட்டில் இருந்து அழைப்பு வந்தது... அவனது பெற்றோர் தான் பேசினர்...

"டேய் எங்க கிட்ட கூடச் சொல்லாம மறச்சிட்ட பார்த்தியா...?" என்று கேட்டவர்களின் குரலில் இருந்த குதூகலம் அவனுள் குழப்பத்தை விளைவித்தது... அதற்குள் அவனது சின்னத் தங்கை அலைப்பேசியைப் பறித்து,

"அண்ணா... அந்நியன் உனக்குள் இப்படியொரு ரெமோவா... சான்சே இல்லைண்ணா..." என்று சிலாகிக்க...

"என் கிட்ட கொடுடி..." என்று அலைப்பேசியைப் பிடுங்கினாள் அவனது இரண்டாவது தங்கை... குழந்தை உண்டாகி இருக்கும் அவள் பிரசவத்திற்காக இங்கு வந்திருக்கிறாள்...

"அண்ணா, கல்யாணம் வேண்டாம் வேண்டாம்ன்னு சொல்லிட்டு இப்போ கல்யாணத்துக்கு ரெடியாகிட்ட... சூப்பர்ண்ணா..." என்று அவள் வேறு தன் பங்கிற்கு அவனைப் போட்டு குழப்பினாள்...

"எல்லோரும் என்ன சொல்றீங்க...? எனக்கு ஒண்ணும் புரியலை..." என்று அவன் கேட்கும் போதே அழைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது...

அவன் அலைப்பேசியை எரிச்சலுடன் முறைத்துக் கொண்டிருக்கும் போது அவனது மூத்த தங்கை கணவன் வீட்டில் இருந்து அழைத்தாள்...

"நல்லாயிருக்கியா...?" என்று அவன் கேட்டு முடிக்கும் முன்,

"நீ இருக்கும் போது எங்களுக்கு என்ன குறை அண்ணா... இப்பாவாவது உன் வாழ்க்கையைப் பத்தி யோசிக்க ஆரம்பிச்சியே... ரொம்பச் சந்தோசம்ண்ணா... அண்ணி சூப்பரா இருக்காங்க..."

"அண்ணியா...?" அவன் யோசித்தபடி தனது நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"யமுனா அண்ணியைத் தான் சொல்கிறேன்... அவங்களைப் போல் பெயரும் ரொம்ப நல்லாயிருக்கு..." வாட்ஸ்அப்பில் புகைப்படத்தைப் பார்த்து விட்டு அவள் அப்படிக் கூறினாள்...

'யமுனா' என்கிற பெயரில் பல்லை கடித்தவன் அழைப்பை துண்டித்து விட்டு கோபத்துடன் வீட்டிற்கு விரைந்தான்... அவன் நினைத்தது போல் யமுனா அங்குத் தான் இருந்தாள்... அவனது பெற்றோர், தங்கைகளுடன் அமர்ந்து அவள் சிரித்துப் பேசி கொண்டிருப்பதைக் கண்டு முகம் இறுகி போனவனாய் அவன் வீட்டினுள் நுழைந்தான்... அவன் விளையாட்டாகக் கூறியதை அப்படியே செயல்படுத்திய அவளைக் கண்டு அவனுக்கு ஆத்திரம் வந்தது...

அவனைக் கண்டதும் தங்கைகள் இருவரும் 'அண்ணா' என்று ஆர்ப்பரித்தனர்... அவனுக்கு அது எல்லாம் காதில் விழவில்லை... அவன் கோபத்துடன் யமுனாவை முறைத்து பார்த்துக் கொண்டிருந்தான்... அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அவளை ஓங்கி ஒரு அறை விட வேண்டும் போலிருந்தது... ஆனால் தங்கைகள் முன் அப்படி அவளை அடித்துப் பெண்களைக் கேவலப்படுத்த அவன் விரும்பவில்லை... அதனால் அவன் கையைக் கட்டி கொண்டு அமைதி காத்தான்...

"அண்ணாவுக்கு அண்ணியைத் தவிர வேறு யாரும் கண்ணுக்கு தெரியலை..." என்று சின்னத் தங்கை குறும்பாய் உரைக்க... அதில் அவன் தன்னினைவு கலைந்தவன் நிமிர்ந்து பார்த்தான்... யமுனா அவளது பேச்சில் முகம் சிவந்து போனாள்... அதைக் கண்டு பிரசன்னா மனதிற்குள் நொந்து போனான்...

தங்கை கூறிய கூற்றுக்கு அவன் ஆமோதிக்கவும் இல்லை... எதிர்க்கவும் இல்லை... அமைதியாக இருந்தவன் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காது தனது அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டான்... யமுனாவை என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... அப்போது அவனது

எண்ணத்தின் நாயகியே கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தாள்... அவளைக் கண்டதும் அவனுக்கு எங்கிருந்து தான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ... அவள் அருகில் விரைந்து வந்தவன் அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்...

"நீயெல்லாம் ஒரு டாக்டர்... அங்கே அத்தனை பேஷண்ட் வேதனையுடன் உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கும் போது உனக்கு இங்கே சந்தோசம் வேண்டி கிடக்கு... கொஞ்சமும் பொறுப்பு இல்லை... என்ன மனுசி நீ..." என்று அவன் எரிச்சலில் படபடத்தான்... அவன் கோபத்தில் மரியாதை பன்மையைக் கைவிட்டான்...

"நான் இன்னைக்கு லீவு..." என்றாள் அவள் மெதுவே புன்னகை மாறாது... அவன் இடியென அடித்ததில் வலியில் அவளது கண்ணில் கண்ணீர் துளிர்த்த போதும் அவளது புன்னகை மாறவில்லை...

"இப்படிக் கூத்தடிக்கிறதுக்காக லீவு போட்டுட்டியா...?"

"இல்லை... இன்னைக்கு எனக்குப் பிறந்தநாள்..."

மனிதாபிமானம் கொண்ட அவன் அவளது வார்த்தையில் சிறிது தடுமாறி போய்விட்டான்... பிறந்தநாள் அதுவுமாகத் தான் அவளை அடித்தது அவனுள் குற்றவுணர்ச்சியை அதிகரித்தது...

" சாரி..." என்று தயங்காது அவளிடம் மன்னிப்பு கேட்டவன்,

"ஹேப்பி பேர்த்டே..." என்று அவளை வாழ்த்தினான்... அடியும் கொடுத்து விட்டு அன்பாக அரவணைக்கவும் அவனால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்தவளின் முகம் சூர்யகாந்தி பூவாய் மலர்ந்து போனது...

"தேங்க்ஸ், தேங்க்ஸ்..." என்று மகிழ்ச்சியில் கூவியவள்,

"பரவாயில்லை... அடிக்கிறதா இருந்தாலும் தனியா யாருக்கும் தெரியாம தானே அடிச்சிருக்கீங்க... இது தான்

நீங்க... உங்களால் யாரையும் காயப்படுத்த முடியாது... என்னையும் சேர்த்து..."

"கொஞ்சம் இடம் கொடுத்தால் போதுமே... முதலில் நீ இடத்தைக் காலி பண்ணு தாயே..." என்று அவன் கோபத்துடன் அறை வாயிலை நோக்கி கை காட்ட....

"இப்போ போகிறேன்... ஆனா அப்பப்போ வருவேன்... பிறகு நிரந்தரமா வருவேன்..." அவனது உதாசீனத்தைக் கண்டு கொள்ளாது கூறியவளின் குரலில் இருந்தது எல்லாம் காதல், காதல், காதல் மட்டுமே...

அவன் திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தான்... முற்றுப்புள்ளி வைத்து விட்டதாய் எண்ணியிருந்த அத்தியாயத்திற்கு அவள் தொடர் புள்ளி வைத்து விட்டு செல்வதைக் கண்டு அவன் செய்வதறியாது திகைத்து நின்றான்...

அதே நேரம் தனது ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்த யமுனாவின் காதுகளில் சித்தார்த்தின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது...

"பிரசன்னா இப்போது மிகுந்த மனவேதனையில் இருக்கிறான்... உன் காதல் அவனது காயங்களுக்கு மருந்தாக இருக்கும் என்றால் ரொம்பச் சந்தோசம்... இதே இது உன்னுடைய காதல் அவனை மேலும் வேதனைப்படுத்தியது என்றால்...? தயவுசெய்து அவனை விட்டு விடும்மா... உங்க ரெண்டு பேர் நன்மைக்காகத் தான் இதை நான் சொல்கிறேன்..."

சித்தார்த்தின் வார்த்தையின் பின்னே இருந்த பிரசன்னாவின் மனவலியை அவள் நன்கு உணர்ந்து கொண்டாள்...

"பிரசன்னா உங்களுடைய இறந்தகாலம் எனக்குத் தேவையில்லை... ஆனால் உங்களுடைய நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமுமாய் நானிருக்க ஆசைப்படுகிறேன்..."

என்று முணுமுணுத்து கொண்டவளின் வார்த்தையில் அத்தனை உறுதி இருந்தது...

*****************

சர்வேஷை பள்ளியில் விட்டு விட்டுச் சந்தோஷ், சாத்விகா இருவரும் மட்டும் காரில் வந்து கொண்டிருந்தனர்... இருவரும் ஒருவருக்கு ஒருவர் பார்த்து கொள்ளவும் இல்லை, பேசி கொள்ளவும் இல்லை... அவள் வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வர... அவன் தனக்குள் யோசித்தபடி வந்தான்...

வீடு வந்ததும் சாத்விகா இறங்கி உள்ளே சென்று விட அவன் காரை நிறுத்தி விட்டு அவளைப் பின்தொடர்ந்தான்... அறைக்குள் நுழைந்ததும் அவன் கதவை இறுக மூடி தாழ்ப்பாள் போட்டான்... அந்தச் சத்தத்தில் திரும்பி பார்த்த சாத்விகாவின் விழிகள் இரண்டும் விரிந்தது அச்சத்தில்...

அதைக் கண்டு கொள்ளாது அவன் நிதான நடையுடன் அவளை நோக்கி வந்தான்... அவளை நெருங்கி வந்ததும் நின்றவன்,

"இன்னும் எத்தனை நாளுக்கு இப்படியே இருப்பதாய் உத்தேசம்...?"

அவனது கேள்வியின் அர்த்தம் புரியாதவளாய் அவள் அவனைப் பார்த்தாள்... அவன் அவளது கழுத்தில் இருந்த தாலியை தூக்கி காண்பித்து,

"இதற்கான உரிமையைக் கொடுப்பது எப்போதுன்னு கேட்டேன்...?"

இப்போது அர்த்தம் புரிந்தவளாய் தாலியை வெடுக்கென்று பிடுங்கியவள், "எச்சில் இலையில் உண்ணும் அளவுக்கு நான் ஒன்றும் தரம் குறைந்து போகலை..." என்றாள் அவள் ஆத்திரத்துடன்...

அவளது பேச்சு கேட்டுக் கோபம் கொள்ளாது மேலும் அவளை நெருங்கி நின்றவன், "அப்படி என்றால் இன்னமும்

ஏன் என் கூட ஒரே அறையில் இருக்கிற...? இப்போ என் மனைவிங்கிற போஸ்ட்டை தவிர்த்து என் மகனுக்கு அம்மா என்கிற எக்ஸ்ட்ரா போஸ்ட் வேற... இதுக்கு எல்லாம் என்ன அர்த்தம் அம்மு...?"

அவனது அருகாமையில் அவளது இதயம் வேகமாய்த் துடித்தது... எங்கே தன் மனம் அவன் வசம் சென்று விடுமோ என்று அவள் பயத்துடன் நின்றிருந்தாள்...

"என்ன அர்த்தம்ன்னு நான் சொல்லவா...?" என்றவன் அவள் முகம் நோக்கி குனிந்து,

"இன்னும் உன் மனசில் என் மீதான காதல் இருக்கிறது... அப்படித் தானே..."

அவனது கண்டுபிடிப்பை நினைத்து அந்த நிலையிலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது போலும்... புன்னகையுடன் அவனைத் தள்ளி விட்டு விலகி நின்றவள்,

"ரொம்பப் பெரிய கண்டுபிடிப்பு தான்..." என்றாள் நக்கலாய்...

அவளது மனநிலையை உணர்ந்தவனாய் பின்னோடு வந்து அவளை அணைத்து கொண்டவன் அவளது காதருகில் குனிந்து, "இப்போ தானே எனக்குத் தெரிகிறது..." என்றான் முணுமுணுப்பாய்...

அவனது அணைப்பில் அவளது உள்ளம் உருகியது... அவனின் கைகளில் துவண்டு அடைக்கலமாகத் துடித்தது அவளது காதல் நெஞ்சம்... அதை உணர்ந்தவனாய் அவன் அவளது முகத்தைத் தன் பக்கமாய்த் திருப்பியவன் அவளது இதழ் நோக்கி குனிந்தான்... அதைக் கண்டு அவளது விழிகள் தாமாக மூடி கொண்டது... சிறிது நேரம் கழித்தும் அவன் ஒன்றும் செய்யாததைக் கண்டு அவள் மெல்ல தனது விழிகளைத் திறந்தாள்... அவனோ அவளைக் குறும்பாய் பார்த்துக் கொண்டிருந்தான்... அதைக் கண்டு அவளுக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது... அவனது விழிகளை நேரே சந்திக்க முடியாது நாணத்துடன் தனது

விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்... அதைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை பெரிதாய் விரிந்தது...

"நாளைக்கு நாம ஒரு இடத்துக்குப் போகிறோம்... அதுக்கு அப்புறம் இதற்கு நீ தயாராக இரு..." என்றவனின் பார்வை அவளது இதழில் அழுத்தமாய்ப் பதிந்தது...

அவன் முதலில் கூறியதற்கு அர்த்தம் புரியவில்லை என்றாலும் இரண்டாவதாகக் கூறியதற்கு அர்த்தம் புரிந்தவளின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

அந்தக் கணம் சந்தோஷின் மனதில் தனது மனைவியவளின் காதலுக்கு நியாயம் செய்துவிட வேண்டும் என்கிற உறுதி பிறந்தது...

************************

"சார்... உங்க வொய்ப் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிட்டாங்க... குழந்தைக்கும் எந்த ஆபத்தும் இல்லை... தாயும், சேயும் நலம்..." என்று மருத்துவர் அவனிடம் கூற... அவர் அதைக் கூறும் போது காலை பொழுது கடந்திருந்தது...

அவரது 'மனைவி' மற்றும் 'குழந்தை' என்ற வார்த்தைகளில் அவனது தலை தானாகக் குனிந்தது... இந்த அங்கீகாரத்தை அவன் இதுவரை அவளுக்குக் கொடுக்கவில்லையே... அவனது மனம் குற்றவுணர்ச்சியில் தவித்தது... இந்த இடைப்பட்ட காலத்தில் அவளது காதலில் காணாமல் போயிருந்த குற்றவுணர்வு மீண்டும் அவனை ஆக்கிரமித்துக் கொண்டது...

"நான் போய்ப் பார்க்கலாமா...?" மிகுந்த தயக்கத்துடன் அவன் கேட்டான்...

"தாராளமா..." என்று கூறிவிட்டு அவர் செல்ல...

அவன் ஐசியூவிற்குள் மெல்ல நுழைந்தான்... பயத்தில் அவனது நெஞ்சம் அதிர்ந்தது... உடலில் ஆங்காங்கே கட்டுக்களுடன் கண்களை மூடியபடி படுத்திருந்த

சம்யுக்தாவை காண காண அவனது விழிகள் கலங்கியது... அவள் அருகே சென்றவன் முதல் வேலையாகத் தனது கைகளில் இருந்த கருகமணி மாலையை அவளது கழுத்தில் அணிவித்தான்...

அன்று அவன் அணிவிக்கும் போது அவளது விழிகளில் தெரிந்த திகைப்பு, மகிழ்ச்சி எல்லாம் இப்போது அவனது மனக்கண்ணில் வலம் வந்தது... ஆனால் இன்றோ உணர்வற்றுக் கண்கள் மூடி அமைதியாகப் படுத்திருந்தவளை கண்டு அவனால் மனம் தாங்க முடியவில்லை... அவளது முகத்தினைத் தனது இரு கைகளில் தாங்கியவன் அவளைப் பார்த்தபடி,

"எனக்கு இருக்கிற ஒரே ஆறுதல் நீ மட்டும் தான்டி... நீயும் என்னை விட்டுட்டு போயிடாதே... நீயும் போயிட்டேன்னா நான் செத்து போயிருவேன் பேபி... என்னுடைய பலம், பலவீனம் எல்லாம் நீ தான், நீ மட்டும் தான் யுகிம்மா..." என்று கூறியவன் அவளது முகம் முழுவதும் தனது இதழ்களால் அழுத்தமாய் முத்திரை பதித்தபடி,

"ஐ லவ் யூ பேபி..." என்று விடாது அரற்றினான்...

உணர்வு இருந்த போது அவள் கேட்க ஆசைப்பட்ட வார்த்தைகள்... இப்போது அவளது உணர்வுகள் மரணித்த பிறகு அவன் கூறுகிறான்... காலம் கடந்த ஞானம்...

அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் அவன் அவளது முகத்தோடு தனது முகத்தை வைத்து வாய் விட்டுச் சத்தம் போட்டு அழுதான்...

"ஏன்டி என்னை விட்டு போக முடிவு பண்ணின...? நான் தப்பு பண்ணினப்போ எல்லாம் என் கூட இருந்தவள், இப்போ நான் திருந்திக்கிட்டு வரும் வேளையில் என்னை விட்டு பிரிய ஏன்டி நினைச்ச...? நீ இல்லாது போனால் உன் பாவா எப்படி உயிரோடு இருப்பான்னு நீ கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தியா...? உன்னை மட்டும் நினைச்சு பார்த்த நீ என்னைக் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலையே பேபி..."

அவன் வடித்த கண்ணீர் அவளது முகத்தில் பட்டு கீழே வழிந்தது... அவள் வீட்டை விட்டு வெளியேறியதே அவனுக்காகத் தான் என்பதை அவன் அந்தக் கணம் அறியவில்லை... தகுதியில்லாத தனக்காக அவன் மனதிற்குள் போராடுவதைக் கண்டு காண சகிக்காது தான் அவள் அவனை விட்டு விலகி போக முடிவு செய்தது... தனது காதலால் அவனை மிகவும் கட்டுப்படுத்துகிறோமோ என்று மனம் மறுகி தான் அவள் அவனை விட்டு விலகி சென்றது... இது எதையும் அவன் அறிந்திருக்கவில்லை... அவளது ஒவ்வொரு செயலுக்குப் பின்னும் அவனது நலன் இருக்கிறது என்பதினை அவன் உணரவில்லை...

இந்திரஜித் தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்தவன், "உனக்கான அங்கீகாரம் தானே உனக்கு வேணும்... கட்டாயம் நான் அதைத் தருகிறேன்... உனக்கும், நம் குழந்தைக்கும் இந்தச் சமூகத்தில் என்ன மரியாதை கிடைக்கணுமோ அதைக் கிடைக்கச் செய்கிறேன்... உனக்காக நான் எதை வேண்டுமானாலும் செய்கிறேன்... ஆனால் நீ திரும்ப என்னிடம் வந்து விடு பேபி... நீ எனக்கு வேண்டும்... என் வாழ்நாள் முழுவதும்..." என்று அவன் விழிகள் கசிய அவளிடம் மன்றாடினான்...

அவளின் மரணப் போராட்டத்தின் முன் தந்தை மீதான பழிவாங்கும் வெறி கூட அவனுக்குப் பின்னுக்குப் போய்விட்டது...

அன்று முழுவதும் அவன் அவள் கூடவே இருந்து கவனித்துக் கொண்டான்... மறுநாள் அவளை அறைக்கு மாற்றினர்... இன்னமும் மயக்கம் தெளியாதவளை கண்டு கவலை கொண்டவனாய் அவளுக்குப் போர்வையைப் போர்த்தி விட்டு அவன் திரும்பிய போது சித்தார்த், பிரகதீஸ்வரி, சூர்யா, ஜெகதீஸ்வரி நால்வரும் புயல் போல் அறைக்குள் நுழைந்தனர்...

மற்ற மூவரும் கவலையுடன் சம்யுக்தாவை அருகில் செல்ல... சித்தார்த் மட்டும் மகனின் அருகில் வந்து

ஆவேசமாய் அவனது சட்டையைப் பிடித்தான்... ஆத்திரத்தில் அவனது முகம் சிவந்து போயிருந்தது...

"இப்படிச் சுயநினைவு இல்லாமல் படுக்க வைப்பதற்காகத் தானா அவளை நீ அவ்வளவு அவசரமாக உன்னுடன் கூட்டிட்டு வந்தாய்...? இது தான் உன்னை நம்பி வந்த பெண்ணை நீ பார்த்துக் கொள்ளும் லட்சணமா...? ச்சீ, நீ எல்லாம் என்ன மனுசன்...? இனி ஒரு நொடி கூட அவளை உன்னிடம் விட்டு வைக்க முடியாது... இனியும் விட்டு வைத்தால் நீ அவளை உயிரோடு கொன்று விடுவாயாடா கொலைக்கார பாவி..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அந்த நல்ல மாமனார்...

"இதுக்கு எல்லாம் காரணம் நீங்க தான்... நீங்க மட்டும் தான்... நான் என்ன ஆசைப்பட்டேன்... எல்லோரையும் போல் சந்தோசமாய் வாழணும்ன்னு தானே... ஆனால் என் சந்தோசத்தைக் குழி தோண்டி புதைத்தவர் நீங்க... இப்போ வந்து பெரிய நல்லவன் மாதிரி வேசம் போடுறீங்க... உங்களால் என் சந்தோசத்தை, நிம்மதியை திருப்பிக் கொடுக்க முடியுமா...? சொல்லுங்க சொல்லுங்க..." என்று பதிலுக்குத் தந்தையின் சட்டையைப் பிடித்தபடி கத்திய இந்திரஜித்தை கண்டு சித்தார்த்தின் கைகள் தானாகத் தளர்ந்தது...

அதே நேரம் மயக்கம் தெளிந்த சம்யுக்தா இந்திரஜித்தின் ஒவ்வொரு வார்த்தைகளையும் அட்சரம் பிசகாது கேட்டு விட்டாள்... அவளது காதல் கொண்ட இதயம் சுக்கு நூறாய் உடைந்து சிதறியது தன்னவனின் வார்த்தைகளில்... அவனது சந்தோசம், நிம்மதி எதுவென்று அறிந்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

காதல் கொண்டு காலடியில் சரணடைந்தவளுக்குக் காதலை பரிசளிக்க அவளது கள்வனுக்கு மனம் இல்லாது போனது ஏனோ...!!!

தொடரும்...!!!

"இந்தர்..."

பிரகதீஸ்வரியின் குரல் அடக்கப்பட்ட கோபத்தில் ஒலித்து மகனை சிறிது கட்டுப்படுத்தியது...

"யாரை பார்த்து என்ன கேள்வி கேட்கிற? அவர் உன் அப்பாங்கிற நினைப்பு உனக்குக் கொஞ்சமாவது இருக்கா...? உன்னை இப்படித் தான் நான் வளர்த்தேனா...? அவர் உன் அப்பா... அவர் கிட்ட நீ இப்படிப் பேசுறது, நடந்துகிறது எல்லாமே ரொம்பத் தப்பு இந்தர்..."

"ஆமாம், நான் பேசுறது, நடந்துக்கிறது எல்லாமே தப்பு தான்... ஆனால் அதுக்கு எல்லாம் காரணம் உங்க புருசன் பண்ணின பெரிய தப்பு... அது என்னன்னு அவர் கிட்டேயே கேளுங்க..."

பிரகதீஸ்வரி கணவனைத் திரும்பி பார்த்தாள்... சித்தார்த் நேர்ப்பார்வையாய் மனைவியவளை சந்திக்க முடியாது தலைக்குனிந்தான்... அதில் வேதனையுற்ற பிரகதீஸ்வரி அவன் அருகில் வந்து அவனது முகத்தை நிமிர்த்தி,

"யாருக்காகவும், எதுக்காகவும் நீங்க தலைக்குனிய கூடாது... யார் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் உங்களை நம்பறேன்ங்க... நீங்க எது செஞ்சாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும்... நேர்மை இருக்கும்... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

தனது மனைவியவளின் வார்த்தையில் சித்தார்த் என்கிற அஞ்சா நெஞ்சம் கொண்ட சிங்கம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு மகனை தெனாவெட்டாய் பார்த்தான்... தகப்பனின் பார்வையில் மகனின் இரத்த அழுத்தம் அதிகரித்தது...

"அம்மா, அவரை நம்பாதீங்க... அவரைப் போல் ஒரு மோசக்காரனை இதுவரை நான் பார்த்தது இல்லை... அவர்

என் வாழ்க்கையைச் சூன்யமாக்கி நயவஞ்சகன்..." என்று மகன் கொதித்தான்...

"இந்தர், எது பேசுவதாக இருந்தாலும் யோசித்துப் பேசு..." எங்கே மனைவி பேசினால் மகனை கடுமையாகச் சாடிவிடுவாளோ என்று பயந்து சித்தார்த் முந்தி கொண்டான்... அந்த நிலையிலும் மகனை காக்க நினைத்தான் அந்த நல்ல தகப்பன்...

எங்கே, மகனுக்குத் தகப்பனின் அறிவுரை காதில் ஏறினால் தானே... கடந்த ஐந்து வருடங்களாக மனதில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை எல்லாம் அவன் வார்த்தைகளில் கொட்டி கவிழ்த்தான்...

"நான் எதுக்காக யோசிச்சு பேசணும்...? நீங்க யோசிக்காம செஞ்சதோட விளைவு தான் இது..." என்று அவன் சம்யுக்தாவை சுட்டிக்காட்ட...

"இந்தர்..." என்று சித்தார்த் பெரிதும் அதிர்ந்து போனான்... இந்தத் திருப்பத்தை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லையே...

"ஆமாம் அதன் விளைவு தான் இது..." என்று இரும்பு போன்று உறுதியான குரலில் இறுக்கத்துடன் கூறியவன் நன்றாக நிமிர்ந்து தந்தையைப் பார்த்தபடி,

"எதை நினைத்து அந்தக் காரியத்தை நீங்க செஞ்சீங்களோ, அந்த நினைவு இனி நடக்கவே நடக்கக் கூடாது என்பதற்காகத் தான் நான் திட்டம் போட்டு இவளை சந்திச்சேன்... இவளை மயக்கி என் வலையில் சாமர்த்தியமா விழ வச்சேன்... எல்லாமே ப்ளான்... பக்கா ப்ளான்..." என்றான் அவன் அலட்சியத்துடன்...

இந்திரஜித்தின் வார்த்தைகளில் எல்லோரும் அதிர்ந்து போனார்கள் என்றால், சம்யுக்தாவோ அதிராது அமைதியாக ஏமாற்றத்தை உள்வாங்கிக் கொண்டாள்... அடி வாங்கி, அடிவாங்கி அவளது இதயம் மரத்துப் போயிருந்தது...

"எனக்கு இவளை கல்யாணம் பண்ணி வைக்கணும்ன்னு தானே நீங்க நினைச்சீங்க... அதுக்காகத் தானே நீங்க உங்க இஷ்டத்துக்கு ஆடுனீங்க... அது நடக்கக் கூடாதுன்னு தான் நான் இதைச் செய்தேன்... நானும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... இவளையும் யாரும் கல்யாணம் பண்ணிக்க விட மாட்டேன்... உங்க எண்ணம் நடக்கணும்ங்கிறதுக்காக நான் கொடுத்த விலை, என் சந்தோசம், நிம்மதி... அதே போல் என் எண்ணம் ஈடேறுவதற்காக நீங்க கொடுக்கப் போகிற விலை, உங்க கௌரவம், மானம், மரியாதை எல்லாம்... இது தான் நீங்க செஞ்ச தப்புக்கான தண்டனை... நீங்க வாழ்நாள் முழுவதும் கூனிக்குறுகி வாழணும்... அது தான் எனக்கு வேண்டும்..." என்று ஆங்காரத்துடன் கத்திய மகனை கண்டு சித்தார்த் ஸ்தம்பித்துப் போனான்... மகனின் மனதில் இத்தகைய தவறான புரிதல் இருக்கும் என்று அவன் கொஞ்சம் கூட நினைத்து பார்க்கவில்லை...

"இந்தர், நீ விளையாடுவதற்கு என் தங்கையின் வாழ்க்கை தான் கிடைத்ததா...? அவள் உனக்கு என்ன பாவம் பண்ணினாள்...? இப்படி ஒரு அவல வாழ்க்கையை அவளுக்கு நீ கொடுத்திருக்கிறாய்..." என்று சூர்யா மனம் வெதும்பி போனான்...

"அவள் பண்ணிய பாவமே உங்க தங்கையாக வந்தது தான்... இதுக்கு நீங்களும் ஒரு காரணம்..." என்று அவன் அக்கா கணவனிடமும் எகிறினான்...

"போதும்... இத்தோடு என் தங்கையை விட்டு விடு... நான் அவளைப் பார்த்துக்கிறேன்..."

"இவனை என்ன கேட்டுக்கிட்டு மாப்பிள்ளை... இனியும் சம்யுவை இவனிடம் விட்டு வைக்க நாம என்ன முட்டாளா...? அவளுக்கு என்ன மாதிரியான வாழ்க்கையை அமைத்து கொடுக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று ஐய்யனார் போன்று ஆவேசத்துடன் மீசையை முறுக்கினான் சித்தார்த்...

மகனாக இருந்தாலும் குட்ட குட்ட குனிய சித்தார்த் தயாராக இல்லை... தந்தையின் வார்த்தையில் இந்திரஜித்

திடுக்கிட்டுப் போனான்... அவனது மனக்கண்ணில் பிரசன்னா சம்யுக்தா கழுத்தில் தாலி கட்டுவது போல் காட்சி தோன்றி அவனை வெலவெலக்க வைத்தது... தந்தை நினைத்தால் அந்தக் காரியத்தைச் சாதித்து விட்டே ஓய்வார் என்று அவனும் அறிவானே... அதனால் தானே அவன் பிரசன்னாவை நினைத்துப் பயந்தது... ஏனெனில் பிரசன்னா தந்தையின் தேர்வாயிற்றே... ஆனாலும் அவன் அசராது நிமிர்ந்து நின்றான்...

"முதலில் பார்த்தது போல் அறுபது வயசு கிழவனையா...?" என்றான் நக்கலான குரலில்...

தந்தையைக் காயப்படுத்த வேண்டும் என்று நினைத்து அவன் பேசிய வார்த்தைகள் இலக்கு மாறி அவனவளை சென்று சரியாகத் தாக்கியது... அதைக் கேட்டதும் பதினைந்து வயதில் நிர்கதியாய் தான் நின்ற தோற்றம் அவளின் மனக்கண்ணில் வலம் வந்தது... அதன் பின்னர்த் தானே சூர்யா என்கிற அண்ணன் உறவு அவளுக்குக் கிடைத்தது... அன்றைய காலக்கட்டத்தை நினைத்து மனம் வருந்தியதை விட இப்போது தன்னவன் பேசும் வார்த்தைகள் கேட்டு அவளது மனம் மிகவும் வேதனை கொண்டது...

"அந்தக் கிழவனை விட நான் எந்த விதத்தில் குறைந்து போயிட்டேன்...? இவளுடைய தகுதிக்கு நான் கொஞ்சம் என்ன அளவுக்கு அதிகமாகவே எல்லாத் தகுதிகளையும் உடையவன்... என் கூட இருப்பதால் அவள் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை... மாறாக மகாராணி போல் தான் இருக்கிறாள்... அப்படியே அவளை அழைத்துக் கொண்டு போவதாக இருந்தால் அவளது வயிற்றில் இருக்கும் குழந்தையை என்ன செய்வதாக உத்தேசம்... முதலிலாவது அறுபது வயசு கிழவன் கல்யாணம் பண்ண முன் வந்தான்... ஆனால் இப்போது குழந்தையுடன் இருப்பவளை கல்யாணம் பண்ண எண்பது வயது கிழவன் கூட முன்வர மாட்டான்..."

சம்யுக்தா குழந்தை உண்டாகி இருப்பதைக் கேட்டு எல்லோரும் சந்தோசப்படுவதை விடுவித்துத் துக்கப்பட்டனர்...

தகப்பனுக்கு வலிக்கச் செய்வதற்காக அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளை உயிருடன் வலிக்கச் செய்தது... பணமில்லாத ஒரே காரணத்துக்காக அவளது தகுதி மிகவும் தரமிறக்கப்பட்டதைக் கண்டு அவளது நெஞ்சம் கதறித் துடித்தது...

'அம்மா... இந்த வார்த்தைகள் கேட்பதற்காகத் தான் என்னைப் பெற்றாயா...?' என்று அவள் மனதிற்குள் அழுது கரைந்தாள்...

"இந்தர்..." என்றபடி கோபமாய் மகன் அருகில் வந்த பிரகதீஸ்வரி அவனைப் பார்த்து ஒற்றை விரல் நீட்டி எச்சரித்தவள்,

"பெண் பாவம் பொல்லாதது இந்தர்... தேவையில்லாது ஒரு பெண்ணின் பாவத்திற்கு நீ காரணமாகி விடாதே... உனக்கு விருப்பம் இல்லைன்னா அவளை விட்டு விலகி போயிரு... அதை விட்டுட்டு அவளை உடன் வைத்துக் கொண்டு இப்படி வதைப்பது சரியில்லை... அம்மா நான் சொல்கிறேன்... நீ சம்யுவை விட்டு விலகி போயிரு... அவளுக்கான வாழ்க்கையை நாங்க பார்த்துக்கிறோம்... ம்... போ..." என்றபடி அவள் அறை வாயிலை சுட்டிக்காட்டி மகனை வெளியேற சொன்னாள்...

"சூர்யா, சம்யு கண்ணில் இருந்து கண்ணீர் வழிகிறது..." ஜெகதீஸ்வரி தான் ஒரு மருத்துவர் என்பதை மறந்து பதறி போய்க் கூச்சல் போட்டாள்... அவள் வந்ததில் இருந்து தம்பியிடம் ஒரு வார்த்தை பேசவில்லை... பேசவும் பிடிக்கவில்லை...

"பேபி..."

எல்லோருக்கும் முன் இந்திரஜித் சம்யுக்தா அருகில் பாய்ந்து வந்தான்... அவனின் செயலில் எல்லோரும் ஓரடி

பின்வாங்கினர்...

சம்யுக்தா அருகில் அமர்ந்து அவளது முகத்தைக் கைகளில் தாங்கியபடி இரு கட்டை விரல்களால் அவளது கண்ணீரை துடைத்தவன்,

"நான் பேசுறது உனக்குக் கேட்குதா பேபி...?" என்றான் தவிப்புடன்...

கூடை தணலை தலை மேல் கொட்டி விட்டு உடனே பனிக்கட்டியை தூவ அவனால் மட்டுமே முடியும்... ஆனால் அவள் தணலின் தகிப்பையும் உணரவில்லை... பனியின் குளுமையையும் உணரவில்லை... எதையும் உணராது மரத்துப் போய்ப் படுத்திருந்தாள்...

அவன் தன் மீது காதல் கொண்டிருந்தான் என்கிற ஒரு காரணத்துக்காகத் தான் அவன் உரிமை இல்லாது அவளை அழைத்த போது கூட அவனை நம்பி, அவனது காதலை நம்பி எல்லோரையும் விட்டு விட்டு அவன் பின்னே அவள் வந்தாள்... அவளுக்குத் தபாலில் வந்த பொருளில் அவளுக்குத் தெரிந்து போனது அவன் தன் மீது காதல் கொண்டு அழைத்து வரவில்லை என்று... தந்தையைப் பழிவாங்கிடவே தன்னை அழைத்து வந்திருக்கிறான் என்று... அந்தப் பழிவாங்கலை காதலாக மாற்றிட எண்ணி அவள் துடித்தாள்... கடைசிவரை அது நடக்கவில்லையே...

அவன் தனது மகவை ஏற்க தயங்கிய போது கூட அவனுக்காகத் தான் அவள் யோசித்தாள்... அவனை விட்டு ஒரேடியாக விலகி சென்றுவிட வேண்டி தானே அவளும் துடித்தாள்... ஆனால் அவன் மனதில் தன் மீது இத்தனை வன்மம் இருக்கக்கூடும் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லையே...

இப்போது எல்லாவற்றையும் ஒன்றிணைத்து பார்த்தவளுக்கு எதுவோ புரிந்தது போலிருந்தது... ஆனால் என்ன நடந்தது என்று அவளுக்கு முழுமையாகத் தெரியவில்லை... தகப்பனை பழிவாங்க இந்திரஜித்

தன்னைப் பகடைக்காயாக்கி விட்டான் என்பது மட்டும் அவளுக்கு நன்கு புரிந்தது...

அவளது மனம் என்ன இரும்பினால் ஆனாதா...? அவளும் எல்லோரையும் போல் சாதாரண உணர்வுள்ள மனுசி தானே... அதனுடன் விளையாடும் உரிமையை அவனுக்கு யார் கொடுத்தது...

'எல்லாம் நீ கொடுத்த இடம் தான்டி சம்யு... அல்லு அர்ஜூன் மாதிரி ஒரு ஹீரோ போல் அவன் உன் முன் வந்து நின்னதும் ஆன்னு வாயை பிளந்து நின்ன இல்ல... அதுக்கு இப்போ நல்லா அனுபவிக்கிற... உன் பலவீனத்தைப் பயன்படுத்தி அவன் உன் மனசோடு விளையாடி விட்டான்...' என்று அவளது மனசாட்சி அவளைக் கேலி செய்தது...

அவனது காதல் பொய்யாய் இருக்கலாம்... அவன் அவளிடம் நடித்து இருக்கலாம்... ஆனால் அவளது காதல் பொய்யில்லையே... அவனுடன் அவள் ஓருயிராய் வாழ்ந்தது பொய்யில்லையே... அவளால் அவனைப் போல் அப்படிப் பொய்யாய் நடிக்க முடியவில்லையே ஏன்...? அந்தக் கணம் அவளுள் ஏதோ ஒன்று உயிருடன் மரித்தது...

அவனுடைய வன்மத்தில் அவனுடன் அவள் வாழ்ந்த இனிமையான காலங்கள் பின்னுக்குப் போய்விட்டது...

அதற்கு மேல் அவளது மூளை சிந்திக்க மறுத்து அவளை ஆழ் உறக்கத்திற்கு அழைத்துச் சென்றது...

"பேபி..." அவனது கதறலுக்கு அவள் கண் விழிக்கவில்லை...

சற்று முன் குரோதம் கொண்டு பேசியவனின் இந்தக் கண்ணீர் கதறல் எல்லோரையும் புருவத்தை உயர்த்த செய்தது...

**********************

சாத்விகா வெளியில் செல்ல வேண்டி கிளம்பி தயாராக இருந்தாள்... சந்தோஷ் அவளை எங்கு அழைத்துச் செல்ல

போகிறான் என்று அவளுக்கு மனதிற்குள் பெரும் படபடப்பாக இருந்தது... முக்கியமான அறுவை சிகிச்சை ஒன்றுக்காக மருத்துவமனைக்குச் சென்றிருந்த சந்தோஷ் வருவதற்காக அவள் டென்சனோடு காத்திருந்தாள்... சொன்ன நேரத்தை விட ஒரு மணி நேரம் தாமதமாக அவன் வீடு வந்து சேர்ந்தான்...

"சாரி அம்மு... ஜஸ்ட் டென் மினிட்ஸ்..." என்றவன் தங்களது அறைக்குச் சென்றான்...

சொன்னபடி பத்து நிமிடங்களில் தயாராகி வந்தவனின் அழகை அவளது கண்கள் ரசித்துப் பார்த்தது... தலைக்குக் குளித்து விட்டு வந்திருப்பான் போலும் முன்னுச்சி முடியில் இருந்து நீர் சொட்டி கொண்டிருந்தது... அது கூட அவனுக்குத் தனிச் சோபையைக் கொடுத்தது...

"தலையை சரியா துவட்டிட்டு வர மாட்டீங்களா...?" அவளது அக்கறையான கேள்வியில் அவனது கண்கள் பளிச்சிட்டது...

"அதுக்கு என்ன துவட்டிட்டா போச்சு..." என்றவன் அவள் எதிர்பார்க்காத நேரத்தில் அவளது புடவை முந்தானையை எடுத்து தனது தலையைத் துவட்டி கொண்டவன் பின் விரல்களால் தலைமுடியை கோதி சரி செய்தவன்,

"வா போகலாம்..." என்றபடி அவளின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க... அவனது செயலில் அவள் திகைத்து போனவளாய் அவன் பின்னே நடந்தாள்...

சந்தோஷ் மனைவியை அழைத்துக் கொண்டு வந்த இடம் வேறு ஒரு பிரபல மருத்துவமனை... காரில் இருந்து இறங்கியபடி கணவனைப் பார்த்தவள்,

"இங்கே எதுக்கு வந்திருக்கிறோம்...?"

"கல்யாணமாகி இத்தனை நாளாகுது... நமக்குள் எந்தக் கெமிஸ்ட்ரியும் இன்னும் வொர்க்அவுட் ஆகலையே... அதான் உனக்கு ஹார்மோன் கோளாறு எதுவும் இருக்கான்னு செக் பண்ண கூட்டிட்டு வந்தேன்..."

அவன் கூறியதை உண்மை என்று நம்பியவள், "நான் வர மாட்டேன்..." என்று கோபமாய் முறுக்கி கொள்ள...

"நான் என்ன சொன்னாலும் நம்புவியா...? அவ்வளவு நம்பிக்கையா என் மேல்...?" என்று ஒரு மாதிரி குரலில் கேட்டவன்,

"அப்போ ரொம்ப நல்லதா போச்சு..."

"எதுக்கு...?"

"எதுக்குன்னு போய்ப் பார்த்தால் தெரிஞ்சிட்டு போகுது..." அவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்...

"உங்க ஹாஸ்பிட்டலுக்குப் போகாம இங்கே ஏன் கூட்டிட்டு வந்திருக்கீங்க...?"

"இதை எல்லாம் நம்ம ஹாஸ்பிட்டலில் செக் பண்ண முடியுமா...?" போலியாக வாயை பிளந்து திகைத்தவனைக் கண்டு,

"அத்தான்..." என்று அவள் சிணுங்கி கொண்டே அவனது தோளில் முகம் புதைக்க...

"இப்போது தான் இந்த அத்தான் இருப்பது உனக்கு ஞாபகத்திற்கு வந்ததா அம்மு...?" என்று கரகரத்த குரலில் கேட்டவனின் கை அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டது...

அவள் திடுக்கிட்டு போய் விலக முயன்ற போது அவன் அவளை விலக விடவில்லை...

அதற்குள் மருத்துவர் அவர்களை அழைத்தார்... இருவரும் எழுந்து உள்ளே சென்றனர்...

"டாக்டர். சந்தோஷ், வாங்க... வாங்க..." என்று அந்த மருத்துவர் அவனை வரவேற்றார்...

"உங்க ரிசல்ட் வந்திருச்சு..." என்றபடி கையிலிருந்த கவரை அவர் எடுக்க...

"என் மனைவி கிட்ட சொல்லுங்க டாக்டர்..." என்று அவன் தனது மனைவியைக் கை காட்டினான்...

மருத்துவர் சற்று திகைப்புடன் சாத்விகாவை பார்த்தார்... பின் தொண்டையைச் செருமி கொண்டு,

"இங்கே பாரும்மா... நீ எனக்கு மகள் மாதிரி... சந்தோஷை பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவன் அப்படி எல்லாம் தவறு செய்திருக்க மாட்டான்..." என்றவரை இடைமறித்தவன்,

"அது அவளுக்கும் நல்லா தெரியும் டாக்டர்... ஆனால் யாரோ இடையில் புகுந்து குழப்பம் பண்ணியிருக்காங்க..."

"ஓ... தட்ஸ் குட்..." என்றவர்,

"சந்தோஷ்க்கும், சர்வேஷ்க்கும் டிஎன்ஏ மேட்ச் ஆகலை... சர்வேஷின் அப்பா சந்தோஷ் இல்லை..." என்றவர் தனது கையிலிருந்த காகிதங்களை அவள் முன் பரப்பினார்...

அதைக் கேட்டு அவள் ஆனந்த அதிர்ச்சியில் உறைந்தாள்... இது எப்படிச் சாத்தியம்...? அவளால் இன்னமும் அவளது காதுகளை நம்ப முடியவில்லை...

கண்களில் ஆனந்த கண்ணீர் துளிர்க்க அவள் கணவனைத் திரும்பி பார்க்க... அவனோ கையைக் கட்டி கொண்டு தலையைச் சாய்த்தபடி புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

மனைவியின் காதலுக்குக் கணவனவன் நியாயம் செய்து விட்டான்...!!!

******************

"மாமூ..." மருத்துவமனை வரந்தாவில் யோசனையுடன் அமர்ந்திருந்த சித்தார்த்தை அழைத்தாள் பிரகதீஸ்வரி... "என்னம்மா...?" அவனது கடும் யோசனையிலும் அவனது கனிவு மாறவில்லை... அதைக் கண்டு அவளது கண்கள் பனித்தது...

"நம்ம இந்தர் கொஞ்சம் நல்லவன் தானோ...?"

"அவனைப் பத்தி பேசாதே ரதிம்மா..." என்றான் எரிச்சலுடன்...

"இங்கு வந்ததில் இருந்து அவனை நான் கவனிச்சிட்டு தான் இருக்கேன்... யுகிம்மா, யுகிம்மான்னு அவள் கிட்ட உருகிறது என்ன... அவளைப் பத்திரமா கவனிச்சிக்கிறது என்ன... அவனைப் பார்த்தால் அவளைப் பழிவாங்குகிற மாதிரியா இருக்கு... ஜென்மம் ஜென்மமாய் அவளைக் காதலிக்கிறது மாதிரி இருக்கு..."

"அப்படிக் காதலிப்பவன் தான் அவளை இப்படிக் கேவலப்படுத்துகிறானா...? வார்த்தைகளால் அவளை எப்படி எல்லாம் குதறி எடுக்கிறான்... நீயும் கேட்ட தானே... நல்லவேளை சம்யு காதில் இது எல்லாம் விழவில்லை... விழுந்திருந்தால்...? அவளின் நிலை...?" சித்தார்த்திற்கு அப்படியொரு கோபம் வந்தது...

"நீங்க என்னைக் காதலித்த காலத்தில் என் மேல் கோபமாக இருந்தது இல்லையா...? அதற்காக நீங்க என்னை வெறுத்தீங்களா...? இல்லையே... உங்களைப் போல் உங்க மகனும் இருக்கிறான்... கோபத்தில் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அவன் நடந்து கொள்கிறான்... ஆனால் அவன் மனசுக்குள் அவளுக்காக வருந்துகிறான்..." என்றாள் அவள் மகனுக்கு ஆதரவாக...

மனைவி கூறுவது உண்மையாக இருக்கக்கூடுமோ என்று சித்தார்த் சற்று யோசிக்க ஆரம்பித்தான்... ஏனெனில் இந்திரஜித்தின் நடவடிக்கை அப்படித் தான் இருக்கிறது... இதோ இப்போது கூடச் சம்யுக்தா விழிப்பதற்காக அவள் அருகில் அமர்ந்து உண்ண மறந்து அவளது முகத்தை இமைக்காது பார்த்து கொண்டிருக்கிறானே... அதற்காக அவன் செய்தது எல்லாம் சரியென்று ஆகிவிடாதே... ஒரு பெண்ணவளை இந்தளவிற்குக் கேவலப்படுத்தக் கூடாது என்று சித்தார்த்திற்கு மகன் மீது கோபம் வந்தது...

"முடிவு நம் கைகளில் இல்லை ரதிம்மா... சம்யு கைகளில் இருக்கிறது... அவளது விருப்பம் தான் என் விருப்பம்... அவள் மட்டும் ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை இந்திரஜித் வேண்டாம் என்று சொல்லட்டும் அதன் பிறகு இருக்கிறது அவனுக்குக் கச்சேரி..." சித்தார்த் மகனை நினைத்து கோபத்துடன் பல்லை கடித்தான்...

கணவனது வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து பிரகதீஸ்வரி அமைதி காத்தாள்...

அறையின் உள்ளே இந்திரஜித் சம்யுக்தா முன் அமர்ந்து அவளையே இமைக்காது பார்த்தபடி அவள் கண் விழிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தான்... அப்போது ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றவள் இன்னமும் எழவில்லை...

'கண் விழித்துப் பாரு பேபி...' என்று அவனது உதடுகள் ஓயாது முணுமுணுத்துக் கொண்டிருந்தது...

அவனது கைகள் அவளது வயிற்றுப் பகுதியினை மென்மையாகத் தடவி விட்டது... அவன் குனிந்து அவளது வயிற்றில் இருந்த தனது மகவிற்கு மெல்ல முத்தமிட்டான்... இந்த அன்பை அவன் முதலில் காட்டியிருக்க வேண்டுமோ... அப்படிக் காட்டியிருந்தால் அவள் அவனை விட்டு விலகி போயிருந்திருக்க மாட்டாளோ... அவனது மனம் வேதனை கொண்டது...

அன்று பாதி நாள் கடந்த பின்னரே சம்யுக்தா மீண்டும் கண் விழித்தாள்... அவளது பார்வை வட்டத்தில் முதலில் விழுந்தது அவளவன் தான்... தாடையில் முள் முள்ளாய் முளைத்த ரோமங்களுடன் அவன் இருந்த தோற்றம் அந்தக் கணத்திலும் அவளது இதயத்தில் இரத்தத்தை வழிய செய்தது...

'உங்களுக்கு நான் இருக்கிறேன் பாவா...' என்று அவனை அணைத்து ஆறுதல் சொல்ல விழைந்தது அவளது காதல் மனம்... ஆனால் காயமடைந்த மனமோ அவனை விட்டு விலகி போகத் துடித்தது...

"பேபி... இப்படிப் பயமுறுத்திட்டியே..." என்று கண்ணீர் மல்க புன்னகைத்தவனின் புன்னகை நிஜம் தானா என்று அவள் கூர்ந்து கவனித்தாள்... அவளால் அவனின் விழி வழியே அவனது மனதினை கணிக்க முடியவில்லை... அப்படிக் கணித்திருந்தால் அப்போதே அவனைப் பற்றி அறிந்து ஒதுங்கி இருந்திருப்பாளே...

"பேபி..."

அவளது கண்களில் இருந்து வழிந்த நீரை அவன் துடைத்து விட... முன்பு அவனது தொடுகைக்கு உருகியவள் இப்போது அவனது தொடுகையில் தீச்சுட்டார் போன்று துடித்தாள்... அவளது மனம் அவனது வன்மமான வார்த்தையில் தகித்தது... அவள் மெல்ல அவனது கரத்தை விலக்கி விட்டாள்... அதைக் கண்டு அவனது விழிகள் சுருங்கியது...

"சம்யு..." ஜெககதீஸ்வரியும், சூர்யாவும் அவளது இருபக்கம் வந்தமர்ந்தனர்...

"அண்ணய்யா... வதின..." அவர்களைக் கண்டதும் அவளது ஏமாற்றம் அழுகையாக வெடித்தது...

தனது கையைத் தள்ளி விட்டு விட்டு அவளது அண்ணன், அண்ணியிடம் ஆறுதல் தேடியவளை கண்டு இந்திரஜித் துடிதுடித்துப் போனான்... அன்று அத்தனை அன்பு கொண்டவர்களை விட்டு விட்டுத் தன்னிடம் அடைக்கலமானவள் இன்று தன்னைத் தவிர்ப்பது கண்டு அவன் தவித்துப் போனான்... தன்னை அவள் வெறுத்து விட்டாளோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது...

வெளியில் வீரமாய்க் காணப்படும் அந்த ஆண்மகன் தன்னவளிடம் மட்டும் சேயாய் ஆறுதல் வேண்டி ஏக்கத்துடன் அவளது முகத்தினைப் பார்த்திருந்தான்... அவள் அவனைப் பார்த்தால் தானே அவனது தவிப்பு அவளுக்குப் புரிந்திருக்கும்... அவள் தான் தனக்குள் கரைந்து கொண்டிருந்தாளே...

"நன்னு ஷேமிச்சண்டி அண்ணய்யா..." என்று அவள் சூர்யாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினாள்...

"அண்ணா கிட்ட யாராவது மன்னிப்பு கேட்பாங்களா..." சூர்யா தங்கையை அணைத்து ஆறுதல் படுத்தினான்...

அண்ணன், தங்கை பாசப்பிணைப்பை கண்டு மனம் வெதும்பியவனாய் இந்திரஜித் விலகி எழுந்தான்... தன் கைப்பொருளை இழந்தது போல் அவனுள் ஒருவித தவிப்பு எழுந்தது... இனி அது தான் நடக்கப் போகிறதோ என்று அவனது மனம் வேதனையில் துடித்தது... என்ன செய்து இனி வர போகும் இடர்களைச் சமாளிக்கப் போகிறான்... அவனுக்கு உள்ளுக்குள் அப்படியொரு திகிலாக இருந்தது...

அன்றிரவு இந்திரஜித் மட்டுமே சம்யுக்தாவுடன் இருந்தான்... பிரகதீஸ்வரி, ஜெகதீஸ்வரி உடன் இருக்க முயன்ற போது அவன் தடுத்து விட்டான்...

"இந்த நிலைமையில் அவளை நான் எங்கும் கடத்தி கொண்டு போக மாட்டேன்... அவள் இங்குத் தான் இருப்பாள்ன்னு உங்க கணவர் கிட்ட சொல்லிருங்க..." என்றான் நக்கலான குரலில்...

அவனின் பிடிவாதம் கண்டு எல்லோரும் விலகி சென்றனர்... அவர்கள் சென்றதும் அவள் அருகில் வந்தமர்ந்தவன் அவளது கைகளை இறுக பிடித்துக் கொண்டு அவளைப் பார்த்தான்... அவளோ அவனது தொடுகையில் இமைகளை இறுக மூடி கொண்டு திறக்க மறுத்தாள்...

"பேபி, நீ தூங்கலைன்னு எனக்குத் தெரியும்... கண் முழிச்சு என்னைப் பார்..." என்றான் அதட்டலான குரலில்...

அவனது அதட்டலில் அவளது தேகம் தூக்கிவாரி போட்டது... அவள் பயத்துடன் கண்களைத் திறந்தாள்...

"என்னை ஏன் அவாய்ட் பண்ற பேபி...?"

என்னவென்று அவள் பதில் சொல்வாள்...? கண்ணோரம் கண்ணீர் வழிய அவள் வேறு பக்கம் பார்த்தாள்...

"என்னைப் பிடிக்கலையா பேபி...?"

'உங்களை மட்டும் தான் எனக்குப் பிடிக்கும் பாவா...' என்று அவனிடம் கதறியழ துடித்தது அவளது காதல் நெஞ்சம்... ஆனால் அவனால் அந்தக் காதலை உணர்ந்து கொள்ள முடியுமா...?

"முதல்ல என்னைப் பார்டி..." என்று அவளது தாடையில் கை வைத்து அவளது முகத்தினைத் தன் பக்கமாய் அவன் திருப்பினான்...

அவனது விழியோடு விழி நோக்கியவளின் நெஞ்சம் மெல்ல மெல்ல அவனுள் மூழ்க ஆரம்பித்தது... காதல் நதியில் மூழ்க துடிக்கும் வாழ்க்கை படகை காப்பாற்ற முடியாது அவள் திணறினாள்... அதைக் காப்பாற்றாது போனால் அவள் இன்னமும் அவமானப்பட நேரிடுமே... அவனை எதிர்த்து நிற்கும் தைரியம் கோழை அவளுக்குக் கிடையாதே... அதனால் இரு கரம் கூப்பி அவனைப் பார்த்து இறைஞ்சுதலாக,

"என்னை விட்டுருங்க... இனி நான் உங்க வாழ்க்கையில் வர மாட்டேன்..." என்று கெஞ்சியவளை கண்டு அதிர்ந்து போனவனின் கைகள் தாமாக அவளது கையை விடுவித்தது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"குழந்தை..." என்று கேட்டவனின் குரல் கரகரத்து ஒலித்தது...

"அது என் குழந்தை..."

அவளது வார்த்தையில் அவன் விரக்தியுடன் அவளைப் பார்த்தான்...

"அப்போ எல்லாம் முடிவு பண்ணிட்ட... அப்படித் தானே...?" அதற்குப் பதில் சொல்ல தெரியாது அவள் விழிகளை மூடி கொண்டாள்...

அதற்குப் பின் வந்த நாட்களில் இந்திரஜித் அவளிடம் எதுவும் பேசவில்லை... சம்யுக்தா மெதுவே உடல்நலம் தேறிக் கொண்டு வந்தாள்... இந்திரஜித் அவள் அருகில் கூடச் செல்லவில்லை... மௌனமாய் அவளைத் தனது பார்வையால் வருடி கொண்டிருந்தான்... கரம் கொண்டு தன்னவளை வருட அவனுக்கு ஆசை தான்... ஆனால் அதற்கு அவள் சம்மதிக்கணுமே... அதனால் அவன் கையாலாகாதவனாய் விலகி நின்று வேடிக்கை பார்த்தான்...

சம்யுக்தா முன்பு எந்தளவிற்குக் காதல் கொண்டு அவனைப் பார்த்தாளோ... இப்போது அதே அளவிற்கு அவனை நேருக்குநேர் சந்திப்பதை தவிர்த்தாள்...

இறுதியில் அவள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்குச் செல்லும் நாளும் வந்தது... மருத்துவமனைக்குக் கட்ட வேண்டிய பணத்தைச் சூர்யா கட்ட முன்வந்த போது அவனை முறைத்து பார்த்து தடுத்த இந்திரஜித் தானே அந்தப் பணத்தைக் கட்டினான்...

"உங்களை விட எனக்குத் தான் அவள் மீது அதிக உரிமை இருக்கிறது..." என்று அவன் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று பேசினான்...

சம்யுக்தாவின் உடமைகளை எல்லாம் எடுத்துக் காரில் வைத்தாகி விட்டது... அவள் மட்டுமே காரிலேற வேண்டும்... அவ்வளவு நாள் விலகியிருந்த இந்திரஜித்தால் அதற்கு மேல் விலகி இருக்க முடியவில்லை... சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்காது அவன் அவள் அருகில் வந்து அவளை இறுக அணைத்துக் கொண்டான்... அதைக் கண்டு மற்றவர்கள் தான் சங்கடமுற்று அறையை விட்டு வெளியேறினர்...

இது தான் சாக்கு என்று அவனது அணைப்பு இன்னமும் இறுகியது... அவளோ தனக்குள் உருகி கரைந்தாலும் தேகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டாள்... அவளது முகம் பற்றி ஆவேசமாய் முத்தமிட்டவன் இறுதியில் அவளது இதழில் வந்து இளைப்பாறினான்... அப்போதும்

அவள் நெகிழ்ந்து போய் அவனது கரங்களில் துவளவில்லை... மாறாக முறுக்கேற்றப்பட்ட நாண் போல் விறைத்துக் கொண்டு நின்றாள்... அதை அவன் உணர்ந்தவனாய் அவளை விட்டு விலகி அவளது முகம் பார்த்தான்...

"நான் போகணும்..." என்றவள் அவனது கரங்களை விலக்கி விட முயன்றாள்... அவனோ தனது கரங்களை விலக்காது இறுக்கியபடி,

"இது தான் உன் முடிவா...?"

அவள் ஆமென்று சொல்லாது அமைதி காத்தாள்... அதுவே அவனுக்கான பதிலை சொல்லாமல் சொல்லியது...

"நீயும் என்னைத் தனியா விட்டுட்டு போகிறல்ல..." அவனது வார்த்தையின் பொருள் புரிந்தவளின் உள்ளமும், தேகமும் இறுகியது...

"உங்களுக்கு நான் மட்டும் இல்லையே..." என்றாள் அவள் இருபொருள்பட... அதில் அவனது விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

"ஆனா இப்போ நீ மட்டும் தான்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு அவள் மனதிற்குள் விரக்தியாய் சிரித்துக் கொண்டாள்... ஆனால் வெளியில் எந்த உணர்வையும் காட்டி கொள்ளவில்லை...

"நான் போகணும் விடுங்க..."

இப்போதும் தனது அணைப்பில் இருந்து அவளாக விலகாது தன்னிடம் அனுமதி கேட்கும் அவளைக் கண்டு அவனது உதடுகளில் விரக்தி புன்னகை வந்தமர்ந்தது... அடுத்த நொடி அவளை இறுக அணைத்து அதே வேகத்தில் அவளை விட்டு விலகினான் அவன்...

அவள் அவனிடம் இருந்து விலகி செல்ல முயன்ற போது அவனது சட்டை பொத்தானில் அவளது கருகமணி மாலை மாட்டி கொண்டது... அதை உணர்ந்து அவள் திடுக்கிட்டு

போய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்… அந்தக் கணம் அவனும் அவளைத் தான் உணர்வில்லாது பார்த்துக் கொண்டிருந்தான்…

தெலுங்கு முறைப்படி பவளமணி, தங்க காசுகள், தங்க உருளைகள், கருகமணி பாசிகள், இவற்றுடன் குமிழ் போன்ற அமைப்பில் இரு தங்க பொட்டுக்களுடன் செய்யப்பட்டு இருந்த தாலி அவர்களது உறவை போல் அவர்கள் இருவருக்கு இடையில் ஊசலாடி கொண்டிருந்தது…

இந்திரஜித் அறியாது செய்த அற்புதமான தவறு… அவள் அறிந்து ஏற்றுக் கொண்ட அழகான தவறு, அவர்களது திருமணம்… கடவுள் முன் வைத்து நடந்த எளிமையான, புனிதமான திருமணம்… அவர்களது மனசாட்சியே அதற்குச் சாட்சியாய்…

மனைவியாய் அங்கீகரிக்காத கணவனிடத்தில் தாலியின் புனிதத்தைப் பற்றி அவள் என்னவென்று கூறுவாள்… அதனால் ஒன்றும் வெளிக்காட்டி கொள்ளாது அமைதியாகக் கருகமணி மாலையை அவனது சட்டை பொத்தானில் இருந்து பிரித்து எடுத்தவளின் கையை அவனது கரம் இறுக பற்றியது… இருவரின் கரங்களுக்கு இடையில் இருவரின் புனிதமான உறவை பறைச்சாற்றும் தாலி பாந்தமாய் அடங்கி இருந்தது…

அன்று அவன் அவளைக் கைப்பிடித்து அழைத்து வந்தான் என்றால் அது இந்தத் தாலி கொடுத்த உரிமையால் தானே… அது போல் அவளிடத்தில் உரிமையை எடுத்துக் கொண்டதும் தான் அவளது கணவன் என்கிற உறவினால் தானே… இதை எல்லாம் அவள் அறிவாளா…? எதுவுமே அறியாது, அவனையும் புரிந்து கொள்ளாது விலகி செல்லும் தன் மனைவியைக் கண்டு அவனது கண்கள் கலங்கியது…

அவளுக்கும் அதே உணர்வு தானோ…? கடமையாய் அவனைத் தன்னுடன் தக்க வைக்க விரும்பாதவளாய்

அவள் அவனை விட்டு விலகி சென்றாள்... அவன் கனத்த மனதுடன் அவளைப் பின்தொடர்ந்தான்...

காரிலேறிய மனைவியைப் பார்த்தபடி நின்றிருந்தவனின் மனதில் பாரமேறியது... எதையாவது செய்து அவளைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ளச் சொல்லி அவனது மனம் துடித்தது... காரில் தலைக்குனிந்து அமர்ந்து இருந்தவளை கண்டு அவனது மனம் சத்தமாய்க் கதறியழுதது...

"என்னைக் கொல்லாதே தள்ளிப் போகாதே
நெஞ்சை கிள்ளாதே கண்மணி
சொன்ன என் சொல்லில் இல்லை
உண்மைகள் ஏனோ கோபங்கள் சொல்லடி

உன்னைத் தீண்டாமல் உன்னைப் பார்க்காமல்
கொஞ்சி பேசாமல் கண்ணில் தூக்கமில்லை
என்னுள் நீ வந்தாய் நெஞ்சில் வாழ்கின்றாய்
விட்டு செல்லாதே இது நியாயமில்லை

என் உயிர் காதலை உந்தன் காதோரம்
ஒரு முறையாவது சொல்ல நீ வேண்டும்
எந்தன் ஆசை முத்தங்கள் உன்னைச் சேருமோ
இல்லை காதல் யுத்தங்கள் இன்னும் நீளுமோ"

கார் கிளம்பியதும் சம்யுக்தா தன் மனக்கட்டுப்பாட்டையும் மீறி கணவனை நிமிர்ந்து பார்த்தாள்... இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி சிலை போன்று இறுகி போய் நின்றிருந்தவனை அவள் காதலாய் கண்களில் நிரப்பிக் கொண்டாள்... அவனைப் பிரிவது உயிரை பிரிவது போல் அப்படியொரு வலி எழுந்தது அவளது நெஞ்சில்... அடுத்த நொடி அவள் முகத்தை மூடி கொண்டு கதறியழுதாள்...

"கண்ணை மூடிக்கொண்டாலும் உன்னைக் கண்டேன்
மீண்டும் ஏன் இந்த ஏக்கம்
வெள்ளை மேக துண்டுக்குள்
எழும் மின்னல் போல் எந்தன் வாழ்வெங்கும் மின்னல்

என் இதழ் மேல் இன்று வாழும் மௌனங்கள்
என் மனம் பேசுதே நூறு எண்ணங்கள்
சொன்ன சொல்லின் அர்த்தங்கள் என்னுள் வாழுதே
தூரம் தள்ளி சென்றாலும் உயிர் தேடுதே"

அருகில் அமர்ந்திருந்த ஜெகதீஸ்வரி நாத்தனாரை ஆறுதலாய் அணைத்து கொண்டாள்... முன்னால் அமர்ந்திருந்த சூர்யா தங்கையை வேதனையுடன் பார்த்திருந்தான்...

கார் செல்லும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்தின் அருகில் சித்தார்த் மற்றும் பிரகதீஸ்வரி இருவரும் வந்தனர்... அவர்கள் தனிக் காரில் வந்திருந்தனர்...

"இனியாவது சம்யுவை நிம்மதியாய் வாழ விடு..." என்றான் சித்தார்த் கடுப்புடன்...

'அவளது நிம்மதியே நான் தான் என்பதைக் காலம் கடந்து உணர போறீங்கப்பா...'

"இனியும் அவளிடம் வந்து ஏதாவது வாலாட்டின... அப்புறம் அப்பா சித்தார்த்தை மறந்து பிசினஸ்மேன் சித்தார்த்தை நீ பார்க்க வேண்டி வரும்..."

அதைக் கேட்டு இந்திரஜித்தின் உதடுகளில் கேலி புன்னகை ஒன்று வந்தமர்ந்தது...

"இந்தர்... சம்யு மேல் உனக்கு உண்மையான காதல் இருக்கும்ன்னா இனி நீ அவளைக் கஷ்டப்படுத்தாதே..."

அன்னையின் வார்த்தையில் அவனது விழிகள் பளிச்சிட்டது... அது, அன்னை அவனது மனதினை உணர்ந்ததாலோ...!

பெற்றோரும் கிளம்பி சென்றுவிடச் செல்வந்தன் இந்திரஜித் யாருமில்லாத அநாதையாய் நடுத்தெருவில் நின்றிருந்தான்... மனம் பாரமாகக் கனத்த அந்தக் கணத்திலும் கூட அவன் மனைவியவளின் காதலின்

மீதிருந்த நம்பிக்கையில் ஃபீனிக்ஸ் பறவையாய் புத்துணர்வுடன் உயிர்த்தெழுந்தான்...

"இந்திரஜித்திற்குச் சொல் தெரியாது... செயல் மட்டும் தான் தெரியும்... உன் பாவா செயல் வீரன்டி... என்னை விட்டுட்டா நீ போகிற... ஆனால் நான் உன்னை விட மாட்டேனே... வருகிறேன் என் யுகி பேபி, உன் காதல் கணவனாக உன்னைத் தேடி..." என்று அவன் காதலோடு மெதுவே முணுமுணுத்துக் கொண்டான்...

"பிரம்மனாலான பொம்மலாட்டம் பூமி மீது
நூலினால் ஆடும் பொம்மையாக நீயும் நானும்
ஆடுவோம்! சாடுவோம்! மீள்வோம்!"

முதல் பாகம் முற்றும்...!!!

"அண்ணய்யா... நான் நம்ம வீட்டுக்கு போகலாம்ன்னு இருக்கேன்..."

இந்திரஜித்தின் வீடு இருக்கும் பகுதிக்குள் கார் நுழையும் போதே சம்யுக்தாவின் மனம் ஒரு நிலையில் இல்லாது படபடவென அடித்துக் கொண்டது... ஏனோ சொல்ல முடியாத பயம் வந்து அவள் மனதினைக் கவ்வி கொண்டது... தங்கையின் வார்த்தையில் சூர்யா மனைவியைப் பார்த்தான்...

இதுவரை கணவனின் காதல் பார்வையைச் சந்தித்து வந்த ஜெகதீஸ்வரி இப்போது முதல் முறையாக அவனது குற்றம் சாட்டும் பார்வையில் மனம் நோக குற்றவுணர்வில் தலைக்குனிந்தாள்... அவளது கண்கள் கலங்கி போனது... அதே சமயம் தம்பியை நினைத்துக் கோபமும் வந்தது... அதை அவளது கணவனும் உணர்ந்து கொண்டானோ...

"சம்யு, ஏன்ம்மா இந்தத் திடீர் முடிவு...?"

அவள் என்னவென்று அண்ணனிடம் கூறுவாள்... மௌனமாகத் தலைக்குனிந்து அமர்ந்திருந்தாள்...

"சம்யு, இப்போ நீ தனியாள் இல்லை... உன் கூட நாங்க எல்லாம் எப்பவும் துணை இருப்போம்... நீ பயப்படத் தேவையில்லையே..." தனது கலக்கத்தை மறைத்துக் கொண்டு நாத்தனாரைச் சமாதானப்படுத்தினாள் ஜெகதீஸ்வரி...

"ம்... ம்..." என்று மேலே பேச முடியாது அமைதியாகி போனாள் சம்யுக்தா... மூவரின் மனமும் கனத்துப் போயிருந்தது...

வீட்டின் முன் வந்து கார் நின்றதும் சம்யுக்தா பலவித யோசனைகளுடன் காரில் இருந்து இறங்கினாள்... அவளது மனம் தன்னவனிடம் தடுமாறியது போன்று அவளது கால்கள் புடவை தட்டி தடுமாறியது... அப்போது நீண்ட வலிய கரங்கள் அவளைத் தாங்கி பிடித்து நிறுத்தியது... பழக்கப்பட்ட அந்தத் தொடுகையில் மேனி சிலிர்க்க திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தவள் சிலையாகச் சமைந்தாள்...

'இவங்க எங்கே இங்கே...?' கனவோ, கற்பனையோ என்றெண்ணி இமை சிமிட்டி மீண்டும் ஒரு முறை அவனை உற்றுப் பார்த்தாள்...

அவளது கணவன் இந்திரஜித் தான் அங்கு நனவாய் நின்றிருந்தான்... அவனது முகம் புன்னகையைத் தொலைத்து இறுகி போயிருந்தது... ஆளைக் கொல்லும் ஊடுருவும் பார்வையுடன் அவனது பார்வை மனைவியைத் துளைத்தெடுத்தது...

"இந்தர் நீ எதுக்கு இங்கே வந்த...?" ஜெகதீஸ்வரி தம்பியை பார்த்து கோபத்துடன் படபடத்தாள்...

அதற்குப் பதில் சொல்லாது அவனது பார்வை மனைவியை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தது... அவளோ அவனது பார்வையை எதிர்கொள்ளும் சக்தியில்லாது தவறே செய்யாது குற்றவாளி போல் தலைக்குனிந்து நின்றிருந்தாள்...

"நீ வா சம்யு..." மச்சினனை முறைத்துக் கொண்டே தங்கையின் கையைப் பிடித்து இழுத்தான் சூர்யா...

"அவள் கீழே விழுவதைக் கூட உங்களால் தாங்கி பிடிக்க முடியலை... இந்த லட்சணத்தில் நீங்க அவளைப் பார்த்துக்கப் போறீங்களா...?" என்று அக்கா கணவரைப் பார்த்து சிறிது எரிச்சலுடன் நக்கல் குரலில் கேட்டவன் பின் மனைவியைத் திரும்பி பார்த்து,

"நீ இவங்களை நம்பி என்னை விட்டுட்டு வந்திருக்க...? இதுக்கான விளைவுகளை இனி தான்டி நீ அனுபவிக்கப் போகிற..." என்றவனின் குரல் சற்று கோபத்துடன் வெளிவந்ததோ...?

அந்த நேரம் சித்தார்த், பிரகதீஸ்வரி தங்களது காரில் இருந்து இறங்கினார்கள்... தங்களுக்கு முன் அங்கு வந்து நின்ற மகனைக் கண்டு கோபம் கொப்பளிக்கச் சித்தார்த் வேகமாக அங்கு விரைந்து வந்தான்...

"நீ எங்கேடா இங்கே...?"

"நீங்க இவ்வளவு ஸ்லோவா கார் ஓட்டிட்டு வர்றதுக்குள்ள பின்னாடியே நான் ஸ்பீடா வந்துட்டேன்..." என்றவன் கேலியாய் தந்தையைப் பார்த்து,

"வயசானாலேயே இது தான் பிரச்சினை மிஸ்டர். சித்தார்த்... யூத்துக்கு வழியை விட்டு ஒதுங்கிக்கோங்க..." என்றான் இருபொருள்பட...

"இந்தர்..." பிரகதீஸ்வரி மகனை அதட்டினாள்...

"சரண்டர்..." தாய்க்காகத் தனது இரு கைகளைத் தூக்கி சரணடைந்தபடி சிரித்த இந்திரஜித்,

"உங்களுக்காக நான் பேசலை... ஆனா இவரைத் தேவையில்லாம என்னைப் பேசுறதை விடச் சொல்லுங்க... என் வீட்டுக்கு வர்றதுக்கு நான் யார் கிட்ட பெர்மிசன் கேட்கணும்...?" என்று முதலில் தாயிடம் பணிவாய்ப் பேசியவன், பின் தந்தையிடம் அகந்தையாய் கேள்வி கேட்டு முடித்தான்...

"நீ பாண்டிச்சேரியில் இருப்பது தான் நல்லது..." சித்தார்த் மகனை முறைத்துக் கொண்டு கூற...

"அங்கே யார் இருக்காங்க...? நான் அங்கே போய் இருப்பதற்கு...?" என்றவனின் பார்வை சம்யுக்தா மீது அழுத்தமாய்ப் பதிந்தது...

"ஒரு பெண்ணோட வாழ்க்கையை அழிப்பதற்காகத் தனியே கூட்டிட்டுப் போகத் தெரிந்தது இல்லையா... அது போல் இப்போதும் தனியே போயிரு... அப்பவாவது உனக்குப் புத்தி வருதான்னு பார்க்கலாம்..."

"ஹ... ஐஞ்சு வருசம் தனியா இருந்த போது வராத புத்தியா இப்போ வர போகுது... ஜோக்கடிக்காம போய்ப் பொழைப்பைப் பாருங்க..." என்றவன் வீட்டை நோக்கி செல்ல...

எல்லோருமே திகைப்புடன் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தனர்... அதை உணர்ந்து திரும்பி பார்த்த இந்திரஜித்,

"எல்லோரும் வீட்டுக்குள் வாங்க... நான் உங்களை எல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டேன்..." என்று கிண்டலாய் மொழிந்தபடி அவன் உள்ளே செல்ல...

சூர்யா, ஜெகதீஸ்வரி இருவரும் சம்யுக்தாவை அழைத்துக் கொண்டு சென்றார்கள்...

"இவனுக்கு உள்ள கொழுப்பைப் பார்... இவனை..." என்று கோபத்துடன் நகரப் போன சித்தார்த்தின் கைகளைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள் பிரகதீஸ்வரி...

"வேண்டாம் மாமூ... இந்தர் பாவம்..." மனைவியின் வார்த்தையில் அவனது விழிகள் இடுங்கியது...

"இந்தர் இவ்வளவு வேகத்தில் காரை ஓட்டிக்கிட்டு சம்யுக்கு முன்னாடி இங்கே வந்து நிற்கிறான்னா என்ன அர்த்தம் மாமூ...? இந்த உலகத்தைப் பொறுத்தவரை அவன் கெட்டவனா இருந்துட்டு போகட்டும்... இவ்வளவு ஏன் நமக்கும் கூட அவன் அப்படித்தான்... ஆனா நம் சம்யுவை பொறுத்தவரை அவன் நல்லவன் தான்... நமக்கு அவளை ஐஞ்சு வருசமா தெரியும்... ஆனா யாருமே அவளுக்காக எதுவுமே செய்யலை, முயற்சிக்கலை... ஆனா இந்தர் இவ்வளவு குறுகிய நாட்களில் அவளுடைய தகுதிகளை

உயர்த்திக் காட்டியிருக்கான்... இது சாதாரண விசயம் இல்லை மாமூ..."

"நீ சொல்றது எல்லாம் சரி தான் ரதிம்மா... ஆனா அவள் வீட்டை விட்டுப் போகும் அளவுக்கு அங்கு என்ன பிரச்சினை நடந்தது...?"

எல்லோருமே சம்யுக்தா வீட்டை விட்டு வெளியில் செல்ல முனைந்தாள் என்றே நினைத்தனர்... ஆனால் அவள் தற்கொலை செய்து கொள்ளச் சென்றாள் என்று யாருக்குமே தெரியாது... இந்திரஜித்திற்குக் கூட இது தெரியாது...

"அது அவங்க தான் பேசி தீர்க்கணும் மாமூ... ஆனா ஒண்ணு மட்டும் உண்மை... சம்யுவோட காதலுக்குக் கொஞ்சமும் சளைச்சது இல்லை இந்தரோட காதல்..." என்ற மனைவியைக் கேள்வியாய்ப் பார்த்தான் சித்தார்த்...

"இந்தக் காலத்துப் பசங்களை நீங்களே பார்க்கிறீங்க... அவங்க அவங்க அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரியான பெண்ணைத் தான் அவங்க அவங்க தேடுறாங்க... ஆனா நம் இந்தர் அப்படியில்லை..."

"ஏன் நம் ஜிக்கி இல்லையா...?"

"மாப்பிள்ளை வசதி குறைவா இருந்தாலும் நல்லா படிச்சு நல்ல பதவியில் இருக்கிறார்... ஆனால் சம்யு...? படிப்பும் பெருசா கிடையாது, வசதியும் அதிகம் கிடையாது... அவள் எந்தவிதத்திலும் இந்தருக்குப் பொருத்தம் இல்லாதவள் தான்... ஆனால் இது எல்லாத்தையும் மீறி அவன் அவளைத் தன்னோடு கூட்டிட்டு போய் இந்தளவுக்கு அவளோட திறமையை ஊக்குவித்து அந்தஸ்தை உயர்த்திக் காட்டி அவள் கூட வாழ்ந்து இருக்கான்னா அது சும்மா இல்லை... அதுக்குப் பின்னாடி ஏதோ ஒரு விசயம் இருக்கு..."

சித்தார்த் மனைவியின் கூற்றை அப்படியே ஏற்றுக் கொண்டான்... ஏனெனில் அவன் கூடப் பிரகதீஸ்வரியைக் காதலித்தது தனது ஜிக்கியின் மறுவுருவமாய்க் கண்டதால்

தான்... இல்லை என்றால் அவனும் பட்டிக்காடு பெண்ணான அவள் பக்கம் தனது கண்களைத் திருப்பி இருப்பானா என்று அவனுக்கே சந்தேகம் தான்... காதலில் எல்லாம் சாத்தியம் தான்... ஆனால் அந்தச் சாத்தியத்தை அளித்தது அவனது ஜிக்கியின் பிம்பமே... அதை மறுப்பதற்கு இல்லையே...

ஆனால் மகன் அப்படியில்லையே... சம்யுக்தாவை நிறை குறைகளோடு அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறான்... இப்போதும் அவள் அவனது அந்தஸ்திற்கு உயர்ந்தாலும் படிப்பு, தோற்றம் என்று எல்லாமே அவனுக்குச் சற்று கீழே தான்... அதை யாராலும் மறுக்க முடியாது... அதே போல் மருத்துவமனையில் அவளிடம் மகன் காட்டிய உருக்கம் அவனுக்குப் புரியாத புதிர்... மகனின் இன்னொரு பக்கம் அவனுக்குத் தெரியும்... அதை வாய்மொழியாக இந்திரஜித்தும் கூறிவிட்டான்... ஆனாலும் மகனது இந்த உருக்கம் சற்று இடிக்கத் தான் செய்தது... எதனால் என்று அவனுக்குப் புரியவில்லை...?

"அந்த விசயம் உங்களுக்கும் தெரிந்திருக்கு..." என்றவள் நேர்ப்பார்வையாய் கணவனைப் பார்த்தாள்... அவனோ மனைவியைப் பார்க்க இயலாது கண்களை வேறு பக்கம் திருப்பினான்... அவனது முகத்தைத் தன் பக்கம் திருப்பிய பிரகதீஸ்வரி,

"எனக்கு இது பற்றித் தெரியுணும்ன்னு நினைச்சா நீங்களே சொல்வீங்க... எனக்கு இது தெரிய வேண்டாம்ன்னு நீங்க நினைச்சீங்கன்னா... இதுக்குப் பின்னாடி ஏதோ பெரிய காரணம் இருக்கும்ன்னு நான் நம்பறேன்... உங்களுக்கு எப்போ சொல்லணும்ன்னு தோணுதோ அப்போ சொல்லுங்க..." புரிதலுடன் கூறிய மனைவியை நன்றியுடன் பார்த்தான் சித்தார்த்...

"எல்லாம் சரி தான் ரதிம்மா... முடிந்து போனதை நாம் மாற்ற முடியாது... இனி நடப்பவை நல்லதாக இருக்கட்டும்... உன் மகனிடம் சொல்லி சம்யு கழுத்தில் தாலி கட்ட சொல்லு... இல்லை அவளுக்கு நானே வேறு கல்யாணம் பண்ணி

வைப்பேன்... இவன் செய்த தவறுக்கு அவள் சிலுவை சுமக்கத் தேவையில்லை... அது போல் தான் இந்தக் குழந்தையும்... அவளுக்கான புது வாழ்க்கைக்கு இந்தக் குழந்தை இடைஞ்சலா இருக்கும்ன்னா அதை அழிக்கவும் நான் தயங்க மாட்டேன்..." நரசிம்மனாய் மாறி சிங்கமாய்க் கர்ஜித்தான் சித்தார்த்...

"மாமூ, இந்தக் குழந்தை நம்ம வீட்டு வாரிசு..." என்று பெண்ணவள் கண் கலங்கினாள்...

"முறைப்படி வந்தால் மட்டுமே நாம் கொண்டாட முடியும் ரதிம்மா... இல்லைன்னா இது தான் என் முடிவு... இதில் உன் மகன் என்ன, நீயே தலையிட்டாலும் என் முடிவை நான் மாத்திக்க மாட்டேன்... அவன் கிட்ட சொல்லி வை..." என்றவன் விறுவிறுவென வீட்டை நோக்கி நடந்தான்...

பிரகதீஸ்வரி செய்வதறியாது திகைத்து நின்றாள்...

சம்யுக்தாவை ஓய்வு எடுக்க வேண்டி அவளது அறையில் விட்டு விட்டு ஜெகதீஸ்வரி சென்றுவிட, அவளோ முழங்காலில் முகம் புதைத்து தன்னுள் கரைந்தபடி அமர்ந்திருந்தாள்... அப்போது ஆதித்யாவைத் தூக்கியபடி மீண்டும் உள்ளே வந்தாள் ஜெகதீஸ்வரி...

"நினைச்சேன்... நீ இப்படி ஏதாவது யோசிப்பேன்னு..." என்றவள் நாத்தனார் கையில் சின்னவனைக் கொடுத்தாள்...

"ஆதி பங்காரம்..." கண்கள் கலங்க, கைகள் நடுங்க சின்னவனை வாங்கிய சம்யுக்தா அவனை வாரியணைத்துக் கொண்டு முத்தமிட்டாள்...

சின்னவன் முதலில் அவளை அடையாளம் தெரியாது விழித்தவன் பின் அவளது அழைப்பில், அவளது ஸ்பரிசத்தில் தனது சொந்தத்தை உணர்ந்தவனாய்,

"த்தை, த்தை..." என்று அவளை அடித்து, முடியை பிடித்துப் பிய்த்திழுத்து ஒருவழி பண்ணி விட்டான்...

"நன்னு ஷேமிச்சுக்கோ ஆதி பங்காரம்..." (என்னை மன்னிச்சிரு ஆதி பங்காரம்) என்று கூறியபடி அவள் சின்னவனை அணைத்து அவனைத் தனது முத்தத்தாலும், கண்ணீராலும் குளிப்பாட்டினாள்...

இந்த அன்பை விட்டு விட்டு அவள் புத்தி கெட்டு போனதற்கு அவளுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்... அவளது மனதிற்குள் அத்தனை வருத்தமாக இருந்தது... ஆதித்யா சிறிது நேரத்தில் தேம்பியபடி அவளது நெஞ்சில் முகம் புதைத்து ஆறுதல் அடைந்தான்... அவனது கைகள் அத்தையின் கழுத்தினை இறுக வளைத்துப் பிடித்திருந்தது...

இந்தக் காட்சியை அறை வாயிலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்தின் முகத்தில் சொல்லொண்ணா வேதனை நிறைந்திருந்தது... மெல்ல தான் வந்த சுவடு தெரியாமல் அங்கிருந்து விலகி சென்றான்...

"நீயில்லாமல் ஆதி சாப்பிடாம, தூங்காம ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிட்டான்..." மகனின் தலையை வருடியபடி ஜெகதீஸ்வரி கூற...

"நன்னு ஷேமிச்சண்டி வதின..."

"மன்னிக்க நீ என்ன தப்பா பண்ணின சம்யு...? எல்லாம் சரியாகும்... நீ சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு..." பாசத்தோடு நாத்தனாரின் தலையை வருடி கொடுத்தவள் அவளை உண்பதற்காக உணவு மேசைக்கு அழைத்துச் சொன்றாள்...

அங்கு இந்திரஜித்தும் அமர்ந்திருப்பதைக் கண்டு சம்யுக்தாவின் கால்கள் தயங்கியது... வேண்டாம் என்று விலகி வந்தவளைக் காந்தம் போன்று ஈர்க்க அவனால் மட்டுமே முடியும்...

"நீ வா சம்யு..." ஜெகதீஸ்வரி அவளை அமர வைத்து உணவு பரிமாற...

இந்திரஜித்தோ சம்யுக்தா என்கிற ஒருத்தி இல்லாதது போல் பாவனைச் செய்தான்... தனக்கு வேண்டியதைத் தானே தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு அவன் இயல்பாக உண்ண ஆரம்பித்தான்... அவள் தான் அவன் முன் சகஜமாக இருக்க முடியாதபடி தவித்துப் போனாள்... ஏதோ குற்றம் செய்தது போல் அவன் முன் அமரவே அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது... பேருக்குக் கொறித்து விட்டு அவசரமாய் எழுந்தவள் வாஷ்பேசினை நோக்கிச் சென்ற போது தான் இந்திரஜித் அவளை ஏறிட்டுப் பார்த்தான்... அவளைக் காண காண அவனது மனதில் பாரமேறியது... அதற்கு மேல் உண்ண முடியாது அவனும் எழுந்தான்...

அவள் கை கழுவி விட்டு வரும் போது அவன் அவள் எதிரில் வந்தான்... அவள் ஒரு பக்கமாய் நகர்ந்த போது அவனும் அதே பக்கம் நகர, அதைக் கண்டு அவள் வேறு பக்கம் செல்ல முயல அவனும் அந்தப் பக்கமாய் நகர்ந்தான்... அவன் மீது மோதி விடுவது போல் நின்றிருந்தவளைக் கண்டு,

"ஒரு பக்கமாய் இருக்கணும்... இப்படி அலைபாயும் மனதோடு இருக்கக் கூடாது..." இருபொருள்படக் கூறியவன் அவளின் பதிலை எதிர்பாராது அவளைக் கடந்து சென்றுவிட்டான்... அவள் கண்ணீர் மல்க தனது அறையை நோக்கிச் சென்றாள்...

இந்திரஜித் கார் சாவியை வலக்கையில் சுழற்றியபடி தனது அலுவலகத்திற்குச் செல்ல முயன்ற போது பிரகதீஸ்வரி அவனைத் தடுத்து நிறுத்தினாள்... அங்கு வரவேற்பறையில் எல்லோரும் கூடியிருந்தனர்... எல்லோரும் இருக்கும் போதே மகனிடம் பேசி விடுவது நல்லது என்றே அவளுக்குத் தோன்றியது...

"இந்தர், உன் கிட்ட முக்கியமான விசயம் பேசணும்..." அன்னையின் வார்த்தையில் அவளைக் கேள்வியாய் பார்த்தான் அவன்...

"நீ சம்யுவை கல்யாணம் பண்ணிக்கணும்..." இதைக் கேட்டு இந்திரஜித்தை விட மற்றவர்கள் அதிர்ந்தனர்... அவனோ கூல்லாக அன்னையைப் பார்த்தான்... சித்தார்த்தோ கூர்மையாய் மகனை கவனித்துக் கொண்டிருந்தான்...

"பண்ணலைன்னா...?" என்று தெனாவெட்டாய்க் கூறியவனின் பார்வை தந்தையைத் துளைத்தெடுத்தது... அவன் நினைத்தது போல் சித்தார்த் பொங்கி விட்டான்...

"ரதி, ஒண்ணு அவனைச் சம்யுவை கல்யாணம் பண்ண சொல்லு... இல்லைன்னா அவளது வயிற்றில் இருக்கும் கருவை அழிச்சிட்டு அவளுக்கு நாம் வேறு கல்யாணம் பண்ணி வைப்போம்ன்னு அவன் கிட்ட உறுதியா சொல்லு... முன்பாவது சம்யு அவன் பேச்சை கேட்டாள்ன்னு அவன் அந்த ஆட்டம் ஆடினான்... இப்போ சம்யு நம் பேச்சை தான் கேட்பாள்... அதையும் அவனிடம் சொல்லி வை..." தந்தையின் பேச்சில் அவனது நெஞ்சம் அதிர்ந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது அலட்சியமாய்,

"ஆஹான், அப்படியா... எங்கே அந்தப் பட்டிகாட்டைக் கூப்பிடுங்க பார்க்கலாம்... நீங்க சொன்னதுக்குச் சம்மதிக்கிறாளா என்று...?" என்றவனது திமிர் கொஞ்சமும் குறையவில்லை...

"ஜிக்கி, நீ போய்ச் சம்யுவை கூட்டிட்டு வாம்மா... இன்றோடு இவனோட மூக்கை உடைக்கிறேன்..." என்ற தகப்பனைக் கண்டு மகன் சிறிதும் அஞ்சவில்லை... தன்னவளின் காதலின் மீது அவனுக்கு அத்தனை நம்பிக்கை இருந்தது... அவளது காதல் இருக்கும் வரை அவன் எத்தகைய சூழ்நிலையையும் அசால்ட்டாகக் கையாள்வான்...

சம்யுக்தா அங்கு வந்து நின்றதும் சித்தார்த் தான் மகனிடம் கூறிய அதே வார்த்தைகளை அவளிடம் கூறினான்...

"நீ என்னம்மா சொல்ற...? முடிவு உன் கையில்..."

மாமனார் கூறிய வார்த்தைகளில் சம்யுக்தாவின் கைகள் அவளையும் அறியாது அவளது வயிற்றினைப் பற்றியது...

அவளது கண்கள் அச்சத்தைப் பிரதிபலித்தது... அதைக் கண்டு இந்திரஜித்தின் மனதில் நிம்மதி வந்தது... இனி தந்தை என்ன அந்த ஆண்டவனே வந்தாலும் அவனை அசைக்க முடியாது...

"ஈ பாபம் செய்யவட்டு..." (இந்தப் பாவம் செய்ய வேண்டாம்)

"இவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தானே சொன்ன...?" சித்தார்த் நக்கலாய்க் கேட்கவும் அவசரமாய் மறுத்தவள்,

"லேதண்டி மாமாகாரு (இல்லை மாமா)... ஆ கோசம் காது... (அதுக்காக இல்லை)"

அதைக் கேட்டு இந்திரஜித்தின் இதழ்களில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது... நல்லவேளை எல்லோரும் சம்யுக்தாவை திகைத்துப் போய்ப் பார்த்து கொண்டிருந்ததால் யாரும் அவனைக் கவனிக்கவில்லை...

"பிறகு வேறென்ன சம்யும்மா...?"

"குழந்தையை அழிக்க வேண்டாம்... அது எனக்கு வேணும்..."

இப்போது இந்திரஜித் நிமிர்வாய்த் தந்தையைப் பார்த்தான்... அத்தனை கர்வம் வழிந்தது அவனது விழிகளில்...

"அப்போ நீ இந்தரை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமா...?" சித்தார்த்திற்குச் சம்யுக்தா பதில் சொல்லும் முன் முந்தி கொண்ட இந்திரஜித்,

"ஒருத்தன் எத்தனை தடவை தான் கல்யாணம் பண்ண முடியும்...? என்னை ஜெயிலுக்கு அனுப்பணும்ன்னு முடிவு பண்ணிட்டீங்க போலிருக்கு..." என்று அவன் போலியாக அலுத்துக் கொண்டான்...

அதைக் கேட்டு சம்யுக்தாவின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது... அவளால் அழுகையை அடக்க முடியாது சற்றுச் சத்தமாக விம்மிவிட்டாள்... அந்தச் சத்தத்தில்

திரும்பி பார்த்த இந்திரஜித்தின் விழிகளில் வேதனை வழிந்தது... ஆனாலும் அவனுக்கு ஏதோ ஒன்று புரிவது போல்... புரிந்த விசயம் தான் அவனுக்குச் சரியாகப் புலப்படவில்லை...

எல்லோரும் அதிர்ந்தனர் என்றால் சித்தார்த் கோபத்துடன் மகன் அருகில் வந்து அவனது சட்டையைப் பிடித்து விட்டான்...

"என்னடா சொல்ற...?"

"உண்மையைச் சொன்னேன்..." என்றவனது பார்வை அழுத்தமாய் மனைவியைப் பார்த்தது... அவளது கண்ணீரில் அவனது மனம் உப்புக் கல்லாய்க் கரைந்தது... நொடியில் தன்னைத் தேற்றி கொண்டவன்,

"ஆ ஊன்னா சட்டையைத் தான் பிடிப்பீங்களா...? வயசானாலே இது தான் பிரச்சினை..." என்று அவன் தகப்பனைக் கேலி பண்ணியபடி தனது சட்டையைச் சித்தார்த்தின் பிடியில் இருந்து அகற்றினான்...

தந்தையிடம் இருந்து அவன் விலகிய அடுத்த நொடி பிரகதீஸ்வரியின் கை அவனது கன்னத்தைப் பதம் பார்த்தது... ஆனால் அதற்கு எல்லாம் அவன் சற்றும் அசரவில்லை... அவன் அமைதியாக அடியை வாங்கிக் கொண்டு அழுத்தமாக நின்றிருந்தான்...

"அப்போ எதுக்குடா சம்யு வாழ்க்கையைக் கெடுத்த...? இப்போ அவள் வயித்தில் வளரும் குழந்தைக்கு யார் அப்பான்னு நாங்க சொல்ல...? தெருவில் போகிறவனையா...? இல்லை அநாதை குழந்தைன்னா..."

தந்தையின் வார்த்தைகளைத் தைரியமாக எதிர் கொண்டவனுக்குத் தாயின் வார்த்தைகளில் அவனது நெஞ்சில் உதிரம் வடிந்தது... ஆனாலும் அசராது அந்த வலியைத் தாங்கி நின்றவன்,

"நான் அவள் கிட்ட பேசணும்..." என்றான் விறைப்பாக...

"பேசு..." என்று கூறிய அன்னையை உற்றுப் பார்த்தவன்,

"தனியா..." என்றவன் யாரின் அனுமதியும் வேண்டாது சம்யுக்தாவின் கையைப் பற்றி அருகில் இருந்த ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றான்... அவளோ பலியாடு போல் அவன் பின்னே சென்றாள்...

அறைக்குள் அவளை அழைத்துச் சென்றவன் அறை கதவை தாழிட்டு விட்டு அதன் மீது சாய்ந்து நின்று கொண்டு இரு கைகளைக் கட்டியபடி அவளை அழுத்தமாய்ப் பார்த்தான்... அதில் அவளது மேனி பயத்தில் நடுங்கியது... அவனது பார்வையைத் தாங்க முடியாது அவளது தலைத் தானாகக் குனிந்து கொண்டது... அவளது பெண்மையின் மென்மையில் அவனது முகம் மென்மையானது...

"நான் வேண்டாம்ன்னு நீ தான் பிரிஞ்சு வந்திருக்க... நான் இல்லை..."

அவனது வார்த்தைகளில் அவளது விழிகளில் கண்ணீர் உடைப்பெடுத்தது...

"இப்போ வீட்டில் கேட்கும் கேள்விக்கு உன்னோட பதில் என்ன...?"

அதற்கும் அவள் மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்...

"நீயும், நானும் கல்யாணம் பண்ணிக்க முடியுமா...?"

அவன் கேட்டதோ வேறு அர்த்தத்தில்... அவள் புரிந்து கொண்டதோ வேறு அர்த்தத்தில்... அவளது தலை துயரத்தோடு 'இல்லை' என்று மறுப்பாய் அசைந்தது...

"குட்... அதை அப்படியே உன்னோட மாமனார், மாமியார் கிட்ட வந்து சொல்லியிரு... இல்லை எல்லாத்துக்கும் என் தலையைப் போட்டு உருட்டுவாங்க... அதுக்கு நான் ஆளில்லை..." என்றவன் அசால்ட்டாய்த் தோளை குலுக்கி கொண்டான்...

"ம்..." என்று மெதுவே கூறியபடி அவள் தலையாட்ட,

"என்ன சொன்ன...? எனக்குச் சரியா கேட்கலை....?" என்றான் அவன் நமட்டு சிரிப்புடன்...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது விழியோடு விழி கலந்து உறைந்து போய் நின்றாள்... அவனும் அவளது விழி வீச்சில் மனம் மயங்கி தவித்தான்... அவன் எல்லாத் தடைகளையும் மீறி அவளை அணைத்து மனதில் இருப்பது அனைத்தையும் அவளிடம் கொட்டி விட்டால் போதும் அவள் அடுத்தக் கணம் அவனை ஏற்றுக் கொள்வாள் தான்... ஆனால் அவனது பிடிவாதம் கொண்ட காதல் மனமோ அவள் தானே வர வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து ஏங்கியது...

ஏனெனில் அவள் தானே அவன் வேண்டாம் என்று அவனை விட்டு விட்டு தனியே பிரிந்து வந்தாள்... இன்னொரு முறை அவளது புறக்கணிப்பைத் தாங்கும் சக்தி அவனுக்கு இல்லை... அதற்கு இப்போது அவன் மேற்கொள்ள இருக்கும் ரணச் சிகிச்சையின் வலி பரவாயில்லை என்றே அவன் நினைத்தான்...

"பதில் சொல்லு..."

"இனி நான் உங்க வாழ்க்கையில் வர மாட்டேன்னு சொல்லிர்றேன்..."

அதைக் கேட்டு அவனது மனம் மிகவும் வலித்தது... இப்போது காதலை உணர்ந்த அவனுக்கே இப்படி வலித்தால் ஐந்து வருடங்களாகத் தன்னைக் காதலிக்கும் அவளுக்கு இந்த வார்த்தைகள் எப்படி வலிக்கும் என்பதை உணர்ந்தவனாய் சற்று நேரம் அமைதியாக இருந்தான்... நிச்சயம் அவன் மீதிருக்கும் காதல் தாங்காது அவன் தான் அவளுக்கு எல்லாம் என்பதை உணர்ந்து ஒரு நாள் இல்லை ஒரு நாள் அவளே தன்னைத் தேடி வருவாள் என்று அவனுக்கு அதீத நம்பிக்கை இருந்தது...

"குழந்தையும் தானே..."

"ஆமாம்..." என்றாள் உறுதியாக... அதைக் கேட்டு அவனது விழிகளில் சிறு மெச்சுதல் வந்தது... அது அவளது தன்மானத்தை நினைத்து...

"ரொம்ப நல்லது... நாளை பின்னே நான் வேறு கல்யாணம் பண்ணுவதற்கு நீயோ, ந..." 'நம் குழந்தை' என்று கூற வந்தவன் சற்று நிதானித்து,

"நீயோ, உன் குழந்தையோ அதுக்குத் தடையாக இருக்கக் கூடாது... அதுக்காகத் தான் கேட்கிறேன்..."

அவனது வார்த்தையில் விலுக்கென்று நிமிர்ந்தவள் அவனைப் பார்த்துக் கண் கலங்கினாள்... எதையோ சொல்லத் துடித்தது அவளது இதழ்கள்... துடிக்கும் அவளது இதழ்களை அணைத்துச் சமாதானப்படுத்த எண்ணி பதிலுக்குக் கலங்கி துடித்தது அவனது இதழ்கள்... உதட்டை இறுக கடித்துக் கொண்டு அமைதியாக நின்றவனின் மனதில் அவளது தவிப்பிற்கான காரணம் என்னவென்று விளங்கவில்லை...

"வெளியில் வந்து உன் பதிலை சொல்லிவிடு..." என்றவன் அறை கதவை திறந்து கொண்டு வெளியில் சென்று விட்டான்... அவள் அமைதியாக அவனைப் பின்தொடர்ந்து வந்தாள்...

வரவேற்பறையை வந்தடைந்ததும் அவளைத் திரும்பி பார்த்தவன், "ம்... சொல்லு..." என்று அவளை ஊக்குவித்தான்...

"எல்லோரும் என்னை மன்னிக்கணும்... எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்... என்னை, என் குழந்தையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... நானும், என் குழந்தையும் இவரோட இன்னொரு வாழ்க்கைக்குத் தடையாக இருக்க மாட்டோம்... இது என்னோட குழந்தை மீது..." 'சத்தியம்' என்கிற வார்த்தையை அவள் சொல்லும் முன் அவளது வாயைக் கைக் கொண்டு மூடிய இந்திரஜித்,

"நீ இவ்வளவு சொன்னதே போதும்... அவங்களுக்கு நல்லா புரிஞ்சிருக்கும்..." என்றவன் அதற்கு மேல் அங்கிருக்க இயலாது வெளியேறி விட்டான்...

இருவரது போக்குக் கண்டு வீட்டினர் எல்லோரும் துக்கம் கொண்டனர்... யாரும் யாரிடமும் எதுவும் பேச முடியவில்லை...

மீண்டும் அறைக்குள் வந்த சம்யுக்தாவோ கணவனது நினைவில் தாலியைப் பிடித்துக் கொண்டு ஊமையாகக் கதறியழுதாள்... அவன் தன்னை வந்து சந்தித்தது, இப்போது உடன் அழைத்துப் போனது எல்லாம் அவன் காதலால் செய்தான் என்றல்லவா அவள் நினைத்து இருந்தாள்... ஆனால் அது இல்லை என்பது இப்போது தானே தெரிகிறது... பழிவாங்க எண்ணி சற்றும் பொருத்தம் இல்லாத தன்னைக் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றிய அவனது செயலை அவளால் ஜீரணிக்க முடியவில்லை... அதற்குப் பின் ஐந்து வருடங்கள் கழித்து வந்தும் அவனது பழிவாங்கும் வெறி சிறிதும் அடங்கவில்லையே... ஏன் இப்படிச் செய்தான் என்பதை அறிந்தவளாய் அவள் மனம் குமுறி அழுதாள்...

அந்த நிலையிலும் அவன் தன்னைக் கோபுரத்தின் உச்சியில் ஏற்றி வைத்ததை அவள் மறக்கவில்லை... அதற்கு என்ன காரணம் என்றும் அவளுக்குச் சற்றும் விளங்கவில்லை... அவளுக்கு விளங்கியது எல்லாம் அவனுடைய தகுதிக்கு ஏற்றார்ப் போன்று தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டானோ என்பது மட்டுமே... அதாவது வெற்றுக் களிமண்ணை அவள் சிலையாகச் சமைவது போல், சம்யுக்தா என்னும் வெற்றுக் களிமண்ணை அவன் விருப்பத்திற்கு ஏற்றார்ப் போன்று மாற்றியமைத்துக் கொண்டான்... அவளும் மதி கெட்டுப் போய்க் காதல் மயக்கத்தில் அவன் கூறியது அனைத்திற்கும் சரி, சரி என்று தலையசைத்தாளே... அவளுக்குத் தன் மீதே கழிவிரக்கம் தோன்றியதில் அழுகை அடக்க மாட்டாது பீறிட்டுக் கொண்டு வந்தது...

"இவ்வளவு உயரத்தில் ஏற்றி விட்டு இப்படித் திடுமெனக் கீழே தள்ளி விட்டிருக்க வேண்டாம் பாவா... ரொம்ப வலிக்கிறது... கடைசியில் என்னுடைய காதலே என்னைப் பலகீனமாக்கி விட்டது... இப்படியொரு காதல் எனக்கு வந்திருக்கவே வேண்டாம்..." என்று அவள் மனதிற்குள் புலம்பியபடி அழுது கரைந்தாள்...

அவளது மனம் கடந்த காலத்திற்குப் பயணப்பட்டது... அவளது அத்தனை ரணத்திற்கும் அது ஒன்றே மருந்து என்பது போல்... இனிமையான அந்த நிகழ்வுகளில் அவள் சுகமாய் மூழ்கிப் போனாள்... அவனது காதல் உண்மையோ? பொய்யோ? எதுவாக இருந்தாலும் அப்போது அவனது காதலில் அவள் அவ்வளவு சந்தோசமாகத் திளைத்திருந்தாள்... அது மறுக்க முடியாத உண்மையே...

அலுவகத்தில் வந்தமர்ந்த இந்திரஜித்தின் மனதிலும் மனைவியைப் பற்றிய யோசனைகளே... அவள் தன்னிடம் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் அவன் அசை போட்டுக் கொண்டிருந்தான்... அவனைப் பற்றிய விசயம் எதுவோ அவளுக்குத் தெரிந்திருக்கிறது... ஆனால் அது என்ன, எப்படி என்று தான் அவனுக்குத் தெரியவில்லை...

அந்தக் கணம் அவனுள்ளும் கடந்த காலம் சுகமாய் விரிந்தது... பழிவாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு ஆத்திரத்துடன் சந்திக்கச் சென்ற பெண்ணிடத்தில் அவனையும் அறியாது காதலில் விழுந்த கதையை நினைத்துப் பார்த்தவனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

அனைத்து முரண்பாடுகளையும் தாண்டி அவர்களுக்குள் துளிர்த்த காதல் அந்தக் காவிய காதலுக்குச் சற்றும் சளைத்ததல்ல... ஒரு மனம் அறிந்து காதலில் விழுந்தது... இன்னொரு மனம் அறியாது காதலில் விழுந்தது...!!!

தொடரும்...!!!

ஆந்திர பிரதேசத்திலுள்ள பெனுமுலி என்ற கிராமத்தில் வந்து நின்ற பேருந்தில் இருந்து இறங்கினான் இந்திரஜித்... அவன் முன்னே பின்னே இங்கு வந்தது கிடையாது... இங்கு அவனுக்கு யாரையும் தெரியவும் செய்யாது... ஆனால் முகம் தெரியாத பெண் ஒருத்தியின் தலையெழுத்தை மாற்ற எண்ணி அவன் மனதில் தீரா பகை கொண்டு இங்கு வந்திருக்கிறான்... பார்த்தறியா அந்தப் பெண்ணிடத்தில் அவனுக்கு அத்தனை வன்மம் இருந்தது...

தோளில் இருந்து சரிந்த பையை எடுத்து சரி செய்தபடி அவன் அந்த ஊருக்குள் நடந்தான்... அவனுக்கு அந்தப் பெண்ணவள் முகவரி தெரியாது... அவளது பெயர் சம்யுக்தா மற்றும் அவளது குலத்தொழில் மண்பாண்டங்கள் செய்வது என்பது மட்டுமே தெரியும்... அதற்கு மேல் அவளைப் பற்றி அவன் அறிந்து வைக்க வேண்டிய தேவை அவனுக்கு இல்லை...

சிறிய ஊராக இருந்த போதும் இதில் அவளை எங்கே போய்த் தேடுவது என்று அவனுக்குச் சற்று மலைப்பாக இருந்தது... அவளது பெயரை சொல்லி விசாரித்தும் அவன் தேட முடியாது... அதனால் அவன் தனது விசாரணையை மண்பாண்டங்கள் செய்யும் இடம் பற்றித் தெரிந்து கொள்வது போல் ஆரம்பித்தான்... நல்லவேளையாக அந்த ஊரில் மொத்தம் ஐந்து குடும்பங்கள் மட்டுமே இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தது... ஒவ்வொன்றாய் விசாரித்து இறுதியில் அவளைக் கண்டுபிடித்து விடலாம் என்று அவன் நம்பிக்கை கொண்டு நடந்தான்...

முதல் நான்கு வீட்டிற்குச் சென்று விசாரித்த போது இது அவளது வீடு இல்லை என்று அவனது மனம் உறுதியாக அடித்துக் கூறியது... பிறகு அதுவே சரியாக இருந்ததும் உள்ளுக்குள் தன்னை மெச்சி கொண்டே அவன் கடைசியாக ஐந்தாவது வீட்டை நோக்கி நடந்தான்... தான் மனதில் நினைத்ததைச் செயல்படுத்த எண்ணி யோசித்துக் கொண்டே அவன் சற்று நிதானமாய் நடந்தான்...

ஊரை விட்டு சற்றுத் தள்ளியிருந்த தரிசு நிலத்திற்கு மத்தியில் சம்யுக்தாவின் சிறு ஓட்டு வீடு இருந்தது... வீட்டிற்குச் சுற்று சுவர் கூட இல்லாது படலை போன்று கம்பு, ஓலை தட்டி கொண்டு வேலி கட்டப்பட்டிருந்தது... யோசனையுடன் தட்டி போன்ற கதவு முன் நின்றவன் யாரை, எப்படி அழைப்பது என்று தெரியாது திகைத்தான்... அப்போது அந்த ஓலை தட்டியில் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த சிறு உலோக மணி அவனது கவனத்தை ஈர்த்தது... அதை அவன் லேசாக அசைத்து இசைத்து யாராவது வருகிறார்களா என்று வீட்டினை உற்றுப் பார்த்தான்...

சில நிமிடங்கள் வீட்டின் வலப்பக்க மூலையில் இருந்து ஒரு இளம்பெண் யோசனையுடன் இவனைப் பார்த்தபடி வந்தாள்... இதுவரை வீட்டினுள் தனது பார்வையைச் செலுத்தி கொண்டிருந்தவன் இப்போது தான் அவளைக் கவனித்தான்... கால்களில் எல்லாம் சகதி போல் மண் அப்பியிருக்க, சாயம் போன பாவாடையைத் தூக்கிச் சொருகிக் கொண்டு, ஆண்கள் அணியும் சட்டையை அணிந்து கொண்டு முகத்தில், கைகளில் ஆங்காங்கே மண்ணை அப்பிக் கொண்டு, வியர்க்க விறுவிறுக்க அவன் முன் வந்து நின்றவளைக் கண்டு ஏனென்று தெரியாது அவனுக்கு அத்தனை வெறுப்பாக, அருவருப்பாக இருந்தது...

"மீரு எவரு (யார் நீங்க?)... மீக்கு எவரு காவாலி (உங்களுக்கு யார் வேணும்?)..."

அவளது தெலுங்கு புரியாது அவன் மனதிற்குள் வெகுண்டான்... 'என்னைப் பார்த்தால் காவாலி மாதிரியா தெரிகிறது' என்று...

நல்ல நெடு நெடு உயரத்தில், சிவந்த நிறத்தில், தாடையில் லேசாக முளைத்திருந்த ரோமங்களுடன் பார்க்க அழகாக, கம்பீரமாக நாயகன் போன்று இருந்தவனைக் கண்டு அவளுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது... இவனைப் போன்ற ஆட்களை எல்லாம் அவள்

திரைப்படங்களில் தான் பார்த்திருக்கிறாள்... இந்தக் கிராமத்தில் இவ்வளவு அழகோடு யாரும் கிடையாது... அதனால் அவன் அவளுக்குப் பெருத்த ஆச்சிரியத்தை உண்டு பண்ணினான்...

"ஐ வான்ட் டூ மீட் மிஸ்...?" என்று அவன் இழுக்கும் போதே...

"நாகு இங்கிலீஷ் தெளியது..." (எனக்கு ஆங்கிலம் தெரியாது) என்று அவள் அறியாமையுடன் உதட்டை பிதுக்கினாள்...

"சுத்தம்..." என்று அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்...

"ஐ, நீங்க தமிழா...?" தாய்மொழி பேசும் ஒருவனைக் கண்டதும் அவள் சந்தோசத்தில் துள்ளி குதித்தாள்... ஆம், அவளது அன்னை சுத்த தமிழச்சி... ஆனால் அவளது தந்தையோ சுந்தரத் தெலுங்கர்...

பஞ்சம் பிழைப்பதற்காக ஆந்திரா வந்த அவளது அன்னை இந்த ஊருக்கு வேலைக்கு வந்த போது அவளது தந்தையைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு இங்கேயே தங்கி விட்டார்... அவர்களது காதல் வாழ்க்கைக்குக் கிடைத்த நல்முத்து தான் சம்யுக்தா...

"தேங்க் காட்..." என்று கடவுளுக்கு நன்றி கூறியவன்,

"இங்கே சம்யுக்தான்னு..." என்று இழுக்க...

"நேனே சம்யு..." (நான் தான் சம்யு) அவளது பாவனையில், அவளது பெயரில் அவள் தான் சம்யுக்தா என்று உணர்ந்து கொண்டவன்,

"ஹான்... ரொம்ப நல்லதா போச்சு..." என்று பெருமூச்சு விட்டவன்,

"உங்கண்ணா சூர்யா..." அவன் சொல்லு முன்,

"அவ்வுனு நா அண்ணய்யா..." (ஆமாம், என் அண்ணா) என்றவளின் முகம் மலர்ந்தது...

"உங்கண்ணா கல்யாணம் பண்ணிக்கப் போகும் பெண்..."

"நா வதின ஜெகதீஸ்வரி..." அவளது முகம் இன்னமும் பிரகாசித்தது... அக்காவை பற்றிக் கூறியதும் அவளது முகம் பிரகாசித்ததைக் கண்டு தம்பியவனின் முகமும் மலர்ந்தது...

"நான் அவங்களோட தம்பி..."

"வதின தம்முடு... ஓ, பாவாகாரு..." (அண்ணியோட தம்பி... ஓ, அத்தான்... 'பாவாகாரு மரியாதையான விளிப்பு') அவள் அவனது குடும்பத்தில் மற்றவர்களைப் பார்த்திருக்கிறாள்... ஆனால் இந்திரஜித்தை மட்டும் அவள் பார்த்தது இல்லை...

"ரண்டி... லோபல்ல ரண்டி..." (வாங்க, உள்ளே வாங்க) என்றபடி அவள் படலையைத் திறந்து விட்டாள்...

"மீரு இக்கட கூர்சுந்தாரு..." (நீங்க இங்கே உட்காருங்க) என்று வீட்டு திண்ணையைச் சுட்டிக்காட்டி அவனை உட்காரச் சொன்னவள்,

"செல்லி, நுவ்வு பாவாகாரு கோசம் நீலு இஷ்ட்டாவு..." (தங்காய், நீ அத்தானுக்குத் தண்ணி எடுத்துட்டு வா) அங்கிருந்த சின்னப் பெண்ணிடம் அவள் கத்தி கூறினாள்... ஏனெனில் அவளது கைகளில் மண் ஒட்டி இருந்தது...

அவளது கூச்சல் கேட்டு இந்திரஜித் காதை மூடிக் கொண்டான்... 'பட்டிக்காடு, பட்டிக்காடு' என்று அவன் மனதில் அவளை வைது கொண்டான்... அந்தச் சின்னப் பெண் சொம்பு நிறையத் தண்ணி கொண்டு வந்து அவன் முன் வைத்து விட்டுப் போனாள்...

"குடிங்க..." என்றவளைக் கண்டு பெயருக்கு ஒரு மிடறு குடித்தவன் பின்பு சொம்பைக் கீழே வைத்தான்... தான் வந்த விசயத்தை எப்படிச் சொல்வது, எப்படி ஆரம்பிப்பது என்று அவன் தனக்குள் யோசனையில் மூழ்க...

"பாவாகாரு... எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு... முடிச்சிட்டு வந்திர்றேன்..." அவள் கூறியதும் அவன் நிம்மதி

பெருமூச்சு விட்டவனாய் அவளிடம் சம்மதமாய்த் தலையசைத்தான்...

அவள் நிம்மதியுடன் அங்கிருந்து அகன்றாள்... செல்லும் அவளை அவன் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் அந்தச் சிறு பெண்ணுடன் சேர்ந்து நீர் ஊற்றி ஊற வைத்திருந்த களிமண்ணைக் கால்களால் மிதித்துப் பக்குவப்படுத்த ஆரம்பித்தாள்... அதை அவனது விழிகள் அருவருப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது...

மண்ணை மிதித்துக் கொண்டிருக்கும் இந்தப் பெண் தனக்கு எந்த விதத்தில் பொருத்தம் என்று தந்தை இவளை தன் தலையில் கட்ட துணிந்தார் என்று அவனுக்குத் தந்தையை நினைத்து அப்படியொரு ஆத்திரம் வந்தது... தந்தையின் முடிவை அவனால் சற்றும் ஜீரணிக்க முடியவில்லை... அதுவும் இருபது வயதில் திருமணம் நிச்சயம் செய்ய வேண்டியதன் அவசியம் தான் என்ன...? அந்தக் காரணத்தை நினைத்ததும் அவனது முகமும், மனதும் கல்லாய் இறுகிப் போனது...

'எதை நினைத்து நீங்க அதைச் செய்தீங்களோ... அது இந்த ஜென்மத்தில் நடக்காதுப்பா... இந்தப் பட்டிக்காட்டையா என் தலையில் கட்ட பார்க்கிறீங்க... உங்க நினைப்பு ஒரு போதும் நிறைவேறாது... இதுக்கு எல்லாம் இன்றோடு ஒரு முடிவு கட்டுறேன்...' அவன் மனதில் கோபமாய்க் கூறியபடி அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

சிறிது நேரத்தில் சம்யுக்தா கை, கால்களைக் கழுவி கொண்டு அவனை நோக்கிப் புன்னகையுடன் வந்தாள்...

"கொஞ்ச நேரம் பொறுத்துக்கோங்க... சமைச்சிட்டு வர்றேன்..." என்றவள் வீட்டினுள் சென்றாள்...

அவள் சென்றதும் அவன் அந்த வீட்டினைக் கண்களால் அளவெடுத்தான்... திண்ணை, தாழ்வாரம் மற்றும் சமையல்கட்டு மூன்றும் ஓடு வேயப்பட்டு இருந்தது... நடுவில் இருந்த அறை மட்டுமே கான்க்ரீட் போடப்பட்டு

இருந்தது... வீட்டைப் பார்க்கும் போதே தெரிந்து போனது அதன் ஏழ்மை நிலை... ஏழ்மையை எள்ளி நகையாடும் பண்பில்லாதவன் அவன் கிடையாது... அவனது அன்னையின் வளர்ப்பு அப்படிப்பட்டதும் இல்லை... ஆனால் தந்தை விதைத்திருந்த குரோதம் அவனது மனதில் இகழ்ச்சியை விதைத்திருந்தது...

"ஏய் கருப்பி நில்லு... ஓடாதே..." என்று கத்தியபடி சம்யுக்தா ஒரு கருநிற நாட்டு கோழியைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தாள்... அதுவோ அவளது கைகளில் அகப்படுவேனா என்று அவளுக்குப் போக்குக் காட்டியது...

"ஒழுங்கு மரியாதையா வந்திரு..." என்று அவளைப் பார்த்து நக்கலாய் தலையை ஆட்டிக் கொண்டிருந்த கோழியின் முன் இடுப்பில் இரு கைகளை வைத்தபடி நின்று கொண்டு அவள் முறைக்க... அதுவோ அவளது பக்கவாட்டில் குடுகுடுவென்று ஓடி அவளுடன் ஓடிப் பிடித்து விளையாட ஆசை கொண்டது...

இந்த விளையாட்டைக் கண்டு அவனையும் அறியாது அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது... விழிகளில் சுவாரசியம் பொங்க அவன் இந்த விளையாட்டைப் பார்த்திருந்தான்... அந்தக் கணம் அவன் வந்த நோக்கம் கூடப் பின்னுக்குப் போய்விட்டது...

வைக்கோல் படப்பிற்கு மேல் ஏறிக் கொண்டு போக்கு காட்டிய கோழியைக் கண்டு கோபமாய் முறைத்தபடி பம்மி பம்மி மெதுவே அதன் மீது ஏறியவள் லாவகமாய்க் கோழியைப் பிடித்துத் தனது கைகளில் ஏந்திக் கொண்டு,

"எங்கிட்டேயா உன் சாகசத்தைக் காட்டுகிற... பிச்சிருவேன் பிச்சி..." என்று மிரட்டியவள் குதூகலமாய்க் குதித்தபடி கீழிறங்க முயன்ற போது அப்படியே சரிந்து கீழே விழுந்தாள்...

"ஹேய்... பார்த்து, பார்த்து..." இயல்பில் கனிவு மனம் கொண்ட இந்திரஜித் அவள் விழுந்ததில் பதறிப் போய் எழுந்தான்...

ஒரு கையில் கோழியைத் தூக்கியபடி மறு கையால் உடம்பில் ஒட்டியிருந்த வைக்கோலை எடுத்து விட்டபடி அவள் எழுந்து நின்றாள்... தலை எல்லாம் ஆங்காங்கே வைக்கோல் குத்தி கொண்டு அவள் நின்றிருந்த அழகைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்து விட்டான்... கொஞ்ச நாட்களாகச் சிரிப்பை மறந்திருந்தவன் இன்று தான் மனம் விட்டுச் சிரித்தான்... சிரித்துச் சிரித்து அவனது கண்கள் கலங்கிப் போனது...

"ஹி... ஹி..." என்று அவனைக் கண்டு அசடு வழிந்தவள் வெட்கம் கொண்டு வீட்டினுள் ஓடிப் போய் விட்டாள்...

சுமார் ஒரு மணி நேரம் கழித்துச் சம்யுக்தா அவனை உணவு உண்ண அழைத்தாள்... அங்கு உணவு உண்பதா என்று அவன் மனதிற்குள் யோசித்தபடி திரும்பியவன் அங்கு நின்றிருந்த சம்யுக்தாவைக் கண்டு பிரமித்துப் போனான்...

மாநிறத்தில், பாவாடை தாவணியில் பாந்தமாய் இருந்தவளின் சுடர்விடும் அழகு அவனுள் சொட்டு சொட்டாய் இறங்கியது... அப்போது மனம் வறண்டு இறுகிப் போயிருந்தவன் அதைச் சுத்தமாய் உணராது போனது தான் துரதிர்ஷ்டம்... தலைக்குக் குளித்திருந்த நீண்ட ஈரக் கூந்தலின் நுனியை மட்டும் சிறு முடிச்சு போட்டு இறுக்கி இருந்தாள்... நெற்றியில் வட்டமாய்ச் சிவப்பு நிற பொட்டு வைத்து அதன் மீது சிவப்பு நிறத்தில் நாமம் போன்று நீண்ட கோடு ஒன்றினை மேல் நோக்கி இழுத்திருந்தாள்...

அன்னையைப் போன்று அடக்கமான அழகுடன் மனதிற்கு நிம்மதியைக் கொடுத்தவளை அவன் இமைக்க மறந்து பார்த்திருந்தான்... அந்தக் கணம் முதல் அவள் அவனது மனதினில் ஆழப்பதிந்து இருக்க வேண்டும்... அன்று அவன் அதை உணராதது விதியின் சதியோ...? அன்னையைப் போன்று பெண் வேண்டும் என்று ஊரெல்லாம் தேடியவன் இங்குத் தான் முதன்முதலில் அன்னையின் சாயலில் ஒரு பெண்ணைப் பார்க்கிறான்...

"பாவாகாரு, மீரு போஜனம் தினதாநிக்கி வஸ்தாரு..." (அத்தான், நீங்க உணவு உண்ண வாங்க) அவள் அழைக்க...

அதில் தன்னுணர்வு பெற்றவன் மந்திரித்து விட்ட கோழி போல் அவள் பின்னே சென்றான்...

கைக் கழுவி விட்டு அமர்ந்தவனுக்குத் தலைவாழை இலை விரித்து உணவு பதார்த்தங்களை அடுக்கியவளைக் கண்டு அவன் ஆச்சரியமாக அவளை நிமிர்ந்து பார்த்தான்... அதில் அவளுக்குப் போக்கு காட்டிய நாட்டு கோழி குழம்பாய் உருமாறியிருந்தது...

அது போல் தான் தானும் அவளிடத்தில் அடங்காது ஆடிவிட்டு அவளிடத்தில் ஒரேடியாக அடங்கப் போகிறோம் என்று அந்த மூடனுக்கு அப்போது தெரிந்து இருக்கவில்லை... என்ன செய்வது விதி வலியது...!!!

"சாப்பிடுங்க... நீங்க எங்க வதின தம்முடு... உங்களை நல்லா கவனிச்சு அனுப்பணும்... இல்லைன்னா வதின மனசு கஷ்டப்படும் இல்லையா...?"

"அப்போ உன் அண்ணிக்காகத் தான் இந்தக் கவனிப்பா...?"

இதற்கு அவள் என்ன பதில் சொல்வாள்...? அண்ணன் மனைவியை வைத்துத் தானே அவனே அவளுக்குச் சொந்தம்... அவள் அவனைக் கண்டு சமாளிப்பாய்ச் சிரித்து வைத்தாள்...

அதுவரை பசியை உணராதவன் உணவின் நறுமணத்தில் இப்போது பசியை உணர்ந்தான்... பணக்காரனான அவன் நன்றாக உண்டு, உறங்கி பல நாட்களாகி விட்டது... அவன் பசியின் தீவிரத்தில் வேக வேகமாய் உணவை உட்கொள்ள ஆரம்பித்தான்... முதலில் நான்கு வாய் மளமளவென்று உண்டவனுக்குப் பிறகு தான் உணவின் அதீத காரம் தெரிந்தது... அவனது வாய் எல்லாம் காரத்தினால் எரிந்து போனது... அதில் அவனுக்கு நன்றாகப் புரையேறியது... தொண்டையைப் பிடித்துக் கொண்டு புரையேறி கஷ்டப்பட்டவனைக் கண்டு கண்கள் கலங்க அவன் அருகில் வந்தவள் சொம்பு நீரை எடுத்து அவன் கையில் கொடுத்து,

"குடிங்க..." என்றவள் அவனது தலையில் கை வைத்து மெல்லத் தட்டி விட்டாள்...

அவளது அருகாமையில், அவளது மேனியில் இருந்து வந்த சந்தன சோப் மற்றும் மஞ்சள் கலந்த நறுமணத்தில் அவன் தனது அன்னையின் அருகாமையை உணர்ந்தான்... அதில் அவன் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான்... நீரை குடிக்காமலே அவனுக்குப் புரையேறுவது நின்று போனது...

"ரொம்பக் காரமா இருக்கா...?" அவளது விழிகளில் தெரிந்த தவிப்பில் அவனது தலை மறுப்பாய் அசைந்தது... அவன் மறுத்து சொன்ன போதும் அவனது உதடுகள் சிவந்து காணப்பட்டதில் அவள் புரிந்து கொண்டவளாய்,

"கொஞ்சம் இருங்க..." என்றவள் அடுக்களையினுள் ஓடினாள்... மீண்டும் அவள் அங்கு வந்த போது அவளது கைகளில் வெண்ணெய் இருந்தது...

"இதைப் பூசிக்கோங்க... சரியா போயிரும்..." என்று அவள் அதை அவனிடம் நீட்டினாள்...

மண்பானையின் குளிர்ச்சியோடு இருந்த வெண்ணெய் அவனது எரிச்சலை சிறிது தணித்தது...

"தேங்க்ஸ்..." என்று அவனது உதடுகள் முணுமுணுத்தது... அதைக் கேட்டு அவள் பளிச்சென்று புன்னகைத்தாள்...

பிறகு அவனுக்கு என்று காரம் குறைவாய் சமைத்து எடுத்து வந்து அவள் அவனுக்குக் கொடுக்க அவன் நிம்மதியுடன் நிறைவாய் வயிறு நிறைய உண்டான்...

"நீங்க படுத்து ஓய்வு எடுங்க..." என்றவள் மேலே பேசாது அவனுக்குக் கயிற்றுக் கட்டிலைக் காட்டி விட்டு தனது வேலைகளைப் பார்க்க அவள் சென்றுவிட்டாள்...

இவளிடம் பேச வந்தால் இவள் இப்படி ஓடுகிறாளே என்று அவனுக்குப் பெரும் யோசனையாக இருந்தது... அப்போது வேப்பமரம் தென்றல் போன்று மென்மையாய்க் காற்றை அள்ளி வீசி அவனது விழிகளைச் சொக்கச் செய்தது... சில

நாட்களாய் தூக்கத்தினைத் தொலைத்திருந்தவனின் விழிகள் மெல்ல மூடலானது... அதில் ஆழ்ந்த உறக்கம் அவனை வந்து தழுவி  கொண்டது...

மாலை பொழுதில் சம்யுக்தா வந்து எழுப்பும் வரை அவன் எழும்பவில்லை...

"பாவாகாரு..." அவள் எழுப்பியதும் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தவனுக்கு அப்போது தான் தான் இருக்கும் சூழ்நிலை புரிந்தது...

"முகம் கழுவிட்டு வாங்க..."

அவளது பேச்சைக் கேட்டு அவன் எழுந்து செல்ல... அவள் வீட்டினுள் சென்றாள்... மீண்டும் அவன் திண்ணையில் வந்தமர்ந்ததும் அவள் காபியைக் கொண்டு வந்து அவனிடம் நீட்ட,

"நான் காபி குடிப்பதில்லை... பால் மட்டும் தான்..." என்று அவன் மறுத்தான்...

"ஷேமிச்சண்டி பாவாகாரு..." என்று மன்னிப்பு கேட்டவள் அவனுக்குப் பால் எடுத்து வர உள்ளே சென்றாள்...

'அடேய், நீ அவள் கிட்ட பேச வந்தியா...? இல்லை விருந்தாட வந்தியா...?' அவனது மனசாட்சி பொறுக்க மாட்டாது பொங்கி விட்டது... கடமையைச் செய்யாது இது என்ன வளவளவென்று இழுத்துக் கொண்டு என்று அதற்கு எரிச்சலாக இருந்தது போலும்...

அவள் பாலை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்ததும் அதை வாங்கியவன் குடித்துக் கொண்டே மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்... கம்பீரமான ஆண்மகன் சிறுபிள்ளை போன்று பால் குடிப்பது கண்டு சம்யுக்தா சட்டென்று சிரித்து விட்டாள்... பின் அவன் என்ன நினைப்பானோ என்று இரு கைகளால் தனது வாயைப் பொத்திக் கொண்டாள்... ஆனால் அவள் விழிகளில் வழிந்த குறும்பு அவளின் மனதினை அவனிடத்தில் காட்டிக் கொடுத்து விட்டது...

"எதுக்குச் சிரிக்கிற...? என்ன விசயம்...?"

"அது வந்து..." என்று சிறிது பயத்துடன் இழுத்தவளைக் கண்டு,

"சும்மா சொல்லு..." என்று புன்னகை புரிந்தவனைக் கண்டு,

"இப்படிப் பால் குடிச்சு தான் நீங்க மைதா மாவு கணக்கா இப்படி வெள்ளையா இருக்கீங்களா...?" என்று வியப்பும், சிரிப்புமாய்க் கேட்டவளைக் கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"ஹா... ஹா... நான் மைதா மாவா...? அது இந்தக் கோதுமை மாவு சொல்லக் கூடாது..." அவளது மாநிறத்தை சுட்டிக்காட்டி கூறியவன் வாய்விட்டுச் சிரித்தான்... அவன் சிரித்தது கண்டு அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது...

ஒருவழியாய் சிரிப்பு அடங்கியதும் அவளைத் திரும்பி பார்த்தவனின் முகத்தில் தீவிரம் எழுந்தது...

"நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"செப்பண்டி..." (சொல்லுங்க)

"நம்ம வீட்டில் நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் பேசி முடிவு பண்ணியிருக்காங்க... அது உனக்குத் தெரியுமா...?" அவனது விழிகள் அவளைத் துளைத்தெடுத்தது...

அதைக் கேட்டு அவள் மகிழ்வதற்குப் பதிலாக அவளது விழிகள் அச்சத்தினைப் பிரதிபலித்தது... 'இல்லை' என்பது போல் அவளது தலை தானாக மறுப்பாய் அசைந்தது... அவளது அச்சத்தினைக் கண்டு அவனது மனதில் சிறு நிம்மதி எழுந்தது... அப்போது அதை அவன் உணரவில்லை... உணர்ந்திருந்தால் அவளைப் போட்டு இந்தப்பாடு படுத்தி எடுத்திருக்க மாட்டான்...

"உன்னோட வயசென்ன...?"

"பதினெட்டு..."

"என் வயசு என்னன்னு உனக்குத் தெரியுமா...?"

"தெரியாது..." மெதுவே முனங்கியவளைக் கண்டு,

"இருபது..." என்றவன்,

"இது திருமணம் செய்யும் வயசா...?" என்று கேட்க...

அவளுடைய ஊரில் எல்லாம் அவளை விட வயது குறைந்த பெண்கள் பலருக்கு திருமணமாகி குழந்தைகள் கூட இருக்கிறது... அதை அவனிடத்தில் சொல்ல முடியாது அவள் அமைதி காத்தாள்...

"எனக்கு வாழ்க்கையில் நிறையச் சாதிக்கணும்... இப்போதைக்குக் கல்யாணம் பத்தி எல்லாம் நான் யோசிக்கலை..." முன்பு அவனது நிலைப்பாடு அப்படித் தான் இருந்தது... இப்போது எதிலும் ஒருவித பற்றற்ற நிலை...

"நீங்க சாதிப்பீங்க... அதுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்..." என்று மனமார வாழ்த்து சொன்னவளைக் கண்டு அவன் சிரித்தபடி நன்றியுரைத்தான்...

"இப்போதைக்குக் கல்யாணம் பண்ணும் எண்ணத்தில் நானில்லை... அதனால் நீ எனக்குக் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்..."

"நான் என்ன செய்யணும்...?"

"இப்போதைக்கு உன்னோட கல்யாணத்தைத் தள்ளிப் போடணும்..."

"ம்... சரி..."

அவன் கூறியதற்கு என்ன ஏது என்று கேட்காது ஒத்துக் கொண்டவளைக் கண்டு அவனது உள்ளம் குற்றவுணர்ச்சியில் தவித்தது... அதே போல் அவள் அவனை முழுவதுமாய் நம்பினாள்... சிறிதும் அவனை அவள் சந்தேகப்படவில்லை... பழி தீர்க்க வந்த இடத்தில்

குற்றவுணர்வுக்கு இடமேது... அதனால் தனது மனதைத் தேற்றிக் கொண்டவன்,

"உங்கண்ணா உனக்குக் கல்யாணம் பண்ணாம தான் மட்டும் கல்யாணம் பண்ண யோசிக்கிறார்... அது போல் பெண் எடுத்துப் பெண் கொடுக்கணும்ன்னு ஒரு முடிவோடு சொல்லிட்டார்... இதனால் என் அக்கா வாழ்க்கை பாதிக்கப்படுது... ஏன்னா என் அக்கா உங்கண்ணனை அந்தளவுக்குக் காதலிக்கிறாள்..."

இந்திரஜித் கூற கூற அவளது விழிகளில் கண்ணீர் நிறைந்தது... சூர்யாவின் அன்பில் அவளது உள்ளம் நெகிழ்ந்தது... அது தான் அவளுக்கு ஏற்கெனவே தெரிந்த விசயமாயிற்றே...

"அதனால் எங்க வீட்டில் இந்த முடிவுக்கு வந்திருக்காங்க... ஏற்கெனவே நான் என் முடிவை உன் கிட்ட சொல்லிட்டேன்... இப்போ நான் என்ன பண்றதுன்னு நீ தான் சொல்லணும்..."

"நீங்க சொன்னபடி செய்யறேன்..." அவளுக்கு அண்ணன் திருமணம் நடந்தால் போதும்... அதனால் அவள் அப்படிச் சொன்னாள்... தனது திருமணத்தைப் பற்றி அவள் சிறிதும் யோசித்துக் கூடப் பார்க்கவில்லை...

அக்காவின் திருமணம் நடப்பதற்கும், அதே சமயம் தனது திருமண ஏற்பாட்டைத் தடுத்து நிறுத்தியும் அவன் தான் மனதில் நினைத்ததைச் சாதித்துக் காட்டிவிட்டான்... தான் வந்த வேலை இவ்வளவு சுலபத்தில் முடியும் என்று அவன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை... அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"நான் இங்கு வந்ததையோ, உன் கிட்ட பேசியதையோ நீ யார் கிட்டேயும் சொல்லக் கூடாது..." அதைக் கேட்டு அவள் யோசனையாய் அவனைப் பார்த்தாள்... அவளது முகத்தில் அளவுக்கு அதிகமாகக் குழப்பம் தெரிந்தது...

"இன்னும் நீ என்னை நம்பலையா...?" என்றவன் அவளது பூக்கரங்களைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டு

அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியபடி,

"ஐ லவ் யூ..." என்று கூறினான்...

அவனுக்குத் தெரியும் இதை அவன் மனதார கூறவில்லை என்று... அவளை நம்ப வைப்பதற்காக மட்டுமே கூறியது என்று... இது வெறும் நடிப்பு தான் என்று அவன் மனதில் பல முறை உருவேற்றிக் கொண்டு தன்னைத் தேற்றிக் கொண்டான்... அந்தக் கணம் சில நினைவுகள் மனதில் எழுந்து அவனை வேதனையில் ஆழ்த்தியது...

திரைப்படங்களில் வரும் அவளின் ஆதர்ஷ நாயகன் 'அல்லு அர்ஜூன்' போன்று ஒருவன் வந்து காதலைச் சொன்ன போது அவள் பிரமித்துப் போய் விழிகளகல அவனைப் பார்த்தாள்... அந்தக் கணம் அவள் மனதில் அவன் மீது காதல் இல்லை... அவனைக் கண்டு பிரமிப்பு மட்டுமே அவள் மனதில் இருந்தது... எம்பெருமானைக் கண்டு பரவசப்படும் ஆண்டாளை ஒத்திருந்தது அவளது மனம்... அதை விடப் பெரியவர்கள் தனக்குப் பார்த்து முடித்திருக்கும் மணமகன் என்கிற சொந்தம் மட்டுமே அவள் மனதில் ஆழப்பதிந்தது...

"நான் இப்போ மேலே படிக்கிறதுக்காக வெளிநாடு போகிறேன்... படிப்பு முடிஞ்சு திரும்பி வந்ததும் நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... அதுவரை நான் வந்து போனதை நீ யாரிடமும் சொல்லக் கூடாது... சொன்னால் உங்க அண்ணா இந்தக் கல்யாணத்தை நிறுத்துவார்... என் அப்பா என் படிப்பை நிறுத்துவார்... அதுக்காகத் தான் நான் சொல்கிறேன்..."

அழகாய் எங்கேயும் 'லாஜிக்' இடிக்காது அவன் கூறிய பொய் கதையை அந்தப் பேதை பெண் முற்றிலும் நம்பினாள்... அதனால் தான் அவன் கூறியதற்கு எல்லாம் அவள் சரி சரியென்று தலையசைத்தாள்... அண்ணன் திருமணம், இந்திரஜித்தின் படிப்பை விட அவளது திருமணம் அவளுக்கு முக்கியமாகத் தோன்றவில்லை...

அன்று மாலை மயங்கும் பொழுது அவன் அங்கிருந்து கிளம்பினான்... கத்தியின்றி ரத்தமின்றி அந்தச் சின்னப் பெண்ணின் மனதினைச் சிதைத்து விட்டு அவன் சந்தோசமாகக் கிளம்பினான்... அவனது வன்மம் கொண்ட மனது திருப்தி அடைந்தது...

படலை திறந்து கொண்டு அவன் செல்லும் போது அவனது காலில் சுளீரென்று ஒரு வலி ஏற்பட்டது...

"ஆ, அம்மா..." என்று அவன் அலறினான்...

"ஐயோ, சர்ப்பம்..." பாம்பு ஒன்று வேகமாய் ஊர்ந்து மறைந்ததைக் கண்டு சம்யுக்தா அலறினாள்...

இருளில் படலையின் மீது படர்ந்திருந்த பாம்பு ஒன்று அவனது காலில் கொத்திவிட்டு ஓடிவிட்டது... 'சர்ப்பம்' என்கிற வார்த்தையின் அர்த்தம் புரிந்த இந்திரஜித் மிகவும் பயந்து போனான்... உயிர் பயத்தில் அவனுக்கு மயக்கமே வரும் போலிருந்தது... அவள் அவனைப் போன்று அச்சம் கொண்டு பதறாது அவனைக் கைத்தாங்கலாக அழைத்து வந்து திண்ணையில் அமர வைத்துப் பாம்பு கடித்த இடத்திற்கு மேல் தனது தாவணியைக் கிழித்து இறுகக் கட்டுப் போட்டவள் அடுத்த நொடி உள்ளே ஓடினாள்...

அவனுக்குப் பாம்பு விசம் உடலில் ஏறியதோ இல்லையோ... பயம் என்கிற விசம் ஏறியதில் அவனது இதயம் தாறுமாறாய்த் துடிக்க ஆரம்பித்தது... பயத்தில் வியர்வை வடிய அவன் அங்கிருந்த தூணில் தலை சாய்ந்தான்... இத்தோடு தனது உயிர் போகப் போகிறது என்றே அவன் பயந்து போனான்... அவனது மனக்கண்ணில் அவனுக்குப் பிடித்தமானவர்களின் பிம்பங்கள் வலம் வர ஆரம்பித்தது...

அதற்குள் சம்யுக்தா வீட்டினுள் இருந்து சிறு கத்தியை எடுத்துக் கொண்டு வந்து அவனது காலில் பாம்பு கடித்த இடத்தில் சிறு கீறல் ஒன்றை ஏற்படுத்த, அதன் வலியில் அவன் ஆவென அலறினான்...

"ஷேமிச்சண்டி பாவா... அவ்வளவு தான்..." என்று தன்னை நிமிர்ந்து பார்த்து கூறியவளின் கண்ணீர் முகத்தைக் கண்டு அவன் ஸ்தம்பித்தான்...

அவனோ துரோகம் கொண்டு அவளைக் குற்றுயிராக்கி விட்டுச் செல்ல வந்திருக்கிறான்... அவளோ அவனுக்காக உயிரையும் கொடுப்பது போல் துடித்துக் கொண்டிருந்தாள்...

கல்மனம் கொண்ட இரும்பு மனிதனின் துரோகத்தை அந்தப் பேதைப் பெண் தனது அன்பால் வேரோடு வெட்டி சாய்த்து விட்டாள்...!!! அந்தக் கணம் அவன் அதை உணர்ந்தானோ...???

தொடரும்...!!!

சம்யுக்தா இந்திரஜித்தின் காலில் பாம்பு கடித்த இடத்தில் வாய் வைத்து இரத்தத்தோடு விசத்தையும் சேர்த்து உறிஞ்சி எடுத்து துப்பினாள்... அவளுக்கும் பயமாகவும், படபடப்பாகவும் இருந்தது... ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அவள் துரிதமாகச் செயல்பட்டாள்... தான் செய்த வேலையை முடித்த பிறகே அவள் நிம்மதியுடன் இந்திரஜித்தை நிமிர்ந்து பார்த்தாள்...

அவனுக்கோ பயத்தில் கண்களை இருட்டிக் கொண்டு மயக்கம் வந்தது... அவனது கண்கள் சொருகுவது கண்டு வேகமாக அவன் அருகில் வந்தவள் அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கியபடி,

"பாவா, பாவா... கண் முழிச்சுப் பாருங்க..."

அவளது பதற்றமான குரலில் அவன் லேசாகக் கண்விழித்துப் பார்த்தான்... கண்களில் இருந்து கண்ணீர் வழிய அவள் நின்றிருந்த விதம் அவனது கல் மனதினைக் கரைத்தது... அவளுக்கும், தனக்கும் எந்தவித உறவும் இல்லை... அவன் கூறிய வார்த்தைகளை நம்பி அவள் தனக்காகத் துடிப்பது கண்டு அவனது மனம் கலங்கிப் போனது அவளது தூய அன்பைக் கண்டு...

"உங்களுக்கு ஒண்ணும் இல்லை... பயப்படாதீங்க..."

"இல்லை, எனக்குக் கண்ணை இருட்டிக்கிட்டு வருது... நான் சாகப் போகிறேன்..." என்று புலம்பியவனின் விழிகளில் வழிந்த அச்சத்தைக் காண சகிக்காதவளாய் அவள் அவனைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்...

அவளது அணைப்பில் காதலோ, காமமோ கிடையாது... அவளது அணைப்பில் இருந்தது எல்லாம் தாய்மை உணர்வு மட்டுமே... ஆதரவு தேடும் குழந்தைக்கு ஆறுதல் அளிக்கும் அன்னையின் அன்பினை ஒத்திருந்தது அவளது அணைப்பு...

அவளது நெஞ்சில் முகம் புதைத்தவனின் நிலையும் அதே தான்... பெண்ணவளின் மென்மையை உணர்த்தும் இளமை அழகின் அருகாமையை அவன் உணரவில்லை... அதனால் எழும் இளமை உணர்வுகள் அவனுள் எழவில்லை... மாறாகத் தாயுடன் ஒன்றும் மழலை போன்று அவன் அவளுடன் ஒன்றினான்... அவளது மடியில் உயிர் துறப்பது கூட அவனுக்குத் தனது தாயின் மடியில் உயிர் துறக்கும் இதத்தை, நிம்மதியைத் தந்தது...

அந்தக் கணம் இவ்வளவு நாளாய் அவனது மனதினை அரித்துக் கொண்டிருந்த அந்தப் பிம்பம் கூடக் காணாமல் போயிற்று... அதில் சம்யுக்தாவின் பிம்பமே இடம் மாறிப் போனது... அப்போதாவது அந்த மூடன் தனது மனநிலையை உணர்ந்திருக்க வேண்டும்... அப்போதும் அவன் உணரவில்லை...

"இங்கே பாருங்க பாவா... இப்பவே விசத்தைக் கொஞ்சம் எடுத்தாச்சு... இங்கே கிராமத்தில் பாம்பு கடிக்கிறது எல்லாம் சகஜம்... இங்குப் பாம்பு கடிச்சு பிழைச்சவங்க நிறையப் பேர் இருக்காங்க..." அவனது தலையைக் கோதிக் கொடுத்து ஆறுதல் வார்த்தைகளைக் கூறியவளைக் கண்டு அவன் சற்று நம்பிக்கை வரப் பெற்று நிமிர்ந்து பார்த்தான்...

"உண்மையாவா...?"

"சத்தியங்கா பாவா..."

உலகிலேயே முதன்முறையாக வெறுப்புக் கொண்ட பெண்ணவளின் சத்தியத்தை நம்பிய முதல் ஆண்மகன் அவனாகத் தான் இருப்பான்...

"நீங்க இப்போ தைரியமா இருக்கணும்... நீங்க இப்படிப் பயந்தீங்கன்னா இதயத்துடிப்பு தாறுமாறாகி அது தான் உங்க உயிருக்கு ஆபத்தா போயிரும்... நீங்க பதட்டப்படாம தைரியமா கண் முழிச்சு இருங்க... நான் போய் வைத்தியரை அழைச்சிட்டு வந்திர்றேன்..." அவளது

நம்பிக்கை வார்த்தையில் அவன் நம்பிக்கை பெற்றவனாய் அவளிடம் இருந்து விலகி,

"சரி, நீ போ..." என்றான் சோர்வுடன் மெல்லமாய்...

ஒரு இக்கட்டான சூழ்நிலையைப் பெண்களைப் போன்று ஆண்களால் தைரியமாகக் கையாள முடிவதில்லை... அதற்கு இவன் ஒரு சிறந்த உதாரணம்... அதற்கு இவனது வயது கூட ஒரு காரணமாக இருக்கலாம்...

அடுத்த ஐந்து நிமிடத்தில் வைத்தியர் வந்து அவனுக்கு வைத்தியம் பார்த்த பின்னரே அவனுக்கு உயிர் பயம் அகன்றது... சற்று முன் பயந்து நடுங்கிய தன்னை நினைத்து அவனுக்கே அத்தனை வெட்கமாகப் போய்விட்டது...

"ஈ அப்பாயி எவரு...?" (இந்தப் பையன் யார்...?) வைத்தியர் அவனது காலில் மருந்து வைத்துக் கட்டியபடி சம்யுக்தாவை பார்த்தார்...

"நா வதினத்தோ தம்முடு..." (என்னுடைய அண்ணியின் தம்பி)

"ஓ..." என்றவர் கட்டுப்போட்டு முடித்து விட்டு அவளிடம்,

"இந்த மருந்தை கொடு... அப்புறம் விசம் உடம்பில் ஏறாம இருக்கத் தம்பியை தூங்காம பார்த்துக்கோ..." என்றுவிட்டு அவர் சென்றுவிட்டார்...

"என்ன சொல்லிட்டு போறார்...?" அவர் தெலுங்கில் கூறியது அவனுக்குப் புரியவில்லை... அவர் கூறியதை அப்படியே அவனிடம் கூறியவள்,

"பயப்பட ஒண்ணுமில்லை... சரியா போயிரும்..." என்று அவனுக்கு நம்பிக்கை அளிக்க... அவனோ வெட்கத்துடன் தலையைக் குனிந்தபடி சரியென்று தலையாட்டினான்... அவள் உள்ளே சென்றபின்,

'இப்படியாடா பயந்து தொலைப்ப...' என்று அவன் தன்னைத் தானே திட்டிக் கொண்டான்...

இரவு உணவு முடிந்து இந்திரஜித்தும், சம்யுக்தாவும் வெளியில் வந்தமர்ந்தனர்... அவன் திண்ணையில் அமர, அவளோ கீழே வாசப்படியில் அமர்ந்து கொண்டு நிலைக்கதவில் சாய்ந்து கொண்டாள்... பௌர்ணமி முழுநிலவு பிரகாசமாக ஒளி வீசி இருளைப் போக்கிக் கொண்டிருந்தது... இருவரும் என்ன பேசுவது என்று தெரியாது சற்று நேரம் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தனர்...

"ரொம்பப் போர் அடிக்குது... ஏதாவது பேசு..." என்றான் அவன் முதலில் மௌனத்தைக் கலைத்தபடி...

"என்ன பேசுறது...?"

"உன்னைப் பத்தி சொல்லு..." அதைக் கேட்டு அவளது முகத்தில் புன்னகை அரும்பியது...

"என்னைப் பத்தி சொல்ல என்ன இருக்கு...?" என்றவளின் வார்த்தையிலும், முகத்திலும் அத்தனை விரக்தி... அதைக் கண்டு அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"எனக்குப் பதினைஞ்சு வயசு இருக்கும் போது அப்பா இறந்து போயிட்டார்... அவரோட இறப்பு சாதாரணமா நிகழ்ந்தது இல்லை... கடன் தொல்லை தாங்க முடியாம அவர் தற்கொலை பண்ணிக்கிட்டார்..."

அவன் திகைத்து போய் அவளைப் பார்த்திருந்தான்... இப்படியொரு கஷ்டம் எல்லாம் அவன் வாழ்க்கையில் அனுபவித்தது இல்லை... ஏனோ அவனுக்கு அவளைப் பார்க்கும் போது தனது அன்னையின் நினைவுகளே... அவனது அன்னையும் சின்ன வயசில் பெற்றோரை இழந்தவள் தானே...

"அம்மா...?"

"அம்மா இருந்தாங்க... அவங்களாலேயும் கடனை சமாளிக்க முடியலை... அசலோடு வட்டியும் சேர்ந்து ஏறி பெரிய தொகை சேர்ந்து போனது... அவ்வளவு பெரிய தொகையை எங்களால் இந்த ஜென்மத்தில் அடைக்க முடியாது... அதை

உணர்ந்த அந்த வட்டிக்காரன் ஒரு நாள் எங்க வீட்டுக்கு வந்தான்..." அன்றைய நாளின் நினைவில் அவள் கண்களில் கண்ணீர் துளிர்க்க வேதனையுடன் வானத்தை வெறித்தாள்...

"அன்னைக்கு என்னாச்சு...?" அவனது கேள்வியில் அவனை ஏறிட்டு பார்த்தவள் மேலே தொடர்ந்தாள்...

"ஒழுங்கா பணத்தைக் கொடுக்க முடிஞ்சா கொடு... இல்லைன்னா பணத்துக்கு ஈடா உன் பொண்ணைக் கொடுன்னு எங்கம்மா கிட்ட கேட்டான்..."

அதைக் கேட்டு இந்திரஜித் அதிர்ந்து போனான்... இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா என்று... ஏனோ அவளை அணைத்து ஆறுதல்படுத்தத் துடித்தது அவனது கைகள்... முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அவளை வருத்தத்துடன் பார்த்திருந்தான்... அந்தக் கணம் தானும் அவளுக்குத் துன்பத்தை அளிக்கப் போவதை நினைத்து அவனுக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது... ஆனாலும் அவனால் அதைச் செய்யாதிருக்க முடியவில்லையே...

யாருக்கோ நியாயம் வழங்கிட எண்ணி அவன் அவளுக்கு அநியாயம் செய்திட நினைத்தான்... நீண்ட பெருமூச்சு அவனிடத்தில் இருந்து கிளம்பியது...

"அதுவும் அவனோட அப்பாவுக்கு இரண்டாம் தாரமாய்க் கட்டி வைக்கப் பார்த்தான்... அவருக்கு அறுபது வயசு... அவரோட மனைவி அப்போ தான் இறந்து போனாங்களாம்... அவரைக் கவனிச்சிக்கிறதுக்கு ஆள் வேணும்ன்னு அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சானாம்..."

அதைக் கேட்டு இந்திரஜித் அதிர்ந்து போனான்...

"அவன் பேசியதை கேட்டு அம்மா நெஞ்சை பிடிச்சிக்கிட்டு கீழே விழுந்தவங்க தான்... அதன் பிறகு எழுந்திருக்கவே இல்லை..."

அன்னையின் மரணத்தை நினைத்து அவளது விழிகளில் கண்ணீர் வழிந்தது... அதைத் துடைத்து விட வேண்டி அவனது கைகள் பரபரத்தது... ஆனாலும் அமைதி காத்தான்... தான் செய்யப் போகும் காரியத்திற்கு இந்தக் கரிசனம் தேவையில்லாதது என்று நினைத்தானோ என்னவோ...

"இழவு வீடுன்னு கூட அவன் பார்க்கலை... எனக்கும், அவன் அப்பாவுக்கும் கல்யாண தேதியை முடிவு பண்ணிட்டு போயிட்டான்... கல்யாண நாளும் விடிந்தது..."

அதைக் கேட்டு அவனது மனம் என்ன நடந்ததோ என்று பயத்தில் பக்பக்கென்று அடித்துக் கொண்டது...

"பதினைஞ்சு வயசில் யாருமில்லாத அநாதையா மணப்பெண் கோலத்தில் அவங்க வீட்டில் நான் தனியா அழுதுட்டு நின்னுக்கிட்டு இருந்தேன்... அப்போ என்ன செய்றதுன்னு கூட எனக்குத் தெரியலை... செத்தால் இதில் இருந்து தப்பித்து விடலாம் என்பது கூட என் அறிவுக்கு எட்டலை... சித்தபிரம்மை பிடிச்ச மாதிரியான ஒரு நிலை... அழுகை மட்டுமே எனக்குத் துணையாய்..." இப்போதும் அதை நினைத்தவளின் விழிகளில் இருந்து அடக்க மாட்டாது கண்ணீர் வழிந்தது...

"கல்யாணத்துக்கு அரை மணி நேரத்திற்கு முன்பு தான் சூர்யா அண்ணய்யா விசயம் கேள்விப்பட்டு அங்கு வந்து இந்தக் கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தி என்னைக் காப்பாத்தினாங்க... அப்போ அண்ணய்யா இங்கே தான் வேலை பார்த்துக்கிட்டு இருந்தாங்க... அவங்க பதவி முன்னாடி யாரும் எதுவும் எதிர்த்துப் பேச முடியலை... அதுக்கு அப்புறம் அண்ணய்யா என்னைத் தங்கச்சியா தத்து எடுத்துக்கிட்டாங்க... அன்றிலிருந்து இதோ நொடி வரை அவங்க பாதுகாப்பில் நான் சந்தோசமா இருக்கேன்... என்னோட ஒரே சொந்தமா என் அண்ணய்யா எனக்கு இருக்காங்க... எனக்கு அது போதும்... அவங்க விருப்பப்படி வதினயை கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா

இருக்கணும்... அதுக்கு நான் ஒரு போதும் குறுக்கே வர மாட்டேன்..."

இந்திரஜித்திற்குச் சூர்யாவை நினைத்துப் பெருமையாக இருந்தது... அக்காவின் தேர்வு சோடை போகவில்லை என்றே அவன் மகிழ்வாய் நினைத்தான்...

சம்யுக்தா தனது கதையைச் சொல்லி முடிப்பதற்கும் விடிவதற்கும் நேரம் சரியாக இருந்தது... பொழுது புலர்ந்ததைக் கண்டு எழுந்தவள் அவன் அருகில் வந்து அவனது நெற்றியில், கழுத்தில் கை வைத்துப் பார்த்தாள்... அவளது இயல்பான செய்கையில் அவன் அரண்டு போய்ப் பின்னுக்கு நகர்ந்தான்... நேற்று அவளது நெஞ்சில் கதகதப்பாய் முகம் புதைத்த நினைவு அவனுள் எழுந்தது... தலையைக் குலுக்கி அந்த நினைவை விரட்டியடித்தான்...

"காய்ச்சல் எதுவும் இல்லை... நேத்து உங்களுக்குப் பயத்தில் காய்ச்சல் கொஞ்சம் இருந்திருச்சு..." என்றவளைக் கண்டு அவன் லஜ்ஜையுற்று தனது பார்வையைத் திருப்பிக் கொண்டான்...

"நீங்க படுத்துக்கோங்க..." புன்னகையுடன் கூறியவள் அவனது மனநிலையை உணர்ந்து அங்கிருந்து விலகிச் சென்றாள்...

அவனுக்குமே தூக்கம் கண்களைச் சுழற்ற கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்... ஒரு நாளில் கிளம்ப எண்ணியவனை விதி இங்கே தங்க வைத்து சதி செய்தது... மீண்டும் அவன் கண் விழித்துப் பார்க்கும் போது சம்யுக்தா ஒரு சின்ன 'ட்ரக்' வண்டியில் மண்பானைகளை ஏற்றிக் கொண்டிருந்தாள்...

"அண்ணய்யா, இன்னைக்கு ஒரு நாள் நீங்களே பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துருங்க... என்னால் கடைக்கு வர முடியாது..." என்று அவள் கூற... அந்த வண்டியின் ஓட்டுநர் சரியென்று தலையசைத்து விட்டு நகர்ந்தான்...

வீட்டை நோக்கி வந்தவள் அப்போது தான் கவனித்தாள் அவன் எழுந்து அமர்ந்திருப்பதை...

"அதுக்குள்ள எழுந்திருச்சிட்டீங்களா...?"

"இதுவே லேட் இல்லையா...?"

"நீங்க நைட் தூங்கலையே..."

"நீயும் தான் தூங்கலை..." என்றான் அவன் புருவம் உயர்த்தி யோசனையாய்...

"எனக்கு இது பழகிப் போன ஒண்ணு... தனியா இருக்கிறதால முக்கால்வாசி நாள் தூக்கம் வராது..."

அவளது தனிமையை எண்ணி அவனது தொண்டையில் ஏதோ ஒன்று வேதனையாய் அடைத்தது...

"உங்கண்ணா கூடப் போய் இருக்கலாமே..."

"அண்ணய்யா கூப்பிட்டாங்க தான்... ஆனா எனக்குத் தான் இஷ்டமில்லை... இங்கே இருந்தா அப்பா, அம்மா கூட இருக்கிற மாதிரி ஒரு திருப்தி இருக்கு..."

அவனிடம் அவள் பேசிக் கொண்டிருந்தாலும் அவளது கைகள் அது பாட்டிற்கு வேலைகள் செய்து கொண்டிருந்தது... நிழலில் அடுக்கியிருந்த பானைகளை எல்லாம் எடுத்து வந்து வெயிலில் உலர வைத்தாள்...

"நீங்க குளிச்சிட்டு வந்து சாப்பிடுங்க..." என்றவள் வீட்டினுள் செல்ல... அவன் அவளை யோசனையுடன் பார்த்தபடி தனது உடமைகளை எடுத்துக் கொண்டு வீட்டைச் சுற்றி பின்பக்கமாய்ச் சென்றான்...

அவன் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்த போது அவள் அவனுக்கான உணவுடன் காத்திருந்தாள்... அவன் அமரவும் பரிமாறியவளைக் கண்டு,

"நீயும் சாப்பிடு..."

"இப்போ தான் காபி குடிச்சேன்..." அவள் உண்பதற்குப் பதிலாக அடிக்கடி காபி அருந்துவதை அவன் கண்டு கொண்டு தான் இருந்தான்...

'காபி குடிப்பது நல்லதல்ல' என்று கூறத் துடித்த நாவை அவன் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்... இந்த அக்கறை தேவையில்லாத ஒன்று என்றே அவனுக்குத் தோன்றியது...

அவள் பரிமாற, பரிமாற அவன் வயிறார உண்டு முடித்தான்... அதனால் தான் என்னவோ அன்னமிட்ட அவளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு அவள் அவனோடு வந்த பிறகு ஒரு நாளும் அவளை அவன் பட்டினியாக இருக்கச் செய்தது இல்லை... அந்த நன்றியுணர்வு அவனது மனதில் என்றும் இருக்கிறது போலும்...

உலர்ந்த பானைகளை அவள் சூளையில் வைத்து அடுக்கிய போது அந்த வழியாகச் சென்ற ஒரு பெண்மணி அவளிடம்,

"நுவ்வு பஜாருக்கி வஸ்துந்நாவா...?" (நீ சந்தைக்கு வர்றியா...?)

"லேது பின்னி... நேனு ஈ ரோஜூ ராலேது..." (இல்லை சித்தி... நான் இன்னைக்கு வரலை...)

அந்தப் பெண்மணி மேலே ஒன்றும் கேட்காது சென்றுவிட்டார்... அப்போது அங்கு வந்த இந்திரஜித்,

"அவங்க என்ன கேட்டாங்க...?"

"சந்தைக்கு வர்றியான்னு கேட்டாங்க..."

"அங்கே ஏதும் முக்கியமான வேலை இருக்கா...?"

"பக்கத்து டவுன்ல வாரத்துக்கு ஒரு தடவை சந்தை நடக்கும்... அதுக்கு எல்லாரும் போய் அந்த வாரத்துக்குத் தேவையான சாமான்களை வாங்கிட்டு வருவோம்..."

"அதுக்கென்ன...? நீ போக வேண்டியது தானே..."

"நீங்க வந்திருக்கிறதால வரலைன்னு சொல்லிட்டேன்... அடுத்த வாரம் போகலாம்..."

"நானும் இந்தக் கிராமத்துச் சந்தை எல்லாம் பார்த்தது இல்லை... நீ கிளம்பி வா... நாம ரெண்டு பேரும் போகலாம்..."

"உங்களுக்கு உடம்புக்கு..."

"எனக்கென்ன... ஐயம் பெர்பெக்ட்லி நார்மல்..." என்றவனின் ஆங்கிலம் புரியாது அவள் ஆவென்று அவனைப் பார்க்க... அவளது பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"நான் நல்லாயிருக்கேன்னு சொன்னேன்..."

"ஹான், இதுக்கு இது தான் அர்த்தமா...?" என்றவள்,

"சரி கிளம்பி வர்றேன்..." என்றவள் வீட்டினுள் சென்றாள்...

சிறிது நேரம் கழித்தும் அவள் வரும் வழி தெரியாததால் அவன் வீட்டினுள் நுழைந்தான்... அங்குச் சம்யுக்தா கடவுள் முன் நின்று கண்களை மூடி வழிபட்டுக் கொண்டிருந்தாள்... சுவற்றில் சிறு மரப்பலகை பொருத்தப்பட்டுத் திருப்பதி ஏழுமலையான் புகைப்படம் ஒன்று இருந்தது... அதன் முன் சிறு அகல் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது... அவனும் அவள் முன் வந்து நின்றான்...

தீபச்சுடர் ஒளியில் சுடர்விடும் அழகுடன் பிரகாசித்தவளை முதன்முறையாகப் பார்ப்பது போல் அவன் தலை முதல் கால் வரை உற்று நோக்கினான்... சாதாரணப் பருத்தி புடவையில் காதில் சிறு தோடு, கையில் இரு ரப்பர் வளையல் மட்டுமே அணிந்து மிகவும் எளிமையுடன் இருந்தவளின் அழகு இன்று ஏனோ சற்று அதீதமாய்க் காணப்பட்டது போல் அவனுக்குத் தோன்றியது...

அப்போது விழி திறந்தவள் அங்கு அவனைக் கண்டதும் புன்னகைத்தாள்... அவனும் பதிலுக்குப் புன்னகைத்தவன்,

"ஏன் கழுத்தில் ஒண்ணும் போடலை...?" அவன் சொன்னதும் அவளது கை தானாகக் கழுத்தைத் தடவி பார்த்துக் கொண்டது...

"மாலை போட்டிருந்தேன்... அறுந்து போச்சு... இன்னைக்குச் சந்தையில் வாங்கணும்..." என்றவளின் ஏழ்மையைக் கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது... ஆனாலும் அவன் வெளிக்காட்டி கொள்ளாது அமைதி காத்தான்...

அவள் சாமி முன்னிருந்து குங்குமம் எடுக்கும் போது தான் அவன் அதைக் கவனித்தான்... அழகான வேலைப்பாடுடன் கூடிய கருகமணி ஒன்று அங்கே சாமி மாடத்தில் இருப்பதை...

"இவ்வளவு அழகான செயின் இங்கே இருக்கும் போது நீ ஏன் இப்படி வெறும் கழுத்தோடு இருக்க...?" என்று கேட்டவனைக் கண்டு என்ன பதில் சொல்வது என்று தெரியாது அவள் விழிக்கும் போதே அவன் அதை எடுத்து அவளது கழுத்தில் அணிவித்து விட்டான்...

அந்தக் கணம் அவளை அழகுபடுத்திப் பார்க்க வேண்டும் என்கிற எண்ணமே அவனது கருத்தில் நிறைந்து இருந்தது... அதனால் எதைப் பற்றியும் யோசியாது அவன் அந்தக் காரியத்தைச் செய்து விட்டான்... அந்தக் கருகமணி அவளுடைய அன்னையின் மாங்கல்யம் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை... தமிழர்களின் மாங்கல்யத்தை அறிந்து வைத்திருந்தவனுக்குத் தெலுங்கர்களின் மாங்கல்யத்தைப் பற்றிய அறிவு கொஞ்சமும் இல்லாது போயிற்று...

மேளம் முழங்காது, ஊரைக் கூட்டாது, விருந்து போடாது சத்தமின்றி அவர்களது திருமணம் நடந்து முடிந்து போனது... அவனது செயலில் முதலில் திகைத்து நின்றவளின் விழிகளில் மெல்ல மெல்ல சந்தோசம் பரவியது... இந்த நொடி வரை அவனை அண்ணன் தனக்குப் பார்த்து வைத்திருக்கும் மணமகனாகத் தான் அவள் எண்ணினாள்... ஆனால் இப்போது கணவன் என்கிற புதுச் சொந்தத்துடன் அவனை அவள் பார்த்தாள்...

அவனது காலடியில் விழுந்து கண்ணீரால் அவனது பாதத்தை நனைய செய்ய வேண்டும் என்று அவளது மனம் நன்றியில் ததும்பியது... ஆனால் அதைச் செய்ய முடியாது அவள் அவனை இமைக்காது பார்த்திருந்தாள்...

அவனது வெளிநாட்டு படிப்பிற்குத் தங்களது திருமணம் தடையாக இருக்கக் கூடாது என்றெண்ணி அவள் அதை அவனிடத்தில் சொல்லாது மறைத்தாள்... அவனுக்காக அவள் சிலுவை சுமக்கத் தயாரானாள்... காதல் இல்லாத போதே அவனுக்காக உயிரையும் தர அவள் சித்தமாக இருந்தாள்...

"ஹேய் யுகிம்மா..." அவள் கண்முன் சொடக்குப் போட்டு அழைத்தவனின் செல்ல அழைப்பு அவளது காதில் இனிமையாகப் பாய்ந்து நெஞ்சினில் தித்திப்பாய் இறங்கியது...

"ஆங், ஏமி பாவா...?" (ஆங், என்ன பாவா...?)

"கிளம்பலாமான்னு கேட்டேன்..." என்று புன்னகைத்தவனைக் கண்டு,

"ம், போகலாம்..." என்றவள் குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டு அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனும் அவளைப் போல் செய்ய... அவள் ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள்... அவனது கையால் தனது நெற்றியில் குங்குமம் வைப்பது எந்நாளோ என்று...

வீட்டைப் பூட்டி விட்டு சம்யுக்தா வந்த போது கருகமணி அவளது புடவை மாராப்பிற்குள் பாந்தமாய் ஒளிந்திருந்தது... அதைக் கண்டு அவன் முகத்தைச் சுளித்தான்...

"ஏன் அதை வெளியில் போடுவதற்கு என்ன...? எவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா...?"

"அச்சோ, அது வேண்டாம்..." என்று பதறியவளைக் கண்டு அவன்,

"ஏன்...?" என்று புரியாது கேட்க...

"எனக்குப் பிடிக்காது..." என்று கூறி சமாளித்தாள்...

சம்யுக்தாவுடன் பேருந்தில் ஏறிய இந்திரஜித்திற்கு எல்லாமே புதுமையாக இருந்தது... பேருந்து கூட்டத்தில் நெரிசலில் விழி பிதுங்கி நின்றிருந்தது கூட அவனுக்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது... அதிலும் கூட்ட நெரிசலில் அவளுக்குப் பாதுகாப்பாக அவள் அருகிலேயே நின்றிருந்தது ஏனோ அவன் மனதிற்கு நிறைவைக் கொடுத்தது...

அவளுக்காக அவன் ஏன் இதை எல்லாம் செய்கிறான் என்று அவனுக்குச் சுத்தமாகப் புரியவில்லை... தனது உயிரை மீட்டுக் கொடுத்தவளை சந்தோசப்படுத்த தான் என்று அவன் தனது மனதினைத் தேற்றிக் கொண்டான்... உண்மை அதுவல்ல என்பது இப்போது தானே அவனுக்குப் புரிகிறது... அவனது ஆழ்மனது சம்யுக்தா போன்று ஒருத்தியைத் தான் தனது துணையாகத் தேடி இருக்கிறது என்று... காலம் கடந்த ஞானம் இது...

அதுவரை அவனிடத்தில் தள்ளி நின்று பழகிய சம்யுக்தா இப்போது கணவன் என்கிற உரிமையுடன் அவனோடு சற்று நெருங்கி நின்று கொண்டாள்... அவனது அருகாமை பேதையவளை மனம் மயங்க செய்து கிறக்கியது...

சந்தைக் கூட்டத்தில் இந்திரஜித்தின் கை அவனையும் அறியாது சம்யுக்தாவின் கையைப் பத்திரமாக இறுக பற்றிக் கொண்டது... அவளும் சந்தோசத்துடன் அவனது கையைப் பற்றிக் கொண்டு நடந்தாள்... அவளுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் பார்த்து பார்த்து வாங்கியவளை அவன் புன்னகையுடன் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்...

அதற்கு அவள் பணம் கொடுத்த போது அவன் அதைத் தடுத்து விட்டு தான் பணம் கொடுக்க முன் வந்தான்...

"இல்லை பாவா... நான் கொடுக்கிறேன்... என் வருமானத்துக்குள் நான் வாழ்வது தான் முறை..." என்றவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனின் மனதில் சில வேதனையான நினைவுகள்... தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டான்...

அலங்கார பொருட்கள் விற்கும் கடை அருகில் வந்தவள் தனக்கு வேண்டிய பொருட்களை வாங்க ஆரம்பித்தாள்... அங்கிருந்த ஒற்றை வெள்ளை கல் பதிக்கப்பட்ட ஒட்டுப் பொட்டை எடுத்து தனது நெற்றியில் ஒட்ட வைத்தவள்,

"பாவா அழகாயிருக்கா...?" என்று அவனைப் பார்த்து ஆர்வத்துடன், ஆசையுடன் கேட்க...

"அழகாயிருக்கு..." என்றவன் திடுமென யோசித்தவனாய் அந்தப் பொட்டை எடுத்து அவளது மூக்கின் மீது மூக்குத்தி போன்று ஒட்டி விட்டான்...

"இப்போ இன்னும் அழகாயிருக்கு யுகிம்மா..." என்று நிறைவாய் சிரித்தவனைக் கண்டு அவளது முகம் மலர்ந்து போனது...

"உங்களுக்கு மூக்குத்தி போட்டா பிடிக்குமா...?"

"பிடிக்கும்..." என்றவன்,

"ஏன் உனக்குப் பிடிக்காதா...?"

"உங்களுக்குப் பிடிச்சா எனக்கும் பிடிக்கும்... உங்களுக்காகவே நான் மூக்குத்தி குத்திக்கிறேன்..." என்றவளைக் கண்டு அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... அப்போது அவனது காதுகளில் அந்த உதாசீனப் பேச்சுக்கள் ஒலித்தது... கண்களை மூடி அந்த நினைவை கஷ்டப்பட்டு அகற்றினான்...

"பாவா..."

அவள் அழைக்கவும் அவன் விழிகளைத் திறந்தான்... அவள் அடுத்தடுத்து பல கடைகளுக்கு அழைத்துக் கொண்டு

போக, அவனும் சளைக்காது அவளின் பின் சென்றான்... சிறிது தூரம் சென்றதும் சம்யுக்தா கண்கள் ஒரு இடத்தில் நிலைக்குத்தி நின்றதைக் கண்டு அவன் அங்கே திரும்பி பார்த்தான்... அங்கு அல்லு அர்ஜூன் நடித்த திரைப்படத்தின் சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டு இருந்தது...

"அங்கே என்ன பார்வை...?" என்று அவன் கேட்க...

"ஒண்ணுமில்லை..." என்றவள் மேலே நடக்க...

"அந்தப் படத்துக்குப் போகலாமா...?" அவன் கேட்டதும் அவள் மகிழ்வாய் அவனைப் பார்த்தாள்...

"ம்... போகலாம், போகலாம்..." என்று துள்ளி குதித்தவளைக் கண்டு அவனுக்கு வியப்பாக இருந்தது...

சில சமயங்களில் பக்குவப்பட்ட பெண்ணாக, சில சமயங்களில் தைரியமாக, வெகுளியாக, சிறுபிள்ளையாக இப்படிப் பல பரிமாணங்களைக் காட்டியவளைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது...

திரைப்படத்திற்கு அழைத்து வந்த பிறகு ஏன்டா அழைத்து வந்தோம் என்று அவன் நொந்து போனான்... திரையில் அல்லு அர்ஜூன் தோன்றிய நொடியில் இருந்து அங்கு வெறித்துப் பார்த்தவள் தான், அதன் பிறகு அருகில் இருக்கும் அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அல்லு அர்ஜூனில் அவள் இனிமையாய் மூழ்கிப் போனாள்...

'என்னை விட அவன் என்ன அவ்வளவு அழகா...?' அவனுள் ஏதோ ஒன்று புகைந்தது... இந்த ஒன்றுக்காகவே அவளைக் கதறவிட வேண்டும் என்று அவனுக்கு அப்படியொரு எரிச்சல் வந்தது...

ஒருவழியாய் ஊரைச் சுற்றிக் கொண்டு அவர்கள் இருவரும் வீடு வந்து சேர்ந்த போது இரவாகிப் போனது... மேலே எதுவும் பேசாது அவரவர் படுக்கையில் விழுந்து உறங்கிப் போயினர்...

மறுநாள் காலை பொழுது இனிமையாக விடிந்த போதும் சம்யுக்தா மட்டும் கவலையுடன் நடமாடிக் கொண்டிருந்தாள்... ஏனெனில் இந்திரஜித் இன்று ஊருக்குக் கிளம்புகிறான்... இனி எப்போது அவனைக் காண்போமோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது...

அவள் அந்த நினைவில் அமர்ந்திருக்கப் பூனை ஒன்று சமையல்கட்டில் நுழைந்து அங்கிருந்த பால் பாத்திரத்தை உருட்டியது... அந்தச் சத்தத்தில் நினைவு கலைந்தவள் அதை விரட்டியடிக்க, அதுவோ தைரியமாக நின்று அவளை முறைத்துப் பார்த்தது...

"உனக்கு அவ்வளவு தைரியமா...?" என்று அவள் அதைத் துரத்தி கொண்டு வர... அதுவோ பயம் கொள்ளாது வீட்டினுள் ஓடியது... அவளும் விடாது அதன் பின்னாலேயே ஓடினாள்...

அந்நேரம் அவளுக்கு எதிரில் வந்த இந்திரஜித் மீது மோதி அவள் அப்படியே அசையாது நின்றாள்... கிளம்புவதற்கு ஏதுவாக உடை உடுத்திக் கொண்டு நின்றிருந்தவனைக் கண்டு அவளது விழிகளில் நீர் நிரம்பியது... அடுத்த நொடி அவள்,

"பாவா..." என்று கதறியபடி அவனை அணைத்துக் கொண்டு விழி உடைந்தாள்... மனைவியாய் அவனைப் பிரிய வேண்டி வேதனை கொண்டு அவள் தேம்பி தேம்பி அழுதாள்...

அவனோ மனிதனாகக் கூட அவளைத் தேற்றாது தனது கரங்களைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி அசையாது நின்றான்... அவளை அணைத்து ஆறுதல்படுத்த அவனது கரங்கள் துடிக்கத் தான் செய்தது... ஆனால் அவனால் அது செய்ய முடியவில்லையே...

அவளாக அழுது ஓய்ந்து தன்னைத் தேற்றிக் கொண்டு அவனை விட்டு அகன்றாள்...

"ஷேமிச்சண்டி பாவா..." என்று அவளது உதடுகள் முணுமுணுத்தது...

"எனக்கு நேரமாச்சு... நான் கிளம்பறேன்..." என்று கூறியவனது வார்த்தைகளும் சுரத்தில்லாது வெளிவந்தது... இரு நாட்களுக்கு முன்னிருந்த அவனது மனநிலை இப்போது சுத்தமாய் அவனிடத்தில் இல்லை...

"ம்... ம்..." என்று தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தவள்,

"உங்களுக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன்ங்கிறதை நீங்க மறந்துடாதீங்க..."

அவளது வார்த்தைகள் அவனது மனதினை வாள் கொண்டு அறுக்க அங்கிருந்து வெளியில் வந்தவன் தனது பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான்... பின் என்ன நினைத்தானோ அவள் புறம் திரும்பி,

"நான் இங்கே வந்து போன விசயத்தை நானா எல்லார் கிட்டேயும் சொல்லும் வரை நீ யார் கிட்டேயும் சொல்லக் கூடாது..."

"சொல்ல மாட்டேன்..." என்றவளின் கையை எடுத்து தன் தலை மீது வைத்து,

"சத்தியமா...?"

"சத்தியமா..." என்றவளின் விழிகளில் பிரிவுத்துயரை எண்ணி கண்ணீர் வழிந்தது...

"தட்ஸ் குட்... எனக்காகக் காத்திரு..." என்றவன் அவளை விட்டு விலகி முன்னே நடந்தான்... அவளும் அவனைப் பின்தொடர்ந்து வந்தாள்...

படலையின் கதவை திறந்து கொண்டு அவன் வெளியில் வர அவள் தட்டியைப் பிடித்துக் கொண்டு அங்கேயே நின்றாள்... ஒரு கணம் அவன் அவளது முகத்தை இமைக்காது பார்த்தவன் அடுத்த நொடி அவளைத் திரும்பியும் பார்க்காது விறுவிறுவென நடந்து போய்விட்டான்... அவளோ கதறும் மனதினை

சமாதானப்படுத்தும் வகையறியாது அப்படியே உறைந்து போய் நின்றிருந்தாள்...

'என் வாழ்வில் இனி திருமணம் என்கிற பேச்சுக்கே இடமில்லை... அது போல் தான் உன் வாழ்விலும்... உன்னைப் பார்க்க பாவமாகத் தான் இருக்கிறது... ஆனால் தெரிந்தோ தெரியாமலோ என் வாழ்க்கையினுள் நீ புகுந்து குழப்பத்தை உண்டு பண்ணி விட்டாயே... அதற்கான பலனை நீ அனுபவித்துத்தானாக வேண்டும்... எனது அப்பா செய்த தவறிற்கு நீ பலனை அனுபவிக்கப் போகிறாய்... இலவு காத்த கிளியாக நீ எனக்காகக் காத்திருப்பதைக் கண்டு அவர் மனசு கஷ்டப்படணும்... அது தான் எனக்கு வேண்டும்...'

இந்திரஜித் மனதில் கோபமாய் நினைத்தபடி ஊரை விட்டு சென்று கொண்டிருந்தான்... அவளோ அவனை நினைத்துத் துயரில் கண்ணீர் வடித்தாள்...

அதன் பிறகு சூர்யா, ஜெகதீஸ்வரி திருமணம் அவளது வற்புறுத்தலால் நடந்து முடிந்தது... திருமணத்திற்கு வந்திருந்த ஊர்க்காரர்களால் மணமகன் சூர்யாவை அவ்வளவு எளிதில் நெருங்கி பேச முடியவில்லை... சித்தார்த் மகளின் திருமணம் என்றால் சாதாரணமா...? முக்கியப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டதால் நட்சத்திர அந்தஸ்துடன் அந்தத் திருமணம் ஜொலித்தது... அவர்கள் அவனைச் சந்தித்துப் பேசியிருந்தால் இந்திரஜித் சம்யுக்தாவைச் சந்திக்க வந்த விசயம் சூர்யாவின் காதிற்கு எட்டியிருக்கும்... விதி அங்கேயும் சதி செய்து சிரித்தது...

திருமணம் முடிந்த மறுமாதமே ஜெகதீஸ்வரி குழந்தை உண்டாகி விடச் சம்யுக்தா தான் அவர்களைச் சென்று பார்க்க வேண்டியதாய்ப் போயிற்று... அதன் பின்னும் சூர்யா பணி நிமித்தம் காரணமாக ஊர் பக்கம் எட்டிப்பார்க்கவில்லை... அதற்குப் பதிலாகத் தங்கை அண்ணனின் வீட்டிற்குச் சென்று சீராடி விட்டு வந்தாள்...

கடந்த ஐந்து வருடங்களாகச் சம்யுக்தா இந்திரஜித்திற்காகக் காதலோடு காத்திருந்தாள்...

கணவன் என்பதையும் தாண்டி அவளைப் பொறுத்தவரை அவன் கடவுளைப் போன்றவன்... அதனால் பதிபக்தியுடன் அவனுக்காகக் காத்திருந்தாள்...

பல கனவுகளுடன் கன்னியவள் காத்திருக்க, கனவை நனவாக்குவது போல் அவளைக் காண வந்தவனின் பாராமுகமும், புறக்கணிப்பும் ஏனென்று அறியாது, புரியாது பாவையவள் தன்னந்தனியே தவித்தாள்...

கனடா சென்ற இந்திரஜித்தோ அவளை மறக்கவும் முடியாது, நினைக்கவும் முடியாது இருதலைக் கொள்ளி எறும்பு போல் அவஸ்தையுடன் தவித்தான்... துரோகமும், குற்றவுணர்வும் அவனது மனதினைப் போட்டு வருத்தியது... அதனால் அதை மறக்க எண்ணி அவன் குடிக்க ஆரம்பித்தான்... போதை ஏற ஏற அவனின் மனதில் சம்யுக்தாவின் நினைவுகளே... அதைக் கண்டு அவன் அரண்டு போனான்... அவன் நினைத்ததோ ஒன்று, நடந்ததோ வேறு ஒன்று... ஆனால் அதுவே அவனுக்குச் சுகமாய் இருந்தது... அவனது தவிப்புகளுக்கு ஆறுதலாகவும் இருந்தது...

அவன் பிறப்பில் தவறானவன் கிடையாதே... இடையில் தவறாகிப் போனவன்... அதனால் தான் அவனது குற்றவுணர்வு நாளுக்கு நாள் அதிகரித்தது...

'காணும் யாவிலும் நீயே' என்று அவள் காதலாக அவனுக்காகக் காத்திருக்க... அவனோ குற்றவுணர்வுடன் அவளது நினைவில் நாட்களைக் கடத்தினான்...

அப்போது தான் அவனுக்குத் தெலுங்கு நண்பன் ஒருவனின் அறிமுகம் கிடைத்தது... அவனையும் அறியாது நண்பனிடத்தில் தெலுங்கு கற்றுக் கொண்டான்... அவனது மனசாட்சிக்கு தெரியும் இது சம்யுக்தாவுக்காகத் தான் என்று... ஆனால் அதை ஏற்றுக் கொள்ளத்தான் அவனுக்கு மனம் வரவில்லை...

கனடாவில் நடந்த அந்த நண்பனின் தங்கை திருமணத்தில் தெலுங்கர்களின் மாங்கல்யத்தைப் பற்றி அறிந்து

கொண்டவன் அச்சத்தில் வியர்த்து வழிந்து போனான்... ஐந்து வருடங்களாக வனவாசம் இருந்தவன் அலறியடித்துக் கொண்டு இந்தியா ஓடி வந்தான்... ஆனாலும் தந்தையின் முன் அவன் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை...

தந்தையைக் காணும் போது எல்லாம் சம்யுக்தாவிடம் கோபம் கொண்ட அவன் மனது, அவளைத் தனியே கண்ட போது எல்லாம் நிலை கொள்ளாது தவித்தது... அவன் அவளுக்குக் காதலன் கிடையாது... மனம் பொருத்தம் இல்லாது மணம் பொருந்தியவன்... அந்தக் கடமையைக் கூட அவனால் சரிவரச் செய்ய முடியாது அவனது கடந்த காலம் அவனை அச்சுறுத்தியது... அதற்காக அவனுக்குச் சம்யுக்தாவைக் கைவிடவும் மனமில்லை...

'பாவா, பாவா' என்று நாய்க்குட்டி போன்று தன்னைச் சுற்றி வந்தவளை தந்தை மீதிருந்த கோபத்தில் பழி தீர்த்துக் காயமடையச் செய்த போதும் அவனுள் இருக்கும் நல்லவன் அவ்வப்போது எட்டிப்பார்த்து அதற்கு மருந்து போடவும் தவறவில்லை... அப்போது தான் பிரசன்னாவுடன் அவளுக்குத் திருமணம் பேசி முடிவு செய்தார் அவனது தந்தை...

அந்தக் கணம் அவன் கணவனாய் அவளைக் காத்து நின்றான்... தன்னுடன் அவளை அழைத்துச் சென்றான்... தான் அவளை என்ன பேசிய போதும் அமைதி காத்தவளைக் கண்டு இறுதியில் அவன் தான் மனம் மாற வேண்டியதாய்ப் போயிற்று... மனதில் இருந்த தனது கடந்த காலக் காயங்களை ஒதுக்கி வைத்து விட்டு அதில் சம்யுக்தாவைக் குடி வைக்க முயன்றான்... பின்னாளில் அதில் வெற்றியும் பெற்றான்... அவளுக்கு விபத்து நடந்த போது தான் தனது மனதில் அவளுக்கான இடத்திற்கான அடையாளம் காதல் என்பதினை அவன் உணர்ந்தான்... இதோ இப்போது இந்தக் கணம் கூட அவன் அதை உணர்கிறான்... காதல் என்றால் என்ன...? என்று அவனுக்குக் கற்று கொடுத்தவளாயிற்றே அவள்...

அவன் செய்த ஒரே ஒரு தவறு குழந்தையைப் பற்றி அவள் சொன்னதும் சிறிது மனம் தடுமாறிப் போனது தான்... அவனோ தந்தையைப் பழிவாங்குவதாகக் கூறிக் கொண்டு இன்னமும் சம்யுக்தாவிற்கு ஊரறிய அங்கீகாரம் கொடுக்காது மனதளவில் தவித்துக் கொண்டிருந்த போது அவள் குழந்தை என்று கூறியதும் அவன் அப்படியே செயலிழந்து போனான்... அது தான் உண்மை... அவள் தன் மீது கொண்ட காதலுக்காக அவனுடன் அங்கீகாரம் இல்லாது வாழ்வாள்... ஆனால் குழந்தை...??? அதற்கு என்ன நிரந்தர முடிவு எடுப்பது...? என்று அவன் யோசிப்பதற்குள் அவள் இந்த விபரீத முடிவை எடுத்து விட்டாள்...

இந்த ஐந்து வருடங்களில் அவன் தன்னினைவில் வாழ்ந்ததை விட அவள் நினைவில் வாழ்ந்தது தான் அதிகம்... அதே போல் தான் அவன் அவளுக்காக மட்டுமே இந்தியா ஓடி வந்ததும்... இதை எல்லாம் அவள் அறிவாளா...? அறிந்தாலும் அவள் அவனைப் புரிந்து கொள்வாளா...? ஏனெனில் அவளுக்குப் புரியும்படி இதுவரை அவன் வெளிப்படையாகத் தன் மனதினை வெளிக்காட்டிக் கொள்ளவில்லையே...

இனியும் இப்படியே நாட்களைக் கடத்த முடியாது என்று எண்ணியவனாய் அவன் ஒரு முடிவுக்கு வந்தான்... அதில் தந்தையின் மீதான கோபம் மறைந்து அவனது மனதில் மனைவி மற்றும் குழந்தை இருவரின் நினைவுகளே முன்னுக்கு நின்றது...

இந்திரஜித் தான் எடுத்த முடிவை செயல்படுத்திய போது சம்யுக்தா ஊரறிய சட்டப்படி அவனது மனைவியாகி இருந்தாள்... அவளது குழந்தைக்கு அவன் தகப்பனாகி இருந்தான்... ஒரே நேரத்தில் இரண்டு விசயங்களையும் அவன் சாதித்துக் காட்டி விட்டான்... ஒரு கல்லில் இரண்டு வெற்றிக்கனிகளை அவன் வெற்றிகரமாகப் பறித்து விட்டான்...

தகப்பனுக்குத் தப்பாது மகனும் செயல் வீரனாய் இருந்தான்...!!!

தொடரும்...!!!

இரவு பதினோரு மணி வரை இந்திரஜித்திற்கு வேலை வெட்டி முறித்தது... குருவி தலையில் பனங்காயை வைத்தது போலிருந்தது அவனது பணிச்சுமை... தந்தையைக் கோபப்படுத்த கையில் எடுத்த தொழில் அவனைப் போட்டு பாடாய் படுத்தி எடுத்தது... சம்யுக்தாவுடன் இருந்தவரை அவன் வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு அவளுக்காக நேரத்தோடு வீட்டிற்கு ஓடி வருவான்... இப்போது அவளைத் தனது வீட்டினர் பாதுகாப்பில் விட்டிருப்பதாலோ என்னமோ அவன் நிம்மதியாகத் தனது வேலையைப் பார்த்தான்...

அந்த இரவு நேரத்திலும் வேலை நடக்கும் இடங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று பார்த்து விட்டு அவன் களைப்புடன் வீடு திரும்பினான்... கழுத்தில் கட்டியிருந்த டையைத் தளர்த்தியபடி அவன் வரவேற்பறைக்குள் நுழைந்த போது அங்குச் சோபாவில் அமர்ந்திருந்த சம்யுக்தாவைக் கண்டு அவனது விழிகள் இரண்டும் இடுங்கியது... ஆனாலும் அவளிடம் பேச்சு கொடுக்காது நேரே தனது அறைக்குச் செல்ல வேண்டி மாடியேறப் போனான்...

தன்னைக் கண்டு கொள்ளாது செல்லும் கணவனை எப்படித் தடுத்து நிறுத்துவது...? என்று தெரியாது சம்யுக்தா கைகளைப் பிசைந்து கொண்டு விழித்தாள்... அவளுக்கு நிச்சயம் தெரியும் அவன் உணவு உண்டிருக்க மாட்டான் என்று... அதை அவனிடத்தில் கேட்கவும் அவளுக்கு அத்தனை பயமாக இருந்தது... அவன் வேண்டாம் என்று விலகி வந்து விட்டு இப்போது இப்படிக் கேட்க நினைப்பது அவளுக்கே அபத்தமாக இருந்தது... ஆனாலும் அவளது காதல் மனம் கணவனுக்காக நிலை கொள்ளாது தத்தளித்தது...

அவளது எண்ணம் புரிந்தார் போன்று அவன் நின்று அவளைத் திரும்பி பார்த்தான்... பின்பு அவளை நோக்கி வந்தவன்,

"வா..." என்றழைக்க... அவளோ விழி விரித்துத் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

டையைக் கழட்டி சோபாவில் போட்டவன் முழுக்கை சட்டையின் கையிலிருந்த பொத்தானை அவிழ்த்து விட்டு சட்டையை மேலேற்றியபடி,

"எதுக்கு இந்தப் பார்வை...? நான் ஒண்ணும் உன்னை ரொமான்ஸ் பண்ணக் கூப்பிடலை..." என்றவன் உணவு மேசையை நோக்கிச் செல்ல... அவன் உண்ண செல்வதைக் கண்டு அவள் நிம்மதியுடன் அவன் பின்னே சென்றாள்...

அவள் அவனுக்குத் தட்டு எடுத்து வைக்கும் முன் தடுத்தவன் தானே தட்டு எடுத்து வைத்துக் கொண்டு பரிமாற, அதைக் கண்டு அவளது முகம் வாடிப் போனது... பரிமாறிய தட்டை அவள் பக்கம் நகர்த்தியவன்,

"சாப்பிடு..." என்றான்... அவனது குரலில் அத்தனை அக்கறை வழிந்தது...

அதற்கும் விழி விரித்து நின்றவளைப் பார்த்தவன், "நான் சாப்பிடாம நீ சாப்பிட மாட்டேன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் தானும் ஒரு தட்டில் உணவை எடுத்து வைத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

இன்னமும் அவள் அமராமல் இருப்பதைக் கண்டு, "நீயா உட்கார்றியா...? இல்லை நானே கையைப் பிடிச்சிழுத்து உட்கார வைக்கவா...?" அவன் நக்கலாய்க் கேட்டதும் சட்டென்று நாற்காலியில் அமர்ந்தவள் உணவை உண்ண ஆரம்பித்தாள்...

அவனும் உண்டு கொண்டே அவளைப் பார்வையால் பருகிக் கொண்டு இருந்தான்... எந்தவித அலங்காரமும் இல்லாதிருந்தவள் அவனது விழிகளுக்கு மட்டும் அத்தனை அழகாகத் தெரிந்தாள்... தலைமுடியை பின்னலிடாது அப்படியே அள்ளிக் கொண்டை போட்டிருந்தாள்... கழுத்தில் கருகமணி மட்டுமே... பொட்டுத் தங்கம் அவளது மேனியை அலங்கரிக்கவில்லை... உடையோ சாதாரணப் பருத்தி

சேலை... தினமும் அவன் எத்தனையோ நவநாகரீக பெண்களைக் கடந்து வருகிறான்... எந்தப் பெண்களிடத்திலும் தோன்றாத ஒரு வித மயக்கம், கிறக்கம் இவளிடத்தில் மட்டுமே அவனுக்குத் தோன்றியது...

கணவனுக்கு முன்னால் அமர்ந்து உண்பது இத்தனை கஷ்டமாக இருக்கும் என்று அன்று தான் சம்யுக்தா உணர்ந்தாள்... அவனது ஆளைத் துளைத்து எடுக்கும் பார்வையை அவள் உணர்ந்தே இருந்தாள்... அது அவளுள் மயக்கத்தையும் கொடுத்தது... சங்கடத்தையும் கொடுத்தது...

அவளுக்கு முன் சாப்பிட்டு எழுந்து கைக் கழுவியவன் தனது தட்டை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றான்... அவன் சென்ற பிறகே அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள்...

சிறிது நேரத்தில் திரும்பி வந்தவன் அவள் முன் பால் தம்பளரை வைத்தான்... அவள் அவனைக் கேள்வியாய் நிமிர்ந்து பார்த்தாள்...

"ஒழுங்கு மரியாதையா பாலை குடி... அப்போ தான் என் மகள் என்னைப் போல் மைதா மாவு மாதிரி வெள்ளையா பிறப்பாள்... இல்லைன்னா என் மகள் காபி கொட்டை கலரில் பிறப்பாள்..."

வார்த்தைக்கு வார்த்தைக்கு 'என் மகள்' என்று கூறியவனைக் கண்டு அவளது முகம் சுண்டிப் போனது... அமைதியாக எழுந்தவள் கைக் கழுவ போனாள்... அவள் போவதைக் கண்டு அவன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்... 'எல்லாம் நாளை வரையே' என்று நினைத்துக் கொண்டவனின் மனதில் அப்படியொரு சந்தோசம்...

அவள் பால் அருந்தி முடித்ததும் அவன் உணவு மேசையில் இருந்த பாத்திரங்களை எடுத்து வைக்க முயன்ற போது,

"நான் எடுத்து வைக்கிறேன்..." என்று மெல்லிய குரலில் கூறியவளைக் கண்டு,

"வேண்டாம்... இப்போ தான் நீ உடம்பு தேறிக்கிட்டு வர்ற... இது எடுத்து வைக்கிறதால் நான் ஒண்ணும் குறைஞ்சு போயிர மாட்டேன்..." என்றவன் தானே எல்லாவற்றையும் எடுத்து வைக்க ஆரம்பித்தான்...

ஆண் பிள்ளை அவன் அவ்வளவு லாவகமாக எல்லா வேலைகளையும் செய்வதை அவள் ஆச்சிரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்... அவர்கள் தனித்து இருந்த போது அவன் இது போல் எல்லாம் செய்தது இல்லை... அப்படிச் செய்யுமளவுக்கு அவள் வைத்துக் கொண்டதும் இல்லை...

வேலைகளை முடித்துக் கொண்டு துண்டில் கைத் துடைத்தபடி வந்தவனைக் கண்டு அவள் எழுந்து நிற்க, "உனக்கு நான்... எனக்கு நீ... இது தான் நம் குடும்பம்... ஆயிரம் பேர் நம்மைச் சுத்தி இருக்கலாம்... எனக்கு அவங்க எல்லாம் நீயா மாற முடியாது... அது போல் தான் உனக்கும்... என்ன புரிஞ்சதா...?"

புரிஞ்சதோ இல்லையோ அவன் கூறியதற்கு அவள் பெரிதாகத் தலையாட்டி வைத்தாள்... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"குட்நைட்..."

அவன் கூறியதும் அவள் தனது அறையை நோக்கிச் செல்ல... அவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்... தானும், அவளும் இன்பமாய் வாழ்ந்த வாழ்க்கை அவனது மனதில் காட்சியாய் எழுந்தது... இப்போது அவள் தன்னை விட்டு விலகி செல்வதைக் கண்டு அவனுள் தாங்கொண்ணா வேதனை எழுந்தது... அதற்குத் தான் தான் காரணம் என்று அறிந்த போதும்...

'என்னைத் திரும்பி பார் பேபி... இப்படி உயிரோடு கொல்லாதேடி...' என்று அவளது ஒற்றைப் பார்வைக்காக அவன் மனதிற்குள் மறுகியபடி நின்றிருந்தான்...

அறை கதவு வரை போனவள் சட்டென்று நின்று அவனைத் திரும்பி பார்த்தாள்... அவளது ஒற்றைப் பார்வையில் அவன் காதலாய் உயிர்த்தெழுந்தான்... உல்லாசமாய் விசிலடித்தபடி அவன் படியேறிச் செல்ல, அவனது உற்சாகத்தைக் கண்டபடி அவள் கதவின் மீது சாய்ந்திருந்தாள்... அவளுக்கே அவளது மனம் போகும் திசை தெரியவில்லை...

கணவனது புறக்கணிப்பில், வெறுப்பில் துவளும் அவளது அதே மனது தான் அவனுக்காகக் காதலில் தவிக்கவும் செய்கிறது...

அறைக்குள் வந்து குளித்து விட்டுப் படுக்கையில் படுத்தவன் நாளைய விடியலை எண்ணி சந்தோசத்துடன் விழிகளை மூடினான்... அவளோ துக்கம் பொங்கியதில் தூக்கம் வராது தவித்தாள்...

மறுநாள் காலையில் எழுந்து வந்த இந்திரஜித் வீட்டிலிருந்த அனைவரையும் காய்ச்சி எடுத்து விட்டான்... அவன் முதலில் எகிறியது தந்தையிடம் தான்... ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பது போல் அவனது கண்களுக்குத் தந்தை மட்டும் தான் தெரிந்தான் போலும்...

"யுகியை நல்லா பார்த்துக்குவேன்னு கூட்டிட்டு வந்தா மட்டும் போதாது... அவள் சாப்பிட்டாளா, தூங்கினாளா, எப்படி இருக்கிறாள்?, என்ன பண்ணுகிறாள்ன்னு அப்பப்போ பார்க்கணும்... கூட்டிட்டு வந்ததோட உங்க கடமை முடிஞ்சு போச்சா...?" என்று அவன் ஏகத்துக்கும் எகிறினான்...

"ரதிம்மா... இப்போ எதுக்கு இவன் இந்தப் பேச்சுப் பேசுறான்... சம்யுக்கு உடம்பு சரியில்லையா...?" சித்தார்த் மனைவியின் காதைக் கடித்தான்...

"அதோ அவளே வர்றாளே..." ஆதித்யாவைத் தூக்கியபடி அங்கு வந்த சம்யுக்தாவைப் பிரகதீஸ்வரி சுட்டிக்காட்டினாள்...

அதைக் கண்டு இந்திரஜித் திரும்பி பார்த்தவன் மனைவி அருகில் வந்து அவளிடம் இருந்து ஆதித்யாவை வாங்க முற்பட்ட போது சின்னவன் அவனை வில்லனை போல் முறைத்துப் பார்த்தான்...

"அத்தை பாவம்டா... நீ என் கிட்ட வா..." என்று அவன் புன்னகைத்தபடி தனது இரு கரத்தை நீட்ட...

அத்தையிடம் இருந்து தன்னைப் பிரிக்கும் வில்லனாக மாமனை எண்ணிய சின்னவன் அவனது கன்னத்தில் பட்டென்று அடித்து விட்டான்... அதைக் கண்டு எல்லோரும் நமட்டுச் சிரிப்பு சிரித்தார்கள்...

"ஆதி பங்காரம்... அப்படி எல்லாம் அடிக்கக் கூடாது... அடானு மீ மேனமாமா கண்ணா..." என்று சம்யுக்தா மருமகனுக்கு எடுத்து கூற... சின்னவனோ அத்தையின் தோளில் முகம் புதைத்துக் கொண்டு மாமனைப் புறக்கணித்தான்...

"உன்னால அடிக்க முடியலைன்னு அவன் கிட்ட சொல்லி என்னை அடிக்கிறியா...?" இந்திரஜித்தின் குரலில் அவள் திடுக்கிட்டுப் போய் அவனை நிமிர்ந்து பார்க்க...

"அடியாள் எல்லாம் பலமா தான் இருக்கு..." என்றவனின் உதடுகளில் வழிந்த கேலிச் சிரிப்பைக் கண்டு அவள் நிம்மதியுற்றாள்...

"ஜிக்கி, முதல்ல ஆதியை தூக்கு... டாக்டர் தானே நீ... அதுவும் கைனகாலஜிஸ்ட் வேறு... இந்த மாதிரி நேரத்தில் யுகி வெய்ட் தூக்கக் கூடாதுன்னு உனக்குத் தெரியாதா...?"

மனைவி மீதான அவனது கரிசனத்தைக் கண்டு எல்லோரும் ஆவென்று வாயைப் பிளந்தனர்... ஜெகதீஸ்வரி வேகமாய் வந்து தனது மகனை வாங்கிக் கொண்டாள்...

"வதின, பாவா சும்மா சொல்றாங்க... எனக்கு ஒண்ணுமில்லை... நான் நல்லா தான் இருக்கேன்..."

அவளது 'பாவா' என்றழைப்பில் இந்திரஜித் கண்கள் மின்ன மனைவியைத் திரும்பி பார்த்தான்... எத்தனை நாள் ஆயிற்று அவளது இந்த அழைப்பைக் கேட்டு... மகிழ்ச்சியில் அவனது கண்கள் கலங்கியது... அந்தக் கணம் அவனுக்குப் புரிந்தது தான் அவளை எந்தளவிற்குத் தேடுகிறோம் என்று...

"இந்தர், சும்மா மிரட்டாதேடா... அங்கே ஹாஸ்பிட்டலில் வச்சு அவளை நல்லா செக் பண்ணி பார்த்துட்டுத் தான் கூட்டிட்டு வந்தேன்..." ஜெகதீஸ்வரி தம்பியை முறைத்துக் கொண்டு பதில் கூறினாள்...

"அப்படியா...? அப்போ நீ அவளை நல்லா பார்த்துக்கிற அப்படித் தானே..."

"ஆமாம், அதுக்கென்ன இப்போ...?"

"நேத்து நைட் யுகி சாப்பிடலை... அது உனக்குத் தெரியுமா...?"

"இல்லையேடா... நான் தானே சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போய் அவளோட ரூமில் வச்சேன்..."

"எப்படி...? நாய்க்கு சாப்பாடு வைப்பது போலவா...?"

"பாவா..." ஹீனமாய் அழைத்த மனைவியின் வார்த்தையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"நேத்து நைட் நான் பதினோரு மணிக்கு வரும் வரை அவள் சாப்பிடலை... நான் வந்த பிறகு என்னோடு தான் சாப்பிட்டாள்... இனியாவது புரிஞ்சிக்கோங்க... என்னை விட வேறு யாரும் அவளை நல்லா பார்த்துக்க முடியாதுன்னு..."

"சாப்பாடு போடுறதும், துணிமணி வாங்கிக் கொடுப்பது மட்டும் நல்ல ஆண்மகனுக்கு அழகில்லை இந்தர்..." சித்தார்த்தின் குரல் சற்று உரத்து ஒலித்தது...

அதைக் கேட்டு மகனது முகம் கறுத்துப் போனது...

"எல்லோரும் பத்து மணிக்கு ஆபிசுக்கு கிளம்பி வாங்க..." என்றான் அவன் மொட்டையாக...

"எதுக்கு...?" சித்தார்த் படபடத்தான்...

ஏனெனில் அவன் தனது சொத்துக்களை மகன் பெயரில் மாற்றி எழுதி கொடுத்தது மனைவிக்குத் தெரிந்துவிடுமோ என்று அவன் பயந்தான்... பிரகதீஸ்வரிக்கு மட்டும் இது தெரிந்தது இந்திரஜித் தொலைந்தான்... அதனால் அவன் முடிந்தவரை மகனைக் காப்பாற்ற எண்ணினான்...

"புலி ஒண்ணு பூனையா மாறி பம்முதே..." என்று தந்தையைக் கண்டு நக்கலடித்தவன்,

"எதுக்கோ..." என்று அலட்சியமாகத் தந்தைக்குப் பதில் உரைத்தபடி,

"ஓய்... உன்னைத் தான்..." என்று விசிலடித்து மனைவியைக் கூப்பிட்டான்... அவள் நிமிர்ந்து பார்த்ததும்,

"முக்கியமா நீ தான் வரணும்..." என்றவன்,

"அஃபிசியலா வர்ற மாதிரி ட்ரெஸ் பண்ணிட்டு வா... இப்படி ஏனோ தானோன்னு கிளம்பி வராதே..." என்று அவளது கசங்கிய புடவையை அவன் சுட்டிக்காட்ட... அதைக் கேட்டு அவள் சரியென்பது போல் தலையசைத்தாள்...

"இந்தர், நீ அளவுக்கு மீறி பேசிட்டு போற..." சித்தார்த் மகனிடம் காய்ந்தான்...

தந்தையின் கோபத்தில் அதுவரை இருந்த விளையாட்டுத்தனத்தைக் கைவிட்ட இந்திரஜித் இறுக்கத்துடன் நிமிர்ந்தான்...

"யுகி எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்... ஆனால் அவள் மற்றவர்கள் பார்வையில் கீழாகப் போவதை நான் விரும்பவில்லை... என்னைப் பத்தி அவளுக்கு நல்லா

தெரியும்... நான் சொல்றதோட அர்த்தம் அவளுக்கு நல்லா புரியும்..." என்றவன் மனைவியிடம்,

"ஷார்ப்பா நைன் தர்ட்டிக்கு ரெடியா இரு..." என்றவன் தனது அறையை நோக்கி விரைந்து விட்டான்...

இந்திரஜித் தயாராகி வந்த போது அவனுக்கு உள்ளுக்குள் சற்று உதறலாகத் தான் இருந்தது... தான் கூறியது போல் சம்யுக்தா தயாராகித் தன்னுடன் வருவாளா என்று... ஆனால் அவனது பயம் தேவையற்றது என்பது போல் அவள் தயாராகி இருந்தாள்... அவளுடன் மற்றவர்களும்... சூர்யாவும் தனது வேலையைத் தள்ளி வைத்து விட்டு தங்கைக்காக அங்கு நின்றிருந்தான்...

"வாங்க போகலாம்..."

எல்லோரிடமும் கூறிய இந்திரஜித் மனைவியின் கையைப் பிடிக்க வந்த போது அவள் அவனை விட்டு விலகி நின்றாள்... இதயம் வலிக்க அவளது விலகலைப் பார்த்தவன் அதைக் கண்டு கொள்ளாது அவளது கையை வலியப் பிடித்துத் தனது பிடிக்குள் இறுக்கிக் கொண்டான்... அவளால் அவனை விட்டு விலக முடியவில்லை...

"யுகியை என்னுடன் கூட்டிட்டுப் போகிறேன்... நீங்க எல்லாம் உங்க காரில் வாங்க..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு தனது காரை நோக்கிச் சென்றான்...

ஓட்டுநர் காரை எடுக்கப் பின்னால் கணவன், மனைவி இருவரும் அமர்ந்தனர்... இந்திரஜித் மனைவியின் கையைப் பிடித்துத் தனது கைகளுக்குள் பொதிந்து வைத்துக் கொண்டான்... உருவி பார்க்க முயற்சித்துத் தோற்றுப் போய் வேறுவழியின்றி அவள் வெளியில் வேடிக்கை பார்க்கலானாள்...

அப்போது தான் அவன் அவளது கையில் ஊசி குத்திய இடங்களைக் கவனித்துப் பார்த்தான்... ட்ரிப்ஸ் ஏற்றுவதற்காக அவளது கைகளில் ஆங்காங்கே ஊசி

வைத்து குத்தி புண்ணாக்கி இருந்தனர்... அது பச்சை நிறத்தில் இரத்தம் கட்டியிருந்தது...

அதைக் கண்டு கண் கலங்கியவனின் கை விரல்கள் அதை மென்மையாய் வருடி விட்டது... வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவள் அவனது செய்கையில் திடுக்கிட்டவளாய் திரும்பி பார்த்தாள்... அந்தக் கணம் அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... கலங்கியிருந்த அவனது விழிகளைக் கண்டு அவள் ஸ்தம்பித்தாள்... அவனது கலக்கம், வருத்தம் எல்லாம் அவளை வேதனையடையச் செய்தது...

ஆனால் அவளது உணர்வுகளை உயிர்த்தெடுக்க முடியவில்லை... மருத்துவமனையில் அவன் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவளது காதுகளில் ஒலித்து அவளுள் கழிவிரக்கத்தைத் தூண்டி தன்னுள் கரைந்து போகச் செய்தது... மௌனமாக அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

பத்து மணியானதும் குடும்ப உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு நிறுவனத்தில் இருந்த 'மீட்டிங் ஹால்'லிற்கு இந்திரஜித் வந்தான்... அவர்களுக்கு முன்னரே அங்கு நிறுவனத்தில் முக்கியப் பதவி வகிக்கும் அதிகாரிகள் மற்றும் ஊடகத்துறை செய்தியாளர்கள் அனைவரும் குழுமியிருந்தனர்... அதைக் கண்டு சித்தார்த் மனதிற்குள் அரண்டு போனான்... மகன் என்ன கோமாளித்தனம் பண்ணி வைக்கப் போகிறானோ என்று... ஏனெனில் அவன் பண்ணும் வேலைகள் எல்லாம் அப்படிப்பட்டதே...

ஆனால் இந்திரஜித் அவன் நினைத்தது போல் ஏறுக்குமாறாய் நடந்து கொள்ளவில்லை... அங்கிருந்த மைக்கை கையில் எடுத்தவன் தனக்கு அருகில் அமர்ந்திருந்த மனைவியின் தோள் மீது கைப் போட்டு அணைத்துக் கொண்டு அழகான ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசினான்...

"இவங்க என்னோட மனைவி மிஸஸ். சம்யுக்தா இந்திரஜித்... என் அக்கா கணவரின் அன்பு தங்கை... என்

காதல் மனைவி... சம்யுக்தா இன்னையில் இருந்து இந்தக் கம்பெனியோட ஒன் ஆஃப் த பார்ட்னரா பொறுப்பெடுக்க இருக்காங்க... இது, என் குழந்தைக்கு அம்மாவாகி இருக்கும் என் காதல் மனைவிக்கு நான் கொடுக்கும் காதல் பரிசு..."

அவன் சம்யுக்தாவிற்கான அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் ஒருங்கே பெற்றுக் கொடுத்து விட்டான்... எப்போது திருமணம் நடந்தது, யாரிந்த பெண், காதல் திருமணமா? என்று பல கேள்விகள் கேட்க முடியாதபடி அத்தனை குடும்பத்தினரும் அங்கு ஒன்று கூடியிருந்தனர்...

வீட்டினர் அனைவரும் இன்பமாய் அதிர்ந்தனர்... சம்யுக்தாவோ அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

"ஓய், பட்டிக்காடு நான் பேசிய இங்கிலீஷ் புரிஞ்சதா...?"

மைக்கை மூடிக் கொண்டு அவன் மனைவி பக்கமாய்ச் சரிந்தபடி அவள் காதோடு கேட்டது பார்ப்பவர்களுக்கு அவன் அவளிடம் காதலோடு ரகசியம் பேசுவது போல் அத்தனை கவிதையாகத் தோன்றியது... அத்தனை பேர் முன்னால் கணவன் தன் பக்கம் சரிந்ததைக் கண்டு சம்யுக்தாவின் முகம் நாணத்தில் சிவந்து போய்ப் பார்க்க அவ்வளவு அழகாக இருந்தது... அந்த அழகான காட்சியை அங்கிருந்த புகைப்படக் கருவிகள் அழகாய் தங்களுக்குள் உள்வாங்கிக் கொண்டது...

"உன் கிட்ட தான் கேட்கிறேன் பேபி..." அவன் கேட்டதற்கு அவள் புரிந்தது என்பது போல் தலையாட்ட...

"பரவாயில்லை... நான் நல்லா தான் ட்யூசன் எடுத்து இருக்கேன்... ஆனா ஒரு விசயத்தில் மட்டும் இன்னும் ட்யூசன் பத்தாது போலிருக்கே..." என்றான் அவன் அவளைப் பார்த்தபடி மையலுடன்...

அவள் புரியாமல் விழிக்க... அதைக் கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"இன்னும் நீ பேபி தான்டி..." என்று கண்சிமிட்டி சிரித்தவன் பத்திரிக்கையாளர்களை நோக்கித் திரும்பினான்...

சம்யுக்தாவோ கணவனது செய்கையின் அர்த்தம் புரியாது தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தாள்...

"என்ன மாமூ இந்தர் இப்படிச் சொல்றான்...? உங்க கிட்ட ஒரு வார்த்தை கேட்கலையா...?" பிரகதீஸ்வரி மகனின் தன்னிச்சையான முடிவு கண்டு ஆச்சிரியமுற்றாள்...

"அது வந்து ரதிம்மா..." என்று தயங்கிய கணவனை யோசனையாய் அவள் பார்க்க...

"நான் இந்தர் பெயரில் எல்லாச் சொத்துக்களையும் எழுதி வைச்சிட்டேன்... ஃபார்மசி, ஹாஸ்பிட்டல், ஆசிரமம் மூணு மட்டும் அவனுக்குக் கொடுக்கலை..."

"ஏன் இந்த திடீர் முடிவு...?" அவளது பார்வை கணவனைத் துளைத்தெடுத்தது...

"அவனுக்குப் பொறுப்பு வரணும்ன்னு... திரும்ப வெளிநாட்டுக்குப் போய்விடக் கூடாதுன்னு..." உண்மையை மறைத்து மென்று முழுங்கினான் சித்தார்த்...

"நல்லது தானே பண்ணியிருக்கீங்க மாமூ..." மகனது செயலில் அவள் மனம் நெகிழ்ந்து போயிருந்தாள்... அதன் பின்னரே சித்தார்த் நிம்மதியானான்...

"உன் தம்பியை என்னமோ நினைச்சேன்... ஆனா அவன் பக்கா ப்ளான்க்காரன் தான்..."

தங்கைக்குக் கிடைக்க வேண்டிய கௌரவம் கிடைத்ததும் சூர்யாவின் முகத்தில் அப்படியொரு மகிழ்ச்சி... அவனது சந்தோசமே அவனது மனைவியின் சந்தோசம்... அதனால் ஜெகதீஸ்வரி அவனை நிறைவாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"என்ன...?" என்று கேட்ட கணவனைக் கண்டு,

"கலெக்டர் சார் கொஞ்ச நாளா என்னைக் கவனிக்கிறதே இல்லை..." என்றவளின் வார்த்தையில் அத்தனை வருத்தம் இருந்தது... அவனும் அதை உணர்ந்தானோ...

"ஐயம் சாரி... சம்யு பத்தின குழப்பத்தில்..."

"உங்க வேதனை எனக்குப் புரியுது... நான் சும்மா தான் சொன்னேன்..." என்றவளின் கரங்களைச் சூர்யா ஆறுதலாக  பற்றிக் கொண்டான்...

மார்த்தாண்டம், பிரபாவதி இப்போது தான் பேரனை நினைத்து நிம்மதி அடைந்தனர்... பழமைவாதிகளான அவர்களால் பேரனின் செயலைச் சற்றும் ஜீரணிக்க முடியவில்லை...

"உங்க திருமணம் எப்போது நடந்தது...? ஏன் ஊரறிய நீங்க அதைச் சொல்லவில்லை...?" என்று கேட்ட பத்திரிக்கையாளரை ஒரு பார்வை பார்த்தவன் பின் பாட்டியை அழுத்தமாய்ப் பார்த்தான்...

"ஐயோ, இப்போ இந்தர் எதுக்கு என்னை இப்படிப் பார்க்கிறான்..." பிரபாவதி விசயம் என்னவென்று தெரியாது முழித்தார்...

"எங்க பாட்டிக்கு திடீர்ன்னு நெஞ்சுவலி வந்து அவங்க உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த போது, மருத்துவமனையில் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் நான் யுகி கழுத்தில் தாலி கட்டிட்டு வெளிநாடு போயிட்டேன்... இப்போது சில மாதங்களுக்கு முன் தான் இந்தியா திரும்பி வந்தேன்... அதன் பிறகு வேலைகள் வரிசையாக இருந்ததால் எங்க திருமணத்தை அஃபீசியலா யாருக்கும் சொல்ல முடியலை... அதனால் தான் இப்போது சொன்னேன்..." என்று கோர்வையாகப் பொய்க் கதை கூறியவனைக் கண்டு வீட்டினர் அனைவரும் மனதிற்குள் ஆவென்று வாயைப் பிளந்தனர்... அவர்களால் வெளிப்படையாகத் தங்களது உணர்வுகளைக் காட்டிக் கொள்ள முடியவில்லை...

"இவனுக்கு இருக்கிற கொழுப்பைப் பாருங்க... என்னைப் போட்டு தள்ள ப்ளான் பண்றான்..." பிரபாவதி கணவனிடம் பொரிந்தார்...

"பேரனுக்கு நல்லது நடக்குதுன்னா அது கூடத் தப்பில்லை..." என்ற மார்த்தாண்டத்தை முறைத்த பிரபாவதி,

"அடுத்து அவன் உங்களைப் போட்டுத் தள்ளுவான்... அப்பவும் இதே டயலாக் தான் பேசணும்..." என்று கடுப்புடன் கூற... அதற்கு மேல் மார்த்தாண்டம் வாயைத் திறப்பார்... அவர் கப்சிப்பென்று வாயை மூடிக் கொண்டார்...

சித்தார்த் மகனின் புத்திசாதுர்யத்தை எண்ணி மனதில் மெச்சி கொண்டான்... நல்லபடியாகக் கூட்டம் முடிந்து எல்லோரும் எழுந்தனர்... இந்திரஜித் தானே காரை ஓட்டிக் கொண்டு மனைவியை அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் விட்டான்...

வீட்டினுள் நுழைந்த பேரனைக் கண்டு முறைத்தபடி அமர்ந்திருந்தார் பிரபாவதி... அவரின் உணர்வுகளைப் புரிந்தவனாய் அவர் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தவன் அவரது கைகளைப் பிடித்து,

"நான் அப்படிச் சொன்னது தப்பு தான்... ஆனா எனக்கு வேறுவழி தெரியலை பாட்டி... நான் செய்த தவறை மறைக்க..." அவன் மேலே பேசும் முன் அவனது வாயை மூடிய பிரபாவதி,

"நாங்க வாழ்றதே உங்களுக்காகத் தானே இந்தர்... நீ சொன்னதில் எந்தத் தப்பும் இல்லை..." என்று பேரனின் தலையைத் தடவிக் கொடுத்து ஆறுதல் அளித்தவர்,

"அடுத்தத் தடவை தாத்தா பெயரை யூஸ் பண்ணிக்கோ இந்தர்... அடுத்த முறை என் பெயரை சொல்லி மாட்டிக்காதே..." ஏதோ பள்ளிக்கு விடுமுறை கடிதம் எழுதி மாட்டிக் கொள்வது போல் அவர் பேரனுக்கு அறிவுரை கூற... அதைக் கேட்டு எல்லோரும் வாய்விட்டு சிரித்தனர்...

பின் எழுந்து நின்ற இந்திரஜித் பெற்றோர் அருகில் வந்து தந்தையைப் பார்க்காது தாயிடம், "இப்போ அவருக்குத் திருப்தியான்னு கேளுங்கம்மா..." மகனது கேலியில் சித்தார்த்திற்கு எரிச்சல் வந்தது...

"என்னடா திருப்தி...? நான் உன் வயசில் பிசினஸ் சக்சஸானதுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறேன்... இப்படிப் புள்ளை உண்டானதுக்கு இல்லை... இந்த வயசில் இது எல்லாம் தேவை தானா...?"

"இந்த வயசில் பெத்துக்காம எந்த வயசில் பெத்துக்கிறதாம்...? உங்களைப் போல் காலம் போன வயசிலா...?"

"இந்தர்..." பிரகதீஸ்வரியின் குரல் கண்டிப்புடன் ஒலித்தது...

"எப்பப்பாரு என்னைத் தான் கண்டிக்கிறீங்க...? முதல்ல அவரைக் கண்டிங்க... என்ன பேச்சு பேசுறார் பாருங்க... ஒருவேளை தாத்தாவாகிட்டோம்ன்னு கவலைப்படுறாரோ..." அவனது குரலில் அத்தனை நக்கல் இருந்தது...

"ஐஞ்சு வருசத்துக்கு முன்பே நான் தாத்தாவாகிட்டேன்னு அவன் கிட்ட சொல்லு ரதி.." சித்தார்த்தும் பதிலுக்குப் பேசினான்...

"மாமூ ப்ளீஸ்..."

"இந்த வயசு சாதிக்க வேண்டிய வயசு ரதிம்மா... அதை விட்டுட்டு தேவையில்லாத விசயங்களில் மனசை செலுத்தினதோட விளைவு தான் இது..."

தந்தையின் பேச்சு மகனுக்கு மட்டுமே புரிந்தது... அவனது தலை தானாகக் குனிந்தது... மறுநொடி தைரியமாக நிமிர்ந்து தந்தையைப் பார்த்தவன்,

"நான் சாதிக்கலைன்னா என்ன... என் மனைவி சாதிச்சு இருக்காள்ல... அது போதாதா... வீட்டுக்கு ஒரு புத்திசாலி இருந்தால் போதும்... அப்போ தான் குடும்பம் பிரச்சினை

இல்லாம ஸ்மூத்தா போகும்..." என்றான் அவன் அங்கு நின்றிருந்த மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தபடி... அதைக் கண்டு அவள் அவசரமாகத் தலைகுனிந்து கொண்டாள்...

"யுகியை இன்னும் இன்னும் மேலே உயர்த்தி வைத்து நான் கீழே நின்னு அழகு பார்ப்பேன்... அவளுக்கு நான் எப்பவுமே ஏணியாக இருக்கத்தான் ஆசைப்படுகிறேன்..." என்றவனின் வார்த்தையில் மட்டுமல்ல விழிகளிலும் அத்தனை காதல் வழிந்தது...

அதை எல்லோரும் கவனித்தனர்... ஆனால் கவனிக்க வேண்டியவளோ கவனிக்காது தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தாள்...

"அதெல்லாம் சரி தான் ரதிம்மா... முதல்ல உன் மகனை சம்யு கழுத்தில் தாலி கட்ட சொல்லு..."

அதைக் கேட்டு அவன் ஏதோ நகைச்சுவை கேட்டது போல் இடியெனச் சிரித்தான்...

"அம்மா... இவர் எப்போதுமே இப்படித் தானா...? நேரம் காலம் தெரியாமல் காமெடி பண்ணிக்கிட்டு..." என்று கேலி வேறு...

"தாலி கட்டாமலா நான் ஊரார் முன் அவளை என் மனைவின்னு மைக் போட்டு அறிவிச்சிட்டு வந்திருக்கேன்..." அவன் சொன்னதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தனர்...

"ஊரான் பொண்டாட்டியைக் கைப் பிடிச்சு இழுத்துட்டு போக நான் என்ன பொறுக்கியா...? இல்லை யாரோ ஒருத்தி கூட உடல் சுகத்திற்காக வாழும் அளவுக்கு நான் என்ன தரங்கெட்டவனா...? என் மனைவியைத் தான் நான் என்னுடன் கூட்டிட்டு போனேன்... என் காதல் மனைவியோடு தான் நான் காதலோடு வாழ்ந்தேன்..." என்று நிமிர்வாய்க் கூறியவன் சம்யுக்தா அருகில் வந்து

அவளது கழுத்தில் இருந்த கருகமணி மாலையை எடுத்து எல்லோருக்கும் காட்டியவன்,

"நான் இதை இவள் கழுத்தில் போட்டு ரொம்ப வருசமாச்சு... ஆனா ஏன், எப்போதுன்னு இப்போ இல்லை எப்போதுமே சொல்ல மாட்டேன்... இவளும் சொல்ல மாட்டாள்... இது எனக்கும் இவளுக்கும் மட்டுமேயான ரகசியம்..." என்றவன்,

"என் மனைவியை நான் எப்படி மறுபடியும் திருமணம் செய்து கொள்ள முடியும்...?" அவன் தகப்பனைப் பார்த்து எதிர் கேள்வி கேட்டான்...

நேற்று அவன் நக்கலாய்ப் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் பின்னால் வேறு அர்த்தம் இருப்பதை வீட்டினர் உணர்ந்து நிம்மதி அடைந்தனர்...

"நடந்து முடிந்ததை மாற்ற முடியாது... இனி யுகி தான் என் மனைவி... வாழ்க்கையில் மட்டுமல்ல தொழிலிலும் அவள் என் சரி பாதி..."

சம்யுக்தா திகைத்து போய் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்... அவளால் எதுவும் பேச முடியவில்லை...

"இப்போ எல்லாம் க்ளியராகிருச்சு இல்லையா...? இனி நான் என் வேலையைப் பார்க்க போகலாமா...?" என்றவன் மனைவி பக்கம் திரும்பி,

"ஒரு வாரம் தான் உனக்கு ரெஸ்ட்... அதுக்கு அப்புறம் நீ வேலைக்கு வந்திருக்கணும்..." என்று தீர்மானமாய்க் கூறியபடி அவன் வெளியில் சென்று விட்டான்...

தனியே நின்றிருந்த சம்யுக்தாவிடம் யாரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை...

"சாப்பிட்டு ரெஸ்ட் எடும்மா..." என்ற பிரகதீஸ்வரி மருமகளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்...

அன்று இரவு நேரத்தோடு வீட்டிற்கு வந்து விட்டான் இந்திரஜித்... எல்லோருடனும் சந்தோசமாய் உற்சாகமாய்ப் பேசினான்... அவன் ஆதித்யாவை கொஞ்சும் சாக்கில்

மனைவியை உரசிக் கொண்டு திரிந்தான்... காதல் இல்லாது வறண்ட மூங்கில் காடு போன்றிருந்த அவளது மனதில் தாபத் தீயை அவன் பற்ற வைத்தான்... அவளால் அவனை விட்டு விலகவும் முடியவில்லை... அவனுடன் ஒன்றவும் முடியவில்லை... என்ன செய்வது என்று தெரியாது அவள் விழித்தாள்...

"உத்...தை..." ஆதி பங்காரம் தான் அவனைக் கண்டு ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்தது...

"நீயெல்லாம் மிரட்டுகிற... எல்லாம் என் நேரம்டா..." என்று அவன் மருமகனைப் போலியாக முறைத்தான்... அதற்கும் சின்னவன் மாமனைப் போட்டு அடித்தான்...

"என்னடா ரொம்பத்தான் ஓவரா போகிற..." என்று அவன் சின்னவனைக் கைகளில் தூக்கிச் சுற்ற... முதலில் திமிறிய சின்னவன் பின் வாயைத் திறந்து கொண்டு ஆவெனச் சிரித்தான்...

இரவு உணவு முடிந்து தனது அறைக்குச் சென்ற இந்திரஜித் மனைவியவளை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே சென்றான்... அவனது பார்வையின் அர்த்தத்தை மனைவியவளை விட அவனது அன்னை சரியாக உணர்ந்து கொண்டாள்... அதனால் மருமகளிடம் வந்தவள்,

"சம்யு, நான் சொல்றேன்னு தப்பா நினைச்சிக்காதே... இந்தர் தப்பு பண்ணியவனாகவே இருக்கட்டும்... அதுக்காக இப்படி விலகியிருந்து அவனைத் தண்டித்து விடாதே..."

பிரகதீஸ்வரி மனதில் அவளுடைய வாழ்க்கை படம் போல் ஓடியது... அடிபடும் போது தான் புத்தி வருகிறது... என்ன செய்ய...?

"நீ அவன் கூட இருந்து திருத்து... நிச்சயம் அவன் உனக்காகத் தன்னை மாத்திக்குவான்... எனக்கு அவன் மேல் நம்பிக்கை இருக்கு... இதனால் நான் என்ன சொல்ல வர்றேன்னா... நீ அவனோட ரூமில் போய் இரு... அவனை விட்டு விலகி நிற்காதேம்மா..."

மாமியாரின் பேச்சைக் கேட்டு ஒன்றும் பேசாது எழுந்த சம்யுக்தா கணவனின் அறையை நோக்கி நடந்தாள்... அறையின் முன் வந்து நின்றவளுக்கு அன்று அவன் தன்னைக் கீழே தள்ளிவிட்ட காட்சி கண்முன் வந்து போனது... அவளது கண்களில் கண்ணீர் நிறைந்தது... எத்தனை நேரம் அங்கே நிற்க முடியும்... மனதைத் தேற்றிக் கொண்டு அவள் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றாள்...

அறை கதவு திறக்கும் சத்தத்தில் திரும்பி பார்த்த இந்திரஜித் அவளை அங்குக் கண்டு வியப்பில் விழிகள் விரித்தான்...

"அதிசயமாயிருக்கு... வா பேபி..." என்றபடி அவன் அவளை உற்சாகமாய் வரவேற்றான்...

"அத்தைகாரு தான்..." என்று தயங்கியவளின் தோள் மீது கை வைத்து அழைத்து வந்து படுக்கையில் அமர வைத்தவன்,

"உன் அத்தைகாரு வேறு என்ன சொல்லி விட்டாங்க...?" கண்சிமிட்டி மயக்கும் புன்னகை புரிந்தவன்,

"அப்படியே உன் அத்தைகாரு உன் கையில் பால் சொம்பைக் கொடுத்திருந்தால் இந்தச் சிச்சுவேசனுக்கு சரியா இருந்திருக்கும்..." என்று அவன் நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்... பின்பு அவளைப் பார்த்து,

"இப்போ உனக்குச் சந்தோசமா பேபி...?" என்று கேட்டவனின் இதழ்களில் தோன்றிய புன்னகை அவளது வெறுமையான பார்வையில் அப்படியே உறைந்து போனது...

கணவன் மீதான நம்பிக்கை உணர்வு மரணித்தவளுக்கு அவனது காதலான செய்கை மட்டும் எப்படி நம்பிக்கை கொடுக்கும்...???

தொடரும்...!!!

"உனக்குச் சந்தோசம் இல்லையா பேபி...?"

மனைவியின் விழிகளில் தெரிந்த வெறுமையில் இந்திரஜித் மனம் துடித்துப் போய்விட்டான்... இத்தனை நாட்களில் சம்யுக்தாவின் விழிகளில் எத்தனையோ உணர்வுகளைக் கண்டவன் இப்படியொரு உணர்வை ஒரு போதும் கண்டதில்லை... மனம் வெறுத்த நிலை என்பார்களே அது போன்றதொரு ஒரு உணர்வை அவளது பார்வையில் அவன் உணந்தான்... அவளது இத்தகைய நிலைக்கு அவன் அல்லவா காரணம்... சொல்லப் போனால் அவன் மட்டுமே காரணம்...

"இங்கே பார் யுகிம்மா... நீ வருத்தப்படும் அளவுக்கு எதுவும் நடக்கலை... அன்னைக்கு நீ குழந்தைன்னு சொன்னதும் நான் கொஞ்சம் தடுமாறிட்டேன் தான் இல்லைங்கல்ல... அதுக்காக என் குழந்தையை நான் வெறுப்பேனா... அது போல் தான் உன்னையும்... குழந்தைன்னு வந்தால் வெளியுலகில் அதுக்கான அங்கீகாரத்தைக் கண்டிப்பா கொடுத்துத் தான் ஆகணும்... அது பத்தி தான் நான் யோசிச்சிட்டு இருந்தேன்... மத்தபடி நீ நினைக்கிற மாதிரி தவறா எதுவும் இல்லை..."

அவன் தன்னிலையை விளக்கிச் சொன்ன வார்த்தைகள் எல்லாம் அவளது காதில் ஏறினாலும் அவளது மனதில் மருத்துவமனையில் அவன் பேசிய உதாசீனப் பேச்சுக்களே ஆழப்பதிந்து இருந்தது... அதனால் அவன் மீது நம்பிக்கை வர மறுத்தது... நெருப்பு என்று தெரிந்தும் மீண்டும் தீக்குளிப்பதற்கு அவளுக்குப் பயமாக இருந்தது... முன்பு அவனுக்காகத் தீக்குளித்தவள் தான்... அப்போது எல்லாம் அவளைத் தன்னவனின் காதல் கேடயமாகக் காத்து நின்றது... ஆனால் இப்போது...??? அவளது மனதின் துயரத்தை அவளது விழிகள் அப்படியே பிரதிபலித்தது... அதை உணர்ந்தார் போன்று அவனும் பேச்சைத் தொடர்ந்தான்...

"அதுக்காக நீ என்னை விட்டு போயிருவியா...? அப்படிப் போக உனக்கு எப்படி மனசு வந்தது...? உன்னை விட்டுட்டு நான் எப்படி இருப்பேன்னு நீ கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா...? நீ இல்லைன்னா நான் செத்து போயிருவேன்டி..." அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் வேதனையுடன் பேசினான்...

அவன் உயிரை விட்ட பிறகு அவளுக்கு ஏது வாழ்க்கை...? அவனது பேச்சில் அவள் உள்ளம் துடித்துப் போனாள்... அவனது வார்த்தைகளில் இருந்த வேதனையை அவள் உணரத் தான் செய்தாள்... ஆனால் இது உண்மையா...? இல்லை பொய்யா...? அதைத் தான் அவளால் உணர முடியவில்லை... மெல்லத் தனது கைகளை அவனது பிடியில் இருந்து விலக்கிக் கொண்டாள்...

அவளது செயலை அவன் மனம் கசங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்... எப்போதும் அவன் தொட்ட அடுத்தக் கணம் அவள் பாகாய் அவனது கைகளில் கரைந்து அவனுடன் ஒன்றிப் போவாள்... அப்படிப்பட்டவளின் இந்த ஒதுக்கம் அவனுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது... மருத்துவமனையில் தந்தையைக் காயப்படுத்த தான் பேசிய பேச்சுக்களை அவள் கேட்டு விட்டாள் என்பதை அவன் இன்னமும் அறியவில்லை...

"ப்ளீஸ் பேபி... என்னைப் புரிஞ்சிக்கோ..." என்று தன்னிடம் கெஞ்சிய கணவனைக் கண்டவளுக்கு மனம் தாங்கவில்லை...

"இனி அப்படிப் போக மாட்டேன்..." மெல்லிய குரலில் என்றாலும் வேகமாய் வந்தது அவளது வார்த்தைகள்...

மனைவியின் வார்த்தையில் அவனது வேதனை எல்லாம் பஞ்சாய் பறந்து போனது...

"இது போதும் பேபி... இது போதும்... என்ன பிரச்சினை வந்தாலும் என்னை விட்டு மட்டும் போயிராதே..."

அதற்குச் சம்மதமாய்த் தலையாட்டியவளைக் கண்டு நிம்மதி அடைந்தவன் அப்போதும் அவளது முகத்தில் மலர்ச்சி இல்லாதது கண்டு கவலையாக,

"இன்னும் என்ன பேபி...? நீ ஏன் சந்தோசமா இல்லை..."

அவளது ஒட்டுமொத்த சந்தோசத்தையும் வார்த்தை என்னும் வாளால் வெட்டிச் சாய்த்து விட்டு இப்போது அவன் அவளிடம் உருகினான்...

"எனக்காக நீங்க இதை எல்லாம் செஞ்சிருக்கத் தேவையில்லை..."

அதைக் கேட்டு அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"நீ சொல்றது எனக்குப் புரியலை..."

அவள் என்ன அவளுக்கும், குழந்தைக்குமான அங்கீகாரத்தையா கேட்டாள்...? அவளுக்கு நல்ல காதல் கணவனாகவும், குழந்தைக்கு நல்ல தகப்பனாகவும் இருப்பதற்காக அவனுடைய அன்பை மட்டும் தானே கேட்டாள்... அவளுக்கு இந்தச் சொத்துக்கள், கௌரவம், அந்தஸ்து இது எதுவும் வேண்டாம்... அவன் மட்டும் வேண்டும்... அவனது காதல் மட்டும் வேண்டும்... அவனால் அதைக் கொடுக்க முடியுமா...?

அந்த நிலையிலும் அவளால் அவனின் சட்டையைப் பிடித்துக் கேள்விகள் கேட்டுச் சண்டை போட முடியவில்லை... 'நான் என்ன உனக்கு அந்தளவுக்குக் கேவலமா போய் விட்டேனா...?' என்று ஆங்காரம் கொண்டு அவனைத் திட்ட முடியவில்லை... 'இல்லை உன்னை மாதிரி என்னை நினைத்தாயா...?' என்று கோபம் கொண்டு குமுற முடியவில்லை...

இதை எல்லாம் கேட்பதற்கு அவளுக்கு ஒரு நொடி போதும்... ஆனால் அதன் பிறகு அவன் அடையும் துயரம் கண்டு அவள் தான் அதிகம் துயரப்படுவாள்... அவனைத் துன்பப்படுத்தக் கூடாது என்று எண்ணி உயிரை விட முடிவு

செய்தவள் அவள்... அந்தளவிற்குக் கண்மூடித்தனமான காதலை அவன் மீது வைத்திருப்பவள் அவள்... அதனால் என்னமோ தான் வேதனை அடைந்த போதும் அவனை வேதனைப்படுத்த அவளால் முடியவில்லை...

"நீங்க எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்..." என்றாள் மொட்டையாக...

அவளது வார்த்தைகளில் அவன் மிகுந்த குழப்பம் கொண்டான்... இதற்காகத் தானே கோபம் கொண்டு அவள் வீட்டை விட்டு போனாள்...? என்று அவன் யோசித்தபடி அமர்ந்திருந்தான்... எந்தப் பெண்ணுக்கும் வரும் நியாயமான கோபமே அவளது கோபம்... ஆனால் அதையும் தாண்டி அவள் வீட்டை விட்டு போயிருக்கிறாள் என்றால்...? அவனுள் பலத்த யோசனை எழுந்தது... மறந்தும் அவன், அவள் உயிரை விடச் சென்றிருப்பாள் என்கிற கோணத்தில் யோசிக்கவில்லை... அதுவும் தனக்காக என்று...

அவனது மனைவி சராசரி பெண்ணல்ல என்பதை அவன் அக்கணம் உணரவில்லை... இறைவனின் விருப்பு, வெறுப்பு இரண்டையும் ஒரே மாதிரியாக ஏற்றுக் கொள்ளும் பக்தையைப் போன்று அவள் அவனை அவனாகவே அப்படியே ஏற்றுக் கொண்டவள்... ஏனெனில் அவளது இறைவன் அவனல்லவா...!

"பாவா, தூக்கம் வருது..." என்றவளின் குரலில் தன்னினைவு கலைந்தவன் தனது யோசனையைக் கைவிட்டு விட்டு அவள் அருகில் நெருங்கி வந்தமர்ந்து கொண்டு,

"எனக்கு வரலையே பேபி..." என்று சரசமாய்க் கூற...

'அறுபது வயசு கிழவனை விட நான் எந்தவிதத்தில் குறைந்து போனேன்' அவன் கூறிய வார்த்தைகள் அவளது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்ததில் அவள் தேகம் பதற அவனிடம் இருந்து விலகி அமர்ந்தாள்...

பிச்சை எடுத்து உண்பது போல் அவளது உள்ளம் கணவனது தொடுகையில் கூசிப் போனது... அவளையும் அறியாது அவளது கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது... தனது தாழ்ந்த நிலையை எண்ணி அவள் மனம் குமைந்து போனாள்... எதிரிக்கும் தன் நிலை வர கூடாது என்று அவள் நினைத்தாள்... அதுவும் தாலி கட்டிய கணவன் வாயிலிருந்து இருந்து உதிரும் முத்துக்களா அவை...?

பொருத்தமில்லா மணத்தில் மனமும் பொருந்தாது போய்விட்டது... தான் அவனுக்குச் சிறிதும் பொருத்தமில்லை என்பதை உணர்ந்தவளுக்கு இன்னமும் அழுகை பெருகியது...

"த்ச்சு... இப்போ எதுக்கு இந்த அழுகை...?" என்று அவளைச் செல்லமாய்க் கடிந்தபடி அவளது கண்ணீரை அவன் துடைத்து விட... அவனிடம் இருந்து விலகியவள் கண்ணீரைத் தானே துடைத்து கொண்டாள்...

மனைவியிடம் தெரிந்த வித்தியாசம் அவனுக்குப் புரிந்தது... ஆனால் அது எதனால் என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை...

"சரி, நான் உன்னை ஒண்ணும் பண்ணலை... ஓகேவா...? நீ படு..." என்றவன் அவளை விட்டு விலகி அங்கிருந்த மற்றொரு அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டான்...

அவனது விலகலும் அவளைப் பாதிக்கத் தான் செய்தது... மனதின் கனம் தாங்காது அவள் முகத்தை மூடிக் கொண்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்... இது போல் இனியொரு இழிபிறவி தனக்கு வேண்டாம் என்றே அவளது மனம் இறைவனிடம் பிரார்த்தித்தது...

மறுநாள் காலைப் பொழுது இந்திரஜித்திற்குச் சந்தோசமாகவும், துக்கமாகவும் விடிந்தது... மனைவி அவனிடம் மீண்டும் வந்தது மகிழ்ச்சி... ஆனால் அவள் இப்படி யாரோ போல் ஒதுங்கி இருப்பது கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது... அலுவலக அறையில் இருந்து

படுக்கையறைக்கு வந்தவன் அங்கு மனைவி இல்லாததைக் கண்டு வெறுமையான மனநிலையோடு குளிக்கச் சென்றான்...

அவன் குளித்து முடித்து வந்த போது சம்யுக்தா படுக்கையை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தாள்... அவளைக் கண்டதும் அவனுள் புத்துணர்வு எழுந்தது...

"குட்மார்னிங் பேபி..." என்றான் உற்சாகமாய்...

கணவனது காலை வணக்கத்தில் இயல்பு போல் அவனைத் திரும்பி பார்த்தவள் அவன் நின்றிருந்த கோலம் கண்டு லஜ்ஜையுற்றவளாய் முகம் சிவக்கத் திரும்பி கொண்டாள்... அவளது முகச்சிவப்பில் இந்திரஜித்தினுள் இருக்கும் காதலன் உயிர்த்தெழுந்தான்... அவன் உல்லாசமாய் விசிலடித்தபடி அலமாரியில் இருந்து உடைகளை எடுக்கச் சென்றான்...

"பாலை குடிச்சிருங்க..." என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேற போன சம்யுக்தாவை விசிலடித்துத் தடுத்தவன்,

"நமக்குள் இருக்கும் பிரச்சினை நம்மோடு... வெளியில் யார் கிட்டேயும் காட்டிக்க வேண்டாம்... முக்கியமா உன் மாமாகாரு கிட்ட..."

"நமக்குள் என்ன பிரச்சினை இருக்கு...?" என்று அவனிடம் எதிர் கேள்வி கேட்டவள் அவனின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டாள்...

அவளது பதிலில் அவன் தான் ஆவென வாயைப் பிளந்து கொண்டு ஆச்சிரியத்துடன் நின்றிருந்தான்... 'நாம தான் ரொம்ப நல்லவனா நடந்துக்கிட்டோமோ... டேய் இந்தர், ஒரு நாளை வேஸ்ட் பண்ணிட்டியேடா...' தனக்குள் புலம்பியபடி அவன் கிளம்பினான்...

இந்திரஜித் வரவேற்பறைக்கு வந்த போது அங்குச் சூர்யா மட்டும் அமர்ந்திருந்தான்... சூர்யாவைக் கண்டு கொள்ளாது அவன் சூர்யாவிற்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தான்...

"தேங்க்ஸ்..." என்ற சூர்யாவை அவன் கேள்வியாய் நோக்கினான்...

"என் தங்கைக்கான அங்கீகாரத்தைக் கொடுத்ததுக்கு..." அதைக் கேட்டு இந்திரஜித்தின் இதழ்களில் புன்னகை வந்தமர்ந்தது...

"இதில் நீங்க தேங்க்ஸ் சொல்ல ஒண்ணும் இல்லை... என் தவறை நான் சரி பண்ணினேன்... அவ்வளவு தான்..."

அதன் பின் இருவரும் சாதாரணமாகப் பேசி கொண்டிருந்தனர்... அந்நேரம் அங்கு வந்த சம்யுக்தா இருவரையும் ஆச்சிரியமாகப் பார்த்தாள்... மனைவியின் வியப்பைக் கண்டு கொண்ட இந்திரஜித் அவளைப் பார்த்து 'என்ன?' என்று புருவத்தைத் தூக்கிப் பார்த்தான்... அதில் திகைத்தவள் பின் மெல்ல 'ஒன்றுமில்லை' என்று தலையசைத்தாள்...

அலுவலகத்திற்குக் கிளம்பிய இந்திரஜித்தின் பின்னேயே வந்தாள் சம்யுக்தா... அவளின் வருகையை உணர்ந்தவனாய் திரும்பியவனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது... வெளி வராண்டாவைத் தாண்டிச் செல்லும் போது அங்கு அமர்ந்திருந்த தந்தையைக் கண்டதும் அவனுள் குறும்பு தலை தூக்கியது...

வேண்டும் என்றே மனைவியின் கையைப் பிடித்துத் தன்னருகே இழுத்தவன் அவளது கன்னத்தில் நச்சென்று சத்தமாய் இதழ் பதித்தான்...

"சாரி பேபி... லிப் டூ லிப் கொடுத்திருப்பேன்... ஆனா என்ன செய்ய இங்கே வாஸ்து சரியில்லை... அதான் கன்னத்தில் மட்டும்..." என்று ஓரக்கண்ணால் தந்தையைப் பார்த்தபடி அவரது காதில் படும்படி வேண்டுமென்றே உரக்கக் கூறியவனைக் கண்டு சித்தார்த் வெட்கத்துடன் கூடிய சங்கடமான புன்னகையுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்...

"பை பேபி... மிஸ் யூ பேபி..." என்று வேண்டுமென்றே தந்தையை வெறுப்பேற்ற எண்ணி அவன் மனைவியிடம் கொஞ்சியபடி விடைப்பெற்றான்...

'அடேய், நான் சொல்லாத பேபியா...? எனக்கேவா...? கொழுப்புடா உனக்கு... என் பொண்டாட்டியை நான் காதலிச்ச மாதிரி உன்னால் காதலிக்க முடியுமா...? கொஞ்ச முடியுமா...? பெருசா கொஞ்சுகிறான், பார்... போடா...' மனதில் மகனைத் தாளித்தபடி அமர்ந்திருந்தான் சித்தார்த்... ஆனால் அதில் கோபம் எள்ளளவும் இல்லை...

காரிலேறி அதைக் கிளப்பிய இந்திரஜித் மனைவிக்கு அழுத்தமான ஒரு பறக்கும் முத்தத்தைப் பரிசாகப் பறக்க விட்டு விட்டு கிளம்பிச் சென்றான்... கணவனது செயலில் திகைத்து நின்ற சம்யுக்தா அங்கு மாமனாரைக் கண்டதும் வெட்கம் மேலிட வீட்டிற்குள் ஓடினாள்...

"சம்யு..." அங்கு வந்த பிரகதீஸ்வரி அவளை அழைக்க, அவளோ தனக்குள் மூழ்கியபடி சென்றுவிட்டாள்...

"என்னாச்சு இவளுக்கு...?" என்று கேட்டபடி கணவன் அருகில் வந்து அமர்ந்தாள் பிரகதீஸ்வரி...

"உன் மகன் கொடுத்துட்டுப் போன பரிசு அப்படி..." என்று கண்சிமிட்டி சிரித்தான் சித்தார்த்...

"பரிசா...?"

"அதான்... அது..." என்றவனைக் கண்டு புரியாது பார்த்தாள் அவள்...

பின் கணவன் கண்சிமிட்டி குறிப்பால் உணர்ந்தவும் அவள் லஜ்ஜையுற்றவளாய், "உங்க புள்ளை உங்களை மாதிரி தானே இருப்பான்..." என்று கூறியவளின் முகத்தில் அப்படி ஒரு வெட்கம்...

"ஹா ஹா... அது என்னவோ உண்மை தான்... அவனுக்குக் கோபமும் சரி, அன்பும் சரி எல்லாமே என்னைப் போல் அளவுக்கு அதிகமாகத் தான் இருக்கு..." என்றவன்,

"இப்போ தான் நிம்மதியா இருக்கு ரதிம்மா... இப்போ இந்தருடைய குறும்பு, சிரிப்பு எல்லாம் பார்க்கும் போது பழைய இந்தரை பார்ப்பது போல் இருக்கு... அவனோட சந்தோசம் இப்படியே நீடிக்கணும்..." என்று ஒரு தகப்பனாய் மகனை நினைத்துச் சந்தோசப்பட்டான் அவன்...

"சம்யு மாதிரியான ஒரு நல்ல பொண்ணு மனைவியா கிடைச்சிருக்கும் போது இந்தருக்கு என்ன குறை இருக்கப் போகுது... அவன் சந்தோசமா தான் இருப்பான்..."

"எனக்கு நீ கிடைச்சது போல்..." என்று கண்சிமிட்டிய கணவனைக் கண்டு,

"அய்ய, போதுமே..." என்று அழகாக வெட்கப்பட்டவள்,

"எனக்கு நீங்க கிடைச்சது போல்... நீங்களும், சம்யுவும் ஒண்ணுங்க... காதல்ல நீங்க ரெண்டு பேரும் காட்டுகிற பொறுமை எனக்கும், இந்தருக்கும் சுத்தமாய்க் கிடையாது..." என்றவளின் மனதில் பழைய நினைவுகள்...

மனைவியவளின் மனநிலையை உணந்தார் போன்று சித்தார்த் அவளது கையை ஆறுதலாக பற்றிக் கொண்டான்...

************************

சர்வேஷை பள்ளிக்கு அனுப்பி வைத்து விட்டுச் சாத்விகா தங்களது அறைக்குள் நுழைந்தாள்... அங்குச் சந்தோஷ் மருத்துவமனைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்... வெள்ளை முழுக்கை சட்டையும், கறுப்பு பேண்ட்டும் அணிந்து கம்பீரமாக இருந்தவனை அவளது விழிகள் இமைக்காது ரசித்துப் பார்த்தது... கண்ணாடி வழியே மனைவியைப் பார்த்த சந்தோஷ் அவளின் பார்வையை உணர்ந்தாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை... இயல்பு போல் தலைவாரிக் கொண்டிருந்தான்...

அவனது செய்கையைக் கவனித்துக் கொண்டிருந்தவளின் முகம் வாடிப் போனது... அன்று மருத்துவமனையில் சர்வேஷின் தந்தை தான் இல்லை என்று நிரூபித்தவன்

அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசவில்லை... இடைப்பட்ட நாட்கள் அமைதியாகக் கழிந்தது... அவர்களது திருமண வாழ்க்கை ஆரம்பப் புள்ளியில் அப்படியே இருந்தது...

"அத்தான்..." அவளது குரலில் அவன் திரும்பி பார்த்தான்...

"சொல்லு அம்மு..." என்றவன் கைக்கடிகாரத்தை எடுத்துக் கையில் கட்ட துவங்கினான்...

"நீங்க ஏன் என் கிட்ட பேச மாட்டேங்கிறீங்க...?"

"என்ன பேசணும்ன்னு எதிர்பார்க்கிற...?" அலைப்பேசியை எடுத்துச் சட்டைப் பையில் போட்டபடி அவளைத் திரும்பி பார்த்தான்...

"நம்ம வாழ்க்கையைப் பத்தி..."

"அதுக்கு என்ன நல்லா தானே போயிட்டு இருக்கு..." என்று சளைக்காது பதில் கொடுத்தவனைக் கண்டு அவள் ஆயாசமாகப் பார்த்தாள்...

"நான் அதைச் சொல்லலை..."

"எதைச் சொல்லலை...?" என்று பதிலுக்குக் கேள்வி கேட்டவன் அவளின் திணறலைக் கண்டு பரிதாபம் கொண்டு அவள் அருகில் வந்தான்...

"நான் என் பக்க தவறை சரி பண்ணிட்டேன்... ஆனால் நீ...?" என்று நிறுத்திவிட்டு அவளது விழிகளுக்குள் உற்றுப் பார்த்தவன்,

"உன் பக்க தவறு அப்படியே தான் இருக்கு... அதை நீ எப்போ சரி பண்ண போகிற...?"

அவள் திகைப்பாய் கணவனைப் பார்த்தாள்...

"கணவன், மனைவிக்குள் சந்தேகம் இருக்கக் கூடாது... இருந்தால் வாழ்க்கை நரகமாகிரும்... அதனால் எந்தவித சந்தேகமும் இல்லாது நம் வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கணும்ன்னு நான் விரும்புகிறேன்..."

கணவனது வார்த்தையில் அவளது விழிகளில் வேதனை வழிந்தது... அதைக் கண்டு கொண்டவன் சற்று நேரம் அமைதியாக இருந்தான்...

"சின்ன வயசில் இருந்து உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் அம்மு... இப்பவும் உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... அந்தப் பிடித்தம் வேறு... இந்தப் பிடித்தம் வேறு... அது அன்பு... இது காதல்... கல்யாணத்துக்கு முந்தி காதல் இல்லை... ஆனா இப்போ என் மனசில் நீ மட்டும் தான்..."

கணவனது வார்த்தையில் அவளது முகம் மலர்ந்தது... மகிழ்ச்சியில் அவள் அவனது வார்த்தையைக் கூர்ந்து கவனிக்கவில்லை...

"உன் சந்தேகத்தை எல்லாம் நீ தீர்க்கும் வரை நம் உறவு இப்படித் தான் இருக்கும்..." என்று தீர்மானமாய்க் கூறியவனைக் கண்டு இப்போது அவளுக்குக் கவலை தோன்றவில்லை... மாறாக நிம்மதியான மனதுடன் அவனைப் பார்த்தாள்...

மேசை அருகே சென்ற சந்தோஷ் அங்கிருந்து ஒரு காகித கட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்... அவள் என்ன என்பது போல் புரியாது அவனைப் பார்த்தாள்...

"சர்வேஷை சட்டப்படி தத்து எடுத்துக்கிறதுக்கான ஃபார்மாலிட்டீஸ் பேப்பர்ஸ்..."

"அத்தான்..." என்றழைத்தவளின் விழிகள் கலங்கிப் போனது...

"அவன் உன் மகன்னா... எனக்கும் மகன் தான்... இனி அவன் நம் மகன்..."

"தேவையில்லாத சுமையை உங்க தலையில் சுமத்துகிறேனோ...? நான் சர்வேஷை எப்போதும் போல் பார்த்துக்கிறேன்... எனக்காக நீங்க பாரம் சுமக்க வேண்டாம்..."

"நான் பாரம்ன்னு சொல்லலையே... உன் சம்பந்தப்பட்டது எல்லாமே எனக்குச் சுகமான சுமைகள் தான்..." என்று அவன் முணுமுணுத்தபடி கார் சாவியை எடுத்துக் கொண்டு திரும்ப...

அவனை இடிப்பது போல் அவனது மனைவி அவன் முன் வந்து நின்றாள்... அவன் திகைப்பாய் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் அவனது முகத்தைத் திருப்பி அவனது கன்னத்தில் தனது முதல் முத்திரையை முத்தாகப் பதித்து விலகியவள் அவனைக் கண்டு கலகலவென்று சிரித்தபடி அறையை விட்டு வெளியில் ஓடினாள்...

"அறுந்தவாலு..." புன்னகையுடன் சொல்லியவனின் கை மனைவி முத்தமிட்ட கன்னத்தை மென்மையாய் தடவி பார்த்தது...

அவளது அச்சாரம் அவனுள் தித்திப்பாய் இறங்கியது அவளது காதலை போல்...!

*******************

பிரசன்னா வழக்கம் போல் சித்தார்த்திடம் அந்த மாத மருத்துவமனை அறிக்கையைக் கொடுப்பதற்காக வீட்டிற்கு வந்திருந்தான்... அங்குத் தோட்டத்தில் அமர்ந்திருந்த சம்யுக்தாவை அவன் கண்டு விட்டான்... நேற்று பத்திரிக்கைகளில் வந்த செய்தியை வைத்து அவன் இந்திரஜித், சம்யுக்தா பற்றித் தெரிந்து கொண்டான்... அவளிடம் போய்ப் பேச துடித்த மனதினைக் கட்டுப்படுத்தும் வகைத் தெரியாது அவன் அவளை நோக்கிச் சென்றான்...

"சம்யு..."

அவனது குரலில் தனது பார்வையைத் திருப்பி அவனைப் பார்த்தவளின் முகம் மலர்ந்தது...

"வாங்க பிரசன்னா... நல்லா இருக்கீங்களா...?"

"நான் நல்லா இருக்கேன்... நீ எப்படியிருக்க...?" என்றவனது பார்வை அவளை அளவிடுவது போல் பார்த்து வைத்தது...

அவளைப் பார்த்ததுமே தெரிந்து போனது... அவள் நன்றாக இல்லை என்று... துள்ளலும், சிரிப்புமாய் இருந்தவளை இப்படிச் சோக சித்திரமாய் மாற்றுவதற்காகவா இந்திரஜித் அத்தனை அவசரமாய் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றது... அவனுக்கு இந்திரஜித் மீது வருத்தம் எழுந்தது...

"நல்லா இருக்கேன்..." என்று அவள் அவனைப் பார்த்து சோகையாய்ச் சிரித்தாள்...

"அவளுக்கு என்ன குறைச்சல்...? என் மனைவியா, என்னுடைய குழந்தைக்கு அம்மாவா சந்தோசமா சௌக்கியமா இருக்கிறாள்..."

மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்த இந்திரஜித் பிரசன்னாவைப் பார்த்து கேலியாய் கூறியபடி மனைவிக்கு அருகில் நெருக்கமாய் அமர்ந்து கொண்டு அவளது தோளில் கைப் போட்டு தன்னுடன் அணைத்துக் கொண்டான்... அவளோ சங்கடத்துடன் நெளிந்தபடி இருந்தாள்...

"கங்கிராட்ஸ் சார்..." என்று அவனை வாழ்த்திய பிரசன்னா பின் சம்யுக்தா புறம் திரும்பி,

"கங்கிராட்ஸ்..." என்க...

"என்ன உன் வாழ்த்தில் ஒரு உப்புச் சப்பு இல்லையே...?" என்றபடி இந்திரஜித் பிரசன்னாவை ஒரு மாதிரி பார்த்தபடி மேலிருந்து கீழாக அளவிட்டான்... சம்யுக்தா திகிலுடன் இருவரையும் பார்த்தாள்...

"நீங்க சொல்றது எனக்குப் புரியலை..."

"அன்னைக்கு அப்படிக் காரசாரமா கோபப்பட்டுச் சண்டை போட்டியே... இன்னைக்கு என்ன இந்தப் பம்மு பம்முற...?" கேலியாய் புருவத்தை உயர்த்தினான் இந்திரஜித்...

"அது அப்போ இருந்த கோபத்தில் பேசியது... இப்போ அந்தக் கோபத்திற்கு அவசியமே இல்லை... நேத்து நியூஸ் கேள்விப்பட்டதும் எல்லாக் கோபமும் போயிருச்சு..."

"அப்படியா...?" நக்கலாய்க் கேட்ட இந்திரஜித்,

"கொஞ்சம் சோகம் இழையோடுற மாதிரி இருக்கே..." என்றான் சந்தேகமாய்...

"என் வாழ்வு இத்தோடு முடிந்து விடப் போவதில்லை... அதனால் சோகம் தேவையில்லைன்னு நினைக்கிறேன்..." என்று நிமிர்வாய்க் கூறினான் பிரசன்னா...

"நாட் பேட்..." சிறு மெச்சுதலுடன் பிரசன்னாவைப் பார்த்தவன்,

"உள்ளே போ... உன் தத்து அப்பா உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கப் போகிறார்..."

"இதோ சார்..." என்ற பிரசன்னா,

"வர்றேன் சம்யு..." அவளிடம் விடைப்பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்...

அவன் போவதைப் பார்த்தபடி இருந்த இந்திரஜித், "பிரசன்னா உன்னைக் காதலிப்பது உனக்குத் தெரியுமா...?" என்று கேட்டான் யோசனையாக...

கணவன் பண்ணிய அலும்பில் தலைகுனிந்து அமர்ந்திருந்தவள் அவனது வார்த்தைகளில் உடல் தூக்கிவாரிப் போட அவனைத் திரும்பி பார்த்தாள்...

"ஹேய் ரிலாக்ஸ்... இப்படி எல்லாம் நீ பயந்தா என் மகளும் உன்னை மாதிரி பயந்தவளா வரப் போகிறாள்... அவள் என்னை மாதிரி தைரியமா வரணும்..." என்றவனை ஒரு பார்வை பார்த்தவள் பின் மெல்லிய குரலில்,

"எனக்குத் தெரியாது..."

"நீ அவனைக் கவனிச்சு பார்த்தாலே உனக்குப் புரிஞ்சிருக்குமே..." என்றவனின் பார்வை அவளைத் துளைத்தெடுத்தது...

"நான் கவனிச்சுப் பார்த்தது இல்லை... அவங்க கவனிக்கும் அளவுக்கு நான் அழகும் இல்லை..." அவள் கூறிய முதல் வரியில் அவனது அலைபாய்ந்த மனது ஆழ்கடல் போன்று அமைதியானது...

"யார் சொன்னா நீ அழகில்லைன்னு... பிறை மதி போன்று இருக்கும் உன் நெற்றி, மானின் மருட்சியுடன் அங்குமிங்கும் அலைபாயும் அழகிய கண்கள், என்னைப் போதையூற செய்யும் மூக்குத்தி குத்திய கூர்நாசி, செர்ரி பழம் போன்று தாபம் ஏற்றும் இதழ்கள்..."

கணவனது கரம் தனது முகத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்ததைக் கண்டு சம்யுக்தா இமைக்க மறந்தவளாய் திகைத்துப் போய் அவனைப் பார்த்திருந்தாள்... அவனது தொடுகையில் அவளது தொண்டைக்குள் ஏதோ ஒன்று அவஸ்தையாய் உருண்டது... அவன் அவளது கணவன், அவனது குழந்தை அவளது வயிற்றில்... ஆனாலும் இப்போதும் அவனது தொடுகை அவளை ஏதோ செய்கிறதே...

"அப்புறம்..." என்றவனது வலக்கை ஆள்காட்டி விரல் அவளது கழுத்துப் பகுதியை நோக்கி கீழிறங்கியது... அடுத்து அந்த விரல் பயணிக்கப் போகும் இலக்கினை அறிந்தவளாய் அவள் லஜ்ஜையுற்றபடி அதைத் தடுத்து நிறுத்தியவள்,

"சாப்பிட வாங்க..." என்றபடி சங்கோஜத்துடன் எழுந்து நின்றாள்...

"ம்... சாப்பிட நான் ரெடி தான்... ஆனா நீ தான் ரெடி இல்லை..." இருபொருள்படக் கூறியவனின் பார்வை அவளது தேனூறும் இதழ் மீது தாபமாய் நிலைத்து நின்றது... அதில் அவள் தேகம் அதிர அவனைப் பார்க்க... அவனோ சிரித்தபடி அவளது கன்னம் தட்டியவன்,

"உன் விருப்பம் இல்லாது எதுவும் நடக்காது..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்... அவளும் அமைதியாக அவனுடன் நடந்தாள்...

*********************

அன்று காலையில் இருந்து இந்திரஜித் சந்தோசப் பரபரப்பில் சுற்றிக் கொண்டு இருந்தான்... தென்னிந்தியாவிலேயே பெரிய 'தீம் பார்க்' ஒன்றை சென்னையில் அமைப்பதற்காக மும்பை நிறுவனம் ஒன்றுடன் அவன் கைக் கோர்த்து இருந்தான்... இன்று அந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுவதற்காகச் சென்னை வருகின்றனர்...

சில மணித் துளிகளில் அவர்களைச் சுமந்து வந்த கார் இந்திரஜித்தின் அலுவலகம் முன் வந்து நின்றது... இந்திரஜித் அவர்களை வரவேற்பதற்காக வாயிலில் வந்து காத்திருந்தான்... காரில் இருந்து முதலில் இறங்கிய ஆணைக் கண்டு வரவேற்பாய் புன்னகைத்தவன் அடுத்து இறங்கிய பெண்ணவளைக் கண்டு உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்து நின்றான்...

அந்தக் கணம் விதி அவனைக் கண்டு விகாரமாய்ச் சிரித்தது...!!!

தொடரும்...!!!

அந்தப் பெண்ணவளைக் கண்டு இந்திரஜத்திற்குக் கண்கள் இருட்டிக் கொண்டு மயக்கம் வருவது போலிருந்தது... விட்டால் அங்கேயே மயங்கி விழுந்திருப்பான்... அந்நேரம் அவனது செயலாளர் அவனைக் கண்டு,

"சார்..." என்றழைத்து பூங்கொத்தை நீட்டினார்...

அதில் அவனுக்கு நிகழ்காலம் உறைக்கத் தொழிலதிபனாய் தன்னைத் தேற்றிக் கொண்டு நெஞ்சை நிமிர்த்தியபடி அந்தப் பூங்கொத்தை வாங்கியவன் வருகை தந்திருந்த ஆண்மகனிடம் அதைக் கொடுத்து,

"வெல்கம் மிஸ்டர். விவேக்..." என்று ஆண்மகனின் கையைப் பிடித்துக் குலுக்கி வரவேற்றான்... அவனுக்கு விவேக்கை தொழில்ரீதியாய் தெரியும்... பின்பு அவன் பெண்ணவளை கேள்வியாய் நோக்கினான்...

"இவள் என் தங்கை மிஸ். மாதுரிமா..." விவேக் தனது தங்கையை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்...

அவளது பெயரைத் தான் அவனுக்கு முன்பே தெரியுமே... ஒப்பந்தம் தயாரிக்கும் போது மாதுரிமா என்கிற பெயரும் சேர்ந்து வந்ததே... ஆனால் இந்த மாதுரிமாவின் உருவம் தனக்கு நன்கு பரிச்சயமானதாய் இருக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லையே... காற்றில் கலந்து அவனது கனவில் நிலைத்து இருக்கும் உருவம் இப்போது அவன் எதிரில் நனவாய் நிற்பது கண்டு அவன் தனக்குள் மிகவும் நிலைக்குலைந்து போயிருந்தான்... ஆனால் தொழில் என்று வரும் போது அங்குத் தனிப்பட்ட உணர்வுகளுக்கு இடமில்லை என்பதால் தனது உணர்வுகளை வெகு சிரமப்பட்டுத் தள்ளி வைத்தான் அவன்...

அவன் யோசனையில் இருக்கும் போது அவன் முன் தனது கையை நீட்டிய மாதுரிமா, "ஹாய்..." என்க...

அதில் நிமிர்ந்து அவளைப் பார்த்தவன் தனது கையை நீட்டாது அவளைப் பார்த்து இருகரம் கூப்பி வணக்கம் தெரிவித்தவன் சம்பிரதாயமாக அவளிடமும் ஒரு பூங்கொத்தை நீட்டினான்... அதைக் கண்டு மாதுரிமாவின் முகம் கறுத்துப் போனது...

"மதும்மா... இது மும்பை இல்லை... சென்னை... அங்கு மாதிரி இங்குப் பசங்க கிடையாது... இங்கு இன்னமும் நம் நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றும் மக்கள் அதிகம் இருக்கிறார்கள்... அதில் இந்திரஜித்தும் ஒருவர் போலும்..." என்று தங்கையைப் பார்த்து சிரித்தபடி கூறினான் விவேக்...

வேறுவழியின்றி அவள் தனது இருகரங்களைக் குவித்து வணக்கம் தெரிவித்தபடி இந்திரஜித்தைப் பார்த்து உதடுகளில் சிரிப்பை ஒட்ட வைத்துக் கொண்டு பூங்கொத்தை வாங்கிக் கொண்டாள்... இந்திரஜித்தின் விழிகள் அவளைக் கூர்மையுடன் பார்த்துக் கொண்டிருந்தது... அதை அவள் உணர்ந்தாலும் அலட்சியபாவத்துடன் அவனைப் பார்த்து வைத்தாள்...

"உள்ளே வாங்க..." என்றழைத்தபடி இந்திரஜித் அவர்களை உள்ளே அழைத்துப் போனான்...

ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் பக்காவாகச் செய்யப்பட்டு இருந்தது... அதனால் மூவரும் நேரே கையெழுத்து போடும் பணியில் இறங்கினர்... முதலில் விவேக் கையெழுத்து போட்டு விட்டு தனது தங்கையிடம் கொடுத்தான்... அவள் அதை வாங்கிக் கையெழுத்து போடும் போது இந்திரஜித்தின் விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"மிஸ்டர். இந்தர்..." விவேக் அழைக்கும் குரலில் தனது யோசனையை விடுத்து நிமிர்ந்து அமர்ந்தவன் தானும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட துவங்கினான்...

எல்லாம் நல்லபடியாக முடிந்த போது மதிய உணவு நேரம் நெருங்கி இருந்தது... அதை உணர்ந்த இந்திரஜித்

விவேக்கிடம்,

"வெல் மிஸ்டர். விவேக்... எல்லாம் நல்லபடியாக முடிந்ததில் எனக்கு மிகவும் சந்தோசம்... உங்களுக்கான லன்ச் ஸ்டார் ஹோட்டலில் ஏற்பாடு பண்ணியிருக்கு... என்னுடைய செக்ரட்டரி உங்களுடன் வருவார்... என்னால் அதில் கலந்து கொள்ள முடியவில்லை... சாரி..." என்று அவன் கூற...

"நீங்க போடும் பிச்சை சாப்பாட்டுக்காகவா நாங்க மும்பையில் இருந்து கிளம்பி வந்தோம்... நீங்க லன்ச் ஏற்பாடு பண்ணியிருக்கிற ஹோட்டலை விட எங்க வீட்டு லன்ச் நல்லாயிருக்கும்... அண்ணா, நாம கிளம்பலாம்..."

இந்திரஜித் தங்களை அவமானப்படுத்தி விட்டதாக எண்ணி மாதுரிமா படபடத்தாள்... இந்திரஜித் அவளைக் கண்கள் இடுங்க கூர்ந்து பார்த்தான்...

"மது கூல்யா..." என்று தங்கையைச் சமாதானப்படுத்திய விவேக்,

"நீங்களும் எங்களுடன் ஜாயிண்ட் பண்ணிக்கலாமே...?" என்று அவன் தன்மையாக இந்திரஜித்திடம் கேட்க...

"இல்லை விவேக்... எனக்காக என் மனைவி காத்திட்டிருப்பாள்..."

"ஹ, இந்தக் காலத்தில் இப்படி ஒரு மனைவியா...?" அலட்சியம் போல் கேட்டாள் மாதுரிமா...

"எந்தக் காலத்திலும் என் மனைவி அப்படித் தான்... அவள் மாற மாட்டாள்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறினான் இந்திஜித்...

"ஓகே இந்தர்... அப்போ நாங்க கிளம்பறோம்..." என்றபடி விவேக் எழுந்து கொள்ள... உடன் மாதுரிமாவும் எழுந்தாள்...

இந்திரஜித் தானும் எழுந்து அவர்களுக்கு விடை கொடுத்தான்... அவர்கள் கிளம்பியதும் இந்திரஜித் வீட்டிற்குக் கிளம்பினான்... அத்தனை நேரம் கட்டுப்பாட்டில் இருந்த அவனது மனம் கட்டுப்பாடு இழந்து தாறுமாறாய்

எங்கெங்கோ அலைபாய்ந்தது... அவனது எண்ண அலைகளில் பலவித நினைவுகளின் எழுச்சிகள்...

அவன் வீட்டிற்கு வந்த போது வாசலில் சித்தார்த் மகனுக்காகக் காத்திருந்தது போல் அவனைக் கண்டதும் பரபரப்புடன் அருகில் வந்தான்...

"இந்தர் ஆர் யூ ஆல்ரைட்...?" என்ற தகப்பனை நிமிர்ந்து பார்த்தவன் ஆம் என்பது போல் தலையாட்டினான்... ஆனால் அது உண்மை இல்லை என்று அந்தத் தகப்பனுக்குத் தெரியாதா என்ன...?

"இது எப்படிச் சாத்தியம்ன்னு எனக்குத் தெரியலை... என்னால் நம்ப முடியலை இந்தர்..."

சகல வல்லமை படைத்த சித்தார்த்தே நடக்கும் விசயங்கள் கண்டு சற்று அதிர்ந்து போயிருந்தான்... அதற்கு மகன் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தான்...

"இப்போ என் மேல் உனக்குக் கோபம் இல்லையே..." என்று கேட்ட தந்தையை அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"இரண்டும் ஒன்றுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்...?" என்று மகன் எதிர்கேள்வி கேட்டான்...

தனக்குத் தெரிந்த உண்மையைக் கூற சித்தார்த் துடித்தான்... ஆனால் அதை மகன் நம்புவானா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது... அதனால் அமைதி காத்தவன் பின்பு மகனிடம்,

"எந்தப் பிரச்சினை என்றாலும் உன் கூட நானிருக்கிறேன்..." என்றான் நம்பிக்கை ஊட்டும் விதமாய்...

"இனி இந்த விசயத்தில் நீங்க பேசாமல் ஒதுங்கி இருந்தால் போதும்... ஏற்கெனவே நீங்க பண்ணி வச்ச ஏழரை போதாதுன்னு இன்னும் ஏதாவது ஏழரையைக் கூட்டி வச்சிராதீங்க... இல்லை, நான் என் மனைவி, குழந்தையோடு சந்தோசமா வாழ்வது பிடிக்கலைன்னா

நீங்க உங்க இஷ்டத்துக்கு என்ன வேணா பண்ணிக்கோங்க... நான் சந்தோசமா இருக்கணும்ன்னு நினைச்சா நீங்க கொஞ்சம் ஒதுங்கி இருக்கிறது நல்லது..."

இந்திரஜித் கோபமாய்க் கூறியது போலிருந்தாலும் அந்த வார்த்தைகளை அவன் கோபமாய்க் கூறவில்லை... மாறாக அழுத்தத்துடன், உறுதியுடன் கூறினான்... 'என்னால் இந்தப் பிரச்சினையைத் தனியே பார்த்துக் கொள்ள முடியும்' என்கிற நம்பிக்கை அவனது வார்த்தைகளில் தெரிந்தது...

அந்தக் கணம் சித்தார்த் தன் மகனில் மனைவியின் நிதானம், புத்திக்கூர்மையைக் கண்டான்... தன்னைப் போல் மகன் அதிரடிக்காரன் இல்லை என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியும்... அவன் மிகவும் அன்பானவன், பாசத்துக்குக் கட்டுப்பட்டவன்... அதை விடக் குணத்தில் மிக மிக நல்லவன்... ஏனெனில் அவனது மனைவி மகனை அப்படித் தான் வளர்த்திருந்தாள்... அது தான் இங்குப் பிரச்சினையாகி போனது... மகனின் இளகிய மனமே எதிரிகளுக்குச் சாதகமாகி போனது... அவனுக்குப் பாதகமாக முடிந்தது...

"எல்லாவற்றையும் நான் பார்த்து கொள்கிறேன்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவன் தந்தையைக் கடந்து செல்லும் போது திரும்பி பார்த்து,

"தேங்க்ஸ்ப்பா..." என்றான் லேசான புன்னகையுடன்...

அதில் சித்தார்த் உவகையில் ஊஞ்சலாடி போனான்... எத்தனை வருடங்களுக்குப் பிறகு மகன் தன்னைக் கண்டு சிரித்திருக்கிறான்... கெட்டதிலும் நல்லது என்று இதைத் தான் சொல்வார்கள் போலும்... அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... முகம் கொள்ளா புன்னகையுடன் மகனைப் பார்த்து,

"அப்பாவுக்குத் தேங்க்ஸ் சொல்லுகிற அளவுக்கு நீ வளர்ந்துட்டியா, இந்தர்...?" என்று மீசையை முறுக்கிக் கொண்டு அவன் கேட்க...

"யுகி எனக்கு மனைவியா கிடைக்க நீங்க தான் காரணம்... அதுக்குத் தான் இந்தத் தேங்க்ஸ்..." என்று கூறிய மகன் புன்னகையுடன் உள்ளே சென்றுவிட்டான்...

'இவளை என் தலையில் கட்டி வைக்க நீங்க நினைச்சீங்க தானே' சில தினங்களுக்கு முன் தன்னிடம் ஆக்ரோசமாய்ச் சண்டை போட்ட மகனா இவன்? என்று சித்தார்த் மகனை வியப்பாய்ப் பார்த்தான்... அதே சமயம் மகனது மாற்றம் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... இனி எந்தக் காரணம் கொண்டும் மகன் மருமகளைக் கைவிட்டு விட மாட்டான் என்கிற நம்பிக்கை அவனுள் எழுந்தது...

அதே சமயம் புது வருகை மாதுரிமா பற்றிய எண்ணம் அவனைக் கரையானாய் அரித்தது... இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்றே அவனுக்குத் தோன்றியது... பேசாது தானே களமிறங்கி உண்மையைக் கண்டுபிடிப்போமா என்று நினைத்தான்... அந்த நேரம் மகனது வார்த்தைகள் ஞாபகத்தில் எழுந்து அவனது நினைவைக் கட்டுப்படுத்தியது... எப்போதும் போல் மகனை அமைதியாகக் கண்காணிப்பது என்று அவன் முடிவு செய்தான்...

அதற்குள் சம்யுக்தா அங்கு வந்து அவனை உணவு உண்ண அழைக்க, அவன் உள்ளே சென்றான்...

இந்திரஜித் உணவு உண்டு முடித்து விட்டு நேரே தங்களது அறையை நோக்கி நடந்தான்... எப்போதும் அலுவலகத்திற்குக் கிளம்பிச் செல்பவன் இன்று வழக்கத்திற்கு மாறாக அறைக்குச் செல்வதைக் கண்டு சம்யுக்தா புரியாது கணவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... அந்தக் கணம் அவன் அவளைப் பார்த்து விழிகளால் 'வா' என்றழைக்க... அவளோ ஒரு கணம் திகைத்துப் பின் சுதாரித்துக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தாள்...

அறைக்குள் நுழைந்து கதவை மூடி விட்டு திரும்பிய சம்யுக்தா கணவன் கட்டிலில் அமர்ந்திருப்பதைக் கண்டு

அவன் அருகில் சென்று அமர்ந்தாள்... அவன் மிகவும் சோர்வுடன் இருப்பது போல் தோன்ற,

"பாவா..." என்றழைத்தபடி அவனது தோளில் ஆறுதலாய் கை வைத்தாள்...

அடுத்தக் கணம் இந்திரஜித் அவளது மடியில் முகம் புதைத்துப் படுத்துக் கொண்டான்... தனது இடையைக் கட்டி கொண்டு மடியில் முகம் புதைத்து சிறு பிள்ளை போல் படுத்திருந்த கணவனைக் கண்டு திகைத்தவள் என்ன செய்வது என்று தெரியாது விழித்தாள்... அவனை அள்ளி எடுத்து ஆறுதல் படுத்த வேண்டுமா...? இல்லை அரவணைத்து தலை கோத வேண்டுமா...? எதைச் செய்வது என்று தெரியாது திகைத்தவள் பின் மெல்ல அவனது தலையை வருடிக் கொடுத்தாள்...

அவளது காதல் மனம் அவனை ஆறுதல்படுத்தத் தூண்டியது... அவளால் அவனை வெறுத்து ஒதுக்க இயலுமோ...???

கணவனது முதுகு குலுங்கியதைக் கண்டு அவன் அழுகிறான் என்பதை உணர்ந்தவள் பதற்றத்துடன்,

"பாவா... இங்கே பாருங்க..." என்று அவனது முகத்தினைத் தூக்க முயல...

அவளுக்கு அந்தச் சிரமம் கூடக் கொடுக்காது அவனே தனது தலையை நிமிர்த்தினான்... அவனது கலங்கிய விழிகளைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள்... அவசரமாய் அவனது விழிகளைத் துடைத்து விட்டவள்,

"ஏமி பாவா...? எந்துக்கு மீரு ஏடுஸ்துந்நாரு...?" (என்ன பாவா...? ஏன் நீங்க அழுறீங்க...?) கேட்கும் போதே அவளது உள்ளம் தவித்துப் போனது...

அவனது எத்தனையோ உணர்வுகளைக் கண்டவளுக்கு அவனது இந்த அழுகை புதிதாக இருந்தது... எல்லாம் கிடைக்கப் பெற்று வரம் வாங்கிப் பூலோகத்தில் அவதரித்தவனுக்குக் கவலை இருக்கக் கூடுமோ...? என்று

யோசித்தவளுக்கு அப்போது தான் அந்த விசயம் அவளது மனதினைப் பலமாய்த் தாக்கியது... அதில் அவனை விட அவள் தான் அதிகம் கதிகலங்கி போனாள்... ஒருவேளை கணவனது அழுகை அதனால் கூட இருக்குமோ...? அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

விழிகள் கலங்க அதிர்வுடன் தன்னைப் பார்த்த மனையாளைக் கண்டு அவன் சடுதியில் தன்னை மீட்டுக் கொண்டான்... விழிகளைத் துடைத்துக் கொண்டு எழுந்தமர போனவன் அதற்கு முன் அவளது வயிற்றில் மென்மையாய் முத்தமிட்டான்... அவனது இதழொற்றலில் அவளது கலக்கம் மறைந்து மனதில் பரவசம் உண்டானது... அதை உணர்ந்தவனாய்,

"இது ஒண்ணும் உனக்கு இல்லை... என் மகளுக்கு... நீ தான் என்னை உன் கிட்டே வரக் கூடாதுன்னு சொல்லிட்டியே..." சிறுபிள்ளை போன்று முகத்தைத் தூக்கி கொண்டு கூறியவனின் பாவனையைக் கண்டு அவள் திகைத்துப் போய்ப் பெரிதாய் விழித்தாள்...

"ஹா ஹா... இப்போ தான் நீ இன்னும் அழகாயிருக்க..." என்று அவளது பாவனையை ரசித்தபடி எழுந்து அமர்ந்தவன் அவளது கன்னத்தைத் தட்டி சிரித்தான்...

சற்று முன் கணவன் கலங்கியது என்ன...? இப்போது அவன் சிரிப்பது என்ன...? அவள் புரியாது அவனை அதிசயமாய்ப் பார்த்திருந்தாள்... அவளது விழி ஈர்ப்பில் தன்னைத் தொலைத்தவனாய் அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கியவன் அவளது விழிகளுக்குள் உற்று நோக்கினான்...

மனைவியின் விழிகளில் தெரியும் அமைதி எப்போதும் போல் இப்போதும் அவனைச் சாந்தப்படுத்தியது... அதில் யானை பலம் வரப் பெற்றவனாய் கட்டிலில் இருந்து துள்ளி குதித்து இறங்கியவன் விசிலடித்தபடி குளியலறை நோக்கிச் சென்றான்...

சம்யுக்தா கணவனின் நடவடிக்கைக்கு அர்த்தம் புரியாது குழம்பி போய் அமர்ந்திருந்தாள்... சற்று நேரத்தில் முகத்தைக் கழுவி கொண்டு வெளியில் வந்த இந்திரஜித் கிளம்பி தயாராகி மனைவி முன் வந்து நின்றான்... அவளை இமைக்காது பார்த்தவன்,

"எந்தப் பிரச்சினை வந்தாலும் நீ என் கூட இருக்கணும்... இருப்பியா பேபி...?" என்று அவன் தனது வலக்கையை மனைவி முன் நீட்டினான்...

அவனுக்காக உயிரையும் கொடுப்பவள் அவள்... அதனால் நொடி நேரம் கூடத் தாமதியாது அவள் அவனது கரத்தின் மீது கை வைத்து அவனை மௌனமாய் ஏறிட்டுப் பார்த்தாள்...

"தேங்க்ஸ் பேபி..." மகிழ்ச்சியோடு கூறியவன் அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்து அதே வேகத்தில் விலகியவன்,

"நீ என் கூட வர வேண்டாம்... படுத்து ரெஸ்ட் எடு..." என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேற...

அவளோ அவனது கண்ணீரின் காரணத்தைத் தானாக ஊகித்தவளாய் அதிலேயே உழன்று கொண்டிருந்தாள்...

அதே நேரம் விவேக் தனது தங்கையிடமும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான்...

"நீ இந்தரிடம் பேசிய பேச்சு சரியில்லை மது..."

"அண்ணா, அவன் நம்மைக் கேவலமா ட்ரீட் பண்றான்..."

"நீ ஏன் அப்படித் தவறா நினைக்கிற...? அவர் தன்னோட மனைவி மீது அத்தனை காதலாய் இருக்கிறார்... அதனால் தான் அப்படிச் சொல்கிறார்... எனக்கு அவரோட அந்தக் குணம் ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்ற விவேக்கின் விழிகள் எதையோ எண்ணிக் கலங்கியது...

அப்படியொரு வாழ்க்கையை வாழ தானே அவனும் ஆசைப்பட்டான்... அவன் ஆசைப்பட்டால் போதுமா...? விதி

ஆசைப்பட வேண்டாமா...? எல்லாவற்றையும் பாதியில் பறித்து விட்டதே...

"வேலைக்காரியைக் காதலிச்ச நீ இப்படித் தான் பேசுவ..." என்றாள் மாதுரிமா அலட்சியமாய்...

"மதுஊஊஊஊ..." என்று அவன் கோபத்தில் சத்தமாய்க் கத்தி விட்டான்...

"அவள் ஒண்ணும் வேலைக்காரி இல்லை... நம் மாமா மகள்... வசதியில்லைன்னா உறவு இல்லைன்னு ஆகிருமா...?"

"அது எனக்குத் தெரியாது... அவள் நம்ம வீட்டில் வேலை பார்த்தவள்... அது மட்டும் தான் என் நினைவில் இருக்கு..."

தங்கையிடம் மேலே வாதாட விரும்பாது பேசாது இருந்தவன் பின்பு, "இந்த ப்ராஜெக்ட் முடியும் வரை நீ இந்தரிடம் தேவையில்லாது பேசாது இருந்தால் நல்லது..."

"அது எப்படிப் பேசாதிருக்க முடியும்...? நீ இதை என்னிடம் ஒப்படைச்சிட்டு மும்பை கிளம்பிப் போயிருவ... நான் தானே அந்தத் திமிர் பிடிச்சவனைச் சமாளிக்கணும்..."

"தொழில் ரீதியாய்ப் பேசலாம்... ஆனால் பெர்சனலா பேசாதிருப்பது உனக்கு நல்லது..." என்று தங்கையை எச்சரித்தவன் மும்பை கிளம்பிச் சென்றான்...

'அவனோட பெர்சனல் லைஃபில் குழப்பத்தை உண்டு பண்ணத் தானே நான் இங்கு வந்திருப்பதே' என்று மனதில் நினைத்தவள் தனது கைப்பையில் இருந்து அந்தச் செய்தித்தாள் துணுக்கை வெளியில் எடுத்தாள்... அன்று இந்திரஜித், சம்யுக்தா பத்திரிக்கையாளர்களைச் சந்தித்த போது எடுத்த புகைப்படம் இடம் பெற்ற காகிதம் அது... அதைப் பார்க்க பார்க்க அவளது வயிறு எரிந்தது...

இந்திரஜித் சந்தோசமாக இருக்கலாமா...? கூடவே கூடாது என்று அவளது மனம் எரிச்சலுடன் கூக்குரலிட்டது... அந்நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... அவளது

வருங்காலக் கணவன் கிஷோர் அவளை அழைத்திருந்தான்... முகம் எல்லாம் புன்னகையில் பிரகாசிக்க அவள் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்... அந்தக் கணம் இந்திரஜித் அவளது நினைவில் இருந்து தூர விலகிப் போனான்...

அதே நேரம் இந்திரஜித் அன்று அவனைச் சந்திக்க வந்த பெண்மணியை அலைப்பேசியில் அழைத்தான்... அந்தப் பெண்மணியின் பெயர் வினோதினி...

"உங்களுக்கு இப்போது தான் என் ஞாபகம் வந்ததா...?" என்று அவர் குத்திக்காட்டி பேசியதை கவனத்தில் கொள்ளாது,

"உங்களுக்கு எத்தனை மகள்கள்...?" என்று கேட்க... அதைக் கேட்டு அவர் உள்ளுக்குள் திடுக்கிட்டாலும் வெளியில் அசால்ட்டாய் சமாளித்தார்...

"ஒரே ஒரு பொண்ணு தான்... அவளையும் உங்களால் பறிகொடுத்திட்டு இப்ப நான் தனிமரமா நிற்கிறேன்..." என்று கூறியபடி அவர் அழ ஆரம்பித்தார்...

"இல்லை, சும்மா தான் கேட்டேன்..." என்று அவன் அவரைச் சமாளித்து விட்டு அலைப்பேசியை வைப்பதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது...

அலைப்பேசியை வெறித்துப் பார்த்த வினோதினியின் விழிகளில் அத்தனை குரோதம் வழிந்தது... 'எனக்கும், யுகிக்கும் திருமணமாகி விட்டது... அவள் என் மனைவி... எந்த நிலையிலும் அவளை என்னால் கை விட முடியாது' அன்று அவர் இந்திரஜித்தை சந்திக்கச் சென்ற போது அவன் கூறிய வார்த்தைகள் அவரது நினைவில் இப்போதும் நின்று அவரை உயிருடன் வதைத்தது...

'அது எப்படி நீ மனைவி, குழந்தைன்னு சந்தோசமா வாழ முடியும்...? உன்னை வச்சு தானே உன் அப்பன் கண்ணில் விரலை விட்டு ஆட்ட வேண்டும்...' என்று அவர் மனதில் கறுவி கொண்டார்...

அலைப்பேசியை அணைத்த இந்திரஜித் தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தான்... எங்கோ தவறு நேர்ந்திருப்பதாய் அவனுக்குத் தோன்றியது... அவன் உடனே தனது பெரியம்மா மகன் கண்ணனுக்கு அழைத்தான்...

"அண்ணா... எனக்கு ஒரு கேஸ் டீடெயில்ஸ் வேணும்... உங்க டிபார்ட்மெண்ட் ஆளுங்க கிட்ட விசாரிச்சு சொல்ல முடியுமா...?"

அதற்குச் சரியென்று சம்மதம் கூறிய கண்ணன், "இப்போ தான் எனக்குச் சந்தோசமா இருக்கு இந்தர்... சித்தியின் வளர்ப்பு தவறாகிப் போய் விடவில்லை... இது தான் எங்கள் இந்தர்..." என்று தம்பியை மனதாரப் பாராட்ட...

"பட்டால் தானே புத்தியில் உறைக்கிறது அண்ணா..." என்று மனம் வருந்தியவன்,

"நான் கேட்ட டீடெயில்சை சீக்கிரம் கொடுங்கண்ணா..." என்க...

"முடிந்தளவு சீக்கிரம் கொடுக்கப் பார்க்கிறேன்..." என்றவன் அழைப்பைத் துண்டித்தான்...

சற்று நேரத்திற்குள் இந்திரஜித் கைகளில் அவன் கேட்ட அத்தனை தகவல்களும் வந்து சேர்ந்தது... தன் கையில் இருந்த எல்லா அறிக்கைகளையும் அவன் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்... ஒன்று கண்ணன் கொடுத்த அறிக்கை, மற்றொரு அவன் படித்த கல்லூரியில் இருந்து எடுத்த அறிக்கை, அடுத்தது விவேக் மற்றும் மாதுரிமா பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை மற்றும் சில தேவையான தகவல்கள்... எல்லாவற்றிலும் இருந்த ஒற்றுமை, வேற்றுமைகளைத் தனியே ஒரு காகிதத்தில் குறித்து வைத்துக் கொண்டான்... இது சிக்கலின் நுனி மட்டுமே... இதை வைத்து அவன் கண்டுபிடிக்க வேண்டியது நிறைய இருக்கிறது...

அவன் நினைத்தது ஒன்று... ஆனால் இதில் இருப்பதோ வேறு ஒன்று... அது தான் அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

யோசனையுடன் நாற்காலியில் சாய்ந்தமர்ந்த இந்திரஜித்தின் மனக்கண்ணில் நெருப்பில் குளித்த அந்தக் கரிய விரலில் இருந்த இதய வடிவமைப்புக் கொண்ட தங்க மோதிரமே வலம் வந்தது... அவன் வேதனையுடன் விழிகளை மூடிக் கொண்டான்... முன்பு போல் இப்போது அந்த நினைவு அவனைக் கலங்க செய்யவில்லை... மாறாக அவனுள் பரிதாபத்தை எழச் செய்தது... அவனின் எண்ணம் மட்டும் உண்மையானால்...??? அப்போது இருக்கிறது எல்லோருக்கும்... அவனது விழிகள் ஆத்திரத்தில் சிவந்து போனது...

'நீயா...? நானா...? என்று ஒரு கை பார்க்கலாம்...' என்று மனதிற்குள் தனது எதிரிக்கு சவால் விட்டுக் கொண்டான்...

*********************

கல்லூரியில் மதிய உணவு இடைவெளியின் போது சாத்விகா தனது தோழிக்கு அழைப்பு விடுத்தாள்... பரஸ்பர நலனுக்குப் பின் அவள் மெதுவே தனது தோழியிடம்,

"உங்க அக்கா எப்படி இருக்காங்க...? எங்கே இருக்காங்க...?" என்று சாதாரணமாக விசாரிக்க...

"நல்லாயிருக்கிறாள்... இப்போ பெங்களூரில் இருக்கிறாள்..."

"அவங்க ஃபோன் நம்பர் கொடுக்க முடியுமா...?"

"எதுக்கு...?"

"கொஞ்சம் கன்சல்ட் பண்ணணும்..." என்க... அந்தத் தோழி சந்தேகம் கொள்ளாது மருத்துவரான தனது சகோதரியின் அலைப்பேசி எண்ணைக் கொடுத்தாள்...

அன்றிரவு சாத்விகா எப்படியோ அந்தச் சகோதரியை அலைப்பேசியில் பிடித்துச் சந்தோஷ், ப்ரியா காதல் பற்றிக் கேட்க...

"ரெண்டு பேருமே கல்யாணம் பண்ணி லைஃபில் செட்டிலாகிட்டாங்க... இப்போ எதுக்குத் தேவையில்லாம அதைப் பத்தி பேசிக்கிட்டு..."

"அந்தக் குழந்தையை நான் தான்க்கா வளர்க்கிறேன்..." அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனாள் அந்தப் பெண்...

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு...? யார் குழந்தை எப்படிப் போனால் உனக்கு என்ன...? நீ உன் வாழ்க்கையைப் பார்..." என்று அவள் கோபமாய்ப் படபடக்க...

"நீங்க சொன்னதைக் கேட்டு மனசுக்குக் கஷ்டமாயிருந்தது... அதனால் அவனைத் தத்து எடுத்துக்கிட்டேன்..."

"உன் கணவர்..."

"அவர் ரொம்ப நல்லவர்... ஒண்ணும் சொல்லலை... அவனுக்கு அப்பாவா அவரும் மாறிட்டார்..." என்றாள் பெருமையாக...

"அக்கா, எனக்கு ப்ரியாக்கா ஃபோன் நம்பர் மட்டும் வாங்கிக் கொடுங்க... நான் அவங்க கிட்ட பேசணும்..."

"இப்போ உள்ள காண்டாக்ட் நம்பர் என் கிட்ட இல்லை... விசாரிச்சு வாங்கித் தர்றேன்..." என்று அவள் அழைப்பை வைத்து விட்டாள்...

சாத்விகா தனக்குள் மூழ்கியபடி அமர்ந்திருந்தாள்... சந்தோஷ் வந்ததைக் கூட அவள் உணரவில்லை...

"என்ன யோசனை எல்லாம் பலமாயிருக்கு...?" கணவனின் குரலில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"எனக்கு வேறு என்ன யோசனை இருக்கப் போகிறது... எல்லாம் உங்களைப் பற்றிய யோசனை தான்...?"

"அப்படியா...?" என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி அவன் வசீகரமாகக் கேட்க... அதில் பாவையவள் மனம் விரும்பியே சிக்குண்டது...

"அப்படி என்ன என்னைப் பற்றிய யோசனை அம்மு...?"

"கண்ணா அப்பா நீங்க இல்லை... அப்போ கண்ணா அப்பா யாருன்னு யோசிச்சிக்கிட்டு இருக்கேன்..."

அவளது பேச்சில் அவளை ஒரு பார்வை பார்ததவன், "அம்மாவாவது ப்ரியா தானா...? இல்லை வேறு யாராவதா...?" கேலிக் குரலில் அவன் கேட்க...

அதைக் கேட்டு அவளது முகம் சுருங்கிப் போனது... "இனிமேல் நான் தீர விசாரிக்காம எதுவும் பேசறதா இல்லை..." என்று உதடுகளை இறுக மூடிக் கொண்டவளின் அருகில் வந்த சந்தோஷ்,

"தட்ஸ் குட்..." என்று கூறியபடி அவளது இதழ்களை மெல்ல வருடி விட்டான்...

கணவனது தொடுகையில் அவள் உயிர் உருக அவனைப் பார்த்திருந்தாள்... அதைக் கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தவன்,

"கண்ணா அசைகிறான் பார்..." என்று அவன் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த சர்வேஷை விழிகளால் சுட்டிக்காட்ட... அதில் அவள் உணர்வு வடிய அவசரமாய்ச் சின்னவனைத் திரும்பி பார்த்தாள்... சின்னவனோ நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான்...

"அத்தான்..." என்று அவள் அவனை முறைக்க... அவளது உணர்வை மாற்றிய நிம்மதியில் அவன் கிண்டலாய்,

"இப்ப தான் அம்மு நீ அழகாயிருக்க... அப்போ பார்க்க சகிக்கலை..." என்றவன் அவள் அடிக்க வரும் முன்

குளியலறையினுள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான்...

சாத்விகா சிரித்தபடி கணவனுக்கு உணவு எடுத்து வைக்க வேண்டி அறையை விட்டு வெளியேறினாள்...

*******************

சொன்னது போல் ஒரு வாரம் கழித்து இந்திரஜித் சம்யுக்தாவை தன்னுடன் அழைத்துச் சென்றான்... நேரே அவன் அவளை அழைத்துச் சென்ற இடம் அவளது தொழிற்கூடத்திற்கு... அவள் வியப்பில் விழி விரித்தாள்... பாண்டிச்சேரியில் இருந்ததை அப்படியே சென்னைக்கு மாற்றியிருந்தான் அவளது கணவன்... வெகுநாட்களுக்குப் பின் மனைவியின் கண்களில் உயிர்ப்பைக் கண்டவனுக்குத் தான் செய்தது சரியே என்று தோன்றியது...

"இப்போ சந்தோசமா பேபி...?" அன்று அவன் கேட்ட அதே கேள்வி ஆனால் அன்று பார்த்தது போல் வெறுமையாகப் பார்க்காது அவள் அவனை உயிர்ப்புடன் பார்த்தாள்...

"ம்... ம்..." என்று அவள் சந்தோசமாகத் தலையாட்டினாள்...

தன்னை விட அவளது தொழிலை அவள் அதிகம் நேசிப்பது கண்டு அவனது மனதில் சுருக்கென்று வலி எழுந்தது... இதைத் தான் அவன் விரும்பியது என்றாலும் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... ஆனாலும் அவளுக்காக அதைத் தாங்கி கொண்டான்... அவன் அவளுக்கு வலிக்கச் செய்ததை விடவா அவள் அவனுக்கு வலிக்கச் செய்து விட்டாள்...

"நீ இதே சந்தோசத்தோடு இருந்தால் போதும் பேபி... எனக்கு வேறு எதுவும் வேண்டாம்..." என்றவனை ஏறிட்டு பார்த்தவள் மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டாள்...

அவளிடம் இருந்து பதில் வராது என்று தெரிந்தவனாய், "ஓகே பேபி... நான் சைட்டுக்கு போயிட்டு டிரைவரோடு காரை அனுப்புகிறேன்... நீ நேரமே வீட்டுக்கு போ... நான் நேரே வீட்டுக்கு வந்திர்றேன்..." என்றவன் அவளிடம் விடைப்பெற்று சென்று விட்டான்... அவன் செல்வதை அவள் இமைக்காது பார்த்தபடி நின்றிருந்தாள்...

சம்யுக்தா மதியம் வரை தனது கைவேலையில் ஆழ்ந்து விட்டாள்... அவளது அலைப்பேசி ஒலிக்கவும் தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... அவள் கைக் கழுவி கொண்டு வந்து அலைப்பேசியை எடுக்கும் முன் அவளது கணவன் பலமுறை அழைத்து விட்டான்... அவனது பொறுமையின்மையைக் கண்டு அவளது இதழ்களில் ரகசிய புன்னகை தவழ்ந்தது... அதே புன்னகையுடன் அலைப்பேசியை உயிர்ப்பித்து,

"ஹலோ..." என்க... அவளது மகிழ்ச்சியை அவனும் உணர்ந்தானோ... சந்தோசத்தில் கண்களை மூடி அவளது சந்தோசக் குரலை செவி வழியே மனதில் ஏற்றிக் கொண்டான்...

"பாவா..." அவள் அழைத்ததும் தன்னினைவு கலைந்தவன்,

"சாப்பிட்டியா...?" அப்போது தான் அவளுக்கு உணவின் ஞாபகம் வந்தது... தன்னையும் அறியாது உதட்டைக் கடித்தபடி தனது பின்னந்தலையில் தட்டிக் கொண்டவள்,

"மறந்திட்டேன்... இதோ இப்போ கிளம்பறேன்..." என்றுரைத்தவாறு தொழிற்கூடத்தை விட்டு வெளியில் வந்தாள்...

"ம்ப்ச்... உனக்குக் கொஞ்சம் கூட அக்கறையில்லை... பொறுப்பில்லை..." என்று திட்டத் துவங்கிய கணவனிடம்,

"ப்ளீஸ் பாவா..." என்று கெஞ்சியவளைக் கண்டு அவன் போனால் போகிறது என்பது போல் மன்னித்து விட்டான்...

"முதல்ல போய்ச் சாப்பிடு..."

'நீங்க...?' என்று அவள் கேட்கும் முன் அவன் அழைப்பை வைத்திருந்தான்...

சம்யுக்தா யோசனை செய்தவளாய் நேரே கணவனைக் காண்பதற்காக அவனது இருப்பிடத்திற்குக் காரை செலுத்த சொன்னாள்... ஒரு மணி நேரத்தில் அந்த இடத்தைச் சென்றடைந்தவள் அங்குப் பிரமாண்டமாய் நடக்கும் வேலைகளைக் கண்டு ஆவென மலைத்து நின்றாள்... இவ்வளவு பெரிய இடத்தில் கணவனை எங்குப் போய்த் தேடுவது என்று தெரியாது முழித்தவள் அவனுக்கு அலைப்பேசியில் அழைத்தாள்...

"இப்போ எதுக்கு இங்கே வந்த...? நேரே வீட்டுக்கு போக வேண்டியது தானே... சரி நீ அங்கேயே இரு... நான் இப்போ வர்றேன்..." என்று விசயம் கேள்விப்பட்டு அவளைக் கடிந்தவன் அழைப்பை துண்டித்து விட்டு அருகில் இருந்த மாதுரிமாவிடம்,

"நான் கிளம்புகிறேன்..." என்று கூறிவிட்டு செல்ல...

"இருங்க மிஸ்டர். இந்தர்... நானும் லன்ச்சுக்கு கிளம்ப வேண்டியது தான்..." என்றவள் அவனுடன் இணைந்து நடந்தாள்...

அவன் ஒன்றும் பேசாது அவளுடன் நடந்து வந்தான்... இருவரின் மனதிலும் பலவித உணர்வு போராட்டங்கள்... ஆனால் அவர்கள் அதை மற்றவர்களுக்குத் தெரியாமல் சாமார்த்தியமாக மறைத்தனர்...

கணவனுக்காக ஆவலுடன் காத்திருந்த சம்யுக்தா தூரத்தில் கணவனைக் கண்டதும் முகம் மலர்ந்தவளாய் சந்தோசத்துடன் அவன் புறமாய் ஒரு எட்டு வைத்தவள் அப்போது தான் அவன் அருகில் வந்தவளைக் கவனித்துப் பார்த்தாள்...

அடுத்த நொடி அவள் உணர்வற்று வேரொடிந்த மரமாய் மயங்கி கீழே சரிந்தாள்...!!!

தொடரும்...!!!

"யுகிம்மா, யுகிம்மா..."

இந்திரஜித் மயங்கிச் சரிந்த மனைவியின் முகத்தில் தண்ணீர் தெளித்து அவளது கன்னங்களைப் பற்றிப் பயத்துடன் தட்டிக் கொண்டிருந்தான்...

தன் கண் முன்னே மயங்கிக் கீழே விழுந்த மனைவியவளைக் கண்டு அவன் பதற்றத்துடன் அவளை நோக்கி ஓடிச் செல்ல, அவன் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த மாதுரிமா அவனது பதற்றத்தைக் கண்டு எரிச்சலுடன் பல்லைக் கடித்தபடி நிதானமான நடையுடன் அங்கே வந்து சேர்ந்தாள்...

திடீரென்று முதலாளியம்மா மயங்கி விழுந்ததைக் கண்டு செய்வதறியாது திகைத்து விழித்த ஓட்டுநரைக் கண்டு, "காரில் இருந்து தண்ணி பாட்டிலை எடு மேன்... க்விக்..." என்று அவனிடம் கத்திய இந்திரஜித் மனைவியைத் தனது மடியில் தாங்கிக் கொண்டான்... அடுத்துத் தண்ணீர் தெளித்து மனைவியவளின் மயக்கத்தை அவன் தெளிய வைக்க முயன்றான்...

அவனது குரல் சம்யுக்தாவின் ஆழ்மனதினைத் தீண்டியதோ என்னமோ அவள் மெல்லக் கண்விழித்துப் பார்த்தாள்... தன்னைக் கண்டு பயம் கொண்டு பார்த்த கணவனோ, சுற்றிலும் இருந்த தொழிலாளர்களோ யாருமே அவளது கவனத்தில் பதியவில்லை... அந்தக் கூட்டத்தில் அவள் அவசரமாக அந்தப் பெண்ணவளைத் தேடினாள்... சுற்றிலும் சுழன்ற அவளது விழிகள் மாதுரிமாவைக் கண்டதும் அவளிடத்தில் நிலைக்குத்தி நின்றது... அதிலும் மாதுரிமா விழியில் வழிந்த வன்மத்தில் அவளது முதுகு தண்டுவடம் அச்சத்தில் சில்லிட்டது...

"யுகிம்மா... ஆர் யூ ஆல்ரைட்...?"

கணவனது அக்கறையான குரலில் அவளது பார்வை அவனிடத்தில் திரும்பியது... அவளது கைகள் அவனது

கரத்தினைப் பயத்துடன் பற்றிக் கொண்டது...

"என்னடா...?" பரிவுடன் அவளது தலையைக் கோதி கொடுத்தவனைக் கண்டு அவள் ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்து அவனுடன் ஒன்றிக் கொண்டாள்...

மனைவியின் உணர்வுகளைப் படித்தவன் போல் இந்திரஜித் அவளைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டு காரை நோக்கிச் சென்றான்... அவனுக்கு முன்பே ஓட்டுநர் கார்க் கதவை திறந்து வைத்துக் கொண்டு காத்திருக்க, அவன் மனைவியை இருக்கையில் அமர வைத்து விட்டு ஓட்டுநரிடம் திரும்பி,

"நீ பஸ்ஸில் வா..." என்றுரைத்து விட்டு சுற்றி வந்து ஓட்டுநர் இருக்கையில் வந்தமர்ந்தான்...

சோர்வுடன் அமர்ந்திருந்த மனைவியவளைக் கையசைத்து, "கிட்டே வா..." என்றழைக்க...

அவளுக்குமே அவனது அருகாமை தேவைப்பட்டதோ என்னமோ... உடனே அவள் அவன் அருகில் வந்து தோளோடு சாய்ந்து கொள்ள, அடுத்த நொடி அவனது கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டது...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது...? நேரத்தோடு சாப்பிடணும்ன்னு... இப்போ பார் பசியில் மயக்கம் போட்டு விழுந்துட்ட..." என்று அவளைக் கடிந்து கொண்டே அவன் காரில் இருந்த 'கூலர் பாக்ஸ்'ஐ திறந்து பழச்சாறை எடுத்துப் பிரித்து அவளிடம் நீட்டினான்... மாதுரிமாவைக் கண்டு அவள் மயங்கி விழுந்ததாய் அவன் கொஞ்சமும் எண்ணவில்லை போலும்...

"இல்லை வேண்டாம்..." பழச்சாறைக் குடிப்பதற்காக வேண்டி அவனை விட்டு விலகும் அந்தச் சில நொடிகளைக் கூட வெறுத்தவளாய் அவள் கணவனது நெஞ்சில் இன்னமும் அதிகமாய் ஒன்றிக் கொண்டாள்...

"நீ இன்னும் சின்னக் குழந்தை தான்டி..."

மனைவியின் செய்கையில் அவனது இதழ்களில் புன்னகை தவழ்ந்தது... அவளது மனதினை உணர்ந்தவனாய் அவளை விலக்காது பழச்சாறை எடுத்துத் தானே அவளுக்குப் புகட்டி விட்டான்... அவனது செயலில் அவளது அலைப்புற்றிருந்த மனம் சிறிது அமைதியுற்றது... இருவருமே ஒருவித மோனநிலையில் ஆழ்ந்திருந்த போது அவன் பக்கம் இருந்த கதவு தட்டப்பட்டது... அதைக் கண்டு அவன் கண்ணாடியை இறக்கி விட்டான்... அப்போதும் அவன் மனைவியைத் தள்ளி நிறுத்தவில்லை...

"இந்தர்... சாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்... இந்த ஃபைல்லை உங்க கிட்ட கொடுக்கத் தான் தட்டினேன்... நீங்க ஓகே பண்ணிட்டீங்கன்னா, இன்னைக்கே அண்ணாவுக்கு மெயில் பண்ணிருவேன்..." என்று புன்னகையுடன் கூறிய மாதுரிமா அவனை நோக்கி ஒரு கோப்பை நீட்டினாள்...

"சாரி மறந்துட்டேன்... தேங்க்ஸ்..." என்றபடி அவனும் அதை வாங்கிக் கொண்டான்...

"மறக்கிறது ஒண்ணும் உங்களுக்குப் புதுசு இல்லையே..." என்று மாதுரிமா அவனைக் குத்திக்காட்டி பேச... அதில் விழிகளைச் சுருக்கியவன்,

"வேண்டாம்ன்னு என்னைக்கோ தூக்கி எறிந்த ஒரு விசயத்தைப் பிடிச்சு தொங்கிட்டு இருக்க நான் ஒண்ணும் முட்டாள் இல்லை மிஸ். மாதுரிமா..."

அவளது பெயரில் அழுத்தம் கொடுத்தவனைக் கண்டு அவளது ஆத்திரம் அதிகரித்தது... அடுத்த நொடி அவளது கார் வேகத்துடன் சீறிப் பாய்ந்தது... அதைக் கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

மாதுரிமாவைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்த சம்யுக்தா கணவன் கூறிய வார்த்தைகளைக் கவனிக்கவில்லை... அவளது நினைவோ அன்று அவளது அலுவலகத்திற்கு வந்த கவரில் நிலைத்து நின்றது... இது எப்படிச் சாத்தியம்...? அவளது மனதில் பெரும் சூறாவளி காற்று சுழன்று அவளைச் சுழற்றியடித்தது...

"எங்கே போகிற...? பேசாமல் இரு..." கணவன் அவளது தோளைப் பிடித்திழுக்கவும் தான் அவளுக்கு நிகழ்காலம் உறைத்தது... அவளையும் அறியாது அவள் அவனை விட்டு விலகி இருந்தாள்...

"நீங்க கார் ஓட்டணுமே..." என்று தலையைக் குனிந்து கொண்டு முணுமுணுத்தவளை கண்டு வாய்விட்டு சிரித்தவன்,

"உன் பாவாவை என்ன அவ்வளவு சாதாரணமாவா நினைச்ச...? உன் பாவா ஒரு கார் ரேசர்ம்மா... எனக்கு ஒத்தை கையில் கார் ஓட்டுறது என்ன பெரிய விசயமா...?" என்று அவன் சிரிப்புடன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கிக் கேட்க... அதன் மேலிருந்த மச்சம் என்றும் போல் இன்றும் அவளை ஈர்த்தது... அதை மெல்ல வருடிக் கொடுத்தவளைக் கண்டு அவனது மனம் காதலில் கனிந்தது...

"எனக்குத் தெரியாதே..." மெல்லிய குரலில் கூறியவளைக் கண்டு,

"புருசனைப் பத்தி ஒண்ணும் தெரியாது... ஆனா அவனோட குழந்தையை மட்டும் வயித்தில் சுமக்கத் தெரியும்..." அவனது வார்த்தைகள் சற்று தாங்கலுடன் ஒலித்ததோ...

அவள் அவனை உற்று நோக்கி விட்டு தலைகுனிந்து கொண்டவள் மெல்ல, "அந்தப் பெண் யார்...?" என்று கேட்க...

அவனது விழிகள் கூர்மையாய் இடுங்கியது...

"இந்த ப்ராஜெக்ட்டில் நம்முடன் இணைந்திருக்கும் கம்பெனியின் ஒன் ஆஃப் த பார்ட்னர்..." என்றுரைத்தபடி அவன் காரைக் கிளப்பினான்... அதற்கு அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு அவன் யோசனையுடன்,

"மாதுரிமாவை உனக்குத் தெரியுமா...?" அவனது வார்த்தைகளில் சரேலென்று நிமிர்ந்து பார்த்தவள்,

"இல்லை... எனக்கு... எனக்கு அவங்களைத் தெரியாது..." அவசரமாய் மறுத்தவளை விழியிடுங்கப் பார்த்தவன்,

'உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி உன் முகம்' என்று மனதில் வேதனையுடன் நினைத்துக் கொண்டான்...

"அவளைப் பார்த்துத் தான் நீ மயங்கி விழுந்திட்டியோன்னு நான் கூடப் பயந்து போயிட்டேன்..." சிரிப்புடன் விளையாட்டாய்க் கூறுவது போல் அவன் மனைவியின் முகத்தை ஓரக்கண்ணால் நோட்டமிட்டான்...

"நா... நான்..." என்று திக்கியவளைக் கண்டு அவன் சுவாரசியமாய்த் திரும்பிப் பார்த்து,

"நீ... நீ தான் பேபி..." என்றவன் முகத்தில் புன்னகை விரிந்தது...

என்ன பதில் கூறுவது என்று தெரியாது தன்னைக் கண்டு விழித்தவளைப் பார்த்தவனின் விழிகளில் கனிவு வந்தது...

"அவளோட மேக்கப் அப்படி... எப்படி மேக்கப் போடுறதுன்னு அவளுக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடு பேபி... ஹப்பா, பார்க்க சகிக்கலை..." என்று அருவருப்பில் முகத்தைச் சுளித்துக் கொண்டு அவன் கூற... அதை அவள் யோசனையாய்ப் பார்த்தாள்...

"எப்போ பாரு எதையாவது யோசிச்சிக்கிட்டே இருக்க... இங்கே வா பேபி..." அவன் தனது இடது கையை நீட்டி அவளை அணைத்துக் கொள்ள முயன்ற போது,

"இல்லை... நானே கிட்ட வர்றேன்... நீங்க ரோட்டை பார்த்து காரை ஓட்டுங்க..." என்றவள் அவன் அருகில் வந்து ஒட்டி அமர்ந்து கொண்டாள்...

"இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்று அவளது உச்சந்தலையில் இதழ் பதித்தவன் காரை வேகமாக முடுக்கி விட்டான்...

அவளது மனக்கண்ணில் கவரில் இருந்த பொருள்களே வலம் வந்தது... அவனது மனதிலோ அன்று

மருத்துவமனையில் மனைவி கூறிய வார்த்தைகளே நினைவில் நின்று வதைத்தது...

'உங்களுக்கு நான் மட்டும் இல்லையே' மீண்டும் மீண்டும் இந்த வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தது...

'இப்போ நீ மட்டும் தான்னு உன் கிட்ட நான் சொன்னது உன் காதில் விழவில்லையா பேபி... தேவதை போல் நீ என் வாழ்க்கையில் வருவாய் என்று அந்நேரம் நான் தெரிந்து இருக்கவில்லையே... தெரிந்து இருந்தால் ஒருவேளை ஏகபத்தினி விரதனாய் உனக்காக நான் காத்துக் கொண்டு இருந்திருப்பேனோ... எல்லாம் காலம் கடந்து வந்த ஞானம்... உன் பாவா இளமை வேகத்தில், அறியாமையில் செய்த தவறு அது... இன்று அது பாவ சுமையாய் என் மீதேறி என்னைப் பாரமாய் அழுத்துகிறது... இதிலிருந்து எப்படி நான் மீண்டு வரப் போகிறேனோ...? அதை விட உன்னை எப்படி மீட்டெடுக்கப் போகிறேனோ...? என்னைப் பற்றிய கவலையை விட இப்போது உன்னைப் பற்றிய கவலை தான் என் மனதைப் போட்டு அரித்து எடுக்கிறது... கடவுளே, நான் என்ன செய்வேன்...' அவன் மனதில் வேதனையுடன் நினைத்துக் கொண்டான்...

வீடு வந்ததும் முதலில் இறங்கிய இந்திரஜித் மறுபுறம் வந்து மனைவி இறங்க கைக் கொடுத்தவன் அவளைக் கைத்தாங்கலாய் அணைத்தபடி உள்ளே அழைத்துச் சென்றான்... மருமகள் சோர்வுடன் வருவதைக் கண்டு பிரகதீஸ்வரி கவலையுடன் அவர்களை நோக்கி வந்தாள்...

"சம்யுக்கு என்னடா ஆச்சு...?"

"அவள்..." அவன் மேலே பேசும் அவனது கையைப் பிடித்துத் தடுத்த சம்யுக்தா,

"கொஞ்சம் டயர்டா இருக்கு அத்தைகாரு..." என்று கூறிச் சமாளித்தாள்...

"இப்படி மாசமா இருக்கும் போது அவளை வெளியில் கூட்டிட்டுப் போய் அலைக்கழிக்காதே இந்தர்... முதல் ஐந்து

மாசம் வீட்டில் இருந்து ரெஸ்ட் எடுக்கட்டும்..." அன்னை கூறியதைக் கேட்டு ஆமோதித்த இந்திரஜித்,

"ஆமாம்மா... அதைத் தான் நானும் நினைச்சேன்... எதுக்கும் ஜிக்கி வந்ததும் யுகியை செக் பண்ணச் சொல்லுங்கம்மா..."

"சரி நான் ஜிக்கி கிட்ட சொல்கிறேன்... இப்போ நீ அவளை ரூமுக்கு கூட்டிட்டுப் போ... நான் சாப்பாடு அனுப்பி வைக்கிறேன்..." என்றபடி பிரகதீஸ்வரி செல்ல...

அவன் மனைவியை அழைத்துக் கொண்டு தங்களது அறைக்குச் சென்றான்... அவளைக் கட்டிலில் அமர்த்தியவன் தானும் அவள் அருகில் அமர்ந்து,

"இனிமேல் நீ ஆபிஸ் போக வேண்டாம்... அங்கே என்ன செய்யணும்ன்னு சொல்லு... நான் பார்த்துக்கிறேன்..."

"எனக்கு அங்கே போகப் பிடிச்சியிருக்கே..."

அவள் கூறும் போதே கதவு தட்டப்பட இந்திரஜித் எழுந்து சென்று உணவை வாங்கிக் கொண்டு வந்தான்... அவனைக் கண்டு ஏதோ பேச வாயெடுத்தவளைக் கையமர்த்தித் தடுத்தவன்,

"முதலில் சாப்பிடு... இல்லைன்னா இன்னொரு தடவை மயக்கம் போட்டு விழுந்திருவ..." என்றவன் தானே அவளுக்கு உணவை ஊட்டி விட ஆரம்பித்தான்...

எப்போதும் தன்னிடம் சிறு குழந்தை போன்று கொஞ்சி அடம்பிடிக்கும் கணவன் தனக்குத் தாயுமானவனாய் மாறிய அதிசயத்தைக் கண்டு அவள் வியப்பாய் அவனைப் பார்த்தாள்... அவளது விரிந்த விழிகளில் தனக்கான காதலைக் கண்டவன் குனிந்து அதில் இதழ் பதித்து,

"என்னடி பார்வை எல்லாம் பலமாயிருக்கு..." என்றவனது குரலில் அப்பட்டமாய் மயக்கம் தெரிந்தது... இத்தனை நாளாய் மனைவியைப் பிரிந்திருந்த தாபம் அதில் மிகுந்திருந்தது...

"ஒண்ணும் இல்லை..." என்று தலையாட்டியவளைக் கண்டு,

"அப்படியா... அப்போ ஏதோ இருக்கு..." என்றவன்,

"அது என்னன்னு விரைவில் கண்டுபிடிக்கிறேன்..." என்றான் மர்மச் சிரிப்போடு...

அவளுக்கு ஊட்டி விட்டுக் கொண்டே தானும் உணவை உண்டு முடித்தான்... பின்பு கைகளைக் கழுவி கொண்டு வந்தவன் மீண்டும் அவள் அருகில் அமர்ந்தான்...

"இப்போ சொல்லு... என்ன விசயம்...?"

"நான் தொழிற்கூடத்துக்குப் போகவா...?" என்று கேட்டபடி அவள் அவனது தோளில் சலுகையுடன் சாய்ந்து கொள்ள...

"அம்மா சொன்னதைக் கேட்ட தானே... இப்போ வேண்டாம்டா பேபி..." அதைக் கேட்டு அவளது முகம் வாடிப் போனது... அதைக் கண்டு அவன் அவளது நாடியைப் பிடித்து ஆட்டியபடி,

"இதுக்குப் போய் நீ இப்படி மூஞ்சியை உம்முன்னு தூக்கி வச்சிக்கலாமா பேபி... தொழிற்கூடத்தை இங்கே கொண்டு வந்து விடுகிறேன்... ப்ராப்ளம் சால்வ்ட்..." என்று அவன் விரிந்த புன்னகையுடன் கூற...

"சத்தியங்கா பாவா..." என்றவளின் முகமும் புன்னகையில் மலர்ந்தது...

"உன் பாவாவால் முடியாதது உண்டோ... சத்தியங்கா, நிஜங்கா, ப்ராமிசா பேபி..." என்று அவள் கை மீது தன் கை வைத்துச் சத்தியம் செய்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்து,

"நீ ரெஸ்ட் எடு... நான் கிளம்பறேன்..." என்று கூறியபடி அவன் எழ... அவள் அவனது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள்...

"என்னம்மா...?"

அவள் தனது இரு கைக் கொண்டு அவனை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டவள் அப்படியே படுக்கையில் சாய,

"ஐயோ, என் மகள் பாவம்டி..." என்று அலறியபடி அவனும் அவளுடன் சாய்ந்தான்...

மனைவியின் அணைப்பிலும், இதழொற்றலிலும் இந்திரஜித் சுகமாய் மூழ்கிச் சொர்க்கத்திற்குள் நுழையும் தறுவாயில் அவனது அறிவு அவனுக்கு எச்சரிக்கை மணி அடித்தது... அதில் அவன் சட்டென்று அவளை விட்டு விலகி எழுந்தமர்ந்தான்...

அன்று விபத்து நடக்கும் முன் நிகழ்ந்த கூடல் அவன் கண்முன் வலம் வந்தது... அதே அணைப்பு, அதே இதழொற்றல், அதே ஆவேசம்... ஆனால் அதே தவிப்பை அவனால் இன்னொரு முறை தாங்க முடியாதே...

"ஏன் பாவா...?" என்று கேட்டபடி எழுந்தவளை அவன் ஆவேசத்துடன் தழுவி கொண்டான்...

அவளும் அவனது அணைப்பில் சுகமாய்க் கட்டுண்டு அமைதியாக இருந்தாள்... பின்பு அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"நீ கேட்பதை இப்போ கொடுக்க மாட்டேன்... ஆனா கொடுக்க வேண்டிய நேரத்தில் சரியா கொடுப்பேன்..." என்று இருபொருள்படக் கூறியவனை அவள் புரியாது பார்த்தாள்...

"ஹா ஹா... நீ இதைப் புரிவதற்கு இந்திரஜித்தாகப் பிறந்திருக்க வேண்டும்..." என்று அவளது கன்னம் தட்டி கூறியவன் அடுத்த நொடி அவளிடம் இருந்து விடைப்பெற்று அறையை விட்டு வெளியேறி இருந்தான்...

சம்யுக்தா கண்களில் கண்ணீர் வழிய அவன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... சில தினங்களுக்கு முன் அருவருப்பாக இருந்த கணவனது தொடுகை இப்போது அவளுக்குத் தித்திப்பாய்த் தித்தித்தது... ஒரு பொருளை இழக்கும் போது தான் அதன் அருமை தெரியுமாம்... அது போன்றதொரு ஒரு உணர்வு அவளது மனதினை ஆக்கிரமித்து இருந்தது...

அந்தக் கணம் அந்தக் கவரில் இருந்த புகைப்படங்கள் அவள் கண்முன் காட்சியாய் விரிந்தது... அதில் அவளது கணவனும், அவனது காதலியும் நெருக்கமாய் அணைத்துக் கொண்டும் முத்தமிட்டுக் கொண்டும் மெய் மறந்திருந்தனர்... இந்திரஜித்தின் முகத்தில் அப்படியொரு சந்தோசம் இருந்தது... அதை விட அவனது கண்ணில் அத்தனை காதல் வழிந்தது...

மீண்டும் மீண்டும் அந்தக் காட்சிகள் அவளது கண்களில் வலம் வர, அவள் தவிப்புடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்... கணவனுடன் அடுத்தவளை அதுவும் அவள் அவனது காதலியாக இருந்த போதும் கூட அவளால் அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை... பழைய காதல் மீண்டும் மலர கூடுமோ என்று அவளுக்கு மிகுந்த அச்சமாக இருந்தது...

ஏனெனில் முன்பு இந்தக் காதல் நிறைவேறாத காரணத்தினால் தான் இந்திரஜித் தன்னைச் சுற்றியிருந்த அன்பான உறவுகளின் மனதினை வேண்டுமென்றே காயப்படுத்தினான்... ஆனால் இப்போது அந்தக் காதலியே அவன் கண்முன் வந்து நின்றால் அவனது மனம் மாறக் கூடுமோ..?. சரித்திரம் திரும்பி விடக் கூடுமோ...? மீண்டும் கணவன் தன்னை வெறுத்து ஒதுக்கி விடுவானோ? என்று அவள் மிகவும் குழம்பிப் போனாள்...

அவள் தான் அவனை வேண்டாம் என்கிறாள்... இப்போது அவள் தான் அவனை வேண்டும் என்கிறாள்... என்ன செய்வது என்று தெரியாத ஒரு திரிசங்கு மனநிலையில் அவள் மூளை மரத்துப் போய் அமர்ந்திருந்தாள்...

காரில் சென்று கொண்டிருந்த இந்திரஜித்தின் மனதில் மனைவியைப் பற்றிய எண்ணங்களே...

'வெகுவிரைவில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டி விட்டு உன்னிடம் உன் காதல் கணவனாய் நெருங்குகிறேன்... அதுவரை நீ விலகியிரு கண்மணி... எனக்கு உன் மனம் தான் வேண்டும்... உன் உடல் அல்ல...'

என்று மனதிற்குள் கூறிக் கொண்டவன் அடுத்த நொடி கண்ணனுக்கு அழைத்தான்...

"இந்தர் டிரைவ் பண்ணிக்கிட்டு இருக்கியா...? ஃபோனை வை... பிறகு பேசலாம்..." காவல்துறை அதிகாரியாய்க் கண்டிப்புடன் கூறினான் கண்ணன்...

"அண்ணா... உங்களோட ஒரே இம்சை..." என்று சலித்தபடி காரை ஓரமாய் நிறுத்திய இந்திரஜித்,

"காரை ஓரமா நிறுத்திட்டேன்... இப்போ பேசலாமா...?" என்க...

"இப்ப ஓகேடா..." என்ற கண்ணனிடம் நமட்டு சிரிப்புடன் அவன்,

"எப்படிண்ணா இப்படி...? நீங்க வீட்டிலும் இப்படித் தான் இருப்பீங்களா... பாவம் என் வருங்கால அண்ணி..."

"ஹா ஹா... மீராவுக்கு என்னைப் பத்தி நல்லா தெரியும்..." பேச்சு வாக்கில் கண்ணன் வாய் தவறி தனது காதலியின் பெயரைக் கூறிவிட்டான்...

"அண்ணி பேரு மீராவா... ஹேய், ஹூர்ரே..." என்று சந்தோசக் கூச்சலிட்ட இந்திரஜித்தைக் கண்டு கண்ணன் உதட்டைக் கடித்தான்...

"டேய் இந்தர், அப்பா, அம்மா கிட்ட சொல்லிராதேடா..."

"அது எப்படிச் சொல்லாம இருக்க முடியும்... உங்க தம்பி நான் ஒரு குழந்தைக்கு அப்பாவாகப் போகிறேன்... என்னை விடப் பெரியவங்க நீங்க... நீங்க இப்படி ஃப்ரீ பேர்டா இருக்க நான் விட்டிருவேனா என்ன...? யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்..." என்று அவன் சகோதரனைக் கிண்டல் செய்து சிரித்தான்...

"அப்புறம் அண்ணியைப் பத்தி சொல்லுங்க..."

"எங்க ட்ரெயினிங் அப்போ தான் முதல் முறையா அவளைப் பார்த்தேன்... அவளோட பெயர் தான் முதலில் என்னை

இம்ப்ரஸ் பண்ணிச்சு..."

"அடப்பார்றா... போலீஸ்க்காரருக்கும் காதல் ஹார்மோன் வேலை செஞ்சிருக்கு..." என்று அவன் கேலி செய்ய...

"டேய், டேய்... நாங்களும் மனுசங்க தான்டா..."

"அப்புறம் என்ன நடந்தது...?"

"நான் என்ன கதையா சொல்றேன்...? அப்படியே பேசி, பழகி பிடிச்சு போய் இப்போ காதல்ல வந்து நிக்குது..."

"அண்ணி எப்படி அதிரடி படையா...? அமைதி படையா...?"

"போலீஸ்க்காரியை அமைதின்னு சொன்னா, பொய் சொன்ன என் வாய்க்குப் போஜனம் கிடையாதுடா தம்பி... என்னை விடச் செம அதிரடி... இப்போ நீ கேட்ட கேசின் விவரங்களை அவள் தான் விசாரிச்சு உடனே எடுத்துக் கொடுத்தாள்... மீரா தான் இப்போது டெல்லியில் அசிஸ்டெண்ட் கமிசனர்..."

"அப்போ ரொம்ப நல்லதா போச்சு..." என்றான் இந்திரஜித் குதூகலமாக...

"நீ சொன்ன வரை விசாரிச்சிட்டேன் இந்தர்... நீ சொன்னது ஒன்று... ஆனால் ரிப்போர்ட்டில் வேறு ஒண்ணு இருக்கு..."

"ஆமாம் அண்ணா... இப்போ தான் எல்லா விசயமும் எனக்குப் புரிகிறது... ஆனால் ஏன்னு தான் எனக்குப் புரியலை..."

"ஐபிஎஸ் படிச்ச நான் எதுக்கு இருக்கேன் ப்ரோ... இப்போ மட்டும் நீ உம்ன்னு ஒரு வார்த்தை சொல்லு... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்... போலீஸ்க்காரன் ட்ரீட்மெண்ட்டில் எல்லா உண்மையும் தானாக வெளிவந்திரும்..."

"அவங்க பெரிய ஆளுங்க... நீங்க அவங்க கிட்ட மோதப் போய் உங்க வேலைக்கு ஏதாவது ஆபத்து வந்திரப் போகுது... தகுந்த ஆதாரங்கள் கிடைக்கட்டும்... அதுக்குப்

பிறகு நடவடிக்கையை மேற்கொள்ளலாம்... அதுவரை அமைதி காப்போம்..." என்று முடித்தான் தம்பி...

"சம்யுவை பத்திரமா பார்த்துக்கோடா... இப்போ பார்த்து இந்தப் பிரச்சினைகள் வேறு..."

"நான் பார்த்துக்கிறேன் அண்ணா... என்னை மீறி எதுவும் நடந்து விடாது..." என்று நம்பிக்கையுடன் கூறிய தம்பியைக் கண்டு அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

"அண்ணா... உங்க கல்யாணத்தில் சீக்கிரமே நாம் சந்திக்கலாம்..." என்று கூறியபடி இந்திரஜித் அலைப்பேசியை அணைக்கப் போக...

"டேய் ஏன்டா உனக்கு இந்தக் கொலைவெறி... இன்னும் கொஞ்ச நாள் பேச்சிலர்ஸ் லைஃபை என்ஜாய் பண்ணிக்கிறேன்டா..."

"ஏழு கழுதை வயசாகியாச்சு... இன்னும் என்ன என்ஜாய் வேண்டி கிடக்கு..."

"டேய் நான் உன் அண்ணன்டா..."

"இது என் வாய்ஸ் இல்லைண்ணா... பெரியம்மாவோட மைண்ட் வாய்ஸ்..." என்று கிண்டலடித்தவன்,

"வீட்டில் ஏதேதோ பிரச்சினை நடந்து இப்போ தான் கொஞ்சம் சந்தோசம் திரும்பி இருக்கு... இப்போ உங்க கல்யாணமும் நடந்தால் இரட்டிப்புச் சந்தோசம் பெருகும்..." என்றான் நெகிழ்ந்த குரலில்...

"அழுது வடிஞ்சது போதும்டா... உன் அழுகையைப் பார்க்க பொறுக்காது நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்..."

"இப்போ தான் நீங்க குட் அண்ணா..." என்றவன் சந்தோசமாய் அழைப்பைத் துண்டித்தான்...

கண்ணனின் காதல் கதை கேட்டு உற்சாகம் அடைந்த இந்திரஜித் சந்தோசமாய்க் காரைக் கிளப்பினான்... அப்போது அவன் கண்முன் அவனது காதல் கதை படமாய்

வந்து போனது... அடுத்த நொடி அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகிப் போனது...

'நீ வலியப் போய் ஏமாந்தால் அதுக்கு யார் என்ன பண்ண முடியும்...?' அவனது மனசாட்சி எப்போதும் போல் அவனுக்கு எதிராகக் குரல் கொடுத்தது...

'ஒரு முறை தவறு செய்துவிட்டேன்... மறுமுறை அந்தத் தவறை ஒரு போதும் செய்ய மாட்டேன்...' என்று அவன் தனக்குள் உறுதியாய் கூறிக் கொண்டான்...

*************************

யமுனா இரு கைகளிலும் பெரிய, பெரிய புத்தகங்களை அள்ளிக் கொண்டு அதில் விழிகளை ஓட்டியபடி அந்த நீண்ட வராந்தாவில் நடந்து வந்து கொண்டிருந்தாள்... மருத்துவமனையில் இருந்த நூலகத்தில் அவளுக்குத் தேவையான மருத்துவம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் கிடைக்கும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை... அதனால் ஆசையுடன் அத்தனை புத்தகங்களையும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொண்டு வந்து விட்டாள்...

அப்போது பக்கவாட்டில் இருந்து வந்த பிரசன்னா நேரே அவள் மீது மோதி நின்றான்... புத்தகங்களுடன் தடுமாறியவளின் தோளைப் பிடித்து நிறுத்தியவன்,

"எப்போதுமே வழியைப் பார்த்து ஒழுங்கா நடக்க மாட்டியா...?" என்று அவளிடம் சிடுசிடுத்தவன் கீழே கிடந்த அவளது ஸ்டெதஸ்கோப்பைக் கையில் எடுத்தபடி அவளைப் பார்த்து முறைத்தவன்,

"ட்யூட்டி நேரத்தில் உனக்கு இங்கே என்ன வேலை...?"

"ட்யூட்டி முடிஞ்சு தான் லைப்ரேரிக்கு வந்தேன்..." தனது கைகளில் இருந்த புத்தகங்களை அவனிடம் உயர்த்திக் காட்டியபடி கூறினாள்...

தடிமனான அந்தப் புத்தகங்களைப் பார்த்தவனின் முகம் மென்மையானது...

"படிக்கிறதுனா உனக்கு ரொம்பப் பிடிக்குமா...?"

"ம்... ரொம்பப் பிடிக்கும்..." என்று வேகமாகத் தலையாட்டியவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவன்,

"அது நீ டாக்டருக்கு படிச்சிருக்கிறதைப் பார்க்கும் போதே தெரியுது..." என்றவன் கிளம்பிச் செல்ல முயல...

"பிரசன்னா..." என்று அவள் அழைக்க...

"ஓய், என்ன லந்தா...? பெயரை சொல்லி கூப்பிடுற..." விட்டால் அடித்து விடுவான் போலும்... அவ்வளவு கோபம் வந்தது அவனுக்கு...

"நீங்க மட்டும் என்னை வா, போன்னு பேசலாமா... முதலில் நீங்கன்னு என்னை மரியாதையா பேசிய நீங்க, இப்போ எந்த உரிமையில் என்னை வா, போன்னு பேசுனீங்களோ, அந்த உரிமையில் தான் நானும் பெயர் சொல்லிக் கூப்பிட்டேன்..."

"உன் கிட்ட மனுசன் பேசுவானா...?" என்று அவளிடம் கடுகடுத்தவன் திரும்பி நடக்கத் துவங்க...

"பிரசன்னா... என்னோட ஸ்டெதஸ்கோப்..."

அதில் அவளைத் திரும்பிப் பார்த்தவன் தனது கையிலிருந்த ஸ்டெதஸ்கோப்பை அவள் கைகளில் திணிக்க எண்ணி அவளது கைகளைப் பார்க்க, அதில் புத்தகங்கள் நிறைந்து வழிந்தது... வேறுவழியின்றி அவன் அதை அவளது கழுத்தில் மாட்டி விட்டு விட்டு திரும்பிப் பார்க்காது சென்றான்...

'போங்க பிரசன்னா போங்க... எவ்வளவு தூரத்துக்குத் தான் நீங்க போறீங்கன்னு நானும் பார்க்கிறேன்... இன்னைக்கு என் கழுத்தில் ஸ்டெதஸ்கோப்பை மாட்டின உங்க கை ஒரு நாள் இல்லை ஒரு நாள் என் கழுத்தில் தாலி கட்டத் தான்

போகுது... அது நடக்கும் வரை ஓய மாட்டாள் இந்த யமுனா...' மனதில் உறுதியுடன் நினைத்துக் கொண்டாள் அவள்...

*********************

மதிய பொழுது கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள் சம்யுக்தா... அவளுக்காக எப்போதும் நேரத்துடன் உணவு உண்ண வந்துவிடுபவன் இன்று இன்னமும் காணவில்லை... அவளும் உண்ணாது அவனுக்காகக் காத்திருந்தாள்... அந்நேரம் அவளின் அலைப்பேசி அழைத்தது... வேறு யார் அவளது அருமை கணவன் தான்...

"பாவா..."

"இன்னைக்கு எனக்குச் சாப்பிட வர நேரம் கிடைக்கலை... நீ சாப்பிடு யுகிம்மா... ஈவினிங் நேரமே வந்திர்றேன்..." அவன் அவளிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அருகில் மாதுரிமாவின் குரல் உரத்து ஒலித்தது...

"இந்தர், சாப்பிட வாங்க..." அவளது குரல் சற்றுக் கொஞ்சலுடன் ஒலித்ததோ...

"இதோ ஒன் மினிட்..." என்று மாதுரிமாவுக்குப் பதில் கூறியவன் மனைவியிடம்,

"பை யுகிம்மா... மிஸ் யூ பேபி..." என்று அலைப்பேசி வழியே அவளுக்கு அழுத்தமாய் முத்தத்தைப் பதித்து அதன் மூலம் தனது காதலை மனைவிக்கு அனுப்பி வைத்தான்...

அந்தோ பரிதாபம், பேதையவள் மனதிற்கு அது புரிந்ததா என்று தான் தெரியவில்லை... சம்யுக்தா அலைப்பேசியை அணைத்து விட்டுத் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள்... அடுத்தக் கணம் அவளது அலைப்பேசி அழைத்தது... எடுத்துக் காதில் வைத்தவளுக்கு இடியென மாதுரிமாவின் குரல் மறுபக்கம் இருந்து ஒலித்தது...

"என்னோட காதலனை உன் கணவனா வளைச்சுப் போட்டுக்கிட்டா நான் விட்டுருவேன்னு நீ நினைச்சிக்கிட்டியா...? உன் கணவனை உன் கிட்ட இருந்து

பிரிச்சு என் காதலனா என் கூடக் கூட்டிட்டு போகலை... நான் மாதுரிமா இல்லை..." என்றாள் அவள் சம்யுக்தாவிடம் சவால் விடும் தோரணையில்...

'உன்னால் முடிந்ததைப் பார்' என்று கூறுமளவுக்கு அவள் பக்கம் கணவனின் காதல் பலமாக இல்லையே... கட்டியவன் ஒழுங்காக இருந்தால் அனைத்தும் சாத்தியமே... ஆனால் அவளது வாழ்க்கையில் அஸ்திவாரமே ஆட்டம் கண்டு அல்லவா இருக்கிறது...

தாலி கட்டிய கடமைக்குத் தன்னை ஏற்றுக் கொண்ட கணவன் காதலிக்காகத் தன்னை உதறித் தள்ளி விட்டு சென்றுவிடுவானோ என்று அவள் அச்சம் கொண்டு தவித்தாள்... இடையில் வந்தவள் இடையில் போக வேண்டுமோ...???

அவளது கைகள் மெல்ல தனது வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டது... குனிந்து வயிற்றைப் பார்த்தவள்,

"நான் இடையில் விலகி போகத் தயாராகத் தான் இருக்கிறேன்... ஆனால் நீ...?" என்று மகவிடம் கேட்டவளின் விழிகளில் இருந்து அடக்க மாட்டாது கண்ணீர் வழிந்தது...

யாரின் மனதினை யாரறிவார்...? சம்யுக்தாவின் மனதினை அவளது கணவனான இந்திரஜித்தாவது அறிவானா...???

தொடரும்...!!!
**************************

மனைவியிடம் சொன்னது போல் இந்திரஜித் மாலையில் நேரத்தோடு வீடு வந்து சேர்ந்தான்... காரில் இருந்து இறங்கியவன் அந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்தபடி அப்படியே நின்று விட்டான்... தோட்டத்தில் இருந்த புல்வெளி மீது போர்வை விரித்து அதில் சம்யுக்தா, ஆதித்யா, அர்விந்த் மூவரும் அமர்ந்து பந்து விளையாடிக் கொண்டிருந்தனர்... சின்னவனுக்கு ஏற்ற மாதிரி மற்ற இருவரும் மெதுவாகப் பந்தை தூக்கி போட்டுப் பிடித்துக் கொண்டிருந்தனர்...

அதிலும் ஆதித்யா ஒவ்வொரு தடவையும் பந்தைப் பிடிக்கும் போதும் உட்கார்ந்த நிலையில் இருந்து லேசாக எம்பி சந்தோசத்தில் ஆர்ப்பரித்தது அத்தனை அழகாக இருந்தது... தானும் அதில் கலந்து கொள்ள விரும்பிய இந்திரஜித் அவர்களை நோக்கிச் சென்றான்... மனைவி அவனது வருகையைக் கவனிக்கவில்லை... ஆனால் மருமகன்கள் இருவரும் அவனைப் பார்த்து விட்டனர்... இந்திரஜித் உதட்டின் மீது விரல் வைத்து 'சொல்லாதே' என்பது போல் பாவனைச் செய்ய, மூத்தவன் அதைப் புரிந்து கொண்டு நமட்டு சிரிப்புடன் மாமனைப் பார்த்தான்... சின்னவனோ மாமனைக் கண்டு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்...

"ஆதி பங்காரம்... இப்படி எல்லாம் துள்ளக் கூடாது செல்லம்... கீழே விழுந்திருவ..." சம்யுக்தா மருமகனைக் கொஞ்சியபடி அறிவுறுத்தினாள்...

மனைவி பின்னே பூனை நடை நடந்து வந்த இந்திரஜித் தனது இரு கரம் கொண்டு அவளின் விழிகளை மூடினான்.... தன்னவனின் ஸ்பரிசம், அவனின் பிரத்யேக நறுமணத்தை உணர்ந்தவளாய் சம்யுக்தா முகம் விகசிக்க,

"பாவா..." என்றபடி அவனது கைகளைத் தொட...

"ஐய், அத்தை கண்டுபிடிச்சிட்டாங்க..." என்று அர்விந்த் சந்தோசமாய்க் கத்தினான்...

"எப்படிடி சரியா கண்டுபிடிச்ச...?" அவளது தாடையில் கைக் கொடுத்து அவளது முகத்தை மல்லாக்கத் தன் பக்கமாய் நிமிர்த்தியவன் அவளது நெற்றியில் இதழ் பதிக்க...

"நோ..." என்று சின்ன வாண்டு மாமனின் செயலுக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தபடி அத்தையை நோக்கித் தளிர்நடை பயின்று வந்தது...

"என் பொண்டாட்டிக்கு நான் அப்படித் தான்டா கிஸ் கொடுப்பேன்..." என்ற இந்திரஜித் வேண்டுமென்றே மனைவியின் கன்னத்தில் தன் இதழைப் பதிக்க...

அவ்வளவு தான் ஆதித்யாவிற்குக் கோபம் பொங்கியதில் அவன் மாமனை நோக்கி வந்து மாமனின் கால்களைப் பிடித்து நின்றபடி அவனது காலில் தனது பிஞ்சு கரங்களால் அடிக்க ஆரம்பித்தான்...

"வாண்டு பையலுக்குக் கோபத்தைப் பார்..." என்று சிரித்தபடி கூறிய இந்திரஜித் தனது கோட்டைக் கழற்றி மனைவி மடி மீது போட்டவன் தனது முழுக்கைச் சட்டையை மேலேற்றி விட்டுக் கொண்டு சின்னவனைத் தனது கைகளில் தூக்கிக் கொண்டான்... அவன் எப்போதும் போல் சின்னவனை உயரே தூக்கிப் போட்டுப் பிடித்ததும் சின்னவன் கோபம் மறைந்து கிளுக்கிச் சிரித்தான்... அதைக் கண்டு இந்திரஜித்தின் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது...

தன் மடி மீது கிடந்த கணவனது கோட்டில் இருந்து கமழ்ந்த அவனது பிரத்யேக நறுமணம் சம்யுக்தாவைப் பித்தம் கொள்ளச் செய்தது... அவனது உடையை ஆவேசத்துடன் தன்னுடன் இறுக்கி வைத்துக் கொள்ளத் தூண்டியது அவளது காதல் மனம்... அந்தக் கணம் கணவன் மீதான தனது தேடல் அவளுக்கு நன்கு புரிவதாய்...

"ஓய்..." இந்திரஜித் விசிலடித்து அவளைக் கூப்பிட, அதில் நினைவு கலைந்தவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்...

"வா... உள்ளே போகலாம்..." என்றழைத்தபடி அவன் ஆதித்யாவைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடக்க அர்விந்த் அவன் பின்னால் ஓடினான்...

அவள் கணவனது உடையோடு, விரித்திருந்த போர்வையையும் சேர்த்து எடுத்துக் கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தாள்...

சம்யுக்தா கணவனுக்குப் பால் மற்றும் சிற்றுண்டி கொடுத்து விட்டு அவன் அருகில் வந்தமர்ந்தாள்... அர்விந்த், ஆதித்யா இருவரின் கைகளிலும் ஒவ்வொரு பஜ்ஜியை கொடுத்த இந்திரஜித் தானும் ஒன்றை எடுத்துக் கடித்தபடி,

"செம பசி பேபி..."

அவனது வார்த்தையில் கவலையுடன் நிமிர்ந்தவள், "ஏன் மதியம் சாப்பிடலையா...?"

"நேரமில்லை... வேலை இருந்தது..." என்றவன் அவளது கையைப் பிடித்து மென்மையாய் வருடியபடி, "நீ சாப்பிட்டியா...?" என்று கேட்க... அதற்கு அவள் திருதிருவென முழித்தாள்...

ஏனெனில் அவளுக்கு இருந்த மனநிலையில் அவள் உணவு உண்ண மறந்து போனாள்...

"சாப்பிட்டேன்..." பொய் கூறிவிட்டு கணவன் முகத்தைப் பார்க்க முடியாது தலைகுனிந்தவள் ஆதித்யாவை தூக்கி தனது மடியில் வைத்துக் கொண்டாள்... சின்னவனோ கையிலிருந்த பஜ்ஜியில் விருப்பமாய் லயித்திருந்தான்...

"நிமிர்ந்து என்னைப் பார்..." அவனது அதட்டலான குரலில் அவள் பயத்துடன் நிமிர்ந்து பார்க்க,

"உண்மையைச் சொல்லு..." அவனது முகத்தைப் பார்த்த பின்னர் அவளுக்குப் பொய் எங்கே இருந்து வரும்...

"இல்லை..."

"உன்னை எல்லாம் என்ன செய்றது...? இப்போ நீ மட்டும் தனி மனுசி இல்லை... வயித்தில் குழந்தை வேறு இருக்கு... அதைச் சரியா பார்த்துக்க வேணாமா...? சின்னக் குழந்தையை இப்படித் தான் பட்டினி போடுவியா...?" என்று கத்தியவன் தனது கையில் இருந்த சிற்றுண்டி தட்டை அவளது கையில் திணித்து,

"ஒழுங்கு மரியாதையா சாப்பிடு..." என்று மிரட்ட வேறு செய்தான்...

"நீங்க..."

"நீ முதல்ல சாப்பிடு... எனக்குச் சாப்பிடத் தெரியும்..." என்று அவளை முறைத்தபடி கூறியவன் உள்ளே சென்று தனக்குப் பஜ்ஜி, அவளுக்குச் சாண்ட்விச், பழச்சாறு எடுத்துக் கொண்டு வந்தான்... எல்லாவற்றையும் அவளை உண்ணச் செய்து அவளது வயிறு நிறைந்த பின்னரே அவன் அவளை விட்டான்...

"தினமும் இப்படிச் சாப்பிட்டேன் வச்சிக்கோங்க... எனக்கு இவ்வளவு பெரிய தொப்பை வந்திரும்..." என்று கூறி கலகலவெனச் சிரித்தவளைக் கண்டு அவன் இமைக்க மறந்து பார்த்திருந்தான்... வெகு நாட்களுக்குப் பின் அவளது மனம் திறந்த சிரிப்பை அவன் காண்கிறான்...

அன்று கிராமத்தில், அதன் பின் அவர்களது தேனிலவு காலத்தில் கண்ட புன்னகையை இப்போது தான் மீண்டும் அவளிடத்தில் அவன் காண்கிறான்... அவளது இந்தச் சந்தோசத்தை என்றும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று அவனது மனம் உறுதி கொண்டது...

இரவு உணவு முடிந்து அறைக்குச் செல்லும் போது தான் இந்திரஜித்திற்கு அது ஞாபகம் வந்தது... அங்கிருந்த வேலையாளை அழைத்து,

"காரில் ஒரு கவர் இருக்கு... எடுத்துட்டு வா..." என்று கூற...

வேலையாள் அதை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றதும் அவன் அந்தக் கவரில் இருந்து ஒரு

பொருளை எடுத்து மனைவியின் கண்முன் ஆட்டினான்...

"டொட்டட்டய்ங்..." என்றபடி...

அதைக் கண்டு இனிய ஆனந்தத்தில் விழிகளை விரித்தவள், "அல்லு அர்ஜூன்காரு..." என்று சந்தோசத்தில் குதித்தபடி அவன் கையிலிருந்த சிடியைப் பிடுங்கிக் கொண்டு அவள் தங்களது அறையை நோக்கி ஓட...

"ஹேய் யுகிம்மா... என் மகள் பத்திரம்டி..." என்று கத்தியபடி அவளின் பின்னேயே ஓடினான் அவளது அருமை கணவன்...

அறையின் முன் வந்தவள் புடவை தட்டி கீழே விழ முயன்ற போது அவன் பின்னால் இருந்து அவளைத் தாங்கிப் பிடித்தான்...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது...?" என்று அவன் அவளைக் கடிந்தபடி நேராக நிற்க வைத்தான்...

அந்தக் கணம் அவள் மனதில் அன்று அவன் அவளை அறையை விட்டு தள்ளி விட்ட காட்சியே கண்முன் வலம் வந்தது... அவனுள்ளும் அதே நினைவு எழுந்து அவனை வேதனை கொள்ளச் செய்தது... கண்களில் வலி எழ அவன் அவளை இயலாமையுடன் பார்த்தான்... தனக்கு வலித்தாலும் பரவாயில்லை... ஆனால் அவனுக்கு வலிக்கச் செய்ய அவளால் என்றுமே முடியாது... அவளது காதல் மனம் அதைத் தாங்கவே தாங்காது... அவனது மனதினை மாற்ற எண்ணி அவள் அவனை நோக்கி தனது இரு கைகளையும் விரித்தாள்... அவளது செயலில் அவன் விழிகளை வியப்பில் விரித்தவன் அடுத்த நொடி அவளை விருப்பமாய்த் தனது கைகளில் அள்ளிக் கொண்டான்...

உள்ளே நுழைந்து படுக்கையில் அவளை அமர வைத்தவன் அந்தக் கவரில் இருந்து ஒவ்வொரு பொருளாக எடுத்துக் காண்பித்தான்... அவள் கிராமத்துச் சந்தையில் ஆசைப்பட்டு வாங்கிய அனைத்து பொருள்களும் அதில் இருந்தது... என்ன இங்கு நகரத்திற்கு ஏற்ப சற்று விலை

அதிகமானதாய் இருந்தது... அத்தோடு அவள் நாமம் போடுவதற்கான பொருளும் சேர்ந்து இருந்தது... அதை எல்லாம் வியப்புடன் எடுத்து பார்த்தவள் முகத்தில் மலர்ச்சியைத் தவிர வேறில்லை...

"எல்லோருக்கும் நாமத்தைப் பார்த்தால் பக்தி தான் வரும்... ஆனா எனக்கு மட்டும் ஏன் வேறு என்னென்னமோ நினைவுகள் எல்லாம் தோணுது பேபி...?"

மனைவியின் நெற்றியிலிருந்த நாமத்தின் மீது விரலால் கோடிட்டபடி கேட்டவனின் குரல் தாபத்தில் கரகரத்து ஒலித்தது... அவள் இமைக்க மறந்து அவனைப் பார்த்திருந்தாள்...

"உன் நாமம் அத்தனை செக்சியா இருக்கு..." என்று ஹஸ்கி குரலில் கூறியவனைக் கண்டு,

"ஏழுகுண்டலவாடா... தப்பு, தப்பு... இப்படி எல்லாம் பேசக் கூடாது... கன்னத்தில் போட்டுக்கோங்க..." என்று அவள் கூற...

அவளது இரு கன்னங்களிலும் அழுத்தமாய் இதழ் பதித்து விலகியவன், "கன்னத்தில் போட்டாச்சு... இப்போ சரியா...?" என்று குறும்பாய்ச் சிரிக்க...

"உங்களை..." என்றவள் கோபமற்று அவன் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்...

"உன் பேவரைட் அல்லு அர்ஜூன்காரு படம் பார்க்க வேண்டாமா...?" அவளது காதில் கிசுகிசுத்தவனைக் கண்டு,

"வேண்டாம்..." என்றவள் அந்தச் சிடியை தள்ளி வைத்து விட்டு கணவனைக் காதலோடு நெருங்கினாள்...

அவன் புருவம் உயர்த்தி 'என்ன ' என்று அவளைப் பார்க்க... என்றும் இல்லாத அதிசயமாக அவள் அவனது மடியில் அமர்ந்து அவனது கழுத்தில் கரம் கோர்த்து அவனது முகத்தைக் காதலோடு பார்த்தாள்...

"பேபிக்கு இன்னைக்கு என்னாச்சு...?" அவளது கூர்மூக்கோடு அவன் தனது நாசியை உரச...

"உங்களைப் பார்த்துக்கிட்டே இருக்கணும் போலிருக்கு..." அவள் இதைச் சொல்லும் போதே அவனது மனதில் கிலி கிளம்பியது...

கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரை தனது தொடுகையைத் தாங்க மாட்டாது அவள் அழுது கரைந்தது என்ன...? ஆனால் இப்போது அவள் கிள்ளை மொழியில் தன்னிடம் கொஞ்சி பேசுவது என்ன...? அவளைக் கண்டு அவனுக்கு உள்ளுக்குள் அத்தனை பயமாக இருந்தது... ஆனாலும் வெளியில் சமாளித்துக் கொண்டு,

"அல்லுகாருவை விடவா நான் அழகா இருக்கேன்..." என்று கிண்டலாய்க் கேட்க...

"இல்லை... நீங்க மகேஷ் பாபுகாரு மாதிரி அழகாயிருக்கீங்க..."

"ஐயோ இன்னொரு வில்லன் என்ட்ரியா... ஏன்டி ஏன்...?" என்று அலறியவனின் வாயை மூடியவள்,

"அப்போ என் ஹீரோ பெயர் சொல்லவா...?" என்று விசமமாய்க் கேட்டபடி அவனைக் காதலோடு பார்த்தவள்,

"இந்திரஜித்... என் பாவா... அவர் தான் என் ரியல் ஹீரோ... என் கண்ணுக்கு என் பாவா மட்டும் தான் அழகு..." என்று கூறியவளின் வார்த்தையில், விழியில் வழிந்தது எல்லாம் காதல், காதல், காதல் மட்டுமே...

"பொய் சொல்லாதேடி... அல்லுகாரு படத்தைப் பார்த்தா போதுமே ஈன்னு முப்பத்திரண்டு பல்லையும் காட்டிட்டு அவனை மட்டும் தானே நீ சைட் அடிப்ப..." அன்றைய நாள் நினைவில் அவன் முகம் வாட கூற...

"அது அப்போ... இது இப்போ..." என்றவளுக்கு அவன் கூறியதன் அர்த்தம் புரியவில்லை... புரிந்திருந்தால்

அன்றே கணவன் தனது கடைக்கண் பார்வைக்காக ஏங்கியிருக்கிறான் என்பதை அவள் உணர்ந்திருப்பாள்...

"இப்போ மட்டும் என்ன புதுசா...?" அவன் சரசத்துடன் கேட்க...

"தெரியலை... உயிரோடு இருக்கும் காலம் வரை உங்க கூடச் சந்தோசமா வாழணும்ன்னு இருக்கு... ஒவ்வொரு நொடியையும் அனுபவிச்சு வாழணும்ன்னு இருக்கு..." என்றவள் அவனது நெஞ்சில் சுகமாய் முகம் புதைத்துக் கொள்ள...

அவள் பேசியது கேட்டு அவனது இதயம் அச்சத்தில் சத்தமாய் மத்தளம் வாசித்தது... அவள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்கு வேறு ஒரு அர்த்தத்தை உணர்த்தியது...

"வாழலாம், வாழலாம், நீயும் நானும் சாகும் வரை நாம் சந்தோசமாய் வாழலாம்..." தன்னைத் தேற்றிக் கொண்டு கூறியவனைக் கண்டு அவளது முகத்தில் புன்னகை தோன்றியது...

அவன் கூறியது ஒரு அர்த்தத்தில்... ஆனால் அவள் புரிந்து கொண்டதோ வேறு அர்த்தத்தில்...

"இப்போ நாம் சந்தோசமா இருக்கலாமா...?" என்று விழிகளில் ஆர்வம் மின்னக் கேட்டவளை ஏமாற்ற மனமில்லாது அள்ளி அணைக்கச் சொல்லி அவனது கைகள் பரபரத்தது... ஆனால் அதற்குப் பின் என்ன நடக்குமோ என்று பயந்தவனாய் அவன்,

"பேபி, நான் சொல்றதை கேட்பியா...?" என்றான் சற்று சீரியசாக...

"சொல்லுங்க பாவா..." அவளது முகபாவமும் சீரியசாய் மாறியது...

"எனக்கு இந்த ப்ராஜெக்ட் முடியும் வரை கொஞ்சம் வேலை அதிகம் இருக்கும்... சில சமயம் சாப்பிட கூட என்னால்

வீட்டுக்கு வர முடியாது... அதனால் நீ உன்னையும் பார்த்துட்டு, நம் மகளையும் நல்லா பார்த்துக்கணும்... பார்த்துக்குவியா...?"

"ம்... உங்களுக்காக நான் இதைக் கூடச் செய்ய மாட்டேனா பாவா..." உடனே புரிதலுடன் ஒப்புதல் அளித்த மனைவியைக் கண்டு அவனுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"நாளைக்குக் கூட நான் ஏர்லி மார்னிங் அங்கே கிளம்பி போகணும்... அதனால்..." என்று இழுத்தவனைக் கண்டு அவள் கேள்வியாய்ப் பார்த்தாள்...

"கொஞ்ச நாளைக்கு இது எல்லாம் வேண்டாம்... என்னுடைய மைன்ட் முழுவதும் இந்த ப்ராஜெக்ட்டில் தான் இருக்கு... என்னால் வேறு எதையும் சிந்திக்க முடியலை... சாரி பேபி..." என்றவனைக் கண்டு,

"இதுக்கு எல்லாமா சாரி கேட்பீங்க... சரி தூங்குங்க..." என்று அவனை விட்டு விலக முயன்றவளை விலக விடாது தடுத்தவன் அவளைத் தனது மடியில் படுக்க வைத்துக் கொண்டான்...

"நீ தூங்கு..." என்றவன் அவளது தலையை வருடிக் கொடுத்து உறங்க வைக்க... கணவனது வார்த்தைகளில் அலைபாய்ந்த அவளது மனம் அவனது வருடலில் அமைதி கொண்டது... மெல்ல உறக்கம் வந்து அவளை ஆட்கொண்டது...

மனைவி நன்கு உறங்கியது தெரிந்ததும் அவளைத் தலையணையில் படுக்க வைத்தவன் மெல்ல எழுந்து வந்து அவளது அலைப்பேசியைக் கையில் எடுத்தான்... சம்யுக்தாவிற்காக அவன் விலையுயர்ந்த அலைப்பேசியை வாங்கிக் கொடுத்திருந்த போதும் அவள் முகநூல், வாட்ஸ்அப் என்று எதையும் உபயோகப்படுத்த மாட்டாள்... அழைப்புமே தேவையானவர்களுக்கு மட்டுமே அழைத்துப் பேசுவாள்... அது போல் தொழிலுக்காக மின்னஞ்சல் உபயோகப்படுத்துவாள்... தொழில் சம்பந்தப்பட்ட அவளது

தளத்தைக் கூட அவன் தான் இயக்குகிறான்... அவளில்லை... ஏனோ அவளுக்கு இதில் எல்லாம் அவ்வளவாய் ஆர்வம் இருந்தது இல்லை...

அவளுக்கு இருந்த ஒரே ஆர்வம் அவளது பாவா மட்டும்... அவனுக்காக விழித்து, அவனுக்காகச் சமைத்து, அவனைக் கவனித்து, அவனுக்காக உறங்கி என்று அவளது ஒவ்வொரு செய்கையிலும் அவன் தான் இருந்தான்... அதை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது...

'நீ சரியான பாவா கோண்டு, பேபி' என்று மனதில் அவளைச் செல்லமாய்க் கொஞ்சிக் கொண்டான்...

பின்பு அவளது அலைப்பேசியில் 'கால் ஹிஸ்டரி' சென்று பார்த்தான்... அவன் நினைத்தது போல் அவள் எந்த எண்களையும் அழித்து விடவில்லை...அப்படியே இருந்தது... அதில் அவன் தனது விழிகளை ஓட்டினான்... முக்கியமாக இன்று வந்த அழைப்புகளைச் சரி பார்த்தான்... அவளுக்கு வந்த இருபது அழைப்புகளில் பத்தொன்பது அழைப்பும் அவனது மட்டுமே... ஒன்றே ஒன்று மட்டும் வேறு எண்...

மனம் சந்தேகம் கொள்ள உடனே தனது அலைப்பேசியை எடுத்து மாதுரிமா எண்ணைத் தேடி எடுத்து இந்த எண்ணோடு ஒப்பிட்டுச் சரி பார்த்தான்... அவன் நினைத்தது சரியாய் போயிற்று... அந்தக் கணம் இன்று மதியம் நடந்தது அவனது மனக்கண்ணில் வந்து போனது...

மதியம் அவன் சம்யுக்தாவிற்கு அழைத்துப் பேசிக் கொண்டிருந்த போது மாதுரிமா வேண்டுமென்றே உரக்கக் கத்தி தன்னை அழைத்தது போல் அவனுக்குத் தோன்றியது... மனைவியிடம் பேசிவிட்டு நேரே அவளிடம் வந்தவன்,

"எதுக்கு இப்போ இப்படிக் கத்துறீங்க...? உங்களுக்குப் பசிச்சா நீங்க சாப்பிடுங்க..." என்று கோபமாய் உரைத்தவன் அங்கிருந்த நிறுவன மேலாளர்களிடம்,

"நீங்க லன்ச் முடிச்சிட்டு கிளப்புங்க... நம்ம மீட்டிங்கை இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம்..." என்று உரைத்தவன் மாதுரிமாவை திரும்பியும் பார்க்காது சென்றுவிட்டான்... அவ்வளவு கோபம் அவள் மீது... எந்த உரிமையில் அவள் அவனை இப்படி அழைக்கிறாள் என்று...

வெளியில் வந்தவன் அப்போது தான் கவனித்தான் கார் சாவியை மறந்தார் போன்று மேசையில் வைத்து விட்டு வந்து விட்டதை... மீண்டும் உள்ளே வந்தவனின் காதுகளில்,

"என் காதலனா என் கூடக் கூட்டிட்டு போகலை... நான் மாதுரிமா இல்லை..."

மாதுரிமா பேசிய கடைசி வார்த்தைகள் மட்டுமே அவனது காதுகளில் விழுந்தது... அதில் அவனது முகம் சுருங்கினாலும் தனது கார் சாவியை எடுத்துக் கொண்டு அவன் திரும்ப... அவனை எதிர்பாராது அங்குக் கண்டதும் அவளது முகம் பேயறைந்தார் போலானது... அதிலேயே அவனுக்குப் புரிந்து போனது... அவள் யாருடன் பேசியிருப்பாள் என்று...

அவனது சந்தேகம் மெய் என்பது போல் இன்று அவனது மனையாளின் அதீத நெருக்கம் அதை உறுதி செய்தது... இப்போது தான் அவனுக்கு முதன்முறையாக மனைவியை நினைத்துப் பயம் வந்தது... அவள் அவனை நெருங்கினாலே அவனுக்கு உள்ளுக்குள் வியர்த்தது... அவள் உடலால் தன்னை நெருங்கும் அதே நேரம் அவள் மனதால் தன்னை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறாள் என்பதை அவன் முன்பே அறிந்தவன் அல்லவா... அதனால் இப்போது அவன் அவளை ஜாக்கிரதையாகக் கையாள நினைத்தான்...

அவள் அருகில் அமர்ந்து அவளது தலையை வருடிக் கொடுத்து நெற்றியில் முத்தமிட்டவன், "என் மனசிலுள்ள வேதனைகளை எல்லாம் உன் கிட்ட சொல்லி அழணும் போலிருக்கு பேபி... ஆனா எனக்கே சில விசயங்கள் புரியாத போது உன் கிட்ட அந்த மாதுரிமாவைப் பத்தி நான் என்னன்னு சொல்வேன்... மேலோட்டமா பார்த்தால் அவள்

என் காதலியாகத் தான் உன் கண்ணுக்கு தெரிவாள்... ஆனால் எனக்கு மட்டும் தான் தெரியும் அதன் பின்னாடி இருக்கும் வலி..." வேதனையுடன் பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்தவன்,

"எல்லா விசயங்களும் க்ளியராகட்டும்... நானே உன் கிட்ட எல்லாம் சொல்லி மன்னிப்புக் கேட்கிறேன்... அதுவரை என்னைப் புரிஞ்சிக்கிட்டு என் கூடவே இரு பேபி..."

அவனது தவிப்பு எல்லாம் தன்னவளைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்வதில் மட்டுமே இருந்தது...

******************

பிரசன்னா மருத்துவமனையில் இருந்த உணவு விடுதியில் உணவு வாங்கிக் கொண்டு அங்கிருந்த மேசையில் உணவை வைத்து விட்டு நாற்காலியில் அமர்ந்தான்... மருந்து நிறுவனத்தில் இருந்து வரும் மொத்த லாபமும் ஆசிரமத்திற்கும், இங்கும் தான் செலவளிக்கப்படுகிறது... மருத்துவமனையில் பணி புரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள், அங்கு வருகை தருபவர்கள் எல்லோருக்கும் இங்கு மூன்று நேரமும் உணவு இலவசம்... அது போல் இரவு பணிக்கு வருபவர்களின் விவரம் கேட்டறிந்து அதற்கு ஏற்றார் போன்று அந்த நேரத்தில் உணவு சுடச்சுட தயாரித்து வழங்கப்படும்... உணவு விடுதியின் சமையலறை எந்நேரமும் இயங்கும் வண்ணம் அங்குள்ளவர்களுக்கு வேலைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருந்தது... இதை எல்லாம் பிரசன்னா தான் பார்த்துக் கொள்கிறான்... சித்தார்த் மேற்பார்வை மட்டுமே...

ஏதேனும் குறைகள் தென்படுகிறதா என்று சுற்றுப்புறத்தைக் கண்களால் அலசியபடி பிரசன்னா உண்டு கொண்டிருந்தான்... அதற்கு அவசியமே இல்லை போல் எல்லாம் தானாகப் பக்காவாக இயங்கிக் கொண்டிருந்தது... அந்தக் கணம் அவன் சித்தார்த்தின் நிர்வாகத் திறமையை மனதிற்குள் மெச்சி கொண்டான்...

"ஹாய் பிரசன்னா..." என்றழைத்தபடி அவன் முன் வந்தமர்ந்தாள் யமுனா...

"கால் மீ சார்..." என்று அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"சாரா...?" என்று கசப்பை உண்டது போல் முகத்தைச் சுளித்தவள்,

"இனி நமக்குள் மலரப் போகும் உறவுக்கு இந்த அழைப்பு சரியா வராதே..." என்று முடித்தாள் புன்னகையுடன்...

அவளை முறைத்துப் பார்த்தவன் பின்பு தனது உணவில் கவனமானான்... அவளோ அவனைக் காதலாய்ப் பார்த்தபடி உணவோடு அவனையும் சேர்த்து பார்வையால் கபளீகரம் செய்து கொண்டிருந்தாள்... அதை அவன் உணர்ந்தாலும் அவள் புறம் திரும்பவில்லை... அப்போது அவளது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவள் பதட்டத்துடன் எழுந்தாள்...

"என்ன...?" அவளது பதட்டம் கண்டு அவன் அவளைக் கேட்டான்...

"ஒரு எமெர்ஜென்சி..." என்றவள் தட்டை எடுத்துக் கொண்டு நகர முயல... அவளது கைப்பிடித்துத் தடுத்தவன்,

"நீ போ... நான் எடுத்து போட்டுக்கிறேன்..." என்றவனைக் கண்டு அவள் வியப்பாய்ப் பார்க்க...

"போன்னு சொன்னேன்..." அவனது குரலில் இருந்த கடுமையைக் கண்டதும் அடுத்த நொடி அவள் அங்கிருந்து ஓடிவிட்டாள்...

பாதி உண்டு முடித்த நிலையில் இருந்த அவளது தட்டைப் பார்த்தவனுக்கு அவளை நினைத்துப் பாவமாக இருந்தது... அப்போது ஜெகதீஸ்வரி அவன் முன் வந்தமர்ந்தாள்...

"ரொம்ப நல்ல பெண் இல்லையா, பிரசன்னா...?" அவளது குரலில் தன்னினைவு கலைந்தவன் அவளைப் பார்த்து,

"அக்கா..." என்று பரவசமாகக் கூற...

"எப்படியிருக்க...?"

"எனக்கு என்னக்கா...? சார் இருக்கும் வரை எனக்கு எந்தக் குறையும் இல்லை..." என்றவன் அவளின் நலம் விசாரித்து விட்டு மருத்துவமனை சம்பந்தமாகப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தான்...

"நான் முதலில் கேட்ட கேள்விக்கு நீ இன்னமும் பதில் சொல்லலையே பிரசன்னா..."

"அக்கா... அது வந்து..." என்று இழுத்தபடி அவன் தலைகுனிந்தான்...

"யமுனா ரொம்ப நல்ல பொண்ணு... எனக்கு அவளை ரொம்ப வருசமா தெரியும்... பணம் இருக்குங்கிற திமிர் கொஞ்சமும் கிடையாது... எல்லோர் கிட்டேயும் ஈசியா பழகுவாள்... அது போல் தான் உன் கிட்டேயும் ஈசியா ஒட்டிக்கிட்டா போலிருக்கு..." என்று குறும்பு குரலில் கூறிய ஜெகதீஸ்வரி அவனது முகத்தைக் குறுகுறுவெனப் பார்த்தாள்...

"நல்ல பொண்ணு தான்... நான் இல்லைன்னு சொல்லலையே..." என்றவன் கவனமாக அவளது முகத்தைப் பார்ப்பதை தவிர்த்தான்...

"நீ இன்னும் சம்யுவை மறக்கலையா...?"

"அச்சோ... அப்படி எல்லாம் இல்லைக்கா... அவள் என் தம்பி மனைவி... இப்போ அது மட்டும் தான் என் மனசில் இருக்கு..." என்றான் உண்மையாக...

"குட்..." என்று அவனை மெச்சியவள்,

"யமுனா உன்னைக் காதலிப்பதை நான் அப்பா கிட்ட சொல்லிட்டேன்..."

"அக்கா..." அவன் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான்...

"உனக்குன்னு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும்ங்கிற அக்கறையில் தான் நான் இதைச் செஞ்சேன்..."

"உங்களை எனக்குத் தெரியும்க்கா..."

"அப்பா யமுனா கிட்ட பேசியிருக்காங்க..."

"என்னது...? சாரா...?" அவன் அதிர்ந்து போனான்...

"பயப்படாதே... உன் கடந்த காலத்தை அவள் கிட்ட சொல்லலை... ஆனா நீ ரொம்ப மனவேதனையில் இருக்கிறேன்னு மட்டும் சொல்லியிருக்கிறார்... அவளும் உன்னைக் கடந்த காலத்தோடு அப்படியே ஏத்துக்கிட்டுக் காதலிக்கிறதா சொல்லியிருக்கிறாள்... இப்போ சொல்லு, அப்பா உனக்காகப் பார்த்த பெண் யமுனாவாக இருந்தால் உன் பதில் என்ன...?"

"ட்ரிபிள் ஓகேக்கா..." என்றான் அவன் சிறிதும் யோசிக்காது...

"பிரசன்னா அப்பாவுக்காக நீ தலையாட்டக் கூடாது... உனக்காக மட்டும் தான் நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்... இல்லைன்னா...?" சம்யுக்தா பட்ட துன்பத்தை நினைத்து ஒரு நொடி அமைதியாக இருந்தவள்,

"யமுனா பாவம் தம்பி..."

"உங்களுக்கு ஒண்ணு தெரியுமாக்கா..." அவன் கேட்டதும் அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்க...

"நான் சம்யுவை விரும்ப ஆரம்பிச்சதே சாருக்காகத் தான்... அவளைப் பார்க்கும் போது எல்லாம் அவர் சொல்லிக்கிட்டே இருப்பார், 'இந்தப் பொண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சு கொடுக்கணும்' என்று... ஏன் அந்த நல்ல வாழ்க்கை நானாக இருக்கக் கூடாதுன்னு நினைச்சு தான் நான் சம்யுவை நேசிச்சது... ஆனால் எல்லாமே நொடியில் மாறி போய்விட்டது..." என்று கூறியவன் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு,

"இப்போது சார் காட்டுற பொண்ணு யமுனாவாக இருந்தால் நான் ஒண்ணும் பெருசா ஆட்சேபிக்கப் போறது இல்லை..."

"ஆனா பிரசன்னா..."

"ஏன்க்கா, காதல் இரண்டாவது முறை வர கூடாதா...?" என்று அழுத்தமாய்க் கேட்டான் பிரசன்னா...

"டேய் உண்மையாவா சொல்ற...?" ஜெகதீஸ்வரி மகிழ்ந்து போனாள்...

"இப்போ என் மனசில் காதல் இல்லை... ஆனா கண்டிப்பா யமுனாவை காதலிச்சு தான் கல்யாணம் பண்ணிப்பேன்... நான் அவளுக்கு மட்டும் தான் என்கிற நம்பிக்கையை அவளுக்குக் கொடுத்த பிறகு தான் எங்க கல்யாணம் நடக்கும்..."

"தம்பி, நீ செம ஃபாஸ்ட்..." என்று கண்சிமிட்டிச் சிரித்தாள் ஜெகதீஸ்வரி...

"இனியும் நான் அமைதியா இருந்தால் யமுனா என் கழுத்தில் தாலி கட்டி குடும்பம் நடத்திருவாள்... அவள் சரியான அதிரடி பார்ட்டி..." புன்னகையுடன் கூறியபடி எழுந்தவன் மேசை மீதிருந்த தட்டுகளைக் கையில் எடுத்துக் கொண்டு,

"அந்தத் தர்பூஸ் என்னை என்ன பாடுபடுத்தினாள் தெரியுமாக்கா...? அதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு அவளுக்கு இருக்கு..."

"தர்பூஸா...?"

"அப்படித் தானே புசுபுசுன்னு இருக்கிறாள்... ஒரு டாக்டர் மாதிரி ஃபிட்டாவா இருக்கிறாள்..." என்று அவன் யமுனாவின் பூசிய உடல்வாகைக் கிண்டலடித்தான்...

"பாவம்டா சின்னப் பொண்ணு..."

"ஐயோ, அவளா சின்னப் பொண்ணு... அவள் பயங்கரமான ஆளுக்கா... இனி தான் இருக்கு அவளுக்குக் கச்சேரி..." என்றுரைத்து விட்டு அவன் நகர முயல...

"அவளைப் பார்க்கவா போகிற...? ஆல் த பெஸ்ட் பிரசன்னா..."

"இல்லைக்கா... முதலில் சாரைப் பார்த்து ஆசிர்வாதம் வாங்கணும்... அதன் பிறகே என் காதல் கச்சேரி ஆரம்பம்..." என்று அவன் சிரித்துக் கொண்டு சென்றான்...

பிரசன்னாவின் குறும்பைக் காணும் போது ஜெகதீஸ்வரி மனதில் இந்திரஜித்தின் ஞாபகமே... அவனும் இப்படித் தான் இருந்தான்... அவன் இருக்கும் இடமே அப்படியொரு கலகலப்பாக இருக்கும்... ஆனால் இப்போது...? அவளுள் பெருமூச்சு எழுந்தது... சாப்பிட பிடிக்காது எழுந்தவள் கைக் கழுவிட்டு தனது வேலையைப் பார்க்கச் சென்றாள்...

பிரசன்னா மருத்துவமனைக்குள் சென்ற போது அப்போது தான் யமுனா ஐசியூவில் இருந்து வெளியில் வந்து கொண்டிருந்தாள்... அவளைப் பார்க்காது சித்தார்த்தைக் காணச் செல்ல வேண்டும் என்று நினைத்தவன் கண்முன் அவள் வலிய வந்து தரிசனம் கொடுத்தாள்... அந்தக் கணம் அவளும் அவனைப் பார்த்து விட்டாள்... அந்த நீண்ட வரந்தாவில் அவனைப் பார்த்தபடி ஒரு முனையில் இருந்து அவள் நடந்து வர, மறுமுனையில் இருந்து அவனும் அவளை நோக்கி முன்னேறினான்...

பார்வைகள் காந்தமாய் ஈர்த்ததில் மெய்மறந்த இருவரும் மிக அருகில் இடித்து விடுவது போல் நெருங்கி வந்து விட்டிருந்தனர்... அவன் என்ன சொல்ல போகிறானோ என்று பயத்தில் அவள் விழி விரித்து நிற்க... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஆனால் அவன் அதை அடக்கிக் கொண்டு கோபமாய் அவள் மீது மோதி விடுவது போல் முன்னேற... அவளோ பயத்துடன் விழிகளை மூடிக் கொண்டாள்... அவனோ அவளது பயத்தைக் கண்டு சிரித்தபடி அவளைச் சுற்றிக் கொண்டு கடந்து சென்றுவிட்டான்...

சில வினாடிகள் கழித்து விழி திறந்தவள் அவனைக் காணாது ஏமாற்றம் அடைந்து தனக்குப் பின்னால் திரும்பி பார்க்க... அவனோ பேண்ட் பாக்கெட்டில் கை விட்டபடி உல்லாச நடையுடன் சென்று கொண்டிருந்தான்... அவனைப் பார்த்தபடி நின்றிருந்தவளின் மனதில் ஏமாற்றத்தின் வலி மெல்லப் பரவலானது...

**********************

'தீம் பார்க்' கட்டுமான வேலைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்... அவன் இதில் அதி தீவிரமாக இறங்கி இருப்பதன் காரணம் அவன் மகவின் வரவு... மகவு பூமியில் அவதரிக்கும் போது அதற்குப் பரிசாக இதை அளிக்க வேண்டும் என்பது தந்தையான அவனது ஆசை... அதனால் தான் அவன் இந்த வேலையில் மும்முரமாக இறங்கி இருந்தான்... அப்போது மாதுரிமா அங்கு வந்தாள்...

அவன் அவளைப் பார்த்து இயல்பாகப் புன்னகைத்தான்... அவனது முகத்தில் கவலைக்கான அறிகுறி ஏதும் தென்படுகிறதா என்று அவனை உற்று நோக்கியவள் அதில் கவலை ஏதும் இல்லாது போகவும் குழப்பமுற்றாள்... ஏனெனில் அவள் சம்யுக்தாவைக் குழப்ப, குழப்ப இவன் தானாக மனம் குழம்பிப் பைத்தியமாக வேண்டும்... அவளுக்கு அது தானே வேண்டும்... அவனது நிம்மதி தானே வேண்டும்... ஆனால் அவள் நினைத்ததற்கு நேர்மாறாய் இருந்த அவனது புன்னகை முகம் அவளுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது...

அவளது மனவோட்டத்தைப் புரிந்தார் போன்று இந்திரஜித் அவளைப் பார்த்து அந்த வார்த்தைகளை உதிர்த்தான்...

"என் மனைவி உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லச் சொன்னாள்..."

அவள் புரியாது 'ஙே' என்று விழித்தாள்...

"நேத்து மதியம் அவளோட புருசனுக்குச் சாப்பாடு போட்டு நல்லா கவனிச்சிக்கிட்டீங்கல்ல அதுக்குத் தான்..." என்று நக்கலாய் வார்த்தைகளை உதிர்த்தபடி அவன் அலட்சியமாய் அவளைக் கடந்து சென்றான்...

அவன் தன்னைக் கண்டு கொண்டானோ என்று அவள் அதிர்ந்து போய் நின்றிருந்தாள்...!!!

தொடரும்...!!!

**************************

"பேபி... நீ கிளம்பி ஹாஸ்பிட்டல் வந்திரு... நான் நேரே அங்கே வந்திர்றேன்... என்ன ஓகேவா...?"

இந்திரஜித் சொன்னதும் அவனை ஏறிட்டுப் பார்த்த சம்யுக்தா அவனில் உழைப்பின் களைப்பையும், உடலின் மெலிவையும் கண்டு உள்ளம் கசிந்தாள்...

"நான் தனியா போய்க்கிறேன் பாவா... நீங்க உங்க வேலையைப் பாருங்க..." அவனது பாரத்தைக் குறைக்க எண்ணி அவள் அப்படிக் கூறினாள்...

"அது எப்படிப் பேபி...?"

"எது எப்படி...?" என்று எதிர்கேள்வி கேட்டபடி அவனிடம் நெருங்கி வந்தவள் அவனது சட்டை பொத்தானைப் பிடித்து உருட்டியபடி,

"நம்ம ஹாஸ்பிட்டலுக்குப் போகிறதுக்கு எனக்கு என்ன பயம்...? வதின தான் அங்கே டாக்டர்... அதனால் நான் தனியா சமாளிச்சுக்குவேன்..."

"உனக்குத் தைரியம் இல்லைன்னு நான் சொன்னேனா...?" என்று அவளது கூர்மூக்கைப் பிடித்து ஆட்டியவன்,

"நம்ம குழந்தையைப் பார்க்கணும்ன்னு எனக்கு ஆசையிருக்காதா...?"

அவன் அப்படிக் கூறியதும் அவள் சரேலென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"என்ன...?" அவன் கேட்டதற்கு ஒன்றுமில்லை என்று அவள் தலையாட்டினாள்...

"இப்போ தான் ஃபர்ஸ்ட் டைம் குழந்தையை ஸ்கேன் பண்ணி பார்க்க போகிறோம்... நம் மகளை நேரில் பார்க்கணும்ன்னு எனக்கு ஆசையா இருக்காதாடி...?" அவனது ஆசை ஒரு தகப்பனின் நியாயமான ஆசை தான்...

"அதுக்கில்லை... உங்களுக்கு வேலை நிறைய இருக்குமேன்னு தான்..." என்று இழுத்தவளை அருகில் இழுத்து அணைத்தவன்,

"எத்தனை வேலைகள் இருந்தாலும் எனக்கு நீயும், நம் பொண்ணும் ரொம்ப முக்கியம்..." என்று விழியில் நேசம் கசிய கூறியவனை அவள் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள்...

"என்னடி பார்க்கிற...?"

"ஒண்ணும் இல்லை..." என்றவளை ஒரு மாதிரியாய்ப் பார்த்தவன்,

"வர வர நீ பார்க்கிற பார்வைக்கு எல்லாம் ஒரு தனி டிக்சனரி போடணும் போலிருக்கு பேபி..." தனது மனஸ்தாபத்தைக் கூடக் கொஞ்சலாகக் கூறினான் அந்தக் காதல் கணவன்...

"உங்களுக்கு டைம் ஆகலையா...?" பேச்சை மாற்ற எண்ணி அவள் அப்படிக் கேட்க...

"என்னைத் துரத்துறதிலேயே நீ குறியா இரு..." என்றவன் அவளது நெற்றியில் இதழ் பதித்து விலக... அவளோ அவனது கையைப் பிடித்துத் தடுத்து,

"எனக்கும் உங்க கூட இருக்கணும்ன்னு ஆசையா தான் இருக்கு... ஆனா உங்களுக்கு வேலையிருக்கே..."

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா பேபி..." என்று அவன் சிரித்தபடி புரிதலுடன் கூற...

"அப்படியா...? இப்போ உங்க பேபிக்கு என்ன வேணும்ன்னு சொல்லுங்க பார்க்கலாம்...?" என்று கேட்டு அவள் அவனை மிதப்பாய் பார்த்து வைத்தாள்...

"சொல்றது உன் பாவாவுக்குப் பிடிக்காதே... சோ ஒன்லி ஆக்சன் தான்..." என்று கூறியவன் அவளது இதழ் மீது தன் இதழை மென்மையாய்ப் பதித்து உடனே விலகினான்...

"ஆக்சன் போதாதே..." என்று அவள் புன்னகையுடன் கண்சிமிட்டி அவனுக்கு அழைப்பு விடுக்க...

இதற்கு மேல் இங்கிருந்தால் தொலைந்தோம் என்று எண்ணியவன், "இந்த ஆட்டத்துக்கு நான் வரலை..." என்று கூறியபடி வேகமாய் அறையை விட்டு வெளியேற... அவள் சிரித்தபடி அவனைப் பின்தொடர்ந்தாள்...

புன்னகை முகமாய்க் கணவனை வழியனுப்பி விட்டு தனது அறைக்கு வந்தவள், அவள் கை வேலைகள் செய்வதற்கு என்று கணவன் ஏற்படுத்திக் கொடுத்திருந்த தனியறைக்குச் சென்றாள்... ஏற்கெனவே அவள் மனதில் உருவேற்றியிருந்த உருவத்தைக் களிமண்ணில் செய்ய ஆரம்பித்தாள்... மனம் முழுவதும் காதலில் கனிந்திருக்க அவளது கைகள் விருப்பத்துடன் தனது பணியைச் செவ்வனே செய்தது...

******************

சித்தார்த் வீட்டின் முன் தனது காரை நிறுத்திவிட்டு உற்சாகமாய் இறங்கினான் பிரசன்னா...
வெகுநாட்களுக்குப் பின் இப்போது தான் அவனது மனதில் நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டு இருந்தது... அதே குதூகலத்துடன் அவன் சித்தார்த்தைக் காண உள்ளே சென்றான்...

வரவேற்பறையில் மனைவியுடன் அமர்ந்திருந்த சித்தார்த்தின் முன் வந்து நின்றான் பிரசன்னா...
திடீரென்று தங்கள் முன் வந்து நின்றவனைக் கண்டு ஆச்சிரியமாய்ப் பார்த்த இருவரும்,

"அடடே, வாப்பா பிரசன்னா..." என்றனர் ஒருமித்த குரலில்...

"சார், மேம் நீங்க ரெண்டு பேரும் எழுந்து நில்லுங்க..." என்று அவன் அவர்களை அவசரப்படுத்த,

"எதுக்குடா...?" என்று சித்தார்த் புரியாது கேட்டாலும் எழுந்து நிற்க தவறவில்லை... கூடவே பிரகதீஸ்வரியும் எழுந்து

நின்றாள்...

"என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க சார்..."

என்ன, ஏது என்று கூடக் கேட்காது இருவரும், "தீர்க்காயுசோடு சந்தோசமா இரு பிரசன்னா..." என்று அவனை மனதார வாழ்த்தினர்...

"நான் யமுனாவை லவ் பண்ணலாமா சார்...?" என்று தன்னிடம் அனுமதி கேட்டவனைக் கண்டு சித்தார்த் திகைத்துப் போனான்... பிரகதீஸ்வரியோ புரியாது பிரசன்னாவைப் பார்த்தாள்...

பிரசன்னாவின் பாசம் கண்டு சித்தார்த்தின் விழிகள் இரண்டும் கலங்கிவிட்டது... அந்நேரம் அவனது காதில் மகனது கோபக்குரல் ஒலித்து அவனை நிலைக்குலையச் செய்தது...

'நான் யாரை காதலிக்கணும், யாரை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நீங்க முடிவு பண்ணக் கூடாது மிஸ்டர். சித்தார்த்... நான் முடிவு பண்ணணும்... என்னுடைய வாழ்க்கையை முடிவு பண்ணும் அதிகாரம் நிச்சயம் உங்களுக்கு இல்லை... எனக்கு மட்டுமே இருக்கிறது...'

அன்று மகன் தன்னை எடுத்தெறிந்து பேசியது இன்னமும் அவனது காதுகளில் ஒலித்தது... மனம் மறுக நின்றிருந்தவனைப் பிரசன்னாவின் குரல் கலைத்தது...

"சார்..." அதில் சித்தார்த் சுதாரித்துக் கொண்டவன் பிரசன்னாவைப் பார்த்து,

"உனக்கு யமுனாவை பிடிச்சியிருக்கா பிரசன்னா...? எனக்காகச் சம்மதம் சொல்லாதே..." பிரசன்னாவின் மனதினைச் சரியாகக் கணித்து அவன் கேட்டான்...

"என்னோட காட்ஃபாதர் நீங்க சார்... நீங்க எனக்காக எது செஞ்சாலும், சொன்னாலும் என் நல்லதுக்காகத் தான் இருக்கும்..." என்றான் அவன் பணிவாக...

"அப்போ நீ யமுனாவை தாராளமா லவ் பண்ணு... உங்க காதலை கல்யாணத்தில் முடித்து வைக்க வேண்டியது என் பொறுப்பு..." என்று மகிழ்வோடு கூறியபடி சித்தார்த் பிரசன்னாவை அணைத்துக் கொண்டான்...

"தேங்க்யூ சார்..."

"ரொம்ப நல்லாயிருக்கு பிரசன்னா... காதலிக்கிறதுக்கு எல்லாமா பெர்மிசன் கேட்ப...?" பிரகதீஸ்வரியின் போலி மிரட்டலான குரலில் இருவரும் விலகினர்... பிரசன்னா அசடு வழிந்தபடி அவளைப் பார்த்தான்...

"எப்படியோ பிரசன்னா, உன் வாழ்க்கை நல்லபடியா சந்தோசமா இருந்தால் எனக்குச் சந்தோசமே..." என்று பிரகதீஸ்வரியும் சந்தோசப்பட்டாள்...

"பிரசன்னா, யமுனா உன்னைச் சின்சியரா லவ் பண்ணுகிறாள்..." என்ற சித்தார்த்தைக் கண்டு பிரசன்னா,

"அக்கா எல்லாம் சொன்னாங்க சார்... நீங்க யமுனா கிட்ட பேசியதையும்..."

"ஓ, அதனால் தான் இந்த முடிவா...?"

"அப்படின்னும் வச்சுக்கலாம் சார்... வீட்டிலேயும் ஏழு கழுதை வயசாகிருச்சுக் கல்யாணம் பண்ணிக்கோன்னு சத்தம் போடுறாங்க... அதான் ஏதோ ஒரு கழுதையைக் கட்டிக்கிறதுக்குத் தெரிஞ்ச கழுதையைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்..." என்று கூறிவிட்டு அவன் சிரிக்க...

"உன் வாய்க்கு நீ யமுனா கிட்ட நல்லா உதைப்படப் போகிற..." என்று கேலி செய்த சித்தார்த் அவனுடன் சேர்ந்து சிரித்தான்...

"சும்மாவே அது தான் நடந்துக்கிட்டு இருக்கு... இனி அவள் என் மனைவியானா எனக்கு அடி கன்ஃபார்ம் தான்..." என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே பிரகதீஸ்வரி உள்ளே சென்று வீட்டில் இருந்த இனிப்பைக் கொண்டு

வந்து பிரசன்னாவிடம் கொடுத்தாள்... அவன் மகிழ்ச்சியுடன் அதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்...

அந்நேரம் சம்யுக்தா மருத்துவமனை செல்ல வேண்டி தயாராக வந்தாள்... வரவேற்பறையில் அமர்ந்திருந்த பிரசன்னாவைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் அங்கு வந்தவள்,

"வாங்க பிரசன்னா..." என்று வரவேற்க...

"எப்படி இருக்கச் சம்யு...?" எப்போதும் போல் அவனது குரலில் இருந்த அன்பு குறையவில்லை... அதைச் சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரும் உணர்ந்தனர்...

"நல்லாயிருக்கேன்..." என்று அவனிடம் உரைத்தவள் பெரியவர்களிடம் திரும்பி,

"அத்தைகாரு, மாமாகாரு நான் ஹாஸ்பிட்டல் கிளம்பறேன்... பாவா நேரே ஹாஸ்பிட்டலுக்கு வர்றேன்னு சொல்லியிருக்காங்க..." என்று அவள் விடைப்பெற...

"பார்த்துப் பத்திரமா போயிட்டு வாம்மா..." என்று இருவரும் கூறினர்...

"நானும் ஹாஸ்பிட்டல் தான் போகிறேன்... என் கூட வா சம்யு..." என்றபடி பிரசன்னா சோபாவில் இருந்து எழுந்தான்...

"இல்லை, வேண்டாம் பிரசன்னா..." மனதில் கணவனை நினைத்து அவளுக்குப் பயமாக இருந்தது... ஏனோ அவனுக்குப் பிரசன்னாவைக் கண்டாலே பிடிக்க மாட்டேங்கிறது... இதில் தான் வேறு இவனுடன் ஒரே காரில் சேர்ந்து சென்று இறங்கினால்...? அவ்வளவு தான் பூகம்பம் வெடிக்கும்...

"என்னை ஒரு டிரைவரா நினைச்சுக்கோ சம்யு..." தன்மையுடன் கூறியவனைக் கண்டு அவளால் மறுக்க

முடியவில்லை... சித்தார்த், பிரகதீஸ்வரியும் அவளை வற்புறுத்தினர்...

சித்தார்த், பிரகதீஸ்வரியிடம் விடைப்பெற்று வெளியில் வந்த பிரசன்னா தனது காரின் பின்பக்கக் கதவை திறந்து விட்டபடி சம்யுக்தா ஏறுவதற்காகக் காத்திருந்தான்... அவனது அந்தச் சிறு செயலே சொல்லாமல் சொன்னது அவனது விசுவாசத்தை... அவன் என்றுமே அவர்களது வேலைக்காரன் என்பதை...

அவள் ஏறியதும் அவன் கார் கதவை மூடி விட்டு முன்னால் வந்து ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து காரைக் கிளப்பினான்... பிரசன்னா தன்னைக் காதலிப்பதாய் கணவன் கூறியதில் இருந்து சம்யுக்தாவால் அவனது முகத்தினை இயல்பாய்ப் பார்க்க முடியவில்லை...

சம்யுக்தாவின் முகத்தில் மீண்டும் பொலிவு திரும்பி விட்டதைப் பிரசன்னா உணர்ந்தே இருந்தான்... அவள் மகிழ்ச்சியாக வாழ்கிறாள் என்கிற நினைவே அவனுக்குச் சந்தோசத்தைக் கொடுக்க, அவனும் அவளுடன் எதுவும் பேசவில்லை... மௌனமாகக் காரை ஓட்டினான்...

மருத்துவமனை வந்ததும் அதே போல் அவன் கார் கதவை திறந்து விட்டான்... அவள் இறங்கியதும் அவனும் அவளுடன் இணைந்து நடந்தான்...

"எந்த டாக்டரைப் பார்க்கணும்...?"

"வதினயை பார்க்கணும்..." அவள் கூறியதும் அவன் புரிந்து கொண்டான்...

"அக்கா ரூமை நான் காட்டுகிறேன்... நீ வா..."

"அவங்க... பாவா வரட்டுமே..." என்றாள் அவள் தயக்கத்துடன்...

"ஓகே, நோ ப்ராப்ளம்..." என்று அவன் கூற... அவள் கணவனுக்கு அழைத்தாள்...

"இதோ வந்துட்டேன் பேபி... இங்கே தான் இருக்கிறேன்..." மறுபக்கம் இந்திரஜித் பதிலளிக்க... அவள் அழைப்பைத் துண்டித்தாள்...

"நாம உள்ளே போய் வெய்ட் பண்ணலாமா...?" என்று பிரசன்னா அவளிடம் கேட்க...

"பாவா வந்துட்டாங்களாம்..." அவள் கூறும் போதே இந்திரஜித் வந்துவிட்டான்... வேகநடையுடன் வந்தவனைக் கண்டு அவளது முகம் மலர்ந்தது...

"அதோ பாவா..." என்று அவள் சந்தோசமாய்க் கூற... அவளது சந்தோசத்தைத் தாயின் பரிவுடன் பார்த்திருந்தான் பிரசன்னா...

அவர்கள் இருவரையும் சேர்ந்து கண்ட இந்திரஜித்தின் விழிகள் யோசனையாய் இடுங்கியது... ஆனால் இப்போது அவனால் இருவரையும் தவறாக நினைக்க முடியவில்லை... மனைவியைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... அது போல் பிரசன்னாவும் அவர்களது திருமணம் தெரிந்ததும் நாகரீகமாக ஒதுங்கிக் கொண்டான்...

இந்திரஜித் அருகில் வர, வர பிரசன்னாவின் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போனது... அது இந்திரஜித்தினுள் குழப்பத்தை விளைவித்தது... மிக அருகில் வந்ததும் தான் அவன் பிரசன்னாவைக் கூர்ந்து கவனித்தான்... பிரசன்னாவின் பார்வை தன்னைத் தாண்டி பின்னால் சென்றதைக் கண்டு இந்திரஜித் யோசனையாய்த் திரும்பி பார்த்த போது அங்கு ஒரு இளம்பெண் ஒருத்தி வந்து கொண்டிருப்பதைக் கண்டான்...

'இவளைப் பார்த்து இவன் ஏன் இவ்வளவு ஜெர்க் ஆகிறான்...?' அவனது மூளை வேகமாய்ச் சிந்திக்க ஆரம்பித்தது...

"வா இந்தர்... அக்கா வெய்ட் பண்ணிட்டு இருப்பாங்க..."

பிரசன்னாவின் பேச்சு இந்திரஜித்திடம் இருந்தாலும் அவனது பார்வை அந்தப் பெண்ணிடமே இருந்தது...

இந்திரஜித்திற்கு எதுவோ ஒன்று மெல்லப் புரிவது போல்... அவன் சுவாரசியமாக இருவரையும் கவனித்துப் பார்த்தான்... இடையில் பேச முயற்சித்த மனைவியவளை வாயில் விரல் வைத்து அடக்கி விட்டான்... சம்யுக்தா குழப்பத்துடன் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தாள்...

"ஹாய் பிரசன்னா..." யமுனா அவனை இயல்பாக அழைக்கவும் தான் பிரசன்னா நிம்மதி பெருமூச்சு விட்டான்...

சம்யுக்தாவுடன் தான் நிற்பதைக் கண்டு எங்கே அவள் தன்னைத் தவறாக நினைத்து விடுவாளோ என்றெண்ணி தான் அவன் மனதிற்குள் பயந்து கொண்டிருந்தது... ஆனால் அவனது பயம் தேவையில்லாதது என்பது போலிருந்தது அவளது நடவடிக்கை...

"ஹாய்..." என்று புன்னகையுடன் பதிலளித்த அவனைக் கண்டு அவளுக்கு மயக்கமே வரும் போலிருந்தது...

"அதிசயம்... ஆனால் உண்மை..." என்று அவள் அவனைக் கேலி செய்து சிரிக்க...

"என்ன நக்கலா...?" சற்று கோபத்துடன் கேட்ட பிரசன்னாவைக் கண்டு மீண்டும் சிரித்த யமுனா,

"இது தான் என்னோட பிரசன்னாவுக்கு அழகு... நீங்க திடீர்னு என்னைப் பார்த்து சிரிச்சதும் என்னால் நம்ப முடியலை... இப்படி எல்லாம் அதிர்ச்சி கொடுத்தால் என் சின்ன இதயம் தாங்காது மாமோய்..." என்று கிண்டலடித்தவளைக் கண்டு முறைத்தவன்,

"உனக்கு ட்யூட்டி இல்லையா...?" என்று கேட்க...

"எஸ், இருக்கு இருக்கு... அதை விட முக்கியம் என் மாமா நீங்க தான்..." என்று கண்சிமிட்டி விட்டு அவள் செல்ல... அவளைக் கண்டு அவன் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்... பின் இந்திரஜித், சம்யுக்தா இருவரையும் பார்த்து,

"அவள் கொஞ்சம் அரை லூசு... தப்பா எடுத்துக்காதீங்க..." என்க...

"லூசுக்கு எல்லாமா வேலை போட்டுக் கொடுத்திருக்கார் உங்க முதலாளி...?" நக்கலாய் கேட்டபடி இந்திரஜித் மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனை நோக்கி நடந்தான்...

"அப்படி எல்லாம் இல்லை இந்தர்... அவள் ஒரு டாக்டர்..."

"நீ தான் அவளை லூசுன்னு சொன்னதா எனக்கு ஞாபகம்..."

"அது வந்து..."

"ஓ, உனக்கு மட்டும் அவள் லூசுன்னு சொல்லு..." என்று கிண்டலாய் அவன் உரைக்க...

"பாவா, பேசாம வர மாட்டீங்களா...?" என்று சம்யுக்தா கணவனிடம் முணுமுணுத்தாள்... பிரசன்னாவின் திணறலே அவனுடைய மனதினை எடுத்துச் சொல்லியது... அதைப் புரிந்து கொண்ட சம்யுக்தா கணவனைக் கடிந்தாள்...

"இனி நான் பேச மாட்டேன் பேபி..." என்றவன் அவள் முன் கைக் கட்டி வாய்ப் பொத்தி பணிவுடன் நிற்க... அதைக் கண்டும் அவள் அவனை முறைத்தாள்... இருவரையும் கண்டு பிரசன்னாவின் உதடுகளில் சிரிப்பு வந்தமர்ந்தது... இருவரையும் இப்படிச் சந்தோசமாய்ப் பார்ப்பதற்குக் கவிதை போல் அத்தனை அழகாக இருந்தது...

ஜெகதீஸ்வரி இருக்கும் அறைக்கு அவர்களை அழைத்து வந்த பிரசன்னா அங்கிருந்த செவிலிப்பெண்ணிடம் விசாரித்து விட்டு, "அக்கா ஃப்ரீயா தான் இருக்காங்க... நீங்க போங்க..." என்று அவர்களை உள்ளே செல்லுமாறு பணித்தான்...

முதலில் சம்யுக்தா உள்ளே சென்றுவிட இந்திரஜித் மட்டும் தேங்கி நின்றான்... பிரசன்னா அவனைப் புரியாது

பார்க்க... சட்டென்று இந்திரஜித் பிரசன்னாவை அணைத்துக் கொண்டான்... பிரசன்னாவின் கைகளும் அவனை அன்போடு தழுவி கொண்டது... நொடியில் அணைத்து விலகிய இந்திரஜித்,

"ரொம்பத் தேங்க்ஸ் பிரசன்னா... எல்லாத்துக்கும்..." கடைசி வார்த்தையை அவன் அழுத்தி உச்சரிக்க...

"எனக்கு எதுக்குத் தேங்க்ஸ் எல்லாம்... நான் எப்பவுமே உன் வீட்டு வேலைக்காரன் தான்..."

பிரசன்னாவின் அன்பு, பணிவு இந்திரஜித்தின் மனதினை நெகிழ்த்துவதாய்... பிரசன்னாவைக் கண்டு பளிச்சென்று புன்னகை புரிந்தவன் அடுத்த நொடி உள்ளே சென்று மறைந்தான்... பிரசன்னா சிரித்தபடி அங்கிருந்து அகன்றான்...

சம்யுக்தாவிற்கு ஸ்கேன் பார்க்கும் போது இந்திரஜித் டென்சனோடு அவளது கையைப் பிடித்துக் கொண்டான்... அவளோ அவனைச் சாதாரணமாகப் பார்த்தபடி,

"மீரு எந்துக்குப் பயப்படுதுந்நாரு பாவா...?" (நீங்க ஏன் பயப்படுறீங்க...?)

"ஒண்ணுமில்லை..." என்றவன் அங்கிருந்த கணினி திரையைச் சுட்டிக்காட்டினான்...

"இதோ இது தான் குழந்தை..." ஜெகதீஸ்வரி கணினி திரையைக் காண்பித்தாள்...

வண்ண திரையில் அடர் மஞ்சள் நிறத்தில் சதை கோளமாய் இருந்த இரண்டரை மாத கருவை கண்டு அவர்கள் இருவரும் பரவசம் அடைந்தனர்... அவர்களது சிருங்கார சீண்டலில் விளைந்த செல்லச் சிணுங்கலாய் அவர்களது மகவின் இதயத் துடிப்பு ஓசை ரிதம் போல் ஒலித்தது... அவர்களுக்கு அந்த ஒலி சிம்பொனி இசையாய் காதில் இனிமையாய் நிறைந்தது... அவர்கள் இருவருக்கும் அத்தனை சந்தோசமாக இருந்தது... இந்தரின் கண்கள் ஆனந்தத்தில் கலங்கி விட்டது...

பரிசோதனை எல்லாம் முடிந்த பின் ஜெகதீஸ்வரி, "குழந்தை நார்மலா இருக்கு... பிபி எல்லாமே நார்மல்..." என்று கூற...

"யுகிம்மா அன்னைக்கு மயக்கம் போட்டு விழுந்தாளே..." என்று கவலையுடன் கேட்ட தம்பியைப் பார்த்த ஜெகதீஸ்வரி மனதிற்குள்,

'இவன் நல்லவன் தானோ...' என்று நினைத்துக் கொண்டாள்...

"அது பசி மயக்கம் இந்தர்... எதுவும் பயப்படுகிற மாதிரி இல்லை..." என்றவள் நாத்தனாருக்கு மருந்துகள் எழுதிக் கொடுத்தாள்...

"எல்லாமே சித்த மருந்துகள்... நம்மளோட தயாரிப்புகள் தான்... சோ சைட் எபெக்ட் கிடையாது..."

"ம், சரி வதின..." என்றபடி அதை வாங்கிக் கொண்டாள் சம்யுக்தா...

"அடுத்தச் செக்கப்..." என்று இழுத்த தம்பியை பார்த்து சிரித்தவள்,

"வீட்டில் ஒரு டாக்டரை வச்சிக்கிட்டு இது என்ன கேள்வி...? பெரும்பாலும் சம்யுவுக்குச் செக்கப் எல்லாம் வீட்டில் வச்சு பார்த்திருவேன்... ஸ்கேனிங்க்கு மட்டும் தான் இங்கே வர வேண்டியிருக்கும்..."

"சரி ஜிக்கி... நாங்க கிளம்பறோம்..." என்று கூறியபடி மனைவியுடன் நாற்காலியில் இருந்து எழுந்தான் இந்திரஜித்...

"சம்யுவை சந்தோசமா வச்சுக்கோ... அப்போ தான் உன் குழந்தையும் சந்தோசமா இருக்கும்..." ஜெகதீஸ்வரி சகோதரியாய்த் தம்பிக்கு அறிவுரை கூறினாள்...

"குழந்தைக்காக இல்லை... அவளுக்காக அவளை நான் சந்தோசமா வச்சிக்குவேன்..." என்ற கணவனைச் சம்யுக்தா

காதல் பொங்கப் பார்த்தாள் என்றால், ஜெகதீஸ்வரியோ நிம்மதியுடன் நோக்கினாள்...

மனைவியை அழைத்துக் கொண்டு காரில் வரும் போது இந்திரஜித் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டு வந்தான்... அவனது மகவின் இதய ஒலி இன்னமும் அவனது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது... ஒருவித பரவச நிலையில் அவன் இருந்தான்... சம்யுக்தா அவனிடம் நெருங்கி வந்து அமர்ந்து கொண்டாள்... அதில் நிகழ்காலத்திற்கு வந்தவன்,

"என்னடா...?" என்றபடி அவளை ஒரு கையால் அணைத்துக் கொண்டான்...

"ஒண்ணுமில்லை..." என்று கூறியவள் அவனது தோள்வளைவில் முகம் புதைத்துக் கண்களை மூடிக் கொண்டாள்...

கண்ணுக்குள் காணும் இருள் போல் எதிர்காலம் அவளை மருட்டியது... அவனோ சந்தோசத்துடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்...

********************

சர்வேஷை உறங்க வைத்து விட்டு அவன் அருகில் அமர்ந்து விழிகளை மூடிக் கட்டிலில் சாய்ந்து கொண்டாள் சாத்விகா... மூடிய விழிகளுக்குள் ப்ரியாவின் வேதனை முகமே வந்து போனது... அவள் கூறிய வார்த்தைகள் இன்னமும் அவளது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது...

"அவன் என்னை நல்லா ஏமாத்திட்டான்... நம்ப வச்சு கழுத்தறுத்துட்டான் ராஸ்கல்... ஒரு குழந்தையைக் கொடுத்துட்டு ஓடிப் போன கோழை அவன்... அவனைப் பத்தி நீ என் கிட்ட எதுவும் கேட்காதே..." என்று கோபமாய்க் கத்தியவளை சமாதானப்படுத்தித் தான் அவள் மேலே பேச வேண்டி இருந்தது...

"மிடில் கிளாஸ் பேமிலி நாங்க... கல்யாணமாகாம குழந்தை சுமந்துக்கிட்டு இருந்தா எவ்வளவு கேவலம் தெரியுமா...? அந்த அவமானத்தை நான் அனுபவிச்சேன்... குழந்தையைக் கலைக்கலாம்ன்னா அதுக்கான நாள் தள்ளி போயிருச்சு... வேறுவழியில்லாம அந்தச் சனியனைச் சுமந்து பெத்துத் தொலைச்சேன்..."

"அக்கா, அந்தச் சின்னக் குழந்தை என்ன பாவம் பண்ணிச்சு...?"

"ஒரு கோழையான அப்பாவுக்குப் பிறந்தது தான் அது செய்த பாவம்... நான் மட்டும் தான் அதுக்குப் பொறுப்பா...? அவனுக்குப் பொறுப்பில்லையா...? அதை விட அந்தக் குழந்தையைப் பார்க்கும் போது எல்லாம் நான் ஏமாந்து போனது தான் எனக்கு ஞாபகம் வருது... படிப்பில் நான் தான் டாப்... ஆனால் வாழ்க்கையில்...? நான் சீரோ... என்னோட எதிர்கால வாழ்க்கையை நினைச்சு என் பெற்றோர் தான் குழந்தையை ஆசிரமத்தில் விட முடிவு செய்தாங்க... நானும் அதுக்கு மனதாரச் சம்மதிச்சேன்..."

"உங்களுக்குக் கஷ்டமா இல்லையா...?"

"இல்லை... கொஞ்சமும் இல்லை... அந்தக் குழந்தை ஒரு ஏமாத்துக்காரனோடது... அதைப் பார்க்க பார்க்க எனக்குக் கோபம் தான் வந்தது... அம்மாங்கிற சென்ட்டிமெண்ட் எல்லாம் எனக்கு வரலை... இதோ இந்த நொடி கூட நான் அந்தக் குழந்தையை நினைச்சு கொஞ்சமும் கவலைப்படலை... அவன் அப்பனைப் பழிவாங்க முடியலை... அதான் அவன் குழந்தையைப் பழிவாங்கி விட்டேன்... அந்தத் திருப்தி மட்டுமே எனக்கு இருக்கு... அத்தனை வெறுப்பு அவனது குழந்தை மீது..."

அதற்கு மேல் அவளிடம் வாதாட விரும்பாது சாத்விகா கிளம்பி வந்துவிட்டாள்... ஒரு பெண்ணின் மனதில் இத்தகைய குரூரம் இருக்கும் என்று அவள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை... தாய்மை என்பது எல்லாம் பொய் தானோ...? வெறும் வார்த்தை தானோ...???

அப்போது இரு கரம் அவளது நெற்றியை இதமாய்ப் பிடித்து விட்டது... கண்களைத் திறந்து பார்த்தவள் முன் சந்தோஷ் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான்... வேலை முடிந்து வந்து குளித்துப் புத்துணர்வோடு அவன் இருந்தான்... அவன் அறைக்குள் நுழைந்தது கூடத் தெரியாது அவள் தனக்குள் மூழ்கித் தன்னைத் தொலைத்திருக்கிறாள்...

"கல்யாணம் நல்லபடியா முடிஞ்சதா...?"

கணவனிடம் தோழி ஒருத்திக்குத் திருமணம் என்று பொய் கூறிவிட்டு தான் அவள் ப்ரியாவை சந்திக்கச் சென்றது... அதனால் அவள் ஆமென்று தலையை உருட்டினாள்...

"நீ கேட்ட விவரம் எல்லாம் உனக்குக் கிடைத்ததா...?" அதற்கும் தலையை உருட்டப் போனவள் சட்டென்று சுதாரித்துக் கொண்டு அவனைப் பயத்துடன் பார்த்தாள்...

"விவரம் கிடைச்சதான்னு கேட்டேன்..." என்று அழுத்தமாய்க் கேட்டான் சந்தோஷ்...

"இல்லை..." என்றாள் அவள் முணுமுணுப்பாய்...

"இனி என்ன செய்வதாய் உத்தேசம்...?" என்று அவன் கேட்டதற்கு அவள் மௌனமாய்த் தலையைக் குனிந்து கொண்டாள்... அவளது முகத்தை நிமிர்த்தியவன் அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியபடி,

"நீ என்னைச் சந்தேகப்படுறியா...?" என்று கேட்க...

"த்ச்சு... ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க அத்தான்...?"

"ஏன்னா, ப்ரியாவுக்குப் பிறந்த குழந்தை என் குழந்தை இல்லைன்னு இது போல் தான் டிஎன்ஏ டெஸ்ட் பண்ணி அவளிடம் நிரூபிச்சேன்... இப்போது உன்னிடம் நிரூபிச்சது போல்... ஆனா அவள் என்னை நம்பலை... பணத்தைக் கொடுத்து பொய்யாய் ரிப்போர்ட் ரெடி பண்ணிட்டதா சொல்லி என் கிட்ட கத்திச் சண்டை போட்டாள்..." என்று கூறியவனின் குரல் வேதனையில் கரகரத்து ஒலித்தது... பின் சட்டென்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றவன்,

"இப்போ நீ என்னை என்ன பண்ண போகிற அம்மு...?" என்று நிதானமாய்க் கேட்க...

கணவனது குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளது மனதினை அசைத்துப் பார்த்தது... அவள் அவனது விழிகளை உற்று நோக்கினாள்... ஆழ்ந்த அமைதியுடனும், நம்பிக்கையுடனும்  இருந்த அவனது கண்களில் கொஞ்சமே கொஞ்சம் தவிப்பு மெல்ல எட்டிப்பார்த்தது... அடுத்த நொடி அவள் தாவி அவனை அணைத்துக் கொண்டாள்...

"நான் உங்களை நம்பறேன் அத்தான்... நம்பறேன்..." அவளது நம்பிக்கையில் சந்தோஷ் சந்தோசமாய் உயிர்த்தெழுந்தான்...

"அம்மு, நான்..."

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்... கண்ணாவோட உண்மையான அப்பாவா நீங்க இல்லாது இருக்கலாம்... ஆனா இப்போ சட்டப்படி நீங்க தான் அவனோட அப்பா... நான் தான் அவனோட அம்மா... அதனால் இனி இது போன்ற அபத்தமான பேச்சு நம்மிடையே வேண்டாம்..." என்றவளை விழிகளில் நேசம் கசியப் பார்த்தவன்,

"அது உண்மை தான்... இனி நம்மிடையே பேச்சு அநாவசியம் தான்..." என்று கூறியவன் அடுத்த நொடி அவளது இதழைச் சிறை செய்தான்...

சிறிது நேரம் கழித்து மூச்சு வாங்க அவனிடம் இருந்து பிரிந்தவள் அவனது தோளில் செல்லமாய் அடி போட்டு, "கண்ணா இருக்கும் போது இது என்ன சேட்டை...?" என்று பொய்க் கோபம் கொள்ள...

"முதலில் இதுக்கு ஒரு வழி பண்ணணுமே..." என்றான் அவன் சீரியசான குரலில்...

"அத்தான்..." என்றாள் அவள் கலக்கமான குரலில்...

"மண்டு... எப்போ பார், கண்டபடி யோசிச்சிக்கிட்டு... மூணு, நாலு குழந்தை வச்சிக்கிறவன் எல்லாம் பொண்டாட்டியைத் தள்ளியா வச்சியிருக்கான்..." என்று அவன் அவளது தலையில் வலிக்காது கொட்டினான்... அதைக் கேட்டு அவளது முகம் மலர்ந்தது...

"ஹப்பாடி, ஒருவழியா பல்ப் எரிஞ்சதே..." என்று அவளைக் கேலி செய்தவன்,

"இப்போ நீ நிம்மதியாய் தூங்கு... இனிமேல் நீ தூங்க நான் அனுமதிக்க மாட்டேன்..." என்று கூறியபடி அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்தவன் மறுபக்கம் வந்து படுத்தான்...

கணவனது வார்த்தைகள் அவளுள் புது உணர்வுகளை அறிமுகப்படுத்த அவள் இனிமையான கனவுகளுடன் விழிகளை மூடிக் கொண்டாள்... மனைவியைப் பார்த்தபடி படுத்த சந்தோஷின் மனதிலும் சந்தோசச் சாரலே... அந்த மகிழ்வோடு அவன் சர்வேஷை அணைத்துக் கொண்டு படுத்தான்...

இருவரின் முகத்திலும் எல்லையில்லா நிம்மதி இழைந்தோடியது...

**************

அந்த ஐந்து நட்சத்திர விடுதியில் வெளிநாட்டுக்காரர்களைச் சந்தித்துப் பேசுவதற்காகச் சம்யுக்தா வந்திருந்தாள்... அவர்கள் உலகமெங்கும் நட்சத்திர விடுதி வைத்து நடத்துபவர்கள்... இப்போது இந்தியாவில் பெரும் நகரங்கள் அனைத்திலும் அவர்களது நட்சத்திர விடுதியின் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருந்தது... அதை அலங்கரிப்பதற்கான சிலைகள், டெரக்கோட்டா டைல்ஸ் செய்து தர வேண்டி அவர்கள் சம்யுக்தாவை அணுகினர்... ஏற்கெனவே அவளது கைவண்ணத்தைப் பார்த்து அவர்களுக்குப் பெரும் வியப்பு... அதனால் அவளிடம் நேரில் சந்தித்துப் பேச ஆசை கொண்டு அவளை அழைத்திருந்தனர்...

"நீ ரெஸ்ட் எடு பேபி... நான் இந்த மீட்டிங்கைப் பார்த்துக்கிறேன்..."

இந்த விசயத்தை அவள் கணவனிடம் கூறியதும் அவன் அப்படித் தான் கூறினான்... ஆனால் அவளுக்குத் தான் அவனது வேலைப்பளு தெரியுமே... அதனால் தானே செல்வதாய்க் கூறிவிட்டாள்...

"நீ கார் ஓட்ட வேண்டாம்... டிரைவரோடு போ..." என்று எல்லாம் அறிவுறுத்திக் கூறியவன் அவள் செல்லும் நட்சத்திர விடுதியின் பெயரைக் கேட்க மறந்து போனான்...

அதே விடுதிக்கு இந்திரஜித்தும் மாதுரிமாவுடன் 'தீம் பார்க்' சம்பந்தமாக வெளிநாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்திக்க வந்திருந்தான்... சந்திப்பு முடிந்து கிளம்பும் போது தான் அவன் தனது மனைவியைப் பார்த்தான்... அதே நேரம் அவளும் கணவனைப் பார்த்து விட்டாள்... அவள் சந்தோசத்துடன் அவனை நோக்கி வேக எட்டுக்கள் வைத்து முன்னேறினாள்...

இந்திரஜித்தோ மனதில் மூண்ட கலவரத்துடன் மனைவியவளைப் பார்த்திருந்தான்...

"பாவா, நீங்களும் இங்கே தான் இருக்கீங்களா...?" என்று முகம் மலர அவனிடம் கேட்டவள் அடுத்த நொடி கேள்வியாய் அவன் அருகில் நின்றவளைப் பார்த்தாள்... மாதுரிமா யாரென்று அவளுக்குத் தெரிந்த போதும் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை...

"இவங்க மிஸ். மாதுரிமா..." என்று மனைவிக்கு மாதுரிமாவை அறிமுகப்படுத்தி வைத்தவன், அடுத்து மனைவியை மாதுரிமாவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் முன் சம்யுக்தா முந்திக் கொண்டு தன்னைத் தானே அவளிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாள்...

"ஹாய், ஐயம் மிஸஸ். சம்யுக்தா இந்திரஜித்..." என்றாள் அழகான ஆங்கில உச்சரிப்பில், கம்பீரமான குரலில்...

அன்று மாதுரிமாவைக் கண்டு மயக்கம் போட்டு விழுந்த சாதாரணப் பெண் சம்யுக்தா இவளில்லை... இவள் தொழிலில் சாதித்து வரும் சாதனைப் பெண் சம்யுக்தா...!!!

தொடரும்...!!!

****************************

கலம்கரி வேலைப்பாடு செய்யப்பட்ட உயர்ரகப் பருத்தி புடவையில், அந்தப் புடவை நிறத்திற்கு ஏற்றவாறு தானே செய்த 'டெரக்கோட்டா ஜூவெல்ஸ்' அணிந்து, இடை தாண்டிய தலைமுடியை அப்படியே மயில் தோகை போல் விரித்து விட்டு அழகிய கோல மயிலாகச் சம்யுக்தா நின்றிருந்தாள்... அவளிடம் இத்தகைய கம்பீரத்தை மாதுரிமா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... பட்டிக்காட்டுப் பெண்ணவளிடத்தில் இத்தனை நாகரீகம் வந்தது எப்படி? என்று மாதுரிமா திகைத்துப் போய் அவளைப் பார்த்தாள்...

சம்யுக்தா கையை நீட்டி தன்னைச் சுய அறிமுகம் செய்திருந்தால் மாதுரிமா நிச்சயம் அந்தக் கையைப் பற்றிக் குலுக்காது ஒரு இகழ்ச்சியான புன்னகையோடு அவளை அலட்சியப்படுத்தி இருந்திருப்பாள்... ஆனால் சம்யுக்தாவோ அழகாய் இரு கரம் கூப்பித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதில் இவளுக்குச் சப்பென்று ஆகிவிட்டது... நாசுக்காய்த் தன்னைத் தவிர்த்த சம்யுக்தாவைக் கண்டு மாதுரிமாவுக்குக் கோபம் வந்தது... வேறுவழியின்றி அவளும் எரிச்சலுடன் பதிலுக்கு இரு கரம் கூப்பினாள்...

அதைச் சம்யுக்தாவின் விழிகள் கண்டு கொண்டது... வெளியில் காட்டிக் கொள்ளாது அவள் நிமிர்வாய் நின்றிருந்தாள்... இந்த இடத்தில் அவள் கோழையானால் அவளது கணவன் நகைப்புக்கு ஆளாகிப் போவான் என்று அவள் தனது உணர்வுகளை மறைத்துக் கொண்டு மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொண்டாள்...

"எஸ்... ஷி இஸ் மை வொய்ப்... ஷி இஸ் மைன்..."

மனைவியின் நிமிர்வில் இந்திரஜித் தைரியம் வரப் பெற்றவனாய் அவள் தோள் மீது கைப் போட்டு அணைத்துக் கொண்டு பெருமையாகத் தன்னவளை

மாதுரிமாவிடம் அறிமுகப்படுத்தி வைத்தவனின் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது...

"ஓ... அப்படியா மிஸ்டர். இந்திரஜித்..." என்று கூறியவளைக் கண்டு சம்யுக்தாவின் விழிகள் இடுங்கியது... எதையோ உணர்ந்தார் போன்று அவளது முகம் யோசனையில் ஆழ்ந்தது...

"அப்படித்தான்..." என்று அழுத்தமாய் இந்திரஜித் கூறிய போது அவனது அலைப்பேசி அழைத்தது...

"எக்ஸ்க்யூஸ் மி, ஒன் மினிட்..." என்று அவன் தள்ளி நகர்ந்து செல்ல... இரு பெண்கள் மட்டும் தனித்து நின்றனர்...

"நான் அவ்வளவு சொல்லியும் நீ இந்தளவுக்குத் தைரியமா இருக்கேன்னா உனக்கு எவ்வளவு திமிர் இருக்கணும்..." என்று பல்லைக் கடித்த மாதுரிமாவைத் தைரியமாய் நிமிர்ந்து பார்த்தவள்,

"பாவா என்னோட கணவர்... என்னோட கணவரை நீங்க எப்படி உங்க காதலனா மாத்த போறீங்க...? அது உங்களால் முடியுமா...?" என்று கேட்டவளின் வார்த்தையில் அப்படி ஒரு சவால் இருந்தது...

“இன்று இவ்வளவு பேசும் நீ அன்று ஏன் என்னைப் பார்த்து மயக்கம் போட்டு விழுந்த...?” மாதுரிமா எள்ளலாய் அவளைப் பார்த்தாள்...

“என்னோட பலவீனம் என் பாவா...” என்ற சம்யுக்தாவைக் கண்டு மாதுரிமாவின் விழிகள் பளபளத்தது... அதைக் கண்டு கொண்ட சம்யுக்தா,

“என் பலமும் என் பாவா தான்...” என்றாள் சிறிது திமிராய், தெனாவெட்டாய்...

"ஏய் பட்டிக்காடு, உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் என்னையவே எதிர்த்து பேசுவியா... உன் புருசன் ஒரு காலத்தில் என்னுடைய காதலன்... நானும், அவனும் அத்தனை நெருக்கமாய் இருந்திருக்கோம்... அவனைப்

பத்தி எனக்கு எல்லாம் தெரியும்... ஆனால் உனக்கு அவனைப் பத்தி என்ன தெரியும்...?"

சம்யுக்தாவின் மனதினைக் காயப்படுத்தும் விதமாக மாதுரிமா வார்த்தையால் அவளைக் குதறினாள்... அவளது வார்த்தைகள் சம்யுக்தாவின் மனதினைக் குறி தவறாது தாக்கி வலிக்கச் செய்தது என்னவோ உண்மை தான்... ஆனாலும் வலியைத் தாங்கிக் கொண்டு தன்னவனுக்காகத் தலை நிமிர்ந்து நின்று அவளைப் பார்த்தவள்,

"உங்களுடைய வார்த்தைகளை நீங்க கவனித்துப் பார்த்தாலே தெரியும் மிஸ். மாதுரிமா... பாவா விசயத்தில் உங்களுக்கான இடம் என்னன்னு..." என்று கேலி போல் கூறியவளைக் கண்டு மாதுரிமா எரிச்சலுடன் பார்த்தாள்...

"உங்க வார்த்தைகள் எல்லாமே இறந்த காலம் தான்... அது போல் தான் உங்க காதலும்... இப்போ நிகழ்காலம் இந்தச் சம்யுக்தா மட்டுமே... சம்யுக்தா மட்டுமே நிதர்சனம்... என்ன புரிஞ்சதுங்களா மிஸ். மாதுரிமா...?" இடக்காய் ஒலித்தது சம்யுக்தாவின் குரல்...

"என்ன என் கிட்டேயே சவால் விடுறியா...? உன் புருசனை என் காதலனாய் மாத்தி காட்டலை என் பெயர் மாதுரிமா இல்லை..." என்று கோபத்தில் கொந்தளித்தவளைக் கண்டு அலட்சியமாய்ப் பார்த்த சம்யுக்தா,

"இந்தப் பெயர் உங்களுக்கு ஒரிஜினல் தான்ங்களா...?" என்று கேட்டு சந்தேகத்துடன் இழுக்க...

"ஏன் இப்படிக் கேட்கிற...?" மாதுரிமா படபடத்தாள்...

"இல்லை... நீங்க பாவாவை காதலிச்சேன்னு சொல்றீங்க... ஆனா பாவாவை பார்த்து மிஸ்டர். இந்திரஜித்ன்னு கூப்பிடுறீங்க... அதைப் பார்க்கும் போது உங்க இரண்டு பேருக்கும் இடையில் அப்படி ஒண்ணும் அந்நியோன்யம் இருப்பதாய் எனக்குத் தெரியலையே..." என்று உதட்டைப் பிதுக்கினாள் சம்யுக்தா...

"அது நீ இருப்பதால்..." என்று விட்டுக் கொடுக்காது மாதுரிமா பேச...

"அப்படியா...?" என்று கூர்ந்து மாதுரிமாவைப் பார்த்த சம்யுக்தா,

"உங்களை அடையாளம் காட்டிக்கக் கூடாதுன்னு நினைச்ச மாதிரியில்ல இருந்துச்சு... ஒருவேளை அது தான் உண்மையோ...?"

அவளது வார்த்தைகள் கேட்டு மாதுரிமாவுக்குப் பயத்தில் வியர்வை துளிர்க்கத் துவங்கியது...

"நீங்க என்ன பொய், பித்தலாட்டம் பண்ணினீங்களோ...? யார் கண்டது...? அதனால் தான் பாவா நீங்க வேண்டாம்ன்னு விலகி வந்துட்டாங்க... இனி அவங்களா உங்க கிட்ட வருவாங்கன்னு நீங்க கனவுல கூட நினைக்காதீங்க... அது இந்தச் சம்யுக்தா இருக்கும் வரை நடக்கவும் நடக்காது..." என்றாள் உறுதியான குரலில்...

இதற்கு முன் கணவன் அடைந்த துன்பத்தை எண்ணிப் பார்த்தவளின் முகம் இறுகிப் போனது... அதே போல் அவளது வார்த்தைகளும் சூடாய் வெளிவந்தது...

அதற்குள் இந்திரஜித் அங்கு வந்துவிட்டான்... கணவனைக் கண்டதும் சம்யுக்தா இதழ்களில் புன்னகை வந்து ஒட்டிக் கொண்டது... அவனைக் கண்டால் தான் அவளுக்கு அகமும் புறமும் மலர்ந்து போகுமே...

"சாரி பேபி... போகலாமா...?" என்று மனைவியிடம் கேட்டவன் மாதுரிமாவிடம்,

"பை..." என்று புன்னகை முகத்துடன் விடைப்பெற்றான்...

வேண்டுமென்றே தன்னைத் தவிர்க்கும் அவனைக் கண்டு மாதுரிமாவுக்குக் கோபம் கோபமாய் வந்தது...

"நம்ம டிஸ்கஸன்ஸ் இன்னமும் முடியலை மிஸ்டர். இந்தர்..." என்று அழுத்திக் கூறியவளை அதை விட அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"நம்ம கம்பெனி டிஸ்கஸன்ஸ் எப்பவோ முடிஞ்சிருச்சு... இப்போ நான் யார் கிட்ட பேசிட்டு இருந்தேன்னு நினைக்கிறீங்க... உங்க அண்ணா விவேக் கிட்ட... நான் விவேக் கிட்டே பேசி எல்லாத்தையும் முடிச்சிட்டேன்..." கடைசி வார்த்தையை வேண்டுமென்றே அழுத்திச் சொன்னானோ என்று மாதுரிமாவுக்குச் சந்தேகமாக இருந்தது...

"நீ வா பேபி..." மனைவியின் கையைப் பிடித்து அவன் அழைத்துச் செல்ல, அவர்களை ஆத்திரத்துடன் பார்த்தவாறு அவர்களின் பின்னே வந்தாள் மாதுரிமா...

விடுதி விட்டு வெளியில் வந்த இந்திரஜித் மனைவியிடம், "டிரைவரை வரச் சொல்..." என்க...

"நானே தான் வந்தேன்..." என்றாள் அவள் புன்னகையுடன்...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது... தனியா வரக் கூடாதுன்னு..."

"நான் என்ன தனியாவா இருக்கேன்... கையில் ஃபோன் இருக்கு... ஃபோனிலும், காரிலும் ஜிபிஆர்எஸ் இருக்கு... இது எல்லாத்தையும் விட என் பாவா எப்பவும் என் கூடவே இருக்காங்களே..."

"நான் உன் கூடவா...? எங்கே...? எப்படி...?"

மனைவியின் அறிவுக்கூர்மையை எண்ணி வியந்தவனின் வார்த்தைகள் குறும்பாய் வெளிவந்தது...

"இங்கே..." என்று அவள் தனது இதயத்தைச் சுட்டிக்காட்ட...

"அப்படியா...? எங்கே உன் பாவாவை நானும் பார்க்கிறேன்..." என்று விசமமாய்க் கேட்டவனின் கை விசமம் செய்ய எண்ணி அவள் புறமாய் நீண்டது...

"என்னதிது...? பொது இடத்தில் இப்படித் தான் பண்ணுவீங்களா...? போங்க பாவா..." என்று அவள் சிணுங்கலுடன் அவனைத் தடுத்தாள்... அதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

இருவரும் பேசிக் கொண்டே கார் நிற்கும் இடத்திற்கு வந்து விட்டனர்... மனைவி ஏற கார் கதவை திறந்து விட்டவன் அவள் ஏறியமர்ந்ததும் அவளது நெற்றியில் இதழ் பதித்து,

"பார்த்து, கவனம்..." என்று கூற... அதில் மனம் நெகிழ்ந்தவள்,

"ம்... ம்... சரி பாவா..." என்று புன்னகையுடன் காரை கிளப்பிக் கொண்டு சென்றவளைச் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்...

மனைவியிடம் தான் எத்தனை மாற்றங்கள்... அத்தனையும் அவன் விரும்பிய விதத்தில்... அதிலும் மாதுரிமாவிடம் அவள் நிமிர்ந்து நின்றது அவனுக்குப் பெருத்தச் சந்தோசமாக இருந்தது... அதே சந்தோசத்துடன் திரும்பியவன் விழி வட்டத்தில் மாதுரிமா சிக்கினாள்...

"என்ன சொல்கிறாள் என் மனைவி...?" என்று கேட்டான் அவன், நக்கல் குரலில்...

அதற்கு மாதுரிமாவிடம் பதில் இல்லை... அதனால் அவள் அமைதி காக்க... அவன் அவள் அருகில் வந்து,

"உனக்கும் எனக்குமான கடந்த கால உறவு அவளுக்குத் தெரியும்... எனக்கும் என் மனைவிக்கும் இடையில் எந்த ஒளிவு மறைவும் கிடையாது..." என்றான் அவன் கர்வமாக... அவனது இந்தக் கர்வம் மனைவியின் காதலால் வந்தது என்றால் மிகையில்லை...

"உன்னைப் பற்றிய உண்மை தெரிந்தால் உனக்கு என்ன அம்பானி வீட்டுப் பெண்ணா கிடைப்பாள்...? இவளை மாதிரியான பட்டிகாடு தான் கிடைப்பாள்..."

தன்னைக் கோபப்படுத்த வேண்டி வார்த்தைகளை அள்ளி வீசும் மாதுரிமாவை சாதாரணமாகப் பார்த்தவன், "உண்மையை ஒத்து கொண்டதற்கு நன்றி..." என்றான் அதே சாதாரணக் குரலில்...

அவள் 'ஙே' என்று விழிக்க...

"நீ தான் நான் காதலித்த மதுமிதா என்பது இப்போது எனக்கு நிரூபணமாகி விட்டது... ரொம்பச் சந்தோசம்..."

கடைசி வார்த்தையை அவன் சொல்லும் போது அவனது விழிகளில் கனல் பறந்தது... மனதில் விடாது தீச்சுவாலை பற்றி எரிந்தது... ஐந்து வருடங்களாக அவன் மனதில் பற்றயெரியும் நெருப்பு... அன்று நெருப்பில் பொசுங்கிய உடலைக் கண்டு ஆங்காரம் கொண்டு ஆடிய தீச்சுவாலை அது... அவ்வளவு எளிதில் அது அடங்காது, அணையாது...

மாதுரிமா என்ன செய்வது என்று தெரியாது பேச்சற்று நின்றிருந்தாள்...

"சந்தோசத்தைப் பார்ட்டி வைத்து கொண்டாடும் நேரமிது... பார்ட்டிக்கான நாள் பார்த்து விட்டு சொல்கிறேன்..." என்று இருபொருள்படக் கூறியவன் நமட்டு சிரிப்புடன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

மாதுரிமாவின் கை தானாக அவளது அலைப்பேசியை எடுத்து அதில் 'அம்மா' என்று குறித்து வைக்கப்பட்டிருந்த எண்ணை அழைத்தது...

******************

வெளியூர் சென்றிருந்த சூர்யா இன்று தான் சென்னை திரும்புகிறான்... அதனால் ஜெகதீஸ்வரி மருத்துவமனைக்கு இரண்டு மணி நேரம் விடுப்பு எடுத்து விட்டு கணவனுக்காகக் காத்திருந்தாள்... அவனுக்காக அவள் ஒரு சந்தோசமான விசயத்துடன் காத்திருந்தாள்... இத்தனை நாளாய் மனதில் சுணக்கத்துடன் இருந்த கணவனது மனநிலையை அவள் காண்பிக்கப் போகும் விசயம் முற்றிலும் மகிழ்ச்சியாய் மாற்றி விடும் என்று அவள் நம்பிக்கையுடன் பரபரப்பாய் அவனுக்காகக் காத்திருந்தாள்...

சூர்யா வந்ததும் விழிகளால் அவனைத் தொடர்ந்தவள் அவன் மகனுடன் கொஞ்சி, விளையாடி, உணவு உண்டு ரிலாக்சான பின்னரே அவள் கணவனின் முன் வந்து

நின்றாள்... அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்... ஒன்றும் பேசாது அவள் தனது கையிலிருந்த கோப்பை அவனிடம் நீட்டினாள்... புரியாது மனைவியைப் பார்த்த சூர்யா அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தான்... அதிலிருந்ததைக் கண்டு அவனது கண்கள் கலங்கிப் போனது...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு ஜெகா..." வெகுநாட்கள் கழித்துத் தன்னிடம் பேசிய கணவனைக் கண்டு அவளது விழிகளில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது...

அவளது கண்ணீர் கணவனவனைப் பதறச் செய்தது...

"ஹேய் ஜெகா..." என்று அவளது கைப்பற்றி அருகில் அமர வைத்து அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டு அவளது விழிகளைத் துடைத்து விட்டான்...

பிறந்ததில் இருந்து ஜெகதீஸ்வரி எதற்காகவும் அழுதது இல்லை... அதற்குச் சித்தார்த் விடவும் இல்லை... அதை உணர்ந்தவனாய் திருமணத்திற்குப் பின் சூர்யாவும் மனைவியவளின் மனம் புரிந்து நடந்து கொண்டான்... முதன்முறையாகத் தங்கை விசயத்தில் தான் அவனுக்கும், மனைவிக்கும் மனஸ்தாபம் வந்தது... அதுவும் அவளது தம்பியை வைத்துத் தான்.. அவளைக் கொண்டல்ல...

"இந்தர் பண்ணிய தப்புக்கு நான் என்ன பாவம் பண்ணினேன்... நீங்களும் நானும் நல்லா பேசி எத்தனை மாதங்கள் ஆகிருச்சு தெரியுமா...?" தேம்பலுடன் கூறியவளை அணைத்து இருந்தவனின் அணைப்பு இன்னமும் இறுகியது...

அவள் கூறுவதும் உண்மை தான்... இந்திரஜித் செய்த தவறுக்கு இவள் என்ன செய்ய முடியும்...? ஆனாலும் தங்கையின் வேதனை முன் அவனுக்கு எல்லாமே மறந்து போனது... நன்றாகப் பார்த்துக் கொள்வோம் என்று எண்ணித் தானே அவளைத் தனது தங்கையாகத் தத்தெடுத்தது... அதிலிருந்து அவன் தவறிய போது அவனையும் அறியாது ஒரு குற்றவுணர்வு... அதில்

மனைவியவளை மிகவும் படுத்தி எடுத்து விட்டான் போலும்... அவளிடம் பேச வாயெடுக்கும் போது அறை கதவு தட்டப்பட்டது...

அதில் விலகி அமர்ந்த ஜெகதீஸ்வரி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்... சம்யுக்தா தான் அங்கு நின்றிருந்தாள்... சூர்யாவைக் கண்டதும் சந்தோசமாய் உள்ளே நுழைந்தாள்...

"அண்ணய்யா..." என்று அவன் அருகில் வந்தவள் அவன் கையிலிருந்த காகிதங்களைப் பார்த்ததும் புரிந்து கொண்டாள்... அது அவளது குழந்தையின் 'ஸ்கேனிங்' அறிக்கை என்று...

"அண்ணய்யா..." கண்ணீர் மல்க அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள்,

"நன்னு ஷேமிச்சண்டி..." (என்னை மன்னியுங்கள்) என்று அவனது கையைப் பிடித்துக் கொண்டாள்...

"இப்போ நீ சந்தோசமா இருக்கணும் சம்யு... இது மாதிரி எல்லாம் பேசக் கூடாதுடா... முதலில் எழுந்திருச்சு உட்காரு... உன் குழந்தையைப் பார்த்து எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு... சீக்கிரமா என் மருமகளைப் பெத்துக் கொடு..." என்று அவன் சந்தோசமாய்க் கூறிச் சிரித்தான்...

அவனது சந்தோசம் கண்டு சம்யுக்தா உடைந்து போனாள்... இதுவரை சகோதரனிடம் கூறாத ரகசியத்தை இப்போது அவள் கூறினாள்...

"நீங்க எனக்கு எவ்வளவோ நல்லது பண்ணயிருக்கீங்க... ஒரு வயசு குழந்தை முதல் எண்பது வயசு பாட்டி வரை வன்கொடுமைக்கு ஆளாவதற்கு ஒரே காரணம் அவங்க பெண்ணா பிறந்தது தான்... அப்படிப்பட்ட மோசமான உலகில் என்னைக் காத்து உங்க தங்கையா தத்தெடுத்து நீங்க காட்டிய பாசத்துக்கு நான் செஞ்சது துரோகம் மட்டுமே அண்ணய்யா... ஆனா எனக்கு வேறுவழி தெரியலை..." என்றவள் அண்ணனை இறைஞ்சுதலுடன் பார்த்து,

"என் கழுத்தில் தாலி கட்டிய பாவா 'நீ என் கூட வா'ன்னு கூப்பிட்டா நான் என்ன ஏதுன்னு கேட்காம அவர் பின்னே தானே போக முடியும்... ராமன் இருக்கும் இடம் தானே சீதைக்கு அயோத்தி... என் பாவா இருக்கும் இடம் தானே எனக்கு அயோத்தி..."

"அதற்காக உன்னைத் தன் மனைவின்னு சொல்ல யோசித்தவனை நம்பி நீ எப்படிப் போகலாம் சம்யு...?" ஆதங்கத்துடன் வந்தது சூர்யாவின் வார்த்தைகள்...

"அண்ணய்யா, பாவா நல்லவங்க தான்... அவங்க மனசில் ஏதோ ஒரு வேதனை இருக்கு... அதனால் கூட அப்படி நடந்து இருக்கலாம் இல்லையா...? ஆனாலும் அவர் என்னைக் கைவிட நினைக்கலையே... அவர் நினைச்சிருந்தா என்னை யாருன்னே தெரியாதுன்னு மறுத்து இருக்கலாம்... இல்லை என்னைக் கண்டு கொள்ளாது இருந்திருக்கலாம்... வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணியிருக்கலாம்... இது எதையும் அவர் செய்யலையே... அப்படியே அவர் இதைச் செய்திருந்தாலும் நான் தடுத்திருக்க மாட்டேன்... ஏன்னா அவராக எங்க உறவை வெளியில் சொல்லாது நானும் சொல்லியிருக்க மாட்டேன்... எங்க உறவும் யாருக்கும் தெரியாமல் என்னோடு மறைந்து போயிருக்கும்... ஆனா இது எதையும் செய்யாமல் என்னை எனக்காகக் கூட்டிட்டு போனாரா? இல்லையா...? இதை விட வேறு என்ன வேணும் ஒரு பெண்ணுக்கு...?" கணவனது காதலை நினைத்து அவளது முகம் அழகாய் மிளிர்ந்தது...

"அதுக்காக நான் உங்களை மதிக்காமப் போனது தப்பு தான்... நான் உங்க மனசை ரொம்ப நோகடிச்சிட்டேன்... ஆனா... ஆனா எனக்கு வேறுவழி தெரியலை அண்ணய்யா..." மீண்டும் கண்கள் கலங்க கூறியவளைக் கண்டு,

"விடும்மா சம்யு... இப்போ தான் எல்லாம் சரியாகிருச்சே... ஆனாலும் உன் புருசன் இப்படிப் பொண்டாட்டிதாசனாக இருக்கக் கூடாது... எப்ப பாரு உன் புடவை முந்தானையைப் பிடிச்சிட்டு சுத்துறானே...? அதைப் பார்த்து உன் வதின கூட

என் கிட்ட சண்டைக்கு வருகிறாள்... இந்தர் மாதிரி நீங்க என் பின்னாடி சுத்துறது இல்லைன்னு..." என்று சூர்யா கேலி செய்து சிரிக்க...

"போங்க அண்ணய்யா..." என்று சம்யுக்தா அழகாய் வெட்கப்பட...

அதற்குள் ஆதித்யா தூங்கி எழுந்தவன் அத்தையைக் கண்டதும் உற்சாகமாய், "த்தை..." என்று அவளை நோக்கி நடை பயின்று வர...

"ஆதி பங்காரம்..." என்று அவனை ஆசையுடன் தூக்கி உச்சி முகர்ந்தவள்,

"நான் ஆதியைப் பார்த்துக்கிறேன் வதின..." என்றுரைத்து விட்டு அவள் அறையை விட்டுச் செல்ல...

தங்கை செல்வதை மலர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த சூர்யாவின் முகத்தில் மெல்ல வருத்தத்தின் சாயல் படிந்தது...

"இதுக்குத் தான் நான் அப்போதே சொன்னேன் ஜெகா... நம் திருமணம் சரி வராதுன்னு..."

"சூர்யா..." அவனது வார்த்தைகளை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை...

"உங்களது உயரம் வேறு... எங்களது உயரம் வேறு... அநாதையான நாங்கள் என்றுமே உங்க பக்கத்தில் கூட நெருங்க முடியாது... இதைத் தான் நான் அன்று சொன்னேன்... இப்போது இதன் விளைவுகளைப் பார்த்த தானே... இந்த வயசில் சம்யுவுக்கு இத்தகைய வேதனை தேவை தானா...? அவளை நான் தத்து எடுக்காது இருந்திருந்தால் நிம்மதியா இருந்திருப்பாளோ என்று எனக்குத் தோன்றுகிறது..."

கணவனது வேதனை கண்டு அவள் தனது வேதனையைப் புறம் தள்ளியவளாய் அவனை ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள்... அவன் கூறுவதும் சரி தானே... அவள் மட்டும்

அவன் வாழ்க்கையில் வாராது இருந்திருந்தால் இந்நேரம் சம்யுக்தா வாழ்க்கை நன்றாக இருந்திருக்குமே... எல்லாம் அவளால் தானே...

"சாரி சூர்யா... தப்பு தான்... நான் என் காதலை மட்டுமே யோசித்தேன்... சம்யுவைப் பத்தி யோசிக்கலை... அது தான் நான் பண்ணிய பெரிய தப்பு... நான் உங்க வாழ்க்கையில் வந்திருக்கக் கூடாது... பெரிய பாவம் பண்ணிட்டேன்..." என்றவளின் விழிகளில் இருந்து சொட்டிய கண்ணீர் அவனது தலை மீது விழுந்தது... அதை உணர்ந்தவனாய் அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்...

மனைவியின் கண்ணீர் அவன் மனதினைப் பிசைய, "நீ பாவம் பண்ணலை ஜெகா... நீ என் வாழ்க்கையில் வரமாய் வந்த தேவதை..." என்றான் உண்மையாய் உணர்ந்து...

"உண்மையாவா...?" கணவனது வார்த்தையில் அவளது முகம் மலர்ந்து போனது...

பொன்னையும், பொருளையும் விரும்பும் இவ்வுலகில் தன்னை மட்டும் விரும்பும் மனைவியைக் கண்டு கணவனாய் சூர்யாவின் மனம் பெருமிதம் கொண்டது... அன்று தான் ஜெகதீஸ்வரியை மணந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்த போது மலர்ந்திருந்த அவளது முகத்தினை ஒத்திருந்தது இப்போது இருந்த அவளது மதி முகம்... அன்றும், இன்றும், என்றும் அவளது விருப்பம் அவன் மட்டுமே...

தகப்பன் சம்பாதித்து வைத்திருக்கும் இத்தனை சொத்துக்களை இதுவரை அவள் திரும்பி பார்த்தது இல்லை... அவள் திரும்பி பார்த்த ஒரே விசயம் அவன் மட்டுமே... அவள் விரும்பிய ஒன்று உலகில் உண்டு என்றால் அது அவன் மட்டுமே...

"இந்த உண்மையை நான் பலமுறை உன்னிடம் நிரூபித்து இருக்கிறேன்... திரும்பவும் நிரூபிக்கவா...?" என்று குறும்பு குரலில் கூறியவனைக் கண்டு அவனது முகத்தோடு முகம் பதித்து,

"உண்மையைத் தெரிஞ்சிக்க ஆசையா தான் இருக்கு... ஆனா கடமை அழைக்கிறதே சூர்யா..." என்று அவள் கொஞ்சிக் கொண்டு இழைய...

"இப்போ போயிட்டு வா... நைட் உண்மையைத் தெரிஞ்சிக்கலாம்..." குறும்பாய் கண்சிமிட்டிய கணவனைக் கண்டு பெருத்த நிம்மதியாய் இருந்தது அவளுக்கு... தன்னுடைய பழைய சூர்யாவாய் கணவன் மாறிவிட்டதை உணர்ந்து அவளுக்கு மிகவும் சந்தோமாயிருந்தது...

"சூர்யா, உங்களுக்கு என் மேல் கோபமில்லையே..." என்று தடுமாற்றத்துடன் கேட்டவளைக் கண்டு,

"உன் மேல் கோபமில்லை... என் மேல் தான் கோபம் எல்லாம்..." என்றவன் அவளது முகம் மாறுவதைக் கண்டு,

"இப்போ அந்தக் கோபம் இல்லை... உன் தம்பி சம்யுவை கவனிக்கிறதை பார்க்கும் போது என் வருத்தம் எல்லாம் பனி போல் விலகி போயிருச்சு... இப்போ தான் நிம்மதியா இருக்கு..." என்றவனது புன்னகை பழையபடி மீண்டு இருந்தது...

"இப்போ தான் எனக்கும் நிம்மதியா இருக்கு..." என்றவளது புன்னகையும் திரும்பி இருந்தது...

அப்போது சூர்யாவின் அலைப்பேசி அழைத்தது... அலுவலகத்தில் இருந்து என்றதும் அதை எடுத்தவன் மாவட்ட ஆட்சியராய் மாறி மிடுக்காய் பதில் அளிக்கத் துவங்கினான்... கணவனின் கம்பீரத்தை ரசித்தபடி ஜெகதீஸ்வரி அமர்ந்திருந்தாள்... பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்த சூர்யா,

"நான் ஆபிஸ் கிளம்பறேன்... நீ கிளம்பலையா...?" என்று கேட்க...

"இதோ போகணும்..." என்றபடி அவளும் எழுந்தாள்...

சூர்யா கதவு வரை போனவன் பின் நின்று திரும்பி வந்து மனைவியவள் நெற்றியில் இதழ் பதித்து, "நான்

இந்தளவுக்குச் சந்தோசமா இருக்கிறேன்னா அதுக்குக் காரணம் நீ தான்... நீ மட்டும் தான்..." என்றவன் தயங்கியபடி அவளைப் பார்த்தான்...

"என்ன சூர்யா...?"

"நான் ஒண்ணு சொன்னா சிரிக்க மாட்டியே..."

"ப்ச்... அப்படி எல்லாம் இல்லை... சொல்லுங்க..."

"ஐ..." என்று தயங்கியவனை எதிர்பார்ப்புடன் அவள் நோக்க,

"ஐ லவ் யூடி பொண்டாட்டி..." என்றவன் அவளது இதழில் மென்மையாய் இதழ் பதித்து விலகியவன்,

"பை பொண்டாட்டி..." என்று கண்சிமிட்டி விட்டு அறையை விட்டு வேகமாய் வெளியேற...

ஜெகதீஸ்வரி கணவனது காதலில் உறைந்து போய் நின்றிருந்தாள்... அவள் அவனை உயிருக்கு காதலிக்கிறாள்... அவளைப் பொருத்தவரையில் அவர்களது திருமணம் காதல் திருமணம்... ஆனால் கணவனைப் பொருத்தவரை பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்... இதுவரை கணவன் தன்னிடத்தில் காதலை சொல்லாத போதும் அவர்களது திருமண வாழ்க்கையில் காதல் சற்றும் குறையவில்லை... ஆனால் இன்று முதன்முறையாகக் கணவன் கூறிய காதல் வார்த்தைகள் அவளது மனதினை மயிலிறகாய் வருடிச் சென்றது...

"ஐ லவ் யூ சூர்யா..." என்று முணுமுணுத்தவளின் முகத்தில் புது மணப்பெண்ணவளைப் போன்று வெட்கம் நிறைந்திருந்தது...

********************

அலைப்பேசி அழைத்தது கண்டு இந்திரஜித் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"சொல்லுங்கண்ணா..."

மறுமுனையில் இருந்த கண்ணன் உற்சாகத்துடன், "நீ சொன்னது சரி தான் இந்தர்... இந்தக் கேசை தோண்ட தோண்ட பல விசயங்கள் வெளிவருது... ஆனாலும் விடாது மீரா இந்தக் கேசை விசாரிச்சு குற்றாவளியை அரெஸ்ட் பண்ணிட்டாள்..."

"வாவ், சூப்பர்ண்ணா... அண்ணி உண்மையில் க்ரேட் தான்... செம டேலண்ட்..." என்று இந்திரஜித் வருங்கால அண்ணியை மெச்சினான்...

"அண்ணி கிட்ட நான் தேங்க்ஸ் சொன்னேன்னு சொல்லிருங்க..."

"நாங்க எங்க கடமையைச் செஞ்சோம் இந்தர்... இதுக்கு எதுக்குத் தேங்க்ஸ் எல்லாம்...?"

"அடப்பார்றா, குண்டூர் ஏசிபி எப்போ டெல்லிக்கு ஏசிபி ஆனாராம்...? இது எனக்குத் தெரியாம போச்சே..." அவன் அண்ணனை கேலி செய்து ஓட்டினான்...

"அடேய், ஒரு பேச்சுக்கு நாங்கன்னு சொன்னா அதை நீ உண்மையா எடுத்துக்குவியா... இந்த நாங்களுக்கு என்ன அர்த்தம்ன்னா, நாங்க ரெண்டு பேரும் ஒரே இனம்... அதாவது போலீஸ் இனம் என்பது மட்டுமே..." கண்ணன் அழாத குறையாகக் கூற...

"ஹா ஹா... பேச்சில் கூட உங்களால் அண்ணியை விட்டுக் கொடுக்க முடியலை அப்படித் தானே அண்ணா...?"

"ஹி ஹி... அப்படியும் வச்சுக்கலாம்..." என்று கண்ணன் அசடு வழிய...

"முத்திடுச்சு... சீக்கிரம் கால் கட்டு போட்டால் தான் சரி வரும்..."

"அதை முதலில் செய்டா தம்பி..." என்றவனைக் கண்டு வியப்பாய்,

"உண்மையாவா அண்ணா...?"

"ஆமாம்டா... மீரா பத்தி அப்பா, அம்மா கிட்ட பேசலாம்ன்னு இருக்கேன்..."

"ஒருவழியா ஏசிபி சாருக்குத் தைரியம் வந்திருச்சு..."

"எஸ்..." என்றவன்,

"விரைவில் என்னோட கல்யாணத்தில் சந்திக்கலாம்..."

"நான் காத்திருக்கிறேன் அண்ணா..." என்று கூறியபடி சந்தோசத்துடன் அலைப்பேசியை அணைத்த இந்திரஜித் தன் முன்னிருந்த காகிதங்களை இணைத்து வைத்துப் பார்த்தான்...

மதுமிதா என்கிற பெயரில் தன்னை ஏமாற்றிய மாதுரிமா யார் என்பதை அவன் அறிந்த போது திகைத்துத் தான் போனான்... தனது தந்தையின் நண்பனான நீலேஷின் மகள் தான் அவள் என்பதினை அறிந்து அவன் ஆடிப் போனான்... தனது தந்தையைப் பழிவாங்க எண்ணி அவர்கள் தன்னைப் பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டதை அறிந்து அவன் மனம் வெறுத்துப் போனான்...

அதே சமயம் தந்தையை வெறுத்து அவரைப் பழிவாங்க எண்ணி தான் சம்யுக்தாவை பகடைக்காயாகப் பயன்படுத்தியதை நினைத்து அவன் வேதனை கொண்டான்... கடந்து போன கடந்த காலத்தை அவனால் மாற்ற முடியாதே... ஆறாத ரணமாய் இருந்த அவனின் வலியை அவன் அப்படியே தன்னவளுக்கு அல்லவா பரிசளித்து விட்டான்... அதே சமயம் அவன் மீதும் தவறில்லையே...

அவன் மாதுரிமாவைக் காதலித்தது உண்மை... அவளைத் தனது வாழ்க்கையாக எண்ணியது உண்மை... எல்லாமே உண்மை தான்... ஆனால் ஒன்றே ஒன்றை தவிர... அது, அவன் காதலித்த மாதுரிமாவைத் தவிர...

அவனது மனம் வேதனையுடன் கடந்த காலத்திற்குப் பயணப்பட்டது...!!!

தொடரும்...!!!

***************************

டெல்லியில் இருந்து நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் நொய்டா நகரத்திலுள்ள 'புத் இன்டர்நேசனல் சர்க்யூட்' அரங்கம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது... 'F1' என்றழைக்கப்படும் 'ஃபார்முலா ஒன்' கார் பந்தயம் அங்கு நடைப்பெற்று கொண்டிருந்ததே அதற்குக் காரணம்...

விறுவிறுப்பான கார் பந்தயத்தைச் சிலர் நகத்தைக் கடித்துக் கொண்டு டென்சனோடு பார்த்து கொண்டிருந்தனர்... ஒரு சிலர் 'கமான்' என்று கத்தி உற்சாகமாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர்... அத்தகைய கூட்டத்திற்கு நடுவில் இருந்த மது டென்சனோடு நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள்... அவளது காதலன் இந்திரஜித் அதில் கலந்து கொண்டிருந்தான்...

ஆம், அவன் அப்படித் தான் சொல்லி கொள்கிறான்... அவளது காதலன் என்று... ஆனால் அவள் மனதில் அந்தக் காதல் இருந்ததா...? என்று கேட்டால், இல்லை என்பது தான் அவளது பதில்... ஆனால் சமத்து பையனான அவனைத் துரத்தி துரத்தி காதலித்தது அவள் தான் என்பது இங்கு விந்தையிலும் விந்தை... அவள் அவனைக் காதலிக்கவில்லை... அப்படிக் காதலிப்பது போல் நடித்தாள்... அதற்குக் காரணம் அவளது அன்னை...

"உன் அப்பா இறந்ததற்கு முழுக்க முழுக்கக் காரணம் அவனோட அப்பா தான்... உன் அப்பாவை ஜெயிலுக்கு அனுப்பி, அவமானப்படுத்தித் தற்கொலை பண்ணத் தூண்டி விட்டது அந்தச் சித்தார்த் தான்... நட்பு என்கிற போர்வையில் உன் அப்பாவுக்குத் துரோகம் பண்ணிய

துரோகி இவனோட அப்பன்... அதே போல் இவனைக் காதல் என்கிற போர்வையில் நீ அவனுக்குத் துரோகம் பண்ணி அவனை உருக்குலைத்து விடு... அப்போது தான் அந்தச் சித்தார்த்துக்கு நான் அனுபவிச்ச வலி தெரியும்... நம் நல்ல நேரம் இவன் நீ படிக்கும் காலேஜில் வந்து சேர்ந்தது..."

வன்மத்துடன் வினோதினி, அதாவது நீலேஷின் மனைவி, மதுவின் அன்னை கூறிய போது மதுவின் மனதிலும் வன்மம் பற்றி எரிந்தது... அந்தக் கணம் அவள் மனதில் சபதம் பூண்டாள் இந்திரஜித்தை ஆள், அடையாளம் தெரியாது உருக்குலைக்க வேண்டும் என்று...

இந்திரஜித்தை தொடர்ந்து கண்காணித்ததில் அவனது நல்ல குணங்கள் அவளுக்குச் சாதகமாகப் போய்விட்டது... இந்தக் காலத்தில் இப்படி ஒரு நல்லவனா என்று மனதில் வியந்த போதும், அதுவே அவளுக்குச் சாதகமான விசயமாகப் போனது...

இந்திரஜித் மிகவும் நல்லவன், அன்பானவன்... அதே சமயம் சந்தோசமாய் இருப்பவன்... அவன் மட்டுமல்லாது தன்னைச் சுற்றிலும் இருப்பவர்களையும் சந்தோசமாக வைத்து கொள்வான்... நல்ல படிப்பாளி... அதனால் தான் அவனுக்கு 'இண்டியன் இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜி டெல்லி'யில் எளிதாக இடம் கிடைத்தது... அவனுக்கு வெளிநாடு சென்று படிக்க வேண்டும் என்று எல்லாம் விருப்பம் இருந்தது கிடையாது...

பத்தாவது பொதுத் தேர்வு எழுதும் போது அவனது குடும்பம் டெல்லியில் இருந்தது... அந்தச் சமயம் பிரகதீஸ்வரிக்கு வேறு ஊருக்கு மாற்றல் வந்த போது படிப்பிற்காக இந்திரஜித் விடுதியில் சேர்க்கப்பட்டான்... அதன் பிறகு அவனுக்குமே அங்குப் பிடித்துவிடவே அவனது படிப்பு முழுவதும் டெல்லி என்றாகிப் போனது...

இப்போது படிக்கும் போதே அவன் 'ஆன்லைன்' மூலம் நடந்த தேர்வில் வெற்றி பெற்று 'மைக்ரோசாப்ட்' நிறுவனத்தில் வேலை கிடைத்த போதும் அவன் அதை வேண்டாம் என்று மறுத்து விட்டு தனது படிப்பினைத்

தொடர்கிறான்... படிப்பிற்கு இடையே கணினி 'ப்ரோக்ராம்' செய்து கொடுப்பான்... கணினி சம்பந்தப்பட்ட மற்ற வேலைகளும் பார்த்து வந்தான்... அதில் அவனுக்குத் தேவையான வருமானம் வந்தது... அதனால் அவன் தனது தேவைகளுக்குக் கூடத் தனது தந்தையை எதிர்பார்த்து இருந்தது இல்லை... பணக்காரத் தந்தையிடம் பணத்துக்காக இதுவரை அவன் கையேந்தி நின்றது இல்லை...

மகனை நினைத்துச் சித்தார்த்திற்கு அப்படி ஒரு பெருமை... தன்னை விடத் தன் மகன் திறமைசாலி என்பதில்... நிறைய விசயங்களில் அவன் அவனது அன்னையை மாதிரி... நிதானத்துடன், புத்திக்கூர்மையுடன் இருப்பதில்... அவனது புத்திக்கூர்மையையும் மது அன்பு என்னும் ஆயுதம் கொண்டு மழுங்கச் செய்துவிட்டாள்...

இந்திரஜித்தின் பின்னேயே சென்று அவனைக் காதலிப்பதாய்க் கூறி அவள் சுற்றி வந்த போதும் அவன் அவ்வளவு எளிதில் அவளுக்குப் பிடி கொடுத்து விடவில்லை...

"இல்லை, எனக்குக் காதல் எல்லாம் செட்டாகாது... என் பெற்றோர் பார்த்து வைக்கும் பெண்ணைத் தான் நான் திருமணம் செய்வேன்..." என்று அவன் உறுதியாக மறுத்த போது தான் அவள் தற்கொலை என்கிற ஆயுதத்தைக் கையில் எடுத்தாள்...

"உனக்கு நாளைக்கு வரை தான் டைம்... நீ காதலை சொல்லலைன்னா நான் தற்கொலை பண்ணிக்குவேன்... பொய்ன்னு மட்டும் நினைக்காதே... உண்மையா தான் சொல்லுறேன்... நாளைக்கு இதே இடத்தில் காத்திருப்பேன்... நீ வரணும்... வந்து காதலை சொல்லணும்..." என்றவளைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"நீ உயிரை விட்டாலும் எனக்குக் கவலை இல்லை... உன் மிரட்டலுக்கான ஆள் நானில்லை..." என்று அவன் அவளை எச்சரித்து விட்டு சென்றுவிட்டான்...

அவனது பேச்சு அவளுக்கு மனதில் திகில் அளித்த போதும், அவன் வருவான் என்கிற நம்பிக்கையும் சேர்ந்து எழத் தான் செய்தது...

மறுநாள் மது சொன்ன நேரம் நெருங்க நெருங்க இந்திரஜித்தால் விடுதியில் இருக்க முடியவில்லை... அவள் சொன்னது போல் தற்கொலை செய்து விடுவாளோ என்று அவன் மனதில் கவலை அரித்தது... மதுவை அவன் கல்லூரி வளாகத்தில் அடிக்கடி பார்த்து இருக்கிறான்... இருவரும் வேறு வேறு பாட பிரிவை எடுத்திருப்பதால் துறை ரீதியாகப் பழக்கம் கிடையாது... ஆனால் அவளது தைரியத்தை அவன் கண்கூடாகக் கண்டிருக்கிறான்...

தன்னிடம் வம்பிழுத்த ஒருவனை அவள் ஓட ஓட விரட்டியடித்த சம்பவத்தை அன்று முழுவதும் அந்தக் கல்லூரி வளாகமே பேசித் திரிந்தது... அந்தளவுக்கு அவள் தைரியம் உடையவள்... அந்தத் தைரியத்தால் தான் அவனும் அவளை உற்றுக் கவனிக்க ஆரம்பித்தது... ஆனால் சில நாட்களில் அவள் தன்னிடம் வந்து காதலைச் சொல்வாள் என்று அவன் சிறிதும் எண்ணவில்லை...

அவனுக்கும் பெற்றோர் போல் காதலித்துத் திருமணம் செய்ய வேண்டும் என்கிற ஆசை உண்டு தான்... அதே சமயம் பெற்றோரை எதிர்த்து நிற்கவும் அவனால் முடியாது... அதனால் திருமணத்திற்குப் பின் காதலித்துக் கொள்ளலாம் என்று அவன் தனது மனதில் முடிவு எடுத்திருந்தான்... அந்த முடிவு மதுவின் மிரட்டலால் சற்று ஆட்டம் கண்டது... நேரமாக ஆக அவனால் விடுதியில் இருக்க முடியவில்லை...

நேற்று அவளைச் சந்தித்த மரத்தடியை நோக்கி அவன் வேகமாய் ஓடி வந்தான்... அவன் நினைத்தது போல் மது அவனுக்காகக் காத்திருந்தாள்... மூச்சிரைக்க அவள் அருகில் ஓடி வந்தவன் இடுப்பில் கை வைத்தபடி மூச்சு வாங்க அவளை மேலிருந்து கீழாகப் பார்த்தான்... எந்தவித பாதிப்பும் இல்லாமல் அவள் நன்றாக இருந்தாள்...

அவனின் வரவை உணர்ந்து அவளது முகத்தில் கர்வமான வெற்றிப் புன்னகை தோன்றியது...

"தேங்க் காட்..." என்றான் அவன் புன்னகையுடன்...

'இனி உன்னை அந்த ஆண்டவனால் கூடக் காப்பாத்த முடியாது' மனதில் கூறிக் கொண்ட மது அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"நீ வருவன்னு எனக்குத் தெரியும்..." என்று நம்பிக்கையுடன் புன்னகைத்தவளைக் கண்டு அவனும் பதிலுக்குப் புன்னகைத்தான்...

இருவரும் புன்னகைத்தபடி அப்படியே நின்றிருக்க, இந்திரஜித் தான் தைரியம் வர பெற்றவனாய் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு,

"ஐ லவ் யூ ஹனி..." என்றான்... அவனது 'ஹனி' என்றழைப்பில் அவள் வியப்பாய் அவனைப் பார்க்க...

"உன் பெயர் மது தானே... மது என்றால் ஹனி... அதான்..." என்று கூறி சிரித்தவனை விரோதம் பொங்க பார்த்தாள் அவள்...

அன்று முதல் மாதுரிமாவான அவள் அவனுக்கு மட்டும் மதுமிதாவாக மாறிப் போனாள்... இரண்டு பெயருக்கும் பொதுவான பெயரான மது என்று பெயரை கொண்டு எல்லோரும் அவளை அழைத்ததால் அது அவளுக்கு இன்னமும் வசதியாகப் போய்விட்டது... தனது உண்மை அடையாளத்தைக் கூட அவனிடம் காட்டாது அவனைக் காதலிப்பது போல் நடிக்கத் துவங்கினாள்...

பத்தொன்பது வயதில் வந்த காதல் இதோ இன்றோடு ஒரு வருடத்தை வெற்றிகரமாகப் பூர்த்திச் செய்துவிட்டது... இந்த ஒரு வருடத்தில் இருவரும் சேர்ந்து சுற்றாத இடம் இல்லை... பரிமாறிக் கொண்ட முத்தங்களின் எண்ணிக்கையும் கணக்கில் அடங்காதது... சில சமயம் மது உண்மையில் இந்திரஜித்தின் அருகாமையில் தன்னை மறந்து அவனோடு இழைந்து விடுவாள்... இளமை உணர்வின்

வேகமா? இல்லை அவனது உண்மையான காதலின் தாக்கமா? ஏதோ ஒன்று அவனது முத்தத்தில் அவளை லயிக்கச் செய்துவிடும்...

அந்தச் சமயம் அவள் கனவில் மிதந்து கொண்டு வீட்டிற்கு வரும் போது அவளது அன்னை அவளது முகத்தை வைத்தே விசயத்தைக் கண்டுபிடித்துக் கண்டிப்பார்... அதில் அவளது மனதில் மீண்டும் வன்மம் வந்து குடி கொண்டு விடும்...

சுற்றிலும் ஒலித்த கரவொலியில் நினைவலைகள் அறுந்து விழ மது நிகழ்காலத்திற்கு வந்தாள்... சொன்னது போல் இந்திரஜித் பந்தயத்தில் வெற்றிப் பெற்றிருந்தான்...

"நம்ம லவ்வோட ஃபர்ஸ்ட் அனிவர்சரிக்கு உனக்கு நான் கொடுக்கப் போகும் கிப்ட் இந்தப் போட்டியின் வெற்றி..." கார் பந்தயத்தில் கலந்து கொள்ளப் போகும் முன் அவன் அவளிடம் கூறிவிட்டு சென்ற வார்த்தைகள் இவை...

'எத்தனையோ ஜாம்பவான்கள் கலந்து கொள்ளும் போட்டியில் கத்து குட்டி இவன் ஜெயிக்கிறதாவது...' என்று அவள் அவனது வார்த்தைகளை அலட்சியப்படுத்தினாள்...

உண்மையில் அவன் வெற்றிப் பெற்றதும் அவள் பயத்தில் வெலவெலத்துப் போனாள்... இந்திரஜித் இவ்வளவு சீரியசாகக் காதலில் இருப்பான் என்று அவளுக்குத் தெரியாமல் போயிற்றே... ஒரு வகையில் அதுவும் நல்லது தான் என்றே அவள் நினைத்தாள்...

வெற்றி பெற்று கோப்பையுடன் காட்சியளித்தவனைக் காணச் சகிக்காது அவள் அரங்கத்தை விட்டு வெளியேறி இருந்தாள்... ஒருவேளை அவள் அங்கு இருந்திருந்தால் ஏதாவது ஊடகங்கள் கண்ணில் இருவரும் விழுந்து புகைப்படம் வெளிவந்திருந்தால் சித்தார்த் மகனது காதலைத் தெரிந்து கண்டித்து இருப்பானோ... அதற்கான வாய்ப்பை மது அளிக்காது சென்றுவிட்டாள்...

வெற்றி பெற்ற மகிழ்ச்சியைக் காதலியுடன் கொண்டாட நினைத்த இந்திரஜித் அவள் நின்றிருந்த இடத்தில்

அவளைத் தேட, அங்கு அவளைக் காணாது அவளது அலைப்பேசிக்கு அழைத்தான்...

"சாரி இந்தர்... அம்மாவுக்கு உடம்பு ரொம்ப முடியலைன்னு ஃபோன் பண்ணினாங்க... அதான் நான் கிளம்பி வந்திட்டேன்... இப்போ அம்மா கூடத் தான் இருக்கேன்..."

அவள் இன்னமும் நொய்டா நகரத்தைத் தாண்டவில்லை... வாய் கூசாது பொய் கூறினாள்...

"ஓகே மது... நோ ப்ராப்ளம்... நீ உன் அம்மாவைப் பார்..." என்று அலைப்பேசியைத் துண்டித்து விட்டு டெல்லி கிளம்பிய இந்திரஜித்தின் மனதில் பல குழப்பங்கள்...

இப்போது எல்லாம் அவனுக்குக் காதல் கொஞ்சம் கொஞ்சமாய்க் கசக்க ஆரம்பித்தது... காதலிக்கும் போது இருந்த வேகம் இப்போது சுத்தமாய் இல்லை... ஏனெனில் இருவரது விருப்பு, வெறுப்பு வேறு வேறு... அதைக் கூட அவன் பொறுத்துப் போனான்... அவளுக்காகத் தனது குண இயல்புகளை மாற்றிக் கொண்டான்... அதையும் மீறி மது அவனிடம் கோபம் கொள்ளும் போது அவனால் அவளை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாது அவன் திணறினான்...

அப்படியிருந்தும் அவன் அவள் பின்னாடியே சென்று அவளைச் சமாதானப்படுத்துவான்... அவனால் அவள் மனம் வருந்துவது கண்டு அவனுக்குத் தான் வருத்தமாக இருக்கும்... யாரையும் புண்படுத்திப் பேசி, பழகியிராத அவனுக்குக் காதலியை அப்படிப் பேசவும் யோசனையாக இருந்தது...

இதோ இப்போது கூட அவனது மகிழ்ச்சியான தருணத்தில் உடனிருக்காது அவனை அம்போவென விட்டு விட்டு அவள் சென்றுவிட்டாள்... அது அவனுக்குச் சிறிது வருத்தத்தை அளித்தது...

'அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு தானே போயிருக்கிறாள்... இதை எல்லாமா நீ பெருசா

எடுத்துக்குவே... எப்ப இருந்து நீ இப்படி ஆணாதிக்க மனப்பான்மை உள்ளவனா மாற ஆரம்பிச்ச...?' என்று அவன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்...

அவனது அன்னை பிரகதீஸ்வரி அவனுக்குப் பெண்ணின் வலி, வேதனைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி வளர்த்ததாலோ என்னமோ... அவன் தன் பெண்ணவளிடத்தில் மிகவும் பொறுமையைக் கடைப்பிடித்தான்... அவனது பொறுமையும் ஒரு நாள் பொறுக்க மாட்டாது வெடித்துச் சிதறப் போகிறது என்று அவனுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை...

அன்றிரவு தனது குடும்பத்தினருடன் கணினி மூலம் உரையாடிக் கொண்டிருந்த இந்திரஜித் தான் பெற்ற வெற்றி கோப்பையை எடுத்து கணினி முன் ஆட்டி சந்தோசத்தில் குதூகலித்தான்...

அவன் அவர்களிடம் கார் பந்தயத்தில் கலந்து கொள்ளப் போவதை குறித்து எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை... வெற்றி பெற்ற பின் இனிய இன்பமாக அவர்களுக்குத் திடீரென்று விசயத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்து மறைத்து விட்டான்... அவன் நினைத்தது போன்றே அவனது பெற்றோர் அவன் வெற்றி பெற்றதை கேள்வியுற்று இனிய அதிர்ச்சியில் வார்த்தை வராது சந்தோசத்தில் திணறினர்... பின்பு தங்களைச் சமாளித்துக் கொண்டு,

"கங்கிராட்ஸ் இந்தர்..." என்க....

நெகிழ்ச்சியில் கண்கள் கலங்க மகிழ்ச்சியில் கூவிய பெற்றோரைக் கண்டு அவனும் உற்சாகம் அடைந்தான்... காதலியினால் ஏற்பட்ட வருத்தம் பெற்றோரின் அன்பினால் துணி கொண்டு துடைத்தார் போலானது... அவன் மனதிற்குள் அத்தனை சந்தோசமாக உணர்ந்தான்...

"பேபி... என் மகன் என்னைப் போலிருக்கிறான் பார்..." என்று சித்தார்த் தனது சட்டை காலரை பெருமையாகத் தூக்கி விட்டுக் கொள்ள...

"மாமூ..." கணவன் தன்னை ‘பேபி’ என்று அழைத்ததற்காகப் பிரகதீஸ்வரி அவனை முறைத்தாள்...

"கோச்சுக்காதடி பேபி..." மனைவியை மீண்டும் 'பேபி' என்று குறும்பாய் அழைத்தவன் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளது கன்னத்தில் இதழ் பதித்து விலகினான்...

"இந்தர் இருக்கும் போது இது என்ன விளையாட்டு...?" பிரகதீஸ்வரி கணவனிடம் கோபம் கொள்ள...

"அப்போ இந்தர் இல்லைன்னா உனக்கு ஓகேவா...?" என்று கண்சிமிட்டிய தந்தையைக் காண காண இந்திரஜித்திற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

இந்த வயதிலும் தந்தை அன்னையிடம் காட்டும் காதல் கண்டு அவன் பிரமித்துப் போனான்... இவர்களைப் போல் தானும், மதுவும் இருப்போமா...? என்று யோசித்தவனுக்கு அப்படி ஒரு கற்பனை கனவாய் கூட வர மறுத்தது... எதிலும் ஏட்டிக்கு போட்டி போடும் காதலியை வைத்துக் கொண்டு அவனும் தான் என்ன செய்வான்...? ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கோட்பாடு போதிக்கப்பட்டு வளர்ந்தவனுக்கு இன்றைய நாகரீக வார்த்தையான 'ப்ரேக் அப்' என்ற வார்த்தையை அத்தனை எளிதாக அவளிடத்தில் சொல்ல முடியவில்லை... குறை, நிறையோ பொறுத்துப் போகத் தான் அவன் நினைத்தான்... தனது அன்பு அவளை மாற்றும் என்று அவன் கனவு கண்டான்... கடைசி வரை அவனது கனவு கனவாகவே போய்விட்டது...

"வயசான காலத்தில் சும்மாயிருக்க முடியாது..." பிரகதீஸ்வரி கணவனை முறைக்க...

"அம்மா, திஸ் இஸ் டூ மச்... என் அப்பா உங்களுக்கு வயசானவரா...? அவர் எப்பவும் யூத் தான்... பாருங்க, அப்பா எவ்வளவு ஸ்மார்ட்டா இருக்காருன்னு... நீங்க தான் அவர் முன்னாடி கொஞ்சம் டல்லடிக்கிறீங்க..." என்று மகன் அன்னையிடம் தந்தையை விட்டுக் கொடுக்காது பேசினான்...

"இந்தர், என்னைப் புகழ்றது இருக்கட்டும்... அதுக்காக என் பேபியை அழகில்லைன்னு சொன்ன உன்னைப் பிச்சு போடுவேன் படுவா..." என்று சித்தார்த் செல்லமாக மகனை மிரட்டினான்... அவன் மனைவியை யாராவது குறை கூற முடியுமோ...!

"பார்த்தீங்களாம்மா... நான் அவருக்குச் சப்போர்ட் பண்ணினால், அவர் உங்களுக்குச் சப்போர்ட் பண்றதை..." என்று மகன் அன்னையிடம் புகார் வாசித்தான்...

"சரி விடுடா... உங்கப்பா தானே..." சமாதானப்படுத்திய பிரகதீஸ்வரி மகனிடம் அவனது நலன் மற்றும் படிப்பு பற்றி விசாரித்தாள்...

"இந்தர், பணம் ஏதும் வேணுமாடா...?" என்று கேட்ட தந்தையிடம்,

"வேண்டாம்ப்பா... என் கிட்ட இருக்கு..." என்று அவன் மறுத்தான்...

இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா என்று மகனைக் கண்டு ஆச்சிரியப்பட்டான் சித்தார்த்... அவன் கூடப் படிக்கும் காலத்தில் அந்தந்த வயதிற்குரிய உல்லாசங்களை அனுபவித்துத் தான் வாழ்ந்தான்... தந்தையின் பணத்தில் தான் படித்தான்... ஆனால் மகன் தனது கையை எதிர்பாராது தானே சம்பாதித்துத் தனது தேவைகளைப் பார்த்துக் கொள்வது கண்டு 'இவன் என் மகன், என் இரத்தம்' என்று அவனுக்கு அத்தனை பெருமிதமாக இருந்தது...

"ஜிக்கி எப்படியிருக்கிறாள்...? நான் பிறகு அவள் கிட்ட பேசுறேன்னு சொல்லுங்க..." என்ற இந்திரஜித் மேலும் கொஞ்ச நேரம் பேசியிருந்து விட்டு கணினியை அணைத்தான்...

மகன் கணினி திரையில் இருந்து மறைந்ததும் சித்தார்த் மனைவியை அணைத்துக் கொண்டு அப்படியே

அமர்ந்திருந்தான்... கணவனது இந்த மௌனம் அவளுக்கு வித்தியாசமாகத் தோன்றியது...

"என்ன மாமூ...?"

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு பேபி..." என்று மனம் நெகிழ்ந்து கூறிய கணவனைக் கண்டு அவள் புரியாது நோக்கினாள்...

"ஆண்மகனை எப்படி வளர்க்கணும் என்பது உன் கிட்ட இருந்து தான் எல்லோரும் கத்துக்கணும்... இந்தர் மாதிரி ஒரு மகன் கிடைக்க நான் கொடுத்து வச்சியிருக்கணும்... இந்த வயசில் நான் கூட இப்படிப் பொறுப்பாய் இருந்தேனான்னு எனக்குத் தெரியலை..."

"இந்தர் நல்லவன் தான்... அதுக்காக நீங்க அப்படியில்லைன்னு சொல்ல முடியுமா...?"

"அப்போ நான் நல்லவன்னு சொல்றியா...?" என்றவனது பார்வை மெல்ல கணவன் பார்வையாக மாற ஆரம்பிக்க...

"இப்போ நீங்க ரொம்ப ரொம்பக் கெட்டவன்..." என்று அவள் அவனது கன்னம் தட்டி சிரிக்க...

"கெட்டவன் என்ன பண்ணுவான்னு தெரியுமா...?" தன் முகம் நோக்கி குனிந்தவனை அவள் தள்ளி விட்டாள்...

"எனக்கு இப்போ ஒரு உண்மை தெரிஞ்சாகணும்..."

"எது...? நான் நல்லவனா...? இல்லை கெட்டவனான்னா...? அது நம் கதை படித்த மக்களுக்குக் கூடத் தெரியுமே... கட்டின பொண்டாட்டி உனக்குத் தெரியாதா...?" என்று அவன் கேலி போல் உரைக்க...

"இப்போ இது ரொம்ப முக்கியம்..." என்று முறைத்தவளின் முகத்தில் அடுத்த நொடி கவலை படர்ந்தது...

மனைவி முகத்தை வைத்தே அவளது மனநிலையை உணர்ந்து கொண்ட சித்தார்த், "இப்போ இதுக்கு இந்தக் கவலை...?" என்று கேட்டான்...

"ஜிக்கி பத்தி தான்... நீங்க எப்போ அவள் கிட்ட கல்யாணத்தைப் பத்தி பேசப் போறீங்க...?" ஒரு தாயின் தவிப்போடு கேட்டவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டவன்,

"இப்போ தான் ஜிக்கி பிராக்ட்டீஸ் முடிச்சியிருக்கிறாள்... இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே பேபி..."

"இப்பவே அவளுக்கு இருபத்தியாறு வயசாகிருச்சு..."

"வயசு எல்லாம் ஒரு பொருட்டு இல்லை பேபி... என் பெண் சாதிக்க நினைக்கும் பெண்... அவள் ஒரு சாதனைப் பெண்... அவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு வீணே அடுப்படியில் அடைச்சு வைக்க நினைக்காதே..."

எங்கே திருமணம் முடித்துக் கொடுத்தால் மகளைப் பிரிய வேண்டி வருமோ என்கிற பயத்தைச் சித்தார்த் இப்படிப் பேசிச் சமாளித்தான்...

"அதெல்லாம் நம் ஜிக்கி கல்யாணமாகி சாதிப்பாள்... அவள் படிப்புக்காகத் தான் நான் இதுநாள் வரை பொறுத்திருந்தேன்... இனி என்னால் பொறுத்திருக்க முடியாது... இந்த வருசத்துக்குள் அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கும் வழியைப் பாருங்க..." என்று கண்டிப்புடன் கூறிவிட்டு சென்றுவிட்டாள் பிரகதீஸ்வரி...

சித்தார்த் தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான்... எத்தனையோ பேரை சமாளிக்கும் அவனால் அவனது மனைவியை மட்டும் சமாளிக்க முடியவில்லை... அவனது சித்து விளையாட்டு எதுவும் அவளிடத்தில் மட்டும் செல்லாது...

பெற்றோரிடம் பேசிவிட்டுப் படுக்கையில் விழுந்த இந்திரஜித்திற்கு அவர்களது காதலே கண்முன் வந்து நின்றது... தந்தை அன்னையை அழைப்பது போல் தன்னவளை 'பேபி' என்று அழைத்துப் பார்த்தான்... ம்ஹூம், அந்த வார்த்தை மதுவிற்குக் கொஞ்சமும் பொருந்தவில்லை... வெகுளியான அன்னையின் குழந்தை

உள்ளத்திற்கு ஏற்றவாறு அந்த அழைப்பு இருந்தது... ஆனால் மதுவின் குண இயல்புக்கு அந்த வார்த்தை சற்றும் ஒத்து வரவில்லை...

அந்தக் கணம் மதுவின் இதழ் தேனின் சுவை அவனது நினைவில் எழுந்து அவனைச் சிலிர்க்க வைத்தது... அவளுக்கு 'ஹனி' என்பது தான் சரியான பெயர் என்று அவனுக்குத் தோன்றியது... காதலியின் நினைவில் முகம் மலர அவன் மெல்ல கண்ணயர்ந்தான்...

மறுநாள் கல்லூரி வந்த மதுவிடம், "ஈவினிங் நாம எங்கேயாவது வெளியில் போகலாமா...?" என்று அவன் ஆர்வமாகக் கேட்டான்... நேற்று அவன் பெற்ற வெற்றியைக் காதலியுடன் கொண்டாடும் ஆசை அவனுள் அதிகம் இருந்தது...

அப்போதும் மது அவனை வாழ்த்தவில்லை... அதில் அவனது மனம் மிகவும் வருத்தமுற்றது... 'பார்ட்டி' கேட்ட நண்பர்களைத் தவிர்த்து விட்டு அவன் அவளைப் பார்க்க ஆசையுடன் ஓடி வந்திருந்தான்... ஆனாலும் அவன் தன் மனதினைத் தேற்றிக் கொண்டு அவள் முன் புன்னகை முகமாய்க் காட்சியளித்தான்...

"ம்ப்ச், போ இந்தர்... நீயென்ன ட்ரீட்க்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கா கூட்டிட்டுப் போகப் போகிற...? ஒண்ணும் வேண்டாம் போ..." என்று அவள் முறுக்கிக் கொள்ள...

"இவ்வளவு தானா...? கட்டாயம் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குக் கூட்டிட்டு போகிறேன்..." என்றான் அவன் சமாதானமாக...

"அப்படியே ஷாப்பிங், ஃபிலிம் போகலாமா...?" என்று ஆர்வத்துடன் கேட்டவளைக் கண்டு ஏமாற்ற மனமில்லாது சரியென்று தலையசைத்தவன்,

"அப்போ இன்னைக்கு வேண்டாம்... ஞாயிற்றுக் கிழமை போகலாம்..." என்று அவன் கூற... அவளும் அதற்குச் சந்தோசமாய்ச் சம்மதித்தாள்...

******************

ஞாயிறன்று இந்திரஜித்தோடு வெளியில் சுற்றுவதற்குக் கிளம்பிக் கொண்டிருந்த மதுவின் அருகில் வந்தார் வினிதா...

"நான் சொன்னது எல்லாம் ஞாபகத்தில் இருக்குல்ல..."

"இருக்கும்மா..."

"உனக்காக உன் அத்தை மகன் கிஷோர் காத்துக்கிட்டு இருக்கான்... அதை நீ மறந்திறாதே..."

"ம்..." என்றவள் மனக்கண்ணில் தாபத்தோடு தன் இதழில் முத்தமிடும் இந்திரஜித்தின் பிம்பம் எழுந்தது... அதை நினைத்து அவளுக்குத் தலைவலி வந்தது தான் மிச்சம்... அவள் அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்...

"எதுக்குத் தலையைப் பிடிக்கிற...?"

"அது வந்து... இந்தர் என் கூட க்ளோசா..." எப்படிச் சொல்வது என்று தெரியாது அவள் நிறுத்த...

"பழகினால் பழகட்டும்..." என்று அசால்ட்டாகக் கூறிய அன்னையை அதிர்வுடன் நோக்கினாள் மது...

"அம்மா..."

"சினிமாவில் நடிக்கிறவங்க எல்லாம் உண்மையா வாழவா செய்றாங்க... அது வெறும் நடிப்பு மட்டுமே... அது போல் தான் இதுவும்... ஆனால் ஓரளவுக்கு மேல் அவனை நெருங்க விடாதே..." என்று அவர் எச்சரிக்கை செய்ய...

"அவன் அப்படிப்பட்ட ஆள் இல்லைம்மா..." சட்டென்று வந்தது அவளது வார்த்தைகள்...

எத்தனை காதல் இருந்த போதும், எத்தனை தாபம் இருந்த போதும், தவறு செய்வதற்கு வேண்டிய தனிமை கிடைத்த

போதும் இந்திரஜித் ஒரு நாளும் அவளிடம் எல்லை மீறியது இல்லை...

"ரொம்ப நல்லதா போயிற்று..." அன்னையின் இளக்கார வார்த்தையில் அவள் அவரை வினோதமாய்ப் பார்த்தாள்...

"அவன் உன் விரோதி... உன் அப்பா சாவுக்குக் காரணமானவனின் மகன் இவன்... அது மட்டுமே உன் நினைவில் இருக்கணும் மது... நாம எப்படி உங்கப்பாவை விட்டு பிரிந்து துடித்தோமோ... அது போல் சித்தார்த் அவனது மகனைப் பிரிந்து துடிக்கணும்..."

"இந்தக் காதலால் இது சாத்தியமாம்மா...?"

"நிச்சயம் சாத்தியமே... ஒண்ணு அவனைக் காதலிக்கிற மாதிரி நடிச்சு அவனைப் பைத்தியக்காரனாக்கி ரோட்டில் அலைய விடணும்... இல்லைன்னா...?" என்று யோசித்தவர் பின்பு,

"எப்படியும் உங்க ரெண்டு பேர் காதலுக்குச் சித்தார்த் சம்மதிக்க மாட்டான்... இதுவே அப்பனுக்கும், மகனுக்கும் இடையில் பிரச்சினை வரக் காரணமா இருக்கும்... நானும் உங்கப்பா சம்மதம் இல்லாது இந்தக் கல்யாணம் நடக்காதுன்னு இந்தர் கிட்ட சொல்லி உன்னைக் கிஷோர்க்குக் கல்யாணம் பண்ணி வச்சிருவேன்... அப்புறம் என்ன அவன் காதல் தோல்வியில் தேவதாசா மாறிவிடுவான்... சித்தார்த்தின் தொழில் வாரிசு இல்லாது நாசமாய்ப் போய்விடும்... அது தான் எனக்கும் வேண்டும்... அவனது தொழிலும், அவனும் மண்ணோடு மண்ணாக அழிய வேண்டும்..."

ஆத்திரத்தில் கத்திய அம்மாவைச் சமாதானம் செய்து வெளியில் வந்த போது மதுவிற்கு உற்சாகம் குறைந்து காணப்பட்டது...

இந்திரஜித் முதலில் அவளை ஆசையாக ஷாப்பிங் மாலுக்குக் கூட்டிக் கொண்டு வந்தான்... அவனது வருமானத்தில் அவள் பொருள்களை வாங்குவாள் என்று

அவன் நினைத்திருக்க... அவளோ அதை விட அதிக விலையில் வாங்கிக் குவித்தாள்... அவனிடம் அந்தளவிற்குப் பணம் கையில் இல்லை... வேறுவழியில்லாது அவன் தனது தந்தைக்கு அழைத்தான்...

"இதோ இப்பவே பணம் போட்டு விடறேன்..." மகன் பணம் கேட்டதே பெரிது என்பது போல் சித்தார்த் உடனே பணத்தை மகனது வங்கிக் கணக்கில் போட்டு விட்டான்... அன்றைய நாள் முழுவதும் அவனது நினைவில் மகனது தயக்கமான குரலே நினைவில் நின்று அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது...

'இந்தச் சொத்துக்கள் அனைத்தும் உனக்கானது இந்தர்... அதில் ஒரு துளி எடுப்பதற்கு இத்தனை யோசனைகளா...?' என்று அவன் மனதிற்குள் மகனை நினைத்துச் சிரித்துக் கொண்டான்...

தந்தை பணம் அனுப்பியதும் தான் இந்திரஜித்திற்கு நிம்மதி வந்தது... அன்றைய நாள் முழுவதும் அவளுடன் கழித்து விட்டு இரவில் விடுதிக்கு திரும்பியவனுக்கு இந்தக் காதல் எந்தளவிற்குச் சரியாக வரும் என்கிற யோசனையே மனதினைப் போட்டு அரித்து எடுத்தது...

ஏனெனில் இன்று அவர்கள் பார்த்த திரைப்படத்தின் நாயகி வட இந்தியர்கள் பாணியில் அவளது இடது நாசியில் மூக்குத்தி அணிந்திருந்தாள்... அதைக் கண்டதும் அவனுக்குத் தனது அன்னையின் ஞாபகம்... தந்தைக்கு அன்னையின் மூக்குத்தி மீது தீராத காதல் இருப்பதைக் கண்டு வளர்ந்ததாலோ என்னமோ அவனுக்கும் அன்னையின் மூக்குத்தி மிகவும் பிடிக்கும்...

"ஹனி, நீயும் இது போல் மூக்குத்தி குத்திக்கிட்டா அழகாயிருப்படா..." என்க...

"என்னது மூக்குத்தியா...?" என்று முகத்தைச் சுளித்த மது,

"நீ தெருவோர கடைகளில் சாப்பிடும் போதே உன்னைப் பத்தி எனக்குப் புரிஞ்சி போச்சு இந்தர்... நீ எந்தளவுக்கு லோ க்ளாஸ்ன்னு... உன் ரசனை என்ன இந்தளவுக்குக் கேவலமா இருக்கு... நீயும், உன் ரசனையும்... லூசு போடா..." என்று அவள் அவனைத் திட்டிவிட...

அவளது வார்த்தைகள் கேட்டு அவனது முகமும், மனமும் வாடி போனது... அவன் அப்படி என்ன பெரிதாய்க் கேட்டு விட்டான்... விருப்பம் இல்லை என்றால் அதை நாசுக்காகத் தெரிவித்து இருக்கலாமே... அதை விட்டு விட்டு அவள் இப்படி எடுத்தெறிந்து பேசியது அவனுக்கு வருத்தமாக இருந்தது... அதை விட அவளது வார்த்தைகள் அவனுக்கு மிகுந்த அவமானத்தை அளித்தது...

எளிமையாக இருப்பது அத்தனை குற்றமா...? நமது பண்பாட்டை, பாரம்பரியத்தை விரும்புவது அத்தனை கேவலமா...? அவனுக்கு மது பேசுவது புரியவில்லை... பிடிக்கவுமில்லை...

எப்போதும் போல் அவள் கோபம் கொள்ள... அவன் சலிக்காது அவளைச் சமாதானப்படுத்தி அவளை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தான்... அன்பை கொடுப்பதற்கு அவன் என்றுமே தயங்கியது இல்லை... அதனால் தான் அவன் ஈகோ இல்லாது காதலியிடத்தில் இறங்கிப் போனான்... அப்போதே அவளைத் தன்னில் சரிபாதியாக எண்ணினான்... ஆனால் அதற்கான எதிர்வினை அவளிடம் இருந்து வருகிறதா என்பதை அவன் கவனிக்கத் தவறினான்... போகப் போகச் சரியாகி விடுவாள் என்று அவன் தன்னைத் தேற்றிக் கொண்டான்...

அன்பு மட்டுமே போதிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவன் அவன்... அதனால் அவன் அந்த அன்பை அவளுக்குத் தாராளமாக அள்ளி அள்ளி கொடுத்தான்... அதை வஞ்சினம் கொண்ட வஞ்சிக் கொடியாள் வேண்டுமென்றே உதாசீனப்படுத்தினாள்...

*******************

விவேக் மும்பையில் தனது அலுவலக வேலைகளை எல்லாம் முடித்து விட்டு டெல்லியில் இருக்கும் தனது அன்னையைக் காண வேண்டி விமானத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தான்... தந்தை இறந்ததில் இருந்து அவன் தனது தாத்தாவிடம் வளர்ந்து வந்தான்... அன்னை தாத்தாவோடு சண்டை போட்டுக் கொண்டு தங்கையை அழைத்துக் கொண்டு டெல்லி வந்து விட்டார்... தகப்பனது இறப்பிற்குத் தாத்தா நியாயம் செய்யவில்லை என்பதே அவரது கோபத்திற்குக் காரணம்...

ஆனால் தாத்தா தனது தந்தை இறப்பிற்கான காரணத்தை அவனிடத்தில் விளக்கிக் கூறி விட்டார்... தந்தை செய்தது பெரும் தவறாகவே அவனது மனதில் பட்டது... எத்தனை பகை இருந்த போதும் தந்தை அத்தனை பிஞ்சு உயிர்களைப் பறித்தது கொஞ்சமும் நியாயம் இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது... அதனால் அவன் தாத்தா பக்கம் நின்றான்... அதைக் கண்டு அன்னைக்கு அவன் மீது சிறிது கோபம் இருக்கிறது... ஆனால் அவன் அன்னை, தங்கை மீது பாசமாக இருந்தான்...

பரம்பரை தொழிலில் இருந்து சற்று விலகி விவேக் மற்ற தொழில்களில் கால் பதிக்கத் தொடங்கினான்... அதில் அவன் வெற்றி பெறவும் அவனது தாத்தா அவனை முழுமனதாக ஊக்குவித்தார்... அவர் பேரன் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்... அதனால் தான் அவனால் தாத்தாவை விட்டு விட்டு அன்னையுடன் செல்ல முடியவில்லை... ஆனால் நேரம் கிடைக்கும் போது எல்லாம் தாய், தங்கையைப் பார்க்க ஓடி வந்துவிடுவான்...

இப்போது அவர்கள் இருவரை விட வேறு ஒருத்தி அவனை மிகவும் கவர்ந்து இழுத்து அடிக்கடி அவனை இங்கு வரவழைக்கிறாள்... அவள் தான் அவனது மாமன் மகள் மதுமிதா... இதோ இப்போதும் அவளைக் காணத் தான் அவன் பரபரப்பாகக் கிளம்பி வந்தான்... மாமனும், அத்தையும் விபத்தில் இறந்து போனதும் கடனில் அத்தனை சொத்துக்களையும் இழந்து அநாதையாய் அவனது

தாயிடத்தில் அடைக்கலமாகி இருக்கும் அவனது அழகு சித்திரம் அவள்...

அவன் அழைப்பு மணியை அடித்ததும் வீட்டின் கதவைத் திறந்த இருபது வயது அழகிய பெண்ணின் முகத்தில் அவனைக் கண்டதும் வெட்கம் அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டிக் கொண்டது... அவளைப் பார்வையால் பருகிக் கொண்டே உள்ளே நுழைந்தவன்,

"எப்படியிருக்க மது...?"

அதுவரை தலைகுனிந்திருந்தவள் அவனது வார்த்தையில் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவள் அச்சத்துடன் விழிகளை உருட்டியபடி,

"அத்தை வீட்டில் இல்லை... மது காலேஜ் போயிருக்கிறாள்..." என்க...

"அது தெரிந்து தானே நான் வந்திருக்கிறேன்... உன் கூடத் தனியா இருக்கணும்ன்னு..." என்று கூறியவன் வீட்டின் கதவை மூடித் தாழிட்டான்...

அவனது செய்கையைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமிதா... யாருமில்லா தனிமையில் அழகு தேவதையாய் நின்றிருந்தவளின் அழகு அவனைப் பித்தம் கொள்ளச் செய்தது... அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள அவனது இளமை உணர்வுகள் துடித்தது...

மதுமிதா அருகில் நெருங்கி வந்தவன், "மது, ஐ லவ் யூ..." என்றான் காதலாக...

அவனது வார்த்தைகள் கேட்டு அவள் மிரட்சியுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்... இந்தக் கொஞ்ச மாதங்களாகவே விவேக்கின் பார்வையில் இருந்த வித்தியாசத்தை அவள் உணர்ந்தே இருந்தாள்... அதனால் தான் அவளுக்கு மிகுந்த பயமாக இருந்தது... இது சரி வருமா என்று...???

"உனக்கு என்னைப் பிடிக்காதா மது...?" அவளது மனம் அறிந்தவனாய் அவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்...

"இல்லை அத்தான்..."

"எது இல்லை...?"

"உங்களைப் பிடிக்கும்..."

"அதை வாய் வார்த்தையா சொல்லு...?"

"இது வேண்டாம் அத்தான்... உங்க வசதி எங்கே...? நான் எங்கே...?"

"நீ எனக்கு மாமா மகள்... அது மட்டும் தான் என் நினைவில் இருக்கு... வேறு எதுவும் என் நினைவில் இல்லை..."

"அத்தான்..."

"உன் அத்தானே தான் மது..." என்றவன் ஆசையுடன் அவளது மதிமுகம் நோக்கிக் குனிந்தான்...

அவனது அருகாமையில் அவள் தன்வசமிழந்து மெல்ல தனது விழிகளை மூடிக் கொண்டாள்... அதையே சம்மதமாக எண்ணி அவன் அவளது இதழை முற்றுகையிட்டான்... ஆணின் இளமை உணர்வுகள் ஒற்றை இதழொற்றலோடு அடங்கி விடக் கூடியதா...? ஆழிப் பிரவாகமாய்ப் பொங்கி எழுந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது அவன் அவளுள் புதைந்தான்... அன்பிற்காக ஏங்கியிருந்த அந்தச் சின்னப் பெண் அவனின் அன்பை அப்படியே கிரகித்துக் கொண்டு அவனோடு அடைக்கலமானாள்...

இன்றோடு உலகம் முடிந்து விடுவது போலிருந்தது விவேக்கின் செயல்பாடுகள்... அடுத்த இரண்டு மணி நேரம் அவன் அவளைத் தன்னை விட்டு விலக அனுமதிக்கவில்லை... அவளை முழுவதுமாய்த் தன்னுள் ஊற்றிக் கொள்ளும் வேகம் அவனிடத்தில் தெரிந்தது...

முக்காலத்தை முன்பே அறியும் முனிவர்கள் போன்று விவேக் தன் எதிர்காலத்தை முன்பே அறிந்திருந்தானோ...? அதனால் தான் என்றும் தடுமாறாத அவனது மனம் இன்று தடுமாறியதோ...? இனி அவளைக் காணவே முடியாது என்பதினை அவனையும் அறியாது அவன் அந்தக் கணம் உணர்ந்திருந்தானோ...!

விதி விகாரமாய்ச் சிரித்தது அவனைக் கண்டு...!!!

தொடரும்...!!!

*****************************

"மது..."

தன்னவளின் தலையைக் கோதிக் கொடுத்த விவேக் அவளைத் தவிப்புடன் பார்த்தான்... எங்கே அவள் தன்னைத் தவறாக எண்ணி விடுவாளோ என்று அவன் மனதிற்குள் பயந்து போனான்...

மதுமிதாவோ, "அத்தான்..." என்றழைத்தபடி அவனது நெஞ்சில் சுகமாய்ப் புதைந்து கொண்டாள்... அவளது முகத்தில் கோபம் இல்லை, அருவருப்பு இல்லை, தவிப்பு இல்லை... மாறாக அவளது மதி முகத்தில் மகிழ்ச்சியும், வெட்கமும் மட்டுமே போட்டி போட்டது...

"ஐயம் சாரி மது..." தவிப்புடன் தன்னிடம் மன்னிப்பு கேட்டவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"நடந்த தவறுக்கு நானும் தான் காரணம்... நீங்க மட்டும் ஏன் மன்னிப்பு கேட்கிறீங்க...?"

"என்னுடைய தவறு அதிகம் என்பதால் தான் மன்னிப்பு கேட்கிறேன்..." என்றான் அவன் குற்றவுணர்வுடன்... உணர்வுக்கு அடிமையாகிப் போன தன்னை அவன் அறவே வெறுத்தான்...

"அழகான தவறுன்னு நினைச்சுக்கோங்க..." என்றாள் அவள் புன்சிரிப்புடன்... அவள் கூறியதைக் கேட்டு அவனது முகம் மலர்ந்தது...

"நீ இவ்வளவு பேசுவியா...?" என்று அவன் ஆச்சிரியத்துடன் அவளைப் பார்த்தான்...

"ம்... உங்க கிட்ட மட்டும்..." என்றவள் நாணத்துடன் எழுந்து சென்று விட்டாள்...

விவேக் உற்சாகமான மனநிலையுடன் குளியலறைக்குள் நுழைந்தான்... தன்னை ஆணாகக் கர்வம் கொள்ளச் செய்த பெண்ணவளின் மென்மையை நினைத்தவனின் உதடுகளில் புன்னகை மலர்ந்தது... அதே சந்தோசத்துடன் குளித்து முடித்து விட்டு மதுமிதாவைத் தேடி அவன் சென்றான்...

அவளும் குளித்து விட்டு வந்து சமையலறையில் ஏதோ செய்து கொண்டிருந்தாள்... சத்தம் செய்யாது அவள் அருகே சென்றவன் பின்னாலிருந்து அவளை அணைத்துக் கொண்டு அவளது தோள்வளைவில் நாடி பதித்து அவள் என்ன செய்கிறாள் என்று எட்டிப்பார்த்தான்...

"ஹேய் பொண்டாட்டி... என்னடி பண்ற...?" அவனது உரிமையான அழைப்பில் அவளது உள்ளம் சிலிர்த்ததில் அவளது மேனியும் சிலிர்த்தது... அதை அவனும் உணர்ந்தான்... அவளது சிலிர்ப்பு அவனையும் தாக்கியது சுகமாய்...

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா மது...?"

தன்னவனின் வார்த்தையில் அவள் கண்ணீர் மல்க அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனது அந்தஸ்து எங்கே...? அவள் எங்கே...? இது சாத்தியமா...? அவளால் நம்ப முடியவில்லை...

"ம்... ம்..." என்று அவள் சந்தோசமாய்த் தலையசைத்த போது அவளது விழிகளில் இருந்து விழிநீர் தெறித்து

விவேக்கின் மீது விழுந்தது... அதைக் கண்டவன் அவளை அணைத்துக் கொண்டு,

"நல்ல விசயம் பேசும் போது எதுக்கு இப்படி அழற...?" என்று அவளைச் செல்லமாய்க் கடிந்தவன்,

"நான் இன்னைக்கே அம்மா கிட்ட நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசப் போகிறேன்..." என்க... அதில் அவள் மிரட்சியுடன் அவனைப் பார்த்தவள்,

"நீங்க எத்தனை நாள் தங்கியிருப்பீங்க...?"

"நைட் ஃப்ளைட்க்கு கிளம்பணும்... ஏன்டா...?"

"அப்போ இன்னைக்கு நீங்க அத்தை கிட்ட எதுவும் பேச வேண்டாம்... அடுத்தத் தடவை வரும் போது பேசுங்க... அப்படியே கையோடு என்னைக் கல்யாணம் பண்ணி உங்க கூடக் கூட்டிட்டு போயிருங்க... ப்ளீஸ்..." என்று இறைஞ்சுதலுடன் கூறியவளைக் கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது...

அந்தக் கணம் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்கிற எண்ணம் அவனுள் வெறியாய் எழுந்தது... ஆனால் அவனது தாத்தா வீட்டிற்குள் மதுமிதா தனது மனைவியாகக் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்று அவன் பிரியப்பட்டான்... அங்கு இருக்கும் அவனது சொந்தங்கள் யாரும் அவளைத் தவறாகப் பேசிவிடக் கூடாது என்று அவன் நினைத்தான்... அதனால் தான் அவன் அமைதி காத்தது... இப்போது அவள் பேசுவதைக் கேட்கும் போது அவன் யோசிக்க ஆரம்பித்தான்...

"நான் இன்னைக்கு ஊருக்கு போகலை..." என்றான் மொட்டையாக... அதில் அவளது முகம் மலர்ந்தது... அவளது அழகு முகத்தைக் கையில் ஏந்தியவன்,

"உன்னைக் கல்யாணம் பண்ணி என் மனைவியா என் கூட அழைச்சிட்டுப் போகிறேன்... இப்ப சந்தோசமா...?" என்று

அவன் கேட்க... அவளது விழிகள் வியப்பில் சந்தோசமாய் விரிந்தது...

"ரொம்ப ரொம்பச் சந்தோசம் அத்தான்..."

"இப்போ நம்ம சந்தோசத்தை நாம கொண்டாடலாமா...?" என்று அவளது முகம் நோக்கி குனிந்தவனைக் கண்டு அவள் பயத்துடன்,

"அத்தை வந்திர போறாங்க..." என்க...

"அப்போ அத்தை வரலைன்னா உனக்கு ஓகேவா...?" என்றவன் அடுப்பை அணைத்து விட்டு உல்லாசமாய் அவளைத் தனது கைகளில் அள்ளிக் கொண்டான்...

"அத்தான்..." என்று சிணுங்கியவளிடம்,

"உன் அத்தை சோசியல் சர்வீஸ் முடிஞ்சு வீட்டுக்கு வர ஈவினிங் ஆகிரும்... அதனால் இப்போ இந்த அத்தானைக் கவனிம்மா..." என்றவன் அதற்கு மேல் அவளைப் பேச விடவில்லை...

மதுமிதாவின் ஆயுள் இந்த ஒரு வாரம் தான் என்பதை அவன் முன்னமே அறிந்திருந்தானோ...? அதனால் தான் என்னமோ அவன் அவளுக்குச் சந்தோசத்தை வாரி வாரி வழங்கினான்... சில தவறுக்குப் பின்னால் சில நன்மைகள் இருக்கும் போலும்... அது போல் தான் விவேக்கின் இந்தத் தவறுக்குப் பின்னால் மதுமிதா என்கிற சின்னஞ்சிறு பெண்ணின் சந்தோசம் அடங்கியிருந்தது... சில வருடங்களாகத் துன்பத்தை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருந்த அந்த அபலைப் பெண் அவனுள் தனக்கான மகிழ்ச்சியைத் தேடி அவனிடம் தன்னை முற்றிலும் தொலைத்தாள்...

மதுமிதாவிடம் உறுதியளித்தது போல் விவேக் அன்றே தனது அன்னையிடம் தங்களது திருமணம் பற்றிப் பேசிவிட்டான்... மகனது விருப்பம் அறிந்து வினோதினி அதிர்ந்து போனார்... இளம் தொழிலதிபனான தனது மகனுக்கு அன்னக்காவடியான மதுமிதா மனைவியா...?

அவள் அவரது தம்பி மகளாக இருந்த போதும் இந்த விசயத்தை அவரால் ஜீரணிக்க முடியவில்லை... அவரது விழிகள் குரோதத்துடன் மதுமிதாவைப் பார்த்தது... அவளோ அதில் அச்சம் அடைந்தவளாய்ச் சுவரோடு ஒன்றி நின்று கொண்டாள்....

"அம்மா... இன்னும் ஒரு வாரத்தில் எனக்கும், மதுவுக்கும் கல்யாணம் பிக்ஸ் பண்ணிட்டேன்... தாத்தாவும் ஓகே சொல்லிட்டார்..." என்றவன் திருமண வேலைக்கான தனது முன்னேற்பாடுகளை அவரிடம் மளமளவென ஒப்புவிக்க...

வினோதினி திகைத்துப் போனார்... மகனின் வேகம் அறிந்த ஒன்று தான்... ஆனால் இத்தகைய வேகத்தை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... இந்த ஒரு வாரத்திற்குள் அவர் ஏதாவது செய்து இந்தத் திருமணத்தை நிறுத்தியாக வேண்டும்... ஆனால் என்ன செய்வது என்று தான் அவருக்குத் தெரியவில்லை...

மாதுரிமா இந்த விசயத்தைக் கேள்விப்பட்டதும் அலட்சியமாய்த் தோளைக் குலுக்கினாள்...

"உனக்குப் புத்தி கெட்டு போச்சுண்ணா..." என்று அவள் கேலி புன்னகையுடன் அவனைக் கடந்து சென்றுவிட்டாள்... அதைக் கண்டு மதுமிதா முகம் வாடிப் போனது...

"அவள் கிடக்கிறாள் விடு மது... உனக்கு நான் மட்டுமே முக்கியம்... எனக்கு நீ மட்டும் தான் முக்கியம்... என்னை மட்டும் பார்... என் அம்மா, தங்கச்சியைப் பத்தி யோசிக்காதே... கல்யாணம் முடிஞ்சு உன்னை நான் கையோடு கூட்டிட்டு போயிருவேன்..."

அவனது வார்த்தையில் அவள் நிம்மதி அடைந்தாள்... அவன் மட்டுமே அவளது வாழ்க்கையின் ஆதாரமாய்...!

**********************

டெல்லி விமான நிலையத்தில் இருந்து வெளியில் வந்த இந்திரஜித்திற்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது... மதுவிடம் அவன் சொன்ன நாளுக்கு இரண்டு நாள்

முன்னதாகவே அவன் சென்னையில் இருந்து இங்கு வந்து விட்டான்... திடுமென அவள் முன் போய்த் தான் நின்றதும் வியப்பில் அகன்று மலரும் அவளது விழிகளை இப்போதே அவன் தன் மனக்கண்ணில் கனவு கண்டு சந்தோசம் கொண்டான்...

விடுதி வந்து சேர்ந்தவனை அவனது நண்பர்கள் கூட்டம் பிறந்தநாள் விருந்து என்று நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் சென்று விட்டது... அங்குச் செல்லும் வரை உற்சாகமாய் இருந்த இந்திரஜித்தின் மனநிலை அங்குச் சென்றதும் அப்படியே குறைந்து போய் அவனது மனதில் குழப்ப மேகங்கள் சூழ்ந்து கொண்டது...

அதே விடுதியின் மற்றொரு மேசையில் மது அமர்ந்திருந்தாள்... அவள் மட்டும் தனியே என்றால் அவன் வருந்தியிருக்க மாட்டான்... ஆனால் அவளுடன் வேறு ஒரு ஆடவன் இருந்ததைக் கண்டு அவனது முகம் யோசனையில் ஆழ்ந்தது... அதுவும் சாதாரணமாக இருந்தால் பரவாயில்லை... அந்த ஆடவனுடன் அத்தனை நெருக்கமாக அவள் அமர்ந்திருந்தது கண்டு அவன் பெரும் யோசனையில் ஆழ்ந்தான்...

'ஒருவேளை அவன் அவளது தோழனாக இருக்கலாம்...? நீ எதுக்கு வீணே அவளைச் சந்தேகப்படுற...?' என்று தனது மனதினை அவன் தேற்றிக் கொண்ட போதும், அவர்களது உறவு தோழமையைத் தாண்டிய ஒன்றாகவே அவனுக்குத் தோன்றியது...

'அப்படி என்றால் நான் யார் அவளுக்கு...?' இந்தக் கேள்வி மனதில் எழுந்த அடுத்த நொடி அவன் வியர்த்து விறுவிறுக்க நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டான்...

"இந்தர்... வாட் யா...?", "இந்தர்... வாட் ஹேப்பண்ட்...", "இந்தர்... க்யாவுஹா தோஸ்த்...?"

நண்பர்கள் அனைவரும் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் 'சாரி' என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்து விட்டு இந்திரஜித் உடனே அங்கிருந்து கிளம்பி விட்டான்...

எப்படி விடுதி வந்து சேர்ந்தான் என்று அவனுக்குத் தெரியாது... வந்தவன் அப்படியே படுக்கையில் விழுந்து விழிகளை மூடிக் கொண்டான்... மூடிய விழிகளுக்குள் மது வந்து கவர்ச்சியாய்ச் சிரித்தாள்... 'எதற்காகடி என்னை ஏமாத்தின...?' என்று அவன் அவளிடம் மனதிற்குள் சண்டை போட்டான்... வாழ்வே சூன்யமானது போல் ஒரு தோற்றம் அவனுள்...

மறுநாள் அவன் மதுவை சந்தித்த போது அவன் எதிர்பார்த்தது போல் அவள் விழிகளை வியப்பில் விரிக்கத் தான் செய்தாள்... ஆனால் அவன் தான் அவளைச் சந்தேகத்துடன் பார்த்தான்... தனக்கான அவளது இந்த மகிழ்ச்சி உண்மை தானா என்று... ஏனெனில் நேற்று அவள் இதை விடச் சந்தோசமாக இருந்தாளே...

"என்ன இந்தர் அப்படிப் பார்க்கிற...?"

"நேத்து ஹோட்டலில் உன் கூட இருந்தது யார் மது...?"

அவன் நேரிடையாக அப்படிக் கேட்டதும் மது திடுக்கிட்டுப் போனாள்... ஏனெனில் நேற்று அவளுடன் நட்சத்திர விடுதிக்கு வந்திருந்தது அவளது அத்தை மகன் கிஷோர்... அவளது அண்ணனின் திருமணத்திற்காகக் கிஷோர் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்திருந்தான்... அத்தை, மாமா வரவில்லை... அவன் மட்டும் வந்திருந்தான்... அத்தோடு அவனுக்கும் இந்தியாவில் தொழில் நிமித்தமாய் வேலை இருந்தது...

"என்னை நீ சந்தேகப்படுறியா...?" பதிலுக்கு அவள் கேள்வி கேட்க, அதில் அவன் சற்று திணறித் தான் போனான்... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"முதலில் நான் கேட்டதுக்குப் பதில் சொல் மது..." சிறு கண்டிப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"நீ என்னை நம்பலை இல்லை... அவன் என் அண்ணன் போதுமா...?" என்றவள் வேண்டுமென்றே கண்களைக் கசக்கினாள்...

நேற்றைய அவளது நெருக்கம் சகோதரனுடனான நெருக்கம் மாதிரியாகவா இருந்தது...? அவனுக்கு அதை நினைத்து நினைத்து தலைவலி வந்தது தான் மிச்சம்... அதை விட அவள் அழுதது அவனுக்கு இரக்கமாக இருந்தது...

"சரி, சரி... நான் உன்னை நம்பறேன்... நீ அழாதே..." கடைசியில் அவன் தான் அவளைத் தேற்றினான்... மது சிறிது நேரம் பந்தா காட்டிவிட்டு அதற்குப் பின்னரே சமாதானமானாள்...

என்ன தான் சமாதானமான போதும் இந்திரஜித்தின் காதல் மனதில் அந்தச் சம்பவம் சிறு விரிசலை உருவாக்கி இருந்தது... அன்பு கொண்டு இறகு போல் லேசாய் இருக்கும் தனது மனதிற்கு இந்தக் காதல் பாரம் தேவை தானா என்கிற கேள்வியையும் அது உண்டாக்கி இருந்தது...

அன்றே மாதுரிமா தனது தாயிடம் இந்திரஜித்தின் சந்தேகத்தைப் பற்றிக் கூற... வினோதினி மிகத் தீவிரமாய் அது பற்றி யோசிக்க ஆரம்பித்தார்...

********************

சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரின் திருமணநாள் மகள், மகன் இருவரின் வாழ்த்தோடு அழகாக விடிந்தது... அதிலும் பிரகதீஸ்வரிக்கு தனது மாமூவின் பிரத்யேக முத்தத்தோடும், பரிசோடும் ஆரம்பித்தது... இருவரும் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு ஆசிரமத்திற்குக் கிளம்பிச் சென்றனர்... உடன் ஜெகதீஸ்வரியும் தனது காரில் அவர்களைப் பின்தொடர்ந்தாள்...

அங்கு மூவரும் சென்ற போது சூர்யா அவர்களுக்காகக் காத்திருந்தான்... அவன் என்று இல்லை அவனோடு இந்த ஆசிரமத்தில் தங்கிப் படித்து இப்போது நல்ல நிலையில் இருக்கும் அனைவரும் அங்கு வருகை தந்திருந்தனர்... தங்களுக்கு நல்வழி காட்டிய தெய்வத்தின் திருமணநாளை அவர்கள் எல்லோருமே திருவிழா போல் கொண்டாடுவார்கள்... சித்தார்த் அவர்களது மகிழ்ச்சிக்காக

எதையும் தடை சொன்னது கிடையாது... அது போல் இந்த விழாவையும் அமைதியாக ஏற்றுக் கொண்டான்...

சூர்யா பிறந்த குழந்தையாக இருக்கும் போது இந்த ஆசிரமத்திற்கு வந்தவன்... அங்கிருந்தபடி நன்கு படித்து இன்று ஆட்சியராகப் பெரிய பதவியில் அமர்ந்திருக்கிறான்... அதற்கு முழுக் காரணம் சித்தார்த்... அதனால் அந்த நன்றியுணர்வு அவனுக்கு அதிகம் இருந்தது...

தன்னையே சுற்றி வரும் ஜெகதீஸ்வரியின் காதல் பார்வையைக் கண்டு கொள்ளாது அவன் சுறுசுறுப்பாய் அங்குள்ள வேலைகளைச் செய்து கொண்டிருந்தான்... அவனைப் பொறுத்தவரை ஜெகதீஸ்வரி தெய்வத்தின் மகள்... அவளும் அந்தத் தெய்வத்திற்குச் சமமானவள்... அவளைக் காதலிப்பதோ, திருமணம் முடிப்பதோ பாவத்துக்குரிய செயல் என்றே அவன் எண்ணினான்...

ஜெகதீஸ்வரி தனது பார்வையால் சூர்யாவைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தாள்... அவளது மனமோ தான் அவனிடத்தில் காதலைச் சொன்ன அந்தக் கணத்தை நினைத்துப் பார்த்தது...

சூர்யா தனது படிப்பு முடிந்து ஆசிரமத்தை விட்டு வெளியில் செல்லும் போது அவள் அவன் முன் வந்து நின்றாள்... அப்போது அவள் மருத்துவம் படித்துக் கொண்டிருந்தாள்... ஏனோ சின்ன வயதில் இருந்து அவளுக்கு அவன் மீது ஒருவித ஈர்ப்பு இருந்து கொண்டே இருந்தது... விவரம் புரியும் வயதில் அது காதல் என்பதை உணர்ந்தவள் அதை அவனிடத்தில் சொல்வதற்காகச் சரியான சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்...

தன் முன் வந்து நின்றவளைக் கண்டு சூர்யா வியப்பாய்ப் பார்த்தான்... இளவரசியான அவளை ஆசிரமத்தில் அடிக்கடி பார்த்திருக்கிறான்... அதுவும் தள்ளியிருந்து... இன்று அவள் தன்னருகில் நிற்பதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியத்துடன் சந்தோசமாகவும் இருந்தது...

"சொல்லுங்க மேம்..." என்றான் பணிவாக...

அவனது 'மேம்' என்ற வார்த்தையில் அவள் திகைத்துப் போனாலும் தான் சொல்ல வந்ததைச் சொல்லாது செல்ல அவளுக்கு விருப்பம் இல்லை...

"ஐ லவ் யூ சூர்யா..." என்று பட்டென்று தேங்காயை உடைத்தது போல் தனது காதலை அவனிடம் உடைத்துக் கூறிவிட்டாள்...

"ஐயோ..." அவள் காதலைச் சொன்னதும் இது தான் அவனது வாயில் இருந்து உதிர்ந்த ஒற்றைச் சொல்...

அதைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்... அவள் எங்கே...? அவன் எங்கே...? அவனுக்கு மனதில் நடுக்கம் எழுந்தது... அவன் கனவில் கூட இப்படி ஒன்றை கற்பனை செய்தது கூடக் கிடையாது...

"நான் உங்களை உங்களுக்காகவே லவ் பண்றேன்... அதான் இப்ப வந்து என் காதலைச் சொன்னேன்... உங்களுக்கு வேலை கிடைச்சு அதுக்கு அப்புறம் உங்க தகுதி பார்த்து நான் என் காதலைச் சொன்னால் அது என் காதலுக்கு மரியாதை இல்லை... நீங்க எப்படி இருந்தாலும் என் காதல் மாறாது என்பதற்காகத் தான் இப்போ நான் உங்க கிட்ட சொன்னது... இப்பவே நீங்க பதில் சொல்லணும்ன்னு அவசியம் இல்லை... நல்லா யோசிச்சுப் பதில் சொல்லலாம்... அது எத்தனை வருசம்ன்னாலும் பரவாயில்லை... நான் காத்துக்கிட்டு இருப்பேன்..."

"இல்லை மேம்... நான் என்றுமே உங்க கிட்ட கை நீட்டி யாசகம் வாங்கும் பிச்சைக்காரன் தான்... உங்க காதலுக்கான தகுதி எனக்கு இல்லை..." என்று அவன் முடிவாய் மறுத்து விட்டுச் சென்றுவிட்டான்...

அதற்குப் பின் இத்தனை வருடங்களாக ஜெகதீஸ்வரி சூர்யாவைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறாள்... அவனது கடைக்கண் பார்வை கூட இவள் மீது விழுந்தது இல்லை... அதைக் கண்டு அவளுக்கு மனம் வலிக்கும்...

இருந்தாலும் ஒருவித அழுத்தத்துடன், பிடிவாதத்துடன் அவள் அவனை அமைதியாகப் பின்தொடர்கிறாள்... இதோ இருபத்தியாறு வயது வரை அவனுக்காகத் தனிமை தவம் இருக்கிறாள்... இது எல்லாம் அவனுக்கு என்று புரியுமோ...???

அப்போது சித்தார்த் சூர்யாவை தன்னருகில் வருமாறு அழைத்தான்... உடனே பணிவுடன் ஓடி வந்த அந்த இளம் ஆட்சியரைக் கண்டு சித்தார்த்திற்குப் பெருமையாக இருந்தது... ஆசிரமத்தில் வளரும் அனைத்து பிள்ளைகளும் அவனது பிள்ளைகள் அல்லவா... அவர்களது முன்னேற்றத்தில் அவனும் மகிழ்ந்தான் ஒரு தந்தையாய்...

"சார்..." எத்தனை உயரம் சென்றாலும் சூர்யாவின் பணிவு மட்டும் மாறவில்லை... அதே சூர்யாவாகத் தான் அவன் இருந்தான்...

"எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போகிற சூர்யா...? இப்பவே வயசு முப்பதாச்சே... நான் பொண்ணு பார்க்கவா..?" ஏனெனில் ஆசிரமத்தில் வளரும் குழந்தைகளுக்குச் சித்தார்த் தான் தந்தை ஸ்தானத்தில் இருந்து திருமணம் முடித்து வைப்பது... அந்த உரிமையில் அவன் அப்படிக் கேட்டான்...

தந்தை கேட்டது கண்டு ஜெகதீஸ்வரி அதிர்வுடன் சூர்யாவைப் பார்த்தாள்... அவனோ இவளை திரும்பியும் பார்க்கவில்லை...

"உங்க விருப்பப்படி செய்யுங்க சார்..." என்றவன் சம்யுக்தாவைப் பற்றிச் சொல்லி,

"சம்யுவை என் தங்கையா தத்தெடுத்து இருக்கிறேன்... எனக்குத் திருமணம் முடியும் இடத்தில் அவளுக்கும் திருமணம் முடிந்தால் ரொம்பச் சந்தோசம் சார்... பெண் எடுத்து, பெண் கொடுப்பது போல்... அப்போ தான் அவளை என் கண் பார்வையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும்... இந்தச் சின்ன வயசில் அவள் ரொம்பக்

கஷ்டப்பட்டுட்டா சார்..." என்றவனின் விழிகள் கலங்கியது தங்கையை நினைத்து...

"அந்தப் பொண்ணுக்கு ரொம்பச் சின்ன வயசாயிருக்கே சூர்யா... இப்போ அவளுக்குக் கல்யாணம் அவசியம் தானா...?" சம்யுக்தாவின் இளம் வயதினை நினைத்து யோசித்தான் சித்தார்த்...

"கல்யாணம் அவளோட பாதுகாப்புக்காகத் தான் சார்... அதனால் தான் இந்த மாதிரி பெண் எடுத்து, பெண் கொடுப்பது பற்றிச் சொல்கிறேன்... அவர்கள் வீட்டுப் பெண் என்னுடன் வாழ வேண்டும் என்கிற பயம் அவர்களுக்கும் இருக்கும் இல்லையா...?"

சூர்யா தொலைநோக்கு பார்வையோடு கூறினான்... சித்தார்த்திற்கும் அதுவே சரியென்று பட்டது... ஆனால் அதைக் கேட்ட ஜெகதீஸ்வரி மனதிற்குள் செத்துப் போய்விட்டாள்... தாங்க முடியாத வேதனையில் அவள் விருட்டென்று அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டாள்... அவள் சென்ற வெளிநாட்டு காரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் சூர்யா... அவனது பல வருட சம்பளத்தைச் சேர்த்து வைத்தால் கூட அவனால் இது போன்று ஒரு காரை அவளுக்கு வாங்கிக் கொடுக்க முடியாது... அப்படிப்பட்ட தன்னைப் போய் அவள் ஏன் காதலித்தாள்? என்று அவன் மனம் குமைந்து போனான்...

வானில் இருக்கும் மதியவளை எட்டிப்பிடிக்க அவன் பேராசை கொள்ளவில்லை... தன் தகுதி, தராதரம் தெரிந்து அவன் ஒதுங்கிக் கொண்டான்...

ஒரு நாள் பொறுத்துப் பார்த்த ஜெகதீஸ்வரியால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை... அன்றிரவே தனது தந்தையிடம் சென்று நின்றாள்...

"அப்பா..."

"வாடா ஜிக்கி..." சித்தார்த் தனது கையிலிருந்த ஐபேட்டை தள்ளி வைத்து விட்டு மகளை அருகில் அழைத்தான்...

அவள் தந்தை அருகில் அமர்ந்து அவனது மடியில் படுத்துக் கொண்டாள்... அதைக் கண்ட பிரகதீஸ்வரி,

"நல்லாயிருக்கு அப்பாவும், மகளும் பண்றது... அவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணாம இன்னமும் மடியில் போட்டு கொஞ்சிக்கிட்டு..." என்று அவள் கணவனை முறைத்தாள்...

"ஜிக்கி, உன் அம்மாவுக்குப் பொறாமைடா..." என்று மகளிடம் உரைத்தவன்,

"என் மகளுக்குப் பேத்தி, பேரன் வந்தாலும் அவள் என் மடியில் படுப்பாள்... இதில் உனக்கு என்ன பொறாமை...? வேணும்ன்னா நீயும் வந்து படு..." அந்தக் கள்வன் வேண்டுமென்றே தனது மடியைச் சுட்டிக்காட்டி மனைவியிடம் வம்பிழுத்தான்...

"மாமூ, உதை விழும்..." என்று அவள் ரகசியமாக உதட்டை அசைத்தாள்... அதைக் கண்டு அவனது புன்னகை விரிந்தது...

திடீரென்று மகளது முதுகு அழுகையில் குலுங்கவும் சித்தார்த்தின் புன்னைகை மறைந்தது... அவன் திகைத்துப் போய் மகளைப் பார்த்தான்... மகளின் அழுகை அந்தத் தகப்பனை நிலைக்குலைய செய்து செயலிழக்க வைத்தது...

"ரதிம்மா..."

சர்வ வல்லமை படைத்த அந்தத் தகப்பன் மகளின் மீதான பாசத்தில் வலிமை இழந்து ஆறுதலுக்கு மனைவியைத் தேடினான்... இந்த மாதிரி இக்கட்டான நேரத்தில் பெண் என்பவள் எளிதாக அறிவுப்பூர்வமாக அந்தச் சூழ்நிலையைக் கையாள்வாள்... அது போல் தான் பிரகதீஸ்வரி அதைக் கையாண்டாள்...

"ஜிக்கி என்னாச்சு...? இங்கே பார்..." என்று அவள் மகளை எழுப்ப முயல...

அதிகச் சிரமம் கொடுக்காது மகளே எழுந்து அமர்ந்தாள்... வேதனையில் கசங்கிய முகத்துடன் தந்தையைப் பார்த்தவள்,

"ஏன்ப்பா நான் சூர்யாவுக்கு நல்ல மனைவியா இருக்க மாட்டேனா...? அவங்களுக்குப் பெண் பார்க்கணும்ன்னு நினைச்ச போது உங்களுக்கு ஏன் என் முகம் நினைவில் வரவில்லை...?"

மகளது வார்த்தை கேட்டு பெற்றோர் இருவரும் அதிர்ந்து போயினர்... மகளது மனதில் இப்படியொரு எண்ணம் இருக்கும் என்று அவர்கள் சத்தியமாக நினைத்துக் கூடப் பார்க்கவில்லை...

"இங்கே வா..." என்று மகளை அழைத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்ட சித்தார்த்,

"நீ சூர்யாவை லவ் பண்றியாம்மா...?"

"ம்... ம்... கிட்டத்தட்ட ஏழு வருசமா... அவங்க கிட்ட சொல்லிப் பார்த்துட்டேன்... ஆனா அவங்க என்னை ஏத்துக்க மாட்டேங்கிறாங்க... ஏன்ப்பா நான் அழகாயில்லையா...? நல்லா படிக்கலையா...? ஏன் அவங்களுக்கு என்னைப் பிடிக்கலை...?" என்று ஏக்கத்துடன் கேட்ட மகளைக் கண்டு அவனது நெஞ்சில் உதிரம் வடிந்தது...

அவனது 'ஜிக்கி' எதற்காகவும், யாருக்காகவும் ஏங்க கூடாது... அதுவும் அவளது தகப்பன் உயிரோடு இருக்கும் போது அவள் இப்படி வேதனைப் படலாமோ...?

"உனக்குச் சூர்யா தானே வேணும்... அவனை உன் கழுத்தில் தாலி கட்ட வைக்க வேண்டியது என் பொறுப்பு..." என்றான் சித்தார்த் உறுதியான குரலில்...

"மாமூ..." தயக்கத்துடன் அழைத்தாள் பிரகதீஸ்வரி...

"ரதிம்மா, இதில் நீ குறுக்கே வராதே... இத்தனை வருசத்தில் என் பொண்ணு விரும்பி கேட்டது சூர்யா மட்டுமே... அவனை அவளுக்கு மணம் முடித்துக் கொடுக்க முடியாத

அளவுக்கு அவள் அப்பன் நான் ஒன்றும் வக்கத்து போய்விடவில்லை..." என்று கூறியவனின் குரலில் அத்தனை தீவிரம் இருந்தது...

தகப்பனைப் போல் தாயால் அவசரப்பட முடியவில்லை...

"இங்கே பார் ஜிக்கி... சூர்யாவுக்கும், உனக்கும் ஏற்ற தாழ்வு அதிகம்..."

"என் சொத்தில் பாதியைச் சூர்யா பெயரில் எழுதி வைக்கிறேன்... அப்போ அவன் பணக்காரன் தானே..." என்று சித்தார்த் வேகமாய் மனைவிக்குப் பதிலளித்தான்...

"ஜிக்கி, நான் உன் கிட்ட கேட்டுட்டு இருக்கேன்..." கணவனை முறைத்துக் கொண்டு மகளிடம் கேட்டாள் பிரகதீஸ்வரி...

"எனக்கு அவர் மட்டும் போதும்மா... சொத்து, சுகம் எதுவும் வேண்டாம்..." உறுதியான குரலில் மறுத்த மகளைக் கண்டு அவளுக்கு யோசனையாக இருந்தது... இறுதியில் அவளும் மகளுக்காக இறங்கி வந்தாள்...

மறுநாளே சித்தார்த் சூர்யாவிடம் பேசிய போது அவன் உறுதியாக மறுத்தான்...

"இது சரிவராது சார்..."

"ஏன்...?"

"நான் மேம்மை அப்படிப்பட்ட எண்ணத்தில் பார்க்கவில்லை... அவங்க மேல் மரியாதை இருக்கு, மதிப்பு இருக்கு... ஆனால் அன்பு, காதல் இது எதுவும் கிடையாது... இப்படி இருக்கும் போது கல்யாணம் எல்லாம் எப்படிச் சரிவரும்...?"

"முடிவா என்ன சொல்ற சூர்யா...?" என்று கேட்ட சித்தார்த் தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றான்...

"வேண்டாம் சார்..." தலையைக் குனிந்து கொண்டு சூர்யா முணுமுணுக்க...

"அப்போ நான் உனக்குப் பார்த்திருக்கும் பெண்ணை நீ திருமணம் செய்து கொள்ளச் சம்மதமா...?"

அதில் அவன் சித்தார்த்தை நிமிர்ந்து பார்த்து, "சம்மதம் சார்..." என்றான் தெளிவான முகத்தோடு...

"அந்தப் பெண்ணின் பெயர் ஜெகதீஸ்வரி, டாக்டராக இருக்கிறாள்..."

"சார்..." சூர்யா திகைத்துப் போய் அவனைப் பார்த்தான்...

"என் மகள் என்கிற அடையாளம் இல்லாது அவள் இருந்தால் நீ அவளை ஏத்துக்குவியா சூர்யா...?" இதைக் கேட்கும் போதே சித்தார்த்தின் குரல் தழுதழுத்தது...

"அப்படி எல்லாம் சொல்லாதீங்க சார்..." என்று அவன் சித்தார்த்தின் கைகளைப் பிடித்துக் கொண்டான்...

"அப்போ சம்மதம் சொல்லு..."

"சம்யு..." என்று அவன் இழுத்தான்...

"எனக்கு மகள் மட்டுமல்ல... ஒரு மகனும் இருக்கிறான்... அவன் தனது அக்காவிற்காக என்ன வேணும்ன்னாலும் செய்வான்... அப்படிப்பட்டவன் உன் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னா சொல்வான்..."

மகன் மீதிருந்த நம்பிக்கையில் சித்தார்த்தின் வார்த்தைகள் இறுமாப்புடன் வந்தது... அப்போது அவனுக்குச் சம்யுக்தாவைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது... அவள் படிக்காதது... அவளது குலத் தொழில் குயவு தொழில்... இப்படி எதுவுமே தெரியாது அவளைத் தனது மருமகளாக்கி கொள்ள அவன் நினைத்தான்...

"சார்..."

"மாமான்னு சொல்லு சூர்யா..." என்றவன் நாக்கை கடித்துக் கொண்டு,

"மாமான்னு சொல்லுங்க மாப்பிள்ளை..." என்றான் மரியாதையாக...

"எனக்குச் சார் தான் வருது..." என்றான் சூர்யா பாவமாக...

"என் பொண்ணை வச்சு தான் உங்களுக்கு டிரையினிங் கொடுக்கச் சொல்லணும்..." என்று சிரித்தான் சித்தார்த்...

சூர்யா திருமணத்திற்குச் சம்மதித்து விட்டான் என்று தெரிந்ததும் ஜெகதீஸ்வரி மகிழ்ச்சியாக அவனைத் தேடி வந்தாள்... அவனைக் கண்டதும் அவள் பேச நினைத்த வார்த்தைகள் அத்தனையும் அவளுக்கு மறந்து போனது...

"தேங்க்ஸ் சூர்யா..." கண்கள் கலங்க அவனைப் பார்த்தவளுக்கு நன்றி மட்டுமே நினைவில் நின்றது...

அவளை எப்படி அழைப்பது...? அவளை எப்படிச் சமாதானம் செய்வது...? அவளிடம் எப்படிப் பேசுவது...? என்று எதுவுமே தெரியாது அவன் திணறிப் போனான்... அவனது திணறலை அவள் உணர்ந்தாளோ என்னமோ... அடுத்தக் கணம் அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்... கிடைப்பதற்கு அரிய பொருள் கிடைத்தால் அழுகை மட்டுமே வரும் போலும்... அப்படி ஒரு நெகிழ்ச்சியான மனநிலையில் அவள் இருந்தாள்...

பெண்ணவளின் ஸ்பரிசம் ஆணான அவனின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியதோ... இல்லை அவளது அழுகை அவனது மனதினை கரைத்ததோ... ஏதோ ஒன்று மனதினை உந்த அவனது கைகள் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டது... அதில் அவனை ஏறிட்டுப் பார்த்தவள்,

"உங்களுக்கு இது எல்லாம் தெரியுமா...?" என்று சிறு பிள்ளை போன்று அவள் ஏக்கத்துடன் கேட்க... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இதுவரைக்கும் இது பத்தி எல்லாம் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டது இல்லை... இனி தெரிந்து கொள்கிறேன்..." என்றான் அவன் புன்சிரிப்புடன்...

"என்னை உங்களுக்குப் பிடிச்சியிருக்கா...? இல்லை அப்பா எதுவும் ஃபோர்ஸ் பண்ணினாங்களா...?" தந்தையைப் பற்றித் தெரிந்தவளாய் அவள் கேட்க...

"உங்கப்பா எனக்குப் பார்த்த பெண் நீங்க என்பதால் தான் நான் சம்மதிச்சேன்..." என்று அவன் உண்மையைக் கூறினான்...

அவனின் 'நீங்க' என்கிற விளிப்பே அவனது மனநிலையை அவளுக்கு நன்கு உணர்த்தியது... அவள் மெல்ல அவனது பிடியில் இருந்து விலகினாள்...

"என்னைப் பொறுத்தவரை இது பெரியவங்க பார்த்து வச்ச திருமணம்... இதில் காதல் இருக்கிறதா, பிடிச்சியிருக்கா என்கிற கேள்விகளே அபத்தமாக இருக்கிறது..." என்றவனது வார்த்தையில் காதல் கொண்ட மங்கையவள் மனம் சுணங்கிப் போனது...

"இப்படிக் கஷ்டப்பட்டு நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம் சூர்யா..."

"நான் கஷ்டம்ன்னு சொல்லலையே..."

"இஷ்டம்ன்னும் சொல்லலையே..." என்றாள் அவள் விடாப்பிடியாய்...

"கஷ்டமும் இல்லாது, இஷ்டமும் இல்லாது இந்தத் திருமணம் அவசியமில்லை... இப்படி ஒரு வெறுமையான வாழ்க்கை வாழ எனக்கு விருப்பமும் இல்லை... இந்தக் கல்யாணம் நடக்க வேண்டாம்... நான் அப்பா கிட்ட பேசிக்கிறேன்... நான் சொன்னால் அவர் கேட்பார்... உங்களையும் ஒண்ணும் சொல்ல மாட்டார்..." என்றவள் கிளம்ப ஆயத்தமாக... சூர்யா அவளது கைப்பிடித்துத் தடுத்தான்... அவள் கேள்வியாய் அவனை ஏறிட்டாள்...

"நான் அநாதையா, அன்பில்லாது வளர்ந்தவன்... நீங்க சொல்கிற காதல் எல்லாம் நான் இதுவரை நினைச்சு கூடப் பார்த்தது இல்லை... அதைப் பத்தி யோசிக்கக் கூட எனக்கு நேரம் இருந்தது இல்லை... எனக்குத் தெரிஞ்சது எல்லாம்

அப்போ படிப்பு, இப்போ தொண்டு செய்றது இது மட்டும் தான்... எனக்கு... எனக்கு..." என்று திணறியவனை அவள் இமைக்காது பார்த்திருந்தாள்...

"எனக்குக் காதல் வாழ்க்கைன்னா என்னன்னு நீங்க சொல்லிக் கொடுக்கிறீங்களா...? அதுக்கு நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா...?" என்று தயங்கியபடி கேட்டவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது... அவனது மாசு மருவற்ற வெகுளி மனது என்றும் போல் இன்றும் அவளைப் பெரிதும் கவர்ந்தது...

அவன் அருகில் நெருங்கி வந்து நின்றவள், "சரி போனால் போகிறது பாவம்ன்னு சொல்லிக் கொடுக்கிறேன்..." என்று சிறிது கெத்துக் காட்டியவள் பின்பு அவனது கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்து,

"அதுக்கு முதலில் நீங்க என்னை நீ, வா, போன்னு பேசணும்... இது தான் காதலில் முதல் பாடம்..." என்க...

"அது எப்படி...?"

"அது அப்படித் தான்..." என்றவள் அவனது உயரத்திற்கு எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு,

"இது இரண்டாவது பாடம்... இது போல் நிறையக் கொடுக்கணும்... அப்போ தான் காதல் வாழ்க்கை தித்திக்கும்..." என்றவள் கலகலவெனச் சிரித்தபடி அங்கிருந்து ஓடி விட்டாள்...

அவள் முத்தமிட்ட கன்னத்தைத் தடவி பார்த்த சூர்யாவின் முகத்தில் மகிழ்ச்சியை மீறி லேசாக நாணம் எட்டிப்பார்த்தது...

சித்தார்த் சம்யுக்தாவைத் தேடி அவளது கிராமத்திற்குச் சென்ற அதே நேரம், இந்திரஜித் தனது காதலுக்கு மூடுவிழா எடுப்பதற்கான நாளை குறித்திருந்தான்...

மகனது மனம் அறியாது சித்தார்த் செய்த சில அதிரடி செயல்கள் அவனது மகனை அவனுக்கு எதிராகத் திருப்பி

விட்டிருந்தது... இல்லையென்றால் ஐந்து வருடத்திற்கு முன்பே இந்திரஜித், சம்யுக்தா நிச்சயதார்த்தம் சுமூகமாக நடந்து முடிந்திருக்கும்...

விதி தனது கோர தாண்டவத்தை ஆடச் சரியான நேரம் பார்த்து காத்திருந்தது...!!!

தொடரும்...!!!

****★***********************

சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரும் மட்டும் பெனுமுலி கிராமத்திற்கு வந்திருந்தனர்... சித்தார்த் நினைத்திருந்தால் சம்யுக்தாவை அவன் இடத்திற்கு வரவழைத்து இருக்கலாம்... ஆனால் அதைச் செய்யாது சூர்யாவிற்கு மதிப்பு கொடுக்கும் பொருட்டு அவனது தங்கையைப் பார்க்க நேரில் இங்கு வந்து விட்டான்...

சம்யுக்தாவின் வீட்டை விசாரித்து ஒருவழியாய் அந்த வீட்டின் முன் வந்து இறங்கினர்... ஓட்டு வீடும், முன்புறம் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மண்பானைகளும் சம்யுக்தாவின் ஏழ்மை நிலையை எடுத்துச் சொல்லியது... பிரகதீஸ்வரி கணவனை யோசனையாகப் பார்த்தாள்... சித்தார்த்தோ முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாது அந்த வீட்டினை நோக்கி நடந்தான்...

தனது திருமணம் பற்றி அவர்கள் பேச வரவிருப்பதாய் அவர்களது வரவினை பற்றிச் சூர்யா ஏற்கெனவே தனது தங்கையிடம் கூறியிருந்தான்...

இங்கு வரும் முன் சித்தார்த் சூர்யாவிடம், "உங்க நிச்சயத்தோட சேர்த்து இந்தருக்கும், சம்யுவுக்கும் நிச்சயம் செஞ்சிரலாம்..." என்று கூற...

"இல்லை மாமா... இந்தர் படிப்பு முடிக்கணும்ன்னு சொல்றீங்களே... அவர் படிப்பு முடிச்சு வந்ததும் நிச்சயம் பண்ணிக்கலாம்... தேவையில்லாம இப்பவே சம்யு மனசில் ஆசையை வளர்க்க வேண்டாம்... எனக்கு உங்க மீது, உங்க வார்த்தை மீது நம்பிக்கை இருக்கு..." என்று சூர்யா கூறிவிட்டான்...

"அதுவரை சம்யு பத்தின கவலையை என் கிட்ட விட்டுருங்க மாப்பிள்ளை... என்னை மீறி அவள் மீது யாரும் கை வைக்க முடியாது... அவளது பாதுகாப்பு என் பொறுப்பு..." என்று கூறிய சித்தார்த் சூர்யாவின் மனதில் பால் வார்த்தான்...

வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டு சம்யுக்தா வாயிலுக்கு ஓடி வந்தாள்... சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரையும் பார்த்து முகத்தில் புன்னகை மலர,

"ரண்டி, ரண்டி மாமாகாரு, அத்தைகாரு..." என்று அவர்களை இன்முகமாய் வரவேற்றாள்...

இருவரும் வீட்டினுள் சென்று அங்கிருந்த பிளாஸ்டிக் நாற்காலியில் அமர்ந்தனர்... அந்த வீட்டின் ஏழ்மையைக் கண்டு அவர்கள் முகத்தைச் சுளிக்கவில்லை... அவர்கள் புன்னகையுடன் அமர்ந்திருந்தனர்... பிரகதீஸ்வரி மனதில் மட்டும் சம்யுக்தா தனது மகனுக்கு எந்த விதத்தில் பொருத்தமாக இருப்பாள் என்கிற யோசனை ஓடிக் கொண்டிருந்தது... அந்தக் காலம் மாதிரி இந்தக் காலம் இல்லையே... இப்போது உள்ள பிள்ளைகளின் எதிர்பார்ப்பே வேறு அல்லவா...

"எப்படிம்மா இருக்க...?" சித்தார்த் தான் பேச்சை ஆரம்பித்தான்... அவளுக்குத் தமிழ் நன்கு தெரியும் என்று சூர்யா கூறியிருந்தான்

"நல்லா இருக்கேன் மாமாகாரு..." என்றவள்,

"குடிக்க எடுத்துட்டு வர்றேன்..." என்று அவள் உள்ளே செல்ல... சித்தார்த் திரும்பி மனைவியைப் பார்த்தான்...

"என்ன பலமா யோசிச்சிக்கிட்டு இருக்க...?"

"இந்தப் பொண்ணு எப்படி நம் இந்தருக்கு...?" அவள் யோசனையுடன் இழுத்தாள்...

"ஏன் இந்தப் பெண்ணுக்கு என்ன குறை...?" என்றவனது விழிகள் இடுங்கியது...

"குறைன்னு நான் எதுவும் சொல்லலை... அவளைப் பார்த்தாலே தெரியுது, அவள் ரொம்ப வெகுளி, ரொம்ப நல்ல பொண்ணுன்னு... அதுக்காக நான் சொல்லலை மாமூ... இந்தரோட வாழ்க்கை முறைக்கு இவள் எப்படிப் பொருந்தி போவாள்ன்னு எனக்கு யோசனையா இருக்கு...

நானும் சம்யு மாதிரி இருந்தேன் தான், இல்லைங்கல்ல... ஆனா நீங்க என்னை எனக்காக விரும்பி ஏத்துக்கிட்டீங்க... ஆனா நம் இந்தர் விசயத்தில் அவனது விருப்பம் தேவை இல்லையா...?"

"நீ என்ன சொல்ல வர்றேன்னு எனக்குப் புரியுது ரதிம்மா... ஆனா பொண்ணோட குணத்தை மட்டும் நீ பாரு... வெளித்தோற்றம், படிப்பு இது எல்லாத்தையும் நாம் மாற்ற முடியும்... ஆனா குணத்தை நாம் அவ்வளவு எளிதில் மாற்ற முடியாது... இந்தர் படிப்புக்கு, வசதிக்கு இவளை விட அழகான, படித்த பெண் மனைவியா வருவாள் தான்... ஆனால் அவள் அவனுக்காக அவனைக் கல்யாணம் பண்ணச் சம்மதிப்பாளா...? இல்லை தானே... அங்கு அவனது படிப்பு, வசதி மட்டுமே பேசுகிறது... ஆனால் இந்தப் பெண் இந்தரைப் பார்க்காது நம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இந்தரைக் கல்யாணம் பண்ணச் சம்மதிப்பாள்... இப்படிப்பட்ட பெண் தான் என் மகனுக்கு மனைவியாக வரணும்..." என்று அவன் உறுதியான குரலில் கூற...

"என்ன மாமூ, சப்போர்ட் எல்லாம் பலமாயிருக்கு...?" என்று பிரகதீஸ்வரி கணவனைக் கேலி செய்ய...

"எனக்கு ஏன் சம்யுவைப் பிடிச்சியிருக்கு தெரியுமா...? அவளைப் பார்க்கும் போது உன்னைச் சின்ன வயசில் பார்த்தது மாதிரி இருக்கு..." என்ற கணவனைக் கண்டு அவள் வாயடைத்துப் போனாள்...

"மாமூ..."

"ஆமாம் ரதிம்மா... உன்னை மாதிரி இவளும் அன்பான பெண்ணாக இருக்கிறாள்... நாம் வாழ்கிற மாதிரியான காதல் வாழ்க்கையை நம் இந்தரும் வாழ வேண்டாமா...?" என்று கணவன் கூறிய போது பிரகதீஸ்வரியால் அந்தக் கூற்றை மறுக்க முடியவில்லை...

வாழ்வில் பகட்டை விடப் பண்பு முக்கியம் அல்லவா...!!!

"அதற்காக நீ கவலைப்படத் தேவையில்லை... சம்யுவை இந்தருக்கு ஏற்ற மாதிரி மாற்ற வேண்டியது என் பொறுப்பு... என் மகனை தலை நிமிர்ந்து வாழ வைக்க வேண்டியது என் கடமை..."

சித்தார்த் உறுதியாகக் கூறிவிட்டான்... இது எதையும் சம்யுக்தா அறியவில்லை... அவள் தனது அண்ணனின் திருமணத்தை எண்ணிச் சந்தோசப்பட்டாள்... அவளுக்குச் சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரையும் பிடித்துப் போயிற்று...

பிரகதீஸ்வரிக்கும் சம்யுக்தாவின் வெகுளித்தனம் மிகவும் பிடித்துப் போனது... அதை விட அவள் தெலுங்கு கலந்து தமிழைக் கொஞ்சி கொஞ்சி கிள்ளை மொழியில் கிளி போல் மிழற்றிப் பேசியது கேட்டு இன்னமும் பிடித்துப் போனது... சம்யுக்தா தங்களது மகனுக்குத் தான் என்று இருவரும் ஏக மனதாய் முடிவு எடுத்திருந்தனர்...

********************

மாதுரிமாவை கல்லூரியில் விடுவதற்காகக் கிஷோர் காரை ஓட்டிக் கொண்டு வந்திருந்தான்... அவனுடன் சந்தோசமாய் வந்தவள்,

"பை அத்தான்... ஈவினிங் வெளியில் போகலாம்..." என்றபடி விடைப்பெற...

அப்போது கிஷோர் எதிர்பாராத விதமாக அவளை இழுத்து அவளது இதழில் இதழ் பதித்தான்... தன்னவள் என்கிற உரிமை கொடுத்த தைரியம் அவனுக்கு... கிஷோரின் இந்தச் செயலை கொஞ்சமும் எதிர்பாராதவள் அவனைத் தள்ளிவிட முயன்று தோற்று பின்பு அவனிடமே அடைக்கலமானாள்...

அந்நேரம் கல்லூரிக்கு வந்த இந்திரஜித் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டான்... கார் ஓரமாக நிறுத்தியிருந்ததால் யாரும் அதைக் கவனித்துப் பார்த்திருக்க மாட்டார்கள்... ஆனால் அந்தப் பக்கமாய் வந்தால் நிச்சயம் இந்தக் காட்சி கண்ணில் பட்டிருக்கும்... அப்படித் தான் அவனும் இதைக்

கண்டு விட்டான்... அடுத்த நொடி அவனது முகம் அருவருப்பில் சுளித்தது...

அந்தக் கணம் அவனது மனதில் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த காதல் சுத்தமாய்க் காணாமல் போனது... அவன் கோபத்துடன் அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டான்... மரத்தடியில் தனிமையில் அமர்ந்திருந்தவனின் மனம் உலைக்களமாய்க் கொதித்தது... தான் எந்தளவிற்கு ஏமாற்றப்பட்டு இருக்கிறோம் என்று அவனுக்குத் தன் மீதே ஆத்திரம் வந்தது...

"ஹாய் இந்தர்...." என்றபடி மது அவன் அருகில் வந்தமர்ந்தாள்... அவன் அவளைத் திரும்பி கூடப் பார்க்கவில்லை... நேரே வெறித்தபடி அமர்ந்திருந்தான்...

"என்னாச்சு இந்தர்...?"

"யாரவன்...?"

"உனக்கு எப்பவும் என்னைச் சந்தேகப்பட்டுக்கிட்டே இருக்கணும்... எப்ப பாரு இப்படித் தான் கேள்வி கேட்கிற...?" என்று அவள் கோபம் போல் படபடத்தாள்...

"சந்தேகப்படும்படி நீ நடந்தால் சந்தேகப்படத் தான் வேண்டியிருக்கு..." என்றவன் அவளை நேர்ப்பார்வையாய்ப் பார்த்தான்...

"அவன் என் அத்தை பையன்..."

"ஓ..."

"அம்மா எனக்கும் அவனுக்கும் கல்யாணம் பேசணும்ன்னு நினைக்கிறாங்க... நான் அவன் கூடப் பேச தான் அன்னைக்கு ஹோட்டலுக்குப் போனது... அவன் என்னடான்னா நெருக்கமா உட்கார்ந்துட்டு காதல் வசனம் பேசுகிறான்... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை... அப்போ தான் நீ பார்த்த... இதோ இப்போ கூட என் விருப்பம் இல்லாம என்னைக் கிஸ் பண்ணிட்டுப் போறான்

பொறுக்கி... அம்மாவை எதிர்த்தும் பேச முடியலை... உன்னை மறக்கவும் என்னால் முடியலை... எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை இந்தர்..." என்று அவள் போலிக் கண்ணீர் வடிக்க...

‘அன்று நீ அவனை உன் அண்ணன் என்று சொன்னதாக எனக்கு நினைவு... அதை மறந்து விட்டு நீ ஏன் இவ்வளவு கதை அளக்கிறாய்...?'

மனதில் நினைத்தவன் அவளிடம் வாய்விட்டு கேட்கவில்லை... அமைதியாக அவளைப் பார்த்திருந்தான்... அந்த நொடி அவன் அவளை விட்டு விலக முடிவு எடுத்து விட்டான்... இந்திரஜித் சொல்ல மாட்டான்... செயலில் தான் தனது ஒதுக்கத்தைக் காட்டுவான்... அப்போது இந்த இந்திரஜித்தைப் பற்றி அவள் நன்கு புரிந்து கொள்வாள்...

அவனது அமைதியைக் கண்டு உள்ளுக்குள் அதிர்ந்த மாதுரிமா சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தாள்... அவன் அருகில் நெருங்கி அமர்ந்து அவனது இதழில் முத்தம் கொடுக்க முனைந்தாள்...

அந்த நேரம் தான் சித்தார்த் மகனைத் தேடி அங்கு வந்தது... சூர்யா, சம்யுக்தாவை பற்றி மகனிடத்தில் எடுத்துக் கூறி அவனது சம்மதத்தை வாங்குவதற்காக அவன் அங்கு வந்திருந்தான்... அவனுக்கு இருந்த சந்தோசத்தில் மகனிடம் சொல்லாது கொள்ளாது நேரே கிளம்பி வந்துவிட்டான்... கிளம்பி கல்லூரி வந்தவன் மகன் இருக்கும் இடத்தை விசாரித்து அங்கு வரும் போது தான் இந்தக் காட்சியைக் கண்டது... முதலில் அதைக் கண்டு அதிர்ந்தவன் அப்படியே பின்வாங்கிச் சென்றுவிட்டான்...

தோளுக்கு மேல் வளர்ந்த மகனிடம் இதை என்னவென்று கேட்பது...? அதற்குப் பதிலாக 'ஆம், இது காதல் தான்' என்று மகன் கூறிவிட்டால்...? அந்தக் கணம் மகளின் வாழ்க்கையை நினைத்து அவனது மனம் கலங்கியது... மகளின் வாழ்க்கை போல் மகனது வாழ்க்கையும் முக்கியம் அல்லவா... அதனால் இந்திரஜித்தின் காதலை அங்கீகரிக்க அவன் முடிவு செய்தான்... அவனுக்குச் சூர்யா மீது

நம்பிக்கை இருந்தது... தான் எடுத்துக் கூறினால் அவன் புரிந்து கொள்வான் என்று... அதே போல் சம்யுக்தாவிற்கும் நல்ல மணமகனை தன்னால் தேடிக் கண்டுபிடிக்க முடியும் என்று அவன் மனதில் உறுதியாக நினைத்துக் கொண்டான்...

சித்தார்த் ஒரு கணம் தாமதித்து இருந்தால் மகனது மனம் பற்றிய முடிவு அவனுக்குத் தெரிந்திருக்கும்... அதைச் செய்யாது சத்தமில்லாது அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்...

மாதுரிமா தனது உதடுகளில் உதடு பதித்த போது காதலனான இந்திரஜித் உள்ளுக்குள் சிலிர்த்து எழுந்தான் தான்... ஆனால் அவன் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளை உதறித் தள்ளினான்...

"ச்சீ..." என்று அருவருப்போடு அவன் எழுந்து சென்றுவிட்டான்...

அவளோ செய்வதறியாது திகைத்துப் போனாள்... முட்டாள் இந்திரஜித்தைப் பேசி பேசியே சரி செய்து கைக்குள் வைத்துக் கொள்ளலாம் என்று அவள் கட்டியிருந்த மனக்கோட்டை அப்படியே இடிந்து விழுந்தது... அதை விடத் தனது அன்னையை நினைத்து அவளுக்குப் பயமாக இருந்தது... அவள் நினைத்தது போல் அவளது அன்னை அவளைச் சத்தம் போட்டார்...

"ஒரு வேலையை ஒழுங்கா செய்யத் துப்பில்லை... உன்னை எல்லாம் வச்சிக்கிட்டு..." என்று கடிந்தவரைக் கண்டு அவள் தலைகுனிந்தாள்...

"சரி, சரி... இதுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு இருக்குதான்னு நான் யோசிக்கிறேன்..." என்று அவர் கத்திவிட்டு அறையை விட்டு வெளியில் வந்தார்...

"ஏய் மது... எங்கேடி போன...? தலைவலி மண்டையைப் பிளக்குது... காபி போட்டுக் கொண்டு வா..." என்று அவர் தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தார்...

ஒரு நிமிடத்தில் காபி கொண்டு வந்து நீட்டிய மதுமிதாவை எரிச்சலுடன் பார்த்தபடி காபி கோப்பையை வாங்கினார் வினோதினி... அப்போது அவளது கைகளில் இருந்த மருதாணியைக் கண்டு அவரது உள்ளம் எரிந்தது... அவளது வெள்ளை நிறத்திற்கு மருதாணி சிவப்பு அத்தனை அழகாய் இருந்தது...

அந்த மருதாணி அழகில் மதி மயங்கி போய்த் தனது மகன் அவளது கைகளில் முத்தம் கொடுத்த காட்சியை நினைத்து அவரது மனம் எரிந்தது... அந்தக் கணம் மருதாணியிட்ட அவளது கைகளைத் தீயில் பொசுக்கினால் என்ன என்று அவருக்கு ஆத்திரமாக வந்தது... அடுத்தக் கணம் மகனை நினைத்து அவர் அமைதி காத்தார்... ஆனால் அவர் மனதில் குரோதம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது...

சித்தார்த் அன்றே மாதுரிமா பற்றிய அனைத்து தகவல்களையும் திரட்டி எடுத்து விட்டான்... அவள் நீலேஷின் மகள் என்பது அவனுக்கு ஆச்சிரியமாக இருந்த அதே சமயம் சந்தோசமாகவும் இருந்தது... என்ன இருந்தாலும் நீலேஷ் அவனது நண்பன் அல்லவா... மகனுக்கு இனிய அதிர்ச்சி கொடுக்க எண்ணி தான் வந்ததை மகனிடம் சொல்லாது மறைத்த சித்தார்த், அதே போல் மாதுரிமா வீட்டிற்குத் தான் போவதையும் மறைத்து விட்டான்... அந்த இடத்தில் இருந்து தான் விதி அவனைத் துரத்த ஆரம்பித்தது...

சந்தோசத்துடன் மாதுரிமா வீட்டிற்குச் சென்ற சித்தார்த்தை ஆத்திரத்துடன் வினோதினி வரவேற்றார்... உடன் மாதுரிமாவும் இருந்தாள்... விவேக், கிஷோர் இருவரும் வீட்டில் இல்லாது வெளியில் சென்றிருந்தனர்...

"நீ என்னைத் தேடி வருவன்னு எனக்குத் தெரியும்... ஆனா இவ்வளவு சீக்கிரம் வருவேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை..." என்று அவர் எகத்தாளக் குரலில் வரவேற்க... அதைக் கேட்டு அவனது மனதில் யோசனை எழுந்தது... ஆனாலும் அவன் சமாளித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்...

"என் மகன் இந்தரும், உங்க பொண்ணு மதுவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க..."

"அதுக்கு...?" என்று அவர் அலட்சியமாகக் கேட்டார்...

"என்ன இப்படிக் கேட்கறீங்க...? நாம தான் அவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கணும்..."

"என் புருசனை கொன்ன உன்னோட வீட்டுக்கு என் மகளை நான் எப்படி மருமகளா அனுப்புவேன்னு நீ தப்பு கணக்கு போடுற...?"

"நாம நினைச்சா கணக்கை நேராக்க முடியும்..." என்றான் அழுத்தத்தோடு...

"நான் எதையும் நினைக்க விரும்பலை... நேராக்கவும் விரும்பலை..." என்றவரைக் கண்டு அவனது விழிகள் இடுங்கியது...

"நீங்க பேசுறதை பார்க்கும் போது பழசு எதையும் மறக்கலைன்னு தோணுது..." என்றவனை ரௌத்திரமாய்ப் பார்த்த வினோதினி,

"எதை மறக்க சொல்லுற...? நல்லா இருந்த மனுசனை உருக்குலைய வச்சு சாகடிச்ச பாவி நீ... நீ செய்த துரோகத்தை மறக்க சொல்றியா...?"

"அவன் தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கு நானா பொறுப்பு...?"

சித்தார்த்தின் நிமிர்வைக் கண்டு மாதுரிமாவுக்கு நெஞ்சு உலர்ந்தது... நல்லவேளையாக இந்திரஜித் இது போல் ஆளுமையுடன் இல்லை... இருந்திருந்தால் அவளது குட்டு என்றோ வெளிப்பட்டு இருக்கும்... அந்த விதத்தில் அவள் தப்பித்தாள்...

"தற்கொலை பண்ணுவதற்குத் தூண்டி விட்டது யார்...? நீ தானே..." என்றவரைக் கூர்ந்து பார்த்தவன்,

"தன்வினை தன்னைச் சுடும்... அது போல் அவன் செய்த வினை அவனுக்கு எதிர்வினை ஆற்றி விட்டது... இதற்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்...?" கொஞ்சமும் அசராது பதில் கூறிய சித்தார்த்தைக் கண்டு ஆத்திரம் தலைக்கேற,

"என் வீட்டை விட்டு வெளியில் போடா நாயே..." என்று அவர் கத்த... அதைக் கேட்டு அவமானம் அடைந்த சித்தார்த் விழி மூடி அமைதியாக நின்றான்... மகனுக்காக அந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டான்...

"நம் பிரச்சினையைப் பிறகு பார்க்கலாம்... நம் பிள்ளைகளின் பிரச்சினையை முதலில் பார்க்கலாமா...?" என்றவன்,

"நம் பிள்ளைகளைச் சேர்த்து வைப்பது தான் நியாயம்... இரண்டு பேரும் உயிருக்கு உயிராய் காதலிக்கிறார்கள்..."

"யார் சொன்னது...? என் மகள் உன் மகனைக் காதலிக்கிறாளா...?" என்று கேலியாய்ச் சிரித்த வினோதினி,

"ஏய் மது இங்கே வா..." என்று மகளை அழைத்தார்...

"நீ இவரோட மகனைக் காதலிக்கிறியா...?"

"நோம்மா... நான் கிஷோர் அத்தானைத் தான் காதலிக்கிறேன்..." என்று அவள் மறுக்க...

சித்தார்த் பொறுமை துறந்து எரிமலையானான்... தன்னைப் பழிவாங்குவதற்காகத் தன் மகனை திட்டமிட்டு அவர்கள் ஏமாற்றியதை அறிந்து அவன் ஆக்ரோசம் அடைந்தான்...

"என்ன அம்மாவும், மகளும் என் மகன் வாழ்க்கையில் விளையாடப் பார்க்கிறீங்களா...? அது இந்தச் சித்தார்த் உயிரோடு இருக்கும் வரை நடக்காது... உங்க சாயம் வெளுத்துப் போச்சு... இனி என் மகனை எப்படிப் பாதுகாக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..."

"ஹா ஹா... சரியா புரிஞ்சிக்கிட்டியே... ஆமாம், நாங்க உன் மகனின் வாழ்க்கையில் விளையாட ஆரம்பிச்சு நாளாச்சு... இப்போ உன் மகன் என் மகளின் கைப்பாவை... அவள் என்ன சொன்னாலும் அவன் கேட்பான்... அவளுக்காக உன்னையே தூக்கி எறிய துணிவான்... பார்க்கிறியா, சவால் விட்டு பார்க்கிறியா...?" என்று சித்தார்த்தை வார்த்தைகளால் வினோதினி சீண்டி விட்டார்...

"ஆனால் அது எங்களுக்குத் தேவையில்லை... உன் மகன் காதல் தோல்வியில் துவளணும்... பைத்தியக்காரன் போல் தெரு தெருவா அலையணும்... உன் சொத்துக்கள் அனைத்தும் வாரிசு இல்லாமல் அழிஞ்சு நாசமா போகணும்... அது தான் எனக்கு வேணும்..." தன் மனதிலிருந்த அழுக்குகளை வினோதினி வார்த்தைகளில் கொட்டிக் கவிழ்த்தார்...

எதிலும் நிதானம் காக்கும் சித்தார்த் மகன் என்று வரும் போது தனது நிதானத்தைத் தவற விட்டான்... அவ்வளவு கோபம் வந்தது அவனுக்கு...

"பார்க்கலாம்... ஜெயிப்பது நீங்களா...? நானா...? என்று... ச்சீ நீங்க எல்லாம் பெண்களே கிடையாது... பேய்கள்... இதுக்குத் தானா என் மகனை மயக்கி உன் கைக்குள் போட்டுக்க நினைச்சியா...?" என்று மாதுரிமாவைப் பார்த்து கேட்டவன்,

"ஒரு பெண்ணாய் இருந்துட்டு இப்படி ஒரு கேவலமான காரியத்தைச் செய்ய உனக்கு வெட்கமா இல்லை...? இதுக்கு மேலும் என் மகன் இருக்கும் பக்கம் தலை வைத்துப் படுத்து பார்... அதுக்கு அப்புறம் தெரியும் சங்கதி... உன்னைக் கொன்றுவிடுவேன் கொன்று... யார் கிட்ட விளையாண்டுக்கிட்டு இருக்கோம்ன்னு நினைச்சீங்க... தி க்ரேட் சித்தார்த் கிட்ட... எதிரிகளை ஆள் அடையாளம் தெரியாது பொசுக்கி விடும் சித்தார்த் என் கிட்ட பிள்ளைபூச்சிங்க நீங்க ஆட்டம் காட்டுறீங்களா..." என்று சின்னவளிடத்தில் எகிறியவன் பின் பெரியவரிடம் திரும்பி,

"உன் புருசன் எப்படிச் செத்தான்னு ஊருக்குத் தெரியாது... ஆனா உனக்குத் தெரியும்... அது மாதிரி ஒரு முடிவு உனக்கு வேண்டாம்ன்னா நீ என் மகனை விட்டு விலகியிரு... இல்லை, உன் புருசனுக்கு நேர்ந்த கதி தான் உனக்கும்... ஆள், அடையாளம் தெரியாம அழிச்சிருவேன்... ஜாக்கிரதை..." என்று அவர்கள் இருவரையும் எச்சரித்து விட்டு சித்தார்த் வெளியேறினான்...

"பார்த்தியா மது... தப்பு எல்லாம் செஞ்சிட்டு எப்படிப் பேசிட்டு போறான்னு... இவனை இப்படியே சும்மா விட முடியுமா...? நீயே சொல்லு..."

கணவன் தூக்கில் தொங்கிய காட்சியே அவரது கண்முன் வந்து நின்றது... இப்போதும் அதை நினைத்து அவரது விழிகளில் நீர்ப்படலம் படர்ந்தது... அன்று ஏற்பட்ட அதிர்ச்சி, அழுகை எல்லாம் தானே இன்று அவர் மனதில் வன்மமாய்த் தீவிரமாய்க் கொழுந்துவிட்டு எரிகிறது...

"ஆமாம்மா... இந்தாளை சும்மா விடக் கூடாது..." என்று மாதுரிமா அதற்குத் தூபம் போட்டாள்... அவளுக்குமே தந்தை தூக்கில் தொங்கிய காட்சி மனக்கண்ணில் தோன்றி அவளை வேதனையுற செய்தது... அறியா வயதில் மனதில் பதியும் காட்சிகள் பசுமரத்தாணி போல் ஆழமாய்ப் பதிந்துவிடும் போலும்...

வினோதினி யோசனையுடன் உள்ளே வந்தவர் அப்போது தான் மதுமிதா அங்கு நிற்பதைக் கண்டார்... அவரது பார்வையில் அச்சமடைந்து சுவரோடு ஒன்றியவளை கண்டு அவரது மனதில் சந்தேகம் தோன்றியது...

"ஏய், நாங்க பேசிக்கிட்டு இருந்ததை நீ ஒட்டு கேட்டியா...?"
"இல்லைத்தை..."

"பொய் சொல்லாதேடி..." அவர் அவளின் முடியை பிடித்திழுத்துக் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார்...

"ஆமாம் அத்தை..." உண்மையை ஒத்துக் கொண்டவளை கண்டு அவரது விழிகள் ஆத்திரத்தில் சிவந்தது...

"அநாதை நாயே, பொய்யா சொல்ற...?" என்றபடி அவர் அவளது கன்னத்தில் மாறி மாறி அடித்தார்...

அவள் பொய் சொன்னது கண்டு கோபம் கொண்டது ஒரு சாக்கு... உண்மையில் அவரது மனதில் இருந்தது வேறு... தனது மகனுக்கு இவள் எல்லாம் ஈடு, இணையா? என்கிற ஆத்திரம் அவரது கைகளில் வலுப்பெற்று அவளது கன்னத்தில் அடியாய் இறங்கியது...

"அத்தை, வலிக்குது..." என்று தீனமான குரலில் முனங்கியவளின் கழுத்தை இறுக்கிப் பிடித்தவர்,

"எனக்கும் வலிக்குதுடி... என் மகனுக்கு எப்படிப்பட்ட பொண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கணும்ன்னு நினைச்சேன் தெரியுமா...? அதில் நீ மண்ணை அள்ளி போட்டுட்டியேடி... பிச்சைக்கார நாய் உனக்குப் பணக்கார வாழ்க்கை கேட்குதா...? உன்னைக் கொன்றால் கூட என் ஆத்திரம் தீராது..." என்று கூறிக் கொண்டே மேலும் மேலும் அவளது கழுத்தைப் பிடித்து நெரிக்க ஆரம்பித்தார்...

பலவீனமான உடலுடைய அந்தச் சின்னப் பெண்ணால் அவருடன் போராட முடியவில்லை... மூச்சுத் திணறிக் கொண்டே அவள் மாதுரிமாவைப் பார்த்து,

"மது, அத்தை கிட்ட சொல்லேன்... வலிக்குது..." என்று திக்கித் திணறி கூற...

"நீயாச்சு, அம்மாவாச்சு... என்னை இடையில் இழுக்காதே..." என்ற மாதுரிமா தனது அலைப்பேசியை எடுத்து நோண்ட ஆரம்பித்தாள்...

"நீ கத்தி கூப்பாடு போட்டாலும் யாரும் வர மாட்டாங்க..."

ஆத்திரத்தில் மதி கெட்டு போனவரின் கை சின்னவளின் கழுத்தை இன்னமும் இறுக்கிப் பிடித்தது... அடுத்தச் சில நிமிடங்களில் அந்தச் சின்னப் பெண்ணின் தலை உயிரிழந்து ஒரு பக்கமாய்த் தொங்கியது... அவர் ஒரு நொடி ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தி இருந்தால் அந்தச்

சின்னப் பெண் இன்னும் பல ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்திருப்பாள்...

"செத்து தொலைடி நாயே..." என்று ஆங்காரத்தில் கத்திய வினோதினி தனது கையை எடுக்க மதுமிதா வேரொடிந்த மரம் போல் தொப்பென்று கீழே விழுந்தாள்...

அந்தச் சத்தத்தில் நிமிர்ந்து பார்த்த மாதுரிமா பயத்தில் அன்னையை நோக்கி ஓடி வந்தாள்...

"அம்மா, உண்மையில் அவளைக் கொன்னுட்டீங்களா...?" பயத்தில் அவள் நடுங்க...

"அவள் மயக்கம் போட்டு விழுந்திருப்பாள்... தண்ணி தெளிச்சு எழுப்பி விடு..." என்று அவர் அசால்ட்டாகக் கூற...

தண்ணி தெளித்தும் மதுமிதா எழாதது கண்டு மாதுரிமா பயந்து போய் அன்னையிடம், "உண்மையா அவள் செத்துட்டாம்மா..." சொல்லும் போதே அவளுக்கு அழுகை வந்தது...

"அடச்சீ... கத்தாதே..." என்றவர் மதுமிதாவைப் பரிசோதித்துப் பார்க்க... மகள் கூறியது போல் அவள் இறந்து போயிருந்தாள்...

"சனியன் ஒழிஞ்சது..." என்று அவளைக் காலால் எத்திவிட்டு அவர் சோபாவில் வந்தமர்ந்தார்...

"அம்மா, அண்ணாவும், கிஷோரும் இப்போ வந்திருவாங்க..." என்று மாதுரிமா பயம் கொள்ள...

உடனே அவர் தனது அலைப்பேசியை எடுத்து மகனுக்கு வேறு வேலை கொடுத்து இருவரையும் இப்போதைக்கு வீட்டிற்கு வராது செய்தார்...

"அம்மா, என்ன பண்ண போறீங்க...?"

"ஷ்... நான் சொல்றதை மட்டும் நீ கேளு..." என்றவர் மகளுக்குத் திரைக்கதை, வசனம் எழுதி கொடுக்க அதை

அட்சரம் பிசகாது செய்தவள் அன்னையின் கட்டளைப்படி வீட்டை விட்டு வெளியேறினாள்...

அதன் பின்னர் வினோதினி மதுமிதாவின் உடலைக் கொண்டு வந்து சமையலறையில் போட்டு விட்டுக் கேஸ் சிலிண்டரைத் திறந்து வைத்து விட்டு அவரும் வெளியில் சென்று விட்டார்...

இறுதியில் சிலிண்டர் வெடித்து அந்தச் சின்னப் பெண்ணின் உடலைத் தீ சுட்டுப் பொசுக்கியது... அக்கம் பக்கத்தினர் எல்லாம் அவர்கள் வீட்டின் முன் கூடி விட்டனர்... விவேக்கும், கிஷோரும் அப்போது தான் வீட்டிற்கு வந்திருந்தனர்... இறந்தது மதுமிதா என்பதை அவளை நன்கு அறிந்த விவேக் உடனே அடையாளம் கண்டு கொண்டான்...

"மது..." என்று அவன் கதறியழுதது அங்கிருந்தவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது...

'இப்படி அல்ப ஆயுசில் போவதற்காகத் தானா என்னுடன் நீ சந்தோசமாக இருந்தது' என்று அவன் அதையே நினைத்து நினைத்துத் தலையில் அடித்துக் கொண்டு அழுதான்...

கிஷோர் தான் நொடியில் சுதாரித்துக் கொண்டு வினோதினி, மாதுரிமா இருவரையும் அழைத்து விசயத்தைச் சொன்னான்... இருவரும் போலிக் கண்ணீருடன் அங்கு வந்து சேர்ந்தனர்... அதை உண்மை என்று நம்பி கிஷோர் அவர்களுக்கு ஆதரவு கூறினான்... வினோதினி மகனுக்கு ஆறுதல் கூறுவது போல் அமர்ந்து கொண்டு அவனைக் கட்டிக் கொண்டு அழுதார்... அப்படியே மகளுக்கு விழிகளால் சைகை செய்தார்... அதை உணர்ந்தவளாய் மாதுரிமா அங்கிருந்து மெதுவே நழுவினாள்...

ஏனெனில் வினோதினி இங்கு வரும் போதே இந்திரஜித்திற்கு அழைத்து விசயத்தைக் கூறிவிட்டுத் தான் வந்தார்... 'மது தற்கொலை பண்ணிக் கொண்டாள்...'

என்று... அதனால் அவன் எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாம்...

சித்தார்த்திற்கு வந்த கோபத்தில் எங்கே அதை மகனிடத்தில் காட்டி விடுமோ என்று பயந்து தான் வந்த சுவடே தெரியாது ஊருக்கு கிளம்பிச் சென்றுவிட்டான்... போகும் முன் மகனிடம்,

"நாளை நீ ஊருக்கு வந்து சேரும் வழியைப் பார்..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"அப்பா..." தந்தை கோபம் ஏனென்று தெரியாது மகன் புரியாது விழிக்க...

"சொன்னதை மட்டும் செய் இந்தர்..." என்றவன் அழைப்பைத் துண்டித்து விட்டான்...

தந்தை சொல் தட்டாது கேட்கும் மகன் ஊருக்கு செல்வதற்கான ஆயத்தங்களில் இறங்கினான்... அப்போது தான் வினோதினியின் அழைப்பு வந்தது... அடுத்தக் கணம் 'மது' என்று அலறியபடி அவன் அவளது வீடு நோக்கி விரைந்தான்...

இந்திரஜித் அங்குச் சென்ற போது காவல்துறையினர் மதுமிதாவின் உடலை கைப்பற்றி ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்தனர்... அப்போது அவள் உடல் மேல் போர்த்திருந்த வெள்ளை துணி லேசாக விலகியது... தீயில் கருகிய அந்தப் பெண்ணவள் விரலில் இருந்த இதய வடிவிலான தங்க மோதிரம் அவனது கண்ணில் விழுந்து அவனை நிலைக்குலையச் செய்தது... அம்மாவும் மகளும் இந்திரஜித்தை ஏமாற்ற போட்ட தந்திரம் இது... அது சரியாகப் பலித்துப் போனது...

'மது' என்று மனதிற்குள் அரற்றியபடி அவன் கதறித் துடித்தான்... சத்தம் போட்டு உரிமை கொண்டு கூட அவனால் அழ முடியவில்லை... விம்மலில் வெடிக்கத் தயாரான வாயை இரு கைகள் கொண்டு இறுக மூடிக் கொண்டான்... அந்தக் கணம் அவனது மனக்கண்ணில்

அவளுக்கு அந்தத் தங்க மோதிரம் பரிசளித்த கணம் வலம் வந்தது...

அவளது பிறந்தநாளுக்காக அவன் தன்னுடைய பணத்தைச் சேர்த்து வைத்து தங்க மோதிரம் வாங்கிக் கொடுத்தான்... அதைக் கண்டு முகத்தைச் சுளித்த மாதுரிமா,

"சின்னதா வைர கல் வைத்து வாங்கியிருக்கலாம் இல்லையா இந்தர்...? நீ எப்போதுமே கஞ்சன் தான்டா..." என்று சிணுங்கிக் கொண்டே அவனது கையால் அந்த மோதிரத்தை அவள் அணிந்து கொண்டு ஆசையுடன் அதை அழகு பார்த்தாள்...

"நாட் பேட்... அழகா தான் இருக்கு..." என்று அவள் அவனது கன்னத்தில் முத்தமிட்ட ஈரத்தை இப்போதும் அவன் உணர்ந்தான்... அவனையும் அறியாது அவனது கை தனது கன்னத்தைத் தடவி பார்த்தது... அடுத்தக் கணம் அவன் வெடித்து அழுதான்...

ஒரு பக்கம் விவேக் அழுது கொண்டிருக்க... மறுபக்கம் இந்திரஜித் அழுது கொண்டிருந்தான்... ஆறடி ஆண்மகன் இருவரையும் முட்டாளாக்கி இருந்தனர் கிரிமினல் மூளை கொண்ட அந்த இரு பெண்களும்...

வினோத்தும், கிஷோரும் ஆம்புலன்ஸை பின்தொடர்ந்து காரில் செல்ல... வினோதினி மட்டுமே அங்குத் தனித்து இருந்தார்... இந்திரஜித் அவர் அருகில் சென்றான்... அப்போது அவனுக்கு இருந்த மனநிலையில் அவன் விவேக்கை கவனித்துப் பார்க்கவில்லை... பார்த்திருந்தால் அவனுக்கு எல்லாம் புரிந்திருக்குமோ...?

"மது... மது... ஏன் இப்படிச் செய்தாள்...?" என்று கேட்டவனின் விழிகள் அடக்கப்பட்ட அழுகையில் கலங்கி சிவந்திருந்தது...

"நீயும், உன் அப்பனும் பண்ணிய காரியத்துக்கு மானம் ரோசமுள்ள எந்தப் பெண்ணும் இதைத் தான் செய்வாள்..."

என்று அவர் கோபமாய் இரைய... அவன் தலைகுனிந்தான்...

'ச்சீ' என்று தான் மதுவை கண்டு அருவருப்பில் முகத்தைச் சுளித்துக் கொண்டு சென்ற நினைவு எழுந்து அவனது மனதினை வதைத்துக் கொன்றது... ஒருவேளை அவள் கூறியது உண்மையோ... தான் தான் புரிந்து கொள்ளாமல் அவளைக் குற்றம் சாட்டி விட்டேமோ என்று அவன் மனம் குமுறிப் போய் நின்றிருந்தான்...

"சாரி ஆன்ட்டி..." அவனது வார்த்தைகள் தடுமாறியது...

"சாரி சொன்னால் எல்லாம் சரியாகிருமா...? இல்லை என் பொண்ணோட போன உயிர் தான் திரும்ப வருமா...?" என்று அவனிடம் கத்தியவர் அவனிடம் தனது அலைப்பேசியில் அவனது தந்தை பேசியதைப் போட்டுக் காண்பித்தார்...

சித்தார்த் பேசியதை அவனுக்கே தெரியாது அலைப்பேசியில் பதிந்து வைத்துக் கொண்டார் அவர்... அதை அழகாக ஆங்காங்கே கத்தரித்துத் தேவையானதை மட்டும் ஒட்டிச் சேர்த்து அவனிடம் காட்டினார்...

"பார்க்கலாம்... ஜெயிப்பது நீங்களா...? நானா...? என்று... ச்சீ நீங்க எல்லாம் பெண்களே கிடையாது... பேய்கள்... இதுக்குத் தானா என் மகனை மயக்கி உன் கைக்குள் போட்டுக்க நினைச்சியா...? ஒரு பெண்ணாய் இருந்துட்டு இப்படி ஒரு கேவலமான காரியத்தைச் செய்ய உனக்கு வெட்கமா இல்லை... இதுக்கு மேலும் என் மகன் இருக்கும் பக்கம் தலை வைத்து படுத்து பார்... அதுக்கு அப்புறம் தெரியும் சேதி... உன்னைக் கொன்றுவிடுவேன் கொன்று... யார் கிட்ட விளையாண்டுக்கிட்டு இருக்கோம்ன்னு நினைச்சீங்க... தி க்ரேட் சித்தார்த் கிட்ட... எதிரிகளை ஆள் அடையாளம் தெரியாது பொசுக்கி விடும் சித்தார்த்தான என் கிட்ட பிள்ளைபூச்சிங்க நீங்க ஆட்டம் காட்டுறீங்களா... ஆள், அடையாளம் தெரியாம அழிச்சிருவேன்... ஜாக்கிரதை..."

தந்தையின் வார்த்தையில் அவன் உள்ளமும், உடலும் இறுகிப் போனான்... விசயம் என்னவென்று தெரியாது இதில் தலையிட்ட தந்தையை நினைத்து அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது... அவரால் இப்போது ஒரு உயிரல்லவா பறிப் போய்விட்டது... தேடினாலும் திரும்பக் கிடைக்காதே...

"இந்தா... மது எழுதிய லெட்டரை படித்துப் பார்... உனக்கு இன்னமும் புரியும்..." அவர் ஒரு காகிதத்தை அவனது முகத்தில் விட்டெறிந்தார்...

கீழே விழுந்த அந்தக் காகிதத்தை அவன் கைகள் நடுங்க எடுத்தான்... அதைப் பிரித்துப் படிக்க முயன்றவனால் அதைச் செய்ய முடியவில்லை... அவனது கண்களில் திரண்ட கண்ணீர் அதிலிருந்த எழுத்துக்களை மறைத்தது... விழிகளை அழுந்த துடைத்துக் கொண்டு அவன் படிக்க ஆரம்பித்தான்...

தி க்ரேட் சித்தார்த்தின் மகன் அழுவதைக் கண்டு வினோதினி மனதிற்குள் கேலியாய்ச் சிரித்துக் கொண்டார்... சித்தார்த்தின் மகன் பைத்தியமாக வேண்டும்... அவருக்கு வேண்டியது அது தானே...

"இந்தர்... நீ கடைசிவரை என்னை நம்பலை... இனி நான் யாருக்காக உயிர் வாழணும்... நான் உன்னை நேசிச்சது உண்மை... ஆனா நீ என்னை நம்பலை... உங்கப்பா வேறு என்னை வந்து மிரட்டிட்டு போறாரு... நான் உன்னைச் சொத்துக்காகக் காதலிச்சதா சொல்கிறார்... உன் அளவுக்கு எங்க கிட்ட சொத்துக்கள் இல்லை தான்... அதுக்காக அவர் அப்படிப் பேசுவாரா...? என்னை அவர் ரொம்பக் கேவலமா திட்டிட்டார்... காசுக்காக உடலை விற்கும் வேசி மாதிரின்னு என்னைச் சொல்லாமல் சொல்லிட்டார்... உடலெல்லாம் கூசிப் போயிருச்சு... அதை நினைச்சு நினைச்சு என் மனசு எல்லாம் ஒரே ரணமா இருக்கு... நீயும் என்னை நம்பலை... எனக்கு வாழவே பிடிக்கலை... நான் போகிறேன் இந்தர்..."

மதுவின் கையெழுத்தில் இருந்த கடிதத்தை அவன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்... அவனது

இதயத்தில் நேசம் கசிந்தது போல் விழிகளில் விழிநீர் கசிந்தது... பூவினும் மெல்லிய பெண்ணவளைத் தான் படுத்தி எடுத்து விட்டோமோ என்று அவன் மனம் குமைந்து போனான்...

மதுவின் நடவடிக்கை பிடிக்காது அவளை விட்டு விலகிப் போக முயற்சித்தவன் தான் அவன்... இப்போது அவள் காதலுக்காகத் தனது உயிரைக் கொடுத்து தனது புனிதத்தை நிரூபித்து விட்டாள்... ஆனால் அவன் தான் தனது காதலை நிரூபிக்க வழியில்லாது தடுமாறிக் கொண்டிருந்தான்...

"நான் இப்படி எல்லாம் நடக்கும்ன்னு நினைச்சு பார்க்கலை ஆன்ட்டி..." மனம் மறுக கூறியவனை வெறித்துப் பார்த்த வினோதினி,

"போதும் உன்னால், உன் அப்பனால் நாங்க பட்ட பாடு... இனி தயவுசெய்து இங்கே வராதே... வெளியில் போ..." என்று அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்...

"என் மேல் எந்தத் தவறும் இல்லை..."

"நீ அவளைச் சந்தேகப்பட்டது தவறில்லையா...? காதலித்த பெண்ணை இப்படித் தான் சந்தேகப்படுவியா...? அதை விட உன் அப்பன் பேசியது..." என்று கத்தியவர்,

"சரி, நடந்ததை விடு... இனி நடக்கப் போகிறதை பார்... என் மகள் ஆத்மா சாந்தியடையணும்ன்னா நீ என்ன செய்யணும்ங்கிறதை நீயே முடிவு பண்ணிக்கோ..." என்று விட்டு அவர் சென்றுவிட... அவன் அப்படியே அந்தக் கடிதத்தோடு நின்றிருந்தான்...

அன்றே விமானத்தில் சென்னை கிளம்பி வந்தவன் தந்தை பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காது அவனே பேசித் தீர்த்து விட்டான்...

"நான் யாரை காதலிக்கணும், யாரை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நீங்க முடிவு பண்ண கூடாது மிஸ்டர். சித்தார்த்... நான் முடிவு பண்ணணும்... என்னுடைய

வாழ்க்கையை முடிவு பண்ணும் அதிகாரம் நிச்சயம் உங்களுக்கு இல்லை... எனக்கு மட்டுமே இருக்கிறது..."

"இந்தர்..."

"ச்சீ... என் பெயரை சொல்லி கூப்பிடாதீங்க... நீங்க பண்ணிய காரியத்தால் என்ன நடந்ததுன்னு பார்த்தீங்கல்ல...? அநியாயமா ஒரு உயிர் பறி போயிருச்சு..."

"நான் சொல்றதை கேட்டுட்டு அப்புறம் பேசு இந்தர்..." சித்தார்த் நீலேஷ் பற்றி மகனிடம் சொல்ல நினைத்தான்...

"வேண்டாம், நீங்க பேசி நான் கேட்டு வாழ்ந்தது எல்லாம் போதும்... இனி என் வாழ்க்கையை நான் பார்த்துக்கிறேன்... இந்தச் சொத்துக்களுக்காகத் தானே இப்படி நடந்துக்கிட்டீங்க... இந்தச் சொத்துக்களை எல்லாம் நீங்களே கட்டிக்கிட்டு அழுங்க..." என்றவன் சித்தார்த் பேச வருவதைக் கவனிக்காது சென்றுவிட்டான்...

காதலி இறந்ததில் அவனது பங்கு கொஞ்சம் இருந்தது என்றால், தந்தையின் பங்கு அதிகம் இருப்பதாய் அவனுக்குத் தோன்றியது... காதலி இறந்த துக்கத்தில் அவன் எல்லோரையும் விட்டு விலகிச் செல்ல முடிவு செய்தான்... தன் மீது அன்பு கொண்ட நெஞ்சங்களை அவன் புறக்கணித்தான்... மகனின் மனம் அறிந்து அவனை யாரும் தொந்திரவு செய்யாது பார்த்துக் கொண்டான் சித்தார்த்...

அநியாயம் செய்தவள் உயிரை நீத்ததால் தெய்வமாகிப் போனாள்... தெய்வமாக இருந்தவன் உயிரை நீக்காததால் அநியாயம் செய்தவனாக மாறிவிட்டான்... அவன் உயிரை நீத்தால் மகனுக்கு நியாயத்தைப் புரிய வைப்பது யார்...? அதனால் சித்தார்த் மனதினைக் கல்லாக்கிக் கொண்டு மகனது கோபத்தினைத் தாங்கிக் கொண்டான்...

அங்கு இருந்த நாட்களில் இந்திரஜித் தனது தந்தை அன்னையிடம் பேசியதை ஒட்டு கேட்டுவிட்டான்... அதிலிருந்து அவன் தெரிந்து கொண்டது, அவனது அக்கா

காதலிக்கும் சூர்யாவின் தங்கை சம்யுக்தா என்கிற பெண்ணைத் தனக்கு மணம் முடிக்க முடிவு செய்திருப்பதை...

'ஓ, இதற்காகத் தான் என் காதலுக்குச் சமாதி கட்ட நினைச்சீங்களா...' என்று கோபமாய் நினைத்தவன் தந்தையின் எண்ணத்திற்குச் சமாதி கட்ட நினைத்தான்...

'எதற்காக நீங்க இதைச் செய்தீங்களோ இனி அது நடக்கவே நடக்காது...' என்று தந்தை மீது கோபம் கொண்டவன் அதே நேரம் அந்த முகம் தெரியாத பெண்ணின் மீதும் கோபம் கொண்டான்...

'எல்லாம் உன்னால் தான்டி... உன்னால் தான் என் வாழ்க்கை வீணாகிப் போனது...' என்று அவனது மனம் குமுறியது...

திட்டமிட்டது போல் சம்யுக்தாவை சந்தித்து அவளைக் காதல் வலையில் வீழ்த்தினான்... அப்படித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்... ஆனால் அவனையும் அறியாது அவன் தான் அவளிடத்தில் வீழ்ந்து போனான்... அவனது கனவு பெண்ணோடு பொருந்தியவளை கண்டு அவன் மனம் தடுமாறிப் போனான்... அப்படித் தடுமாற்றம் வரும் போது எல்லாம் இறந்து போன காதலியின் முகத்தினை முயன்று நினைவுப்படுத்திக் கொள்வான்... அதையும் மீறி அந்தச் சின்னப் பெண் அவனது ஆழ்மனதில் ஆழப்பதிந்து போனாள்...

வெளிநாடு செல்லும் முன் அவன் மதுவின் வீட்டிற்குச் சென்றான்... அங்கு அவளது அன்னை இல்லை... அவர் அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு எங்கோ சென்றுவிட்டார்... அதைக் கேட்டு அவன் கனத்த மனதுடன் கனடா பறந்து சென்றான்... ஏனெனில் அங்கு அவனுக்கு வேலை கிடைத்து இருந்தது... வேலை பார்த்துக் கொண்டே தனது தகுதியை வளர்த்துக் கொண்டான்...

மனதின் வேதனை தாங்காது அவன் தினமும் மது அருந்த ஆரம்பித்தான்... மதுவின் நினைவில் குடிக்க

ஆரம்பித்தவனின் நினைவை சம்யுக்தா வந்து ஆக்கிரமித்துக் கொண்டது தான் இங்கு அதிசயத்திலும் அதிசயம்...

'பாவா, பாவா' என்று சிறு பிள்ளை போன்று அவனை அழைக்கும் அவளது கொஞ்சும் குரல் அவனது காதில் எந்நேரமும் ஒலிக்க ஆரம்பித்தது... அதிலும் அவளது நெஞ்சில் முகம் புதைத்த போது உணர்ந்த கதகதப்பை அவன் இப்போதும் உணர்ந்தான்... அந்தக் கதகதப்பு தந்த பாதுகாப்பில், நிம்மதியில் அவன் இரவில் ஆழ்ந்து உறங்க ஆரம்பித்தான்... எவளைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்தானோ அவளையே நித்தமும் நினைத்துக் கொண்டு வாழ்ந்தான்...

அப்போது தான் அவள் கழுத்தில் தான் அணிவித்தது தாலி என்று தெரிந்ததும் அலறியடித்துக் கொண்டு இந்தியா திரும்பினான்... அங்குத் தந்தையைக் கண்டதும் பழைய கோபத்தில் சம்யுக்தாவைப் படுத்தி எடுத்தான்... அதை எல்லாம் தாங்கிக் கொண்டு அவள் அவனை நேசித்தது தான் விந்தையிலும் விந்தை...

மகன் என்ன ஏதென்று கூட விளக்கம் கூறாது வெளிநாடு சென்று விடச் சித்தார்த் தான் யாருக்கும் பதில் சொல்ல முடியாது தவித்துப் போனான்... ஆனாலும் முயன்றளவு எல்லோரையும் சமாளித்தான்... அவனுக்கு அதிகத் தொந்திரவு தராது சம்யுக்தாவே தனக்குத் திருமணம் வேண்டாம் என்று கூறி அண்ணனின் திருமணத்திற்கு வழிவகைச் செய்தாள்...

அதன் பிறகு மகனின் குணமறிந்து சித்தார்த் சம்யுக்தாவிற்கு வேறு வரன்கள் பார்க்க... அவளோ முடிவாகத் திருமணத்திற்கு மறுத்து விட்டாள்... அவளை அவள் போக்கில் விட்டுப் பிடிக்கச் சொல்லி விட்டான் சூர்யா... அவனுக்குத் தங்கையின் சந்தோசம் மட்டுமே முக்கியம்...

அவளோ இந்திரஜித் கூறிச் சென்ற ஒற்றை வார்த்தைக்காக அவனுக்காகக் காலம் முழுவதும்

காத்திருக்க முடிவு செய்தாள்...

ஒருவரின் வன்மம் இந்திரஜித், சம்யுக்தா இருவரின் வாழ்க்கையைப் புரட்டி போட்டு விட்டது...

எல்லாவற்றையும் நினைத்து பார்த்த இந்திரஜித் தன் முன் பரப்பியிருந்த மதுவின் கடிதம், ஒப்பந்த பத்திரம், கல்லூரியில் அவளைப் பற்றிய விவரங்கள் அடங்கிய காகிதம் இவைகளை உற்று நோக்கினான்... அவை எல்லாம் இப்போது வந்திருக்கும் மாதுரிமா தான் அவனது காதலி மது என்பதைத் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்தது... அதை விட அன்று அவள் ஒப்பந்தப் பத்திரத்தில் இடது கையில் கையெழுத்துப் போட்டது... அதிலிருந்த தழும்பு எல்லாம் சொல்லாமல் சொல்லியது அவள் தான் மது என்று... அதனால் தான் அவன் சந்தேகம் கொண்டு கண்ணனிடம் விசாரிக்கச் சொல்லியது...

அன்று அவனுக்கு ஏற்பட்ட கோபத்திற்குக் குறையாது இன்றும் அவனுக்குக் கோபம் வந்தது... அன்று அவளுடன் நெருக்கமாய் அவன் பார்த்த ஆண், அந்தக் கிஷோர் அவளது வருங்காலக் கணவன் என்பதினை அறிந்து அவனுக்கு இன்னமும் ஆத்திரம் அதிகரித்தது... அவள் தன்னைத் திட்டம் போட்டு ஏமாற்றியதை எண்ணி...

'இனி நீ யாரையும் ஏமாத்த முடியாது... சட்டம் தன் கடமையைச் செய்யும்...' என்று அவன் முணுமுணுத்துக் கொண்டான்...

அதே நேரம் வினோதினி மகளைக் கடிந்து கொண்டிருந்தார்...

"உன்னை யார் அவன் முன்னே போகச் சொன்னது... இப்போது பார், எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டான்... உன்னால் நானும் ஜெயிலில் இருக்கிறேன்..." என்று வினோதினி மகளைப் பொரிந்து தள்ளினார்...

"கொலை செய்தால் ஜெயிலில் தான் இருக்கணும்..." என்றாள் மகளும் அதே கோபத்துடன்...

"எல்லாம் உன்னால் தான்..."

"ஆமாம், எல்லாம் என்னால் தான்... அவன், அவன் மனைவி கூடச் சந்தோசமா வாழ்வது எனக்குப் பிடிக்கலை... அவங்க ரெண்டு பேரையும் பிரிக்க நினைச்சு தான் நான் அவன் கண்முன் போய் நின்றேன்..." ஆவேசமாய்க் கத்தியவளைக் கண்டு வினோதினி அதிர்ந்து போய்,

"மது... உனக்குக் கிஷோர் இருக்கிறான்... இது என்ன அபத்தமான பேச்சு..." என்று அவளை உலுக்கத் துவங்க...

"இல்லைம்மா... என் மனசில் இந்தர் தான் இருக்கிறான்... அவனை மறக்க முடியாம தான் நான் இப்படி எல்லாம் நடந்துக்கிறேன்... இப்போ தான் எனக்கு என் மனசு புரியுது... எனக்கு இந்தர் வேணும்மா..." என்று அழுது கொண்டே கெஞ்சிய மாதுரிமாவைக் கண்டு செய்வதறியாது திகைத்தார் வினோதினி...

அவர்கள் இருவரும் எதுவும் செய்ய முடியாதபடி அவர்கள் முன்னிருந்த சிறை கம்பிகள் தடுத்தது...!!!

தொடரும்...!!!

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு...? போயும், போயும் அவனைப் போய்க் காதலிக்கிறேன்... அவன் தான் வேணும்ன்னு சொல்றியே... உனக்குப் புத்தி எதுவும் கெட்டு போச்சா...?" வினோதினி மகளைக் கோபமாய்ச் சாடினார்...

"ஆமாம், எனக்குப் பைத்தியம் தான் பிடிச்சியிருக்கு..." என்று கத்திய மகளைக் கண்டு அவர் திகைத்துப் போனார்...

"சில விசயங்களை, சில பொழுதுகளை மறக்க முடியாதும்மா... இந்தரோட காதலும் அது மாதிரி தான்... அவன் கூடப் பழகும் போது அவன் மேல் எனக்குக் காதல் இருந்தது இல்லை... விலகும் போதும் அப்படியே... ஆனா இப்போ அவனை இன்னொருத்தி கூடப் பார்க்கும் போது என் மனசு கிடந்து துடிக்குது... இதுக்கு என்ன அர்த்தம்மா...?"

"ம், இதுக்குப் பைத்தியம்ன்னு அர்த்தம்... அவனைப் பைத்தியமாக்குவதை விட்டுட்டுக் கடைசியில் நீ தான் பைத்தியமாகப் போகிற..." என்று அவர் மகளைக் கோபமாய்க் கண்டித்தார்...

அப்போது அங்கு அவரது மகன் விவேக் இருவரையும் காண வந்தான்... மகனைக் கண்டு வினோதினி பரபரப்பாய் எழுந்து வந்தார்...

"இதுக்குத் தான்டா நான் சொன்னேன்... அவன் கூட எல்லாம் பிசினஸ் டீலிங் வச்சுக்காதேன்னு... கடைசியில் அவன் பண்ணியிருக்கிற காரியத்தைப் பார்த்தியா விவேக்... பொய் சொல்லி எங்களை உள்ளே வச்சியிருக்கிறான்..."

"பொய் சொன்னதுக்கான பலனை நீங்க அனுபவிக்கிறீங்க..." என்றான் விவேக் உணர்வில்லாத குரலில்...

"விவேக்..."

"எப்படிம்மா என் மதுவை கொல்ல உங்களுக்கு மனசு வந்தது...?" என்று தாயைப் பார்த்து ஆதங்கத்துடன் கேட்டவன்... தங்கையிடம் திரும்பி,

"உன் வயசு தானே அவளுக்கு... அவளை மாமா மகளா நீ பார்க்க வேண்டாம்... ஆனா ஒரு மனுசியா நினைச்சிருக்கலாம் இல்லையா...?" என்று கோபத்துடன் கேட்டான்...

"விவேக், நாங்க என்னமோ அவளைக் கொலை பண்ணிய மாதிரி நீ இவ்வளவு உறுதியா சொல்றது சரியில்லை... நான் உன் அம்மா, அவள் உன் தங்கச்சி..."

"இதை நீங்க பண்ணாம வேறு யார் பண்ணியதுன்னு நீங்களே சொல்லுங்க பார்க்கலாம்...? இந்தருக்கு மது தன் கைப்பட எழுதிய கடிதம் தான் இப்போது உங்களுக்கு எதிரான சாட்சியாய் இருக்குது..."

அதை அவன் சொன்னதும் அம்மா, மகள் இருவரின் முகத்திலும் ஈயாடவில்லை...

"அப்போ மது இறந்தது உங்களுக்கு முன் கூட்டியே தெரிஞ்சிருக்கு... அப்படித் தானே... அதனால் தான் இவள் கிட்ட அப்படி ஒரு லெட்டர் எழுதி வாங்கியிருக்கீங்க... ஏன்னா நீங்க அந்த லெட்டரை இந்தர் கிட்ட கொடுத்த நாள் மது இறந்த அதே நாள்... அப்போ எல்லாமே பக்கா ப்ளான் இல்லையா...?" என்று அடக்கப்பட்ட கோபத்தில் கேட்டவனின் விழிகள் சிவந்து போனது...

"இது எல்லாத்தையும் விட வேறு ஒரு முக்கியமான சாட்சியும் மாட்டியிருக்கு... அது நீங்க இந்தருக்கு ஃபோன் பண்ணி பேசிய நேரம்... கிஷோர் உங்களுக்கு ஃபோன் பண்ணி விசயத்தைச் சொல்லும் முன் மது இறந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்... அப்போ நீங்க அவளைக் கொன்னு விபத்து மாதிரி ஜோடிச்சிருக்கீங்க..."

"விவேக், நீ தேவையில்லாம வார்த்தையை விடற..." என்று கண்டித்த தாயைக் கண்டு,

"தேவையிருக்கப் போய்த் தான் நான் வார்த்தைகளை விடறேன்... இப்பவும் நான் பேசலைன்னா எப்பவும் பேச முடியாது போயிரும்..." என்றவன்,

"என் மது உங்களுக்கு என்ன கெடுதல் செஞ்சாள்...? ஏன் அவளைக் கொன்னீங்க...?" என்று அவன் கேட்கும் போது அவனது விழியிலும், மொழியிலும் கண்ணீர் கலந்திருந்தது...

"அது ஒரு விபத்து... நான் யாரையும் கொலை செய்யலை... அப்படிக் கொலை செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை..." என்று அழுத்தத்துடன் பதில் கூறிய தாயை வெறித்துப் பார்த்த விவேக்,

"சரி, அது ஒரு விபத்தாகவே இருக்கட்டும்... ஆனா நீங்க எதுக்கு இந்தர் கிட்ட இப்படி ஒரு கேம் விளையாட ப்ளான் பண்ணணும்... இன்னமும் உங்க மனசில் அந்தக் குடும்பத்தைப் பழிவாங்கும் வெறி இருக்கிறதா...?"

"நியாயத்துக்கு நீ தான்டா உன் அப்பாவை கொன்னவனைப் பழிவாங்கணும்... என் தலையெழுத்து நான் கிடந்து அடிச்சிக்கிறேன்..."

"உங்க வீண் பழிவெறியால் என்ன சாதிச்சீங்க... நத்திங்..." என்று காற்றில் ஆள்காட்டி விரலால் '0' வரைந்தவன்,

"என் அப்பாங்கிறதால அவர் பண்ணிய தப்பை எல்லாம் என்னால் ஏத்துக்க முடியாது... அவர் தப்பு பண்ணினார்... தண்டனை அனுபவிச்சார், அவ்வளவே... இதில் பழிவாங்கும் வெறி எங்கிருந்து வந்தது...?"

"உன் அப்பா ஏன் தற்கொலை பண்ணிக்கிட்டார்ன்னு உனக்கு நல்லா தெரியும் விவேக்..."

அன்னை கூறியதைக் கேட்டு அவன் ஒரு நொடி தலைகுனிந்தான்... பிறகு கம்பீரமாக அவரை நிமிர்ந்து

பார்த்தவன்,

"அவர் எப்படிச் சின்னக் குழந்தைகளைச் சாகடிச்சாரோ... அதே டெக்னிக்கை யூஸ் பண்ணி அவரைச் சாகடிச்சு இருக்காங்க... இதைத் தவறுன்னு என்னால் சொல்ல முடியாது... முதல் தவறு நம் பக்கம் இருந்து தான் ஆரம்பிக்கிறது..."

"நீ என் மகனே இல்லை..." மகனின் வார்த்தைகளைக் கேட்டு வினோதினி வெறுப்பை உமிழ்ந்தார்...

"ரொம்பச் சந்தோசம்... நானும் அதையே தான் சொல்ல வந்தேன்... இனி உங்க ரெண்டு பேருக்கும் எனக்கும் எந்தவித உறவும் இல்லை... என் மது இறப்பிற்கு நியாயம் கிடைப்பதற்காக நான் போராடுவேன்... அவளது இறப்பிற்குக் காரணமான உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காது நான் ஓய மாட்டேன்..." என்று ஆவேசப்பட்டவனைக் கண்டு,

"லூசுத்தனமா உளறாதே... அவளை நான் கொல்லலை..."

"அதைப் போலீஸ் விசாரணையில் சொல்லுங்க... அன்னைக்குத் தாத்தா வேண்டி கேட்டுக்கிட்டதால் தான் மது இறப்பைப் பெரிது படுத்தாமல் விட்டேன்... அதோடு மதுவையும் பத்திரிக்கையில் அசிங்கப்படுத்திருவாங்களோன்னு பயந்து தான் நான் அமைதியா இருந்தது..."

அதைச் சொல்லும் போதே அவனுக்குத் துக்கமாக இருந்தது... நிச்சயம் உடற்கூறு அறிக்கையில் அவள் கன்னி பெண் இல்லை என்று தெரிய வந்தால் ஊடகங்கள் வீண் கதையைக் கட்டிவிடும் என்று பயந்து தான் அவன் அதைச் செய்யாது மறுத்து விட்டான்... அன்றே அதைச் செய்திருந்தால் அவளது இறப்பு பற்றிய ரகசியம் வெளிவந்து இருக்கும்... இப்போது அதை நினைத்து அவன் மிகவும் வருந்தினான்...

மதுமிதாவின் விபத்தைக் கொலை என்று சந்தேகப்பட்டுப் புகார் கொடுத்து விசாரணையை முடுக்கி விடச் செய்த இந்திரஜித்திற்கு அவன் மனதார நன்றி தெரிவித்துக் கொண்டான்...

"எங்களை விட உனக்கு அந்த மது முக்கியமா போயிட்டாளா...?" தாயின் வார்த்தையில் நினைவு கலைந்தவன்,

"நிச்சயம் என் மனைவி எனக்கு முக்கியமானவள் தான்..." என்றவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தார் அவர்...

"அவள் கூட நான் வாழ்ந்தது என்னமோ ஒரு நாள் தான்... ஆனா அது ஓராயிரம் வருசங்கள் வாழ்ந்த சந்தோசத்தை, திருப்தியை எனக்குக் கொடுத்திருக்கு... மது என் உயிர்... அவளுக்காகத் தான் நான் வாழ்ந்தது, வாழ்வது, இனி வாழப் போவது எல்லாமே... இப்போ புரிந்திருக்குமே, அவள் எனக்கு எந்தளவுக்கு முக்கியம்ன்னு..."

கடந்த ஐந்து வருடங்களாகத் திருமணத்திற்கு மறுத்து வரும் மகனின் மனதிடத்தைப் பற்றி இப்போது தான் அவருக்கு நன்கு புரிந்தது...

"தெய்வம் நின்னு கொல்லும்... கொல்லும் என்று நம்புகிறேன்..." அடக்கப்பட்ட சினத்துடன் உறுதியான குரலில் கூறிவிட்டு விவேக் காவல்நிலையத்தை விட்டு வெளியில் வந்தான்...

காரிலேறி அமர்ந்தவனுக்கு ஓவென்று கத்தி அழ வேண்டும் போலிருந்தது... மனதிற்கு அத்தனை பாரமாக இருந்தது... காதலித்து, அதுவும் மாமன் மகளைத் திருமணம் செய்ய நினைத்தது அவன் தவறா...? அதற்காக அந்த அப்பாவி பெண்ணைக் கொலை செய்ய வேண்டுமா...?

"நீ இப்படிப் பாதியில் என்னை விட்டுட்டு போவேன்னு தெரிஞ்சிருந்தா, நான் உன் வாழ்க்கையில் வந்திருக்கவே மாட்டேனே மது... என்னால் தான்... எல்லாம் என்னால் தான்... உன்னைக் கொன்ன பாவி நான் தான்..." என்று

கதறியபடி ஸ்டீயரிங் வீலில் தலை கவிழ்ந்து அழுது துடித்தான் அந்த ஆண்மகன்...

***********************

உண்மை அறிந்த பின் இந்திரஜித் சிறிதும் தாமதிக்கவில்லை... கிளம்பி நேரே வீட்டிற்குச் சென்றான்... தந்தையிடம் மன்னிப்பு கேட்கச் சொல்லி அவனது மனம் கிடந்து அடித்துக் கொண்டது... அவன் சென்ற நேரம் சம்யுக்தா வீட்டில் இல்லை... பிரபாவதியுடன் கோவிலுக்குச் சென்றிருந்தாள்... 'ரொம்ப நல்லதா போச்சு' என்று நினைத்தபடி இந்திரஜித் தந்தையைக் காணச் சென்றான்...

சித்தார்த்தும், பிரகதீஸ்வரியும் எங்கோ கிளம்பி செல்வதற்காகத் தயாராக இருந்தனர்... அதைக் கண்டு அவன் அறை வாயிலில் தயங்கி நின்றான்... மகனைக் கண்டதும் சித்தார்த் முகம் மலர,

"வா இந்தர்... ஏன் அங்கேயே நிற்கிற...?"

"இல்லை, நீங்க வெளியில் கிளம்பிட்டு இருக்கீங்க..." என்ற மகனைக் கூர்ந்து பார்த்த சித்தார்த் அவன் அருகில் வந்து,

"பிரசன்னா தங்கைக்குக் குழந்தை பிறந்திருக்கு... அதைப் பார்க்க தான் கிளம்பிட்டு இருந்தோம்... ஆனா உன்னை விட எங்களுக்கு எதுவும் முக்கியம் இல்லை... உள்ளே வா..." என்று அவனது கைப்பிடித்து அழைத்துச் சென்றான்...

"அப்பா, அம்மா கிட்ட பேசுறதுக்கு எல்லாம் பெர்மிசன் கேட்கும் அளவுக்கு நீ பெரிய மனுசனாகிட்டியா இந்தர்..." பிரகதீஸ்வரி மகனை செல்லமாய் அதட்டினாள்...

"நான் பேச போகும் விசயம் அப்படி..." என்ற மகனைக் கண்டு சித்தார்த்திற்கு ஏதோ புரிவது போல்...

"ரதிம்மா... எனக்குக் காபி போட்டு எடுத்துட்டு வாயேன்..." என்று அவன் மனைவியை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றான்...

"இல்லைப்பா... அம்மா இங்கேயே இருக்கட்டும்..." என்று அன்னையைத் தடுத்தான் இந்திரஜித்...

'நீ அடி வாங்க போறது உறுதி மகனே' என்று பெருமூச்சு விட்டபடி சித்தார்த் கட்டிலில் அமர்ந்தான்... மனைவியின் கோபம் அவன் அறிந்த ஒன்றாயிற்றே... வினோதினி, மாதுரிமாவின் இன்றைய நிலை அவனுக்கும் தெரியும்... வருவது வரட்டும் என்று அவன் அமைதியாகி விட்டான்...

முன்பு நடந்த அனைத்தையும் ஒன்று விடாது கூறிய இந்திரஜித், "உங்களைப் புரிஞ்சிக்காம கோபப்பட்டுட்டேன்... என்னை மன்னிச்சிருங்கப்பா..." என்று தந்தையிடம் மன்னிப்பு வேண்ட...

சித்தார்த் மகனிடம் பேசும் முன் பிரகதீஸ்வரி மகனை அடிக்கக் கையை ஓங்கி விட்டாள்... அதைத் தடுத்த சித்தார்த்,

"எதுக்கு அவனை அடிக்கக் கையை ஓங்கிற...?"

"தவறு செய்தது இவன்... ஆனா தண்டனை அனுபவிச்சது நீங்க தானே..." என்று கணவனிடம் படபடத்தவள்,

"ஏன்டா, உனக்குக் காதலிக்க வேறு பொண்ணே கிடைக்கலையா...? போயும் போயும் அந்தக் கேடு கெட்டவன் பொண்ணு தான் உனக்குக் கிடைச்சாளா...? உங்கப்பாவுக்கு முன்னாடி எனக்கு மட்டும் இந்த விசயம் தெரிஞ்சிருந்ததுன்னு வை... அப்பவே உன்னை அடிச்சுத் திருத்திருப்பேன்... உங்கப்பா மாதிரி விளக்கம் சொல்லி கேட்டுட்டு இருந்திருக்க மாட்டேன்..." கோபத்தில் மூச்சு வாங்க அமர்ந்திருந்தவளின் தோள் மீது கை வைத்து,

"ரிலாக்ஸ் பேபி... என் கூடச் சேர்ந்து நீ அதிரடியா மாறிட்ட... ஆனா நான் உன் கூடச் சேர்ந்து அமைதியா மாறிட்டேன் பார்... ஆனாலும் உன் புருசன் ரொம்பக் கெட்ட பையன்... உன்னை இப்படி அதிரடியா மாத்தி வைச்சிருக்கானே..." என்ற கணவனை அவள் முறைத்துப் பார்க்க... மகனோ இருவரையும் சுவாரசியமாகப் பார்த்தான்...

"பின்னே என்னங்க, இவன் பண்ணி வச்சியிருக்கிற காரியத்துக்கு அந்த வீட்டில் போய்ப் பொண்ணு கேட்பாங்களா என்ன...?"

"நம் இந்தருக்காக நான் அதையும் செஞ்சேன், ரதிம்மா... அப்போ அவங்க இந்தரைப் பத்தி தப்பா பேசவும் தான் நான் கோபப்பட்டு அவங்க கிட்ட சத்தம் போட்டுட்டு வந்தேன்... அதைத் தான் அவங்க இந்தர் கிட்ட திரிச்சு வேறு மாதிரி சொல்லியிருக்காங்க..."

"மாமூ", "அப்பா" என்று இருவரும் திகைத்துப் போன குரலில் அழைக்க...

"என் மகனுக்காக நான் என் உயரத்தை விட்டு இறங்குவேன்... எனக்கு என் மகனோட சந்தோசம் தான் முக்கியம்..." என்று கூறி அவர்களைச் சமாதானம் செய்தான் சித்தார்த்...

“அப்பா...”

இந்திரஜித் வேதனை தாங்காது தந்தையின் மடியில் முகம் புதைத்துக் கொண்டான்... சித்தார்த் மகனின் தலையைத் தடவிக் கொடுத்து அவனின் வேதனையைக் குறைக்க, அதில் அவன் சற்று மனம் தெளிந்து எழுந்து அமர்ந்தான்...

"அவங்க ஆயிரம் சொல்லட்டும்... இவனுக்கு எங்கே போச்சு புத்தி...? இருபது வருசமா வளர்த்து ஆளாக்கின அப்பாவை விட, யாரோ ஒருத்தங்க தான் இவனுக்கு முக்கியமா போயிட்டாங்களா...?" பிரகதீஸ்வரிக்கு ஆற்றாமை தாங்கவில்லை...

"அம்மா ப்ளீஸ்... அந்தச் சூழ்நிலையில் எனக்குக் கோபம் தான் வந்தது..." என்றவன் தான் மதுவிடம் இருந்து விலகியது, தந்தை வினோதினியிடம் பேசியதை ஆடியோவில் கேட்டது எல்லாம் கூறியவன்,

"தீயில் கருகிய அவளது விரலில் நான் அவளுக்குப் போட்ட மோதிரம் இருந்ததைப் பார்த்து நான் உள்ளுக்குள் செத்துப் போயிட்டேன்... அவள் நல்லவளோ, கெட்டவளோ அது

எனக்குத் தெரியாது... ஒரு உயிர் போக நான் காரணமாயிட்டேனே... இடையில் அப்பா வந்து பேசிவிட்டுப் போனது எல்லாம் சேர்ந்து அவர் மீது என் கோபம் திரும்பி விட்டது... அப்பா மட்டும் இதில் தலையிடாது இந்த மரணம் நிகழ்ந்திருந்தால் நிச்சயம் நான் அவளைத் துச்சமா தூக்கி எறிந்துட்டு வந்திருப்பேன்... ஏன்னா அந்த நொடி என் மனசில் அவள் மீது காதல் இருந்தது இல்லை... நிச்சயம் நீங்க எனக்காகப் பார்த்து வச்சியிருந்த யுகியைக் கல்யாணம் பண்ணி இருந்திருப்பேன்... ஜிக்கிக்காக நான் எதையும் செய்திருப்பேன்... ஆனால் அப்பா தலையிடவும் தான் எல்லாமே மாறிப் போனது... எனக்கு ஒரே குற்றவுணர்ச்சி, எல்லாம் என்னால் தான் இது நடந்தது என்று..." என்று கூறிய மகனைக் கண்டு பிரகதீஸ்வரிக்கு இரக்கமாக இருந்தது...

"நீ ஏன்டா இவ்வளவு நல்லவனா போயிட்ட...? ஒருத்தங்களைப் பார்த்ததும் அவங்களைப் பத்தி நீ சரியா எடை போட்டிருக்க வேண்டாமா...?"

"நான் இல்லைன்னா செத்துருவேன்னு அவள் சொல்லும் போது என்னால் அவளை நிராகரிக்க முடியலைம்மா..." என்று மகன் தலைகுனிந்தான்...

"உன்னை ப்ளாக்மெயில் பண்ணி காதலிக்க வைச்சியிருக்கிறாள்..."

"ம், ஏறக்குறைய அப்படித்தான்..." இப்போது அவனுக்கு அது நன்கு புரிந்தது...

"என்னமோ போடா... ஒரு அற்ப காரணத்துக்காக அப்பா கூட ஐஞ்சு வருசமா பேசாம இருந்திருக்க... உன்னை எல்லாம் என்ன பண்றது...?" என்று பிரகதீஸ்வரி மகனைக் குறைப்பட்டுக் கொள்ள...

"இங்கே மட்டும் என்ன வாழுதாம்...? நீ மூணு வருசம், நம் மகன் ஐஞ்சு வருசம்... கூட இரண்டு வருசம் தான் வித்தியாசம்..." என்று கூறி சித்தார்த் சிரிக்க... அதைக் கண்டு பிரகதீஸ்வரி விழிகளில் நீர் நிறைந்தது...

"நான் பாவி மாமூ..." மனைவி அழுவதைக் கண்டு சித்தார்த்தால் சகித்துக் கொள்ள முடியவில்லை...

"இந்தர், கொஞ்ச நேரம் கண்ணை மூடிக்கோ..." என்று மகனிடம் கூறியபடி அவன் தவிப்புடன் மனைவியைப் பார்த்தான்...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்..." என்றபடி அவள் தனது விழிகளைத் துடைத்துக் கொண்டாள்...

"அச்சோ, வடை போச்சே..." என்று கண்சிமிட்டிய சித்தார்த்தைப் பிரகதீஸ்வரி முறைத்துப் பார்க்க... இந்திரஜித்தோ பிரமித்துப் போய்ப் பெற்றோரைப் பார்த்தான்...

அந்தக் கணம் தானும், சம்யுக்தாவும் இது போல் மனமொத்து வாழ்வது போல் கற்பனை செய்து பார்த்தான்... கற்பனை கனவாய் அல்லாது நனவாக விரிந்தது அவனது மனக்கண்ணில்... தன்னவள் தனது மனதில் எந்தளவிற்கு ஆழப்பதிந்து இருக்கிறாள் என்பதை அவன் உணர்ந்தான்... அவள் அல்லாது வேறு யாரும் அவனது கனவில் வரவும் முடியாது... நனவாகவும் முடியாது... தன் கனவு நனவாகிய சந்தோசம் அவன் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"ரதிம்மா... இந்தர் என்ன செஞ்சாலும் எனக்குக் கோபம் வராது... அவன் இடத்தில் யார் இருந்திருந்தாலும் அப்படித் தான் செஞ்சிருப்பாங்க... நானாவது அந்த மரணத்தைக் கொஞ்சம் சந்தேகித்து விசாரித்திருக்க வேண்டும்... ஆனா என்னையும் அந்த மரணம் நிலைக்குலைய செய்துவிட்டது..." என்றவன் அமைதியாக இருந்தான்... பின்பு,

"இப்போ அவன் இங்கு வந்து நம்முடன் இருப்பது சந்தோசம்... அதை விடத் தொழிலைக் கையில் எடுத்தது ரொம்பவும் சந்தோசம்..."

"அப்பா சாரிப்பா... அப்போ கோபத்தில் எல்லாத்தையும் உங்க கிட்டயிருந்து பறிக்கணும்ன்னு நினைச்சுத் தப்புப்

பண்ணிட்டேன்.. சாரிப்பா..."

"இந்தர், நீ எனக்கு நல்லது தான் பண்ணியிருக்க... நான் என் பேபி கூட ஹனிமூன் போகிற ப்ளானில் இருக்கேன்..." என்று சித்தார்த் மனைவியை வம்பிழுக்க...

"மாமூ, இன்னமும் உங்க வாய் அடங்குவதாய் இல்லை..." மீண்டும் மனைவி முறைக்க... அதைக் கண்டு அப்பாவும், மகனும் சேர்ந்து சிரித்தனர்...

"இந்தர், இனியாவது சம்யுவை நீ சந்தோசமா வச்சிக்கணும்... அவள் ரொம்ப நல்ல பொண்ணு..." என்று சித்தார்த்தும்,

"ஆமாம் இந்தர்... நீ படுத்திய பாட்டுக்கு வேறு ஒரு பொண்ணா இருந்திருந்தால் நீ வேண்டவே வேண்டாம்ன்னு ஓடிப் போயிருப்பாள்... ஆனா நம் சம்யு உன்னை எந்த இடத்திலும் விட்டு கொடுக்காது உன் கூடவே இருக்கிறாள்... இனி நீ செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு தான், அவளைச் சந்தோசமா வச்சிக்கிறது..."

"நிச்சயமா நான் யுகியைச் சந்தோசமா வச்சிக்குவேன்..." என்று உறுதியான குரலில் கூறியவன்,

"இது எதையும் யுகி கிட்ட சொல்ல வேண்டாம்..."

"ஏன்...?" கணவன், மனைவி இருவரும் ஒருமித்த குரலில் கேட்க...

"ஏனோ எனக்குப் பயமாயிருக்கு... குழந்தை உண்டாகி இருக்கும் இந்த மாதிரி நேரத்தில் இதை நான் அவள் கிட்ட சொல்லி, ஏதாவது ஒண்ணு ஆகிவிட்டால்...?"

அன்று மாதுரிமாவைக் கண்டு அவள் மயங்கி விழுந்த காட்சி அவன் நினைவில் நின்று அவனை வதைத்தது...

"முதலில் குழந்தை பிறக்கட்டும்... அதுக்குப் பிறகு நானே அவளிடம் எல்லாவற்றையும் சொல்லிருவேன்... எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் கிடையாது... அது போல் இதையும் மறைக்க மாட்டேன்..."

"நீ சொல்றது சரி தான்... இந்த மாதிரி நேரத்தில் அவள் சந்தோசமா இருக்கணும்..." என்று இருவரும் ஆமோதித்தனர்...

"அப்பா, என்னை மன்னிச்சிருங்க..." என்று மீண்டும் மன்னிப்பு வேண்டிய மகனை அணைத்துக் கொண்ட சித்தார்த்,

"இந்த அப்பாவை நீ தான் மன்னிக்க வேண்டும்... தேவையில்லாது உன் வாழ்க்கையில் சிக்கலை உண்டு பண்ணிவிட்டேன்... இப்போது அந்தச் சிக்கலை நீ பொறுமையாய் அழகாகத் தீர்க்கும் விதம் கண்டு எனக்குப் பெருமையாக இருக்கிறது..." என்று சித்தார்த் பெருமை கொள்ள...

"உங்களை மாதிரி எல்லாம் அதிரடியா செஞ்சு எனக்குப் பழக்கம் இல்லை... நிதானமா போகணும்... அதே சமயம் நிம்மதியா இருக்கணும்ப்பா... உங்களை மாதிரி டென்சனோட எல்லாம் என்னால் இருக்க முடியாது... நான், என் மனைவி, குழந்தைகள்ன்னு குறுகிய வட்டத்துக்குள் நிம்மதியா, சந்தோசமா வாழணும்ன்னு ஆசைப்படுகிறேன்... அதனால் நான் எந்த ரிஸ்க்கும் எடுக்க மாட்டேன்..." என்று இரு கைத் தூக்கி மகன் சிரித்தான்...

"அதை உங்கப்பாவுக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடு இந்தர்... எப்ப பாரு அதிரடி ஆட்டம் தான்... அமைதிங்கிறது கொஞ்சமும் கிடையாது..."

"நீ எதைச் சொல்லுகிற பேபி...?" ஒன்றும் தெரியாதது போல் அப்பாவியாய் கேட்ட கணவனைக் கண்டு அவள் முறைக்க...

"இதுக்கு மேல் நான் இங்கிருந்தால் ஆபத்து... மீ எஸ்கேப்..." என்று சிரித்தபடி அறை கதவை சாத்திவிட்டு வெளியேறினான் இந்திரஜித்...

"இப்போ அதே கேள்வியைத் திரும்பக் கேளுங்க பார்க்கலாம், மிஸ்டர். சித்தார்த்..."

"நான் அதிரடின்னு சொன்னியே, அது எதில்ன்னு கேட்டேன்..." என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு,

"எல்லாத்திலேயும் தான்..." என்று கூறியவளின் முகத்தில் வெட்கம் அழையா விருந்தாளியாய் எட்டிப்பார்த்தது... அதைக் கண்டு சித்தார்த் வாய்விட்டுச் சிரிக்க...

"போதும் சிரித்தது... பிரசன்னா வீட்டுக்குக் கிளம்பலாம் வாங்க..." என்று அவள் கூற... அதற்குப் பிறகு வாயைத் திறப்பானா சித்தார்த்... சமத்தாக அவளுடன் கிளம்பினான்...

சித்தார்த் வெளியில் மட்டுமே அதிரடிப் படை... வீட்டில் என்றுமே அமைதிப் படை தான்...!

இந்திரஜித் வெளியில் வந்த போது சம்யுக்தா காரிலிருந்து இறங்கினாள்... இந்த நேரத்தில் கணவனை வீட்டில் கண்டதும் அவள் முகம் மலர அவனை நோக்கி வந்தாள்... சிறியவர்களுக்குத் தனிமை கொடுத்து பிரபாவதி வீட்டிற்குள் சென்றுவிட்டார்...

"இந்தாங்க பிரசாதம்..." என்று கூறியவள் உரிமையோடு அவனது நெற்றியில் வைத்து விட்டாள்... அவனும் சிரித்தபடி அவளுக்கு ஏதுவாகக் குனிந்து நெற்றியைக் காண்பித்தான்...

"சாமி கிட்ட என்ன வேண்டிக்கிட்ட பேபி...?"

"நீங்க எப்போதும் சந்தோசமா இருக்கணும்ன்னு தான்..."

"உனக்காக நீ வேண்டிக்கலையா...?"

"ரெண்டும் ஒண்ணு தானே..."

"அது என்னவோ உண்மை தான்... என் சந்தோசம் நீ மட்டும் தான்..."

அவள் கூறியதன் அர்த்தத்தை உணர்ந்து கொள்ள அவன் தவறினான்... அதை அவன் உணர்ந்த போதோ எல்லாமே தவறிப் போயிருந்தது...

"பை பேபி... ஈவினிங் சீக்கிரம் வர பார்க்கிறேன்... வெளியில் எங்காவது போயிட்டு வருவோம்..." என்றவன் பிறகு ஞாபகம் வந்தவனாய்,

"உன்னோட பங்காரத்தையும் சேர்த்து தான்... உன்னைத் தனியா வெளியில் கூட்டிட்டுப் போனது மட்டும் அவனுக்குத் தெரிஞ்சது, என்னை அடிச்சு, கடிச்சு ஒரு வழி பண்ணிருவான் வாண்டு பயல்..." என்று அக்காவின் மகனின் ஞாபகத்தில் அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது...

ஆதித்யாவைப் பற்றிச் சொன்னதும் அவளது முகத்திலும் புன்னகை மலர்ந்தது... மனைவியின் புன்னகை முகத்தை ரசித்தபடி காரிலேறி அமர்ந்தவன் அதைக் கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்...

கார் சென்ற பாதையைப் பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவின் மனதில் போராட்டம் எழுந்தது...!!!

**********************

என்றுமில்லாத அதிசயமாய் இன்று சீக்கிரம் வீட்டிற்கு வந்த கணவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் சாத்விகா... அதைக் கண்டு சந்தோஷின் இதழ்களில் நமட்டுச் சிரிப்பு வந்தமர்ந்தது...

"கண்ணா... உன் அம்மா எதுக்குடா அவளோட முட்டை கண்ணை விரிச்சு இப்படிப் பார்க்கிறாள்... அப்பாவுக்குப் பயமாயிருக்குன்னு சொல்லு..."

"ஹி ஹி... அப்பா, அம்மாவோட கண்ணு எப்பவும் அப்படித் தான் இருக்கும்..." என்று கூறி சிரித்தான் சின்னவன்...

"என்ன கொழுப்பா...?" இடுப்பில் கை வைத்து அவள் கணவனை முறைத்துப் பார்க்க...

"நான் சொல்லலை அம்மு... நம் மகன் தான் அப்படிச் சொல்கிறான்..."

"மகனுக்குச் சொல்லிக் கொடுத்தது அவனோட அப்பா தானே..."

"மகனுக்கு மட்டுமல்ல, மகனின் அம்மாவுக்கும் சொல்லிக் கொடுக்க இந்த அப்பா கிட்ட நிறைய விசயங்கள் இருக்கு..." என்று மனைவியை ஓரக்கண்ணால் பார்த்தபடி அவன் சர்வேஷூடன் விளையாடிக் கொண்டிருந்தான்...

கணவனது பேச்சு கேட்டு சாத்விகாவின் முகம் யோசனையில் ஆழ்ந்தது... ஏதோ ஒன்று புரிவது போல்... அவளையும் அறியாது அறையின் சுவற்றை உடைத்து விட்டு புதிதாய் முளைத்திருக்கும் கதவை திரும்பி பார்த்தாள்... மனைவியின் பார்வையைக் கண்டவனுக்குச் சந்தோசமாய் இருந்தது... தான் கூறிய விசயத்தை அவள் புரிந்து கொண்டது கண்டு அவனுக்கு அத்தனை உற்சாகமாக இருந்தது...

"கண்ணா, அப்பா கதை சொல்லி தூங்க வைப்பேனாம்... நீ சமத்தா தூங்கணுமாம்..." சந்தோஷின் வார்த்தைகளில் அவளின் தளிர்மேனியில் நடுக்கம் வந்தது... இன்று கணவன் ஒரு முடிவோடு தான் இருக்கிறான் என்பதை உணர்ந்தவள் மனம் நடுங்க பால்கனியில் வந்தமர்ந்தாள்...

தொலைவில் தெரிந்த பிறை சந்திரனை வேடிக்கை பார்த்தபடி எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ... திடுமென இரு கரங்கள் அவளைப் பின்னால் இருந்து தழுவியது... அவளது கணவன் தான் அது...

"அம்மு..." காதோரம் ஒலித்த அவனது குரலில் தெரிந்த குழைவும், அவனது மூச்சுக்காற்றின் வெப்பமும் அவளுள் பல கதைகள் பேசியது...

அவளது அமைதி கண்டு அவன், "பிடிக்கலையா...?" என்று கேட்க...

"அப்படிச் சொன்னேனா அத்தான்..." அவனைத் திரும்பி பார்த்தவளின் விழிகள் கலங்கியது...

"பின்னே எதுக்கு இங்கே வந்து உட்கார்ந்திருக்க...?"

அவன் கேட்ட அடுத்த நொடி அவள் தனது கைகளில் முகம் பதித்து அழுது விட்டாள்...

"அம்மு..." அவன் பதறியவனாய் அவள் அருகில் அமர்ந்து அவளை அணைத்துக் கொள்ள...

"என்னோட காதல் கை கூடவே கூடாதோன்னு தினமும் மனசோடு போராடிட்டு இருப்பேன்... இப்போ அந்தக் காதல் கைக் கூடியதை நினைச்சு எனக்கு அழுகை அழுகையா வருது..."

அழுது கொண்டே விளக்கம் சொன்னவளை அவனது கரங்கள் இறுக அணைத்துக் கொண்டது... அந்தக் கணம் அவளது நேசத்தை அவனும் உணர்ந்தான்...

"சாரி அம்மு... நீ என்னைக் காதலிப்பேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை... இல்லைன்னா அப்பவே நானும் உன்னைக் காதலிச்சு இருப்பேன்... இப்போதும் ஒண்ணும் கெட்டுப் போகலை..." என்றவன் அவளது முகத்தை நிமிர்த்தி அவளது அழுத விழிகளில் முத்தமிட்டு,

"ஐ லவ் யூ அம்மு..." என்றான் காதலுடன்... அவள் பிரமித்துப் போய் அவனைப் பார்த்தாள்...

"அத்தான்..." என்றவளை தனது கைகளில் அள்ளிக் கொண்டவன்,

"அத்தான், அம்முன்னு இன்னைக்கு முழுவதும் இப்படிப் பேசியே நேரத்தை ஓட்டலாம்ன்னு நினைக்கிறியா... அது என்னிடம் நடக்காது என்னருமை பொண்டாட்டியே..." என்றபடி அவளை அறைக்குள் தூக்கி வந்தவன் அங்குப் புதிதாய் முளைத்திருந்த கதவைத் திறந்து மறுபக்கம் இருந்த இன்னொரு அறைக்கு அழைத்துச் சென்றான்... சர்வேஷ் உடன் இருப்பதால் இந்த ஏற்பாடு...

"நீங்க டாக்டர்ன்னு தான் இவ்வளவு நாள் நான் நினைச்சேன்... ஆனா நீங்க பக்கா கிரிமினல் அத்தான்..." அவள் கட்டிலில் அமர்ந்து கொண்டு அந்த அறையைச் சுற்றி விழிகளைச் சுழற்றினாள்...

கதவை தாழிட்டுத் திரும்பிய சந்தோஷ் வாய்விட்டு சிரித்தபடி அவள் அருகில் வந்தவன், "இப்போ இந்தக் கிரிமினல் வில்லன் வேலை பார்க்கப் போகிறான்..." என்றபடி அவளை அணைத்துக் கொண்டு அவன் படுக்கையில் சரிந்தான்... ஆனாலும் அவனால் உடனடியாகச் செயலில் இறங்க முடியவில்லை...

"அம்மு, நான்..." என்று அவன் விளக்கம் கொடுக்க முன் வந்த போது அவனது வாயை மூடியவள்,

"எந்த விளக்கமும் வேண்டாம்... நான் உங்களை நம்பறேன் அத்தான்..." தன்னை முழுமையாய் நம்பும் மனைவியைக் கண்டு அவனது விழிகள் பனித்தது...

"எந்த ஜென்மத்தில் என்ன புண்ணியம் பண்ணினேனோ... நீ எனக்கு மனைவியாகக் கிடைப்பதற்கு..." என்றவனைக் கண்டு,

"எனக்குத் தூக்கம் வருது அத்தான்..." என்று அவள் வேண்டுமென்றே கொட்டாவி விட...

"தூக்கம் தானே அது பாட்டுக்கு வரட்டும்... ஆனா உன்னைத் தூங்க செய்யாதிருக்கும் வித்தை எனக்குத் தெரியுமே..." என்றவன் அவளது முகம் நோக்கிக் குனிந்தான்...

இருவருமே பக்குவமானவர்கள்... அதனால் அவர்களது தேடலும் மிகவும் பக்குவமாக, நிதானமாக இருந்தது... காதல் கணவன் கைச் சேர்ந்த மகிழ்ச்சி அவளுள்... தன்னைக் கொண்டாடும் பெண்ணவளைக் கண்டு அவனும் சந்தோசம் கொண்டான்... அதனால் தன் பெண்ணவளைக் கொண்டாடி கொண்டாடி மகிழ்ந்தான்...

*******************

நடுஇரவில் பிரசன்னாவின் அறை கதவு பலமாய்த் தட்டபட்டது... தூக்க கலக்கத்தில் எழுந்தவன் கதவைத் திறந்தான்... அங்கு அவனது அன்னை பதற்றத்துடன் நின்றிருந்தார்... அவரது பதற்றம் கண்டு அவனது தூக்கம் முற்றிலும் கலைந்தது...

"என்னம்மா...?"

"பாப்பாவுக்கு மூச்சு திணறலா இருக்குடா..."

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தவனாய் அவன் சட்டையை மாட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்... பிறந்து நாள் கணக்கு மட்டுமேயான அந்தச் சிறு கைக்குழந்தை மூச்சு காற்றுக்குத் திணறுவதைக் கண்டு அவன் பயந்து போனான்... உடனே அம்மா, தங்கையை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்பினான்... போகும் போதே யமுனாவிற்கு அழைத்தான்...

"நீ எங்கே இருக்க...?"

"வீட்டில் தான்... என்ன விசயம்ன்னு சொல்லுங்க..."

"ஒண்ணுமில்லை..." என்றவன் அலைப்பேசியை அணைத்து விட்டான்... இந்த நேரத்தில் அவளை வரவழைத்துத் தொந்திரவு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை...

அவன் மருத்துவமனை வந்து சேர்ந்த போது யமுனா மருத்துவமனை வாயிலில் அவர்களுக்காகக் காத்திருந்தாள்... அதைக் கண்டு அவன் விழி விரிக்க... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினாள்... அதில் சுதாரித்துக் கொண்டு அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்...

சுமார் ஒரு மணி நேரம் போராடி குழந்தையை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தாள் யமுனா... அதன் பின்னரே அவளது முகத்திலும் சந்தோசம் வந்தது...

"பேபிக்கு இப்போ சரியாகிருச்சு... சளி அதிகமா இருந்ததால் மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கு... இன்னைக்கு ஒரு நாள் இங்கு இருக்கட்டும்... நாளைக்குப் பார்த்துட்டு டிஸ்சார்ஜ் பண்ணிக்கலாம்..." என்றவள் அவனது தங்கையிடம் குழந்தைக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளைப் பற்றி விளக்கிக் கூறிக் கொண்டிருந்தாள்...

தள்ளி நின்றபடி பிரசன்னா அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... இந்த ஒரு மணி நேரமாய் அவன் அவளைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான்... அவனிடம் அவள் காட்டும் விளையாட்டு முகம் அல்லாது, அவள் ஒரு தாய் போல் குழந்தையைக் கவனித்து அதைப் பிணியில் இருந்து மீட்டிருக்கிறாள்...

திருமணமாகாத பெண்ணவளின் தாய்மை உணர்வு அவனைப் பிரமிக்க வைத்தது... அவள் மீது மரியாதை ஏற்பட வைத்தது... அவளை அவளுக்காகவே பார்க்க வைத்தது... அந்தப் பார்வை ரசனை மிக்கதாய் மாறி அவளை ரசிக்க வைத்தது... அவளைத் தன்னுடையவளாக எண்ண வைத்தது... அவனது நேசம் அவளுக்காக மட்டுமே மெல்ல மலர்ந்து மணம் பரப்பலானது...

காதல் எந்த நொடி, எப்போது, எங்கு, எந்தப் புள்ளியில் மலரும் என்று யாருக்கும் தெரியாது...

"பை பிரசன்னா..." யமுனாவின் குரலில் அவன் தன்னுணர்வு பெற்று அவளைப் பார்த்தான்...

"எப்படி வந்த...?" என்றபடி அவளுடன் அவன் நடந்தான்...

"ஸ்கூட்டியில் தான்..."

"இந்த நேரத்தில் தனியா வந்தியா...? அறிவில்லை உனக்கு..." என்று அவன் அவளைக் கடிய...

"இந்த யமுனா மேல் கை வைக்க எவனுக்காவது தைரியம் இருக்கா என்ன...? ஒருத்தங்களைத் தவிர..." என்று நிறுத்தியவள்,

"அந்த ஒருத்தங்க நீங்க தான் பிரசன்னா..." என்று குறும்பு குரலில் கூறி கண்சிமிட்டி சிரித்தாள் அவள்...

"ம்ப்ச்... சீரியசா பேசும் போது காமெடி பண்ணாதே..." என்றான் அவன் அதிருப்தியுடன்...

தனது கேலியை விட்டு விட்டு அவனை உற்று நோக்கினாள் அவள்... அவனது விழிகளில் தெரிந்த அக்கறை

அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

'ஏய் அடங்குடி... அவன் என்னமோ இப்போ தான் உன் மேல் அக்கறை பட்ட மாதிரி சிலிர்த்துக்கிற... ஏற்கெனவே அவன் உன்னைக் கொண்டு வந்து உன் வீட்டில் விட்டது ஞாபகத்தில் இல்லையா...?' அவளது மனசாட்சி அவளை அடக்கி வைத்தது...

"நான் இங்கே தான் வர்றேன்னு உனக்கு யார் சொன்னது...?"

"மாமா தான்... ஐ மீன் உங்கப்பா... வீட்டுக்கு ஃபோன் பண்ணி கேட்டேன்... அவர் தான் விசயத்தைச் சொன்னார்... உடனே பறந்து வந்துட்டேன்..." என்றவளைக் கண்டு அவனது மனதில் நேசம் கசிந்தது...

"நீ தனியே போக வேண்டாம்... நான் ட்ராப் பண்றேன்..." என்றவன் அவளைத் தனது காரிலேற சொல்ல... அவளும் பந்தா காட்டாது சமத்தாய் ஏறியமர்ந்தாள்...

அந்த ஏகாந்த வேளையில் இருவரும் தனியே அமைதியாய் பயணம் செய்வதும் இருவருக்கும் சுகமாய் இருந்தது போலும்... எதுவும் பேசிக் கொள்ளாது மௌனமாக வந்தனர்... அவளது வீட்டின் முன் காரை நிறுத்தியவன் அவள் இறங்கும் முன் அவளது கையைப் பிடித்து,

"தேங்க்ஸ்..." என்க...

தனது கையைப் பிடித்திருந்த அவனது கையை ஆச்சிரியத்துடன் பார்த்தவள் பின் புன்னகை செய்து,

"நான் என் கடமையைத் தானே செய்தேன்..."

"பேபியோட மூச்சு திணறல் பார்த்து ரொம்பப் பயந்து போயிட்டேன்..." என்றவனது மன நடுக்கத்தை அவனது கரத்தின் நடுக்கத்தில் உணர்ந்தவள் தனது இன்னொரு கையால் அவனது கரத்தை ஆறுதலாய் பற்றி,

"சாதாரணச் சளி தான்... பயப்பட ஒண்ணும் இல்லை..." என்று அவனைத் தேற்ற...

"ம்... ம்..." என்று தலையசைத்தவன்,

"காலம் முழுவதும் இப்படியே உன் கையைப் பிடிச்சிட்டு இருக்கணும் போலிருக்கு யமுனா..."

பிரசன்னா இந்த வார்த்தைகளை உணர்ந்து சொன்னான்... அவளது கரத்தை பிடித்திருக்கும் இந்த நொடி அவன் வெகு நிம்மதியாய் உணர்ந்தான்... அவனுக்கான நிம்மதியை அவளால் மட்டுமே கொடுக்க முடியும் என்று அவன் முழுதாக நம்பினான்...

அவனது மனம் உணர்ந்து அவளுக்கு ஆனந்தத்தில் கண்கள் கலங்கி விட்டது... அவளது காதல் இப்போதாவது அவனது மனக்கதவை தட்டியதை நினைத்து அவள் சந்தோசப்பட்டாள்... அவளுக்கு இருக்கும் சந்தோசத்தில் அவனைக் கட்டியணைத்து... அதற்கு மேலும் அவளது கற்பனை கண்டபடி அலைபாய்ந்ததில் பயந்து போனவளாய் பேச்சை மாற்ற எண்ணினாள்...

"என்னது காலம் முழுவதும் கையைப் பிடிச்சிட்டே இருக்கணுமா...? அது எல்லாம் என்னால் முடியாது..." என்று அலறினாள் யமுனா... அவனோ புரியாது அவளைப் பார்த்தான்...

"நான் அதுக்கும் ஒரு படி மேலே போய்..." என்றவள் அவன் அருகில் நெருங்கி வந்து அவனது இதழில் மென்மையாய்த் தன் இதழைப் பதித்து விட்டு விலகியவள்,

"எனக்கு இதுவும் வேணும்... இதுக்கு மேலேயும் வேணும் மாமா..." என்று அவள் கண்சிமிட்டி சிரிக்க... அவளது செயலில் கிறங்கிப் போனவன்,

"அடிப்பாவி, நீ இவ்வளவு பெரிய கேடியா...?" என்றான் நம்ப முடியாது...

"நான் கேடி தான்... சாதாரணக் கேடி இல்லை... டாக்டர் கேடி... நான் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை... சீக்கிரமா கல்யாணத்துக்கு நாள் பாருங்க... நான் உங்களுக்கு எல்லாம் சொல்லித் தர்றேன்... இன்னும்

பேபியாவே இருக்கீங்களே மாமா..." என்று கேலியாய் கூறியபடி கதவைத் திறந்து கொண்டு இறங்கியவள் கதவைத் சாத்திவிட்டு குனிந்து அவனைப் பார்த்து,

"இன்னைக்குக் கனவில் வந்து முதல் பாடத்தை ஸ்டார்ட் பண்றேன்... ஸ்வீட் ட்ரீம்ஸ்..." என்று பறக்கும் முத்தத்தை அவனை நோக்கிப் பறக்க விட்டவள் பின் சிரித்தபடி வீட்டை நோக்கி நடந்தாள்...

அவளது பேச்சில் முகம் சிவந்த பிரசன்னா மகிழ்ச்சியில் தலையைக் கோதிக் கொண்டு அவளைத் திரும்பி பார்த்தான்... அவளது உற்சாக நடையைக் கண்டு அவனுள்ளும் உற்சாகம் கொப்பளித்தது... அந்த உற்சாகத்துடன் அவன் காரை கிளப்பிக் கொண்டு சென்றான்...

தொடரும்...!!!

அலுவலகம் முடிந்து வீட்டிற்கு வந்த இந்திரஜித் நேரே மனைவியைத் தேடி அறைக்கு வந்தான்... அங்கு அவளைக் காணாது ஏமாற்றம் அடைந்தவன் பின்பு முகம் பளிச்சிட அங்கிருந்த வேறொரு அறைக்குச் சென்றான்... அவன் நினைத்தது போல் சம்யுக்தா அங்குத் தான் இருந்தாள்... தன் முன்னால் இருந்த மின்சாரச் சக்கரத்தை சுழலவிட்டு அதில் எதையோ மும்முரமாகச் செய்து கொண்டிருந்தாள்... அவளது கவனம் கை வேலையில் இருந்ததால் கணவன் வந்ததை அவள் கவனிக்கவில்லை...

மெதுவே கதவை திறந்து உள்ளே வந்தவன் சத்தம் செய்யாது பூனை போல் மெல்ல அடி மேல் அடி எடுத்து வைத்தான்... அவனது விழிகள் தன்னவளை ஆசையுடன் விழுங்கிக் கொண்டது... நீண்ட கூந்தலை சடை பின்னி அதில் பூ வைத்து அழகாய் இருந்தவள் வேலை செய்வதற்கு ஏற்றவாறு புடவை முந்தானையை இழுத்து இடுப்பில் சொருகி இருந்தாள்... முந்தானை சொருகிய இடம் சற்றுத் தாழ்ந்து அவளது இடையைப் பளீரென்று வெளிச்சம் போட்டுக் காண்பித்து அவனது கண்களுக்கு விருந்தாகியது...

அவள் அருகில் வந்து நின்றவன் பின்னால் இருந்து அவளை அணைத்தான்... கணவனது தொடுகையில் முகம் மலர திரும்பி பார்த்த சம்யுக்தா,

"அதுக்குள்ள வந்துட்டீங்களா பாவா...?" என்று கேட்க...

"உன் ஞாபகமா இருந்தது... அதான் கிளம்பி வந்துட்டேன்..." என்றவனைக் கண்டு புன்னகைத்தவள்,

"இருங்க, சாப்பிட ஏதாவது கொண்டு வர்றேன்..." என்றபடி தனது வேலையை அப்படியே போட்டு விட்டு கிளம்ப எத்தனிக்க...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்..." என்றவன் அவளோடு இழைந்து நின்றபடி தனது கைகளால் அவளது

கைகளைப் பற்றிச் சக்கரத்தில் இருந்த மண்ணைப் பிசைய ஆரம்பித்தான்...

தனது கைகளோடு தழுவியிருந்த கணவனின் கைகள் மண்ணை மட்டுமா பிசைந்தது... அவளது மனதினையும் சேர்த்து அல்லவா பிசைந்தது... வெகுநாட்கள் கழித்துக் கணவனின் அருகாமை அவளது மேனியைச் சிலிர்க்க வைத்ததோடு மட்டுமல்லாது அவளது தளிர்மேனியைச் சிறிது நடுங்க வைக்கவும் செய்தது...

"எனக்கும் இதெல்லாம் எப்படிச் செய்றதுன்னு சொல்லி கொடு பேபி..."

"பாவா..." என்று திரும்பி பார்த்தவள் அவனது பார்வையில் அப்படியே உறைந்து போனாள்...

விழிகளில் காதல் வழிய தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு அவளது உள்ளம் அவன் வசமாய்ச் சிக்கி கொண்டது... மனைவியவளின் அழகு எப்போதும் போல் அவனைச் சுண்டியிழுத்தது... அவளது மதிமுகம் அவனது மதியை மயக்கியது... மண்ணைப் பிசைவது போல் அவளது கைகளோடு உறவாடிக் கொண்டிருந்த தனது கைகள் மூலம் தனது மனதில் எழுந்த தாபத்தை அவளுக்கு அவன் உணர்த்தினான்... மண்ணைப் பிசைந்தானா இல்லை அந்தச் சாக்கில் அவளது கைகளைப் பிசைந்தானா என்பது அவனுக்கே வெளிச்சம்...

விழி விரிந்து இமைக்காது தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தவளின் விழி மீது அவன் மென்மையாய் இதழ் பதிக்க... அதில் அவளது இமைகள் தாமாக மெல்ல மூடியது...

"கண்ணழகா, காலழகா,
பொன்னழகா, பெண் அழகா
எங்கேயோ தேடி செல்லும் விரல் அழகா
பெண் கைகள் கோர்த்துக் கொள்ளும் விதம் அழகா"

கணவன் பாடிய பாடலில் அவள் மெல்ல விழி திறந்தாள்... கடைசி வரி பாடும் போது அவனது கரங்கள் அவளது கரங்களோடு இறுகக் கோர்த்துக் கொண்டது...

"பாவா..." இதழ் துடிக்கத் தன்னைப் பார்த்தவளின் இதழ் மீது மென்மையாய் முத்தமிட்டு விலகியவன்,

"உயிரே உயிரே உனைவிட எதுவும்
உயிரில் பெரிதாய் இல்லையடி
அழகே அழகே உனைவிட எதுவும்
அழகில் அழகாய் இல்லையடி"

பேச்சு வழக்கில் இருந்த அந்தப் பாடல் வரிகளின் அர்த்தம் புரிந்தவளாய் அவளது மேனி நடுங்கியது... அவனது காதலில் இதயம் கசிந்ததில் அவளது விழிகளும் சேர்ந்து கசிந்தது... அதை அவனுக்குக் காட்டாது அவள் திரும்பி நின்று கொண்டாள்... அவளது மனதில் இருப்பதை உணராது அவன் காதலில் கிறங்கியபடி அவளது காதோரம் குனிந்து பாடினான்...

"இதழும் இதழும் இணையட்டுமே
புதியதாய் வழிகள் இல்லை
இமைகள் மூடி அருகினில் வா
இது போல் எதுவும் இல்லை"

அந்தக் கணம் அவனுடன் இணைந்திட துடித்தது அவளது காதல் உள்ளம்... ஆனால் அடுத்த வரி அவன் பாடியதும் அவளது உள்ளம் அப்படியே சோர்ந்து போனது...

"உயிரே உயிரே உனைவிட எதுவும்
உயிரில் பெரிதாய் இல்லையடி"

அவனது எதிர்பார்ப்பில்லாத காதல் அவளது மனதினைக் கொல்லாமல் கொன்றது... என்ன தவம் செய்தாளோ, இப்படி ஒரு கணவன் கிடைப்பதற்கு... மனதில் காதல் பெருக அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து இழைந்து நின்றாள்...

"இந்தப் படம் ரொம்ப நல்ல படம் இல்லையா...?" என்றவளை வியப்பாய் பார்த்தவன்,

"நீ பார்த்திருக்கியா...?"

"ம்... வதின கூட..." என்றவள்,

"எனக்கு ரொம்பப் பிடிச்ச படம்..." என்க...

"எனக்கு அது பிடிக்கலை..." என்றான் அவன் பட்டென்று...

"ஏன்...?"

"என்ன பிரச்சினைன்னாலும் பேசித் தீர்த்திருக்க வேண்டாமா...? அந்தப் பொண்ணை அம்போன்னு விட்டுட்டு இப்படித் தற்கொலை பண்றது சரியா...?"

ஏற்கெனவே ஒரு தற்கொலை நாடகத்தால் மனம் நொந்து போயிருந்தவனின் வேதனை வார்த்தைகள் அது...

"தீர்க்க முடியாத பிரச்சினையா இருந்தால்...?" என்று எதிர் கேள்வி கேட்டவள்,

"நாம காதலிப்பவங்களுக்கு நம்மால் ஒரு துன்பம்ன்னா நாம் நம் உயிரை இழப்பதில் தப்பில்லை..." என்றவளைக் கண்டு அவனது புருவங்கள் சுருங்கியது...

"இதில் இருந்து நீ என்ன சொல்ல வர்ற...?"

"ஹி ஹி, தனுஷ் நடிப்பு நல்லா இருந்துச்சுன்னு சொல்ல வந்தேன்..." என்று அசடு வழிய சிரித்தவளைக் கண்டு அவனது யோசனை காணாமல் போனது...

"அல்லு அர்ஜுன், மகேஷ்பாபு, இப்போ தனுஷும் உன் லிஸ்ட்டில் சேர்ந்துட்டாங்களா...? என்னோட வில்லன்ங்க லிஸ்ட் கூடிக்கிட்டே போகுதே பேபி..." என்று அவன் அவளது மூக்கைப் பிடித்து ஆட்ட...

"அச்சோ, மண்ணு..." என்று அவள் சிணுங்க...

"குளிச்சா சரியா போயிரும் பேபி..." என்றவன் தனது கைகளில் இருந்த மண்ணை அவளது முகத்தில் அப்பி விட...

"பாவா..." என்று சிணுங்கியவள் பதிலுக்குத் தனது கையிலிருந்த மண்ணை எடுத்து அவனது முகத்தில் பூசி விட்டாள்...

"ரொம்ப நல்லதா போச்சு..." என்றவன் அவளது முகத்தோடு தனது முகத்தை வைத்து நன்றாக இழைந்தபடி மண்ணை அவள் முகத்தில் பூசி விட...

"போங்க பாவா... நீங்க மோசம்..." என்றபடி அவள் அவனிடம் இருந்து விடுபட்டு வெளியில் ஓட,

"என் கிட்ட இருந்து நீ தப்பிக்க முடியாது பேபி..." என்றபடி அவளைத் துரத்தி கொண்டு வந்தவன் திடுமென மனைவி நின்றதும், அவள் மீது மோதி நின்றான்...

அவர்கள் முன் ஜெகதீஸ்வரி கையில் ஆதித்யாவோடு நின்றிருந்தாள்... 'போச்சுடா அடுத்த வில்லன் வந்துட்டான்' என்று மானசீகமாகத் தலையில் கை வைத்தான் இந்திரஜித்...

"வதின, அது வந்து..." மாட்டிக் கொண்ட தினுசில் விழித்தாள் சம்யுக்தா...

"ய்யாக்... தர்த்தி (டர்ட்டி)..." இருவரும் நின்றிருக்கும் கோலம் கண்டு சின்னவன் தலையில் அடித்துக் கொண்டான்...

அதைக் கண்டு சம்யுக்தா வெட்கத்தில் கணவனுடன் ஒன்ற... ஜெகதீஸ்வரி சிரித்தபடி மகனைத் தூக்கிக் கொண்டு அவர்களைக் கடந்து சென்றாள்...

"த்தை, நோ..." அன்னை தோள் வளைவில் இருந்து எட்டிப்பார்த்துக் கத்தியது அந்தச் சின்ன வாண்டு... மாமனுடன் அத்தை நெருக்கமாக இருக்கிறாளாம் அதற்காக...

"போடா, அவள் உன் அத்தை இல்லை... என்னோட பொண்டாட்டி..." என்று மனைவியை அணைத்துக் கொண்டு இந்திரஜித் கூற...

"சின்னப் பையன் கிட்ட என்ன பேச்சு பேசிறீங்க...?" அவள் அவனது தோளில் அடிக்க...

"அவனாடி சின்னப் பையன்... நான் உன் கிட்ட வந்தாலே என்னமோ வில்லனைப் பார்க்கிற மாதிரி பார்த்து வைக்கிறான்..."

"நான் இப்போ தான் உங்க மனைவி... ஆனா ஆதிக்கு முதல்ல இருந்தே அத்தையாக்கும்..." என்றாள் அவள் மருமகனை விட்டுக் கொடுக்காது...

"ம்ஹூம், அப்படியாக்கும்... ஆதிக்கு அத்தையாகும் முன்பே நீ எனக்கு மனைவி..." என்று அவனும் விட்டுக் கொடுக்காது பேச... அதில் அவள் அமைதியாகி விட்டாள்...

ஒன்றும் பேசாது தங்களது அறையை நோக்கிச் சென்றவளைக் கண்டு, " பேபி..." என்றழைத்தபடி அவன் பின்னால் போக...

"ஆங், என்ன பாவா...?" என்று கேட்டவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவன்,

"ஒண்ணுமில்லை.... வா..."

அறைக்குள் வந்தும் அவளைக் குளிக்க அனுப்பிவிட்டு அவன் மட்டும் பால்கனியில் வந்தமர்ந்தான்... அவனது மனம் அவள் பேசியதை அசை போட்டுக் கொண்டிருந்தது... 'நாம காதலிப்பவங்களுக்கு நம்மால் ஒரு துன்பம்ன்னா நாம் நம் உயிரை இழப்பதில் தப்பில்லை' மனைவியின் வார்த்தைகள் அவனது காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது... அவனது மனம் அன்று நடந்த விபத்தை நினைத்துப் பார்த்தது...

ஒருவேளை அன்று அவள் வீட்டை விட்டு வெளியேறியது தற்கொலை செய்து கொள்வதற்காகத் தானா...? அதை

நினைத்ததும் அவனது உள்ளம் நடுநடுங்கிப் போனது... இப்போது மனைவியை நினைத்து அவனுக்குப் பயமாக இருந்தது... மருத்துவமனையில் இருந்து வந்ததில் இருந்து தன்னை நெருங்க விடாது அழுதது... அதன் பின் மாதுரிமா பார்த்து மயங்கி விழுந்தது... அதிலிருந்து அவள் தன்னை அதிகம் நாடுவது...

அன்று வீட்டை விட்டுப் போகும் போதும் அவள் அப்படித் தான் அவனை அதிகம் நாடினாள்... இல்லை அதற்கு முன்பிருந்தே அவள் அப்படித் தான் இருந்தாள்... என்று, என்று, என்று...? என்று விடாது யோசித்தவனுக்கு அன்றொரு நாள் மதிய பொழுது உடல்நலம் சரியில்லாது அவள் படுத்திருந்தது நினைவுக்கு வந்தது... ஆனால் அன்றைய அவர்களது உறவு அவனுக்கு அடித்துச் சொல்லியது அவள் நன்றாகத் தான் இருந்தாள் என்று...

எல்லாவற்றையும் கோர்வையாக இணைத்துப் பார்த்தவனுக்கு எதுவோ புரிவது போல்... அவனது முந்தைய காதல் மனைவிக்குத் தெரிந்திருக்கிறது என்று... ஆனால் இப்போது அந்தக் காதல் தன் மனதில் இல்லை என்பதை அவளிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அவன் தவித்தான்... வெகுநேரம் யோசித்து ஒரு முடிவு எடுத்தவனாய் அவன் நிமிர்ந்து அமர்ந்தான்... அவனது முகத்தில் அப்படியொரு சந்தோசம் நிறைந்திருந்தது...

'உன் பாவாவுக்குச் சொல் தெரியாது... செயல் மட்டுமே தெரியும்... செஞ்சி காட்டுறேன்டி...' என்று தனக்குள் கூறிக் கொண்டவனின் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது...

இனிவரும் காலம் முழுவதும் தனது காதலால் மனைவியைக் குளிப்பாட்ட அவன் தயாராகி விட்டான்...

"பாவா, குளிக்கலையா...?" என்றழைத்த மனைவியைக் கண்டு திரும்பியவன்,

"குளிக்கணும்... அதே சமயம் குளிப்பாட்டவும் செய்யணும்..." என்று சிரித்தபடி கூறியவன் விசிலடித்தபடி அவளைக் கடந்து செல்ல...

சம்யுக்தா 'ஙே' என்று விழித்தாள்...

********************

மதுமிதாவின் கொலை வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது... டெல்லி காவல்துறை துணை ஆணையர் மீரா கவனித்த கவனிப்பில் பஞ்சு உடம்புக்காரியான வினோதினியின் உடல் பங்க்ச்சர் ஆனதில் அவர் எல்லா உண்மைகளையும் ஒத்துக் கொண்டார்... மதுமிதாவை தான் கொன்றது, அந்தக் கொலையை மறைத்தது என்று அவர் எல்லாவற்றையும் அட்சரம் பிசகாது ஒப்பித்துவிட்டார்...

அதே போல் அவர்கள் குடியிருந்த பழைய வீட்டிற்கு அவரை அழைத்துச் சென்று அது போல் செய்து காண்பிக்கச் சொல்லி கூறினர் காவல்துறையினர்... அப்போது விவேக்கும் உடனிருந்தான்... மதுமிதாவை எப்படிக் கொலை செய்தார் என்பதை அவர் நடித்துக் காட்டிய போது அவன் மனம் தாங்காது கண்ணீர் வடித்தான்... நிச்சயம் அன்னைக்காக அல்ல... அவனது காதலிக்காக... எந்தவொரு காரணமும் இல்லாது அவளைத் தனது அன்னை கொன்றதை நினைத்து அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது... அன்னை மீது அவனுக்கு வெறுப்பாய் இருந்தது...

இந்த வழக்கில் மாதுரிமா சாதூர்யமாகத் தப்பி விட்டாள்...

"இந்தக் கொலைக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... என் அம்மா சொன்னபடி லெட்டர் எழுதினேன் தான்... இல்லைன்னு சொல்லலை... ஆனா அது இந்தர் மீதிருந்த கோபத்தினால் தான்... அப்படியாவது அவன் என்னைப் புரிஞ்சிட்டு வந்து என் கூடச் சேர மாட்டானான்னு நினைச்சு தான் அதை எழுதினேன்... அதை எங்கம்மா இப்படி யூஸ் பண்ணுவாங்கன்னு எனக்குத் தெரியாது..." என்று அவள் கூறிவிட்டாள்...

அதனால் மாதுரிமாவை நிரபராதி என்று நீதிமன்றம் இந்த வழக்கில் இருந்து விடுவித்தது... வினோதினிக்கு கொலை

செய்ததற்காக ஒரு ஆயுள் தண்டனையும், அதை மறைத்ததற்காக இன்னொரு ஆயுள் தண்டனையும் சேர்த்து இரட்டை ஆயுள் தண்டனை கொடுத்தது... அதைக் கேட்டு அவர் கதறி துடித்து அழுதார்... அன்னையைக் கண்ட விவேக்கின் மனதில் சிறிதும் வருத்தம் இல்லை... மாறாக நிம்மதி நிறைந்திருந்தது... தன்னவளுக்குத் தான் நியாயம் செய்துவிட்டதாய் அவனது மனம் சந்தோசம் அடைந்தது... அவன் நினைத்திருந்தால் இந்த வழக்கை ஒன்றுமில்லாததாய்ச் செய்திருக்க முடியும்... ஆனால் அவன் அதைச் செய்ய விரும்பவில்லை...

வெளியில் வந்த விவேக்கை கேலியான பார்வையோடு எதிர்க்கொண்டாள் அவனது தங்கை...

"என்னமோ அன்னைக்குச் சொன்ன, தெய்வம் நின்னு கொல்லும்ன்னு... அப்படி ஒண்ணும் செய்யலையே..." என்றவளை வெறுப்பாய்ப் பார்த்தவன்,

"கொல்லும்... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவன் அதற்கு மேல் பேசாது சென்றுவிட்டான்...

மாதுரிமா அவனை அலட்சியத்துடன் பார்த்திருந்தாள்... விவேக் தன்னுடைய தொழிலில் இருந்து அவளை முழுவதுமாய் நீக்கியிருந்தான்... அதே போல் கிஷோர் அவளுடனான தனது நிச்சயத்தை முறித்திருந்தான்...

"மனசாட்சி இல்லாத ஒரு ராட்சசி எனக்கு மனைவியாக வர தேவையில்லை..." என்று அவளது முகத்தில் காறி உமிழாத குறையாக அவன் கூறிவிட்டான்... அதையும் அவள் அலட்சிய பாவத்துடன் கடந்து வந்து விட்டாள்...

அவளுக்கு என்று தனிப்பட்ட சொத்துக்கள், வங்கியில் பணம் இருந்தது... அது போதும் அவளது வாழ்க்கை முழுவதும்... அதனால் தான் தண்டனை பெற்றிருக்கும் தாயைக் கூட அவள் கண்டு கொள்ளவில்லை... அதைச் சொல்லிக் குத்திக் காட்டிய அன்னையை உக்கிரத்துடன் பார்த்தவள்,

"என் வாழ்க்கையைக் கெடுத்த பாவி நீ... இது உனக்குத் தேவையான தண்டனை தான்..." என்று கோபத்துடன் கத்திவிட்டு வந்து விட்டாள்...

இப்போது அவள் ஒரு சுதந்திர பறவை... இனி அவளைக் கேள்வி கேட்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை... இனி அவளது தேடல் அவளது வாழ்க்கைக்காக, அவளுக்கான சந்தோசத்திற்காக மட்டுமே இருக்கும்...

"இந்தர், உன்னைத் தேடி வந்து கொண்டே இருக்கேன்..." என்று கத்தினாள் உற்சாகமாய்...

வினோதினியின் தண்டனையைக் கேள்விப்பட்டு இந்திரஜித் மீராவுக்கு நன்றி கூறினான்... அதே விசயத்தைக் கேள்விப்பட்ட சித்தார்த் மனக்கண்ணில் நீலேஷின் முகம் வந்து போனது... நீலேஷின் மரணம் அவனால் நிச்சயிக்கப்பட்ட ஒன்று... என்று நீலேஷ் இரக்கமில்லாது சிறு குருத்துக்களின் இறப்பிற்குக் காரணமானானோ அப்போதே சித்தார்த் அவனது மரணத்திற்கான வழியைக் கண்டுபிடித்து விட்டான்...

அவனுக்குச் சட்டத்தின் மீது என்றுமே நம்பிக்கை கிடையாது... சட்டத்தில் இருக்கும் பல ஓட்டைகள் அவனுக்குத் தெரியும்... அதனால் தான் நீலேஷ் தண்டனை முடிந்து வெளியில் வரும் வரை அவன் பொறுமையுடன் காத்திருந்தான்... அவனுக்கான தனது தண்டனையை நிறைவேற்ற நாள் பார்த்திருந்தான்... அவன் நினைத்து போல் தனிமையில் கடற்கரையில் நடந்து வந்து கொண்டிருந்த நீலேஷை அடித்துப் போட்டுவிட்டு அவனது உடலில் ஊசி மூலம் எய்ட்ஸ் கிருமியைச் செலுத்தி விடச் செய்தான்... அவன் கூறிய காரியத்தை அவனது ஆட்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்...

சிறு மழலைகளை இரக்கமில்லாது கொன்றவனுக்கு அதே பாணியில் அவன் தண்டனை வழங்கி விட்டான்... சில மாதங்கள் கழித்து அந்தக் குழந்தைகள் போன்றே கடும் காய்ச்சல் வந்து மருத்துவமனையில் அவன் அனுமதிக்கப்பட்ட போது தான் அவனுக்கு இந்த

உயிர்க்கொல்லி நோய் இருப்பது தெரிய வந்தது... அதில் மனமுடைந்து தான் நீலேஷ் தற்கொலை பண்ணிக் கொண்டது... இதோ இப்போது கூடச் சித்தார்த் நண்பனின் மரணத்திற்காக வருந்தவில்லை... மாறாக அன்று இறந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்காக வருந்தினான்... அவனது பாணியில் அந்தச் சிறு குழந்தைகளுக்கு அவன் நியாயம் வழங்கிவிட்டான்...

அதே போல் மகனின் வாழ்க்கையைக் கெடுக்க நினைத்த வினோதினிக்குச் சட்டம் கொடுத்த தண்டனை அவனுக்கு வெகுதிருப்தியே... இந்தக் கணம் அவனது மனம் நிம்மதியில் நிறைந்திருந்தது...

************************

"நீங்க ஹாஸ்பிட்டல் கிளம்பலையா...?"

இன்னமும் கிளம்பாது மடிக்கணினியில் வேலை செய்து கொண்டிருந்த கணவனைப் பார்த்துக் கேட்டாள் சாத்விகா...

"கொஞ்சம் வேலை இருக்கு..." அவளது முகம் பார்க்காது பதில் கூறினான் சந்தோஷ்...

"கண்ணா, அப்பாவுக்குப் பை சொல்லிட்டு வா..." மகனது புத்தகப் பையை எடுத்துக் கொண்டே அவள் கூற...

"பை அப்பா..." என்ற சர்வேஷ்க்கு முத்தமிட்டு அவன் வழியனுப்ப... அதைச் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் சாத்விகா...

சர்வேஷை அழைத்துக் கொண்டு வந்து பள்ளி செல்லும் பேருந்தில் ஏற்றி விட்டு அவள் மீண்டும் அறைக்கு வந்த போது அங்குக் கணவனைக் காணவில்லை... எங்கே அவன் என்று அவள் தேடிய போது பின்னால் இருந்து அறை கதவு தாழிடும் ஒலி கேட்டு அவள் திரும்பி பார்த்தாள்...

"என்ன பண்றீங்க நீங்க...?" என்று கேட்டவளுக்குப் பதில் சொல்லாது அவன் அவளைக் கைகளில் தூக்க...

"உங்களுக்கு வேலை இருக்குன்னு சொன்னீங்க..."

"இந்த வேலையைத் தான் சொன்னேன் அம்மு..." கண்சிமிட்டிச் சிரித்தபடி கூறியவன் மனைவியோடு தானும் படுக்கையில் விழுந்தான்...

"அடப்பாவி..."

"அடப்பாவி இல்லை அப்பாவி..." என்றவன் தனது வேலையில் மும்முரமாய் இறங்க...

"அப்பாவி பண்ற வேலையா இது...?" அவனது கைகளைத் தட்டி விட்டபடி கூறியவள்,

"அப்போ பேஷண்ட்டுகள் நிலைமை ரொம்பவே பாவம்..." என்க...

"அதை எல்லாம் டாட் பார்த்துக்குவார்..."

"என்னது...?" என்று அவள் திகைத்துப் போய் அவனைப் பார்க்க...

"இப்போ கொஞ்ச நாளா அவரோட பையன் முகத்தில் ஏதோ ஒரு ஒளி வட்டம் தெரியுதாம்... புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் வந்த மாதிரி... இந்தச் சந்தோஷுக்குச் சாத்விகாவிடம் ஞானம் வந்திருக்காம்... அதனால் இன்னும் ஞானம் பெற வேண்டி என்னை லேட்டா வரச் சொல்லிட்டார்..." என்று கேலியாய்க் கூறிய கணவனைக் கண்டு,

"கொஞ்சம் கூட விவஸ்தை இல்லை உங்களுக்கு..." என்று லஜ்ஜையுற்றவளாய் அவள் அவனது நெஞ்சில் முகம் புதைக்க...

"இதற்கு எல்லாம் யாராவது விவஸ்தை பார்ப்பாங்களா...? நோ அம்மு..." என்றபடி அவன் மனைவி முகம் நோக்கி குனிந்தான்... அவனது எண்ணம் உணர்ந்து அவளும் விழிகளை மூடி சந்தோசமாய் அவனை வரவேற்றாள்...

**********************

கண்ணன் தனது காதலை வீட்டில் சொல்லி சம்மதம் வாங்கி விட்டான்... அதே போல் பிரசன்னாவும் தனது வீட்டில் சொல்லிவிட்டான்... அவர்களுக்குத் தான் யமுனா ஏற்கெனவே சொல்லி விட்டாளே... இருந்தாலும் மகனது வாய்மொழிக்காகக் காத்திருந்தனர்... அவன் கூறியதும் அவர்கள் மிகுந்த சந்தோசப்பட்டனர்... ஹரி, சந்தியா இருவரும் மீரா வீட்டில் பேசி நிச்சயத்திற்கு நாள் குறித்து விட்டு வந்தனர்...

அதே போல் பிரசன்னாவிற்காகச் சித்தார்த், பிரகதீஸ்வரி தங்களது குடும்பத்தினருடனும், அவனது பெற்றோருடனும் சேர்ந்து யமுனா வீட்டிற்குச் சென்று பெண் கேட்டனர்... சீனிவாசன் உடனே சம்மதம் தெரிவித்து விட்டார்... பத்மா மட்டுமே சிறிது தயங்கினார்... அதை உணர்ந்தவனாய் சித்தார்த்,

"பிரசன்னா என்னுடைய இன்னொரு மகன்..." என்று ஆரம்பிக்கும் போது இடையிட்ட இந்திரஜித் எழுந்து நின்று கொண்டு,

"ஆம், பிரசன்னா எனக்கு அண்ணன் தான்... அதில் நீங்க எந்தவித சந்தேகமும் படத் தேவையில்லை... எங்களோட கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி இனி பிரசன்னாவுக்குச் சொந்தம்..."

இந்திரஜித்தின் இந்த முடிவை பிரசன்னா மட்டுமல்ல சித்தார்த், பிரகதீஸ்வரி, சம்யுக்தா யாருமே எதிர்பார்க்கவில்லை... பிரசன்னா மட்டும் திகைப்பில் இருந்து மீண்டவன்,

"இந்தர், இது எல்லாம் எனக்கு வேண்டாம்... நான் எப்போதும் போல் வேலைக்காரனாவே இருந்துட்டு போகிறேன்..." என்று கூற...

"நான் நல்லா பேசுறது உனக்குப் பிடிக்கலைன்னா சொல்லு... கோபமா பேசுறேன்..." என்று இந்திரஜித் அவனை மிரட்ட...

"இந்தர் நல்ல மனநிலையில் இருக்கும் போதே சரின்னு சொல்லிரு பிரசன்னா..." என்றான் சித்தார்த் சந்தோசமாக... இப்போது அவனுக்கு மகனை நினைத்து இன்னமும் பெருமையாக இருந்தது...

பிரசன்னா மனம் நெகிழ்ந்து எழுந்து வந்து இந்திரஜித்தைக் கட்டி தழுவி கொண்டான்... இந்த அரிய காட்சியைச் சம்யுக்தா வாயைப் பிளந்து கொண்டு அதிசயமாகப் பார்த்தாள்... மருத்துவமனையில் நடந்த கட்டிப்பிடி வைத்தியத்தைக் காணும் பாக்கியம் அவளுக்குக் கிட்டவில்லையே... அதனால் வந்த ஆச்சிரியம் இது...

"உன் பாவா அழகு தான்... அதுக்காக இப்படியா ‘ஆ’ன்னு வாயைப் பிளந்துக்கிட்டு பார்ப்ப..." மீண்டும் மனைவி அருகில் அமர்ந்தபடி இந்திரஜித் கிண்டலடிக்க... அதில் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள் சம்யுக்தா...

"என்ன உண்மை தானே..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு காதல் பொங்க,

"இப்போ தான் பாவா நீங்க ரியல் ஹீரோ..." என்றவள் யாருக்கும் தெரியாது கணவனுக்குப் பறக்கும் முத்தத்தைப் பரிசாக அளித்தாள்...

அதில் மயங்கியவன் போல் சைகை செய்த கணவனைக் கண்டு சம்யுக்தாவின் முகத்தில் சந்தோசம் நிறைந்தது...

சித்தார்த்தின் கட்டுமான நிறுவனம் ஒன்று போதும் அவனது பெயரை இந்தியா முழுவதும் சொல்வதற்கு... அது இப்போது பிரசன்னா வசம் எனும் போது சீனிவாசனுக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது... அவருக்கு அவரது மகளது சந்தோசம் தான் முக்கியம்... இப்போது கூடுதலாக மருமகனது தகுதி சேர்ந்து கொண்டது அவ்வளவே...

ஒரு தாயாய் பத்மாவிற்கு மிகுந்த திருப்தியே... மகள் போகும் இடம் தங்களைப் போன்று வசதியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே அவரது எண்ணம்... மற்றபடி அவர் காதலுக்கு எதிரியில்லை... இப்போது

மருமகனாக வரப் போகும் பிரசன்னாவின் அந்தஸ்து தங்களை விடப் பல படி மேல் என்றதும் அவருக்கு இதில் வெகுதிருப்தியே...

பிரசன்னாவின் பெற்றோர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டாம்... பிரசன்னாவின் தந்தை மனம் நெகிழ, விழிகள் கலங்க சித்தார்த்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறினார்...

"இது உங்க மகனோட உழைப்பு மற்றும் நேர்மைக்குக் கிடைச்ச பரிசு... அதை விட இந்தர் இல்லாத நேரம் எங்களது இன்னொரு மகனா இருந்து எங்களைப் பாசமா பார்த்துக்கிட்டவன் பிரசன்னா... அந்த அன்பு இன்னமும் எங்க மனசில் இருக்கு..." சித்தார்த்தும் மனம் நெகிழ்ந்து கூறினான்...

எல்லோரும் கிளம்பும் போது பிரசன்னா சம்யுக்தாவை அழைத்துக் கொண்டு யமுனாவிடம் வந்தான்... இந்திரஜித் புன்னகையுடன் தள்ளி நின்று அவர்களை வேடிக்கை பார்த்தான்...

யமுனா காதலுடன் பிரசன்னாவைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... காலம் முழுவதும் அவளது கைப்பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று சொன்னவன் அதற்கான செயலில் செயல் வீரனாய் துரிதமாய் இறங்கியது கண்டு அவளது காதல் இன்னமும் பெருக்கெடுத்தது...

"சம்யு, இவள் தான் யமுனா... நம்ம ஹாஸ்பிட்டலில் தான் டாக்டரா இருக்கிறாள்..."

"ஹாய்..." என்றபடி சம்யுக்தா யமுனாவைப் பார்த்து புன்னகைத்தவள்,

"ரொம்ப அழகாயிருக்காங்க பிரசன்னா... உங்களுக்கு ஏத்த ஜோடி தான்..." சம்யுக்தா சொன்னதும் அவனது முகம் பூவாய் மலர்ந்து போனது...

"அப்படின்னு சொல்ற...? நீ சொன்னால் சரியா தான் இருக்கும் சம்யு..." என்று கூறி புன்னகைத்த பிரசன்னாவை உற்று நோக்கினாள் யமுனா...

பிரசன்னாவின் சம்யுக்தா மீதான அக்கறை, பரிவு, பாசம், அவள் வார்த்தையில் அவனது முகத்தில் தோன்றும் சந்தோசம் எல்லாம் கண்டு அவளுக்கு எதுவோ புரிவதாய்... யமுனாவின் இமைக்காத பார்வை கண்டு பிரசன்னாவின் விழிகள் இடுங்கியது... அடுத்த நொடி அவன் அவளது தோளில் கைப் போட்டு அணைத்துக் கொண்டான்... அவனது திடீர் செய்கையில் யமுனா சங்கடமாய் நெளிய ஆரம்பித்தாள்...

அவர்களது அந்நியோன்யம் கண்டு சம்யுக்தா சிரித்தபடி விலகி வந்தவள் இந்திரஜித் அருகில் வந்து நின்று கொண்டாள்...

"காதலர்கள் இல்லையா... அதான் இப்படி..." என்று கணவனிடம் அவர்களது அந்நியோன்யத்தைக் காண்பித்து அவள் சிரிக்க...

இந்திரஜித் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்... மனைவியின் விழிகளில் தென்பட்ட சிறு ஏக்கம் அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது... என்ன செய்து அவளது ஏக்கத்தைப் போக்க என்று தெரியாது அவன் தவித்தான்... அவனது கை மனைவியின் கையோடு கோர்த்து இறுக்கிப் பிடித்துக் கொண்டது... அந்நேரம் அவனது விழிகள் கலங்கி போனது, அவள் அவனிடம் பட்ட துன்பத்தை நினைத்து... அவளுக்கு எத்தகைய பெரிய கொடுமையை அவன் செய்திருக்கிறான்... அவனது மனம் கட்டுக்கடங்காது துன்பத்தில் தவிக்க ஆரம்பித்தது...

கணவனது பிடியில் இருந்த இறுக்கம் கண்டு சம்யுக்தா அவனை ஏறிட்டுப் பார்த்தாள்... அவனது தவிப்பு கண்டு அவள் இன்னமும் தவித்துப் போனாள்...

சித்தார்த் குடும்பம் கிளம்பும் வரை யமுனாவை அணைத்தபடி நின்றிருந்த பிரசன்னா அதன் பிறகே தனது கையை எடுத்தான்... அவன் ஏதோ அவளிடம் சொல்லும் முன்,

"எதுவும் சொல்ல வேண்டாம் பிரசன்னா... இப்போது நீங்க என்னுடையவர்... அது மட்டும் எனக்குப் போதும்..." என்று புரிதலுடன் அவள் கூற... அவளது விழிகளை உற்று நோக்கியவன்,

"இப்போது மட்டுமல்ல, எப்போதுமே நான் உன்னுடையவன் தான்..." அவன் கூறிய வார்த்தைகளில் இருந்த செய்தியை அவள் சரியாக உணர்ந்து கொண்டாள்... அவளது விழிகள் கலங்கி போனது...

"உண்மையாவா...?"

"நான் பொய் சொல்வதில்லை யமுனா... அதுவும் உன் கிட்ட சான்சே இல்லை..."

"உங்களை நான் நம்பறேன்..." என்று கூறியவளைக் காதலுடன் பார்த்தவன் மெல்ல தலையசைத்து அவளிடம் விடைப்பெற்றுக் கொண்டு தனது பெற்றோருடன் கிளம்பிச் சென்றான்...

காரில் வரும் போது அமைதியாக வந்த கணவனைத் திரும்பிப் பார்த்த சம்யுக்தா அவன் அருகில் நெருங்கி அமர்ந்தாள்... அவளது செய்கையில் திரும்பிப் பார்த்தவன்,

"என்ன பேபி...?"

அவளோ பதில் சொல்லாது எம்பி அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்... அவளது செய்கையில் அவன் கண்கள் பளபளக்க அவளைத் திரும்பி பார்த்தான்... அப்போது அவனது தவிப்பு நீங்கியிருந்ததைக் கண்டு அவள் மகிழ்ச்சி அடைந்தாள்...

"பேபிக்கு என்னாச்சு...?" என்று அவன் வியப்பாய் புருவம் உயர்த்த...

"உங்களோட உயர்ந்த உள்ளம் யாருக்கும் வராது..."

"யார்...? நானா...?" அவனது வார்த்தைகள் கசப்பாக வந்தது...

"நிச்சயம் நீங்க தான்... நீங்க இல்லாம வேறு யார்...?" என்று கூறியவள் சலுகையுடன் அவனது கையில் தலை சாய்ந்து கொண்டாள்...

"நீ சொன்னால் சரி தான் பேபி..." என்று அவன் தன்னைத் தேற்றிக் கொண்டான்...

அவனுக்குத் தெரியும், அவளது காதல் அவனது அத்தனை தவறுகளையும் மன்னிக்கும், மறக்கும் என்று... அவளது நேசத்தினால் தானே அவன் உயிர்ப்புடன் வாழ்கிறான்... மனம் நெகிழ அவளது உச்சந்தலை மீது தனது கன்னத்தினை அழுந்த வைத்துக் கொண்டான்... இருவருக்குமே மனம் சந்தோசமாக இருந்தது...

***************

அன்று தொழிற்கூடத்திற்குச் சம்யுக்தா முக்கியமான வேலை விசயமாக வந்திருந்தாள்... அவளது வரவினை உணர்ந்து மாதுரிமா அவளைக் காண அங்கு வந்திருந்தாள்...

"வாங்க மிஸ். மாதுரிமா... ரொம்ப நாளா ஆளைக் காணோமேன்னு பார்த்தேன்..." என்று இரு கைகளைக் கட்டி கொண்டு அவளைத் தைரியமாக எதிர்க்கொண்டாள் சம்யுக்தா...

அதைக் கேட்டு மாதுரிமா முகம் கறுத்துப் போனது...!!!

தொடரும்...!!!

வினோதினி, மாதுரிமா மீதான கொலை வழக்கு, அது சம்பந்தப்பட்ட தண்டனை எல்லாம் சம்யுக்தாவிற்குத் தெரியும்... ஏனெனில் அதில் கணவனது பெயரும் அடிப்பட்ட காரணத்தால் அவள் விசயத்தைத் தானாக ஊகித்துக் கொண்டாள்... மாதுரிமாவின் இன்னொரு பக்கம் தெரிந்ததும் அவளுக்கு 'ச்சீ' என்றாகி விட்டது... அதே சமயம் கணவனை நினைத்து பாவமாகவும் இருந்தது... ஒருவன் நல்லவனாக இருந்தால் இத்தகைய சோதனைகள் வரக் கூடுமோ? என்று அவள் அவனை நினைத்து மனம் வருந்தினாள்...

"ஓ, நான் வருவேன்னு எதிர்பார்த்தியா...?" என்று அலட்சியத்துடன் மாதுரிமா கேட்க...

"எந்தவித சேதாரமும் இல்லாம தப்பிச்சிட்டு இருக்கியே... அதனால் தான் எதிர்பார்த்தேன்..." என்று இளக்கார குரலில் கூறியவளைக் கண்டு,

"என்ன கிண்டல் பண்றியா...?"

"கிண்டல் இல்லை... உண்மையைச் சொன்னேன்... மாமாகாரு, பாவா இவங்களைப் பத்தி தெரிஞ்சு இருந்தும் நீ என்னைத் தேடி வந்திருக்கேன்னா...? அதுக்கு என்ன அர்த்தம்...? இது தானே..." என்றவள் பின் கேலி குரலில்,

"இனி சேதாரத்திற்கு நான் பொறுப்பில்லை..." என்றாள் அமர்த்தலான குரலில்...

"என்ன ரொம்பத் தான் சவுண்ட் விடுற... இனி உன் கிட்ட பேசி பிரயோஜனம் இல்லை... நான் என் இந்தர் கிட்ட பேசிக்கிறேன்..."

மாதுரிமா சொல்லி முடிக்கும் முன் அவளது கன்னத்தில் இடியாய் தனது கையை இறக்கினாள் சம்யுக்தா... அதிர்ந்து போய்க் கன்னத்தில் கை வைத்தபடி நின்றிருந்தவள் முன் தனது ஆள்காட்டி விரலை நீட்டி,

"உன்னை மாதிரி சொகுசா வளர்ந்த பூஞ்சை உடம்பு நினைச்சியா...? காட்டு வேலை செஞ்சு வளர்ந்த இரும்பு உடம்பு... என்னோட ஒரு அடிக்கு நீ தாங்க மாட்ட..." என்று அவளை எச்சரித்தவள்,

"இங்கே பார், நீ பாவாவுக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவள்... நீ அவர் மேல் ஆசைப்பட்டதே தப்பு... அதை விட இப்போ உன்னை விட்டு விலகி வந்தவர் மேல் ஆசைப்படுறது ரொம்பவும் தப்பு... அவருக்கு எப்படிப்பட்ட பொண்ணு மனைவியா வரணும்ன்னு எனக்குத் தெரியும்... அது நிச்சயம் நீ இல்லை... போ, முதலில் இங்கே இருந்து கிளம்பு... நீயா கிளம்புறியா...? இல்லை ஆள் வச்சு வெளியில் தள்ளவா...?" என்று ஆக்ரோசமாய்க் கத்தியவளைக் கண்டு திகைத்துப் போனவளாய் மாதுரிமா வெளியில் வந்துவிட்டாள்...

மாதுரிமா சென்றும் கூடச் சிறிதும் கோபம் குறையாதவளாய் நின்றிருந்தாள் சம்யுக்தா... கணவனது வாழ்க்கையைப் பற்றி அவளது கனவு வானளவு இருக்கிறது... இதில் இவள் வேறு இடையில் நுழைந்து 'நை நை' என்று கத்திக் கொண்டு... அவளுக்கு அப்படியொரு எரிச்சல் வந்தது...

வெளியில் வந்த மாதுரிமாவுக்குக் கோபம் தணியவில்லை... கடைசி முயற்சியாக இந்திரஜித்தைச் சந்தித்துப் பேச நினைத்தாள்... இவ்வளவு நாள் அவனிடம் இருந்து விலகி நின்று வேடிக்கை பார்த்தவள் இன்று அவன் அருகில் சென்று நெருங்க முடிவு செய்துவிட்டாள்... அவளது அருகாமையில் அவன் மனம் தடுமாறுவது அவளுக்குத் தெரியாதா என்ன...?

'என்னையாடி வெளியில் போன்னு சொன்ன... உன்னை வெளியில் போக வைக்கிறேன் பார்...' என்று மனதிற்குள் சபதம் போட்டுக் கொண்டாள் மாதுரிமா...

ஆனால் அவளால் இந்திரஜித்தை அவ்வளவு எளிதில் சந்திக்க முடியவில்லை... வெகுநேரம் அவனது அலுவலகம்

முன் காத்திருந்து அவன் காரில் ஏறும் சமயம் அவள் அவனை நோக்கி ஓடி வந்தாள்...

"இந்தர், இந்தர்..." என்று அவள் கத்திக் கொண்டு ஓடி வந்தது கண்டு இந்திரஜித்திற்கு எரிச்சல் வந்தது... ஆனாலும் மற்றவர்களுக்கு வேடிக்கை பொருளாகாது இருக்க வேண்டி அமைதி காத்து நின்றான்... அவனது அமைதியை அவள் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டாள்...

"இந்தர், இப்போ நான் என் தவறை எல்லாம் உணர்ந்து வந்திருக்கிறேன்... என்னை ஏத்துக்கோ... இப்போ தான் நான் என் மனசை உணர்றேன்... என் மனசில் நீ மட்டும் தான் இருக்க..."

ஒருகாலத்தில் இந்த வார்த்தைகளுக்காக அவன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தவன் தான்... ஆனால் இன்று எந்தவித உணர்ச்சியும் இல்லாது கைகளைக் கட்டிக் கொண்டு அவளை வெறுமையாய்ப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்...

"இந்தர், நீ இல்லைன்னா நான் செத்துருவேன்... எனக்குன்னு யாருமே இல்லை... நீ மட்டும் தான் இருக்க... நீயும் என்னைக் கைவிட்டுராதே இந்தர்..."

"இதை ஏன் என் கிட்ட சொல்லுற...? உன் வருங்காலக் கணவனிடம் போய்ச் சொல்லு..." என்றான் அவன் உணர்ச்சி துடைத்த குரலில்...

"கிஷோர் கிட்ட சொல்லிட்டேன், நான் இந்தரைக் காதலிக்கிறேன்... அவனைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு..."

"அப்படியா நீ காதலிக்கும் அந்த இந்தருக்கு வாழ்த்துக்கள்..." என்றான் அவன் நக்கலாய்...

"இந்தர், நீ என் பொறுமையைச் சோதிக்கிற..." என்றவளின் ஆங்காரக் குரலில் தனது முழு உயரத்திற்கும் கம்பீரமாக நிமிர்ந்தவன்,

"நீ தான் என் பொறுமையைச் சோதிக்கிற... உனக்கும், எனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது... இருந்த ஒரே சம்பந்தம் பிசினஸ் டீலிங் மட்டுமே... அதையும் இப்போ விவேக் தான் பார்த்துக்கிறார்... சோ..." என்றவன் நிறுவனத்தின் வாயிலை நோக்கிக் கையைச் சுட்டிக்காட்ட...

கணவன், மனைவி இருவரும் சொல்லி வைத்தார் போன்று ஒரே மாதிரி தன்னை வெளியில் போகச் சொல்லி அவமானப்படுத்தியதைக் கண்டு,

"என்ன புருசனும், பொண்டாட்டியும் சேர்ந்துக்கிட்டு ஒரே மாதிரி என்னை அவமானப்படுத்துறீங்களா...? விட மாட்டேன், உங்களை நிம்மதியா வாழ விட மாட்டேன்... அவள் என்னடான்னா, நான் உனக்குப் பொருத்தம் இல்லைன்னு சொல்கிறாள்... உனக்கு எப்படிப்பட்ட பொண்ணு மனைவியா வரணும்ன்னு அவளுக்கு மட்டும் தான் தெரியுமாம்... அவளுக்கு என்னைப் பார்த்தா அந்த மாதிரி தெரியலையா...?" என்று அவள் வெகுண்டாள்...

அவளது முதல் வரியில் மனதில் சந்தோசம் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்தின் மனதில் மனைவியின் மதி முகமே உலா வந்தது... ஆனால் அவள் கடைசியாய் கூறிய வரியில் அவனது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது... இதற்கு அர்த்தம் என்ன...? அவனது மனம் குழம்பிப் போய்த் தவித்தது...

மேலே ஏதேதோ கத்திக் கொண்டிருந்த மாதுரிமாவைக் கண்டு, "ஸ்டாப்பிட்..." என்று கோபமாய்க் கத்தியவன் தனது காவலாளியை அழைத்து,

"இவளைப் பிடிச்சு வெளியில் தள்ளு..." என்று கத்திவிட்டு காரிலேறி கிளம்பி விட்டான்...

காரை ஓட்டிக் கொண்டே தனது அலைப்பேசியை எடுத்தவன் மனைவிக்கு அழைத்தான்...

"பேபி எங்கே இருக்க...?"

"ஒரு ஆர்டர் சம்பந்தமா கம்பெனியில் இருக்கேன்..." என்றவளிடம்,

"உடனே வீட்டுக்கு கிளம்பி வா..." என்க...

"பாவா... இப்போ எப்படி...?"

"சொன்னதை மட்டும் செய்..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவன் கோபமாய் அழைப்பை துண்டித்தான்...

அவன் வீடு வந்து சேர்ந்த போது அவனுக்கு முன் அவனது மனையாள் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்... அவனது கோபக்குரல் கேட்டு அவள் பரிதவிப்புடன் நின்றிருந்தாள்... அவன் கார் கதவைத் திறக்கும் முன் அருகில் வந்து கதவைத் திறந்து விட்டவள் அவன் புறம் குனிந்து,

"கோபமா இருக்கீங்களா பாவா...?" என்று தவிப்புடன் கேட்டவளைக் கண்டு அவனது கோபம் சிறிது குறைந்தது... ஆனாலும் முற்றிலுமாய்க் குறையவில்லை... பதில் பேசாது காரில் இருந்து இறங்கியவன்,

"ரூமுக்கு வா..." என்று கட்டளையிட்டபடி முன்னே நடக்க... அவளோ அவன் பின்னே ஓடி சென்றாள்...

அறைக்குள் வந்ததும் சம்யுக்தா கணவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்... 'இந்தப் பார்வைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை' என்று மனதிற்குள் அவளிடம் செல்லக் கோபம் கொண்டவன் வெளியில் அவளை முறைத்துப் பார்த்தான்...

"எனக்கு எப்படிப்பட்ட பொண்ணு மனைவியா வரணும்ன்னு மேடம் நினைச்சிருக்கீங்க...?" கைகளைக் கட்டிக் கொண்டு அவன் அமர்த்தலாகக் கேள்வி கேட்க... அவளோ பதில் கூற இயலாது விழித்தாள்...

அவனும் மாதுரிமா கூறியதாக அவளிடம் கூறவில்லை... அவளும் மாதுரிமாவிடம் தான் பேசியதாக வாய் திறக்கவில்லை...

"வாயைத் திறந்து பேசினால் நல்லா இருக்கும் மேடம்..." என்று நக்கல் குரலில் அவன் கூற...

"அது வந்து பாவா..." என்றவளை அவன் இமைக்காது பார்க்க...

அதில் சிறிது தைரியம் வரப் பெற்றவளாய் அவன் அருகில் வந்தவள் அவனது சட்டை பொத்தானைத் திருகிக் கொண்டே,

"இந்த இளவரசனுக்கு ஏத்த இளவரசியா இருக்கணும்ன்னு நினைச்சேன்..."

"ஓ..." என்று அசுவாரசியமாய்ச் சொன்னவனைக் கண்டு,

"இல்லையா பின்னே... சொன்னாலும் சொல்லலைன்னாலும் நீங்க இளவரசன் தான்... உங்க லெவலே வேறு..." என்று மனமும், முகமும் சுணங்காது முகம் மலரக் கூறியவளை கண்டு காதல் பெருக்கெடுக்கத் தனது கோபத்தைக் கைவிட்டவனாய் அவன் அவளைத் தனது கைகளில் அள்ளிக் கொண்டான்...

"பாவா, என்ன பண்றீங்க...?" என்று அலறியவளைச் சட்டை செய்யாது படுக்கையில் கிடத்தி அவளோடு சாய்ந்தவன் தனது காதலை முத்தத்தின் மூலம் அவளிடம் வெளிப்படுத்தினான்...

சிறிது நேரம் கழித்து, "போதும் பாவா, போதும்..." மூச்சு வாங்க அவனைத் தள்ளிவிட்டவளின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது... அவளது இதழ்களில் மந்தகாசப் புன்னகை தவழ்ந்தது...

"என்னோட மனைவிக்கு என்ன தகுதி இருக்கணும்ன்னு நான் சொல்லவா...?" என்று அவளது காதோரம் ரகசியமாய்க் கிசுகிசுத்தவனைக் கண்டு முகம் மலர பார்த்தவள்,

"செப்பண்டி பாவா..." (சொல்லுங்க பாவா) என்று சந்தோசமாகக் கேட்டவளைக் கண்டு அவனது மனம்

கனிந்தது...

"சம்யுக்தா..." என்றான் ஒற்றை வார்த்தையில் தனது ஒட்டுமொத்தக் காதலையும் தேக்கி...

"பாவா..." அவள் வியப்பில் விழி விரிக்க...

"உன் காதலை விட வேறு என்னடி தகுதி வேண்டும்...?" என்றவனைக் கண்டு சந்தோசம் கொண்டு அவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டாள்...

அவனது மனமோ அவளது நெருக்கத்தில் முழுவதுமாகச் சமாதானம் அடையாது தவிக்க ஆரம்பித்தது... என்னவென்று தெரியவில்லை... ஏதோ ஒன்று சரியில்லை என்பது போல் அவனது மனம் சத்தமாய் அபாயச் சங்கை அலறச் செய்தது...

*****************

கண்ணன், மீரா திருமணம் விசயமாகச் சஞ்சய், காவ்யா இருவரும் சித்தார்த், பிரகதீஸ்வரியைத் தேடி வந்திருந்தனர்... ஏனெனில் இரு திருமணங்களையும் நடத்தும் பொறுப்பைச் சித்தார்த் தான் ஏற்று இருந்தான்... அப்போது இந்திரஜித்தும் அங்குத் தான் இருந்தான்... வந்தவர்களை அவன் வாங்க என்று வரவேற்கவும் இல்லை, அவர்களைச் சிறிதும் கண்டு கொள்ளவும் இல்லை...

தாங்கள் வந்த விசயத்தைப் பேசிவிட்டு கிளம்பும் போது சஞ்சய், காவ்யா இருவரும் இந்திரஜித்தின் முன் தயங்கியபடி வந்து நின்றனர்... இந்திரஜித் அவர்களை நிமிர்ந்து பார்க்காது அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"சாரிடா இந்தர்..." என்று மன்னிப்புக் கேட்டவர்களைக் கோபமாய் நிமிர்ந்து பார்த்தவன்,

"என் மேல் நீங்க வச்ச நம்பிக்கை இவ்வளவு தானா...?" என்று கேட்க...

"அதான் சாரி சொல்றோமே..." என்றபடி அவனது இருபக்கமும் அமர்ந்தவர்கள் அவனை அணைத்துக் கொள்ள... அவனோ கல்லென இறுகிப் போனான்...

"என் மேல் நம்பிக்கை வேண்டாம்... ஆனா என் அப்பா, அம்மா வளர்ப்பில் கூடவா உங்களுக்கு நம்பிக்கை இல்லை...?"

"இந்தர்... சாரிடா, சாரிடா..." என்று மன்னிப்பு கேட்டவர்களின் விழிகள் கலங்கியது...

"அவள் என் மனைவி... அவளை எப்படி நான் அடுத்தவனுக்கு விட்டுக் கொடுப்பேன்...? அப்போ நான் வாய் திறக்காது அவளை விட்டுக் கொடுத்திருந்தால் தான் அசிங்கம்... அந்த அசிங்கத்தை என்னைச் செய்யச் சொல்றீங்களா...?" என்று கோபமாய்க் கேட்டவன் அதற்கு மேல் அங்கு அமர முடியாமல் எழுந்து நின்றான்... அவர்களும் உடன் எழுந்தனர்...

"பாவா... அவங்க பாவம் தானே... அவங்க கிட்ட பேசுங்க..." என்று சம்யுக்தா அவனிடம் கெஞ்ச...

"என்னைப் பார்த்த இரண்டு நாளில் நீ என்னை முழுவதுமாய் நம்பின... ஆனா இவங்க...? சின்ன வயசில் இருந்து என் கூடவே வளர்ந்தவங்க... என்னைப் பத்தி இவங்க சரியா புரிஞ்சிக்க வேண்டாமா...? அப்படித் தான் பேசிட்டு போவாங்களா...?" இந்திரஜித்திற்கு இன்னமும் கோபம் குறையவில்லை...

"அது வந்து..." என்று இழுத்தவள்,

"இருந்தாலும் நீங்க மன்னிக்கலாம் பாவா... பாவம் அண்ணய்யாவும், வதினவும்..." என்று கெஞ்சுதலாய்க் கூறிய மனையாளைக் கண்டு அவன் கொஞ்சம் மலையிறங்கினான்...

"உனக்காக இவங்களை மன்னிக்கிறேன்..." என்க... அடுத்த நொடி இருவரும்,

"இந்தர்..." என்று மகிழ்ச்சியோடு அவனை அணைத்துக் கொண்டனர்...

"சஞ்சய், காவி..." என்று அவனும் மனம் நெகிழ அவர்களை அணைத்துக் கொண்டான்...

அதன் பிறகு அவர்கள் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு கிளம்பிச் சென்றனர்...

"பையன் பக்கா சாமியார்ம்மா... ரொம்ப நல்ல பையனும் கூட... ஆனா உன் கிட்ட எப்படி விழுந்தான்னு தான் தெரியலை..." என்று கூறிய சஞ்சய் சம்யுக்தாவிடம் விடைப்பெற... அவளோ கணவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

அவனின் இந்த நல்ல மனசை தான் மாதுரிமா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள் என்பதை அவள் வேதனையுடன் நினைத்துப் பார்த்தாள்... மாதுரிமா மட்டும் அவனது வாழ்வில் வராது போயிருந்தால் இப்போது கணவனது வாழ்க்கை இன்னமும் பிரகாசமாக இருந்திருக்குமே என்று யோசித்தவளின் முகம் பிரகாசத்தை இழந்தது...

"பேபி..." அந்தக் கணம் அவளது மனநிலையைப் புரிந்தார் போன்று அவனது கரம் அவளை ஆதரவோடு அணைத்துக் கொண்டது... அவனை ஏறிட்டு பார்த்தவள் புன்னகைத்தாள்...

"நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்..." என்று அவனது கையை விலக்கி விட்டு அவள் செல்ல... அவனோ அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்... மனைவி என்ன நினைக்கிறாள் என்பது அவனுக்குச் சத்தியமாகப் புரியவில்லை...

"இந்தர்..." சித்தார்த் அவனது தோளைத் தொட்டான்...

'என்ன?' என்பது போல் இந்திரஜித் தந்தையைத் திரும்பிப் பார்க்க...

"நீ எப்போ சம்யுவை பார்க்க போன...? எனக்கு மட்டும் அந்த ரகசியத்தைச் சொல்லேன்..."

'நான் என்ன கவலையில் இருக்கேன்... இவர் வேற நேரங்காலம் தெரியாம...' என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டவன்,

"அது சீக்ரெட்... முடிஞ்சா கண்டுபிடிங்க பார்க்கலாம்..."

"கண்டுபிடிக்க மாட்டேன்னு தைரியமா...? நான் நினைச்சா எதையும் கண்டுபிடிக்க முடியும்..." என்று மீசையை முறுக்கினான் சித்தார்த்...

"அப்படியா...? அப்போ நீங்களே கண்டுபிடிச்சுக்கோங்க..." என்று அங்கிருந்து நகரப் போன மகனைத் தடுத்தவன்,

"சம்யு இருக்கும் தைரியம்..."

"எஸ்... அவள் காதல் மீது இருக்கும் தைரியம்... எனக்கு எதிரா அவள் தன்னோட சுண்டு விரலைக் கூட அசைக்க மாட்டாள்..." என்றான் அவன் கர்வமாக...

மகனை குறுகுறுவென்று பார்த்த சித்தார்த் அடுத்த நொடி அவனை அணைத்துக் கொண்டான்...

"ரொம்பச் சந்தோசமா இருக்கு இந்தர்... இதே போல் ஒற்றுமையா காதலோடு வாழுங்க..." என்று வாழ்த்த...

"நிச்சயமாக..." என்று கூறி சிரித்த இந்திரஜித் அங்கிருந்து அகன்றான்...

எல்லாவற்றையும் கண்டுபிடித்த சித்தார்த்தால் இதை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை... ஒன்று மகன் வாய் திறக்க வேண்டும்... இல்லை மருமகள் வாய் திறக்க வேண்டும்... இப்போதைக்கு இரண்டுமே நடப்பதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு... ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காது இருக்கும் அந்த அன்றில் பறவைகளைக் கண்டு அவனுக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது... தான் நினைத்த மாதிரி மகனது வாழ்க்கை அமைந்து விட்டது குறித்து அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது...

******************

அதோ இதோ என்றிருந்த திருமண நாளும் நாளை என்றளவில் நெருங்கி விட்டது... மீரா காவல்துறையில் பணியாற்றினாலும் பழகுவதற்கு இனிமையான பெண்ணாக இருந்தாள்... அவள் எல்லோரிடமும் இன்முகமாகப் பழக, எல்லோருக்கும் அவளை மிகவும் பிடித்துப் போயிற்று... அன்று பெண்கள் எல்லோரும் கைகளில் மருதாணி வைத்துக் கொண்டிருந்தனர்... சம்யுக்தா மட்டும் கைகளில் மருதாணி வைக்காது அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்... எல்லோரும் வற்புறுத்திய போதும் அவள் வைக்கவில்லை...

அறைக்குத் தூங்க வரும் போது தான் இந்திரஜித் அவளது கைகளைக் கவனித்தான்... அவளது கைகளில் மருதாணி இல்லாததைக் கண்டு,

"நீ மட்டும் ஏன் மெஹந்தி வைக்கலை...?"

"ம்ப்ச், வேண்டாம் பாவா..." என்று படுக்கையில் சுருண்டு படுத்தவளைக் கண்டு அவனது புருவங்கள் சுருங்கியது...

"நீ பழசு எதையும் மறக்கலையா பேபி..." அருகில் ஒலித்த அவனது குரலில் தூக்கிவாரிப் போட அவள் எழுந்தமர்ந்தாள்...

"அப்போ இன்னும் நீ என்னை மன்னிக்கலை அப்படித் தானே..."

முன்பு ஏற்பட்ட காயம் அவளது அடிமனதில் இருக்கத் தான் செய்கிறது... ஆனால் அதற்காக எல்லாம் அவனைக் காயப்படுத்த வேண்டும் என்கிற வெறி எல்லாம் அவளுக்குக் கிடையாது... அவளுக்கு அப்படிப் பழிவாங்கவும் தெரியாது...

"இல்லை பாவா..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"சரி படு..." என்றவன் படுத்து விழிகளை மூடிக் கொண்டான்... அவளோ அவனைப் பார்த்தபடி

அமர்ந்திருந்தாள்...

மறுநாள் அதிகாலையில் எழுந்த இந்திரஜித்தின் முன் வந்து நின்றாள் சம்யுக்தா... அவன் அமைதியாக அவளை ஏறிட்டுப் பார்த்தான்... இரவு நடந்த கசப்பு அவனது நினைவில் இல்லை... அவள் அவன் முன்பு தனது இரு கைகளையும் நீட்டினாள்... அதில் அழகாகக் குட்டி கண்ணன் வெண்ணெய் உண்டபடி குறும்பாய் சிரித்துக் கொண்டிருந்தான்... அவ்வளவு தத்ரூபமாக அந்த ஓவியம் மருதாணி கொண்டு வரையப்பட்டு இருந்தது...

இந்திரஜித் மனம் நெகிழ, விழி கலங்க அதை மெல்ல வருடிக் கொடுத்தான்...

"பிடிச்சிருக்கா...?" என்று கேட்டவளின் வார்த்தையில்,

"ரொம்ப, ரொம்ப..." என்றவன் அவளது கைகளில் முத்தமிட்டான்... மருதாணியின் வாசம் அவனது நாசியில் சுகமாய் ஏறியது...

அவனது மீசை குறுகுறுப்பில் அவளது நெஞ்சம் சொல்லொண்ணா உணர்வில் குறுகுறுத்தது...

"கண்ணன் வரைஞ்சதுக்குப் பதிலா, ராதை வரைஞ்சிருக்கலாம்... ஏன்னா எனக்குப் பொண்ணு தான் வேணும் பேபி..." என்றவனின் குரல் அத்தனை நெகிழ்ந்திருந்தது...

"எதுவாயிருந்தால் என்ன...? சந்தோசமா ஏத்துக்கிட வேண்டியது தான்..."

"அது எப்படி முடியும்...? நான் கேட்ட மாதிரி மகள் பிறக்கும் வரை நான் உன்னை விடுவதாய் இல்லை..." என்று கண்சிமிட்டி குறும்பாய்க் கூறி சிரித்த கணவனைக் கண்டு அவளது முகம் மாறியது... பேச்சை மாற்றும் பொருட்டு,

"கல்யாணத்துக்குக் கிளம்ப வேண்டாமா...?" என்று கூறி அவள் அவனை அவசரப்படுத்த... அவனும் பேச வந்ததை மறந்து குளியலறைக்குள் புகுந்தான்...

இரண்டு திருமணம் என்பதால் அந்தப் பெரிய திருமண மண்டபம் கூட்டத்தால் நிறைந்து வழிந்தது... கண்ணன் மீரா கழுத்தில் தாலி கட்ட, அவனது தங்கை காவ்யா மீதமுள்ள முடிச்சுகளை முடிந்தாள்... அது போல் தான் பிரசன்னா யமுனா கழுத்தில் மங்கல நாணை அணிவித்து இரு முடிச்சு போட, மீதமுள்ள முடிச்சை அவனது மூத்த தங்கை போட்டு விட்டாள்...

அப்போது அங்கு நின்றிருந்த இந்திரஜித்தின் கை விரல்கள் மனைவியின் கழுத்தில் இருந்த கருகமணி மாலையை மென்மையாய் வருடிக் கொடுத்தது...

"அன்னைக்குச் சஞ்சய், காவி கல்யாணத்தில் தாலி கட்டும் போது நான் உன் கழுத்தில் இருந்த தாலியைத் தான் பார்த்துக்கிட்டு இருந்தேன்..." அவன் மெதுவே முணுமுணுக்க...

"நானும் தான் பாவா..." என்று அவளும் முகம் மலர கூறினாள்...

"இதை மட்டும் நான் உன் கழுத்தில் போடாது போயிருந்தால் என் வாழ்க்கை என்னவாகி இருக்குமோ..." என்று அவன் வேதனையுடன் கூற...

"இதை விட ரொம்ப நல்லா இருந்திருக்கும் பாவா..." என்றவள் திருமண நிகழ்வை கவனிக்க ஆரம்பிக்க... அவனோ அவளது வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தும் புரியாமலும் பரிதாபமாய் விழித்தான்...

அன்றைய இரவு கண்ணன், மீரா காதல் வாழ்க்கை ஆர்ப்பாட்டம் இல்லாத நதி போல் அமைதியாகக் கடந்து சென்றது...

அதற்கு நேர்மாறாய் பிரசன்னா, யமுனா வாழ்க்கை அதிரடியாய் ஆரம்பித்தது... யமுனா அறைக்குள் நுழைந்ததும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அவள் அருகே வந்த பிரசன்னா சற்றுக் குரலை உயர்த்தி,

"அன்னைக்கு என்னமோ எல்லாம் தெரியும்ன்னு சொன்னியே... அதை எல்லாம் கொஞ்சம் சொல்லிக் கொடு பார்ப்போம்..." என்று கிண்டலாய் கூற...

"அது வந்து பிரசன்னா..." பயத்தில் திக்கித் திணறினாள் யமுனா... நெருங்கி நின்றிருந்த கணவனது அருகாமை அவளது இதயத்தைச் சத்தமாய்ச் சப்தமிட செய்தது...

"எல்லாம் வாய் பேச்சு மட்டும் தானா...?" என்று கேலி குரலில் கேட்டவன்,

"நான் சொல்லி தரவா...?" என்றபடி அவளது முகம் நோக்கி குனிய... அவளோ பயத்தில் விழிகளை மூட...

"ஹா ஹா... அந்தப் பயம் இருக்கணும்..." என்று வில்லன் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு அவள் விழிகளை லேசாகத் திறந்து பார்த்தாள்...

அதற்காகவே காத்திருந்தார் போன்று பிரசன்னா அவளது தேனூறும் இதழ்கள் மீது தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்தான்... அந்த நொடியில் இருந்து அவன் அவளுக்குக் காதல் வாழ்க்கையைப் போதிக்கும் நல்லாசானாய் மாறிப் போக... அவள் தான் நல்ல மாணாக்கனாய் தேர்ச்சி பெற சற்றுத் திணறிப் போனாள்... அன்று அவளைத் தேர்ச்சி பெற வைக்கும் வரை அவனும் ஓயவில்லை...

"இப்போ சொல்லுடி நான் பேபியா...?" என்று அவன் கேட்க... அதைக் கேட்டு களுக்கென்று சிரித்த யமுனா,

"நீங்க அம்பின்னு நினைச்சேன்... ஆனா அந்நியன் மாதிரி கலக்கிட்டீங்க..." என்று குறும்பாய்க் கண்சிமிட்டி சிரித்தவளைக் கண்டு,

"பயம் விட்டிருச்சு போலிருக்கே..." என்று அவன் அவளை ஒரு மாதிரியாகப் பார்க்க...

"உங்க கூடச் சேர்ந்து நானும் அந்நியனியா (அந்நியனுக்குப் பெண்பால்) மாறிட்டேன்..." என்றவள் அவனது முகம்

நோக்கி குனிய... அடுத்த நொடி மனைவியின் செயலைத் தனதாக்கி கொண்டான் அந்த நல்ல கணவன்...

ஐந்து புதுமண ஜோடிகளுக்கும் தேனிலவுக்கு என்று கோவாவிற்கு விமானச் சீட்டு எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்... ஏனெனில் எந்த ஜோடியும் இதுவரை தேனிலவு செல்லவில்லை... அவரவர் பிரச்சினையில் உழன்றபடி இருந்ததால் எங்கும் போகவில்லை... இப்போது பிரச்சினைகள் எல்லாம் தீரவும் சித்தார்த் இந்த ஏற்பாடைச் செய்து கொடுத்தான்...

வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்க அவனால் முடியும்... ஆனால் சம்யுக்தாவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த உள்ளூர் தேனிலவு ஏற்பாடு... சிறியவர்கள் எல்லோரும் அதை மனமார ஏற்றுக் கொண்டனர்... வெகுவருடங்களுக்குப் பின் சிறியவர்கள் எல்லோரும் சேர்ந்து செல்லும் சுற்றுலா இது... அதனால் விளைந்த சந்தோசம்... இதில் புதிய வரவு பிரசன்னா, யமுனா மட்டுமே...

சர்வேஷை எங்கு விட்டுப் போவது என்று குழப்பம் வந்த போது அவனே அந்தக் குழப்பத்திற்கு விடை கூறிவிட்டான்...

"நான் சித்துத் தாத்தா கூட இருக்கப் போறேன்... தாத்தா சோ ஸ்வீட்... எங்கூட விளையாடுவாங்க... கதை சொல்லுவாங்க... அப்புறம் அர்விந்த், ஆதி எல்லாம் இங்கே இருக்காங்க..." என்று அவன் கூறினான்...

சித்தார்த்தைப் பிடிக்காதவர் என்று உலகில் ஒருவர் உண்டோ...!

அதனால் சந்தோஷ், சாத்விகா நிம்மதியுடன் தேனிலவிற்குக் கிளம்பிச் சென்றனர்...

கோவா வந்து இறங்கியதும் அனைத்து ஜோடிகளும் அவரவர் அறைக்கு ஓய்வு எடுக்கச் சென்றுவிட்டனர்... அது

ஒரு சாக்கு... தத்தம் துணைகளின் துணை அவர்களுக்குத் தேவையாக இருந்தது போலும்...

அறைக்குள் வந்ததும் சந்தோஷ் பால்கனியில் வந்து நின்றபடி கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது மனதில் கடலலை போன்று உணர்வு போராட்டங்கள் எழுந்தது...

"அத்தான்..." என்றபடி அவன் அருகே வந்தாள் சாத்விகா...

"அம்மு... நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..." அழுத்தம் திருத்தமாய் ஒலித்த அவனது குரலில் அவள் அவனது உணர்வுகளைப் புரிந்தவளாய்,

"உங்களைப் பத்தி எனக்குத் தெரியும் அத்தான்... நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்..." என்று அவள் கூற...

"இவ்வளவு நாள் என் மனசை அரிச்சிக்கிட்டு இருக்கிற விசயம் இது... இன்னைக்கு நான் கண்டிப்பா உன் கிட்ட சொல்லித் தானாக வேண்டும்..." என்று கூறிய கணவனை அதற்கு மேல் தடுக்க இயலாது அவள் அமைதியாக அவனைப் பார்த்தாள்...

அதே நேரம் இந்திரஜித்தும் அறைக்குள் இருக்கப் பிடிக்காதவனாய் பால்கனியில் வந்து நின்றிருந்தான்... அவனைத் தேடி வந்த சம்யுக்தா அவனைப் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டு அவனது பரந்த முதுகில் முகம் புதைத்தாள் சுகமாய்...

"ஹனிமூனுக்கு வந்திருக்கீங்க பாவா... தனிமூனுக்கு இல்லை..." என்று கேலியாய் உரைத்து களுக்கென்று சிரித்தவளைப் பின்னால் கைச் செலுத்தி தன் முன்னால் நிறுத்தியவன் அவளது முகத்தைக் கூர்ந்து கவனித்தான்...

மனைவியின் விழிகளில் வழிந்த தாபத்தில் அவன் உள்ளுக்குள் அச்சம் கொண்டு அவளைப் பயத்துடன் பார்த்தான்... அவன் வசமாய்ச் சிக்கிக் கொண்டது போல் ஒரு உணர்வு எழுந்து அவனது இதயத்தை எகிறித் துடிக்க வைத்தது...!!!

தொடரும்...!!!

"அப்போ நான் மெடிக்கல் காலேஜ் சேர்ந்த புதுசு..." என்று கூறிய சந்தோஷின் விழிகள் தொடுவானை வெறித்தது... அவனது மனதில் அந்தக் கால நினைவுகள் பசுமையாக எழுந்ததோ...!

"அங்கு க்ளாசில் இருந்த எல்லோருமே புதுசு தான்... முதலில் எல்லோரும் சாதாரணமா பேசி பழகியது நாளடைவில் நட்பா இறுகிப் போயிருச்சு... எங்க கேங்ல இருபது பேருக்கு மேல் இருப்போம்... நாங்க எல்லோரும் எப்போதும் கலகலப்பா, எந்தக் கவலையும் இல்லாது ஜாலியா இருப்போம்... எங்க கேங்கில் ப்ரியாவும் ஒருத்தி... நான் எல்லாப் பெண்களோடும் பழகிற மாதிரி தான் அவள் கூடவும் நட்பா பழகினேன்... எனக்கு நட்பில் ஆண், பெண் பேதம் எல்லாம் கிடையாது... ஆண் நண்பர்களுடன் எப்படி அடிச்சு பிடிச்சு, பேசி விளையாடுவோமோ அப்படித் தான் பெண் நண்பர்கள் கூடவும்... அவங்க கூட எல்லா விசயத்தையும் ஷேர் பண்ணிக்கலாம்... அது போல் தான் நாங்களும்... அப்படிப் பழகும் போது தான் பெண்களின் கஷ்டம் உணர முடிஞ்சது... பெண்களை மரியாதையா பார்க்க முடிஞ்சது... வீட்டில் ஒரே பையனா வளர்ந்த எனக்கு என்னுடைய தோழிகள் தான் பெண்களை மதிக்கச் சொல்லிக் கொடுத்தாங்க... எல்லாமே நல்லா தான் போய்க்கிட்டு இருந்தது..." என்றவனின் முகத்தில் வேதனையின் சாயல் படிந்தது...

"நட்பில் காதலைக் கொண்டு வந்தவள் ப்ரியா... அவள் என் கிட்ட காதலை சொன்ன போது நான் தீர்மானமா மறுத்துட்டேன்... தோழியா பழகிய ஒருத்தியை எப்படிக் காதலியா நினைச்சு பார்க்க முடியும்...? அப்போ அவள் ஒண்ணும் சொல்லாம அமைதியா இருந்துட்டாள்... அப்படித் தான் நான் நினைச்சிக்கிட்டு இருந்தேன்... ஆனா ஃபைனல் இயர் பண்ணும் போது தான் தெரிஞ்சது அவள் என்னை

இன்னமும் காதலிச்சுட்டு இருக்கிறாள்ன்னு... அது தெரிஞ்ச நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத கொடூரமான நாள்..."

கணவனின் துயரம் கண்டு சாத்விகா அவனது கையை ஆறுதலாக பற்றிக் கொண்டாள்... அதை உணர்ந்த சந்தோஷின் பிடியும் இறுகியது...

"அந்த வருசம் நியூ இயர் பார்ட்டிக்கு நாங்க எல்லோரும் போயிருந்தோம்... கேர்ள்ஸ் இருந்ததால் ட்ரிங்க்ஸ் எதுவும் கிடையாது... ஒன்லி சாஃப்ட் ட்ரிங்க்ஸ் தான்... நான் பன்னிரண்டு மணியானதும் கிளம்பி வீட்டுக்கு வந்துட்டேன்... மறுநாள் காலையில் என்னோட இன்னொரு பிரெண்ட் ஃபோன் பண்ணி என்னைக் காலேஜுக்கு வரச் சொன்னான்... அங்கே போய்ப் பார்த்தால்...? ப்ரியா அழுதுக்கிட்டு இருக்கிறாள்... சுத்திலும் பிரெண்ட்ஸ் நின்னுக்கிட்டு இருந்தாங்க... அப்போ அவள் என்னைப் பார்த்து ஆவேசமா கத்திட்டு வந்து என் சட்டையைப் பிடிச்சாள்... எனக்கு ஒண்ணும் புரியலை..." என்று சிறிது நேரம் அமைதி காத்தவன் பின்பு,

"அவளை நான் கெடுத்துட்டதா சொல்லிக் கத்தி கூப்பாடு போட்டாள்... நான் ஸ்தம்பிச்சுப் போயிட்டேன்... காதலியா கூட நினைச்சு பார்க்காத ஒரு பொண்ணு கிட்ட போய்... நான் எப்படி...?" அன்றைய வேதனைக்குக் கொஞ்சமும் குறைவில்லை இன்றைய அவனது வேதனை...

"அத்தான் விடுங்க..." என்று சாத்விகா அவனை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள...

"இல்லை, நீ எல்லா உண்மையும் தெரிஞ்சிக்கணும்... அப்போ கூட நான் நிதானம் இழக்காம தான் அவள் கிட்ட பேசினேன்... 'இப்போவே வா, நாம மெடிக்கல் செக்கப் பண்ணிக்குவோம்... தப்பு என் மேல் இருந்தால் நீ என்ன தண்டனை கொடுத்தாலும் நான் மனசார ஏத்துக்கிறேன்'னு... டாக்டர் படிக்கிறதால என்னவோ எனக்கு அது தான் சரின்னு தோணுச்சு... அதுக்கு அவள் இன்னமும் அதிகமா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணினாள்...

என் பணத்தை வச்சு நான் எல்லாத்தையும் மாத்தி எழுதிருவேன்னு..."

"அதுக்கு அப்புறம் நான் அவளைப் பார்க்கலை... மீண்டும் அவளைப் பரீட்சை சமயத்தில் தான் பார்த்தேன்... லேசான மேடிட்ட வயிறோடு அவள் நடந்து வந்ததைப் பார்த்தப்போ அப்படியே துடிச்சுப் போயிட்டேன்... மனசுக்கு அப்படியொரு கஷ்டமாயிருந்தது... அன்னைக்கு மட்டும் அவள், 'இதுக்குக் காரணம் யாருன்னு தெரியாது... நீ தான் எனக்கு வாழ்க்கை கொடுக்கணும்ன்னு' கேட்டிருந்தால் நிச்சயம் நான் அவளுக்கு வாழ்க்கை கொடுத்திருப்பேன்... ஆனா அவள் கடைசி வரை என்னைக் குற்றம் சொல்லிக்கிட்டே இருந்தாள்... நான் தான் அவளோட குழந்தைக்கு அப்பான்னு... அது தான் என்னை ரொம்பவும் கோபப்படுத்துச்சு... செய்யாத தவறுக்கு நான் எப்படிச் சிலுவை சுமக்க முடியும்...?"

"அதுக்கு அப்புறம் அவளுக்குக் குழந்தை பிறந்தப்பவும் இதே பிரச்சினை வந்தது... அவளோட அப்பா, அம்மா என் கிட்ட வந்து 'இது உன்னோட குழந்தை... நீ தான் வளர்க்கணும்'ன்னு சொன்னப்போ, நான் டாட் கிட்ட தான் உதவி கேட்டுப் போனேன்... அவர் தான் டிஎன்ஏ டெஸ்ட்க்கு ஏற்பாடு பண்ணி அந்தக் குழந்தைக்கு அப்பா நான் இல்லைன்னு நிரூபிச்சாரு... டாட் மட்டும் என்னை நம்பாம போயிருந்தால்...? என் நிலை அவ்வளவு தான்... இது எதுவும் அம்மாவுக்குத் தெரியாது... அதுக்கு அப்புறம் நான் ப்ரியாவைப் பார்க்கலை... அவள் கிட்ட பட்ட அடி எல்லாப் பெண்களிடம் இருந்தும் விலகியே இருந்தேன்... நட்பா பழகக் கூட அவ்வளவு தயக்கமா இருந்துச்சு..."

"அப்போ தான் டாட் உன்னைக் கல்யாணம் பண்ண சொல்லிக் கேட்டார்..."

"மாமாவா...?" அவளது விழிகள் ஆச்சிரியத்தில் விரிந்தது...

"ஆமாம், நீ என்னைக் காதலிக்கிறது எப்படியோ அவருக்குத் தெரிஞ்சிருக்கு... அதனால் தான் ரொம்பவும் வற்புறுத்தினார்... நானும் நம்ம அம்மு தானேன்னு சரின்னு

சொல்லிட்டேன்... நீ என்னடான்னா இந்தக் கல்யாணம் வேண்டாம்ன்னு அழுத... அது என்னை ரொம்பவும் கோபப்படுத்துச்சு... அதே சமயம் என்னை உன் பக்கம் திரும்பிப் பார்க்கவும் வச்சது... எனக்கு என்ன குறைச்சல்? இவள் ஏன் என்னை வேண்டாம்ன்னு சொல்கிறாள்ன்னு எனக்கு உன் மேல் செம கோபம் வந்தது... ஒருவேளை உனக்கு வேறு காதல் இருக்குமோன்னு கூட நினைச்சேன்... ஆனா உன்னைப் பத்தி சின்ன வயசில் இருந்து தெரியும்... அப்படி எதுவும் இருக்காதுன்னும் கன்ஃபார்மா தெரியும்... கடைசியில் பார்த்தால் நீயும் காதலிச்சு இருக்க... அதுவும் என்னை..." என்று கூறியவனின் முகத்தில் சிரிப்பு மீண்டிருந்தது... அதை நிறைவாகப் பார்த்துக் கொண்டிருந்த சாத்விகா,

"ப்ரியாக்காவை யார் இப்படிப் பண்ணியது...?" என்று மெல்லக் கேட்டாள்...

"கடைசிவரை அது யாருன்னே தெரியலை... அவள் குடிச்ச கூல் ட்ரிங்க்சில் போதை மருந்து கலந்து கொடுத்து இதைச் செஞ்சிருக்காங்க... ஒருத்தனா, நிறையப் பேரா இப்படி எதுவுமே தெரியாது... ஏன்னா போலீசில் கம்ப்ளையிண்ட் பண்ண கூட அவள் பயந்தாள்... அப்போ கூட நான் தைரியமா சொன்னேன், 'வா போலீசில் கம்ப்ளையிண்ட் பண்ணுவோம்... தப்பு செஞ்சவன் யாராயிருந்தாலும் தண்டனை வாங்கிக் கொடுக்கலாம்... நான் உனக்குத் துணையா இருக்கேன்னு'... 'இதுக்குக் காரணமே நீ தான்... உனக்கே நீயே தண்டனை வாங்கிக் கொடுக்கப் போறியா...? குட் ஜோக்'ன்னு அவள் என் கிட்ட சண்டை போட்டுட்டு போயிட்டாள்... காலேஜ் முடிஞ்ச பிறகு அவளைப் பத்தி நான் விசாரிக்கக் கூட இல்லை... அவள் என்னவானாள்ன்னு கூட எனக்குத் தெரியாது..." என்றவன்,

"உனக்கு எப்படி ப்ரியாவைத் தெரியும்...?"

"என் பிரெண்ட்டோடு அக்கா உங்க கூடப் படிச்சவங்க தான்..." என்று தோழியின் அக்காவின் பெயரை சொல்ல...

"ஓ, தெரியும்..." என்றான் அவன் சுருக்கமாய்...

"அவங்க ப்ரியாக்காவுக்கு நல்ல பிரெண்ட்... ஒரு நாள் என் பிரெண்ட் வீட்டுக்கு போயிருந்தப்போ தான் அவங்க காலேஜ் ஃபோட்டோஸ்ல உங்களைப் பார்த்துட்டு 'இவங்க தான் என் அத்தான்னு' சொல்லும் முன்னே அவங்க வெறுப்பா உங்களைப் பத்தி சொல்ல ஆரம்பிச்சாங்க... உங்களைக் காதலிக்கும் எனக்கு அப்படி ஒரு அதிர்ச்சி... வீட்டுக்கு வந்து அழுதுக்கிட்டே இருந்தேன்... வீட்டில் யாருக்கும் தெரியாது... அப்புறம் தான் ஒரு முடிவு எடுத்து கண்ணாவைத் தேடி கண்டுபிடிச்சு நான் தத்தெடுத்துக்கிட்டேன்... சட்டப்படி இல்லை... ஆனால் மனசார... ஆசிரம நிர்வாகியும் ஒண்ணும் சொல்லலை... பெற்றோர் இல்லாத அவனுக்கு அன்பா பார்த்துக்கிற ஒரு துணை கிடைச்சிருக்குன்னு சரின்னு சொல்லிட்டாங்க... ஆனா அவனை என்னுடன் வச்சிக்க முடியாத சூழ்நிலை... நான் கல்யாணம் பண்ணப் போறதில்லைன்னு அண்ணா கல்யாணம் முடிஞ்சதும் வீட்டில் சொல்லலாம்ன்னு இருந்தேன்... அதுக்குள்ள நீங்க பெண் கேட்டு வந்து என்னவெல்லாமோ நடந்து போச்சு..." என்றவளை ஆதுரத்துடன் பார்த்தான் சந்தோஷ்...

"இப்போ சொல்லு, என் மேல் எதுவும் தப்பியிருக்கா...?"

கணவன் கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்பது போல் தலையசைத்தவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... அவனது கைகளும் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டது... இந்தப் புரிதல் அவர்களது வாழ்க்கையின் இறுதி வரை இருக்கும் என்று நம்புவோமாக...

எல்லோரும் அரட்டை அடித்தபடி உணவு உண்டு கொண்டிருந்தனர்... இந்திரஜித் மட்டும் உண்ணாமல் உணவை அளைந்து கொண்டிருந்தான்... இங்கு வரும் வரை இப்படியொரு பிரச்சினை வரும் என்று அவன் சிறிதும் யோசிக்கவில்லை... சம்யுக்தாவிற்கு ஒரு மாற்றாக, மனநிம்மதியாக இருக்கும் என்று எண்ணித் தான் அவன் அவளை இங்கு அழைத்து வந்தது... ஆனால் அவனது

நிம்மதி பறி போகும் என்று அவன் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை...

"பாவா..." என்றழைத்த சம்யுக்தாவின் குரலில் அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்...

"இனிமேல் நான் உங்களைத் தொந்திரவு செய்ய மாட்டேன்... அதுக்காக வீணே யோசிச்சிட்டு சாப்பிடாம இருக்காதீங்க..." என்று கூறியவளின் முகத்தினை உற்று நோக்கினான் அவன்...

சிறிது நேரத்திற்கு முன் அறையில் அவளது விழிகளில் தோன்றிய தாபம் மறைந்து போய் இப்போது அதில் தவிப்புக் காணப்பட்டது... அவளது மதி முகம் மகிழ்ச்சியைத் தொலைத்திருந்தது... தன்னுடைய பாராமுகம் அவளை இந்தளவிற்கு வருத்துவதை உணர்ந்தவன் எதையோ யோசித்தபடி முகம் மலர்ந்தவனாய்,

"உன்னைத் தொந்திரவு பண்ணுவதற்காகவாவது நான் நல்லா சாப்பிட்டு தெம்பாக இருக்க வேண்டாமா...?" என்று கண்சிமிட்டி கூறியபடி வேகமாக உணவை உண்ட கணவனைப் புரியாது பார்த்தாள் சம்யுக்தா...

"நீயும் நல்லா சாப்பிட்டு தெம்பா இரு..." என்று அவளை வேறு அவன் ஊக்குவித்தான்...

இவர்களது ரகசிய சம்பாசணையைக் கண்டு சஞ்சய் காவ்யா காதில்,

"புதுசா கல்யாணமான ஜோடிங்களே அடக்கி வாசிக்கிறாங்க... ஆனா இவன் பண்ற லொள்ளு இருக்கே..." என்று ரகசியமாய் முணுமுணுக்க...

"போடா சஞ்சு... உனக்குப் பொறாமை... இப்போ தான் இந்தரை பார்க்கிறதுக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்ற காவ்யா நண்பனை நிறைவாய்ப் பார்த்தாள்...

"நண்பனைப் பார்க்கிறது இருக்கட்டும்... உன் கணவனைப் பார்க்கிறது எப்போது...?" என்றவனை முறைத்துப்

பார்த்தாள் அவள்...

"கணவனைக் காதலாய் பார்க்க வேண்டும் சகியே... இப்படிக் காட்டுமிராண்டி மாதிரி பயங்கரமா பார்க்க கூடாது..." என்று பயந்தவன் போல் அவன் கூற...

"உன்னை..." என்றவள் தனது கையில் இருந்த கரண்டியால் அவனது கையில் ஓங்கி ஒரு போடு போட்டாள்...

"ஐயோ, அம்மா..." என்று அலறிய சஞ்சயைக் கண்டு தங்களது துணைகளிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்த அனைவரும் திரும்பிப் பார்த்தனர்...

"ஒண்ணுமில்லை..." என்று அசடு வழிந்தவனை ஒரு மாதிரியாய் பார்த்து விட்டு மீண்டும் எல்லோரும் தத்தம் வேலையைப் பார்க்க...

"ஏன்டா இப்படிக் கத்தி மானத்தை வாங்கிற...?" என்று காவ்யா அதுக்கு வேறு பல்லைக் கடித்தாள்...

"நீ இப்படி அடிச்சா கத்தாம என்ன பண்றது...?" என்று கையைத் தடவி விட்டு கொண்டவனைக் கண்டு,

"ரொம்ப வலிக்குதா...?" என்று அவள் கேட்க...

"ம்... ம்..." என்றான் அவனும் பாவமாக...

அதில் அவள் பரிதாபப்பட்டு அவனது கையை வருடி கொடுத்தாள்... கணவனிடம் இருந்து எந்தவித சத்தமும் இல்லாது போகவும் அவள் அவனை ஏறிட்டுப் பார்க்க... அவனோ சுகமாய் விழிகளை மூடி அவளது வருடலில் லயித்திருந்தான்...

"ப்ராடு..." என்றபடி அவள் அவனது கையில் நறுக்கென்று கிள்ளி வைத்தாள்...

ஏற்கெனவே கத்தியதில் கேவலமாகப் பார்த்த தோழமைகள் நினைவுக்கு வந்ததில் சஞ்சய் வலியைப் பொறுத்துக் கொண்டு மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான்... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது

உணவில் கவனத்தைச் செலுத்தினாள்... அதைக் கண்டு வேறுவழியில்லாது அவனும் சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்தினான்...

இரவு உணவு முடிந்து எல்லோரும் அவரவர் அறைக்குச் செல்ல... இந்திரஜித்தும், சம்யுக்தாவும் தங்களது அறைக்கு வந்தனர்... கணவனை வருத்தி விட்டோமோ என்று தனக்குள் உழன்றபடி படுக்கையில் படுத்த சம்யுக்தா கண்ணிமைக்கும் நேரத்தில் கணவனது அணைப்பில் அடங்கியிருந்தாள்... பிரமிப்பு நீங்காது அவள் அவனை இமைக்காது பார்த்தாள்...

"என்னடி பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?"

கணவனது குரலில் பிரமிப்பு சற்று அடங்க சம்யுக்தா அவனைப் பார்த்து களுக்கென்று சிரித்தாள்...

"உங்களுக்குப் பயம் போயிருச்சா...?" என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவளைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது...

"கொஞ்சம் பயம் தான்..." என்றவனை நோக்கி விழி மலர்த்தியவள்,

"பாவா பயப்படுவாங்களா...?" என்று ஆச்சிரியத்துடன் கேட்க...

"உனக்கு மட்டும்..." என்றவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவனது செயல் கண்டு அவள் தனது விழிகளில் காதலைத் தேக்கி பரவசத்துடன் அவனை நோக்கினாள்... இதுநாள் வரை இப்படியொரு சந்தோசத்தை அவன் அவளிடத்தில் கண்டது இல்லை...

"இன்னைக்கு என்னமோ பேபி புதுசா தெரியறாளே..." என்று அவளது நாசியோடு தனது நாசியைக் கொண்டு உரசியவனைக் கண்டு,

"நீங்க என் பக்கத்தில் வந்து எத்தனை நாட்களாகிருச்சு தெரியுமா...?" என்று ஏக்கத்துடன் அவள் கேட்க...

அது அவனுக்குத் தெரியாதா என்ன...? அவளுக்கு விபத்து நடந்ததில் இருந்து அவன் விலகி தானே இருக்கிறான்...

"அதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு இன்னைக்கு ஈடுகட்டலாம்ன்னு இருக்கேன்..." என்றவன் அவளுள் தாபத்துடன் புதைந்தான்...

என்றுமே பூவையவளைத் துன்புறுத்தக் கூடாது என்று மென்மையைக் கடைப்பிடிப்பவன் இன்று அவள் மனதில் தனது காதலை நிலைநிறுத்தும் விதமாய் வன்மையைக் கையில் எடுத்தான்... அவன் அப்படியாவது தனது காதல் சுவட்டினை அவளது மனதில் அழுத்தமாய்ப் பதிக்க நினைத்தான்... அவன் என்றுமே சொல்லல்லாது செயலில் காண்பிக்கும் செயல் வீரனல்லவா...!

அவளும் இத்தனை நாள் தனது மன ஏக்கத்தினை அவனை ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்றதில் வெளிக்காட்டினாள்... ஏனோ மனம் சந்தோசத்தில் கொண்டாடியதில் அவள் அவனைக் கொண்டாடி கொண்டாடி மகிழ்ந்தாள்...

இந்திரஜித் தனக்கு மனைவி எந்தளவிற்குத் தேவை என்பதினை அவளிடத்தில் மீண்டும் மீண்டும் உணர்த்தினான்... அதை அவள் உணர்ந்தாளோ இல்லையோ அவனைக் காதலோடு அரவணைத்துக் கொண்டாள்...

மறுநாள் காலையில் எல்லோரும் உணவு முடித்து விட்டு ஊரைச் சுற்றி பார்க்க எண்ணி இருந்தனர்...
இந்திரஜித்தோ,

"பேபி டயர்டா இருக்கிறாள்... நாங்க வரலை..." என்று பகிரங்கமாக மறுத்தான்... விடிய விடிய மனைவியைத் தூங்க விடாது செய்தது அவனுக்குத் தானே தெரியும்...

அதைக் கேட்டு சம்யுக்தா மட்டுமல்ல மற்றவர்களும் திகைத்துப் போய் அவனைப் பார்த்தனர்...

"டேய், என்ன பேசுறோம்ன்னு யோசிச்சு தான் பேசுறியா...? நாங்களும் டயர்டா தான் இருக்கோம்... அதுக்காக உன்னை மாதிரியா வெளியில் சொல்லுறோம்..." சஞ்சய் நண்பனின் காதினைக் கடித்தான்...

"எல்லோரும் நாங்களும் ஒண்ணா... யுகி குழந்தை உண்டாகி இருக்கிறாள்..." என்று இந்திரஜித் கூறியதும் தான் எல்லோரும் இயல்பு நிலைக்குத் திரும்பினர்...

"இது ஒரு சாக்கு..." என்று சஞ்சய் அவனைக் கண்டு நொடித்துக் கொண்டான்...

"ஹி ஹி..." என்று அசடு வழிந்தான் இந்திரஜித்...

"ஹனிமூன் நமக்கா...? இல்லை இவனுக்கான்னு தெரியலையே..." என்று மனைவியிடம் முணுமுணுத்தான் பிரசன்னா...

"என்னமோ நீங்க ஹனிமூன் கொண்டாடாத மாதிரியில்ல அலுத்துக்கிறீங்க..." என்று முகம் சிவக்கக் கூறிய யமுனாவைக் கண்டு அவனும் வெளியில் செல்வதா? வேண்டாமா? என்று யோசிக்க ஆரம்பித்தான்...

"பார்த்துடா, உன் பேபி பத்திரம்..." என்ற சஞ்சயைக் கண்டு இந்திரஜித்,

"என் பேபி பத்திரமாகத் தானே இருக்கிறாள்..." என்று புரியாது தனது மனைவியைத் திரும்பி ஒரு பார்வை பார்க்க...

"நான் பெரிய பேபியை சொல்லலை... சின்னப் பேபியைச் சொன்னேன்..." என்று சொன்னவன் அடுத்த நொடி அங்கிருந்து காணாமல் போனான்...

"எப்படியிருந்தாலும் இங்கே தானே வந்தாகணும்... அப்போ உன்னை வச்சிக்கிறேன்டா..." என்று கோபமாய் முணுமுணுத்துக் கொண்டான் இந்திரஜித்...

எல்லோரும் சென்றதும் தனிமையில் தன்னருகே வந்த இந்திரஜித்தைக் கண்டு, "இப்படியா மானத்தை

வாங்குவீங்க பாவா...?" என்று நாணத்துடன் கேட்டவளின் முகத்தோடு முகம் வைத்தவன்,

"நான் என்ன இங்கே சுத்தி பார்க்கவா வந்திருக்கிறேன்...? உன்னைச் சுத்தி பார்ப்பது மட்டும் தான் என்னோட முக்கிய வேலை, முதல் வேலை..." என்று கூறியபடி தனது காரியத்தில் கண்ணாயிருந்த கணவனின் நோக்கம் அறிந்து அவளும் இசைந்து கொடுத்தாள்...

அங்கிருந்த நாட்களின் சொர்க்கத்தைக் கண்கூடாகக் கண்டனர் இந்திரஜித்தும், சம்யுக்தாவும்...

"எங்கப்பா ஏன் அடிக்கடி ஹனிமூன் பத்தி பேசிக்கிட்டு இருக்காருன்னு இப்போ தான் புரியுது... இனி நாமளும் அடிக்கடி ஹனிமூன் கிளம்பிட வேண்டியது தான்..." என்று கூறி சிரித்த கணவனைக் கண்டு சம்யுக்தா நாணமுற்றாள்...

******************************

"பார்த்து வரக் கூடாதா பேபி...?" என்று மனைவியின் கைப்பிடித்து மெல்ல நடத்தி வந்து சோபாவில் அமர வைத்தான் இந்திரஜித்...

சம்யுக்தாவின் வயிறு நன்றாக மேடிட்டு இருந்தது... இப்போது அவளுக்கு ஏழாவது மாதம் நடைபெறுகிறது... இப்போது எல்லாம் இந்திரஜித், சம்யுக்தா இருவரின் வாழ்க்கையும் தெளிந்த நீரோடையாக அமைதியாக, மகிழ்ச்சியாகச் செல்கிறது... இருவருமே மற்றவரின் மனமறிந்து கவனமாய் நடந்து கொள்கின்றனர்...

இப்போதும் மனைவியின் அதீத நெருக்கம் அவனது மனதில் கிலியை ஏற்படுத்த தான் செய்கிறது... ஆனால் முன்பு போல் அதற்குப் பயப்படாது அவன் தனது காதலை விடாது அவளுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறான்... அவளில்லாது அவனில்லை என்பதை அவளது மனதில் அழுந்த பதிய வைக்கின்றான்...

"ஹாஸ்பிட்டல் போகணுமே...? நேரமாச்சு..." என்று கூறியபடி எழுந்தவளை அமர வைத்து விட்டு எழுந்து சென்றவன் சிறிது நேரத்தில் அவளது காலணியோடு திரும்பி வந்தான்...

"பாவா, நீங்க எதுக்கு இதை எல்லாம் எடுத்துட்டு வர்றீங்க...?" என்று பதறியபடி எழுந்த மனைவியைத் தடுத்து அமர்த்தியவன் தான் அவளது காலடியில் கீழே அமர்ந்து காலணியை அவளது காலில் அணிவித்தான்...

சம்யுக்தா மனம் பதைபதைக்கச் சுற்றுப்புறத்தைப் பார்த்தாள்... சித்தார்த், பிரகதீஸ்வரி மற்றும் வேலைக்காரர்கள் என்று அனைவரும் அங்குத் தான் இருந்தனர்... ராஜகுமாரனின் இந்தச் சேவகம் கண்டு அவளது விழிகள் விழிநீரை விடாது உகுத்தது... அது அவனது தலையில் சொட்டு சொட்டாய் விழுந்து நனைத்ததில் அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்...

"த்ச்சு... என்ன பேபி...?" என்று அவன் அவளைச் செல்லமாய்க் கடிந்தபடி கண்ணீரைத் துடைத்து விட,

அவளோ மனம் நெகிழ அவனது தலையைக் காதலோடு கோதிக் கொடுத்தாள்... அவளது விழிகளில் மேலும் மேலும் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது... இந்த ஜென்மத்திற்கு இந்த அன்பு போதுமென்றே அவளுக்குத் தோன்றியது...

சித்தார்த்திற்கு இந்தக் காட்சியைக் கண்டு கண்கள் கலங்கி விட்டது... அவனைப் பார்த்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி,

"மாமூ, மனசுக்கு கஷ்டமா இருக்கா...? இந்தர் அவனுடைய மனைவிக்குச் செய்கிறான்... அப்படி நினைச்சு பாருங்க..." என்க...

"இல்லை பேபி... அதுக்காக இல்லை... இந்தரோட மாற்றம் பார்த்துக் கண் கலங்குது..." என்றவன் அன்று நடந்ததை மனைவியிடம் சொல்லாது மறைத்து விட்டான்...

உண்மையில் அன்று நடந்ததை நினைத்துத் தான் சித்தார்த் கண் கலங்கியது... அன்று அவன் கண் முன்னே மகன் சம்யுக்தாவை வேலைக்காரி போல் நடத்தியது கண்டு அவனது நெஞ்சம் வலித்தது... ஆனால் இன்று இத்தனை வேலைக்காரர்கள் மத்தியில் மகன் தன் மனைவியிடம் அடிபணிந்தது கண்டு அவனது நெஞ்சம் குளிர்ந்தது... காதலில் ஈகோ இருக்கக் கூடாதே... அதை மகன் உணர்ந்து கொண்டதை அவனது செய்கை நன்கு வெளிப்படுத்தியது... இது போதும் சித்தார்த்திற்கு...

"உண்மை தான்... உங்க மகன் உங்களை மாதிரி..." என்று கூறிய பிரகதீஸ்வரியின் முகத்தில் அப்படியொரு பெருமிதப் புன்னகை...

இந்திரஜித் மருத்துவமனைக்கு மனைவியைப் பரிசோதனைக்கு அழைத்துச் சென்றான்... குழந்தையை ஸ்கேன் பண்ணி பார்த்தாள் ஜெகதீஸ்வரி... குழந்தையின் வளர்ச்சி நன்றாக இருந்தது... அதை அவள் சந்தோசமாகத் தம்பி மற்றும் நாத்தனாரிடம் கூறினாள்...

மருத்துவமனையில் இருந்து கிளம்பும் போது இந்திரஜித், சம்யுக்தா இருவரும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தனர்... முழுவளர்ச்சி அடைந்திருந்த குழந்தை அவர்களுக்குச் சந்தோசத்தை அள்ளித் தந்தது...

ஒன்பதாம் மாதம் சம்யுக்தாவிற்கு வளைகாப்பு நடைப்பெற்றது... இந்திரஜித் சந்தோசத்தின் உச்சியில் இருந்தான்... அவளையே சுற்றி சுற்றி வந்தான்...

"ஜூஸ் குடிக்கிறியா பேபி...?", "டயர்டா இருக்கா பேபி...?" அவனது அக்கறையில் அவள் மனம் நெகிழ அவனைப் பார்த்திருந்தாள்... அவளது விழிகளும் அவனையே சுற்றி சுற்றி வந்தது...

நல்லபடியாக விழா முடிந்ததும் ஓய்வு எடுக்க வேண்டி சம்யுக்தா அறைக்குச் செல்ல, அவளைப் பின்தொடர்ந்து இந்திரஜித்தும் சென்றான்...

"ஆர் யூ ஓகே பேபி...?" தவிப்புடன் தன்னைப் பார்த்தவனைக் கண்டு கட்டிலில் அமர்ந்தபடி இரு கரம் நீட்டி அவனை 'வா'வென அழைத்தாள்...

அடுத்த நொடி நாய்க்குட்டி போன்று அவளிடம் சரணடைந்தவன், "என்ன பேபி...?" என்று கேட்டான்...

ஏனோ மனைவிக்குப் பிரசவ நாள் நெருங்க, நெருங்க இவனுக்கு உள்ளுக்குள் பகீரென்றது... மனதிற்குள் சொல்ல முடியாத ஒரு துன்பம் பாரமாய் அழுத்தியது... அவனது துன்பத்தை அவளும் உணர்ந்தாளோ என்னவோ... அவனது சுளித்திருந்த புருவத்தை மென்மையாய் நீவிவிட்டவள்,

"காலையில் இருந்து வேலை பார்த்து டயர்டா இருப்பீங்க... தூங்குங்க பாவா..." என்க...

"டயர்டா தான் இருக்கு... நீ...?"

"எனக்குத் தூக்கம் வரலை..." என்றவள் அவனை மடியில் படுக்க வைத்து மெல்லத் தலை கோதி கொடுத்தாள்... மனைவியின் வருடலில் நிம்மதி அடைந்தவனாய் அவன் மெல்ல கண்ணயர்ந்தான்...

அசந்து உறங்கும் கணவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவளின் விழிகளில் கண்ணீர் உடைப்பெடுத்தது...

"இன்னும் கொஞ்ச நாள் தான் பாவா..." என்று கூறியவளின் விழிகள் அவனைப் பிரிய போகும் துயரத்தை அப்பட்டமாய் வெளிப்படுத்தியது...

"இனியாவது உங்க வாழ்க்கை நல்லாயிருக்கட்டும்... உங்கள் மனம் போல் சந்தோசமாய்... இந்த ஏழை சம்யுக்தா உங்களுக்கு வேண்டாம்... கெட்ட கனவா நினைச்சு மறந்துருங்க..." என்று முணுமுணுத்துக் கொண்டவள் மனதில் அத்தனை வேதனை எழுந்தது... மேடிட்டிருந்த தனது வயிறை மெல்லத் தடவி விட்டுக் கொண்டாள்...

"என் குழந்தை உங்களுக்குப் பாரமா இருக்காது... கவலைப்படாதீங்க..." என்றவளுக்குக் கண்ணீரை அடக்க முடியவில்லை...

ஆம், அவள் தனக்கும் குழந்தைக்குமான முடிவினைத் தானே எடுத்து விட்டாள்... கணவனது காதல் புரிந்தது... அதே சமயம் அவனுக்கான அந்தஸ்தும் அவளுக்குப் புரியத்தான் செய்தது... அன்று மருத்துவமனையில் அவன் பேசிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்தது...

கழுத்தில் கிடந்த தாலியைக் கையில் எடுத்து பார்த்தாள் அவள்... இதை வைத்து அவனை வலுக்கட்டாயமாய்த் தன்னுடன் கட்டிப் போடுவது போல் ஒரு எண்ணம் அவளுள்... அதனால் தான் இயற்கையாய் மரணத்தை வரவழைக்க முடிவு செய்துவிட்டாள்... அதற்கான நாளும் குறித்தாகிவிட்டது...

இறுதிப் பயணம் மேற்கொள்ளும் நாள் நெருங்கி விட்டதை உணர்ந்தவளாய் அவள் கணவனது முகத்தை இமைக்காது பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... இனி என்று அவனைக் காணப் போகிறாளோ...!

*************************

"ம்... சீக்கிரம் வேலை நடக்கட்டும்... இவ்வளவு நேரம் என்ன பண்ற மேன்...?" என்று சிடுசிடுத்தாள் மாதுரிமா...

"இதோ முடிச்சிர்றேன் மேடம்..." என்றபடி அந்த ஆள் தனது வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்...

நாளை இந்திரஜித்தின் 'தீம் பார்க்'கிற்குத் திறப்புவிழா... கொஞ்ச நேரத்திற்கு முன்பு வரை இந்திரஜித் இங்குத் தான் இருந்தான்... எல்லா ஏற்பாடுகளையும் கண்டு திருப்தியுற்றவனாய் அவன் அப்போது தான் வீட்டிற்குக் கிளம்பியிருந்தான்... அந்த நேரத்தைக் கணக்கிட்டு மாதுரிமா திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்து விட்டாள்...

'ஜெயண்ட் வீல்' எனப்படும் பெரிய ராட்சச சக்கர விளையாட்டு கருவியின் கீழே அவள் நின்றிருந்தாள்... அதில் கோளாறு உண்டாக்கி நாளை பெரிய விபத்து ஏற்படுத்த வேண்டும் என்றெண்ணி அவள் அங்கு வந்திருந்தாள்... அவளது துணைக்கு ஒரு ஆள்... பணம் கொடுத்தால் இது போல் செய்ய ஆயிரம் பேர் வருவார்கள்...

'நாளைக்கு மினிஸ்டர் முன்னாடி இந்த ஜெயண்ட் வீல் அறுந்து கீழே விழணும்... உன்னோட தீம் பார்க்கில் பாதுகாப்பு சரியில்லைன்னு சொல்லி இதைக் கால வரையறையின்றி மூடணும்.. அது தான் எனக்கு வேணும்...' என்று மனதில் வன்மத்துடன் கூறிக் கொண்டாள் அவள்...

"எல்லாம் ஓகே மேடம்..." என்று அவன் கூறியதும் அவள் சந்தோசமாய் அங்கிருந்து அகன்றாள்...

இருட்டில் நடக்கும் போது கீழே இருந்த இரும்பு குழாய் ஒன்று இடறி மாதுரிமா கீழே விழுந்தாள்... அவள் விழுந்த வேகத்தில் 'ஜெயண்ட் வீல்'இன் அடிப்பகுதியில் இருந்த பெரிய இரும்பு தூணின் மீது அவளது தலை மோதியது... அவளுக்குக் கண்கள் இருட்டிக் கொண்டு வர அப்படியே மயங்கி கீழே விழுந்தாள்...

"மேடம்..." என்று அவன் பயத்தில் அலறிபடி அவள் அருகே செல்ல... அவனது அலறல் சத்தம் கேட்டு அங்கிருந்த காவலாளி ஓடி வந்தான்...

வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கும் போது இந்திரஜித்தின் அலைப்பேசி அலறியது... 'தீம் பார்க்'கின் காவலாளி அவனை அழைத்து எல்லா விசயத்தையும் கூற... உடனே இந்திரஜித் வீட்டிற்குச் செல்லாது தனது காரை 'தீம் பார்க்' நோக்கித் திருப்பினான்...

அவன் அங்கு வந்து பார்த்த போது தலையில் இரத்தம் கசிய மயங்கிக் கிடந்தாள் மாதுரிமா... வெறுப்புடன் அவளைப் பார்த்தவன் ஆம்புலன்சுக்கு அழைத்துச் சொல்லிவிட்டு அப்படியே காவல்நிலையத்திற்கும் அழைத்து விவரம் கூறினான்...

மாதுரிமாவை அங்குக் கண்டதால் அவன் சந்தேகமுற்று 'ஜெயண்ட் வீல்'லை மீண்டும் பரிசோதித்துப் பார்க்கச் சொன்னான்... அவன் நினைத்தது போல் மாதுரிமா தனது கைவரிசையை அதில் காட்டியிருந்தாள்... அவனுக்கு ஆத்திரமாக வந்தது... ஆனால் இது கோபம் கொள்ளும் நேரமல்லவே.. அதனால் அவன் பொறுமையாக அனைத்தையும் பரிசோதித்துப் பார்க்கச் சொன்னான்... அவனும் உடன் இருந்து எல்லாவற்றையும் சரிபார்த்தான்...

******************

அதே நேரம் சம்யுக்தா பிரசவ வலி வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தாள்... அவளுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது...

"இல்லை வதின... நார்மல் டெலிவரி தான் நடக்கணும்... நான் ஆபரேசன் எல்லாம் பண்ண மாட்டேன்..." என்று அவள் பிடிவாதம் பிடித்தாள்...

"நான் உன் கிட்ட என்ன சொன்னேன் சம்யு...? வலி வர்றதுக்கு முன்னாடியே ஹாஸ்பிட்டலுக்கு வரணும்ன்னு சொன்னேனா இல்லையா...? இப்போ பாரு இப்படி ஒரு சிக்கலை ஏற்படுத்தியிருக்க..."

"இது நானா தேடிக்கிட்ட முடிவு... எனக்கு நார்மல் டெலிவரி தான் நடக்கணும்..."

"நார்மல் டெலிவரியோட வலியைத் தாங்கிக்கிற அளவுக்கு உன் உடலில் பலம் இல்லை சம்யு... பிட்ஸ் வந்தால் உன் உயிருக்கே ஆபத்தா போயிரும்..." என்று கண் கலங்கினாள் ஜெகதீஸ்வரி...

'அது தானே எனக்கு வேணும்' என்று நினைத்துக் கொண்டவள் அண்ணியைப் பார்த்து,

"வதின, நான் செத்து போயிட்டா என் குழந்தையை ஆசிரமத்தில் சேர்த்துருங்க..." என்றவளைக் கண்டு அதிர்ந்து போய்ப் பார்த்தாள் ஜெகதீஸ்வரி...

இந்திரஜித் தனது காரை வேகமாக விரட்டிக் கொண்டிருந்தான்... மனைவி வலி வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதைக் கேள்வியுற்றதில் இருந்து அவனது மனம் ஒரு நிலையில் இல்லை... ஏதேதோ தேவையில்லாத எண்ணங்கள் எழுந்து அவனைப் பெரிதும் அச்சுறுத்தியது...

அவன் மருத்துவமனையை அடைந்து பிரசவ அறையைத் தேடி ஓடி வந்த போது ஜெகதீஸ்வரி அழுது கொண்டே அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்... அதைக் கண்டவனது இதயம் துடிக்க மறந்து நின்று போனது... அவன் அச்சத்தில் அப்படியே பேச்சு மூச்சற்று சிலையாய்ச் சமைந்து விட்டான்...

தொடரும்...!!!

ஜெகதீஸ்வரி கண்களுக்கு வெளியில் அமர்ந்திருந்த யாருமே தெரியவில்லை... அவளது கண்களுக்குத் தெரிந்தது எல்லாம் சற்று தள்ளி நின்றிருந்த தனது தம்பி இந்திரஜித் மட்டுமே... அடுத்த நொடி அவனை நோக்கி வேகமாய் விரைந்து வந்தவள் அவன் அருகில் வந்ததும்,

"இந்தர்..." என்று கதறிக் கொண்டு அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

"என்னால் முடியலைடா... சம்யுவை இப்படிப் பார்க்க என்னால் முடியலை... என்னென்னமோ சொல்கிறாள்... நீ போய் அவள் கிட்ட பேசுடா..."

அதுவரை சிலையாக நின்றிருந்தவன் அக்கா கூறிய கடைசி வரியில் உயிர் வர பெற்று, "யுகிக்கு என்னாச்சு...?" என்று சகோதரியின் தோளைப் பிடித்து உலுக்க...

"டெலிவரி சிக்கலா இருக்கு..."

"இதை ஏன் நீ என் கிட்ட முன்பே சொல்லலை ஜிக்கி...?" என்று அவன் ஆத்திரத்துடன் அவளது தோள்களைப் பற்றி உலுக்க...

"உன் கிட்ட சொல்லலாம்ன்னு சம்யு கிட்ட சொன்னேன்... அவள் தான் நீ தீம் பார்க் விசயமா டென்சனா இருக்க... மேலும் உன்னை டென்சன் படுத்த வேண்டாம்ன்னு சொல்லிட்டாள்... ஆனால் சம்யுவுக்கு எல்லாம் தெரியும்டா... வலி வர்றதுக்கு முன்னாடியே ஹாஸ்பிட்டல் வந்திரணும்ன்னு அவள் கிட்ட படிச்சு படிச்சுச் சொல்லியிருந்தேன்... அப்படி இருந்தும் வலி நல்லா வந்ததுக்குப் பிறகு வந்திருக்கிறாள்... இப்போ ஆபரேசன் பண்ணுவதற்கு ஒத்துழைப்பு கொடுக்க மாட்டேங்கிறாள்... நீ வந்து அவள் கிட்ட பேசு..."

ஜெகதீஸ்வரி சொல்லி முடிக்கும் முன் அவன் வேகமாய்ப் பிரசவ அறையை நோக்கிச் சென்றான்... ஜெகதீஸ்வரி

அவன் பின்னால் ஓடினாள்...

வாடிய மலர் போல் வலியை தாங்கிக் கொண்டு படுத்திருந்த மனைவியைக் கண்டு இந்திரஜித்தின் விழிகள் கலங்கிப் போனது... அவள் அருகில் சென்றவன் ஒரு கையால் அவளது கையைப் பிடித்துக் கொண்டு மறுகையால் அவளது தலையைக் கோதிக் கொடுத்தான்...

"இது என்ன பிடிவாதம் பேபி...?" என்று அவன் கண்களில் கண்ணீர் மல்க சம்யுக்தாவைப் பார்த்து கேட்டான்...

"வந்துட்டீங்களா பாவா... உங்களைப் பார்க்காம போயிருவேனோன்னு நினைச்சேன்..." என்றவள்,

"இது பிடிவாதம் இல்லை... வேண்டுதல்..." என்றாள் அவனது கேள்விக்குப் பதிலாக...

"என்னை விட்டுட்டு எங்கேடி போகப் போகிற...?"

இதைக் கேட்கும் போதே அவனது இதயம் பயத்தில் சத்தமாய் மத்தளம் வாசித்தது... கண்களில் கண்ணீர் திரண்டு அவனது பார்வையை மங்கலாக்கியது...

"திரும்ப வர முடியாத இடத்திற்கு..." அவள் அப்படிச் சொன்னதும் அவனது கண்ணீர் கண்களில் இருந்து பிரிந்து கன்னத்தில் வழிந்தது...

"பேபி..." என்று அவன் கதறிவிட்டான்...

"ப்ளீஸ் அழாதீங்க பாவா... கண்ணைத் துடைங்க..." என்றவள் தானே அவனது கண்களைத் துடைத்து விட்டாள்... அவளுக்குப் பிரசவ வலி அத்தனை வலித்த போதும் அவனது கண்ணீர் அவளது மனதினை அதிகம் வலிக்கச் செய்தது...

"எனக்காகச் சிரிங்க பாவா..." என்று கெஞ்சியவளைக் கண்டு,

"நீ இப்படி எல்லாம் பேசினால் என்னால் எப்படிச் சிரிக்க முடியும்...? உனக்கு என்ன தான்டி பிரச்சினை...? நான்

எதுவும் தப்பா நடந்திருந்தால், பேசியிருந்தால் என்னை மன்னிச்சிரு..." என்று அவன் மனைவியிடத்தில் இரு கரம் கூப்பி மன்னிப்பு வேண்டினான்...

அவளது இந்த முடிவில் அவன் புத்தி பேதலித்தவன் போலானான்... ஏன், என்ன காரணம் என்று அறியாது அவன் பரிதவித்துப் போனான்... அவனது கரத்தைப் பிடித்துக் கீழே இறக்கியவள்,

"ப்ளீஸ் பாவா..."

மீண்டும் தன்னிடம் கெஞ்சியவளைக் கஷ்டப்படுத்த விரும்பாது அவன் சிரிக்க முயன்றான்... அந்தோ பரிதாபம், அவனால் அதைச் செய்ய முடியவில்லை... அவனுக்கு அழுகை தான் வந்தது... எந்த இடத்தில் தான் தவறு செய்தோம் என்று அவனுக்குத் தெரியவில்லை... அவன் செய்த ஒரே ஒரு தவறையும் காதல் கொண்டு சரி செய்து விட்டான்... இருந்தும் மனைவி ஏன் இப்படிப் பேசுகிறாள்? என்று புரியாது அவன் தவித்தான்...

"சத்தியமா என்னால் முடியலைடி..." என்றவனைக் கண்டு அவள் ஏமாற்றமாய்ப் பார்த்தாள்...

அவளது ஏமாற்றத்தினைக் கண்டவனுக்கோ மனம் தாங்கவில்லை... மனதினை முயன்று தேற்றியபடி முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு அவளைக் கண்டு புன்னகைத்தான்...

"இப்போ தான் அழகா இருக்கீங்க..." அவனைக் கண்டு நிறைவாய் புன்னகைத்தவளைப் பார்த்து அவன் மனம் தாங்காது அவளது முகத்தோடு முகம் புதைத்து அழுதான்...

"ப்ளீஸ் அழாதீங்க..." என்றவள் ஜெகதீஸ்வரியை அழைத்தாள்... இருவரையும் கண்டு அவளும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்...

"அத்தைகாரு கிட்ட என் ஃபோன் இருக்கு... வாங்கிட்டு வாங்க வதின..."

"சம்யு நேரமாக ஆக உயிருக்கு ஆபத்தாகப் போயிரும்..."

"ப்ளீஸ் வதின..." என்றவள் சோர்வுடன் கண்களை மூடிக் கொள்ள... அதைக் கண்டு அவன்,

"பேபி..." என்று பயத்தில் அலற...

"எனக்கு ஒண்ணுமில்லை..." அவள் மெல்ல விழி திறந்து கணவனைப் பார்த்து புன்னகைக்க...

"உன் மனசில் அப்படி என்ன தான்டி இருக்கு...? எதுவாக இருந்தாலும் சொல்லு, அதை நான் நிறைவேத்தி வைக்கிறேன்..." என்று அவன் கூற...

அப்போது ஜெகதீஸ்வரி சம்யுக்தாவின் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்... சம்யுக்தா அதை வாங்கி அதில் எதையோ தேடி எடுத்து கணவன் முன் நீட்டினாள்... ஒன்றும் பேசாது அலைப்பேசியை வாங்கியவன் அதைப் பார்த்துவிட்டு புரியாது அவளைப் பார்த்தான்,

"யாரிது...?"

"நான் உங்களுக்காகப் பார்த்திருக்கும் பெண்..."

அதைக் கேட்டு அவனது முகம் இறுகிப் போனது... அவனது கண்களில் வழிந்த நீர் நின்று போனது... அவன் அவளை இமைக்காது உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"நம்ம கூடப் பிசினஸ் டீல் பண்றவரோட பொண்ணு தான் இவங்க... பெயர் சம்யுக்தா... பார்க்க கொஞ்சம் என்னைப் போலவே இருக்காங்க இல்லையா...? முதல்ல இவங்களைப் பார்த்ததும் எனக்கும் ரொம்ப ஆச்சிரியமா போச்சு... உருவமும் என்னைப் போல், பெயரும் என்னைப் போல்... அதிசயம் தான் இல்லையா பாவா...? இவங்க உங்க எதிர்பார்ப்புக்கு ஏத்த மாதிரி அழகா இருக்காங்க... என்னை விட நிறம் அதிகமாய்... என்னை விடப் படிப்பு அதிகமாய்... உங்களை மாதிரி வெளிநாட்டுக்கு போய் எல்லாம்

படிச்சிட்டு வந்திருக்காங்க... உங்களுக்குச் சரிசமமான அந்தஸ்து உள்ளவங்க..."

அன்று ஆங்காரம் கொண்டு அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் இன்று அவள் அன்பு பூசிய வார்த்தைகளால் பதிலடி கொடுத்தாள்... அன்று அவன் கல் கொண்டு வீசியதற்கு இன்று அவள் பூ கொண்டு அவனைத் தாக்குகிறாள்... ஆனால் கல்லடியை விடப் பூவின் அடி பலமாய் வலிக்கச் செய்கிறதே...

"உங்களுக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்ன்னு கேட்டதுக்கு நீங்க சம்யுக்தான்னு பதில் சொன்னீங்கல்ல... அதான் நான் என்னை மாதிரியே ஒரு சம்யுக்தாவை தேடி கண்டுபிடிச்சுக் கொடுத்துட்டேன்... இனியாவது உங்க வாழ்க்கை உங்க மனசுக்கு பிடிச்ச மாதிரி சந்தோசமா இருக்கணும்... தாலி கட்டிய பாவத்துக்காக என்னை மாதிரி ஒருத்தியை நீங்க சகிச்சிக்க வேண்டாம்... உங்களுடனான இந்த ஒன்றரை வருட வாழ்க்கை எனக்குப் போதும்... இந்தச் சந்தோசம் எனக்குப் போதும்... இந்தச் சந்தோசத்தோடு நான் என் கடைசி மூச்சை விட்டுருவேன் பாவா..." என்றவளை அவன் வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான்...

"அடுத்த ஜென்மம்ன்னு ஒண்ணு இருந்தால் நான் உங்களுக்கு மனைவியா வரணும்... ஆனால் எல்லாத் தகுதிகளோடும்... எனக்காக நீங்க எவ்வளவோ விட்டு கொடுத்தீங்க... ஆனா உங்களுக்காக விட்டு கொடுக்க என் கிட்ட ஒண்ணுமே இல்லை... என் உயிரைத் தவிர..." என்றவள் தனது வயிற்றுக்குள் இருந்து வெளியில் வருவதற்காகப் போராடி கொண்டிருந்த மகவை மெல்ல வருடியபடி,

"என்னோட குழந்தை உங்களுக்குத் தொந்திரவா இருக்காது... அதை அநாதை ஆசிரமத்தில் சேர்த்து விடச் சொல்லி வதின கிட்ட சொல்லிட்டேன்..."

அவள் சொல்லி முடிக்கும் முன் இந்திரஜித் தனது கையிலிருந்த அலைப்பேசியை ஓங்கி தரையில் அடித்திருந்தான்... அத்தனை ஆத்திரம் அவனுள்...

இன்னமும் ஆத்திரம் அடங்காது சுற்றும் முற்றும் பார்த்தவன் அங்கு மருத்துவ உபகரணங்களோடு சிறு கத்தி ஒன்று இருந்ததைக் கண்டு அதைக் கையில் எடுத்தவன் தனது மணிக்கட்டில் அதை வைத்து அழுத்தியபடி,

"இப்போ நீ உன் உயிரை விடுடி... நீ உயிரை விடுறதுக்கு ஒரு நொடிக்கு முன்னாடி நான் என் உயிரை விட்டிருப்பேன்... தைரியம் இருந்தா உயிரை விடுடி பார்க்கலாம்..." என்று அவன் ஆவேசமாய்க் கத்த...

"வேண்டாம் பாவா..." என்று பதறியவளைக் கண்டு மனம் வலிக்கப் பார்த்தவன்,

"உன் பாவா சொல்ல மாட்டான்... செஞ்சு முடிப்பான்... செஞ்சு காட்டவா...?"

"வேண்டாம், வேண்டாம்..." என்று கதறி அழுதவளை ஒரு பார்வை பார்த்தவன் கத்தியைத் தூக்கிப் போட்டு விட்டு அக்காவிடம் திரும்பி,

"ஆபரேசனுக்கு ஏற்பாடு பண்ணு ஜிக்கி... இனி இவள் இது மாதிரியான முட்டாள்த்தனமான வேலை எதுவும் பண்ண மாட்டாள்... அப்படிப் பண்ணினால்..." என்று கூறியபடி மனைவி புறம் திரும்பியவன்,

"என்ன நடக்கும்ன்னு உனக்கே தெரியும்..." என்று அவளை மிரட்டி விட்டு அவன் அந்த அறையை விட்டு விறுவிறுவென வெளியேறினான்...

ஜெகதீஸ்வரி சந்தோசமாய் அறுவை சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தாள்... சம்யுக்தாவிற்கு வயிற்றில் இருந்த மகவு கொடுத்த வலியை விடத் தனது மன்னவன் மனதிற்குக் கொடுத்த வலியே அதிகமாய் இருந்தது... அவன் அவளது உயிரன்றோ... அப்படியிருக்கும் போது அவன் உயிர் போக அவள் காரணமாக இருப்பாளா...? கணவனது பிடிவாதம் அறிந்தவளாய் அவனுக்காகத் தன்னுயிரைக் காத்திட அவள் போராடினாள்...

வரந்தாவில் இருந்த நாற்காலியில் அமர்ந்த இந்திரஜித்தின் மனம் உலைக்களமாய்க் கொதித்தது...

'என்ன வார்த்தை சொல்லி விட்டாள் பாவி... என் குழந்தையை அநாதை ஆசிரமத்தில் சேர்க்கணுமா...? அப்போ அப்பான்னு நான் எதுக்கு இருக்கேன்...? கடைசி வரை நீ என்னைப் புரிஞ்சிக்கவே இல்லைடி... நான் தெரியாம பண்ணிய தப்புக்கு எல்லாம் நீ தெரிஞ்சே தண்டனை கொடுக்கிற... ஆனாலும் இந்தத் தண்டனை ரொம்பவே அதிகம் பேபி... மனசு ரொம்ப வலிக்குதுடி... என் குழந்தையை அநாதையாக்கிட்டு நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணுமா...? நீ அப்படி வேறு ஒரு கல்யாணம் பண்ணுவியாடி...? நான் பண்ணியது எல்லாம் தப்பு தான்... தப்புக்குத் தண்டனை ஒண்ணு தான் ஒரே வழியா...? மன்னிப்பு இல்லையாடி... இல்லை நீ மன்னிக்கவே முடியாத அளவுக்கு நான் பாவியாகி விட்டேனா...?'

மனதில் ஏதேதோ நினைத்தபடி தலையை அழுந்த கோதிக் கொண்டவனின் விழிகளும், மனமும் ஒருசேர கலங்கியது... தன்னவளும், தன் மகவும் நல்லபடியாகப் பிழைத்து வர வேண்டும் என்கிற வேண்டுதல் மட்டுமே அவனது மனதில்...

மகனின் மனநிலையை உணர்ந்தவனாய் சித்தார்த் அவன் அருகில் சென்று அமர்ந்து ஆறுதலாய் அவனை அணைத்துக் கொள்ள... அடுத்த நொடி இந்திரஜித்,

"அப்பா..." என்று சிறு கூவலோடு தந்தையை அணைத்துக் கொண்டான்...

அவன் தனது இறுகிய அணைப்பில் தனது மனதின் கதறலை உணர்த்தினான்... அவனது கண்களில் துளிர்த்த கண்ணீர் துளிகளில் அவனது மனதின் தாங்கொண்ணா வலியை வெளிப்படுத்தினான்...

"மெடிக்கல் சயின்ஸ் இப்போ எல்லாம் நல்லா முன்னேறிருச்சு இந்தர்... சம்யுவுக்கு ஒண்ணும் ஆகாது..." மகனுக்கும், மருமகளுக்கும் ஏதோ பிரச்சினை என்று

ஊகித்த சித்தார்த் அதைப் பற்றிக் கேட்காது மகனைத் தேற்றினான்...

"அவளுக்கு ஒண்ணுமாகாது... அப்படி எதுவுமாக நான் விட மாட்டேன்... என்னைப் பத்தி அவளுக்கு நல்லா தெரியும்... அவள் இல்லாத உலகத்தில் நான் இருக்க மாட்டேன்னு அவளுக்கு நல்லா தெரியும்..." என்று கூறி அவனும் தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்...

அடுத்து கடந்த மணித்துளிகள் பெரும் போராட்டத்துடன் கடந்தது... இந்திரஜித்தின் விழிகள் பிரசவ அறையை விட்டு இம்மி கூட வேறு எங்கும் அகலவில்லை... திடுமெனச் சொர்க்க வாசல் போல் திறந்த கதவின் வழியே முகமெல்லாம் புன்னகையுடன் ஜெகதீஸ்வரி வெளிவந்தாள்... அவளது கையில் அவனது மகவு இருந்தது... அவனோ மகவைக் கவனியாது பதற்றத்துடன் எழுந்து அக்காவின் அருகே சென்றான்...

"இந்தர், உனக்கு மகன் பிறந்திருக்கிறான்..." என்று ஜெகதீஸ்வரி அவனிடம் சந்தோசமாய்க் கூற...

"பேபி... யுகி... எப்படி இருக்கிறாள்...?" அவனுக்குப் பயத்தில் வார்த்தைகள் திக்கித் திணறி வந்தது...

"ரொம்ப நல்லாயிருக்கா... கொஞ்ச நேரம் கழிச்சு அவளைப் பார்க்கப் போகலாம்..." என்று அவள் தம்பியைச் சமாதானப்படுத்தினாள்... அதில் அவன் நிம்மதி அடைந்தான்... இப்போது தான் அவனது மூச்சு சீரானது போல் ஒரு தோற்றம் அவனுள்...

"இப்போ நீ உன் மகனைப் பார்க்கலாம் இல்லையா...?" என்றபடி அவள் குழந்தையை அவனிடம் நீட்ட... அப்போது தான் அவன் தன் மகனைக் கவனித்தான்... தன் இரத்தத்தில் உருவான மகனைக் கண்டதும் அவனுள் ஒருவித பரவசம் எழுந்தது... மகிழ்ச்சியில் உடலெல்லாம் பரபரத்தது...

"மகள் இல்லையா...?" என்று அவனது வாய் கேட்ட போதும் அவன் ஒருவித சந்தோச எதிர்பார்ப்புடன் குழந்தையை வாங்க தனது இரு கைகளையும் நீட்டினான்...

சம்யுக்தாவை உரித்து வைத்துப் பிறந்திருந்தான் அவர்களது மகன்... இதை முன்பே அறிந்திருந்ததால் தான் அவள் மகனை ஆசிரமத்தில் விடச் சொன்னாளோ... அவளது எச்சம் மிச்சம் சொச்சமாய்க் கூட அவனிடம் இருக்கக் கூடாது என்று அவள் வைராக்கியமாக நினைத்தாளோ... மனதில் வேதனை பொங்க மகனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்... அவனது விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டு சொட்டாய் வழிந்தது...

மகனையும், பேரனையும் கண்ட சித்தார்த்தின் விழிகள் கலங்கியது... இந்திரஜித்தை முதன்முதலாய் தான் கைகளில் வாங்கிய ஞாபகம் சித்தார்த்தினுள்... அவனுக்குத் தான் தனது மூத்த மகவை இப்படிக் கையில் வாங்கும் பாக்கியம் கிட்டவில்லையே... என்ன முயன்றும் சிறு வேதனை அவனுள் எட்டிப்பார்க்கத் தான் செய்தது...

"மாமூ..." என்றபடி அவனைக் கவலையுடன் பார்த்தாள் அவனது மனையாட்டி... அவளது நேசத்திற்காகத் தனது மனதினை மறைத்தவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"இப்போ தான் இந்தர் பிறந்த மாதிரியிருக்கு... அதற்குள் இந்தருக்கு மகன் வந்துவிட்டான்... காலம் தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது..." என்றான் அவன் ஒரு தகப்பனாய் பெருமிதத்தோடு...

"ஆமாங்க..." என்று புன்னகைத்தவள் மகன் அருகில் சென்று பேரனைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டாள்...

"அப்படியே சம்யு மாதிரி இருக்கிறான்..." என்று அவள் கணவனைப் பார்த்து சொல்ல... சித்தார்த் அதை ஆமோதித்தான்...

ரதியின் வார்த்தைக்கு மறு வார்த்தை ஏது சித்தார்த்தின் நீதிமன்றத்தில்...!!!

சிறிது நேரம் கழித்து ஜெகதீஸ்வரி தம்பியிடம் வந்து, "நீ போய்ச் சம்யுவை பார்க்கிறதுன்னா பார் இந்தர்..." என்க...

"இல்லை ஜிக்கி... இன்னும் கொஞ்ச நேரத்தில் தீம் பார்க் ஓபனிங் செரிமனி இருக்கு... மினிஸ்டர் வர்ற நேரமாச்சு... நான், அப்பா, அத்தான் எல்லாம் அங்கே போகணும்..." என்றவன் சூர்யா, தந்தையை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றுவிட்டான்...

"நீயும் வீட்டுக்குக் கிளம்பு ஜிக்கி... நான் சம்யுவைப் பார்த்துக்கிறேன்... ஆதி உன்னைத் தேடுவான்... அத்தையாலும் அவனை ரொம்ப நேரம் சமாளிக்க முடியாது..." என்று பிரகதீஸ்வரி மகளைப் பார்த்துக் கூற...

"இன்னொரு கேஸ் இருக்கும்மா... டெலிவரி முடிச்சிட்டு கிளம்பறேன்..." என்றவள் அங்கிருந்து அகல...

பிரகதீஸ்வரி மருமகளைக் காண அறையினுள் சென்றாள்... மகனுக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்த சம்யுக்தா அவளைத் திரும்பி பார்த்தாள்...

"எப்படியிருக்கச் சம்யு...? இப்போ வலி எப்படியிருக்கு...?"

"வலி இல்லாம இருக்க இன்ஜெக்சன் போட்டிருக்காங்க..." என்றவளின் விழிகள் மாமியாருக்குப் பின்னே கணவனைத் தேடியது...

"அவங்க எங்கே...?"

"இந்தரா...? தீம் பார்க் ஓபனிங் வேலையிருக்குன்னு போயிட்டான்..."

மாமியாரின் பதிலில் அவளது முகம் வாடிப் போனது... கணவன் தன் மீது கோபமாய் இருக்கின்றான் என்பது புரிந்து அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... அவளும் என்ன தான் செய்வாள்... இனி என்ன செய்ய வேண்டும் என்றும் அவளுக்குத் தெரியவில்லை...

"பாவா குழந்தையைப் பார்த்தாங்களா...?"

"ம், பார்த்தான்... ரொம்பச் சந்தோசப்பட்டான்... ஆனாலும் மகள் பிறக்கலையேன்னு பெரிய குறை அவனுக்கு... அடுத்து ஒரு மகளைப் பெத்து அவன் கிட்ட கொடுத்துரு..." மகனின் மனம் அறிந்த தாயாய் அவள் கூற...

அதைக் கேட்டுச் சம்யுக்தா துயரத்துடன் விழிகளை மூடிக் கொண்டாள்...

'தீம் பார்க்' திறப்பு விழா கோலாகலமாக நடந்து முடிந்தது... இந்திரஜித்திற்குத் தனது கனவு நனவானது கண்டு கொஞ்சமும் சந்தோசம் இல்லை... அதை விட அவனது காதல் கானல் நீராய்ப் போனது நினைத்துத் தான் அவனுக்கு அதிக வருத்தமாக இருந்தது... ஆனாலும் அவன் வெளியில் எதையும் காட்டிக் கொள்ளாது வளைய வந்தான்...

அன்றே எல்லோரும் குழந்தையைப் பார்க்க வந்திருந்தனர்... அது போல் சந்தோஷ், சாத்விகா சர்வேஷூடன் வந்திருந்தார்கள்... குழந்தையைக் கண்டதும் சர்வேஷ் உற்சாகமாகி அதைத் தொட்டுப் பார்த்து கொஞ்சி விளையாடினான்...

"நானும் இது மாதிரி தான் இருந்தேனாப்பா...?" என்று அவன் கேள்வி கேட்க...

சாத்விகா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்... சந்தோஷோ இயல்பாய் சர்வேஷை தூக்கி மடியில் வைத்துக் கொண்டவன்,

"ஆமாம், இதே போல் சின்னக் கண், வாய், கை, கால்கள்ன்னு நீயும் ரொம்பக் குட்டியா இருந்த..."

"அப்போவே நான் உங்களைப் பார்த்து சிரிச்சேனா...?"

மகனது கேள்விகளுக்குச் சந்தோஷ் பொறுமையாகப் பதில் கூற... சாத்விகா நிம்மதியுடன் இருவரையும்

பார்த்திருந்தாள்... இருவரின் பாச பிணைப்புக் கண்டு அவளுக்குச் சந்தோசமாய் இருந்தது...

வீட்டிற்கு வந்ததும் சர்வேஷ் உறங்கி விட, சந்தோஷ் மனைவியை ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்...

"உனக்கு இன்னும் என் மேல் நம்பிக்கை வரலையா...?"

"ஐயோ, அப்படி எல்லாம் இல்லைங்க..." என்று அவள் பதற...

"பின்னே ஹாஸ்பிட்டலில் வச்சு நீ ஏன் அப்படிப் பயந்து போய்ப் பார்த்த...?"

"கண்ணா பிறந்தப்போ எப்படி இருந்தான்னு எனக்குக் கூடத் தெரியாது... அப்படி இருக்கும் போது நீங்க...?" என்று இழுத்தவளைக் கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"பிறந்த குழந்தை எல்லாம் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும்..." என்று கூறியவன் அவள் அருகில் வந்து அவளது நெற்றியோடு விளையாட்டாய் முட்டியபடி,

"சரியான மக்கு டீச்சரம்மா..." என்று கூறிச் சிரிக்க...

"போங்க அத்தான்..." என்று சிணுங்கியபடி அவள் அவனது நெஞ்சில் அடைக்கலமானாள்... இருவரும் சிறிது நேரம் அப்படியே அமைதியாக நின்றிருந்தனர்...

"அத்தான்..."

"சொல்லு அம்மு.."

"நான் ஒண்ணு சொன்னால் கோபப்பட மாட்டீங்களே..." என்று பீடிகை போட்டவளைக் கண்டு,

"நீ ஒண்ணு என்ன ஓராயிரம் சொன்னாலும் நான் கோபப்பட மாட்டேன்..." என்றான் அவன் புரிதலுடன்...

"ப்ரியாக்கா உங்களை உயிருக்கு உயிரா நேசிச்சு இருக்கணும்..." என்றவளை அவன் புரியாது பார்த்தான்...

"அதனால் தான் அவங்களால் தனக்கு நடந்த விபத்தை ஏத்துக்க முடியலை... தான் களங்கப்பட்டதை அவங்களால் ஒத்துக்க முடியலை... அவங்களோட கற்பை உங்களுக்காகப் பொத்தி பொத்தி வச்சவங்களால் அது களவாடப்பட்டு விட்டதை நம்ப முடியலை... ஆனால் அது தான் நிதர்சனம்... அந்த நிதர்சனம் தந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தான் அவங்க உங்க மேல் பழி போட்டிருக்காங்க... அதாவது பொய்யாய் அவங்க மனசை அவங்களே சமாதானப்படுத்திக்கிட்டாங்க... என் காதலன் கிட்ட தான் நான் கெட்டுப் போனேன்... நான் அந்த மாதிரி பொண்ணு இல்லைன்னு..."

"அப்படியும் இருக்குமோ அம்மு...?"

"நிச்சயம் அப்படித் தான் இருக்க வேண்டும்... இல்லைன்னா உண்மையா காதலிச்ச உங்க குழந்தையை, அப்படித் தானே அவங்க நினைச்சாங்க... அப்படி நினைச்சவங்களால் அந்தக் குழந்தையை எப்படி ஆசிரமத்தில் சேர்க்க மனசு வந்தது...? எந்தத் தாயும் அதைச் செய்யத் துணிய மாட்டாள்... அப்படி அவங்க இதைச் செய்யத் துணிஞ்சு இருக்காங்கன்னா...? அவங்க மனசில் அந்த நிகழ்வு ஏற்படுத்திய காயம் ஆழமா பதிஞ்சு இருக்கணும்... அதனால் தான் கண்ணாவை வேண்டாம்ன்னு தூக்கி போட்டுட்டாங்க..."

அதைக் கேட்டு அவனது விழிகள் தோழியை நினைத்துக் கசிந்தது... பெண்ணாய் பிறந்த அவளும் ஒரு பாவப்பட்ட ஜீவனே என்று அவன் அவளை நினைத்து வருந்தினான்...

"இப்போ ப்ரியா எப்படி இருக்கிறாள்...?" கொஞ்சம் தவிப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்... அதை அவள் தவறாக எண்ணாது,

"நல்லாயிருக்காங்க... அவங்களுக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை இருக்கு..." என்க...

"ப்ரியாவை போல் கண்ணா பிறக்க காரணமா இருந்தவனும் இப்போ எங்கேயோ சந்தோசமா இருப்பான்

இல்லையா... ஆனா கண்ணா...? அவன் என்ன பாவம் செய்தான் அம்மு...? இவன் மட்டுமா, இவனைப் போல் எத்தனை லட்சம் குழந்தைகள் இது போல் அநாதையா ஆசிரமத்தில் வளர்றாங்க... இதுக்கு எல்லாம் என்ன தான் தீர்வு, முடிவு...?" அவனது வார்த்தைகள் வேதனையுடன் வந்தது...

"இதுக்கான தீர்வு எனக்குத் தெரியலை... ஆனா ஒண்ணு மட்டும் நல்லா தெரியுது... கண்ணாவைப் பண்புள்ள மனிதனா வளர்க்கணும்ன்னு... அதாவது உங்களைப் போல்..." என்றவளின் விழிகள் உறங்கிக் கொண்டிருந்த மகனைப் பார்த்தது...

"நிச்சயமா...அதற்கு உனக்கு நான் துணையிருப்பேன்..."

"ம்... நீங்க துணையா இருப்பீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றாள் அவள் கணவனின் நல்ல மனம் புரிந்தவளாய்... அவளின் நேசம் அவனது மனதினை மயிலிறகாய் வருடிச் சென்றது...

"இப்போ எனக்குப் பயமாயிருக்கு... நீ எனக்குத் துணைக்கு வர்றியா...?" என்று அவன் கேட்க... அவள் புரியாமல் அவனைப் பார்த்தாள்...

"அந்த ரூமுக்கு போகிறதுக்கு..." என்றபடி அவன் அவளைத் தூக்கிக் கொள்ள...

"அத்தான்..." என்று சிணுங்கியவளைக் கண்டு,

"உண்மையில் பயமா தான் இருக்கு அம்மு..." என்று கண்சிமிட்டியபடி அங்கு அவளைத் தூக்கிச் சென்றவன் தன்னவளின் துணை தனக்கு எந்தளவிற்குத் தேவை என்பதை அவளிடம் செயல்முறையில் காட்டத் துவங்கினான்... அதை உணர்ந்தவளாய் அவள் அவனது தேவையைச் சந்தோசமாய்ப் பூர்த்திச் செய்யத் துவங்கினாள்...

********************

"இந்தர், இன்னைக்குப் பத்து மணிக்கு சம்யுவை வீட்டுக்கு கூட்டிட்டுப் போகிறோம்... நீ வர்றியா...? இல்லை நாங்க கிளம்பவா...?"

"இல்லைம்மா... நான் அங்கு வருகிறேன்..." அவனது அனுமதி வேண்டாமலேயே அவனது வாய்ப் பதிலளித்தது...

அன்னை அழைப்பை துண்டித்ததும் அவன் அலைப்பேசியை அணைத்து விட்டு யோசனையில் ஆழ்ந்தான்... இந்த ஒரு வார காலமாக அவன் சம்யுக்தா உறங்கும் நேரம் பார்த்து மருத்துவமனை சென்று குழந்தையை மட்டும் பார்த்து விட்டு வருகிறான்... அவன் மறந்தும் அவள் புறம் திரும்பிப் பார்க்கவில்லை...

இப்போது அவனது வேதனை கோபமாய் மாறி மனைவியவளைக் குத்தி குதறுவதற்காகக் காத்திருந்தது... அதற்குப் பயந்தே அவன் பெரும்பாலும் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து விடுவான்... அந்தளவிற்கு அவனது மனம் எரிமலையாய்க் குமுறிக் கொண்டிருந்தது...

இப்படியே யோசித்துக் கொண்டு இருந்தால் சரி வராது என்று எண்ணியவன் கார் சாவியை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்பினான்...

சம்யுக்தா எதிர்பார்ப்புடன் கணவனுக்காகக் காத்திருந்தாள்... அவளின் எதிர்பார்ப்பைப் பொய்க்காது அவனும் அங்கு வந்து சேர்ந்தான்... வந்தவன் அவளைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... நேரே தனது மகனை நோக்கிச் சென்றான்... அன்னையின் கைகளில் இருந்த மகனை அவன் ஆசையோடு வாங்கித் தனது கைகளில் வைத்துக் கொண்டு கொஞ்சினான்...

தன்னையே ஆசையுடன் பார்த்திருந்த மனைவியை அவன் ஓரக்கண்ணால் கண்ட போதும் அதற்காகப் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை... அப்படி ஒருத்தி அங்கே இல்லாதது போல் அவன் நடந்து கொண்டான்... மருத்துவமனையை விட்டு கிளம்பும் போது அவன்

சம்யுக்தாவின் அருகில் இணைந்து நடந்து வந்தான்... அப்போதும் அவன் அவள் பக்கம் திரும்பவில்லை...

அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி நடந்து வந்தவள் திடுமெனப் புடவை இடறி கீழே விழ முயல...

"சம்யு பார்த்து..." என்று பின்னால் இருந்து குரல் கொடுத்தபடி பிரகதீஸ்வரி அவளை நோக்கி வர...

அதற்குள் இந்திரஜித் தனது ஒற்றைக் கையால் அவளைத் தாங்கிப் பிடித்திருந்தான்... ஒரு கையில் மகனையும், மறுகையில் மனைவியையும் அவன் தாங்கியிருந்த கம்பீரம் அத்தனை அழகாய் இருந்தது...

இருவரின் விழிகளும் வெகுநாட்களுக்குப் பிறகு சந்தித்ததால் பிரிய மனமில்லாது அடம்பிடித்தது...

'ஏன் என்னைப் புரிந்து கொள்ளாது கோபப்படுறீங்க பாவா...?' என்று அவளது விழிகள் தவிப்புடன் அவனிடம் யாசித்தது...

'நீ எப்போது தான் என்னைப் புரிந்து கொள்ளப் போகிறாய் பேபி...?' என்று அவனது விழிகள் கோபமாய் அவளிடத்தில் சண்டை போட்டது...

மனைவியின் தவிப்பைக் காண சகிக்காதவனாய் அவளை நேராக நிமிர்த்தி வைத்தவன் ஒன்றும் பேசாது முன்னே செல்ல... சம்யுக்தா அவனது முதுகினை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

"வா சம்யு..." பிரகதீஸ்வரி அவளை அழைக்கவும் தன்னுணர்வு பெற்று அவள் நடந்தாள்...

காரில் வரும் போது இந்திரஜித் உறங்கும் மகனின் அழகில் லயித்திருந்தான்... சம்யுக்தா தான் அவனைப் பார்த்தபடி வந்தாள்... ஓட்டுநர் இருந்ததால் அவளால் கணவனிடம் எதுவும் பேச முடியவில்லை... இல்லை என்றாலும் அவனிடம் தைரியமாகப் பேச அவளால் முடியுமா என்ன...? வீடு வரும் வரை அவளது தவிப்பு நீடித்தது...

வீட்டின் முன் இருவரும் மகனுடன் குடும்பச் சகிதமாகச் சேர்ந்து நிற்க... பிரபாவதி சந்தோசத்துடன் பேரன் குடும்பத்திற்கு ஆரத்தி சுற்றினார்... கொள்ளு பேரனைக் கண்டு அவருக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

வீட்டிற்குள் நுழைந்ததும் மகன் பசியில் சிணுங்க ஆரம்பிக்க... இந்திரஜித் மனைவியைப் பார்த்தான்... அந்நேரம் அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்... கீழே இருந்த ஒரு அறையை நோக்கி அவன் செல்ல, அவள் அவனைப் பின்தொடர்ந்து சென்றாள்...

அறைக்குள் வந்ததும் அவன் மகனை அவளது கைகளில் கொடுத்தான்... அவன் தனது கை விரல் நுனி கூட மனைவியைத் தீண்டாது இருப்பதில் கவனமாய் இருந்தான்... அதை உணர்ந்தவளாய் அவளின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது... அதைக் கண்டு அவன் வேதனை அடைந்தவனாய் விருட்டென்று அறையை விட்டு வெளியேறிவிட்டான்...

கணவனது பாராமுகம், புறக்கணிப்பு கண்டு அவளது விழிகள் கண்ணீரை வடித்தது... மனைவியின் வார்த்தைகள் அவனது மனதில் ரணமாய் நின்று அவனை வேதனை கொள்ளச் செய்தது...

'எப்படிடி உன்னால் இப்படி எல்லாம் பேச முடிந்தது...?' அவன் மனதிற்குள் அதையே நினைத்து நினைத்து மறுகினான்...

வராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்த ஆதித்யா அங்கு மாமனைக் கண்டதும் அவனை நோக்கி தளிர் நடை பயின்று வந்தான்... மாமன் அருகில் வந்து அவனது கால்களைக் கட்டிக் கொண்டு,

"மாமா..." என்க... மருமகனைக் கண்டதும் முகத்தை நொடியில் சீராக்கிக் கொண்டவன்,

"அடடே... வாண்டு பையலே! நீ இங்கே தான் இருக்கியா...? உனக்கு ஒரு பொண்டாட்டியைப் பெத்து

கொடுக்கலாம்ன்னு பார்த்தால், உன் அத்தை என்னை ஏமாற்றி விட்டாளேடா..." என்று அவன் சின்னவனைக் கேலி செய்தபடி தூக்கினான்...

ஆதித்யாவோ மாமனது விழியோரம் துளிர்த்திருந்த நீரினை உற்றுக் கவனித்தான்...

"என்னடா அப்படிப் பார்க்கிற...? மாமாவை அடிக்கலாமா? வேண்டாமான்னா? இப்போ எனக்குச் சப்போர்ட்டுக்கு என் மகன் வந்து விட்டானாக்கும்... நீ என்னை அடிச்சால் பதிலுக்கு அவன் உன்னை அடித்து விடுவான்..." என்று அவன் தனது கையால் மருமகனின் வயிற்றில் விளையாட்டாய்க் குத்தியபடி பெருமைப்பட்டுக் கொள்ள...

ஆதித்யாவோ, "நோ..." என்றபடி மாமனது விழிநீரை தனது பிஞ்சு கரத்தால் துடைத்து விட்டான்...

மருமகனது செய்கையில் மாமனது விழியில் இன்னமும் கண்ணீர் திரண்டது... மனம் நெகிழ சின்னவனின் உள்ளங்கையில் முத்தம் கொடுத்தவன்,

"உன்னைப் போல் உன் அத்தை என்னை எப்போது புரிந்து கொள்ளப் போகிறாள்...?" என்று அவன் ஆதங்கத்துடன் சின்னவனிடம் கேட்டான்...

சின்னவனுக்கு மாமன் பேசிய வார்த்தைகளின் அர்த்தம் புரியவில்லை என்றாலும் மாமனின் துயர் உணர்ந்து அவனது கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டான்... இந்திரஜித்தும் தனது துயரைப் போக்கும் விதமாகப் பதிலுக்கு அவனை இறுக அணைத்துக் கொண்டான்...

********************

டெல்லி திஹார் சிறையில் வினோதினிக்காகக் காத்திருந்தான் சித்தார்த்... எப்போதும் போல் அவனது முகத்தில் அமைதி நிலவியது... அவனின் செயலில் மட்டுமே என்றும் அதிரடி இருக்கும்...

"உன்னைப் பார்க்க விருப்பம் இல்லைன்னு ஏற்கெனவே நான் சொன்னதா எனக்கு நினைவு..." என்று திமிராய்ப் பேசியபடி வினோதினி அவன் முன் வந்து நின்றார்...

எதில் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ... கணவன் மனைவி இருவருக்கும் ஒரே மாதிரியாகக் கேள்வி கேட்பதில் மட்டும் ஒற்றுமை இருக்கிறது... அன்று நீலேஷ் தன்னைப் பார்த்து கேட்ட கேள்வியை இப்போது நினைத்து பார்த்த சித்தார்த் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"இப்போ நீ எதுக்கு என்னைப் பார்க்க வந்திருக்க...?" என்று எரிச்சலுடன் கேட்ட வினோதினியை அமைதியாகப் பார்த்த சித்தார்த்,

"ஆறு வருடத்திற்கு முன்பு நீங்க பேசிய வார்த்தைக்குப் பதிலடி கொடுத்துட்டு போகலாம்ன்னு வந்திருக்கேன்..."

சித்தார்த் தனது இரு கைகளையும் கட்டிக் கொண்டு வினோதினியைப் பார்த்து அமர்த்தலாகக் கூறினான்...!!!

தொடரும்...!!!

சித்தார்த் கூறியதைக் கேட்டு வினோதினியின் விழிகள் இடுங்கியது... அவனிடம் தான் என்ன பேசினோம் என்பது அவருக்கு நினைவு வரவில்லை... ஆனால் சித்தார்த்தை தான் திட்டியது மட்டும் அவரது நினைவில் இருந்தது...

"அன்றே பதில் கொடுக்கத் தெரியாது ஓடி ஒளிந்த கோழை நீ, இன்று வந்து எனக்குப் பதில் கொடுக்கப் போகிறாயா...?" என்று இளக்காரமாய்ப் பேசிய வினோதினியைக் கண்டு அவன் ஒன்றும் அசந்து போய்விடவில்லை...

"உங்க பொண்ணு மது என் கஸ்டடியில் தான் இருக்கிறாள்..." என்று ஒற்றை வரியை மட்டும் அவன் அமர்த்தலாக உதிர்க்க... அதைக் கேட்டு வினோதினியின் சர்வாங்கமும் நடுங்கிப் போனது...

"ஏய், அவள் சின்னப் பொண்ணுடா... அவளை ஒண்ணும் பண்ணிராதே..." அதைச் சொல்லும் போதே அவரது தேகம் நடுங்கியது...

"ச்சீ... உங்களுடைய நினைவு எல்லாம் உங்களை மாதிரி தானே கீழ்த்தரமா இருக்கும்... எனக்கு உங்களை மாதிரியான சாக்கடை புத்தி கிடையாது... மது என் நண்பனின் மகள்... எனக்கும் மகள் போன்றவள்..." என்றவனைக் கண்டு வினோதினி சற்று ஆசுவாசம் அடைந்தார்...

"அப்புறம் எதுக்கு என் மகளைப் பிடிச்சு வச்சியிருக்க...?"

"மதுவுக்குத் தலையில் அடிப்பட்டதில் அவளுக்கு மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கிறது..." என்றவன் மாதுரிமாவிற்கு அடிப்பட்ட நிகழ்வைக் கூறினான்...

"நீ... நீ... என்ன சொல்ற...?" அவர் திகைத்துப் போய் அவனைப் பார்த்தார்...

"இதுக்குத் தான் நல்லது செய்யணும்ன்னு சொல்றது... தன்வினை தன்னைச் சுடும்..."

"நீ ரொம்ப நல்லவனோ..." என்று அவர் தன் கணவன் நினைவில் அவனிடம் கோபப்பட,

"நிச்சயமாய்... அதனால் தான் எனது வாழ்க்கை சந்தோசமாய், நிம்மதியாய் இருக்கிறது..."

"உன் புராணத்தை விடு... இப்போ என் மகள் எப்படி இருக்கிறாள்...? அவளை நீ ஏன் உன் கஸ்டடியில் வைச்சிருக்க...?" என்று படபடப்புடன் அவர் கேட்க...

"நான் அவளை என் பாதுகாப்பில் வைக்கலைன்னா இந்நேரத்திற்கு அவள் பல காமுகர்களின் உடல் பசிக்கு இரையாகி இருப்பாள்..." என்று வேதனையுடன் கூறியவனை அதிர்ச்சியுடன் பார்த்தார் வினோதினி...

"ட்ரீட்மெண்ட் எடுக்கும் போது ஹாஸ்பிட்டலில் இருந்து தப்பிச்சு வெளியில் ஓடிவிட்டாள்... அப்போது அவள் ரௌடிகள் கிட்ட மாட்டிக்கிட்டாள்... நல்லவேளை என் ஆளுங்க அவளைக் கண்டுபிடிச்சு காப்பாத்தி திரும்ப அழைச்சிட்டு வந்துட்டாங்க... இப்போ அவளை ஒரு ஹோமில் தங்க வைச்சிருக்கிறேன்... அவளுக்கு மனநிலை சரியாகும் வரை என் பாதுகாப்பில் தான் இருப்பாள்..." என்றவனை இமைக்காது பார்த்த வினோதினியின் மனநிலை என்ன மாதிரியாக இருந்தது என்று வார்த்தையில் வர்ணிக்க முடியாது...

"அன்று என்னைப் பார்த்து நீங்க 'என் வீட்டை விட்டு வெளியில் போடா நாயே'ன்னு சொன்னீங்க... அது உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?"

தன்னைப் பார்த்துக் கேட்டவனை நிமிர்ந்து காண முடியாது அவர் வெட்கித் தலை குனிந்தார்... இதுவே சித்தார்த்திற்குக் கிடைத்த முதல் வெற்றி... எதிரியை மண்டியிட செய்ய முடியவில்லை என்றாலும் எதிர்த்து தனது சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாதபடி அவன் செய்து விட்டான்...

"ஆம், நான் நாய் தான்... அதனால் தான் நன்றியுடன் உங்க மகளைப் பாதுகாக்க நினைக்கிறேன்... ஏன்னா உங்க

கணவரும், எனது நண்பனுமான நீலேஷ் ஃப்ரஹா ஃபார்மசிக்காக உழைத்தது கொஞ்சம் நஞ்சமல்ல... சிறிய அளவில் ஆரம்பித்ததை இந்திய அளவில் கொண்டு சென்றது அவன் தான்... அவனது திறமையில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை... அவன் அதை நல்ல முறையில் பயன்படுத்தாது போய்விட்டான்... அதற்குக் காரணம் அவனது பேராசை... அதற்கான தண்டனையை அவன் அனுபவித்து விட்டான்... அவனைப் பத்தி நான் பேச விரும்பலை... ஆனால் அன்று அவன் ஏற்றி வைத்த தீபம் இன்று பல குடும்பங்களுக்கு ஒளி தருகிறது... பல ஏழை, எளிய மக்களுக்கு உதவுகிறது... அந்த நன்றி இன்றும் என் மனசில் இருக்கு... அப்படிப்பட்ட என் நண்பனின் மகளைப் பாதுகாக்கிறது என்னோட கடமை... மதுவைப் பத்தி நீங்க கவலைப்படத் தேவையில்லை... நான் உயிருடன் இருக்கும் வரை அவள் நலமாக இருப்பாள்... அதற்குப் பிறகும் அவளுக்கு மாற்று ஏற்பாடு செய்து விட்டே நான் உயிர் துறப்பேன்... கவலை வேண்டாம்..."

"இதைச் சொல்லத் தான் நான் இங்கு வந்தது..." என்றவன்,

"அதற்காக நீங்க என் மகன் வாழ்க்கையில் ஏற்படுத்திய குழப்பங்கள் மற்றும் உங்க தவறுகளை நான் மன்னித்து விட்டதாய் அர்த்தம் இல்லை... அதற்கான தண்டனையைத் தான் இப்போது நீங்கள் அனுபவித்துக் கொண்டிருப்பது... தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை அனுபவித்துத் தான் ஆகவேண்டும்..." என்று தனது கம்பீரம் குறையாது கூறியவன் திரும்பிச் செல்ல முயன்றான்...

"மிஸ்டர். சித்தார்த்..." வினோதினியின் குரலில் நின்று அவரைத் திரும்பிப் பார்த்தான் அவன்...

"தேங்க்ஸ்..." என்று இருகரம் கூப்பி நன்றி உரைத்தவரின் விழிகளில் கண்ணீர் துளிகள் பளபளத்தது...

எதிரிகளையும் குற்றவுணர்வில் குமையச் செய்யச் சித்தார்த் ஒருவனால் மட்டுமே முடியும்...

"இது எனது கடமை..." என்று கம்பீரமாகக் கூறியவன் திரும்பிப் பார்க்காது சென்றுவிட்டான்...

அப்போது சித்தார்த் மனதில் தனது மனைவியவளின் அன்பு முகம் வலம் வந்தது... அவள் அவனுக்குப் போதித்த அன்பு தான் அவனை இந்தளவிற்கு மனிதனாக மாற்றியிருக்கிறது...

"தேங்க்ஸ் பேபி..." என்று அவனது உதடுகள் முணுமுணுத்துக் கொண்டது...

'அன்பே சிவம்' அதுவே இனி அவனது தத்துவம்...!

வினோதினியின் விழிகளில் மகளை நினைத்துக் கண்ணீர் பெருகியது... முதல் முறையாகத் தான் செய்த தவறுகளை நினைத்து மனம் வருந்தினார்... தான் செய்த தவறுக்குத் தண்டனையாகத் தான் தனது மகளது மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று அவர் உறுதியாக நம்பினார்... சித்தார்த்தின் மகனைப் பைத்தியமாக்க நினைத்தவருக்குத் தன் மகள் அது போல் பைத்தியமானது குறித்து அத்தனை வேதனையாக இருந்தது...

அந்தக் கணம் மதுமிதாவின் அப்பாவித்தனமான முகம் அவரது நினைவில் எழுந்தது... ஆத்திரத்தில் புத்தி கெட்டுப் போய்த் தான் செய்த தவறு அவரை இன்று இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது...

"என்னை மன்னித்து விடு விவேக்..." அவர் மகனிடம் வாய்விட்டு மன்னிப்பு கேட்டார்...

இனி வாழும் காலம் முழுவதும் இப்படிக் குற்றவுணர்ச்சியுடன் கூனிக்குறுகி வாழ்வது தான் அவருக்கான தண்டனை போலும்...

சித்தார்த் மாதுரிமாவை பற்றித் தனது குடும்பத்தில் யாரிடமும் மூச்சு விடவில்லை... இனியாவது மகனது வாழ்க்கை சந்தோசமாக இருக்கட்டும் என்று அவன் இந்த விசயத்தை அவர்களிடம் கூறாது மறைத்து விட்டான்...

**********************

"இந்தர்... குழந்தைக்குப் பெயர் வைக்கிறதை பத்தி உன் கிட்ட பேசணும்..." என்று சித்தார்த் மகனை அழைத்தான்...

"இப்போ எதுவும் வேண்டாம்ப்பா... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்..." என்றான் மகன் யோசனையுடன்...

"இதுவே பேரன் பிறந்து பன்னிரெண்டு நாளாகி விட்டது... கண்டிப்பா பதினாறாம் நாள் பெயர் வைக்கணும்..."

"ஒரு மாசம் கழிச்சு வச்சுக்கலாம்ப்பா... எங்க குழந்தைக்குப் பெயர் வைக்கும் போது நானும், யுகியும் சேர்ந்து சந்தோசமா இருக்கணும்... இப்போது அந்த மாதிரியான ஒரு சூழ்நிலை எங்களுக்கு இடையில் இல்லை..."

"இந்தர், நீ தான் மருமகள் கிட்டப் பேசணும்..."

"எஸ்ப்பா... நான் தான் அவளிடம் பேசணும்... அதனால் தான் தள்ளிப் போட சொல்கிறேன்... யுகி உடம்பு கொஞ்சம் தேறட்டும்... அதுக்குப் பிறகு நான் பேசி ஒரு முடிவுக்கு வர்றேன்..."

"அது சந்தோசமான முடிவா இருக்கணும் இந்தர்..."

"நிச்சயமாக..." என்று புன்னகையுடன் கூறியபடி சென்றவனைக் கண்டு சித்தார்த்திற்கு நிம்மதியாக இருந்தது...

ஜெகதீஸ்வரி மூலம் சம்யுக்தா குழந்தையை ஆசிரமத்தில் சேர்க்கச் சொன்னது அவனுக்கும், பிரகதீஸ்வரிக்கும் தெரிந்து விட்டது... அதைக் கேள்விப்பட்டு இருவருக்கும் அத்தனை அதிர்ச்சி, வேதனையாக இருந்தது என்னவோ உண்மை தான்... ஆனால் சம்யுக்தாவின் நிலையில் இருந்து பார்க்கும் போது அவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை... ஏனெனில் தவறு முழுவதும் அவர்கள் பெற்ற மகனிடம் அல்லவா இருக்கிறது... அதனால் இருவரும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாது அமைதி காத்தனர்...

இப்போது மகன் சொன்னது கேட்டு அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது... மகன் தனது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வான் என்று...

இந்திரஜித் அறைக்குச் சென்ற போது சம்யுக்தாவிற்காகக் கொண்டு வந்த உணவு சாப்பிடாது அப்படியே இருந்தது... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது... அவன் கோபத்தோடு அவள் முன் வந்து நின்றான்...

"என்ன...? உண்ணாவிரதம் இருந்து உயிரை விடப் போறியா..." என்றவனை அவள் பயத்துடன் பார்த்தாள்... எதையோ சொல்ல துடித்தது அவளது இதழ்கள்...

"உனக்குத் தான் உண்ணாவிரதம் இருக்கத் தெரியும்ன்னு நினைக்காதே... எனக்கும் இருக்கத் தெரியும்..." என்று அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் கூறினான்...

அவன் கூறி முடித்த அடுத்த நொடி அவள் தட்டை எடுத்து உணவினை வேக வேகமாய் உண்ணத் துவங்கினாள்... அதைத் திருப்தியுடன் பார்த்தவன் உறங்கிக் கொண்டிருந்த மகனைப் பார்க்கும் சாக்கில் முகத்தைத் திருப்பிக் கொண்டான்... இல்லை என்றால் அவனது உதட்டில் தவழும் புன்னகையை மனைவி கவனித்து விடுவாளே...

மேலும் இரண்டு வாரம் அமைதியாகக் கடந்தது... கணவன், மனைவி இருவரும் நேரிடையாகப் பேசிக் கொள்ளவில்லை... அழுத்தமான மௌனம் இருவரிடத்திலும் நிலவியது... அன்றிரவு மகன் உறங்கியதும் இந்திரஜித் மனைவியிடம் வந்து நின்றான்...

"இப்போ உடம்பு நல்லாயிருக்கா...? மயக்கம் எதுவும் போட்டு விழுந்திர மாட்டியே..."

கணவன் திடுமென அப்படிக் கேட்டதும் அவள் புரியாது அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவனோ உணர்வுகளைத் துடைத்து விட்ட முகத்துடன் அவளைப் பார்த்திருந்தான்...

"இல்லை..."

"இல்லைன்னா என்ன அர்த்தம்...? உடம்பு இன்னமும் சரியாகலையா...?"

"இல்லை, இல்லை... மயக்கம் எல்லாம் வராதுன்னு சொன்னேன்..."

"அப்போ ரொம்ப நல்லது..." என்றவன்,

"இப்போ நான் உன் கிட்ட பேசலாமா...?" என்று சீரியசான குரலில் அவன் வினவ... அவளோ திக்திக் மனதுடன் திகிலுடன் அமர்ந்திருந்தாள்...

அவன் அவளைப் பார்க்க இயலாது ஜன்னல் பக்கம் போய் நின்றான்... வெளியில் தெரிந்த இருண்ட வானில் விடிவெள்ளியைத் தேடி அவனது கண்கள் அலைபாய்ந்தது...

"எனக்கு மத்தவங்க மாதிரி பேசத் தெரியாது... அதனால் தான் உன் மீதான என் காதலை நான் செயலில் உணர்த்தினேன்... ஆனா அது தவறுன்னு இப்போ புரியுது..."

"லேது பாவா..." என்று இடையிட்டவளைத் திரும்பிப் பார்க்காது,

"நான் பேசி முடிச்சிக்கிறேன்..." என்றவன் மேலே தொடர்ந்தான்...

"நான் பேசியிருக்கணும்... உன் கிட்ட மனம் விட்டு பேசியிருக்கணும்... ஆனா இந்த அசிங்கத்தை நான் எப்படி உன் கிட்ட சொல்ல முடியும்...? பத்தொன்பது வயதில் படிக்கும் காலத்தில் நான் காதல் வயப்பட்டதையா...? இல்லை உண்மை காதல்ன்னு நினைச்சு நான் ஏமாந்த கதையா...? எதைச் சொல்ல சொல்லுற...? எதைச் சொன்னாலும் அது எனக்கு அசிங்கமே... இப்போ அதை நினைச்சு எனக்கே என்னைப் பார்த்து அத்தனை அருவருப்பா இருக்கு..."

"என்னை மிரட்டி தான் அவள் என்னைக் காதலிக்க வைத்தாள்... அந்த வயதின் தாக்கமோ என்னமோ நானும் காதலில் விழுந்தேன்... அவளை உண்மையா காதலிச்சேன்... அவளுக்கு உண்மையா இருந்தேன்... ஆனா அவள் எனக்கு உண்மையா இல்லை... அதை நான் கொஞ்சம் கொஞ்சமாய் உணர ஆரம்பிச்சதும் அவளை விட்டு விலகிப் போக முடிவு செஞ்சிருந்தேன்... அப்போ தான் அப்பா இடையில் தலையிட்டு என்னென்னமோ நடந்து போச்சு..." என்று நிறுத்தி விட்டு அவளைத் திரும்பிப் பார்த்தவன்,

"என் அப்பா என் காதலை எதிர்த்ததால், நான் அவளை விட்டு விலக முடிவு செஞ்சதால் தற்கொலை பண்ணிக்கிட்டதா அவள் கைப்பட லெட்டர் எழுதி வைச்சிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டதைப் பார்த்து நான் என்ன முடிவுக்கு வர முடியும்...? அவள் மேலிருந்த கோபம் எல்லாம் இல்லாமல் போய் அந்தக் கோபம் எல்லாம் அப்படியே அப்பா மேலேயும், உன் மேலேயும் திரும்பிருச்சு... உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கத் தான் அவர் அப்படி நடந்துக்கிட்டார்ன்னு அவர் மேல் கோபம்... அதே மாதிரி என் காதலுக்கு எமனா நீ வந்ததால் உன் மீதும் கோபம்... இப்போ நீயே எனக்கு ஒரு பதில் சொல்லு... என் இடத்தில் நீ இருந்தால் உன் மனநிலை எப்படி இருந்திருக்கும்...? நான் செய்ததைத் தானே நீயும் செய்திருப்ப..." என்றவனை அமைதியாகப் பார்த்தவள்,

"நான் உங்களை எந்தத் தப்பும் சொல்லலையே பாவா... நீங்க எதுக்கு இத்தனை விளக்கம் கொடுக்கிறீங்க...?" என்றவளைக் கண்டு அவன் அயர்ந்து போய் நின்று விட்டான்...

அவன் அடிக்கும் அத்தனை பந்துகளையும் ஒன்றும் இல்லாது செய்ய அவனது மனைவியால் மட்டுமே புரியும்... அப்போ தான் இத்தனை நேரம் பேசியது எல்லாம் தேவையில்லாத ஒன்றோ... அவன் 'ங்ே' என்று புரியாது விழித்தான்...

"நான் உயிர் வாழ்றதே உங்களுக்காகத் தான்... நீங்க தான் என்னோட உயிர் மூச்சு... இப்போதும், எப்போதும்..." என்றவளைக் கண்டு காதல் பெருகாது இருக்குமோ அவனது உள்ளத்தில்...

"உங்களோட காதல் எனக்கு முன்பே தெரியும்... நீங்களும், உங்க காதலியும் சேர்ந்து எடுத்துக்கிட்ட ஃபோட்டோஸ் எல்லாம் எனக்குக் கூரியர்ல வந்திருச்சு..." என்றவளின் முகத்தில் வேதனை வந்தமர்ந்தது... என்ன இருந்தாலும் பெண் மனம் அல்லவா...

அவளது வேதனையைக் காணச் சகிக்காதவனாய் தனது கோபத்தினைக் கை விட்டு விட்டு அவன் இரண்டே எட்டில் அவளை அணுகி இறுக அணைத்துக் கொண்டான்...

"சாரி பேபி... அது அறியாத வயசில் தெரியாமல் நடந்த தவறுன்னு நான் சொல்ல மாட்டேன்... அது நான் அறிஞ்சு, தெரிஞ்சு செய்த தவறு தான்..." என்றவன் அவளது முகத்தை நிமிர்த்தி,

"அன்னைக்கு மதிய பொழுது படுத்திருந்தியே அன்னைக்குத் தான் அது வந்ததா...?" சரியாகக் கணித்துக் கேட்ட கணவனைக் கண்டு அவள் புன்னகையுடன் பார்த்தாள்...

"ஆமாம்... அன்னைக்குத் தான்..."

"நினைச்சேன்... என்னைக்கும் இல்லாமல் நீ வித்தியாசமா நடந்து கொண்டது அன்னையில் இருந்து தான்... அப்பவே நான் சுதாரிச்சு இருக்கணும்... சுதாரிக்காம போயிட்டேன்... நீ அவளைக் கண்டு மயங்கி விழுந்தப்போ தான் நான் கொஞ்சம் யோசிக்க ஆரம்பிச்சேன்... அதனால் தான் என்னை விட்டு விலகிப் போக முடிவு செஞ்சியா...?"

"அப்போ இல்லை... அந்த ஃபோட்டோஸ் பார்த்துட்டு கஷ்டமா இருந்தது என்னவோ உண்மை தான்... இல்லைன்னு பொய் எல்லாம் சொல்ல மாட்டேன்... ஆனா நீங்க என் மேல் வச்ச காதல் மேல் நம்பிக்கை இருந்தது...

நீங்க எனக்கு மட்டும் தான்னு உறுதியா நம்பினேன்... அப்போ தான் நான் குழந்தை உண்டானது தெரிய வந்தது... அந்த விசயத்தை உங்க கிட்ட சந்தோசமா சொல்ல வந்தேன்... ஆனா நீங்க...?"

இன்றும் அதை நினைத்துப் பார்த்தவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... சில விசயங்களை மறக்கத் தான் நினைக்கிறாள்... ஆனால் முடியவில்லையே... அதற்காக அதைச் சொல்லிக் காட்டி அவனைக் கஷ்டப்படுத்தவும் அவள் விரும்பவில்லை...

"அன்னைக்கு என் நிலைமை... சாரி பேபி..." அவளது வேதனையை உணர்ந்து அவனும் வேதனை அடைந்தவனாய் பேச்சற்று விக்கித்து நின்றான்...

"அதுக்குத் தான் என்ன காரணம்ன்னு நீங்க சொல்லிட்டீங்களே... நான் தான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன்... அந்த நேரம் உங்க சந்தோசத்துக்காக உங்களை விட்டு விலகிப் போகணும்ன்னு முடிவு செஞ்சேன்... தற்கொலை பண்ணிக்கத் தான் போனேன்... ஆனா நீங்க என்னைக் காப்பாத்திட்டீங்க..."

"பேபி..."

அவன் முன்பே இதை ஊகித்தது தான்... ஆனால் அதை அவள் வாய்மொழியாகக் கேட்ட போது அவன் அதிர்ந்து போனான்... அன்று இக்கட்டான நிலையில் தற்கொலை பண்ண கூடத் தெரியாது தவித்தவளை இன்று அவனே தற்கொலையை நோக்கி தள்ளி இருக்கிறான்... அதை நினைத்து அவன் மனம் மறுகிப் போனான்...

"ஏன்டி இப்படி எல்லாம் தப்பு தப்பா யோசிக்கிற...?"

"நான் எப்போதுமே எனக்காக யோசிச்சது இல்லை... உங்களுக்காக, உங்க நலனுக்காக மட்டுமே யோசிப்பவள்... நீங்க கழுத்தில் போட்ட தாலிக்காக, உங்க வார்த்தைக்காக நான் உங்களுக்காகக் காத்திருந்தவள்... அதுக்குப் பிறகு முறையில்லாத வாழ்க்கை தான் எனக்குக்

கொடுப்பீங்கன்னு சொன்னீங்க... அதையும் நான் சந்தோசமா ஏத்துக்கிட்டேன்... ஏன் தெரியுமா...? எனக்கு உங்க சந்தோசம் தான் முக்கியம்... என்னைக் காயப்படுத்துறதால உங்க மனசுக்கு நிம்மதி, சந்தோசம் கிடைக்குதுன்னா அதுக்கும் நான் சந்தோசமா சம்மதிச்சேன்..."

"அதன் விளைவா குழந்தை உண்டானப்போ கூட நான் உங்களைத் தவறா நினைக்கலை... நாம வாழ்ற வாழ்க்கைக்கான அர்த்தம் நமக்கு மட்டும் தெரிஞ்சா போதும்ன்னு நினைச்சேன்... ஆனா நீங்க குழந்தையைப் பத்தி சொன்னதும் திகைச்சுப் போய்ப் பார்த்தது கண்டு எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்துச்சு... உங்களை என்னுடன் வலுக்கட்டாயமா பிடிச்சு வச்சிருக்கேனோன்னு தோணுச்சு... அப்போதும் உங்க சந்தோசத்துக்காகத் தான் நான் உயிரை விடத் துணிஞ்சேன்... இப்பவும் உங்க சந்தோசத்துக்காகத் தான் நான் உயிரை விடத் துணிஞ்சேன்..." என்றவளைத் திகைப்புடன் பார்த்தவன்,

"லூசாடி நீ... நீ தான்டி என் சந்தோசம்..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் புன்னகை சிறிதும் வாடவில்லை...

"அது எனக்குத் தெரியுமே..." என்றவளைக் கண்டு அவன் தலை கிறுகிறுத்துப் போனான்...

"சொல்ல வர்றதை புரியும்படி சொல்லுடி பேபி... உன்னளவுக்கு என்னால் யோசிக்க முடியலை..." என்று அவன் தனது நெற்றிப் பொட்டை அழுத்தமாய் நீவி விட்டுக் கொண்டான்... அவள் அவனது கையை விலக்கி விட்டு தனது கையால் அவனது நெற்றியை மென்மையாய் நீவி விட்டாள்...

"அன்னைக்குத் தற்கொலை பண்ணிக்கப் போனப்போ தான் ஒரு உண்மை தெரிஞ்சது... என்னால் குழந்தையை அழிக்க முடியாதுன்னு... அப்போ அடிப்பட்டுக் கீழே விழுந்தப்போ கூடக் காலை குறுக்கிக்கிட்டு தான் விழுந்தேன்... குழந்தைக்காகத் தான் இவ்வளவு நாளா

காத்திருந்தேன்... இல்லைன்னா நான் எப்பவோ இறந்து போயிருப்பேன்..."

அவள் கூறிய வார்த்தையின் கனம் தாங்காது அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்... தன்னுடைய தவறான புரிதல் தன்னுடைய வாழ்க்கையை எந்த நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்பதை உணர்ந்து அவன் மனம் நொந்து போனான்...

"என் மேல் அப்படி என்னடி கோபம்...? அப்பா நான் உயிரோடு இருக்கும் போதே என் பிள்ளையை ஆசிரமத்தில் சேர்க்க சொல்லும் அளவுக்கு..." என்று ஆதங்கத்துடன் கேட்டவனைக் கண்டு,

"அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் மாமாகாரு கிட்ட நீங்க பேசியது எல்லாத்தையும் நான் கேட்டுட்டேன்..." என்று அமைதியாகக் கூறியவளைக் கண்டு அவன் அதிர்ந்து போய் விலகினான்...

"பேபி, அது ஏதோ அவர் மேலுள்ள கோபத்தில் பேசியது... உன் மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை..."

"ம், இப்போ எனக்கு அது புரியுது... அப்போ அதைக் கேட்டப்போ நான் உயிரோடு செத்துப் போயிட்டேன்... நீங்க என்னைக் காதலிக்கலைன்னு நான் உணர்ந்த கணம் அது... அதுவரை உங்க காதலை பற்றுக்கோலா வச்சு வாழ்ந்த நான், அன்று தான் அதை இழந்து அதலபாதாளத்தில் விழுந்தேன்... மீண்டு எழ முடியாதளவுக்கு அப்படியொரு அடி, அப்படியொரு வலி... அந்தக் கணம் காதலில்லாத உங்களை விட்டு விலகிப் போகணும்ன்னு முடிவு பண்ணினேன்... ஆனா நீங்க அதுக்கு விடலை..."

"அப்போ மட்டுமா...? இப்பவும் நான் தான் உன்னைப் பிடிச்சு வச்சியிருக்கேன்..." என்றவனைக் கண்டு அவள் புன்னகைத்தாள்...

"எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு பேபி... ஆனா நீ சிரிக்கிற..." என்று அவன் மீண்டும் ஆதங்கம் கொள்ள...

"எனக்கு எந்தக் கவலையும் இல்லை... கஷ்டமும் இல்லை... நான் சந்தோசமா தான் இருக்கேன்..."

அவன் அவளுக்குக் கொடுத்தது எல்லாம் துன்பம் மட்டுமே... அப்படி இருந்தும் அவள் அவனுடனான வாழ்க்கையைச் சந்தோசமாக வாழ்கிறாள் என்றால் அவளது மனதில் அவன் மீதான காதல் எந்தளவிற்கு ஆழமாய் இருக்க வேண்டும்... தான் மட்டும் ஏன் அவளிடம் கோபம் கொண்டு அவளைக் கஷ்டப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்... அன்று முதல் இன்று வரை அவன் அதை மட்டுமே செய்து வருகிறான்...

"அதுக்கு அப்புறம் தான் மாதுரிமாவை பார்த்தது... அவள் என்னிடம் பேசியது... எல்லாம் சேர்த்து என்னுள் ஒரு வைராக்கியத்தைத் தோற்றுவித்தது... எக்காரணம் கொண்டும் அவளை உங்க வாழ்க்கையில் வர விடக் கூடாதுன்னு..."

"நானா...? அவளையா...? ச்சீ, ச்சீ..." என்று அவன் முகத்தைச் சுளித்தான்...

"அதே சமயம் நானும் உங்களுக்குப் பொருத்தம் இல்லாதவள்ன்னு நினைச்சேன்... அதனால் தான் என் மரணத்தை நானே முடிவு செய்தேன்..."

இதை அவள் சொல்லும் போது அவளது முகத்தில் துன்பம் ஏதுமில்லை... மாறாக அவள் சாதாரணமாகத் தான் இருந்தாள்...

"ஏன்டி இப்படி எல்லாம் விபரீதமா யோசிக்கிற...? நான் உன் மேல் வச்சியிருக்கிற காதல் உண்மையில்லையா...? இல்லை அதை உன்னால் புரிஞ்சிக்க முடியலையா...? ஐஞ்சு வருசமா இந்த ஊர் பக்கம் எட்டிப் பார்க்காதவன் உனக்காகத் தான்டி ஓடி வந்தேன்... உன் கழுத்தில் நான் போட்ட கருகமணி மாலை தாலின்னு தெரிஞ்சதும்

அப்படியே நடுநடுங்கிப் போயிட்டேன்... உனக்குத் துரோகம் பண்ணிட்டோமோன்னு நினைச்சு ஓடி வந்தேன்... உன்னைப் பழிவாங்கணும்ன்னு திட்டம் போட்டு செஞ்சவன் தான் நான்... ஆனா என்னால் தாலியை அப்படி எளிதா எடுத்துக்க முடியலை..."

அதைக் கேட்டு அவளது முகத்தில் வெளிச்சம் பரவியது... அவன் அவளை முறையில்லாது தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை... அவனது மனைவி என்கிற அங்கீகாரத்துடன் தான் அழைத்துச் சென்றிருக்கிறான் என்பதை அறிந்து அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... எல்லாம் ஒரு நொடி தான், அடுத்த நொடி எதையோ நினைத்து அவளது முகம் இருண்டு போனது...

"அதனால் தான் இங்கு வந்தேன்... இங்கு வந்த பின்பும் கூட உன்னை நான் கஷ்டப்படுத்தி இருக்கிறேன் தான்... ஆனா உன்னை யாருக்கும் விட்டுக் கொடுக்க நினைச்சது இல்லை... நீ எனக்கு மட்டுமே சொந்தம் என்கிற உரிமை உணர்வு என் மனசில் ஆழமாய்ப் பதிஞ்சிருந்தது... ஆனா நான் பண்ணிய ஒரே ஒரு தப்பு, அப்பாவைப் பழிவாங்கன்னு உன்னை முறையில்லாம கூட்டிட்டுப் போனது தான்... ஆனா உனக்கும் எனக்கும் தெரியும் தானே நம் உறவு முறையானது என்று... அதனால் தான் தைரியமா உன் கிட்ட எனக்கான உரிமையை எடுத்துக்கிட்டேன்... இதில் குழந்தை வந்தப்போ தான் என் தப்பு எனக்கு உரைக்க ஆரம்பிச்சது... எனக்கு நீ ஒரு நாள் டைம் கொடுத்திருந்தால் கூட நம்ம உறவை ஊரறிய செய்திருப்பேன்..." என்றவன் அவளது விழியோடு விழி நோக்கி,

"என் மேல் நிறையத் தப்பிருக்கு... உன் கிட்ட மனம் விட்டு பேசி இருந்திருக்கணும்... அதைச் செய்யாதது தான் நான் செஞ்ச முதல் தப்பு... தப்பு செஞ்சு பழக்கம் இல்லாதவன் அதான் உன்னிடத்தில் பண்ணிய தவறுகள் எல்லாமே சொதப்பிச்சிருச்சு... உன் பாவாவின் தவறுகளை மன்னிக்க மாட்டாயா பேபி...?"

"மன்னிக்கும்படியாய் நீங்க எந்தத் தவறும் செய்யவில்லையே பாவா..." என்றவளைக் கண்டு அவன் இனிமையாய் அதிர்ந்தான்...

"உங்க இடத்தில் நான் இருந்திருந்தால் இதைத் தான் செஞ்சிருப்பேன்... இதற்காக எல்லாம் நான் வருந்தவில்லை... நீங்க எனக்குத் தெய்வம் மாதிரி... நீங்க என்னைச் சோதிச்சாலும் அதைப் புன்னகையுடன் கடக்க எனக்குத் தெரியும்... ஆனா இந்தத் தெய்வத்தை அதிகம் சோதிச்ச எனக்கு என்ன தண்டனை கொடுக்கப் போறீங்க பாவா...?"

"நீ...? என்னை...? அப்படி எல்லாம் எதுவுமில்லை பேபி..." அவன் அவளது காதலில் வார்த்தை வராது தடுமாறினான்...

"நீங்க பொய் சொல்றீங்க பாவா... நான் உங்க வாழ்க்கையில் குறுக்கிடாவிட்டால் இந்நேரம் உங்க வாழ்க்கை இன்னமும் சிறப்பா அமைஞ்சிருக்கும்... உங்களுக்கு ஏத்த மாதிரியான பொண்ணு உங்களுக்கு மனைவியா கிடைச்சிருப்பாள் இல்லையா...? என் கழுத்தில் கட்டிய தாலிக்கு உண்மையாக இருக்க நீங்க பட்ட பாடு எனக்கு மட்டுமே தெரியும்... உங்களுக்குச் சிறிதும் பொருத்தமில்லாத என்னை உங்களுக்கு இணையா உயர்த்தி... நீங்க எதுக்கு இப்படிக் கஷ்டப்படணும் பாவா...? எல்லாம் இந்தத் தாலிக்காகத் தானே..."

இப்போது அவனுக்கு அவள் கூற வருவது புரிந்தது... அவளது எண்ணம் போகும் பாதை புரிந்தது... அதற்கான பதில் அவனிடத்தில் இருக்கிறதே... அதனால் அமைதியாக அவளைப் பேச விட்டு வேடிக்கை பார்த்தான்... அவள் மனதில் இருப்பதை எல்லாம் கொட்டட்டும்... இனி அவர்களுக்கு இடையில் எந்தவொரு ஒளிவு மறைவும் வேண்டாம்... மனைவியின் மாசற்ற காதலை எண்ணி அவனது விழிகள் கசிந்தது...

"உங்களைப் பழிவாங்கணும்ன்னோ இல்லை உங்களைக் கஷ்டப்படுத்தணும்ன்னோ நான் இந்த முடிவை

எடுக்கலை... உங்களுக்காக, உங்க அந்தஸ்துக்காக, நீங்க நாலு பேர் முன்னாடி தலைகுனிய கூடாதுங்கிறதுக்காகத் தான் நான் என் உயிரை விடத் துணிஞ்சேன்..." என்றவள் அவன் அருகில் வந்து அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கிக் கொண்டு,

"என் கழுத்தில் தாலி கட்டலைன்னு நினைச்சுக்கிட்டா எல்லாம் சரியா போயிரும் பாவா... எனக்காக நீங்க அவமானப்பட வேண்டாம்..." என்றவளைக் கண்டு அவனுக்கு இப்போது கோபம் வரவில்லை... மாறாகக் காதல் அதிகரித்தது...

தனது கன்னத்தில் இருந்த அவளது கரத்தினை அழுத்தி வைத்துக் கொண்டவன், "அது எப்படி அப்படி நினைக்க முடியும்...? அவளை நான் சந்திக்காம, காதலிக்காம இருந்திருந்தால் நிச்சயம் நான் உன்னைத் தான் காதலிச்சு இருப்பேன்... கல்யாணமும் பண்ணியிருப்பேன்... அப்பா என் காதலில் தலையிடாமல் இருந்திருந்தால் அவள் தற்கொலை பண்ணியதை கூடக் கண்டுக்காம இருந்திருப்பேன்... என் அக்கா கல்யாணத்தில் உன்னைப் பார்த்து உன்னை மட்டுமே காதலித்திருப்பேன்... இல்லை ஜிக்கிக்காகவாவது உன்னைக் கல்யாணம் பண்ண சம்மதித்து இருப்பேன்..."

கணவன் கூற, கூற அவளது மனதில் இத்தனை நாளாய் அழுத்திக் கொண்டிருந்த பாரம் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து போக,

"பாவா..." என்று கூவலோடு அவள் அவனை அணைத்து கொண்டாள்...

அவன் எத்தனையோ தடவை அவளைப் பார்த்து 'ஐ லவ் யூ' என்று கூறியிருக்கிறான் தான்... ஆனால் அப்போது எல்லாம் அவள் உணராத அவனது காதலை இப்போது அவள் உணர்ந்தாள்... எந்த நிலையிலும் தன்னை மட்டுமே நேசிக்கும் கணவன் கிடைப்பது வரமன்றோ... அதுவும் ராஜகுமாரன் போன்ற ஒருவன், தெய்வம் போன்று மேல் நிலையில் இருப்பவன் தன் நிலை இறங்கி வந்து

அவளைக் காதலிப்பது அவள் செய்த பாக்கியம் அல்லாது வேறு ஏது...

"நீ என்னைப் புரிந்து கொண்டது அவ்வளவு தானா பேபி...? நான் அப்படி எல்லாம் தகுதி பார்ப்பவனா...?" என்று வருத்தத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"இல்லை பாவா... உங்களைப் பார்த்தால் சில சமயம் எனக்குப் பாவமாக இருக்கும்... காதலும் உங்களுக்குப் பிடித்த மாதிரி அமையலை... கல்யாணமும் உங்களுக்குப் பிடித்த மாதிரி அமையலை... கிடைச்சதை வச்சு சந்தோசமாய் வாழ்கிற உங்களைப் பார்க்கும் போது ரொம்பக் கஷ்டமா இருக்கும்... உங்களுக்கே உங்களுக்கான பிடித்தமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கணும்ன்னு நான் நினைச்சேன்..."

"என்னோட பிடித்தமான வாழ்க்கை உன்னோடு மட்டும் தான் பேபி... உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் எனக்குப் பிடிக்காது..." என்றவன் மாதுரிமாவுடனான தனது காதலை முழுவதும் சொல்லி முடித்து,

"அவள் கூட இருந்தப்போ எல்லாம் மனசுக்குள் ஒரே நெருடலாவே இருக்கும்... இந்தக் காதல் அவசியம் தானான்னு... ஆனா அவள் அதுக்காக உயிரை விட்டாள்ன்னு தெரிஞ்சப்போ நான் கொஞ்சம் தடுமாறிப் போயிட்டேன்... அது கூடப் பொய்யின்னு தெரிஞ்சதும் என் மனம் மாறிப் போச்சு... இப்போ அவளைப் பத்தின எந்தவொரு எண்ணமும் என் மனதில் கிடையாது..."

"அது தான் எனக்குத் தெரியுமே..." என்று புரிதலுடன் கூறியவளைக் கண்டு,

"அதெல்லாம் உனக்குப் புரியுது... ஆனா என் மனசில் நீ இருக்கேங்கிறது மட்டும் உனக்குப் புரியலையாக்கும்..." என்று ஆதங்கப்பட்டவனைக் கண்டு,

"அதுவும் புரிந்ததால் தானே இந்த முடிவு... நான் உயிரோடு இருக்கும் வரை நீங்க என்னை விட்டு விலகிப் போக

மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்... எனக்குத் தெரிஞ்சது எல்லாம் நீங்க உங்களுக்கான வாழ்க்கையைச் சந்தோசமா வாழணும்ங்கிறது தான்..." என்றவளை அவன் காதலுடன் அணைத்துக் கொண்டான்...

"ஆனா நான் உன் கிட்ட பழகிய நாள் முதல் உணர்ந்தது எல்லாம் காதல் மட்டும் தான்... ஆனால் அது காதல் தான் என்பதைத் தெரிஞ்சு கொள்ளத் தான் ரொம்ப லேட்டாகிப் போச்சு..." என்றவனை அவள் விழி விரிய ஆச்சிரியமாகப் பார்க்க...

"அன்று உன் வீட்டில் என் உயிருக்காக நீ அழுது துடிச்சியே அப்பவே நீ என் மனசுக்குள் வந்திட்ட... அதை விட உன் நெஞ்சுக்குள் என்னைப் பாதுகாப்பாய்ப் பொத்தி வச்சியே, அப்போ என் அம்மாவோட கதகதப்பை நான் உன்னில் உணர்ந்தேன்... உனக்காக, உன்னோட சந்தோசத்துக்காக உன் கூட ஊர் சுத்தினேன்... இது எல்லாம் எதுக்குச் செஞ்சேன்னு அப்போ எனக்குப் புரியவில்லை... ஆனா இப்போ புரியுது... உன்னை ஏமாத்திட்டு போகணும்ன்னு நினைச்ச நான் உன் கிட்ட 'எனக்காகக் காத்திரு'ன்னு ஏன் சொன்னேன்னு அப்போ எனக்குப் புரியலை... இப்போ புரியுது... அதற்குப் பெயர் காதல்ன்னு..."

"வெளிநாட்டில் எனக்கு நிம்மதியை கொடுத்தது உன்னுடைய அந்த ஒற்றை அணைப்பு தான்... அதை நினைச்சுக்கிட்டே தான் தூங்குவேன்... உன் நெஞ்சுக்குள் முகம் புதைத்துப் படுத்திருப்பது போல் நானா கற்பனை பண்ணிக்குவேன்..."

"ச்சீ, போங்க பாவா..." என்று அழகாய் வெட்கப்பட்டவளைக் கண்டு,

"ஐயோ பேபி... நீ நினைக்கிற மாதிரி இல்லை..." என்று அலறி அவளது கற்பனைக்குத் தடை போட்டவன்,

"எல்லா ஆண்களுக்குமே அவங்க அம்மா மாதிரி மனைவி வேணும்ன்னு நினைப்பிருக்கும்... அது மாதிரி தான் எனக்கும்... உன்னைப் பார்த்ததும் எனக்கு என் அம்மா தான்

ஞாபகத்துக்கு வந்தாங்க... அந்த அணைப்பும் அது மாதிரி தான்... தாயைத் தேடும் சேயின் ஏக்கம் மட்டுமே அதில் இருந்தது..." என்றவன்,

"அங்கிருந்த ஐஞ்சு வருசத்தில் ஒரு நாள் கூட எனக்கு அவள் நினைப்பு வந்ததில்லை... உன் நினைப்பு தான் அதிகம் வரும்... உனக்குத் துரோகம் பண்ணிட்டேனோன்னு கஷ்டமாயிருக்கும்... உன்னை மறக்கிறதுக்காக, அவளை நினைப்பதற்காகவே குடிக்க ஆரம்பித்தேன்... ப்ச், நோ யூஸ்... அப்பவும் நீ தான் என் கண் முன்னாடி வந்த... நான் என்னை மறந்து குடிச்ச போதும் உன்னை ஒரு போதும் மறக்கலை பேபி... இதுக்குப் பெயர் என்ன பேபி...?"

அதைக் கேட்டு அவளது விழிகள் இன்னமும் அகல விரிந்தது... அப்போதேவா? என்பது போல்...

தொடரும்...!!!

"இதுக்குப் பெயர் தான் காதலடி பெண்ணே, காதல்... அதிலும் ஐஞ்சு வருசமா எனக்காக நீ காத்துக்கிட்டு இருப்பதைக் கண்டு தான் காதல்ன்னா என்னன்னு நான் உணர்ந்தேன்... உனக்கு ஒண்ணு தெரியுமா...? ஒருநாள் நான் ஜிக்கி கூட ஃபோனில் வீடியோ சாட்டில் பேசிக்கிட்டு இருந்தப்போ நீ பின்னாடி நின்னுக்கிட்டு இருந்த... அவளோட ஃபோனில் தெரிஞ்ச என்னை அத்தனை காதலோடு நீ பார்த்துக்கிட்டு இருந்ததைப் பார்த்து அப்பவே நான் உன் கிட்ட டோட்டலா ஃப்ளாட்டாகிட்டேன்..."

"ஆமாம் பாவா... அன்னைக்கு நீங்க என்னைப் பார்த்தீங்களா...?" என்று அவள் வெட்கத்துடன் கேட்க...

"உன்னையும் பார்த்தேன்... உன் கண்ணில் வழிஞ்ச காதலையும் சேர்த்துப் பார்த்தேன் பேபி... இந்தக் காதலுக்காக எதையும் செய்யணும்ன்னு நினைச்சேன்... ஆனா இங்கே வந்ததும் அப்பாவைப் பார்த்ததும் பழைய கோபம் திரும்ப வந்திருச்சு... அந்தக் கோபத்தை எல்லாம் உன் கிட்ட காட்டினேன்... அப்படித் தான் அன்னைக்கு நான் பேசியதைக் கேட்டு நீ மழையில் நனைஞ்சிக்கிட்டு இருந்தப்போ மனசு கேட்காம ஓடி வந்தேன்... உன்னைப் பிடிச்சு இழுத்துட்டு போனப்போ தான் உன் கழுத்தில் கிடந்த தாலி ஈர சேலையில் ஊடாக நல்லா தெரிஞ்சது... அதைப் பார்த்ததும் அதிர்ந்து போயிட்டேன்..."

"ம்... உங்க பார்வையை நான் வேறு மாதிரி நினைச்சு..." என்று வெட்கப்பட்டவளைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"அது உன் பார்வையில், முகச் சிவப்பில் தெரிஞ்சது..." என்றவன் அவளது காலை வருடி விட்டு,

"அன்னைக்கு உன் காலில் மருந்து போட்டு விட்டேனே... உனக்கு நினைவிருக்கா...?"

"அப்போ நீங்க வந்தது, யுகிம்மான்னு சொன்னது எல்லாம் நிஜம் தானா...?"

"நிஜமே தான்..." என்று கண்மூடி திறந்தவனைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்து போனது...

"அது மட்டுமா அன்று புடவை கடையில் புடவை செலக்ட் பண்ணிக் கொடுத்தது... அதை நீயும் ஆசையா மேலே போட்டுக் கண்ணாடியில் பார்த்தப்போ என் மனவுணர்வை சொல்ல வார்த்தை கிடையாது... இதை உணர நீ ஆணாய்ப் பிறந்திருக்க வேண்டும் பேபி... நமக்குப் பிடிச்சவங்க நமக்குப் பிடிச்சதை ஏத்துக்கிறப்போ அப்படியொரு சந்தோசம் வரும்... அந்தச் சந்தோசத்தோடு தான் நான் உன்னைக் கண்ணாடியில் பார்த்து ரசிச்சது... நீ என்னைப் பார்ப்பதை உணர்ந்து நான் உடனே திரும்பி நின்னுக்கிட்டேன்..." என்றவனைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்தது... அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்...

"அன்னைக்கு விபத்து நடந்தது கூட உன்னை நினைச்சுக்கிட்டுப் போய்த் தான்... உன்னை நான் என்ன பண்ணப் போறேன்னு தெரியாம யோசிச்சிக்கிட்டே கார் ஓட்டியதில் கவனம் இல்லாது முன்னாடி போய்க்கிட்டு இருந்த லாரி மேல் மோதிட்டேன்..."

"ஐயோ..." என்றவளைப் பார்த்து அவளது விழி மீது முத்தமிட்டவன்,

"அந்தளவுக்கு நீ என்னை ஆக்கிரமிச்சு உயிரோடு கொன்ன பேபி... உனக்காக நம்ம கல்யாணத்தை ரெஜிஸ்டர் பண்ணியது, அதுக்கு அப்புறம் சொத்துக்களைச் சரிபாதியாய் உன் பெயருக்கு எழுதியது, பாஸ்போர்ட் எடுத்தது, யுஎஸ் கூட்டிட்டுப் போனது எல்லாமே நீ என் மனைவி என்கிற அங்கீகாரத்துடன் தான்... செயலில் எல்லாத்தையும் செய்தவன் உன் கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்காது போனேன்..."

கணவன் சரியாகத் தான் நடந்து இருக்கிறான்... தான் தான் தேவையில்லாமல் குழப்பி அவனையும் குழப்பி விட்டோம் என்று நினைத்து அவள் வருந்தினாள்... அதை அவனிடத்தில் சொல்லவும் செய்தாள்...

"இதில் உன் தப்பு எதுவும் இல்லை பேபி... நீ என்னுடைய அழகையோ, படிப்பையோ, அந்தஸ்தையோ எதிர்பார்க்கலையே... என்னோட காதலை மட்டுமே எதிர்பார்த்து இருக்கிறாய்... அதனால் வந்த தவிப்பு தான் இந்த விபரீத முடிவு..." என்று அவளைத் தேற்றியவன்,

"அவளைத் திடீர்ன்னு விவேக் கூடப் பார்த்ததும் எனக்கு ஒண்ணுமே புரியலை... ஆனா சில விசயங்கள் அவள் தான் இவள்ன்னு காட்டிக் கொடுத்துச்சு... இந்தத் துரோகிக்காகவா நான் உன்னைக் கஷ்டப்படுத்தினேன்னு எனக்கு ரொம்பக் கஷ்டமா போச்சு... அதான் அன்னைக்கு நான் உனக்குச் செஞ்ச பாவத்துக்கு உன் மடியில் படுத்துக் கண்ணீர் வடிச்சேன்... அப்போதும் சரி, இப்போதும் சரி என் மனசில் நீ மட்டும் தான் பேபி... என்னை நம்புகிறாய் தானே..."

தவிப்புடன் தன்னைப் பார்த்து கேட்ட கணவனைக் கண்டு கண்ணீர் மல்க அவள் வேகமாய் ஆமென்று தலையாட்டினாள்...

"இது போதும் பேபி... இனி இப்படி ஒரு விபரீத முடிவு எடுத்து விடாதே..."

"ம்ஹூம் மாட்டேன்... இப்போ நான் உங்க மனசை இன்னும் நல்லா புரிஞ்சிக்கிட்டேன்..." என்றவளின் மதி முகம் நோக்கி அவன் காதலுடன் குனிந்த போது தந்தையின் நோக்கம் புரிந்தவனாய் அவர்களது மகன் பசியில் சிணுங்கினான்...

"போச்சுடா..." என்று சிரித்தபடி அவன் விலகி அமர்ந்தான்...

அவள் சிரித்தபடி மகனை தூக்கி வந்து பசியாற்றினாள்... பசி அடங்கியதும் அன்னையின் மடியில் படுத்து சுகமாய் உறங்கிய மகனது பாதத்தை வருடிக் கொடுத்தவன்,

"இவனை எப்படிடி ஆசிரமத்தில் சேர்ப்பதற்கு உனக்கு மனசு வந்துச்சு...? அதுவும் என் கிட்டேயே சொல்லுற...?"

அதற்குப் பதில் சொல்லாது அமைதியாக இருந்த மனைவியை அவன் ஏறிட்டு பார்க்க... அவளோ மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்...

"என்ன பேபி இது...?" என்று கடிந்தபடி அவளது கண்ணீரை அவன் துடைத்து விட...

"நான் மட்டும் என்ன சந்தோசமாவா இதைச் சொன்னேன்...? நான் மகனோடு எங்கேயாவது போய் வாழலாம்ன்னு நினைச்சேன் தான்... ஆனா நான் எங்கே போனாலும் நீங்க என்னை விட மாட்டீங்க, பின்தொடர்ந்து வருவீங்கன்னு எனக்குத் தெரியும்... உங்களுக்கு நல்லது பண்றதுக்காகத் தான் நான் இப்படி யோசிச்சேன்... உங்க வாழ்க்கையை விட்டு முற்றிலும் விலகி போயிரணும்ன்னு..." என்று கண்ணீர் சிந்தியவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் அவன் மீதான காதலே அதிகம் இருந்தது...

"போதும் பேபி... இதுவரை நீயும், நானும் கஷ்டப்பட்டது போதும்... இனி நாம் சந்தோசமா வாழணும்... பழசு எதையும் பேசக் கூடாது..." என்றவன்,

"கடைசியா ஒரு முறை நான் உனக்கு அழுத்திச் சொல்கிறேன்... அவளை நான் காதலிக்கலை... நான் காதலித்தது உன்னை மட்டும் தான்... என் மனசில் நுழைந்த ஒரே பெண் நீ தான்... இதை நான் தைரியமா சொல்வேன்... என்னடா ஏற்கெனவே ஒருத்தியைக் காதலிச்சவன் இப்படிச் சொல்கிறானேன்னு பார்க்காதே... உன்னைப் பார்த்த பின்பு தான் காதல்ன்னா என்னன்னே புரியுது..." என்றவன் அவளது மூக்குத்தி மீது முத்தமிட்டு,

"என்னுடைய ஒரே காதல் மனைவி நீ மட்டும் தான்..." என்று காதலோடு கூற...

சம்யுக்தா நிறைந்த மனதுடன் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... இந்திரஜித் ஒரு கையால் மனைவியை

அணைத்துக் கொண்டவன், மறுகையால் மகனது தலையை வருடிக் கொடுத்தான்... அவனது மனதிலும் அத்தனை நிம்மதி...

*************************

இந்திரஜித், சம்யுக்தா தங்களது மகனிற்கு 'அபராஜித்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்... இந்திரஜித் விரும்பியது போல் அவனும், மனைவியும் இணைந்து சந்தோசமாய் அந்த விழாவில் வளைய வந்தனர்... அதற்கு எல்லோரும் வந்திருந்தனர்...

"பிரசன்னா... நீ எப்போது குட் நியூஸ் சொல்ல போகிற...?" என்று சித்தார்த் அவனிடம் கேட்க...

"இப்போ தானே கல்யாணமாகி இருக்கு... இன்னும் இரண்டு வருசம் போகட்டும் சார்..." என்று அவன் இழுத்தான்...

"சஞ்சய், நீ...?" என்று இந்திரஜித் நண்பனின் காதைக் கடிக்க...

"டேய், நீ சீக்கிரம் குழந்தை பெத்துக்கிட்டா அதே மாதிரி நானும் பெத்துக்க முடியுமா...? இன்னும் நாலு வருசமாகட்டும்..." என்றான் அவனும்...

"போடா, புள்ளை குட்டி அருமை தெரியாதவன்..." என்று இந்திரஜித் அவனிடம் கோபம் கொள்ள...

"நீ வளர்க்கிறேன்னா சொல்லு, ஒண்ணு என்ன ஆயிரம் குழந்தையைப் பெத்துக்க நான் ரெடி..." என்ற நண்பனை வெட்டவா? குத்தவா? என்பது போல் பார்த்து வைத்தான் இந்திரஜித்...

"ஹா ஹா... இதுக்குத் தான்டா சொன்னேன்..." என்று சஞ்சய் சிரித்தான்...

"இப்படிக் கேனைத்தனமா யோசிக்க உன்னால் மட்டுமே முடியும்... போடா..." என்று முகத்தைத் திருப்பிக்

கொண்டான் இந்திரஜித்...

எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்த போது சித்தார்த் சிறியவர்களிடம், "நாங்க எல்லாம் அமர்நாத் கோவிலுக்குப் புனித யாத்திரை போகலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கிறோம்..." என்றவன் அர்ஜூனைக் கண்டு கண்சிமிட்ட... சஞ்சய் அதைக் கவனித்து விட்டான்...

"பெருசு போகிற ரூட் சரியில்லையே..." என்று நண்பனிடம் முணுமுணுத்தவன்,

"மாமா, நீங்க எப்பவும் ஹனிமூன் பத்தி தானே பேசுவீங்க... இப்போ என்ன புனித யாத்திரை பத்தி எல்லாம் பேசுறீங்க...?" என்று நக்கலாய் அவன் கேட்க...

"இப்பவும் அதைத் தான்டா சொல்லுகிறேன்... புனித யாத்திரை என்பது சும்மா பெயருக்கு தான்... ஹனிமூன் தான் மெயின் சப்ஜெக்ட் மாப்ளே..." என்று சித்தார்த் சிரித்தபடி மருமகனது காலை வார... அதற்கு மேல் சஞ்சய் வாய் திறப்பானா என்ன...?

"மாமூ... பயங்கரக் கேடி நீங்க..." என்று பிரகதீஸ்வரி அவனது கையில் செல்லமாய் ஒரு அடி அடித்தாள்...

"இப்போ கடமை முடிஞ்சு மீண்டும் சந்தோசத்தை அனுபவிக்கிற வயசு ரதிம்மா..." என்று கண்சிமிட்டினான் சித்தார்த்...

"அஜூ, இது உங்க வேலை தானே... அத்தான் கிட்ட நீங்க தான் இதைப் பத்தி சொன்னதா...?" சங்கமித்ரா கணவனது காதைக் கடித்தாள்...

"அச்சோ, நானில்லைம்மா..." என்று ஒன்றும் தெரியாதவன் போல் கையை விரித்தான் அர்ஜூன்... ஆனால் அவனது விழிகளில் குறும்பு கூத்தாடியது...

அதைக் கண்டு கொண்ட மனைவியவளின் முகத்தில் அழையா விருந்தாளியாய் வெட்கம் வந்து ஒட்டிக் கொண்டது...

"உங்களுக்குக் கொஞ்சம் கூட விவஸ்தை கிடையாது..."

"நமக்காக இல்லை ஹனி... நம்ம பிள்ளைங்களுக்காக... அவங்களுக்கான வாழ்க்கையை அவங்க அனுபவிச்சு வாழணும்... அதான் அவங்களுக்கு வேண்டிய தனிமையைக் கொடுத்துட்டு நாம கொஞ்ச நாள் விலகி இருக்கலாம்ன்னு முடிவு பண்ணினேன்... அதுக்குச் சித்துவும் ஒத்துக்கிட்டார்..."

இந்தப் பயணத்தை மனதில் அலறலோடு எதிர் கொண்டது சரவணன் மட்டுமே... திருமணமான புதிதில் அவன் மனைவியிடத்தில் வாங்கிய அடிகள் அப்படி... 'திரும்பவும் முதலில் இருந்தா...?' அவனுக்குப் பயத்தில் வியர்த்து வழிந்தது...

"சரவணா, எனக்கு ரொம்பச் சந்தோசமா இருக்குடா... இப்படி ஒரு சான்ஸ்க்காகத் தான் நான் காத்திருந்தேன்... அப்போ நான் உன்னை ரொம்பப்படுத்தி எடுத்துட்டேன் இல்லையா... அதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு இப்போ நான் உன்னைச் சந்தோசமா வச்சிக்கிறேன்..." என்று ஸ்வேதா கூறியதும் அவனது முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்டது போல் பிரகாசம் அடைந்தது...

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா ஸ்வீட்டி...?" என்றபடி அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

ஹரிப்ரசாத், சந்தியா எல்லோரையும் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்... அவர்கள் வாழ்க்கையை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது வாழப் பழகியவர்கள் அல்லவா... இவர்களோடு பிரசன்னா மற்றும் யமுனாவின் பெற்றோரும் இணைந்து கொண்டனர்...

அன்றிரவு இந்திரஜித் சம்யுக்தாவை நெருங்கிய போது அவள் அவனை மறுக்கவில்லை... காதலோடு அவனை அரவணைத்துக் கொண்டாள்... இருவருமே தங்களது காதலை உணர்ந்து, இணையின் காதலை உணர்ந்து ஒருவருள் ஒருவர் இன்பமாய் மூழ்கிப் போயினர்...

"எனக்கு ஒரு பொண்ணு வேணும்டி பேபி..." மூழ்கி முத்தெடுத்தவன் மனைவியிடம் கொஞ்சினான்...

"அதுக்குள்ளேயா...? அபிக்கு ஐஞ்சு வயசாகட்டும்..." என்று மனைவி அவனது ஆசைக்குத் தடை போட்டாள்...

முதன்முறையாய் தனது பேச்சிற்கு எதிர்ப்பேச்சு பேசும் மனைவியவளை அவன் அணு அணுவாய் ரசித்தான்...

"என் மேல் கோபமில்லையே பாவா...?" அவனது அமைதியை அவள் வேறு மாதிரி எண்ணிக் கொண்டாள்...

"இப்போ தான்டி காதல் அதிகரிக்கிறது... இப்போ தான் நீ டிபிகல் வொய்ப்பாகிட்டு வர்ற... ரொம்பச் சந்தோசமா இருக்கு..." என்று கூறி அவளது முகம் நோக்கி அவன் குனிய...

அவனது வார்த்தைக்கான அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை என்றாலும், அவனது செயலுக்கான அர்த்தம் புரிந்து அவள் அவனோடு இசைந்து கொடுத்தாள்...

**************************

ஐந்து வருடங்கள் கழித்து...

பெனுமுலி கிராமத்திற்கு இந்திரஜித், சம்யுக்தா இருவரும் வந்திருந்தனர்... மகனை பெற்றோரிடம் விட்டு விட்டுத் தனியாக... வெகுநாட்களாக இந்திரஜித் மனதில் நினைத்து கொண்டிருந்ததை இன்று தான் அவனால் செயல்படுத்த முடிந்தது... சம்யுக்தா மகனை விட்டுப் பிரிய மனமில்லாது நாட்களைக் கடத்திக் கொண்டு இருந்தாள்...

"நம்மை விட உன் மாமாகாரு, அத்தைகாரு அபியை நல்லா பார்த்துக்குவாங்க... நீ என்னோடு கிளம்பி வா..." என்று அவளைச் சத்தம் போட்டு கையோடு அழைத்து வந்து விட்டான்...

கிராமத்து வீட்டினை சற்றுப் பெரியதாக எடுத்துக் கட்டியிருந்தான் இந்திரஜித்... அதைக் கண்டு அவளது விழிகள் கலங்கிப் போனது...

"பாவா..." என்று மனம் நெகிழ கணவனைப் பார்த்தாள்...

அவனது பார்வையோ அங்கிருந்த வைக்கோல் போரைப் பார்த்தது...

"அன்னைக்கு அங்கே இருந்து குதிச்சியே உனக்கு ஞாபகம் இருக்கா...? தலை எல்லாம் குச்சி குச்சியாய் வைக்கோல் நீட்டிக்கிட்டு நின்னுக்கிட்டு இருந்த உன்னைப் பார்த்ததும் என்னால் சிரிப்பை அடக்க முடியலை..." என்று அதை நினைத்து இப்போதும் அவன் சிரித்தான்...

கணவனது வார்த்தையில் அவள் பிரமிப்பாய் அவனைப் பார்த்தாள்... அவன் எதையும் மறக்கவில்லையே...

திண்ணை அருகில் வந்தவன், "இந்தத் தூணில் சாய்ஞ்சுக்கிட்டு தான் நான் உன் நெஞ்சில் முகம் புதைத்தேன்..." என்றவன் அந்தத் தூணில் சாய்ந்து அமர்ந்து கொள்ள... அவள் அவனைக் காதலோடு அணைத்துக் கொண்டாள்...

அவளது நினைவில் அவன் வாழ்ந்ததாய் அவன் சொன்ன போது கூட அவள் பெரிதாக எண்ணவில்லை... ஆனால் இப்போது அவனது வார்த்தைகள், செய்கைகள் எல்லாமே அவனது உயிருக்குயிரான நேசிப்பை அப்பட்டமாய் அவளிடத்தில் பறைச்சாற்றியது... அவளது விழிகள் காதலில் கசிந்துருகியது... அவளது கண்ணீரை உணர்ந்து அவன் நிமிர்ந்து பார்த்தான்...

"பேபி..." என்று மனம் பதறியவனைக் கண்டு,

"உங்க மனசை புரிஞ்சிக்காம நானா ஏதேதோ நினைச்சிக்கிட்டு... என்னை மன்னிச்சிருங்க பாவா..." என்று அவள் கண்ணீர் வடிக்க...

"இப்போ நீ அழுகையை நிறுத்தலைன்னா நான் அல்லு அர்ஜூன் மூவிக்கு உன்னைக் கூட்டிட்டு போக மாட்டேன்..." என்றவன் தனது சட்டை பையில் இருந்து திரையரங்கு சீட்டினை எடுத்துக் காண்பிக்க...

"எனக்கு அல்லு அர்ஜூன் எல்லாம் வேண்டாம்... எனக்கு என் பாவா மட்டும் தான் வேணும்..." என்று அவனை அணைத்துக் கொண்டவள்,

"பாவாவுக்காகப் படத்துக்கு வர்றேன்..." என்று அவள் சம்மதிக்க, அவன் சந்தோசத்துடன் அவளைப் பார்த்திருந்தான்...

திரையரங்கில் படத்தைப் பார்க்காது தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியவளைக் கண்டு, "என்னடி பார்வை எல்லாம் பலமாயிருக்கு..." என்றவனது குரல் தாபத்துடன் ஒலித்தது...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவளைப் பார்த்து,

"எனக்குமே... அப்போ உன்னை இது போல் படத்துக்குக் கூட்டிட்டு வந்தேனே... உனக்கு ஞாபகம் இருக்கா...? அப்போ நீ அல்லு அர்ஜூனை ரசித்துப் பார்த்துக்கிட்டு இருந்த... நான் உன்னை முறைச்சு பார்த்துட்டு இருந்தேன்... அப்போ அது ஏன்னு புரியலை... ஆனா இப்போ புரியுது... அது பொறாமைன்னு... அந்தப் பொறாமைக்குப் பெயர் காதல்ன்னு..."

"காதல் இல்லை, இல்லைன்னு சொல்லிட்டு நீங்க என்னைக் காதலிச்சு இருக்கீங்க பாவா..." என்று குதூகலமாய்க் கூறியவளைக் கண்டு,

"அதுக்குக் காரணம்..." என்று வருத்தத்துடன் கூறியவனின் வாய் மீது கை வைத்துத் தடுத்தவள்,

"வீட்டுக்குப் போகலாமா பாவா...?" என்று கிசுகிசுப்பாய் அவள் கேட்க...

"அல்லு அர்ஜூன்...?" அவன் கேள்வியாய் அவளைப் பார்க்க...

"உங்களுக்குப் பொண்ணு பெத்து கொடுக்கலாம்ன்னு பார்த்தேன்... வேண்டாம்ன்னா விடுங்க..." என்று முறுக்கிக்

கொண்டவளை அவன் சந்தோசத்துடன் அணைத்துக் கொண்டான்...

அதற்கு மேல் அங்கிருக்க அவன் என்ன முட்டாளா...? மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்...

வீட்டிற்கு வந்து வெகுநேரமாகியும் கணவன் உள்ளே வராததைக் கண்டு சம்யுக்தா வெளியில் வர... அப்போது அவனும் உள்ளே வந்தான்...

"எங்கே போனீங்க...?"

"அங்கே மேலே இருந்து பார்த்தால் நிலவு அழகா தெரியுது... அதான் பார்க்கப் போனேன்..." என்று அவன் வைக்கோல் போரைச் சுட்டிக்காட்டினான்...

"நானும் பார்க்கவா...?" ஆர்வத்துடன் கேட்டவளைக் கண்டு அவனது இதழ்களில் விசம சிரிப்பு வந்தமர்ந்தது...

'அது தானே எனக்கும் வேண்டும்' என்று நினைத்தபடி அவன் அவளை அங்கு அழைத்துச் சென்றான்... வைக்கோல் போர் மீது ஏறிய பிறகு தான் அவளுக்குத் தெரிந்தது கணவனது தந்திரம்...

"பாவா... என்னதிது...? இங்கேயா...? ம்ஹூம், என்னால் முடியாது...?" என்று நாணத்துடன் அவள் மறுக்க...

"ப்ளீஸ்டி, எனக்காக..." என்று இறைஞ்சுதலுடன் கூறியவனின் விழிகளில் வழிந்த காதலில் அவள் வார்த்தைகளற்று மௌனமாய்ச் சம்மதித்தாள்...

"ஃபாரின் லோகேஷனில் கூட இந்தளவுக்குக் கிக் இருந்தது இல்லைடி... இது சம்திங் ஸ்பெசல்... உன்னைப் போல்..." அவளது காதோரம் தாபத்துடன் கிசுகிசுத்த கணவனை அவளது கரங்கள் காதலோடு அரவணைத்துக் கொண்டது...

தனது பெண்ணரசிக்கான அச்சாரத்தை அவன் அழுத்தமாய் அவளுள் பதிக்க ஆரம்பித்தான்... அன்று முதல் இன்று வரை அவளது பாவாவின் காதல் அவளுக்கு மட்டுமே என்பதை அறிந்து கொண்டவளோ முன்பை விட

இப்போது முற்றிலும் முழுமையாய் தன்னைக் கணவனிடத்தில் அர்ப்பணித்தாள்...

*******************

அடுத்து ஆறு வருடங்கள் கழித்து...

"பேபி, பேபி..."

இந்திரஜித் அறைக்குள் நுழையும் போதே மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நுழைந்தான்...

"அப்பா, நான் இங்கே இருக்கேன்..." இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு அவனது ஐந்து மகள் ஐஸ்வர்யா அவனைக் கண்டு முறைத்தாள்...

"என் பேபி இங்கேயா இருக்கிறாள்...? நான் கவனிக்கலையே..." என்றபடி அவன் மகளைத் தூக்கி உச்சி முகர்ந்தான்...

"நீங்க அம்மாவைத் தானே தேடுனீங்க...?" மகள் தந்தையைச் சரியாகக் கண்டுபிடித்துக் கேட்டாள்...

"ஒண்ணு அம்மாவை பேபின்னு கூப்பிடுங்க... இல்லை என்னை மட்டும் பேபின்னு கூப்பிடுங்க... நான் அடிக்கடி கன்ஃப்யூஸ் ஆகிறேன்ல... என்னோட டைம் வேஸ்ட்..." என்றபடி அவள் தந்தையின் பிடியில் இருந்து நழுவினாள்...

"அத்தை..." அந்நேரம் ஆதித்யா அலறிக் கொண்டு அங்கு வந்தான்... இப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயது...

"ஏமிரா ஆதி பங்காரம்...?" என்று கேட்டபடி அங்கு வந்தாள் சம்யுக்தா...

"இந்தா பங்காரம் வந்துட்டாங்கல்ல..." தலையில் கை வைத்தபடி முணுமுணுத்தது சின்னச் சிட்டு... அதைக் கண்டு இந்திரஜித்திற்குச் சிரிப்பு வந்தது... முயன்று அடக்கிக் கொண்டான்...

"அத்தை, ஐசு என் சட்டையில் இங்க்கை கொட்டிட்டு ஓடி வந்துட்டாள்... அவளை என்னன்னு கேளுங்க...?" ஆதித்யா அத்தையிடம் புகார் வாசித்தான்...

"பாப்பா, உன் கிட்ட நான் என்ன சொல்லியிருக்கிறேன்... ஆதியை வம்பிழுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனா இல்லையா...?"

"அவன் மட்டும் என்னை முறைச்சு முறைச்சு பார்க்கலாமா...?" சின்னவளுக்கு மூக்கை விடைத்துக் கொண்டு கோபம் வந்தது... அதற்கும் ஆதித்யா அவளை முறைத்துப் பார்த்தான்...

"அப்பா... நீங்களே பாருங்க... ஆதி என்னைய முறைச்சு பார்க்கிறான்..."

இந்திரஜித் இதில் தலையிட்டால் மனைவி கோபித்துக் கொள்வாள்... அதனால் அவன் அமைதி காத்தான்... மகளின் குறும்பு அவன் அறிந்த ஒன்றாயிற்றே...

இதில் அவளது தாத்தா சித்தார்த் வேறு, "என்னைப் போல் என் பேத்தி சுட்டியா இருக்கிறாள்..." என்று கூறி பெருமைப்பட்டுக் கொள்வார்... அதைக் கேட்டு வளர்ந்த ஐஸ்வர்யாவின் குறும்புகள் இன்னமும் அதிகரித்துப் போனது...

"நான் உன்னை விட ஏழு வயசு பெரியவன்... என்னை இப்படித் தான் வா, போன்னு பேசுவியா...?" ஆதித்யா அவளைப் பார்த்து முறைத்துக் கொண்டே கேட்க...

"நான் உன்னை விட ஏழு வயசு சின்னவள்... பாப்பாவை பாப்பா மாதிரி பார்க்காம நீ ஏன் என்னை முறைச்சு பார்க்கிற...?" பதிலுக்குச் சின்னவள் எகிறினாள்...

"நீ பாப்பாவா...? பீப்பா... போடி..." என்று அவளிடம் கோபமாய்க் கூறியவன் அத்தையிடம்,

"அத்தை இனிமேல் இவள் என்னிடம் வம்பிழுத்தால் நான் பதிலுக்கு அவளை அடிச்சிருவேன்... பிறகு என்னைக் குறை

சொல்லாதீங்க..." என்றபடி அவன் அறையை விட்டு வெளியேற...

"பாப்பா, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... ஆதியை அத்தான்னு கூப்பிடணும்..."

"அவன் எனக்கு அத்தானா...? அத்தான் பொத்தான்... வெவ்வவ்வே..." என்று பழிப்பு காட்டிய சின்னவள் அன்னை அடிக்கும் முன் அங்கிருந்து சிட்டாகப் பறந்து விட்டாள்...

"பாருங்க பாவா... என்ன பேச்சு பேசுகிறாள்ன்னு..." சம்யுக்தா கணவனிடம் மகளைப் பற்றிக் குறைப்பட்டுக் கொள்ள...

"வளர, வளர சரியாகிருவாள் விடு பேபி..." என்றவன் அவளது இடையில் கைக் கொடுத்து அவளை அருகில் இழுத்தான்...

"ஒரு குட் நியூஸ் பேபி..."

"ஏதாவது பெரிய பிசினஸ் கான்ட்ராக்ட் கிடைச்சிருக்கா பாவா...?" என்று முகம் மலர்ந்தவளைக் கண்டு அவனும் முகம் மலர்ந்தவனாய்,

"எனக்கு இல்லை உனக்கு... தமிழக அரசு சார்பில் உனக்கு விருது கொடுக்கப் போறாங்க... கலை வளர்மணி விருது..."

"நிஜங்கா பாவா...?"

"சத்தியங்கா பேபி... இந்தத் துறையில நீ சாதிச்சதுக்காகக் கொடுத்திருக்காங்க..."

"அப்படி நான் என்ன சாதிச்சேன் பாவா...?" என்று புரியாது வெகுளியாய்க் கேட்டவளைக் கண்டு அவனது காதல் என்றும் போல் இன்றும் ஊற்றாய்ப் பொங்கியது...

அவளது தொழிற்கூடத்தில் வேலை பார்க்கிறவர்கள் முக்கால்வாசி பேர் உடல் ஊனமுற்றவர்கள்... அது போல் உடல் ஊனமுற்றவர்களுக்கு இலவச பயிற்சி மட்டுமல்லாது அவர்களுக்கு என்று தனியே தொழில் செய்யப்

பொருளாதார ரீதியாய் அவள் உதவி செய்கிறாள்... இன்னும் அவளது சாதனைகள் எத்தனையோ இருக்கிறது... அத்தனையையும் சத்தம் இல்லாது செய்துவிட்டு இதோ இப்படித் தான் ஒன்றும் அறியாதவளாய் அன்று அவன் முதன்முதலில் கிராமத்தில் பார்த்த அதே சம்யுக்தாவாய் மாறாது இருப்பவளைக் கண்டு அவனுக்கு அத்தனை பெருமிதமாக இருந்தது...

அவனது அந்தஸ்தோ, அவளது புகழோ இது எதுவும் அவளை மாற்றவில்லை... அன்றிருந்த அதே 'பாவா கோண்டு' சம்யுக்தா தான் இப்போதும் இருக்கிறாள்... ஒவ்வொரு விசயத்தையும் அவனிடம் கேட்டு கேட்டுச் செய்து கொண்டு, அவன் மகிழ்ச்சி கண்டு மகிழ்ந்து, அவன் கவலை கண்டு கவலையுற்று... இப்படி அவளின் எல்லாமுமாய் அவன் தான் இருக்கிறான்... இந்தப் பெண்ணவளின் காதல் பெற அவன் என்ன தவம் செய்தானோ...!

"நிறையச் சாதிச்சிருக்கப் பேபி... இன்னமும் உன்னை நான் சாதிக்க வைப்பேன்..." என்று கூறியவனின் குரலில் அத்தனை உறுதியிருந்தது...

"அது தான் எனக்குத் தெரியுமே..." என்று கணவனை உணர்ந்தவளாய் கூறியவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

அன்றிரவு உணவு முடிந்து வரவேற்பறையில் அமர்ந்து அப்பாவும், மகனும் பேசிக் கொண்டிருந்தனர்... உடன் சம்யுக்தா மட்டும் இருந்தாள்... குழந்தைகள் பாட்டியுடன் உறங்கச் சென்றுவிட்டனர்...

"இந்தர், இன்னைக்கு நீ பண்ணியது சரியா...?" சித்தார்த் கவலையுடன் மகனைப் பார்த்துக் கேட்டான்...

"அகர்வால் குடும்பத்தைக் கடத்தியது சரின்னு நான் நினைக்கிறேன்..." என்றான் அவன் இரும்பின் உறுதியுடன்... கணவனைத் திகைப்புடன் பார்த்தாள் சம்யுக்தா...

"பிரச்சினையை இப்படியே நீட்டிக்க வேண்டுமா...?" அமைதியான மகனது அதிரடி கண்டு சித்தார்த் தந்தையாய்க் கவலை கொண்டான்...

"நான் இதைச் செய்யாதிருந்தால் என் மனைவி, குழந்தைகளுக்கு இந்த நிலைமை வந்திருக்கும்... சொல்ல போனால் இதை விட மோசமாய்... நானாவது பயமுறுத்துவதோடு விட்டேன்... அவனானால்...?" என்று சிறிது இடைவெளி விட்டவன் பெருமூச்சு ஒன்றை விட்டபடி,

"தொழில் என்று வந்துவிட்டால் மனசாட்சியைக் கழற்றி வைக்க வேண்டியிருக்கிறது... இனி அவன் நம் பக்கம் தலை வைத்து படுக்க மாட்டான்... எனக்கு அது தான் வேண்டும்..." என்றான் இந்திரஜித் தனது கம்பீரம் சிறிதும் குறையாது...

தொழிலதிபனாய் நிமிர்ந்து நின்ற மகனின் கம்பீரத்தை ரசித்த சித்தார்த், "குட் இந்தர்..." என்று அவனது தோளைத் தட்டி கொடுத்தபடி அங்கிருந்து சென்றுவிட்டான்...

அறைக்கு வரும் வரை சம்யுக்தா எதுவும் பேசவில்லை... அமைதியாகக் கட்டிலில் அமர்ந்தாள்... தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தவள் கணவனிடம் இருந்து எந்தவித சத்தமும் இல்லாது போகவும் நிமிர்ந்து பார்த்தாள்... தன்னைத் தவிப்புடன் பார்த்தபடி நின்றிருந்தவனைக் கண்டு தாய்மை பெருக்கெடுக்கத் தனது இரு கரங்களை அவனை நோக்கி நீட்டினாள்...

"பேபி..." என்றபடி அவளது மடியில் சரண் புகுந்தவனிடம் சிறிது நேரம் எந்தவித அசைவும் இல்லை...

"பாவா..." அவனது தலையை ஆறுதலாய் வருடிக் கொடுத்தபடி அவள் அவனை அழைக்க...

"நான் தப்பு பண்றேன்னு நினைக்கிறியா...?"

ஒரு காலத்தில் அவன் தவறு செய்தவன் தான்... அந்தத் தவறின் பின்னால் பெரிய காரணம் இருந்தது போல்

இப்போதும் இருக்கும் என்று நம்பியவளாய் அவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"நீங்க தப்பு பண்ண மாட்டீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"தேங்க்ஸ் பேபி..." என்றபடி அவளது மடியில் முகம் புதைத்தவன்,

"தொழில் என்று வரும் போது மனசாட்சிபடி நடக்க முடியலை... அதைக் கழற்றி வைத்தால் தான் காரியம் ஆகிறது... சில சமயம் மனசுக்குக் கஷ்டமாயிருக்கு... ஏன்டா தொழிலை கையில் எடுத்தோம்ன்னு... புலியின் வாலைப் பிடித்தது போல் இதை விடவும் முடியலை..." என்று வருந்தியவனை அவள் வருடிக் கொடுத்து ஆறுதல் படுத்தினாள்... அவளது வருடலில் மனம் கொஞ்சம் கொஞ்சமாய் அமைதி அடைய அவன் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்தான்...

வெளியில் முறுக்கிக் கொண்டு வீரமாய்த் திரியும் ஆறடி ஆண்மகன் அவளுக்கு மட்டும் சிறு குழந்தையே... அவளைப் பொறுத்தவரை அவன் எப்போதும் அவளிடம் ஆறுதல், அமைதி வேண்டி சரண் புகும் அவளது இன்னொரு மகவே...

*******************

தமிழக ஆளுநர் கைகளால் கலை வளர்மணி விருது வாங்கிய சம்யுக்தாவின் விழிகள் தனது கணவனைத் தேடியது... எத்தனையோ பேர் அவளைச் சுற்றியிருந்த போதும் அவளது விழிகள் அவனைத் தான் தேடியது... குப்பையில் இருந்தவளை கோபுரத்தின் உச்சியில் ஏற்றி வைத்தவன் அவன் அல்லவா...

அரங்கத்தின் இரண்டாம் வரிசையில் மகன், மகள் இருவருக்கும் நடுவில் கம்பீரமாக அமர்ந்திருந்த கணவனை அவளது விழிகள் காதலோடு விழுங்கிக் கொண்டது... தன்னலம் இல்லாத அவனது காதல் கண்டு

அவளது விழிகள் கசிந்தது... அவனுக்கு என்று தனிப்பட்ட ஆசை இல்லாது விதியின் சதியால் அவளை மணந்து வெற்றுக் களிமண் அவளையும் சிலையாகச் சமைந்து பார் புகழ ஏணியில் ஏற்றி வைத்தவன் அவன்... அவனது நேசம் மட்டும் இல்லை என்றால் அவள் என்னவாகியிருப்பாளோ...

அவள் காணும் யாவிலும் காதல் கணவனவனின் பிம்பமே...!!!
அதே நேரம் இந்திரஜித்தும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... தன்னலமற்ற அவளது காதலால் அவனின் பல தவறுகளை மன்னித்து அவனை ஏற்றுக் கொண்டு இன்னமும் காதலாய்த் தன்னை அர்ச்சிக்கும் மனைவியைக் கண்டு அவனது மனம் கணவனாய் பெருமை கொண்டது... அவளது காதல் மட்டும் இல்லாது போனால் அவன் என்னவாகியிருப்பானோ... துரோகத்தின் பிடியில் சிக்கித் தவித்து அவன் சின்னாப்பின்னமாகி இருப்பான்... தனது மாசற்ற அன்பால் அவளின் தடத்தைத் தன்னுள் அழுத்தமாய்ப் பதித்த தன்னவளுக்கு அவன் மனதிற்குள் நன்றி கூறிக் கொண்டான்...

அவன் காணும் யாவிலும் காதல் மனைவியவளின் பிம்பமே...!!!

பெற்றோரை போன்று ஒரு காதல் வாழ்க்கைக்கு ஏங்கிய இந்திரஜித்தின் கனவு நனவானது... கனவு காண்பது நல்லதே... அந்தக் கனவின் மெய்ப்பொருள் மெய்யாக இருத்தல் மிகவும் அவசியம்... அப்போது தான் கனவு மெய்ப்படும்... வானம் வசப்படும்...

இனி இந்திரஜித், சம்யுக்தா இருவரின் காதல் வாழ்க்கையும் தெளிவான நதி போல் அமைதியாகச் செல்லும் என்று நாம் நம்புவோமாக...!!!

முற்றும்...!!!